வெளியீடு—9—8—1968]
Issued—9—8—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 12
Monday, 12th February 1968

தொகுதி VIII—எண். 1
Volume VIII—No. 1

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

PAGES.

*Tuesday, 13th February 1968*—cont.


3. Adjournment Motions—
   (i) Incident at Coimbatore ... ... 120–121
   (ii) Fire accident at the Kodayar Hydro Electric Project area ... ... ... 121–122
   (iii) Stationing of Central Reserve Police at Coimbatore ... ... ... 122–123
   (iv) State of emergency in Lower Bhavani ayacut area ... ... ... ... 123–128
4. Announcement—
   Business of the House ... ... ... 128
5. Discussion on Governor's Address—(*Cont.*) ... 128–198
6. Papers laid on the Table of the House ... ... 198–199


*Wednesday, 14th February 1968.*


1. Obituary Reference—
   Thiru M. G. Natesan Chettiar, ex-M.L.A. ... 201
2. Questions and Answers ... ... ... 201–236
3. Privilege Matter—
   Thiru C. Subramaniam's speech and its publication in the daily 'The Hindu' ... 237
4. Discussion on Governor's Address—(*Cont.*) ... 237–306
5. Government Bill—
   The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 18 of 1967) ... 241
6. Papers laid on the Table of the House ... ... 306


*Thursday, 15th February 1968.*


1. Questions and Answers ... ... ... 307–335
2. Announcement—
   Invitation to World Industries Fair ... ... 335–336
3. Discussion on Governor's Address—(*Cont.*) ... 336–411
4. Papers laid on the Table of the House ... ... 411


*Friday, 16th February 1968.*


1. Questions and Answers ... ... ... ... 413–444
2. Privilege matter—
   Thiru C. Subramaniam's speech and its publication in the daily 'The Hindu' ... ... 442–462




PAGES.

*Friday, 16th February 1968*—cont.


3. Adjournment Motions—
   (i) Declaration of West Ramanathapuram as famine area ... ... ... ... ... 462
   (ii) Dispute between landowners and agricultural coolies of Chidambaram taluk ... ... 462–463
   (iii) Recovery of arrears of loan in a lump sum from the agriculturists in Kovilpatti taluk ... ... ... ... ... 464–465
   (iv) Incidents at Coimbatore ... ... ... 465–472
4. Presentation of First Supplementary Statement of Expenditure for 1967–68 ... ... ... 472–476
5. Discussion on Governor's Address—(*Cont.*) ... 477–527
6. Papers laid on the Table of the House ... 527


*Saturday, 17th February 1968.*


1. Questions and Answers ... ... ... 529–558
2. Adjournment Motions—
   (i) Postponement of collection of kist and loan in Palladam taluk ... ... ... 558–559
   (ii) Police lathi-charge on students in Dindigul 559–562
   (iii) Seth Govind Das's Speech suggesting the overthrow of the Government in Tamil Nadu ... ... ... ... ... 562–564
3. General discussion on the first Supplementary Statement of Expenditure for 1967–68 ... 565–607
4. Discussion on Governor's Address—(*Cont.*) ... 607–634
5. Papers laid on the Table of the House. ... ... 634


*Monday, 19th February 1968.*


1. Questions and Answers ... ... ... 635–663
2. Privilege Matters—
   i) Thiru C. Subramaniam's speech and its publication in 'The Hindu' ... 663–683
   (ii) Chief Minister's Speech at Guntur and its publication in 'The Mail' ... ... ... 683–687

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Headings including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann | ... ... | Announcement. |
| B. O. H. | ... ... | Business of the House. |
| C. A. | ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C. A. St. | ... ... | Calling Attention Statement. |
| Consid. | ... ... | Consideration stage of a Bill. |

This stage includes :

(i) Motion to refer to Select/Joint Select Committee.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | | |
|---|---|---|---|
| Consid. Cl. | | .. | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. | ... | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D. S. G. | ... | ... | Demands for Supplementary Grants. |
| G. A. | ... | ... | Governor's Address. |
| G. D. | ... | ... | General Discussion |
| H. A. H./ H.H.D. | | ... | Half-hour Discussion. |
| Int. | ... | ... | Introduction stage of a Bill. |
| L. A. | ... | ... | Legislative Assembly. |
| L. C. | ... | ... | Legislative Council. |
| M. | ... | ... | Motion. |
| P. M | ... | ... | Privilege Motion. |
| R/Res. | ... | ... | Resolution. |
| St. | ... | ... | Statement. |

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS.

### GOVERNOR OF MADRAS.

SARDAR UJJAL SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI, M.A., *Chief Minister : To be Minister in-charge of Public General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors Finance, Planning, Police Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food Production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN, *Minister in-charge of Education (including Technical Education) : Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training; Companies, Religious Endowments and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI, *Minister in-charge of Public Works : Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN, *Minister in-charge of Food : Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY, *Minister in-charge of Agriculture : Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, *Minister in-charge of Harijan Welfare : Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN, *Minister in-charge of Law : Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness); Legislation on Weights and Measures; Labour and Housing.*

8. THE HON. THIRU SADIQ PASHA, *Minister in-charge of Public Health : Medicines, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, Wakf, Prices and Supplies of Goods Act.*

9. THE HON. THIRU M. MUTHUSAMY, *Minister in-charge of Municipal Administration : Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries; Rural Industries Project and Ex-servicemen.*

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதாரத்துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித்துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகக்ள், பூதான, கிரமதான இயக்கங்கள், கதர், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்

பேரவைத் துணைத் தலைவர் :

புலவர் கா. கோவிந்தன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. வி. எஸ். கோவிந்தராஜன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. ந. தருமலிங்கம்.
திரு. எஸ். முருகையன்.
திரு. வை. சுவாமிநாதன்.
திரு. வி. கே. கோதண்டராமன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. கே. எம். நாகராஜன், பி. ஏ., எல்.எல்.பி.
திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.
திரு. த. இராதகிருஷ்ணன், எஸ்டேட் அதிகாரி.
திரு. ஜி. இராகவன்.

## தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழக ஆளுநர்:

சர்தார் உஜ்ஜல் சிங்.

### அமைச்சரவையினர்.

1. **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.** (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியவை குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்; உணவு உற்பத்தி.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலைவாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும் சட்டப் பேரவையும்.

3. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (பொதுப்பணித்துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (உணவு, வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** (வேளாண்மைத்துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : வேளாண்மை, கால் நடைவளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (அரிசன நல, செய்தித்துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது பொருள் அச்சுத்துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை
## உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி. பா. (பேரவைத் தலைவர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்கினிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (ஆளுங்கட்சி இணைப் பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிசிவந்தியம் (செ.வ.) |
| 9 | (ஆண்டி என்ற) குருசாமி, கே | ஸ்ரீவில்லிப்புத்தூர். (செ.வ.) |
| 10 | அண்ணாமலை. சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி. டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி. எஸ். | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ.வ.) |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், ஏ. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், ஏ. | கொளச்சல். |
| 32 | சின்னராஜி கவுண்டர், சி. கே. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வ.) |
| 35 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ.வ.) |
| 37 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 38 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 41 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 45 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 46 | கணேசன், எல். | ஒர்த்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். | குன்றத்தூர் (செ.வ.) |
| 52 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன். புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராசன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்-மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்) | முகையூர். |
| 60 | ஹபிபுல்லாபேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ.வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.) |
| 69 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 77 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 78 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 81 | கேசவலு, தெ. | கள்ளக்குறிச்சி. |
| 82 | இட்டப்பா, என். | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.) |
| 87 | கிருஷ்ணமூர்த்தி. சி. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. | கன்னியாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே. பி. எஸ். | சீர்காழி (செ.வ.) |
| 100 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 101 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி. எஸ். | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 107 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.) |
| 109 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி. கே. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி. எம். | கிருஷ்ணகிரி. |
| 114 | முனுசாமி, ரா. ரா. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, எ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு ஆதி | திருப்போரூர். |
| 117 | முருகையன். புலவர் க. | திருவையாறு. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 118 | முருகேசன் க. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 120 | முனுசாமி, செஞ்சி, வெ. | செஞ்சி. |
| 121 | முத்தையா கே. கே. | கடலூர். |
| 122 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 123 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.) |
| 124 | முத்துசாமி, பா. க. சி. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு. செ. | முசிறி. |
| 127 | நாச்சிமுத்து, என். | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், வ. சி. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. கு. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் அவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.) |
| 142 | பழனிவேல்ராஜன் | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவகவுண்டர், பி. என். | பொங்கலூர். |
| 145 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு எ. | காவேரிப்பட்டிணம். |
| 148 | பீர்முகம்மது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், எ. ஆர். | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர். பெ. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, எ. எம். | பவானி. |
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராஜமன்னார், எஸ். எ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 159 | ராஜவேலு, பு. எ. | திருச்செங்கோடு. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | ராமன், மு. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமராசன், வ. க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே. எம். | கோபிசெட்டிபாளையம். |
| 171 | ராமசாமி நாயுடு, எஸ், | சாத்தூர். |
| 172 | ராமசாமி, எஸ். ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே. எஸ், | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை-மேற்கு. |
| 180 | சந்தானம், பி. எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா. பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்). |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 185 | சேனாபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம். | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ. ப. | பொள்ளாச்சி. |
| 189 | சண்முகம், வி. எஸ். | விராலிமலை. |
| 190 | சிறைமீட்டான், தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 191 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்). |
| 192 | சிவபெருமாள், க. ந. | ஆத்தூர். |
| 193 | சிவசாமி, மு. ச. | தூத்துக்குடி. |
| 194 | சிவசுப்பரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 195 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 196 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |
| 197 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம், (செ.வ.) |
| 198 | சௌந்தராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 199 | சுந்தர பாரதி, [illegible] | அருப்புக்கோட்டை. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 200 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 201 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 202 | சுப்பாராஜு, ஏ. அ. | இராஜபாளையம். |
| 203 | சுப்பையா, ஆ. கு. | கோட்டூர் (செ.வ.) |
| 204 | சுப்பையா, கே. வி. | ஆலங்குடி. |
| 205 | சுப்பையா முதலியார், ஏ. ஆர். | கடையநல்லூர். |
| 206 | சுப்பரமணியம், அ. லெ. | திருநெல்வேலி. |
| 207 | சுப்பரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 208 | சுப்பரமணியம், இ. எம். | திருக்கோவிலூர். |
| 209 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 210 | சுவாமிநாத உடையார், த. சி. | மன்னார்குடி. |
| 211 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 212 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 213 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 214 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 215 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 216 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 217 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 218 | திப்பையா, டி. டி. எஸ். | மேட்டுப்பாளையம். |
| 219 | வடிவேலு, எஸ். கே. | தொட்டியம். |
| 220 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 221 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 222 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 223 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 224 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 225 | வெள்ளத்துறை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 226 | வேணுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 227 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 228 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 229 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 230 | விஜயரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 231 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 232 | விநாயகம், கே. | திருத்தணி. |
| 233 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 234 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 235 | [ ] | தென்காசி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
|---|---|
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்). |

# தமிழக சட்டப் பேரவை.

*[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.]*

**திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 12**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### *1. நீத்தார் நினைவுக் குறிப்பு.*

### *(i) திரு. பி. துரைசாமி ரெட்டியார், ( i) திரு. எம். ஜெங்கல் ரெட்டியார்—முன்னாள் உறுப்பினர்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை ஆரணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. துரைசாமி ரெட்டியார் அவர்கள் 12—10—1967 அன்று மறைந்து விட்டதைக் குறித்தும்,*

*1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை செஞ்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினராகவும், 1966-லிருந்து சட்டமன்ற மேலவையின் தென்னாற்காடு மாவட்ட உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராகவும் இருந்துவந்த திரு. எம். ஜெங்கல் ரெட்டியார் அவர்கள் 9—2—1968 அன்று காலமானதைக் குறித்தும்,*

*இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்த குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.*

*மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.*

*உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.*

### *2. வினாக்கள்-விடைகள்.*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

### *Shift system in Queen Mary's College*

*1 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether shift system has been introduced in the P.U.C. in Queen Mary's College, Madras, from this year; and

(b) if so, the additional number of students admitted?

சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வித் துறையில் உள்ளவர்கள் அனைவரையும் கலந்துபேசி ஒரு நல்ல முடிவு எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

Dr. H. V. HANDE: Sir, all these things have arisen as a result of the reorganisation of States and in certain parts of the Madras State, a particular minority community is in a majority in a smaller area. As the Hon. Chief Minister has been good enough to go to other neighbouring States and appreciate their languages like Telugu, Kannada and Malayalam, will he come forward in a sportsman-like manner and give an assurance that all the minority languages will be protected? Also, if the Hon. Chief Minister gives such a categorical assurance, that will dispel all these fears and will put everybody in the right spirit. Will he come forward to give such an assurance so that everything will go on in a peaceful way?

The Hon. Thiru C. N. ANNADURAI: Sir, that assurance is already there. Even in the Zonal Council we have agreed that linguistic minorities and their rights will be protected. As a matter of fact, I have got a very great liking for the Telugu language and I would like it spread even in our parts. Even with regard to the Kanarese language, though I am not prepared to go to the length of the Leader of the Opposition by saying that 'my mother-tongue is Kanarese', I have the same feeling. I still consider that Tamil, Telugu, Kanarese and Malayalam belong to the Dravidian stock and therefore my love for the Telugu, Kanarese and Malayalam languages is equal to that of Tamil.

Thiru K. VINAYAKAM: Sir, arising out of the answer given by the Hon. Chief Minister, will the Hon. Speaker be pleased to permit me to put questions in Telugu?

The Hon. Thiru C. N. ANNADURAI: I have heard some of the Telugu speeches of my hon. Friend. It is so bad that I would not encourage it.

Thiru K. VINAYAKAM: Let the House judge whether my Telugu is bad or not.

Sir, now that the Hon. Chief Minister is going to launch upon the introduction of Tamil as the medium of instruction for all colleges and high schools from the next year, will he assure this House that the Telugus, Kannadigas and Malayalees living in our State and studying in colleges and schools in our State will be taught in the medium of their own mother-tongue and not in the medium of the regional language, viz., Tamil?

The Hon. Thiru C. N. ANNADURAI: My hon. Friend is confusing the medium of instruction with language study.

**திரு. எ. பட்டாபி நாயுடு**: தலைவர் அவர்களே, ஓசூரில் உயர் நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கே அன்றாடம் காலையில்





தெலுங்கிலே இறை வணக்கம் பாட்டு பாடிக்கொண்டு வந்தார்கள். ஒருநாள் உயர்தர கல்வி அதிகாரி ஒருவர் அங்கு வந்தபோது இறை வணக்கம் தெலுங்கிலே நடைபெற்றுக்கொண்டிருந்தது. கல்வி அதிகாரி அவர்கள், "ஏன், இன்னும் இங்கே தெலுங்கிலே பாடுகிறீர்கள்?" என்று சொன்ன பிறகுதான் இந்தக் குழப்பங்கள் எல்லாம் ஏற்பட்டன என்பது அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி அந்தக் கல்வி அதிகாரிமீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கொடுக்கும் தகவல் எங்களுக்கு வரவில்லை. அப்படி வந்திருந்தால் கல்வி அதிகாரிமீது தக்க நடவடிக்கை எடுத்திருக்கும்.

**திரு. பெ. சீனிவாசன்**: தலைவர் அவர்களே, நம்முடைய நாடு ஒரு மதச் சார்பற்ற நாடு. இதில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் அன்றாடம் இறைவணக்கத்தைக் கட்டாயமாக நடத்தத்தான் வேண்டுமா? இறைவணக்கம் இல்லாது, தமிழ் வாழ்த்து, நாட்டு வாழ்த்து போன்றவற்றை ஏற்பாடு செய்து, மாணவர்களுடைய உள்ளத்தில் ஒரு பரந்த நோக்கத்தை உண்டாக்க இந்த அரசாங்கம் ஏன் முயற்சி எடுக்கக்கூடாது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவர் அவர்களே, மதம் என்பது சில சம்பிரதாயங்களையும், சடங்குகளையும் கொண்டது. ஆனால் இறைவணக்கம் என்பது அதற்கும் அப்பாற் பட்டது.

**திரு. சா. மெய்யப்பன்**: தலைவர் அவர்களே, எந்தெந்த பள்ளி களில், எந்தெந்த மொழியில், எந்தெந்த இறைவணக்கப் பாடல்கள் நடைபெறுகின்றன என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவர் அவர்களே, தமிழகத்தின் கோடிகளில்தான் இந்தப் பிரச்சினை எழும்பியிருக் கின்றது. அதற்குக் காரணம், எதிர்க் கட்சி உறுப்பினர் கூறியபடி, மொழிவாரிப் பிரிவினை ஏற்பட்ட நேரத்தில், சில பகுதிகளில் தமிழ் மொழி அல்லாத வேற்று மொழி கொண்டவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதால் இம்மாதிரியான பிரச்சினைகள் தோன்று கின்றன. மொத்தத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை எழவேண்டிய நிலைமையே இல்லை. ஒன்று ஓசூர் பகுதி, இன்னொன்று தாளவாடிப் பகுதி. தாளவாடிப் பகுதியை கன்னடப் பகுதியில் சேர்த்துவிடலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுலபமான யோசனையைக் கூறியிருக்கிறார்கள். மக்களுக்காக அப்படிப் பேசுவதாகச் சொல்லுகிறார்கள். தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அம்மாதிரியான வாக்கை அளித்திருக்கிறார் கள் என்றும் கேள்விப்பட்டேன். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர அனைவரும் கலந்து பேசி, சுமுகமான உறவுமுறைகளை ஏற் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

## சிலப்பதிகாரம்

*வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-க்கான (S.S.L.C.) இந்தி பாட புத்தகத்தில் (குல்தஸ்த்தா) சிலப்பதிகாரத்தை ஓரங்க நாடகமாக எழுதியதில், பாண்டிய மன்னனை (நெடுஞ்செழியன்) குடிகாரனாகவும், பாண்டி மாதேவியின் இரண்டு சிலம்புகளுமே களவு போயிற்று என்றும் சிலப்பதிகாரத்தின் சிறப்பையே மாற்றி எழுதப்பட்டு இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) நாடகத்தை மேலும் விறுவிறுப்பாக்குவதற்காக ஆசிரியர் அதிக உரிமை எடுத்துக்கொண்டு கதையை மாற்றி யுள்ளதாகத் தெரிகிறது. இப்புத்தகம் இப்போது பள்ளிகளில் பாட புத்தகமாக பயன்படுத்தப்படுவதில்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்தப் பாடப் புத்தகத்தைத் திருத்தி, நல்ல கருத்து தோன்றும் முறையில் எழுதுவதற்கு இந்த அரசு வழிவகை செய்வார்களா? அதைத் திருத்தாவிட்டால், மற்ற மாநிலங்களில் இதுபோன்ற தவறான பிரச்சாரம் செய்வதற்கு வழிவகை இருக்காதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் புத்தகத்தை பாடப் புத்தகத்திலிருந்து அறவே எடுத்தாகிவிட்டது. அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்கு உண்மைக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சா. மெய்யப்பன் :** அதுமாதிரி தமிழர்களுடைய பண்பாட்டை இழிவுபடுத்தும் முறையில் நீதிக்குப் பேர்போன பாண்டியனை குடிகாரன் என்பதாகச் சித்தரித்து நூல் எழுதிய ஆசிரியரின்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படி எந்த ஆசிரியரும் வேண்டுமென்று பழி சுமத்தியிருப்பார் என்று கருதத் தேவையில்லை. அவருக்குத் தவறான தகவல்கள் கிடைத் திருத்தலாம். தம் தவறைத் திருத்திக்கொள்ள நாம் அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

## *Officers brought over to Industries Department*

*4 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of officers brought from the Electricity Department to the Industries Department;

(*b*) the different dates on which they were brought to the **Industries Department;**





(*c*) whether their services have been regularised and the increments due, have been paid; and

(*d*) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) தொழில் துறையிலுள்ள, தமிழ்நாடு தொழிற்பணியில் 3-வது வகையைச் சேர்ந்த பதவிகளில் நியமிக்கப்படுவதற்காக தமிழ் நாடு மாநில மின்சார வாரியத்திலிருந்து கீழ்க்கண்ட 15 அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் :—

| | அதிகாரியின் பெயர். (1) | வேலை ஏற்றுக்கொண்ட நாள். (2) | |
|---|---|---|---|
| 1 | திரு. இ. என். நாராயணசுவாமி | 24—8—55 | முற்பகல். |
| 2 | திரு. டி. சோமசுந்தரம் | 23—8—55 | ,, |
| 3 | திரு. ஜி. துரைராஜ் | 22—5—57 | ,, |
| 4 | திரு. கே. தெய்வநாயகம் | 9—4—57 | ,, |
| 5 | திரு. என். சுந்தரம் | 14—3—57 | ,, |
| 6 | திரு. ஏ. பாலகிருஷ்ணன் | 11—8—58 | ,, |
| 7 | திரு. பி. பாலசுப்ரமணியம் | 18—9—58 | மாலை. |
| 8 | திரு. டி. என். நரசிம்மபிரசாத் | 24—4—59 | முற்பகல். |
| 9 | திரு. ஏ. வாசுதேவன் | 24—10—58 | ,, |
| 10 | திரு. பி. கே. ரமணன் | 30—3—59 | ,, |
| 11 | திரு. என். வி. ராஜப்பா | 11—7—60 | ,, |
| 12 | திரு. சி. ஆர் காமத் | 29—7—60 | ,, |
| 13 | திரு. எஸ். எம். அஹமது இப்ராஹிம் | 8—7—60 | ,, |
| 14 | திரு. எஸ் விஜயராகவன் | 15—7—60 | ,, |
| 15 | திரு. பி. என். சேதுராமன் | 26—10—60 | ,, |

(உ) இன்னும் தொழில் துறையில் உள்ள பத்து அதிகாரிகளின் பணி முறைப்படுத்தப்பட்டு, இதுபோன்ற தேர்வுகளில் வழக்கமாகக் கொடுக்கப்படும் சம்பள உயர்வுகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(எ) இவ்வினா எழவில்லை.

DR. H. V. HANDE : Will the Minister for Industries give an assurance to this House that he will take particular care to see that the services of such of those officers as have not been regularised will be regularised? The trouble appears to be that the Finance Department has not yet passed orders regularising the services, and regularisation confers on the officers certain benefits like increments. Is it a fact that the delay is in the Finance Department and, if so, will the Minister get in touch with that Department and see that the services are regularised as early as possible?

MR. SPEAKER : During question hour members can only ask for information and not for assurances.

எழுப்பியபோது, "அப்படி அதிகமாக வந்தால் வருகிற ஆண்டு பார்த்துக்கொள்ளலாம்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அதையொட்டி, அப்படி அதிகமாக மனுக்கள் வந்து, அவர்களுக்காக ஒரு வேளை 'ஷிப்ட் சிஸ்டம்' வைப்பது என்று முடிவு செய்தால், அதற்குத் தகுந்தாற்போல் 'எக்ஸ்ட்ரா ஸ்டாஃப்' போடுவார்களா? அல்லது இருக்கிறவர்களையே வைத்துக்கொண்டு, காலையில் கொஞ்சம் பார்த்துக்கொள், மாலையில் கொஞ்சம் பார்த்துக்கொள் என்று சொல்லி கல்வியின் தரம் குறைகிற அளவுக்கு ஏதாவது செய்துவிடுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தரம் குறையாத முறையிலே திட்டங்கள் வகுக்கப்படும்.

### *Prayer songs at schools*

*2. Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether singing of Telugu songs at prayers at local schools in Hozur taluk in Salem district has been discontinued under instructions from the officials of the Education Department, recently; and

(*b*) if so, the reasons for taking such a step?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** சிறுபான்மை வகுப்பினருக்கு, தங்களுடைய தாய்மொழியில் பாடுவதற்கு, 'ப்ரேயர்' செய்வதற்கு உரிமை கிடையாதா? அதை அந்த வட்டாரக் கல்வி அதிகாரி, அரசாங்கத்தினுடைய உத்தரவின்பேரில் தடுத்தாரா? அப்படித் தடுத்திருந்தால், அந்தச் செயலைத்தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஓசூர் உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 1,200 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 320 பேர் தமிழ் எடுத்துப் பயிலுகிற மாணவர்களாகவும் பாக்கிப் பேர்கள் தெலுங்கு எடுத்துப் பயிலுகிற மாணவர்களாகவும் இருக்கிறார்கள். தொடர்ந்து அங்கே தெலுங்கிலே வழிபாடு முறை நடத்தப்பட்டு வந்தது. தமிழிலும் வழிபாடு நடைபெறவேண்டும் என்று 320 தமிழ் மாணவர்கள் தலைமையாசிரியரிடத்தில் விண்ணப்பித்து வந்தார்கள். அது பற்றிக் கவனிக்கலாம் என்று தலைமையாசிரியர் சொல்லிக்கொண்டே வந்தார். அதற்குப் பிறகு, தமிழில் பயிலும் மாணவர்கள், தமிழில் வழிபாடு வைக்க வேண்டும் என்று சொல்லி, 25—8—1967 அன்று பள்ளிக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு வந்தார்கள். அதன் காரணமாக; தெலுங்கு மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் மனக் கசப்பு ஏற்பட்டு, அதன் மூலமாக சில கலவரங்கள்கூட ஏற்பட்டு, அங்கங்கே



இருக்கும் தமிழ் போர்டுகளை அழிக்கும் முயற்சிகள் நடைபெற்றன. அதையொட்டி, மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறை அதிகாரியும், மாவட்டக் கல்வி அதிகாரியும் சென்று, ஊரிலே இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்ற பொது மக்களின் பிரதிநிதிகள் எல்லாரையும் கூட்டி வைத்து, அவர்கள் மூலமாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன் மூலமாக தெலுங்கில் வழிபாடு நடத்துவதோடுகூட, தமிழிலும் வழிபாடு நடத்தலாம் என்ற முறைக்கு வந்து, திருக்குறளில் ஓரிரு செய்யுட்களைத் தமிழில் சொல்லலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கலவரங்கள் நடந்த தேதி 25—8—1967. அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு, 28—8—1967-லிருந்து சுமுகமான முறை மேற்கொள்ளப்பட்டு, இப்பொழுது எந்தக் கலவரமும், எந்த அமைதியின்மையும் இல்லாத வகையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதுதான் ஏற்பட்ட நிலைமை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to prayer affairs in high schools in Hosur and also in Denkanikottah, the local Tamil officials exhibit discriminatory attitude. The non-Tamilians like Telugu and Kannadiga students were beaten and they were frustrated. I have already submitted a memorandum to the Hon. Chief Minister and requested him to go into the matter. Now may I request the Hon. Chief Minister to state the steps taken by him in that regard?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. கனம் உறுப்பினர் சொன்னதிலிருந்து சரியான தகவல் கிடைத்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, எங்களுக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாம், அங்கு இதுவரையில் இறை வணக்க வழிபாடு தெலுங்கிலே நடைபெற்று வந்ததாகவும், அதை நிறுத்திவிட்டு அனைவரும் தமிழிலே இறைவழிபாடு நடத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்ததன் விளைவாக மாணவர்கள் வெளியிலே இருந்த தமிழ் விளம்பரப் பலகைகளையெல்லாம் அழித்தார்கள் என்றும் கூறப்படுகிறது. தெலுங்கிலே உள்ள இறைவழிபாட்டை நிறுத்திவிட்டு, தமிழிலே நடத்த ஏற்பாடு செய்ததன் காரணமாகவே, மாணவர்கள் தமிழ் விளம்பரப் பலகைகளை அழித்தார்கள் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அமைச்சர் அவர்கள் தெரிவித்த தகவல்கள்தான் சரியான தகவல்கள். இதற்கிடையிலே கேள்விப்பட்டதெல்லாம், ஒவ்வொரு சாராரும் தங்களுக்குத் தோன்றிய தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்தச் செயலை யார் துவக்கியதாக இருந்தாலும், மொழி உணர்ச்சியின் அடிப்படையில் இவ்விதம் நடைபெற்றது மிகவும் வருந்தத்தக்கது என்பதை அரசு உணருகிறது. ஒவ்வொரு மொழியினருடைய உணர்ச்சிக்கும் பங்கம் விளைவிக்காதவகையில், அந்த வட்டார

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பதினைந்து பேர்களில் 5 பேர்கள் வெவ்வேறு வேலைகளுக்குப் போய்விட்டார்கள். பாக்கியுள்ள 11 பேர்களில் 9 பேர்களுடைய பிரச்சினையும் தீர்க்கப்பட்டு அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்பட்டு, இன்க்ரிமெண்ட் எல்லாம் வழங்கப்பட்டு விட்டது. மற்றவர்களைப் பற்றியும் நடவடிக்கை எடுக்க விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. விவரங்கள் கிடைத்த பிறகு என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மின்சார வாரியத்தில் இருந்து கொஞ்ச காலத்திற்கு முன் வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டு திரும்பியவர்களின் சம்பளம், அலவன்சு முதலியன இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா? உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் கிடைக்கவில்லை. கனம் அங்கத்தினர் அந்த விவரங்களைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Autorickshaws*

*5 Q.—Thiru G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works Department be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of autorickshaws plying in the City of Madras and to permit the plying of autorickshaws in other districts; and

(*b*) if so, the reasons thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) சென்னை மாநகரில் ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

(இ) இவ் வினா எழவில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** 1967-68-இல் இந்த ஆட்டோ ரிக்ஷாக்களினால் ஏற்பட்ட விபத்துகள் எவ்வளவு? அவற்றில் மரணம் அடைந்தவர்கள் எவ்வளவு? காயம் அடைந்தவர்கள் எவ்வளவு? ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு ஸ்பீட் லிமிட் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதல் கேள்வி விபத்துக்களைப் பற்றியது அல்ல. அப்படி ஒரு கேள்வி கேட்டால் விவரம் தர உதவியாக இருக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சென்னையை அடுத்த பெரிய நகரமாக மதுரை விளங்குவதன் காரணத்தினால் மதுரையில் மேலும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுரையில் அதிகமான ஆட்டோ ரிக்ஷாக்கள் தேவைப்படுகின்றன என்கிற வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டால் அதுபற்றி பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஏழைகளின் வாகனம் ஆட்டோ ரிக்ஷாக்கள்தான். முன்பு இருந்த அரசாங்கம் அதை விஸ்தரிப்பது இல்லை என்று தடுத்து நிறுத்திவிட்டார்கள். இப்போதுள்ள அரசாங்கமாவது ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்பு 199 ஆட்டோ ரிக்ஷாக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. அதற்குமேல் அனுமதிக்க வேண்டியதில்லை என்பதாக காவல்துறை அதிகாரிகள் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருந்தார்கள். அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு அந்த 199 ஆட்டோ ரிக்ஷாக்கள் போதுமானது, மேலும் சென்னை நகரைப் பொறுத்தவரையில் அதை விஸ்தரிக்க வேண்டியதில்லை என்பதாக சென்ற அரசு தீர்மானித்திருந்தது. இந்த அரசும் அந்த முடிவினையே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Autorickshaw drivers go out of the job once the autorickshaws go off the roads on account of their not being allowed to ply on the roads. Will the Government come forward to see that these autorickshaw drivers are given training as drivers of private or Government buses and are given differential or preferential treatment as far as employment is concerned ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது புதிதாக யாரும் வேலையை விட்டுப் போய்விடவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே 199 ஆட்டோ ரிக்ஷாவாகக் குறைக்கப்பட்டு விட்டது. இப்போது நாம் அந்த எண்ணிக்கையைக் குறைக்கவில்லை. அப்போது வேலை இழந்திருக்கக்கூடியவர்கள் அப்போதே வேறு வேலைகளுக்குப் போய் இருக்கக்கூடும்.

**திரு. கே. விநாயகம் :** ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு இப்போது கிராக்கி ஏற்பட்டிருப்பதன் காரணமே இப்போதிருக்கிற டாக்ஸி மீட்டர்களை அதிகப்படுத்தி இருப்பதுதான். ஆகவே, இன்றைக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் கிடைக்கவில்லை என்றால்தான், அநேகமாக டாக்சிகளை உபயோகப்படுத்திக்கொள்ள முன் வருகிறார்கள். ஆகவே மக்கள் நலனைக் கருதி ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை நூற்றுக்கும் அதிகமாக உயர்த்த இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆட்டோ ரிக்ஷாக்களை ஏன் அதிகப்படுத்தத் தேவையில்லை என்பதற்கு காவல்துறை ஆணையர் குறிப்பிட்டுள்ள காரணங்களை இங்கே குறிப்பிடுவது நல்லது என்று கருதுகிறேன். மூன்று சக்கர வண்டி பயணிகளின் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல என்பது ஒன்று. போக்குவரத்து நெருக்கடியுள்ள இடங்களில் அந்த மூன்று சக்கர வண்டிகளினால் திடீரெனத் திரும்ப முடியாது என்பது ஒன்று. அடுத்து இந்த வண்டிகள்

மிருந்த இரைச்சலை உண்டாக்குகின்றன என்பது ஒன்று. நிறையப் புகை விடுவதனால் அது பொதுமக்களுக்குத் தீங்கானது என்பது ஒன்று. அடுத்து, தானே இயங்கும் மின்விளக்குக் கைகாட்டி உள்ள இடங்களில் மிக விரைவாக அவற்றினால் கடக்க முடியவில்லை என்பது ஒன்று. இதனால் போக்குவரத்து தடைபடு கிறது. இப்படிப் பல காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றின் காரணமாக 199-க்கும் அதிகமாக ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்க வேண்டாம் என்ற யோசனை தெரி விக்கப்பட்டது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி** : கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷாக் களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டிருந்தும் அதிகமான அளவுக்குப் பொதுமக்களிடத்தில் இருந்து கட்டணம் கேட்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அது குறித்துக் குறிப்பாக எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்** : வளர்ந்துவரும் நகரங்களில் போக்கு வரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், பலர் இதை ஜீவனோபாய மாகக் கொள்வதற்கும் இந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் உதவிகரமாக இருக்கின்றன. ஆகவே, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : சென்னையைத் தவிர ஏனைய நகரங்களில் அந்த யோசனை தெரிவிக்கப்பட்டால் அது பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. மெய்யப்பன்** : ஆட்டோ ரிக்ஷாக்களை அதிகப்படுத்து வதனால் குதிரை வண்டிக்காரர்கள் வேலை இழக்கவும், புல் கட்டுகளை விற்றுப் பிழைக்கிற தாய்மார்கள் பாதிக்கப்படவும் கூடும் என்பதனால் மாவட்டங்களில் ஆட்டோ ரிக்ஷாக்களைப் புகுத்தாமல் இருப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்படி பல்வேறு திசைகளில் இருந்து எதிர்ப்புகள் வருவதால்தான் அரசாங்கம் தன்னுடைய முடிவை மாற்றாது வைத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : ஆட்டோ ரிக்ஷாவுக்கு அழகுத் தமிழ்ப் பெயரை அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்போது ஆட்டோ ரிக்ஷா என்றே குறிப்பிடலாம். பிறகு மாற்றிக்கொள்ளலாம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether this Government will run auto-rickshaws as a public sector undertaking in Madras City?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்போது உத்தேசம் இல்லை.



*Assistant Engineers in Highways Department*

*6 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there has been some irregular posting of Assistant Engineers in the City Roads Wing of the Highways Department; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு மு. கருணாநிதி** : (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

*Accident near Munroe Bridge*

*7 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether three school-going children were killed on the 21st July 1967 as a result of an accident near Munroe Bridge in Chetput; and

(b) if so, the steps taken to offer protection from such accidents to school-going children?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) விபத்தின் விளைவாகச் சிறுமி ஒருத்தி இறந்துவிட்டாள். மற்றும் இரு சிறுமிகள் படுகாய முற்றனர்.

(இ) மன்றோ பாலத்தில் காலை 8 மணி முதல் 11 மணி, மாலை 4 மணி முதல் 7 மணி வரை சரக்குப் பேருந்துப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய நேரங்களில் ஏனைய வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்தும் பொருட்டு அவ்விடத்தில் கூடுதல் போக்குவரத்துக் காவலர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். பாலத்தை அகலப்படுத்துமாறும், நடந்து செல் வோருக்குத் தனி வழி அமைக்குமாறும் சென்னை மாநக ராட்சிக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்** : அந்தப் பாலம் மிகச் சிறிய பாலமாக இருப்பதாலும், லாரிகள் போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே, லாரிப் போக்குவரத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் உத்தர விடுமா ? மு.ப. 11-30

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பள்ளி நேரங்களில் லாரிப் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப் பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister, viz., that the Ministry has addressed the Corporation with regard to the expansion of the bridge, will the Hon. Minister tell us whether they have received any reply from

the Corporation and also the exact stage at which the matter stands. Also, will the Ministry insist on the Corporation to execute the scheme as early as possible?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** அரசினர் சார்பில் மாநகராட்சிக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை. உறுப்பினர் அவர்கள் யோசனைப்படி மிக விரைவாகச் செய்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

***திரு. எஸ். ஜே. ராமசாமி :*** பாலம் கட்டி முடிக்க வேண்டுமென்றால் ஒரு வருஷம் ஆகும். அதுவரை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்குமென்பதால் உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அந்தக் குழந்தை இறந்தது லாரியில் அடிபட்டா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் அடிபட்டா ?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** கேள்விக்குப் பதில் அளித்ததிலேயே லாரியினால் ஏற்பட்ட விபத்து என்று கூறப்பட்டிருக்கிறது.

***திரு. கே. விநாயகம் :*** மன்றோ பாலத்தில் நடந்த விபத்தில் இறந்துபோன சிறுமியின் பெற்றோர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கும் நஷ்ட ஈட்டை இந்த அரசாங்கம் தந்ததா? தரவில்லை என்றால் அதைத் தருவதற்கு இப்போதாவது யோசிக்குமா ?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** தனிப்பட்ட அந்த லாரிச் சொந்தக்காரரிடம் கேட்டு அவர் கொடுத்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. இது அரசாங்கத்தைப் பொருத்த விஷயம் இல்லை.

*Invalid food*

*3 Q.—Thiru G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the unauthorised sale of invalid food in the "Burma Market" in the First Line Beach in Madras City ?

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :*** ஜார்ஜ் டவுன் பகுதியைச் சேர்ந்த உணவுப் பங்கீட்டு அதிகாரியின் நேர்முக உதவியாளர் "பர்மா அங்காடித் தெருவில்" முன்னெச்சரிக்கையின்றிச் சோதனையிட்டபோது, குழந்தைகள்/ஏலாதோர் உணவுப் பொருள்கள் பல கைப்பற்றப்பட்டன. உரிய முறைப்படி ஒப்பம் பெற்றுக் கொண்ட பின்னர் அவை அதிகாரம் வாய்ந்த வணிகரிடம் ஒப்படைக்கப்பட்டன.

***திரு. எஸ். இராமச்சந்திரன் :*** இந்தக் குழந்தைகள் உணவுப் பண்டங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அறவே நீக்கிவிட அரசு முன்வருமா ?

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :*** இப்போதேகூட குழந்தைகள் உணவுப் பொருள்கள் சம்பந்தமாக முழுக்





கட்டுப்பாடு இல்லை. இப்போது விநியோகத்தில் இருக்கிற சிலபல குறைபாடுகளை உத்தேசித்து சிவில் சப்ளைஸ் ஜாயின்ட் கமிஷனர் அவர்கள் இந்தக் கட்டுப்பாட்டை அறவே நீக்கிவிடலாம் என்ற பரிந்துரையை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

***திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :*** ஏலாதோர் உணவுப் பொருள் தேவையானவர்களுக்குக் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த உணவுப் பொருள் அங்காடியில் தாராளமாக விற்கப்படுவதாக இருந்தால் எந்த முறையிலே விற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது ? இதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :*** இப்போதே கூட அமுல், ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருள்களுக்கு அரசாங்கக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. மொத்த உற்பத்தியில் 20 சதவிகிதத்தைச் சர்க்கார் எடுத்து விற்பனை நிலையங்கள் மூலமும், விமன்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் மூலமும் வழங்குகிறது. உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு டிபுடி கமிஷனர் பர்மிட் கொடுத்து வழங்கப்படுகிறது. தவறு நடக்க சாத்தியக் கூறு இல்லை. 80 சதவிகிதம் அதிகாரம் பெற்ற வணிகர்கள் மூலமாக உற்பத்தியாளர்களால்தான் விநியோகிக்கப்படுகிறது. அதிலே சில விதிமுறைகள் இருக்கின்றன. கணக்குக் காட்ட வேண்டும், ஸ்டாக் எவ்வளவு என்று தெளிவாகப் போட வேண்டுமென்றிருக்கிறது. அரசாங்கம் இந்த பார்ஷியல் கண்ட்ரோலைக்கூட எடுத்து விடலாம் என்பதுபற்றி யோசித்து வருகிறது.

Thiru K. VINAYAKAM : Sir, may I know, as a result of this kind of raid of the Burma market, how much quantity was detected and how did they manage to get it ? Through what channel they got it? Are they competent merchants to sell it without a licence ?

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :*** 80 சத விகிதம் லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கணக்குக் காட்ட வேண்டும், எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்று போர்டு வைக்க வேண்டும். ஆனாலும் வியாபாரிகளின் குயுக்தி முறைகளினால் வேறு மார்க்கெட்டுகளுக்குப் போகக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

***திரு. இரா. மாணிக்கவாசகம் :*** அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட குழந்தைகள் உணவு 20 சத விகிதத்தில் கிராமப்புற மக்களுக்குக் கொடுப்பது எத்தனை சதவிகிதம் ?

(விடை இல்லை)

Dr. H. V. HANDE : Sir, will this Government come forward to find out the number of tins of milk food available from the manufacturers for this State in a month or a year and also the

number of tins required by the consumers. If that information is found out, both this House and the Government will have an idea as to the exact difficulty in the distribution of milk food ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதிலே அந்த மாதிரியான நிலைமைகள் ஏற்படவில்லை. அரசாங்கமே பொதுமக்களுக்குச் சவுகரியம் செய்து கொடுக்கலாம் என்ற எண்ணத்தில்தான் 20 சதவிகிதத்தை ஏற்றுக் கொண்டது. பொதுவாக, இவற்றின் உற்பத்தி குறைவாகவும், வாங்குகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கின்ற காரணத்தால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. மொத்தம் எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதைப்பற்றி ஆராய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பர்மா அங்காடியில் வெளி நாட்டில் இருந்து கடத்திக் கொண்டு வந்த பொருள்கள் விற்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அந்தத் தமிழர்களுக்கு மாற்றுத் தொழில் ஏதேனும் கொடுக்க அரசாங்கம் வழி செய்யுமா ?

(பதில் இல்லை)

## Juvenile smoking

*9 Q.—Thiru G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state whether any survey has been undertaken in regard to increasing juvenile smoking in recent times ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சிறுவர்கள் பீடி பிடிக்கின்ற கெட்ட பழக்கத்தைப் போக்காவிட்டால் அவர்களுக்குப் புற்று நோய் வருகிறது என்ற காரணத்தால் அவர்கள் பீடி பிடிக்கக் கூடாது என்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புகை பிடிப்பதால் இளம் சிறார்களுக்கு வியாதி வருகிறது ; அந்தப் பழக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு முன்னாலே அமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்ட மாநாட்டிலே முடிவு எடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அது பற்றித் தெரிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொருத்தவரை 1946-ம் ஆண்டிலிருந்தே இந்தக் கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதைச் சட்டத்தின் மூலமாகத் தடுத்து விட முடியாது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்து மாணவர்கள் இதைப் பயன்படுத்தக் கூடாது என்ற அளவிலே எல்லாப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அரசாங்கத்தால் உத்தரவு அனுப்பப்பட்டு கல்வி நிலையங்களிலே புகை பிடித்தலைக் கடுமையாகத் தடுக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கிறது.



திரு. வி. எஸ். எஸ். மணி : புகை பிடிப்பது பெரியவர்களானாலும் சரி அல்லது சிறியவர்களானாலும் சரி அது கெடுதல்தான். சிறியவர்கள் மட்டும் புகை பிடிக்கக் கூடாது என்று சொல்வதுடன் பெரியவர்களும் பிடிக்கக் கூடாது என்று வற்புறுத்த வேண்டும். பொதுவாக புகை பிடிப்பது என்பது கெடுதல்தான். அதில் 'ஸ்டிமுலன்ட்' இருக்கிறது என்று சொல்கிறார்கள். 'லிக்கர்' மதுவில் இருப்பதுபோல் இதிலும் 'ஸ்டிமுலன்ட்' இருக்கிறது. ஆகவே இதை ஏன் சட்டபூர்வமாகத் தடுக்கக் கூடாது என்பது தான் என் வினா. புகையிலை போடுவது, மூக்குப் பொடி போடுவது, வெற்றிலை பாக்கு போடுவது இவை எல்லாம் கெடுதல்தான் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புகை பிடிப்பது எப்படி கெடுதல் என்று ஆராய்ச்சி செய்யப்பட்டு பல பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இளம் சிறார்களுக்குத்தான் புகை பிடிப்பதினால் எளிதில் 'லங்க்ஸ்' கெடுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே, மாணவர்கள் புகை பிடிப்பதைத் தடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. மு. ச. சிவசாமி: மத்திய அரசாங்க நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இரண்டு திங்களுக்கு முன்பு புகையிலைப் பொருள்களுக்கு வரி உயர்த்தப்படும் என்று சூசகமாகத் தெரிவித்திருப்பதால் கடந்த ஒரு மாத காலமாக நம் மாநிலத்தில் புகை பிடிக்கும் பொருள்களின் விலை அதிகமாகியிருப்பது நம் அரசுக்குத் தெரியுமா ?

(விடை இல்லை)

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சினிமாக்களில் ஒரு குறிப்பிட்ட படங்கள் வயது வந்தவர்கள் மட்டும்தான் பார்க்கலாம் என்ற தடை இருப்பது போல் பீடி, சிகரெட் விற்கும் கடைகள் குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுந்தான் விற்க வேண்டும் என்ற உத்தரவைப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1958-ம் ஆண்டு தமிழகத்தின் சார்பில் சட்ட அங்கத்தினர்கள் எல்லாம் ஒரு சட்டத்தைத் திருத்தும்போது, மதராஸ் சில்ரன்ஸ் ஆக்டைத் திருத்தும்போது இதுபற்றி பரிசீலிக்கப்பட்டது. இந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டாலும் அதைச் சட்டபூர்வமாகச் செயல்படுத்துவது கஷ்டம் என்ற காரணத்தினால் தந்தைக்காக மகனை அனுப்பும் பழக்கம் இருக்கும் காரணத்தினாலும் இதைச் சட்டத்தால் தடுக்க முடியாது என்ற முடிவிற்கு வரப்பட்டிருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Increase and decrease in juvenile smoking depends upon the increase and decrease in adult smoking. Unless elders think that smoking is bad and that they should not smoke and set an example to juveniles, it

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* நல்ல யோசனை.

*திரு. கே. போஜன் :* சிறுவர்கள் சிகரெட் குடிக்கும் பழக்கத்தை நிறுத்த சினிமாப் படம் தயாரிப்பதைவிட பேரவையில் உள்ள அங்கத்தினர்கள் முதலிலே அவர்கள் சிகரெட் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிட்டு மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பார்களா என்று அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(விடை இல்லை)

*திரு. ஆர். கருப்பையா :* மக்கள் பஸ்களில் செல்லும்போது புகை பிடிக்கிறார்கள். 'வண்டியில் புகை பிடிக்கக் கூடாது' என்று பொறிக்கப்பட்டிருந்தும் அரசாங்க வண்டிகளில் பலர் வண்டி ஓடும்போதே சிகரெட் குடிக்கிறார்கள். இதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது தடுக்கப்படுமா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* சட்டங்கள் நீண்ட காலமாக நாட்டில் இருக்கின்றன, மீறுபவர்களும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Is the Government aware of the fact that a concrete step has been taken in a few other countries to curtail the extent of smoking by insisting on advertising at the bottom of the packet that cigarette smoking is harmful to the lungs? Officially several democratic countries have insisted on such an advertisement. Will the Government examine the possibility of such an arrangement and make the printing clearly at the bottom of the packet that smoking is not good for the human system a statutory obligation?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இதுபற்றிய விவரங்களை அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் மத்திய அரசோடு கலந்து தான் இதில் முடிவு எடுக்க முடியும்.

*திரு. வ. ஜார்ஜ் :* அவைத்தலைவர் அவர்களே, இந்தப் புகை பிடிக்கும் பழக்கம் பரவலாகப் பரவுவதற்கு பத்திரிகை விளம்பரங்களும், சினிமாக் காட்சிகளுமே காரணங்களாக இருப்பதால், அவைகளைத் தடை செய்ய அரசாங்கம் முன் வருமா?

*மாணபுமிகு திரு. செ. மாதவன் :* திரைப் படங்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதை எப்படித் தடுப்பது என்று அதற்கென்று ஒரு சட்டம் இருக்கிறது.

*திரு. எம். எஸ். மணி :* தலைவர் அவர்களே, சில சினிமா ஸ்லைடுகளில் ஒரு பயில்வான் படத்தைப் போட்டு, பீடி பிடித்தால் சோம்பலை நீக்கிச் சுறுசுறுப்புக் கொடுக்கும் என்று போடுகிறார்களே, அத்தகைய ஸ்லைடுகள் போடுவதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது தானா இது என்று ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியது.





*திரு. எம். சுரேந்திரன் :* தலைவர் அவர்களே, இந்தப் புகை பிடிக்கும் பழக்கம் கஞ்சாக் குடிக்கும் பழக்கம், புராண காலத்திலேயே இருந்தது. புகை பிடிப்பதை மாற்றி கஞ்சாவே எல்லோரும் குடிக்கும் முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* புராணத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகையால் கஞ்சாக் குடிப்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether the Government will bring forward legislation to prohibit the sale of cigarettes to children between the age-group 5–12?

THE HON. THIRU S. MADHAVAN : The suggestion was already considered in 1958 but it was rejected by the Committee appointed by this House.

*திரு. பெ. சீனிவாசன் :* தலைவர் அவர்களே, மாணவர்களில் யாரோ ஒரு சிலர் அப்படிப் புகை பிடித்துக் கொண்டிருக்கலாம். அதை வைத்து மாணவர்கள் அனைவருமே புகை பிடிப்பதாகப் பேசுவது மாணவர்கள் சமுதாயத்தின் உள்ளத்தைப் புண்படுத்தும் என்று அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

(விடை இல்லை)

*திரு. வி. கே. கோதண்டராமன் :* ஸார், சிறுவர்களைப் பெற்றெடுத்த தாய்க்குலம் என்று சொல்லக் கூடிய பெண்குலம் கூட புகை பிடிப்பதாகச் சொல்லப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ? அவர்களைப் புகை பிடிக்காமல் இருக்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* எனக்கு அதில் அனுபவம் இல்லை. ஆனால், தமிழ்நாட்டுப் பண்பு அதை ஏற்காது என்று நம்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* கனம் உறுப்பினருடைய தொகுதியின் கோடியில் தான் அந்தப் பழக்கம் இருக்கிறது. (சிரிப்பு)

THIRU K. VINAYAKAM : Sir, whereas there cannot be any two opinions regarding the maladies and injuries of smoking, what is the view of this Government ? Do this Government smoking or discourage smoking? Let the Government categorically state their view on smoking?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இது பற்றி நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, சுகாதார அமைச்சர்களெல்லாம் சேர்ந்து முடிவு எடுத்து, தவறு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, எல்லா மாநில அரசுகளும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் தமிழக

is impossible to set right things. Therefore will the Hon. Minister for Law see whether any action can be taken to bring home to the minds of elders about the evils of smoking ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பிரச்சாரம் செய்தால் இது பயன் தரும் என்று நினைக்கிறார்கள். மாணவர்களைப் பொறுத்த வரையில் அரசாங்கமே அதுபற்றி உத்தரவு போட்டு இருக்கிறது. பொது மக்களுக்கு அங்கத்தினர்களே முயற்சி செய்யலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மதுவிலக்கைப்பிரச்சாரம் செய்யும் வகையில் இந்த புகைபிடிப்பதும் தவறு என்பதை மக்களிடையே பரப்ப, அதுபற்றி பிரச்சாரம் செய்ய சர்க்காருக்கு ஏதாவது திட்டமுண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புகை பிடிப்பது தவறா, சரியா என்பதுபற்றிய பல கருத்துக்கள் உலகத்தில் பல பாகங்களில் இருக்கின்றன. அதை ஆராய்ந்து அரசாங்கம் செய்வதற்குப் பதிலாக மக்கள் பிரதிநிதிகளே அதைச் செய்தால் பயன் இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த புகைபிடித்தல் விஷயமாகப் பேசுவது, இது மது உண்பதுபோல் உள்ள ஒரு பழக்கத்தைக் கொண்டுதான். மதுவை பரமேஸ்வரனே கூட விலக்க முடியாத நிலையில் கடவுள்களே அதைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். ஆகவே இந்த முயற்சி ஒரு வீணான முயற்சி. இந்த முயற்சியைக் கைவிட அரசாங்கம் முன்வருமா ?

(விடை இல்லை)

**திரு. எம். எஸ். மணி:** இந்தப் புகை பிடிப்பதை நிறுத்துவதன் காரணமாக தமிழகத்தில் லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** மாணவர்கள் புகை பிடிப்பதுபற்றி குறிப்பிட்டு, 1958-ல் இருந்தே இது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1958-க்குப் பிறகு அதிகமாக இது கூடியிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதற்கு வேறு ஏதாவது ஒரு முறையைக் கண்டு பிடித்து எப்படியாவது மாணவர்களிடையேயாவது இதைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாணவர்களிடையே பள்ளி நேரத்தில் கட்டுப்படுத்துவதற்குத்தான் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமாக நடத்தப்படுகிறது. ஆனால் பொது வாழ்க்கையில் அப்படிச் செய்கிறார்கள் என்றால் மக்களால்தான், அதைத் தடுக்க முடியும்.





**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இளைஞர்கள் எவ்வளவு சதவிகிதம் இப்போது புகை பிடிக்கிறார்கள் ?, சதவிகிதம் அதிகரித்துக் கொண்டு வருகிறதா அல்லது குறைந்து வருகிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றி ஆராய்ச்சி நடத்தப்படவில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மதுவிலக்கிற்காகச் சட்டம் கொண்டு வந்ததுபோல் இளம் சிறார்கள் புகை பிடித்தால் அது தவறு என்பதற்காகச் சட்டம் கொண்டு வருவதற்கு சட்டத்தில் வழிவகைகள் இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1920-ம் ஆண்டு குழந்தைகள் சட்டத்தில் இதைப் பற்றி ஒரு பிரிவு இருக்கிறது. ஆனால் அதில் புகை பிடித்தல் என்று சொல்லாமல் பொதுவாக மருந்து என்ற முறையில்தான் 'இன்டாக்ஸிகேட்டில் லிக்கர் ஆர் டேஞ்சரஸ் ட்ரக்ஸ்' என்ற வகையில் அது தடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இதையும் தடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதுதான் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அப்படித் தடுத்தாலும் உண்மையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது அல்லது அமல்படுத்துவது சங்கடம் என்ற முடிவிற்கு தமிழக அரசாங்கம் ஏற்கனவே வந்திருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** புகை பிடிப்பது தவறா அல்லது தவறில்லையா என்ற ஆராய்ச்சி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும், சர்க்கார் போடும் உத்தரவுகள்கூட சிலவிடங்களில் மீறப்படுகின்றன. குறிப்பாக சினிமாக் கொட்டகைகளில் ஸ்லைட் போடுகிறார்கள். கொட்டகையில் புகை பிடிக்கக்கூடாது. இது அரசாங்க உத்தரவு என்று ஆச்சரியக் குறி போடப்பட்டிருக்கிறது. நீங்கள் தாராளமாகப் பிடித்துக் கொள்ளலாம். ஆனால் அரசாங்க உத்தரவு இது என்று சொல்கிறார்கள். இப்படி மறைமுகமாக தூண்டுதலாக இருப்பதை, அப்படியிருக்கும் தியேட்டர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தியேட்டர்களில் புகை பிடித்தால் அதுபற்றி சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவர்கள் விளம்பரம் எப்படிப் போட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியாது. பொதுவாக இந்தப் புகை பிடித்தலை குறிப்பிட்ட சிலவிடங்களில் தான் தடுக்க முடியுமே தவிர பொது மக்களிடம் அந்தப் பழக்கம் நீங்க வேண்டுமென்றால் பிரச்சாரம், ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றால்தான் முடியும்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** கிராமப்புறங்களிலுள்ள இளம் சிறார்கள் புகை பிடிப்பதில் அதிகமாக ஈடுபடுகிறார்கள். புகை பிடிப்பதனால் ஏற்படக்கூடிய கெடுதல்களை மக்கள் உணரத்தக்க வகையில் ஒரு அரைமணி நேரம் இருந்து பார்த்து புரிந்து கொள்ளத் தக்கவகையில் ஒரு சினிமாப் படம் தயாரித்து எல்லா வீடுகளிலும் அதைக் காட்ட அரசாங்கம் முன்வருமா?

அரசும் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து, தவறு என்றாலும் அதைச் சட்டத்தால் தடுக்க முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

*Family Planning Officers*

* 10 *Q*.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint District Family Planning Officers; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) கோயம்புத்தூர், வட ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகள் பணி புரிகிறார்கள். மற்ற மாவட்டங்களில் தக்க அதிகாரிகள் கிடைக்காத காரணத்தால் பதவிகள் காலியாக உள்ளன. மாவட்ட சுகாதார அதிகாரிகளே குடும்பக்கட்டுப்பாடு அதிகாரிகளின் வேலைகளையும் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம்:** ஸார், சமீபத்திலே இந்த டிஸ்ட்ரிக்ட் பப்ளிஸிட்டி ஆஃபீஸர்ஸ் என்பவர்களை எல்லாம் அந்த வேலையில் இருந்து நீக்கிவிட்டு, அவர்களை எல்லாம் குடும்பக் கட்டுப்பாடு வேலைக்காக நியமிப்பது என்ற யோசனை அரசாங்கத்திடம் இருந்ததே அதை நிறைவேற்றிவிட்டார்களா? அல்லது, இன்னும் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்காமல், அந்தத் துறையிலிருந்து இந்தத் துறைக்கு வராமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்வி குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி சம்பந்தப்பட்டது. உறுப்பினர் கேட்கும் கேள்வி குடும்பக் கட்டுப்பாடு விளம்பர அதிகாரி பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு வெற்றி பெற வேண்டுமானால், அதற்காக நியமிக்கப்படுகிற அதிகாரிகள் பெரும்பாலும் பெண்களாகவே இருந்தால் நிச்சயமாக வெற்றி பெறும். ஆதலால் அதிகமான பெண்களை இந்த அதிகாரிகளாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா? மேலும், இந்த அதிகாரிகள் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்ட அதிகாரிகளாக இருந்தால் தான் இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் வெற்றியுறும். ஆகையால், குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்ட அதிகாரிகளையும், அதிகமான பெண் அதிகாரிகளையும் நியமிக்க இந்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி





என்பதற்கும், குடும்பக் கட்டுப்பாடு விளம்பர அதிகாரி என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் ஃபாமிலி ப்ளானிங் ஆஃபீஸருக்குத் தேவையான க்வாலிஃபிகேஷன், எம்.பி.பி.எஸ். டிகிரி மற்றும் டிப்ளோமா இன் பப்ளிக் ஹெல்த். இந்த க்வாலிஃபிகேஷனோடு முன் வந்தால் பெண்களை நியமிக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, வேலை இழந்த விளம்பர அதிகாரிகளை குடும்பக் கட்டுப்பாடு இலாகாவில் நியமனம் செய்வதாகக் கூறப்பட்டது. அதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் கொடுக்க முடியும்.

**திருமதி சு. குப்பம்மாள்:** தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை பெண்கள்தான் விரும்புகிறார்கள், ஆண்கள் விரும்பவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆண்கள் தான் விரும்பிப் பயன்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(விடை இல்லை)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** சார், குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளை நியமிப்பதில், திருமணம் ஆனவர்களாக இருந்தால் இத்தனை குழந்தைகளுக்குமேல் பெறக்கூடாது என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறதா? இல்லாவிட்டால் அப்படி ஒரு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எம்.பி.பி.எஸ். டிகிரி, டிப்ளோமா இன் பப்ளிக் ஹெல்த் இந்த இரண்டும்தான் தேவை. மற்றது எதுவும் தேவையில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளாக டாக்டர்களைப் போடுவதாகச் சொன்னார்கள். பட்டத்தை விட, சொந்த அனுபவம் உள்ளவர்கள் மற்றவர்களிடையே நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படி அனுபவத்தில் சிறந்தவர்களை சர்க்கார் நியமிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த அனுபவம் நிரம்ப இருப்பது எனக்குத் தெரியும். அவர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்ய மாட்டார்கள். அவர்கள் சம்பளம் இல்லாமலேயே அந்த வேலையைப் பார்க்க முன் வருவார்கள் என்று நம்புகிறேன். (சிரிப்பு).

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* முதலமைச்சர் இட்ட பணியை சிரமேற்கொண்டு எப்போதும் செய்யக் காத்திருக்கிறேன். (சிரிப்பு)

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether as the result of the appointment of Family Planning Officers, there is an upward or downward trend in the increase of population and whether any useful purpose has been served after the appointment of these officers in the matter of the growth of population ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றிய விவரம் தற்போது இல்லை.

THE HON. THIRU C. N. ANNADURAI : Our performance in Family Planning has been acclaimed to be of the very best order but now I am told that Maharashtra is stealing a march over us and we are trying to compete with them.

*திரு. என். வரதராஜன் :* தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியத்திற்காகக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது என்ற நியதியை மீறி, நாட்டின் பொருளாதார நெருக்கடி அத்தனையையும் தீர்த்து விடும் என்று இணைப்பான பிரச்சாரம் நடைபெறுகிறதே, அது பற்றி நம் அமைச்சரவையின் எண்ணம் என்ன? இந்திய சர்க்காரின் தவறான நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள இந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகிறது என்று நம் சர்க்கார் கருதுகிறதா இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொருளாதார நெருக்கடிக்கும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்றாலும், பொருளாதார நெருக்கடியை மட்டும் காரணமாக வைத்து குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் பிரச்சாரம் செய்யப்படவில்லை. நாட்டின் வளம், நாட்டின் நலன், அத்துடன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு, மக்கள் உடல் கட்டு, எதை எடுத்துப் பார்த்தாலும் மக்கள் தொகை வளர்ச்சியில் காட்டிக் கொண்டு வருகிற அளவு கடந்த ஆர்வம் பிற்காலச் சந்ததிகளைப் பாழ்படுத்திவிடும் என்பது பொதுவாக எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிற உண்மை.

*திரு. இரா. நாராயணன் :* ஸார், குடும்பக் கட்டுப்பாடு என்ற வார்த்தையை எடுத்துவிட்டு, குடும்ப நலத் திட்டம் என்று கொண்டுவர அரசாங்கம் முற்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது குடும்ப நலத் திட்டம் என்று தான் நாங்கள் கூறி வருகிறோம்.

*திரு. எஸ். இராமச்சந்திரன் :* தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்

நண் பகல் 12-00 பாடு திட்டத்தை ஏற்கெனவே தமிழ்நாடு நல்லமுறையிலே நிறைவேற்றி வந்திருக்கிறது, இதன் விளைவாகப் பாராளுமன்றத்திலே இரண்டு இடங்களை இழந்துவிட்டிருக்கிறோம். இந் நிலைமையில்





இருக்கின்ற, இப்பொழுதுள்ள நிலைமையையே வைத்துக் கொண்டு, இதைத் தீவிரப்படுத்தாமல் இருப்பதற்கு சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினரின் யோசனைப்படி நடப்பதாக உத்தேசமில்லை.

*திரு. கே. பி. எஸ். மணி :* குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் சர்க்கார் கொடுக்கிற விகிதாசாரப்படி, டார்ஜெட்டை முடிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, தவறான முறையில் அது பயன்படுத்தப்பட்டு தனிப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் மட்டும் அதிகமாக இதிலே கருத்தடை செய்து கொள்வதற்கு கிராமங்களிலே அதிகாரிகளால் நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? புள்ளிவிவரப்படி தஞ்சை ஜில்லாவில் 1966-67-இல் 21,000 பேர்கள் செய்து கொண்டார்கள். இதில் 19,000 பேர்கள் ஹரிஜனங்களுக்கும், பாக்கி 2,000 பேர்கள் பிற்பட்ட வகுப்பினரும் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா? இத்தகைய நடவடிக்கைகளில் தாராளமாக, மனமுவந்து செய்து கொள்பவர்கள் மட்டும் செய்து கொள்ளும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குறிப்பிட்ட தவறுகள் நடப்பதாக உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். கருத்தடை செய்துகொள்பவர்களுக்கு கட்டாயமாக செய்துவைக்கப்படவில்லை, அவர்கள் மனமுவந்து செய்துகொள்ளுகிறார்கள்.

*திரு. மு. ச. சிவசாமி :* தலைவரவர்களே, மாவட்டக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளை நியமிப்பதைவிட, குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சிறந்த வசதிகள் செய்து கொடுத்து, பிரயாணச் செலவையும் கொடுத்து மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்யச் சொல்ல உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கும் அரசியல் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் தங்கள் செலவில் இந்தக் காரியத்தைச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அவையுரிமைக் கேள்வி.

### திரு. சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' நாளிதழ் மீதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து அவையுரிமைக் கேள்வி. மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்கள் ஒரு அவை உரிமைக் கேள்விக்கு முன் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM: What about the units in the industrial estate?

THE HON. THIRU C. N. ANNADURAI: That may be an achievement but not in the industrial front as such.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி** : கிண்டி எஸ்டேட்டிலே சிறு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் பட்டதாக, நண்பர் விநாயகம் கூறு கிறார்கள். அவைகள் தொழிற்சாலைகளா? அது மாத்திரமல்ல, நண்பர் விநாயகம் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். கைத்தொழில்கள் சம்பந்தமாக, கூட்டுறவுத் துறை மூலமாக, பொம்மை செய்வதிலிருந்து, பாய் முடைவது வரை, பற்பல காரி யங்களைச் செய்திருக்கிறார்களே. நண்பர் விநாயகம் மறந்துவிட்ட இந்த மாதிரியான சிறுசிறு தொழில்களெல்லாம் இதுவரைக்கும் கணக்குப் பார்த்தால், சர்க்காருக்கு நட்டம் வந்ததாக இருக் கிறதே அல்லாது, லாபம் இல்லையே. இதை நண்பர் விநாயகம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடந்த இருபது ஆண்டு காலத்திலே, சர்க்காராலே ஆரம்பிக்கப் பட்ட தொழிற்சாலைகள் எல்லாவற்றிலும் நஷ்டம் ஏற்படும் நிலைகள் தான் இருக்கின்றன. வருமானமே வராத தன்மைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் உணர வேண்டும். நல்லபடியாக வருமானம் வரும் நிலையில் கடந்த 20 ஆண்டு காலத்தில் தொழிற் சாலைகளை ஆரம்பித்தார்களா என்றால், கிடையாது. இருபது வருஷ மாக ஆட்சி நடத்தியவர்கள் அம்மாதிரி தொழிற்சாலையை ஆரம் பிடிக்கவில்லை. ஆனால், இன்னும் பதவிக்கு வந்து ஒரு வருஷம் ஆகவில்லை. அதற்குள்ளாக எங்களைப் பார்த்து, "என்ன தொழிற் சாலைகளை ஆரம்பித்திருக்கிறீர்கள்' என்று கேட்பது என்றால், அந்தக் கேள்வியைக் கேட்பவர்களைப் பார்த்து உண்மையை அறிந் தவர்கள் சிரிக்க மாட்டார்களா என்று எண்ணிப்பார்க்கவேண்டும்,

அது மாத்திரமல்ல, கடந்த தேர்தலிலே மாறுதல்கள் ஏற்பட்டு, இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருப்பது போலவே, அல்லாமல், பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகத்திலே காங்கிரஸ் அட்சி நடக்கிறது. பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே காங்கிரஸ் அட்சி நடக்கிறது. இங்கே இருக்கும் காங்கிரஸ் நண்பர் களைக் கேட்கிறேன், கடந்த ஒரு ஆண்டு காலத்திலே உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கம் நடத்தும் அந்த அண்டை மாநிலங்களில், கடந்த ஒரு வருஷ காலத்திலே என்னென்ன செய் திருக்கிறார்கள் என்று காட்ட முடியுமா என்று கேட்க விரும்பு கிறேன். உங்கள் அரசாங்கத்திலே முன்னால் ஓடி நொடித்துப் போய்விட்ட, மூட வேண்டிய நிலையில் இருந்த பல மில்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்து, பாங்கி காரண்டி களைக் கொடுத்து கோவையில் 18 மில்களுக்கு உதவி, ஓடவைத் திருக்கிறது. அந்த பதினெட்டு மில்களும் ஓடுவதால், பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொண் டிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஒரு வருஷ காலத்திற்குள்ளே





மற்ற எந்த இராச்சியத்தை எடுத்துக் கொண்டாலும், யாரும், எதையும் ஆரம்பித்து நாம் இங்கே செய்த காரியத்தைப் போல செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

அது மாத்திரமல்ல, பெரிய தொழிற்சாலைகளுக்குத் திட்டமிட்டு, பணம் வைத்திருந்தாலும், உங்களைக் கேட்கிறேன், மத்திய சர்க்கா ரிலே இறக்குமதி லைசென்ஸ் கொடுக்கும் நிலையில் இருக்கிறார்களா, 'ஃபாரின் எக்ஸ்சேஞ்ச்' என்று சொல்லக் கூடிய பணத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்களா? ஆறு மாதத்திற்கு ஒரு முறை, ஏற்றுமதி-இறக்குமதி பாலிஸியைப் போட்டுக் கொண்டிருந்து மத்திய சர்க்கார், பணம் இல்லாத காரணத்தால், வெளிநாடுகளில் கையேந்தி பிச்சை கேட்டு, அவர்கள் பணம் கொடுப்பதைப் பொறுத்து ஏற்றுமதி-இறக்குமதி பாலிஸியை சர்க்கார் வெளியிடு கிறது என்பதையும் வைத்துக் கொண்டால், இம்மாதிரித் திரும்பத் திரும்ப எங்களைக் கேட்கமாட்டார்கள். ஒரு கோடியோ, அல்லது ஐந்து கோடியோ மூலதனத்தை போட்டு, தொழிற்சாலையை நாம் ஆரம்பிப்பதாக இருந்தாலும் கூட, மத்திய சர்க்கார் இறக்குமதி லைசென்ஸைப் பெறாத நிலைதான் இருக்கிறது. ஆகவேதான் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முடியாமல் இருக்கும் தன்மை இருக் கிறது. ஆகவே தொழில் வளம் பெறுகவில்லை என்பதையெல்லாம் உணர்ந்தால், இம்மாதிரிப் பேசமாட்டார்கள். கடந்த காலத்தில் பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்க பல உதவிகள் செய்திருக்கி றார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? அண்மையில் காங்கிரஸ் கட்சியின் புதுத் தலைவர், மைசூர் முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் கல்கத்தாவிலே பேசியபோது, கல்கத்தாவிலே இருக்கிற பணக்காரர்களை, 'வாருங்கள் மைசூருக்கு, முதல் போடுங்கள் அங்கே தொழில்களை ஆரம்பி யுங்கள்' என்று அவர்களைக் கேட்டார்களே தவிர, அவர்களும் கலகத்தாக்காரர்களைக் கேட்கும் நிலையில்தான் இருந்திருக் கிறார்கள். அதே போலத்தான் ஆந்திராவிலும் இருக்கிறது. ஆனால், தமிழகம் ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்து, நொடித்து மூடப்படவிருந்த தொழிற்சாலைகளில் 18-க்கு பாங்கி காரண்டி கொடுத்து ஓடவைத்திருக்கிறது.

கடந்த 15, 20 வருஷ ஆட்சியிலே நீங்கள் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு பல தொழில்களுக்கு உதவி அளித்திருக்கிறீர்கள். ஆனால் அந்த 100 கோடி ரூபாயும் இன்றைக்குக் கிடைக்கக் கூடாத, வராத, செலவு எழுதவேண்டிய நிலையில்தான் இருக்கிறதே தவிர, அவை வரக்கூடிய தன்மையில் இல்லை. உதாரணத்திற்கு இரண் டொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையிலே பெரிய செங்கல் சூளைகள் இரண்டிற்கு லட்சக் கணக்கான பணத்தை உங்கள் ஆட்சிக் காலத்திலே கொடுத்தீர்கள். அவற்றின் கதி என்ன ஆயிற்று? ஒரு செங்கல் சூளை ஆரம்பிக்கப்பட்டு, பின்னால் நிறுத்தப்பட்டது. இன்றைக்கு அதன் மதிப்பு என்ன என்று ஆடிட்டர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு சூளையில், லட்சக் கணக்கான பணத்திற்கு ஈடாக எதுவும் இல்லை, பணம்வருமோ, வராதோ என்று அச்சப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. கடந்த காலத்தில் உங்கள் ஆட்சியில் செய்த

THIRU ERE. ELAMVAZHUTHI : Sir, under rule 184 of the Madras Assembly Rules, I hereby give notice that I wish to raise the following matter of privilege against (1) Thiru C. Subramaniam and (2) the Publisher of 'The Hindu', Madras, in respect of the following passage occurring in 'The Hindu', dated 11th February 1968, page 11, column 2, under the sub-heading "Political Fraud", viz.,—

"Mr. Subramaniam described the recent language bill adopted by the State Assembly as the 'biggest political fraud'."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த முன்னறிவிக்கையானது தகுந்த நேரத்தில் கொடுக்கப்படாமையால் எனக்கு இதைக்குறித்து ஆராய நேரமில்லாத காரணத்தால் இதுபற்றி நாளை சொல்வதாக இருக்கிறேன். அதற்கு முன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும்.

## 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### கோவையில் நடந்த சம்பவங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அண்மையில் கோவையில் நடந்த சம்பவங்களையொட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கையில் உள்ள சில குறிப்புகள் நமது விதிகளுக்குப் புறம்பானவையாக இருக்கும் என்ற காரணத்தால் அந்தக் குறிப்புகளை நீக்கிவிட்டு, அவர்கள் மீண்டும் அந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இந்தப் பேரவைக்குக் கொண்டுவர அனுமதிக்கலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒற்றிவைப்புத் தீர்மானம்.

DR. H. V. HANDE : I wish to withdraw the adjournment motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றியும் அனுமதிக்கப்படுமா, இல்லையா என்பதைப்பற்றி நாளை நான் முடிவு சொல்வதாக இருக்கிறேன்.



## 5. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து ஓர் அறிவிப்பு இப்பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றும் கூட்டத்தொடரில் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நான் நியமிக்கின்றேன் :—

1. திரு. வி. எஸ். கோவிந்தராஜன்
2. திரு. பி. மலைச்சாமி.
3. திரு. ந. தருமலிங்கம்.
4. திரு. எஸ். முருகையன்.
5. திரு. வை. சுவாமிநாதன்.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

இப்பொழுது திரு. ஆசைத்தம்பி அவர்கள் அவர்களுடைய தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

## 6. ஆளுநரின் பேருரைமீது விவாதம்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சட்டமன்றத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் : "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் : '10-2-1968-ம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு [a] தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'."

**திரு. எஸ். முருகையன் :** சட்டமன்றத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்க திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தையொட்டி திருத்தத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் 14-2-1968, 12 மணிவரையில் கொடுக்கலாம்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சட்டமன்றத் தலைவரவர்களே, மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக நான் மிகமிக மகிழ்ச்சியடைகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையை ஆற்றுகிறபொழுது நம்மையும், நாட்டையும் களிப்புக்கடலிலே ஆழ்த்திய ஒரு சம்பவம் நிகழ்ந்ததை நம்மாலே மறக்க முடியாது. தமிழக சட்டமன்ற

---

[a] 73–83-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

83–97-ம் பக்கங்களில் ஆளுநரின் பேருரையின் தமிழாக்கம் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1968 பிப்ரவரி 12

இந்த நாட்டிலே நேற்று வரை ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் தான் இன்னும் ஆளும் கட்சி என்கிற நினைப்பிலே இருந்து கொண்டு பல காரியங்களையும் செய்கிறது. எதிர்க்கட்சி என்கிற எண்ணம் வருகிற பொழுது அவர்களுக்கு எரிச்சலும் ஏற்பட்டு ஏதேதோ செய்வதை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அதை நினைத்துதான் இந்த ஆட்சியினுடைய செயல்களை நல்ல அறிகுறி என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த மார்ச்சு மாதம் 6-ம் தேதியிலேயிருந்து பொறுப்புக்களை ஏற்றது. கணக்குப்படி பார்த்தால் இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. இந்த நிலைமையிலே எதிர்க் கட்சியிலே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் இங்கேயும் வெளியேயும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்கு எந்த வகையிலே கெடுதல் ஏற்படுத்த முடியும் என்பதிலே தான் நாட்டம் கொண்டிருக்கிறார்களே தவிர ஜனநாயகத்திலே இப்படி ஒரு மாறுதல் தேவை, அது ஏற்பட்டு விட்டது, இன்னும் 5 ஆண்டுகளுக்கு நாம் பொறுப்புடன் பணியாற்ற வேண்டுமென்று அவர்கள் செயலாற்றவில்லை. இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே குழப்பத்தை உண்டாக்குவதற்குத் தான் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். கடந்த ஆண்டு இருந்த நிலைமைகளையும் இந்த ஆண்டு இருக்கின்ற நிலைமைகளையும் அவர்கள் ஒப்பிட்டுப் பார்த்துப் பேசாதபடி ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த உடனே இந்த நாட்டிலே பாதகம் விளைந்ததனைப் போன்ற பட்ப்பிடிப்பனை நாட்டு மக்களிடத்திலே விரித்து காட்டுகிறார்கள். இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே இன்றையதினம் உள்ள நிலைமைகளையும் கடந்த ஆண்டு இருந்த நிலைமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நம்முடைய நாட்டு மக்கள் சௌகரியமாக, அமைதியாக வாழ்கிறார்கள் என்பதை நாம் நேரடியாகப் பார்க்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியிலே பேசுகிற பொழுது கடந்த ஆண்டிலே இருந்த நிலைமையை விட இந்த ஆண்டு மோசமாகப் போய் விட்டது என்கிற மாதிரி கற்பனை செய்து கொண்டு இந்த நாட்டிலே பேசிக் கொண்டு வருகிறார்கள். கடந்த ஓர் ஆண்டுக் காலத்திற்குள்ளே விவசாயத்திலே என்ன மாறறம் கண்டீர்கள். தொழில் துறையிலே என்ன மாற்றம் கண்டீர்கள் என்று காங்கிரசிலே வெளியே பேசுகிறார்கள். உள்ளேயும் பேசுகிறார்கள். இதை நேற்றைக்கு முன்தினம் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வெளியிலே பேசி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு விவசாயத்திற்கு இருந்த நெருக்கடி இன்றைய தினம் இல்லை. கடந்த ஆண்டு உரம் எங்கு பார்த்தாலும் கள்ள மார்க்கெட்டிலே தான் கிடைத்ததே தவிர, சாதகமாக, சுலபமாகக் கிடைக்கவில்லை. ஆனால் இந்த ஆண்டு உரம் தாராளமாக எல்லா இடங்களிலும் மக்களுக்கு, விவசாயிகளுக்குச் சௌகரியமாகக் கிடைக்கின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்கின்றோம்,



1968 பிப்ரவரி 12] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

அது மாத்திரம் அல்ல, ஒரு போகமாக இருந்த நிலங்கள் எல்லாம் இரு போகமாக இந்த ஆண்டு மாற்றப்பட்டு இருக்கின்றன. இரு போகமாக இருந்தவைகள் எல்லாம் மூன்று போகமாக மாற்றப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 42,,000 விசை ஏற்றங்களுக்கு ஏற்கெனவே மின் சக்தி அளிக்கப்பட்டிருக்கின்றது. அது மாத்திரம் அல்ல; கடந்த ஆண்டு இந்த சர்க்கார் கொள்முதல் செய்ததை விட இந்த ஆண்டு நாம் கிட்டத்தட்ட ஒரு லட்டசம் டன் அதிக அளவிலே கொள்முதல் செய்து இருக்கிறோம். 1966-ம் ஆண்டில் 7.26 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது. அதுவும் யாருக்கும் தீங்கு விளைவிக்காத முறையிலே செய்யப்பட்ட கொள்முதலாகும். ஆனால் இந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஒரு ஏக்கரும், அதற்கு குறைந்த நிலம் வைத்துருக்கிற சிறு உழவர்களிடம் கொள்முதல் செய்யாத நிலையில் 8.5 லட்சம் அளவில் கொள்முதல் செய்திருக்கிறது.

விவசாயத் துறையைப் பொறுத்தவரையிலே ஒரு திட்டவட்டமான கொள்கையையும் நல்ல முயற்சியையும் எடுக்காத நிலையிலே ஒரு அரசாங்கம் இருந்திருந்தால், இந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்க முடியாது. ஆனால் இதைத் தெரிந்தும் தெரியாதவர்கள் போல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொண்டு வருகிறார்கள்.

அதேமாதிரி கடந்த ஓர் ஆண்டு காலத்திற்குள்ளே தொழில் துறையிலே நீங்கள் என்ன செய்து விட்டீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஒரு ஆண்டு காலத்திற்குள்ளே என்ன வளத்தை நாம் செய்து விட முடியும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 20 ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டு வந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் கடந்த 20 ஆண்டு காலத்திலே இந்த நாட்டைப் பொறுத்தவரையிலே இந்த இராச்சியத்தைப் பொறுத்தவரையிலே காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்தினார்கள். கடந்த 20 ஆண்டு கல ஆட்சியில் இந்த சர்க்கார் துறையிலே அவர்கள் ஆரம்பித்த தொழில்கள் எத்தனை? எங்கெங்கே ஆரம்பித்திருக்கிறார்கள்? என்பதை புள்ளி விவாத்தோடு அவர்கள் காட்டட்டும். திட்ட காலத்திலே, மத்திய சர்க்காராலே ஆரம்பிக்கப் பட்டது நெய்வேலித் திட்டம்; மத்திய சர்க்காராலே ஆரம்பிக்கப்பட்டது ஆவடி டாங்கி தொழிற்சாலை. இதுபோன்று மத்திய சர்க்காராலே தோற்றுவிக்கப்பட்டவை இருக்கின்றனவே தவிர, மாநில ரீதியாக, காங்கிரஸ் ஆட்சி நடத்த கடந்த காலத்திலே என்னென்ன தொழிற்சாலைகளை, எந்தெந்த இடங்களிலே ஆரம்பித்தார்கள்?

(திரு. கே. விநாயகம்: இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி)

THE HON. THIRU C. N. ANNADURAI: I am glad that my Hon. Friend has come forward to defend his party. But the hon. Member, Thiru Asaithambi is talking about industries and not about the industrial estates.

தெல்லாம் இந்த லட்சணத்தில் இருக்கும் போது, ஒரு வருஷ காலத்தில் தாங்கள் வந்தவுடனேயே 'என்ன செய்து விட்டீர்கள்' என்கின்ற கேள்வியை சாதாரண ஆட்கள் கேட்கவில்லை, ஆனால் பொறுப்புள்ள மந்திரியாக இருந்தவர், மத்திய சர்க்காரிலே மந்திரியாக இருந்தவர், இன்றைக்குத் தமிழக காங்கிரஸ் தலைவராக இருக்கும் உங்கள் தலைவர் பொதுமக்களிடத்தில் கேட்கிறார்கள் என்றால், அது பொறுப்புள்ள பேச்சல்ல என்பதை, இங்கே இருக்கும் காங்கிரஸ்காரர்களை, அவர்களுக்குச் சொல்லும் படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில், இந்த ஒரு வருஷ காலத்தில் இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் செய்திருக்கிற சாதனையைப் போல இந்தியாவிலேயே, 17 இராச்சியங்களில் எந்த இராச்சியமும் இம்மாதிரிச் செய்தது கிடையாது. இந்த இராச்சியத்தை கடந்த மார்ச் ஆறுந்தேதி எங்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போனபோது என்ன நிலைமை? முன்னூறு கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டுப் போனீர்கள். மறுக்க முடியுமா? பழைய முதல் அமைச்சர் '300 கோடி கடன் மட்டும் அல்ல, 400 கோடி சொத்தும் வைத்திருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்கள். பொருளாதாரம் தெரிந்தவர் இம்மாதிரிப் பேச மாட்டார்கள். தனிப்பட்ட ஒருவர் இம்மாதிரிச் சொத்து வைத்திருந்தால், உடனே சொத்துக்களை விற்றுவிட்டு கடனை அடைத்து விட்டு 100 கோடியை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். அது சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. ஆனால் ஒரு அரசாங்கத்தில் அம்மாதிரிச் செய்ய முடியுமா? 300 கோடி கடன் இருந்து, 400 கோடி சொத்து இருந்தால் சொத்துக்களை விற்றுக் கொடுக்கச் சொல்லுகிறார்களா? அப்படிச் செய்யமுடியுமா? நாங்கள் அதைக் கேட்கவில்லை, புத்திசாலித்தனமாக ஒரு அரசாங்கம் கடன் வாங்குகிறது என்றால், எதன்பேரில் வாங்குகிறது? சொத்திலே வருமானம் வரும் அளவிற்கு சொத்துக்கள் இருக்கவேண்டும். நானூறு கோடி சொத்து இருக்கிறது என்று பழைய முதல் மந்திரி பக்தவத்சலம் சொல்கிறார்கள் என்றால், அந்த 400 கோடி சொத்திலேயிருந்து வருமானம் வந்து, இந்த முன்னூறு கோடிக் கடனைக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறதா? அந்த 400 கோடி சொத்தும், வருமானம் இல்லாதது மட்டுமின்றி, நஷ்டங்கள் ஏற்பட்டு மேலும் மேலும் வருவாய்களைச் சாப்பிடும் தன்மைகளைத்தான் பார்க்கிறோம். அந்த நிலையில் நாங்கள் பதவிக்கு வந்திருக்கிறோம். அப்படிப் பதவிக்கு வந்தவுடனேயே காங்கிரஸ்காரர்கள், அதை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள், காரணம் 20 வருஷ காலமாக பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு, 'ஐயையோ, எதிர்க் கட்சி வந்து விட்டதே' என்கின்ற அதிர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

சென்ற வருஷம் இந்த நாட்களில் தேர்தல் நடந்தபோது—பிப்ரவரி 15-ம் தேதி நடந்தது—அந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் யாரும் கணக்குப் போடவில்லை, இந்தத் தடவையும் காங்கிரஸே ஜெயிக்கும் என்று கருதினார்களே தவிர, ஒருவர்கூட, கனவிலேகூட, இம்மாதிரி காங்கிரஸ் படுதோல்வி





அடையும், திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வரும் என்று நினைக்கவில்லை. ஆகவேதான், நாங்கள் பதவிக்கு வந்தவுடனேயே அதைச் ஜீரணிக்க முடியாமல், ஜனநாயகத்தைப் புரிந்து கொள்ளாமல், ஜனநாயகத்திலே சாதரணமாக வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும் என்பதை அவர்களாலே புரிந்து கொள்ள முடியாமல், எடுத்ததெற்கெல்லாம் வம்பு பேசி, எடுத்ததெற்கெல்லாம் குழப்பத்தை உண்டுபண்ணிக் கொண்டு இதுபோன்ற காரியங்களிலே இன்று வரைக்கும் செய்து கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, எந்த ஒரு விஷயத்திலாவது, கண்ணியமாக ஒற்றுமையாக 'வாருங்கள் நாம் இருவரும் சேர்ந்து செய்வோம்' என்று ஏதாவது காயங்களைச் செய்தார்களா என்றால் கிடையாது. நாங்கள் தேர்தலுக்கு முன்பு நாட்டு மக்களிடத்திலே சொன்னோம். எங்களைப் பதவியிலே உட்காவைத்தால் விலைவாசிகளைக் குறைப்போம், எங்களைப் பதவியிலே உட்கார வைத்தால் ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடுவோம் என்று வாக்குறுதி அளித்தோம். பிற்பகல் 12-30
ஒருபடி அரிசி போடுவோம் என்று வாக்குறுதி அளித்தோம். மார்ச் மாதம் 6-ம் தேதி பதவியை ஏற்றோம். 15-ம் தேதி சட்டசபைக்கு வந்தோம், வந்ததும் வராததுமாகவே கேட்டார்கள், 'எங்கே படி அரிசி ?' என்று 'எங்கே படி அரிசி ?' என்று நீங்கள் கேட்ட கேள்வி, மக்களுக்குச் சீக்கிரம் போடட்டும், மக்கள் நல்லபடியாக வாழட்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அல்ல. படி அரிசி ?' என்று. ஆனால் 60 நாட்களுக்குள்ளேயே . . .

திரு. ஆர். கருப்பையா : பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . .

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : அப்புறம் பேசலாம். படியரிசி போட முடியாது என்று மனப்பால் குடித்து நீங்கள் சொன்னீர்கள். ஆனால், பதவியில் உட்கார்ந்த அறுபது நாட்களிலே, 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதிக்குள்ளேயே .. .

THIRU R. PONNAPPA NADAR : Sir, on a point of order. I want to know whether the hon. Member who is on his legs has got the right to say that another hon. Member should resume his seat ? Is that not the exclusive right of the Chair ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member is not yielding.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : படி அரிசித் திட்டம் வராது என்ற மனப்பாலிலே நீங்களெல்லாரும் பேசினீர்கள். ஆனால், மே மாதம் 15-ந் தேதியன்று, கோவையிலும் சென்னையிலும் ரூபாயிக்கு ஒரு படி அரிசி என்கிற திட்டத்தை நாங்கள் அமலுக்குக் கொண்டு வந்தோம். ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டவுடனே, உங்களால் பேச முடியாதபடி, அதைச் சரியாக வரவேற்க முடியாதபடி, என்ன காரியம் செய்தீர்கள் என்பதை நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டுவிட்டார்களே என்ற வயிற்றெரிச்சலிலே என்ன செய்தீர்கள் ? ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட விடாதபடி தடுப்பதற்கு என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அந்தக் காரியங்களையெல்லாம்

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1968 பிப்ரவரி 12

கேட்கிறீர்கள். இதை எதற்கு நான் சொல்கிறேன் என்றால், நீங்கள் இம்மாதிரி குழப்பம் செய்துவிட்டு, இந்த சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு நினைக்கிறீர்கள். மற்ற இராஜ்யங்களில் ஆட்களைப் பிடித்து சர்க்காரைக் கவிழ்க்கும் வேலை நடக்கிறது. இந்த இராஜ்யத்தில், அதிருஷ்டவசமாக நீங்கள் யாரைப் பிடித்தாலும், இந்த சர்க்காரை ஐந்து வருஷங்களுக்கு அசைக்க முடியாது. (ஆரவாரம்) அப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தால்தான், நீங்கள் குறுக்கு வழியிலே இந்த சர்க்காரை—கடந்த தடவை கேரளாவில் கலைத்துவிட்டதுபோல—கலைத்துவிடக் கனவு காண்கிறீர்கள். அது நடக்காது. அந்த அளவுக்கு இன்றைக்கு நாடு பூராவும் வேலை நடக்கிறது.

வடக்கே மத்திய சர்க்காரிலிருந்து இங்கே வருகிற மந்திரிகள் எல்லோரும், நம்மோடு இருந்து பேசுகிறபோது 'சென்னை இராஜ்யத்தினுடைய நிர்வாகம் அருமையாக இருக்கிறது, முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி நன்றாக இருக்கிறது, அவர்களுடைய படி அரிசித் திட்டம் பாராட்டத் தக்கது' என்று வாழ்த்துரைகளைச் சொல்வதைக் கேட்டு உங்களால் தாங்க முடியவில்லை. ஐதராபாத் மாநாட்டில் என்று நினைக்கிறேன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் சேர்ந்துகொண்டு, 'இப்படியா நீங்கள் சென்னை சர்க்காரைப் பாராட்டுவது? எங்களுடைய மானம் போகிறதே' என்று கேட்டார்களாம். இம்மாதிரி நிலைமை இருக்கலாமா? எங்களைப்பற்றி நல்ல வார்த்தை சொல்வதைக்கூட உங்களால் தாங்க முடியவில்லையென்றால், கோடிக்கணக்காகப் பணத்தை அவர்கள் கொண்டு வந்து கொடுப்பார்களானால், அதை உங்களால் தாங்க முடியுமா? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் எதையோ செய்யத் தவறிவிட்டது மாதிரி மிகைப்படுத்திப் பேசுகிறீர்களே, எதிலே நாங்கள் தவறிவிட்டோம்?

பணம் கேட்டோம். கிடைக்கவில்லை. அதுதான் போகட்டும். விவசாயத்திற்குத் திட்டம் எங்கே? என்று உங்கள் தலைவர் கேட்கிறார். விவசாயத்திற்கு எந்தத் திட்டம் போட்டிருக்கிறீர்கள்? பெரிய பெரிய அணைக்கட்டுகள் வடக்கே கட்டியிருப்பதைப் போல், தெற்கே கட்டுங்கள் என்று கேட்கவில்லை. ராயப்பா கமிட்டி அமைத்து 20 கோடி ரூபாய்க்கு மைனர் இர்ரிகேஷனுக்காகப் பணம் கொடுங்கள் என்று எழுதினோம். அந்த சர்க்கார் கொடுத்ததா? இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருந்தால், நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நாம் கமிட்டி போட்டு, இருபது கோடி ரூபாய் உதவி செய்யுங்கள் என்று சொன்னோம். உதவியிருந்தால் ஒரு போகத்தை இரு போகம் ஆக்கி, இரு போகத்தை மூன்று போகமாக்கலாம். நாம் எந்த அணைக்கட்டின் தண்ணீரையும் கூட எதிர்பாராமல் மழை காலத்தில் வரும் தண்ணீரைத் தேக்கி வைத்து உற்பத்தியைப் பெருக்கலாம். அந்தமாதிரி உற்பத்தியைப் பெருக்கினால், படி அரிசித் திட்டத்தை தானாகவே எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க முடியும். அதற்காவது அந்த சர்க்கார் உதவி செய்தார்களா என்றால் இல்லை.



1968 பிப்ரவரி 12] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

அது மாத்திரமல்ல. நாம் கொடுக்கவேண்டிய வட்டிப் பணத்திலே கொஞ்சம் தாமதித்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று அந்தச் சர்க்காருக்கு இங்கேயுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் எழுதிற்று. அதையாவது ஒத்துக் கொண்டார்களா? தவணை தர முடியாது என்று மொரார்ஜி தேசாய் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால், அவர்கள் மற்ற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிக்கு மாத்திரம் நேரிலே போய்த் தவணை கேட்டு வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

ஆக, இந்த நிலைமையில், இந்த இராஜ்ய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த நாட்டு மக்களுக்கு என்ன காரியங்களை உடனடியாகச் செய்யவேண்டுமோ, அவ்வளவையும் நாங்கள் செய்து கொண்டு வருகிறோம். செய்துகொண்டு வருகிறபோதே, காங்கிரஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள்? வெளியே தவறான பிரசாரம் செய்யவேண்டிய அவசியம் என்ன? பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். பானை இருக்கிறது. கையிலே பணம் இருக்கிறது. படி அரிசி எங்கே என்கிற மாதிரி போஸ்டர்களை வெளியிலே ஒட்டுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். பானை இருக்கலாம், பணம் எங்கே இருக்கிறது? பணம் நாங்கள் கேட்டோம். வழங்கினீர்களா? உங்கள் ஒத்துழைப்பு எங்கே இருக்கிறது? உங்கள் ஒத்துழைப்பு இல்லாதபோது, பானையைக் காட்டுகிறீர்களே, கடந்த ஆண்டு இதே பானை எப்படி இருந்தது? அதைக் கொஞ்சம் கண் முன்னாலே கொண்டு வந்து பாருங்கள்.

கடந்த ஆண்டு இதே நேரத்தில் சென்னை நகரிலே ரேஷன் கடையில் ரேஷன் அரிசி வழங்கப்படவில்லை. தஞ்சாவூர் தரணிக்கெல்லாம் அரிசி வழங்கப்படுகிற இடம் என்று சொல்வதுண்டு. அந்த இடத்திலேயும் ஆண்கள்-பெண்கள் அத்தனை பேரும் அரிசிக்காக க்யூவிலே நின்றுகொண்டிருந்தார்கள். சென்னையிலிருந்து செங்கோட்டை வரையிலும் அரிசி கிடைக்கவில்லை. உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும் படி அரிசி விலை நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று விற்றது. இன்றுள்ள நிலைமை என்ன? கடந்த வருடம் எல்லாம் காலிப்பானைகளாக இருந்தன. இன்று ஆங்காங்கு கொடுக்கப்படுகிற அரிசி தாராளமாக அப்பானைகளில் இருந்து வருகிறது. இப்போது நீங்கள் ஊருக்கு ஊர் தொங்கவிடப்படும் பானைகள் எல்லாம், அரிசிப் பானைகள் அல்ல; கொஞ்சநஞ்சம் இருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு கருமாதி வைக்கிற கருமாதிக் கலயங்கள்தான் என்று நான் நினைக்கிறேன்.

'படி அரிசி எங்கே? படி அரிசி எங்கே?' என்று காங்கிரஸ்காரர்கள் ரயில்களில் எல்லாம் எழுதுகிறார்கள். ரயில் மத்திய சர்க்காரின் சொத்து. திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்ததிலிருந்து எங்குபார்த்தாலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது. கழக அரசாங்கம் வந்தபிறகுதான் சட்டசபையைச் சுற்றிலும், செகரட்டரியட்டுக்குள்ளேயும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி நடக்கிறபோது இவ்வளவு கூட்டம் இல்லை. இதைப் பார்த்துத்தான் காங்கிரஸ்காரர்களுக்கு

கடந்த காலத்தில் செய்தீர்கள், கடந்த ஆண்டு பூராவுமே, மாவட்டத்திற்கு மாவட்டம் காங்கிரஸ்காரர்கள் விவசாய மாநாடுகளைக் கூட்டினார்கள். எதற்காக? திடீர் என்று விவசாயிகள்மீது என்ன அக்கறை வந்தது? விவசாயிகள் மாநாட்டைக் கூட்டியது ஏன்? விவசாயிகள் கொள்முதலுக்குச் சரக்கு கொடுக்காமலிருந்தால், படியரிசித் திட்டம் சரிவர நடக்காது என்று மனப்பால் குடித்து, மாவட்டத்திற்கு மாவட்டம், பழைய மந்திரிகள், பழைய பெரிய தலைவர்கள் எல்லோருமே போய்க்கொண்டு விவசாயிகளைத் தூண்டினார்கள். கரும்பு போடுவோம், நெல் போடமாட்டோம் என்று சொல்லுங்கள். அதிக விலை கேளுங்கள், கொள்முதல் விலையைக் கூட்டச் சொல்லுங்கள் என்ற தோரணையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காங்கிரஸ் தலைவர்கள்—பழைய மந்திரி உட்பட—தாம் இன்னும் மந்திரியாக இருப்பதாகவே நினைத்துக்கொண்டு—ஊர் ஊராகப் போய்ப் பேசினார்கள். நடந்தது என்ன? கொள்முதல் விலையைக் கூட்டச் சொன்னீர்கள். உங்கள் இதயத்தையே தட்டிக் கேளுங்கள், நீங்கள் சொன்னது சரிதானா? கொள்முதல் விலை நாங்கள் முடிவு கட்டியதா? நாங்கள் நிர்ணயித்ததா? நேற்றுவரை நீங்கள் இந்த விலையை நிர்ணயித்து, அதே விலையில் நாங்கள் கொள்முதல் செய்தோம். அதே விலையைத்தான் கொடுத்தோம். ஆனால், திடீர் என்று 'கொள்முதல் விலையைக் கூட்டு' என்று ஒவ்வொரு ஊரிலும் போய்த் தூண்டிவிட்டீர்கள்—மாணவர்களைச் சில பல இடங்களில் போன தடவை நீங்கள் தூண்டிவிட்ட மாதிரி. ஆனால் நடந்தது என்ன? அதையும் திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்தது. கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டிய அவசியம் என்ன? உர விலை கூடி விட்டது, முன்பு மாதிரி இல்லை என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து பதில் கூறப்பட்டது. அதற்கும் காரணம் யார்? என்று கேட்டால், நாங்கள் அல்ல. உர விலை கூடி விட்டது அல்லவா? முன்புக்கும் இப்போதைக்கும் நான்கு மடங்கு கூடியிருக்கிறது என்றால், அதற்குப் பொறுப்பாளி யார்? சொன்னேன். நம்மைக் கேட்காதபடி, யாரையும் கேட்காதபடி, இரவோடு இரவாக, அமெரிக்கா நடத்திய போரத்தின் விளைவாக பணத்தின் மதிப்பைக் குறைத்ததன் விளைவாக உரத்தினுடைய விலை ஏறியது. இது மத்திய சர்க்காரின் பொறுப்பு. மத்திய சர்க்கார்தான் இந்த விலை ஏற்றத்திற்குப் பொறுப்பு. எவ்வளவு விலை ஏற்ற வித்தியாசம் இருக்கிறதோ, அந்த வித்தியாசத்தை மத்திய சர்க்கார்தான் நியாயமானபடி விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். நாங்கள் மத்திய சர்க்காரோடு போராடத் தயார், நீங்களும் தயாரா? என்று கேட்டோம். அவ்வளவு பேரும் வாயை மூடிக்கொண்டு இருந்து விட்டீர்கள். எங்களோடு சேர்ந்து வரவில்லை. ஆனால், விவசாயிகள் உங்களுடைய பேச்சைக் கேட்கவில்லை. விவசாயிகள் உங்களுடைய பேச்சைக் கேட்காததோடு, உங்களைவிட்டு விலகி எங்கள் பக்கம் வந்து, கொள்முதலுக்கு நாங்கள் கோரியதைவிட அதிகமான அளவு கொடுத்தார்கள்.

இதே பாதையில் சென்றுகொண்டு, நாங்கள் படி அரிசித் திட்டத்தைக் கடந்து போன பொங்கல் தினத்தன்று பல



நகரங்களுக்கு விஸ்தரிக்க இருந்தோம். பல திட்டங்களைப் போட்டோம். உங்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைத்ததா? ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது என்றால், அதற்குப் போதிய பணம் வேண்டும். அல்லது போதிய உற்பத்தி வேண்டும். போதிய பணம் இந்த அரசிலே இருக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளே வந்தோம். 300 கோடி ரூபாய் கடன். உள்ளே வந்தபிறகு, உற்பத்தியைப் பெருக்கும் வேலையைப் பார்த்தோம். அது மாத்திரமல்ல. அகில இந்திய ரீதியாக இருக்கும் அரசியலைப் பார்த்தோம். காஷ்மீரில் என்ன நிலைமை என்று பார்த்தோம். எப்படித் தமிழகம் இந்திய அரசுக்குக் கட்டுப்பட்டதோ, அதேமாதிரி காஷ்மீரும் இந்திய அரசுக்குக் கட்டுப்பட்டதுதான். காஷ்மீரத்தில் உணவுக்காக ஸப்ஸிடி கொடுக்கப்படுகிறது. அதைச் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டோம். காஷ்மீருக்கு மாத்திரம் உணவு ஸப்ஸிடி கொடுக்கிறீர்களே, ஏன் எங்களுக்குக் கொடுக்கவில்லை? படி அரிசி போட வேண்டும். அதற்காக ஸப்ஸிடி கொடுங்கள் என்று கேட்டோம். மத்திய சர்க்கார் என்ன பதில் சொன்னது என்பது இருக்கட்டும். உங்களுடைய பதில் என்ன? என்ன சொன்னீர்கள்? 'மத்திய சர்க்காரிடம் போய் ரூபாய் கேட்பதா?' என்றீர்கள். மத்திய சர்க்கார் என்றால், அதில் நமக்கு சம்பந்தம் இல்லையா? நம்முடைய வரிப் பணத்தில் நடக்கும் சர்க்கார்தானே அதுவும்? ஏன் அவர்கள் நமக்குக் கொடுக்கக் கூடாது? எங்களுக்கு மட்டும் கொடுக்கவில்லையே? காஷ்மீருக்கு நம்முடைய பணத்திலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அதேமாதிரி எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்டோம். நீங்கள் கேட்கவில்லை. ஒருவேளை அரசியல் புரியாததனால் கேட்கவில்லையோ என்னவோ. எங்களுக்குத் தெரிந்த காரணத்தால் கேட்டோம். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்களுக்கு உதவி பண்ண வேண்டுமா? வேண்டாமா? 'கொடு' என்று கடிதம் எழுத வேண்டாம். நேரிலே போகும் போதாவது அவர்களிடம் சொல்ல வேண்டுமா, இல்லையா?

அது மாத்திரமல்ல. அடுத்து, ஒன்று கேட்டோம். கோதுமைக்காக 100 கோடி ரூபாய்க்குமேல் ஸப்ஸிடி கொடுத்தார்கள். அதே மாதிரி அரிசிக்கும் ஸப்ஸிடி கொடுக்குமாறு கேட்டோம். கோதுமைக்கு மாத்திரம் கொடுப்பானேன்? நமக்கு அரிசிக்காக என்று ஏன் அவர்கள் கொடுக்கக் கூடாது? இதெல்லாம் கடந்த காலத்தில் உங்களுக்கு எடுத்துக்கூறிய விஷயம்தான். எங்களுக்குத் தெரிந்த விஷயம். நாங்கள் இதைக் கேட்டோம். உங்கள் பதில் என்ன? 'கொடு' என்று மத்திய சர்க்காரிடம் சொன்னீர்களா? உங்கள் தலைவர்கள் சொன்னார்களா? 'ஒரு பைசா கொடுக்காதே' என்ற அளவிற்கு நீங்கள் போய்ப் பேசிவிட்டு வந்து, 'மத்திய சர்க்காரிடம் உதவி கேட்காதே' என்று சொன்னீர்கள் என்ன காரணம்? மத்திய சர்க்கார் உதவினால் படி அரிசித் திட்டம் வெற்றி பெற்று விடும். அது வெற்றி பெற்று விட்டால், ஜனங்கள் முகத்திலே விழிக்க முடியாது என்ற பயத்தினால் இந்தத் திட்டத்திற்கு இடையூறு செய்தீர்கள். இப்படி இடையூறு செய்துவிட்டு, பொதுமக்களைக் கூட்டி, 'படி அரிசி எங்கே போட்டார்கள்?' என்று

வயிற்றெரிச்சல். உங்கள் ஆட்சி தனிப்பட்ட சிலருடைய ஆட்சி—ஆனால் இன்று நடக்கும் ஆட்சி மக்கள் ஆட்சி. ஆகவேதான் மக்கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு இந்த நேரத்தில் நமக்கு எதுவும் கிடைக்காத நிலைமை இருந்தது. கடந்த ஆண்டு இருந்த விலை என்ன? இன்றைக்கு இருக்கும் விலைவாசிகள் என்ன ? இதைக் காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதியன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டவுடனே, இந்த இராச்சியத்தைப் பொறுத்தவரையில், பொருள்கள் தகுந்த அளவில் கிடைக்க ஆரம்பித்தன. அப்போது மட்டும் ஏன் பற்றாக்குறை? அப்போது உள்நாட்டில் இருந்த உணவுப்பொருள்கள் வெளியே கள்ளக் கடத்தல் மூலம் சென்று கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் இந்த அரசு ஏற்பட்டவுடன் புதிய சக்திகளைப் பயன்படுத்தித் தடுக்கப்பட்டுவிட்டன. பதுக்கல்காரர்களுக்கு வேறு வழியில்லாமல், பொருள்களை உள் நாட்டிலேயே விற்கும்படியான நிலைமை ஏற்பட்டது.

காங்கிரஸ்காரர்கள், சென்னையிலும் கோவையிலும் மட்டும் ஏன் படி அரிசித் திட்டம் என்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்குப் பொருளாதார தத்துவம் தெரியாது என்று நினைக்கிறேன். அவர்களுக்குப் பொருளாதார தத்துவம் தெரிந்தால், நாம் போட்ட படி அரிசித் திட்டத்தைப் பாராட்டியிருப்பார்கள். இந்தத் திட்டத்தை ஏற்படுத்தாமலிருந்திருந்தால், விலைகள் ஏறி, நாடு பூராவுக்கும் இன்றைக்கு அரிசி கிடைக்காமல் போய் இருக்கும். விலை அதிகமாக ஏறியிருக்கும். சென்னை, கோவை இந்த இரண்டு ஊர்களிலும் வாங்கும் சக்தி அதிகம். அதனால் மதுரையிலே இருப்பவர்களுக்குப் பொருள் கிடைக்காது; மற்ற ஊர்களிலே இருப்பவர்களுக்கும் பொருள் கிடைக்காது. சென்னை வியாபாரிக்காகவும், கோயம்புத்தூர் வியாபாரிக்காகவுமே பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பார்கள். எல்லா இடங்களிலும் அதனால் கிராக்கி ஏற்பட்டு, விலை உயர்ந்திருக்கும். நாட்டில் எங்கு பார்த்தாலும் பஞ்சம் வந்திருக்கும்.

இன்றைக்கு எங்குபார்த்தாலும் மலிவு விலையில் அரிசி கிடைப்பதை சாதாரணமாகப் பார்க்கிறோம். காங்கிரஸ்காரர்கள் படி அரிசி எங்கே, படி அரிசி எங்கே என்று கேட்டு ஒரு குழப்ப நிலையை உருவாக்க முயற்சி செய்வது அரசியல் நாகரிகத்திற்கு உகந்த காரியம் அல்ல வென்பதை உணர வேண்டும். இதேமாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் பொறுப்பு இல்லாமல் நடக்கிறார்கள்.

மொழிப்பிரச்சினை விஷயத்தில் நீங்கள் எம்மாதிரி நடந்து கொண்டீர்கள்? இந்தியை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தவுடனே, மாணவர்கள் ரயிலை நிறுத்தினார்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், ' 1965-ல் இந்திப் போராட்டம் நடந்தபோது நன்றாக இருந்தது அல்லவா? இப்போது என்ன நடக்கிறது? ' என்று எங்களை ஏளனமாகப் பார்த்தார்கள், பேசினார்கள். தனம் பக்தவத்சலம் அவர்கள் கையாண்ட முறையைப் பயன்படுத்திக் கிளர்ச்சியை நிறுத்தியிருக்கலாம். அறிஞர் அண்ணா அப்படி நிறுத்தவில்லை. திரு. பக்தவத்சலம் அவர்கள் மாணவர்களைக் கண்டு பேசுவதற்குக்கூட அனுமதி அளிக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள், மாவட்டவாரியாக மாணவர்களைக் கூப்பிட்டுப் பேசினார். 'மாணவர்களே, என்னை நீங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்கள்? நான் ராஜினாமா செய்துவிட்டு உங்களுடன் கிளர்ச்சியை நடத்தவா ? அல்லது பதவியில் இருந்துகொண்டு இந்தியை எதிர்க்க வேண்டுமா?' என்று மாணவர்களை அறிஞர் அண்ணா அவர்கள் அழைத்துக் கேட்டார். அதன் விளைவாகத்தான் கடந்த மாதம் 23-ம் தேதி சட்டப் பேரவையில், 'இனி இந்த இராச்சியத்தில் ஆங்கிலம், தமிழ் தவிர இதர மொழி கிடையாது' என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தில், காங்கிரஸ் வேறு, மாணவர்கள் வேறு என்ற பிரிவினையை அறிஞர் அண்ணா அவர்கள் தந்திரமாகச் செய்தார்கள். மாணவர்களுக்குப் பயந்துகொண்டா இந்த அரசு தீர்மானம் போடுவது? என்று மாணவர்களின் மனம் புண்படும்படியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கூறினார்கள். இந்தத் தீர்மானம் போட்டது மாணவர்களிடம் இந்த அரசுக்கு ஏற்பட்ட பயம் அல்ல. வீட்டிலே குழந்தை பசிக்காக அழுகிறபோது, அதனுடைய தாய் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு பால் கொடுத்தால், அதற்குப் பெயர் குழந்தையிடம் தாய்க்குப் பயம் என்றா சொல்வது? குழந்தையிடம் தாய்க்குப் பயம் என்று எந்தப் பைத்தியக்காரனும் சொல்ல மாட்டான். மாணவர்களிடம் நாம் அவர்களுடைய கருத்து என்ன என்று கேட்டோம். அவர்களும் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். இது மாணவர்களிடம் அரசு பயந்துவிட்டது என்று கூறுவது தவறு. ஆனால் திரு. கருத்திருமன் அவர்கள் அப்படிப் பேசினார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் இன்னும் பேசி வருகிறார்கள். தினசரிப் பத்திரிகையில் அவர் பேசிவருவதையும், அதன் விளைவுகளையும் பார்க்கிறோம். 'இதற்கும் காரணம் தி.மு.க தான்' என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். எதற்கெடுத்தாலும் தி.மு.க. தான். தெருவிலே குழாய்ச் சண்டை நடந்தால் அதற்கும் காரணம் தி.மு.க. தான். பையன்கள் தெருவில் கோலிச் சண்டை போட்டாலும் அதற்கும் தி.மு.க. தான் காரணம் என்று சொல்கிறார்கள். இப்படிக் கூறும் காங்கிரஸ்காரர்கள் அண்டை மாநிலங்களில் கிளர்ச்சி நடந்துகொண்டிருப்பதற்கான காரணத்தைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கும் தி.மு.க. வா? 'இந்தியே கூடாது; இந்தியால் எங்களுடைய உத்தியோகம் பாதிக்கப்படக்கூடாது' என்று மாணவர்கள் பயந்துகொண்டிருக்கிறபோது, பொறுப்புள்ள தலைவர்கள், புத்திசாலித்தனமான தலைவர்கள் 'மாணவர்களே பயப்படாதீர்கள், இந்தி வராது, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், உங்களுடைய வாழ்க்கைக்கு, படிப்புக்கு, உத்தியோகத்திற்கு எந்தவிதமான ஹானியும் வரப்படாது' என்று சொல்ல வேண்டும். ஆனால் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் என்ன சொன்னார்கள்? 'இருமொழிக் கொள்கை போதும்' என்று நாம் சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். 'இருமொழிக் கொள்கையை ஏற்றால்

மாணவர்கள் உத்தியோகத்திற்கு என்ன செய்வது? இந்தி தெரியாவிட்டால் மத்திய சர்க்கார் உத்தியோகம் எப்படிக் கிடைக்கும்?' என்று திரு. சி. சுப்பிரமணியம் எங்கு பார்த்தாலும் பேசிக் கொண்டு போகிறார். இதன் பொருள் என்ன? மாணவர்களுக்குப் பயத்தை உண்டாக்கும் வகையில், மாணவர்களைத் தூண்டிவிடுகிற மாதிரி அவர் பேசிவருகிறார். முதலில் கோயம்புத்தூரில் நடந்த சம்பவத்திற்கு தி.மு.க. தான் காரணம் என்பது 'வதந்தி' என்றார். பிறகு திண்டுக்கல்லில் போய், 'இல்லை, இல்லை எல்லாவற்றுக்கும் தி.மு.க. தான் காரணம்' என்கிறார்.

மொழிக் கொள்கையிலே காங்கிரஸிற்கு ஓர் உறுதியான கொள்கையோ, தெளிவோ கிடையாது. காங்கிரஸ்காரர்களுக்குள்ளே ஒரு தெளிவான அபிப்பிராயம் கிடையாது. அதை எடுத்துத்தான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பழைய தலைவர் திரு. காமராஜ் அவர்கள் டெல்லியில் சொன்னார்கள். மொழிக் கொள்கையில் முதலில் காங்கிரஸ்காரர்களுக்குள் தெளிவு இருக்க வேண்டும். ஆகவே, இந்தி பேசுகின்ற இராச்சியத் தலைவர்களை அழைத்துப் பேசுங்கள். அப்புறம் இந்தி பேசாத மாநிலத் தலைவர்களை அழைத்துப் பேசுங்கள். பிறகு மொழிக்கொள்கையில் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வாருங்கள் என்று திரு. காமராஜர் அவர்கள் டெல்லியில் சொன்னார்கள். கேட்டார்களா? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போடுகிறபோதே திரு. காமராஜ் அவர்கள் இரு மொழிக் கொள்கையைப் போடுங்கள் என்றாரே. திரு. நிஜலிங்கப்பா அவர்களும், திரு. பிரும்மானந்த ரெட்டி அவர்களும் மும்மொழிக்கொள்கையை வற்புறுத்தினார்கள். காங்கிரஸ்காரர்களுக்குள்ளே என்ன தெளிவு இருக்கிறது? நாங்கள் இந்தியை எதிர்க்கிறோம். நாடாளுமன்றத்தில் இந்தி பேசாத பகுதி மாணவர்களுக்கு அதிகச் சுமையை ஏற்படுத்தக்கூடிய வகையில் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்துவிட்டு, அந்தத் தீர்மானத்தினால் இந்தி பேசாத பகுதி மாணவர்களின்மீது புதிய சுமை ஏற்படுகிறது என்பதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம் என்று காங்கிரஸ்காரர்களும் பேசுகின்றார்களே தவிர, அந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியபோது என்ன செய்தார்கள்? தமிழ்நாட்டு மந்திரி திரு. கே. எஸ். இராமசாமி என்ன செய்தார்? இந்தி பேசாத பகுதி மக்களுக்கு இதனால் பெரும் சுமை ஏற்படுகிறது, அதை ஆதரிக்க முடியாது என்றாரா? அல்லது நடுநிலைமை வகித்தாரா? திரு. சி. சுப்பிரமணியம் என்ன செய்தார்கள்? அங்கே போய் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துவிட்டு, ஆதரித்துவிட்ட தவறை மறைப்பதற்காக இங்கு எங்கே பார்த்தாலும் இதற்கெல்லாம் காரணம் தி.மு.க. தி.மு.க. என்பதாக திட்டவட்டமாக திசை திருப்பிவிடப் பேசுகின்றாரே தவிர, உள்ளபடியே தி.மு.க.வுக்கு எந்தவிதமான தொடர்பும் கிடையாது.

நாங்கள் எங்களுடைய கொள்கையைத் திட்டவட்டமாக வகுத்துவிட்டோம். சட்டமன்றத்தைக் கூட்டி இரு மொழிக் கொள்கைதான் என்பதாகத் தீர்மானம் போட்டபிறகும்கூட காங்கிரஸ்காரர்களுக்கு நப்பாசை. இந்தத் தீர்மானம் அரசியல்





சட்டத்திற்கு விரோதமானது, விரோதமானது என்று பேசி வருகிறார்கள். அரசியல் சட்டத்திற்கு விரோதமான தீர்மானத்தைப் போட்ட இந்தச் சட்டசபையைக் கலைத்துவிட முடியாதா என்ற நிலைமையை காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்க்கிறார்கள். உண்மையில் இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானம் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதே தவிர அப்பாற்பட்டது அல்ல. சட்டத்திற்கு எப்படி உட்பட்டிருக்கிறது? இந்தியாவின் தொடர்பு மொழி இந்தி என்றாலும், இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்கிற உறுதிமொழியை நேருஜி அவர்களே கொடுத்திருக்கிறார்கள். அது சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறது. இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இருக்கும் என்றால் என்ன பொருள்? எங்களுக்கு ஆங்கிலம் வேண்டும், இந்தி வேண்டாம் என்று சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது என்பதுதான் பொருள். அதைத்தான் நாங்கள் சட்டபூர்வமாகச் சொல்லியிருக்கிறோம். ஆனால், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் நாடாளு மன்றத்தில் மொழித் தீர்மானத்தை ஆதரித்துவிட்டு, இங்கே வந்து அது நம் மாணவர்களுக்கு அதிகச் சுமைதான், நம் மாணவர்களுக்கு அதிகச் சுமைதான் என்று சொன்னால் என்ன அர்த்தம்? திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களின் தலைவர்களை எல்லாம் அழைத்து மாநாடு கூட்டுங்கள், நானும் கலந்துகொள்கிறேன் என்பதாக எங்களுக்கு யோசனை சொல்கிறார். அப்படி ஒரு மாநாடு இப்போது ஏன் கூட்டப்பட வேண்டும்? மாணவர்கள் தங்களுடைய கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள். இந்த அரசும் அவர்களுடைய கருத்துக்கு மதிப்பளித்து, இந்தச் சட்ட அவையிலேயே இருமொழிக்கொள்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. அப்படி இருக்க இப்போது எதற்காக திரும்ப ஒரு மாநாடு கூட்டவேண்டும்? திரு. சுப்பிரமணியம் அவர்கள் புதுக் குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா? மாணவர்கள் மகாநாட்டைக் கூட்டுகிறோம் செக்ஷ 17-ஐயே நீக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள், திரு. சுப்பிரமணியம் அவர்களால் செய்ய முடியுமா? அதற்கு ஒத்துக் கொள்ளவாவது செய்வாரா?

**திரு. வ. ஜார்ஜ்:** சார் ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. சி. சுப்பிரமணியம், திரு. காமராஜ் ஆகியவர்கள் இந்த அவையில் இல்லாதபோது அவர்களைப் பற்றி இங்கே விவாதிப்பது முறையா என்று கேட்கிறேன்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ. கோவிந்தராஜன்) :** அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் விவாதிக்கவில்லை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** நான் திரு. காமராஜர், திரு. சுப்பிரமணியம் அவர்களை அவமதித்துப் பேசவில்லை. அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியின் கொள்கையில் தெளிவற்ற தன்மை இருப்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அகில

நடைபெறும் என்பதை இந்த அரசு உணர்ந்தது. அப்படிப்பட்ட நிலையில் அடக்குமுறையைப் பயன்படுத்தினால் அந்த அடக்குமுறை நியாயந்தான் என்று பேசக்கூடிய மனநிலையில் நம்முடைய எதிர்க்கட்சி இருக்கிறதா என்றால், சமீபத்தில் காங்கிரஸ் மாநாட்டில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள்—இவர்கள் ஆட்சிக்கு வந்து மூன்று, நான்கு மாதத்தில் மூன்று தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, நான்கு தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று. எங்களுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதற்காக மட்டுமல்ல நான் அதைத் தவிர்க்க வேண்டுமென்று விரும்பியது. கலவரம், உயிர்ச் சேதம், பொருள் சேதம் இவைகளையெல்லாம் சில நிகழ்ச்சிகளை நிறுத்தி வைப்பதன் மூலம் தடுக்கப்படக் கூடுமானால், ஒரு அரசு, மக்களிடத்திலே அக்கறை கொண்டுள்ள அரசு அதைத் தவிர்க்க வேண்டியது மிக நியாயம் என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலதான் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. நம்முடைய ஆசைத்தம்பி அவர்கள் போலீசாருடைய கட்டுப்பாட்டுக்கு மீறி கலவரம் நடைபெற்றது என்று சொன்னார்கள். அது எதை மீறி நடந்திருந்தாலும், அரசின் சார்பிலும், சொந்தச் சார்பிலும் மனம் நிறைந்த வருத்தத்தை நான் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அது நாங்கள் அரசு நடத்துகிற காலத்தில் நடைபெற்றதற்காக நான் அவ்வளவு வருத்தம் தெரிவித்ததற்குக் காரணம், நீங்கள் அரசாண்டு கொண்டிருந்த காலத்தில் மதுரை-தேனியில் எங்களுடைய பொதுச் செயலாளராக இருந்த நாவலர் அவர்கள் பேசிய கூட்டத்தில் பலமான கல்லெறி நடைபெற்றதற்கு அப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஒரு துளியும் வருத்தம் தெரிவிக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு அவர்களைவிட நாங்கள் பண்போடு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** என்னுடைய உரையை இன்னும் சில நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் 'நீங்கள் கல் எடுத்துப் போடுவீர்களா?' என்று கேட்டார்கள். எனக்கும் என்னுடைய கட்சிக்கும் கல் எடுத்துப் போடுகிற வழக்கமோ, தந்திக் கம்பிகளை அறுக்கிற பழக்கமோ, தண்டவாளங்களைப் பெயர்க்கிற பழக்கமோ, தபாலாபீசைக் கொளுத்துகின்ற பழக்கமோ இதுவரை இருந்தது இல்லை; இனிமேலும் இருக்கப் போவதில்லை. நாங்கள் உண்மையாக காந்தி வழி நடக்கின்றவர்கள். அதனால்தான் நாங்கள் இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறோம். காந்தி வழிப் பாதையில் தவறிய காரணத்தால் நீங்கள் கீழே போய்விட்டீர்கள். இந்த ஓய்ந்த காலத்தில் நீங்கள் படி அரிசி எங்கே என்றெல்லாம் பேசிக் கொண்டிராமல் பக்கத்திலுள்ள பாண்டிச்சேரியில், ஆந்திராவில் காந்தி வழியில் மதுவை ஒழிக்கப் போராடுங்கள். அதை விட்டு விட்டு ஏதோ சட்டம் ஒழுங்கு பறி போய்விட்டது போல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், காந்தியாருடைய உயிரையே நம்மால் காப்பாற்ற முடியவில்லை. குறுக்கு வழியில் சில பேர் ஏதாவது செய்கிறபோது



எவ்வளவுதான் ஜாக்கிரதையாக இருந்தாலும்கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து விடுகின்றன. கலெக்டர் அவர்களும் டி.ஐ.ஜி. அவர்களும் இரண்டு பக்கத்திலும் அமர்ந்து நடுவில் மந்திரியை வைத்துக்கொண்டு போயும்கூட மந்திரிமீது கல் பட்டது வருந்தத்தக்கது. அந்த அளவுக்கு வேண்டுமென்றே நடந்ததாக நீங்கள் பேசியதன் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் இடங்கள் எல்லாம் தாக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரியான உங்கள் பேச்சுக்கள் அனாவசியமான குழப்பங்களை இந்த நாட்டிலே உண்டாக்குகின்றன. ஆகவே, பண்போடு பேசுவது நல்லது.

இந்தி எதிர்ப்பைப் பொறுத்தமட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த மாதிரிச் சமாளித்தார்கள், மற்ற மாநிலங்களில் எவ்வாறு சமாளிக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். ஆந்திராவிலும், மைசூரிலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஏற்பட்டு அங்கே துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே எந்தவிதமான சேதாரமும் இல்லாது அண்ணா அவர்கள் அதைச் சமாளித்தார்கள். மத்திய சர்க்கார் ரயில் பெட்டிகள் எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் சொன்னபோது, அண்ணா அவர்கள் சொன்னது நான்கு ரயில் பெட்டிகள் போனாலும் நாளைக்கே 40 ரயில் பெட்டிகள் செய்து கொள்ளலாம்; நான்கு மாணவர்களின் உயிர் போனால் பின்னர் நம்மால் அவர்களை உருவாக்க முடியாது என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அண்ணா அவர்கள் பக்குவமாக நடந்து கொள்வதன் காரணமாகத்தான் இதுவரை அடக்குமுறை என்பது இந்த இராச்சியத்தில் அதிகமாக இல்லை என்பதைப் பார்க்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோவை சம்பவத்திற்கு விசாரணை வைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அரசாங்கம் அதைப்பற்றி என்ன முடிவு செய்கிறார்களோ அதை அவர்கள் செய்வார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன்—கடந்த 1965-ம் ஆண்டு பல ஊர்களிலே பிணக்காடுகளைக் குவித்து வைத்தபோது நீதி விசாரணை வேண்டுமென்று இந்த மன்றத்திலே கோரியபோது பழைய அரசாங்கம் நீதி விசாரணை நடத்தினார்களா? 1965-ம் ஆண்டில் குடியரசு தினத்தின்போது எங்கள் வீடுகளுக்கெல்லாம் பாதுகாப்பு வேண்டுமென்று பழைய முதல் மந்திரி பக்தவத்சலம் அவர்களுக்கு ஃபோன் பண்ணிக் கேட்டோம். 'பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று அவர்கள் பதில் சொன்னார்கள். எங்களுடைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாதிரிச் சொல்லவில்லை. கோவையில் கலவரம் என்ற உடனேயே முதலமைச்சர் அவர்கள் டெலிபோன் பக்கத்திலேயே உட்கார்ந்து நிலைமைகளை அடிக்கடி கவனித்து தக்க உதவிகளை செய்யும்படி சொல்லிக் கொண்டு வந்தார்கள். இதுமாதிரி முதலமைச்சர் இந்த மாநிலத்தில் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று சொல்வேன். அந்த அளவுக்குச் சட்டத்தையும், ஒழுங்கையும் இந்த நாட்டிலே நிலைநாட்டி இன்று நாட்டு மக்கள் எல்லோருக்கும் உணவு, உடை, உறையுள், கல்வி வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அரசாங்கம் பாடுபட்டு வருகிறது.

இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தலைவராக திரு. காமராஜர் அவர்கள் இருக்கும்போதே, மொழிச் சட்டம் எவ்விதத் திருத்தமும் இன்றி நிறைவேற்றப்பட வேண்டும். தீர்மானம் எதுவும் அதனுடன் கொண்டுவரக் கூடாது என்பதாக பெங்களூரில் சொன்னார்கள். அவர்களது வார்த்தைக்கே மதிப்புக் கொடுக்காதபோது—திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்கிற கமிட்டிக்கு என்ன மரியாதை இருக்க முடியும்? கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்வேன். முதலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை அதன் தலைவரை விட்டு கூட்டச் சொல்லுங்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதாகத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுங்கள். அதை நிறைவேற்றிவிட்டு திருமதி இந்திராகாந்தியிடத்தில் பேசுங்கள். அதைச் செய்யாது, சுமையைக் குறைப்போம், சுமையைக் குறைப்போம் என்று பேசினால் எந்த வகையில் சுமையைக் குறைப்பீர்கள்? பிரதம மந்திரி அவர்கள் எக்சிக்யூடிவ் ஆர்டர் மூலம் சுமையைக் குறைக்கலாம் என்று சொல்வது நடக்காத காரியம். மொழித் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தே ரத்து செய்யவேண்டும். அதைவிட்டுவிட்டு மாணவர்கள் கலவரம் செய்கிறார்களே, இதற்குக் காரணம் தி.மு.க. தான் என்று சொல்வது சரியல்ல. பிள்ளையைக் கிள்ளிவிட்டால் அழத்தான் செய்யும். பிள்ளையைக் கிள்ளிவிட்டு அழுகிறதே, அழுகிறதே என்றால் என்ன செய்வது?

திரு. ராமசாமி அவர்கள் கோயம்புத்தூரில் மண்டையில் கல் அடிபட்டுவிட்டாரே, அவரை இந்த அரசாங்கத்தினால் பாதுகாக்க முடியவில்லையே என்று எதிர்தரப்பில் பேசுகிறார்கள். இதுதான் புதிதாக நடந்திருக்கிற சம்பவமா? (திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படியானால் இப்படித்தான் நடக்கும் என்று சொல்கிறாரா ?) கடந்த பொதுத் தேர்தலின்போது உத்தரப் பிரதேசத்தில் இருந்தது காங்கிரஸ் ஆட்சிதான். இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி அங்கு சென்றபோது கல் எறியப்பட்டு அவர்கள் மூக்கு உடைந்து, கட்டுப் போட்டுக் கொண்டு டெல்லிக்குச் சென்றதை நாம் மறந்து விட முடியுமா ? அங்கே அப்போது இருந்தது காங்கிரஸ் ஆட்சிதானே, ஏன் தடுக்க முடியவில்லை ? இப்படி போலீஸ் சக்திக்கும் அப்பாற்பட்டு கல் வீச்சு நடக்கிறபோது யார்தான் என்ன செய்ய முடியும் ? கோவையில் நடந்திருக்கிறதே . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டுச் சொன்னது தவறான கருத்தைக் கொடுக்கக் கூடும் என்பதால் அதைப்பற்றி விளக்க விரும்புகிறேன். கல் எறிந்த சம்பவம் இதற்கு முன்னாலும் நடந்திருக்கிறது என்பதனால் இப்போது நடைபெற்றது நியாயம் என்று வாதாடுவதாக யாரும் கொள்ளக் கூடாது. கல் எறிந்த சம்பவம் சர்க்காருடைய திறமைக் குறைவுக்கு எடுத்துக்காட்டு என்கிறபோது தான் மிகத் திறமை வாய்ந்த அரசாங்க காலத்திலும் நடந்திருக்கிறது, ஆகவே



இப்படி நடப்பதற்கும், திறமைக் குறைவுக்கும் தொடர்பு இல்லை என்பதை திரு. ஆசைத்தம்பி அவர்கள் விளக்கினார்கள் என்பதை நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி** : அவைத் தலைவர் அவர்களே, நான அண்ணா அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு சொல்கிறேன். அதுதான் எங்கள் கருத்து. எங்கள் ஆட்சியில் ஏதோ திட்டமிட்டு நடந்தமாதிரி சொல்கிறார்களே, அது சரியல்ல. சட்டம், ஒழுங்கு என்பது இல்லை என்றால் எங்கு இல்லை? இந்தியாவில் இருக்கிற 17 இராச்சியங்களில் சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றை ஒழுங்கான முறையில் நிறைவேற்றுகிற அரசாங்கம் ஒன்று உண்டு என்றால் அது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தான். பசுவதைத் தடைக் கிளர்ச்சி என்ற அடிப்படையில் டெல்லியில் நடந்த வெறிச் செயல்களின்போது அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களையே குண்டர்கள் தாக்கினார்களே, அந்தத் தாக்குதலில் இருந்து அன்றைக்கு திரு. காமராஜர் அவர்களைக் காப்பாற்றியவரே ஒரு தி.மு.க. தொண்டர் தான். அதை எதிர்க்கட்சித் தலைவர் மறந்துவிடக் கூடாது. அந்த அளவுக்கு டெல்லி நகரில் வெறித்தாண்டவம் ஆடியிருப்பதை உணர்ந்தால் இங்கே சட்டம், அமைதி இல்லை என்பதாகக் காங்கிரஸ்காரர்கள் சொல்லமாட்டார்கள். டெல்லி மாநகரில் ஒரு தூதுவர் மனைவி தெருவில் நடந்துபோக முடியவில்லை என்ற நிலையைப் பார்த்த பிறகும், இங்கே டி.டி.கே. அவர்கள் பேசுகிறார்கள். கோவையில் ஒரு மந்திரியின் தலையில் கல் பட்டதற்கு உண்மையிலேயே நான் வருந்துகிறேன். இது வேதனை அளிக்கும் சம்பவம் தான். அவர் அங்கே போய் இருக்கக்கூடாது. போலீசாருக்கும் மீறிய செய்கை. இந்திய உதவிப் பிரதமரை சென்னைக்கு வர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால், வந்திருந்தால் பெங்களூரில் நடந்தது போலத்தான் இங்கும் நடந்திருக்கும்.

**ஓர் உறுப்பினர்** : இங்கே கல் எடுத்துப்போடுவோம் பிற் பகல்
வர வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்கள். 1-00

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் குறுக்கிடுவதன் மூலம் இந்தப் பிரச்சினை சிக்கலாகாமல் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு குறுக்கிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். " திரு. மொரார்ஜி தேசாய் அவர்களை இங்கு வரவேண்டாம், வந்தால் கலவரங்கள் நடக்கும்" என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அதற்குப் பிறகு அவர்கள் இங்கு வரவில்லை என்பதாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு பக்குவமான முறையில் எடுத்துச் சொல்லப்பட்டது என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் அந்த நேரத்தில் வந்திருப்பார்களேயானால், அப்போது சட்டத்தையும், அமைதியையும் காப்பாற்ற வேண்டுமென்ற அந்தக் காரியத்தைச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டியிருந்திருக்குமானால், எப்படி பெங்களூரில் நடந்ததோ அதைப் போல் கலவரங்கள் ஒரு பக்கத்திலும், அதை அடக்குவதற்கான அடக்கு முறைகள் இன்னொரு பக்கத்திலும்

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1968 பிப்ரவரி 12

இந்த அரசாங்கம் வந்து ஓராண்டு கூட ஆகவில்லை. அதற்குள்ளாக படி அரிசி எங்கே, அது எங்கே, இது எங்கே என்று கேட்பது போன்ற காரியங்களில் ஈடுபடாமல் மக்களுடைய பொதுப் பிரச்சினையில் ஒன்றுபட்டு வேலை செய்ய முன் வர வேண்டும். படி அரிசி எங்கே என்று நீங்கள் படம் போட்டுக் காட்டுகிறபோது, மத்திய சர்க்கார் இருப்பதை நாங்கள் சுட்டிக் காட்டினால் உங்களால் பதில் சொல்ல முடியாது. பழைய முதல் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் முன்பெல்லாம் பொறுப்புள்ள எதிர்க்கட்சி இல்லையே என்று வருத்தப்பட்டார்கள். அவர் விருப்பப்படி நீங்கள் நடக்கவில்லை. இனிமேலாவது நீங்கள் இந்த அரசாங்கத்தின் காரியங்களுக்கு ஒத்துழைத்து நல்லெண்ணத்துடன் பணியாற்றுங்கள். எங்கெங்கு படி அரிசி போட வேண்டுமோ அங்கெல்லாம் படி அரிசி போடுவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. உற்பத்தியைப் பெருக்கவேண்டும். மத்திய உதவியைப் பெறவேண்டும். இதற்கெல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பு எதிர்காலத்திலே இருக்குமானால் ஐந்து வருஷங்களுக்குள் இந்த நாட்டைப் பொறுத்தவரை பெரிய மாறுதலை திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து காட்ட முடியும், செய்யும். உங்களால் ஒத்துழைப்பு கொடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து வேறு பணிகளைப் பாருங்கள். ஐந்தாவது வருஷத்தில் தேர்தலின்போது நீங்கள் நினைப்பதையெல்லாம் மக்களிடத்திலே சொல்லுங்கள்; மக்கள் அதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதை அப்போது பார்த்துக்கொள்வோம். அந்த மாதிரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கவர்னர் அவர்களுடைய உரை மிகத் தெளிவானதாயும், இந்த நாட்டின் நிலைமையையும் அரசாங்கத்தின் சாதனையையும் எடுத்துக் காட்டும் முறையில் இருக்கும் காரணத்தால் அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வ. ஜார்ஜ்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசின் செயல் திட்டங்களை, கொள்கைகளை விளக்குவதாக அமைவதுதான் கவர்னர் உரையின் நோக்கம். அந்த முறையில் எந்தக் குறிப்பும் உரையில் காணப்படவில்லை. அதற்கு நன்றி தெரிவித்துப் பேசியவரும் அந்த முறையில் ஒன்றும் பேசாமல் காங்கிரசைப்பற்றிய வசைமாரிதான் பொழிந்தார்கள். இரண்டிலும் கொள்கை பற்றியோ, செயல் திட்டம் பற்றியோ ஒன்றுமில்லை. கழிந்த ஆண்டு கவர்னர் பேருரையின்போது 3-வது பத்தியில் 'மக்கள் உள்ளங்களில் தோற்றுவிக்கப்பட்ட நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திட்டவட்டமான வேலைத் திட்டங்களை வகுப்பதில் புதிய அரசாங்கத்திற்குச் சிறிது காலம் தேவைப்படும்' என்று கூறியிருந்தார்கள்.

பொதுமக்களும், நாங்களும் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். மக்களுக்கு வேண்டிய திட்டங்கள்---அவர்கள் தேர்தல் அறிக்கையிலும், சுவரொட்டிகள் மூலமும் மக்கள் மத்தியில்



1968 பிப்ரவரி 12] [திரு. வ. ஜார்ஜ்]

பதித்து வைத்த நம்பிக்கைகளும், இவற்றினால் செய்யவேண்டிய திட்டங்களை இந்த ஆளுநர் உரையில் காணலாம் என்று துருவித் துருவிப் பார்க்கும்போது இதில் அப்படி ஒன்றுமே காணவில்லை. ஆளுநர் உரையில் அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை என்பது கண்டு பொதுமக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரை இந்த அரசின் செயல்திட்டங்கள் இன்மையையும், அரசின் இயலாமையையும், கழியாமையையும், திறமையின்மையையும், எல்லாவற்றிற்கும் மத்திய அரசின்மீது பழி சுமத்திக் கொண்டு, தப்ப முயல்கிறதே தவிர அவர்கள் திட்டம் என்ன என்று சொல்லுவதாக அமையவில்லை. உதாரணமாக இந்த உரையில்கூட சுமார் பத்துப் பதினைந்து இடங்களில் மத்திய அரசின்மீது பழி சுமத்தப்படுகிறதே தவிர தங்கள் திட்டங்கள் என்ன, தங்கள் திட்டங்களில் இன்னின்ன முறையில் நாங்கள் தோல்வி அடைந்தோம் அல்லது வெற்றி கண்டோம் என்ற விளக்கங்கள் தரப்படவில்லை. மாறாக குறை கூறுவதே அவர்கள் பாணியாக ஆகியிருக்கிறது. இதில் ஒன்றை நான் ஏற்றுக்கொள்வேன். மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் இவற்றினிடையே உள்ள பொறுப்புகளுக்கும் ஏற்ப நிதி பங்கீடு முறை அமையவில்லை. இவற்றில் சமனற்ற நிலை நிலவுகிறது என்பது உண்மை. அதைப் பரிகரிக்க நிதிக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் நல்ல முறையில் செயலாற்ற வேண்டும் என்பதும் உண்மை. இது நல்லமுறையில் பயன் பெற காங்கிரஸ்காரர்கள் நிச்சயமாக இந்த அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதை நான் அறிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் இன்னொன்றையும் நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டவனாவேன். ஆளும் கட்சியினர் தங்கள் தேர்தல் அறிக்கையில் சுமார் 47-க்கு மேலான அரியபெரிய கருத்துக்களையும், திட்டங்களையும் அவர்கள் பழைய அரசினரிடம் வற்புறுத்தி வந்ததாகவும், அதைத் தாங்கள் செய்யத் தயாராக இருப்பதாகவும், அத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குப் பணம் இல்லை என்று அந்த அரசு கூறி வந்தது உண்மை இல்லை என்றும், போதுமான பண வசதி இருக்கிறது என்றும் தங்கள் தேர்தல் அறிக்கையில் விளம்பரம் செய்து மக்கள் மனதில் நம்பிக்கையை ஊறச் செய்து வந்தார்கள். இன்று ஏன் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு மத்திய அரசினிடம் தான் எல்லாம் இருக்கிறது, எங்களிடம் ஒன்றுமேயில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இது மக்களை திசை திருப்பி விட வேண்டுமென்று செய்யப்படுகிற ஒரு சதிச் செயல் என்றுதான் கூறவேண்டுமே தவிர இது பொருளாதார முறையில் கூறப்படுவது என்று சொல்ல முடியாது. அன்றிருந்த அரசியல் சட்டம்தான் இன்றும் இருக்கிறது. போதிய பணம் இல்லை என்று சொல்வது பொய், பொருத்தமற்றது என்று சொன்னார்கள். இன்று ஏன் அவற்றைத் திருப்பிக் கூறவேண்டும்? தேர்தல் அறிக்கைகளும், சுவரொட்டிகளும் ஆளும் கட்சி நண்பர்களைப் பார்த்து இன்று சிரிக்கிறது. எனவே அவர்கள் இப்போது ரோசம் அடைவதில் பொருள் இருக்கிறது. அதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

என்று உணவுத்துறை அதிகாரிகள் கூறுகிருர்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது? மூட்டைகள் குறைப்பிஞல் ஆயிரம் கிராம் 700 கிராமாகக் குறைகிறது. எடை குறைப்பிஞல் 100 கிராம் குறைகிறது. கடைசியாக, கொடுக்கும் அரிசி 600 கிராம். அந்த அரிசியின் தரம் என்ன? அதை நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. முதலமைச்சர் அவர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்கும் காட்டப்பட்ட அவை புழுத்து, பயன் படுத்த முடியாத அரிசியும், முளைத்துக் கெட்டுப்போன நெல்லையும் கொடுத்ததை அறிவோம். அவைத் தலைவர் அவர்களின் அனுமதியின் பேரில் ஒரு டெப்போவில் கழிந்த வாரம் கொடுத்த அரிசியை இந்த அவை வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சபாநாயகர் அவர்களின் முன் அனுமதியின்றி எந்தவிதமான பொருள்களையும் சபையில் கொடுக்க முடியாது. அப்படி ஒரு தீர்ப்பே வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனல் விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டனவா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** அவை முன்னர் அளிப்பதை நான் அனுமதிக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. Is the House aware of the fact that the Hon. Minister for Food when he was in the Opposition, exhibited some article of food 'idly'—on this very floor of this House without the permission of the then Hon. Speaker. So, if that was in order, why not this be also in order?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I do agree that I exhibited some article of food in this House but the then Hon. Speaker gave a ruling and we have to adhere to that ruling. Even now the hon. Member can present the article here but he has to seek the prior permission of the Hon. Speaker.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, கொடுப்பதற்கு அவைத் தலைவரின் அனுமதியைக் கோரினேன். இப்போது அவைத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டு, அவருடைய அனுமதியுடன் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** நான் ஏற்கெனவே இது குறித்துத் தீர்ப்பு அளித்திருக்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** இந்த அரிசியின் தரம் என்னவென்ருல் டெக்னிகலரின் நான்கு-ஐந்து நிறங்களோடு இருக்கின்றன, கழிந்த வாரம் ஒரு ரேஷன் டெப்போவில் கொடுக்கப்பட்ட அரிசி. வாரத்திற்கு 600 கிராம் அரிசி, தரம் கெட்ட அரிசி மனிதனுக்கு வழங்கப் படுகிறது என்ருல், உணவுப் பிரச்சினையைச் சமாளித்து விட்டோம், அரிசி விலை குறைந்து விட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?





இந்த அரிசியும் வாங்கப்படுகிறது என்ருல், அங்கே அரிசியின் விலை என்ன என்று நீங்களே பார்க்க வேண்டும். படி அரிசி 4 ரூபாய், 5 ரூபாய் என்று விற்கிறது. அந்த நிலையில் இதையாவது வாங்கித்தான் ஆக வேண்டும் என்று மனிதன் எந்த நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிருன் என்று அறிய வேண்டும். உணவுப் பிரச்சினையில் ஊழல் தான் நடக்கிறதே தவிர, எந்த விதமான சமாளிப்பும் நடக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் தலைவர் அவர்களே, இம்மாதிரியான அரிசிப் பொட்டலத்தைக் கொடுப்பதிலே—தரக் குறைவான அரிசியாக இருக்கிறது என்ருல் ஒத்துக்கொள்கிறேன், சில இடங்களில் அம்மாதிரி இருக்கலாம்—சபையில் அதைக் கொடுக்கிற தன்மையில், உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், முன்பு டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்படித்தான் ஒரு பொட்டலத்தைக் கொடுத்து, அது வினியோகிக்கப்பட்டது என்று சொன்னுர்கள். கடைசியில் விசாரணை செய்யும் நேரத்தில், 'அது வினியோகிக்கப்படவில்லை, ரேஷன் கடையில் கெட்டு விட்டது என்று வந்ததை ஒருவர் திருடிக்கொண்டு போய் அதை ஒரு வியாஜமாக ஆக்கி உறுப்பினருக்கு அனுப்பினுர்கள்' என்று தெரிய வந்தது. அதை உறுப்பினருக்கும் தெரியப்படுத்தினேம். இப்படியும் ஏற்படுகிறது. சபையை இந்த முறையில் பயன் படுத்துவதைத் தடுப்பது நல்லது என்று நான் எண்ணுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. It is true that an official of the Ministry wrote a letter to me. First of all, it is out of order for an official of the Ministry to write a letter to me on issue raised in the Assembly. In fact I could have raised a matter of privilege but I did not. Later on I checked twice or thrice but I found that the information given by that particular department was absolutely wrong. I can even now prove that that sort of rice had been distributed but later on withdrawn. Sir, I will not raise issues which have no basis and it does not matter whether it is the D.M.K. Ministry or Congress Ministry which is in power.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have not stated that the hon. Member has wrongly represented the matter. Even now the Government are prepared to have an enquiry about it but it had been clearly found that it was not distributed to anybody and nobody came forward to say that it was ever distributed.

DR. H. V. HANDE : Sir, I am prepared to face an enquiry and I am prepared to muster all the witnesses concerned with it. If the Hon. Minister assures me that he is going to hold an enquiry I am prepared to place all the facts.

Now, the point is that I got a letter from an official and that official has no business to address me. Only the Hon. Minister should have replied to me. That official is not even the Secretary of the Department but somebody subordinate to him and he has

[Dr. H. V. HANDE] [1968 பிப்ரவரி 12

written to me about a matter which has been raised in the House. Of course, so far as the rice scheme is concerned, I am not saying that the scheme is a failure. This Ministry has done much better than the previous Ministry in that respect, but that is not the point at issue now . . .

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Even though this Government are prepared to hold an enquiry, I want to point out that the department has got a right to write letters by way of clarification.

Dr. H. V. HANDE : No, no. That particular official wrote to me that my statement in the Assembly is not correct. No official has got a right to say so.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். சட்ட சபை முடிந்து விட்டது. அவர்களுக்கும் நல்ல முறையில் தெளிவுபடுத்தவேண்டுமென்று விசாரணை நடத்தினோம். விசாரணையின் விளைவை உறுப்பினருக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் அதை ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ் என்றால் அவ்விதமே கொண்டு வரலாம். அது ப்ரிவிலேஜ் அல்ல என்பது என்னுடைய வாதம். ஒரு தப்பு நடந்த மாதிரியான அபிப்பிராயம் சபைக்கோ அல்ல வெளியில் இருப்பவர்களுக்கோ இந்த பேச்சின் விளைவாக ஏற்பட்டு விடக் கூடாது என்றுதான் நான் இதைக்
பிற்பகல் 1-30 குறிப்பிட்டேன். உறுப்பினர் அவர்கள் மாதிரியைக் காண்பித்தார்கள். அதைப் பற்றி உன்னிப்பாக விசாரித்ததில் அது யாருக்குமே கொடுக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. யாருக்கும் ரேஷனில் கொடுக்கவில்லை. வேடிக்கையான தப்பான அபிப்பிராயத்தை ஏற்படச் செய்வதற்காக ஒரு பொட்டலத்தை எடுத்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எங்கேயிருந்து எடுத்தார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதைப்பற்றி விசாரணை செய்ததில், யாருக்கும் விநியோகிக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. தரங்கெட்ட அரிசியைத் தனியாக எடுத்து வைத்து வியாஜ்ஜியத்திற்காக அனுப்பியிருக்கிறார்கள். இவர்கள் தப்பாகச் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. இப்படி நிகழவில்லை என்று உணவு இலாக்கா பதில் சொல்லியது. இது உரிமைப் பிரச்சினையாகாது. அப்படியிருக்குமானால், கனம் உறுப்பினர் அவர்களுக்கு மாமன்றத்தின் உறுப்பினர் என்ற முறையிலே அந்த வாய்ப்பிருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது கோயம்புத்தூரில் விநியோகிக்கப்படவில்லை.

Thiru R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether it is a departmental enquiry or a judicial enquiry that has been contemplated by him?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நீதி உணர்ச்சியிலே கனம் உறுப்பினர் அவர்கள் அக்கறை காட்டுவதைப் பாராட்டுகிறேன்.



1968 பிப்ரவரி 12] [திரு. கே. ஏ. மதியழகன்]

கோவை மாவட்ட கலெக்டர் அவர்களும், உணவு வழங்கு துறை அதிகாரிகளும் விசாரணை செய்தார்கள். உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடமையிருந்தது. அப்பொழுதே சொல்லியிருப்பேன். சட்டசபையிலே கடைசி நாளாக இருந்தது. குறைந்தகால அளவாக இரண்டு, மூன்று நாட்கள் விசாரிக்கத் தேவைப்பட்டதால் அப்பொழுதே சொல்ல முடியவில்லை.

Dr. H. V. HANDE : Without casting aspersion on the way the Ministry is working, as far as the Food Department's work is concerned, I raised it because the Minister raised it. In fact, I had no idea of raising it at all. Once the Minister sets the ball rolling, I have to bring out all the facts. It is not with vindictiveness or any such thing. The administration of the Food Department is better now than in the previous Ministry. The particular packet is the bone of contention. But whatever we discuss here cannot be replied to by an officer and nowhere in May's Parliamentary Practice is it allowed. If we seek some clarification, the officer concerned has a right to answer. But when we raise it here, no officer has any kind of right and I say it again and again and again.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறுக்கிட்டு இவ்வாறு விஷயங்களை இந்த மன்றத்திலே வைப்பது நல்லது அல்ல என்று கூறினார்கள். ஆனால் நபர் ஒன்றுக்கு 1,200 கிராம் அரிசி வாரத்திற்கு வழங்கப்படுகிறது என்ற பெயரில் வெறும் 600 கிராம்தான் வழங்கப்படுகிறது. இந்த அநீதியை வேறு எங்கே விளக்குவது? டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலே கேட்டால், கலெக்டர் கையை விரிக்கிறார். அரசினரின் திறமையின்மையால் ஏற்படும் நஷ்டம் ஏழை எளியவர்கள் தலையில் சுமத்தப்படுகிறது. கோடவுனில் வந்திருக்கக்கூடிய அரிசி மனிதன் உட்கொள்ளுவதற்குத் தகுதியுடையதாக இல்லையே என்று அதிகாரிகளிடம் தெரிவித்திருந்ததற்கு, மூன்று வாரம் கழித்து, மேலும் அவ்வாறு வராமல் பார்த்துக் கொள்கிறோம் என்று கடிதம் வந்தது. அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டிய பின்னரும் அதையே வாபஸ் வாங்காமல் மக்களுக்கு விநியோகித்து வருகிறார்கள் என்ற நிலைமையை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்போது எனக்கு முன்பு பேசியவர், காங்கிரஸ்காரர்கள் விவசாயக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆளுகிறவர்களே இதைப்பற்றி நடத்தி வருகிறார்கள். அதனால் பலன் என்ன? அவைகள், விவசாயிகளுக்குப் பெரிய காரியங்கள் செய்வதாக விளம்பரப்படுத்தவே பயன்படுவதாகத் தெரிகிறது. வேறு எந்தப் பயனும் ஏற்படவில்லை. குறிப்பாக எங்கள் மாவட்டத்திலே விவசாயக் கருத்தரங்கு நடந்தது. அதிலே ஏகோபித்த குரலிலே, பயிர்கள் தண்ணீர் இன்றி வாடுகின்றன, அதற்குத் தண்ணீர் கொடுத்து பம்பு செய்து

[திரு. வ. ஜார்ஜ்] [1968 பிப்ரவரி 12

பயிர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டினோம். உணவு அமைச்சரவர்களும் வாக்குக் கொடுத்தார்கள், நிச்சயம் தருகிறோம் என்று. ஆனால் விளைந்த பயன் ஒன்றுமில்லை. சொன்னது தான் மிச்சம். பெரிய தலைப்புகளிலே பேப்பர்களிலே வந்தது, அமைச்சர் முடிவு எடுத்துவிட்டார் என்று. விளம்பரம் கிடைத்து விட்டது, முடிந்தது காரியம். பலன் என்ன? அதிகாரிகளிடம் கேட்கும்பொழுது பம்பு செட்டு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சென்னை அரசினருக்கு பம்புகள் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பது வெட்கப்பட வேண்டிய விஷயம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குமரி மாவட்டத்தில் நிலங்கள் அனைத்திலும் போதிய விளைச்சல் இல்லை, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அந்த மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிக்கை செய்து, உடனடி நிவாரண வேலைகளைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து கவர்னர் உரையில்கூட மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லை என்று இருக்கிறது. குமரி மாவட்டத்தில் விளைச்சல் குறைந்துவிட்டது என்ற கருத்தைக் காணோம். அங்குள்ள அணைகளில் தண்ணீர் இல்லை என்பதைக் காணோம். மீண்டும் இந்த அவையின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்து பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, நம் இந்தியாவிலே புகைவண்டித்தொடர்பு இல்லாத மாவட்டம் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் விவசாயத்திலிருந்து வேறு துறைக்குப் போவதாலே குறுக்கிட்டு விவசாயத்தைப்பற்றி கேட்க விரும்புகிறேன். அவருடைய பகுதியிலேயுள்ள பஞ்ச நிலைமை, அல்லது அரிசிப்பற்றுக் குறை, அல்லது அரிசி தரமாகத் தரப்படாதது ஆகிய இவைகளைப் பற்றியெல்லாம் அவர்கள் குறிப்பிட்டதை நான் ஒன்றும் விவாதத்திலே எடுத்துக்கொள்ளவில்லை. கவர்னர் உரையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு, திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு, பம்பு செட்டுகள் அதிகமாக நிறுவியிருக்கிறோம் என்பதையும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு உற்பத்தி பெருகி இருக்கிறதென்பதையும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கொள்முதல் அதிகமாகியிருக்கிறது என்பதையும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ரேஷன் தரப் படுகின்ற இடங்கள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் போன்ற இவைகளைக் கனம் உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களா என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** இதற்குமுன் ஆற்றிய கவர்னர் உரையில் 3-வது பத்தியில் உள்ளதைக் குறிப்பிடுகிறேன், அரசினர் ஒத்துக்கொள்வார்களா என்று சந்தேகம் உண்டாகியிருக்கிறது. "தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் நீடித்த வரட்சியால் நிலைமை மேலும் சீர்கேடு அடைந்தது" என்று அதில் இருக்கிறது. இதை அரசினர் ஒத்துக் கொள்வார்களா என்று எனக்குத் தெரியவில்லை.



1968 பிப்ரவரி 12]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் எழுப்பிய வினா வேறு; கனம் உறுப்பினர் அவர்கள் அளித்த பதில் வேறு. அது பாராளுமன்ற முறையிலே அனுசரிக்க வேண்டிய சம்பிரதாயமான பதிலாக இருந்தால், நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காக நான் மறுபடியும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1965-66லே 30,000 பம்ப் செட்டுகள். நாங்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு 42,000 பம்ப் செட்டுகள். இந்த 30,000-லிருந்து 42,000 என்று உயர்ந்த அந்த புள்ளி விவரத்தை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே உணவு உற்பத்தியில் சென்ற ஆண்டு இருந்ததைவிட, இந்த ஆண்டு அதிகமாக உற்பத்தி ஆகி இருக்கிறது என்பதையும், ஒரு போகமாக இருந்ததெல்லாம், இரு போகமானது என்பதும் இதிலே கூறப் பட்டிருக்கிறது. அதை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரா மறுக்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதேபோல ப்ரக்யூர் மெண்ட்டு, 1965-66, 1966-67 ஆகிய ஆண்டுகளில் எந்த அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டதோ, அதைவிட 1½ லட்சம் டன் அதிகமாக நாங்கள் வந்த பிறகு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரா? அதைப் போலவே முந்தைய அரசினால் கொடுக்கப்பட்டதைவிட அதிக இடங்களுக்கு ரேஷன் தரப்படுகிறது. அதை கனம் உறுப்பினர் அவர்கள் மறுக்கிறாரா ஒப்புக்கொள்ளுகிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் கேட்டது ஒரு கேள்வி அல்ல. அடுக்கடுக்காக பல கேள்விகளையே கேட்டு விட்டார்கள். நான் அதற்கு பதில் கூற கடமைப்பட்டிருக்கிறேன். 1965-66-ல் 30,000 விசை ஏற்றங்கள்; 1966-67-ல் 33,000 விசை ஏற்றங்கள், 1967-68-ல் 42,000 விசை ஏற்றங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த 42,000 என்பது ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மைதான். ஆனால் அதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், வளர்ந்துவரும் ஒரு அடிப்படைப் பொருளாதாரத்திலே இவைகள் எல்லாம் இயற்கையாக முன்னேறிக் கொண்டு வருகிறது என்றுதான் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று கூறிக்கொள்வேன். இந்த ஆட்சியினுடைய திறமை என்ற வார்த்தையையே நான் பயன்படுத்தவில்லை. இந்த ஆட்சியினுடைய திறமை இத்தோடு நின்றுவிடுமானால்—நின்று விடுவதானால்—நானே அதற்காக வருத்தப்படுவேன். இந்த ஆட்சியினுடைய திறமை வேறு பல வகையிலே இருக்க வேண்டும். இந்த முன்னேற்றம் நாங்கள் ஆட்சியிலே இருப்பதால் அல்ல; திறமை மிக்கவர்கள் எதிர்க் கட்சியிலே இருப்பதாலே என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அது நடந்ததா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். . .

படி அரிசி எங்கே என்று ஜனங்கள் கேட்பதைப் பார்க்கும்போது அந்த ரோசம் பன் மடங்கு அதிகரிக்கிறது, எனக்குப் புரிகிறது. அவர்கள் பொறுப்பான பதவியில் இருக்கிறவர்கள். ஆகவே அவர்கள் பொறுப்போடு பதில் கூறவேண்டுமே தவிர கட்சி முறையில் சொல்வது அருவருக்கத்தக்கது. காங்கிரஸ்காரர்களுக்கு படி அரிசி கேட்க என்ன யோக்கியதை இருக்கிறது என்று ஒரு அமைச்சர் கேட்கிறார்கள். பிடி அரிசி கொடுக்காதவர்கள் படி அரிசி கேட்பதா என்கிறார்கள். படி அரிசி கொடுப்போம் என்று சொல்லி ஒரு வருடம் ஆகிறது, ஆகவே படி அரிசி எங்கே என்று கேட்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. மக்கள் எங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே நாங்கள் உங்கள் யோக்கியதையை காட்டுங்கள் என்று கேட்கிறோம். அதற்கு எங்களுக்கு உரிமை உண்டு என்று எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

** ** **

அடுத்தபடியாக, கழிந்த ஆளுநர் உரையின்போது, விலைவாசி யேற்றம், உற்பத்திச் செலவு என்ற நச்சு வட்டத்தை முறியடிக்க ஒரு படி அரிசித் திட்டத்தை இந்த அரசு அமல்படுத்தும் என்று அறிவித்திருந்தார்கள். இன்றும் அதையே அறிவித்திருக்கிறார்கள். ஒரு படி அரிசித் திட்டத்தை எங்கே அமல்படுத்த வேண்டும்? நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். சென்னை, கோவை போன்ற இடங்களில்தான் வாங்கும் சக்தி அதிகம், ஆகவே அங்கு அமல்படுத்த வேண்டுமென்று. வாங்கும் சக்தி அதிகமாக உள்ளவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க முடியும். வாங்கும் சக்தி குறைவாக உள்ள கிராமப்புறங்களில்தான் இந்த படி அரிசித் திட்டத்தை முதலில் அமல்படுத்த வேண்டும். இதற்குப் பொருளாதார நிபுணர்களை ஆலோசனை கேட்க வேண்டாம். அதைக்கூட புரியாமல் செய்திருக்கிறார்கள். பட்டணத்தில் படி அரிசித் திட்டம் நிறைவேற்றப்பட்டதால் எங்கும் அரிசி விலை குறைந்து விட்டதாக ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய நண்பர் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள். எங்கே விலை குறைந்திருக்கிறது என்று நான் திரும்பத் திரும்ப கேட்க விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில், என் தொகுதியில் மூன்றிலிருந்து நான்கு ரூபாய் வரையில் படி அரிசி விற்கிறது. அங்குள்ள மக்கள் வாங்கும் சக்தியற்றவர்கள். அங்கு ஒரு விவசாயக் கூலிக்கு கூடிய பட்சம் இரண்டு ரூபாய்க்குமேல் நாளொன்றுக்கு கிடைக்க முடியாது. அப்படி ஏழ்மையில் உழல்கிற ஏழை எளிய மக்களுக்கு படி அரிசித் திட்டத்தை அமல் செய்யாமல் பட்டணத்தில் அமல் செய்வது என்பதைப் பொருளாதாரத் திட்டம் என்றால் அது கேலிக் கூத்தாகத்தான் அமைகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். படி அரிசித் திட்டத்தினால் சென்னையில் விலைவாசி குறைந்துவிட்டதா என்று நான் கேட்கிறேன். இன்று ஆளுகிற அமைச்சர்களுக்கு ஹோட்டல்களில் உள்ள விலை நிரக்குகள் தெரியாமல் இருக்கலாம். நான் சட்டசபைக்கு முதலில் வந்த போது இட்டிலி பத்து காசாக இருந்தது. இப்போது 12 காசாக

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





உயர்ந்திருக்கிறது. இதுதான் படி அரிசித் திட்டத்தின் விளைவு. வடை 10 காசாக இருந்தது இப்போது 15 காசாக உயர்ந்திருக்கிறது. காபி இருபது காசாக இருந்தது இப்போது 30 காசாக உயர்ந்திருக்கிறது. இவ்வாறு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றிய பிறகு ஒவ்வொரு பொருளின் விலையும் ஒவ்வொரு பண்டத்தின் விலையும் உயர்ந்துள்ளதை ஆளும் கட்சி நண்பர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, படி அரிசித் திட்டத்தினால் விலைவாசியேற்றம் என்ற நச்சுச் சுழலை முறியடிக்க முடியவில்லை. அமல் செய்யப்பட்ட பட்டணத்தில்கூட படி அரிசித் திட்டத்தை நகரசபைத் தேர்தல்களைக் கருதி பொங்கலுக்கு முன்னால் அமல்படுத்தலாம் என்றனர். ஆனால் அதற்கு முடியாததால் இப்போது நகரசபைத் தேர்தல்களைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். பொருளாதார தத்துவ ரீதியாக கிராமப்புறங்களில்தான் படி அரிசித் திட்டத்தை முதலாவதாக விஸ்தரிக்க வேண்டும். அதிலும் எல்லையோரப் பகுதியாகிய எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலில் விஸ்தரிக்கவேண்டும். அறுவடை காலத்திலேயே மூன்று நான்கு ரூபாய் என்ற அளவில் விற்கும் நிலை இருக்கும்போது மற்ற காலங்களில் ஐந்தாறு ரூபாய்க்கு விற்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவே படி அரிசித் திட்டத்தை உடனடியாக அங்கு விஸ்தரிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, உணவு வழங்கும் முறையிலுள்ள ஊழல்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு ஆயிரம் கிராம் என்றிருக்கிறது. விளவங்கோடு தாலுகா வாசிகளுக்கு நபர் ஒன்றுக்கு வாரத்திற்கு 1,200 கிராம் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களுக்கு என்ன கிடைக்கிறது என்று பார்க்கவேண்டும். நபர் ஒன்றுக்கு 1,200 கிராம் வீதம் ஒரு ரேஷன் டிப்போவிற்கு 50 மூட்டை நெல் அல்லது அரிசி கொடுக்க வேண்டுமென்றால், உணவுப் பொருள் விநியோகிக்கிற அதிகாரிகள் அந்த டிப்போவிற்கு வழங்குவது 30 மூட்டைதான். இதை வைத்துக் கொண்டு நீங்கள் அட்ஜஸ்ட் பண்ணுங்கள் என்று சொல்லுகிறார்கள். 30 மூட்டையை வைத்து அட்ஜஸ்ட் செய்யும்போது ஆயிரம் கிராம் என்று சொல்வது 700 கிராமாகக் குறைந்து விடுகிறது. ஒரு நபருக்கு 1,000 கிராம் அல்லது 1,200 கிராம் என்று சொல்லுவது 700 கிராமாகக் குறைந்து விடுகிறது. ஒரு மூட்டை என்றால், 57 கிலோ இருக்கவேண்டியது 47 கிலோ உள்ளதாகக்கூடக் கொடுத்திருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறோம். இப்படி 10 கிலோ, 7 கிலோ குறைவாக இருக்கிறது. அதையும் விநியோகஸ்தர்களைச் சரிக்கட்டச் சொல்லுகிறார்கள். ஹோல்சேலர்கள் நிறுத்துப் போட்டால் நாங்கள் சரியாகப் பெற்றுக்கொள்ள முடியும். வற்புறுத்திப் பெறுவோம். ஆகையால் அவர்கள் நிறுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள் என்று சொன்னபோது, ஹோல்சேலரிடம் நிறுத்துப் போட வேண்டுமென்று கூறினால், ஹோல்சேலர்களும் தங்களுக்கு நிறை போட்டுக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். அதற்கு அரசாங்கத்தினால் முடியாது, அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும்

[1968 பிப்ரவரி 12

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, வளருகின்ற பொருளாதாரம் உள்ள நாட்டிலே முன்னேற்றம் ஏற்படுவது என்பது ஒரு பொருளாதார அடிப்படை உண்மை. அந்த உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். வளருகின்ற பொருளாதாரத்திலே இது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

'ப்ரக்யூர்மெண்டிலே நாங்கள் அதிகமாக ப்ரக்யூர் செய்திருக்கிறோம்' என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அதில் அவர்களே ஒத்துக் கொண்ட விதத்தில் 1966-ல் 7.26 லட்சம் ப்ரக்யூர்மெண்ட் செய்ததற்கு மாறாக, 1967-ல் மேற்படியாக அதாவது 8.5 லட்சம் அளவில் ப்ரக்யூர் செய்திருக்கிறார்கள். விளைச்சல் அதிகப்பட்டதுதான் இதற்குக் காரணமே தவிர, 8 லட்சத்திற்கு ப்ராக்யூர்மெண்ட் செய்திருப்பதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. அதிலும், எத்தனையோ வகையில் விவசாயிகள் கஷ்டப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல 'இன்சிடண்ட்'கள் நான் சொல்ல முடியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இவைகள் எல்லாம் அதிகரிப்பதற்கு நாங்கள் காரணம் என்றே நான் சொல்லவில்லை. வளர்ந்ததற்குக் காரணங்கள் சொல்லி பிரச்சினைக்கு வராமல் இருக்கத் தேவை இல்லை. நான் அறிந்துகொள்ள விரும்புவது எல்லாம் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 30,000-லிருந்து 42,000 ஆக உயர்ந்திருக்கிறதா, இல்லையா ? சென்ற ஆண்டைவிட உணவு உற்பத்திப் பெருகி இருக்கிறதா, இல்லையா ? சென்ற ஆண்டை விட கொள்முதல் அதிகரித்திருக்கிறதா. இல்லையா ?

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய விடையை பகர்ந்து விட்டேன். இனிமேலாகிலும் என்னை திசை திருப்ப முன்வந்தால் நான் அதற்கு இடம் கொடுக்க மாட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நிச்சயமாக நான் அவருடைய போக்கை திருப்பி விடுவதற்காகவே கேட்கவில்லை. ஒருவேளை எனக்கே சந்தேகம். என்னவென்றால் இவ்வளவு திறமை உள்ளவர்கள் எதிர்க்கட்சியிலே இருப்பதால், இது நடந்தது என்று ஒப்புக் கொண்டால் ஒரு திருப்தி.

**திரு. வ. ஜார்ஜ் :** இந்தப் புள்ளி விவரம் பூரணமான உண்மை. அதை ஒத்துக் கொள்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆனால், உண்மை என்னவென்றால் வளருகின்ற பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற முன்னேற்றம் இவைகள் என்பதுதான். அதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதை நான் ஒப்புக் கொண்டு இதனாலேதான் இந்த அரசு திறமையானது என்று சொல்வதானால் நானே வெட்கப்படுவேன், என்று ஒப்புக்கொள்





கிறேன். ஒரு அரசினுடைய திறமை வேறு பல வகையிலே இருக்க வேண்டும். ஆனால் பொருளாதார வளர்ச்சி ஒவ்வொரு ஆண்டும் அப்படியே இருக்கும் என்று சொல்வது பொருளாதாரம் படித்தவர்கள் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு தத்துவம். ஏனென்றால் இந்த வருஷத்திலே இருக்கிற 10 என்ற அளவு 15-ஆகவே வளரும் என்ற அவசியம் இல்லை. 10 என்பது 8-ஆகக் கூடக் குறையலாம். ஏதோ எங்களுடைய காலத்தில் நீங்கள் ஏற்படுத்திய 30,000 பம்ப் செட்டுகள் 20,000-மாகக் குறையாமல் 42,000-மாக அதிகமாகியிருப்பதை வளர்ச்சி என்பதாலேதான் சொல்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லத்தான் நான் குறுக்கிட்டேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக இந்தியாவிலேயே புகை வண்டித் தொடர் இல்லாத ஒரே மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்தான் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள மக்களுக்கு வசதியாக 'அவுட்-ஏஜன்சி' இருந்தது. இந்த அரசாங்கம் பஸ்களைத் தேசியமயமாக்கிய காரணத்தால், இந்த 'அவுட் ஏஜன்சிகள்' போய் விட்டன. இதன் காரணமாக எங்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் போய் விட்டது. இந்த 'அவுட்-ஏஜன்சி' வசதி விவசாய மக்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். இப்போது மக்கள் பிரயாணம் செய்வதற்கும் தங்கள் பொருள்களை பார்சல் அனுப்புவதற்கும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவசரமாக . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த 'அவுட் ஏஜன்சி' முறைக்குப் பதிலாக இப்பொழுது ரயில்வே இலாகாவினரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆகவே இனி எந்தத் தொல்லையும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ்:** ரொம்ப மகிழ்ச்சி. நான் அடிக்கடி சொல்லி வருவது என்னவென்றால், இந்த அரசாங்கம் 'அவுட் ஏஜன்சி' பற்றி ஒரு முடிவு எடுத்த பின்னால் தேசிய மயமாக்கி இருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்பதுதான் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலிலே தனியார் துறையினரின் பேருந்துகள் அங்கே ஓடிக் கொண்டிருக்கும்போது ரயில்வே ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம். ஆகவே, முதலிலே தேசியமயமாக்கி விட்டுத்தான் அந்தக் காரியத்தைச் செய்ய இயன்றது. அதுதான் இயலக் கூடியது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமுலுக்கு வரும் என்பது எப்போது என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் பதில் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு வாரத்திற்குள்ளாகத்தான் ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. விரைவிலே ஒப்பந்தம் நிறைவேறும்.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 பிப்ரவரி 12

இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு அதிகாரிகள் வசூலுக்குச் செல்லும்போது, வசூலில் நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்க வேண்டுமானால், நண்பர் அவர்கள் சொன்னார்கள், 'மகிழ்ச்சி, நாங்கள் கூட வந்திருந்தோம்' என்று, ஆகவே, அவர்கள் அதிகாரிகளோடு நல்ல முறையிலே ஒத்துழைத்து இருந்தால், நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்க முடியாது. ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். சென்ற அரசு காலத்தில ஏற்பட்டிருந்த நிர்ப்பந்தங்கள் குறைக்கப்படுவதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது, இனியும் மேற்கொள்ளும்.

கணக்குகளை மேசை மீது வைக்க வேண்டும் என்று உறுப்பினர் கேட்டார்கள். அதற்கான சட்ட மன்ற விதிமுறைகளை நான் பார்க்கவில்லை. மேசை மீது வைக்கப்படவேண்டுமென்றால், இந்த அரசு மட்டும் செய்யக் கூடிய காரியமாக இருந்தால், மேசைமீது வைக்கப்படலாம். ஆனாலும், நிச்சயமாக கணக்குகள் வெளியிடப்படும். அது மட்டுமல்ல, ஆடிட் பரிசோதனை செய்யப்பட்டு வெளியிடப்படும். அப்படி வந்த பிறகு, கணக்கு வராததற்குக் கற்பனையாகப் பேசிய பேச்சுக்கள் கற்பனையாய், காற்றாய், வெறுங்கூற்றாய் முடியும் என்பதை நாடு அப்பொழுது அறிந்துகொள்ளும். அப்படிக் கணக்குகளை வெளியிட, அதற்கான முறைகளில் அவற்றை ஒழுங்குப்படுத்த குழுக்கள் பணியாற்றி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, என் போன்ற உறுப்பினர்கள் தமிழ் மாநாட்டிற்கு உதவியளிக்க, வசூலுக்குக் கோரியிருந்தால், நிச்சயமாக நாங்கள் ஒத்துழைப்புக் கொடுத்திருப்போம். எங்களிடம் கோரப்படாதது மட்டுமல்ல, விழாவிற்கு அழைப்புக்கூட அனுப்பாத அவல நிலைமைதான் இருந்தது என்று அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள், வசூல் நிலைமைபற்றிக் குறிப்பிட்டு, எங்களைக் கேட்டிருந்தால், நாங்களும் ஈடுபட்டிருப்போம் என்று குறிப்பிட்டார்கள். கேட்டிருந்து, ஈடுபடாததை—சொல்ல வேண்டாம் என்றிருந்ததைச் சொல்ல வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தவில்லையென்றால், சொல்லவே மாட்டேன்—குறிப்பிட வேண்டும். கம்பர் சிலைக்கு வசூல் செய்ய எதிர்க் கட்சித் தலைவர் முயற்சி எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால், அதற்காக அவர்கள் தனியாக நிதி திரட்டாமல், மாவட்டக் கலெக்டர் வசூல் செய்திருந்த நிதியிலிருந்து கம்பர் சிலைக்கு என்று ரூ. 25,000 ஒதுக்கிக் கொண்டார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லவில்லை. தனியாக வசூல் செய்யாமல், இருந்த நிதியிலிருந்து ஒதுக்கிக் கொண்டார்கள். ஆகவே, நாங்கள் உங்களைக் கேட்டால் என்ன நடக்கும் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதும் என்று கருதுகிறேன்.



1968 பிப்ரவரி 12]

திரு. வ. ஜார்ஜ்: அவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய அங்கத்தினர் 20 வருஷ காலத்தில் தொழில் வளர்ச்சி என்ன ஏற்பட்டது. ஆரம்பித்ததெல்லாம் கைத்தொழில்கள்தானே என்றார்கள். அவற்றால் நாட்டிற்கு நஷ்டம் ஏற்பட்டது என்ற முறையில் பேசினார்கள். உண்மையிலேயே ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு ஆலைகள் இருப்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும். ஆனால், அந்தக் கைத்தொழில்களை லாபத்திற்காக வைக்கவில்லை என்கிற பொருளாதார உண்மையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வேலை வாய்ப்பின்மையைப் போக்கி, வேலை வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும் என்று முக்கிய குறிக்கோளைக் கொண்டு அன்றைய அரசாங்கம் கைத்தொழில்களை ஆதரித்து வந்தது, இன்றைக்கும் ஆதரிக்கிறது. ஆனால் லாபகரம் என்று இல்லை. அதில் லாப நஷ்டக் கணக்குப் பார்க்க ஒன்றும் இல்லை.

எனக்கு முன் பேசிய நண்பர் பேசும்போது, காங்கிரஸ் அரசாங்கம் பதவியை விட்டபோது, 300 கோடி கடன் வைத்து விட்டு, 400 கோடிக்கு ஆஸ்திகளையும் விட்டுச் சென்றதால் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொன்னார்கள். பொருளாதாரத் துறையில் எந்த ஸ்தாபனமாக இருந்தாலும், அஸெட்ஸ் அண்ட் லையபிலிடீஸ் என்று போட்டு, லையபிலிடீசை விட அஸெட்ஸ் அதிகமாக இருந்தால் ஸ்தாபனம் நியாயமாக இயங்குகிறது என்று பொருள்படும். அதனால் கடன் தொல்லையால் கஷ்டப்படுகிறது என்று பொருள் இல்லை. கடந்த அரசாங்க பட்ஜட்டிலும் கூட திவால் ஆகிவிட்டது என்று ஒன்றும் அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை. அரசாங்கம் ஆஸ்திகளோடு இருப்பதாகத்தான் சொல்லப்பட்டது. 300 கோடி ரூபாய் கடன்களை எப்படி நிவர்த்திப்பது என்று கேட்டார்கள். அதே நேரத்திலே வருஷம் ஒன்றுக்கு 110 கோடி ரூபாய் அளவில் வருமானம் வருகிறது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மீண்டும் அதையும் அதிகரித்திருக்கிறார்கள். ஆகவே, கடன் ஒன்றும் தீர்க்க முடியாத பளு இல்லை.

பல திட்டங்களுக்கும் மத்திய சர்க்கார் உதவி கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள், வருந்தினார்கள். ஆனால் அதே நேரத்திலே, மத்திய சர்க்கார் வெளிநாடுகளில் பிச்சை கேட்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். நண்பர்கள் ஒத்துக் கொள்வார்கள், மத்திய சர்க்கார் வேண்டுமென்றே கொடுக்காமல் இல்லை; இல்லாமையால்தான் என்கிற அடிப்படையையாவது ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மத்திய சர்க்கார் வெளிநாடுகளுக்குச் சென்று பிச்சை எடுக்கிறது என்று சொல்லும்போது, பிற்பகல்
அதனிடம் இல்லாமையைத்தான் அது காட்டுகிறது என்பதை 2-00
உணரவேண்டும். அப்படிப் பேசுவது, அவர்களுடைய அடிப்படை வாதத்தையே மறந்துவிட்டுப் பேசுவதாக இருக்கிறது. மத்திய சர்க்காரிடம் நிதி வசதி அதிகமாகக் குவிந்திருப்பது போலவும், அதை மாநில சர்க்காருக்குப் பகிர்ந்து அளிக்காதது போலவும், அதற்காக ஆட்சி முறையையே கூடத் திருத்தியமைக்க வேண்டும்

**திரு. வ. ஜார்ஜ்:** தலைவர் அவர்களே, மகிழ்ச்சியானதுதான். ஆனால், அங்கு டிரெயின் தொடர்பு கூட வரவேண்டுமென்று அங்குள்ள மக்கள் மட்டும் அல்ல, இந்தியாவிலுள்ள பல கோடி மக்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களில் நான்காவது திட்டமாக இது ஏற்றுக் கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் ஒரு நாள் இந்த மன்றத்திலே பதில் சொல்லும்போது குறிப்பிட்டார்கள். எனவே நான் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு நான்காவது திட்டமாக 'பிரையாரிட்டி' போட்டதை, முதல் திட்டமாக எடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்தியாவிலேயே 'டிரெயின்' அற்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்தான். அங்கு மத சார்பாகவும், சரித்திர சார்பாகவும் பல நாடுகளிலிருந்து மக்கள் வருகிறார்கள். எனவே டிரெயின் தொடர்புக்கு, 'பர்ஸ்டு' பிரையாரிடி என்ற அளவில் முக்கியத்துவம் கொடுத்து வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்களுக்கு இவ்வளவு மகிழ்ச்சி தருவதற்குப் பதிலாக மேலும் வருத்தம் தருகின்ற தகவலைத் தருவதற்கு நான் வருத்தப்படுகிறேன். நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் ஏற்கனவே உள்ள சில ரயில்வேக்களை எல்லாம் அவர்கள் எடுத்து விடுவதாக அறிவித்து இருக்கிறார்கள். அதை எடுக்கக் கூடாது என்று நான் மத்திய அரசினை வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன். எதிர்க்கட்சியினரும் வலியுறுத்த வருவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன், சார். இன்று காலையிலே வந்த செய்தியிலிருந்து, மத்திய சர்க்கார் இப்படியெல்லாம் ஏற்கனவே இருக்கிற பாதைகளைக் கலந்துதான் பரிசோதிக்கப் போகிறோமே தவிர, எடுக்கப் போவதில்லை என்று உறுதி கூறியிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறதே அது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்ததை விட ஆதாரபூர்வமான தகவல் என்னிடத்தில் இருக்கிறது. ரயில்வே அமைச்சர் எடுக்க வேண்டுமென்றுதான் எழுதி இருக்கிறார்கள்.

**திரு. வ. ஜார்ஜ்:** அவைத்தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்ட இந்த விஷயத்திலே, கட்சி வேறுபாடு இல்லை. இது மக்கள் பிரச்சினை. ஆகவே, எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டைப்பற்றி எனக்கு முன் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால், அதற்கு வசூல் பண்ணினார்களே, அந்தக் கணக்குகளை, இந்த அவையின் மேசைமீது வைக்க வேண்டும் என்று வேண்டிக்





கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி வசூல் செய்வதற்குக் கையாண்ட முறை என்ன என்பது பற்றியும் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திருநெல்வேலி ஆர்.டி.ஓ. ஆபீசிலிருந்து ஒரு லாரிக்கு ஃபிட்னஸ் சர்ட்டிபிகேட் வாங்கி நான்கு நாட்கள் கழிந்தவுடன், 'தமிழக மாநாட்டிற்கு நீங்கள் ரூ. 300 கொடுக்க வேண்டும்' என்று கடிதம் வந்தது. இரண்டு நாட்களில் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது. ஆனால் அந்த லாரி உரிமையாளர் உடனடியாகச் செல்லவில்லை. இரண்டு நாட்களில் அவருக்கு ஒரு மெமோ, அதுவும் சைக்ளோஸ்டைல்ட் மெமோ வந்தது, 'தங்களுடைய லாரியில் ப்ரேக் சரியில்லை, உடனே வண்டியை அலுவலகத்திற்குக் கொண்டு வரவேண்டும்' என்றும், 'அதைச் சோதனை போட வேண்டும்' என்றும் ஒரு சைக்ளோஸ்டைல்ட் மெமோ வந்தது. ஆகவே, இந்த முறையில் பொதுமக்களிடமிருந்து வருத்தி, திணிக்கப்பட்டு, வசூல் செய்திருக்கிறது. அந்தக் கணக்குகளை, அந்தத் தொகைகள் செவ்வனே செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அவையினருக்குக் காட்ட, அவை முன்வைக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** உலகத் தமிழ் மாநாட்டை இந்த அரசு நடத்தவில்லை. அந்த மாநாட்டை நடத்துவதற்கென்று, ஒரு தமிழ் மொழி ஆராய்ச்சிக் குழு பணியாற்றிவருகின்றது. அதன் சார்பிலே, சென்ற ஆண்டு, கோலாலம்பூரிலே ஒரு மாநாடு நடந்தது. அப்படி நடந்த மாநாட்டிற்குச் சென்றிருந்த, அப்போதைய முதல் அமைச்சர், இந்த ஆண்டு இங்கே நடத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அந்த முறையில், அந்தக் குழு நடத்திய மாநாட்டிற்கு இந்த அரசு உறுதுணையாக, ஆதரவாகப் பணியாற்றியது. ஆக, அந்தக் குழு, தமிழக அரசு ஆக இரண்டு நிறுவனங்களுமாக, பல்வேறு குழுக்களை அமைத்து மாநாடு நடைபெற்றது. நல்லது, கெட்டது என்று பார்க்கும் போது, தமிழக அரசே முழுக்க முழுக்க நடத்திற்று என்று பெருமையாகச் சொல்வதானாலும், அல்லது குறை காண வேண்டும் என்று சொல்வதானாலும், அதிலே இன்னொரு குழுவும் இருந்திருக்கிறது என்பதையும் இணைத்துக் கொள்வது நல்லது.

வசூல் பற்றிக் குறிப்பிட்டார்கள். வசூலித்த முறை சில இடங்களில் நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள் மக்கள் என்று ஆதாரங்களையும் காட்டினார்கள். நிர்ப்பந்தத்திற்கு இன்னின்ன காரியங்கள் இருந்தது என்று தெரிந்தால், கண்டிப்பான விசாரணையை நாங்கள் மேற்கொள்ளத் தயங்கவில்லை. ஆனால், காங்கிரஸ்காரர்களுக்கு வசூலிப்பது பற்றி நன்றாகத் தெரியும். 20 வருஷ காலமாக நன்றாகத் தெரியும். சில அதிகாரிகள், பழைய பழக்கத்திலிருந்து இன்னும் விடுபடாமல் இருந்திருக்கக் கூடும். ஆனால், நண்பர் நாங்களாக ஏதோ 748-ம் நம்பர் லாரியைப் பிடித்து, முன்னூறு ரூபாயை வாங்கிக்கொண்டு வெளியிலே விடுங்கள் என்று உத்தரவு போட்டோம் என்று கருதிக்கொண்டு பேசியிருப்பார்கள் என்றால், அது தவறு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்த ராஜன்) : இது நடைமுறைக் கேள்வி அல்ல.

பிற் பகல் 2–05 இந்த அளவோடு இன்று பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 1. Notification issued with G.O. Ms. No. 1819, Revenue, dated the 18th October 1967, making certain amendments to the Rules 5 and 20 of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the Table of the House under section 50 (5) of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963).]

* 2. Notification issued with Reference No. 92102/66–F6, dated the 18th July 1967, extending certain provisions of the Madras Municipalities Act, 1920 and rules specified in the schedule of the notification to the entire area of Tiruttani Town Panchayat in Chingleput District from 1st August 1967. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

* 3. Notification issued with G.O. Ms. No. 1121, Revenue, dated the 22nd June 1967, appointing the 1st day of the August 1967 as the date on which the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 shall come into force in the inam estates specified in the schedule of the notification. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 23 of 1963).]

* 4. Notification issued with G.O. Ms. No. 562, Education, dated the 17th April 1967, approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruchirappalli Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]

* 5. Notification issued with G.O. Ms. No. 311, Education, dated the 2nd March 1967, approving the list of all parks, play-fields and open spaces set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Chidambaram Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]





* 6. Notification issued with G.O. Ms. No. 2, Education, dated the 2nd January 1967, approving the list of all the parks, play-fields and open spaces set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Nagapattinam Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]

* 7. Notification issued with G.O. Ms. No. 1307, Revenue, dated the 26th July 1967, effecting a ryotwari settlement of the minor inams in Tirupathur taluk of North Arcot district. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]

* 8. Notification issued with G.O. Ms. No. 1928, L.A., dated the 20th October 1967, extending the term of office of the Councillors of he Corporation of Madras up to the noon of the first day of May 1968. [Laid on the Table of the House under section 6 of the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Act, 1963 (Madras Act 22 of 1963).]

* 9. Notification issued with G.O. Ms. No. 272, Rural Development and Local Administration, dated the 15th February 1966, making an amendment to the Municipal Council Provident Fund Rules, published at pages 1136 to 1145 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 22nd December 1921, as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

* 10. Notification issued with Government Memorandum No. 4872. T1/67-5, Revenue, dated the 15th September 1967, making an amendment to the Revenue Department Notification No. 246, dated the 1st May 1956, published at pages 699 to 706 of Part I of the *Fort St. George Gazette*, dated the 23rd May 1956. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 11. Notification issued with G.O. Ms. No. 2404, Home, dated the 28th August 1967, making an amendment to the Madras Motor Accident Claims Tribunals Rules, 1961, published at pages 750–753 of Part V of the *Fort St. George Gazette*, dated the 12th July 1961, is subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

* 12. Notification issued with G.O. Ms. No. 1880, Rural Development and Local Administration, dated the 13th October 1967, making certain amendments to the Rural Development and

Local Administration Department Notification II-1 No. 5490 of 1966, dated the 4th February 1966, published at pages 198–199 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 16th February 1966, as subsequently amended. [Laid on the Table of the House under section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965).]

13. Notification issued with G.O. Ms. No. 1075, Revenue, dated the 12th June 1967, directing the ryotwari settlement to the Thenkarai inam estate in Tirupathur taluk of Ramanathapuram district in accordance with the provisions contained in the settlement notification relating to the ryotwari settlement of Sivaganga estate in Ramanathapuram and Madurai districts published at pages 1651–1665 of Part I of the *Fort St. George Gazette*, dated the 24th September 1958, as subsequently amended. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

14. Notification issued with G.O. Ms. No. 1411, Revenue, dated 14th August 1967, regarding the proposal to effect a ryotwari settlement to the Minor Inams in certain villages specified in the schedule of the notification in accordance with the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]

15. Notification issued with G.O. Ms. No. 684, Revenue, dated the 27th March 1967, regarding the proposal to effect a ryotwari settlement of minor inams in Ramanathapuram district in accordance with the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]

16. Notification issued with G.O. Ms. No. 2995, Home, dated the 31st October 1967, making certain amendments to the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

17. Notification issued with G.O. Ms. No. 2259, Home, dated the 11th July 1966, making an Amendment to the Home, Department Notification II-1 No. 3381 of 1961, dated the 11th July 1961, published at page 1155 of Part II of section 1 of the *Fort St. George Gazette*, dated the 9th August 1961. [Laid on the Table of the House under section 34 (4) of the Madras Buildings (Lease and Rent Control) Act, 1960 (Madras Act 18 of 1960).]



18. Notification issued with G.O. Ms. No. 1699, Rural Development and Local Administration, dated the 18th September 1967, regarding the reservation of seats and division of wards in Dharmapuri Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

19. Notification issued with G.O. Ms. No. 1702, Rural Development and Local Administration, dated the 19th September 1967, regarding the reservation of seats and division of wards in Ranipet Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

20. Notification issued with G.O. Ms. No. 1845, L.A., dated the 6th October 1967, regarding the reservation of seats and division of wards in Pattukottai Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920. (Madras Act V of 1920).]

21. Notification issued with G.O. Ms. No. 1846, L.A., dated the 6th October 1967, regarding the reservation of seats and division of wards in Devakottai Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras district Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

22. Notification issued with G.O. Ms. No. 1886, L.A., dated the 13th October 1967, regarding the reservation of seats and division of wards in Palayamkottai Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

23. Notification issued with G.O. Ms. No. 1901, L.A., dated the 17th October 1967, regarding the reservation of seats and division of wards in Sivakasi Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

24. Notification issued with G.O. Ms. No. 1950, L.A., dated the 24th October 1967, regarding the reservation of seats and division of wards in Puliangudi Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

25. Notification issued with G.O. Ms. No. 1966, L.A., dated the 26th October 1967, regarding the reservation of seats and division of wards in Chingleput Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

26. Notification issued with G.O. Ms. No. 1967, L.A., dated the 26th October 1967, regarding the reservation of seats and division of wards in the Karur Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

27. Notification issued with G.O. Ms. No. 1698, L.A., dated the 18th September 1967, regarding the reservation of seats and division of wards in the Sivaganga Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

28. Notification issued with G.O. Ms. No. 1844, L.A., dated the 6th October 1967, regarding the reservation of seats and division of wards in the Arcot Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

29. Notification issued with G.O. Ms. No. 2031, L.A., dated the 3rd November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Alandur Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

30. Notification issued with G.O. Ms. No. 2022, L.A., dated the 2nd November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Chidambaram Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

31. Notification issued with G.O. Ms. No. 2006, L.A., dated the 30th October 1967, regarding the reservation of seats and re-division of wards in the Idappadi Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

32. Notification issued with G.O. Ms. No. 2020, L.A., dated the 2nd November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Ambur Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

33. Notification issued with G.O. Ms. No. 2005, L.A., dated the 30th October 1967, regarding the reservation of seats and re-division of wards in the Arni Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

34. Notification issued with G.O. Ms. No. 2021, L.A., dated the 2nd November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Attur Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

35. Notification issued with G.O. Ms. No. 2007, L.A., dated the 30th October 1967, regarding the reservation of seats and re-division of wards in the Gudiyattam Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]



36. Notification issued with G.O. Ms. No. 2024, L.A., dated the 2nd November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Shencottah Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

37. Notification issued with G.O. Ms. No. 2058, L.A., dated the 8th November 1967, regarding the reservation of seats and re-division of wards in the Trivellore Municipality. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

38. Notification issued with G.O. Ms. No. 2841, Agriculture (Co-operation), dated the 29th Septmeber 1967, regarding the extension of the provision of the Madras Money Lenders Act, 1957 in newly formed Panchayat Towns specified in the schedule of the notification in South Arcot district. [Laid on the Table of the House under section 22(3) of the Madras Money Lenders Act, 1957 (Madras Act XXVI of 1957).]

39. Notification issued with G.O. Ms. No. 2763, Agriculture (Co-operation), dated the 20th September 1967, making certain amendments to the Madras Pawnbrokers Rules, 1944. [Laid on the Table of the House under section 22(4) of the Madras Pawnbrokers Act, 1943 (Madras Act XXIII of 1943).]

40. Notification issued with G.O. Ms. No. 1273, Education, dated the 25th July 1967, approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Pattukottai Municipality. [Laid on the Table of the House under section 14(3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act 1959 (Madras Act 26 of 1959).]

41. Notification issued with G.O. Ms. No. 1696, Revenue, dated the 26th September 1967, effecting a ryotwari settlement in certain inam estates specified in schedule of the notification situated in Madurai, Melur, Nilakottai, Dindigul and Tirumangalam taluks of Madurai district in accordance with the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the Table of the House under section 73(5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

## B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS

*1. Notification issued with Government Memorandum No. 49864 T1/67-5, Revenue, dated the 13th September 1967, making an amendment to the Revenue Department Notification II—1 No. 2686 of 1967 published at pages 1089 to 1098 of Part II—Section I of the *Fort St. George Gazette*, dated the 7th June 1967.

* 2 The Madras General Sales Tax (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 1 of 1968) with annexure.

3. Notification issued with G.O. P. No. 1316, Revenue, dated the 26th July 1967, making certain amendments to the Central Sales Tax (Madras) Rules, 1957.

† 4. Governor's Address to the Members of the Legislature on the 10th February 1968 (English and Tamil).

* Despatched to Members on 31st January 1968.

† Circuleted to Members on 10th February 1968.



APPENDIX I.

[*Vide* item 6 on page 27]

## ADDRESS BY THE GOVERNOR OF MADRAS.

Hon'ble Members of the Legislature,

It is again my pleasant privilege to welcome you to this new session of the Legislature. While congratulating you all on your record of work so far, I should share with you a sense of satisfaction that in the year which has just gone by, amidst all the political turmoil and instability witnessed in several parts of our country, this State has been able to reap the benefits of a stable and close-knit Government, supported by a sound and efficient administrative machinery. The manner in which different ranks of public servants have adjusted themselves to the new situation created by transfer of power from one political party to another, testifies to the political neutrality and professional competence of our civil service. This undoubtedly augurs well for the success of parliamentary form of democracy in our State.

2. Such success is indeed to be expected in a land which has rich traditions of culture and civilisation dating back to pre-historic times. Tamilnad had an opportunity recently to have a glimpse of this glorious past when the Second World Conference on Tamil Studies was inaugurated by our revered President Dr. Zakir Hussain in the City amidst scenes of unprecedented public enthusiasm and mass participation. The discussions at the Conference in which scholars and savants from different parts of the world participated have shown how Tamil is rich and flexible enoguh to be fashioned into an instrument of modern thought. The many faceted achivements of the Tamil speaking people in the realms of poetry and philosophy, art and architecture, which were highlighted during the celebrations connected with the conference should have kindled in all our people a genuine sense of price in their past and an abiding faith in their future amidst all their present difficulties.

3. The World Conference on Tamil Studies has given proof that language has a powerful appeal and that statesmanship demands that the love and affection which people have for their respective languages should be respected. India is a vast mosaic of different languages, cultures and civilisation and it is necessary to foster a climate in which different languages and cultures can flourish in amity and realise their full potential. Every linguistic group should have the satisfaction that it has equal rights and privileges with other linguistic groups and will be enabled to play its full role in shaping national affairs. My Government are of the view that if domination by one linguistic region over the other linguistic regions is to be avoided, Tamil and other national languages should be adopted as the official languages of the Union and that to this end, the Constitution should be suitably amended. Till amendment of the Constitution in these specific terms is made, English should

continue as the official language of the Union. The Official Languages (Amendment) Act, 1967, recently passed by Parliament runs counter to this basic objective of assuring the several national languages of this vast country their due place of honour. It has also been admitted that the resolution on language policy passed simultaneously with the Official Languages (Amendment) Act, has placed the non-Hindi regions under a special disadvantage by casting on their people unequal burdens. Following the lead given by my Government, this Assembly has recently resolved that the Union Government should immediately suspend the operation of the resolution on language policy passed by Parliament. My Government will urge the Union Government to convene a high level conference of leaders of political parties, to re-examine the language problem and devise measures for removal of the hardship caused by the language resolution passed.

4. The Government have already taken steps to implement the decision of the Legislative Assembly that Tamil and English should alone be taught in all the schools in the State. The clear definition of policy of this Government on the language issue and its endorsement by the Legislative Assembly should give the student community the confidence that their interests will be zealously safeguarded and that there is no need for them to have recourse to any agitation. I have no doubt that students will now concentrate on studies and utilise their opportunities for becoming useful citizens. In formulating their policy, Government have had the benefit of valuable suggestions offered by scholars and leaders of the teaching profession like Vice-Chancellors of Universities. The decision to change over to Tamil as medium of instruction at the university level need cause no apprehension that the present standards in regard to English will be allowed to deteriorate. Government are fully aware of the importance of English in our curriculum and will take appropriate measures in consultation with educationists and Universities for ensuing that the present standards of instruction and attainment in the English language are in fact improved upon.

5. The language problem is in a sense part of the bigger problem of evolving a truly co-operative federal polity, in which the States representing different cultures and ways of life are assured of their rightful place. The serious imbalance in distribution of resources, in relation to responsibilities as between Centre and the States, has distorted the healthy relationship which should exist between the Centre and the constituent units in a large federation. True federalism means that the Centre as well as the units, should have adequate resources for the discharge of their respective responsibilities, and that discretionary loans and grants from the Centre in respect of matters falling constitutionally within the competence of the State should play only a peripheral role. Till recently, we had at least the consolation that discretionary Central assistance was steadily rising from year to year, thus enabling the States to meet the needs of the people in a larger measure than would otherwise have been possible. But in the last two years, this trend has been reversed and Central assistance to the States, far from registering any growth, has in fact come down. The obligations of the States, in regard to repayment of interest and loans given by the Central Government in the past, have however increased appreciably with the result that the net Central assistance to the States for purposes of economic development is far less than in previous years. In terms of the Constitution, the States do not have adequate independent resources of their own. The transfer of resources from Centre to States on a statutory and non-statutory basis has also fallen short of needs, particularly in the last two years, thus disturbing the even tenor of progress in spheres for which the States are responsible. It is the firm view of my Government that in the light of the experience of the last fifteen years, a high level review of the provisions of he Constitution dealing with the delimitation of resources and powers as between the Centre and the States is essential. Such a review will obviously take a little time and the scope of the review will have to be defined with care in consultation with all concerned. Meanwhile, it is possible to meet at least partially the points of view of the States, if the terms of reference of the Finance Commission could be enlarged to take care of the more pressing needs of the States. Article 280 (3) (c) of the Constitution clothes the President with powers to refer to the Finance Commission any matter in the interests of sound finance and is thus broad enough to permit a study in depth by the Finance Commission of the difficulties of the States in regard to such matters as repayment of loans. In the wake of the decision of the Planning Commission to have the Fourth Plan effective only from 1969-70, it is necessary to have a new Finance Commission to consider a fresh the needs of the States, particularly in regard to committed expenditure, and frame an award which will be co-terminous with the new Fourth-Plan. In the past the terms of reference of the Finance Commission have been settled by the Central Government unilaterally without any reference to the States. The spirit of the federal Constitution and the new political set up in the country in which Governments belonging to different political parties are in power at the Centre and in the States alike demand that the terms of reference of the new Finance Commission should be settled in full consultation with the States. My Government hope that the Government of India will initiate action for such consultation and settle the terms of reference of the new Finance Commission in the light of the view expressed by the State Governments.

6. It is only when the requirements of the States in regard to committed expenditure are properly assessed through a new Finance Commission and fully provided for through statutory devolution, it will be possible for the States to look with confidence to the new Fourth-Plan. We have till then to function within the frame work of annual plans, taking care to see however that there is no serious setback in the tempo of development and that the projects already under way are brought to fruition quickly.

என்று வாதாடும் நிலையில், மத்திய சர்க்காருக்குப் பணம் இல்லை. அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள் என்று சொல்லுவது, அவர்களுடைய வாதத்தையேகூடப் பலப்படுத்துவதாக அமையவில்லை என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கொள்முதல் விலையைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்போது, "காங்கிரஸ்காரர்கள் வைத்த கொள்முதல் விலையைத்தான் நாங்கள் கொடுக்கிறோம், அதைக் கூட்ட வேண்டிய தேவை இல்லை" என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் சர்க்கார் கொள்முதல் விலையை எத்தனை வருஷங்களுக்கு முன்னால் வைத்தது என்பதை நண்பர் மறந்து விட்டார்போலும். அதற்குப் பிறகு ஏற்பட்ட விலைவாசி ஏற்றத்திற்காக அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி அதிகரிக்கப்படவில்லையா ? அதுபோலவே, நாமும் நமது கொள்முதல் விலையை அதற்குத் தக்கபடியாக அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது, காங்கிரஸ்காரர்களுக்குக் கொள்கை இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொள்கை இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நான், அவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை எப்படி இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். "Madras Information" என்னும் வெளியீட்டின் டிசம்பர் மாத இதழில், நான்காம் பக்கத்தில், "Our language policy" என்ற தலைப்பில் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் உரையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த உரை என்னிடம் இருக்கிறது. அதை இங்கே படித்துக் காட்டுவதானால் நீண்ட நேரம் ஆகும். அந்த உரையில் கல்வி அமைச்சர் அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு என்ன சொன்னார்கள் ? "ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழைப் போதனமொழியாக வைப்பதற்கு ஐந்து வருஷங்கள் வேண்டும் என்று சில சாரார்கள் கூறுகிறார்கள். ஆனால், இந்த அரசாங்கம் இதை ஒப்புக்கொள்ள முடியாது. படிப் படியாகத்தான் செய்ய முடியும்" என்று சொன்னார்கள். ஆனால், அதே அரசாங்கம், நான்கு மாதங்களுக்குள்ளே, தமிழைப் போதன மொழியாக்கும் என்று சொல்லியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது எனக்குப் புலப்படவில்லை.

மொழிக் கொள்கையில் நாம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன ? ஆங்கிலமும் தமிழும்தான் படிக்கவேண்டும் என்று சொல்லி, பொது மக்கள் மத்தியில் ஏதோ தமிழுக்கும் இந்திக்கும் போட்டி நடப்பதாக விளம்பரப்படுத்தி வருகிறார்கள். தமிழுக்கும் இந்திக்குமா போட்டி ? இந்திக்கும் ஆங்கிலத்திற்கும் அல்லவா போட்டி ? அந்தப் போட்டியில் நமக்கு என்ன நன்மை ? ஆங்கிலமும் இந்தியும் இரண்டுமே ஆரிய மொழிகள். தமிழ் திராவிட மொழி.



திராவிடக் கழகத்தின் கொள்கைப்படிப் பார்த்தால்கூட, இரு ஆரிய மொழிகளுக்கும் இடையே நடக்கும் போட்டியிலே நாம் எதற்காகப் பங்கெடுக்க வேண்டும்? எனவேதான் நான் கூறுகிறேன் மாணவர்களுடைய உரிமைக்காகவும், மக்களுடைய உரிமைக்காகவும் நாம் "ஆங்கிலம் அல்லது இந்தி" என்ற முறையில், மாணவர்களுடைய விருப்பம்போல் படிக்க வசதி செய்துவிட்டால் சரித்திரம் பின்னர் முடிவு கூறும், எந்த முறையில் மக்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று. அந்த முறையிலே விட்டுவிட்டால் உசிதமாக இருக்கும். அதற்காக அரசியல் கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டு மாநாடு நடத்தி முடிவு செய்வது சாலச் சிறந்தது என்ற முறையில் அதை நான் வரவேற்கிறேன். இத்துடன் நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு 'க்ளாரிபிகேஷன்'. கொள்முதல் விலை காங்கிரஸ் அரசாங்கம் பல வருஷங்களுக்கு முன்னாலே நிர்ணயித்தது தானே ? இப்பொழுது காலம் எவ்வளவோ மாறியிருக்கிறது. இப்பொழுது கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டாமா ? என்று கனம் உறுப்பினர் சொன்னார்கள். அதைப்பற்றி டில்லியிலே கூடிய உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே யோசிக்கப்பட்டு, இந்திய உணவு அமைச்சரும் திட்டக் கமிஷன் தலைவரும், இப்பொழுது கொடுக்கின்ற கொள்முதல் விலை நியாயமானது. இதை அதிகப் படுத்த தேவையில்லை என்பதை அறிவித்துவிட்டார்கள் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** கனம் உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் நடைமுறைக் கேள்வியொன்றை எழுப்பினார்கள். அதற்கான எனது முடிவைத் தெரிவிக்கின்றேன்.

உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் பேசியபோது, "ஸ்ரீவைகுண்டம் உறுப்பினர்" என்று குறிப்பிட்டுப் பேசினார். "ஸ்ரீவைகுண்டம் உறுப்பினர்" என்பது பேரவைத் தலைவரையே குறிக்கும். அவரைக் குறிப்பிட்டுப் பேசச் கூடாது என்று "May's Parliamentary Practice" 396-ஆம் பக்கத்திலும் கூறியிருக்கிறது எனவே, அவ்வாறு பேசியதைச் சட்டப் பேரவை நடவடிக்கைக் கைக் குறிப்பிலிருந்து அகற்றிவிடும்படி, அதாவது "Expunge" செய்யும்படி, 235-வது விதியின்படி கட்டளையிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். ஸ்ரீவைகுண்டம் உறுப்பினர் என்றால், அவர் இங்கு அமைச்சராக இருக்கலாம், அல்லது இங்கு சட்டசபைச் சபாநாயகராக இருக்கலாம். ஆனால், அவர் பேசினதைத்தான் உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே தவிர . . .

7. The House will recall, that keeping these objectives in view, we had presented along with the regular Budget for 1967–68, a plan of the order of Rs. 83.28 crores. Modest as this outlay was in relation to our performance last year, the Planning Commission still wanted us to restrict the outlay on the plan for the current year to Rs. 77.28 crores on the basis of its assessment of our resources. While we took steps to restrict the expenditure under certain heads of development with reference to the considerably smaller allocations indicated by the Planning Commission, we recognized that it will not be possible to keep the plan within the limits indicated by the Planning Commission without seriously jeopardising the minimum rate of progress needed in vital sectors like minor irrigation, agricultural production and power. The State Government have therefore adhered, by and large, to the plan as drawn up by them, while pressing the Central Government at the same time for increased assistance. Though the Central Government have not agreed to any step up in their assistance for the plan for the current year, the House should be glad to note that the State hopes to fulfil a plan of the order of Rs. 88 crores for the current year. The increase in outlays over the level initially contemplated has occurred largely under productive sectors like minor irrigation, fisheries and power. The House should in particular be glad to note that the outlay on rural electrification has been stepped up from Rs. 6 crores to Rs. 7.5 crores in the current year.

8. The fulfilment of a bigger plan, without being matched by additional Central assistance, will naturally deplete our resources and add to our difficulties next year. Government will have a fuller opportunity to place these difficulties before the House when the Budget Estimates for 1968–69 are presented. The difficulties which this State, along with many others, face in fulfilment of developmental programmes will abate in some measure only when there is greater transfer of resources in terms of the award of the new Finance Commission expected to be appointed shortly.

9. The emphasis in the current year's plan has been on agricultural production, for this Government are convinced that it is the neglect of agricultural production in earlier plans that has been at the root of all our present economic ills. The two principal planks in Government's campaign for stepping up agricultural production in the current year have been the promotion of cultivation of the high yielding variety, ADT-27, over large areas in all parts of the State and the conversion of a significant are under single crop into double crop lands. The House should be glad to note that a great measure of success has been achieved in respect of both these programmes. About 8.65 lakhs of acres have been cultivated with high yielding varieties of paddy in the State in the first season. An additional extent of 4.5 lakhs of acres is expected to come under high yielding varieties of paddy in the



Navarai season, apart from about fifty seven thousand acres to be brought under hybrid millets. ADT-27 has given consistently high yields in almost all areas, particularly in Thanjavur, where an average yield of one tonne of rice (1,600 kilograms of paddy) per acre has been reported. A total extent of nearly 3 lakhs of acres in the State has been converted into double crop paddy lands in the current year. As the House is aware, in Thanjavur district, this programme of double cropping took the form of raising ADT-27 in the regular Samba season in a large area of traditionally single crop land, the bulk of which was expected to raise a second Thaladi crop later. Though there has been some shortfall in performance in relation to target, it is still gratifying to learn that about 2 lakhs of acres of traditional Samba in the district had been brought under ADT-27 first and under a second crop later. I have no doubt that the House will join me in commending the achievements of the farmers of Thanjavur district and the services of our staff at all levels who assisted them in these tasks. Agricultural seminars held in all districts in which farmers, legislators and officials of Government participated have played an important part in enlisting the enlightened co-operation of the agriculturists in programmes for stepping up food production. If the present tempo is kept up, we may reasonably look forward to the conversion of still larger areas from single crop to double crop in the years to come.

10. The Government are aware that this process of conversion of single crop to double crop lands in Thanjavur delta will call for a large scale programme of extension of power for filterpoint tube wells and other subsidiary sources of irrigation. The experience in the last two or three years has shown that cultivation even in the Cauvery delta is subject to the vagaries of nature. If poor storage in irrigation reservoirs arising from deficiencies in rainfall in catchment areas is not to retard production, we should place greater reliance on lift irrigation even in delta areas. It is with a view to promote lift irrigation on a larger scale in Thanjavur district that Government decided on taking over the three private electricity undertakings functioning in the district. The House should be glad to know that we have already issued notices for taking over these undertakings which will vest in the Government in the early part of the next financial year.

11. Our efforts at augmenting agricultural production in the current year would have met with even greater success but for the fact that seasonal conditions have not been as uniformly good as we would have liked them to be. The South-West monsoon set in rather late and water could be let down for irrigation from Mettur only in the first week of July. Even so, the short-term Kuruvai and Kar paddy crops were successful. But lack of adequate storage in the Mettur reservoir has led to a situation in which even with the most judicious management of the water available, we cannot meet the needs of the Thaladi crop in full. Departmental

pumpsets are being pressed into service on a large-scale to save as much of the Thaladi crop as possible. Poor rainfall has affected agricultural operations in the Lower Bhavani Project area where no water could be let down for a second crop. The prospects for the Navarai crop in Chingleput and North Arcot districts are however normal. Even after making allowance for these adverse factors, we hope that the production of foodgrains in 1967-68 will, in the aggregate, show a fair measure of increase over last year's figure.

12. I had occasion to refer in my last address to the difficulties in the supply of chemical fertilisers to farmers. The Government have kept a close watch over distribution and the Hon'ble Members will have noticed that the position in respect of supply of fertilisers, particularly for the high yielding varieties programme, has been far more satisfactory than in previous years. The quantity of fertilisers made available for normal programmes is however still inadequate and we hope that the Government of India will make available a larger quantity next year for these programmes also. Our farmers are now very keen on the use of fertilisers and it is unfortunate that just when the value of fertilisers is being realised by the farmers, the Centre should have taken away the subsidy available on fertilisers. Among the various measures undertaken by Government for saving the crops in the current year, special mention should be made of the arrangements for aerial spraying of pesticides and insecticides on paddy crops in the districts of South Arcot, North Aroct, Chingleput, Coimbatore, Madurai, Ramanathapuram and Tirunelveli. Aerial spraying, on a scale not hitherto attempted, has enabled us to counter effectively attacks of pests and diseases over large areas in the current year.

13 The high yielding varieties programme and increase in consumption of fertilisers can produce results only when facilities for irrigation are assured. With the scope for further extension of irrigation under major and medium irrigation projects being limited, Government have laid emphasis on schemes for utilisation of sub-soil and ground water. It is only through massive programmes for sinking of surface wells, bore wells and filterpoint tube-wells and further extension of power for lift irrigation, that we can bring about significant increase in agricultural production. Realising that it will not be possible to push through such a programme within the limited resources available for the Plan, we moved the Government of India for special assistance of the order of Rs. 20 crores. It is a matter for regret that Government of India have not met our request even partially though they should have realised that any additional outlays on minor irrigation programmes will be matched by additional production and will not therefore be inflationary. We have in the current year already energised nearly 42,000 pumpsets as against only about 30,000 in 1965-66 and about 33,000 in 1966-67. The total number of pumpsets energised so far is nearly 3.31 lakhs. Government have also



endeavourd to meet the demands for loans for oil-engines and pumpsets and for sinking of new wells within the resources available. Government are now convinced that it will be possible to meet the needs of the farmers in a fuller measure, only if full advantage is taken of the funds made available by institutions such as Reserve Bank, Life Insurance Corporation, Agriculture Refinance Corporation and Commercial banks for these programmes. Assistance from these institutions, cannot however be availed of direct by the Government, but can be routed only through the Central Land Mortgage Bank and Primary Land Mortgage Banks. Government are anxious that this State should not lose its legitimate share of institutional finance made available for agricultural development and to this end, a change of policy on the lines desired by the Government of India and the Planning Commission is called for. In the coming year, Government will route all assistance for sinking of new wells and installation of oil-engines and pumpsets through land mortgage banks. The Agro-Industries Corporation which will soon start functioning with full complement of staff, will also concentrate on distribution of pumpsets and tractors on hire purchase terms. The State Government will, with matching assistance from the Government of India, subscribe to the debentures of the Central Land Mortgage Bank on a larger scale than hitherto and ensure that the Central Land Mortgage Bank secures its legitimate share of the funds available from central financing agencies and commercial banks. Government are aware that this new pattern of financing of agricutural development programmes, calls for a considerable strengthening and streamlining of the co-operative machinery for processing applications for loans and propose to initiate action in this regard immediately so as to facilitate a smooth transition to the new arrangement from the commencement of the next financial year. Government hope that the co-operative organisation will also prepare itself to face the new challenge and will equip itself to serve the farmers, particularly the small farmers, more efficiently.

14. In my last address, I had referred to the Government's proposals to set up a committee to study the working of co-operative organisation in the State. The need for such a study has become all the greater in the light of the present decision of Government to rely on institutional finances to a greater extent than hitherto. The Government have therefore decided to appoint a Committee with Thiru K. Santhanam as Chairman to review the working of the co-operative movement in our State and formulate proposals for its reform and reorganisation on sound lines. The Committee is in particular being requested to submit an interim report urgently on the need for changes in the provisions of the Act relating to elections to co-operative institutions and constitution of co-operative organisations. I have no doubt that the reform of the co-operative organisation on the basis of the recommendations to be made by this Committee, will enable the co-operative movement in our State to play a more fruitful role in building up our rural economy.

all facilities for entrepreneurs who come forward to set up new industries or expand existing units. The State Government will also continue to press its case for a fair share of the investments by the Centre in major industrial projects. The Fourth Plan has been put off to 1969–70. The State Government would strongly urge that the Salem Steel Plant whose economic and technical feasibility has now been firmly established should definitely find a place in the new Fourth Plan.

19. The legislative programme in this session is not heavy. According to existing legal provisions, the electoral rolls of Assembly constituencies are adopted for holding elections to the Madras City Corporation, Municipalities and Panchayats in the State. Till 1966, there was an annual revision of electoral rolls of Assembly constituencies and hence an up-to-date electoral roll was always available for holding elections to local bodies. In terms of the amendments of the law governing the revision of electoral rolls of Assembly constituencies, a revision of electoral rolls will hereafter be necessary only before a general election or bye-election or when specially directed by the Election Commission. The Election Commission has stated that it is not prepared to take up revision of electoral rolls of Assembly constituencies for purposes of holding elections to local bodies. It is therefore necessary to take powers for ordering the preparation or revision of electoral rolls of local bodies by suitably amending the Acts governing the local bodies, viz., The Madras City Municipal Corporation Act, 1919, The Madras District Municipalities Act, 1920 and The Madras Panchayats Act, 1958. A bill in this regard will be introduced in the current session of the Legislature.

20. The Government have increased the single-point tax on sugar-cane at the point of last purchase in the State, from 4 per cent to 7 per cent with effect from 25th January 1968. A notification under Section 59 (1) of the Madras General Sales Tax Act, 1951, has been issued for the purpose. A bill replacing the notification will be introduced in the Legislature during the present session. Apart from this, the main business in this session, will of course, be the consideration of Supplementary Estimates for the current year and the Budget Estimates for 1968–69.

21. I take this opportunity of reminding the people of Tamilnad, both young and old, of the great future that lies ahead of them. I have no dobut that they all realise that for steady progress in all directions, peaceful atmosphere, disciplined behaviour, and hard work are essential. It shall be our endeavour to maintain and foster the healthy atmosphere conducive for the welfare and progress of all citizens of this great State irrespective of caste, creed, or language. I look forward with keen interest to your deliberations with the confidence that they will be carried on with the restraint and dignity for which this Legislature is justly renowned. All of us, whichever political party we may belong to, are but



imbued with the one objective of making our State an ideal one —one, in which as envisaged by the great savant Thiruvalluvar, "hunger disease and aggression are not to be found".

"உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

## இணைப்பு II

[27-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்.

சட்ட மன்ற மாண்புறு உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இப்புதிய கூட்டத் தொடருக்கு உங்களை வரவேற்கும் பேற்றினை மீண்டும் பெற்றமைக்கு நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற ஆண்டில் நம் நாட்டின் பற்பல பகுதிகளில் நிலவிய அரசியல் கொந்தளிப்பிற்கும், நிலையற்ற தன்மைக்கும் மாறாக, நமது மாநிலத்தில் நல்ல, திறமை மிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு, நிலையான, இணக்கமான ஆட்சியின் நலன்களை நம்மால் துய்க்க முடிந்தது. எனவே, இதுகாறும் நீங்கள் ஆற்றியுள்ள பணிக்காக உங்களைப் பாராட்டுவதோடு, நிலையான ஆட்சியின் பயனைப் பெற்ற மகிழ்ச்சியிலும் உங்களுடன் பங்குகொள்ள விழைகிறேன். ஆட்சிப் பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியின் கையிலிருந்து பிறிதோர் கட்சிக்கு மாற்றப்பட்டதனால் தோன்றிய புதிய சூழ்நிலைக் கிணங்க, பற்பல பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர்கள் பணியாற்றி வருவது, நமது அரசாங்கப் பணியாளர்களின் அரசியல் நடுநிலைமையினையும், தொழில் முறைத் திறனையும் மெய்ப்பித்துக் காட்டுகிறது. நமது மாநிலத்தில் மக்கள் ஆட்சிமுறை வெற்றியடையுமென்பதற்கு இது நல்லதோர் அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை.

2. வரலாற்றுக் காலத்திற்கு முன்புதொட்டே, வளமார் பண்பாடும் உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டிலே இத்தகைய வெற்றினை நாம் எதிர்பார்த்தல் இயல்பானதே. என்றுமே கண்டிராத மக்களின் உற்சாகத்திற்கும் ஈடுபாட்டிற்கும் இடையே நம் பெரு மதிப்பிற்குரிய குடியாட்சித் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ் நாட்டின் பண்டைப் பெருமையின் மாட்சியைத் தமிழகத்தின் கண்முன்னே எடுத்துக்காட்டிற்று. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்துவந்த நுண்ணறிவாளர்களும் புலவர் பெருமக்களும் பங்குகொண்ட இம் மாநாடு, நமது தமிழ் மொழி, காலத்திற்கிணங்க புத்தம் புதிய கலைகளைத் தெற்றென விளக்கும் திறனும், வளனும், வன்மையும் வாய்ந்த விழுமிய மொழி என்பதை எடுத்துக் காட்டியுளது. கவிதை, தத்துவம், கலை, சிற்பம் போன்ற பற்பல துறைகளில் தமிழ் கூறும் நல்லுலகம் எய்தியுள்ள சாதனைகள், இம் மாநாட்டிற்குத் தொடர்பான பற்பல

15. Apart from such resources as are made available by Government and the co-operative sector, it is necessary also to harness the resources of panchayats and panchayat unions for tasks of agricultural development. It is in this view that Government have already permitted Panchayat Union Councils to utilise their surplus funds for purchasing tractors and other agricultural implements to be made available on easy terms to the farmers. This has not merely served to supplement the provisions made by Government for these programmes, but has taken the facilities for use of improved implements to the very door-steps of the farmers. Government are also now examining how best the surplus funds of various temples can be utilised for effecting permanent improvements such as sinking of wells and installation of pumpsets in lands belonging to them. Such improvements will not only promote increased production which is direly needed by the community, but also assure higher income for the temples.

16. While endeavouring to stimulate agricultural production, we should simultaneously ensure that the fruits of increased production are shared equitably by all participants in the process of production. We have, in particular, to take care to see that the interests of cultivating tenants are adequately safe-guarded. The Government have decided to undertake legislation for providing a statutory record of tenancy rights. A bill in this regard is now being drafted and will be introduced in the Legislature shortly. The record of tenancy rights, which we have in view, will assure fixity of tenure for the tenants and thus facilitate effective enforcement of land reform measures. It will also enable the ryots to secure credit on easy terms.

17. While increase in production is the only effective antidote for our difficulties on the food front, the Government have also recognised the importance of ensuring the smooth flow of supplies of foodgrains at fair prices so as to mitigate the hardship for vulnerable sections among our people. One of the earliest steps taken by this Government, after assuming office, was to intensify procurement of foodgrains with minimum hardship to the producers. Government's efforts in this regard have been successful as will be evident from the fact that even with the exemption from procurement of small farmers holding one acre and less, the quantity procured during 1967 was of the order of 8.5 lakhs tonnes as compared with 7.26 lakhs tonnes in 1966. We also took effective steps against smuggling of foodgrains across our borders and dealt severely with anti-social elements engaged in profiteering in foodgrains. The work of the Collectors and their staff in pushing through a programme of procurement of this order smoothly and efficiently is specially commendable. All these measures have enabled us to maintain uninterrupted supplies of foodgrains. The introduction of one-rupee-a-measure scheme in Madras City and Coimbatore, together with belt areas, at a cost of a little over Rs. 5 crores in the current year, has been a boon to the poor.



There has also been a visible improvement in the availability of rice in open market which has brought about a significant reduction in open market prices of rice, thus providing considerable relief to the poorer sections of our society. While the State Government have done all that lies in their power to keep prices in check, it should be realised that the economic policies of the Central Government are primarily responsible for the present inflationary situation. In my last address, I had stressed that taking note of the widespread discontent among the people, the Centre should come forward in a big way to assist the States in implementing their policy of holding the prices, particularly of foodgrains. This plea has not evoked any response from the Centre. I would however like to reiterate the need for the Centre extending a measure of assistance to the States in their efforts to keep the prices of foodgrains and other essential articles at reasonable levels.

18. The House will recall that the failure of agricultural production during the Third Plan period was one of the main causes for the setback in industrial sector also. The rise in prices of foodgrains and the consequent erosion in purchasing power of the masses led to a serious decline in demand for industrial products, causing recession in many industries. This was further aggravated by the sharp cuts effected in developmental outlays in the last two years. The textile industry in this State, had in particular to pass through a very difficult phase. When his Government took office in March last, a few textile mills had closed down and many were on the verge of closure. Though it is primarily the responsibility of the Central Government to regulate and promote large scale industries, it is a matter for regret that they did not come forward with any concrete proposals for dealing with the problems of these mills. The State Government, acting on their own however took prompt steps to study the problem of "sick mills" through an expert committee under the Chairmanship of Dr. Lokanathan and on the basis of the report of the expert committee, evolved a scheme under which the mills were enabled to reopen with additional finance provided by the banks on the basis of guarantees extended by the State Government. Under this scheme, the State Government have extended guarantees in respect of 18 mills, which would otherwise have closed down throwing a large number of workers out of employment. The industrial recession also understandably led to strained relations between management and labour in many undertakings. In this difficult situation, while safeguarding the legitimate interests of labour, Government have generally endeavoured to bring about an amicable settlement between management and labour, so as to create a favourable climate for industrial development in our State. With improvements in agricultural production and liberalisation of bank credit, we hope that industrial production will soon pick up. Government are fully conscious that it is only through industrial expansion we can create adequate opportunities for employment for our skilled manpower and to this end, Government will provide

விழாக்களிலே, குன்றின் மேலிட்ட விளக்கேபோல் குவலயத்தார்க்கெல்லாம் எடுத்துக் காட்டப்பெற்றன. சென்ற காலத்தைச் சிந்தை செய்யும்போது உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும் வருங்காலத்தை எண்ணும்போது இடையறாத ஒரு நம்பிக்கையையும் இன்றைய இன்னல்களுக்கு இடையிலும் தமிழர்களின் உள்ளத்திலே இவ் விழாவின் நிகழ்ச்சிகள் ஏற்றி வைத்திருக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

3. மொழி, மக்களின் உள்ளத்தை ஈர்க்கவல்லது என்பதற்கு உலகத் தமிழ், ஆராய்ச்சி மாநாடு, தக்கதொரு சான்றாக அமைந்துள்ளது. எனவே, தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மதித்து நடப்பதே, அரசியல் நுண்ணறிவாகும். பற்பல மொழிகளும், பண்பாடுகளும், நாகரிகமும் படைத்த பல்வண்ணத் திருநாடு நம் இந்தியப் பெருநாடு. வேறுவேறான மொழிகளும், பண்பாடுகளும் ஒருமித்துத் தழைத்து அவற்றின் முழுத் திறனையும் எய்துவதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர்க்குள்ள உரிமைகளும் வாய்ப்புகளும், தங்களுக்கும் உள்ளன என்ற எண்ணமும், தாங்களும் இந்த நாட்டின் பொதுச் செயல்களை உருவாக்குவதில் தங்கள் முழுப் பங்கினையும் ஏற்கமுடியும் என்ற மனநிறைவும் மொழித் தொகுதியினர் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர் பிறமொழித் தொகுதியினர்மீது ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். என்றால், தமிழையும் பிற தேசீய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்க வேண்டும்; இதற்கிணங்க அரசியலமைப்பும் ஏற்ற வகையில் திருத்தப்பட வேண்டுமென்று எனது அரசு கருதுகிறது. இவ்வாறு குறிப்பாக, அரசியலமைப்பு திருத்தப்படுகிற வரையில், ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அண்மையில் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டம், பரந்த இந்நாட்டின் பல்வேறு தேசீய மொழிகளுக்கும் அவற்றிற்குரிய மதிப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படைக் குறிக்கோளுக்கு முரணாய் அமைந்துள்ளது. ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தோடு கூடவே நிறைவேற்றப்பட்டுள்ள மொழிக்கொள்கைத் தீர்மானம், பெருஞ் சுமையினை இந்தி பேசாத மக்கள்மீது மட்டும் சுமத்துவதன் வாயிலாக, குறிப்பாக அவர்களுக்குத் தீங்கு விளைவித்துள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றிய மொழிக்கொள்கைத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு உடனடியாக நிறுத்திவைக்க வேண்டுமென்று, எனது அரசு எடுத்துக் காட்டியதற்கிணங்க, சட்டப் பேரவை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த மொழிச் சிக்கலை மீண்டும் ஆய்வு செய்வதற்கும், மொழித் தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இன்னல்களை நீக்குவதற்கான வழிவகைகளை ஆய்வதற்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் உயர்மட்ட மாநாடு ஒன்றினைக் கூட்டவேண்டுமென்று எனது அரசு வலியுறுத்தும்.



4. இம் மாநிலப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டுமென்கிற இச் சட்ட மன்றப் பேரவையின் முடிவினைச் செயல்படுத்த இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டது. மொழிச் சிக்கலில் இந்த அரசின் திட்டவட்டமான விளக்கங்களும், அவற்றிற்கு இச் சட்ட மன்றப் பேரவை ஏற்பளித்த நிகழ்ச்சியும் மாணவர் சமுதாயத்தின் நலன்கள் விழிப்புடன் காக்கப்படுமென்றும், எந்தக் கிளர்ச்சியிலும் அவர்கள் ஈடுபடத் தேவையில்லையென்றும் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை அளித்திடல் வேண்டும். இனி மாணவர்கள் தங்கள் முழு நாட்டத்தையும் கல்வியில் செலுத்தி, நாட்டின் நல்ல குடிமக்களாவதற்குத் தங்களுக்குள்ள வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. தனது மொழிக் கொள்கையை வகுக்கையில், கல்வித் துறையின் வல்லுநர்கள் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் போன்ற ஆசிரியர்த் துறைத் தலைவர்கள் ஆகியோருடைய ஆன்ற கருத்துக்களின் பயன் அரசாங்கத்திற்குக் கிட்டியது. பல்கலைக் கழக அளவில் தமிழ் பயிற்சி மொழியாக மாற்றப்படும் முடிவினால், இன்றைய ஆங்கிலப் பயிற்சித் திறன் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டு விடுமோ என்று கவலைப்பட வேண்டிய தேவையில்லை. நமது பாடத் திட்டத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அரசாங்கம் முற்றிலும் உணர்ந்திருக்கிறது. இன்றைய ஆங்கிலப் பயிற்சியின் தரங்களையும் சாதனைகளையும் மேநிலைப்படுத்துவதற்காக அரசாங்கம் கல்வித் துறை வல்லுநர்களையும், பல்கலைக் கழகங்களையும் கலந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5. பல்வேறுபட்ட பண்பாடுகளும், வாழ்க்கை முறைகளும் கொண்ட மாநிலங்கள், தத்தமக்குரிய இடம் உறுதியாகக் காக்கப்படும் வகையிலே, உண்மையான, கூட்டுறவுத் தன்மையுள்ள, ஒரு கூட்டாட்சியை உருவாக்கும் பெரியதோர் சிக்கலின் பகுதியே ஒரு வகையில் இம் மொழிச் சிக்கலாகும். மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே, பொறுப்புக்களையும், அவற்றிற்கேற்ற நிதி வசதிகளைப் பகிர்ந்தளிப்பதிலும், நிலவுகின்ற சமனற்ற நிலை, பெரியதொரு கூட்டாட்சியில், மத்திய அரசிற்கும், உள்ளிணைந்த மாநிலங்களுக்கும் ஊடே நிலவ வேண்டிய இனிய தொடர்பினைக் கெடுத்துள்ளன. உண்மையான கூட்டாட்சி முறையில், மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும், அவற்றுக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதிகள் அவைகளுக்கிருப்பதுடன், அரசியல் அமைப்பிற்கிணங்க மாநிலங்களின் வரம்புக்குள் அடங்குகிற செயல்களில், மத்திய அரசு வழங்கும் விருப்பக் கடன்களும், மானியங்களும் (Discretionary loans and grands) சிறு பங்கினையே வகிக்கவேண்டும். மாநில மக்களின் தேவைகளைப் பெருமளவுக்கு நிறைவேற்றும் வகையில், ஆண்டுக்கு ஆண்டு இவ்விருப்பக் கடன்களும் மானியங்களும் நிலையாக உயர்ந்து வந்தது என்றதோர் ஆறுதலாவது அண்மைக்காலம் வரையில் இருந்து வந்தது. ஆனால், கடந்த இரண்டாண்டுகளில்

இந் நிலை மாறி, மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் இவ்வுதவி பெருகுவதற்கு மாறாகச் சுருங்கியுள்ளது. கடந்த காலத்தில் மத்திய அரசு வழங்கிய கடன்களையும், அவற்றிற்குரிய வட்டியையும் திருப்பித் தருவதில் மாநிலங்களின் பொறுப்புக்கள் பெரிதும் மிகுந்துள்ளன. இதன் விளைவாய், பொருளாதார வளர்ச்சிக்கென மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிகர உதவி, முந்திய ஆண்டுகளில் வழங்கப்பட்டு வந்ததைவிட மிகவும் குறைந்துள்ளது. அரசியல் அமைப்பிற்கிணங்க, மாநிலங்களுக்கே உரிய தனி நிதி வசதிகள் அவைகட்குப் போதிய அளவில் இல்லை. மத்திய அரசு மாநிலங்களுக்குச் சட்டப்படியும், மற்றப்படியும் மாற்ற வேண்டிய நிதி வசதிகளின் அளவும், குறிப்பாகச் சென்ற இரு ஆண்டுகளில் தேவையைவிடக் குறைந்துள்ளது. இதனால், எந்தெந்தத் துறைகளின் வளர்ச்சிக்காக மாநிலங்கள் பொறுப்பேற்றுள்ளனவோ அத் துறைகளில் சீரான முன்னேற்றம் அடைய இயலவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும் அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித் துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும். இத்தகைய ஆய்விற்குக் காலம் சிறிது தேவை என்பதும் இந்த ஆய்வின் வரம்பினைத் தொடர்புள்ள அனைவருடனும் கலந்து விழிப்புடன் வரையறுக்கவேண்டும் என்பதும் உண்மையே. இதற்கிடையில், மாநிலங்களின் மிக நெருக்கடியான தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ப, நிதி ஆணைக் குழுவின் (Finance Commission) ஆய்வு வரம்பினை விரிவுபடுத்துவதன் மூலம், மாநிலங்கள் கூறிவந்துள்ளதை ஓரளவிற்காவது ஏற்றுக்கொள்ள இயலும். சிறந்ததொரு நிதியமைப்பினை உருவாக்குவதற்கு வேண்டிய எப்பொருளையும் நிதி ஆணைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப, அரசியலமைப்பின் 280 (3) (C) பிரிவு, குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. எனவே, கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் போன்றவற்றில் மாநிலங்களுக்குள்ள இடர்பாடுகளைக் குறித்து நிதி ஆணைக் குழு ஆழ்ந்து ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கிற அளவிற்கு அப்பிரிவு இடமளிக்கிறது. நான்காம் திட்டம் 1969-70-லிருந்து செயலுக்கு வரவேண்டுமென்கிற திட்ட ஆணைக்குழுவின் முடிவிற்கிணங்க, மாநிலங்களின் நிதித் தேவைகளைக் குறித்து, குறிப்பாக அவை முன்னரே பொறுப்பேற்றுக்கொண்ட ( committed )செலவினங்களைக் குறித்து, மீண்டும் ஆய்வு செய்து புதிய நான்காம் திட்டக் கால அளவோடு ஒன்றிய ஒரு தீர்ப்பினை வழங்கும் வகையில், புதிய நிதி ஆணைக் குழு ஒன்றினை அமைப்பது அவசியமென உணரப்பட்டிருக்கிறது. முன்னர் நிதி ஆணைக் குழுவின் ஆலோசனை வரம்புகளை மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசியாமல் முடிவு செய்து வந்தது. கூட்டு அரசியலமைப்பின் உட்கிடக்கையையும், மத்தியிலும், மாநிலங்களிலும் வேறு வேறான அரசியல் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதியதொரு அரசியல் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு நோக்கின், மாநிலங்களை முற்றிலும் கலந்து





இப்புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை நிச்சயிக்க வேண்டுமென்பது தெளிவாகும். இந்திய அரசு, அவ்வாறு கலந்து ஆலோசிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்குமென்றும், புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை மாநில அரசுகள் தெரிவிக்கும் கருத்துக்கிணங்க முடிவு செய்யும் என்றும் எனது அரசு எதிர்பார்க்கிறது.

6. மாநிலங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட செலவினங்களுக்கேற்ப, அவற்றின் தேவைகளைப் புதிய நிதி ஆணைக் குழுவின் வாயிலாகச் சரியானபடி நிச்சயித்து சட்டப்படி கிடைக்கும் நிதி வசதிக்கு முற்றிலும் வகை செய்த பின்னர்தான், புதிய நான்காம் திட்டத்தை மாநிலங்கள் நம்பிக்கையோடு எதிர்நோக்க இயலும். அதுவரையில் ஆண்டுத் திட்டங்களின் கட்டுக்கோப்பிற்குள்ளேயே நாம் செயல்படவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்வாறு செயல்படுகையில், வளர்ச்சித் திட்டங்களின் விரைவு அதிகமாகக் குறையாதவாறும், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட்டு பயன்தருமாறும் நாம், ஆவன செய்தல் வேண்டும்.

7. இந் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, 1967-68-ம் ஆண்டின் முறையான வரவு-செலவுத் திட்டத்தின் பகுதியாக, 85 கோடியே 28 லட்சம் ரூபாய் அளவிற்கான திட்டம் ஒன்று இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டதை இம் மன்றத்தினருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். நம்முடைய கடந்த ஆண்டின் சாதனையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இத் திட்ட அளவு நியாயமான வரம்பிற்கு உட்பட்டிருப்பினும், நமது நிதி நிலையை திட்ட ஆணைக் குழு முடிவு செய்த அடிப்படையில், நடப்பு ஆண்டிற்கான திட்ட அளவினை 77 கோடியே 28 லட்சம் ரூபாய்க்குக் குறைத்துக் கொள்ளுமாறு அது விரும்பியது. சில வளர்ச்சித் தலைப்புக்களின் கீழ் திட்ட ஆணைக் குழு தெரிவித்த மிகக் குறைந்த நிதி ஒதுக்கங்களைக் கருத்திற் கொண்டு, செலவினத்தைக் குறைத்துக் கொள்ள நாம் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், சிறு பாசனம், வேளாண்மை உற்பத்தி, மின்சாரம் போன்ற அடிப்படையான துறைகளில் தேவைப்படும் குறைந்த அளவு முன்னேற்றத்தைப் பெரிதும் குலைக்காமல் திட்ட ஆணைக் குழு தெரிவித்த வரையறைக்குள் திட்டத்தைத் தீட்ட இயலாது என்பதை நாங்கள் உணர்ந்தோம். எனவே மத்திய அரசிடம் இருந்து அதிக உதவியினைப் பெறுவதற்கு வற்புறுத்தி வரும் அதே நேரத்தில் மாநில அரசாங்கம்தான் முதற்கண் தீட்டிய திட்டத்தையே பெரும்பாலும் பின்பற்றியுள்ளது. நடப்பு ஆண்டிற்குரிய திட்டத்திற்கென உதவித் தொகையை உயர்த்த மத்திய அரசு இணங்கவில்லையென்றாலும், நடப்பு ஆண்டில் 88 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை நிறைவேற்றி முடிக்க மாநில அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என்பதை அறிய இம் மாமன்றம் உவகை அடையுமென நினைக்கிறேன். சிறு பாசனம், மீனளம், மின்சாரம் போன்ற உற்பத்தித் துறைகளின்கீழ் தொடக்கத்தில் முதலீடு செய்யக் கருதியிருந்த அளவினைவிட இப்போது

செய்துள்ள முதலீடு உயர்ந்துள்ளது. குறிப்பாக, கிராம மின்சார வளர்ச்சிக்கான முதலீடு, நடப்பு ஆண்டில் 6 கோடி ரூபாயிலிருந்து 7½ கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதை அறிய இப்பேரவை மகிழ்ச்சியடையும் என்று நினைக்கிறேன்.

8. கூடுதல் மத்திய உதவி கிட்டாத நிலையில், இவ்வாறு பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதால், நமது நிதி வசதி இயல்பாகவே குறைவதுடன், நம்முடைய இடர்ப்பாடுகளை அடுத்த ஆண்டில் அது அதிகமாக்கும். 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவையின்முன் வைக்கும்போது, இந்த இடர்பாடுகளைக் குறித்து விளக்குவதற்கு, அரசாங்கத்திற்கு முழு வாய்ப்பு கிட்டும். விரைவில் நியமிக்கப் படவிருக்கிற புதிய நிதி ஆணைக் குழு, அதிக அளவில் நிதி வசதிகளை வழங்க வகை செய்யும் போதுதான், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் இம் மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்குமுள்ள இடையூறுகள் ஓரளவிற்குக் குறையும்.

9. இதற்கு முந்திய திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாமல் இருந்தமைதான் இன்றைய நமது பொருளாதாரச் சீர்கேடுகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் என்று இந்த அரசாங்கம் உணர்கிறது. எனவே, நடப்பு ஆண்டுத் திட்டத்தில் வேளாண்மை உற்பத்திக்கு அதிக ஆக்கம் கொடுக்க முற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் வேளாண்மை உற்பத்தியை உயர்த்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியில் இரு சிறப்புக் கூறுகள் உள்ளன. ஒன்று, நமது மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அதிகப் பரப்பளவில் மிகு பயன்தருகிற ஆடுதுறை-27 நெல் ரகத்தை விளைவிக்க முயற்சி எடுத்துக்கொள்வது, மற்றொன்று, ஒரு போகம் விளையும் நிலங்களில் கணிசமான பகுதியை இரு போக நிலங்களாக மாற்ற முயற்சி எடுத்துக்கொள்வது. இவ்விரு வேலைத் திட்டங்களும் பெருமளவில் நிறைவேறியுள்ளன என்பதை இப்பேரவை களிப்புடன் வரவேற்கும் என்று கருதுகிறேன். முதற் பருவத்தில் நமது மாநிலத்தில் மிகு பயன்தருகிற தானிய ரகங்கள் ஏறக்குறைய 8.65 லட்சம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டுள்ளன. நவரைப் பருவத்தில் மிகு பயன்தரும் நெல் ரகங்கள் மேலும் 4.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இவை தவிர, கலப்பினச் சிறு தானியங்கள் சுமார் 57,000 ஏக்கர் நிலங்களில் விளைவிக்கப்படவிருக்கின்றன. ஆடுதுறை-27 நெல் ரகம் பெரும்பாலும் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மிகு விளைச்சலைத் தந்திருக்கிறது. இங்கே ஏக்கர் ஒன்றுக்குக் கிட்டிய சராசரி விளைச்சல் ஒரு டன் அரிசி (அதாவது 1,600 கிலோ கிராம் நெல்) என்று தெரிய வருகிறது. நடப்பு ஆண்டில் நமது மாநிலத்தில் ஏறக்குறைய மொத்தம் 3 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருபோக நன்செய் நிலங்களாக மாற்றப் பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் நீண்ட காலமாக ஒருபோக நன்செய் நிலங்களாயிருந்த பெரும்பகுதி நிலங்களில் முறையான சம்பாப் பருவத்தில் ஆடுதுறை-27 நெல் ரகத்தை விளைவித்து, பின் இவற்றில் பெரும் பகுதியில் இரண்டா



வது தாளடிப் பயிர் விளைவிப்பதன்மூலம் அம்மாவட்டத்தில் இருபோகப் பயிர் விளைவிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது என்பதை இப்பேரவை உணர்ந்திருக்கும். உற்பத்தி இலக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாதனை அளவு சற்றுக் குறைந்திருந்தாலும், அம்மாவட்டத்தில் நீண்ட காலமாகச் சம்பா நிலங்களாயிருந்து வந்த சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்களில் முதலில் ஆடுதுறை-27 நெல் ரகமும், பின்னர் ஓர் இரண்டாம் பயிரும் விளைவிக்கப்படும் என்பது நமக்கு மன நிறைவு அளிக்கும் செய்தியாகும். தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் இந்தச் சாதனைகளையும் அவர்களுக்கு இம்முயற்சிகளில் உறுதுணையாய் நின்று விளங்கிய பற்பல பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின் சாதனைகளையும் என்னுடன் சேர்ந்து பாராட்ட இம்மன்றம் முன்வரும் என்பதில் ஐயமில்லை. உழவர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அரசாங்க அதிகாரிகளும் பங்குகொண்டு அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற வேளாண்மைக் கருத்தரங்குகள், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில் உழவர்களின் ஆன்ற ஒத்துழைப்பினைப் பெறுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. இப்பணியில் காட்டப்படும் தற்போதைய விரைவு தொடர்ந்து இருந்துவரின், வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகப் பரப்பளவுள்ள ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்ற முடியும் என்று நாம் நியாயமாக எதிர்பார்க்கலாம்.

10. தஞ்சைக் கழிமுகப் பகுதியில் ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக மாற்றும் இப்பணியின் காரணமாக, வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கும் ஏனைய துணைப் பாசன முறைகளுக்கும் மின்வசதி அளிப்பதற்காகப் பெருந் திட்டம் ஒன்று தேவைப்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து காவிரி கழிமுகப் பகுதியிற்கூட, பயிர் விளைச்சல் பருவ நிலைகளின் நிலையில்லாப் போக்கிற்கு உட்பட்டதென்று தெரிந்துள்ளது. நீர்கோள் பகுதிகளில் ( catchment areas ) பெய்யும் மழையின் அளவு குறைந்தால் பாசன நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைகிறது. இதன் காரணமாக உற்பத்தி வேலைகள் தடைப்படாமல் நடக்க வேண்டுமென்றால், கழிமுகப் பகுதிகளில்கூட இறைவைப் பாசனத்தில் நாம் மிகுந்த நாட்டம் செலுத்தவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இறைவைப் பாசனத்தைப் பெருமளவில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கும் நோக்கத்துடன்தான் இம் மாவட்டத்தில் உள்ள மூன்று தனியார் மின்சார நிறுவனங்களை மேற்கொள்ள அரசு முடிவு செய்தது. அடுத்த நிதி ஆண்டின் முதற்பகுதியிலிருந்து அரசின் பொறுப்பில் வரும் வகையில், இந்த நிறுவனங்களை மேற்கொள்வதற்கான அறிவிப்புகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன என்பதை அறிய இம் மாமன்றம் மகிழ்ச்சியுறும் என்று நினைக்கின்றேன்.

11. நடப்பு ஆண்டில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள், பருவமழை நாம் எதிர்பார்த்ததைப் போல் சீராகப் பெய்திருந்தால் மேலும் அதிக அளவிற்குப் பலன் கொடுத்திருக்கும். தென்மேற்குப் பருவமழை,

அனைத்தையும் நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே அரசாங்கம் வழங்கும் முழு அளவில் பணியாளர்களை நியமித்துக் கொண்டு விரைவில் செயல்படவிருக்கிற வேளாண்மைத் தொழில்கள் கழகம் (Agro-Industries Corporation,) தவணைக் கொள் முதல் அடிப்படையில் ( Hire-purchase terms ) விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் வழங்குவதில் நாட்டம் செலுத்தும். மாநில அரசு மத்திய அரசிடமிருந்து இணை உதவியைப் பெற்று மத்திய நில அடைமான வங்கிகளின் கடன் பத்திரங்களின்மீது, இதற்கு முன் முதலீடு செய்துவந்த அளவைக்காட்டிலும் பெருமளவில் முதலீடு செய்யும். இதனால் மத்திய நில அடைமான வங்கி, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கடன் உதவும் நிறுவனங்களிடமிருந்தும் ஏனைய வர்த்தக வங்கிகளிடமிருந்தும் கிடைக்கும் நிதி வசதிகளில் தனக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு அரசு வகை செய்யும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் உதவி அளிக்கின்ற இப் புதிய செயல்முறை காரணமாக கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் கடன் மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக அவற்றில் தேவையான பணியாளர்களை மேற்கொண்டு நியமிப்பதற்கும், நடைமுறையை எளிதாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே, அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து சங்கடம் ஏதுமின்றி இப் புதிய ஏற்பாட்டினைப் பின்பற்றுவதற்கிணங்க, இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு கருதுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் இவ்வறைகூவலை ஏற்கும் என்றும், உழவர் பெருமக்களுக்கு, குறிப்பாகச் சிறு உழவர்களுக்குச் செவ்விய முறையில் பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் என்றும் அரசு நம்புகிறது.

14. நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் பணியை ஆய்வதற்கென்று ஒரு குழுவினை அமைப்பதற்கான அரசின் செயற் குறிப்புகள் பற்றி என்னுடைய கடந்த உரையில் குறிப்பிட்டிருந்தேன். நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவியை, இதற்குமுன் பெற்று வந்ததைவிட அதிக அளவில் பெறுவதற்கு அரசு இப்போது முடிவு செய்திருப்பதால் அத்தகைய ஆய்விற்கான தேவை மேலும் பெருகி இருக்கிறது. எனவே, நமது மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பணியை ஆய்ந்து செவ்விய வழிகளில் அதனைச் சீர்திருத்துவதற்கும், சீரமைப்பதற்குமான செயற் குறிப்புகளைத் தயாரிப்பதற்காக திரு. கே. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. குறிப்பாக, இக் குழு கூட்டுறவு நிறுவனங்களுக்கு நடக்கும் தேர்தல் குறித்தும், கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு குறித்தும் கூட்டுறவுச் சட்டத்தின் விதித் துறைகளில் செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றியும் விரைந்து இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புமாறு வேண்டப்படும். இக் குழு செய்யவிருக்கிற பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு, கூட்டுறவு நிறுவனங்கள் குறித்துச் செய்யப்படும் சீர்திருத்தங்கள் நமது கிராமப்



பொருளாதாரத்தை வளர்ப்பதில் இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு இயக்கம் மேலும் பயன்தரு முறையில் பங்கு பெறுவதற்கு உதவியாய் இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

15. அரசும் கூட்டுறவுத் துறையும் வழங்கும் நிதி வசதிகள் தவிர, வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்கு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிதி வசதிகளையும் ஒன்று திரட்டுவது அவசியமாகும். இந்தக் கருத்தில்தான் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் உபரி நிதிகளைக் கொண்டு டிராக்டர்கள், ஏனைய வேளாண்மைக் கருவிகள் இவற்றை வாங்கி உழவர்களுக்கு எளிய வாடகை விதங்களில் கொடுக்கப் பயன்படுத்திக்கொள்ளலாமென்று அரசாங்கம் ஏற்கெனவே அவைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக அரசாங்கம் செய்துள்ள வசதிகளை இது பெருக்குவதோடு, நவீன வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்தும் வசதிகளை உழவர்களின் வீட்டு வாயிற்படியிலேயே ஏற்படுத்திக் கொடுக்கவும் வகை செய்துள்ளது. பற்பல கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல் போன்ற நிலையான மேம்பாடுகளைச் செய்வதற்கு, அக் கோயில்களின் உபரி நிதிகளை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் அரசு இப்போது ஆய்வு செய்து வருகிறது. இத்தகைய மேம்பாடுகள் சமுதாயத்திற்குப் பெரிதும் தேவைப்படுகிற உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்வதோடு அக் கோயில்களின் வருவாயை மேலும் உயர்த்துவதற்கும் உதவியாயிருக்கும்.

16. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முனைகையில், உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் அனைவரும் உற்பத்திப் பெருக்கத்தின் பலன்களை நியாயமான அளவில் பகிர்ந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, பயிரிடும் குத்தகைக்காரர்களின் நலன்கள் போதுமான அளவிற்குப் பாதுகாக்கப்படுகின்றனவா என்பதை அறிவதில் நாம் நாட்டம் செலுத்த வேண்டும். குத்தகை உரிமைகளைக் குறித்து சட்டபூர்வமான ஆவணம் ஒன்றை வகை செய்து தருவதற்காகச் சட்டம் இயற்றவேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்த சட்ட வரைவு ( Bill ) ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அது விரைவில் சட்டப் பேரவைமுன் வைக்கப்படும். நாங்கள் கருதியுள்ள குத்தகை உரிமை ஆவணம் குத்தகைக்காரர்களின் குத்தகைக் கால அளவை உறுதிப் படுத்துவதுடன், நிலச் சீர் திருத்த ஏற்பாடுகளைத் திறம்படச் செயல்படுத்தவும் உதவும். உழவர்கள் எளிய நிபந்தனைகளில் கடன் பெறவும் இது வகை செய்யும்.

17. உணவு முனையில் நமக்குள்ள இடர்ப்பாடுகளைச் செவ்விதின் தீர்ப்பதற்குரிய ஒரே மருந்து உற்பத்திப் பெருக்கந்தான் என்பதை அரசு உணர்ந்திருந்தாலும், நமது மக்களில் மிக எளிய பிரிவினர்களின் இன்னலைப்போக்குவதற்காக நியாய விலைகளில் உணவு தானி

காலம் கடந்து பொழிந்ததால், மேட்டூரிலிருந்து ஜூலை முதல் வாரத்தில்தான் பாசனத்திற்கு நீர் விடமுடிந்தது. அப்படியிருந்தும், குறுகிய காலப் பயிராகிய குறுவையும், காரும் நல்ல விளைச்சலைத் தந்தன. ஆனால் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் போதிய அளவில் இல்லாததால், கிடைக்கும் நீரை மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் பகிர்ந்து அளிப்பினும் தாளடிப் பயிரின் முழுத்தேவைக்கும் நீர் விட முடியாத ஒரு நிலையை அடைந்திருக்கின்றோம். இயன்ற அளவிற்குத் தாளடிப் பயிரைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தில், வேளாண்மைத் துறையினரிடம் உள்ள விசை ஏற்றங்களைப் பெருமளவில் செயல்படுத்தி வருகின்றோம். கீழ் பவானித் திட்டப் பகுதியில் மழை அளவு குறைந்ததால், வேளாண்மைப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளது. இங்கே இரண்டாம் பயிருக்குத் தண்ணீர்விட இயலவில்லை. ஆயினும், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு பகுதிகளில் நவரைப் பயிர் இயல்பான விளைச்சலைத் தரும் என்று எதிர்பார்க்கிறோம். நலமில்லா இக் கூறுகளையெல்லாம் தள்ளிப் பார்த்தாலும், 1967-68-ல் மொத்த உணவுத் தானிய உற்பத்தி, கடந்த ஆண்டின் உற்பத்தியைவிட நியாயமான அளவிற்குப் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம்.

12. உழவர்களுக்கு ரசாயன உர வகைகளை வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளைப் பற்றி, கடந்த எனது உரையில் குறிப்பிட்டிருந்தேன். உர வகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு கூர்ந்து கவனித்து வந்திருக்கிறது. உரம் வழங்குவதைக் குறித்த நிலைமை குறிப்பாக, மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களுக்கு உரம் வழங்கும் நிலைமை முந்திய ஆண்டுகளில் இருந்ததை விடப் பெருமளவிற்கு மன நிறைவு தருவதாய் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். ஆயினும், இயல்பான திட்டங்களுக்குக் கிடைக்கும் உர வகைகளின் அளவு இன்னும் போதுமானதாய் இல்லை. இந்தத் திட்டங்களுக்காகவும் அடுத்த ஆண்டில் மேலும் அதிக அளவில் உர வகைகள் கிட்டுவதற்கு இந்திய அரசாங்கம் வழி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நமது மாநில உழவர்கள் இப்போது உர வகைகளைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஊக்கம் காட்டி வருகின்றனர். உர வகைகளின் பெருமதிப்பைப் பற்றி உழவர்கள் உணர்ந்து வரும் போது, உர வகைகளுக்கு மத்திய அரசு கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்தியிருப்பது வருந்தத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் பயிர்களைக் காப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட பல்வேறு ஏற்பாடுகளில், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நெற்பயிர்களுக்கு விமான மூலமாக மருந்து தெளிப்பதற்கு மேற்கொண்ட ஏற்பாடுகளைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். இதுகாறும் மேற்கொள்ளாத அளவிற்கு விமானமூலம் பயிர்களுக்கு மருந்து தெளித்ததால், நடப்பு ஆண்டில் பெரும் பகுதி நிலங்களில் பிடித்த பயிர் நோய்களை நாம் செவ்விதின் எதிர்த்துப் போக்க முடிந்தது.





13. மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டமும், உர வகைகளை அதிகமாய்ப் பயன்படுத்தும் திட்டமும், பாசன வசதிகள் நிலையாகக் கிட்டினால்தான் உரிய பலன்தரமுடியும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின் கீழ், பாசன வசதிகளை விரிவுபடுத்தும் வாய்ப்பு குறைந்திருப்பதால், நிலத்திற்கு அடியிலுள்ள நீர்வளங்களைப் பயன்படுத்தும் திட்டங்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்திருக்கிறது. கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் போன்ற இவற்றைத் தோண்டுவதற்கான பெரியதோர் திட்டத்தின் வாயிலாகவும், இறைவைப் பாசனத்திற்கு மேலும் மின்சார வசதி அளிக்கும் திட்டத்தின் வாயிலாகவும் மட்டுமே வேளாண்மை உற்பத்தியைப் பெருமளவில் உயர்த்த முடியும். திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த நிதி வசதிகளுக்குள் இத்தகைய வேலைத்திட்டம் ஒன்றை நிறைவேற்றுவது இயலாதென்பதை உணர்ந்து, 20 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்குமாறு இந்திய அரசிற்கு எழுதினோம். சிறு பாசனத் திட்டங்களுக்குக் கூடுதலாகச் செலவிடுதற்கேற்ப, உணவு உற்பத்தி அதிகரிப்பதனால், பண வீக்கம் ஏற்படாது என்பதை உணர்ந்திருக்கவேண்டியிருப்பினும், இந்திய அரசு நமது வேண்டுகோளை ஓரளவுக்குக்கூட ஏற்கவில்லையென்பது வருந்தத்தக்கதாகும். 1965-66-ல் சுமார் 30,000 விசையேற்றங்களுக்கும், 1966-67-ல் 33,000 விசையேற்றங்களுக்கும் மட்டுமே மின் வசதி அளிக்கப்பட்டிருக்க, நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 42,000 விசையேற்றங்களுக்கு ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மின் இணைப்பு தரப்பட்டுள்ள விசையேற்றங்களின் எண்ணிக்கை 3,31 லட்ச அளவில் அமைந்துள்ளது. புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும், விசையேற்றங்களையும் வாங்குவதற்கும் வேண்டப்படும் கடன்களை வழங்குவதற்கு அரசு தனது நிதி வரம்பிற்கு ஏற்ப முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. உழவர்களின் கடன் தேவைகளை முற்றிலும் நிறைவேற்றவேண்டுமென்றால், ரிசர்வ் வங்கி, ஆயுள்காப்புறுதிக் கழகம் ( Life Insurance Corporation ) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் ( Agricultural Refinance Corporation. வர்த்தக வங்கிகள் போன்ற நிறுவனங்கள் இத் திட்டங்களுக்காக அளிக்கும் நிதி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு உறுதியாக நம்புகிறது. ஆயினும், இந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவிகளை அரசு நேரடியாகப் பெற இயலாது. இவற்றை மத்திய நில அடைமான வங்கியின் மூலமாகவும், நில அடைமான வங்கிகளின் மூலமாகவும் மட்டுமே பெற முடியும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு இத்தகைய நிறுவனங்கள் அளிக்கும் கடன் உதவியில் தனக்குரிய பங்கைப் பெறும் வாய்ப்பினை நழுவவிடக் கூடாது என்று அரசாங்கம் கருதுகின்றது. இதற்கென இந்திய அரசாங்கமும், திட்ட ஆணைக்குழுவும் தெரிவித்துள்ளபடி நமது கொள்கையில் மாறுதல் செய்யவேண்டியுள்ளது. வருகிற ஆண்டில், "புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும் விசையேற்றங்களையும் நிறுவுவதற்கும் தேவைப்படுகிற கடன் உதவி

யங்கள் தங்கு தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டியதும் முக்கியமென்று அரசு உணர்ந்திருக்கிறது. உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்கையில், நகர்ப்பகுதியினருக்கும் நமது சமுதாயத்தின் ஏனைய எளிய பிரிவினர்களுக்கும் உணவு தானியங்கள் தங்கு தடையின்றி வழங்கப்படுவதிலும் அரசு உரிய நாட்டம் செலுத்தி வந்திருக்கிறது. இந்த அரசு பதவி ஏற்றவுடன் எடுத்துக் கொண்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு அதிக இடர் தராத வகையில் உணவு தானியக் கொள்முதலை மும்முரப்படுத்தியதுதான். ஒரு ஏக்கருக்கும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்திருக்கிற சிறு உழவர்களுக்குக் கொள்முதல் செய்வதிலிருந்து விலக்களித்திருந்தும், 1966-ல் 7.26 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக, 1967-ம் ஆண்டில் கொள்முதல் செய்த உணவுத் தானியங்களின் அளவு 8.5 லட்சம் டன் அளவில் உள்ளது. இதிலிருந்து இத்துறையில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளித்துள்ளனவென்பது தெளிவாகும். நமது மாநில எல்லைகளைத் தாண்டி உணவு தானியங்களைக் கள்ளக் கடத்தல் செய்வதைத் தடுக்கவும் நாம் திறம்பட நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டோம். உணவு தானியங்களில் கொள்ளைலாபம் அடிக்கிற சமூக விரோத சக்திகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாறு கொள்முதல் திட்டத்தைத் தங்கு தடையின்றித் திறம்படச் செயல்படுத்தியதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அவர்களது பணியாளர்களும் ஆற்றிய பணி சிறப்பாகப் பாராட்டப்படுவதற்குரியது. இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் உணவு தானியங்கள் இடையீடின்றி வழங்கப்படுவதற்கும் உதவியாய் இருந்தன. ஐந்து கோடி ரூபாய்க்குச் சற்று மேற்பட்ட செலவில் சென்னை நகரிலும், கோவையிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்ட 'படி அரிசித் திட்டம்' ஏழை எளிய மக்களுக்கு ஓர் அருட்கொடையாக இருந்து வந்துள்ளது. வெளி அங்காடிகளில் அரிசி கிடைக்கும் நிலை மேம்பாடு அடைந்தது. வெளி அங்காடியில் அரிசி விலை பெருமளவிற்கு முந்தைய ஆண்டுகளைவிடக் குறைந்தது. சமுதாயத்தின் ஏழை எளிய பிரிவினர்களுக்குப் பெருமளவில் துயர் தணிப்பு தந்துள்ளது. விலை வாசிகளின் ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு மாநில அரசாங்கம் தனது அதிகாரத்திற்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற் கொண்டபோதிலும், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளே தற்போதைய பணவீக்க நிலைக்கு முக்கிய காரணம் என்பதை நாம் உணர வேண்டும். எனது கடந்த உரையில் மக்களிடையே எங்கும் பரவியுள்ள அதிருப்தியைக் கருத்திற் கொண்டு மத்திய அரசு, விலைவாசி ஏற்றத்தைக் குறிப்பாக உணவு தானியங்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும் கொள்கையைச் செயல்படுத்துவதில் மாநிலங்களுக்குப் பெருமளவில் உதவி புரிய வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தேன். இவ்வேண்டுகோளுக்கு மத்திய அரசு செவி சாய்க்கவில்லை. ஆயினும், உணவு தானியங்களின் விலைவாசிகளையும் ஏனைய இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளையும் நியாயமான



அளவுகளில் நிறுத்த மாநிலங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு மத்திய அரசு ஓரளவிற்காவது உதவி புரிய வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

18. மூன்றாம் திட்டக் காலத்தில் வேளாண்மை உற்பத்தி குன்றியது, தொழில் துறையிலும் உற்பத்தி வேகம் குறைந்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்பதை இப்பேரவையினருக்கு நினைவுறுத்த விரும்புகின்றேன். விலைவாசிகளின் ஏற்றமும், அதன் காரணமாக மக்களின் வாங்கும் திறம் குறைந்தமையும் தொழில் துறைப் பொருள்களின் தேவை அளவு பெரிதும் சரிவதற்கு ஏதுவாய் இருந்தன. இவற்றால் பல்வேறு தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டது. கடந்த இரண்டாண்டுகளில் வளர்ச்சித் திட்ட முதலீடுகள் பெருமளவில் குறைக்கப்பட்டதால் நிலைமை மேலும் சீர்கேடுற்றது. குறிப்பாக, இம் மாநிலத்தில் நெசவாலைத் தொழில் மிக இடருற்ற நிலைக்கு வந்தது. கடந்த மார்ச் திங்களில் இந்த அரசு பதவி ஏற்றபோது சில நெசவாலைகள் மூடிக் கிடந்தன; மேலும் பல நெசவாலைகள் மூடும் தறுவாயிலிருந்தன. பெருந் தொழில்களை முறைப்படுத்தி வளரச் செய்யும் பொறுப்பு முக்கியமாய் மத்திய அரசினைச் சேர்ந்ததாயிருப்பினும் இந்த ஆலைகளின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மத்திய அரசு திட்டவட்டமான செயற்குறிப்புகள் எதையும் அளிக்க முன்வரவில்லையென்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். "நொடித்துவிட்ட ஆலைகளின்" சிக்கலை ஆய்வதற்கு மாநில அரசு தானே நடவடிக்கை எடுத்துக்கொண்டு, டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றை அமைத்ததன் மூலம் உரிய காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவ்வல்லுநர் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு திட்டமொன்றினைத் தீட்டியது. இத்திட்டத்தின்படி மாநில அரசு அளிக்கும் உத்தரவாதங்களின் அடிப்படையில், வங்கிகள் வழங்கிய கூடுதல் நிதி வசதியைக் கொண்டு இந்த ஆலைகள் மீண்டும் செயல்பட முடிந்தது. இந்தத் திட்டத்தின்கீழ் மாநில அரசாங்கம் 18 ஆலைகளைப் பொறுத்தவரை உத்தரவாதங்கள் அளித்திருக்கிறது. இவ்வாறு உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டிராவிட்டால் இந்த ஆலைகள் மூடப்பட்டு ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பார்கள். தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை பல தொழிற்சாலைகளில் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே மனக் கசப்பு உண்டாவதற்குக் காரணமாய் இருந்தது. தொழிலாளர்களின் உரிய நலன்களைப் பாதுகாக்க வேண்டிய இடர்மிகுந்த இந்த நிலையில் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையே இணக்கம் ஏற்படுத்தி நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கான சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பொதுவாய் முயற்சி எடுத்து வந்திருக்கிறது. வேளாண்மை உற்பத்தி பெருகுவதன் மூலமும், வங்கி கடன் வசதிகள் தாராளமாய்க் கிட்டும் நிலை உருவாகுவதன் மூலமும், தொழில் துறையில் உற்பத்தி விரைவில் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம். தொழில் வளர்ச்சியின் வாயிலாகவே தொழில் தேர்ச்சி பெற்ற நம்

## தமிழக சட்டப் பேரவை

*செவ்வாய்க்கிழமை, 1968 பிப்ரவரி 13.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலாவதாக, வினாக்கள் எண் 11, 12, 13 தள்ளிவைக்கப்படுகின்றன. வினா எண் 14 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. கோமதிசங்கர தீட்சதர் அவர்களுடைய வினாவை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்பார்கள்.

*Failure of electricity in Mylapore area*

*14 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the reasons for the frequent failure of electricity in Mylapore area in Madras City; and

(*b*) the steps propsed to be taken in this matter?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) மைலாப்பூர் பகுதியில் பெருமளவில் மின்சாரத்தடை ஏதும் ஏற்பட்டதில்லை. மின் காப்பு எரி இழை உருகுதல், புதை மின் கம்பிகளில் உண்டாகும் கோளாறு, மேலே செல்லும் மின் தொடர்களிலும் மின்காப்புகளிலும் திடீரென தீப்பொறிகள் பறத்தல் முதலியவை போன்ற சிறுவகையான கோளாறுகளினால் ஒரு சில நேரங்களில் மட்டுமே தற்செயலாக மின்சாரம் தடைப்பட்டிருக்கிறது. இவ்வாறு மின்சாரம் தடைப்படும்போதெல்லாம் குறைபாடுகள் உடனடியாகக் கவனிக்கப்படுவதுடன், தாமதமின்றி மாற்று ஏற்பாட்டின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது. சென்னை மாநகரம் முழுவதற்குமே மின்சாரம் தடைப்படாமல் வழங்கப்படும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

**திரு. கே. விநாயகம் :** சென்னையிலே, இதுபோன்ற கோளாறுகள் பரவலாக, அடிக்கடி ஏற்படுகின்றன என்ற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? குறிப்பாக வடபழனியில் இவ்வளவு தான் கன்ஸம்ப்ஷன் இருக்கும் என்று நினைத்து டிரான்ஸ்பார்மரை அமைத்தார்கள். ஆனால் இப்பொழுது வளர்ந்துவரும் பகுதியாக இருக்கிற காரணத்தால் தொழிற்சாலைகள், வீடுகள் போன்றவற்றிற்கு அதிக மின்சாரம் தேவைப்படுகின்றது. இதன் காரணமாக

மக்களுக்குப் ( skilled manpower ) போதிய வேலை வாய்ப்பு வசதிகளைத் தோற்றுவிக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. இதற்கிணங்க, புதிய தொழில்களை நிறுவ முன்வருகிற அல்லது ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்துகிற தொழில் முனைவர்களுக்கு ( Entrepreneurs ) அரசு எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். பெரிய தொழில் திட்டங்களில் மத்திய அரசு செய்யும் முதலீடுகளின் நியாயமான பங்கினைப் பெறுவதற்குத் தனக்குள்ள உரிமையைக் குறித்து மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வரும். 1969—70-ல் நான்காம் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கலாமென்று தள்ளிப் போடப் பட்டுள்ளது. பொருளாதாரக் கூறிலும், தொழில் நுட்ப முறையிலும் ஏற்றதொரு திட்டமென்று உறுதி செய்யப்பட்ட சேலம் உருக்காலைத் திட்டம் புதிய நான்காம் திட்டத்தில் கட்டாயம் சேர்க்கப்படவேண்டுமென்று மாநில அரசாங்கம் கண்டிப்பாய் வற்புறுத்தும்.

19. இக்கூட்டத் தொடரில் சட்டம் இயற்றுகின்ற பணி அதிக அளவில் இல்லை. தற்போதைய சட்ட விதித்துறைகளுக்கிணங்க, சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும், நமது மாநிலத்திலுள்ள நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடத்துவதற்குச் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களே பின்பற்றப்படுகின்றன. 1966-ம் ஆண்டு வரையில் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் ஆண்டுதோறும் திருத்தப்பட்டு வந்தன. எனவே, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு அவ்வாறு திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் எப்போதுமே கிடைத்து வந்தன. சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களைப் புதுப்பிப்பது பற்றிய சட்டத்தில் செய்துள்ள திருத்தங்களுக்கிணங்க, சட்டப் பேரவைத் தொகுதிகள் அனைத்திலும் ஒரு பொதுத்தேர்தலுக்கு அல்லது இடைத் தேர்தலுக்கு முன்னதாக மட்டுமே, அல்லது தேர்தல் ஆணைக்குழு சிறப்பாக ஆணையிடுகிற பிறிதொரு சமயத்தில் மட்டுமே வாக்காளர் பட்டியல்கள் திருத்தப்பட வேண்டும். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்காக சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களைத் திருத்துவதற்கு இயலாதென்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே, உள்ளாட்சி மன்றங்களுக்கான வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கோ திருத்துவதற்கோ உள்ளாட்சி மன்றங்களை முறைப்படுத்துகிற சட்டங்களான—சென்னை மாநகராட்சி மன்றச் சட்டம், 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958—ஆகிய இச்சட்டங்களை ஏற்ற வகையில் திருத்துவதன் மூலம் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளுவது அவசியமாகிறது. இது குறித்த சட்ட வரைவு ( Bill ) ஒன்று சட்ட மன்ற அவைகளின் நடப்புக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படும்.

20. நமது மாநிலத்தில் கரும்பு கொள்முதல் செய்யப்படும் இறுதி நிலையில், அதன் மீது விதிக்கப்பட்டு வந்த ஒரு முனை வரியை **1968 ஜனவரி 25-ம் நாள் முதற்கொண்டு, 4 சத வீதத்திலிருந்து**



7 சத வீதமாக அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இதற்கென 1951-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பிற்குப் பதிலாகச் சட்ட வரைவு ஒன்று தற்போதைய கூட்டத் தொடரில் சட்ட மன்றப் பேரவையின்முன் வைக்கப்படும். இவை தவிர, இக் கூட்டத் தொடரில் நடப்பு ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளையும், 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் ஆய்வு செய்வதே முக்கிய அலுவலாயிருக்கும்.

21. இத்தருணத்தில், தமிழக மக்களுக்கு—இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும்—ஒளிமிக்க எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கி நிற்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். எல்லாத் துறைகளிலும் சீரான முன்னேற்றம் காண, அமைதியான சூழலும், கட்டுப்பாடான போக்கும், கடினமான உழைப்பும் இன்றியமையாதன என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. பெருமைக்குரிய இம்மாநில மக்களனைவரும்—எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எம்மொழியினராயினும்—நலமுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் முறையில், நல்லதொரு சூழ்நிலையைப் பேணி வளர்ப்பதே நமது முயற்சியாக இருத்தல் வேண்டும். இம் மாமன்றம், தனது விவாதங்களைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்துமெனப் பெற்ற புகழுக்கேற்ப, இவ்வமயமும் அமையுமென்ற நம்பிக்கையுடன் உங்கள் விவாதங்களைக் கூர்ந்து கவனிப்பேன். நாம் அனைவரும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், வள்ளுவப் பெருந்தகை இயம்பியுள்ளது போன்று, பசியும்பிணியும் பகையும் அற்ற ஒரு இலட்சிய மாநிலமாக நமது மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான் நம் அனைவருடைய குறிக்கோளாகும்.

" உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேரா தியல்வது நாடு ".

மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டு, வீடுகளில் விளக்கு எரியாமலும், வியாபாரம் நடக்கும் கடைகளில் 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் விளக்குகள் எரியாமலும் இருக்கின்ற காரணத்தால் அப்பகுதி மக்களுக்கு பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்ற புகார்கள் உங்களுக்கு வந்திருக்கின்றனவா? அந்தப் புகார்களின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே கூறியபடி நீண்டநேரமாக மின்சாரம் தடைபட்டு அதன் காரணமாக விளக்குகள் எரியாத நிலை ஏற்படவில்லை. சிலபல நேரங்களில் இவ்விதம் ஏற்படுகின்றது. அதற்கு உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் மின் கம்பிகள் பாதிக்கப்பட்டிருந்ததால் அவ்வாறான நிலைமை ஏற்பட்டது. மேலே சென்றுகொண்டிருந்த மின்கம்பிகளை இப்பொழுது பூமிக்கடியில் புதைத்து, மின்சாரம் வழங்குகின்ற ஏற்பாட்டினை சென்னை நகரம் முழுவதற்கும் பல்வேறு பகுதிகளில் மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டு, அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் முடிவுறுங்காலையில் இத்தகைய இடர்ப்பாடுகள் தோன்றுவதற்கு வழி இருக்காது என்று நினைக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளில் ஆபரேஷன் போன்ற சிகிச்சை நடைபெறும்போது இத்தகைய மின்சாரக் கோளாறினால் மின்சாரம் தடைப்படுகின்றது. அதன் காரணமாக சிகிச்சைபெறும் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா? ஆபரேஷன் போன்ற சிகிச்சை நடைபெறும்போது மின்சாரக் கோளாறு ஏற்படாமல் இருக்க, மாற்றுத் திட்டம் ஏதாவது ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளிலிருந்து அப்படிப்பட்ட விண்ணப்பங்கள், கோரிக்கைகள் எதுவும் வரவில்லை. மின்சாரக் கோளாறு காரணமாக பலவித சங்கடங்கள் ஏற்படும் என்பதை நான் உணருகிறேன். அப்படிப்பட்ட நிலையான சங்கடங்கள் ஏற்படுகின்றபொழுது, மின்சார வாரியத்தைக் கலந்தாலோசித்து, மாற்றுத் திட்டம் மூலமாக மின்சாரம் கிடைக்க வழி இருக்கிறதா என்பதுபற்றி அரசு ஆராயும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, இத்தகைய குறைபாடுகள் மயிலாப்பூர் ஏரியாவில் மட்டுமல்ல, தமிழகம் பூராவிலும் இருக்கின்றன. இதைப் போக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சென்னையிலே மின்சாரம் தடைப்படுவது மின்சாரக் கம்பிகள் அமைப்பது, ஃப்யூஸ் போவது போன்ற குறைபாடுகளினால் என்று





கருதுகிறேன். ஆனால் வெளியூரிலே நிலைமை அப்படி அல்ல. பல்புகள் எரியாத நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கின்றன. புதிய நல்ல பல்புகள் கிடைக்கவில்லை. பல்புகள் பழுதுபட்டிருக்கும் நிலைமையை மாற்றி புதிய பல்புகளை அமைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

**DR. H. V. HANDE :** Sir, whenever there is failure of electricity, the persons who are affected by this failure try to get in touch with the point wherefrom persons are sent for rectifying the defects or mistakes in the lines. There is great difficulty in their getting into touch with that point as there is only one telephone number and that number is very often engaged as a result of a large number of people making similar complaints to the same point. Considering this, will the Government give instructions to the concerned department to have two or three telephone numbers at the same point so that messages can be received quickly and also disposed of quickly and the persons who complain will have the satisfaction that they have been able to complain?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகின்ற கருத்து எந்த நிலையில் இருக்கிறதென்று தெரியவில்லை.

61429

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, மின்சாரம் தடைப்படுகின்ற கோளாறு தமிழகம் பூராவிலும் இருக்கிறதென்று சொல்லப்படுவது உண்மையாக இருக்குமானால், மிகவும் அவசியப்பட்ட தலைமை மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் வழங்க மாற்றுத் திட்டம் மேற்கொள்ளப்படுமா? மேலும், புயல் ஏற்படுகின்ற நேரங்களிலும், மழைக்காலங்களிலும் மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது. இதன்காரணமாக மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகளுக்குத் தக்க நேரத்தில் சிகிச்சை செய்ய முடியாமல் போகிறது. ஆகவே, மருத்துவமனைகளுக்கு ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் வழங்க அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறியபடி அடிக்கடி மின்சாரக் கோளாறு ஏற்படும் நிலைமை வரும்போது, மாற்றுத் திட்டம் மூலம் மின்சாரம் வழங்க அரசு வழிவகை செய்யும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமிழகம் எங்கும் பல்புகள் கிடைக்காத காரணத்தால், சரியான முறையில் சப்ளையாகாத காரணத்தால் அந்த நிலைமை ஏற்பட்டன என்று கூறினார். குறிப்பாக அருப்புக்கோட்டை நகராட்சியில் உள்ள 1,400 பல்புகளில் சுமார் 500-க்கும் மேற்பட்ட பல்புகள் எரியாமல் இருக்கின்றன. நான்கு மாதங்களாக அதை மாற்றித் திரும்பிப் போடாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதேமாதிரி மற்ற இடங்களிலும் இருக்கிறதென்று கேள்விப்படுகிறேன். இத்தகைய கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பே தமிழகத்தில் பல பகுதிகளில் பல்புகள் எரியாத குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன. அவர்களுக்குச் சப்ளை செய்வதில் சிறிது காலதாமதம் ஆனது என்று சொல்லப்பட்டது. அதற்காக புது டெண்டர்கள் கொடுக்கப்பட்டு, சப்ளையைத் துரிதப்படுத்த தக்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

*Compulsory Notification of Vacancies Act*

* 15 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of prosecutions launched under the Compulsory Notification of Vacancies Act during the last three years district-wise; and

(*b*) the steps taken to enforce the Act strictly?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) கடந்த மூன்றாண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் வழக்கு எதுவும் தொடரப்படவில்லை.

(இ) இச்சட்டத்தைக் கண்டிப்புடன் செயல்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(i) விவரக் கணக்குகள் தாமதமாக அனுப்பப்படும் தோர்வுகள் மத்திய, மாநில அரசாங்கங்களின் நாட்டத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. அதன்மேல், மாநில மத்திய அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட துறைகள்/அலுவலகங்கள் விவரக் கணக்குகளை உரிய காலத்தில் அனுப்ப வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்படுகின்றன. தேசிய வேலை வாய்ப்புப் பணி அதிகாரிகள் தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, உரிய காலத்தில் விவரக் கணக்குகளை அனுப்பும்படி அவர்களை நயந்து கேட்டுக்கொள்கின்றனர்.

(ii) வேலையளிக்கும் நிறுவனங்கள் அனுப்பும் விவரக் கணக்குகளில் கண்டுள்ள தகவல் மூலம் வேலைக் காலியிடங்களை அறிவிப்பதற்கென இச் சட்டத்தில் கண்டுள்ள விதித்துறை பின்பற்றப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படுகிறது.

**திரு. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, வேலை காலியிடங்களை, வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்ற சட்டத்தை அமல் செய்வதற்கு இந்த அரசு முன்வராததன் காரணம் என்ன? அப்படி காலியிடங்களை அறிவிக்காதவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் விடையிலே குறிப்பிட்டபடி அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. கூடுமானவரை பொது நிறுவனங்களும் காலியிடங்களை அறிவிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் பதிவுசெய்துகொண்டு இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் வேலை கிடைக்காத நிலைமை இருக்கும் காரணத்தைக் கண்காணிக்க தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தொழிலதிபர்களைக் கூட்டி, கூடுமானவரையில் தங்கள் தொழிற்சாலைகளில் வேலை காலியாகும்போது, வேலைத்தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலமாக ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.





**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களின் மூலமாக வேலைக்கு அனுப்பப்படுகிறவர்களைத்தான் வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கடினமான உத்தரவு பிறப்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது கண்காணிப்புடன் எச்சரிக்கை விடுகின்ற நிலைமையில் இருக்கிறோம். அவசியமானால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் அதிகாரிகளிடம் கூறப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Is the Government aware that, in the name of filling up of vacancies in Government offices, the officers who are interested in filling up the vacancies try to circumvent the Act by classifying the vacancies as temporary as, when temporary vacancies arise, it is not incumbent upon them to refer to the Employment Exchange to draw candidates from the list maintained by it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகின்ற நிலைமை எப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. அதைக் கண்டு ஆராய்ந்து அதைச் சீர்திருத்த என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்யலாம்.

**திரு. என். சங்கரய்யா :** கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இந்தச் சட்டத்தின் கீழ் யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படாததற்கு ஒரு காரணம் சட்டம் மீறப்படாது அமுல்படுத்தப்படுவதாக இருக்க வேண்டும். அல்லது சட்டத்தில் உள்ள பலவீனம் காரணமாக இருக்க வேண்டும். ஆகவே, வருங்காலத்திலாவது இந்தச் சட்டத்தை கண்டிப்பாக அமுல் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வழக்கு எடுக்கப்படவில்லை என்றாலும் அவ்வப்போது எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்றது. போதிய கண்காணிப்புடன் அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும் என்பதோடு தேவைப்பட்டால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் கோரப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்தக் காரியாலயங்களில் ஜில்லா கவுன்சிலைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களைப் போட்டு அவ்வப்போது இவ்விதக் குறைபாடு எழாது இருக்க மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. இதைப்போலவே மற்ற மாவட்டங்களிலும் ஜில்லா கவுன்சில் உறுப்பினர்கள் இரண்டு பேரை ஆடிட்டர்களைப் போல போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தில் உள்ள வேலைதேடித்தரும் அலுவலகம் தற்போது சிபார்சு செய்யும் அளவில் தான் இருக்கிறது என்பதை அரசு உணருமா? இதை மாற்றி அமைக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிபார்சு செய்யும் நிலைமையில்தான் இருக்கிறது. இப்போது எச்சரிக்கை செய்யும் படியான தன்மை இருக்கிறது. இதைத் தீவிரப்படுத்தவேண்டுமென்ற கருத்து சொல்லப்படுகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, ஒரு தடவை டெம்பரரியாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களைத் தொடர்ந்து வேலைக்கு வைத்துக்கொள்ளாமல் மீண்டும், மீண்டும் புதிது புதிதாக நெம்பர்களை வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் கேட்கும் நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகிற நிலைமை எப்படி இருக்கிறது என்ற விவரம் இல்லை. இதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து பதில் சொல்லப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** டெம்பரரியாக ஒருவர் ஐந்து வருடம் தொடர்ந்து வேலை செய்து வருகிறார் என்றால் அவரைக் காயமாக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக அப்படிக் கூறுவதற்கில்லை. ஒவ்வொரு தொழிலைப் பொறுத்தும், அதன் தன்மையைப் பொறுத்தும் தான் அதுபற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, is it really a fact that there is a great disparity between the number of vacancies available on the one side and the number of people seeking jobs on the other and that the number seeking jobs far outweigh the number of vacancies available? Has the Government received any authoritative information that the number of vacancies are infinitesmal compared to the number of job opportunities required by the unemployed persons and if so, what specific action the Government is going to take in the matter?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வேலை பார்க்க வேண்டுமென்று விரும்புகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகத் தான் இருக்கிறது. அதே சமயம் வேலை வாய்ப்புகள் குறைவாகத் தான் இருக்கின்றன. ஆகவே தான் ஆங்காங்கே தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் பற்பல தொழில்கள் நிறுவப்பட வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அப்படி நிறுவப்படுகிறபோதுதான் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். எனினும் இப்போது இருக்கிற வேலைகளுக்கு வேலையில்லாதவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற முறையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** ஒரு பக்கத்தில் காலி ஸ்தானங்களை அறிவித்துவிட்டு, அதே சமயம் தனியார் நிறுவனமாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, தங்களுக்கு வேண்டிய ஆட்களை முன்கூட்டியே பொறுக்கி எடுத்து வைத்துக் கொள்ளும் நிலைமை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இப்படி சம்பிரதாயத்திற்காக வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திற்கு அறிவித்துவிட்டு தங்களுக்கு வேண்டிய ஆட்களைப் பொறுக்கிக் கொள்வதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் சிபார்சு செய்கிறவர்களைத் தான் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது விதிமுறை. இதை மீறுகிற இடங்களுக்கு எச்சரிக்கை விடப்படுகிறது. நகராட்சி மன்றங்களில் கூட இந்த விதிமுறை மீறப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் வேலை தேடித் தரும் ஸ்தாபனம் சிபார்சு செய்கிறவர்களையே வேலைக்கு அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*Law course*

x 16 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether three-year course is to be introduced for Law Degree?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

THIRU T. MARTIN : Speaker Sir, may I request the Minister to state whether the subjects of Law will be taught in Tamil from the ensuing academic year?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி முயற்சி இன்னும் எடுக்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** நான்காண்டு பட்டப்படிப்பிற்குப் பிறகு சட்டக் கல்லூரியில் சேருகிற மாணவர்கள் இரண்டாண்டு சட்டக் கல்லூரியில் படித்து தொழிலில் புகுவதற்கு முன் ஏறக்குறைய 15 ஆண்டுகள் வருமானம் இல்லாமல் இருக்கவேண்டியிருக்கிறது. அப்படி இருக்க சட்டக் கல்லூரிப் படிப்பை 3 ஆண்டுகளாக ஆக்க

வேண்டிய அவசியம் என்ன ? இரண்டாண்டு படிப்பை மூன்றாண்டாக்கவேண்டுமென்று அகில இந்திய பார் கவுன்சில் சிபாரசு செய்திருக்கிறதா ? அதன் சிபார்சை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இரண்டாண்டு சட்டப்படிப்பை 3 ஆண்டு படிப்பாக ஆக்கவேண்டுமென்று அகில இந்திய பார் கவுன்சில் வற்புறுத்தி வந்தது. மற்ற மாநிலங்களில் எல்லாம் அந்த அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. 1967-68 முதலே இங்கும் அப்படிக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டும் நாம் இந்த 1968-69-இல் இருந்து கொண்டுவர இருக்கிறோம். 1967-68 எப்.எல். படிப்பில் சேர்ந்தவர்கள் 3 ஆண்டுகள் படிக்கவேண்டுமென்ற திட்டத்திற்கு இணங்கவே சென்ற ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமை என்னவென்றால் சட்ட அறிவைப் பெற்று வேறு வேலைகளுக்குப் போகக்கூடியவர்களுக்கு 2 ஆண்டு படிப்பு—அவர்களுக்கு பி.ஜி.எல். ( Bachelor of General Law என்ற டிகிரி பரிட்சை நடைபெறும். வழக்கறிஞர்களாகவே தொழில் நடத்த விரும்புகிறவர்கள் 3 ஆண்டுகள் படித்து பி.எல். டிகிரி வாங்கவேண்டும். மாலைக் கல்லூரியில் சேர்ந்து படிப்பவர்கள் 3 ஆண்டுகள் படித்து பி.ஜி.எல். டிகிரி வாங்கவேண்டும்; பி.எல். டிகிரி வாங்க நான்காண்டுகள் படிக்க வேண்டும். இந்த நிலையை இங்குள்ள பல்கலைக் கழகங்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, as it is, the course covers two years of study in the college itself and in the course there are some subjects which are not useful for a working lawyer, viz., Roman Law, etc. In the third year students are expected to undergo training in the Bar Council lectures which also are not useful for a practical lawyer. So, what exactly are the subjects that are going to be taught in the contemplated three-year course?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இது பற்றிய விவரங்கள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

**திரு. நா. கிருட்டிணன்** : இப்போதிருக்கிற இரண்டாண்டு சட்டப் படிப்பிற்குப் பிறகு அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில் ஆறு மாதப் பயிற்சிக்குப் பிறகு ஒரு தேர்வு எழுத வேண்டியிருக்கிறது. அதில் ஏழு பாடங்களை எழுத வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதை மாற்றி, மூன்று ஆண்டு படிப்பு வந்ததற்கு பிறகாவது அந்த பயிற்சி பெறுவதும், மறு தேர்வு எழுதுவதும் இல்லாமலிருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி** . அடுத்த ஆண்டிலிருந்து மூன்று ஆண்டு சட்டப்படிப்பு படிக்கும் திட்டத்தை அமல்படுத்துவதால் இந்த ஆண்டு எஃப். எல். படித்து தேர்வு எழுதுகிற மாணவர்களில் தேர்வு பெறாத மாணவர்கள் அடுத்த ஆண்டு மூன்று ஆண்டுகள்



படிப்பு படிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் இரண்டு ஆண்டுகள் படிக்கவேண்டியவர்கள் நான்கு ஆண்டு காலம், அதாவது ஒரு ஆண்டு காலம் அதிகமாக படிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அரசு என்ன செய்ய இருக்கிறது? இந்த ஆண்டு எஃப். எல். தேர்வு எழுதும் மாணவர்கள் இரண்டு ஆண்டு காலப் படிப்பு என்ற அளவில்தான் பாடத்திட்டங்களைப் படித்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் கூடுதல் ஒரு ஆண்டு படிக்காமல் இருப்பதற்காக வேண்டி இந்த ஆண்டு எஃப், எல். எழுதுகிற எல்லா மாணவர்களுமே தேர்வு பெறவேண்டுமென்ற கோரிக்கையை கேட்டு வருவதாக அறிகிறேன். அதுபற்றி அரசாங்கத்திடம் ஏதாவது வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அதன் பேரில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்க இருக்கிறது ?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : The Bar Council have granted permission to the University of Madras for the introduction of the said course from 1968–69 on condition that students, who have joined F.L. class during the year 1967–68, should undergo one more year of study in Law and pass the examination conducted by the appropriate State Bar Council in such subjects which are approved by it and also by the Bar Council of Indi ,என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிபந்தனையின் பேரில்தான் அடுத்த வருடத்திலிருந்து துவக்க அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். ஆகவே படிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. சா. மெய்யப்பன்** : சட்டப் படிப்பிற்குப் பிறகு ஐந்தாண்டுகள் ஜூனியரிடம் வேலை செய்யவேண்டுமென்றும், பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு பழகியவர்கள், வக்கீல்கள் கட்டாயமாக அவர்களை ஜூனியர்களாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இயற்ற முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

**திரு. பெ. மலைச்சாமி** : பலருக்கு சட்டம் படிக்கவேண்டுமென்று ஆசையிருந்தாலும் பொருளாதார சீர்குலைவு காரணமாக கல்லூரிக்குச் செல்ல இயலாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாகச் சட்டம் படித்துத் தேர்வு எழுத அரசு வழிவகுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்டவர்களுக்கு வசதி செய்யும் பொருட்டுத்தான் மாலை நேரக் கல்லூரி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதில் படித்து, அவர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு மணிநேரம் செலவழிப்பதால் இந்தச் சட்டப் படிப்பைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி** : ஐயா, இந்த மூன்று வருட சட்டப் படிப்பு படிக்க மற்ற மாநிலங்களில் அதற்கு வேண்டிய குறைந்த க்வாலிஃபிக்கேஷன்ஸ் என்ன? அதேமாதிரி நம் மாநிலத்தில் அதற்கு வேண்டிய குறைந்த க்வாலிஃபிக்கேஷன்ஸ் என்ன ?

[1968 பிப்ரவரி 13

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் பி.ஏ.டிக்ரி என்று வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் என்ன வைக்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அறிந்து கூறலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மூன்று ஆண்டு சட்டப் படிப்பிற்கும் இதே பாட திட்டங்கள்தானு? அல்லது பாட திட்டங்கள் மாற்றியமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அது பல்கலைக் கழகம் பார்த்து முடிவு செய்யவேண்டிய ஒன்று

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த வருடம் எஃப். எல். சேர்ந்துள்ள மாணவர்களுக்கு நிபந்தனையின் பேரில், அவர்கள் மூன்று ஆண்டு காலம் படிக்கவேண்டியிருக்கும் என்ற நிபந்தனையின்பேரில் அனுமதி அளித்தார்கள் என்றாலும் சென்ற ஆண்டு படித்தவர்களுக்கு இருந்தது போலவே இப்போதும் பாட திட்டங்கள் அமைந்திருப்பதால் அவர்களுக்கு கூடுதல் ஒரு வருடம் என்றால் அவர்களின் பெற்றோர்களுக்கு அதிகப்படியான செலவும், அந்த மாணவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் ஒரு வருடம் வீணுகும் நிலையும் ஏற்படுவதால் அவர்கள் படிப்பை இரண்டு ஆண்டுகளில் முடிக்கவேண்டுமென்ற அளவில் பல்கலைக்கழகத்திற்கு அரசு சிபார்சு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டக் கல்லூரி இரண்டு ஆண்டு படிப்பிற்கு என்னென்ன பாடதிட்டங்கள் இப்போது இருக்கின்றனவோ அதை, மூன்று ஆண்டுகளாக்கினால் அதற்கு என்னென்ன பாடதிட்டங்கள் வகுப்பது என்பதற்கு யூனிவர்சிட்டியில் ஒரு பிரிவு இருக்கிறது, லீகல் ஸ்டடீஸ்-க்காக சீப் ஜஸ்டிஸ் தலைமையில் அமைத்திருக்கிறார்கள். அவர்கள் இதைப் பற்றி பரிசீலிப்பார்கள். இப்போது மூன்று ஆண்டுகள் என்று வந்திருக்கிறது, ஏற்கனவே ஒரு வருடம் கண்டிப்பாக அப்ரன்டிஸ் தேர்வு எழுதவேண்டுமென்ற முடிவு இருந்தது. பார் கவுன்சில் சட்டத்தின்கீழ் அவர்கள் இதைப்பற்றி பரிசீலித்து மூன்று வருடங்கள் என்று ஆக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். அந்த முடிவுதான் இப்போது வந்திருக்கிறது. இதனால் பாடத்தில் மேலும் படிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. முதல் ஆண்டு என்ன படிக்கிறார்களோ அது இல்லாத அளவிற்கு அதை மாற்றிச் செய்து கொள்வதற்கு அப்போதைக்கப்போது பரிசிலனை செய்து முடிவு செய்யப்படும்,

**திரு. பெ. சீனிவாசன் :** மத்திய அரசிடம் ஏற்கனவே அதிகாரங்கள் ஏராளமாக குவிந்து கிடப்பதை நாம் வருத்தத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறோம், இந்நிலையில் இந்தச் சட்டப் படிப்பையும் கல்வித் துறையில் ஓரளவிற்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தில் இணைக்கக்கூடிய முயற்சியாக, மறைமுக



1968 பிப்ரவரி 13]

முயற்சியாக, மாநில அரசின் அதிகாரத்தை மத்திய அரசு பறிப்பதற்குச் செய்யப்படும் ஒரு சூழ்ச்சியாகவும் இது தென்படுகிறதே, இது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உறுப்பினர் அவர்கள் தவருகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். பார் கவுன்சில் சட்டம் பாராளுமன்றத்தில் போடப்பட்ட சட்டமாக இருந்தாலும், எல்லா வழக்கறிஞர்களையும் கட்டுப்படுத்தக் கூடிய சட்டம் அது. வழக்கு முறைகளை ஒழுங்குபடுத்துவது எப்படி என்று அந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆலோசனை சொல்கிறார்கள், அந்த ஆலோசனைகளை நாம் யூனிவர்சிட்டிக்குத் தெரிவிக்கிறோம். சீப் ஜஸ்டிஸ்-க்கும் அதில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ச்சி செய்து முடிவு செய்கிறார்கள். இது யாரையும் கட்டுப் படுத்த கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல.

THIRU A. CHIDAMBARANATHA NADAR: Sir, in such a contingency, what will be the reaction of the Government to have Bar Council examinations?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இதில் தனிக் கருத்து கிடையாது. பார் கவுன்சில் ஆக்ட் என்றிருக்கிறது. இந்தியா முழுவதற்கும் அது இருக்கிறது. பாராளுமன்றம் போட்ட சட்டம் அது. அதில் சில முறைகளை வகுக்கிறார்கள். அந்த முறைகளைப் பற்றி ஆராய்ந்து நம் யூனிவர்சிட்டி என்னென்ன பாடதிட்டங்கள் என்று சொல்கிறார்கள். பார் கவுன்சில் தேர்வு வேண்டுமா வேண்டாமா என்பது பல ஆண்டு காலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. நாம் முடிவு செய்ய முடியாது. பார் கவுன்சில் யோசனைகளைப் பல்கலைக்கழகம் ஆராய்ந்து அந்த முடிவை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** நம் மாநிலத்தில் உள்ளவர்களுக்கு, வட நாட்டில் உள்ள சில நிறுவனங்கள் படிக்காமலேயே டிக்ரி பட்டம் தருவது இந்த அரசுக்குத் தெரியுமா? இதை நம் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

(விடை இல்லை).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளதைப் போல் நம் பல்கலைக்கழகத்திலும் எல்.எல்.பி பட்டப் படிப்பு தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தப் படிப்பை வேறு வேறு பெயர்களால் சொல்கிறார்கள். அந்தப் பகுதிகளில் எல். எல். பி. என்று சொல்கிறார்கள். அவர்கள் அந்தந்த யூனிவர்சிட்டிகளில் எல்.எல்.பி. படிப்புக்கு என்னென்ன க்வாலிஃபிகேஷன்ஸ் வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் நம் பல்கலைக்கழகம் நிர்ணயிக்கிறது. அவைகளை நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முடியாது.

[1968 பிப்ரவரி 13

முற் பகல் 9-30 **திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து அதனுடன் இணைந்த ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்ற பரிந்துரை வந்திருக்கிறதா? அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஒரு சட்டக் கல்லூரியை வைக்க வேண்டுமென்ற கருத்து வந்திருக்கிறது. அதுபற்றிப் பரிசிலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுபற்றி முடிவு இனிமேல்தான் செய்யவேண்டும்.

**திரு. கே. விநயகம்** : இரண்டு ஆண்டுகள் எஃப்.எல். பி.எல்., படித்து ஒரு ஆண்டு பார் கவுன்சில் லெக்சர்ஸ் கேட்டு அதற்கு வேண்டிய தேர்வு எழுதிய பிறகுதான் பி.எல். பட்டம் பெற்று வழக்குரைஞராகப் பணியாற்ற முடியும். இப்போது மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டுமென்று மாற்றும்போது ஏற்கனவே இருக்கும் பாடங்களைத் தவிர, புதிதாக ஏதேனும் கற்பிக்கப் போகிறார்களா அல்லது இப்போது இருப்பதையே பரவலாகக் கற்பிக்கப் போகிறார்களா? அது பற்றி யூனிவர்சிடிக்கு அரசாங்கம் அதிகாரபூர்வமாக சிபாரிசு செய்யத் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இந்த இரண்டு ஆண்டு படித்து முடித்த பிறகு ஓராண்டு பார் கவுன்சில் தேர்வு எழுதுவதற்கு முன்னால் அப்ரென்டிஸ் பீரியட் என்று இருந்தது. அதிலே என்னென்ன பாடங்களில் பரிட்சை எழுத வேண்டுமென்று சில அடிப்படைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்ரென்டிஸ் கோர்ஸ்-பார் கவுன்சில் எக்ஸாமினேஷனில்கூட சில பாடங்களைத்தான் வைத்திருக்கிறார்கள். இந்த முறையை மாற்றி வேறு என்ன முறையில் மூன்று ஆண்டு பாடத்திட்டங்களை அமைக்க வேண்டுமென்பது அவர்களுடைய முடிவு. பாடத்திட்டங்களைப் பற்றிப் பல்கலைக் கழகங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. டி. மார்டின்** : தற்சமயம் வழக்குகள் குறைவாகவும், வழக்கறிஞர்கள் மிகுதியாகவும் இருப்பதனால், வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக இந்த மூன்று ஆண்டுப் பாடத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற கருத்து, பொதுமக்கள் மத்தியில் பரவலாக நிலவுகிறது. இதில் உண்மை உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : வழக்கறிஞர்கள் குறைவு அல்லது அதிகம் என்ற பிரச்சினை இதிலே இல்லை. சட்டப் படிப்பு படித்தவர்கள் அனைவரும் வழக்கறிஞர் தொழிலுக்காக மட்டும் படிப்பதில்லை. சட்ட மன்ற உறுப்பினராக வரலாம். வேறு [illegible]லே ஈடுபடலாம். வழக்கறிஞர்களாகத்தான் பணி[illegible] வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆகவே, இந்தக் காரணத்திற்காகத்தான் இந்த மூன்று ஆண்டு பாடத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லுவது தவறு. இந்த



1968 பிப்ரவரி 13]

மூன்று ஆண்டுத் திட்டத்தில் ஏற்கனவே இருந்ததைவிட அதிகமான பாடங்களைப் படிக்க வழி செய்யலாமா என்பதுபற்றி பார் கவுன்சில் யோசித்து வருகிறது.

### 2. நடைமுறைக் கேள்வி
### உரிய இருக்கையிலிருந்து உரையாற்றுதல்

**திரு. க. இராமமூர்த்தி** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அங்கத்தினர்கள் அவரவர் இடத்தில் இருந்து கொண்டுதான் கேள்விகள் கேட்கவேண்டும், பேச வேண்டுமென்று தாங்கள் தீர்ப்புச் சொல்லியிருக்கிறீர்கள். அமைச்சர்கள் இடம் மாறி உட்கார்ந்து பதில் சொல்லலாமா ?

(There was a pause.)

THIRU K VINAYAKAM : Does the Chair decline to give a ruling? A pertinent point has been raised. Let us know the view of the Chair. If the Chair is lenient to the Government, we do not mind. But we must know the reaction. When an ordinary member like me changed seat, you pulled me up and asked me to go to my seat. I obeyed implicitly. Are you going to adopt two standards of judgment or do you want to be lenient to the Government? This is an academic discussion. But let us know the view of the Chair so that it may go into the proceedings and be useful for future generations.

MR. SPEAKER : I will give the ruling.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் புதியவர்களாக இருக்கும்போது அவர்கள் இடத்திலிருந்து எழுந்து கையை உயர்த்திக் காட்டுகிற நேரத்தில் சபாநாயகர் அவர்கள் யார் யார் என்று பிரித்து வைத்திருக்கிற இடத்தை வைத்துக் கொண்டு பெயரைச் சொல்ல வேண்டும். அமைச்சர்களைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட குழப்பம் சபாநாயகருக்கு ஏற்படாது. ஆகவே, இந்த இடம் மாறுதலில் தவறுதல் இல்லையென்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : That is the view of the Minister for Public Works. He wants to escape from the nasty situation that has been created. That is an explanation and we cannot take it as an answer to the point. What is the ruling of the Chair? We want to know it so that it may be useful for the future members of this House.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்** : உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் பேசுகிறபோது அவர்களுடைய இடத்திலிருந்துதான் பேச வேண்டுமென்று 64-வது விதி கூறுகிறது.

### 1. வினாக்கள்-விடைகள்-தொடர்ச்சி

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருப்பவர்களுக்கு மட்டுந்தான் மாலை நேரக் கல்லூரிகள் இருக்கின்றன. ஏனைய மாவட்டங்களில் இருப்பவர்களும் இவ்வாறு மாலை நேர வகுப்புகளில் சட்டம் படிக்க அரசு வசதிகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சட்டக் கல்லூரி சென்னையிலேதான் இருக்கிறது. ஆகவே, மாலை நேரக் கல்லூரியை யும் சென்னையிலே வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

### *Tyre Re-treading Plant*

* 17 *Q*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to start a type re-treading factory under the State Transport Department ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் டயர்களைப் புதுப்பிக்கும் தொழிற் சாலைகள் இரண்டு உள்ளன. ஒன்று சென்னையில் உள்ள போக்கு வரத்து இல்லப் பணிமனையிலும், மற்றொன்று நாகர்கோயில் கிளையில் ராணித்தோட்டம் பட்டரையிலும் செயல்படுகின்றன. டயர்கள் புதுப்பிக்கும் தொழிற்சாலை எதையும் மேற்கொண்டு தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போதைக்கு இல்லை.

* 18 *Q*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state the total expenditure incurred by the State Transport Department towards re-treading charges for tyres in 1966–67?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரூ. 14,01,579.26.

DR. H. V. HANDE : Sir, has the Government estimated the amount required to start a full scale tyre re-treading factory so that we may know whether the amount spent on re-treading is more or less than that amount? If it is possible to have a factory, all the tyres of the State Transport vehicles could be re-treaded there and thus prevented the giving of re-treading work to private companies.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புதிய டயர்கள் தனியார் கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகின்றன. புதிய டயர்கள் இவ் வளவு மைல்களுக்குப் பயன்படுத்துவது என்ற அடிப்படைக் கணக்குக்குப் பிறகு அவைகள் புதுப்பிக்கப்படுகின்றன.

திரு. என். வரதராஜன் : டயர்களைப் புதுப்பிக்க தனியார் துறை கம்பெனிகளில் எந்தெந்த கம்பெனிகளோடு இந்த ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புதுப்பிக்கப்படுகின்ற டயர் களுக்குத் தனியார் துறையில் யாரிடத்திலும் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. புதிய டயர்கள்தான் தனியார் துறையிடம் வாங்கப்படுகின்றன.

### *நஞ்சை நிலங்கள் மூலம் வரி*

* 19 *வினா*—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் நஞ்சை நிலங்களின் மூலம் ஆண்டொன்றுக்கு வரும் நிலவரி, நீர்வரி, அபிவிருத்தி வரி முறையே எவ்வளவு ?





மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

| | ரூ. |
|---|---|
| (i) 1375-ம் பசலியில் நஞ்சை நிலங்களின் மூலம் மொத்த நிலவரி. | 2,45,56,341 |
| (ii) 1375-ம் பசலியில் நஞ்சை நிலங்களின் மூலம் மொத்த நீர்வரி. (Water Cess) | 31,71,289 |
| (iii) 1376-ம் பசலியில் அபிவிருத்தி வரி (Betterment Contribution) | 36,67,159 |

DR. H. V. HANDE : Has the Government examined the amount of money that is spent on the Revenue Department in the process of collecting this revenue?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want notice.

திரு. கே. விநாயகம் : ஸார் இந்த "ஃபஸ்லி" என்கிற வார்த்தை ஆங்கிலமா? அல்லது உருதா? இது வேறு மொழியாக இருப்பதால், அதற்குத் தமிழ் வார்த்தை கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த மொழியும் ஆகாதது அல்ல. உருது மொழியிலிருந்து மொகலாய ஆட்சி காலத்தில் வந்தது. மொகலாய ஆட்சி காலத்தில் தான் நில நிர்வாகத் துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த வழக்கு முறையில் வந்த வார்த்தைகள்தான் நடைமுறையில் அனுசரிக்கப்படுகின்றன.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், இந்த வருஷத்திலே இதை வசூல் செய்ய நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகியிருக்கிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சற்று முன்புதான் டாக்டர் ஹாண்டே அவர்கள் இதே கேள்வியைக் கேட்டார்கள். நிர்வாகச் செலவு அதிகம் என்பதல்ல. ரெவின்யூ துறையின் அடிப்படை வேலையாகக் கருதப்படுகிறது. தனிக்கேள்வி போட்டால், இதற்காக வசூல் செய்கிற செலவு எவ்வளவு என்று தனியாகச் சேகரித்துத் தரலாம்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கீழ் பவானி ஆயக்கட்டுப் பிரதேசத்தில் சென்ற இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாது இருந்ததாலும், விவசாயிகளுக்கு வருமானம் இல்லாததாலும், இந்த ஆண்டு வசூல் செய்யப்படுகிற அபிவிருத்தி வரியை ஒத்திப் போடவேண்டுமென்று கோரிக்கை வந்ததா? ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கோரிக்கை வந்திருக் கிறது. நடவடிக்கை குறித்து இந்த பட்ஜெட் தொடருக்குள் இந்த மன்றத்தில் அறிவிக்கப்படும்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் உள்ள சில கிராமங்களில் உள்ள நன்செய் நிலங்களுக்கு முந்திய அரசு ஒரு போகத்திற்குத் தண்ணீர் கொடுத்து, இரு போகத்திற்கான வரி போட்டிருப்பதை இந்த அரசு ரத்து செய்யுமா? அல்லது இரு போகத்திற்கும் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

(விடை இல்லை)

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் பரவலாக ஏரிக்குத் தண்ணீர் வராமலிருந்தும், மூன்று போகம் தண்ணீர் பாய்ந்ததாகக் கருதி நீர் வரி வசூலிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஊற்று நீர் போன்ற பிரதேசங்களில், நீர் பாயாமல் இருந்தாலும் அதிகாரிகள் நீர் வரி வசூலிப்பதை அரசாங்கம் கண்டிக்க முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக நீர் வரி இந்த அடிப்படையில்தான் விதிக்கப்படுகிறது. ஆனால் அவைகளால் உண்மையாகப் பலன் பெறாமலிருந்தால், அரசாங்கம் சில சமயங்களில் 'கோ ஸ்லோ' என்ற முறையில் மெதுவாக வசூல் செய்யும் முறை இருக்கிறது. அதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, இருக்கிற வரி கூட கிடைக்காமல் போகாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. விவசாயிகளுக்குச் சிரமங்கள் வருமானால், அவைகளை நிவர்த்தி செய்து பரிகாரம் செய்ய அவ்வப்போது அரசாங்கம் என்றென்றைக்கும் பரிவுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. க. மு. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, நன்செய்க்கு வரி என்ற பெயரால் விதிக்கப்படுகிறது. இது நாள் வரையில் நில வரி, நீர் வரி என்றும், ஒரு போக வரி, இரு போக வரி என்றும் இருக்கிறது. நன்செய் என்றால் ஒரே வரியாக, தண்ணீர் பாய்ந்தாலும், பாயாவிட்டாலும், இரு போகமாக இருந்தாலும், ஒரு போகமாக இருந்தாலும், ஒரே மாதிரியாக வரி விதிக்க இந்த அரசு முன் வருமா? அப்படியில்லாததால் விவசாயக் குடும்பங்கள் கர்ணம், கிராம முன்சீப்பிடத்தில் பண விஷயத்தில் தொந்தரவுக்குள்ளாவது இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த நில வரியில் அடிப்படை வரியை எடுத்து விடவேண்டுமென்று கடந்த வருஷத்தில் புன்செய் நில வரியானது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் ஏறக்குறைய ஐந்தில் நான்கு பங்கு நிலங்களுக்கு இப்போதே வரி கிடையாது. ஆனால் நீர்த் தீர்வை இருக்கிறது. இவைகளை மாறுதல் செய்யவேண்டுமென்று போர்டு மெம்பர் திரு. கெய்வார் கொடுத்த அறிக்கையில், ரேஷனலைஸேஷன் ஆஃப் வாட்டர் ஸெஸ் செய்யவேண்டுமென்று பரிந்துரை கொடுத்திருக்கிறார். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.



**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் உப வட்டத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக அந்தப் பகுதியில் நில வரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், கடன்கள் வசூலிப்பதைத் தள்ளிப்போட வேண்டுமென்றும் கோரிக்கைகள் வந்தனவா? அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக எல்லாத் தாலூகா, உப-தாலூகாக்களிலும் பருவ மழை தவறியது, விவசாயிகள் சிரமப்படுகிறார்கள் என்ற கோரிக்கை இருக்கிறது. எந்தெந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மிகுந்த உன்னிப்பாக அரசாங்கம் பரிசீலனை செய்யும். உண்மையாக அப்படி பாதிக்கப்பட்டிருந்தால், அதற்குப் பரிகாரம் தேட அரசாங்கம் முன் வராது இருக்காது. பாதிக்கப்படாத இடங்களில் வரியை வசூலிக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகள் இரு போக சாகுபடிக்குத் தங்களுடைய நிலங்களை மாற்றிக் கொண்டதற்காகத் தமிழக அரசு தண்ணீர் வரியை ரத்து செய்து நன்மை தந்தது. இதனால் எத்தனை விவசாயிகள் பலன் அடைந்தார்கள், எவ்வளவு சர்க்கார் வருமானத்தை விட்டுக் கொடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த அளவு என்று விவரமாகச் சொல்ல முடியாது. சுமார் 30 லட்சம் ரூபாயிலிருந்து 40 லட்சம் ரூபாய் வரையில், ரத்து செய்ததால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனுகூலம் அடைந்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், அரியலூர் தாலூகாவில் புதிதாக வெட்டப்பட்ட புள்ளம்பாடி கால்வாயில் மூன்று ஆண்டுகளாக முறையாகக் கடைசி வரையில் தண்ணீர் வரவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பயிர் விளைவிக்கும்போது, பயிர்கள் சாவியாகும் நிலைமை ஏற்பட்டு விட்டது. பெட்டர்மெண்ட் லெவி வசூலிப்பதை சென்ற ஆண்டு தள்ளிப் போட்டார்கள். இந்த ஆண்டும் அதைத் தள்ளிப் போட்டு எப்போது வருமானம் அதிகம் கிடைக்கிறதோ, அப்போது வசூலிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அபிவிருத்தி வரி என்பதே, பொதுவாக அபிவிருத்தியினால் ஏற்படுகிற அனுகூலங்களுக்காக, விவசாய மக்களும் பலன் பெறுகிறார்கள், அவர்களும் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று போடப்பட்டது. ஆனால் அந்த நலன்கள் சரியாக அமையாதபோது தள்ளுபடி செய்வதில் ஆட்சேபனை இல்லை. அதனால் வரவேண்டிய வருவாய் அரசாங்கத்திற்கு சேரக் கூடாது என்ற வகையில் சூழ்நிலை ஏற்படாது பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

[1968 பிப்ரவரி 13

**திருமதி சு. குப்பம்மாள் :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கம்மி விலை கொடுத்து நெல்லை வாங்குவதால் கட்டி வரவில்லை என்று இந்த வருஷம் கரும்பு, வாழை முதலிய பயிர்களை அதிகமாக வைத்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? மேற்கொண்டு விலை கொடுத்து வாங்குவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரம் இல்லை. ரொம்ப நல்ல விலை தான் கொடுக்கப்பட்டு வருகிறது என்று துணிந்து சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல மத்திய அரசு, அக்ரிகல்சுரல் ப்ரைஸஸ் கமிஷன் எல்லாம் ஏற்றுக்கொண்ட நல்ல விலை தான் அரசாங்கம் கொடுத்து வருகிறது. இதைப் பற்றிப் பலர் பாராட்டி எழுதி இருக்கிறார்கள்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, கடந்த வருஷ பெரு மழையால் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலங்களுக்கு வரி வஜா செய்ய வேண்டுமென்றும், குத்தகை பாக்கியை ரத்து செய்ய வேண்டுமென்றும் தஞ்சை மாவட்டத்திலிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி வஜா செய்து, குத்தகை பாக்கியை ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

(விடை இல்லை).

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, நமது அரசாங்கம் இந்த நாட்டிலேயுள்ள புஞ்சை நிலங்களுக்கு வரி தள்ளுபடி செய்துள்ளது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதால், எத்தனைபேர்கள் பலன் அடைந்திருக்கிறார்கள்? அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** என்னிடம் சரியான விவரங்கள் இல்லை. மொத்தம் 60 இலட்சம் பட்டாதார்கள் நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அதிலே ஏறக்குறைய 45 இலட்சம் பட்டாதார்கள் புஞ்சை நிலத்திற்கு வரி ரத்து செய்ததால் அனுகூலம் அடைந்திருக்கிறார்கள். இதனால் ஒரு கோடிக்கு மேல் அவர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், தஞ்சை ஜில்லாவில், சர்க்கார் வாக்குறுதியையும் இயற்கையையும் நம்பி அதிகமாகச் செலவு செய்து 2-ஆம் போகத்திற்கு ஏற்பாடு செய்த நேரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட தண்ணீர்த் தட்டுப்பாடு வந்த காரணத்தாலே விவசாயிகள் 50 விதாச்சாரம் பாதிக்கப்பட்டனர். மேலும் கடற்கரை ஓரங்களில் உள்ள நிலங்கள் அழிக்கப்பட்டன. இப்படி அழிக்கப்பட்டவை, பாதிக்கப்பட்டவை எவ்வளவு என்று பரிசிலனை செய்து, மாவட்டக் கலெக்டரிடம் புள்ளி விவரம் கேட்டு, அவர்களுக்கு நிலவரி வஜா செய்து கொடுத்தால், இங்குள்ள விவசாயிகள் குத்தகையைத் தள்ளிக் கொடுக்க முடியும். அவ்வாறு



1968 பிப்ரவரி 13]

செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா? இல்லையென்றால் தஞ்சை ஜில்லா கலெக்டரின் புள்ளி விவரத்தை அறிந்து வரிச்சலுகைக் காட்டவும் விவசாய வரியை ரத்து செய்யவும் அரசாங்கம் முன் வருமா? அதற்கான ஏற்பாட்டைத் துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ரத்து செய்ய வேண்டுமா என்பது இறுதியாக முடிவெடுக்க வேண்டிய விவகாரம். அங்கேயே தொடங்கி விடுகிறார்கள். மாண்புமிகு சீர்காழி உறுப்பினர் கூறியபடி ஏற்கனவே அரசாங்கம் கலெக்டரிடம் தொடர்புகொண்டு எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது, இதற்கு என்ன செய்யப்பட வேண்டுமென்பதைப் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. இன்னும் அதைத் துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததன் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள வாய்க்கால் நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் விளையாமல், நெல் வீடு திரும்பாமல் காய்ந்து விட்டது. அந்த நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வையை நீக்குவது மட்டுமல்லாமல், அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மிகுந்த பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கொஞ்சம் தண்ணீர்த் தீர்வை ரத்து செய்யவேண்டுமென்ற நிலைமையில் நம்முடைய தமிழ்நாட்டில் உணவு உற்பத்தித்துறையில் மிகப் பரபரப்பான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று வெளியிலே அபிப்பிராயம் உருவாகும் வகையில் இருக்கிறது. உண்மையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாளடிப்பயிர்களில் சில நிலைமைகள் இருக்கின்றன. அணைக்கட்டில் தண்ணீர் குறைவாக இருக்கும் காரணத்தால், அவர்கள் ஓரளவுக்குத்தான் பாதிக்கப்படுவார்கள் என்றாலும், நமது உணவு நிலையில் கண்டிப்பாக திருப்திகரமாக இருக்கும் என்று தோன்றுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, புஞ்சை நிலத்திற்கு நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், புஞ்சை நிலவரியை வசூலிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ரத்து செய்யப்பட்டது ஏன் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த ஜில்லாவிலிருந்தும் வசூல் செய்வது கிடையாது. அப்படி எங்காவது வசூல் செய்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு . . . .

[1968 பிப்ரவரி 13

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** எல்லாத் தாலுக்காக்களிலும், எல்லாக் கிராமங்களிலும் புஞ்சை நிலவரியை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புஞ்சை நிலத்திற்கு அடிப்படை வரி, கந்தாயம் என்னும் லேண்ட் டாக்ஸ் இருக்கிறது. அது இதில் வராது.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** அவைத் தலைவரவர்களே, வரிவசூல் செய்யும்பொழுது, கர்ணம், கிராம முன்சீப் கட்டாயமாக வசூல் செய்து விடுகிறார்கள். தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகின்ற சமயத்தில் அங்கே வந்து தண்ணீர் விடுவது இல்லை. பெரிய நிலச்சுவான்தார்கள் அவர்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சிக் கொள்கிறார்கள், ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஏழைகள் தண்ணீர்ப் பாய்ச்ச முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு, கர்ணம் முன்சீப் கட்டாயமாகத் தண்ணீர் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

(விடை இல்லை).

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், இந்தப் புஞ்சைத் தீர்வை வஜா என்பது, அடிப்படைத் தீர்வை 4 அணு, 6 அணு. சர்க்காருக்கு அதன் பேரிலேயுள்ள சர்சார்ஜ், ஸ்பெஷல் செஸ், எஜுகேஷன் செஸ், ரோடு செஸ் போன்ற பல சேர்ந்து ஆறணு தீர்வைக்கு 1½ ரூபாய் வரையிருக்கிறது. ஆகவே, இந்தப் புஞ்சை தீர்வை என்பது அடிப்படைத் தீர்வையை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்ற தீர்வைகளைப் பூராவும் வஜா செய்து ஒரு கணிசமான அளவு அதைச் செய்தால் விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு உதவி செய்த மாதிரியிருக்கும். ஆகவே அந்த முறையிலே சர்க்கார் பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் ரத்து செய்யப்பட்ட புஞ்சை வரியை மீண்டும் போட வேண்டுமென்று விரும்புகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** அதாவது, முன்னாலே ரிலீப் கொடுத்திருப்பது குறைந்த அளவிலே இருக்கிறது. அது பிரயோசனமாக இல்லை. ஆகவே, விவசாயிகளுக்கு, சிறிய பட்டாதார்களுக்கு ...ப்படைத் தீர்வையை பட்டாதார் இன்னார் என்று தெரிய வேண்டும் என்ற காரணத்திற்காக வைத்துக்கொண்டு சர்சார்ஜ், எஜுகேஷன் செஸ் ஆகியவைகளை ரத்து செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விவசாய வருமானம் பற்றிய பொறுக்குக் குழுவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இருந்தார்கள். தமிழகத்திலே விவசாயிகளுடைய அபிப்பிராயம், இந்தப் புஞ்சை நிலவரியை வைத்துக் கொள்ளலாம் என்று பலமாக இருந்தது. இவர்கள் சொல்லுகிற அபிப்பிராயத்திற்கு மாறானதாக இருந்தது.



1968 பிப்ரவரி 13]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இத்தனை தீர்வைகளைக் கொடுத்தும் அதற்குமேல் மின்சாரக் கட்டணம் என்கிற பேரிலே தனியாக ஒரு வரியை மாதாமாதம் கட்டுகிறார்களே. அது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? உணவு உற்பத்திக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய தன்மையில் அந்த வரியிலிருந்து விலக்களிக்க அல்லது ரிபேட் கொடுக்க உத்தேசம் உண்டா ?

(விடை இல்லை)

**திரு. சி. வீரமணி :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணை சேலம் மாவட்டத்திலே கட்டப்பட்டிருந்தாலும் கூட அந்த மேட்டூர் அணையினால் சேலம் மாவட்டத்திற்கு எந்த வித உபயோகமும் இல்லாமல் இருக்கிறது. இதனால் அந்த சேலம் மாவட்டம் முழுவதும் உள்ள புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்தத் திட்டம் இருக்கிறதா ? திருமணிமுத்தாறு திட்டம் என்ற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை அமல் நடத்த அரசாங்கம் உத்தேசிக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்குத் தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஒரு அணையைக்கட்டி சேலத்தைப்போல் தஞ்சை மாவட்டத்தைப் புஞ்சையாக ஆக்கிவிடலாம். (சிரிப்பு)

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** சபாநாயகரவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் விவசாயிகள் உணவு உற்பத்தியில் அதிகமாக ஈடுபட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குகிற நிலையில் தண்ட தீர்வையை 15 மடங்கு, 20 மடங்கு போட்டால் அவர்கள் ஊக்கம் குறைந்துவிடலாம். அதனால் தண்டத் தீர்வையைக் குறைந்த அளவில் போட அரசாங்கம் முன்வருமா ? மு.ப. 10-00

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தண்டத் தீர்வை என்பது தவறு செய்யப்பட்ட நேரத்தில் வசூலிக்கிற தண்டனைப் பணம். அந்த 15 மடங்கு என்பது எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கப்பட்ட பின் இருக்கிற தீர்வை. ஆனால் இதுவும் குறைக்கப்பட வேண்டுமென்று சொல்வது தவறு செய்பவர்களுக்கு மேலும் வாய்ப்பு அளிப்பதாக ஆகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 20, 21 ஒத்தி வைக்கப்படுகின்றன. அடுத்து, வினா எண் 22.

## பஞ்சாயத்து யூனியன் கடைநிலை ஊழியர்கள்

*22 கேள்வி.—**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்வேறு இலாக்காக்களிலிருந்து வந்து, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் கடைநிலை ஊழியர்களுள், தகுதிக்கால பருவம், காலம் முடிந்தவர்கள் நிரந்திரம் செய்யப்பட்டவர்கள், இவர்களுடைய பென்ஷன், இன்கிரிமென்ட் முதலானவைகள் பாதிக்கப்படுவதை அரசாங்கம் அறியுமா ?

[1968 பிப்ரவரி 13

(இ) ஆம் எனில், அப்படி பாதிக்கப்பட்டவர்களை மறுபடியும் பழைய இலாகாவிற்கே மாற்ற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ) ஒரு பணியாளரைத் தவிர வேறு கடைநிலைப்பணியாளர் எவரும் சம்பளத்திலும் ஓய்வு ஊதியத்திலும் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பணியாளரும் சொந்த துறைக்குத் திருப்பியனுப்பப்பட ஆவன செய்யப்படுகிறது. இதனால் பணியாளரின் சம்பளம், ஓய்வு ஊதியம் பாதிக்கப்படமாட்டாது. மேலும், சொந்த துறைக்குத் திரும்பிச் செல்ல விழையும் பணியாளரையும் திருப்பியனுப்ப ஆவன செய்யப்படுகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ஒரே ஒரு கடைநிலை ஊழியர் தான் பாதிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது யார் என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைப் பற்றிய விவரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

**[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து அவையுரிமைக் கேள்விகள் திரு. இளம்வழுதி அவர்களுடைய அவையுரிமைக் கேள்வியை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு பேரவை முன்னவர்—லீடர் ஆஃப் தி ஹவுஸ்— அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாளை வரை அது தள்ளி வைக்கப்படுகிறது.

## 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) கோவையில் நடந்த சம்பவங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை இன்றைக்குப் படித்துவிட்டு, அந்த தீர்மானம் எப்படி விதி 50 ( viii )-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இல்லை என்பதைப் பற்றி நாளைக்கு விளக்கிப் பேசுவார்கள். இன்றைக்கு தீர்மானத்தை அவைமுன் வைப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir.

I have given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, viz.,

'The occurrence in Coimbatore on 8th February 1968 at the Congress Meeting held in the V.O.C. Park when indiscriminate throwing of stones and brickbats happened and Hon. Sri



1968 பிப்ரவரி 13]

K. S. Ramaswamy, Union Deputy Home Minister received severe injuries, and the people were lathi-charged on the dais where Sri C. Subramaniam, President, Tamilnad Congress Committee, myself and other Congress leaders were standing'."

நாளைக்கு இதனுடைய விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளைக்கு எப்படி இது விதி 50 ( viii)-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் இல்லை என்பதை விளக்கிச் சொல்லுங்கள்.

அடுத்து திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### (ii) கோதையார் நீர் மின்விசைத் திட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

THIRU J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely,

'The fire which broke out on 4th February 1968 at the Kodayar Hydro Electric project area in the Kanyakumari district where about 400 houses were destroyed and 25,000 poor people were rendered houseless and incurred a loss of about Rs. 1,50,000 and the need to render urgent relief by this Government'."

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தின் காரணமாக அங்கே பலருக்கு இடையூறுகளும் இடைஞ்சல்களும் ஏற்படுகிற அளவுக்கு அங்கே சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தீ விபத்துக்கள் இப்படி ஏற்படுகிற பொழுது எந்த அடிப்படையிலே நாம் நிவாரணம் அளிப்பது என்பது பற்றி சட்டத் தடுப்புகளும் மற்ற முறைகளும் இருக்கின்றன. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எடுத்துக் கொள்ளுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முறைப்படி அந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இந்த சபையை ஒத்தி வைத்து அங்குள்ள நிலைமையை விவாதிப்பதன் மூலம் புதிய நிலைமைகள் ஏற்படப் போவது இல்லை. எனவே, இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் முறைப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிற காரணத்தால் இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் என்பதால் இதற்கு என்னுடைய அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து திரு. கோதண்டராமன் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.

[1968 பிப்ரவரி 13

* **திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள சட்டப் பேரவையின் நடைமுறை விதிகளில் 42-வது விதியின்படி—கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். "மத்திய சர்க்காரின் ரிசர்வ் போலீஸ் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொஞ்சம் இருங்கள். இதே காரியத்தைப் பற்றி கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்ததைப் படிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு விதியின்கீழ் வருகிறது. இது ஒற்றி வைப்புத் தீர்மானம் பற்றிய 42-வது விதியின் கீழ் வருகிறது.

## (iii) கோவையில் மத்திய அரசு ரிசர்வ் போலீஸ் படையை வைத்தல்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் ரிசர்வு போலீஸ் படையை திடீரென்று கோவையில் கொண்டுவந்து வைத்துள்ளதால் பொதுமக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ள விஷயத்தைப்பற்றி விவாதிக்க இச்சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கோரி, என்னுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியைத் தருவதற்கு நமது விதி 50 (x )-ன் கீழ் இது எப்படி தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியம் என்பதைப் பற்றி நீங்கள் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தமிழக அரசுக்குப் பொதுவான ஒரு விதி, அல்லது மத்திய அரசுக்குப் பொதுவான விதி ஒரு பக்கம் இருந்த போதிலும் இன்றையதினம் கோவையிலே மத்திய சர்க்காருடைய ரிசர்வ் போலீஸ் படையைக் கொண்டு வந்து வைத்திருப்பதனால் அங்கே உள்ள பொதுமக்கள் மத்தியிலேயும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலேயும் பொதுவாக இன்றைக்கு இருக்கிற ஒரு சூழ்நிலையிலேயும் இதைப் பற்றி விவாதிக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, ஹைதராபாத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய மாநாட்டிலே காங்கிரஸ் அல்லாத சர்க்காரை நடத்தவிடப் போவதில்லை, கவிழ்க்கப் போகின்றோம் என்கிற ஒரு தீர்மானத்தைப் போட்ட பிறகு இந்தப் படையை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு ஊனம் ஏற்படுத்துவதற்கு அல்லது இந்தக் சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு அல்லது வேறு பல சூழ்ச்சிகளைச் செய்யக் கூடிய தன்மையிலே இந்தப் படை கொண்டு வந்து வைக்கப்பட்டு இருக்கிறதா என்கிற அளவுக்கு மக்கள் மத்தியிலே ஒரு சலசலப்பு ஏற்படுவது சகஜமே, நியாயமானதே. இதைப் போன்ற நிலைமைகள் இருக்கிற நேரத்தில் இந்த சர்க்கார்



1968 பிப்ரவரி 13] [திரு. வி. கே. கோதண்டராமன்]

இந்த விஷயத்திலே என்ன செய்திருக்கிறார்கள்? இது விஷயமாக மத்திய சர்க்காரை ஏதாவது கேட்டிருக்கிறார்களா? அல்லது இந்த சர்க்கார் கேட்டதன் காரணமாக மத்திய சர்க்கார் அந்தப் படையைக் கொண்டு வந்து அங்கே வைத்திருக்கிறார்களா என்பதைப் பற்றிய பிரச்சினை மிக முக்கியமானதாக இருக்கிற காரணத்தால் இது சம்பந்தமாக அவசரமும் முக்கியமும் அவசியமும் ஆன பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இதைக் கொண்டு வந்திருக்கிறேன், என்பதை கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் சட்டப்படி நடைபெறுகின்ற முறையைச் சேர்ந்தது. கனம் உறுப்பினர் அவர்களே, இதைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாலே அதற்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைமைகளைப் பற்றிச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த அவையை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கத் தேவை இல்லை. இந்த அவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலின் மூலமாக தகவல்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கொடுத்துள்ள இது ஒற்றி வைப்புத் தீர்மானம் பற்றியது. அவர்கள் சொல்லியபடி இது முக்கியமானது என்பதை மறுக்க முடியாது. இது அவசியம் என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் 50 ( ) என்று ஒரு விதி இருக்கிறது. அதிலே 'தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக அது இருத்தல் வேண்டும்' என்று இருக்கிறது. 'தமிழக அரசின் பொறுப்பில் அடங்கி உள்ள காரியமாக' என்று இல்லை.. தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக அது இருக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசின் ரிசர்வ் போலீஸ் படை என்பது தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கி இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. எனவே, இதற்கு என்னுடைய அனுமதி மறுக்கப்படுகிறது.

## (iv) கீழ்பவானி பாசனப்பகுதியில் ஏற்பட்டுள்ள அவசரநிலை

**திரு. க. ர. நல்லசிவன் :** சட்டசபை விதி 42-ன் கீழ் வரும் இந்த ஒற்றிவைப்பு பிரேரணையை சபையில் அனுமதிக்கக் கோருகிறேன்.

கீழ் பவானிப் பாசனப் பகுதியில் மீன் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விடாததாலும், கொள்முதல் அளவைப் பாதியாகக் குறைக்காததாலும், கீழ் பவானிப் பாசனத்தை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்காததாலும், அபிவிருத்தி வரியை ஒத்திவைக்காததாலும் ஏற்பட்டுள்ள அவசர நிலைபற்றி விவாதிக்க இச்சபையை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைக் குறித்து இரண்டு மூன்று முறை அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களோடு கலந்து பேசப்பட்டிருக்கிறது. அண்மையில் இரண்டொரு நாட்களில் பகுதி சட்ட மன்ற உறுப்பினர்களும், இந்த ஒற்றிவைப்பு தீர்மானம் கொண்டுவந்த நண்பர் திரு. நல்லசிவன் அவர்களும் இதுபற்றி கலந்து பேசுவதாக இருக்கிறது. மின் அணையிலிருந்து தண்ணீரை திறந்து விடமுடியாத சூழ்நிலை எப்படி இருக்கிறது என்றும் அதனால் பவர்கட் வரக்கூடிய நிலை உருவாகும் என்றும் ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு கேள்விக்கு பதில் அளித்த நேரத்தில் அபிவிருத்தி வரி ஒத்தி வைக்கப்படுவதுபற்றி பிறகு பரிசீலிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, இப்பொழுது விளக்கப்பட்டுள்ள இந்த நிலைகளின் அடிப்படையில் இந்த ஒற்றி வைப்புப் பிரேரணை தேவையில்லை என்பதைத் தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனது தீர்ப்புக்கு விடுங்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இது வெறுமனே தண்ணீரைப்பற்றி கேட்பது மாத்திரமல்ல. நாங்கள் கோருவது, ஒன்று, இருக்கிற தண்ணீரை ஒரு மாதக் காலத்திற்காவது, பஞ்சத்தைத் தணிப்பதற்கு, குடி தண்ணீருக்காவது விடவேண்டும். இரண்டாவது, அபிவிருத்திவரியை ஒத்தி வைப்பது. சாதாரண விஷயத்திற்காக ஒத்திவைப்பு கோரவில்லை. இந்த வருஷம் பஞ்சமாக இருக்கிறது, ஆகவே, ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்கிறோம். மூன்றாவது நிரந்தர பாசனத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மற்றுமுள்ள விஷயங்களையும் பேசவேண்டும். நான்கு, ஐந்து முறை இந்த விஷயங்களைப்பற்றி பேசியிருந்தாலும் எந்தப் பிரச்சினையிலும் முடிவு காண்பது கிடையாது. ஆகவே தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எழுந்திருக்கும் பொழுது, தாங்கள் அருள் கூர்ந்து உட்கார்ந்துகொள்ளவேண்டும். நான் சொல்வதைக் கேட்கவேண்டும். விதி 50 ( viii )-ன் கீழ் இது எப்படி வருகிறது என்பதை மட்டும் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும். அதன்கீழ் என்னுடைய அனுமதியை ஏன் மறுக்கக் கூடாது என்பதற்கு, நீங்கள் காரணம் சொல்வதாயிருந்தால் சொல்லுங்கள். அதைவிட்டு, குறைகள், குற்றச்சாட்டுகள், அனுமானங்கள் இவைகளையெல்லாம் சொல்வதற்கு இது நேரம் ஆகாது. நான் அனுமதி கொடுத்தால்தான் நீங்கள் பிறகு பேசமுடியும். ஏன் இதற்கு என்னுடைய அனுமதியை விதி 50 ( viii )-ன் கீழ் மறுக்கக் கூடாது என்பதைப்பற்றி மட்டும், சுட்டிக்காட்ட உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இந்த ராஜ்யத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட ஒரு சமாசாரம் இது. இந்த ராஜ்ய அரசாங்கம் மிகச் சுலபமாக ஒரு முடிவு எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம் இது.





ஆகவே, இதைத் தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கோருகிறேன். மிகச் சாதாரணமாக முடிவு எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம் இது. ஐந்து, ஆறு தடவைகள் இதைப்பற்றி திருப்பி திருப்பி கலந்து பேசியாகிவிட்டது. வேறு வழியே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரும்பவும் பேசுவதற்கு தங்களை அனுமதிக்கிறேன். விதி 50( viii )-ன் கீழ், சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருத்தல் கூடாது. சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது என்று தாங்களே சொல்கிறீர்கள். எவ்வளவு அவசரமாக இருந்தாலும், எவ்வளவு முக்கியமாக இருந்தாலும், சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களுக்காக ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரமுடியாது என்பது தான் 50( viii ) விதி.

**திரு. க. ர. நல்லசிவன் :** அரசாங்கமானது பாரபட்சம் காட்டுகிற முறையில் நடந்துகொள்கிறது. தண்ணீரில்லாத பிரச்னை வருகிறபொழுது, பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தினால், மின்சாரத்திற்கு பாதகம் இல்லை, சமாளித்துக்கொள்ள முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மேல் பவானிப் பகுதிக்கு தண்ணீர் வேண்டும் என்று கூறும்பொழுது, மின் அணையிலிருந்து தண்ணீர் விட்டால் மின்சாரத்திற்கு தொல்லை ஏற்படும் என்று கூறப்படுகிறது, இதை பாரபட்சம் என்று தான் நான் உணர்கிறேன். இது அநீதியான நடவடிக்கை. அது மாத்திரம் அல்ல. அபிவிருத்தி வரியை ஒத்திவைக்கவேண்டும் என்றும் கோருகிறோம். அப்படி ஒத்திவைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒன்றிரண்டு கோரிக்கைகளையாவது ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நல்லசிவன் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய ஒற்றிவைப்புத் தீர்மானம் பற்றி, இது அவசர, முக்கியத்துவம் என்ற விதிகளின் கீழ் கொண்டுவரக்கூடியது அல்ல, சாதாரணமான விஷயம் என்று அவர்களே கூட சொல்லியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்னை சம்பந்தமாக உறுப்பினர் திரு. நல்லசிவன் மட்டுமல்லாமல், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களும், பவானிப் பிரதேசத்திலுள்ள எல்லோருடைய கவனமும் இதில் ஈடுபட்டிருக்கிறது என்று சொன்னார்கள், இந்தச் சபையில் சொன்னார்கள். நான் கொஞ்ச நேரத்திற்கு முன்பாக, அபிவிருத்தி வரியை ஒத்தி வைப்பது சம்பந்தமாக, கோவைக் கலெக்டரைக் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரும் நிலை இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதே மாதிரியாக, நீர் வழங்குவது சம்பந்தமாக பொதுப்பணி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 15-ம் தேதியன்று எல்லா எம்.எல்.ஏ.-க்களும் சந்தித்துப் பேச சம்மதித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது கனம் உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற உரிமையை வைத்துக்கொண்டு இந்தச்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 பிப்ரவரி 13

சபையை அதற்காக ஒத்திவைக்கவேண்டும், தன்னுடைய முக்கியத்துவத்துக்காக இதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கருதினால், அவர்களுடைய உரிமையை தாராளமாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்தப் பிரச்னை இந்த விதிமுறையின்கீழ் கொண்டு வருவதற்கு உகந்தது அல்ல என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. இந்தப் பிரச்னை சம்பந்தமாக கனம் உறுப்பினர் மட்டும் அக்கறை காட்டுகிறார் என்பது அல்ல. அரசும், மற்ற எல்லோரும், அங்கு இருக்கிற பிரதிநிதிகளும், விவசாய மக்களும் அக்கறை காட்டுகிறார்கள், மிகவும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப் பிரச்னை அரசின் கவனத்தில் இருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தங்கள் மூலம் தெரிவித்துக்கொண்டு, இது ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு உகந்தது அல்ல என்று தாங்கள் ஆணையிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் இது குறித்து 4, 5 முறைகள் கூடிப் பேசியும், அமைச்சர்கள் மத்தியிலே இதுபற்றி கலந்து ஆலோசித்தும், எந்த முடிவுக்கும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் இது குறித்து கலந்து பேசியதை ஒத்துக்கொண்டதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்களை அழைத்துப் பேசவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு முதலிலே உருவாக்கப்பட்டது. ஆகவே, பேசினோம் என்று ஒத்துக்கொண்டதற்காக நன்றி. இப்பொழுது கடைசியாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட, கோவை மாவட்டத்தில் அந்தப் பகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், முதல் அமைச்சர் அவர்களும், நானும், மற்றும் பொறியாளர்களையும் வைத்துக்கொண்டு, பொதுப் பணித் துறை செயலாளர், ஏனைய அதிகாரிகளோடு அமர்ந்து, நீண்ட நேரம் பேசி, இருக்கிற சங்கடங்களெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அவர்களுடைய ஒற்றிவைப்புப் பிரேரணையில் நான்கு குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. நான்கு தந்துவிட்டு, என் ஒன்றிரண்டையாவது நிறைவேற்றக்கூடாது என்று அவர்கள் கேட்கிறார்கள். கீழ் பவானி பாசனப் பகுதிக்கு மின் அணையிலிருந்து தண்ணீரை திறந்துவிடலாம் என்பது ஒரு கோரிக்கை. இதில் உள்ள சங்கடங்கள் குறித்து, மின்சார இலாகாத் தலைவர் அவர்களும் அன்றையதினம் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு, அவரே விளக்கம் கூறியிருக்கிறார். மின் அணையிலிருந்து தண்ணீரை கீழ்பவானி பாசனத்திற்கு திறந்துவிட்டால் மறுபடியும் நான்கு மாத காலத்திற்கு பவர் கட் தவிர்க்கமுடியாத அளவுக்கு ஆகிவிடும். லோயர் பவானி பகுதிக்காக, தமிழ் நாடு பூராவும் மக்கள்வேதனை அனுபவிக்க நேரிடும் என்று கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.



1968 பிப்ரவரி 13] [திரு. மு. கருணாநிதி]

அடுத்தபடியாக, கொள்முதல் அளவை பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது கோரிக்கை. ஏற்கனவே கொள்முதல் அளவு மிகவும் குறைவானது தான். ஆகவே, அதிலும் பாதியாகக் குறைக்கவேண்டும் என்று கூறுவதில் எந்தவிதமான பொருளும் இல்லை என்று விளக்கப்பட்டிருக்கிறது. கீழ்பவானி பாசனத்திற்கு நிரந்தரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் ஒரு கோரிக்கை. இரண்டு, மூன்று முறை இந்த மன்றத்திலே திரு. நல்லசிவன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு ஏற்ப, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் உள்பட, என்னுடைய அறையிலே சந்தித்துப் பேசி, அதற்கான ஒரு முறை திட்டத்தை வகுத்துக்கொண்டு, அதற்கேற்ப பாசனத்திற்கான நிலை ஆராயப்பட்டு, அந்த வழிவகைகளிலே நீர் தரப்பட்டு வருகிறது.

அபிவிருத்தி வரியை ஒத்திவைக்கவேண்டும் என்பது குறித்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள். 15-ம் தேதி மறுபடியும் கலந்து பேசுவதாக ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அந்தப் பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வதாக இருக்கிறார்கள். ஆகவே, இதற்கேற்ற முடிவு ஒன்று காணலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதால், பொழுது ஒற்றிவைப்பு தீர்மானம் தேவையில்லை என்று நான் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவை நடைமுறை விதிகளுக்குள் அடங்கவில்லையே என்று நான் கவலைப்படுகிறேன். ஒரு 10 நிமிடங்கள் பொறுத்திருந்தால், அவர்கள் இன்றைக்கு பேசியது எல்லாவற்றையும் பேசியிருக்க முடியும். ஆளுநரின் பேருரைமீது விவாதம் நடக்க இருக்கிறது. அப்பொழுது அவர்கள் கோரிக்கைகள், குற்றச்சாட்டுகள் எல்லாவற்றையும் சொல்லலாம். ஆனால் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறபொழுது விதிகளில் உள்ள கட்டுப்பாடுகளை படித்து, அல்லது தெரிந்து, அந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, அந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இப்பொழுது அதற்கு நேரம் இல்லை. இப்பொழுது சொன்னது எல்லாவற்றையும் பேச முடியும், பொது விவாதத்தின் போது, வேண்டுமென்றால் முதலிலே உறுப்பினர் அவர்களைக் கூப்பிடுகிறேன். ஆனால், ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மூலம் குத்தல்கள் கூற்றங், குற்றச்சாட்டுகள், அவதூறுகள் எதுவும் எடுத்துச் சொல்லக் கூடாது. அதிலே பாரபட்சம் என்றும் பேசக்கூடாது. விதி 68, உள் விதி (3), துணைவிதி (2)-லே இதையெல்லாம் சொல்லுவதற்கு இது நேரம் இல்லை என்று இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எல்லோருக்குமே சொல்லுகிறேன். எதையும் உரிய நேரத்தில் பேசுங்கள். இப்பொழுது உறுப்பினர் திரு. நல்லசிவன் கொடுத்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானத்தை விதி 50(viii)-ன் படி அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்

என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு ஐந்து நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள், தங்கள் கருத்துக்களைக் குறிப்பிட உடனடியாக வாய்ப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### அவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு அறிவிப்பு. இந்தக் கூட்டத் தொடரில் நடக்கவிருக்கும் அலுவல்கள் பற்றி, அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள் நிகழ்ச்சிநிரலாக அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே கண்டபடி, இப்பேரவையின் கூட்டம் இம் மாதம் 20-ம் நாள் வரையில் நடைபெறும். அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ஒவ்வொருவருக்கும் பனிரெண்டு நிமிடம் என்கிற காலவரைக்குள் தங்கள் தங்கள் உரைகளை ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## 5. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின்மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இப்பொழுது உரையாற்றுவார்கள். தாங்கள் பேச வேண்டியவற்றை பேசுங்கள். இதுதான் சமயம்.

**திரு. க. ர. நல்லசிவன்:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்து, என்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

நீர்பாசன விவகாரத்திலே, இந்த அரசாங்கமானது இன்னும் சற்று கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ராச்சியத்தைப் பொருத்தவரையில், பெரிய நீர்பாசன வசதியை அபிவிருத்தி செய்ய எதுவும் கிடையாது. பெரிய அளவில் செய்ய எதுவும் இல்லை என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால் நம்முடைய பக்கத்திலே இருக்கக்கூடிய, கேரளா, ஆந்திரா, மைசூர் போன்ற அண்டை மாநிலங்களோடு பேசுவதுதான் இனிமேல் நாம் செய்யக்கூடிய திட்டங்களுக்கு பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும். அல்லது இந்திய சர்க்காரோடு பேசி, வடக்கே இருக்கும் தண்ணீரை இங்கே கொண்டுவர ஏதாவது செய்ய முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படி ஏதாவது செய்தால்தான் நம்முடைய நீர்பாசனப் பசியை தீர்க்க முடியும். இல்லை என்றால் இந்தப் பசியை நாம் தீர்க்கவே முடியாது. ஆகவே, நாங்கள் சொல்லும் வழி இப்பொழுது இருக்கக்கூடிய கீழ் பவானி பாசனத்தில் செய்யக்கூடிய திருத்தங்கள். ஏதோ நான் இருக்கக் கூடிய பகுதி என்பதற்காக அதில்





அதிகம் அக்கறை காட்டி, அதைச் சொல்ல வேண்டும் என்கிற நோக்கத்தோடு சொல்லவில்லை. அது ஒரு புதிய பாசனத் திட்டம் தண்ணீரைக் குறைவாக உபயோகப்படுத்தி, நெல்லும், கரும்பும், வாழையும் பயிர் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இப்பொழுது காவிரியைப் பொருத்தவரையில், அங்கே இருக்கும் பயிர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று, குடிதண்ணீரைக் கூடக் குறைத்துக்கொண்டு, சேலத்திற்கும், மேட்டூர் தொழிற்சாலைகளுக்கும் கூட தண்ணீர் குறைக்கப்படும் என்று நோட்டீஸ் கொடுத்து விட்டு, அங்கே பயிர்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில், கீழ் பவானியில் 30,000 அல்லது 40,000 ஏக்கரா கரும்பு, நெல் முதலிய பயிர்கள் சம்மந்தப்பட்டவரையில் அவற்றைக் காப்பாற்ற, அந்த வாய்க்காலிலே தண்ணீர் வந்தால் கிட்டத்தட்ட 10,000 கிணறுகளில் தண்ணீர் வரும் என்று இருக்கும் போது, அங்கே தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அதே நேரத்திலே, அங்கே இருக்கும் சூப்பிரெண்டிங் எஞ்ஜினியர் கடந்த மாதம் 11-ம் தேதி, பல கால்வாய்களுக்கும், காவிரிக்கும் விட்ட பிறகு, சுமார் 60 நாட்களுக்கு, 10 நாளுக்கு ஒரு தடவை விதம் தண்ணீர் கொடுக்க முடியும் என்று, விவசாயிகள், நான், பஞ்சாயத்துத் தலைவர்கள் இவர்கள் இருக்கும் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே, இங்கே அமைச்சர்கள் கொடுக்க முடியாது என்று சொல்லும்போது, சந்தேகம் வருகிறது. மக்களுக்கு ஏற்படும் சந்தேகத்தைத் தெளிவாக்க முடியவில்லை. சூப்ரெண்டிங் எஞ்ஜினியர் இரண்டு மாதம் தண்ணீர் கொடுக்கலாம் என்கிறார்.

நான் கொடுத்திருப்பது நான்கு கோரிக்கைகள். 100 பேர்களைத் கொண்ட தொழில் சங்கம் என்றால், அவர்கள் கொடுக்கும் கோரிக்கைகளில் சிலவற்றை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். மாண்புமிகு மராமத்து அமைச்சர், பஸ் தொழிலாளிகள் 15 கோரிக்கைகளைக் கொடுத்தால், அந்தவிடத்திலேயே 10 கோரிக்கைகளைத் தீர்த்து விட்டிருக்கிறார்கள். இங்கே ஐந்து லட்சம் விவசாயிகள் சம்மந்தப்பட்ட ஐந்து கோரிக்கைகளை நான் வைத்திருக்கிறேன். அதிலே ஒரு கோரிக்கையையாவது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லும்போது, மிக்கச் சங்கடமாக இருக்கிறது. முன்பு இருந்த சர்க்கார்தான் மோசம் என்றிருந்தார்கள். இப்பொழுது மாறுதல் வாராதா என்று பார்க்கிறார்கள். கீழ்பவானி சம்பந்தப்பட்டவரை ஒரு மாற்றம் வரும். மாற்றத்தை உண்டு பண்ண முடியும் என்று சொல்லி, தேர்தலிலே வந்த ஆட்களில் நான் ஒருவன். புதிய ஆட்சி பெற்றிருக்கிறோம், அடிப்படை மாறுதல் வரும் என்று மக்களிடம் இருக்கும் ஆசை, வெறி, வேகம், தணிக்க முடியாததாக இருக்கிறது. கோரிக்கைகளில் ஒன்று கூட கவனிக்காவிட்டால், என்ன செய்வது. அது ஐந்து லட்சம் மக்களைக் கொண்ட பகுதி, எட்டுத் தொகுதிகள் சம்மந்தப்பட்ட விவகாரம்.

ஒன்று சொல்கிறேன். ஐந்து கோரிக்கைகள் வைத்திருக்கிறேன். இவற்றில் ஏதாவது அநியாயம் என்று யாராவது சொல்ல முடியும் என்றால் சொல்லட்டும். யாரையாவது இது தவறு என்று சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம். வேறு இடத்தில் வேண்டுமென்றால் சொல்லலாம். ஆனால் அந்த விவசாய மக்களிடத்தில் சொல்ல முடியாது. ஆகவே, மிக வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து 4, 5 கோரிக்கைகளில், இரண்டு கோரிக்கைகளையாவது ஏற்றுக் கொள்ளுங்கள். ஒன்று சொல்கிறேன். அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அதிகாரிகள், மற்றும் அமைச்சர்கள், அந்தப் பகுதி மக்கள், எல்லோரும்கூடி ஒருவாறு பேசித் தீர்த்துக் கொள்ளலாம். இன்னும் இரண்டு மாதம், மூன்று மாதம் அளவில் நிச்சயமாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற வாக்குறுதியையாவது கொடுத்தால், நலமாக இருக்கும். ஒன்றுமே பதில் இல்லாமல் இருப்பது மிக்க வேதனையாக இருக கிறது. ஆகவே, இங்கே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இருக்கிறார்கள். வருகின்ற 15-ம் தேதி ஒரு நல்ல முடிவை எடுத்தால், அந்தப் பகுதிக்கும், மற்ற எல்லோருக்கும் நலமாக இருக்கும் என்று. சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தாங்கள் 15-ம் தேதி வரமாட்டீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மற்ற என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு நல்ல முடிவை எடுத்தால்தான், அங்கே இருக்கும் பரபரப்பைத் தீர்க்க முடியும். திரு. பாலசுப்பிரமணியம் இருக்கிறார்கள். இன்னும் அந்தப் பகுதி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வைத்துக் கொண்டு ஒரு நல்ல முடிவைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நானும் வர முயற்சி செய்கிறேன் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

*** திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும்முகத்தான் என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் மத்திய அரசு அதிகாரங்களைத் தன்னிடம் குவித்துவைத்துக் கொண்டிருக்கிறது, என்பதை நாட்டிலே உள்ள பல அறிஞர்களும் அரசியல்வாதிகளும் எடுத்துக் கூறி வருகிறார்கள். அந்த நிலையை ஆளுநர் தம்முடைய உரையில், சிற்சில இடங்களில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அவ்வகையில் பகிர்ந்து அளிக்கப்பட்டால்தான் மாநிலங்கள் தங்களுடைய திட்டங்களை வகுத்துக்கொண்டு, மாநிலங்களில் மக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பணிகளை ஆற்றமுடியும் என்றும் பல அறிஞர்களும் எடுத்துக் காட்டி வருகிறார்கள். இன்றைக்கு மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் நிலையில்தான் இருக்கிறது. ராஜாஜி போன்றவர்கள்கூட, மாநிலங்கள் 'கிராண்ட் ரிசீவிங் கார்ப்பொரேஷன்கள்' என்கின்ற நிலையில்





தான் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அந்த நிலை மாற வேண்டும். அதிகாரங்கள் மத்திய அரசிலே குவிக்கப்பட்டிருப்பதால், மாநில மக்களின் பிரச்சினைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

மொழிப் பிரச்னையில்கூட, மத்திய சர்க்கார் தன் அதிகாரத்தை உபயோகித்து, இந்த மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று கூறுகின்ற நிலைமை இருக்கிறது. மத்திய 10-30 மு. ப. அரசிலே இருக்கும் அதிகாரங்கள் பெரும்பாலும் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு, பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு ஆகிய இந்த இரண்டு மட்டுமே மத்திய அரசின் பொறுப்பிலே இருக்குமானால், நிச்சயமாக இந்த நாட்டில் 14 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்க முடியும். இந்த இரு துறைகளைப் பொறுத்த வரையில் மட்டும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே கடிதப் போக்குவரத்துக்கள், உத்தரவுகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு, பாக்கியிருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால், பெரும்பாலான கடிதப் போக்குவரத்துக்கள் குறையும். இப்படிக் குறைந்த அளவுக்குக் கடிதப் போக்குவரத்துகள் இருக்கும் நிலையில் 14 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக வைத்துக்கொள்ளுவது ஏற்புடையதாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களை நாம் தமிழிலேயே அனுப்ப வேண்டும். வெளிநாட்டிலிருக்கும் தூதரகங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை வேலைக்கு அமர்த்தச் செய்ய வேண்டும். இதைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

தமிழக மாநில அரசுக்கு மத்திய அரசு திட்டங்களுக்கு வேண்டிய தொகையைக் கொடுக்கும்போதெல்லாம், கேட்கும் அளவிற்குக் கொடுப்பதில்லை. அவர்கள் ஒதுக்குகின்ற அளவைத் தான் பெற்றுக்கொண்டு மாநிலங்கள் திட்டங்களைத் தீட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

மாநிலங்களைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாகத் தென்னகத்தை எடுத்துக்கொண்டால், தென்னகத்திலிருந்து மத்திய அரசுக்கு நிறைய வருவாய் வருகிறது. மிகுதியாக வருவாய் கொடுக்கின்ற துறைகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் மாநிலங்கள் தங்களுடைய வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டும்போதெல்லாம், அதற்கு வேண்டிய தொகையை மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இதற்கும் மத்தியிலே குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே நீண்ட நெடிய கடல்கள் இருக்கின்றன. அவற்றிலே கப்பல் வாணிபம் மூலம் வருகின்ற வருமானமும், நீண்ட நெடிய மலைத்தொடர்களில் விளைகின்ற தேயிலை, காப்பி, ஏலம் போன்ற அன்னியச் செலாவணிப் பொருள்கள் மூலம்

வருமானமும் இருக்கின்றன. அவற்றைக்கொண்டு இந்த நாட்டிலே பெருந்தொழிற்சாலைகளை ஏற்படுத்தமுடியும். குறிப்பாக, சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும். உலகில் பல பாகங்களுக்குச் செல்லுகிற கப்பல்கள் தெற்கு முனையைத் தொட்டுக்கொண்டு செல்லுகின்றன. எக்ஸ்போர்ட்-ஓரியன்டெட் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகின்ற ஏற்றுமதியாகக்கூடிய பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளை இந்த நாட்டிலே ஏற்படுத்தினால், ஏறக்குறைய 120 கோடி ரூபாய் ஆண்டொன்றுக்கு வருமானம் கிடைக்கும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த நிலையில் அந்த அதிகாரம் மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படவேண்டும். அதற்குவேண்டிய நிதிகளும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய அளவிற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி செய்ய மறுக்கின்றது. குறிப்பாக, தமிழக அரசை எடுத்துக்கொண்டால், சிறு பாசனத் திட்டங்களுக்கென்று இருபது கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்தத் தொகையைக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டது. அந்த இருபது கோடி ரூபாய் கொடுக்காவிட்டாலும், அதில் கொஞ்சம் குறைத்தாவது கொடுத்திருக்கலாம். அதைக்கூட கொடுக்க மறுத்துவிட்டார்கள். எதுவுமே கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள்.

அதே நேரத்தில், படி அரிசித் திட்டத்திற்குக் குறைந்தது ஐந்து கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது, அதையாவது கொடுங்கள் என்றால், அதையும் மத்திய அரசினர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். ஆனால், அதே நேரத்தில் காஷ்மீரிலே உணவுக்காக உதவித் தொகை அளிக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற கோதுமைக்கு 118 கோடி ரூபாய் உதவித் தொகை அளிக்கிறார்கள். தென்னகத்திற்கு வேண்டிய அத்தியாவசியப் பொருளான உணவுப் பொருள்களுக்கு உதவித் தொகை வேண்டும் என்று கேட்டால், அது மறுக்கப்படுகிறது. மத்திய அரசிலே அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த நிலை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டுமானால், மத்தியிலே இருக்கும் அதிகாரங்கள் பகிர்ந்து மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல் ஊரத்திற்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் தன்னுடைய தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ள எந்த அளவிற்கு அதற்கு நிதி வசதி இருக்கின்றதோ அது போக, மேலும் தேவைப்பட்ட நிதி வசதிகளுக்குத் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்கும்போதெல்லாம் மத்திய அரசு கையை விரிக்கிறது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும்பொருட்டு, அதற்கான திட்டங்களைப் போட்டு, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நேரத்தில், மத்திய அரசு விலைவாசியை ஏற்றும் போக்கி





லேயே நடந்து வருகிறது. குறிப்பாக, கடந்த வருஷத்தில் மட்டும் 110 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்திருக்கிறார்கள் மத்திய அரசினர். நோட்டுகளை அதிகமாக அடித்துக்கொண்டு போவது நாட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக விலைவாசியை ஏற்றத்தான் உதவி செய்யும் என்று தமிழக அரசாங்கம் தன்னுடைய மறுப்பைத் தெரிவித்திருக்கிறது. அந்த நிலையிலே மற்ற மாநிலங்களும் மத்திய அரசு நோட்டு அடிப்பதைக் குறைக்கவேண்டும் என்று குரல் எழுப்பி வருகிறது. ஆனால், மத்திய அரசோ, மாநில அரசுகளின் குரலை மதிப்பதில்லை. இந்த ஆண்டு 400 கோடி ரூபாய்க்குப் புதிதாக நோட்டு அடிக்கப் போவதாகச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இப்படி நோட்டு ஒரு பக்கம் அடித்துக்கொண்டு செல்லுகிறார்கள். இன்னொரு பக்கம், மாநில அரசு விலையைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருவதை, வேண்டுமென்றே மத்திய அரசு தன்னுடைய அதிகாரப் போக்கால், குலைக்கும் வழியிலே நடந்து வருகிறது. இதற்கும் மத்திய அரசிலே இருக்கும் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும். பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு ஆகிய இந்த இரண்டு துறைகளை மட்டும் மத்திய அரசு வைத்துக்கொண்டு பாக்கி அதிகாரங்கள் அனைத்தையுமே மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டும். அந்த நிலை ஏற்பட்டால்தான் இந்த நாட்டிலே இன்று ஏறி வரும் விலைவாசிகளைக் குறைக்கமுடியும்.

மற்றொன்றையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசுக்குரிய அதிகாரம் எந்த அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒன்றைமட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் தமிழக அரசு சர்க்கரைக் கட்டுப்பாடு சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. ஆனால், அம்மாதிரி சர்க்கரைக் கட்டுப்பாடு செய்யக்கூடாது, அம்மாதிரி சட்டம் போடக்கூடாது, மத்திய அரசுக்கு அது விரோதமாக உள்ளது என்று மத்திய அரசு தமிழக அரசைத் தடுத்தது. இது எதைக் காட்டுகிறது? நம்முடைய நாட்டில் விளையும் பொருள்கள் நம்முடைய நாட்டைவிட்டு வெளியே செல்லும்போது, நம்முடைய நாட்டில் அவற்றினுடைய விலைவாசி ஏறுகின்றன. அந்த விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று தமிழக அரசு எடுக்க விரும்பினாலும், மத்திய அரசினிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதால், மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாத காரணத்தால், விலைவாசிகளை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. விலைவாசி ஏறுவதற்குக் காரணம் யார்? இங்கே நாம் அதிகமாக விளைவிக்கும் அரிசியை அண்டை மாநிலங்களுக்கும் கொடுக்கும்படி, மத்திய அரசு மாநில அரசுக்குக் கட்டளை பிறப்பிக்கிறது. அதே நேரத்தில், தமிழகத்திற்குத் தேவையான பொருள்களைக் குறிப்பாக பருப்பு வகைகளை, வெளி மாநிலங்களிலிருந்துதான் நாம் தருவிக்க வேண்டியிருக்கிறது. இங்கிருந்து அரிசியை மற்ற மாநிலங்களுக்கு இன்ன விலைக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லும் மத்திய அரசு, மற்ற மாநிலங்களை இன்ன விலைக்குத் தான் தமிழகத்திற்கு இவ்வளவு பருப்புகளை ஒதுக்கவேண்டும்

[திரு. ஆர். கருப்பையா] [1968 பிப்ரவரி 13

குறிப்பாக இந்த நாட்டிலே விவசாயப் பிரச்சினை கேட்பாரற்று, தாயில்லாக் குழந்தைபோல் கிடக்கிறது. உழவுத் தொழில் ஓங்க வேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும்; உழவு ஒன்றுதான் தலையாய தொழில்; "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றெல்லாம் மேடையில் முழக்க ஒலி கேட்கப்படுகிறதே தவிர, செயலில் என்ன என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. உழவு உயர்ந்தால்தான் உண்மையில் நாடு உயரும்; நாமும் உயரலாம் என்ற எண்ணம் அரசுக்கு ஏற்பட வேண்டும். உழவர்கள் எல்லாம் நெல்லிக்காய் மூட்டை போல் இருந்து கொண்டு வருகிறார்கள். எல்லாத் தொழில்களுக்கும் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் விவசாயிகள்தான் ஏமாளிகளாக இருந்துகொண்டு வருகிறார்கள். இவர்களை எது செய்தாலும் கேட்க ஆளில்லை என்ற எண்ணத்தில் அரசு உழவர்களுக்கு இழைக்கும் தீமைகள் பலப்பல.

ஏதாவது அரசாங்க வசூல் என்றால், 'பாருங்கள் கோட்டாட்சித் தலைவரை, பிடியுங்கள் விவசாயிகளை' என்ற எண்ணமே இன்றும் இருந்துவருகின்றது. பூச்சி மருந்து வேண்டுமா? அம்மோனியம் சல்பேட்டா? யூரியாவா? வரி 5 ரூபாய். அமோனியம் சல்பேட்டா? 15 ரூபாய். வயல் ஓரத்தில் வேலி இருக்கிறதா? 150 ரூபாய் அபராதம். கிணறு வெட்டலோமா? 200 ரூபாய். வடிமுனைக் குழாய்க் கிணற்றுக் கடனா? 300 ரூபாய். பள்ளி ஆசிரியரா 5 ரூபா. பத்து ரூபாய். இப்படியாக உலகத் தமிழ் மாநாட்டு நிதி வசூலில் அவர்கள் பட்ட தொல்லைகள் மிகப் பல. துப்பாக்கி லைசென்ஸ் புதிப்பிக்க வேண்டுமா? 100 ரூபாய். இப்படி இந்த ஆண்டு வசூலில் விவசாயிகட்குக் கஷ்டங்கள் பல ஏற்பட்டன. இன்றைய நிலையில் கலெக்டர் முதல் தாசில்தார் வரை எல்லோருமே அரசாங்க லோன் வசூல் செய்வது தவிர வேறு பணி எதுவும் செய்வதே இல்லை.

எங்களுடைய அரியலூர் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. அந்தப் பகுதியில் வரி வசூலை கடுமையாக இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று யூனியன்களில் நடைபெறும் முதல் காரியம் அரசாங்க வசூல்தான் என்பதை அரசு அறியுமா? பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கும் இடங்களில் அரசாங்கத்திற்கு வசூல் வேலை ஒன்றுதான் செய்கிறார்கள். ஆக்கப்பணிகள் எதுவும் செய்வது இல்லை. அதோடு ஊராட்சி ஒன்றியங்களில் கொடுக்கும் பொறுக்கு விதை என்று சொல்லப்படுவது உண்மையில் பொறுக்கு விதையே அல்ல. இது எல்லோருக்கும் தெரியும். வீரியக் கம்பு என்று சொல்கிறார்கள். அதன் விலை படி ஒன்றுக்கு 9 ரூபாய். இதுபோல ஒரு யூனியனுக்கு 2000 கிலோ தரப்படுகிறது. அதாவது 18,000 ரூபாய் வீரியக் கம்பிலே முடக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கம்பும் நாள்பட்டுவிட்டதால் நன்றாக முளைப்பதில்லை. புழுத்துப் போயிருக்கின்றது. இதனைக் கட்டாயப்படுத்தி விவசாயிகளின் தலையில் கட்டுவது நியாயமா? விவசாயிகள் ஏமாளிகள் என்று தானே இப்படிச் செய்கிறார்கள்? சாதாரணமாக ஒரு படி கம்பு



1968 பிப்ரவரி 13] [திரு. ஆர். கருப்பையா]

கிராமங்களில் 1½ ரூபாய் விற்கிறது. இந்தக் கம்புக்கு 9 ரூபாய் விலை வைத்திருப்பது என்ன நியாயம்? வீரியக் கம்பு என்ற பெயரில் எல்லா யூனியன்களுக்கும் வழங்கப்பட்ட பொருளின் மதிப்பு லட்சக்கணக்கான ரூபாய் என்ற அளவில் பாழாகிறது. விவசாயம் நடைபெறும்போது கம்பு கொடுத்தால் பரவாயில்லை. இந்தக் கம்பை யூனியன்களில் முடக்கிவைப்பதால், நாள்பட்டு, விதைப்பதற்கு லாயக்கற்றதாக ஆகிவிடுகிறது. இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் நிலையினை நேரிலே வந்துபார்த்தால்தான் தெரியும்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு காவிரியில் தண்ணீர் குறைவு இல்லாமையாலும், பருவமழை தவறியதன் காரணத்தாலும் அரியலூர் திருமானூர் யூனியன் இரண்டு பகுதிகளிலுமே பயிர்கள் விளையாது காய்ந்துவிட்டன. அங்குள்ள விவசாயிகளுக்கு வரி வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றிக் கலெக்டரைக் கேட்டால், அமைச்சரிடத்தில் அனுமதி வாங்க வேண்டும் என்கிறார். இந்தப் பகுதியிலுள்ள மக்களில் 100-க்கு 90 பேருக்கு உணவு கிடையாது. அவர்கள் எங்கேயாவது வாங்கித் தான் உண்ண வேண்டும். அந்தப் பகுதியில் ரேஷன் முறையோ, வேறு எந்த முறையோ கொண்டுவந்து அங்குள்ள மக்களுக்கு உணவு வழங்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதுபோன்ற பகுதிகளில் கிணறு வெட்டியோ, வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்தோ விவசாயத்தை பெருக்கலாம் என்றால் அங்கு மின்சாரம் இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மோட்டார் வாங்கியும் இதுபோன்ற ஊர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல், வாங்கிய மோட்டாருக்கு வட்டியும் அசலும் சேர்த்து கட்டிக்கொண்டு வருகிறார்கள். அரியலூர் ஆதிகுடிகாடு பகுதியில் உள்ள தென்சென்னை மின்சார நிறுவனம் சரியாக பணிபுரிவதில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த ஊர்களுக்கு எல்லாம் உடனடியாக மின்சார இணைப்பு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அசெம்பிளி ஹாஸ்டலில்கூட பத்து பல்புகள் இருந்தால் அதில் 5 பல்புகள்தான் எரிகின்றன. எங்கள் ஊரில் 80 பல்புகள் இருக்கிறதென்றால், 20 பல்புகள்தான் எரிகின்றன. புதிதாக ஏற்படுத்தவில்லையென்றாலும், இருப்பதையாவது சரியாக வைத்துக்கொள்ளக்கூடாதா? கேட்டால் அலாட்மென்ட் இல்லை என்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக இதில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக புள்ளம்பாடி பாசனத்தை மூன்றும் ரேட்டாக மாற்றி கிஸ்தி வசூலிக்கவேண்டும். ஏனென்றால் காவிரியில் அதிகமாக தண்ணீர் இருக்கும் போதுதான் இங்கு தண்ணீர் கிடைக்கும். ஆகவே, இதையும் மூன்றும் ரேட்டாகப் பதிவு செய்து அதற்கான கிஸ்தி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2-வது தரமாக II rate கிஸ்தி வசூல் செய்வது முறையாகாது.

என்று ஏன் கட்டளை இடக் கூடாது ? பருப்பு வடக்கே இருக்கும் மாநிலங்களில் விளைகிறது. அரிசி தெற்கே விளைகிறது. ஆகவே, தெற்குக்கு ஒரு சட்டம், வடக்குக்கு ஒரு சட்டம் என்ற நிலைமையிலே, வடக்கே இருக்கின்ற மாநிலங்களுக்கும், தெற்கே உள்ள மாநிலங்களுக்கும் ஒருதலைபட்சமாக மத்திய அரசு நடந்து வருகிறது. காரணம், இன்று மத்திய அரசிலே இருப்பவர்கள், அதுவும் குறிப்பாக அதிகாரத்தில் இருக்கிறவர்கள் பெரும்பாலும் வடக்கே இருப்பவர்கள். அவர்கள் தங்களுடைய மாநிலங்களின் நலன்களைத்தான் அதிகமாகப் பார்க்கிறார்களேயொழிய, மற்ற குறிப்பாகத் தென் மாநிலங்களின் நன்மைகளைப் புறக்கணிக்கின்றனர். ஆனால், பொதுவாக எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், தென் மாநிலங்கள்தான் அன்னிய செலவாணியை அதிகமாக ஈட்டித் தருகின்றன. இந்த நாட்டிலிருந்து அந்நிய நாடுகளுக்கு அதிகமாகப் பொருள்களை அனுப்பி அந்நியச் செலவாணியை அதிகமாக ஈட்டித் தரும் மாநிலங்களுக்குக் குறைவாகவும், அன்னியச் செலாவணியைக் குறைவாக ஈட்டித் தரும் மாநிலங்களுக்கு அதிகமாகவும் நன்மையைச் செய்து வருகிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். இந்த நிலை மாற்றப்படாத வரையில், சுமுகமான முறையில் மாற்றப் படாவிட்டால், அது வேறு வழியிலே மாற்றப்பட மக்கள் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களோ, மக்கள் அந்த நிலையில் என்ன செய்யத் தலைப்பட்டு விடுவார்களோ, என்று நான் அச்சப்படுகிறேன். இந்த நிலையில் தமிழகத்தில் இன்று பெரிய தொழிற்சாலைகள் இல்லை. போன நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகக் குறைந்த தொகைதான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. காரணம் என்ன என்று நமக்குத் தெரியவில்லை.

தமிழகத்திற்கு இன்று உடனடியாகத் தேவையாக இருப்பது சேலம் உருக்காலை. தென்னகத்தில் உபயோகப்படுத்தப்படுகிற உருக்கு மொத்த உற்பத்தியில் 18 சத விகிதம் சேலம் உருக்காலை ஏற்படுத்தப்பட்டால் அதிலிருந்து தமிழகம் தன்னுடைய தேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிலையிலே இந்த உருக்காலை என்பது மற்ற தொழில்களுக்கு அடிப்படையாக உள்ளது. ஆகவே, சேலம் உருக்காலை ஏற்படுத்தப்பட்டால் அதன் மூலம் பல தொழிற்சாலைகள் புதிது புதிதாக ஏற்பட முடியும், அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படும். இந்த நிலையில் உடனடியாக மத்திய அரசு தமிழகத்தில் சேலம் உருக்காலையை ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று நான் கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். கருப்பையா :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் உரையின் குறிப்பில் பொது ஏழை அரிஜன மக்களின் வளர்ச்சி நிலையைப்பற்றியும். பொருளாதாரப் பிரச்சினை பற்றியும் தொழில்துறை வளர்ச்சி, வளம் பற்றியும், இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள விவசாய இழப்பிற்குப் பரிகாரம் கொடுக்கும் வகையிலும், ஏழை விவசாய மக்கள் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட





வேண்டிய நிலைமை குறித்தும் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பது குறித்து மிகவும் வருந்துகிறேன். இந்த ஆண்டு விவசாய பாதிப்பு, தண்ணீர் இல்லாமையால் ஏற்பட்ட பாதிப்பு என்பது குறித்து ஆளுநர் உரையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே ஒரு குறளைச் சொன்னதால், தமிழே வானளாவ வளர்ந்துவிட்டதாக நேற்று பேசிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு எல்லாப் பொருள்களும் விலை சரிந்து சும்மா கிடைப்பதுபோல் நண்பர் அவர்கள் குறிப்பிட்டார். அவருக்கு நான் இந்த விலைவாசிப்பட்டியலைக் காட்ட முற்படுகிறேன். விலைவாசிகள் ஏழை மக்கள் வாங்குகின்ற முறையில் கடைகளில் விற்கிறதா ? 1967 பிப்ரவரியில் விற்ற விலை என்ன ? இன்று விற்கும் விலை என்ன ? 1967 பிப்ரவரியிலே புளி ஒரு கிலோ ரூ. 2.20; இன்று ஒரு கிலோ 5.30 ரூபாய். மிளகு ஒரு கிலோ 4.70 ரூபாய்; இன்று ஒரு கிலோ ரூ. 6.50; வெல்லம் அன்று ஒரு கிலோ ரூ. 1.25; இன்று ரூபாய் 2.00; 1967 பிப்ரவரியில் மஞ்சள் ஒரு கிலோ 1.50; இன்று ஒரு கிலோ ரூ. 4.00; பூண்டு அன்று ஒரு கிலோ ரூ. 2.90; இன்று ரூபாய் 3.00; 1967-ல் பிப்ரவரியில் உளுத்தம் பருப்பு இரண்டு லிட்டர் 1.70 ரூபாய், இன்று ரூபாய் 3.50; பனை வெல்லம் அன்று பத்து கிலோ ரூ. 6.50, இன்று பத்து கிலோ 28 ரூபாய்க்கு விற்கிறது. இதுபோன்று எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறிக்கொண்டேதான் செல்லுகின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அரிசி, மிளகாய், கடலை எண்ணெய், வெங்காயம் போன்ற பொருள்களின் விலை ஏறியிருக்கிறதா ? அவைகளும் அவர்களுடைய விலைப்பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றனவா ?

**திரு. ஆர். கருப்பையா :** அரிசி சில பகுதிகளில் விலை சற்று குறைந்திருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு படி அரிசி 2½ ரூபாய்க்கு விற்கிறது. குறிப்பாக பல இடங்களில் விலை ஏறிக்கொண்டுதான் இருக்கின்றது. ஒரு சில இடங்களில் விலை குறைந்திருக்கலாம். சென்ற ஆண்டு இதே ஆளுநர் பேருரையில் பேசிய நண்பர், " எங்களை 25 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது " என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதே நண்பர் நேற்று பேசும்போது, " எங்களை 5 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது " என்று சொல்லுகிறார். ஏன் ? இதற்குள் ஓராண்டிற்குள் இவ்வளவு பலவீனம் ஆளுங்கட்சிக்கு எப்படி ஏற்பட்டது ? அவர்கள் நன்றாக ஆளட்டும். நாடு நன்றாக ஆளப்பட வேண்டும், மக்கள் சுகம் பெறவேண்டும் என்பதுதான் எமது நோக்கம்.

கோவையிலே கல்லெறியப்பட்டதற்குக் காரணம் கேட்டால், நியாயம் கேட்டால், "உங்கள் ஆட்சியில் நடக்கவில்லையா ?" என்று திருப்பிக் கேட்கிறார்கள். 'ஏனடா தம்பி குடிக்கிறாய் ?' என்று தந்தை திட்டினால். 'அடுத்த வீட்டு அண்ணா குடிக்கவில்லையா ?' என்று தம்பி தனக்கு ஆதரவுதேடும் கதைபோல் அல்லவா காரணத்தைக் காட்டுகிறார்கள்.

புள்ளம்பாடி வாய்க்கால் பாசன பகுதியிலுள்ள பி.டபிள்யூ.டி. அல்லாத எல்லா கிராம ஏரிகளையும் அரசே மராமத்து செய்து விவசாயத்திற்குத் தடையின்றி தண்ணீர் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

விவசாயிகட்கு வேண்டிய உரங்களை முன்னதாகவே தருவித்துத் தரவேண்டும். அதில்லாமல் இருக்கும் உரத்தையும் இல்லை என்று கூறிவிட்டு எப்போது அரசாங்க வசூல் வரும் என்று எதிர்பார்க்கும் மனநிலை அதிகாரிகளிடமிருந்து நீக்கப்படுவதுதான் வசதியாக இருக்கும்.

கோயில் இனும் நிலங்களை உழுபவனுக்கே உடனடியாக பட்டா செய்து கொடுக்கவேண்டும். பெருவருவாயுள்ள தனிப்பட்ட கோவில் நிறுவனம், ஆதீனம் மடாதிபதிகள் இவர்களின் வரவு செலவுக் கணக்கு அரசால் தகுந்த முறையில் தணிக்கை செய்யப் பட்டு அதன் வருவாயில் 50 சதவிகிதம் அந்தந்த பகுதி நலனுக்குச் செலவிடவேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்படவேண்டும்.

இதோடு பெருந்தொழில் நடத்தும் முதலாளிகள் போதிய ஊதியம் கொடுப்பதோடு அவர்கள் நிகர வருவாயில் ஒரு பகுதியை, உழைத்து உருக்குலைந்து நிற்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் பிரித்துக்கொடுக்கும்படி அரசே சட்டம் கொண்டுவருவது மிகமிக உதவியாக இருக்கும். இதே கருத்தை 1948-49-இல் ஒரு மகா நாட்டில் திரு. அண்ணா அவர்கள் ஒரு தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இவர்களது ஆட்சியிலாவது அது சட்டமாக்கப்படவேண்டுமென்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு இன்றைக்குப் பெருந் தீங்காக வந்திருப்பது கரும்பு, வெல்லத்திற்கு பலமுனை வரி போட் டிருப்பது. பனை வெல்லத்திற்கு இந்த வரியில்லை; பனை வெல்லம் குடிசைத்தொழில் என்பதுபோல, கரும்பு வெல்லமும் குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது. இன்றைக்குத் திருச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 10 ரூபாய் வரி யாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் 100 ரூபாய் சரக்கு பல கைகள் மாறும்போது 120 ரூபாயாக உயர்ந்து விடுகிறது. இவர்களது ஆட்சியில் வரியே போடமாட்டோம் என்றார்கள். அதற்காக வரியே போடக்கூடாது என்று சொல்ல வில்லை, ஆயினும் வெல்லத்திற்குப் போடப்பட்டுள்ள பலமுனை விற்பனை வரியையாவது ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற குடிசைத் தொழில் பொருள்களுக்கு வரி போடக்கூடாது. அரசு ஆக்கம் தர முன்வர வேண்டும்.

அடுத்து கல்விப் பிரச்சினை, இதைப் பொறுத்தவரையில் அரசியல் சூழல்கட்கு அப்பாற்பட்ட தனிக்குழுவால் நடத்தப்பட வேண்டும். அதோடு ஒன்றாவது வகுப்பில் இருந்து 3 வது வகுப்பு வரை நியமிக்கும் ஆசிரியர்கள் பெண்களாக இருந்தால் சிறப்பாக இருக்கும். பெண்களால்தான் அந்தச் சிறு பிஞ்சு உள்ளங்களுக்கு





உகந்த தாய்மை உணர்ச்சியுடன் கல்வி புகட்ட இயலும். எனவே இந்த நிலையில் பெண்களும் ஆசிரியர்களாக இருக்க வேண்டுவது சாலச் சிறந்தது.

அடுத்து உள்ளாட்சித் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இன்றைய நிலையில் ஊராட்சிக்கென்று எந்தவித அதிகாரமும் தனியாக இல்லை. தலைவர்கள் எல்லாம் அங்கு வேலை செய்யும் எழுத்தர்களைப் போன்ற நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். தலைவர்களின் அனுமதியோடோ அனுமதியின்றியோ அரசாங்க வசூல்களுக்கு ஊராட்சியின் பணத்தை எடுத்துக் கொள்வது சரியல்ல. அவ்வாறு எடுத்துக் கொள்ளும் முறை மாற்றப்பட வேண்டும். ஊராட்சித் தலைவரின் உரிமையை ஒன்றியத்திலும், ஒன்றியப்புத் தலைவர் உரிமையை மாவட்ட ஆட்சியாளரும் பறித்துக் கொள்கின்ற நிலை இருக்கக் கூடாது. அதேபோன்று தலைவர் தேர்தல் இனியாகிலும் ஜனநாயக முறையில் நடைபெறச் செய்வது தான் நன்றாக இருக்கும். குடும்பக்கட்டுப்பாடு செய்துகொள்ளும் அரசு ஊழி யருக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது அதுவும் ஒரு தனித் தகுதியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் இனியாகிலும் ஜனநாயக முறையில் நடை பெறச் செய்ய வேண்டும் என்கிறார்கள். அப்படியானால் இதுவரை நடைபெற்ற தேர்தல்கள் ஜனநாயக முறையில் நடைபெறவில்லை. என்கிறார்களா?

**திரு. ஆர். கருப்பையா:** நான் மக்களால் நேரிடையான முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்... (மணியடிக்கப்பட்டது).

*** திரு. பெ. சீனிவாசன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முப்பது ஆண்டுக் காலமாக தமிழகம் எந்தக் குறிக்கோளுக்காகப் போராடியதோ அந்தக் குறிக்கோள் —ஆதிக்க இந்தி தமிழகத்தைவிட்டு அகற்றப்பட வேண்டுமென்ற நீதியின் அடிப்படையில் பிறந்த குறிக்கோள்—இன்றையதினம் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது. தமிழகத்தில் இனி இந்தி இல்லை, தமிழகத்தில் எந்த மூலைமுடுக்கிலும் இந்தி ஆதிக்கம் இனி இராது என்ற செந்தேன் சிந்தும் செய்தியை தம்முடைய பேருரையில் கவர்னர் அவர்கள் அமைத்திருப்பதால் அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பல ஆண்டுகாலமாக எந்தக் கொள்கையைத் தனது மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் வற்புறுத்திச் சொல்லி வந்ததோ, எந்தக் கொள்கையைக் காப்பதற்காகப் பல போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறதோ, அந்தக் கொள் கையைத்தான் இன்றைக்கு ஆட்சி பீடத்தில் ஏறியவுடன் நிறை வேற்றியிருக்கிறது. எங்களுடைய கொள்கையில் அன்றிலிருந்து இன்று வரை எந்தவிதமான முரண்பாடு இல்லை. இந்தி கூடாது. எந்த வடிவிலும், எந்தக் காலத்திலும் தமிழகம் அதை ஏற்காது

கிரஸ் கட்சி மாங்கல்யத்தை இழந்திருக்கிற அரசியல் துர்பாக்கியம் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்காது. இன்றையதினம் அருமைக் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுகிறார்கள் மொழிச் சிக்கலில் மறு பரிசீலனை தேவை என்று. நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இந்தியை எதிர்ப்பதானால் காங்கிரசை விட்டு வெளியே வந்து எதிர்த்து நில்லுங்கள். காங்கிரசிலேயே நீங்கள் இருக்க வேண்டுமென்றால் இந்தியை வெளிப்படையாக ஆதரித்து தமிழகத்தில் பிரசாரத்தை ஆரம்பித்து நடத்துங்கள்.

தமிழகத்தில் இந்தியை எதிர்த்துப் போராடுகிற நிலையில் இருக்கிற தமிழக அரசை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசை அசைத்துப் பார்க்கலாம் என்ற முறையில் அரசியலைக் கடைப்பிடித்து மோசமான முறையில் மாணவர்களுடைய போராட்டத்தை ஆதரிப்பதாகக் காங்கிரஸ் தலைவர்கள் வெளிப்படையாகப் பேசாவிட்டாலும் போராட்டத்திற்கு உற்சாகம் தந்தார்கள். அவர்களுடைய அதிகார பூர்வமான பத்திரிகைகளில் எட்டுக் காலங்களில் செய்திகளைப் போட்டார்கள். இந்த ஆட்சியைக் கவிழ்க்க மறைமுகமான சூழ்ச்சியில் ஈடுபட்டார்கள். அந்த சூழ்ச்சியும், சதித்திட்டமும் இன்றைக்கு அவர்களையே சூழ்ந்து கொண்டு போகிற இடங்களில் எல்லாம் அவர்களை நிற்கவொட்டாது திரும்பச் செய்து கொண்டிருக்கிறது. மாணவர்கள், இந்தக் கட்சியைத் தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிலையான கொள்கையைப் பேசாத காரணத்தால், தமிழ் மக்கள் உள்ளத்தில் காங்கிரஸ் கட்சியைப் பற்றி ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தை நீக்க முயற்சி செய்யாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திடம் மொழிக் கொள்கையில் நிரந்தரமான எண்ணம் இல்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அன்று முதல் இன்று வரை நிரந்தரமான ஒரு மொழிக் கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகிறது. அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் இன்னொன்றையும் சொல்லுகிறார்கள். 'டில்லி என்ன செய்யும் தெரியுமா? அதிகாரங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. ஆட்டிப் படைக்கும் வல்லமை டில்லியில் இருக்கிறது. மாநில அரசாங்கம் சாதாரண அரசாங்கம். என்ன நடக்கும் தெரியுமா?' என்று ஆங்காங்கே பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் எழுதிக் காட்டுகிறார்கள். என்ன நடந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை. மிதமிஞ்சிப் போனால் டில்லி சர்க்கார் தன்னுடைய மிதமிஞ்சிய அதிகாரத்தைப் பயன்படுத்தி மறைமுக சூழ்ச்சியுடன், அரசியல் சட்டத்தின் விதிமுறைகளுக்குப் புதிய அர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டு முன்பு கேரள அரசாங்கத்தைக் கவிழ்த்தது போல், சமீபத்தில் வங்காள அரசாங்கத்தைக் கவிழ்த்ததுபோல், தமிழக அரசையும் கவிழ்த்து விடலாம். அதற்கு அவர்கள் சதித்திட்டம் தீட்டலாம். அப்படி நடக்குமானால் பின்னால் என்ன நடக்கும்? மறு தேர்தல் வரலாம். மறு தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும்.



திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட அனுமதிக்கப்பட்டால் ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும். தமிழகம் இந்தியை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்ற கேள்வி தேர்தல் நேரத்தில் எழுப்பப்படும். அந்த நிலையில் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஒரு ஓட்டு கூட வாங்க முடியாது. ஒரு வேளை காங்கிரஸ் நண்பர்கள் 1967-ல் பட்ட அடியின் காரணமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் வருகின்ற கற்பனை இடைத் தேர்தலில் நிற்க வொட்டாமல் தடைச் சட்டத்தைக் கொண்டு வரலாம். பாராளுமன்றத்தில் அப்படிப்பட்ட ஒரு மெஜாரிடி அவர்களுக்கு இருக்கிறது. பாராளுமன்றத்தில் இந்தி வெறியர்களுடைய ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது. அதை வைத்து இந்த ஜனநாயகக் கட்சியை, தமிழைக் காப்பாற்ற வந்த இந்தக் கட்சியை தேர்தலில் நிற்கக் கூடாது என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி விட்டாலும் கூட பிறகு என்ன நடக்க முடியும்? தமிழகத்தில் மாணவர்கள் இருக்கிறார்கள். அந்தத் தேன் கூட்டைப் பற்றிக் காங்கிரஸ் நண்பர்கள் தயவு செய்து டில்லி சர்க்காருக்கு அடிக்கடி கவனமூட்ட வேண்டும். அந்தத் தேன் கூட்டில் கையை வைத்ததால் அதன் பலனைப் பல காங்கிரஸ் தலைவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அனுபவத்தை வைத்து அவர்கள் சொல்லட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒப்புக் கொள்ளாமல் ஜனநாயகத் தேர்தல் அரசாங்கத்தில் இருந்து நீக்கி விட்டால் தமிழகத்தில் வேறு எந்தச் சக்தியும் தலைகாட்ட முடியாது. மாணவர்கள் சார்பில் நான் இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இன்று இந்தி இல்லை; தமிழகத்திலிருந்து இன்று இந்தி நீக்கப்பட்டு விட்டது. படைப் பிரிவில் இந்தப் பாடை மொழி அகற்றப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு விட்டது. எந்த மூலை முடுக்கிலும் இன்று இந்தி இல்லை. எதிர்காலத்தில் ராணுவ தர்பாரே வந்தாலும், ராணுவத்தின் கொடிய கரங்களைக் கொண்டு துப்பாக்கித் தோட்டாக்களைப் பாய்ச்சினாலும், இந்தித் திணிப்பை இந்த நாடு என்றும் ஏற்றுக் கொள்ளாது. இந்த நாட்டைச் சூழ்ந்திருக்கிற கடலில் நிறம் சிவப்பாகிற வரை, தமிழகத்தில் ரத்த வெள்ளமே ஓடினாலும், இந்த பிறப்பில் மட்டுமல்ல; பக்தர்கள் நம்புகிற ஏழேழு ஜன்மங்களிலும் இந்தியை எதிர்த்துப் போராடுவோம்; இந்திக்குத் தமிழகத்தில் இடம் இல்லை என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் டில்லியிலுள்ள தலைவர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். இன்றைய புதிய தலைமுறையினர், இளைஞர்கள் நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைத்தான் முழுக்க முழுக்க நம்பி இருக்கிறார்கள். தமிழகத்தில் 1937-38-ல் இருந்த இந்தியை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களுக்குத் தளபதியாக இருந்து நடத்திய அவரே இன்று தமிழகச் சட்டமன்றத்திலே 'இனி தமிழகத்தில் இந்தி இல்லை' என்ற தீர்மானத்தில் கையொப்பமிட்டதைத் தமிழக மாணவர்களும், மற்றவர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். எதிர்காலம் இருண்டு விட்டது, இந்தி இனி புகுத்தப்படும் என்ற நிலையில் தலைநிமிர்ந்து நிற்க முடியாது கலங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழகத்து மாணவர்கள், தலை நிமிர்ந்து

நிற்கக்கூடிய வகையில் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்படி நாம் போகிற நேரத்தில் அருமைக் காங்கிரஸ் தலைவர்கள் தேசியவாதிகள் என்று தங்களைத் தாங்களே முத்திரையிட்டுக் கொண்டு 'திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக்கு வழி வகுத்துக் கொண்டிருக்கிறது' என்ற வகையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையைக் கைவிட்டு விட்டது என்பதை இந்த உலகம் அறியும். இதற்குப் பின்னணியில் இருக்கும் காரணங்களைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் மூச்சைக் கொளுத்துகிற முயற்சியாக ஜனநாயக விரோதமான சட்டத்தைக் கொண்டு வந்து அற்ப சமாதானம் அடைந்தார்கள். இதே பிரிவினைக் கொள்கை இன்று எங்கே வெடித்துக் கிளம்புகிறது என்று பார்த்தால், ஆந்திராவில் மாணவர்கள் மரியாதையாக இந்தித் திணிப்பைக் கைவிடு; அல்லது ஆந்திரத்தை இந்தியாவில் இருந்து அகற்றி விடு; இரண்டில் ஒன்று தீர்ந்தாக வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளி மாணவர்கள் கூட இன்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஐந்து, ஆறாவது வகுப்பு படிக்கும் மாணவர்கள் கூட அரசியல் சட்டத்தைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை; அரசியல் சட்டம் எழுதியது 1949-ம் ஆண்டில்; எங்களில் பல பேர் அன்று பிறக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

நாங்கள் பிறக்காததற்கு முன்னால் எழுதிய அரசியல் சட்டம், நாங்கள் பிறப்பதற்கு முன்னால் உருவாகிய இந்திய தேசியம் இவற்றைப்பற்றி கவலையில்லை. எங்கள் தமிழ் வாழ வேண்டும். எங்கள் தமிழ் மொழி ஒளி பெற வேண்டும். நாங்கள் விமோசனம் அடைய வேண்டும்; இதற்குரிய வழி எந்த வழியானாலும் அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை என்ற ஆபத்தான எண்ணம் இன்றைய இளைஞர் தலைமுறையில் எழுந்திருக்கிறது. இதை டெல்லி சர்க்கார் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்திய அரசியலில் எதிர்காலம் கேலிக் கூத்தாகிவிடும் என்ற எச்சரிக்கையை இங்கிருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் உணர்ந்து அந்த ஒரு வேலையையாவது அவர்கள் உருப்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழக மாணவர்களின் உணர்வை மதித்து, தமிழர்களின் எதிர்காலத்தில் சூழ்ந்திருந்த இருளை நிரந்தரமாக நீக்கிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு மாணவர்களின் சார்பிலும், இளைஞர் தலைமுறையினரின் சார்பிலும் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டு இந்த அறிவிப்பை ஏற்று வந்திருக்கிற ஆளுநர் அவர்களின் உரையை மனப்பூர்வமாக வரவேற்று அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. பாரதிமோகன்:** தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆளுநர் அவர்களின் உரையின்மீது சில விஷயங்களை நான் கூற விரும்புகிறேன். இந்த உரையில் தஞ்சை மாவட்டத்தில் தாளடிப் பயிருக்குப் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தினால், இப்போது விளைச்சல் சரியாக இல்லை என்று குறிப்பிடப்



பட்டிருக்கிறது. முன்னாலேயே நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அங்கு பம்ப் செட்டுகள் மூலம் தண்ணீர் இறைவைப் பாசனம் தேவை என்று கூறியிருக்கிறோம். அந்த அடிப்படையில் பஞ்சாயத்துகளுக்கு ஐந்து பம்ப் செட்கள் வீதம் இறைவைப் பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் காவேரி நீரை மட்டும் நம்பி வாழ்வதற்கு மாறாக காவேரியை நம்பாத முறையில் எந்த நேரத்திலும் பாசனம் செய்ய தஞ்சை மாவட்டத்தில் முடியும். அப்படிச் செய்தால் உற்பத்தியைப் பெருக்க நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. பருவ காலத்தில் வாய்க்கால், வடிகால் வசதி தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் பருவ மழை காலத்தில் அதிகமான வெள்ளம், அதே போல் வடிகால் வசதியின்மை இவற்றினால் அதிகப்படியான சேதம் ஏற்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பம்ப் செட்டுகள் நிலப்பிரபுக்களுக்கும், அதிகமான அளவில் நிலம் இருப்பவர்களுக்குந்தான் வழங்கப்பட்டு வருகின்றன. சாதாரண சிறு நிலச் சொந்தக்காரர்கள், சிறிது அளவு நிலம் வைத்திருப்பவர்கள், இவர்களுக்குப் போதுமான அளவு பம்ப் செட்கள் வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்பட்டாலும் சமீபத்தில் மின்சார இணைப்புக் கிடைக்காத காரணத்தினால் அப்படி வழங்கப்பட்ட பம்ப் செட்டுகளும் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படி அவை இயங்காத நிலையில் இருப்பதனால் சிறிய மிராசுதார்களும், சிறு நிலச் சொந்தக்காரர்களும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். மின்சார இணைப்புக் கிடைக்காததினால் அந்த பம்ப் செட்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன. ஆகவே அந்த பம்ப் செட்டுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் "விவசாயிகள், விவசாயிகள்" என்று குறிப்பிடும்போது பொதுவாகவே குறிப்பிடப்படுகிறது. நூற்றுக்கணக்கான தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உடைய பெரிய நிலப் பிரபுக்கள், மடங்கள், கோவில்கள் இவை இருக்கின்றன. இரண்டாவதாக, மூன்று ஏக்கர்கள், நான்கு ஏக்கர்கள், ஐந்து ஏக்கர்கள் உடைய சிறு நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். மூன்றாவதாக, நிலம் இல்லாது குத்தகை வாரத்திற்காகச் சாகுபடி செய்யக்கூடிய சாகுபடிதாரர்கள் இருக்கிறார்கள். நான்காவதாக, தனக்கென்று நிலம் இல்லாத தினசரி அத்துக்கூலிக்காரர்கள் இருக்கிறார்கள். இப்படி நான்கு பிரிவினர்களாக விவசாயிகள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறார்கள். முதலில் குறிப்பிட்டுள்ள பிரிவினருக்குத்தான் வசதிகளை எல்லாம் சென்ற காங்கிரஸ் அரசாங்கம் செய்து கொடுத்தது. அது இன்னும் தொடர்ந்து இருக்கிறது. இந்த நிலை நீடித்திருப்பதால் வார சாகுபடிதாரர்களுக்கு, குத்தகை சாகுபடிதாரர்களுக்கு இன்றையதினம் போதுமான பாதுகாப்பு இல்லை. காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாகப் போதுமான விளைச்சல் இல்லாததால் மகசூல் எல்லாம் சாவியாகிறது. வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டார்கள். அந்த

என்ற முறையிலும் இந்த அரசாங்கம் இந்தப் பேரவையைக் கூட்டி பேரவையின் அனுமதியோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றால் அதைத் தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்தத் தீர்மானத்தை வரவேற்கவும் முடியாமல், இதை எதிர்க்கவும் முடியாமல் இரண்டுங்கெட்டான் நிலையில் தான் காங்கிரஸ் நண்பர்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினையில் காங்கிரஸ்காரர்களிடத்தில் தெளிவான சிந்தனை இல்லை. திடமான கருத்து இல்லை. இந்தி வேண்டாம் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அதேநேரத்தில் 1965-ம் ஆண்டு தமிழக மாணவர்கள் குமுறும் எரிமலையாக கொதித்தெழுந்தபோது, கொந்தளிக்கும் கடல் அலையாகப் பொங்கி எழுந்தபோது, குவயத்தை நடுங்க வைக்கும் பெரும் புயலாகச் சீறியெழுந்தபோது அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் நண்பர்கள் யார் எந்த அளவு தியாகம் செய்தாலும் சரி இந்திதான் இந்தியாவின் இணைப்பு மொழியாக இன்றைக்கு மட்டும் அல்ல எந்தக் காலத்திலும் இருக்கும் என்று சொன்னார்கள். ஐநூறு பிணங்கள் விழுந்த நேரத்திலும், தமிழகம் முழுவதும் ஆறாக இரத்தம் ஓடிய நேரத்திலும் தங்களுடைய தேக்குமர தேகங்களை எழெட்டுபேர்கள் தீ நாக்குகளுக்குத் இரையாக்கிக் கொண்ட நேரத்திலும் காங்கிரஸ் நண்பர்கள் இந்திதான் ஆட்சிமொழி என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இன்றையதினம் அதே காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சட்டப்பேரவைக்கு உள்ளும், வெளியிலும் சரி 1967-இல் ஏற்பட்ட புதிய திருப்பத்தை மனதில் கொண்டு, ஒரு புதிய குழப்பத்தை உண்டாக்க முயன்று வருகிறார்கள். இந்தி இணைப்பு மொழி என்பது மறு சிந்தனைக்கு உரியது என்கிறார்கள். டெல்லியில் காங்கிரஸ் நண்பர்கள் இந்திதான் இணைப்பு மொழி, இதில் மறு சிந்தனையே இல்லை என்கிறார்கள். இவர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். தமிழ்நாட்டு காங்கிரஸ் நண்பர்கள் இன்றைக்குச் சொல்வதுபோல இந்தியை இணைப்புமொழியாக நாங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால் கடந்த மாதம் 23-ஆம் தேதி அன்று இந்த அவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்திருக்கவேண்டும். இந்திதான் இணைப்புமொழியாக இருக்கும் என்கிற அகில இந்திய காங்கிரஸ் கொள்கையை ஏற்பதாக இருந்தால் நாங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து வோட்டளித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே இந்தியை நாங்கள் எதிர்க்கிறோம் என்று பேசுகிறார்கள். வடக்கே உள்ளவர்கள் எப்போதும் இந்திதான் ஆட்சிமொழி என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே இந்தியை இவர்கள் எதிர்ப்பதாக இருந்தால் திட்டவட்டமாக அப்படிச் சொல்லி, வடக்கே உள்ளவர்களிடம் இருந்து வேறுபட வேண்டும். அப்படிச் செய்யாதிருப்பது வடக்கே உள்ளவர்களுக்குத் துரோகம் இழைப்பதாகும். தங்களுடைய கட்சிக்கே துரோகம் இழைப்பதாக ஆகும். அதேசமயம் தமிழக மக்களுக்கும் துரோகம் இழைப்பதாக ஆகும். எப்படிப் பார்த்



தாலும் காங்கிரஸ் நண்பர்கள் இன்றையதினம் இரட்டை வேடம் தான் போடுகிறார்களே தவிர, திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொள்ளவில்லை. வடக்கே உள்ளவர்களுக்கும் நல்லவர்களாக தெற்கே உள்ளவர்களுக்கும் நல்லவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் முயற்சியில் தான் இன்றையதினம் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கும் தொடர்ந்து அந்தக் கொள்கையைப் பேசி மு.ப. 11-00
மாணவர்களுக்கு மத்தியிலும், பொதுமக்களுக்கு மத்தியிலும் வீண் குழப்பத்தை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சொல்லுகின்ற கொள்கையை நீண்டகால அரசியல் அனுபவம் உள்ள ஒரு அரசியல் கட்சி தைரியமாக, நம்பிக்கையாக நாட்டுமக்களிடம் சொல்லத் தயங்குகிறது. இந்தியை எதிர்ப்பவர்களுக்கும் இந்தியைத் திணிப்பவர்களுக்கும் சாதகமாக, இரண்டு பேருக்கும் நல்ல பிள்ளையாக நடக்கிற மனப்பான்மையை ஒட்டி தமிழக காங்கிரஸ் கட்சி நடந்து கொண்டிருப்பதைச் சட்ட மன்றத்திலும் வெளியிலும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். வீதியில் இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டார்கள். நீதி மன்றத்தில் வழக்கு வந்து அங்கு சாட்சி சொல்ல வந்தார் சாமர்த்தியக்காரர். நீதிபதி, "யார் யாரை அடித்தார்கள் என்று உண்மையாகச் சொல்" என்று கேட்க, சாட்சி சொல்ல வந்தவர் கண்ணை இறுக மூடிக்கொண்டு, "இவன் அவனை அடித்தார், அவன் இவனை அடித்தான், இடையிலே காற்று அடித்தது, என்னுடைய கண்ணிலே மண் விழுந்தது, நான் எதையும் பார்க்க முடியவில்லை" என்று சாமர்த்தியமாகச் சொன்னானாம். அதே போன்று நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் வடக்கே போகும்போது 'தென்னாட்டிலே இந்திக்கு எதிர்ப்பில்லை, கவலைப் படாதீர்கள்' என்றும், இங்கே வரும்போது 'இந்தித் திணிப்பு இருக்காது. இருந்தாலும் விட மாட்டோம்' என்றும் நிலையற்ற ஒரு இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடித்து கொண்டிருக்கிறார்கள். இதே கட்சியினர் இன்று 'இந்தியைத் திணிப்பதை நாங்களும் எதிர்க்கிறோம்' என்று கொஞ்சம் இறங்கி வந்து பேசுகிறார்கள். 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைச் சந்திக்கச் சென்ற நேரத்தில் அவரிடம் மன்றாடி கேட்டேன். 'ஒரு வார்த்தை சொல்லுங்கள், மாணவர்களுடைய நிலையைப் பற்றி, டில்லி சர்க்காருக்குத் தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானம் போடுங்கள், அதற்குச் சட்டசபையைக் கூட்டுவதாகச் சொல்லுங்கள்' என்று கேட்டபோது, அன்றைய முதலமைச்சர் அவர்களும் ஏனைய காங்கிரஸ் தலைவர்களும், 'இந்தியை எதிர்த்து எழுகின்ற எந்தக் குரலையும் நாங்கள் ஆதரிக்க முடியாது என்று இரும்பு நெஞ்சத்தோடு சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் அந்த நேரத்தில் கொஞ்சம் மனம் இரங்கியிருந்தால் தமிழகத்தில் 500 பிணங்கள் விழுந்திருக்காது, தமிழகத்தின் அழுகுரல் உலகத்தின் காதுகளுக்கு எட்டியிருக்காது, தமிழகத்தில் எண்ணற்ற வீடுகள் எழவு வீடுகளாக மாறியிருக்காது. எண்ணற்ற தாய்மார்கள் மஞ்சள் குங்குமத்தை இழக்க வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டிருக்காது. 1967 பொதுத் தேர்தலில் காங்

நிலைமையில் குத்தகை பாக்கிக்காக முன்னாலிருந்த காங்கிரஸ் அரசாங்கம் இருந்த போதும், சரி, இப்போதும் கூட முன்சீப் கோர்ட்டுகளில் வழக்குப் போட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மகசூலை ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்தக் குறுவையில் விவசாயிகள் பலயிடங்களில் கடன் வாங்கி பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கினார்கள். அப்படி இன்றையதினம் உற்பத்தியை பெருக்கியவுடன் கடந்த காலத்தில் உற்பத்திச் செலவிற்காக வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், அடுத்த சாகுபடிக்கு வித்தில்லாமல், உழவு மாடு வாங்கப் பணம் இல்லாமல் இருக்கும் நிலையில் ஜப்தி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விளையாத காரணத்தினால் குத்தகை பாக்கி ஏற்பட்டிருப்பதன்மீது நடவடிக்கை எடுக்காதிருக்க, எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கும்படி அரசாங்கம் உடனடியாக உத்தரவு பிறப்பிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். சாகுபடிதாரர்களின் பாதுகாப்புப்பற்றி இந்த பேருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாகுபடிதாரர்களுக்குப் பாதுகாப்பு என்று கூறும்போது பதிவேடு என்ற முறையில் மட்டும் நிறுத்தப்பட்டிருக்கிறது. கனம் பக்தவத்சலம் அமைச்சரவை இருந்தபோது திட்டக் கமிஷனால் நியமிக்கப்பட்ட உப குழு நில சீர்திருத்தக் குழு ஒரு சிபார்சைச் செய்தது. அந்தக் குழுவின் சிபார்சை அன்றிருந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அந்தக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் விவசாய நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இந்த மன்றம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாரம் என்பது 75-ஆக இருக்க வேண்டும். அதேபோல் குத்தகை என்றால் 75 வார அடிப்படையில் குத்தகை நிர்ணயிக்கப்பட வேண்டும். சர்க்கார் கிஸ்தி வசூல் செய்யும்போது 25 வீதம் சாகுபடியாளரிடமிருந்து கிஸ்தி போல் வசூல் செய்து நிலச்சுவாந்தாரிடம் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் சம்பந்தப்பட்ட சாகுபடிதாரர் சம்பந்தப்பட்ட அந்த மகசூலை விற்றுவிட்டு அதற்குள்ள தொகையை எம்.ஓ. மூலம் கட்டிவிட வேண்டும். மேலும் என்ன செய்யவேண்டுமென்றால், ஒரு குத்தகைதாரரோ அல்லது வாரம்தாரரோ தன்னால் சாகுபடி செய்ய முடியாமல் நிலத்தை விட்டுக் கொடுத்தால் அந்த நிலம் அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குப் போகக் கூடாது. அந்த நிலம் வேறு நிலம் இல்லாத விவசாயியிடம் கொடுக்கப்பட வேண்டும். நிலச்சீர்திருத்த உப குழுவின் சிபார்சை தமிழக அரசு நிறைவேற்றுவதில் தப்பு எதுவும் இல்லை, அதை நிறைவேற்ற முடியும். அந்த முறையில் இப் பிரச்னையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கோவில் நிலங்கள் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு மடங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கோவில்கள், மடங்கள் இவைகளின் நிலங்களையும் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கான முறையில் நாம் உத்தேசித்திருக்கும் சட்டத்தில் இவற்றையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விவசாயத் தொழிலாளர் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கம் சென்ற பிறகு தமிழகத்தில் ஒரு புதிய அரசு வந்தது. பூந்தாழங்





குடி என்ற இடத்தில் ஒரு சம்பவம் ஏற்பட்டு பக்கிரி என்ற ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தத் துப்பாகிப் பிரயோகத்திற்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று பேசிக் கொள்ளப்படுகிறது. ஊகிக்கவும் முடிகிறது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் இந்த அரசுக்கும் சம்பந்தமுண்டா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். நாங்கள் நீதி விசாரணை வேண்டுமென்று, ஒரு நீதிபதி மூலம் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோரினோம். ஆனால் அப்படிச் செய்வதற்கு இன்னும் முயற்சி எடுக்கவில்லை என்பது குறித்து வருந்துகிறேன். சிலம்பொடித்து நீதியைப் புகட்டிய கண்ணகியைப் பற்றி நாம் பெருமையோடு பேசும்போது நீதி விசாரணை நடத்த தயங்குவானேன்? அப்படி ஒரு நீதி விசாரணை ஏற்பட்டால் அதிலுள்ள குற்றவாளிகள் யார், துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்ற விவரங்கள் பூராவும் வரும். அதன் மூலம் ஒரு தீர்வு காண முடியும். அடுத்தபடியாக, துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்துபோன அந்த விவசாயத் தொழிலாளியின் குடும்பம் இன்று பரிதவிக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் உள்பட 110 பேர்கள் மேல் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. கண்டிஷனல் பெயில் கொடுத்திருக்கிறார்கள். அதில் 16 பேர்கள் மன்னார்குடியில் இருக்கிறார்கள். ஆனால் அந்த வழக்கை வாபஸ் வாங்கவில்லை. விவசாயத் தொழிலாளி உயிரையும் கொடுத்தான்; மற்றவர்கள் தண்டனைக்கும் ஆளாகியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரை மாற்றக்கூடவில்லை. இந்த நிலையில் மாறுதல் வரவேண்டுமென்றும் அரசு கவனம் செலுத்தி அந்த வழக்கை வாபஸ் வாங்கவேண்டுமென்று கூறுகிறேன்.

போலீஸ் தர்பார் இப்போது ஏராளமாகி இருக்கிறது. நான் இப்படிச் சொல்லும்போது என்னுடைய தோழமைக் கட்சி அரசாங்கம் அதற்கு உடந்தையாக இருப்பதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம். காங்கிரஸ் அரசாங்கத்தாலும், ஏகாதிபத்தியத்தாலும், பயிற்றுவிக்கப்பட்டது போலீஸ் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியுமா கிவளூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரைப் பற்றி? இன்றைக்கும் நேரடியாகப் பார்க்கலாம். நாகப்பட்டணம் தாலுகாவில் நாம் என்ன சொன்னாலும் தகராறு செய்து கொண்டிருக்கிறார். தஞ்சை மாவட்டத்தில் பெரிய காங்கிரஸ் தலைவரும், பெரிய நிலப்பிரபுவுமான திரு. மனைத்துணைநாத தேசிகர் அவர்களின் கையாளாக, பணியாளாக வேலை செய்கிறார்.

மன்னார்குடி ஒப்பந்தம் நடந்தது. நாங்களெல்லாம் கையெழுத்திட்டோம். மாவட்டக் கலெக்டர் முன்னிலையில் அனைவரும் பேசி மன்னார்குடி ஒப்பந்தத்தை நிறைவேற்றினோம். அதை கிராமப் புறங்களுக்குக் கொண்டுவரும்போது திரித்துப் பேசுகிறார்கள். மாவட்ட கலெக்டர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தில் நாகப்பட்டணம் அடிஷனல் கலெக்டருக்கே ஒரு குழப்பம் இருந்தது. அது அமலுக்கு வராமல் இருந்தது. நானே அதைப் பற்றி விவாதித்து அமலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தேன்,

[திரு. கோ. பாரதிமோகன்] [1968 பிப்ரவரி 13

நன்னிலம் தாலூகாவில் இருக்கிற தாசில்தார், ‘மன்னார்குடி ஒப்பந்தத்தின் நகல் எங்கே?’ என்று அவரிடம் கேட்டால், ‘இல்லை’ என்கிறார். ‘ஆஃபீசில் இருக்கிறதா?’ என்று கேட்டால், ‘ஏதாவது ஃபைலில் புகுந்து கொண்டிருக்கும்’ என்கிறார். ‘மன்னார்குடி ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்ன?’ என்றால் தடுமாறுகிறார். அதிகாரிகளுடைய குழப்பம் எதில் இருக்கிறது என்றால் உழவனாக இருக்கிறவர்களுக்கு, கூலிக்காரர்களாக இருக்கிறவர்களுக்கு அத்துக் கூலிக்காரர்களாக இருக்கிறவர்களுக்குப் பாதகமாக இருக்கிறதே தவிர, நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக இருக்கிறது. இந்த நிலைமை நீடிப்பதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலையில் மன்னார்குடி ஒப்பந்தம் அமலாகிக் கொண்டிருக்கிறது. இப்போது இரண்டாவதாகச் சம்பா அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை அமலாக்குவது சிரமமாக இருக்கிறது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையும் கடித்தது என்று சொல்லுவது போல பூந்தாழங்குடியில் சுட்டு, நன்னிலத்தில் ஒப்பந்தத்தை அமல் செய்யாமல், குற்றாலம் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கடலங்குடி விவசாயத் தொழிலாளி ஒருவரிடத்திலிருந்து தான் கம்யூனிஸ்ட் கட்சியில் இல்லை என்று எழுதி வாங்கும் நிலைமைக்கு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் போலீஸ்காரர்களைக் கண்டிக்க வேண்டும், அவர்கள் சரியான நிலை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்யச் சட்டம் கொண்டு வர வேண்டும். அறுவடைக் காலத்தில் கூலி எவ்வளவு, உழவுக் காலத்தில் கூலி எவ்வளவு, பெண்களுக்குக் கூலி என்ன என்று இப்படியாக ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அப்படிச் சட்டத்தை நிறைவேற்றினாலும் அதை அமலாக்கச் சிரமப்பட வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் நல்ல முறையில், அமலாக்கும் முறையில் சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படி வரும்போது அரசாங்கம் தொழில் கொள்கையிலும், தொழிலாளர் கொள்கையிலும், விவசாயத் தொழிலாளர்கள் கொள்கை பற்றியும் கறாரான கோட்பாடான ரீதியில் முடிவுக்கு வந்தாக வேண்டும். அப்படி வந்து விட்டால், சட்ட மூலமாகப் பிரச்னையைத் தீர்க்க முடியும். அப்படித் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவும் முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லாப் பத்திரிகைகளும் சேர்ந்து ஒரு பிரசாரத்தை தொடுத்து வருகிறது. அதாவது இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் தகராறு செய்கிறார்கள் என்று . திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டும், ஒற்றுமை உடைய வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். எங்களுக்குள் அபிப்பிராயபேதம் இருக்கலாம். பிரச்சனைகள் மீது நாங்கள் அபிப்பிராயம் சொல்லுவோம். அவசியம் ஏற்படுமானால் கடுமையாகவும் சொல்லுவோம். அதில் தப்பில்லை. ஆனால் அடிப்படைக் கோட்பாட்டை விட்டுக் கொடுக்க மாட்டோம். மத்திய பேரரசு



1968 பிப்ரவரி 13] [திரு. கோ. பாரதிமோகன்]

காங்கிரஸ் அல்லாத அரசுகளை, கேரள அரசையும், தமிழக அரசையும் குறி பார்த்துக்கொண்டிருப்பது தெரியும். காங்கிரஸ் மத்திய அரசாங்கத்தினால் போதுமான காரணங்கள் கற்பிக்க முடியாவிட்டாலும், ஒன்று மட்டும் கூறுகிறேன். ஆரம்பப் பாடத்தில் வருகிற கதையில் ஒரு ஓநாய் உயரத்தில் இருந்து கொண்டு தண்ணீர் குடித்துவிட்டு, கீழே இருக்கிற ஆட்டுக் குட்டியைப் பார்த்து, ‘நீதான் தண்ணீரைக் கலக்கினாய் என்று கூறிவிட்டு, ஆட்டுக்குட்டியைக் கடித்தது போல தமிழக அரசின் மீதும், கேரள அரசின் மீதும் எப்போதும் கவனத்தோடு இருந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறது. கோயம்புத்தூரில் போலீஸ் முகாமிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும். எந்தவிதமான கருத்து வேறுபாடு இருந்தாலும், அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக நிற்கக் கூடிய, நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாக நிற்கக் கூடிய, பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக நிற்கக் கூடிய மத்திய அரசை எதிர்த்துப் போராட்டத்தை நடத்த வேண்டும். ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்ற, காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்களும், காங்கிரஸ் அல்லாத கட்சிகளைப் பின்பற்றுகிறவர்களும் வீரத்தோடு நிற்க முன்வர வேண்டும். மந்திரிசபை காத்துக்கொள்ளும் என்று இருக்கக் கூடாது. தலைவர்கள் மட்டும் கவனித்துக் கொள்வார்கள் என்று இருக்க கூடாது. இந்த அடிப்படையில் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சி. நரசிம்மன்: மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, மேன்மைமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் என் கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் முக்கியமாக நாட்டிலே நிலவிய மிகப் பெரும் பிரச்னையாக இருந்த மொழிப் பிரச்னையில் மிக அருமையான கருத்துக்களை, அரசின் கருத்துக்களை, தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு மொழிப் பகுதியினர் மீது மற்றொரு மொழிப் பகுதியினர் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்பதற்காக நாட்டில் தமிழும், மற்ற தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக இருந்தால் சிரமம் என்று பலர் கருதுகிறார்கள். அதனால் எப்படிச் சிரமம் இருக்கும் என்று தெரியவில்லை. செலவு அதிகம் ஆகும் என்றால் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ஒரு சில கோடிகள் செலவு ஆனாலும் பரவாயில்லை. செலவு அதிகம் என்று கூறுவது தவறாகத் தெரிகிறது. பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகவேண்டுமென்றால் நிர்வாகத்தில் குழப்பம் ஏற்படாதா என்று கேட்கிறார்கள். நிர்வாகத்தில் குழப்பம் ஏற்படும் என்று சொல்ல முடியாது. சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. சிறிய நாட்டில் நான்கு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற மலேஷியாவில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. இப்போது உலகெங்கும் இந்த மாதிரி பல மொழிகள்

ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. கனடா, போன்ற நாடுகளில் இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, பல தரப்பட்ட மக்கள் இருக்கும் இந்த நாட்டிலே, வேறு வேறு இனங்களைக் கொண்ட நாட்டிலே, 14 மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பது தவறாக இருக்காது என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலே பாதுகாப்பு, அயல் நாட்டுத் துறை, போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளை மட்டும் விட்டு, மற்ற அதிகாரங்களை ராஜ்ய சர்க்கார்களுக்கு மாற்றினால் அத்தகைய குழப்பங்களோ அல்லது செலவுகளோ ஏற்படாது என்று நான் கருதுகிறேன். எனவே, அது வரையில், அத்தகைய சூழ்நிலை ஏற்படும் வரையில், ஆங்கிலம் மட்டுமே தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று கவர்னர் பெருமான் தெரிவித்திருக்கிறார். ஆங்கிலம் மட்டுமே தான் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் காரணம், இந்தி ஆட்சி மொழியாக இருந்தால், ஒரு பகுதி மக்களுக்கு மட்டும் அனுகூலமாக இருக்குமே தவிர, மற்றப் பகுதி மக்களுக்குப் பெரும் சுமை என்று நாம் மட்டுமல்ல, மத்திய சர்க்கார் உள் துறை அமைச்சர் அவர்களே கூட பட்டவர்த்தனமாகப் பாராளுமன்றத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறார். இந்தி பேசாத மக்கள் மீது அது ஒரு சுமைதான் என்று அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒத்துக்கொண்டு ஒரே நாட்டிலே ஒரே இன மக்கள் என்று சொல்லிக்கொள்கிற நாம் ஒரு பகுதி மக்கள் மீது சுமை இல்லாமல் அவர்களுக்கு வெகு சுலபமாக்கிவிட்டு, அதே சமயத்திலே மற்ற பகுதி மக்கள்மீது
மு. ப. 11-30 மட்டும் சுமையை ஏற்படுத்துகிறார்கள் என்றால் அது என்ன ஜனநாயகம் என்பது புரியவில்லை. ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் ஆங்கிலம்தான் இந்தியா பூராவிலுமே சம நிலையிலே பரவியுள்ள மொழியாக இருக்கிறது. எனவேதான் அது ஆட்சிமொழியாக இருந்தால் அது ஒரு சுமையாக இருக்காமல் சமமாக இருக்கும். பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக வருகின்ற வரையிலே ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று சொல்வதிலே பொருளும் இருக்கிறது, ஜனநாயக முறைப்படி அத்தனை மக்களுக்கும் அதிலே உரிமையும் இருக்கிறது. ஆனால் அதே சமயத்திலே இந்தி நாட்டினுடைய ஆட்சிமொழியாக ஆகுமானால் அது ஒரு பகுதி மக்களுக்கு மட்டும் அனுகூலமாக அமைவது மட்டுமல்ல; இந்தி இந்த நாட்டினுடைய ஆட்சிமொழியாக ஆகுமானால் அந்த மொழியைத்தான் பலர் விரும்பிக் கற்பார்கள். உதாரணமாக நாம் சொல்லவேண்டுமென்றால், உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவர் ஒன்று கூறினார். வேல்ஸ் மொழி அழிவதற்குக் காரணம் ஆங்கிலம் ஆட்சிமொழியாக்கப்பட்டதுதான்; ஒரு நாட்டு மொழியை அழித்துவிட்டது ஆங்கிலம்தான் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேமாதிரி இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவோமானால் அது தமிழை அழிக்க வகை செய்யும். எப்படி முன்னால் சமஸ்கிருதம் தமிழிலே அதிகமான அளவுக்குப் புகுந்து





இடம் பெற்றதோ, அதேமாதிரி ஆகிவிடும். பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால், ஏன், இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலத்திலேதான் கற்றவர்களும் பெரியவர்களும் பேச விரும்பினார்களே ஒழிய தமிழிலே பேசக்கூட அவர்கள் விரும்பாமல் இருந்தார்கள். தமிழிலே மேடைகளிலே பேசினால் தரக்குறைவு என்று அப்பொழுது கருதினார்கள். அந்த அளவுக்குத் தமிழ்மொழிப் பற்றைக்கூட இழந்திருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திற்குத் தமிழினுடைய அருமையையும், பெருமையையும் எடுத்துக் காட்டியது மட்டுமல்லாமல் மேடைகளிலே எந்த அளவுக்குத் தமிழை வளர்க்க முடியுமோ அந்த அளவுக்கு மக்களை எல்லாம் கவரக்கூடிய முறையிலே எந்த அளவுக்கு வடமொழிச் சொற்கள் அகற்ற முடியுமோ அந்த அளவுக்கு அகற்றி, நமக்கெல்லாம் தமிழிலே பற்று ஏற்படச் செய்தார்கள். இந்தி ஆட்சிமொழியாக ஆகுமானால் இந்தியைத்தான் கற்கவேண்டி இருக்குமே தவிர, அதிகமான அளவுக்கு தமிழின் மேல் அதுதான் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையும் உருவாகும். எனவே இந்தி ஆட்சிமொழி ஆவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் ஆட்சிமொழியாக என்று ஆகிறதோ அன்று நாம் இந்தியையும் ஏற்றுக் கொள்ளலாம். தமிழ் ஆட்சிமொழியாக இல்லாதபோது நாம் இந்தியைமட்டும் ஆட்சிமொழியாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் எடுத்துப் பார்த்தால் தமிழ்தான் மூத்த மொழி என்பதை நாம் பார்க்கலாம். அப்படி மூத்தமொழியாக தமிழ் இருக்கும் பொழுது ஏதோ சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட இந்தியை நாம் ஏற்றுக்கொள்வதில் என்ன பொருள் இருக்க முடியும் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

1965-ஆம் ஆண்டிலே மாணவர்கள் போராட்டம் நடந்த பொழுது, நான் மாணவர்கள் பெரும் போராட்டத்தை நடத்தினார்கள் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், மாணவர்கள்தான் அந்தப் போராட்டத்தை நடத்தினார்களே தவிர, அதற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான். மாணவர்கள் அமைதியான முறையிலேதான் என்னுடைய தொகுதியிலே ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தை எதிர்த்து அப்பொழுது இருந்த ஆட்சியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அதன்பயன் 6 பிணங்களைத்தான் நாம் ஆரணியிலே பார்க்க முடிந்தது. மாணவர்கள் அமைதியான முறையிலேயேதான் ஊர்வலம் சென்றார்கள். அவர்களை அங்கே செல்லாதே, இங்கே செல்லாதே என்று தடுத்ததால் துப்பாக்கிச் சூட்டின் விளைவாக 6 பிணங்களைத் தான் நாம் பார்க்க முடிந்தது. மாணவர்கள்மீது வழக்குத் தொடரப்படவில்லை. சமூக விரோதிகள் சிலரையும் சேர்த்து கழகத்தினுடைய முக்கியஸ்தர்களையும் சேர்த்து வழக்கு போட்டார்கள். அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் இதைப்பற்றிச் சொல்லும்பொழுது ஆரணியில் துப்பாக்கிச் சூடு நடந்தது, இல்லையென்று சொல்லவில்லை; காரணம் என்னவென்றால் கொள்ளை, கொலை செய்ய முயற்சித்தார்

கள் என்று சொன்னார்கள். அவர்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பெரும்புள்ளிகள் இருந்தார்கள் என்பதை மறுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதற்குப் பதில்சொல்லும் வகையில் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மறுத்துச் சொல்வதற்கு இது இடமல்ல, அதை மறுத்துச் சொல்லவேண்டிய இடம் நீதி மன்றம், அங்கே நீதி கிடைக்கும் என்று சொன்னார்கள். அதே மாதிரி நீதிமன்றத்திலே நீதியைப் பெற்றோம்; திராவிட முன்னேற்றக் கழக முக்கியஸ்தர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. மாணவர்கள் செய்தார்களா இல்லையா என்பது பெரிய பிரச்னை. மாணவர்களைத் தடுத்து பிணங்களாக சுட்டு வீழ்த்திவிட்டு அதற்காக திராவிட முன்னேற்றக் கழக முக்கியஸ்தர்களின்மீது வழக்குப் போட்டார்கள். இப்பொழுது ஆட்சிமொழி மசோதாவும், ஆட்சிமொழித் தீர்மானமும் நிறைவேறிய பிறகு மாணவர்களுடைய மனதிலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்கள் உள்ளத்திலே என்ன இருக்கிறது என்பதையும் பல நாட்களாக நானும் பார்த்தேன்—என்ன வேண்டும், பிரச்சனை என்ன, எந்த வகையிலே அது தீர்க்கப்பட வேண்டுமென்பதையெல்லாம் பற்றி மாணவர்களிடம் கேட்டார்கள்; அவர்களை மட்டும் கேட்டார்கள் என்று நான் சொல்லவில்லை, பல பெரியவர்களையும் கேட்டார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் என்ன சொன்னார்கள்? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் மொழித் தீர்மானத்தை எதிர்த்தும் காங்கிரஸ் நண்பர்கள் மத்திய சர்க்காரிலே அதை எதிர்த்தும் ஏன் ஓட்டளித்திருக்கக்கூடாது? ஆனால் மொழித் தீர்மானத்திற்கு எதிர்த்து வாக்களித்தவர் இப்பொழுது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக இருக்கிறார். ஆனால் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் அதை எதிர்க்காமல் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். எனவே, மொழித் தீர்மானத்தை வாபஸ் பெற வேண்டும். தமிழையும் ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும்; அந்த வகையிலேதான் நாம் இந்த மொழிப் பிரச்னையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலேதான் மொழித் தீர்மானம் அமைய வேண்டுமென்ற முறையிலே ஆளுநர் அவர்கள் தமிழையும் மற்றத் தேசிய மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்க வேண்டுமென்று தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருப்பதுபற்றி நான் பாராட்டி, அவர்களுடைய உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தையொட்டி நம்முடைய கட்சியினுடைய திருத்தத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்மொழிய அதை திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் வழி மொழிந்து பேசுவார்கள்.





* **Dr. H. V. HANDE** : Sir, with the permission of the Deputy Speaker, I wish to move the following amendment to the motion of thanks to the Governor's Address :—

*Add* the following at the end :

'But on such consideration this House regrets to note that the Governor's Address does not make any mention of the fact that this Government has caused great alarm in the minds of the students as well as the parents by threatening to remove English from medium of instruction in Government colleges from the next academic year. This House feels that a measure of this type contemplated by this Government does incalculable harm to the furtherance of the prospects of the student community for higher studies and also in the matter of seeking openings in the Centre. The Governor's Address is also silent on the protection given to the minority languages such as Telugu, Urdu, Malayalam and Kannada, all of them being languages regularly in vogue even during the Madras Presidency (old composite State)'.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பேரவையின் துணைத் தலைவரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தப் பிரேரணையை நான் முழு மனதுடன் ஆதரிப்பதுடன் ஆளுநரின் உரையை ஆதரித்து நானும் சில வார்த்தைகள் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழித்துறையில் ஏற்பட்ட சிக்கலில் இருந்து மாணவர் சமுதாயம் விடுபட்டுக் கல்வியில் நாட்டம் செலுத்த வேண்டுகோள் விடுத்து, ஆங்கிலம் பயிற்சி மொழியிலிருந்து மாறினாலும் தரம் குறையாமல் ஆங்கில அறிவு வளரத் தக்க முயற்சி எடுத்துக் கொள்வதாகக் கூறியது பாராட்டுதற்குரியதாகும்.

மாணவர்கள் அரசியல் சுழல்களில் சிக்கித் தங்கள் பிற்காலத்தைப் பாழ்படுத்திக் கொள்வதுடன் தங்கள் மக்கள் படித்துப் பட்டம் பெற்றுத் தங்களைக் காப்பார்கள் என்று எண்ணி ஒழுங்காக உண்ணவும், உடுக்கவும் கூட வாய்ப்பற்ற எண்ணிறந்த ஏழைப் பெற்றோர்களின் பொருளாதாரம் நசிப்பதுடன் இந்தக் கிளர்ச்சிகளால் பொதுச் சொத்துக்களின் நாசம், பொதுமக்களின் நேரம், காலம், உற்பத்தித் திறன் அனைத்துமே அழிவுறும் நிலையில் உள்ளது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தக்காரைக் கொண்டு அறிவு புகட்டி மாணவர் சமுதாயத்தை நல்வழியில் செலுத்த ஆவன செய்யத் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

ஆளுநர் உரையில் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அப்போதே சிறு நிலச் சொந்தக்காரர்களையும் பாதுகாக்கச் சட்டத்திலுள்ள தொல்லையையாவது நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், வருவாய்க்கு மிஞ்சிய செலவுக்கு வழிவகுப்பது என்றுமே ஆபத்தில்தான் கொண்டு போய்விடும் என்பதில் ஐயமில்லை.

அளித்திருக்கிறீர்கள். ஆனால் அதற்குப் பிறகும் ஒவ்வொரு வரியையும் படிப்பதிலிருந்து அப்படி ஒரு மரபு இருக்கலாமென்று அவைத் தலைவரவர்கள் தீர்ப்பளிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** துணைச் சபாநாயகரவர்களே, இந்த மன்றத்தில் சாதாரணமாக கனம் உறுப்பினர்கள் முதல் பேச்சு பேசும்பொழுது எழுதி வைத்துக்கொண்டு படிப்பது வழக்கம். கனம் உறுப்பினரவர்கள் தலைசிறந்த சொற்பொழிவாளர். அவர்கள் இப்பொழுது முழுவதுமே எழுதிப் படிக்கும் காரணத்தினால் புதிய மரபு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் வேழவேந்தன் அவர்களுக்கு இருக்கலாம். அதுசம்பந்தமாக சட்டமன்றத்தில் மரபுகள் மாற்றம் செய்யப்பட்டுவிட்டதா என்பதைப்பற்றி தெளிவாக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கனம் உறுப்பினர்கள் சாதாரணமாக இந்த மன்றத்தில் தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதுதான், இன்றியமையாத நோக்கம். அந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையில் சிலருக்கு அந்த நேரத்திலே சொல்லக்கூடிய ஆற்றல் இருக்கும், சிலருக்கு சில கருத்துக்களை ஒழுங்காக எடுத்துச் சொல்லக் கூடிய எண்ணமிருந்தாலும் சொல்லக்கூடிய ஆற்றல் இல்லாத காரணத்தால் இந்த மாமன்றத்திலே சொல்லக்கூடிய கருத்துக்களைப்பற்றி சில குறிப்புக்களையோ, அல்லது நீண்ட முறையிலேயோ வைத்துப் படிப்பதில் தவறு இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தவறு இல்லை என்று கூறுகிறீர்கள். இவ்வாறு பார்த்தால் எங்களில் சிலர் கூட பேச்சைப் படிப்பதாக இருக்கலாம். எனவே சபாநாயகரவர்கள் இதைப்பற்றிச் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு படிப்பதே சம்பிரதாயமாகிவிட்டால் அதுவே புதிய மரபாகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மரபு என்று சொல்லுவது நம்முடைய நடைமுறையை நல்ல முறையில் ஒழுங்குப்படுத்திக் கொள்ளுவதற்காக ஏற்படுத்திக் கொள்ளுகின்ற வழக்கம்தான். அந்த மரபை ஒட்டி நான் முன்னமே தெரிவித்த கருத்தின்படி அவரவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்றவாறு முறைகளை அமைத்துக் கொள்ளலாம். அவர் கூறுவதிலே இந்த சபையினுடைய கௌரவத்தைக் கெடுக்கக் கூடிய நிலையில் ஏதாவது இருந்தால் அதை மறுக்கலாம். ஆற்றல் இருக்கின்றவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற பொழுதே ஒழுங்கு படுத்திச் சொல்லுவார்கள். சிலருக்கு அதை ஒழுங்குப்படுத்திச் சொல்லக் கூடிய ஆற்றல் இருக்காது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய உரைகளைப் படிப்பதுதான் வழக்கம். மரபுக்கு என்று கொண்டால் கூட நான் 1939-லே அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'Written or typed speeches are allowed when the subject is important and accuracy of expression is desired.'





இதுதான் முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்பு. முன் தீர்ப்பு எப்படி இருந்தாலும் அந்தத் தீர்ப்புப் படியே ஒட்டிச் செல்ல வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கத் தேவை இல்லை. சௌகரியத்திற்கேற்றவாறு, நிலைமைகளுக்கேற்றவாறு, தேவைக்கேற்றவாறு மரபுகளையும் மாற்றுவதிலே தவறில்லை என்றே நான் நினைக்கிறேன். ஆகவே சில உறுப்பினர்களுக்கு தங்களுடைய கருத்துக்களைச் சரளமாக எடுத்துக் கூற முடியாது என்ற நிலையிலே எழுதிப் படித்தால்தான் முடியும் என்று சொன்னால் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாக அப்படிப்பட்ட முறையை மேற்கொள்ளுவது தவறில்லை என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட சட்டசபைகளிலே தங்களுடைய கருத்துக்களை அவ்வப்பொழுது அதிலே ஈடுபட்டு தெரிவிக்க வேண்டுமென்ற முறையிலேதான் எழுதிப் படிக்கக் கூடாது என்கிற ஒரு மரபு கொள்ளப்பட்டது. இல்லாவிட்டால் வெளியிலே திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எழுதிப் படித்துவிடுவதால் அவருடைய கவனமோ எண்ணமோ இங்குள்ள உண்மையான நிலைகளுக்கு ஏற்றவாறில்லாமல் அவருடைய பிரதிநிதித்துவம் உண்மையாக இருக்காது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் கூடுமான வரையில் எழுதிப் படிக்கக் கூடாது என்னும் மரபு மேற்கொள்ளப்பட்டது. சிலபல கருத்துக்களை எடுத்து எழுதிச் சொல்லுகின்ற நிலையில் அதில் தவறு இருக்காது. ஆனால் மிகமிகக் குறைந்த ஆற்றல் கொண்டுள்ளதனாலே எழுதி வைத்துக் கொண்டு தான் படிக்க முடியும் என்ற நிலையிலே கனம் உறுப்பினர்கள் பேசுவதில் தவறில்லை என்று கனம் அவைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அந்த நிலையிலேயும் இல்லை. அவர்கள் மிக்க ஆற்றல் படைத்தவர்கள். அழுத்தம் திருத்தமாகவும் தெளிவாகவும் இந்த மன்றத்திலே பல தடவை தன்னுடைய கருத்தை அவர்கள் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆற்றல் பெற்றவராக இருக்கிற காரணத்தால் அவர் தொடர்ந்து படிக்கத் தேவை இல்லை; அவசியம் இல்லை. படிக்காமலேயே எடுத்துச் சொல்லக் கூடிய ஆற்றல் உடையவராக இருக்கிறார்கள் என்ற முறையிலே தான் கனம் உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். ஆகவே, குறிப்புகளை எழுதிப் படிப்பது என்பது சாதாரண ஒன்றுதான். ஆனால் கூடுமான வரையில் எழுதிப் படிக்காமல் இருக்கிற அந்த மரபைக் காப்பாற்றி மேற்கொள்ளுவது நல்லது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே; கனம் கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் 10 நிமிடத்திலே, 12 நிமிடத்திலே தன்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டதனாலே தான் அவர் எழுதி வைத்துக் கொண்டு பேசினார். நேற்றுக் கூட இதைப் பற்றி அவர் என்னிடத்தில் கூறினார். குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டுமென்று நம்முடைய நாவலர் அவர்கள் கூறிய போல் டைம் ரெஸ்ட்ரிக்ட் பண்ணுவதாலே, இந்தப் பிரச்சினை வந்தது. ஆகவே தான் அவர்

ஆனமுதலில் அதிகம் செலவானால்
மான மிழந்து மதிகெட்டுப்—போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

என்ற பொன்மொழியை நினைவு கூற விரும்புகிறேன். செலவைப் பெருக்கிக்கொண்டே போய் அதனைச் சரிக்கட்ட வரியைக் கூட்டிக் கொண்டே போவது தீய விளைவுகளுக்கே வழிவகுக்குமென எச்சரிக்க விரும்புகிறேன். ஆலைகளுக்கு விற்கும் கரும்புகளுக்கு 3.5 சதம் இருந்த விற்பனை வரி சென்ற ஆண்டு 4 சதமாக ஆக்கப் பட்டு இப்பொழுது 7 சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல் வெல்லத்துக்கு 3 சதம் பலமுனை விற்பனை வரி புகுத்தப் பட்டிருக்கிறது. இவை உற்பத்தியாளர்களுக்கும், உண்பவர் களுக்கும் எவ்வளவு சிரமத்தையும், கஷ்டத்தையும் கொடுக்கும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

உணவமைச்சர் அவர்கள் கரும்பை வெல்லம் ஆக்குவதால் சர்க்கரைச் சத்துப் பெரும்பாலும் வீணாகப் போய் எரிக்கப்பட்டு விடுகிறது என்று கூறினார்கள். கரும்பை எடுத்துக் கொண்டால் ஒரு டன் கரும்பிலே வெல்லம் செய்தால் சுமார் 130 கிலோ வெல்லம் கிடைக்கும். ஆனால் ஒரு டன் கரும்பைச் சர்க்கரையாக ஆக்கினால் ஒரு குவிண்டால் 100 கிலோ சர்க்கரைதான் கிடைக்கும். இதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வெல்லத்திலே இருக்கின்ற மொலாசஸ் என்னும் நல்ல உணவுச் சத்தைக் களைந்து வெள்ளைச் சர்க்கரை ஆக்க அந்நியச் செலாவணியை ஏராளமாகச் செலவழித்து சர்பளா இறக்குமதி செய்கிறோம். வெள்ளைச் சர்க்கரையை வெள்ளைப் பாஷாணம் என்று காந்தியடிகளும் புருஷோத்தமதாஸ் தாண்டனும் கூறியிருக் கிறார்கள்.

அடுத்து, பலமுனை விற்பனை வரியைப் புகுத்துவதிலே பார்த் தால் கரும்பை வெல்லமாக மாற்றுகிற பொழுது அதற்கு விற்பனை வரி உண்டு என்றிருக்கிறது. கரும்பாக இருந்தால், அது விவசாய பொருளாகக் கருதி அதற்கு விற்பனை வரியில்லை. வெல்லமாக மாற்றுகிறபொழுது விற்பனை வரி உண்டு, இது சரியா? பருத்தியை எடுத்துக் கொண்டால் பருத்திக் கொட்டைக்கு விற்பனை வரி கிடையாது. தயவு செய்து இதிலே கொஞ்சம் கவனம் செலுத்திப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பருத்தியை ஆலையிலே கொடுத்து கொட்டையாக மாற்றினால் அவைகளுக்கு விற்பனை வரி இல்லை. ஆனால் கரும்பை எடுத்துக் கொண்டால், குடிசைத் தொழி லாகக் கருதி கரும்பை வெல்லமாக ஆக்கினால் அவர்களை வியாபாரி களாகக் கருதி விற்பனை வரி செலுத்த வேண்டுமென்று கூறுவது முறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் . . .





**திரு. கா. வேழவேந்தன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், உறுப் பினர் அவர்கள் கட்டுரை எழுதி வைத்துப் படிப்பது போல் படிக் கிறார்கள். இப்படி அவையிலே படிப்பது வழக்கமா என்று அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்புகளை மட்டுமே வைத்திருக்கிறார் என கருதுகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரியைக் குறைப்போம், விலைவாசிகளைக் குறைப்போம் என்று சொன்ன வாக்குறுதிகளை இந்தச் சமயம் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். வரியைக் கூட்டி அதன் மூலம் விலையும் தானே உயர வழி வகுப்பது முறையா? சிந்திக்க வேண்டுகிறேன்.

நாங்கள் தோழமைக் கட்சிக்காரராக இருந்தும் குறை கூறுவ தாக எண்ணக் கூடாது. இங்கு கூறுவதைக் காட்டிலும் எங்கள் கருத்தைத் தனித்துக் கூறுவதுதான் நல்லது என்பதை நான் உணர்வேன். ஆனால் தனித்துக் கூறுவதை அமைதியாகக் கேட்கும் வாய்ப்பே எங்களுக்கு கிடையாமையால் தான் நகுதற் பொருட் டன்று நட்டல் என்ற வள்ளுவன் வாக்குப்படி மிகுதிக்கண் மேற் சென்று கூற முற்படுகின்றோம். ஆகவே நம் அனைவரின் ஆக்கத் துக்கும் ஊக்கத்துக்கும் முன்னேற்றத்துக்குமே என் போன்றவர் கள் பேச்சுத் துணை புரியுமென்று நம்பி வேண்டாத வெறுக்கத் தக்கவர்களின் பேச்சென்று ஒதுக்காமல் செவிசாய்த்துச் சிந்திக்கு மாறு தலைவர் அவர்கள் மூலம் பணிவுடன் வேண்டுகிறேன்.

நமது நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் காரணம் வேளாண்மை உற்பத்தியில் போதிய நாட்டம் கொள்ளாமையே யென்று கூறப்பட்டது முற்றிலும் உண்மை. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்தால் அந்நியச் செலாவணியில் பஞ்சமே வந்திருக்காது. உற்பத்திப் பெருக்குக்குப் பல ஆலோசனைகளும் திட்டங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவையே முற்றிலும் ஏற்ற காரணங்கள் ஆகாது. உற்பத்திப் பொருளுக்கு நியாயமான கட்டுப்படியான விலை வேண்டும். இதில் முந்திய ஆட்சியாளர்களும் கவனம் செலுத்தவில்லை. இப்போதும் கவனிக்கப்படுவதில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ரயில் கரி உற்பத்தியாளர்கள் விலை ஏற்றினார்கள். விலை குறைத்து வாங்க சட்டம் போட முடிய வில்லை. ரயிலையே நிறுத்தினார்கள். ஏழை குடியானவர்களுக்குப் பாதுகாப்பு எங்கே கிடைக்கப்போகிறது. நான் சட்ட மன்றத்துக்கு வந்ததிலிருந்து உணவு தானியத்துக்கு விலை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளக் கேள்விமேல் கேள்வி போட்டு வருகிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயக ரவர்களே, நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பிறகும் வரிக்கு வரி அப்படியே அவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்புக்களை மட்டுமே வைத்திருக்கிறார் என்று தாங்கள் தீர்ப்பு

எழுதி வைத்துக் கொண்டு பேசினார். இப்பொழுது பேசிய நேரத்தையெல்லாம் சேர்த்து அவருக்குக் கூட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். இப்படி எழுதி வைத்துப் படிக்கக் கூடாது என்ற மரபு எப்படி உருவாக்கப்பட்டது என்று பார்த்தால், யார் வேண்டுமானாலும் எழுதித் தந்து விடலாம், அதைத் தங்களுடைய கருத்தாக உறுப்பினர்கள் பேசலாம். ஆனால், அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்ற முறையில் . . (மணி அடிக்கப்பட்டது).

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** யார் எழுதிக் கொடுத்ததையும் நான் படிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பிட்ட நேரத்தில் முடிப்பதற்காகத் தான் எழுதிக் கொண்டு வந்தேன்.

பல தொழில்களில் அனுபவம் பெற்ற உணவுக் கார்ப்பொரேஷன் முன்னாள் தலைவர் டி. எ. பாய் அவர்கள் கூட மிகத் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் போதுமான விலை கொடுக்க வேண்டும். உணவு மண்டலங்களாலும் போக்கு வரத்துக் கட்டுப்பாடுகளாலும் சமூக விரோதிகள் பயன் பெறுவார்கள் என்றும் உற்பத்தியும் குறைந்து உற்பத்தியானதும் நாசமுற்று உற்பத்தியாளர், உண்போர் அனைவருமே பாதிக்கப்படுவார்கள் என்றும் அழுத்தந்திருத்தமாக அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அது போலவே நமது முதலமைச்சரவர்களால் மிகவும் போற்றப்பட்ட போர்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் என்ஸ் மிங்கர் மிகச் சமீபத்திலே கூறி இருக்கிறார். உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்காத வரை உற்பத்தி பெருகவே பெருகாது என்று சமீபத்திலே அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலும் சென்ற ஆண்டு தொடக்கத்திலேயே என்னுடைய பேச்சில் நம் நாட்டின் இயற்கை வளங்களை உபயோகிப்பதன் மூலம் இறக்குமதி உரங்களை அதிகம் எதிர்பாராமல் குறைந்த செலவில் உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கும் வாய்ப்பை, அதிலும் பல்லாண்டுகளாக நான் செய்து கொண்டு வரும் முறையைப் பற்றி என்னுடைய ஆராய்ச்சிகளையும், அனுபவத்தையும் கூறினேன். அவைகளை எல்லாம் கூர்ந்து கவனிப்பதாக முதலமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஆனால் இதுவரை கவனிக்கப்படவில்லை.

'ஐந்து கோடி ரூபாய்க்குச் சற்று மேற்பட்ட செலவில் சென்னை நகரிலும் கோவையிலும் செயல்படுத்தப்பட்ட படியரிசித் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு ஓர் அருட் கொடையாக இருந்து வந்துள்ளது' என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. இது ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும். சுமார் ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் படியரிசித் திட்டத்தால் சுமார் 20 லட்சம்





மக்கள் பயன் பெறுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த 20 லட்சம் பேர்களும் முழுவதும் பயன் பெறவில்லை. நமது தமிழகத்தின் ஜனத்தொகையிலே 25 பேர்களுக்கு ஒருவர்தான் பயன் பெறக் கூடிய நிலையிலுள்ள இதற்கு 5 கோடி செலவாகின்றது என்று கூறப்பட்டது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் 31-12-67-லே திருச்சியிலே பேசும்பொழுது 10 கோடி செலவாகி இருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். 25 பேர்களுக்கு ஒருவர் விதம் போடுவதற்கு 10 கோடி செலவாகிறது என்றால் அனைவருக்கும் படியரிசி போட 200 கோடியோ 300 கோடியோ வேண்டியிருக்கும். இது நம்மாலே தாங்க முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டுப்புற நாதியற்ற ஏழை எளிய மக்களோடு ஒத்துப் பார்த்தால் சென்னையிலும் கோவையிலும் உள்ளவர்கள் எவ்வளவு உயர்ந்த வருவாய் பெறுகிறார்கள் என்பது சிந்தித்துப் பார்ப்பதற்கு உரியதாகும். ஏற்கெனவே வருவாய் உயர்ந்தவர்கள் நகர ஈட்டுப் படி பெறுபவர்கள் ஆண்டுதோறும் உயர்ந்த அலவன்ஸ் பெறுபவர்கள் நகர மக்கள். கிராமத்தில் வாழும் தொழிலாளிக்கு 2 ரூபாய், 3 ரூபாய் கூலி என்றால் நகரத்தில் வாழ்பவர்களுக்கு 3 மடங்கு, 4 மடங்கு மேலும் ஊதியம் கிடைக்கிறது. அப்படி இருக்கும் இவர்களுக்குக் குறைந்த விலையிலும் கிராமத்தில் வாழ்பவர்களுக்கு உயர்ந்த விலையிலும் பொருள்கள் கிடைக்கப் பெறுவது நினைக்கவே கஷ்டமாக இருக்கிறது. இங்கு குறைந்த விலையில் அரிசி கிடைக்கிறது; சர்க்கரை கிடைக்கிறது. அங்கு விலை உயர்வு மாத்திரம் அல்ல, கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. கிடைத்தாலும் நன்றாக இல்லை.

எனது அவினாசித் தொகுதியிலும் இன்னும் பல தொகுதிகளிலும் பொதுத் தேர்தலுக்குப் பின் தீபாவளிக்கு ஒரு லிட்டர் விதம் அரிசி ஒரே தடவை வழங்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தை நோன்புக்கும் கிடைத்துள்ளது. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிற அதே நேரத்தில் இந்தப் படி அரிசித் திட்டம் ஏழைகளுக்குக் கஷ்டத்தையும், நகர மக்களுக்கு மாத்திரம் லாபத்தையும் கொடுக்கிற முறையில் விநியோகிக்கப்படுவதைப்பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

கொள்முதல் செய்யும் கட்டுப்பாடு விலையால் ஏக்கருக்கு ரூ. 100 அல்லது ரூ. 200 கூட மிஞ்சாது. சில சமயம் அசலுக்கே கூட கட்டாது. ஆனால் இந்த நகர மக்கள் வாங்கித் தலையில் சூடும் பூ உற்பத்தி செய்பவர்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலும் வருவாய் கிடைக்கிறது. ஆகவே கொடுக்க சக்தி உள்ளவர்களிடமிருந்து நியாயமான விலை, உற்பத்திக்குப் போதுமான விலை வாங்கக் கூடாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தலைவர் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

கொள்முதல் கட்டுப்பாடுகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு அளவற்ற அதிகார வர்க்கங்களைப் பெருக்கிச் செலவுக்கு வழியைப் பெருக்கிக் கொண்டே போய் நேரிய வழியில் வரவுகாண

வழியின்மையால் அதிகார வர்க்கங்களையே கொண்டு சிறு சேமிப் பென்றும், பற்பல கடன் பத்திரங்கள் என்றும் திரட்டப்படும் கடன்கள் எல்லாம் முடிவில் ஏழைகளையே பாதிக்கிறது. பற்பல பர்மிட், லைசென்ஸ், கோட்டாப் பேர்வழிகளிடம் அதிகார தோரணையில் கடன் திரட்டப்படுகிறது. பற்பல துறையில் அதிகாரிகளின் பிடிப்பிலிருந்து தப்புவதற்கு ஏறக்குறைய தொழிலோ, விவசாயமோ செய்பவர்கள் அனைவருமே கசக்கிப் பிழியப்படுகிறார்கள். 'ஏ' லைசென்ஸ்தாரர் போன்றவர்களிடம் ஆயிரக்கணக்கில் அல்ல, லட்சக் கணக்கில் திரட்டப்படுகிறது. அவர்களை நேரிய முறையில் நியாய விலைக்குத் தரமான அரிசி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த முடியுமா?

நூல் மில் தொழில் நசித்து ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பல மில்களில் மின் கட்டணம் கட்ட முடியாத நிலையில் சென்ற மாதம் மின் இணைப்பும் கூட அகற்றப்பட்டது. அவர்களை மின் சாரக் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்பதை விடக் கொடுமை வேறு என்ன இருக்கிறது. . . (மணி அடிக்கப்பட்டது). குறிப்
12 நண் பகல் பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் எழுதிப் படிக்கிறேன். தயவு செய்து கொஞ்ச நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: தயவு செய்து கேளுங்கள். நீங்கள் 11-40-க்கு தொடங்கினீர்கள். பதினைந்து நிமிஷம் பேசியாகிவிட்டது. இடையிலே குறுக்கீடுகள் இருந்த தால், இன்னும் அதிகமாக ஐந்து நிமிஷம் கொடுத்து, 12 மணிக்கு முடியுங்கள் என்று சொல்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்**: நம் நாட்டின் பொருளா தாரம் போகின்ற போக்கைப் பார்த்தால் மேற்கொண்டு நூற் பாலைகள் நடைபெறுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அநேகமாக எல்லா மில்களும் நஷ்டத்தில்தான் நடந்துகொண் டிருக்கின்றன. குடியானவர்களின் உற்பத்திச் செலவுக்கும் பஞ்சு விலை கட்டவில்லை, பஞ்சுவிலைக்கு நூல் விலை கட்டவில்லை, நூல் விலைக்குத் துணிவிலை கட்டவில்லை. இந்த விலைக்கும் வாங்கப் பொது மக்களிடம் பணமில்லை.

இந்தப் பொருளாதாரச் சீர்கேட்டுக்கெல்லாம் மத்திய அரசின் வரிக்கொள்கையே முழுப் பொறுப்பாகும். நம் மாநில அரசு தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் தொழில்கள் எல்லாம் சீர்கெட்டுப் பொருளாதாரம் அடியோடு நசித்துவிடும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

எனது அவிநாசித் தொகுதியில் பொரி உற்பத்தி பல ஏழை மக்களால் செய்யப்படும் குடிசைத் தொழில். இவர்களுக்கு நேரிய முறையில் பொரி உற்பத்திக்கு நெல் வழங்கப்படுவதில்லை. பொரி உற்பத்தியை என்றுமே செய்தறியாத பலரோடு சேர்ந்த சங்கம் ஒன்று தேர்தலுக்குப் பின் திராவிடப் பொரிகடலை உற்பத்தியாளர் முன்னேற்றச் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு ஏராள





மாகக் கள்ள மார்க்கெட் செய்ய வழி வகுத்துக் கொடுக்கப்பட்டிருக் கிறது இத்துறையில் நடக்கும் ஊழல்களைப்பற்றியும் நேர்மை யின்மையைப்பற்றியும் உணவு அமைச்சர் அவர்களுக்கு நேரிலும், எழுத்து மூலமாகவும் பன்முறை முறையிட்டும் பயன் ஒன்றும் இல்லை . . . (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப் பட்டார்.)

* **திரு. கே. வி. சுப்பையா**: மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் நமது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனது பாராட்டுதலைத் தெரிவித்து, அதன் தொடர்பாக நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயத்தைப் பொறுத்தமட்டில் நமது அரசு எந்த அளவிலே அக்கறை கொண்டதாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டும் முகத்தான் அவர்களுடைய உரை இருந்தது பற்றி நானும், எங்கள் பகுதியிலுள்ள விவசாய மக்களும் பெரிதும் பாராட்டுகிறோம். நமது அரசு விவசாயப் பெருக்கம் சம்பந்தப் பட்டமட்டில், கடந்த காலத்தில் ஏற்பட்ட அக்கறையைக் காட்டி லும், அதிக அக்கறை செலுத்தியிருக்கிறது. இந்த ஒரு வருட காலத்தில் நமது அரசு விவசாயப் பெருக்கத்தில் காட்டி வந்த அக்கறை, ஒரு நல்ல நிலை, விவசாயப் பெருமக்களிடத்தில் அவர் களுக்கு ஏற்பட்டிருக்கிற அன்பையும், அவர்கள் மீது அரசு கொண் டிருக்கிற ஒரு நல்ல அக்கறையையும் எடுத்துக் காட்டுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயப் பெருக்கத்துக்கு முதன்முதலாக தேவைப்படுவது நிலம். அந்த அடிப்படையிலே ஏழை எளிய விவசாய மக்களுக்கு ஆங்காங்கு நிலம் வழங்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் புறம் போக்கு நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தும், பகிர்ந்து கொடுக்க முன்வந்திருப்பதும் பெருமைக் குரியதாகும், பாராட்டுக்குரியதாகும். அதன் தொடர்பாக ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக ஆக்கி, நமது விவசாயப் பெருக்கத்தை ஊக்குவித்தமைக்கு நமது அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக, விவசாயப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக விளங்குவது தண்ணீர். எங்கே தேக்கங்களில் நீர் தேக்கலாம், எங்கே அணைக்கட்டுகள் கட்டலாம் என்பதைக் கண்டு பிடித்து, அந்த அளவிலே நமது அரசாங்கம் கட்டிக்கொண்டு வருகிறது. தேக்கங்கள், அணைக்கட்டுகள் கட்ட முடியாத இடங் களில், விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, நீர் ஊற்றுக்களையும், கிணறுகளையும் தோண்டுவதற்கு உதவி செய்து வருகிறார்கள் அதற்குப் பிறகு பம்பு செட்டுகள் வழங்குவதற்கும் இந்த சர்க்கார் கடன் கொடுத்து, அதற்கு ஆவன செய்துவருகிறது. இதற்காக விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

[திரு. கே. வி. சுப்பையா] [1968 பிப்ரவரி 13

அதற்கு அடுத்தபடியாக, நமது அரசு விவசாயிகளுக்கு மின்விசை வழங்குவதில், விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, முதல் உரிமை அளித்து, விவசாயிகளுக்கு மின்விசை அளித்து வருவது பாராட்டுதலுக்குரியது. மேலும், அதே நேரத்தில் தனியார் நிறுவனங்களை, மின்விசை நிறுவனங்கள் மூன்றை அரசு எடுத்துக் கொள்வதற்கு ஆவன செய்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அதற்கு அடுத்தபடியாக, விவசாயத்திற்கு நல்ல தரமான விதைகள், ஏ.டி.டி. 27 போன்ற விதைகள் பெரிய அளவிலே தருவித்துக்கொடுத்து, விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்குவதற்கு உரமும் வழங்கிவருவது குறித்து நான் பாராட்டக் கடமைபட்டிருக்கிறேன். விவசாயத்தைப் பெருக்கும்பொழுது விவசாயிகள் படுகின்ற கஷ்டத்தை மனதில் கொண்டு, விவசாயிகளின் கடன் தொல்லைகளை நிவர்த்திக்க முன்வந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. நில அடைமான வங்கிகள் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது இந்த அரசு. அப்படி ஏற்பாடு செய்திருப்பதில் இப்பொழுது விவசாயிகள் சிற்சில சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டு மூலம் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு 13 வருஷங்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் (என்கம்பரன்ஸ் சர்டிபிகேட்) கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. ஆனால், நில அடைமான வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு 22 ஆண்டுகளுக்கு வில்லங்க சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்ட் நடைமுறைப்படியே 13 ஆண்டுகளுக்கு வில்லங்க சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நில அடைமான பாங்கு 22 வருஷங்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் கேட்பதற்குக் காரணம், ஏதாவது 'டிபால்ட்' ஏற்பட்டால் கடனுக்காக ஈடு வைக்கிற சொத்தின் மீது நடவடிக்கை எடுத்து, வசூல் செய்வதற்காகத்தான். ரெவின்யூ ரெகவரி ஆக்டில் ரெவின்யு டிபார்ட்மெண்டுக்கு கொடுக்கவேண்டிய கடனுக்கு ஈடுபடுத்தப்பட்ட சொத்தின் மீது முதல் உரிமை (ஃபர்ஸ்டு பிரஃபரென்ஸ்) என்று இருக்கிறது. அதைப்போல நில அடைமான வங்கிகள் மூலம் கொடுக்கப்படுகிற கடன்களுக்கும்

'First preference will be given to the Land Mortgage Banks and the Revenue Recovery Act equally applies to the loans given by the Land Mortgage Banks.'

என்று மாற்றிவிட்டால், இந்த சங்கடம் தீரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, குத்தகைதார்களை ரிஜிஸ்டர் பண்ணுவது, பதிவு செய்வது என்ற ஏற்பாட்டை செய்யப்போவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாக்குறுதி கூடிய விரைவில் அமல்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 13] [திரு. கே. வி. சுப்பையா]

குறிப்பாக, எங்கள் பகுதியிலே, புதுக்கோட்டை பகுதியிலே, இனும் விவசாயிகள் தகராறு இருக்கிற நேரத்தில், குத்தகைதார் பதிவு மிகவும் தேவை. கூடிய விரைவில் இந்த அரசு அதை அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டையில் அதிகமாக காடுகள் இருக்கின்றன. காடுகள் என்றால் மரங்கள் அல்ல, வெறும் முள்ளுச் செடிகள், அந்தக் காடுகளை ஏழை விவசாயிகளுக்கு, 'லாண்டுலெஸ் பூவருக்கு' பகிர்ந்து அளித்தால், விவசாயத்தைப் பெருக்குவதோடு, உணவு அபிவிருத்தியைப் பெருக்குவதோடு, ஏழை எளிய விவசாய மக்களுக்கு வாழ்வு அளித்த ஒரு நல்ல செயலுமாகும். ஆகவே, இதனை அரசாங்கம் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் வறண்ட நிலம் இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். இது எங்களுடைய 'லாங் ஃபெல்டு நீட்'. அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் காவேரி ஆற்றிலிருந்தோ அல்லது அமராவதி நீர்த் தேக்கத்திலிருந்தோ ஒரு கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வருவது என்று கடந்தகால அரசு சொல்லிக்கொண்டிருந்தது. அதை நமது அரசு செய்துதர வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியும் ஒரு தனி மாவட்டமாக இருந்தால் எங்கள் மாவட்டத்திற்கும், எல்லா மாவட்டங்களைப் போல தொகைகள் ஒதுக்க வசதியாக இருக்கும். ஆகவே, புதுக்கோட்டைப் பகுதியை ஒரு தனி மாவட்டமாக அமைத்து, அதற்கு புதுக்கோட்டையைத் தலைநகரமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் அங்குள்ள விவசாய மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய வசதியாக இருக்கும் என்று சொல்லி, அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாய கருத்து அரங்குகள், நீர்ப்பாசன மகாநாடுகள் நடத்துகிறார்கள். அதையெல்லாம் நம் அரசு நல்ல முறையில் செய்து வருகிறார்கள். கடந்த கால அரசு நடத்திய காலத்தில் அமைச்சர்களைப் பார்ப்பதற்கே, விவசாயிகள் எத்தனையோ மைல் தூரம் நடந்துவந்தும் பார்க்க முடியாத குறை இருந்தது. ஆனால் இன்றைக்கு நம்முடைய அரசில் விவசாயிகளை, அமைச்சர் கருத்து அரங்குகளில் கண்டு பேசும் வாய்ப்புகள் இருப்பதால், அவர்கள் தங்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு இப்பொழுது புஞ்சை நிலத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, புஞ்சை நிலங்களைப் போலவே, மானவாரி நிலங்களும் இருக்கின்றன. அந்த நிலங்களையும் புஞ்சை நிலங்களைப்போலக் கருதி, மானவாரி நிலங்

களுக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட மானவாரி நிலங்கள் புதுக்கோட்டைப் பகுதியிலே அதிகமாக இருக்கின்றன.

ப்ரொக்யூர்மெண்டு பொறுத்தவரையில், கடந்த காலத்திலும் நடைபெற்றது. ஆனால் இன்றைக்குக் கொள்முதல் மிக நல்ல முறையிலே செய்யப்பட்டு வருகிறது. செக்போஸ்டுகளை அமைத்து நல்ல கண்காணிப்புச் செய்துவருகிறார்கள். முன்பெல்லாம் பெயரளவில் இருந்தது. அந்தமாதிரி இல்லாமல், இப்பொழுது நல்ல முறையில் இருந்து வருகிறது. அந்த வகையில் குறைபாடுகளை நிவர்த்தித்த இந்த அரசைப் பாராட்டுகிறேன். கொள்முதல் செய்வதில், 'ரிவர்ஃபெட் ஏரியா' என்பதற்கும், மற்ற பஞ்சப் பகுதிகளுக்கும் ஒரே மாதிரி செய்கிறார்கள். அதைவிட்டு, எங்கள் பகுதிபோன்ற பஞ்சப்பகுதியில், ஒன்றுக்கு மேலும், 4, 5 ஏக்கர்வரை வைத்திருப்பவர்களுக்கும் விதிவிலக்கு என்றோ அல்லது, மற்ற இடங்களில் வாங்குவதை விடக் குறைத்து, ஏக்கராவிற்கு 3 அல்லது 4 மூட்டைதான் என்றோ செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய ஆளுநரும், தமிழக அரசும் பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்களுடைய நன்மையிலும், வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி, அதையே தங்கள் கொள்கையாகக் கொண்டு, பணியாற்றி வருகிறார்கள். அதற்காக இந்த அரசுக்கும் ஆளுநருக்கும் நானும், விவசாயிகளும், குடியானவர்களும் பாராட்டு தெரிவித்து, இந்த மன்றத்தின் முன்னுள்ள தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

***திரு. எ. சிதம்பரநாத நாடார்:** தலைவர் அவர்களே, இந்த சபையிலே கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் திரு. ஆசைத்தம்பி அவர்கள் தீர்மானம் கொண்டு வந்து பேச்சோடு பேச்சாக, காங்கிரஸ் கட்சியை ஒரு கருமாதி கட்சி என்று சொன்னார்கள். அதைச் சொல்ல வேண்டியதுதான். உண்மையிலேயே, ஒருவன் செத்துப் போகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். இறந்தவனை இருக்கிறவன் நினைவு கொண்டு, அவனுடைய சொந்தக்காரர்கள், மற்றவர்களை இறந்தவுடன் காணப் போவார்கள். அப்படியில்லாமல் சிலர் 16-க்கும் வருவார்கள். நம்முடைய ஆசைத்தம்பி அவர்கள் 16-க்கு வந்தவர்போல் ஆட்சி பீடத்தில் வந்தார்கள். 16-க்கு வந்தால் சாப்பாடு கிடைக்கும், நல்ல துணி கிடைக்கும், மணி கிடைக்கும். நல்ல முறையாகத்தான் நடத்தப்படுவார்கள். காங்கிரசாவது பல ஆண்டு காலமாக, பல வருஷங்களாக, கஷ்டப்பட்டு வந்தது. ஆனால், இவர்கள் கட்சி திடீரென்று பொய்யைச் சொல்லி பதவிக்கு வந்தது. நேர்மையாக . . .

*(ஒன்றிரண்டு உறுப்பினர்கள் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று எழுந்தார்கள்.)*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'பொய்' என்று அவையில் சொல்லக் கூடாது என்பதை அனுபவம் மிக்க உறுப்பினர் அறிந்திருப்பார்கள். ஆகவே அந்த வார்த்தையை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** இந்தக் கட்சி திடீரென்று . .

**திரு. ஆறுமுகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார், கனம் அங்கத்தினர் அவர்கள், அந்தக் கட்சி பொய் சொல்லி வந்தது என்று சொன்னார்கள். 'பொய்' என்ற வார்த்தையை சபையில் உபயோகிக்கலாமா, அவர் பொய் சொல்லி ஆட்சிக்கு வந்தது என்று சொல்வது விதிமுறைக்கு உட்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அந்த 'பொய்' என்ற வார்த்தையை 'எக்ஸ்பஞ்ச்' செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சபையில் ஓர் உறுப்பினர் பொய் பேசுகிறார் அல்லது பொய் பேசினார் என்று குறிப்பிட்டுச் சொன்னால்தான் ஒழுங்குப் பிரச்சினைக்கு உகந்ததாக இருக்கும். பொய் என்ற வார்த்தையே வரக்கூடாது என்பது ஒழுங்குப் பிரச்சினைக்கு வராது. ஆகவே, அதை அப்படியே விட்டு விடலாம்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** கனம் ஆசைத்தம்பி பேசியது ஆளும் கட்சிக்கு சந்தோஷமாக இருந்திருக்கலாம். ஆனால், என் போன்ற அனுபவம் மிக்க காங்கிரசாருக்கு அது வருத்தத்தைத் தருகிறது. அவர்கள் மிகவும் பொறுப்பற்ற முறையில் பேசியிருக்கிறார். நாங்கள் பதவிக்கு வந்தோம். அடி பட்டோம், மிதிபட்டோம், ஜெயிலுக்குப் போனோம். இதையெல்லாம் மறந்துவிட்டு திடீரென்று ஒரு நாள் காலையில் பதவிக்கு வந்தவர்கள் எங்கள் கட்சியை கருமாதிக் கட்சி என்று சொன்னால், அது எவ்வளவு பொருத்தமானது என்று தாங்களே உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படிப் பொறுப்பற்ற முறையில் எந்த ஓர் உறுப்பினரும் பேசக் கூடாது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பட்டினியும் பசியும்தான் இருக்கிறது. சாப்பிட அரிசி கிடையாது. ஒரு படி அரிசி நாலு ரூபாய் விற்கிறது. விளவங்கோடு தாலுக்காவில் ரூ. 4; நாகர்கோயிலில் ரூ. 3¼; கல்குளம் பகுதியில் ரூ. 3½ என்று விற்கிறது. எங்கள் மாவட்டத்தில் குடிநீர் கிடையாது. விவசாயத்திற்குத் தண்ணீர் கிடையாது. பட்டினியும், பசியுமாக இருக்கிறது. அதெல்லாம் திரு. கோவிந்தசாமிக்குத் தெரியும். அண்மையிலே நாகர்கோயிலில் ஒரு விவசாயக் கருத்தரங்கு நடந்தது. அப்போது கோதையாறு அணையில் 6 அடி தண்ணீர்தான் இருந்தது. இது விவசாயத்திற்கு போதாதே எனக் கேட்டதற்கு, அமைச்சர் அடி மட்டத்திற்குக் கீழே இருக்கும் தண்ணீரை பம்பு வைத்து இறைக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போகிறேன் என்று

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கழகத் தோழர்கள் ஒரு வீட்டுக்குள்ளே சென்று கோடரியால் ஒருவரை வெட்டியதாகக் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு கழகத் தோழர்களுடைய பெயர்களை உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்ல வேண்டும். அவர்கள் கழகத்திலே உறுப்பினர்களா என்பதையும் உறுப்பினர் அவர்கள் நிரூபிக்க வேண்டும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** பெயரைச் சொல்லுவதற்குத் தயக்கம் இல்லை; பயம் இல்லை. நாட்டிலே எல்லோரும் சமாதான மாக, சுபிட்சமாக வாழவேண்டும் என்பதுதான் மந்திரிமார்களுக்கு ஆசை; அதுதான் என்னுடைய ஆசையும் கூட.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எது நடந்தாலும் கழகத்தின்மீது பழி கூறுவது என்பது இப்பொழுது ஒரு வழக்கமாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்துகொண்டு வருகிற பிரசாரமாக இருக்கிறது. ஒருவர் கீழே வழுக்கி விழுந்து இறந்து விட்டால்கூட, காயப்பட்டு விட்டால்கூட, அதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வாழைப்பழத் தோலைத் தெருவிலே போட்டதுதான் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, குற்றச்சாட்டுக்கள் சொல்லுவதாக இருந்தால், ஒழுங்காகச் சொல்ல வேண்டும், நேர்மையாகச் சொல்ல வேண்டும். அவர்களுடைய பெயர்களைச் சொல்லி, கழகத்தில் எந்தக் கமிட்டியில், எந்தக் கிளையில் அவர்கள் உறுப்பினர்கள் என்பதையும் ஆதார பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த இடம் பொறுப்பான இடம். இங்கே பேசுகிறவர்கள் அத்தனை பேரும் பொறுப்பானவர்கள். அதிலும் குறிப்பாக, "நான் பொறுப்பான நிலைகளில் இருந்து வந்தவன்" என்று தாங்களே சொல்லிக்கொண்டீர்கள். ஆகவே, உங்களுடைய சொற்களுக்கு ஒரு நிலை இருக்க வேண்டும். நீங்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை நல்ல முறையில் ஆதாரத்தோடு கூறவேண்டும். மேடைகளில் கூறுவதைப்போல கூறக் கூடாது. அதற்கு இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று உறுப்பினர் அவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு எ. சிதம்பரநாத நாடார்:** ஸ்ரீமான் கருணாநிதிக்கு கார் விபத்து ஆனதைக் கேட்டு முதலில் அனுதாபப்பட்டவன் நான்தான். கழகத் தோழராக இருந்தால்தான் உணர முடியுமா? கழகத் தோழராக இருந்தால்தான் அனுதாபப்பட முடியுமா? பெயர் விவரம் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றம் செய்தவர் யாராய் இருந்தாலும், இன்னார் குற்றம் செய்தார் என்று சொல்வதையோ அவர் எந்தக் கட்சியை சேர்ந்தவர் என்று சொல்லுவதையோ யாரும் தடுக்கவில்லை. ஆனால், யாரோ கழகத் தோழர்,



அப்படி, இப்படி என்று பொதுவான நிலையில் குற்றம் சாட்ட வேண்டாம். இந்த அவையில் கூறுகிற குற்றச்சாட்டை முறையாக, தெளிவாகக் கூறவேண்டும்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் சுசீந்திரம் போலீஸ் ஸ்டேஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடத்தில் எம். எல். ஏ. ஒரு வழக்கு சம்பந்தமாகப் பேசினார். சர்க்கிள் இன்ஸ்பெக்டரை அவர் தொலை பேசியின்மூலம் வாயில் வந்த மாதிரி ஏசியிருக்கிறார்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** நடைமுறைக் கேள்வியொன்று எழுப்ப விரும்புகிறேன். விதி 67(2)-இல்

"A member, while speaking must not make a personal charge against a member"

என்று இருக்கிறது. ஆகையால், கனம் உறுப்பினர் அவர்கள் 'நாகர்கோயில் எம். எல். ஏ.' என்று குறிப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** விஷயத்துக்கு வாருங்கள். நீங்கள் என்னை அடித்தால் வெளியே சொல்லக் கூடாதா? அது தானா பண்பு? நாட்டிலே எல்லோரும் சமாதானமாக வாழ வேண்டும். ஆனால், அடிப்பதற்கு ஆயத்தம் கட்டுகிறார்கள். நாவலர் நெடுஞ்செழியன் இருக்கிறார், கலைஞர் கருணாநிதி இருக்கிறார். யாரையும் யாரும் அடிக்கக் கூடாது. எல்லோரும் சமாதானமாக இருக்கவேண்டும். நாட்டிலே நானும் பேரவைத் துணைத் தலைவரும் சமாதானமாக வாழவேண்டும். எனக்கு இந்த நாட்டிலே பாதுகாப்பு வேண்டும். அந்த நிலை நாகர்கோயில் தொகுதியைப் பொறுத்தவரையில் இல்லை. அதைத்தான் நான் சொல்வேன். நானும் இருபது வருஷம் பத்து மாதம் எம்.எல்.ஏ.-வாக இருக்கிறேன். அந்த நிலையிலிருந்து கீழே இறங்கவில்லை. இந்த சபையிலே ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இங்கே சொன்னாலாவது விமோசனம் வாராதா என்ற ஆசையினால்தான். தெளிவாக அடுத்துவரும் பட்ஜெட் கூட்டத்தில் குறிப்பிடுகிறேன். எனக்கு திரு. அண்ணாதுரையைப்பற்றிப் பெரும் மதிப்பு உண்டு. நாவலரைப்பற்றிப் பெரு மதிப்பு உண்டு. பேச்சைக் கேட்டாலே அசந்துவிடுவேன். கருணாநிதியைப்பற்றிச் சொல்லுவதற்கில்லை. நல்ல மனுஷர். ஆனால் . . (சிரிப்பு) இந்த நிலையிலே நாட்டிலுள்ள மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும். வேண்டுமானால் என்னையே கூட உங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள் (ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர்: வேண்டாம் வேண்டாம்). உங்கள் கட்சியில் நான் சேர்ந்தால் நீங்கள் என்ன செய்ய முடியும்? இந்து மதத்தில் இருக்கிற ஒருவன் நாளை கிறிஸ்துவ மதத்தில் சேர்கிறான், யாரைக் கேட்டு மாறுகிறான்? திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல கட்சிதான். ஆனால், ஆளை அடித்துக் கட்சி சேர்ப்பது என்பது நடக்காது.

தண்ணீர்க் கஷ்டத்தைப்பற்றிச் சொன்னேன். நாகர்கோயில் தொகுதியில் செம்பக்குளம் சானல் இருக்கிறது. அந்தச் சானலில் ஐந்தாவது மடையிலும், ஆறாவது மடையிலும் கழக எம். எல். ஏ.

யின் நிலம் இருக்கிறது. அங்கே போலீஸ்காரை இரவு 1½ மணிக்கு தண்ணீரைக் கொண்டு வயல்களுக்கு அடைக்கிறார். இதெல்லாம், அண்ணாதுரை, நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகிய வர்கள் நடத்தும் ஆட்சியில் தான் நடந்திருக்கிறது. நீங்கள் நீதி பரிபாலிக்கும் ஆட்சியில்தான் நடந்திருக்கிறது. நான் திரும்பத் திரும்ப எதைச் சொல்லுகிறேன் என்றால், இந்த நாட்டிலே எந்தக் கட்சி ஆண்டாலும் சரி, நீதி நடக்கவேண்டும்.
" Men may come and men may go about which I am not worried " ஆனால், நீதி நடத்த வேண்டும். நீங்கள் நீதி நடத்தினால் இந்த நாட்டிலே எந்த விதமான குழப்பமும் வராது.

முதன் முதல் திரு. அண்ணாதுரை அவர்கள் அறிக்கை விட்ட வுடனே, காங்கிரஸ்காரர்களுக்கு மேலாக இவர்கள் வந்தாச்சு என்று நினைத்தேன். ஆனால், பிறகு பார்த்தால், அடி என்றால் அடி. அதுதான் நடக்கிறது. எம். சி. பாலன் தர்பார் தான் குமரி மாவட்டத்தில் நடக்கிறது. அங்குள்ள அரசு அதிகாரிகள் ஒழுங் காக ஒரே இடத்தில் இருக்க வழியில்லை, குறுகிய நாட்களில் எத்தனை இட மாற்றங்கள் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மீண்டும் உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்லத் தேவை இல்லை. குறிப்பான குற்றச்சாட்டு இருந்தால் இங்கே சொல்ல முடியுமானால், சொல்லட்டும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** பொறுக்க முடியாமல்தான் இந்தச் சபையில் சொல்கிறேன். எங்கள் ஊரிலே ஆறு பேர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொறுக்க முடியாத நிலை இருந்தால் சொல்லத்தான் வேண்டும். ஆனால், சொல்லுகிற போது, எந்த எந்த வகையிலே பொறுக்க முடியாத நிலை இருக் கிறது என்று சொல்ல வேண்டுமே தவிர, ' பொறுக்க முடியவில்லை ', ' பொறுக்க முடியவில்லை ' என்று சொல்வதை விடுத்து, தெளிவாகக் குற்றச்சாட்டைச் சொல்ல முடியுமானால் சொல்லுங்கள். பொது வாகக் கூறுவதாக இருந்தால் பேசுகிறபோது இடையிலே மறுக் கக்கூடிய நிலைதான் உண்டாகும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார்:** மறுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. மறுத்தாலும் கவலைப்படவில்லை. சபாநாயகர் பேச அனுமதித்தால்தான் பேச முடியும், அவர் தீர்ப்புக்குத் தலை பணியவேண்டும் என்ற விதிகள் எல்லாம் எனக்குத் தெரியும்.

அவர்கள் நடவடிக்கை எப்படியிருக்கிறது என்றால், நிர்வா கத்தில் தலையிடுவது தாராளமாக நடக்கிறது. போலீஸ், பி. டபிள்யூ. டி. ஹைவேஸ், எதுவாக இருந்தாலும் கழக எம். எல். ஏ. தலையீடுதான் இருக்கிறது. ஆனால், ஒன்று. திருநெல்





வேலி ஜில்லாவில் திரு. ஏ. எல். சுப்பிரமணியம், திரு. எட்மண்ட், திரு. ஆலடி அருணா போன்ற கழக எம். ஏ. க்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ எந்தவித மான தொந்தரவும் இருக்கிறதாகத் தெரியவில்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்த கோதையூர் திரு. டி. கணபதி என்பவர் நகர் மன்ற திடலில் உண்ணாவிரதம் இருந்தார். அதற்கு நம்முடைய நாவலர் அவர்களும் வருத்தம் தெரிவித்தார்கள். கோதையூர் கணபதி எதற்காக உண்ணாவிரதம் இருந்தார்? நாகர்கோயில் கழக எம். எல். ஏ. யின் போக்கு சரியில்லை என்ற காரணத்திற் பி.ப 12-50
காகத்தான் அந்தக் கழகத் தம்பி தனது உயிரை விட உண்ணா விரதம் இருந்தார். நாட்டில் சரியான பாதுகாப்பு இல்லாததால் நான் சென்னைக்கு வந்தால் நாவலர் வீட்டிலோ கருணாநிதி வீட்டிலோதான் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சில வேளைகளில் அடி வாங்குபவன் எதிர்த்துத் தாக்கும் நிலைமை ஏற் படலாம். ' Action and reaction are equal and opposite ' என்று தத்துவம் இருக்கிறது எனக்கும் சக்தி இருக்கிறது. இந்த அளவிலே மனிதன் யாராக இருந்தாலும் நாவலராக இருந்தாலும், சிதம்பரநாதனாக இருந்தாலும், நம்முடைய தலைவராக இருந்தாலும், திரு. கருணாநிதியாக இருந்தாலும் திரு. கோவிந்த சாமியாக இருந்தாலும் எல்லோருக்கும் ஒரே நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேசுவதற்குத் தந்த நம்முடைய மன்றத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா:** துணைச் சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின்மீது நான் ஒருசில வார்த்தைகள் பேசலாம் என்று நினைக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே, மொழியினுடைய முக்கியத்துவம் பற்றி மிகத் தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழ் மாநில ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள இணைப்பு மொழியாகவும் இருக்கும் என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருப்பது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். பொதுவாகவே, இன்றைக்கு மொழிச்சிக்கலைத் தீர்ப்பதற்கு. கான்ஸ்டிடியூஷனை நல்ல விதத்திலே திருத்தி யமைக்க வேண்டும். மேலும் மத்திய அரசிடம் உள்ள எல்லா அதி காரங்களையும் மாநில அரசுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். " பதினான்கு மொழிகளையும் இணைப்பு மொழியாக வைத்துக் கொண்டால் எப்படி நிர்வாகம் நடக்கும் " என்று மத்திய அரசிலே சொல்கிறார்கள். அதேநேரத்தில் இந்தி மட்டும் ஆட்சிமொழி என்கிறார்கள். மத்திய அரசு உலக நாடுகளோடு இந்தி மொழியையா இணைப்புமொழியாக வைத்துக் கொள்ள முடியும்? ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக வைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. மத்திய அரசு தன்னிடத்தில் டிஃபென்ஸ், ஃபைனான்ஸ் அண்டு கரன்சி, வெளி நாட்டுத் தொடர்பு போன்ற வற்றை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளிடத்தில் பிரித்துக் கொடுத்து விடவேண்டும். அமெரிக்க

நாட்டைப்போன்று நல்ல விதத்தில் ஏற்பாடு செய்தால் மொழிச் சிக்கலுக்கு இடமே கிடையாது. அதிக அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திலே இருப்பதால்; இணைப்புமொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும். இந்தி மட்டுமே இணைப்புமொழியாகும் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்க தல்ல. ஃபைனான்ஸ் அண்டு கரன்சியைப்பற்றிப் பேசினால் ஆங்கிலத்தில்தான் மற்ற நாடுகளுடன் பேச முடியும். பாதுகாப்பும் அதே முறையில்தான்.

மாநில கவர்னர்களையும், முதல் மந்திரிகளையும் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது என்ற முறை கொண்டு வரப்பட வேண்டும். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில், எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒருவித உதவியும் கிடைப்பதில்லை; மத்திய அரசாங்கத்திடம்தான் எல்லா அதிகாரங்களும் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன; மாநிலங்கள் சுயேச்சையாக இருக்க முடியவில்லை என்று பழி சொல்லமுடியாது. மக்களும் இந்தமுறையில் ஆட்சிக்கு வந்த மாநில கட்சிகளை நல்லவிதத்தில் புரிந்துகொள்ள சௌகரியமாக இருக்கும். இப்பேர்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசு டிபென்ஸ், பைனான்ஸ் அண்டு கரன்சி, வெளிநாட்டுத் தொடர்பு போன்ற மூன்று இலாக்காக்களையும் தவிர மற்றத் துறைகளுக்கும் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம். இந்தி பேசுவோர்கள் வேண்டுமென்றால் இந்தியையும் வைத்துக்கொள்ளட்டும்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை)

அடுத்தபடியாக, கவர்னர் உரையிலே ஃபைனான்ஸ் கமிஷனைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார்கள் ஃபைனான்ஸ் கமிஷன் நிரந்தரமான கமிஷனாக இல்லை. இந்தக் கமிஷனை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் நியமித்து விடுகிறார். அந்த கமிஷன் அறிக்கை சமர்ப்பிப்பதுடன் கலைக்கப்படுகிறது. நாம் நிரந்தரமாக ஒரு ஃபைனான்ஸ் கமிஷனை ஏற்படுத்தி, நல்ல விதத்திலே பணியாற்றி, மத்திய அரசுக்கு இருக்கக்கூடிய சிக்கல்களையும், நிதிச் சிக்கல்களையும் தீர்ப்பதில் உதவி புரிந்து, மக்களுக்கு நல்ல விதத்தில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயப் பிரச்சினை. இது நாட்டின் முக்கியமான பிரச்சினை. எங்கு பார்த்தாலும் ரெசஷன்-இன்பிலேஷன் என்று இருக்கிறது. இப்போது நாட்டில் இருக்கும் 60 சதவிகித விவசாயிகளிடத்தில் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது. இன்றைக்கு விவசாயிகளிடத்தில் வாங்கும் சக்தி குறைந்ததால், தொழிற்சாலைகளில், முடக்கப்பட்ட பணங்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் பாதிக்கப்படுகின்றன. என்றைக்கு விவசாயிகளின் வாங்கும் சக்தி உயருகிறதோ, அன்றைக்குத்தான் பொருளாதார சக்தியும் வளரும். ஆகவே, நாம் விவசாயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வேண்டுமானால், சீரணிக்காகச் செலவிடப்படும் பணத்தை நிறுத்தியும், லாட்டரிச் சீட்டு போட்டும், நாடகங்கள் நடத்தியும் விவசாயத்துறைக்கு அதிகமாகச் செலவழித்து, விவசாயத்தை இன்னும் ஊக்கப்படுத்தலாம். "விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற கடன் உதவி அனைத்தையும் நில அடைமான வங்கிகளின் மூலமாகவே அரசாங்கம் வழங்கும்" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் முழு நன்மை அடைய முடியாது. ஆகவே விவசாயிகளுக்கு நேரடியாக உதவி செய்ய தனி ஒரு ஸ்தாபனம் அமைக்க வேண்டும். ஏழை விவசாயிகளுக்கு நில அடமான வங்கி மூலம் உதவி பெறும் முறைஅவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். மேலும் இது 'ரெட் டேப்பிசம்' வளருவதற்கு தான் வழி செய்யும். ஆகவே, விவசாயத்திற்காகப் பணத்தைச் சேர்த்து, ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு அக்ரோ இன்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷனை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு வேண்டிய மெஷின்களையும், டிராக்டர்களையும், டிரில்லிங் மெஷன், புல்டோசர் போன்ற கருவிகளையும் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா சாமான்களையும் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையானபோது, பயிர்ப் பருவகாலத்தில் இரசாயன உப்புக்கள் குறைந்த விலையில் கொடுக்க வழி செய்ய வேண்டும். டிராக்டர்களை குறைந்த வாடகைக்கு கொடுத்து உதவவேண்டும். மேலும் கார்ப்பொரேஷன் ஒன்று ஏற்படுத்தி அதன்மூலம் சாயில் டெஸ்ட் செய்வதற்காக லாபரேட்டரி ஒன்றும் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு நல்ல முறையில் உதவிசெய்ய வேண்டும். விவசாயிகளுடைய வாங்கும் சக்தியை உயர்த்த வேண்டும். அப்போதுதான் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு மதிப்பு உயரும். அரசாங்கம் விவசாயத்திலே மிகவும் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதோடு இந்தக் கோவில்களில் இருக்கக்கூடிய பணத்தை எல்லாம் எடுத்து விவசாயத்திற்குச் செலவழிக்கவேண்டுமென்று சொல்வது வரவேற்கத்தக்க அம்சமாகும். நிலங்களை விவசாயத்திற்கு ஏற்றதாக ஆக்குவதற்கும், அந்த நிலங்களில் கிணறுகள் எடுப்பதற்கும், டிராக்டர்கள் வாங்கி ஏழை விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுத்து உதவுவதற்கும் பயன்படுத்தினால் இன்னும் அதிகமான அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்து விவசாயத்தை எடுத்துக்கொண்டால் எல்லா இடத்திலும் ஒரேமாதிரியாக இல்லை. பொதுவாக இந்த வருடத்தில் தஞ்சாவூர் பகுதியிலேயே பருவ மழை தவறியிருக்கிறது என்று சொல்கிற அளவில் ராமநாதபுரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ராமநாதபுரம் மாவட்டதின் கீழ் பகுதியில் அதிக மழை இவ்வாண்டு பெய்த காரணத்தினால் ஏரிகளின் கரைகள் எல்லாம் உடைந்து போய் ஏரியில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. மேற்கே எடுத்துக்கொண்டால் பருவ மழை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அந்த மாவட்டத்துப் பயிர்கள் எல்லாம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறன. அறுவடை சாவியாகக் கிடக்கிறதே தவிர நெல் மணிகள் காணவில்லை. பொதுவாக நம் அரசாங்கத்தில் ஒரு கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறோம். அறுவடை காலங்களில் கிராமப் புறங்களில் தானியம் இருக்கும், ஆகவே அந்த இடங்களில்

நியாயவிலையில் தானியம் கொடுக்க வேண்டியது இல்லை என்பதாக—இப்படிப்பட்டதொரு தப்பான அபிப்பிராயம் நம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. இதை மாற்றி நல்ல அதிகாரிகளைப் போட்டு உண்மையிலேயே விவசாயம் இவ்வாண்டு பாதிக்கப்பட்டுள்ள கிராமப்பகுதிகளில் நியாயவிலையில் தானியம் சப்ளை செய்வதற்கு நமது அரசாங்கம் முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்த எந்த இடங்களில் மக்கள் உணவு தானியம் கிடைக்காது கஷ்டப்படுகிறார்கள் என்று பார்த்து உடனடியாக உதவி செய்தாக வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் வருந்தவேண்டிய நிலை என்னவென்று சொன்னால் கவர்னர் அவர்களுடைய உரையில் நெசவாளர்கள் பற்றிக் கவனிக்கப்படவில்லை. நம் அரசாங்கம் நெசவாளர்கள் படுகின்ற துன்பத்தை நன்றாக அறியும். அதுவும் நம்முடைய தலைவர்கள் எல்லாம் நெசவாளர்களிடம் சென்று ஊக்கத்தை அளித்து, அவர்களுடைய ஆதரவைப் பெற்றவர்கள். ஆகவே இன்றையதினம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நெசவாளர்களுடைய நிலையையும் நன்கு பரிசீலித்து அவர்களுக்கு உதவி செய்ய நம்முடைய அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பொதுவாக சில உறுப்பினர்கள் அதுவும் காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னார்கள். போலீஸ்காரர்களுடைய குறுக்கீடு அதிகமாக இருக்கிறது என்றார்கள். எனக்குத் தெரிந்த மட்டில் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் திராவிட முன்னெற்றக் கழக உறுப்பினர்களுடைய குறுக்கீடு இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஒன்றிரண்டு இடங்களில் இருப்பதை மறைக்கவும் முடியாது. காங்கிரஸ் கட்சியிலும் அப்படி ஒன்றிரண்டு பேர்கள் நிர்வாகத்தில் குறுக்கீடு செய்து கொண்டிருந்தபோது நாம் இந்த அவையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களால் காங்கிரஸ் கட்சிக்கே கெட்ட பெயர் ஏற்பட்டதை நாம் மறந்துவிடக் கூடாது. அதுபோல தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றிரண்டு பேர்கள் குறுக்கிடுவதை அதிகாரத்தில் உள்ளவர்கள் உடனடியாகத் தடுக்கவில்லை என்றால் நம்முடைய அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் உண்டாகும். சமீபத்தில் ஒரு கூட்டத்தில் தகராறு நடந்தது. எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நானே கேட்டேன். அதற்கு அங்கு இருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர் சில ஆளும் கட்சி நபர்களுக்காக பயப்பட்டு, பாதுகாப்பு அளிக்க முன்வரவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நிர்வாகத்தில் உள்ளவர்கள் இப்படி அதிகாரிகளானாலும் சரி, கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி நியாயத்தை மீறி நடந்துகொள்வதற்கு கொஞ்சங்கூட எந்த இடத்திலும் அனுமதிக்கக்கூடாது.

பொதுவாக நெசவாளர்களைப் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றும் காணப்படவில்லை என்றாலும், நம்முடைய அரசாங்கம் நெசவாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களுடைய கஷ்டத்தைப் போக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





* திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் இந்த ஆண்டு மிகச் சிறப்பாக உரை நிகழ்த்தினார்கள். உரையின் இறுதியில் திருவள்ளுவப் பெருந்தகை சொன்ன

‘உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதுஇயல்வது நாடு’

என்று மிகச் சிறப்பான குறளை எடுத்துக்கூறி உரையை முடித்து விடை பெற்றுச் சென்றார்கள். இங்கு கூடியிருக்கிற நாம் அனைவரும் நன்றாக அறிவோம். கடந்த பல ஆண்டுகளில் இந்தத் தடவை தான் தமிழ் மணம் கமழும் உரை நிகழ்த்தப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, டெல்லியில் இருக்கிற மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இருக்கவேண்டிய உறவு முறைகளைப் பற்றி பந்த பாசமற்ற அதிகார முறைகளைப் பற்றி ஆளுநர் எடுத்துக் கூறுவது பஞ்சமாபாதகம் என்று கருதப்பட்ட நிலைமாறி நமது ஆளுநர் அவர்களே அவைகளைப் பற்றி மிகச் சிறப்பாக தம்முடைய உரையில் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். இன்னமும் சொல்லப் போனால் பணவீக்கம் ஏற்பட்டதன் வரலாறு, விலைவாசி குறையாமல் இருப்பதற்கான காரணங்கள் யாரால் ஏற்பட்டது என்பதை ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திற்குத் தெளிவாக விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைதான் காரணம் என்று சொன்னது மட்டும் அல்ல, ‘சென்ற ஆண்டு உரையில் கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன், டெல்லி அரசு கவனிக்கவில்லை ’என்று மெத்த வருத்தத்தோடுகூடத் தம் உரையில் கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் தீர்க்க முடியாத நோயாக இருக்கிற கூட்டுறவுத்துறையைப் பற்றி சென்ற ஆண்டே ஒரு கமிட்டி போட்டு பரிசீலனை செய்யப்படும் என்றார்கள். இந்த ஆண்டு திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி நிறுவப்படும் என்று தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். பொதுவாக அண்ணா தலைமையில் அமைந்துள்ள ராஜாங்கம் ஒன்று, இந்திரா காந்தி அவர்கள் தலைமையில் அமைந்துள்ள ராஜாங்கம் ஒன்று. என்பதோடு கூட மூன்றாவது ராஜாங்கம் நாட்டில் கூட்டுறவுத் துறை தலைவர்களின் கையில் இருக்கிறது என்றே மக்கள் எண்ணி வருகிறார்கள். எங்கள் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் கீழ் தஞ்சை, மேல் தஞ்சை என்று இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். மேல் தஞ்சையை வாண்டையார் ஆளுகிறார்கள். கீழ் தஞ்சையை முதலியார் ஆளுகிறார்கள். இது உண்மைதான். எல்லாக் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் பொறுத்த அளவில் மேல் தஞ்சை நிர்வாகம் வாண்டையார் கையில் தான் இருக்கிறது. கீழ் தஞ்சை நிர்வாகம் முதலியார் கையில் தான் இருக்கிறது. இப்படி மக்களிடம் பேசப்படுகிற வார்த்தைகள் தவறான செய்தி அல்ல. பிரத்யட்சமான உண்மை. இந்த இக்கட்டான நிலைமையில் இருந்து மக்களை எப்படிக் காப்பாற்றுவது ? கூட்டுறவு ஸ்தாபனங்களின் அமைப்பு முறை, தேர்தல் முறை, நிர்வாக முறை இவற்றைப்பற்றி எல்லாம்

உடனடியாக ஆராய்வதற்கு பெரியார் சந்தானம் அவர்கள் தலைமையில் உடனடியாக ஒரு கமிட்டி நிறுவப்படும் என்று ஆளுநர் அவர்கள் அறிவித்திருப்பது மிக மகிழ்ச்சிகரமான செய்தியாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, வேறுபல நிலையிலே உள்ள யாராக இருந்தாலும் சரி, கூட்டுறவு சங்கத்தை நடத்துவர்களிடம் இந்தத் துறையை அதிகம் பயன் படுத்தி ராஜாங்கம் நடத்துகிறவர்கள், தர்பார் நடத்துகிறவர்களிடமிருந்து தப்பித்ததாகச் சொல்லமுடியாது. ஏழையாக இருந்தாலும் சரி, குடியானவனாக இருந்தாலும் சரி, மிராசுதாராக இருந்தாலும் சரி, தொழில் நடத்துகிறவராக இருந்தாலும் சரி, இந்தத் துறையினரிடத்திலே கைகட்டி, வாய்பொத்தி, மேல் துண்டை எடுத்து விட்டு நிற்கின்ற நிலைதான் இருக்கிறது. இந்தக் கொடுமையிலிருந்து அவர்களையெல்லாம் விடுவிக்கின்ற முறையிலே தான் இப்பொழுது சந்தானம் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் இதற்காக ஒரு குழு அமைப்போம் என்று சொல்லிவிட்டு இப்பொழுது அந்தக் குழுவை அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அடுத்த ஆண்டுக்குள் இக்குழு அமைக்கப் பட்ட பிறகு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு எந்த எந்த வகையாக பெருச்சாளிகள் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள் என்பதைப் பற்றியும், தாம் மட்டும் செல்வாக்கோடு வாழ்ந்து வந்தவர்களுக்கு என்ன என்ன அளவுக்கு கதி ஏற்பட்டிருக்கிறது என்ற வரலாறு இருக்கக் கூடிய முறையில் அந்தக் குழுவின் அறிக்கை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை 27 நெல் அதிகமாக விளைந்ததுபற்றி ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு ஒரு டன் அரிசி விளைந்தது என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள். அது தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுடைய பரம்பரை குணம். உழைப்பது, வயல் கரையிலே படுத்துக்கொள்வது, பாம்பு போன்ற விஷ ஜந்துக்களைக்கூடப் பொருட்படுத்தாமல் உழைப்பது. இப்படி உழைத்த விவசாயிதான் ஒரு டன் கொடுத்து இருக்கிறான், இந்த நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய துரதிருஷ்ட வசமான நிலைமையையும் நான் விளக்கியாக வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு பகுதி பே ஆப் பெங்கால், பாயின்ட் ஆப் காலிமோர், பாக் ஜலசந்தி ஆகிய மூன்று கடற்கரைகளை ஒட்டி அமைந்துள்ள பகுதி. அப்பகுதி கடற்கரையை ஒட்டி அமைந்திருப்பதால், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளில் பெய்த விடாத மழையின் காரணமாக 20 நாட்களாக நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. தாளடிப் பயிர் நாசமாயிற்று. முதலடிப் பயிரும் அழிந்துவிட்டது. புயல் ஏதாவது வந்திருந்தால் தஞ்சை மாவட்டமே அதோ கதியாகியிருக்கும். வெள்ளம் வந்த காலத்தில் தண்ணீரை வடிக்க வழியில்லாததால் நீர் உள்ளே தேங்கிவிடுகிறது. உப்பு நீர் உள்ளே வருகின்ற காரணத்திலேலே நிலம் பாளம் பாளமாகப் போய்விடுகிறது. பயிர் நாசமாகிவிடுகிறது. அங்கே இருக்கிற விவசாயி ஐயோ என்று அழுகிறான்.





இதைத் தவிர இன்னொன்று, சொவி என்ற பறவையினால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுகிறது. அந்தப் பறவைக்குத் தாய்நாடு இது அல்ல. அந்தப் பறவைக்குச் சொந்தமான நாடு சோவியத் ரஷ்யா என்று சொல்கிறார்கள். ஆயிரக்கணக்கான பறவைகள் திடிரென்று வந்து பூத்துக் குலுங்குகின்ற பயிர்களின் மீது எல்லாம் வேகமாக வந்து விழுந்து பயிரை நாசம் செய்துவிடுகின்றன. இது மட்டுமல்ல, எலிக் கொடுமை வேறு இருக்கிறது. எலிவெட்டு என்ற முறையில் எலிக் கொடுமைகளை நீக்க முடியவில்லை. கிட்டி வைத்துப் பிடித்தல், வெளிச்சம்போட்டுப் பிடித்தல், வில் வைத்துப் பிடித்தல் என்ற முறைகளையெல்லாம் கையாண்டும் கூட அது பயன்தரவில்லை. எனவே எலியினால் 25 சதவிகிதம் நாசமாகிறது. 25 சதவிகிதம் சொவிப் பறவையினால் நாசமாகிறது. இத்தனை தொல்லைகளிலிருந்து விடுபடமுடியாமல் இருந்தும்கூட ஒரு டன் விளைவிக்கிறான். சொவிப் பறவை விழுவது, உப்புநீர் உள்ளே வருவது, வெள்ள காலங்களில் தண்ணீர் வடிப்புக்குப் போதுமான வசதிகள் இல்லாமை, இப்படிப்பட்ட பல்வேறு சங்கடங்கள் இவை எல்லாவற்றையும்விட கூட்டுறவுத் துறையில் உள்ளே புகுந்து தனக்கு வேண்டிய சாதனங்களைப் பெறமுடியாத தொல்லையையும் விவசாயி அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இறைவைப்பாசனத்தைப்பற்றிப் பேசுகின்றபொழுது ஆளுநர் அவர்களுடைய உரையில் 1965-66 ஆம் ஆண்டில் 30 ஆயிரம் விசையேற்றங்களுக்குத்தான் மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறை ஆண்டில் கிட்டத்தட்ட 42,000 விசையேற்றங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பன்னீராயிரம் விசையேற்றங்களுக்கு அதிகமாக மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்; மிக்க மகிழ்ச்சி அதேப் போன்று 6 இரவைப் பாசன திட்டங்களைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். ஒரத்த நாடுப் பகுதியில் ஒன்றும். வேதாரண்யம் பகுதியில் ஒன்றும். நான்கு திட்டங்கள் திருத்துறைபூண்டிப் பகுதியிலும் அமைக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் நோக்கம் தேங்கித் தேவையில்லாமல் கிடக்கிற தண்ணீரை தேவைப்படுகின்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதுதான். திருத்துறைப்பூண்டித் தாலுக்காவிலே இப்படிப்பட்ட பல திட்டங்களை அமைப்பதன் மூலமாக அரசு எண்ணியிருக்கிறபடி உணவு உற்பத்தியை அதிகப்படுத்தும் வாய்ப்பு ஏற்படும். எனவே நான்கு திட்டங்களையும் செம்மையாக நிறைவேற்றினால் விவசாயிகள் மகிழ்ச்சி யடையக்கூடிய காரியமாக அது இருக்குமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நீர்த் தட்டுப்பாட்டை பற்றி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். துரருஷ்டவசமாக நீர்நிலைகளில் நீர் வற்றிவிட்ட காரணத்தாலும், வந்துசேர வேண்டிய தண்ணீர் குறைவாக வந்ததன் காரணமாகவும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. பல ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு நீர் ஊற்று கண்டு பிடிக்கப்பட்டது. கிராம மக்களிடத்தில் நீர் ஊற்றைக்

[திரு. ந. தருமலிங்கம்] [1968 பிப்ரவரி 13

கண்டு பிடிக்கிறவர்கள் வந்து, ஐயா நாங்கள் வந்திருக்கிறோம், உங்கள் ஊரில் நீர் ஊற்று ஏற்படுத்தித் தரப்போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பாசன வசதி குறைவாக உள்ள இடங்களில் எங்கு எங்கே நீர் இருக்கிறது என்று சோதனை செய்கிறார்கள். மண்ணெண்ணெய் இருக்கிறது என்று சொல்லிவிட்டு சாதனங்களைக் கழற்றிக்கொண்டு போய்விடுகிறார்களே அதைப் போலவே நீர் ஊற்று உண்டா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் இதைப்பற்றிக் கேட்கின்ற பொழுது எந்தத் தகவலும் வருவது இல்லை. தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக உழைக்கிறார்கள். இவ்வாறு பல இன்னல்கள் இருந்தபோதிலும் உழைத்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு ஏக்கருக்கு ஒரு டன் அரிசி தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உதவிகளைக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்துகொடுக்க வேண்டும். இதுவரையிலும் இல்லாத முறையில் ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையின் இறுதியிலே தமிழ் வேதத்தைச் சொல்லி நம்மையெல்லாம் மகிழ்விக்கச் செய்ததற்காக ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது பேசக்கூடிய இந்தச் சமயத்தில் அதில் பல வரவேற்கத்தக்க அம்சங்கள் இருந்தபோதிலும்கூட பாமர மக்கள் நிலையிலிருந்து நோக்கும் பொழுது இதிலே சில குறைபாடுகளை நான் காண்கிறேன். அதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே நம்முடைய மாநில அபிவிருத்திக்கு தேவைப்படுகிற திட்டங்களைப் போடுவதற்கு மத்திய அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அரசியல் திட்டத்தையே திருத்துவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீடு விஷயத்தில் மட்டுமல்ல இந்த நிலைமை. இந்திய அரசியல் சட்டம் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக நிறைவேற்றப்பட்ட சட்டம். இன்றைக்கு வளர்ந்து வந்துள்ள சூழ்நிலைக்கு முற்றிலும் ஒத்ததாக அது இல்லையென்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்தி மொழிக்கு விசேஷ வசதி செய்து கொடுத்து இந்தி பேசாத மக்கள்மீது திணிப்பதற்கு வழிசெய்யக்கூடிய விதிமுறைகளை அதில் காணலாம்.

பி.ப. 1-00 மாநில அரசுகளை வெறும் பில் கலெக்டர்களாக வைத்து மத்திய அரசின் தயவில் வைத்திருக்கக் கூடிய சூழ்நிலையை அரசியல் சட்டத்தில் பார்க்க முடிகிறது. மாநிலத்திற்கு மாநிலம் ஏற்றத் தாழ்வான பொருளாதார வளர்ச்சிக்கு இடமளிப்பது அரசியல் சட்டம். தொழில்களை நாட்டுடைமையாக ஆக்குவது சம்பந்தமாக எடுக்கக்கூடிய முயற்சிகளுக்கு இந்திய அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது. கொள்முதலைச் செய்வதற்குக் கூட பெரிய



1968 பிப்ரவரி 13] [திரு. சி. கோவிந்தராசன்]

நிலச்சுவான்தார்கள் உரிமை என்ற முறையில் போதுமான கொள்முதலை நடத்த முடியாத சூழ்நிலையில் அரசியல் சட்டத்தின் விதிமுறைகள் குறுக்கே நிற்கின்றன. கடந்த 20 ஆண்டுக் காலமாக நடைமுறையைப் பார்த்தால் மேலும் மேலும் அரசியல் அதிகாரம் மத்தியில் குவிந்து வருகிறது. மாநில அரசாங்கங்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான், நிதி ஒதுக்கீடு என்ற முறையில் மட்டும் பார்க்காமல் ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்துகிற முறையில் மாநிலங்களின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு அரசியல் சட்டத்தைத் திருத்த, தமிழக அரசு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி எடுக்கக்கூடிய முயற்சிக்கு நான் சார்ந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல; தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியா முழுவதும் இருக்கும் ஜனநாயக சக்திகள் ஒத்துழைப்பைக் கொடுக்கும் என்று கூற விரும்புகிறேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த நிலைமை வந்து கொண்டே இருக்கிறது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசு இந்திய அரசியல் சட்டத்தை வைத்துச் செயல்படக்கூடிய காரணத்தாலும் எல்லாத் துறையிலும் குறுக்கிடும் சூழ்நிலை இருப்பதன் காரணமாகவும் அதைத் திருத்த வேண்டுமென்று கோரி ஏற்கனவே கிளர்ச்சிகள் இருந்தாலும், நம்முடைய தமிழக அரசு திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே தொழில்களைப் பற்றியும், தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிற பகுதியை கூர்ந்து கவனித்தால் குறிப்பாக இன்று தொழில் வளர்ச்சி இல்லாமல் இருப்பதற்கு ஒரு காரணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘அடிப்படையான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து உழைப்பாளி, மக்கள், உழவர் பெருங்குடி மக்கள் ஆகியோருடைய வாங்கும் சக்தியைப் பெருக்கி அதன் மூலமாகத் தொழில் வளர்ச்சியைப் பெருக்க முந்திய அரசாங்கம் தவறி விட்டது. வாங்கும் சக்தி எந்த அளவுக்கு மக்கள் கையில் இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் தொழில் வளர்ச்சி ஏற்படும், தொழில்களில் உற்பத்தி பண்ணக்கூடிய பொருள்கள் விற்பனை ஆகக்கூடிய நிலைமை இருக்கும். அது இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது’ என்ற நிலைமை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இது ஓர் அம்சம். இதை மட்டும் பார்த்தால் போதாது.

மத்திய அரசு ஏராளமான அந்நியக் கடன்களை பல மோசமான, பாதகமான ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு பெற்றிருக்கிறது. மத்திய அரசின் கொள்கை மேலும் மேலும் பெரிய முதலாளிகளுடைய லாப வேட்டையை அதிகரிப்பதற்கான கொள்கையாகத்தான் இருந்து வந்திருக்கிறதே தவிர அதைத் தடுத்து நிறுத்தும் கொள்கையாக இல்லை. மேலும், வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. வாங்குகின்ற கடன்களுக்கு வட்டி கொடுப்பதிலும், அந்நிய நாட்டு மூலதனத்திற்கு லாப விகிதத்தை

துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியைப் பற்றி அந்த அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இல்லை என்பதை அவர்கள் உணரவேண்டும். அப்படி ஏதாவது வைத்திருந்தால் அதைப்பற்றி இங்கு தெரிவித்தால் அதற்குப் பதில் சொல்ல இன்றே தயாராயிருக்கிறேன். இன்னொன்றும் ஆர்வத்தோடு சொன்னார்கள். அவர்கள் ஒரு தொழிலாளர் தலைவர். நீண்ட நாட்களாக தொழிலாளர் பிரச்சனையில் ஈடுபட்டிருக்கிறவர்கள். அவர்களுக்கு அந்த அனுபவம் இருக்கிறது என்று கருதுகிறேன். தொழிற் சட்டத்தில் இந்த அரசாங்கத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அவரே எவ்வளவோ தொழில் தகராறுகளைப் பார்த்திருப்பார்கள். 12 நாட்களாக இந்த அரசாங்கம் என்ன செய்தது என்று ஆத்திரமாகக் கேட்டார்கள். எவ்வளவு மாதங்கள் அவர்கள் பிரச்சனைகளை அலசிப் பேசி இருக்கிறார்கள் என்பது அவர்கள் அனுபவத்தில் தெரியும். நாளைச் சுருக்குவதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியும். 12 நாட்களில் என்ன செய்யப்பட்டது என்று அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் சொல்லுகிறேன். விம்கோவில் வேலைநிறுத்தம் என்று கேட்டவுடனே இரவு 12 மணிக்கு மேல் முதல் அமைச்சர் அவர்கள் வீட்டில் தொழிலாளர்கள் தலைவர்களோடு தொழிற்சாலைப் பிரதிநிதிகளையும் அழைத்து, நான் தூங்கிக் கொண்டிருந்தபோது என்னையும் முதல் அமைச்சர் அவர்கள் வரவழைத்து, அதிகாரிகளையும் வரவழைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட போலீஸ் அதிகாரி இவர்களையும் அழைத்து அப்பிரச்சனை பற்றி பேசப்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** வேலைநிறுத்தம் அல்லது தொழில் தகராறு ஏற்படக்கூடிய இடத்தில் எவ்வளவு நாட்களுக்கு அதை நீடித்துக் கொண்டிருப்பது என்று கேட்கிறேன். எனக்கு அனுபவம் உண்டு, மற்ற தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அனுபவம் உண்டு என்றார்கள். தொழில் தகராறு ஏற்படக் கூடிய நேரத்தில் உடனுக்குடன் தலையிட்டு பிரச்னையை உடனுக்குடன் தீர்ப்பதற்கு வேண்டிய அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. அதுமட்டுமல்ல. தொழிற்சங்கச் சட்டங்களைத் திருத்துவதற்கான, லேபர் என்பது கண்கரன்ட் லிஸ்டில் வருவதால் அச்சட்டங்களில் சில திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பும் அதிகாரமும் மாநில அரசுக்கு உண்டு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதிகாரம் உண்டு என்று மீண்டும் சொல்கிறார்கள். அதையும் தெளிவாக்க வேண்டும். இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின் கீழ்தான் இந்த அரசு தலையிட முடியும். இந்த அரசாங்கம் தலையிட்டால் கன்சிலியேஷன் தான் செய்ய முடியும். கன்சிலியேஷனில் அறிவுரைதான் கூற முடியும். அதை ஏற்க மறுத்தால் நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியும்.





**திரு. சி. கோவிந்தராசன் :** அதை உடனடியாகச் செய்ய வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிற்சங்கத் தகராறை ஒரு நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு முன்னால் முழு முயற்சி செய்து அவர்களுக்குள்ளே காம்ப்ரமைஸ் செய்வதுதான் வழக்கம். தொழிற்சங்க வழக்குகளை நீதிமன்றத்திற்கு அவசரமாக அனுப்பாதீர்கள் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளே கேட்டுக்கொள்கிறார்கள்.

**திரு. சி. கோவிந்தராசன் :** நான் கூறுவது என்னவென்றால், தீவிரமான நிலை ஏற்படும்போது, நிலைமை முற்றி வரக்கூடிய சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு ஒரு பொறுப்பு உண்டு. அந்த முறையில் அதிகாரிகளுக்கு ஆக்ஞையிட்டு—பல பிரச்னைகள் நாடு முழுவதும் தோன்றுகிறது, தமிழ்நாடு முழுவதும் தோன்றுகிறது. வேலைநிறுத்தம் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கக்கூடிய நிலை ஏற்படும்போது அந்தப் பிரச்னையில் அதிகக் கவனம் செலுத்தி உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்புவதாகயிருந்தாலும் சரி அல்லது ஆர்பிட்ரேஷன்க்கு அனுப்புவதாகயிருந்தாலும் சரி, உடனடியாகச் செய்ய வேண்டும். தேவை என்றிருந்தால் அதில் உடனே தலையிட்டு தவிர்க்க முடியும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மறுபடியும் கேட்கிறேன். அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் ஆட்சி என்ன செய்ய முடியும்? உடனுக்குடன் கன்சிலியேஷன் ரிப்போர்ட் வந்தவுடன் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிடலாம், அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று உறுப்பினர் அவர்கள் அவர்கள கட்சி சார்பில் ஒத்துக்கொண்டால் நாளையிலிருந்தே அது பின்பற்றப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆர்பிட்ரேஷன் என்றார்கள். ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்ப சட்டத்தில் அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. இருவரும் ஒத்துக் கொள்ளவேண்டும். வேறு ஜாயின்ட் ரெஃபரன்ஸ் வேண்டுமென்றால் இருவரும் சேர்ந்து செய்ய வேண்டும். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் எவ்வளவு வழக்குகளை நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறது, ஏற்கனவே எவ்வளவு அனுப்பப்பட்டது என்ற புள்ளிவிவரங்களை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அவர்களை நான் கேட்கிறேன். அவர்கள் கட்சி சார்பில் சொல்லட்டும், எந்த வழக்காகயிருந்தாலும் சரி உடனுக்குடன் நீதி மன்றத்திற்கு அனுப்புவதை அவர்கள் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னால் அப்படி அனுப்பினால் வேலைநிறுத்தத்தை வாபஸ் வாங்கத் தயாராயிருக்கிறார்களா?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஒரு க்ளாரிஃபிக்கேஷன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** நீங்கள் குறுக்கிடக் கூடாது. உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. சி. கோவிந்தராசன்: இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் சென்ட்ரல் கவர்ன்மெண்டால் இயற்றப்பட்டது என்பதை மறுக்கவில்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் மத்திய அரசாங்கத்தால் விதிமுறைகள் அமைக்கப்படுகின்றன. அதேசமயத்தில் மாநில அரசினாலும் இயற்றப்பட்ட மதராஸ் இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ரூல்ஸ் இருக்கிறது. சட்டம் மத்திய அரசினால் இயற்றப்பட்டாலும் அதற்கு விதிகள் அமைக்கும் அதிகாரம் நம் அரசுக்கு உண்டு. அது ஒருபுறமிருக்க, சட்டம், அமைதி, ஒழுங்கு என்ற முறையில் அந்தப் பிரச்னையைப் பார்க்காமல் தொழில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பதை கணக்கிலெடுத்து அரசாங்கம் ஓரளவு தன் செல்வாக்கை உபயோகப்படுத்தி பிரச்னையைத் தீர்த்து வைக்க முதலாளிகளுடன் பேசி உடனுக்குடன் முடிவு காணவேண்டும் என்றுதான் நான் கூறுகிறேன். தகராறு தீர அதிக காலதாமதம் ஆகிறது. தொழில் தகராறு நீடிப்பதற்கு அடிப்படையான காரணம் இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் உள்ள அந்த விதிதான் என்பது தெரியாமல் இல்லை. அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக சட்டத்தைப் புறக்கணித்துப் போகவேண்டுமென்று சொல்லவில்லை. கன்சீலியேஷன் என்று சொன்னால் கன்சீலியேஷனுக்கு முதலாளிகள் வராமலேயே இருக்கிறார்கள். அதில் பல மாதங்கள் காலம் கடத்தப்படுகிறது. அந்த நிலையில் ஒரு தாக்கீது அனுப்பி கன்சீலியேஷனுக்கு வராவிடில் எக்ஸ் பார்ட்டியாக தீர்க்கப்படும் என்ற அளவில் தாக்கீதுகள், உத்தரவுகள் அனுப்ப முடியும். அதிகாரிகளின் அதிகாரங்கள் ஒருபுறம் இருந்தாலும் அரசாங்கம் முன் முயற்சி எடுக்க வேண்டும். இது விஷயங்களில், துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தப்பட்டவரையில் நான் குறிப்பிட்டது பத்திரிகைகளில் படித்த செய்தி. போலீஸ் அதிகாரிகள் சமயோஜிதம்போல் நடந்துகொள்ளலாம், நிர்ப்பந்தமான நிலை இருந்தால் எங்களைக் கலக்கவேண்டிய அவசியம் இல்லை, அவர்களே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில் இருந்தது. அது தவறாக இருந்தால் எடுத்துவிடலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தப பத்திரிக்கை? அதைப் படித்துக் காண்பித்து அதில் என்ன இருக்கிறது, எது தவறு என்று விளக்கவேண்டும். சும்மா ஒரு அமைச்சர்மீது பழி சுமத்தி தப்பித்துக் கொள்வது சரியல்ல. சட்டம், ஒழுங்கு துறைகள் இருப்பது என்னிடமல்ல. அவை முதல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. சட்டம், ஒழுங்கு என்பதற்கு சட்டம் கிடையாது. எந்தக் கட்சியாக இருந்தாலும் சட்டத்தை மீறி நடந்தால் ஆங்காங்குள்ளவர்கள் நடவடிக்கைகள் எடுக்கத்தான் செய்வார்கள். அதைக் கட்டுப்படுத்த அமைச்சர்களுக்கும் அதிகாரம் கிடையாது, அரசாங்கத்திற்கும் அதிகாரம் கிடையாது. யாருக்குமே அதிகாரம் கிடையாது. சட்டத்தை மீறுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.





இச்சமயத்தில் நான் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டப்படியான நிலைகளைச் சொல்லும்பொழுது இந்திய அரசாங்கம் சம்பள நிர்ணயக் குழுக்களை நியமித்திருக்கிறது. அந்த சம்பளக் குழுக்கள் இடைக்கால தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன. அவைகளை முதலாளிகள் அமுலுக்குக்கொண்டு வருவது இடையாது. என்ஜினியரிங் வேஜ் போர்டால் அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. அதன் விளைவாக பல்வேறு வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் நடைபெற்றதை சமீபத்திலே பார்த்தோம். அமைச்சரவர்கள் கூறலாம், அதைப்பற்றிய அதிகாரம் தங்களுக்கு இல்லை என்று. பல முதலாளிகள், சம்பள நிர்ணய குழுக்களின் முடிவு ஆலோசனைதானே தவிர அது சட்டப்படியாக எங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்கிறார்கள். ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படியிருந்தும்கூட புதிய தமிழக அரசு என்ஜினியரிங் வேஜ் போர்டு கொடுத்த இடைக்கால நிவாரணத்தை முதலாளிகள் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று விடுத்துள்ள சுற்றறிக்கையைப் பார்த்தேன். அது வரவேற்கக் கூடியது. முதலாளிகள் சட்டங்களுக்குள் புகுந்துகொண்டு தொழில் சச்சரவுகளை வேண்டுமென்றே கிளப்பும் நேரத்தில் கஷ்டப்படக்கூடிய பாமர மக்களுக்கு நம்முடைய அரசினுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயம். தற்போதுள்ள 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்', 'பேக்டரீஸ் ஆக்ட்', ஒர்க்ஸ்மென் காம்பன்சேஷன் ஆக்ட்' போன்ற இவைகளில் தொழிலாளர்களுக்கு முற்றிலும் சாதகமான விதிகளைக் காண முடியாது.

நமது மாநிலத்திலுள்ள என்.ஜி.ஓ.-க்கள் 'பே கமிஷன்' வேண்டுமென்று கூறுகிறார்கள். அதையும் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் நான் ஆரம்பத்திலேயே கூறியது போல நிதி ஒதுக்கீடு பிரச்சினை குறுக்கே வருகிறது. இந்த மாநிலத்தில் சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலே இப்படிப்பட்ட நிலைமைகள் குறுக்கே வருகின்றன. மத்திய அரசைச் சேர்ந்த பிரச்சினையாக இருந்தாலும், எப்படி நாம் இந்தி மொழிக்கு எதிராக சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இங்கு தீர்மானம் நிறைவேற்றினோமோ அதைப்போல் இதிலும் இந்திய அரசியல் சட்டம் குறுக்கே நின்றாலும் அதைத் திருத்துவதற்கு இந்த அரசு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று கோருகிறேன். என்.ஜி.ஓ-க்களுக்கு "பே கமிஷன்" வேண்டும். நமக்குச் சக்தியில்லை என்ற காரணத்தால் ஒத்திவைக்கத் தேவையில்லை.

அதேபோல் ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி அளிக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கோயம்புத்தூர் சம்பந்தப்பட்டவரை நொடிந்துவிட்ட மில்கள் சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம் பல்வேறு முயற்சிகளைச் செய்திருப்பது பாராட்டத்தக்கது, இதை மறுக்க முடியாது.

'ரங்க விலாஸ்' இன்னமும் திறக்கப்படவில்லை. 'டெக்ஸ்டூல்ஸ்' முழுவதும் திறக்கப்படவில்லை. திறக்க வேண்டுமென்று கூறியும் பல மில் அதிபர்கள் இன்னும் திறக்காமலேயே இருக்கிறார்கள். இரண்டொருவர் திறந்தாலும்கூட முழு உற்பத்தி பெருகாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதற்கு முதலில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வி. கே. கோதண்டராமன்** : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், சார். கனம் அமைச்சரவர்கள் 'ஆர்பிட்ரேஷன்'-க்கு விடுவதற்கு முன்னால் 'கன்ஸீலியேஷன்' செய்ய நடவடிக்கை எடுப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் 'விம்கோ' குழப்பமே ஏற்படுவதற்கான காரணம்—எந்தப் பக்கத்திலே தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால் அந்தத் தவறுக்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்து 15 தினங்களுக்குப் பிறகு வேலை நிறுத்தம் ஏற்பட்டு 12 தினங்கள் ஆகியும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அதிகாரிகள் விசாரணை செய்யவில்லை என்பதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அப்படிச் செய்யாததினால்தான் இப்படி ஏற்பட்டது என்றுகூட ஏன் சொல்லக்கூடாது? அது தானே அடிப்படை. அதிகாரிகள் செய்யக்கூடிய அதிகாரத்தை குறிப்பிட்டார். ஆகவே இந்தக் காரணத்தை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : முன்பு பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் தெரிந்து பேசினார்கள். இப்பொழுது பேசிய நம்முடைய கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அரைகுறையாகத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே நான் உண்மையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். லேபர் ஆபீசர் ஒருவர் சென்று பேசினார். சில டிமான்ட்டுகள் ஒத்துக்கொள்ளப்பட்டன. ஒன்றில் 'கோடு'-ஐ மீறுவதாக இருந்தது. இதனால் [illegible] ஏற்பட்டது. அது முடியாத நிலையிலே வேலைநிறுத்தம் ஏற்பட்டது. ஸ்டிரைக் நடப்பது சட்ட விரோதம் என்று தெரியும். அதை இப்பொழுது சொன்னால் தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கும். கேட்டுவிட்ட காரணத்தாலே சொல்லுகிறேன். அதைச் சாதகமாகச்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

செய்ய வேண்டுமென்று இரவு 12 மணி அளவில் முதலமைச்சர் அவர்கள் அவர்களோடு பேசினார்கள். லேபர் ஆபீசர் முன்னும், லேபர் கமிஷனர் முன்னும், பேசத் தயாராக இருக்கிறது, அது சட்ட விரோதமாக இருந்தாலும் கூட. நாங்களே முன் நின்று பேச்சுவார்த்தைகள் நடத்துகிறோம். இதைவிட வேறு என்ன வேண்டும். எந்தச் சட்டத்திலே அதைச் செய்ய முடியும் என்று காண்பித்தால் அதையும் செய்யத் தயாராக இருக்கிறோம்.





(குறுக்கீடு) இந்த அரசாங்கம் தொழிலாளர்களை அல்ல, எந்த ஒரு குடிமகனையும் சுடுவதற்கு ஒத்துக்கொள்ளாது. அப்படிச் சுடப்பட்டிருந்தால் அதை நிச்சயமாகப் பரிவோடு பரிசீலிக்குமே தவிர, அது சரி என்று வாதிடும் அரசு அல்ல அண்ணாவின் அரசு. (ஆரவாரம்).

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : காங்கிரஸ்காரர்கள் சுட்டார்கள் என்பதை வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : தலைவரவர்களே, விநாயகம் அவர்கள், முதலாளிகளைச் சுடச் சொன்னதாகக் கூறியதை விளக்கத்தான் இந்த விளக்கம் ஏற்பட்டது. திரு. விநாயகம் அவர்கள் இதைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இரண்டும் வாபஸ் வாங்க வேண்டிய நிலையில் அப்படியே இருக்கட்டும்.

**திரு. கே. விநாயகம்** : சொல்வது என்றால் உட்கார்ந்து சொன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. விநாயகம் அவர்கள் இடத்தில் உட்கார்ந்துகொண்டு எது எதையோ பேசுவதன்விளைவை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இடத்திலேயே உட்கார்ந்து பேசுவது முறையாக இருக்காது. எப்படி உட்கார்ந்து பேசினாலும் தவறுதான்.

**திரு. கே. விநாயகம்** : இது ஒரு புதுத் தத்துவம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நான் சொல்வது தத்துவம்தான். அது தவறாக இருந்தால் நீங்கள் சொன்னாலும் நான் திருத்திக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் விநாயகம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்** : மதிப்பிற்குரிய துணைச் சபா பி.ப. 1-30
நாயகர் அவர்களே, ஆளுநர் உரைமீது ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையிலே வேளாண்மைத் துறைக்கு முதலிடம் கொடுக்கப்படவில்லை. அதனால் வேளாண்மைத் துறை குறைந்து விட்டது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது வேளாண்மைத் துறையிலே வெகு வேகமான முன்னேற்றங்கள் உள்ளன, ஒருபோக நிலங்கள் இருபோகங்களாகவும் இருபோகங்கள் மூன்றுபோகங்களாகவும் ஆகியுள்ளது, அமோக விளைச்சலைக் கண்டு விட்டோம், 7.8 லட்சம் டன் அளவு உற்பத்தியைப் பெருக்கி விட்டோம் என்றெல்லாம் பேசப்படுகிறது. இந்த ஆண்டிலே போன ஆண்டை விட அமோக விளைச்சல் குறைந்து விடும் என்றுதான் நான் நினைக்கிறேன். முந்தைய காங்கிரஸ்காரர்கள் போட்ட திட்டங்களினாலும் கட்டிய அணைக்கட்டுகளாலும்தான் சென்ற ஆண்டு அமோக விளைச்சல் ஏற்பட்டது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒருபோக நிலங்க

ளெல்லாம் இருபோக நிலங்களாக ஆக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. முன்பு காங்கிரஸ் அரசாங்கம் போட்ட திட்டங்களின் வாயிலாகவும் அணைகளின் மூலமாகவும்தான் இந்த விளைச்சலுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறதே தவிர, இவர்கள் புதிதாக அணைகளோ, ஆறுகளோ அல்லது குளங்களோ கட்டி இந்த நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த இருபோக நிலங்களிலேயும்கூட இந்த ஆண்டு 6 லட்சம் ஏக்கர் பயன்படாதது என்று தெரிய வருகிறது. அந்த 6 லட்சம் ஏக்கரும் சாவியானால் இந்த ஆண்டிலே விளைச்சல் குறைவாக இருக்கும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உற்பத்தி குறையும் என்பதில் சந்தேகம் இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்லுகிறேன். உணவு உற்பத்திக்கு மின்சாரமும் தேவைப்படுகிறது. என்னுடைய தொகுதியிலே, வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற என்னுடைய தொகுதியிலே, நூற்றுக்கணக்கான பம்பு செட்டுகள் இருக்கின்றன. ஆனால் அந்த பம்பு செட்டுகளுக்கெல்லாம் 2 வருஷம் 3 வருஷமாக மின்சாரம் கொடுக்கப்படாமல் இருப்பதால் அங்குள்ள மக்கள் மிகவும் வேதனைக் குள்ளாகியிருக்கிறார்கள். அதிகாரிகளைப் போய் பார்த்து இந்த பம்பு செட்டுகளுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுங்கள் என்று கேட்டால், உங்களுடைய ஆட்சியிலே ஒதுக்கிய பணம் தீர்ந்து போய் விட்டது, இனி அந்தக் கிணறுகளுக்கு மின்சார வசதி செய்து தர வேண்டுமென்றால் பணம் ஒதுக்கினால்தான் முடியும் என்று பதில் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட வகையில் நிலைமைகள் முன்னேற்றம் அடையவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட முற்படுகிறேன். **1967-ம்** ஆண்டிலே புதிய கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 2,000 ஒதுக்கப்பட்டது. அதில் முதல் தவணையாக ரூ. 1,000 கிடைத்த பின் கிணற்றை வெட்டி விட்டு, அதற்கு மீண்டும் தங்களிடமுள்ள எல்லாவற்றையும் விற்று விட்டு, வேலையை பூர்த்திசெய்ய இரண்டாவது தவணையைக் கேட்கும்போது அலாட்மெண்டு கிடையாது என்று மறுக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் எந்தப் பகுதியிலே அந்த மாதிரி நடக்கிறது என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** வட ஆற்காடு முழுவதிலும் அப்படி இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே 25 கிணறுகள் அப்படி இருக்கின்றன. அதைப் பற்றி மாவட்ட ஆட்சியாளர்களிடத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டில் புதிய கிணறுகள் வெட்டியதற்கு நீங்கள் இரண்டாவது தவணைத் தொகை வழங்க வேண்டுமென்று டி.டி.சி. கூட்டத்தில்கூடக் கூறினோம் என்பதை நான் சொல்லிக் கொள்ளுகிறேன். வெட்டிய கிணறுகளுக்கே இன்னும் மின் வசதி செய்யப்படவில்லை என்றும், அந்தக் கிணறுகளிலேயே சில பூர்த்தியடையாமல் இருக்கின்றன என்றும் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன். இங்கு விவசாயிகளைக் காங்கிரஸ்காரர்கள் தூண்டி





விட்டார்கள், தூண்டி விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே தூண்டிவிடப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயத் துறையிலே ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைப் பற்றிப் புள்ளி விவரங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். விவசாயிகளிலே இன்றைக்கு 100-க்கு 90 பேர் கடன்காரர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன் ஆனால் இந்த விவசாயிகள் மேலும் மும்முரமாக உற்பத்தி செய்ய வேண்டுமானால், விவசாயத் தொழிலில் ஈடுபட வேண்டுமானால், அவர்கள் விவசாயத்திலே மும்முரமாக ஈடுபட வேண்டுமானால், இந்த விவசாயிகள் நல்ல முறையில் வாழ்வதற்கு அரசாங்கம் உறுதி கொடுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லாமல், போன ஆண்டைவிட இந்த ஆண்டு உற்பத்தி பெருகி இருக்கிறது என்று புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லுவதனால் எந்தவிதப் பலனும் இல்லை. இந்த ஆண்டிலே 25 சதவிகிதம் நெல் உற்பத்தி குறைந்துவிட்ட உண்மையை நான் நேரடியாக விளக்க விரும்புகிறேன். இந்த ஆண்டிலே உணவு உற்பத்தி செய்ய விரும்பிய எல்லோரும் கரும்பு உற்பத்தியிலே ஈடுபட்டு விட்டார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த நெல் விவசாயத்தைவிட கரும்பு விவசாயத்திலே அதிக லாபம் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கொள்முதலுக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டும். நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம். 'காங்கிரஸ்காரர்கள் என்ன விலை நிர்ணயித்தார்களோ, அதே விலையைத்தான் நாங்களும் விவசாயிகளுக்குத் தருகிறோம் என்று. ஆனால் அப்பொழுது எப்படி இருந்தது? ' நெல்லினுடைய விலை ரூ. 33 இருந்தது. உரத்தினுடைய விலை ரூ. 33 ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது நெல்லினுடைய விலை ரூ. 33 ஆக இருக்கிறது. ஆனால் உரத்தின் விலை ரூ. 45 ஆக ஏறி விட்டது. அதைப்போலவே இந்த விவசாயத்திற்கு வேண்டிய சாமான்களின் விலைகள் 1¼ மடங்கு 1½ மடங்கு அதிகமாக உயர்ந்து விட்டது. இந்த நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகளுக்குக் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறேன். ஆளும் கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் இங்கே நேற்றுப் பேசும்போது சில வார்த்தைகள் சொன்னார்கள். போன வருடம் மார்ச் மாதத்திலே என்ன பேசினார்கள் என்பதை கொஞ்சம் நினைவுப்படுத்த விரும்புகிறேன். நாங்கள் கொஞ்ச காலம் ஆட்சியில் இருக்க வேண்டும். பிறகு, நிச்சயம் மக்களுக்குக் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுவோம்; நிச்சயம் ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்று உறுதி மொழி கொடுத்தார்கள். சட்ட மன்றத்திலே கொடுத்தார்கள். 1967 வருடம் மார்ச் மாதம் 29-ம் தேதி அன்று அவ்வாறு கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த அங்கத்தினர் என்ன சொல்லுகிறார். அன்றைக்குச் சொன்னதை அடியோடு மறந்து விட்டார். போன ஆண்டிலே இங்கே பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கள் ஆட்சியை 50 ஆண்டுகளுக்கு யாராலும் அசைக்க முடியாது என்று கூறினார்கள். ஆனால் இந்த ஆண்டிலே அவர்களுக்கே மனம் மாறி

[திரு. கே. சகாதேவக் கண்டர்] [1968 பிப்ரவரி 13

விட்டதோ, அல்லது மக்களுடைய எண்ணம் புரிந்துவிட்டதோ இனி 5 ஆண்டுகளுக்கு எங்களை அசைக்க முடியாது என்று சொல்கிறார்கள்.

இந்தப் படியரிசித் திட்டத்தைச் சென்னையிலும் கோவையிலும் மாத்திரம்தான் அமல்படுத்தியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தப் படி அரிசியை மாநிலம் முழுவதற்கும் போட வேண்டும். அதாவது எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும், அல்லது அதை அடியோடு கைவிட்டுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கண்ணிலே வெண்ணெயும் ஒரு கண்ணிலே சுண்ணும்பும் வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த மாநிலம் முழுவதற்கும் அந்தப் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க நீங்கள் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்ட சபையில்கூட நகரசபைத் தேர்தல் பிப்ரவரியிலே வருகிறது. ஆகவே, பொங்கலின்போது மாநிலம் முழுவதும் அந்தத் திட்டத்தை விஸ்தரித்து விடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது கைவிட்டு விட்டார்கள். அப்படி இல்லாமல் அந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே சாத்தனூர் அணை இருக்கிறது. அந்த சாத்தனூர் அணையின் ' மெயின் ' வாய்க்காலிலே இன்னும் 12 மைல் நீளத்தில் கான்கிரீட் போடப்படாமல் இருக்கிறது. அந்த 12 மைல் நீளத்திற்கு கான்கிரீட் வசதி செய்து விட்டால் இன்னும் 5,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னொரு அணை கட்டி தண்ணீரைத் தேக்குவதற்குப் பதிலாக இந்த அணையையே அபிவிருத்தி செய்வதன்மூலம் தேவையான தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். போன ஆண்டு மார்ச் மாதத்திலே கூறியதை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவந்து மீண்டும் அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, தானிப்பாடி கிராமத்திலே ஒரு அணை ரெட்டியாப்பாளையத்திலே இருக்கிற அணை, கின்னிம்பேட்டையிலே இருக்கிற அணை, நாராயணக் குப்பத்திலே இருக்கிற அணை, புத்துச்செக்கடியிலே இருக்கிற அணை, ஆக இந்த சிறிய அணைகள் எல்லாம் உடைந்து இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. அதைப் பழுதுபார்க்கச் சொல்லி அடிக்கடி மனுக்கள் எழுதிக்கொண்டே இருக்கிறோம். போன ஆண்டிலே கூட எழுதினோம். தானிப்பாடி அணைக்கு எஸ்டிமேட் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அந்த அணையில் வேலையை முடிப்பதற்குத் துரிதமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, இந்தப் பழையனூர் பகுதிபோன்ற இடங்களிலுள்ள, புயலால் பாதிக்கப்பட்ட பாதைகள் எல்லாம்



1968 பிப்ரவரி 13] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

செப்பனிடப்படாமலே இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆண்டுகள் இரண்டு ஆகியும் இன்றுவரை அவை செப்பனிடப்படவில்லை. மற்றும் மேல்கழிப்பூர் கிராமத்திலே பள்ளிக்கூடம் ஒன்று இடித்து விட்டது. அந்தப் பள்ளிக்கூடத்தைச் செப்பனிட எஸ்டிமேட் தயாரித்து டென்டர்கள் விடப்பட்டு இன்றுடன் கிட்டத்தட்ட 8, 9 மாதங்கள் ஆகின்றன. இன்றுவரை அதைச் சீர்திருத்துவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அதிகாரிகளைச் சந்தித்து டேவணித் தொகைகட்டி, 7, 8, மாதம் ஆகிறதே என்று கேட்டால், இதுவரை கொடுத்த நிதிகள் எல்லாம் செலவழித்தாகி விட்டது . இனிமேல் நிதி கிடைத்த பிறகுதான் அதைச் செய்ய முடியும். இல்லாவிட்டால் செய்ய முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள். அதற்காகக் கட்டிய பணமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தண்டாரம்பட்டு தொகுதியிலே சின்னியம் பேட்டை என்ற கிராமத்தில் கானூர் என்ற ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரியைக் கட்டினால் அதன் கீழே சுமார் 200 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்திற்கு நீர் கிடைக்கும். 1957-லிருந்து 1967-வரை அந்த ஏரியைச் சீர்திருத்துவதற்கு மனுக்கள் அனுப்பிக் கொண்டே இருக்கிறோம். அம்மனு என்னிடத்திலே கொடுக்கப்பட்டது. அந்த மகஜர் முதலமைச்சர் அவர்களுக்கும், ரெவினியு அமைச்சர் அவர்களுக்கும் விவசாய அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட ரெவினியு அதிகாரி அவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இதையும் அவசியம் அரசாங்கம் சீர்தூக்கிப் பார்த்து அங்கே விவசாய உற்பத்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே, தண்டராம்பட்டுத் தொகுதியில் பழையனூர் என்ற கிராமத்தில் அரிசன மக்கள் 80 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஏற்கனவே பயிர் செய்து கொண்டிருந்தார்கள். அது பஞ்சம தரிசு என்று சொல்கிறார்கள். அது உண்மையோ, இல்லையோ தெரியாது. அது பற்றி அவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த நிலத்தை ஓட்டிக்கொண்டு, பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால், தீர்வை செலுத்த முடியாமல் விட்டுவிட்டார்கள். சர்க்கார், பாரெஸ்டில் எடுத்துக்கொண்டு விட்டார்கள். அந்த நிலத்தை அவர்களுக்கு மீண்டும் அடமானம் செய்துகொடுக்க வேண்டும் என்று கோரி அரிசன நல இலாகா அமைச்சர் அவர்களுக்கு மனு ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதைச் சீர்தூக்கிப் பார்த்து, அந்த நிலங்களை அவர்களுக்குப் பட்டாச் செய்து கொடுக்கும்படியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் கிணறுகள் வெட்டிக்கொள்வதற்கும், மின்சாரப் பம்பு செட்டுகள் ஓடாமல் இருந்தால், அவற்

றைப் பூர்த்தியாக ஓடச் செய்வதற்கும், அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த். அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதில் நானும்

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நமது கருத்துக்களை ஜனநாயக முறையில் தெரிவிப்பதற்கு இந்த மாதிரியான ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கவர்னர் பெருமான் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கவர்னர் பெருமான் உரையில் முதன் முதலாகச் சட்டசபைக்கும், மற்றும் அலுவலர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில் முதல் பாரா அமைந்திருக்கிறது.

அடுத்து, மொழிக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுத்து, மொழி எவ்வாறு நம் நாட்டிற்கு, நம்முடைய பிராந்தியத்தைப் பொறுத்த அளவில் முக்கியமானது என்பதையும் அதிலே சொல்லியிருக்கிறார். ஆகவே, அது பாராட்டுதலுக்குரியது என்பதை நான் கூறவேண்டும்.

அடுத்து, விவசாயம் முன்னேற வேண்டும், விவசாயத்திற்கு என்னென்ன திட்டங்கள் வகுக்கப்பட்டன, நம்முடைய கடந்த கால நிலைகள் என்ன, மத்திய அரசுக்கும் நமக்கும் தொடர்பு எவ்வாறு இருக்கிறது என்பதையெல்லாம் சிறிது சூசகமாகக் காட்டியிருக்கிறார்கள். அவையெல்லாம் முக்கியமான விஷயங்களாக இருந்தாலும், விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்றால், அப்படிப் பெருக்குவதற்கு முதலில் உயிரை வைத்திருக்க வேண்டுமே, அதற்கு வேண்டிய உணவு, வேண்டாமா, அதை எப்படி பெறுவது என்பதற்கு என்னென்ன திட்டங்களை தீட்டியிருக்கிறோம் என்றெல்லாம் சிறிது விளக்கமாக விளக்கியிருந்தால் இன்னும் பாராட்டக் கூடியதாக இருக்கும். போற்றக் கூடியதாக இருக்கும். ஒருவரை ஒருவர் நாம் ஏசிப் பேசிக் கொண்டிருக்காமல், திட்டவேண்டும் என்ற நிலை இல்லாமல், இருக்கக்கூடிய அனுபவங்களை வைத்துக்கொண்டு, கடந்த கால அனுபவங்களிலிருந்து நமக்குக் கிடைத்த படிப்பினையை வைத்துக் கொண்டு, ஏன் திட்டங்களைப் பற்றிச் சொல்லக் கூடாது? வரப்போகிற பட்ஜெட்டில் என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டும் என்று சொல்வதற்குத்தான் நாம் கவர்னர் உரையின்மீது விவாதம் நடத்துகிறோம். வரப்போகிற திட்டங்கள் என்ன என்பதைச் சூசகமாகக் காட்டுவதுதான் கவர்னர் உரை. கவர்னர் உரையில் நாம் சென்ற காலத்தில் என்னென்ன நன்மைகளை அடைந்திருக்கிறோம் என்பதைச் சொன்ன வகையில் ஒரு படி அரிசித் திட்டத்திற்கு நல்ல ஊக்கமும், ஆக்கமும், ஆதரவும் தருகிற வகையிலே சில வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. படி அரிசித் திட்டம் மிகவும் வரவேற்கத் தக்கது என்றாலும், சென்னையிலும் மற்றச் சில பகுதிகளில் மட்டும் தான் அது அமல் நடத்தப்படுகிறது. அப்படிப் பார்க்கும்பொழுது வாக்குக் கொடுக்கப்பட்ட மக்கள் அத்தனை பேர்களும் 'அவர்கள் தான்





அத்தனை பேர்களும் 'அவர்கள் தான் வேண்டுமா, நாங்கள் வேண்டாமா, அவர்கள்தான் வோட்டுக் கொடுத்தார்களா, நாங்கள் வோட்டுத் தரவில்லையா, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்றெல்லாம் எங்களைக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் பதில் செல்ல வேண்டியிருக்கிறது. நாம் இருக்கக்கூடிய நிலையை உணர்ந்திருந்தாலும், நாகரிகமான முறையில் நிலையை அமைச்சர்களிடமிருந்து நாங்கள் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தாலும், பாமர மக்களுக்கு அதை எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எடுத்துச் சொல்லவேண்டுமென்றால், அதற்கு நேரமும் சந்தர்ப்பமும் கிடையாது, இடம் கொடுக்கவில்லை. ஆகவே, எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் சொன்னதுபோல், ஒன்று ஒரு படி அரிசித் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும், கட்டுப்படியானால் அதைத் தொடர்ந்து எல்லா இடங்களிலும் அமல் படுத்த வேண்டும், அல்லது அது கைவிடக்கூடிய திட்டமாக இருந்தால், அதைக் கைவிட்டுவிட்டால், பெயர் கெடுதல் இல்லாமல் இருக்கும் என்பதைத்தான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உணவு உற்பத்திப் பெருக்கத்தில் பல இக்கட்டுகள், பல சங்கடங்கள் இருக்கின்றன. எந்த இடத்திலும் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத்தான் முதல் இடம் கொடுக்கவேண்டும், உணவுக்கு வேண்டிய பொருள்களைத்தான் சாகுபடி செய்ய வேண்டும், மற்றப் பணப் பயிர்களைச் சாகுபடி செய்யக் கூடாது என்று ஒரு சில தடைச் சட்டங்கள் விதிக்கப்படவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் இன்று ஒரு கேள்வி கேட்டபொழுது, அதாவது கரும்பைச் சாகுபடி செய்கிறார்களே, அவர்களையெல்லாம் அப்படிச் செய்யாமல் தடுக்க முடியாதா என்று கேட்டபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை. முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதது நெல். நெல் வேண்டும் முக்கியமாக. கரும்பு இல்லாமல் ஒருவரும் செத்துவிடப்போவதில்லை. சீனி இல்லாமல் ஒருவரும் செத்துவிடப் போவதில்லை, பருத்தி இல்லாமல் ஒருவரும் செத்துவிடப்போவதில்லை. சிறிது கந்தையாக இருந்தாலும் கசக்கிக் கட்டிக் கொள்ளலாம். அதேபோல் சீனி இல்லாவிட்டால், சிறிது காரத்தைச் சாப்பிட்டுக்கொள்ளலாம். நமக்குவேண்டியவையெல்லாம் அரிசி, உப்பு, புளி, மிளகாய். ஒரு படி அரிசித் திட்டத்தைப்போல், நாம் இந்தப் பொருள்கள் பொறுத்தவரைக்கும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். உப்பு விலை என்ன? புளி விலை என்ன? மிளகாய் விலை என்ன? விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. சீனி கண்ட்ரோலை ஓரளவுக்கு ரத்து செய்தாலும், இப்பொழுது சீனி கிடைக்கிறதா என்று மக்கள் கேள்விகளை எழுப்புகிறார்கள். இதற்கெல்லாம் நாம் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. என்ன பதில் சொல்வது என்பதுபற்றி அமைச்சர்கள் எங்களுக்குச் சொல்லித் தரவேண்டும். இதற்கு அமைச்சர்கள் வழிவகைகள் செய்துத் தரவேண்டும். சென்னையில்மட்டும் வேறு

சூழ்நிலை இருக்கலாம். மற்ற இடங்களில், 'மொபஸிலில்' கட்டாயம் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. கரும்புத் தோட்டங்கள் என்றுதான் பெயர் இருக்கிறதே தவிர, பருத்திக் கொல்லை என்றுதான் பெயர் இருக்கிறதே தவிர, பருத்தி வயல், கரும்பு வயல் என்ற பெயர் கிடையாது. பாரதியார் அவர்களும் 'கரும்புத் தோட்டத்திலே' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். தோட்டத்தில்தான் அப்படிப்பட்ட பயிர்கள் இருக்கவேண்டும், வயல்களில் அல்ல. மக்கள் ஏன் பணப் பயிரில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும், கருத்துச் செலுத்த வேண்டும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். நெல்லைப் பொறுத்தவரையில் இருக்கக் கூடிய சட்ட திட்டங்கள், ப்ரொக்யூர்மெண்டு சட்டங்கள், கட்டுப் பாடு சட்டங்கள் இவை தான் இதற்குக் காரணம். அவர்கள் சாகுபடிக்காகச் செலவழித்த பணம் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. அவர்கள் விதைக்குக்கூட நெல் வைத்திருக்கக்கூடிய நிலை அங்கு ஏற்படுவதில். அவர்கள் விவசாயத்திற்காக எவ்வளவு செலவழித் திருக்கிறார்கள், எவ்வளவு உற்பத்தியாகி இருக்கிறது என்பதை யெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நான்கு போகம் நெல் விளைவிக்க முடியாது. ஏனென்றால் வருஷத்தில் 12 மாதங்கள் தான். இரண்டு போகங்கள்தான் விளைவிக்கலாம். எந்த நெல், எந்த ஆண்டில், எந்தத் தண்ணீருக்கு எவ்வளவு உற்பத்தியாகும், எந்த ஆண்டில், எந்தத் தண்ணீருக்கு எந்தக் கண்மாய் தண்ணீருக்கு எவ்வளவு உற்பத்தியாகும், எப்பொழுது விதைக்க லாம், எவ்வளவு விளைச்சல் உண்டாகும் என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். 60-ம் கோடையில் சில வகை நெல்லும், மற்றையக் காலங்களில் சில வகை நெல்லும் விதை நெல்லுக்காக வைத்திருக்கிறார்கள் என்றால், அதிகப்படியான நெல்லை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, அதையும் ப்ரொக்-யூர் செய்துவிடுகிறார்கள். எந்தக் காலத்தில், எந்தவித விதை நெல், எவ்வளவு வேண்டும் என்ற விதி முறைகள் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் ப்ரொக்யூர்மெண்டு நடத்திக் கொண்டிருக் கிறார்கள். நாம் எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம், ஐக்கிய நாடு வேண்டும் என்று பேசக் கூடிய காலத்தில், நாம் பார்க்கக்கூடிய நிலைமை என்னவென்றால், தாலுகாவுக்குத் தாலுகா நெல் நகரக்கூடாது, ஜில்லாவுக்கு ஜில்லா நகரக்கூடாது என்று கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இதனால் உற்பத்தி தடைபடு கிறது. நெல் உற்பத்தி செய்தால், சர்க்கார் நெல்லை எடுத்துக்கொண் டால், நமக்குச் சரியான விலை கொடுப்பதில்லை, நமக்கு விதை நெல்லுக்குக்கூட நெல் கொடுப்பதில்லை என்ற ஒரு எண்ணம் சாகு படியாளர்களிடையே வந்துவிட்டது. அதனால் அவர்கள் இந்தச் சர்ச்சையில் இறங்கவேண்டாம் என்று கருதி, நெல்லுக்குப் பதி லாகக் கரும்பைப் போட்டால் நல்ல விலை கிடைக்கிறது என்ற எண் ணத்தில் கரும்புக்கு மாற்றிவிடுகிறார்கள். சீனி ரூபாய் 3¾-க்குக் கூட கிடைக்கவில்லை, ஆகவே கரும்புச் சாகுபடி செய்வோம் என்று ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே, இந்தக் கரும்புச் சாகுபடியை, பணப்பயிர் சாகுபடியைத் தடை செய்து உணவு உற்பத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.





இன்றைக்கு மிக முக்கியமாகவுள்ள பிரச்சினை, மாண்புமிகு விவசாய அமைச்சர் சம்பந்தப்பட்டது. காட்டிலாகாவில் காடு அபிவிருத்தி என்று சொல்லிக்கொண்டு, முதலிலே காடுகளை அழிக்கிறார்கள். காடு இருந்தால்தான் மழை பெய்யும் என்று பழைய காலத்தில் கதைகள் கூறுகின்றன. இப்பொழுது காடு களை அழித்துவிட்டு, அந்த இடங்களில் நீலகிரியிலிருந்து வரும் யூகலிப்டஸ், முந்திரி போன்ற செடிகளை வைத்துக் காடுகளை உண் டாக்குவதற்கு முயற்சிகள் செய்கிறார்கள். அப்படிச் செய்யும் போது, 75 குடிகள் அல்லது 100 குடிகள் என்று இருக்கும் குடியிருப்புகளில் வலையர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எலியைப் பிடித்துத் தின்னும் பழக்கம் உள்ளவர்கள். அவர் களுடைய குடியிருப்புக்களைச் சுற்றிக் கிழக்கே காடு, மேற்கே காடு, வடக்கே காடு தெற்கே காடு. ஆகவே, அங்கிருந்து அவர்கள் குச்சியைப் பொறுக்கிக் கொண்டு வந்தால், காட்டிலாகா அதிகாரிகள், காட்டிலாகாச் சட்டத்தின்கீழ் அவர்களைக் குற்றம் சாட்டி, இந்த எலியைப் பிடித்துத் தின்பவர்களுக்குத் தலைக்கு ஐந்து ரூபாய், அந்த ராமாயிக்கு ஐந்து ரூபாய், சுப்பாயிக்கு ஐந்து ரூபாய் என்று, 4, 5 பேர்கள் இருந்தால் அந்தக் குடும்பத் திற்கு 50 ரூபாய் வரையில் அபராதம் போட்டால் அது எந்த அளவில் . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் அவர்கள் காடுகள் அழிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்வது காட்டிலாகா அதிகாரிகளா அல்லது, பொது மக்களா என்பதை விளக்க வேண்டும். காடுகளைப் பாதுகாக்கும்போது, சந்தன மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டிக்கொண்டு போவோரைத் தடுக்க, கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஏதாவது அந்த வகையில் அதிகாரிகள் தவறுகள் செய்தால், அதை கனம் அங்கத் தினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், கவனிக் கப்படும். சந்தனக் காடுகள் அழிக்கப்படாமல் பார்த்து கொள்ள வேண்டிய முயற்சியில்தான் அரசாங்கம் ஈடுபடுகிறது. அதிகாரி கள் அழித்து இருந்தால், தயவு செய்து அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

**திரு. சா. மெய்யப்பன்** : விளக்கம் கேட்டதற்கு நன்றி. காட் டிலாகா அதிகாரிகள்கூட காட்டில் ஒரு குறிப்பிட்ட விஸ்தீர ணத்தை முன்னறிவிப்புடன் "நோடிபை" செய்துவிட்டு, புல் பூண்டுகளை அகற்றிவிட்டு, அதிலே இப்பொழுது யூகலிப்டஸ், முந்திரி போன்றவற்றைப் பயிர் செய்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சந்தன மரம் என்பதே கிடையாது, நானே பார்த்தது கிடையாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் காட்டில் புல் பூண்டை அழித்துவிட்டு அந்த இடத்தில் முந்திரி, யூகலிப்டஸ் போன்றவற்றை வளர்க்கிறார்கள் என்றார்கள். புல் பூண்டுகளைவிட இவை அதிகப் பலன் தரக்கூடியவைதான் என்பதை கனம் அங்கத்தினர் உணரவேண்டும்.

**திரு. சா. மெய்யப்பன்**: காடுகளில் முந்திரி நடுவதிலிருந்து, காட்டைக் கண்காணிக்கும் அளவில் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நினைக்கிறார்கள், இங்கே இரண்டு ஒருவரைப் பிடித்துத் தண்டித்து விட்டால், அந்தப் பக்கம் யாரும் வரமாட்டார்கள் என்று பயிர்களைக் காப்பற்றத்தான் காட்டிலாகா அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். ஆனால், அதற்காக இருக்கும் ஏழை மக்களை விறகுபொறுக்கிக்கொண்டு வந்தால்கூட, விறகு வெட்டினார்கள், காட்டில் நுழைந்தார்கள், சட்டம் இருக்கிறது, சட்டப்படி அவர்களைப் பிடிக்கலாம் என்று செய்வது அவ்வளவு பொருத்தமா என்று பார்க்க வேண்டும். சட்டம் இருக்கிறது. சட்டத்திற்குள்ளே உண்மையைக் கொண்டுவந்துவிடலாம். ஆனால், உண்மைக்குத் தக்க சட்டம் ஏற்படவேண்டும் என்பதுதான் சட்டசபையின் நோக்கமாக இருக்க வேண்டும். சங்கடங்களைத் தவிர்க்க ஆலோசனை செய்ய வேண்டும் என்பதுதான் அமைச்சருக்கு என்னுடைய வேண்டுகோள்.

காட்டுப் பகுதிகள் அதிகமாக இருக்க வேண்டும் என்று செய்யும்போது, விவசாயம் செய்பவர்கள் நடக்க வழி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பஞ்சாயத்துச் சட்டத்திலே இருக்கிறது, அந்தப் பக்கத்திலே உள்ள காடுகளை அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று. அப்படிப்பட்டவை அவர்களுக்குச் சொந்தம் என்று இருக்கிறது. ஆனால், இம்மாதிரி எத்தனை பஞ்சாயத்துக்களுக்கு அறிவிக்கப்பட்டது? அவர்கள் எடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? பிரச்சாரங்கள் செய்யப்பட்டன? பஞ்சாயத்துக்களுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி விட்டால் அவர்களுக்குத் தெரியும், யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று. ஒருவருக்கே கொடுத்த நிலத்தை எடுத்துக் கொண்டால், உற்பத்தி பெருகமுடியாது. எப்பொழுது நாம் பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டுமென்று செயல்படுகிறோமோ, அப்பொழுதுதான் நாம் முன்னேற்றம் காண முடியும். அந்த வகையில் நல்ல முறையில் கவர்னர் பெருமான் உரை அமைந்திருக்கிறது என்று சொல்லி, இவ்வளவு நேரம் தந்ததற்காக என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அடுத்து திரு. தீர்த்தகிரி கவுண்டர் பேசுவார்கள். அவர்கள் இரண்டு மணி வரை பேசுவார்கள். அதன் மேலும் பேசவேண்டியிருப்பதை நாளை தொடர்ந்து பேசலாம்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்**: உதவி சபாநாயகர் அவர்களே, மாட்சிமை தங்கிய கவர்னர் பெருமான் உரைமீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே, இந்த நாட்டிலே பல வளர்ச்சித் திட்டங்கள்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாய அபிவிருத்தித் திட்டம் இன்னும் மற்றையத் திட்டங்கள் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நோக்கத்தோடுதான், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கும் கட்சி, எதிர்க்கட்சி, இன்னும் நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் நாட்டு





மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகின்றன. நாட்டிலே வறுமை நீங்கி நல்வாழ்வு வரவேண்டும் என்று சொல்வதில் எந்தக் கட்சிக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

இன்றைக்கு நம் மாநிலத்தில் இருக்கும் பிரச்சினை, உணவுப் பிரச்சினைதான். அதுதான் முக்கியமாக இருக்கிறது. உணவுப் பிரச்சினை தீர வேண்டும் என்றால், விவசாய உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருகினால் தான் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். உற்பத்தியைப் பெருக்க திட்டங்கள் போட்டிருக்கிறோம். முன்பே காங்கிரஸ் அரசாங்கம் பல திட்டங்களைப் போட்டிருக்கிறது. பெரிய அணைத் திட்டங்கள், மின்சாரத் திட்டம், பம்புசெட்டுகள் வழங்குதல்போன்ற மிகப் பெரிய திட்டங்கள் எவ்வளவோ போட்டு, உணவு அபிவிருத்தியைச் செய்திருந்தும், பற்றாக்குறை இருக்கிறது, இன்றைக்கு ரேஷன் முறை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை நம் தமிழ்நாட்டிலே இருக்கிறது. இன்றைக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த அன்பர்கள், உணவுப் பற்றாக்குறைக்குக் காங்கிரஸ் சர்க்கார்தான் காரணம் என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். வாதத்திற்காக காங்கிரஸ் சர்க்கார் காரணம் என்று வைத்துக் கொண்டாலும், 'நாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் ஒரு படி ஒரு ரூபாய்க்குப் போடுவோம்' என்று சொன்னதாக வைத்துக்கொண்டு ஏன் இன்றைக்குப் போடவில்லை என்று காங்கிரஸ் கட்சியைப் பார்த்துத் தவறான குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அந்தமாதிரி காங்கிரஸ்காரர்கள் யாரும் சொல்லவில்லை. தேர்தல் காலங்களில், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள்தான் சொன்னார்கள். நீங்கள் ஏன் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று மக்கள் கேட்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னால், அது காங்கிரஸ் கட்சியின் கருத்து என்பதல்ல. ஆனாலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடவேண்டும் என்பதில், அது ஒரு நல்ல திட்டம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது, எல்லா மக்களுக்கும் குறைந்த விலையில், சுமுகமான விலையில், நியாயமான விலையில் பொருள்கள், அத்யாவசியப் பொருள்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதை யாரும் வரவேற்பார்கள். ஆனால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் ஏதாவது இருக்கின்றனவா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு சில மாவட்டங்களிலேயே இந்தத் திட்டத்தினால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் நஷ்டம்தான் ஏற்படும். முக்கியமான உணவுப் பொருள்களைப் பெருக்கியாகவேண்டும். விவசாய அபிவிருத்தி ஏற்பட்டாக வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களுக்கெல்லாம் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் கடன் உதவி கொடுக்கலாம் என்று கண்டிருக்கிறது. அப்படிச் செய்வதன் மூலமாக உணவுப் பொருள்கள் பெருகவேண்டும். அதன் பிறகு வினியோக முறை சீராக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இன்றைக்கு நாம் மிக இக்கட்டான நிலையில்தான் இருக்கிறோம். உணவுப் பங்கீடு முறை இருக்கிறது. கொள்முதல் முறை இருக்கிறது. கொள்முதல் நடைமுறையில் நல்ல முறையில் நடத்தப்படாமல், விவசாயி

களுக்கு இக்கட்டான நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகள் வற்புறுத்தப்படுகிறார்கள், கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் கட்சி வேறுபாடில்லாமல், எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை குறைந்து, சென்ற ஆண்டுகூடச் சரியான பருவ மழை இல்லாது ஓரளவு போதுமான விளைச்சல் இல்லை அங்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்வதிலே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் நாளை தொடர்ந்து பேசலாம். இன்று இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

பி.ப.
2 00

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

42. Notification issued with G.O. Ms. No. 1924, Public (Services-A), dated the 2nd September 1967, making an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, regarding the exclusion of Gazetted Lecturs in Agriculture, Rural Extention Training Centres from the Commission's purview. [*Laid on the Table of the House under section* 320 (5) *of the Constitution of India.*]

43. Notification issued with Memo. No. 65733-U1/67-2, Revenue, dated the 21st September 1967, making an amendment to the Furnishing of Security by Officers and Servants Rules issued with Revenue Department Notification S.R.O. No. A-1039 of 1961, dated 23rd September 1961, published at pages 1077-1078 of Part V of the *Fort St. George Gazette*, dated the 25th October 1961. [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).]

44. Notification issued with Government Memo. No. 51206-J2/67-6, Revenue, dated the 23rd October 1967, making an amendment to the Revenue Department Notification, II-1 No. 2587 of 1966, dated the 9th June 1966, published at page 981 of Part II—Section I of the *Fort St. George Gazette*, dated the 22nd June 1966. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 28 *of* 1963).]





45. Notification issued with G.O. Ms. No. 1915, Revenue, dated the 3rd November 1957, making an amendment to the Revenue Department Notification II-1 No. 725 of 1965, dated the 15th February 1965, published at pages 285-290 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 17th February 1965. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).]

46. Notification issued with G.O. Ms. No. 1712, L.A., dated the 20th September 1967, regarding the division of wards and reservation of seats in the Kuzhithurai Municipality. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

47. Madras Government's Review on the working of the Madras State Small Industries Corporation, Limited for the period from 1st April 1966 to 31st March 1967 and the Second Annual Report and Statement of Accounts. [*Laid on the Table of the House under section* 619-*A of the Companies Act*, 1956 (*Central Act* 1 *of* 1956).]

### B. Reports, Notifications and Other Papers.

*Nil.*

(3) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், கள்ளக்குறிச்சி.

(4) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், பெரியகுளம்.

(5) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், கரூர்.

(6) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், உடுமலைப் பேட்டை.

(7) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், திருவாரூர்.

(8) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், சிவகங்கை.

(9) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், போடிநாயக்கனூர்.

(10) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், ராணிப் பேட்டை.

(11) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், தூத்துக்குடி.

(12) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், நாமக்கல்.

(13) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், மதுரை.

கோழிப்பண்ணை வளர்ச்சி நிலையங்களின் பொறுப்பு வகிக்கும் கால்நடை உதவி மருத்துவர் எவருக்கும் ஈட்டுப்படி அளிக்கப் படுவதில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, மற்ற நிலையங்களில் பணி புரிகின்ற இதுபோன்ற அலுவலர்களுக்கும் இதுபோன்ற உதவித் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மேலும் 75 மைய கிராம நிலையங்களில் இணைந்து பணியாற்றும் கால்நடை அலுவலர் களுக்கும் இந்த ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

Dr. H. V. HANDE : While we are thankful to the Ministry for their decision to convert the posts of Assistant Veterinary Surgeons as Gazetted Posts, may I know the stage at which the matter stands at present?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இருப்பினும், அங்கத்தினர் அவர்களுடைய கேள்விக்கு விவரம் தெரிவிக்கும் முறையில் சொல்லுகிறேன். கெசட்டட் அதிகாரிகள் ஆக மாற்றுவதற்கு முயற்சிகள் எல்லாம் எடுக்கப்படுகின்றன என்று தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கெசட்டட் அதிகாரி களாக மாறினாலும்கூட அவர்களுடைய ஊதியத்தில் எந்தவிதமான உயர்வும் இல்லை.



## பன்றி வளர்ப்பு அலுவலகக் கட்டடம்

* 21 வினா—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அலமாதியில், பன்றி வளர்ப்பு அதிகாரியின் அலுவல கத்துக்கும் பணியாளர்களுக்கான உறைவிடங்களுக்கும் எப்போது கட்டடங்கள் கட்டப்பட்டன?

(இ) அவை எப்போது முறைப்படி திறக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பன்றி வளர்ப்பு அலுவலரின் அலுவலகக் கட்டடமும் பணியாளர்களுக்கான உறை விடங்களும் அலமாதியில் 31—3—1966 அன்று கட்டி முடிக்கப் பட்டன. பின்னர் 12—4—1966 அன்று கால்நடை வளர்ப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

(இ) அக்கட்டிடங்கள் 25—3—1967 அன்று முறைப்படித் திறந்து வைக்கப்பட்டன.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, அந்த பன்றி வளர்ப்பின் மூலம் அரசுக்கு வருகின்ற வருமானம் என்ன? லாபத்தில் நடக்கின்றதா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றதா என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது பற்றிய கேள்வி. பன்றி வளர்ப்பிலே எனக்கு தெரிந்தவரை லாபமேயொழிய நஷ்டம் இல்லை.

Thiru K. VINAYAKAM : May I know why there was such an inordinate delay, why there was so much time between the date of its occupation and the date of its construction, who interferred in the meantime and prevented occupation of the premises at the earliest possible moment?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. நாங்கள் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் கட்டப்பட்ட கட்டடம். நாங்கள் பொறுப்பிற்கு வந்தபிறகு திறந்து வைத்தோம்.

## *Admission to Engineering courses, etc.*

*24 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any relaxation of the rules of admission to Engineering and other technical courses, has been permitted by the Government for the academic year 1966-67; and

(b) if so, whether the list of persons for whom such relaxation was done, along with the reasons therefor will be placed on the Table of the House?

## தமிழக சட்டப் பேரவை

---

### புதன்கிழமை, 1968 பிப்ரவரி 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. எம். ஜி. நடேசன் செட்டியார், முன்னாள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தர்மபுரி பொது கிராமப்புற தொகுதிக்காக 1937-லிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின்னர் 1947-லிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. எம். ஜி. நடேசன் செட்டியார் அவர்கள் 8—12—1967-ம் தேதி அன்று மறைந்தது குறித்து இந்தச் சபையின் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

### 2. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### கால்நடை உதவி மருத்துவர்களுக்கு சிறப்பு படி

* 20 வினா—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கைக் கருவூட்டும் நிலையங்கள் சிலவற்றிலும், கோழி இன வளர்ச்சி நிலையங்கள் சிலவற்றிலும் பணி புரியும் கால் நடை உதவி மருத்துவர்களில் சிலருக்கு ரூ. 50 கூடுதல் படியாக அல்லது ஊதியமாக வழங்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், அத்தகைய நிலையங்களின் பெயர்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) கீழ்க் கண்ட செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையங்களில் பொறுப்பு வகிக்கும் கால்நடை உதவி மருத்துவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 சிறப்பு ஈட்டுப்படி வழங்க ஒப்பளிக்கப் பட்டுள்ளது:—

(1) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், விருதுநகர்.
(2) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், திண்டுக்கல்.

பொதுவான ஒரு கோரிக்கை இருந்துகொண்டு வருகிறது. ஆகவே, இப்பொழுது உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தையொட்டி எந்த மாற்றமும் செய்வதற்கில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு 120 மார்க்குகள் வாங்கினால்தான் மனுக்கள் போடலாம் என்ற விதியை மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் மற்ற பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் தளர்த்தித் தர சர்க்கார் உத்தேசிக்குமா ? அதேபோல், 120 மார்க்குகளைக் கணக்கிடும் போது கிரேடுகளில் உள்ள மினிமம் மார்க்குகளை வைத்து இப்பொழுது கணக்கிடுகிறார்கள். அதற்குப் பதிலாக, 'மாக்ஸிமம்' மார்க்குகளை வைத்துக் கணக்கிட்டு, அந்த முறையில் கொஞ்சம் பேருக்குக் கூட்டி சலுகை தர சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 120 எண்கள் வாங்கவேண்டும் என்ற நிலையில், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சதவீதம் என்ற முறையிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவீதம் என்ற முறையிலும் ஒதுக்கி, பொதுவாக உள்ள இடங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் 47 சதவீத இடங்களைப் பெறும் அளவிற்கு தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். 120 மார்க்குகள் வாங்குவதிலே, அவர்களுக்கென்று ஒதுக்குகிற அளவிற்குமேல், 'ஜெனரல் பூல்' இன் செலக்ஷனிலேகூட அதிக மார்க் பெற்றுவரும் தகுதியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, தளர்த்தவேண்டிய அவசியம் இல்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, பொறியியற் கல்லூரிகளில் பெண்கள் அதிகமாகப் படிப்பதில்லையே, அதற்குக் காரணம், அரசாங்கம் அவர்களை அனுமதிப்பதில்லையா ? அல்லது, பெண்களே விண்ணப்பிப்பது இல்லையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது. ஒருசிலரும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். யாரேனும் வருவார்களானால் ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : I am afraid my question has not been answered. Whereas it has been laid down in the rules governing admission to the colleges that the minimum marks that should be obtained by the students seeking admission is 'B' grade, why does the Government not entertain applications from 'B' grade students but entertain applications only from 'A' grade students? Is it not *ultra vires* of the rules which we ourselves have framed? Why should the Selection Committee by pass the rules which we have framed?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பிலிருந்து வெற்றிபெற்று வருகிறவர்களுக்கு கிரேடுகள் பிரித்து, எந்த எந்தக் கிரேடுகளை எது எதிலே





சேர்ப்பது என்று முடிவு கட்டப்பட்டு மாணவர்கள் சேர்வதற்கு முன்பு அறிவிக்கப்படுகிறது. ப்ராஸ்பெக்டஸ்ஸிலேயே, குறைந்த பட்சம் 'பி' வாங்கவேண்டும் என்றும் அதிகபட்சம் சராசரி 60 மார்க் வாங்கவேண்டும் என்றும், குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையில்தான் மெடிகல் காலேஜுக்கும் மற்ற எல்லாக் காலேஜ்களுக்கும் முறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த முறைகளின்படி, பொறியியல் கல்லூரியைப் பொறுத்து, நான் முன்னே சொன்ன காரணங்களையொட்டித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** ஐயா, பொறியியல் பட்டப்படிப்பு படித்தவர்களின் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாமல் தடுப்பதற்காக இந்த மாநிலத்தில் தற்போது பொறியியல் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அரசாங்கம் பட்டியலைத் தயாரித்து, மாநில அரசாங்கத்தின் சக்திக்கு உட்பட்டு, மத்திய அரசாங்கம் நடத்தக்கூடிய தொழிற்சாலைகளிலும் சரி, தனியார் நடக்கக்கூடிய தொழிற்சாலைகளிலும் சரி, திட்டமிட்ட முறையிலே வேலையிலே அமர்த்தும் முயற்சியை மாநில அரசாங்கம் செய்ய முற்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்லூரிகளிலிருந்து பட்டம்பெற்று வெளிவருகின்ற அத்தகையவர்களுக்குப் போதுமான அளவு வேலைவாய்ப்பு தேடித்தரும் முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. புதிய புதிய தொழிற்சாலைகள்—தனியார்த் துறையானாலும், பொதுத் துறையானாலும்—ஏற்படும்போது, இன்ஜினீயர்களை அவைகள் ஏற்றுக்கொள்ளும் நிலைமைதான் இருக்கிறது. ஆனால் இப்பொழுது நெய்வேலி போன்ற இடங்களில் சிலபல இன்ஜினீயர்களுக்கு வேலையில்லாமல் அவர்களை வெளியே அனுப்பவேண்டியிருக்கிறது. அப்படி அனுப்பப்படுகிறவர்களை கல்பாக்கம் போன்ற திட்டங்களிலும் மற்றத் திட்டங்களிலும் எவ்வளவுக்கெவ்வளவு சேர்ந்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு சேர்த்துக்கொள்ளும் முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. தனியார்களையும் அணுகி, அவர்களையும் இத்தகைய முயற்சியில் ஈடுபடச்செய்து வேலைவாய்ப்பு தேடித் தருவதிலும் அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பொறியியல் கல்லூரியிலோ, தொழில் நுட்பக் கல்லூரியிலோ மாணவர்களைச் சேர்க்கும்போது அது எந்த வட்டாரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த வட்டார மக்களுக்கு ஏதாவது ஒரு சதவீத 'சீட்'-டுகள் ஒதுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? உதாரணமாக, எங்கள் பகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி இருந்த போதிலும் எங்கள் பகுதி மக்களுக்கு அங்கே இடமே கிடைக்கவில்லை. ஆகையால், இனி அடுத்த ஆண்டிலிருந்தாவது, அந்த பகுதி மக்களுக்கும் ஏதாவது 'சீட்'-டுகள் ஒதுக்கிக்கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் அந்தந்த மாவட்டத்திலுள்ள மக்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, விகிதாசாரப்படி இடங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த முறைப் படிதான் இப்பொழுது கையாண்டு வந்திருக்கிறோம். அதையும் சுப்ரிம் கோர்ட், 'அது தவறு' என்று கூறியிருக்கிற காரணத்தால், அதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டுக்குள் பரிசீலிக்கப்பட்டு ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

DR. H. V. HANDE : Arising out of the answer to the question put by Thiru Sankariah, I wish to put the following supplementary question. Students who have passed out of the engineering colleges are in a very pathetic condition. Yesterday I met a number of students from the Thyagarajar Engineering College, Madurai and not a single Graduate who passed last year got a job. Will the Government insist that each important company should take two or three engineering college Graduates? There is a precedent in the Andhra State. Will the Government consider this suggestion? Most of the Electrical Engineering Graduates have to be absorbed by the Electricity Department and the Civil Engineering Graduates by the Public Works Department. For the past one or two years there has been a standstill. In view of the recession and the pathetic condition of the Engineering Graduates, will the Government come forward to alleviate their suffering by adopting a concrete proposal of the type I have suggested?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், எந்த எந்த வேலைக்கு எத்தனை பேர்கள் தேவைப்படுகிறார்களோ அவர்களைத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அதற்கு அதிகப்படியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால், இருப்பவர்களையே எடுத்துவிடலாமா என்று அந்தந்தக் கம்பெனிகள் இருக்கும் நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வெளியேற்றுகிறவர்களைப் பொறுத்து, அவர்களை வெளியேற்றாமல் வைத்துக் கொள்ளுங்கள், காப்பாற்றுங்கள் என்று கம்பெனிகளுக்குச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே, வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதற்காக அவர்களுக்கு வேலை தர வேண்டும் என்று ஒவ்வொரு கம்பெனியையும் வற்புறுத்தும் நிலைமை சரியாகப் பொருந்துமா என்று தெரியவில்லை. ஆந்திராவில் அந்த முறை இருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றிய விவரம் தெரியவில்லை. ஆராய்ந்து, சாத்தியக்கூறாக இருக்குமானால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** திட்டமிட்டபடி ஒரு வேலை முடிந்த பிறகு, அதிலுள்ள பொறியியல் வல்லுநர்களை மறுபடியும் அந்த நிர்வாகத்தில் வைத்துக்கொண்டு அதிகச் சம்பளம் கொடுப்ப தென்பது இயலாத காரியம் என்பது எல்லோரும் அறிந்ததே.



ஆகவே, அவ்வாறு வல்லுநர்கள் வெளியேறும்போது, ரிடையர் ஆனபிறகு, அவர்களுக்கு ஏதாவது ஒரு சிறு தொகை அல்லது பெருந்தொகை அவர்கள் கோருகிற அளவிற்குக் கடனுதவி கொடுத்து, சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்ய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? இல்லையென்றால், அதற்கான வழிவகை இனியாவது செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.** தலைவர் அவர்களே, படித்து வருகிறவர்களுக்கு வேலை தரவேண்டும் என்ற நிலை இருக்கிற காரணத்தால், ஓய்வுபெற்று வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித்தருவதில் இப்பொழுது கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால், சிறு தொழில் துவக்குவதற்காக பல வகைகளில் உதவி செய்ய பல திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன. இரண்டு லட்சம் ரூபாய் வரையிலும்கூட சிறு தொழில்களுக்கு உதவி தரும் முயற்சியை அரசாங்கம் மேற் கொண்டு, அதற்காக 35 முதல் 40 லட்ச ரூபாய் வரை ஆண்டொன்றுக்கு ஒதுக்கிக்கொண்டு வருகிறது. அதைப் பயன் படுத்தி பொறியியல் வல்லுநர்கள் பலர் தொழில்களைத் துவக்க முன்வருவார்களானால் அவர்களுக்குத் தக்க உதவி செய்யவும், முதல் சலுகை தருவதற்கான முயற்சியையும் கூட நாம் மேற் கொள்ளலாம்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிப் படிப்பு இப்போது ஆங்கிலத்திலே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ஆங்கிலத்திலே படித்துப் பட்டம் பெற்ற மாணவர்கள் நம் மாநிலம் தவிர, வேறு மாநிலங்களுக்கும் சென்று பணியாற்ற தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்கள். இப்படி இருக்கும்போதே பலருக்கு வேலை கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டிலிருந்து தமிழிலே படிப்பு சொல்லிக் கொடுப்பதாக அரசு முடிவு செய்திருக்கிறதே, இதனால் வெளிமாநிலங்களில் வேலைவாய்ப்புப் பெறும் வசதி குறைந்து விடாதா? ஆகவே, பொறியியல் கல்லூரிகளில் தமிழில் சொல்லிக் கொடுக்கும் முயற்சியை விட்டுவிட்டு, இப்போது உள்ளது போலவே இனியும் ஆங்கிலத்தில் தொடர்ந்து கற்றுக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் தமிழ் பயிற்சிமொழியாக வருவதாக இல்லை. ஏதாவது ஒரு காலத்தில் பயிற்சிமொழியாக வருவதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்த ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாக வராது.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியில் பயின்று வந்த பலபேருக்கு வேலை கிடைக்காமல் வேலையில்லா திண்டாட்டம் இருந்து வருகிறது. ஆகவே, ஓய்வு பெறும் நபர்கள்—55 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு மேலும் பதவிக் காலம் நீட்டிப்பதை அரசு தடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கேள்விக்கு முதலிலே விடையளிக்கப்பட்டுவிட்டது. ஓய்வுபெறும் வயது ஐம்பத்தைந்தா, ஐம்பத்தெட்டா என்பதுபற்றிய கருத்து பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த வினா 25.

**திரு. ஆர். கருப்பையா :** சார், பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்று இல்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று இருக்கிறது, பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் என்று இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** சார். பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, நான் இருபது நிமிடங்களாக கையை உயர்த்திக் கொண்டே இருக்கிறேன். தலைவர் அவர்கள் பேச இடம் கொடுக்கவில்லை. தலைவர் அவர்கள் நான் பேசுவதற்கு வாய்ப்புத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 38-வது விதி, 2-வது உள் விதியைப் படித்து தாங்கள் விளக்கம் பெறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU. V. GEORGE : Sir, on a point of order. Rule 38 (2) of the Assembly Rules says—

'The Speaker may disallow any supplementary question if, in his opinion, it infringes the rules regarding questions or if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question.'

But in this case, this particular hon. Member has been raising his hand for the last twenty minutes and the Chair has been pleased to allow supplementary questions for the last twenty minutes. The Chair can say that a sufficient number of questions have been allowed only if the member raises his hands after twenty minutes.

MR. SPEAKER : The hon. Member should see the time.

I hold that a sufficient number of supplementary questions have been put and I also hold that a sufficient number of supplementary questions have been allowed to the hon. Member's Party But the hon. Member is making this allegation.

THIRU. V. GEORGE : The hon. Member has been holding his hand right from the beginning. Therefore, the ruling that sufficient opportunity has been given is not proper, according to me. My submission is that Rule 38 (2) does not give the hon. Speaker absolute power to deprive a member of his right to put supplement any questions. It only amounts to wilful neglect of a particular hon. Member.

MR. SPEAKER : If the hon. Member alleges that the Speaker has wilfully neglected a particular hon. Member, then I would have to deal with it under Rule 192. I have got a note





with regard to the number of questions which have been allowed to each party. Therefore, if the hon. Member says that a particular hon. Member has been wilfully neglected, I can openly say that so far as this House is concerned, while I am presiding all Members are equal and the hon. Member, Thiru Vinayakam tested it yesterday and found that a ruling was given even though that might be against a particular member belonging to the majority party. But if the allegation has been made that I have wilfully, that is, with partiality neglected a particular hon. Member, then I am compelled to use Rule 192. Under Rule 192, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation and report. I send this allegation made by the hon, Member, Thiru V. George to the Committee of Privileges for examination, investigation and report. I have no other alternative but to do it. When an allegation is made in this House, I have to do it *suo motu*.

விதிகளின்படி நான் நடந்து கொள்ளவேண்டியவனாக இருக்கிறேன். கடமைப்பட்டவனாகவும் இருக்கிறேன். அதற்காக நான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். 192-ம் விதியின்படி திரு. ஜார்ஜ் அவர்களின் குற்றச்சாட்டை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி, ஆய்ந்து, அறிக்கை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### *State Electricity Board*

* 25. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that the Director of Technical Education has been appointed as a member of the State Electricity Board?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் உத்தியோகப் பற்றற்றவர்களை உறுப்பினர்களாக நியமிக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் எந்தெந்தத் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்? அவர்கள் யார், யார் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் மூன்றுக்குக் குறையாமலும், ஏழுக்கு அதிகமாகாமலும் இருக்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் சேர்மன் அதில் இருக்கிறார். அக்கவுண்ட்ஸ் கமிட்டி மெம்பர் இருக்கிறார். மின்சாரம் வேளாண்மைத் துறைக்குப் பயன்படுவதால் வேளாண்மைத் துறை இயக்குநர் அதில் இருக்கிறார். தொழில்களுக்கும் மின்சாரம் பயன்படுத்தப்படுவதால் தொழில்

[1968 பிப்ரவரி 14

துறை இயக்குநர் அதில் இடம் பெறுகிறார். என்ஜினீயரில் சம்பந்தப்படுகிற தொழில்களுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுவதால் அதன் இயக்குநரும் அதில் இடம் பெறுகிறார்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் தொழிலாளர்களுடைய பிரதிநிதியைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இப்போது இல்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, மின்சாரத்தை—இப்போது விவசாயிகள்தான் அதிகமாக சர்வீஸ் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளின் பிரதிநிதியாக ஒருவரை மின்சார போர்டிலே எடுத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வேளாண்மையைப் பொறுத்தவரையில், வேளாண்மைத்துறை இயக்குநர் மின்சார போர்டில் இருக்கிறார். ஆகவே, விவசாயிகளின் பிரதிநிதி என்று தனியாக ஒருவரை அதில் எடுத்துக் கொள்ளும் யோசனை இப்போது இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் இப்போது இல்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் லோகல் கமிட்டி என்ற முறையில் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்ற ஏற்பாடு உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த குழு இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, கேரளாவில் இருப்பதுபோல இந்த மாநிலத்திலும் மின் வாரியத்திற்கு ஊழியரின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கோரிக்கை வந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இப்போது அதுபற்றி யோசனை ஒன்றும் இல்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தை வருடாவருடம் புனரமைக்காமல் குறிப்பிட்ட கால அளவில் ஐந்து வருடத்திற்கோ, மூன்று வருடத்திற்கோ நீடிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?



1968 பிப்ரவரி 14]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போது அதன் விவரம் என்னிடம் இல்லை. மூன்று வருடத்திற்கு ஒரு முறைதான் நியமிக்கப்படுகிற மாதிரி நினைவு இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுவிற்கு விவசாயிகளின் சார்பாக விவசாயப் பிரதிநிதி ஒருவரையும், உள்ளாட்சித்துறையின் சார்பாக, இப்போது அடிக்கடி நகராட்சிகளில் மின்சார பல்புகள் எரியவில்லை, மின்சாரத் தடங்கல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்கிற புகார்கள் பரவலாக வந்துகொண்டிருப்பதன் காரணத்தினால்—உள்ளாட்சித் துறை பிரதிநிதி ஒருவரையும் நியமிக்கின்ற உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ? இல்லையெனில் அதனை இந்த அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மின்சார போர்டு என்பது மின்சாரத்துறையை இயக்குகின்ற காரியங்களைச் செயல்படுத்துகிறது. கன்சல்டேடிவ் கமிட்டிகள் என்று இருக்கின்றன. கனம் உறுப்பினர் சொல்கிற குறைபாடுகளை எல்லாம் கவனிக்க அந்த கமிட்டியில் விவசாயிகளின் பிரதிநிதி, உள்ளாட்சித்துறைகளின் பிரதிநிதி ஆகியவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்த மின்சார போர்டுக்குத் துணையாகச் செயல்பட ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு அட்வைசரி பாடி போடுவதாக இருந்ததே, அதை அமல்படுத்துகிற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் கூறியபடி மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. மாவட்ட அளவில் போடுவது பற்றிய விவரம் இல்லை. அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, may I request the Hon. Minister to state whether the Chairman of the State Electricity Board has resigned his post and a new incumbent has been appointed in that post?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர் ராஜினாமா செய்யவில்லை. அவருக்கு ஓர் ஆண்டு பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் தன்னை விடுவிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்

*26 வினா—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் லாபத்தில் நடப்பவை, நஷ்டத்தில் நடப்பவை முறையே எத்தனை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாட்டில் தற்பொழுது உற்பத்தியிலுள்ள ஆறு சர்க்கரை ஆலைகளில் இரண்டு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. மற்றவைகளில் இரண்டு லாபத்திலும் இரண்டு நட்டத்திலும் இயங்குகின்றன.

**திரு. ஏ. எம். ராஜா :** நட்டத்தில் நடக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூட்டுறவு முறையில் நடைபெறுகிறது என்பதே ஓரளவு அரசாங்கமே நடத்துகிற மாதிரிதான்.

**திரு. சி. கோவிந்தராசன் :** ஒரு பக்கம் உற்பத்தியாகும் சர்க்கரையில் 40 சத வீதம் வெளிமார்க்கெட்டில் விற்றுக் கொள்ளலாம் என்று சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளித்திருப்பதனால் அதில் வரும் ஆதாயத்தில் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்களுக்கும், ஒரு பங்கு விவசாயிகளுக்கும் கொடுப்பதற்கு சர்க்கரை ஆலைகளைக் கேட்டுக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா? அதைப் பற்றிய கோரிக்கை வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகளே கடன் கொடுக்கும் நிலைமை இருந்தால் விவசாயிகள் கொஞ்சம் ஊக்கத்தோடு கரும்பு கொடுக்க முன்வருவார்கள். அப்படியின்றி அவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுக்கிற ஏற்பாடு இருப்பதனால்தான் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் ஊக்கம் செலுத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கரை ஆலைகள் மூலமாகவே கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகிற கருத்து இப்போது இல்லை. அதைக் கவனத்தில் கொண்டு சாத்தியக்கூறு உண்டா என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை அதிக நட்டத்தில் நடக்கிற காரணத்தினால் அதைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் இப்போது தமிழக அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அமராவதி சர்க்கரை ஆலையை லாபகரமாக நடத்துவதற்கு என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதுபற்றித்தான் இப்போது அரசாங்கமும், கூட்டுறவுப் பதிவாளரும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.





**திரு. க. மு. ராசகோபால் :** தமிழ் நாட்டில் இயங்குகின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நட்டம் ஏற்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆகவே, எந்த எந்த ஆலைகளில் எவ்வளவு நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்கிற விவரம் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கள்ளக்குறிச்சி, அலங்காநல்லூர் ஆகிய இரண்டு இடங்களிலும் இருக்கிற சர்க்கரை ஆலைகள் இப்போதுதான் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவைப்பற்றி லாப நட்டக் கணக்கைச் சொல்கிற நிலை இல்லை. 1965–66-ஆம் கணக்குப்படி ஆம்பூர், மோகனூர் சர்க்கரை ஆலைகள் இரண்டும் லாபத்தில்தான் இயங்கி இருக்கின்றன. ஆம்பூர் சர்க்கரை ஆலையில் மூன்று லட்சத்து எண்பத்திரண்டாயிரம் லாபம் வந்திருக்கிறது. மோகனூர் ஆலையில் பதினாறு லட்சத்துப் பத்தாயிரம் லாபம் வந்திருக்கிறது. நட்டம் என்பது அமராவதி, மதுராந்தகம் ஆலைகளில்தான் வந்திருக்கிறது. அமராவதி சர்க்கரை ஆலையில் 1965-66 வரை நாற்பத்தெட்டு லட்சம் சொச்சம் நட்டம் வந்திருக்கிறது. மதுராந்தகம் ஆலையில் முப்பத்துநான்கு லட்சம் சொச்சம் நட்டம் வந்திருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, கச்சாப் பொருள்கள் வழங்குகிறவர்களுக்கு மற்ற ஆலைகளில் அளிக்கப்படுகிற சலுகையைப் போல கரும்பு ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்கிற விவசாயிகளுக்கு ஆலைகளில் இருந்தே நேரடியாக சர்க்கரை அளிக்கும் சலுகையை அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நடைமுறையில் இப்போதிருக்கும் முறை என்னவென்று தெரியவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து மனதில் கொள்ளப்பட்டு அது எந்த அளவுக்கு சாத்தியம் என்பது பரிசீலிக்கப்படும்.

**திரு. மா. பா. சாரதி :** கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படுகிற கழிவுப்பொருள்—மொலாசஸ் ஆயிரக்கணக்கான டன்கள் இருந்தும், அவற்றுக்கு டன்னுக்கு ஆறு ரூபாய் எழுபது காசு என்று மத்திய சர்க்கார் விலை நிர்ணயித்திருக்கிறார்கள். அதே சமயம் வெளிமார்க்கெட்டில் டன் ஒன்று நானூறு ரூபாய் அளவுக்கு விற்கப்படுகிறது. ஆகவே, வெளி மார்க்கெட் நிலவரப்படி இந்தக் கழிவுப் பொருள்களின் விலையை உயர்த்தினாலே நட்டம் தவிர்க்கப்படும். இதற்கு மத்திய சர்க்காரை நமது சர்க்கார் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்து பரிசீலனையில் இருக்கிறது. இது பற்றி இந்திய அரசாங்கத்திடம் அணுகும் திட்டமும் இருக்கிறது.

**திரு. இ. எம். சுப்பிரமணியன் :** தமிழகத்தில் புதிதாக கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்தும் உத்தேசம் இந்தச் சர்க்காருக்கு உண்டா? இயங்கும் கூட்டுறவு ஆலைகளுக்கு மானேஜிங் டைரெக்டராக இப்போது டெபுடி ரிஜிஸ்டிரார்

கிரேடில் போடப்படுகிறது. அதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, புதிதாக சர்க்கரை ஆலைகளைத் துவங்கும் விவரம் இல்லை. இப்போது கூட்டுறவு ஆலைகளுக்கு மானேஜிங் டைரக்டராக டி.ஆர்.ஓ. கிரேடில் போடுவதோடு ஐ.ஏ.எஸ்; கிரேடிலும் போடப்பட்டு வருகிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு டைரெக்டர்கள் நியமிப்பது போல அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் டைரெக்டர்கள் நியமிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** லாபகரமாக நடக்கக்கூடிய சர்க்கரை ஆலைகள்—தாங்கள் கொள்முதல் செய்யக்கூடிய கரும்பு சாகுபடியாளர்களுக்கு ஓரளவு அதிகமாக விலை கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பு இருந்ததைவிட இப்போது விலையை ஓரளவு கூட்டி 90 ரூபாய் அளவில் கொடுக்கக் கூடிய நிலைமை அண்மையில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் கரும்புகளை எடுத்துப் போகிறபோது உடனடியாக அவற்றை அவர்களால் டெலிவரி எடுக்க முடியாமல் லாரிகளை அப்படியே நிறுத்தி வைத்து விவசாயிகளுக்கு லாரி வாடகை நட்டத்தையும் உண்டாக்கி விட்டு—அவர்கள் ரோட்டிலேயே போட்டுவிட்டு வந்த பிறகு—இன்றைக்கு அந்த ஆலைக்கு கரும்பு கொடுக்காமையால் ஏற்பட்டிருக்கிற நட்டத்தை—அந்த விவசாயிகளிடம் இருந்தே வசூல் செய்ய உத்தேசித்திருப்பதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆங்காங்கு உற்பத்தியாகக்கூடிய கரும்புகளை அங்காங்கே சென்று கொள்முதல் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தி இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு பதிவாளர் இதுபற்றி எல்லாம் பரிசீலனை செய்வார்கள்.

*Seepage Schemes.*

* 27 *Q.*—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of seepage schemes under investigation in the Lower Bhavani Project in Coimbatore district; and

(*b*) the number of schemes that have so far been sanctioned and executed?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 46 (நாற்பத்தாறு) திட்டங்கள்.

(இ) 11 (பதினொரு) திட்டங்கள்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, பாக்கி இருக்கிற திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாக்கியுள்ள திட்டங்கள் 46 இல் 19 திட்டங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்று இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருபத்தேழு கசிவு நீர்த் திட்டங்களில் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி 11 திட்டங்கள் முடிவடைந்துவிட்டன. நிறைவேற்ற இருக்கிற திட்டங்கள் 7; நிறைவேற்ற ஆயத்தமாக உள்ள திட்டங்கள் 4. ஆய்விலே உள்ள திட்டங்கள் 5.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்தக் கசிவு நீர்த் திட்டங்கள் ஏன் சீக்கிரமாக நிறைவேற்றப்படவில்லை என்று அதிகாரிகளைக் கேட்கும்பொழுது அவர்கள் சொல்கிறார்கள் நிதி வசதி இல்லையென்று. ஆகவே, குறைவாகச் செலவாகும் திட்டங்களை விவசாயிகள் முன்வந்து நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் அதற்கு அரசாங்கம் அனுமதியளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி விவசாயிகள் திட்டவட்டமான ஒரு குறிப்பை அனுப்புவார்களானால் அதுபற்றி யோசிக்கலாம்.

Dr. H. V. HANDE : Sir, has this Government examined the quantum of acreage that might come under this scheme and also the extra food production that might yield by executing this scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டங்களின் மூலமாகக் கூடுதலாக உணவு உற்பத்தி 902 டன் ஆகிறது.

*28 *Q.*—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) when the scheme for the utilisation of the seepage water of Palappalayam Pallam by constructing an anicut near Chandrapuram in Gobichettipalayam taluk, Coimbatore district was sanctioned; and

(*b*) the present state of the scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1966, ஜூன் 1-ந் தேதியன்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) கலங்கல், குறுக்கு கட்டிட வேலைகள் ஆகியவற்றுக்கான ஒப்ப அறிவிப்பு ( tender ) நிச்சயிக்கப்பட்டபின்னர், இந்த வேலை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 0-3-140 மைலில் முதல்சாலை மதகுக்கான கடைக்கால் போடும்

வேலை முடிவுற்றது. இத்திட்டத்தை விரிவு படுத்தவேண்டுமென முறையீடு வந்ததாலும், அதன் விளைவாக கால்வாய் வழியமைப்பில் மாறுதல் செய்யவேண்டி வருமாதலாலும், இவ்வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டத்தை விரிவு படுத்த வேண்டுமென்ற முறையீட்டின் மீது முடிவு எடுக்கப்பட்டவுடன் இவ்வேலை மீண்டும் தொடங்கப்படும்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற முடிவை விரைவிலேயே எடுத்து இந்தத் திட்டத்தை விரைவிலே முடிக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியை எழுப்பியுள்ள மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள்தான் இந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை அனுப்பியுள்ளார்கள். அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் இப்பொழுது ஆய்விலே இருக்கிறது. இதற்கு ஏறத்தாழ 12 லட்சம் ரூபாய் ஆகுமென்று திட்டமிடப்பட்டிருககிறது. ஆய்விற்குப் பிறகு அதற்கான வேலைகள் விரைவிலே தொடங்கப்பெறும்.

DR. H. V. HANDE : While answering a previous question, the Hon. Minister has stated that the extra production would be about 902 tonnes. Has this Government examined the amount that is going to be spent and also compared it with the tonnage of extra production and whether it is proportionate or disproportionate to the amount spent?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முடிந்த கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்கிறேன். அதற்காக 11 திட்டங்களுக்கு செலவழிக்கப்பட்ட எஸ்டிமேட் தொகை 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அதன் மூலமாக பயனடைகிற ஆயக்கட்டு 1,726 ஏக்கர். அதிலே பழைய பகுதிகள் 1,114 ஏக்கர், புதிதாக பயன் அடைகின்றவை 612 ஏக்கர். கூடுதலாக உணவு உற்பத்தி 902 டன் ஆகிற காரணத்தால் இந்தத் திட்டத்திற்கு ஆகிற செலவு விரயமாகிற செலவு அல்ல.

### தனியார் துறை பஸ்கள்

* 29 வினா—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தனியார் துறையில் ஓடும் பஸ்கள் எத்தனை ?

(இ) தமிழ் நாட்டில் இந்த பஸ்களை நடத்தும் உரிமையாளர்கள் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இம் மாநிலத்தில் தனியார் துறையில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை 1—1—1968 அன்றிலிருந்தவாறு :—

வழித்தடப்பேருந்துகள்—4,543.

இருப்பிலுள்ள பேருந்துகள்—1,114.



(இ) பேருந்து உரிமையாளர்களின் எண்ணிக்கை 1—1—1968 அன்றிருந்தபடி—1,086.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, தனியார் துறையிலே ஓடும் பஸ்களை எல்லாம் விரைவிலே தேசியமயமாக்குவதற்கு அரசு திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாவற்றையும் விரைவிலே அரசுடைமையாக்குவதற்கு நிதி நிலைமை இடந்தராது. அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்ற காரணத்தால் 75 மைல்களுக்கு மேல் உள்ள தடங்களை தேசியமயமாக்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : அரசாங்க பஸ்களிலே முன்னதாக டிக்கட் வாங்கி பிரயாணம் செய்யும்பொழுது பிரயாணம் அப்படிச் செய்ய முடியாமல் போனால் அந்த டிக்கட்டை திருப்பிக் கொடுத்துவிட்டு, பணத்தை வாபஸ் கொடுக்கும்படி எழுதிக் கேட்டிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து நாகர்கோவிலுக்கு 7 மாதத்திற்கு முன்னால் டிக்கட் வாங்கி பிரயாணம் செய்யாமல் உடனடியாக பணத்தை வாபஸ் கொடுக்க வேண்டுமென்று எழுதியும் இன்னும் பணம் வந்து சேரவில்லை. பதிலும் வரவில்லை. ஆகவே இப்படியில்லாமல் இனிமேலாவது தாமதமில்லாமல் பணத்தை வாபஸ் தர ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது மூலக் கேள்வியோடு தொடர்புள்ள கேள்வியல்ல. என்றாலும் இதுபற்றி குறிப்பு அனுப்புவார்களானால் கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அரசாங்கம் பூராவையும் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு நிதி நிலைமை இல்லையென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நிலவுடைமைக்கு எப்படி உச்ச வரம்பு கொடுக்கப்பட்டதோ அதுபோன்று தனியார் துறையிலே உள்ள நூற்றுக்கணக்கான பஸ்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடமிருந்து பஸ்களை மற்றவர்கள் வாங்கிக்கொள்கிற நிலைமையிலே—நிதி நிலைமைபற்றிக் கவலையில்லை. ஏனெனில் அவர்கள் வாங்கிக் கொள்வார்கள்—இதற்கு ஒரு உச்ச வரம்பு கட்டும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : புதிய அரசினுடைய தேசியமயமாக்கும் திட்டத்தின் காரணமாக இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தனியார் துறையில் உள்ள பஸ் முதலாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்து இருக்கிறதா?

[1968 பிப்ரவரி 14

216 வண்டிகளைத் தனிப்பட்ட பஸ் முதலாளிகள் இழந்து இருக்கிறார்கள். இருநூற்று பதினாறு வண்டிகளை இழந்ததற்குப் பதிலாக சர்க்கார் 209 வண்டிகளை இப்போது ஓட்டுகிறது.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** அரசு நாட்டுடைமையாக்கி இருக்கும் பெருவழித் தடங்களுக்கு மாற்றாக வேறு இடங்களைத் தனியார் துறைக்குத் தாற்காலிகமாக அரசு வழங்கியிருக்கிறது. தாற்காலிகமாக வழங்கியிருக்கும் வழித் தடங்களை நிரந்தரமாக தனியார் துறைக்கு வழங்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது ஆங்காங்குள்ள மாவட்டக் கலெக்டர்களைப் பொருத்தது. அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** அரசாங்க பஸ்களில் 49 இருக்கைகள் இருக்கின்றன. அதே அளவுள்ள தனியார் பஸ்களில் 59 இருக்கைகள் இருப்பதால் பிரயாணம் செய்வதற்கு வசதிக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அந்த பஸ்களிலும் 49 இருக்கைகளாகக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செய்யலாம்—அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரிப் பணம் குறைந்துவிடும்.

**திரு. வ. ஜார்ஜ் :** பஸ்களை அதிவிரைவில் தேசியமயமாக்குவதால் கண்டக்டர்களும், டிரைவர்களும் தேவையான அளவு இல்லாமல் அந்த ரூட்டுகளில் சரியான முறையில் பஸ்கள் செல்லுவதில்லை என்பதை அரசாங்கம் அறியுமா? தேசியமயமாக்கியதன் காரணமாக அந்த ரூட்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டு பஸ்களை விடுவதோடு கூட அரசாங்கமே வேறு புதிய ரூட்டுகளையும் எடுத்துக்கொள்கிறதோ? அப்படி எத்தனை ரூட்டுகளில் பஸ்களை விட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் 27 புதிய பஸ் ரூட்டுகளில் பஸ்களை விட்டிருக்கிறது.

**திரு. தி. பொன்னுமலை :** தனிப்பட்ட முதலாளிகளுடைய பஸ்களை எடுத்துக் கொள்வது போல் ஓய்வு பெற்ற பல ராணுவ வீரர்கள் சேர்ந்து ஓட்டுகின்ற பஸ்களையும் சர்க்கார் ஏற்றுக் கொண்டது. பழைய ராணுவ வீரர்கள் ஆயிரக் கணக்கான பேர் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு முறையில் பஸ் தொழிலை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்காவது விதிவிலக்கு அளிக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே, அவர்கள் நீதிமன்றத்திற்கு எத்தனையோ ஆதார அடிப்படையோடு சென்று கொண்டிருக்கிறார்கள். புதிதாக ஒரு குறிப்பைத் தர இந்த அரசாங்கம் விரும்பவில்லை.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** எழுபத்தைந்து மைலுக்கு மேலுள்ள ரூட்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற திட்டத்தின் காரணமாக, சிலர் கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளின் உதவியை



1968 பிப்ரவரி 14]

வைத்துக் கொண்டு கூடியமட்டும் ரூட்களைப் பிரித்து குறைந்த தூரம் என்று காட்டக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி ஏதாவது இருந்தால், ஆதார பூர்வமாக எழுதி அனுப்பினால் அதை நாங்களும் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** 1972-ஆம் ஆண்டு வரை டி.வி.எஸ் பஸ்களைத் தொட முடியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகாவது அந்த பஸ்கள் தேசியமயமாக்கப்படும் என்ற உறுதி மொழியை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்குப் பிறகு 75 மைலுக்கு மேற்பட்ட ரூட்கள் இருக்குமானால் கண்டிப்பாக தேசியமயமாக்கப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** கன்னியாகுமரி, நாகர்கோயிலிலிருந்து பாபநாசம் போகிற ரூட்டைச் சர்க்கார் எடுத்துக் கொண்டுவிட்டால் அந்த ரூட்டை இழந்த தனியார் பஸ்காரர்களுக்கு வேறு ஏதாவது ரூட் அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட பஸ் அதிபர்களிடம் வேலை செய்து தற்போது வேலை இழந்த தொழிலாளர்களுக்கு அரசாங்க பஸ்ஸில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தனியார் பஸ்களில் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு அரசாங்க பஸ்களில் வேலை கொடுப்பதைப் பற்றி அனுதாபத்தோடு கவனித்து வேலை கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்று தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். பஸ் ரூட்டை இழந்த தனியார் அதிபர்களுக்கு மாற்று வழித் தடங்கள் கொடுப்பது பற்றிய பொறுப்பு அரசாங்கத்தின் கையில் இல்லை. அது ஆங்காங்குள்ள ஆட்சித் தலைவர்கள் கையிலே இருக்கிறது. நீதிநிலை அடிப்படையிலே வருகின்ற காரணத்தாலே அதற்கு நாங்கள் பதில் அளிக்க இயலாது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** மதுரை மாவட்டத்தில் ஓடுகின்ற பஸ்களில் டிரைவர்களுக்கு இரண்டு வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சக்கரத்தைப் பிடித்து ஓட்டுவது ஒன்று; இரண்டாவது இன்வாய்ஸ் எழுதுவது. இரண்டு வேலைகள் கொடுப்பதால் டிரைவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறது. ஆக்சிடென்டுகள் ஏற்படவும் வழி இருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்க்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி ஏதாவது சம்பவங்கள் நடந்திருந்தால் தனியாக எழுதி அனுப்பவும்.

**திரு. கே. விநாயகம் :** தனியார் துறையில் ஓடுகின்ற பேருந்து வண்டிகளை எல்லாம் தேசியமயமாக்கும்போது சென்னை நகரத்திற்குள் வரும் பஸ்களை எல்லாம் எடுத்துக் கொண்டு விட்டார்கள். அப்படி எடுத்துக் கொண்டதன் மூலமாகப் பாதிக்கப்பட்டவர்கள்

[1968 பிப்ரவரி 14

75 மைலுக்கு மேல் ஓட்டுகின்ற வண்டிகள் வைத்திருப்பவர்கள் இல்லை. முப்பது, நாற்பது மைல்கள் போகின்ற வண்டிகளை வைத்துக் கொண்டிருக்கிற சிறிய சிறிய முதலாளிகள் பலர் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியும். அவர்கள் ஒவ்வொருவரிடமும் இரண்டு மூன்று பஸ்களுக்கு மேல் இல்லை. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தேடித் தர அதிகார பூர்வமாக ஆர்.டி.ஏ.-வுக்குச் சொல்ல முடியாது என்றாலும் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தர வேண்டுமென்று செங்கற்பட்டு கலெக்டர் அவர்களுக்கு அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே, இந்த பஸ் வழித் தடங்களைக் கொடுக்க மார்க்கிங் சிஸ்டம் என்று இருந்தது. பழைய காங்கிரஸ் அரசாங்கம் அந்த மார்க்கிங் சிஸ்டத்தைக் கடைப்பிடித்து அந்த அடிப்படையில் ரூட்களைக் கொடுங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் குறிப்பு அனுப்பி வந்தார்கள். ஆனால் அந்த விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்று நீதி மன்றத் தீர்ப்பின்படி மார்க்கிங் சிஸ்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே, புதிய விதி முறைகளை இந்த அரசு வகுத்து அதை மோட்டார் வெகிகில்ஸ் சட்டத்திலே ஏற்றி அதற்குப் பிறகு மார்க்கிங் சிஸ்டப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பினால் அந்த அடிப்படையில் பஸ் வழித் தடங்களை இழந்தவர்களுக்கு புதிய வழித் தடங்களைத் தருவதற்கு இயலும். இந்தப் பிரச்சினையில் ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுதாபத்தோடு அணுகுகிறார்கள் என்றுதான் கேள்வி.

திரு. பா. நாகலிங்கம் : இருபது மைல் தூரத்திற்கு புதிதாக
மூற்பகல் பஸ் ரூட் கொடுக்கப்பட்டு அதில் 14 மைல்கள் பஸ் போகிற வகை
10-00 யிலும் 6 மைல்கள் பஸ்கள் போக முடியாத நிலையிலும் இருக்கிற ரூட்களுக்கு சர்க்கார் உடனடியாக நிதி உதவி கொடுத்து, அதாவது சாலைகளைச் சீர்படுத்தக் கொடுத்து சாலைகளை சீர்படுத்தி பஸ்களை ஓட்டுவதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முயற்சிக்கும் ஆனால் அது எந்த இடம் என்று குறிப்பிட்டு எழுதியனுப்பினால் அது பற்றி கவனிக்கும்.

DR. H. V. HANDE : Sir, there is a feeling among a number of people in the Kanyakumari district that they are not getting employment in the Madras City Transport and at the same time there is also a feeling among many people in the Madras City that they are not getting employment in the Government Transport in the Kanyakumari district. So, may I know from the Government whether there has been any silent or written instruction given to the Director of Transport prohibiting the employment of the people of the Kanyakumari district in the Madras City Transport?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுமாதிரி பகிரங்கமாகவோ அல்லது ரகசியமாகவோ எந்த விதமான குறிப்பும் தரப்படவில்லை.



1968 பிப்ரவரி 14]

திரு. டி. மார்டின் : தற்சமயம் பேருந்துகள் ரோடுகளில் ஓடாமல் ப்ளாட்பாரங்களில் ஓடி அங்குள்ள ஆட்கள் மீது ஏறி அபாயமான ஆக்ஸிடன்ட்ஸ் ஏற்படுகின்றன. சமீபத்தில் இங்கு சென்னையில் ஒரு கவர்ன்மென்ட் பஸ்ஸில் அந்த மாதிரி ஒரு ஆக்ஸிடன்ட் ஏற்பட்டதைக் கவனத்தில் கொண்டு வந்து அந்த மாதிரிப்பட்ட ஆக்ஸிடன்ட்களைத் தவிர்க்கும் முறையில் பஸ்களில் பிரயாணம் செய்கிறவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, ஸ்கூட்டர்களில் செல்பவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தொப்பி போட்டுக்கொள்ள சொல்லப்படுவதுபோல், பஸ்களில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு தொப்பிகளை இலவசமாக வழங்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கிண்டலான கேள்விக்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்கூட்டரில் போகிறவர்கள் இரும்பாலான அல்லது பாதுகாப்பான தொப்பி போடுவது பற்றி இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. அதற்குள்ளே மற்றவர்களைப் போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவசரப்படத் தேவையில்லை. அதேபோல் பஸ்களில் போகிறவர்களுக்கு அவர்கள் தொப்பி போடவேண்டுமா அல்லது போடலாமா என்று உறுப்பினர் கேட்கிறார்கள். ஸ்கூட்டர்களில் போகிறவர்கள் தொப்பி போடவேண்டுமென்ற அபிப்பிராயமே ஒரு பிரபல நரம்பு வைத்திய நிபுணர், டாக்டர் பழைய அரசுக்கு யோசனை சொல்லி பழைய அரசாங்கத்திலிருந்த மரியாதைக்குரிய முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இது நல்ல யோசனை, இதை நிறைவேற்றலாம் என்று குறிப்பு எழுதி அந்தக் குறிப்பு நாங்கள் பொறுப்பேற்ற பிறகு எங்களிடம் வந்தபோது அதை ஆலோசிக்குமாறு, அதற்கான சட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்பதை பரிசீலிக்குமாறு நாங்கள் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டோமே தவிர, எல்லோருக்கும் ஹெல்மெட் போடவேண்டும் என்பதல்ல. பஸ்களில் போகிறவர்களுக்கு ஹெல்மெட் போட வேண்டுமென்றால் பிறகு ரெயிலில் போகிறவர்களுக்கும் ஹெல்மெட் போடவேண்டி வரும். ஏனெனில் மத்திய அரசின் ரெயில்கள்கூட பல இடங்களில் கவிழ்ந்து கொண்டிருக்கின்றன. (ஆரவாரம்).

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கு கேட்கப்படுகிற கேள்விகள் எல்லாம் எங்களுக்குப் போதிய தகவல்கள் வேண்டுமென்றுதான் கேட்கப்படுகின்றனவே தவிர கேள்விகளில் தவறான பொருள்களைக் கற்பித்து கேள்விகள் கேட்பதில்லை. அப்படியிருக்கும்போது, அமைச்சர் அவர்கள் இதை கிண்டலான கேள்வி என்று சொல்வது நியாயமா, அது உரிமைக் குட்பட்டதா என்பதுபற்றி ஸ்பீக்கர் அவர்கள் ஒரு ரூலிங் தர வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கிண்டலான கேள்வி என்றால் பிரச்னையைக் கிண்டிவிடுகிற கேள்வி என்று அர்த்தம். (ஆரவாரம்.)

[1968 பிப்ரவரி 14

செய்து கொண்டிருக்கிறது. இதில் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்குமானால் நல்ல நிலை உருவாக எல்லாவித சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, 1962-ஆம் ஆண்டி லிருந்து 1967-ஆம் ஆண்டு வரை மாதவரம் பால் பண்ணையில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. அப்படிப்பட்ட விவரங்கள் பல நேரங்களில் இந்தச் சபையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டேகால் கோடி ரூபாயில் துவங்கப்பட்ட இதில் ஏறக்குறைய போன வருஷம் வரை 74 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக ஞாபகம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மாட்டுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று திரு. விநாயகம் அவர்கள் கூறினார்கள். ஆகவே, குறைந்த அளவு பால் கொடுக்கக்கூடிய மாடுகளின் அளவை அதிகப்படியாக இருக்கிறதைவிட விலை கூடுதலாக இருந்தாலும் அதிகப்பால் கறக்கக்கூடிய பெரிய மாடுகள் இருக்கிற அமைப்பையில் பெரிய மாடுகளை வாங்க ஏதாவது உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக பால் உற்பத்திக்குப் பாதகம் இல்லாத முறையிலும், எல்லா மாவட்டங் களிலிருந்தும் பாலைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையையும் ஆராயலாம்.

திரு. பெ. சீனிவாசன் : சார், கடந்த காலத்தில் இந்தப் பால் பண்ணை நஷ்டத்திலே நடந்ததாக அறிகிறோம். அந்தக் காலத்திலே இருந்த அதிகாரிகள் இப்போதும் தொடர்ந்து இருக்கிறார்களா ? அல்லது முக்கியமான அதிகாரிகள் மாற்றப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சில அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். சில அதிகாரிகள் அப்படியே இருக்கிறார்கள்.

திரு. க. ராமமூர்த்தி : தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலே, இந்தத் துறையிலே விருத்தி செய்ய வேண்டுமென் பதற்காகப் படித்து, அறிந்து வருவதற்காக இதற்கென்றே அரசாங்கத்தால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட அதிகாரி, முற்றிலும் சம்பந்தப்படாத, அந்த அனுபவம் இல்லாத வேறு ஒரு துறைக்கு மாற்றப்பட்டிருப்பது உண்மையா ? அப்படி யானால் அவருக்கு ஏற்பட்ட அனுபவம், அரசாங்கம் ஏற்றுக் கொண்ட செலவு இவற்றை அரசாங்கம் கருத்திலே கொண்டு மாற்றியுள்ளதா ? அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் அவ்வாறு செய்ததா ?



1968 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு துறையிலே பயிற்சி பெற்றவர் என்றால் வாழ்நாள் பூராவும், உத்தியோகம் முழுவதும் அங்கே இருப்பது என்பது அல்ல. அதைவிட முற்றிலும் முக்கியமான, உணவு வழங்கும் துறையில் கொள்முதல் பெறும் காரியத்தில், தஞ்சை மாவட்ட கலெக்டராக மாற்றப்பட்டு உணவுத் துறையின் காரியத்திற்கு மிகப் பெரிய அளவில், திறமை யான காரியத்தைச் செய்து வருகிறார். அந்தக் கொள்முதல் செய்வதோடு நாம் செய்யும் விவசாயப் புரட்சியின் மூலம் இருபோகம் செய்வதற்கு அந்த அதிகாரியின் திறமையைப் பயன் படுத்திக் கொள்ள தஞ்சை மாவட்டக் கலெக்டராக நியமிக்கப் பட்டார்.

எரையானூர் விவசாயப் பண்ணை

* 31வினு—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திண்டிவனத்திற்கு அருகிலுள்ள எரையானூர், மானூர் கிராமங்களில் உள்ள சுமார் 75 ஏக்கர் விவசாய நிலங்களை எரையா னூர் விவசாயப் பண்ணைக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுக்கப்பட்டு அவற்றிற்கான குத்தகையோ, கிரையத் தொகையோ இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : திண்டி வனம், வட்டார ஆராய்ச்சி நிலையத்திற்கென கேட்டு எடுத்துக் கொண்ட 83.43 ஏக்கர் நிலப்பரப்பிற்குரிய 56 நில உரிமையாளர் களில் 49 பேருக்கு அதற்கான இழப்பீட்டுத் தொகை அளிக்கப் பட்டுவிட்டது. எஞ்சியுள்ள ஏழு பேருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை அவர்கள் நில உரிமைபற்றி ஐயப்பாடு உள்ளதாலும், மேற்கொண்டு விசாரணைகள் நடத்த வேண்டியிருப் பதாலும் அது வருவாய்த்துறை வைப்பீட்டுக் கணக்கில் கட்டி வைக்கப்பட்டுள்ளது.

பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்கள்

*32 வினு.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களின் 1964-65, 1965-66, 1966-67 வருடங்களுக்கான கணக்குகள் ஆடிட் செய்யப் பட்டுவிட்டனவா ?

(இ) இவைகளில் கையாடல் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சங்கங்கள் எவை, எவை ?

(உ) அவைகளின் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் 1964-65-ம் ஆண்டில் நான்கு சங்கங்களின் கணக்குகளும், 1965-66-ம் ஆண்டில் ஐந்து சங்கங்களின் கணக்குகளும் தவிர ஏனைய சங்கங்களின் 1964-65, 1965-66-ம் ஆண்டுக்குரிய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு விட்டன. 1966-67-ம் ஆண்டுக்குரிய தணிக்கை நடந்து வருகிறது.

(இ) பின்வரும் சங்கங்களின் பணம் கையாடப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டது :

(1) தி. நகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(2) பாலியனூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(3) ஈச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(உ) மேற்படி சங்கங்களில் கையாடப்பட்ட மொத்தத் தொகையான 50,079-89 ரூபாயில், இதுவரை ரூ. 23,239-54 திருப்பி வசூலிக்கப் பட்டுள்ளது. இந்தச் சங்கங்களின் முன்னாள் தலைவர்கள் மீதும் இக் கையாடல்களில் ஈடுபட்ட ஏனையோர் மீதும் காவல் துறை புலனாய்வு நடத்தி வருகின்றது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: சில சங்கங்களின் கணக்குகள் தனி ஆடிட் செய்யாகிவிட்டது என்று சொன்னார்கள். மற்ற சங்கங்களின் கணக்குகள் ஆடிட் செய்யப்படுவது நிறுத்தப் பட்டது. ஏன் அவ்வாறு நிறுத்தப்பட்டது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிறுத்தப்படவில்லை. மொத்த ஆடிட்டிலே 97 சதவிகிதம் 1964-65 ஆண்டிலும் 1965-66 ஆண்டிலும் முடிந்து விட்டன. மீதியிருக்கக் கூடிய சங்கங்களிலே அவர்கள் கணக்குக் கொடுக்காததால், அங்கே தணிக்கை செய்யப்படாமல் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே இப்படித் தணிக்கை செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலே, திண்டிவனம் வட்டக்கில் ஊரல் கிராமத்தினுடைய கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கை செய்யப்பட்டது. அதிலே ஏற்பட்ட கையாடலை ஒப்புக் கொண்டு அந்தத் தலைவரே எழுதிக் கொடுத்திருந்தார். மற்றவர்கள் தலையீட்டினால் அவர்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்பதையும், ஆடிட்டர்கள், உத்தியோகஸ்தர்கள் வேலை மாற்றம் செய்யப்பட்டார்கள் என்பதும் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஊரல் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தணிக்கை செய்யப்படாமல் சில சங்கங்கள் இருக்கின்றன. தணிக்கை செய்யப்பட்ட சங்கங்களிலே ஊழல் இருக்கிறதா என்பதைத் தெரிவித்தால் கவனிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கங்களிலிருந்து இது மாதிரி ஊழல்கள் கண்டு பிடிக்கப்பட்டும்கூட வருஷக் கணக்கிலே நடவடிக்கை



எடுக்கப்படாமல் இருப்பதால் இன்னும் கூட்டுறவுச் சங்கங்களில் இதுபோன்ற கையாடல்கள் ஏற்படுவதற்கு வகையாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கு வேண்டியவைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அரசாங்கம் பதவி யேற்றதற்குப் பிறகு இதுபற்றி ஆராயப்பட்டு, காலதாமதங்கள் ஏற்பட்ட காரணங்களைக் கண்டுபிடித்து, இதற்காக இப்படிப்பட்ட வழக்குகளை மட்டும் நடத்த போலீஸ் பிரிவில் தனிப்பிரிவும் ஏற்படுத்தப்பட்டு, கணக்குகளைத் தவறு என்று கண்டு பிடிக்கக் காலதாமதம் ஏற்பட்டால் அதையும் போக்க வேண்டுமென்று பரிசீலித்து அதற்காக கணக்கு ஆய்வு செய்யக்கூடிய குழுவையும் அதிகப்படியாக ஏற்பாடு செய்திருக்கிறது.

## கதர் கிராமத் தொழில் போர்டு

*33 வினா.—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழ்நாடு காங்கிரஸ் திட்டக் கமிட்டியின் காரியதரிசியே கதர் கிராமத் தொழில் போர்டின் மானியமும் கடனும் கொடுக்கும் நிதிக் குழுவில் அங்கத்தினராக கடந்த 5-ஆண்டுகளாக இருந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவரவர்களே, கதர்-கிராமத் தொழில் போர்டின் மானியமும் நிதியும் கொடுக்கும் நிதிக்குழுவில் உறுப்பினர்கள் யார், யார்? எந்த உறுப்பினர்கள் இந்தக் கதர்-கிராமத் தொழில் போர்டிலும், மானியம் கடன் தரும் இடங் களிலும் உறுப்பினர்களாக உள்ளார்கள்? அம்மாதிரி இரண்டு இடங்களிலும் தொடர்புடையவர்கள் யார் யார் என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த கதர்-கிராமக் கைத் தொழில் ஆயத்தினுடைய உறுப்பினர்கள் 15-க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று விதியிலே அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கதர் நிர்மாணத் திட்டக் குழுவினுடைய உறுப்பினராகிய திரு. கே. பி. வி. கிரி அவர்கள் தொடர்ந்து இந்த நிதிக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*34 வினா.—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் நிர்மாணத் திட்டக் கமிட்டியின் கணக்குகளை கதர்-கிராமத் தொழில் போர்டு கடந்த எட்டு ஆண்டுகளில் எத்தனை முறை தணிக்கை செய்தது?

(இ) திட்டக் கமிட்டியிலிருந்து கதர் போர்டுக்கு வர வேண்டிய கடன் தொகை 31—3—1967 வரை எவ்வளவு ?

(உ) அதில் காலம் கடந்தவை எத்தனை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஒரு முறை தணிக்கை செய்யப்பட்டது.

(இ) 31—3—1967 வரை வரவேண்டிய கடன் தொகை ரூ. 82,438 ஆகும்.

(உ) ரூபாய் 58,537-ம் அதற்கான வட்டியும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி மூலமாகக் கொடுக்கப்பட்ட கடனும் மானியமும் வசூல் செய்யப்படாமல் இருக்கின்றன. அந்தத் தொகையை வசூல் செய்வதற்கு அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வசூல் செய்யப்படாமல் இருக்கிற தொகையைத்தான் இப்பொழுது குறிப்பிட்டேன். காலம் கடந்த முறையிலே வரவேண்டிய தொகை ரூ. 58,537-ம் அதற்கான வட்டியுமாகும். இந்தத் தொகையினை வட்டியோடு வசூலிப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்தக் கிராமத் தொழில் கடனுக்காக முதலாகக் கொடுத்தது எவ்வளவு ? 'ரெகரிங், நான்-ரெகரிங்' செலவுக்காக எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட திட்டங்களுக்காக ரூபாய் 1,03,550 கடனாகக் கொடுக்கப்பட்டது.

| தொடர் எண்ணும், திட்டங்களின் பெயரும். (1) | அளித்த கடன் தொகை. (2) ரூ. |
|---|---|
| 1 தச்சு, கொல்லுபட்டறை கேந்திரம், கஸ்தூரிபாய் கிராமம், ஈரோடு. | 21,000 |
| 2 கிராமோதய விற்பனை நிலையம், குன்னூர் .. | 2 300 |
| 3 நயினாகரம் சோப்பு தொழில் நிலையம், திருநெல்வேலி மாவட்டம். | 10,250 |
| 4 காகிதத் தொழில் கேந்திரம், கிளரியம் .. .. | 15,000 |
| 5 பனியன் துண்டுகள் வாங்குவதற்காக வழங்கப்பட்ட தொகை. | 20,000 |
| 6 செங்கல் தொழில் நிலையம், மன்னார்பாளையம், சேலம் மாவட்டம். | 15,000 |
| 7 எண்ணெய் ஆட்டும் நிலையம், நயினாகரம், திருநெலவேலி மாவட்டம். | 20,000 |

**ஆக இவ்வளவு தொகை கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலே இந்தக் கிளரியம் காகிதக் கேந்திரத்திலிருந்து ரூபாய் 1,112-ம்**





பனியன், துண்டுகள் வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 20,000-ம் இந்தக் கமிட்டி போர்டுக்குத் திருப்பித் தந்துள்ளது. அதனால், போர்டுக்கு 31—3—1967 வரைக்கும் வர வேண்டிய தொகை ரூ. 82,438 ஆகும். இதிலே உரிய காலத்திலே செலுத்தப்படாத தொகையான ரூ. 58,537-ம் அதற்குரிய வட்டியின் தொகை ரூ. 1,260-75-ம் வசூலிக்கப்பட வேண்டும். வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்தக் கடனில் முதலுக்காகப் போட்ட பணம் எவ்வளவு என்று கேட்கிறேன் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கதர் இலாகாவினருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் இத்தகைய தொடர்புகள் இருக்கின்ற காரணத்தாலே மக்களிடத்திலே இந்தக் கதர் என்னவோ காங்கிரஸினுடைய தனிப் பொருளும் பொறுப்பும் என்ற ஓர் எண்ணம் பரவலாக இருக்கின்றது. அந்தக் காரணத்தாலே இந்தக் கதர் இலாகாவிலே எல்லா மக்களும் கலந்து கொள்வதற்குக் கொஞ்சம் இடர்பாடு இருக்கிறது. ஆகவே, இந்தப் புதிய அரசாங்கம் கதர்த் துறையிலே எல்லா மக்களும் ஈடுபடக் கூடிய முறையில் ஏதாவது ஒரு நல்ல திட்டத்தைப் போட்டிருக்கிறதா? அப்படித் திட்டத்தைப் போட்டு எல்லா மக்களும் அதில் கலந்து கொள்ள முயற்சி செய்யுமா ? அப்படி ஏதாவது திட்டம் போட்டுள்ளது என்றால் அது என்ன திட்டம் என்று அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கதர் அனைவருக்கும் சொந்தம் என்பது தான் காந்தியாருடைய நோக்கமாக இருந்தது. ஆனால் இடைக்காலத்திலே மற்றவர்கள் அது தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்கிற நிலையிலே ஒரு எண்ணத்தை நாட்டிலே உருவாக்கி விட்டார்கள். இதை மாற்றி அமைக்கிற முயற்சியிலே தான் இந்தக் கதர் கைத்தொழில் ஆயத்தினுடைய அங்கத்தினர்கள் ஒரே கட்சியாக இருக்கிற நிலையை மாற்றி வர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முறையிலே தான் இதே கட்சியிலே இருக்கிற சில நல்ல எண்ணம் கொண்டவர்கள் தாங்களே ஒத்துக் கொண்டு மற்றவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களும் சேர வேண்டுமென்று நல்ல எண்ணம் படைத்த ஒரு சிலர் தான் தாங்களாகவே விலகி இருக்கிறார்கள். அப்படி இரண்டொருவர் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் அதிகமாக இந்தக் கழகத்திலே புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு சட்டதிட்ட விதிமுறைகளை மாற்ற முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்டுள்ள சிலருக்காக அமைந்துள்ள அதை எல்லோருக்கும் பொதுவான ஒரு ஆயமாக மாற்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

வழக்குத் தொடராமல், அவர்களுக்கு இடையூறு செய்யாமல், நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டும். போலீஸ் அதிகாரிகள் அதிலே தலையிட்டு கெடுபிடி செய்யக் கூடாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, கொள்முதல் விஷயத்தில் போலீஸ் அதிகாரிகள் கெடுபிடி செய்யக் கூடாது என்று சொன்னார்கள். எந்தப் பகுதியில் எந்த விவசாயி எவ்வளவு பதுக்கி வைத்திருந்தார்? விவரம் தெரியாதவர்கள் உண்மையிலேயே பதுக்கி வைத்திருந்தார்களா? அல்லது கெடுபிடி இருந்ததா? விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒட்டுமொத்தமாகக் கொள்முதல் விஷயத்தில் போலீசைக் கொண்டு கெடுபிடி செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை மேலும் மேலும் திருப்பிக் கூறாமல் முழு விவரம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** என்னுடைய தாலுக்காவில் சின்னக்குப்பத்தில் நடக்கிறது. அச்சலப்பட்டி கிராமத்தில் நடக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பெயர்களைச் சொல்ல வேண்டும்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** பெயர் விவரம், இன்னும் எல்லா விவரங்களும் கொடுக்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் சிக்கம்பட்டி கிராமத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. சமீபத்தில் தர்மபுரியில் நடந்திருக்கிறது. கிருஷ்ணகிரியில் நடந்திருக்கிறது. விவரம் வேண்டுமானால், அமைச்சர் விரும்பினால், அமைச்சரிடம் நேரடியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கைது செய்யப்பட்டு, கோர்ட்டில் வழக்குத் தொடரும் அளவுக்கு நிலைமை இருந்திருக்கிறது என்னும்போது, பதுக்கல் இருந்தால்தான் அந்த நிலைமை இருக்கலாமே தவிர, பதுக்கல் இல்லாமல், வேண்டுமென்றே எந்த அதிகாரியும்—போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி, ரெவினியூ அதிகாரியாக இருந்தாலும் சரி—கெடுபிடியிலே இறங்க முடியாது. அவர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சூசகமான பதிலை உறுப்பினர் அவர்களே சொல்வதாகத்தான் தெரிகிறது. அதற்காகத்தான் கேட்டேன். எந்த விவசாயி வீட்டில், எவ்வளவு வைத்திருந்தார் ? எந்த முறைகளைக் கையாண்டார் ? கனம் உறுப்பினர் பேசுகிறபோது, விவசாயிகளுக்கு எவ்வளவு இருப்பு வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை, மற்ற விவரம் தெரியாதிருக்கிறது என்றார்கள். விவரம் தெரியாத விவசாயிகளுக்கெல்லாம் கனம் உறுப்பினர் போன்றவர்கள் பொதுக் கூட்டத்தின் வாயிலாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ரெவினியூ அதிகாரிகளும் சொல்லுகிறார்கள். சட்ட மன்றத்திலும்



அதுபற்றிப் பேசி விவரம் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு சொல்லியும் கூட, 'விவசாயிகளுக்கு ஒன்றுமே தெரியாது' என்றால், ஒன்றுமே தெரியாதவர்களுக்கு எப்படிப் பதுக்கி வைக்க மட்டும் தெரியும் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் கேட்கிறேன், யார் யார் வீட்டில் எவ்வளவு பதுக்கி வைத்திருந்தார்கள் என்ற முழு விவரம் கொடுத்தால், அதைப்பற்றி விசாரிக்க நலமாக இருக்கும்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** டிக்ளரேஷன் கொடுக்கவில்லை. பதுக்கல் என்ற பெயரில் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று குறிப்பிட்டேனே தவிர, அவர்களிடத்தில் அதிகமாக இருந்தால் ரெவினியூ அதிகாரிகள் கொள்முதல் செய்துகொள்ளுவதை நான் குறை கூறவில்லை. விவசாயிகள் மீது கோர்ட்டில் வழக்குத் தொடருவது முறையாகாது என்பதை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** டிக்ளரேஷன் கொடுக்க வேண்டும் என்ற முறை இருக்கிறபோது, டிக்ளரேஷன் கொடுக்காதிருப்பது தவறு என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதிகாரி நெல் கொடுக்கும்படி கேட்ட நேரத்தில், " ஒரு மணி நெல் கூட கிடையாது " என்று விவசாயி ஒருவர் சொன்னார். அவருடைய கட்டடத்தில் வைத்துக் கொள்ளாமல் வேறு ஒரு கட்டடத்தில் வைத்திருந்தார். 500 மூட்டை நெல் பதுக்கி வைத்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. போலீஸ் அதிகாரி போய் 'சோதனை போடுங்கள்' என்று சொல்லி, சோதனை செய்ததில் 700 மூட்டை கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன. ஆனால், அப்படித் தவறு நடக்கும் காரணத்தால்தான், பதுக்கல் இருந்தால் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** ஆனால், நான் தெரிவித்தது 700 மூட்டை விஷயம் அல்ல. 50 மூட்டைதான். ஓரிடத்தில் 50 மூட்டை. இன்னோரிடத்தில் 55 மூட்டைதான். அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி பெருவாரியாக, ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேலாக இருப்பு வைத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும், சட்டதிட்டப்படி அவர்களுடைய தேவைக்கு மேலாக, தங்களுடைய ஸ்டாக்கைத் தெரிவிக்க வேண்டும் என்ற அளவுக்கு மேலாக இருப்பு இருந்ததாக நடவடிக்கை எடுக்கப்பட்டது அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அணுகிக் கேட்டபோது, அவர், " இது எங்களுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டதல்ல, சென்னையிலே இருக்கும் தனி இலாக்கா—இரகசிய போலீஸ் இலாகா—நடவடிக்கை எடுக்கிறார்கள், நாங்கள் அந்தப் போலீசை ஒன்றும் சொல்ல முடியாது, சென்னையிலே இருக்கும் தலைமை அதிகாரிதான் செய்ய வேண்டும் " என்று சொல்லிவிட்டார். ஜில்லா போலீஸ் அதிகாரியும் அவ்வாறே சொல்லிவிட்டார். விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் கூடாது,

கட்சிகள் ஒருமுகமாகத்தான் வோட் அளித்து வந்திருக்கின்றன. அவைகள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, சட்டசபையிலுள்ள எதிர்க் கட்சிக்கு பாதி நேரம் நிச்சயம் ஒதுக்கப்பட வேண்டும். பாக்கி இருக்கும் பாதி நேரத்தில் அவர்கள் கலந்து கொள்ளலாம். பேசுவதற்கு மட்டும் தனி உரிமை கொண்டாடுகிறார்கள். அவர்கள் இயங்குவது ஐக்கிய முன்னணி என்ற பெயரால். 7 மணி நேரம் ஆளுங் கட்சிக்கு ஒதுக்கப்பட்டால் 7½ மணி நேரம் எதிர்க் கட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : I am afraid I have to refute the statement of the hon. Leader of the Opposition, because there are a number of opposition parties here. It may be possible that sometimes we vote with the Government, because we agree with the Government. Similarly there may be a possibility of the Congress Party also voting with the Government. If the Government do the right thing, the Congress Party also will vote with the Government. Because we vote with the Government, it does not mean that we belong to the Dravida Munnetra Kazhagam. The possibilities of the Congress Party voting with the Government are much more than our (Swatantra) Party voting with the Government.

**திரு. என். சங்கரய்யா :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தாங்கள் மட்டும்தான் எதிர் வரிசையில் உட்கார்ந்திருக்கும் கட்சி என்று குறிப்பிட்டார். இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையிலும் தி.மு.க.-வுடன் தேர்தலில் உடன்பாடு கொண்டிருந்தாலும், சட்டமன்றத்தில் ஒரு சுயேச்சையான எதிர் புறத்தில் உட்கார்ந்திருக்கிற கட்சியாகத்தான் இருக்கிறது. ஆளும் கட்சியை ஆதரிக்கவும் செய்யலாம், எதிர்க்கவும் செய்யலாம். ஆனால், இங்கே எதிர்க் கட்சியாகத்தான் இருக்கிறோம். அந்த நிலைமையை வைத்துக் கொண்டு விவாதம் நடக்கும்பொழுது நேரம் ஒதுக்கப்பட வேண்டும். எதிர்க் கட்சிகளின் வரிசையில் இருக்கக்கூடிய கட்சி என்ற முறையில் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். ஆளும் கட்சி ஒன்றாகத்தான் இருக்கும், எதிர்க் கட்சி ஒன்றாக இருக்கலாம், பலவாக இருக்கலாம். அப்படி ஆளும் கட்சி என்று இன்னொரு கட்சி இருக்காது. அப்படியிருந்தால் அது ஆளும் கட்சியோடு சேர்ந்துவிடுமே தவிர, தனியாக ஒரு கட்சியாக இருக்காது. மற்றபடி இருக்கிற கட்சிகளெல்லாம் எதிர்க் கட்சிகள் என்ற தகுதியின் அடிப்படையில்தான் இருக்கின்றன. கனம் உறுப்பினர்கள் சொன்ன மாதிரி, அவை ஆளும் கட்சியை ஆதரிக்கவும் செய்யலாம், எதிர்க்கவும் செய்யலாம். எதிர்க் கட்சி என்ற தகுதியின் அடிப்படையில்தான் அவை எதிர்வரிசையில் இங்கே இருக்கின்றன.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசினவாக்கில் காங்கிரஸும், டி.எம்.கே.-யும் ஒன்று சேர்ந்துவிட்டதுபோலப் பேசினார்கள். அவர்களுடைய கட்சியின் கொள்கையை எங்கள் பெயரில் காட்டுவது பொருத்தம் அல்ல. சுதந்திராக் கட்சி எப்படியாவது இருக்கலாம். ஆட்சேபணை கிடையாது. தேர்தல்மூலம் பிரதான எதிர்க் கட்சியாக இங்கே நாங்கள் அமர்ந்திருக்கிறோம். அதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன், உறுதியுடன் சொல்கிறேன். இதுவரைக்கும் ஆளும் கட்சியை எந்த விஷயத்தில் எதிர்த்திருக்கிறார்கள் ? சுதந்திரா கட்சி எதிர்த்ததே இல்லை. விளம்பரத்திற்காக வேண்டுமானால் அந்த நேரத்தைக் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். நிச்சயம் கொள்கை அளவிலே இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Thiruvalargal A. V. P. Asaithambi, M. P. Sivagnanam and S. Balasubramanian rose on a point of order.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்பொழுது, ஒரு உறுப்பினர் ஏதோ விளம்பரத்திற்குப் பேசுகிறமாதிரி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அது அங்கத்தினருடைய உரிமையைப் பாதிக்கும். ஆகவே, அந்த மாதிரி பேச்சை, குறிப்பிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற பிரச்சினையின் பேரில் தாங்கள் தீர்ப்பு கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளம்பரம் என்ற சொல் முறையற்ற சொல் அல்ல.

Dr. H. V. Hande rose.)

Mr. SPEAKER : Thiru Balasubramanian has priority because he rose on a point of order earlier.

***திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், இந்த மன்றத்தை விளம்பரத்திற்காக மற்றக் கட்சியினர்கள் பயன் படுத்திக்கொள்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது முறைதானா ? அது மற்ற கட்சிகளின் மீது நோக்கம் கற்பிப்பது ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியைக் கொண்டுவருகிறார்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, தங்களிடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய வினாவின்மீது. எதிர்த்து வோட்டு அளித்தால் எதிர்க் கட்சி, எதிரிக் கட்சி அல்ல என்று நான் நினைக்கிறேன். இரண்டாவதாக, எதிர்த்து வோட்டுப் போடாத கட்சி எதிர்க் கட்சி இல்லை எதிர்த்து வோட்டு போட்ட கட்சி எதிர்க்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 பிப்ரவரி 14

கட்சி என்றால், நடுநிலைமை வகிக்கும் கட்சிக்கு இங்கு என்ன பெயர் என்று எனக்கு விளங்கவில்லை. மூன்றாவதாக, இங்கு பேசுவதற்கு உரிமை பெறுவதற்கும், எதிர்த்து வோட்டு போடுவதற்கும் சம்பந்தம் இல்லை. எதிர்த்து வோட்டுப் போடவில்லை என்றால், ஓராண்டுதான் ஆகியிருக்கிறது. அந்த ஓராண்டுக் காலத்திற்கு எதிர்த்து வோட்டுப் போடாத அளவுக்கு எங்களுக்கு வாய்ப்பாக, அந்த அளவுக்கு ஆளும் கட்சி எங்களைத் தழுவி நடக்கிறது. அதற்காக எதிர்த்து வோட்டுப் போடக் கூடாது என்று அடிமை ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம் என்ற அர்த்தம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : My point of order is this. Is it fair to allot extra time to the Leader of the Opposition not taking into account the four hours that is allotted for the Congress Party? What is the reason for giving this extra opportunity? Why should not that opportunity be given to the leader of our party (Swatantra) also?

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே விவாதங்கள் நடக்கும்போதெல்லாம், பல முறைகளில், முதல் அமைச்சர் அவர்கள், உறுப்பினர்கள் பேசும்போது, மாலையில் தினத்தாள்களில் வந்த, அதைக் கண்டுகளிக்க வேண்டுமானால் பேசலாம், மற்றபடி பொருள் இல்லை என்று பல சமயங்களில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்.) என்னுடைய கட்சித் தலைவர் சொன்னது சரி என்று சொல்வதற்காகச் சொல்லுகிறேன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தீர்ப்புச் சொல்லுகிறேன். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யார் யாருக்கு எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி தீர்மானிக்க பிஸினஸ் அட்வைசரி கமிட்டி இருக்கும்போது, அதைப்பற்றி உறுப்பினர்கள் பெரிய விவாதம் இடத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முறைப்படி சாதாரணமாக, ஆளும் கட்சி, எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு அதிகமாக நேரம் கொடுப்பதென்பது மரபு. அதுவும் முறையாக இருக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கு அதிக நேரம் கொடுப்பது மரபின் அடிப்படையில் எழுந்தது. எண்ணிக்கைக்குத் தகுந்த அளவில் கொடுத்து அங்கே ஒரு பங்கு என்றால், இங்கே 1½ பங்கு என்ற அளவில் இருக்கும். அதுவும் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியின் ஆலோசனையின் பேரில், சபாநாயகர் தீர்மானிப்பார்கள். இப்பொழுது உறுப்பினர்கள் நேரத்தைச் செலவழிக்க வேண்டாம் என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : விளம்பரத்திற்காகப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். எங்கள் கட்சியைப் பொருத்தவரையில், நாங்கள் எங்கள் அரசியல் கருத்துக்களோடு இயங்குகிறோம்.



1968 பிப்ரவரி 14] [திரு. என். சங்கரய்யா]

மற்றபடி தேர்தலில் தங்கள் சுயேச்சையான திட்டப்படி எங்கள் கட்சி போட்டியிட்டது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதுபோல—நான் சொன்ன சொற்கள் சுருக்கெழுத்தில் இருக்கும்—என்னுடைய அறிவிப்பில், 'எதிர்க் கட்சி' என்ற சொல்லையே நான் பயன்படுத்தவில்லை. 'அந்த, அந்தக் கட்சி' என்று சொன்னேன். அலுவல் ஆய்வுக் குழுவில் செய்த முடிவுக்குத் தக்கவாறு, எதிர்க் கட்சித் தலைவருக்கும் மாண்புமிகு முதல் அமைச்சருக்கும் ஒதுக்கும் நேரத்தைத் தவிர, மற்ற கட்சிகளுக்கெல்லாம், அவரவர்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு, நேரத்தை ஒதுக்கி, மேலும் 50 சதவிகிதம் அதிகமாகக் கொடுப்பது என்பது முடிவு. அதன்படி நான் இன்றைக்கு எடுத்துக் கொள்ளும் நேரம் பற்றிக் குறிப்பிடுகையில், அதைக் குறிப்பிட்டு, தேவைப்பட்டால் ஏதாவது மேற்கொண்டு பேசத் தேவையிருந்தால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டச் சொன்னால் கூட்டுகிறேன். அங்கே இறுதியாக முடிவு செய்ய முடியும். இங்கே அலுவல்களைக் கவனிக்க இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

5. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1967-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விவசாய வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையை * சபைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே நான் அறிவித்தபடி இன்றைய விவாதத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, விவாதத்தைத் தொடருகிறேன். உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் தொடர்ந்து அவர்களுடைய உரையை ஆற்றுவார்கள்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் என்னுடைய உரை இடையிலே நிறுத்த வேண்டிய நேரம் வந்ததால் நிறுத்தப்பட்டது. தன்னுடைய உரையிலே, மாண்புமிகு கவர்னர் பெருமான் அவர்கள், விவசாயத்திற்கு இன்றைய அரசாங்கம் என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறது என்பதைத்

* 1968 பிப்ரவரி 14-ம் தேதியிட்ட அரசிதழ் (தனிவெளியீட்டில்) வெளியிடப்பட்டுள்ளது.

தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை ஜில்லாவிலே, நம் மாநிலத்திற்கே அது உணவுக் களஞ்சியமாக இருப்பதால், தீவிர சாகுபடித் திட்டம், விதை தானிய விநியோகத் திட்டம், உரம் கொடுக்கும் திட்டம், ஊற்றுக் கிணறுகளுக்கு வாய்ப்பு அளிக்கும் திட்டம், இப்படி விவசாய அபிவிருத்திக்கு கடன் கொடுக்கும் திட்டம் என்றெல்லாம் இருக்கிறது. மற்ற ஜில்லாக்களுக்கும் விவசாயிகளுக்கு வேண்டிய பொருக்கு தானியம், உரங்கள் கொடுத்தல், மாடு வாங்கக் கடன், கிணறு வெட்டக் கடன், முட்டு வழிச் செலவுக்குக் கடன் இம்மாதிரி பலவற்றைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் திட்டங்களே தவிர, மாற்றுத் திட்டம் என்ன ? ஏ.டி.டி. 27, இன்னும் தீவிர சாகுபடித் திட்டம், ஒட்டுச் சோளம் திட்டம், இன்னும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் போட்ட திட்டங்கள் தானே ஒழிய, இன்றைய சர்க்கார் தீவிரமாக, மாற்றாக, புதிதாக எந்தத் திட்டங்களையும் போட்டு இருப்பதாக கவர்னர் பெருமான் உரையில் காணப்படவில்லை. விவசாயிகள் எதிர்பார்ப்பது, இந்த ஒரு ஆண்டு காலத்தில் புதிய சர்க்கார் விவசாயிகளுக்கு அவர்களுடைய விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க செய்வார்கள் என்பது. அப்படி நல்ல விலை கிடைக்கச் செய்யவில்லை. விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல மார்க்கெட்டு கிடைக்கவில்லை. சரியான பருவ மழை இன்மையால் விளைச்சல் குறைவாகப் போய்விட்டது. முட்டுவழிச் செலவும் அதிகமாகப் போயிருக்கிறது. ஒன்றுக்கு இரண்டு மடங்கு பெருகியிருக்கிறது. இன்றைய சர்க்காரில் விவசாயிகள் எதிர்ப் பார்ப்பது என்ன ? அவர்களுடைய தரம் உயர வேண்டும். அவர்களுடைய வருவாய் உயர வேண்டும். அவர்களுக்கு இருக்கும் இன்னல்கள், சிக்கல்கள் தீர வேண்டும். நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காங்கிரஸ், நாட்டில் 20 வருஷ காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ், விவசாயிகளுக்காக எவ்வளவோ திட்டங்களைப் போட்டு, அணைகளைக் கட்டி, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, எவ்வளவோ செய்திருந்தும், நீங்கள் போடும் திட்டங்கள் போதும், முன்னேற்றக் கழகம் பல திட்டங்கள் சொல்கிறார்கள், விவசாயிகளுக்கு ஏராளமான நன்மைகள் செய்கிறோம் என்கிறார்கள், அவர்கள் ஆட்சிக்கு வரட்டும், என்று மக்கள் ஆட்சியை மாற்றி, ஆட்சிப் பொறுப்பை உங்களிடம் கொடுத்தார்கள். ஆகவே, விவசாயிகள் எதிர்ப் பார்ப்பது, விலைவாசி குறைந்து, அவர்களுடைய வாழ்க்கை சுமுகமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்குக் கொள்முதல் முறையால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயி தன்னுடைய தேவைக்கு மேல் 25 க்விண்டாலுக்கு மேல் வைத்துக் கொண்டிருந்தால், அதை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும், 'டிக்ளரேஷன்' செய்ய வேண்டும் என்று விதி அமைப்பு இருக்கிறது. அதுபற்றி எல்லா விவசாயிகளுக்கும் தெரியாது. கிராமப்புறத்தில் வாழும் விவசாயிகளுக்கு, தன்னிடம் அதிகமாகத் தானியம் இருந்தால், அதை அதிகாரிகளுக்குத் தெரி



விக்க வேண்டும் என்று எல்லோருக்கும் தெரியாது. அப்படிப்பட்ட விவசாயிகளிடமிருந்து, அங்கேயுள்ள அதிகாரி கொள்முதல் செய்தால்கூடப் பரவாயில்லை. ஆனால், போலீஸ் அதிகாரி, பதுக்கல் என்கிற பெயரில் விவசாயிகளின் பேரில் நடவடிக்கை எடுத்து, கோர்ட்டுகளில் வழக்குத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு இடையூறுகளை உண்டாக்குகிறார்கள். எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே சில சிறிய வியாபாரிகள் தாலுக்காவிற்குள் கொண்டு போகலாம் என்பதால், கூடையிலும், தலைமேலும் கொண்டு வியாபாரம் செய்தார்கள். சந்தையில் வியாபாரம் செய்கிறார்கள். அவர்களைத் தடுத்து, அவர்கள் பிழைப்பைத் தடங்கல் செய்யக்கூடிய வகையில் கொள்முதல் அதிகாரிகள் செய்யும் காரியங்கள் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் தொந்தரவாகவும், துன்பமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட இன்னல்கள் நீங்க, அவர்களுடைய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க. அவர்களுடைய தரம் உயர வழிவகை செய்ய வேண்டும்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்திலே சென்ற ஆண்டு பருவமழை சுமாராக இருந்தும், விளைச்சல் சரியாக இல்லை. பயிர்கள் சாவியாகி விட்டது. அரசாங்கக் கடன்களை, கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. கடன்களைத் திருப்பிக் கொடுக்க போதுமான சக்தி அவர்களிடம் நிச்சயமாக இல்லை. ஏனென்றால், அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை இல்லை; நல்ல விலை கிடைக்காததால், அரசாங்கக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. உற்பத்தித் தானியத்திற்கு அரசாங்கம் கொள்முதல் விலை கொடுப்பது போதாது, அதைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். பொறுப்பில் இருக்கிறவர்கள் நல்ல விலை கொடுக்க மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று சொல்வார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்றாலும், மாநில சர்க்காரே அதற்குப் பொறுப்பேற்று, விவசாயிகளுக்குப் போனஸ், ரிபேட், போன்ற வகையில் சேர்த்துக் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கும் விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையாக இருக்கவில்லை. எடுத்ததற்கெல்லாம் மத்திய சர்க்கார் என்று சொல்லிக் கொண்டிருந்தால் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால், விவசாயிகளை அது திருப்தி செய்துவிட முடியாது. விவசாயிகளினுடைய தேவையைப் பூர்த்தி செய்தால்தான், அவர்களுடைய குறையைப் போக்கினால்தான், அவர்களுடைய கஷ்டங்களைப் போக்கினால்தான், இன்றைய அரசின் பேரில் அவர்கள் ஓரளவு திருப்தி கொள்ளுவார்கள். இந்த நிலைமை நீடித்துக் கொண்டு போகுமானால், விவசாயிகளுக்கு அதிருப்தி நாளடைவில் அதிகமாக வளரத்தான் செய்யும்.

சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது என்று நமது கவர்னர் பெருமான் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சட்டம், ஒழுங்கு என்ற பெயரில் விவசாயிகளைத் துன்புறுத்தாமல், அவர்கள் மீது

[1968 பிப்ரவரி 14

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தக் கழகத்திலே டாக்டர் ஹாண்டே அவர்கள் வர வேண்டுமென்று நான் சிபாரிசு செய்யலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்திலே யாரும் சிபாரிசு செய்ய முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சிபாரிசு செய்யலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இவ்வளவு பகிரங்கமாக சிபாரிசுக் கடிதங்கள் கொடுப்பதும் சிபாரிசுக் கூறுவதும் அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 1966-67-ல் எத்தனை ரூபாய்க்குக் கதர் விற்பனை நடந்தது ? 1967-68-ல் எத்தனை ரூபாய்க்குக் கதர் விற்பனை தமிழ்நாட்டில் நடந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கதர் விற்பனையினுடைய சரியான புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை என்றாலும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான தொகை, ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்குக் கூடுதலான விற்பனை ஆகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சர்க்காருடைய போக்குவரத்துத் துறையில் கதரை விட்டுவிட்டு, கைத்தறியை வாங்குவது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளதனால் வெள்ளக்கோவில் பகுதியில் கதர் உற்பத்தி செய்து கொண்டிருந்தவர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலேகூட கதரையே வாங்கக் கூடாது என்ற நிலை இல்லை. விருப்பப்பட்டவர்கள் கதரை உபயோகிக்கலாம்; அப்படி விருப்பமில்லாதவர்கள் கைத்தறியை உபயோகிக்கலாம். அது மட்டுமல்ல, இரண்டிலும் விருப்பமில்லாதவர்களுக்குப் பயனுள்ள வகையில் பின்னி துணிகளைக்கூட வாங்கலாம் என்ற முறை இருக்கிறது. அடுத்து, கதர் உற்பத்தி செய்து கொண்டிருந்தவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாதவாறு நிவாரணம் அளிக்கிற முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தக் கதரைப் பற்றிய கேள்வி வரக்கூடிய தினங்களிலாவது நமது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் இந்தக் கதர் உடையைப் போட்டுக்கொண்டு சபைக்கு வருவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1968 பிப்ரவரி 14]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, முதலிலே யாரும் கட்டாயப் படுத்தப் படக்கூடாது என்பது தான் நம்முடைய முக்கியமான நோக்கம். மீண்டும் அதையே செய்கிறோம் என்றால் பழைய நிலைக்கே போகிறோம் என்பது தான் பொருள். விருப்பம் உள்ளவர்கள் போட்டுக் கொள்ளலாம். இங்கே நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் கூட கதரை அணிந்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. பா. சாரதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது 8 ஆண்டுகளில் ஒரே ஒரு முறை தான் தணிக்கை செய்யப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். மற்ற எல்லா நிறுவனங்களிலும் ஆண்டுக்கொருமுறை தணிக்கைச் செய்யப்படுகின்ற நேரத்தில், இங்கு மட்டும் ஏன் 8 ஆண்டுகளுக்கொரு முறை தணிக்கைச் செய்யப்பட்டது ? அப்படி 8 ஆண்டுகளாக தணிக்கைச் செய்யப்படாமலிருந்தால் அந்த ஒரே ஒரு முறை தணிக்கைச் செய்யப்பட்டது எப்போது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தக் கதர் கிராமக் கைத்தொழிலிலே, அதிலே உள்ள ஊழியர்களைக் கொண்டே தான் தணிக்கைச் செய்யப்படுகிறது. இந்தத் தணிக்கை ஒரு முறை 1964-லே நடைபெற்றது. மேற்கொண்டு தொடர்ந்து தணிக்கை செய்ய வேண்டிய நேரத்தில் நிச்சயமாக இது செய்யப்படும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறையிலே கதர் துணிக்கு அடுத்தபடியாக கைத்தறித் துணிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களையும் கதர் இல்லாவிடில் கைத்தறி அணிய வேண்டுமென்று தான் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட, கதர் இல்லாவிட்டால், கைத்தறிதான் கொடுக்கப்படும் என்றுதான் உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் இந்த அமைச்சர் மில் துணி கூட வழங்க அனுமதிக்கப் படுகிறது என்று சொன்னார். அதைப் பற்றி விளக்கம் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மில் துணி வழங்கப்படுகிறது என்று சொன்னது தகவல் சரி இல்லை. கதருக்குப் பதிலாக கைத்தறி துணிதான் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் தொழிலாளர்கள் மில்துணி தான் வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அப்படி அவர்கள் வற்புறுத்திய நேரத்தில் அது இயலாது, கதரை மாற்ற வேண்டுமானால் கைத்தறியாகத் தான் மாற்ற வேண்டும், இல்லாவிட்டால் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அளவில் கதருக்குப் பதிலாகக் கைத்தறிதான் இன்றைய தினம் வழங்கப் பட்டிருக்கிறது.

கொள்முதலை ரெவினியூ அதிகாரிகள் சுமுகமாகச் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும். விவசாயிகள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள். கோர்ட்டில் வியாஜ்யம் தொடர்ந்து, வக்கில் வைத்து, அதனால் ஏற்படக்கூடிய செலவு இவற்றிலிருந்தெல்லாம் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பு, நியதி என்ற முறையில் இன்றைக்கு எடுக்கப்படும் நடவடிக்கையைப் பார்த்தால், நாட்டிலே பல அமைதியற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, கோவையில் நடந்த சம்பவம், பழனியில் நடந்த சம்பவம், திண்டுக்கல்லில் நடந்த சம்பவம், தூத்துக்குடியில் நடந்த சம்பவம் எல்லாம், ஏதோ மாணவர்கள் கிளர்ச்சி செய்வதாகப் பத்திரிகையிலே, குறிப்பாக ஆளும் கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளிலும், அதை ஆதரிக்கக்கூடிய கட்சிப் பத்திரிகைகளிலும் எழுதப்பட்டு வருகிறது. மாணவர்கள் ஓரளவு படித்தவர்கள். பண்புள்ளவர்கள். நியதி தெரிந்தவர்கள். இந்த நாட்டின் எதிர்காலப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள். இந்த தேசத்தின் நிலைமையை உணராதவர்கள் அல்ல. அவர்கள் அப்படிக் கிளர்ச்சி செய்து அராஜகச் செயல்களுக்குச் செல்வார்களா என்று யோசித்துப் பார்த்தால், நிச்சயமாக மாணவர்கள் அப்படிப்பட்ட நிலைமைக்குச் செல்லமாட்டார்கள். மாணவர்கள் பண்பாளர்களாகவும்தான் நிச்சயமாக இருந்து வருவார்கள். ஆக, அப்படிப்பட்ட நடவடிக்கைகள், ஏதோ உள்ளூர ஒரு அராஜகச் செயல், ஒரு விஷமச் செயல் செய்யக்கூடிய அளவுக்கு வளர்ந்து கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட நடைமுறைகளையெல்லாம் . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாணவர்கள் யாரும் இந்தக் கிளர்ச்சியில் கலந்துகொள்ளவில்லை, அவர்களெல்லாம் படித்தவர்கள், பண்பாளர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்கள் பண்பாளர்கள் என்று உறுப்பினராவது சொன்னாரே, அதற்காக நன்றி. ஆனால், மாணவர்களை ஏதோ தவறாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கூறிவிட்டார் என்பதற்காக மாணவர்கள் கிளர்ச்சி நடத்துவதாக எல்லாப் பத்திரிகைகளிலும் வருகிறது. இது கழக ஏடுகளில் மட்டும் வருகிறது என்பதல்ல. காங்கிரஸ் ஏடுகளில் மாத்திரம், திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் செய்வதாக வருகிறதே தவிர, ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர், கோயம்புத்தூர் சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது, "மேடையை நோக்கி வந்த மாணவர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "மேடையை நோக்கி, தாக்குவதற்காக வந்த மாணவர்கள்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கவனம் ஊட்டுகிறேன்.





திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். நானும் அந்த மேடையில் இருந்தேன். மேடையிலே வந்த கூட்டத்தை அவர்கள் குறிப்பிட்டார்களே தவிர, மாணவர்களை அவர்கள் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாணவர்கள் தாக்குதலிலே ஈடுபட்டார்கள்; அவர்களை நோக்கி மக்கள் சென்றார்கள்—அவர்களைத் தாக்குவதற்கு; போலீசார் மாணவர்களை விட்டுவிட்டு மாணவர்களைத் தாக்கச் சென்ற மக்களைத் தாக்கினார்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். ஆகையால், மாணவர்கள்தான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்று அந்த அறிக்கையிலிருந்து புலனாகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : "மக்கள்மீது" என்று திருத்திக் கொண்டதற்காக நன்றி. மக்கள் மேடை மீது வந்தார்கள். அப்பொழுது அவர்கள் தாக்குவதை எதிர்த்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேடையிலிருந்த மக்கள், தங்களை நோக்கி வந்த மாணவர்களை நோக்கிச் சென்றார்கள். போலீசார் மாணவர்களை விட்டுவிட்டு, மக்களைத் தாக்கினார்கள் என்பது சி. சுப்பிரமணியம் அவர்களுடைய குற்றச்சாட்டு. மாணவர்கள்தான் அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்று அந்த அறிக்கையிலிருந்து புலனாகிறது என்பதற்காகத்தான் விளக்கம் தந்தேன்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், "நான் சொன்ன வார்த்தை மாணவர்களைப் புண்படுத்துவதாக இருந்தால் அதைப்பற்றி நான் வருந்துகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். "மாணவர்கள் அதை அதிகப்படுத்தினால் நான் சொன்னதை வாபஸ் கூடப் பெற்றுக் கொள்ளுவேன்" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதன் பிறகு, மதுரையில் கலவரம் நடந்திருக்கிறது. அது காங்கிரஸ் கட்சிக் கூட்டம் அல்ல. தமிழ்நாடு தேசீய தொழிற் சங்கக் காங்கிரஸ் நடத்திய ஊர்வலத்தில், மாவட்ட கலெக்டர் போலீஸ் இலாக்கா தலைமை அதிகாரி அவர்கள் மீதெல்லாம் கல் எறியப்பட்டது. அப்படிக் கல் எறியப்பட்டது; பலருக்குக் காயம் ஏற்பட்டது. ஏராளமான பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டது. மதுரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் காரியாலயம் அடித்து நொறுக்கப்பட்டது. அழிக்கப்பட்டது. இப்படிப்பட்ட அராஜகச் செயல்களை மாணவர்கள் செய்தார்கள் என்றால், அது மாணவ சமுதாயத்திற்கே ரொம்ப இழுக்காகும். அதை மாணவர்களின் செயல் என்று யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஆகவே, ஏதோ விஷமிகள் செய்கிறார்கள். தவறான வழியில் விஷமிகள் செய்கிறார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களா வேறு கட்சியைச் சேர்ந்தவர்களா என்று நான் சொல்ல முடியாது.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும், அப்படிப்பட்ட அராஜகச் செயல்களின் மூலம், இழிசெயல்களின் மூலம் சமுதாயத்தில் ஒரு பீதியை உண்டாக்குகிறார்கள். சமுதாயத்தில் ஒரு நல்ல அமைதியான நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமானால், சமுதாயத்தில் ஒரு சுமுகமான நிலைமை நிலைக்க வேண்டுமானால், அராஜகச் செயல்களை நாம் தடுத்தாகவேண்டும். அராஜகச் செயல்கள் என்னும்போது, காங்கிரஸ் கூட்டத்தில் தீ வைத்துக் கொளுத்துவது, செருப்பு வீசுவது, கல் எறிவது என்ற இப்படிப்பட்ட நிலை வளர்ந்தால் என்ன ஆகும்? அராஜகச் செயல் ஒரு கட்சியின்மீது ஏவி விடப்படுமானால், அந்தக் கட்சி வளரத்தான் அதெல்லாம் சாதகமாக இருக்கும். அதை எல்லோரும் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். காங்கிரஸ்
மு.ப. கட்சி இப்படிப்பட்ட நிலைமையிலே வளர்ந்துகொண்டுதான்
11-00 இருக்கும். அதற்கு மக்களின் ஆதரவும் பெருகிக்கொண்டேயிருக்கும்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்திலே சென்ற தடவை இருந்த காங்கிரஸ் சர்க்கார் ஊருக்கு ஓர் ஆரம்பப்பள்ளியையும், ஓர் உயர் நிலைப்பள்ளியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இப்படி கிராமங்கள்தோறும் ஏராளமான உயர் நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தி, எல்லோரும் படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள். வருடம் ஒன்றுக்கு எஸ். எஸ். எல். சி. பரிட்சை பாஸ் செய்பவர்கள் 1½ லட்சம் பேர். ஆனால் கல்லூரியில் 25 ஆயிரம் பேருக்குத்தான் இடம் இருக்கிறது என்று கல்லூரித் தலைவர்கள் சொல்லுகிறார்கள். பாக்கி 1¼ லட்சம் அல்லது 1 லட்சம் பேருக்கு படிப்பதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது செய்து கொடுத்தாக வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தால் காங்கிரஸ் சர்க்காரில் வேலை வாய்ப்புக்கு வசதி செய்து கொடுத்திருந்தார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பாலிடெக்னிக்குகள், கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி வேலைவாய்ப்புக்கு வசதி செய்து கொடுத்திருந்தார்கள். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் மூலமாக பள்ளியாசிரியர் வேலை தேடிக் கொடுத்தார்கள். இன்றைக்கு சேலம் ஜில்லாவில் மட்டும் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சுமார் ஆயிரம் பேருக்குமேல் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். பொறியியல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை; பி.இ. படித்தவர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை. இன்னும் ஐந்து வருஷம் போனால், எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கும் வேலை கிடைக்காத நிலைமை ஏற்படும் என்று கருதுகிறேன். இம்மாதிரி படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க ஒரு மாற்றுத் திட்டம் ஏற்படுத்தியாக வேண்டும். இல்லையானால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிடும். இன்றைக்குச் சர்க்கார் வேலையில் இருக்கக் கூடியவர்கள்கூட, ரிட்ரென்ச்மெண்ட் என்ற பெயரால் நீக்குகிறார்கள். எல்லோருக்கும் வேலைவாய்ப்புத் தேடித்தர வேண்டும். எல்லோருக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து



கொடுத்தாக வேண்டும். படித்தவர்களுக்கெல்லாம் எதிர்காலத்தில் வேலை கிடைக்காது என்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது. உயர்நிலைப்பள்ளியில் படித்து வெளியேறும் மாணவர்கள் வேலையில்லாமல் நாட்டில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் வேலைவாய்ப்பு தேடிக் கொடுக்க முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்து நிர்வாகங்களுக்கெல்லாம் அரசாங்கம் தாராளமாகக் கடன் உதவி வழங்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் கொடுக்கக்கூடிய கிராண்டு எல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் விவசாயிகளுக்குக் கிணறு வெட்டவும், நிலத்தைச் சீர்திருத்தம் செய்யவும், உரம் வாங்கவும், தானிய விதைகள் வாங்கவும், உழவு மாடு வாங்கவும் கடன்வசதிகளை நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து, வட்டார வளர்ச்சி நிலையங்களுக்கு இன்னும் கூடுதலான கிராண்டு தொகையை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன் வசதியை கூட்டுறவு நில அடைமான பாங்குகளின் மூலமாகக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. விவசாயிகளுக்குக் கடன்களை கிராம நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள், வட்டார வளர்ச்சி மூலமாகக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். மேலும், கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கொடுத்து வந்த குறுகிய காலக் கடன் நிறுத்தப்பட்டிருக்கிறது. மாசூல் கடன் எல்லாம் 6 மாதத்திற்குள்ளாக திருப்பிச் செலுத்த வேண்டிய நிலைமை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. விவசாயி நிலத்தில் விளைந்த தானியத்தை உடனடியாக விற்கவும் முடியவில்லை. நல்ல விலை வரும்வரைக்கும் காத்திருக்க முடியவில்லை. வாங்கிய கடனை 6 மாதத்திற்குள் திருப்பிச் செலுத்தியாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம், ஓராண்டுக் கடன் என்ற முறையில் வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தினுடைய கொள்கைத் திட்டப்படி, விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய பொருளுக்குக் கொடுக்கும் விலை போதுமானதாக இல்லை. விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கொடுத்தாக வேண்டும். மேலும், கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில், கரும்புக்கு வரிவிகிதத்தை உயர்த்தியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கரும்புக்கு இப்படி வரி போடுவதால் அது உற்பத்தியைப் பாதிக்கும்; உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். மேலும், விவசாய வருமான வரியை அரசாங்கம் கைவிட்டுவிட யோசித்துக் கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். விவசாய வருமான வரியை அரசாங்கம் கைவிட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு 25 நிமிட நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து, திரு. மலைச்சாமி.

**திரு. பெ. மலைச்சாமி :** பெருமைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மைமிகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். இந்திய அரசியலில், குறிப்பாக தமிழகத்தில் முப்பது ஆண்டுக் காலமாக தமிழ் நாட்டில் ஓர் இருளை உருவாக்குகின்ற இந்தி ஆதிக்கத்தில், தமிழக அரசு இன்றைய நிலையில் எப்படி இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1937-ம் ஆண்டிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்த்து வந்திருக்கிறது. இப்பொழுது ஒரு அரசியல் கட்சியாக மக்கள் சமுதாயத்தின் மத்தியில் வந்து இந்தியை எதிர்க்கிறோம் என்பதில் எவ்வளவு ஆழமான உண்மை இருக்கிறதென்பதை இந்திய தேசியம் பேசுபவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். நான் அவர்களுக்கு ஒரு சிலவற்றை நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள், ஆண்டுவந்தபொழுது கேரள அரசாங்கத்திற்கும், மைசூர் அரசுக்கும் எல்லைத் தகராறு இருந்து வந்தது. அங்கே தேசியம் பாழாகவில்லை. இப்பொழுது மைசூருக்கும் மகாராஷ்டிரத்திற்கும் எல்லைத் தகராறு இருக்கிறது. அங்கே தேசியம் பாழாகவில்லை. ஆனால் தமிழகத்திலே மட்டும் இந்திய தேசியம் பாழாகிவிடும் என்று அவர்கள் சொல்லும்போது மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். அவர்கள் பேசும் இந்திய தேசியம், தமிழக மக்களின் இதயத்திலே நெருப்பூட்டுவதற்குத்தான் இருக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் பேசும்போது, 'மாணவர்களுக்குப் பயந்து கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த மொழித் தீர்மானத்தைக் கொண்டு வந்தது' என்று கூறினார்கள். இந்த மொழித் தீர்மானத்தைக் கொண்டுவந்தது மாணவர்களுக்குப் பயந்து அல்ல; மானத்துக்குப் பயந்துதான் கொண்டுவந்தோம் என்று கூறிக்கொள்கிறேன். தமிழனுக்கு மானம் உண்டு என்பதை தமிழ் இலக்கியங்கள் எல்லாம் எடுத்துக் காட்டுகின்றன.

சங்க இலக்கியத்தில் மானத்தைப்பற்றி ஒரு குறிப்பு ஒன்று வருகிறது. "ஓர் ஆண் குரங்கும் ஒரு பெண் குரங்கும் இன்பமாக வாழ்ந்து வந்தனவாம். ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு, அவைகளுக்கு ஒரு அழகான குட்டி பிறந்ததாம். ஒரு நாள் ஆண் குரங்கு இரை தேடப் போகும் நேரத்தில் ஒரு மலை உச்சியிலிருந்து விழுந்து இறந்துவிட்டதாம். அந்தச் செய்தியை மற்றொரு குரங்கு, இறந்த குரங்கின் மனைவியிடம் தெரிவித்ததாம். அதைக் கேட்டவுடன் அந்தப் பெண் குரங்கு, தன் கையிலிருக்கும் குட்டிக் குரங்கை எடுத்து, அருகில் இருந்த உற்றார் உறவினரிடத்தில்





கொடுத்துவிட்டு, மலை உச்சிமீது ஏறி, அங்கிருந்து விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டதாம்"—இம்மாதிரியான மான உணர்ச்சி தமிழ்நாட்டுப் பெண் குரங்குக்குக் கூட இருந்தது என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அந்தக் குரங்குக்கு இருக்கும் மானம்கூட தமிழர்களில் சில மனிதர்களுக்கு இல்லையே என்பது குறித்து மிக்க வேதனைப் படுகிறோம். காரணம் மானம் என்பது ஒன்றுபட்ட நிலைமையை உருவாக்கிக் காட்டுவது. அந்த மானத்தை அழிப்பதற்கு இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டுகிறார்கள். எப்படி பாகன் யானையை அடக்குவதற்கு அங்குசத்தைப் பயன்படுத்திக் கொள்கிறானோ அதுபோல் தமிழக மக்களை ஆட்டிப் படைக்க இந்திய அரசியல் சட்டம் என்ற அங்குசத்தைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் எப்படிப்பட்டது என்பதை 1952-ஆம் ஆண்டே சட்டப் பேரறிஞர் Ivor Jennings—

'The Indian Constitution vests control, in the hands of the Hindus of the north'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் வடவர்களின் ஆதிக்கத்திற்குத்தான் பயன்படுகிறது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டு தமிழகத்தில் இருக்கிற மக்களை அடிமையாக்க வேண்டுமென்ற ஆசை இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் மொழிப்பிரச்சினை கிளப்பப் பட்டிருக்கிறது. ஒரு மொழி என்ற அடிப்படையில் பிரஞ்சு நாட்டில் இல்லாத ஓர் ஒற்றுமையை, கனடா நாட்டில் இல்லாத ஓர் ஒற்றுமையை ருஷ்ய நாட்டில் இல்லாத ஓர் ஒற்றுமையை இந்தியாவிலா காணப் போகிறார்கள்? அவர்கள் எல்லாம் பன்மொழியை ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டிருக்கிறபோது இங்கு மட்டும் ஒரு மொழி தான் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் என்ன? இங்கு இருக்கிறவர்கள் சொல்கிறார்கள், இந்தியாவில் அதிகமாகப் பேசப்படுகிற மொழி இந்தி மொழி. ஆகவே இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்திய அரசியல் சட்டம் என்ன என்பதைத்தான் 1965-ஆம் ஆண்டு கிளர்ச்சியிலே தான் தமிழகம் கண்டு விட்டதே. 1965-இல் இந்திய அரசியல் சட்டம் தமிழகத்தில் எத்தனை பிணங்களை உருவாக்கிக் காட்டியது, 1965-இல் இந்திய அரசியல் சட்டம் இந்திய நாட்டில் எத்தகைய ரத்த வெள்ளத்தை ஓட வைத்துக் காட்டியது? இத்தகைய அரசியல் சட்டம்தான் நமக்குத் தேவையா என்பதைத் தயவுசெய்து தேசீயம் பேசுகின்ற நண்பர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
 தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா, கிளியே
 வந்தே மாதர மென்பார்

என்று நடிப்புச் சுதேசிகளைப் பற்றி பாரதியார் பாடினார். ஆனால் இன்று தாயைக் கொல்லுகின்ற பஞ்சம் இல்லை. தமிழ்த் தாயைக் கொல்லுகின்ற வஞ்சகம் இந்திய நாட்டில் தலைவிரித்தாடுகிறது. இவர்களும் வந்தேமாதரம் என்று சொல்கிறார்கள். வந்தே

மாதரத்தை வைத்து, இந்திய அரசியல் சட்டத்தை வைத்து தமிழக மக்களின் இதயத்தில் கால் வைத்தால்--அதைத் தமிழன் தாங்கிக் கொண்டிருக்கமாட்டான். எத்தனை ஆண்டுகள் போராட வேண்டுமென்றாலும் போராடுவான். அவனது உள்ளத்திலே ஓடி வரும் உணர்ச்சிகள், பெருகி வரும் உணர்வுகள் எத்தகையது என்பதை நாடே 1965-ஆம் ஆண்டு கண்டிருக்கிறது. அதை இங்கிருந்து பார்த்தவர்களும் இன்றைக்குச் சொல்கிறார்கள். இந்த அரசு மாணவர்களுக்குப் பயந்து கொண்டுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்துவிட்டது என்பதாக, மானத்திற்குப் பயந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் உண்மையிலேயே ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால், நாட்டில் இருக்கிற எல்லாப் பகுதி மக்களும் ஓரளவு ஒரு ஒருமைப்பாட்டோடு வாழவேண்டும் என்று அறிஞர் லிவ்விங்ஸ்டன் சொல்கிறான். ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களே உணவு உண்டால், குறிப்பிட்ட பகுதி மக்களே நல்வாழ்க்கை நடத்தினால் அது உண்மையான ஜனநாயகம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வான். வடக்கே இருப்பவர்கள் இந்தி மொழியைக் கொண்டு நம்மீது ஆதிக்கம் செலுத்த விரும்பினால்—தெளிவாக நமது சட்ட அமைச்சர் அவர்கள் வடக்கே அவர்களுடன் அதை எதிர்த்து வாதாடி வந்த நேரத்தில் தமிழக மக்கள் எல்லாம் அவருக்கு வீர வரவேற்பு அளித்தார்கள். தமிழக மக்களின் நன்றி உணர்ச்சி பொங்கிய வரவேற்பை அளித்தார்கள். கேடயம் தந்தார்கள். வாள் தந்தார்கள். அதைப்பற்றிக்கூட தேசிய வாதிகள் கிண்டலாகச் சொன்னார்கள். " கத்தியைக் கொடுத்துவிட்டார்கள், இனி கிண்ணம் தான் பாக்கி " என்பதாக ஏளனமாகச் சொன்னார்கள். உண்மையை உணர்ந்தார்களா ? தமிழக மக்களின் மானத்தைக் காப்பதற்கு தமிழகமே ஒன்று கூடிவிட்டது என்பதை இந்திய அரசு தெளிவாக உணர்ந்துவிட்டது. இங்குள்ள தேசியவாதிகள் தான் உணர்ந்தும் உணராதவர்களாக இருக்கிறார்கள். பாரதியார் சொன்னாரே,

அச்சமும் பேடி மையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ—கிளியே
ஊமைச் சனங்க ளடீ.

என்பதுபோல பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழர்களின் மானத்தைக் காப்பதற்காக—தமிழக மக்களின் கருத்தை ஒன்று திரட்டி இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்தபோது—தேசிய ஒருமைப்பாடு என்று பேசும் இந்த தேசியவாதிகள் ஊமையாக இருந்தார்கள். அதை அடிமை என்று சொல்ல மாட்டேன். காரணம் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் காலைத் தொட்டு வீணை வாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். நமக்கு மானம் பெரிதா ? இந்திய அரசியல் சட்டம் பெரிதா ? எது பெரிது என்கிற கேள்வியை ஒவ்வொரு தமிழனும் தன் மார்பைத் தட்டிப் பார்த்துக்கேட்டுக் கொள்ளவேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் மானம்தான் பெரிது என்ற அடிப்படையில் இங்கே இந்த மொழித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இங்கிருந்து தேசியம் பேசுகிறவர்கள் தமிழர்களின் மானத்தைக் காப்பதற்கு அதை





ஆதரித்திருக்கவேண்டாமா ? இன்றைக்கு இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி ஆட்சியைக் குலைக்க சிந்திக்கிறார்கள். ஒரு வேடன் வில்லையும், அம்பையும் எடுத்துக்கொண்டு காட்டிற்குச் சென்றான் வேட்டையாட. ஒரு அழகான பறவை உல்லாசமாகத் திரிந்து சுற்றிய பறவை ஒரு மரத்தில் உட்கார்வதைக் கண்டானாம். அந்தப் பறவையைக் கொல்வதற்கு வில்லை எடுத்து, அம்பையும் பூட்டினானாம். அவன் குறி பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் அவனது காலடியில் இருந்த கருநாகம் அவனைத் தீண்டி விட்டது. அதுபோல் அறிஞர் அண்ணா அவர்கள் ஓர் அழகான பறவையாக—தமிழர்களின் மானத்தைக் காத்து நிற்கும் பறவையாக—இருக்கிறார். இன்றைக்குத் தேசியம் பேசுகின்றவர்கள் வேடனைக மாறினால் தயவு செய்து உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். உங்கள் கால் அடியில் கரு நாகங்களும் கிடக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். இந்திய அரசியல் சட்டத்தின் பெருமையோடு, துணையோடு, சேலத்தையும், திண்டுக்கல்லையும் வைத்து இங்கேயுள்ள ஆட்சியை வீழ்த்திவிடலாம் என்று முயற்சித்தீர்களானால் இந்திய அரசியலிலே ஒரு பெரும் பள்ளத்தை உண்டாக்கிவிடுவீர்கள். இந்த நாட்டில் இருளை ஒழிக்கவேண்டுமானால், இருளை மாய்க்க வேண்டுமானால், இருளைத் துரத்த வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீரிய அரசு கொண்டு வந்திருக்கிற மொழித் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும். நீங்கள் சொல்கிற தேசிய ஒருமைப்பாடு உண்மையிலேயே ஏற்பட வேண்டுமானால் தமிழக அரசின் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுத் தான் ஆகவேண்டும். இங்கிலாந்து நாட்டினர் அயர்லாந்து நாட்டின் உரிமையில் கால்வைக்க முற்பட்டபோது அறிஞர் டிவேல்ரா ஐரீஸ் மக்களைப் பார்த்து, " ஐரீஸ் மக்களே, அயர்லாந்து பாதுகாக்கப்படவேண்டுமென்றால், முதலில் ஐரீஷ் மொழி காக்கப் படவேண்டும் " என்று சொன்னார். இன்று தமிழக மக்களைப் பார்த்து அறிஞர் அண்ணா அவர்கள் அதைத்தான் சொல்கிறார். தமிழக மக்களே உங்கள் உரிமைகள், உங்கள் மானம் பாதுகாக்கப் படவேண்டுமென்றால் உங்கள் தமிழ் மொழி முதலில் காக்கப்பட வேண்டும் என்கிறார். தமிழ் எங்கள் உயிர், என்கிற உணர்ச்சி இன்றைக்குச் சின்னஞ்சிறார் அத்தனை பேர் உள்ளத்திலும் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் காக்கப்பட வேண்டும் என்ற ஒலி வீதிதோறும், தமிழக மக்கள் அனைவர் உள்ளம்தோறும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இதைப் பார்க்காதவர்கள், பொறுத்துக்கொள்ள இயலாதவர்கள், பொச்சரிப்புக் கொண்டவர்கள், பதவியை இழந்த உணர்ச்சியால்—இந்த உணர்வை அவமதிக்க முன் வந்தால்—வேறுவிதமான போராட்டத்தைத் துவக்கிவிடச் சதி செய்துவிட முன் வந்தால்—பிரஞ்சு நாட்டுப் புரட்சியை மறந்து விடாதீர்கள். தமிழக மக்கள் அத்தனை பேரும் எப்படிக் கொதித்தெழுவார்கள் என்பதை தயவுசெய்து உணர்ந்து கொள்ளுங்கள். அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாணவர்கள் அத்தனை பேர்களாலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. தமிழ்த்தாய் கலை இழந்து, நிலை இழந்து, மானம் எல்லாம் இழந்து

[திரு. பெ. மலைச்சாமி] [1968 பிப்ரவரி 14

நிற்கிறாள் என்று திரு. வி. க. பாடினார்கள். தமிழ்த்தாய்க்குக் கலையூட்ட, மானமூட்ட தமிழ் மக்கள் திரண்டெழுந்த நிகழ்ச்சி தான் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்த அரசு. அவர்கள் இங்கே கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம், 1937-லேயே புன்னகையோடு குதித்து வந்த இந்திக் கன்னியை ஒதுக்கி தள்ளிய தமிழர், 1967-ல் 'நீ கிழவியாகி விட்டாய், இனிமேல் இங்கே தலையே காட்டாதே' என்று எச்சரிக்கை விடுகிறார்கள். இதில் இன்றைக்கு தமிழர் மானம் காக்கப்பட வேண்டும் என்கிற அத்தனை பேரும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். எனவே தேசிய வாதிகளைக் கேட்டுக் கொள்வேன். உங்களுக்கு மானம் பெரிது என்றால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். தமிழ்ச் சாதியின் வாழ்வு பெரிது என்றால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஆதரவையும், ஊக்கத்தையும் தாருங்கள்.

கரும்பு தந்த தீஞ்சாறே கனிதந்த நறுஞ்சுளையே—கவின்
செய்முல்லை
அரும்பு தந்த வெண்ணகையே அணிதந்த செந்தமிழே
—அன்பே
கட்டி இரும்புதந்த நெஞ்சுடையார் துறை தோறும்
நின் எழிலைக் கெடுத்துவரல் நினைக்கையிலே நெஞ்சு
பதைக்கும், பகர வாய்துடிக்கும்
எடுத்துமகிழ் இளங்குழந்தாய் இசைத்துமகிழ்
நல்யாழே—இங்குள்ளோர்வாய்
மடுத்து மகிழ் நறுந்தேனே, வரைந்து மகிழ் ஓவியமே
—அன்பே
வன்பு தொடுத்து மகிழ் நெஞ்சுடையார் துறைதோறும்
நின் எழிலைக் கெடுத்துவரல் நிலைக்கையிலே நெஞ்சு பதைக்கும்,
பகர வாய்துடிக்கும்

என்ற பாரதிதாசன் பாட்டைபடைத்து நன்றி உரைத்து விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. டி. எஸ். ஆதிமூலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய அறிக்கையில் அநேக நல்ல அம்சங்கள் இருக்கின்றன. சிலவைகள் மிகுந்த குறைபாடு உள்ளனவாகவும் இருக்கின்றன. முதலில் இந்த அரசுக்கு நான் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இரண்டாவது உலகத் தமிழ் மகாநாடு சென்னையில் நடந்தபோது மிகவும் பாராட்டத்தக்க ஒத்துழைப்பை நல்கி, உலகமே அதிசயிக்கத்தக்கவிதத்தில் நல்லமுறையில் நடத்தி வைத்தார்கள். ஆகவே அதற்கு என்னுடைய பாராட்டுதல்கள். மொழிப் பிரச்னையில் சரியான வழிகாட்டி ஒரு நல்ல தீர்மானத்தையும் இந்த அசெம்பிளியில் நிறைவேற்ற ஏற்பாடு செய்து அதன் மூலம் இந்திய உப கண்டத்திலேயே தமிழ்நாட்டு அந்தஸ்து (பிரஸ்டிஜ்) உயர்ந்திருக்கிறது. ஆகவே இந்த



1968 பிப்ரவரி 14] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

இரண்டு காரணங்களுக்காக முதலில் நான் இந்த மந்திரிசபையைப் பாராட்டுகிறேன். இந்த அறிக்கையில் நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று நான் சொன்னேன். மொத்தம் 21 பக்கங்களைக்கொண்ட இந்த அறிக்கையில் கிட்டதட்ட 7 பாராக்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் உள்ள நடவடிக்கைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்றன. நல்ல நெல் ரகம் ஆடுதுறை 27, உர சப்ளை திருப்தி, மற்றும் 5, 6 ஜில்லாக்களில் பூச்சிமருந்துகள் ஏரியல் ஸ்ப்ரே மூலம் தெளிக்கப்பட்டு அதன் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. நல்ல முறையிலே முன் வருஷங்களைவிட, அதாவது 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு முன்னால் கனெக்ஷன் கொடுத்திருந்தது, இப்பொழுது 42 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதன் மூலமாக 12 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு அதிகமாக கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுதும் விவசாயிகளுக்கு கடன் வசதி செய்துகொடுப்பதற்கு இந்த வருஷம் பல ஷாத்துக்கள் செய்யப்பட்டு இருப்பதாக இந்த அறிக்கையில் காணப்படுகிறது. இதைப்பார்க்கும் பொழுதும் இந்த அரசாங்கம் விவசாயத் துறையில் அதிக ஜனங்களின் தொழிலாக இருக்கக்கூடிய விவசாயத்தில் அதிக அக்கறை செலுத்தி வருகிறது என்பது தெரிகிறது. இது பாராட்டக் கூடிய விஷயம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களைப்பற்றி அரசியல் நிபுணர் திரு. சந்தானம் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லி இருப்பது போற்றக்கூடிய விஷயம். அதன் மூலம் ரொம்ப நாளைய கூட்டுறவு ஊழல்களைக் களைந்து எறிவதற்கும், அதன் மூலம் மக்களுக்கு நல்ல வழிகாட்டுவதற்கும் முடியும். ஆகவே அந்த அறிக்கையை துரிதப்படுத்தி கூட்டுறவுத் துறையில் அநேக பெருச்சாளிகள் உட்கார்ந்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருப்பதை அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல விஷயங்கள் என்று குறிப்பிட்டுவிட்டு இன்னும் சில விஷயங்களைப்பற்றிச் சொல்ல முன்வருகிறேன். வழக்கமாக நான் சொல்கிற பல்லவி என்று ஒரு வேளை நீங்கள் சொல்வீர்கள். சுதந்திராக் கட்சியினுடைய கொள்கை உணவு முனையில் புதிய சட்டதிட்டங்களை இந்தச் சர்க்கார் கையாள வேண்டுமென்பது. முக்கியமாக சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் 1952-இல் ரேஷன் முறைகளை நீக்கிவிட்டார் என்பதற்காக நீங்கள் நீக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஒருவர் செய்தார் என்பதற்காக இன்னொருவர் அவ்வாறு பண்ணவேண்டும், பாலோ (follow) பண்ணவேண்டுமென்ற முறையில் நான் இதைச் சொல்லவில்லை. உணவு விஷயத்தில் இந்தச் சர்க்கார் பழைய காங்கிரஸ் சர்க்கார் கொள்கையை இன்னும் அப்படியே கடைப்பிடித்து வருகிறது. சொல்லப் போனால் அதைவிடக் கொஞ்சம் மோசமாகத்தான் இருக்கிறது. அறிக்கையிலே உணவு முனையில் சாதித்து இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. என்ன சாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை கண்டுகொள்ள முடியவில்லை. ஏராளமான கஷ்டங்கள்தான் ஏழைகளுக்கு ஏற்பட்டு இருக்கின்றன.

ஆகவே உணவு முனையில் இந்தச் சர்க்கார் ரொம்பவும் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய தவறியிருக்கிறது என்பதுதான் என்னுடைய ஒரு குற்றச்சாட்டு. முக்கியமாகக் கொள்முதல் விஷயத்தில் ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது அறிக்கையில் இருக்கிறது, ஆனால் நடைமுறையில் இல்லை. சென்ற வருஷம் எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஏக்கர் என்றால் 100 சென்ட், அதைவிடக் குறைவாக 40 சென்ட், 50 சென்ட் என்று உள்ள குறைந்த விவசாயிகளிடம் கூட நெல்லை 8 மூட்டை அவர்களுக்கு கிடைத்தால் அதிலே 4 மூட்டையைக் கட்டாயமாகக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். . . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அங்கத்தினர் விரும்புகிற பதிலைத்தான் நான் சொல்லப்போகிறேன். ஒரு ஏக்கருக்குக் குறைந்து, 40 சென்ட் வைத்திருக்கின்றவர்களிடம் கொள்முதல் செய்தால் அதைப்பற்றிய தகவலைக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் திருப்பித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்யக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி கொள்முதல் செய்தால் அதைத் திருப்பிக்கொடுக்கும்படியாக உத்திரவிடப்பட்டிருக்கிறது. 8 மூட்டை நெல் விளைந்ததில் 4 மூட்டை வாங்கினார்கள் என்பது நல்ல குற்றச்சாட்டாக இருந்தால் பெயர், ஊர் எல்லாம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : வாஸ்தவத்திலேயே டி.எம்.கே. மந்திரிசபையைப்பற்றி எனக்கு ஒரு ஆச்சரியம், ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகத்திலேயே உள்ள கட்சிகளிலேயே, லட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட ஒரு ஆணிவேர் ஊன்றி ஸ்திரமாக இருக்கக்கூடிய கட்சியாக அது அமைந்திருக்கிறது. தமிழ்நாடு பூராவிலும் மூலை முடுக்கெல்லாம் டி.எம்.கே. கட்சியினுடைய கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட கட்சிக்கு அங்கங்கே நடக்கக்கூடிய தகவல்கள் கிடைக்க வில்லை என்றால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது சர்க்காருடைய எண்ணம் ஜனங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். சரியான முறையில் சர்க்கார் இன்ஸ்ட்ரக்ஷன் (Instructions) கொடுக்கவேண்டும். ரெவின்யூ அதிகாரிக கணக்கு வழக்கில்லாமல் அக்கிரமம் செய்திருக்கிறார்கள் என்பன நான் நிரூபிப்பேன். எழுதிக் கொடுக்கவேண்டுமென்றால் எழுதிக் கொடுப்பேன். ஆனால் கூட்டணியைச் சேர்ந்தவ என்பதால் இத்தனை நாளாக மூடி மறைத்துக் கொண்டிருந்தே நான்கூட இதுவிஷயமாக எழுதியிருக்கிறேன். 26 டிசம்ப இந்த சர்க்காரில் உள்ள உணவுக் கொள்கையைப்பற்றி வேதப் பட்டு எழுதினேன், 'It would not be out of place if I take the action of the presant Government is lake that of the Mo Emperor, Mohamed Tughlak' என்று மன்னிக்கவேண்டும். மாதிரி நிலைமையை ஏன் சொல்கிறேன் என்றால் காங்





இருந்த 1966-ஆம் வருஷத்தில் 7.26 லட்சம் டன் கொள்முதல் செய்தது. நாங்கள் 1967-இல் 8.5 லட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் அரசாங்கம் எல்லா இடங்களிலும் ரேஷன் போட்டார்கள். ரேஷன் போட்டது 1,600 கிராம், பிறகு அதை 1,200 கிராமாகக் குறைத்து எல்லா இடங்களிலும் போட்டார்கள். இப்பொழுது ஒரு ஜில்லாவில் ரெவின்யூ கிராமங்கள் 1000 இருந்தால அதல 250 அல்லது 300 கிராமங்களில்தான் ரேஷன் போடப்படுகிறது. மற்ற 700 கிராமங்களுக்கு ரேஷன் இல்லை. 800 கிராம்தான் போடப்படுகிறது. 800 கிராம் என்று சொன்னால் ஒருவருக்கு அரையே மாகாணிப்படி வருகிறது. தலைக்கு 800 கிராம் என்றால் மீதித் தேவைப்படும் அரிசியை, அதாவது 1½ படி அரிசியை, வெளியில்தான் போய் 2 ரூபாய் அல்லது 2¼ ரூபாய் கொடுத்து அதிக விலைக்கு வாங்கவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. முற்பகல் 11-30

ஆகவே, இந்த ரேஷன் முறைகள் எல்லாம் ஒழிக்கப்படும் என்ற முறையில் அன்று கூட்டணியாக இருந்து நாம் எல்லோரும் பேசினோம். ஜனங்களும் தகுந்த நிவாரணம் கிடைக்கு மென்பதாகத்தான் கருதினார்கள். அன்று எப்படி சி. எஸ். அவர்கள் தோற்றார்கள்? அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் அவர்கள் எப்படித் தோற்றார்கள்? நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 500 ஓட்டில் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஜெயித்து வந்தார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன ?— எனக்குக் கொஞ்சம் இருதய நோய் ; மெதுவாகத் தான் பேச முடியும்; ஆகவே, மணி அடிப்பதில் கொஞ்சம் கடைக்கண் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.— இந்த அரசு வந்தால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றார்களே, எங்கே என்று பொது ஜனங்கள் கேட்கிறார்கள். எதை நீங்கள் செய்திருக்கிறீர்கள் ? கெடுபிடி முறையில் ரெவின்யூ அதிகாரிகளும், மற்றவர்களும், கொள்முதலைச் செய்து தங்களுடைய புரொமோஷனுக்கு வழி செய்து கொள்ளுகிறார்கள். கிராமத்திற்குக் கிராமம் நெல், அரிசி கொண்டுபோவது கூட 10 லிட்டருக்கு மேல் கொண்டு போகக் கூடாது என்று உத்தரவு போடப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட கெடுபிடியின் மூலமாகச் சாப்பிடுவதற்கு அரிசி, நெல் கிடைக்காமல் விலை கூடி விட்டது. ஏழைகளுக்கு நன்மை கிடைக்கவில்லை என்று நான் திட்டமாகச் சொல்லுவேன். பணக்காரர்கள், பெரிய நிலச் சுவான்தார்கள் இதற்கு முன்னால் ஒரு கோட்டை நெல் 50 ரூபாய்க்கு மேல் விற்றதில்லை. காங்கிரஸ் அரசாங்கம் கடுமையான ரேஷனை வைத்திருந்தபோது கூட விலை பெருகவில்லை. இப்போது அறுவடை சமயம். ஒரு கோட்டை நெல் விலை 100 ரூபாய் விற்கிறது. நாலைந்து மாதத்திற்கு முன்னால் 150 ரூபாய்க்குப் போய்விட்டது. ஆகவே, நிலச்சுவான்தார்கள் இந்தச் சர்க்காரை வாழ்த்துகிறார்களே தவிர, ஏழை ஜனங்கள் இந்தச் சர்க்காரை வாழ்த்தவில்லை. திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கேரள ராஜ்யத்திலுள்ள கம்யூனிஸ்ட் சர்க்காரை விட ஏன் கடுமையாக இருக்க வேண்டும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நிலச்சுவான்தார்கள் வாழ்த்துகிறார்கள் என்றால்—வாதத்திற்காகக் கேட்கிறேன்—அது எப்படி கம்யூனிஸ்ட் கட்சியை விட மோசமாக இருக்க முடியும் என்பதைப் பற்றி சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கேரளாவிலும் நிலச் சுவான்தார்கள் வாழ்த்துகிறார்கள்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சர்க்காருடைய உணவுக் கொள்கையில் மாற்றம் இல்லாததால் நிலச்சுவான்தார்கள் விலை கூடுதலாக விற்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இதற்கு முன்னால் 1964-ல் ரேஷன் வந்தது. 1964-க்கு முன்னால் கூட 112 படி கொண்ட நெல் கோட்டை 50 ரூபாய்க்கு மேல் விலை போகவில்லை. இப்போது 130 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்தச் சர்க்காரை வாழ்த்துகிறார்கள் என்று சொன்னேன். கேரளாவில் இரண்டு ஏக்கருக்கு குறைந்தவர்களிடமிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். லெவி நோட்டீசில் தகராறு இருந்தால் பத்து தினங்களில் அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கூட போட்டிருக்கிறார்கள். கேரளாவில் படி அரிசி 4½ ரூபாய், 5 ரூபாய் என்று விற்றாலும்கூட அங்கு ஒரு தாராள சமிஞ்ஞை காணப்படுகிறது. இங்கு கொள்முதல் விஷயம் ரொம்பவும் கெடு பிடியாக இருக்கிறது. அதற்கு நான் இரண்டொரு நிகழ்ச்சிகளைக் கூற விரும்புகிறேன்.

ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் ஆலங்குளம் தொகுதியைச் சேர்ந்த ஏழைகள் சிலர்—திரு. ஆலடி அருணாவுக்கும் தெரியும்—கொட்டை முத்து, ஈருள்ளி, நவதானியங்கள், கானம் போன்றவற்றைக் கிராமங்களில் கொண்டு போய் விற்று விட்டு அந்தப் பொருள்களுக்கு ஈடாகப் பெற்ற நெல்லை, 10 படி, 15 படி, 20 படி என்ற அளவில் கூடையில் போட்டுக் கொண்டு வந்தார்கள். அதைக்கொண்டு வந்த அந்தப் பெட்டிக்காரர்கள் இடைக்கால் என்ற இடத்தில் அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஒரு ரோடு முக்கில் தலையாரி, மற்றவர்களால் மறித்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் காலை 7 மணி முதல் 3 மணி வரை அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பத்து விட்டருக்கு மேல் இருக்கிறது என்று சொல்லி அவர்களைப் போக அனுமதிக்கவில்லை. நான் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தேன். விசாரித்ததில் நிலைமையைச் சொன்னார்கள். சர்க்கார் உத்தரவில் தெளிவு இல்லையென்றாலும் நீங்களாவது கொஞ்சம் மனித இருதயத்தோடு நடந்து கொள்ளக்கூடாதா என்று கிராம முனிசீப், தலையாரி போன்றவர்களைக் கேட்டேன். அதற்குப் பிறகு எப்படியோ அந்தப் பெட்டிக்காரர்களைத் தள்ளி விட்டேன். அம்பாசமுத்திரத்தில் நூற்றுக் கணக்கான அறுவடைக் கூலிகள் மூன்று நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். இதற்கெல்லாம் காரணத்தைக் கடைசியில் சொல்லுகிறேன்.





(திரு. பெ. மலைச்சாமி தலைமை)

அவர்கள் சொன்னார்கள்—' நாங்கள் அறுவடைக் கூலிகள்; பத்து நாட்களாக அறுத்து இருக்கிறோம். 20 மூட்டை நெல் கூலியாகக் கிடைத்தது. அதைக் கொண்டுபோக பர்மிட் வேண்டுமென்று கூறுகிறார்கள், துன்புறுத்துகிறார்கள். பர்மிட் வாங்க முதலில் நிலச்சுவான்தார்களிடம் எழுதி வாங்கி, கிராம முனிசீப் பார்த்து, ஆர். ஐ. பார்த்து அதற்குப் பிறகு தாசில்தாரைப் பார்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை ' என்று சொன்னார்கள். அவர்கள் வேதனையோடு அழுதார்கள். நான் சொன்னேன்—' நீங்கள் அறுவடை ஜோலியையே விட்டு விடுங்கள்; மழை விட்டும் தூவானம் விடவில்லை. காங்கிரஸ் அரசாங்கம் போயும் இந்த அரசாங்கத்தில் நல்ல பலன் கிடைக்கவில்லை. இந்த அரசாங்கம் ரேஷன் சம்பந்தமாக நல்ல முடிவு எடுக்கவில்லை. (மணி அடிக்கப்பட்டது) என்னுடைய பேச்சைத் தடைப்படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து 15 நிமிடங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** தாங்கள் 11-20-க்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது 11-40 ஆகிறது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 10 நிமிடத்திற்கு மேலேயே ஆகிவிட்டது. ஆகவே, விரைவில் முடித்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** நான் சொல்வது, உணவுப் பற்றாக்குறை என்று சர்க்கார் சொல்கிறார்கள். எங்கே உணவுப் பற்றாக்குறை ? இந்த ஸ்டேட் ஒரு ஸர்ப்ளஸ் ஸ்டேட். இதை மக்கள் புரிந்து கொண்டிருப்பதால் மக்கள் தொகை பெருகி விட்டது என்றும் காங்கிரஸ் சர்க்கார் போட்ட கோரஸை, பின்பாட்டை, பஞ்சப்பாட்டை, பாட வேண்டாம். 1964-ல் இந்திய சர்க்கார் தங்கள் இமாலயத் தவறுகளை மறைக்க அவசியமாக கண்ட்ரோலைப் புகுத்தினார்கள். 1964-க்கு முன்னால் மக்கள் பட்டினியாகவா கிடந்தார்கள் ? ஆகவே இந்த உணவு விஷயத்தில் தெளிவான அறிக்கைகளை வெளியிடவேண்டும். ஒரு ஏக்கர், அதற்குக் குறைந்தவர்களிடம் கொள்முதல் செய்தால் உங்கள் கண்களைப் பிடுங்கி விடுவோம் என்று ரெவின்யூ அதிகாரிகளுக்கு உத்தரவு போடவேண்டும்.

நான் சொல்லுகிறேன், ரேஷனை நீக்கி விடுங்கள் என்று. அதனால் இந்த நாட்டில் யாரும் பட்டினி கிடக்கமாட்டார்கள். ஒரு படி அரிசித் திட்டம் ஏன் ? நீங்கள் அதிகாரத்திற்கு வருவோம் என்றிருந்தால் இதைச் சொல்லியிருக்க மாட்டீர்கள். ஏதோ சொல்லி வைத்தீர்கள். ' டக் ' என்று பூ ஆரம் உங்கள் கழுத்தில் விழுந்து விட்டது. இந்தப் ரிப்போர்டைப் பார்க்கும்போது இத்திட்டம் பயங்கரமாக இருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் கைப்பிடித்தம் என்று இருக்கிறது. 30 லட்சம் மக்களுக்கு 5 கோடி ரூபாய் கைப்பிடித்தம் என்றால் இங்குள்ள நான்கு கோடி மக்களுக்கு இத்திட்டப்படி கொடுத்தால் 50 அல்லது 60 கோடி ரூபாய்க்கு கைப்பிடித்தம் வரும். அப்படி கைப்பிடித்தம் 50 கோடி ரூபாய் என்று வந்தால் எப்படி மற்ற அபிவிருத்தி வேலைகளைச் செய்வீர்கள்?

சென்றானாம். எனக்கு நன்றாகச் சாப்பாடு போடுங்கள், நான் மலையைச் சுமக்கிறேன் என்று சொன்னானாம். ஒரு வருட காலத்திற்கு புகாரி ஹோட்டலிலிருந்து பிரியாணி போன்றவற்றையெல்லாம் கொடுத்தார்கள். ஒரு வருட கெடு ஆயிற்று மலையைச் சுமக்கப் போகிறான், பார்க்கலாம் என்று மக்கள் கூடினார்கள். அவன் உடனே ஊராரைப் பார்த்து, மலையை என் தலையில் தூக்கி வையுங்கள் என்றானாம். அந்தக் கதை மாதிரி, ஒரு படி அரிசித் திட்டம் என்று சொல்லி இந்திய சர்க்காரை கிரான்ட் கேட்டோம், அவர்கள் தரமாட்டேன் என்று ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லி வடக்கே கையைக் காண்பிப்பதால் பிரயோஜனமில்லை. (மணியடிக்கப்பட்டது). எனக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் தயவு செய்து தரவேண்டும். ஏனெனில் நான் வேறொரு பிரச்னைக்குப் போக வேண்டியிருக்கிறது. மராமத்து இலாகா மந்திரி அவர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போது அவர்கள் கவனத்திற்கு நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. தாம்பிரபாணி ஸிஸ்டத்தில் 'அட்வான்ஸ் கார் க்ராப்' விஷயமாக நாலைந்து தினங்களுக்கு முன்பு திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அதில் சில முடிவுகள் எடுப்பது மாதிரி ஒரு விதத்தில் கலெக்டர் பேசினார். தாம்பிரபாணி ஸிஸ்டத்தில் எப்போதுமே அப்போதைக்கப்போதுள்ள பருவ நிலையை அனுசரித்து இவ்வளவு ஆயிரம் எக்கர்கள் ஸ்ரீவைகுண்டம் கீழ் பகுதி அணைக்கட்டுப் பகுதிகளுக்கு அட்வான்ஸ் கார் க்ராப்பிற்கு என்று உத்தரவு கொடுப்பார்களே தவிர கூட்டு மொத்தமாக ஒரு எக்கரேஜை (acerage) தீர்மானம் செய்துவிட்டால் அனாவசியமான கஷ்டங்கள் மேற்குபகுதி விவசாயிகளுக்கு உண்டாகும். நான் குறிப்பு வைத்திருக்கிறேன். 1965-ம் வருடத்தில் 3,862 எக்கருக்குத் தான் கலெக்டர் உத்தரவு கொடுத்தார்கள். சர்க்கார் அங்கீகாரத்தோடு 1966-ல் 36,000 எக்கருக்கு உத்தரவு வாங்கி விட்டார்கள். 3,862 எங்கே 36,000 எக்கர் எங்கேயிருக்கிறது? 36,000 எக்கருக்கு உத்தரவு வாங்கி 60,000 எக்கர் விவசாயம் செய்து விட்டார்கள். ஆகவே, மணிமுத்தாறு அணைக்கட்டு அம்பாசமுத்திரம் தாலுகாவில் இருந்த போதிலும், பாபநாசம் நீர்தேக்கம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் இருந்த போதிலும், அம்பாசமுத்திரம் தாலுக்கா விவசாயிகள் துன்பம் அடைந்தார்கள். சென்ற ஆண்டு கவனத்தோடு இருந்த காரணத்தினால், மராமத்து இலாகா மந்திரி இருந்து கவனித்து, 8,121 எக்கர் அளவுக்குத் தான் தண்ணீர் விடப்படும் என்று உத்தரவு போடப்பட்டது. சென்ற வருஷம் அந்தப் பகுதியிலும், இந்தப் பகுதியிலும் சமாளித்துக் கொண்டார்கள். பெரியவர்கள் தலையிட்டு கஷ்டம் வந்துவிடாமல், பருவத்தை அனுசரித்து—இந்த அணைக்கட்டுகள் எலெக்ட்ரிசிட்டி உற்பத்தி செய்வதற்கான அணைக்கட்டுகள், விவசாயத்திற்கான அணைக்கட்டுகள் அல்ல—எந்த அளவுக்கு எலெக்ட்ரிசிட்டி உற்பத்தி செய்ய



வேண்டுமென்று பார்த்து அந்த அளவுக்குத் தண்ணீர் திறந்து விட வேண்டும். அதற்குத் தகுந்த ஏக்கரேஜை அந்தந்த வருஷம் நிர்ணயிக்கவேண்டும். எது எப்படி ஏக்கரேஜ் தீர்மானம் செய்தாலும், ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்கள் தவிர, ஜூன் 1-ம் தேதி முதல் பழந்தொழில் விவசாயத்திற்கென்று தனிச் சலுகை காண்பித்து பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடக் கூடாது என்று ஒரு உத்திரவைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, வணக்கத்தோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சின்னசாமி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க மேன்மைமிகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் முகத்தான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1947 ஆகஸ்ட் 15-க்குப் பிறகு இன்று வரைக்கும் தமிழகத்தில் நடைபெற்ற கவர்னர் உரைக்கு அப்பால், இது வரைக்கும் சரித்திரத்தில் எப்போதும் இல்லாத முறையில், இன்று மொழிப் பிரச்னையில் ஒரு மாநில ஆட்சித் தலைவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிற கருத்து, இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றிலேயே பொன் ஏட்டில் பொறிக்கக் கூடிய புனித நன்னாள் ஆகும். இதையொட்டிய வேதனை மிகுந்த, வருத்தத்தைத் தரும் சம்பவங்கள் சிலவற்றைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொறுப்பு வாய்ந்த, புனிதமான, சட்டப் பேரவையில் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு தீர்மானம் செய்த பிறகு, பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவர் தமிழகத் சட்ட மன்றத்திலேயும் இந்திய துணைகண்டத்தின் நாடாளு மன்றத்திலும் அமைச்சர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்த, மதிப்புமிக்க திரு. சி. சுப்பிரமணியம், தமிழகத்தில் இது ஒரு மோசடி என்று சொன்ன வார்த்தை, அதற்குச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் 16-ம் தேதி தீர்ப்புக் கூறுகிற பிரச்னையை மனத்திலே வைத்து, அதை அதிகமாகப் பேசாமல் இந்த மன்றத்தின் மூலமாக ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1947-ம் ஆண்டிலிருந்து 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம் நாள் முடிகிற வரைக்கும் இந்திய அரசியல் நிர்ணய சபை நடந்து கொண்டிருந்தது. நானும் அப்போது திரு. சுப்பிரமணியம் இருக்கிற காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டிருந்தேன். இந்தப் பிரச்னையை மோசடி என்று எந்தக் காரணத்தினால் கூறுகிறாரோ—இதே திரு. சுப்பிரமணியம் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்—அன்று பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் தலைமையில் நடந்த அரசியல் நிர்ணய சபையில், இந்த நாட்டின் தேசிய மொழி அல்லது ஆட்சி மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதில் இந்திக்கு ஆதரவாக உள்ளவர்கள் எண்ணிக்கையும், இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு படி அரிசித் திட்டம் நான்கு கோடி மக்களுக்கு என்றல்ல. ரேஷன் கார்டு முறை எங்கெங்கு அமலில் இருக்கிறதோ, எங்கெங்கு அரசாங்கம் அரிசி போடும் நிலை இருக்கிறதோ அந்த இடங்களுக்குத்தான் என்று அறிவிக்கப்பட்டது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** அப்படியானாலும் ஐம்பது கோடி ரூபாய் ஆகும். இந்திய சர்க்கார் பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அவர்களால் இதுவரை பூர்த்தி செய்ய முடியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சுதந்திராக் கட்சி துணைத் தலைவர் அவர்கள் இந்த ஒரு படி அரிசித் திட்டத்தை விரிவாக்கலாம் என்று கூறுகிறார்களா ? அல்லது இதோடு நிறுத்தி விடலாம் என்று கூறுகிறார்களா ?

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தத் திட்டத்தால் ஒன்றும் மக்களுக்கு உருப்படியான பலன் கிடைக்காது. ஆகவே அதை ரத்து செய்ய வேண்டுமென்று எந்த மேடையிலும் நான் பேசத் தயார்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதன் மூலம் நீங்கள் ஏழைகளுக்கு உதவி செய்ய விரும்புகிறீர்களா ?

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** ஏழைகளுக்கு உதவி செய்யும் திட்டமல்ல இது. இது ஏழைகளைத் துன்புறுத்தும் திட்டம். இத் திட்டப்படி வாரத்திற்கு அரைப்படி கொடுக்கிறீர்கள். மீதி அரிசியை 2¼, 2½ ரூபாய் கொடுத்து வெளியில் ப்ளாக் மார்க்கெட்டில்தான் வாங்குகிறார்கள். ஆகவே அவரேஜ் விலை இரண்டு ரூபாயாகிறது. இந்த ரேஷனை எடுத்து விடுங்கள். அப்போது 1½ ரூபாய்க்கு மேல் அரிசியின் விலை போனால் நான் என் மெம்பர் பதவியை ராஜிநாமா செய்யத் தயாராயிருக்கிறேன். ஒரு கண்டிஷன். என் மெம்பர் பதவியை ராஜிநாமா செய்வேன் என்றால்—ரேஷனை எடுத்து விடுங்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு விலை முன்னும் பின்னும் ஏறி இறங்கும் (சிரிப்பு) சிரிக்கிறீர்கள். சிரித்து மழுப்பாதீர்கள். தயவுசெய்து இந்தக் காரியத்தைச் செய்யுங்கள். நட்பியல் என்ற ஒரு அதிகாரம் திருக்குறளில் வருகிறது.

> " நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு."

கொல்லர் தெருவில் ஊசி விற்பதாக நினைக்க வேண்டாம். சிரிப்பதற்காக நம் சிநேகிதம் அல்ல. ஆங்காங்குள்ள தவறுகளை அப்போதைக்கப்போது எடுத்துக் கூறுவதற்குத்தான் My criticism is in good faith. இந்தச் சர்க்கார் இன்னும் 20 வருடங்களுக்காவது நீடிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளவன் நான். காங்கிரஸ் தலைவர் ஒருவர் சொன்னார், படுத்துக் கொண்டே ஜெயிப்போம் என்று. 25, 50 வருடங்கள் எங்களை





அசைக்க முடியாது என்று சொன்னார்கள். உணவு விஷயத்தில் இந்த டி.எம்.கே. சர்க்கார் ரேஷனை ரத்து செய்து (Free movement of foodgrains) 'ஃப்ரீ மூவ்மென்ட் ஆப் ஃபுட் க்ரெயின்ஸ்'—க்கு ஆர்டர் போடுங்கள். திடீரென்று அப்படிச் செய்யாவிட்டாலும் தாலுகாவிற்குள் தாராளமாக அரிசி. நெல் போக்குவரத்து போகலாம் என்று உத்தரவு போடுங்கள். அதன் மூலம் கணிசமாக விலை குறையும். கிராமங்களில் அரிசி போடாவிட்டாலும் அவர்கள் தாராளமாக 1½ ரூபாய்க்கு வாங்கிக் கொள்வார்கள். இப்போது 2 ரூபாய், 2½ ரூபாய் கொடுத்துக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதை மிக முக்கியமாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் திரு. எம். எஸ். மணி அவர்கள் நான் இப்போது கூறும் இதே கஷ்டங்களை சென்ற காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோது 8—3—1966-ல் 'வோட்டிங் ஆன் டிமான்ட்ஸ் பார் கிரான்ட்ஸ்' (Voting on Demands for grants) என்ற தலைப்பில் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அதே நிலைமை இப்போது இந்த சர்க்காரிலும் நீடித்தால் பின் என்ன மாறுதல், என்ன 'சேன்ஜ் ஆஃப் பாலிசி' (change of policy) இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். என் 'க்ரிட்டிஸிஸம்' (criticism) 'குட் ஃபெய்த்தின்' (good faith) அடிப்படையில் உள்ளது. ஆகவே என் யோசனையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மந்திரிசபை 'டீஸன்ட், காம்பாக்ட் மினிஸ்ட்ரி' (a decent, compact Ministry) என்று பெருமைப் படக்கூடிய மந்திரிசபை. இந்த உணவு விஷயத்தைத் தவிர காங்கிரஸ்காரர்களுக்கு பேச வேறு சப்ஜெக்ட் (subject) கிடையாது. இது ஒன்றைத் தான் பிடித்துத் தொங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அவசியமாக இடம் கொடுக்க வேண்டுமா என்று வேதனையோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மந்திரிகள் வந்தவுடன், இந்தியாவில் புதுமையான ஒரு சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடித்தார்கள். அதாவது, மந்திரிகளின் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்கள். அதுபோல் இன்னும் எவ்வளவோ சிக்கன நடவடிக்கைகளைக் கையாளலாம். காங்கிரஸ்காரர்கள் கராச்சி காங்கிரஸில், அவர்கள் சர்க்கார் வந்தவுடன் உழுபவனுக்கே நிலம் என்று சொன்னார்கள். அப்படி அதை உடன் பண்ணிவிட்டார்களா? நான்கு வருடங்களுக்கு முன்னால்தான் அதுபற்றிய சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சில காரியங்களை 'ஸ்லிப் ஷாட்டாக' (slip shod) சொல்லி விடலாம். இதை ஸ்க்ராப் அயர்ன் (scrap iron) மாதிரி தூக்கி எறிந்து விட வேண்டும். அப்படிச் செய்தால் உங்களை யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள். அல்லாமல் அந்தத் திட்டத்தையே வற்புறுத்தி அதற்காக ஐம்பது கோடி ரூபாய் தேவை என்று சொல்லி இந்திய சர்க்காரை கை காண்பிப்பதும் மேடைகளில் பேசுவதினாலும் பிரயோஜனமில்லை. ஒரு பயில்வான் ஒரு ஊர்க்காரர்களிடம்

எண்ணிக்கையும் சமமாக உள்ள நிலையில் அரசியல் நிர்ணய சபை தோற்றம் அளித்தது. அப்போது தலைவராக அமர்ந்திருந்த, காலம் சென்ற பாபு ராஜேந்திரப் பிரசாத், அதனுடைய தலைவர் என்ற அந்தஸ்தில், காஸ்டிங் ஓட்டில், அதை இந்திக்குச் சாதகமாகச் செலுத்தி, ஒரு ஓட்டு வித்தியாசத்தில் இந்திக்கு பலம் கொடுத்தார் என்று அரசியல் நிர்ணய சபையின் ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த மாமன்றத்தின் மூலமாகச் சொல்லுவேன், திரு. சுப்பிரமணியம் அவர்களே, நீங்கள் உண்மையில் தமிழகத்தின் பிரதிநிதியாக வீற்றிருக்கும்போது, இந்திக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் ஓட்டுக்களின் எண்ணிக்கை சமமாக இருந்தபோது, உங்கள் மேலான திருக்கரத்தை உங்கள் உள்ளத்தில் வைத்து, தூய்மையான கருத்தைக் கூறியிருந்தால், இந்திய துணைக் கண்டத்தின் சரித்திரமே மாற்றப்பட்டிருக்கும். 1965-ம் ஆண்டில் ஆயிரக்கணக்கான நண்பர்கள் மரணம் அடையாமல், துக்ககரமான சம்பவத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்று இந்த மன்றத்தின் மூலமாக கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமை என்று தெரிவித்துக் கொளகிறேன.

இது மாத்திரமல்ல. இதே திரு. சுப்பிரமணியம் எந்தச் சட்டப் பேரவையின் முழுமையான தீர்மானத்தை, அரசியல் அதிகாரம் பெற்ற தீர்மானத்தை மோசடி என்று சொன்னரோ. இதே மதிப்புமிக்க தலைவர் 1965-ம் ஆண்டில் ஏதோ ஒரு நாள் ராஜிநாமா செய்கிறேன் என்று சொன்னர். திராவிட முன்னேற்றக் கழகம் அதை மோசடி என்று சொல்லுகிற அரசியல் பக்குவம் இல்லாத கட்சியல்ல; ஆதலால் மரியாதையோடு அவருக்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தோம். மதிப்புக்குரிய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அரசியல் நிர்ணய சபையில் தமிழக வீரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், புலித்தேவன், வ.உ.சி. எல்லோரையும் மறந்து இருந்த நிலையில், ஒரே ஒரு புனித உருவம் அரசியல் நிர்ணய சபையில் நின்று, என் கன்னித் தமிழ், ஆட்சி மொழியாக வேண்டும் என்று திரு. காய்தே மில்லத் அவர்கள் எடுத்துக் கூறியதற்கு இன்று இந்த மாமன்றத்தின் சார்பாக அந்தப் பெருமகனுக்கு நன்றி செலுத்துகிறேன். இப்படிக் கூறியதற்குக் காரணம் 1934-ம் ஆண்டிலிருந்து 1968-ம் ஆண்டு வரையில், 34 ஆண்டுகள் அரசியல் பொது வாழ்வில் மேலோட்டமாகப் பங்கெடுத்ததன் காரணத்தினுல் தான். பாகிஸ்தான் பிரிய என்ன அவநம்பிக்கை ஏற்பட்டதோ அதே அவநம்பிக்கை குமரி முதல் வேங்கடம் வரையில் இருக்கப் பார்க்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஐந்து லட்சம் தொண்டர்கள் உணர்ச்சி பூர்வமாகப் பிரிவினைக் கோரிக்கையை விட்டு, ஐக்கிய இந்தியா, சக்தி வாய்ந்த பலம் பொருந்திய இந்திய யூனியன் இருக்க வேண்டும் என்று இதயபூர்வமாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் வடக்கேயிருந்து, அது சமய வெறி என்று சொன்னலும், மொழி வெறி என்று சொன்னலும், ஆதிக்க வெறி என்று சொன்னலும், சரித்திரத்திற்கு விரோதமாக, நாகரிகத்



திற்கு விரோதமாக, அந்த முறையில் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிருர்கள். எங்களுக்கு முன்னல் அமர்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவர்களைத் தட்டிக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சாதாரணக் கேள்வி கேட்கிறேன். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னள் தலைவரும், இன்னள் தலைவரும் இன்று பங்களூரில் கூடிப் பேசுகிற உணர்ச்சி, காங்கிரஸ் கட்சியில் இருக்கிற திரு. சி. சுப்பிரமணியம் போன்றவர்களுக்கு அன்று ஏற்பட்டிருக்குமானல் தமிழகத்தில் சோக நிகழ்ச்சி நடைபெற்று இருக்குமா என்று சிந்திக்குமாறு கேட்டு, இந்தப் பிரச்னையில் இன்னும் கொஞ்சம் அதிகமாக காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஈடுபட்டு இந்த நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே நான் மெத்த மகிழ்ச்சி அடைவது, நான் இருந்து கொண்டிருக்கிற லோயர் பவானிப் பிரதேசத்தில், கோபி, பவானி, ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு வட்டங்களைக் கொண்ட இரண்டு லட்சத்து பத்தாயிரம் ஏக்கர் பாசனத்தைப் பற்றி ஆளுநர் அவர்கள் மேலான உள்ளத்தில் வைத்து, விவசாயப் பெருமக்களை மனத்தில் இருத்தி, அதைப் பற்றிச் சுட்டிக் காட்டியமைக்கு அந்த வட்டாரப் பிரதிநிதி என்ற முறையிலும், அந்தப் பகுதி விவசாயி என்ற முறையிலும் தனித்து நின்று நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு அதைப்பற்றிச் சில சம்பவங்களையும், சில செய்தி ந. ப.
களையும் இந்த மன்றத்திற்குக் கொடுக்க வேண்டியது என்னுடைய 12-00
கடமை. காரணம் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. நல்லசிவம் அவர்கள் நேற்று சட்டமன்றத்திலே கொஞ்சம் வீரமாக, ஆவேசமாகப் பேசியதைப் பார்த்தேன். அதனுல் இந்த மன்றத்தில் அந்த லோயர் பவானி பிரச்சினை என்ன என்பதை சட்டமன்றத்தின் ஆளும் கட்சியின் உறுப்பினர் என்பது மாத்திரமில்லாமல் இந்த நாட்டிலே உள்ள ஒரு பொறுப்புள்ள அரசியல் ஊழியன் என்னும் முறையிலேயும் இந்த மன்றத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய கருத்துக் முழுக்க முழுகக எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களும் ஒப்புதல் அளிப்பதாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த ஒரே ஒரு பிரச்சினையிலாவது பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தால் நல்ல நோக்கத்தோடு, பொறுப்புணர்ச்சியோடு ஒத்துப்போவார்கள் என்று நான் இதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதைக் கொண்டு வருவதற்கு முன் சம்யுக்த சோஷலிஸ்டு உறுப்பினரவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடபுலத்திலேயுள்ள சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியினர் இந்தி வெறியர்கள் என்பதை நாடு அறியும், நாம் அறிவோம். அவர்களுடைய தலைவர், முன்னள் தலைவர் டாக்டர் லோஹியா அவர்

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி)* : அதிக மாகக் கொடுக்கவில்லை. அவர்கள் இரண்டு உறுப்பினர்கள், அதனால்தான்.

*திரு. மு. சின்னசாமி* : குந்தா மின்சார நிலையத்திலிருந்து விடப்படும் தண்ணீர் லோயர் பவானிக்கு ஒரு மாதம் வந்து கொண்டிருந்தது. பிறகு அது பாதிக்கப்பட்டு விட்டது. பிறகு கிணறுகள், பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. குந்தா நிர்வாகத்திலே உள்ள 2½ இலட்சம் விவசாயிகள் போதிய தண்ணீர் இல்லாமையால் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறே சென்றால் 13 இலட்சம் ஏக்கர் பாசனம் பாதிக்கப்படும் என்று இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சமயத்தில் அரசினருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக் கொள்ளு கிறேன். அந்த வேண்டுகோளின்படி செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். இந்த ஆண்டு தண்ணீர் இல்லாததால் விவசாயி கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களிட மிருந்து அபிவிருத்தி வரியையோ, அல்லது எந்த வரியையோ வசூலிக்கக்கூடாது. இதற்காக மாவட்ட கலெக்டரின் ரிப்போர்ட் வர வேண்டுமென்று காத்துக்கிடக்காமல் இந்த நல்ல கோரிக் கையை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னு டைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

THIRU S. BALASUBRAMANIAN : Sir, on a point of Personal explanation. My party has been unnecessarily dragged in this House. I want to say a few words about its language policy and nothing else. Therefore, I must be permitted to give my personal explanation.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி)* : உறுப் பினர் அவர்கள் எந்த முறையில் விளக்கம் கொடுக்கவேண்டு மென்று கேட்கிறார்கள்.

*திரு. செ. பாலசுப்பிரமணியன்* : மொழிக் கொள்கை சம்பந்த மாக இங்கு சம்பந்தமில்லாமல் பேசப்பட்டிருக்கிறது. லோயர் பவானிபற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் மொழிக் கொள் கையில் இந்திக்காக மட்டுமே ஓடுபவர்கள் நாங்கள் என்னும்படி யான ஒரு உருவத்தைக் காண்பிக்க ஆசைப்படுகிறார்கள். அது சம்பந்தமாக எங்கள் கருத்தைச் சொல்லிக்கொள்ள உரிமை உண்டு. அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி* : அவர்களுடைய கட்சியின் மொழிக்கொள்கை, இந்திப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் என்ன என்பதை விளக்கத் தடையில்லை. முன்பு பேசிய மாண்பு மிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் அவர்களுடைய மொழிக்கொள்கையைப்பற்றிப் புரியாமல் பேசியிருந்தால் அதைப் புரிய வைக்க வேண்டியது உறுப்பினருடைய கடமை என்ற காரணத்தினால் அதை அவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கலாம்.





*திரு. செ. பாலசுப்பிரமணியன்* : மொழிக் கொள்கைபற்றி சென்ற 23-ஆம் தேதியே திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்து விளக்கிச் சொல்லியிருக்கிறோம். சமீபத்தில் மதுலிமாயி அவர்களும் சுற்றுப் பிரயாணத்தின்பொழுது மொழிக்கொள்கையைத் தெளி வாகச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி மூன்று மொழி களை இந்தத் தேசத்தில் திணிக்க விரும்புகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு மொழிகளைத் திணிக்க விரும்பு கிறது. சோஷலிஸ்டு கட்சியினர் ஒரே ஒரு மொழியைப் படித்துக் கொள்ளலாம் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். எங்க ளுடைய கொள்கை மாநிலத்தைப் பொறுத்தவரையில் தாய் மொழி, மத்தியில் பல மொழி.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி* : அந்த ஒரு மொழி என்ன மொழி ?

*திரு. செ. பாலசுப்பிரமணியன்* : இங்கு தமிழ்மொழி.

*திரு. இல. பலராமன்* : தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் பேரில் என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையிலே முதல் பக்கமாக தமிழர் மாநாடு சிறப்பையும் தமிழர் மாநாடு நடந்த முறையையும் விளக்கிக் கூறப்பட்டு இருக்கின்றது. இந்த தமிழர் மாநாடு சிறப்பான முறையில் நடந்தது என்று பத்திரிகை வாயிலாகத்தான் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மக்களுடைய பிரதிநிதிகளாகவும் இருக்கிற நாங்களே தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு நிலை இருந்தது. அதற்குக் காரணம் அந்த விழா வைக் கண்காணித்தவர்களோ அல்லது அந்த விழாவை முன்னே நின்று நடத்தியவர்களோ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை என்பதைத்தான் இங்கு பல நண்பர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். (குறுக்கீடு) மதிப்பிற்குரிய நண்பர் அனுப்பப்பட்டிருக்கிறது என்கிறார். எனக்கே வரவில்லை என்பதை யும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, விவசாயத்தைப்பற்றியும் மற்றும் இந்தி ஆட்சி மொழிபற்றியும் அதிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த மொழி விவகாரத்தில் தி.மு.க.-வும் ஒரு குழப்ப நிலையில் இருந்து தான் இந்த நிலைமையை உருவாக்கி இருக்கிறது. இவர்களுடைய குழப்ப நிலைதான் மக்களிடத்திலே ஒரு குழப்ப நிலையை உரு வாக்கி இருக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். விவசாயக் கொள்கையைப்பற்றியும் எதுவும் புதிதாக ஆளுநர் உரையிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏற்கனவே காங்கிரஸ் கட்சியிலே இருந்த ஒரு நிலையிலேதான் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு எந்த ஒரு புதிய திட்டத்தின் காரணமாக இந்த அமோக விளைச்சல் என்று அவர்கள் குறிப்பிடவில்லை. விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பைப் போன்றவர்கள். இந்த நாட்டின் முதுகெலும்பே அவர்கள்தான். இந்த நாட்டிலே பெரும் பகுதி

யிலே வாழக்கூடியவர்கள், ஏறத்தாழ 80 சத விகிதம் உள்ள மக்கள் விவசாயிகள்தான். அதுவும் கிராமப் புறத்திலே அவர்கள்தான் பெரும் பகுதியாக வாழ்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரம் உயர்ந்தால்தான் நாட்டினுடைய பொருளாதாரம் உயரும். நாட்டினுடைய வளர்ச்சி இவர்களால்தான் என்ற ஒரு நிலை அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுடைய வளர்ச்சிக்கு எந்தவித ஒரு தெளிவான வழியும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆடுதுறை 27 என்ற நெல்லின் மூலமாக அமோக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆடுதுறை 27-க்கு செலவழிக்கும் தொகையையும், அதனால் உண்டாகும் வருமானத்தையும் கணக்கிட்டால் விவசாயிகளுக்கு நஷ்டமே தவிர, லாபம் கிடையாது என்பதை நான் நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தக் கணக்கினுடைய விவரத்தைக் கொஞ்சம் சொன்னால் நன்றாக இருக்கும். விவசாயிகள் எல்லாம் அதிலேதான் பயிர் செய்கிறார்கள். விவசாயம் செய்கின்றவர்கள் அதை விரும்புகிறார்கள். குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்வது முறையான காரியமாக இருக்காது. புள்ளி விவரத்தோடு சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. இல. பலராமன் :** மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு இருக்கிற கணக்கை கேட்கிறார்கள். நான் புள்ளி விவரத்தை வேண்டுமானால் எழுதிக் கொடுக்க முடியும். ஒருவன் ஒரு வியாபாரத்தில் முதல் போட்டு ஈடுபடுகிறான் என்றால் அந்த வியாபாரத்தில் அவன் லாபம் பார்த்துத்தான் ஈடுபடுகிறான். ஆனால் விவசாயிகளோ அந்த அளவுக்கு இல்லாமல் தங்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைத்தால் போதும் என்ற ஒரே நிலையில் இருக்கிறார்கள். 'உழுபவன் கணக்கிட்டால் உழக்குத் தான் மிஞ்சும்' என்ற அன்றைய பழமொழி இன்றைக்கும் பொருந்தும். இன்றைய விஞ்ஞான காலத்திலே ஆடுதுறை 27 நெல்லின் மூலமாக லாபம் வருகிறது என்று சொல்வது மேலெழுந்த கண்ணோட்டத்துடன் பார்ப்பதால்தான். அடிப்படையான உணர்வின் மூலம் அதைப் பார்த்தால் அதில் லாபம் இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். நானும் அந்த ஆடுதுறை 27 நெல்லை பயன்படுத்திப் பயிரிட்டு அதன் மூலம் வருகிற வருவாயைக் கணக்கிட்டுப் பார்க்கிறேன். அப்படிக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது எந்தவித லாபமும் கிடையாது. அடுத்த போகம் பயிரிடும்போது இதனால் பெருவாரியான விளைச்சல் கிடையாது. அடுத்த போகத்தில் நெல்லினுடைய விளைச்சல் முதல் போக விளைச்சலை விட மிக மோசமாகி விடுகிறது. இதனால் அந்த நெல்லை பயிரிடுவது லாபம் அளிக்கிறது என்று சொல்வது திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இல்லை. இருந்தாலும் உற்பத்தி மற்ற நெல்களைக் காட்டிலும் அதிகம் என்பதை நான் ஒத்துக்கொள்



கிறேன். (மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உற்பத்தி அதிகம் என்று ஒத்துக் கொள்கிறீர்களே !) உற்பத்தி அதிகம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அரசாங்கம் நினைக்கும் அளவுக்கு லாபம் இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலே விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தங்களுடைய பயிர்களை வேறு திசை திருப்ப இருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்கள் கூட தமிழ் நாட்டிலே உணவு உற்பத்தி விஸ்தரிக்கப் பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். விஸ்தரிக்கப்பெற்றிருக்கிறது என்று குறிப்பிடும்போது விலைகள் எல்லாம் இறங்கி இருக்க வேண்டும். ஆனால் விலைகள் எல்லாம் இறங்கி இருக்கின்றனவா என்று பார்த்தால் எதுவும் இறங்கி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னுடைய மாவட்டத்திலே விலைகள் எல்லாம் மிகவும் அதிகமாக கூடியிருக்கிறது என்று கூறினார்கள். அந்த அளவில் விலைகள் இறங்கவே இல்லை. என் மாவட்டத்திலே இயற்கையின் கோளாறாலும், மழையின்மையாலும் பயிர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அடுத்த போகத்தில் தாங்க முடியாத தொல்லைகள் ஏற்படும். விவசாயிகள் கூட இலாபம் இல்லாத நெற் பயிரை செய்து கொண்டு இருப்பதை நிறுத்தி விட்டு, கணக்குப் போட்டுப் பார்த்து, துட்டுப் பயிரான கரும்பு, வாழை, மணிலா போன்றவைகளை பயிரிடுகிறார்கள். நெல்லினால் இலாபம் இல்லை என்ற காரணத்தாலும் இந்தப் பயிர்களால் இலாபம் உண்டு என்ற காரணத்தாலும்தான் அவர்கள் இந்தப் பயிர்களை எல்லாம் பயிரிடுகிறார்கள். இதனால் உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். வட ஆர்க்காடு மாவட்டத்திலே நடப்பு போகத்திலே கூட உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதை அரசாங்கத்தின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவர்கள் நெல்லினாலே அதிகம் லாபம் வருகிறது என்று எண்ணினால் அவர்களாக முன் வந்து நெற் பயிர் செய்ய முன் வந்து இருப்பார்கள்.

ஒரு படி அரிசித் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஐந்து கோடி ரூபாய் நஷ்டம் என்று கூறினார்கள். இந்த 5 கோடியை வேறு வகையிலே விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் ஊட்டினால் அவர்கள் மற்ற பயிர்களைக் காட்டிலும் நெற் பயிரில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும். அதற்கு அரசாங்கம் எந்தவித முயற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பது வருந்துதற்குரியது. இந்த நெற் பயிரினால் விவசாயி மிகவும் கஷ்டப்படுகின்றான். நம்முடைய ஆளும் கட்சியின் பக்கமாக இருந்த ஒரு நண்பர் விவசாயி இராப் பகலாகப் பாடுபடுகிறான் என்று தெளிவாகக் கூறினார்கள். இராப்பகலாக பாடுபட்டும் விவசாயிகளுக்கு எந்த வித இலாபமும் இல்லை. அதை அரசாங்கம் ஒத்துக் கொள்ளுகிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

[1968 பிப்ரவரி 14

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :* அரசாங்கம் ஒத்துக் கொள்கிறதா இல்லையா என்பது இருக்கட்டும் சுதந்திரா கட்சிக் கொள்கையை காங்கிரஸ் ஒத்துக் கொள்கிறது என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

*திரு. இல. பலராமன் :* மேலும் நெற் பயிர் செய்பவர்களுக்கு ஊக்கம் ஊட்டும் வகையில் இந்த அரசாங்கம் பல மானியங்களை வழங்க வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோது நெற் பயிர் செய்த விவசாயிகளுக்கு குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 2¼ போனஸாகத் தந்தார்கள். அந்த போனஸ் தொகையை தி.மு.க. அரசாங்கம் வந்த பின்னால் வெகுவாக குறைத்திருக்கிறது. இதனால் ஊக்கம் மங்கி விட்டது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். கொடுத்திருந்த போனஸையே குறைக்கக்கூடிய அளவுக்கு இந்த சர்க்கார் இருக்கிறது என்றால், அவர்களுக்கு மேலும் என்ன நன்மையை செய்யப் போகிறார்கள் என்பதை நினைக்கும்போது எனக்கு அச்சமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). வட ஆர்க்காடு ஜில்லாவில் வேலூரில் 75,000 டன் நெல் கொள்முதல் செய்வதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். 75,000 டன் மிகவும் அதிகம். விளைந்த விளைவோ மிகவும் குறைவு. அரசாங்கம் இப்படி உத்தரவிடும்பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவர் மக்களைத் துன்புறுத்தி வாங்காமல் இருக்கிற சூழ்நிலை இல்லை. அப்படி உத்தரவிட்டிருப்பதினால், அந்த அளவுக்குக் கொள்முதல் செய்வதற்கு ஒரு வழி வகுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. ஜில்லாவாரியாகப் பார்த்தால் பல இடங்களில் கடன் தொல்லைகள் மிகவும் அதிகம் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்பு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த பொழுது—

‘வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு’

என்ற குறளை மேற்கோள் காட்டி, மக்களிடமிருந்து அரசு துன்புறுத்தி வரி வசூலிப்பது, கையிலே வேல்கொண்டு கள்வன் பொருளை வசூலிக்கும் நிலையை ஒக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்று பல திட்டங்களின் கீழ் மக்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டு, பணம் வசூலிக்கப்படுகிறது. குறிப்பாக, கடன் திட்டங்களைப் பொறுத்த வரையில் துன்புறுத்தி வசூலிக்கப்படுகிறது. ‘ஜிஞ்ஜிலி ஸ்கீம்’ என்ற திட்டத்தின் கீழ் . . .

*மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :* பொதுப் பணித் துறை அமைச்சர் கூறியது வரியைப் பற்றி, நீங்கள் சொல்வது கடன் திட்டத்தைப்பற்றி, இரண்டையும் குழப்ப வேண்டியதில்லை.

*திரு. இல. பலராமன் :* கடனாக இருந்தாலும் சரி, வரியாக இருந்தாலும் சரி, எந்த ரூபத்தில் இருந்தாலும் சரி, மக்களிடமிருந்து அரசாங்க அதிகாரிகள் மூலம் வசூலிக்கும் பணம் சர்க்காரைத்தான் சார்ந்ததே தவிர ஒரு



1968 பிப்ரவரி 14] [திரு. இல. பலராமன்]

தனிப்பட்ட முதலாளியையோ வேறு யாரையோ சாராது என்று அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். நான் 1957-ம் ஆண்டு சட்டமன்றத்தில்

‘வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு’

என்ற குறளைக் குறிப்பிட்டேன். எதற்காக என்றால், கொள்ளிடம் போன்ற பாலங்களில் சுங்கத் தீர்வை வசூலிப்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன். அப்பொழுது குறிப்பிட்டுவிட்டு, அதைப்பற்றி ஆளும் கட்சியாக வந்த பிறகு அக்கரையற்று இருந்துவிட்டோமா என்றால் இல்லை. இப்பொழுது அங்கு செல்லுகின்ற வண்டிகள், ஏழை மக்களுடைய வாகனங்கள் இவைகளுக்காவது இந்த வரிகளை நீக்க வேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். நாங்கள் பொறுப்பு ஏற்பதற்கு முன்பே அந்த வரி வசூலிப்பதற்கான ஏலங்கள் விடப்பட்டுவிட்டன. ஆகவே, அவை முடிவுற்ற பிறகு அந்தத் தீர்வைகளை ஏழை மக்களைப் பொறுத்தவரையில் அவர்களிடமிருந்து வசூலிக்காத அளவில் நீக்குவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. இல. பலராமன் :* எங்கள் மாவட்டத்தில் மின்சார இலாகாவிற்காக எழுப்பிய கடனை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். பலவந்தமாக என்றுகூடச் சொல்லலாம். ரூபாய் கொடுத்தால்தான், மின்சாரம் தரப்படும், கம்பம் நடப்படும், கம்பி இழுக்கப்படும் என்று ஒவ்வொரு கட்டத்திலும் அவரவர்கள் நிலைக்குத் தக்கவாறு மக்களைத் துன்புறுத்தி வசூலிக்கிறார்கள். இதற்காக ஒரு திட்டத்தை அரசாங்க அதிகாரிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேல் மட்டத்தில் அவர்கள் ஏதோ ஒரு கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதற்காக பணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். 100-க்கு 12½ என்ற அளவில் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளாக இருந்தாலும் சரி, வியாபாரிகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு மறுபடியும் அந்தப் பணத்தினால் எந்தவிதமான பயனும் இல்லை. அது ஆற்றிலே கரைத்த பெருங்காயம் மாதிரிதான் ஓடிக்கொண்டிருக்கிறது. என்னிடம் தாசில்தார் ‘நீங்கள் கொஞ்சம் பணம் கொடுங்கள்’ என்று கேட்டார். ‘என்னிடம் பணம் இல்லையே?’ என்று சொன்னேன். தாசில்தார் ‘ஜிஞ்ஜிலி ஸ்கீம்’ இருக்கிறது என்று சொன்னார் அதற்கு அவரிடம் விளக்கம் கேட்டேன். 12½ சத விகிதம் கொடுத்துவிட்டால் போதும், ரூ. 1000, 2000 டார்ஜெட் என்று அரசாங்கத்திற்கு கலெக்டர் சொல்லி விடுவார் என்று சொன்னார். இம்மாதிரி எள்ளுத் திட்டத்தின் கீழ் மக்களிடமிருந்து பணம் துன்புறுத்தி வசூலிக்கப்படுகிறது. இதுபோன்று மக்களிடமிருந்து துன்புறுத்தி வசூலிக்காத ஒரு நிலையை சர்க்கார் மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், திடீ ரென்று எந்த வருஷமும் இல்லாமல் இப்பொழுது இடைக்காலத் தில் ஸ்பெஷல் பீஸ் என்று ரூ. 10, 15 வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் வசூலிக்கப்படுகிறது. கல்வியே இல்லாது படிக்க வேண்டும் என்று நம்முடைய மதிப்பிற் குரிய காமராஜ் அவர்கள் கொண்டுவந்த . . . . (ஓர் உறுப்பினர் : சம்பளமே இல்லாது). 'ஐ ஆம் சாரி', சம்பளமே இல்லாது படிக்க வேண்டும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள் . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட உத் தரவு எந்தப் பள்ளிக்கும் இடப்படவில்லை. பள்ளி நிர்வாகிகள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதாவது, பள்ளியி னுடைய காப்புக்காக ஒரு தொகை வசூலிக்கப்பட்டால் நல்லது என்று தெரிவிக்கப்பட்டு, அந்தக் கோரிக்கையை கன்ஸல்டேடிவ் கமிட்டியில் வைத்து அதைப்பற்றி ஆலோசித்து வசூலிக்கலாமா என்ற நிலை இருக்கிறதே தவிர, எந்தப் பள்ளியிலும் ரூ. 10, 15 வசூலிக்கலாம் என்ற உத்தரவு தரப்படவில்லை. அப்படி எந்த பள்ளியிலாவது வசூலித்தால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. இல. பலராமன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் பூராவும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் அத்தனை பள்ளிகளிலும் வசூலிக் கப்பட்டு வருகிறது என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். எதிர்க் கட்சியிலுள்ள அத்தனை பேர்களுக்கும் இது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அத்தனை பேர்களுக்கும் புகார் கூட வந்திருக்கும். இதற்கென்று எதிர்ப்புத் தெரிவிக்க மாணவர்கள் ஆயத்தம் செய்து தேதியையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன் . . . (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** பேசு கிறவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே தயவு செய்து எல்லா உறுப்பினர்களும் 10 நிமிட காலவரையறைக்குள் முடிக்கு மாறு கேட்டுக்கொண்டு, அடுத்ததாக திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்களை பேசும்படி அழைக்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவரவர்களே, தமிழ் நாடு ஆளுநர் உரையின் மீது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையில் முக்கியமாக பணி யாளர்களுக்கு நன்றி செலுத்தப்பட்டிருக்கிறது. இன்று சரித் திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நம்முடைய மாகாணத்தில் உயர்ந்த முறையில் அதிகாரிகளெல்லாம் பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும். அதிகம் பேர்கள் நம் மாகாணத்தில் இருந்தவர்கள் பொறுப்புடன் நன்றாக பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த வழியில் வந்திருக்கக்கூடிய அதிகாரிகளும் ஆளும் கட்சி மாறிய நிலைமை இருந்தாலும், அதற்குத் தகுந்தமாதிரி அந்தக் கட்சிக் கொள்கையின்





அடிப்படையில் நிர்வாகத்தை மாற்றி அமைக்கக்கூடிய நிலைமை யில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதைவிட முக்கியமாக நம் முடைய கவர்னர் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனென்றால், இன்று ஆளும் கட்சியினுடைய அபிப்பிராயத்திற்குத் தகுந்தபடி தன்னையும் மாற்றிக் கொண்டு, தன்னுடைய அபிப்பிராயமும் அதுதான் என்பதை வற்புறுத்தக் கூடிய நிலைமையில், ஆர்டிகிள் 163-ன்படி தானே அந்த வழியை வகுத்துக்கொண்டு ஆளும் கட்சியினுடைய நிலைமைதான் தன்னு டைய நிலைமை, நாட்டினுடைய நிலைமை என்ற எண்ணத்தில், அவருடைய அபிப்பிராயத்தையும் மாற்றிக் கொண்டிருப்பது வரவேற்கக்கூடியது. இதே மாதிரி எல்லாக் கவர்னர்களும் அந்த வழி முறையை வகுத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலைமை வரும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கவர்னர் அவர்கள் முக்கியமாகச் சொல்லியிருப்பது 'டெர்ம்ஸ் ஆஃப் ரெபரென்ஸ் ஃபார் ஃபினான்ஸ் கமிஷன்' முன்பிருந்த பினான்ஸ் கமிஷன் சம்பந்தப்பட்ட மட்டில் காங்கிரஸ் கட்சி என்ற உணர்வுடன் மத்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் இருக் கும்பொழுது ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் ஒரு வழி வகுக்கப்பட்டது. இப்பொழுது மாகாணங்களில் ஆளும் கட்சி மாறுதல் ஏற்பட்ட பிறகு பினான்ஸ் கமிஷனில் அங்கம் வகிக்கக் கூடியவர்கள் மாகாணங்களுடைய கொள்கையை, அபிப்பிராயங் களை தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த மாதிரி மாற்றங்கள் ஏற்படுத்தினால், பினான்ஸ் கமிஷனுடைய முடிவு எல்லோருக்கும் நன்மையாக இருக்கும், ஒரு நல்ல நிலைமை ஏற்படும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

மொழி சம்பந்தமாக ஓர் உறுதியான அபிப்பிராயத்தை சர்க்கார் வைத்திருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடியது. இப்படி ஒவ்வொரு திட்டத்திலும் உறுதியான அபிப்பிராயம் இருந்தால் முன்னேற்றம் காணமுடியும். அப்படி ஓர் உறுதியான அபிப் பிராயம் வைத்துக்கொண்டிருக்காவிட்டால் பல காரியங்கள் அத னால் தடைபடுகின்றன. இரு மொழிக் கொள்கையைப் பற்றி உறுதி யாகச் சொல்லியிருக்கிறார்கள், நடத்தவும் தயாராக இருக்கிறார் கள். அதுமாதிரி ஒவ்வொரு காரியத்திலும் இருக்கவேண்டும், உதாரணமாக, விவசாயத்தை எடுத்துக்கொண்டால், நீர்ப்பாசனத் திற்காக கருத்தரங்கு, விவசாயத்திற்காக கருத்தரங்கு என்றெல் லாம் நடத்துகிறார்கள். கருத்தரங்கு முடிந்தவுடன் இந்த சர்க்காரினுடைய முடிவு என்ன, எந்தக் கொள்கையின் அடிப் படையில் நாம் போகப்போகிறோம் என்பதை உறுதியாக வகுத்து விட்டால், பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதேமாதிரி கூட்டுறவை எடுத்துக் கொண்டால், பல சங்கங் களில் இன்று சர்வாதிகாரம்தான் இருக்கிறது. பரம்பரை பாத் தியதைதான் இருக்கிறது. அவை எவ்வளவு நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று நாம் நினைத்தாலும், அது நடப் பதில்லை. முக்கியமான விவசாயக் கடன்கள் மக்களுக்குக்

கிடைக்க வழி இல்லை. அதற்கான வசதியை செய்து கொடுக்க வேண்டும். இன்றைக்கு லான்ட் மார்ட்கேஜ் பாங்கை எடுத்துக் கொண்டால், 1967-ம் வருஷ ஆரம்பத்தில், சர்க்கார் கடன் ஃபர்ஸ்ட் சார்ஜ் என்று திட்டம் வகுக்கப்பட்டு, ஒரு தனி பில் தயாரிக்கப் பட்டு, மாநில சர்க்காரால் அனுப்பப்பட்டு, மத்திய சர்க்காரால் ஒரு ஆர்டினன்ஸ் கொண்டு வரவேண்டும் என்றுகூட இருந்தார்கள். அது ஏதோ காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. அப்படி ஒத்தி வைக்கப்பட்ட பில்லை உடனடியாக எடுத்து, அந்த மசோதாவை சட்டமாக உருவாக்கக்கூடிய ஒரு நிலையை, ஃபர்ஸ்ட் சார்ஜ் ஆன் லாண்ட் என்பதை செயல்படுத்தினால், விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க வசதி ஏற்படும். இன்று இருக்கும் நிலை, விவசாயி களுக்குக் கடன் கிடைக்கவில்லை. கூட்டுறவுத் துறையில் தனிப் பட்ட குடும்பங்களுக்குத்தான் நன்மை கிடைக்கிறது. அந்த மசோதாவை உடனடியாக அமலுக்குக் கொண்டு வந்தால், மக்களுக்கு நன்மை ஏற்படும்.

பருவம் தவறிவிட்ட இடங்களுக்கு பரிகாரம் கொடுக்கும் வகையில் உரையில் எதுவும் இல்லை. அது ஒன்றுதான் இந்த உரையில் வரவேற்கமுடியாத ஒன்று. விவசாய அபிவிருத்திக் காக பல திட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு பெரிய குறை, மாநிலத்தில் வறட்சி தாண்டவம் ஆடும் இடங் களுக்கு என்ன பரிகாரம் என்று ஒன்றும் இல்லை. கவர்னர் உரையை 'ப்ரி-பட்ஜட் ஸ்பீச்' என்று சொல்வார்கள், பட்ஜட்டுக்கு முன்னோடியாக கொடுக்கப்படும் உரை என்று சொல்லுவார்கள். பருவம் தவறிய பகுதிகளுக்கு என்ன பரிகாரம் என்று சூசக மாகக்கூட எதுவும் இல்லை. துருவித் துருவிப் பார்த்தாலும் இல்லை.

பதினொன்று மில்கள், தொழில் மந்தம் ஏற்பட்டிருந்தவற்றை நடத்த திட்டம் இருக்கிறது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார்கள். பல லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் திட்டம். ஆனால் அதேபோல, சென்ற வருடம் திருநெல்வேலி ஜில்லாவில் வாசுதேவநல்லூர், தென்காசி, கடைய நல்லூர், அலங்குளம் முதலிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பருவ மழை பொய்தவுடன் அமைச்சர் அவர்களிடம் எங்களுக்குப் பரிகாரம் வேண்டும் என்று கேட்டு, பரிகாரமும் கிடைத்தது. அதே மாதிரி வருங் காலத்தில், வரவிருக்கும் பட்ஜட்டில் நன்மை கள் இருக்க வேண்டும். அதற்கான திட்டங்களைப் போட்டிருப் பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஒரு வார காலத்திற்குள்ளே நாம் இப்பொழுது கேட்பதை இணைத்துச் செய்ய முடியுமோ என்னவோ தெரியவில்லை. இதற்கு முன்னமேயே ஒரு தீர்மானத் திற்கு வந்திருப்பார்கள். ஆனாலும், பருவம் குறைந்த இடங்களில், நான்கு வருஷங்களாக மழை இல்லாமல் நாங்கள் கஷ்டப்படு கிறோம். திருநெல்வேலியில், பட்டினிச்சாவாக இருக்கிறது. எனக்கு முன் பேசிய திரு. ஆதிமூலம் உற்பத்திக்குப் பிறகு இருக்கும் கஷ்டங்களைப்பற்றி சொன்னார்கள். எங்களுக்கு





உற்பத்தியே இல்லை. எங்கள் பகுதியில் உணவுக் கார்டு கிடையாது. பரிதாபமான நிலைமை. மூன்று போகம் விளையும் இடத்தில் குடும்பக் கார்டு இருக்கிறது. ஆனால், நான்கு வருஷமாக பருவம் தவறித் தவிக்கும் எங்களுக்குக் குடும்பக் கார்டு இல்லை. நீதி விசாரணை என்று வைத்தால் உண்மை விளங்கும். அமைச்சர்கள் பாரபட்சம் செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் நிர்வாகத்தில் பாரபட்சம் இருக்கிறது. கொள்கை சரி, ஆனால், நிர்வாகம் சரியில்லை. நான்கு வருஷமாக எட்டுப் பூ விளைவு இல் லாமல் நாங்கள் கஷ்டப்படுகிறோம்; எங்களுக்கு நிவாரணம் இல்லை. ஆனால் வருஷத்தில் மூன்று பூ விளையும் பகுதிகளுக்கு கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சரியாக நடக்கிறீர்கள். உங்கள் நிர்வாகத்தில் இருப்பவர்கள் சரியாக நடக்கவில்லை. ஆளும் கட்சியே மாறியதற்குக் காரணம் நிர்வாகத்தில் இருக்கும் குறைதான். எங்கள் பகுதி கஷ்டப்படும் தொகுதி. பஞ்சம் தாண்டவமாடும் தொகுதி. பிச்சை எடுக்கும் நிலைமை உருவாகி யிருக்கிறது. உடனடியாக உணவுக் கார்டு கொடுக்க வேண்டும்.

அது போக, பஞ்சம் தாண்டவமாடும் பகுதியாகிய எங்கள் தொகுதியில் ரூரல் மேன்பவர் ஸ்கீமை அமல் நடத்த வேண்டும்; ஃபேமிலி கார்டு ஸிஸ்டம் கொண்டுவர வேண்டும். விவசாய அரங்கு, நீர்ப்பாசன கருத்தரங்கு இவையெல்லாம் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் 'ஃபாலோ அப்' இல்லை. கருத்தரங்குகள் நடந்து 4 மாதம், ஆறு மாதம் ஆகியிருக்கும். ஆனால் அந்தக் கருத்தரங்கின் ப்ரொசீ டிங்க்ஸ் இன்னும் கூட வரவில்லை. ஏதோ ஒரு மாநாடு நடக்கிறது, அமைச்சர்கள் வருகிறார்கள், பேசுகிறார்கள். ஆனால் அந்த கருத் தரங்கிற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியாது. அதுபற்றிய ப்ரொசீடிங்ஸ் இருக்கிறது என்றால், என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினருக்குக் கூடக் கிடைக்க வில்லை. நீங்கள் ஃபாலோ செய்யத் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு மொழித் திட்டத்தை எடுத்துக் கொண்டால், அதிலே ஒரு முடிவை உருவாக்க எப்படி நினைத்தீர்களோ அதே மாதிரி மிக முக்கியமான விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில், அவர் களுக்கு முன்னேற்ற வழியைச் செய்ய ஒரு திட்டத்தை வகுங்கள், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வழியைக் காணுங்கள் என்று சொல்லிக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமக னாரின் பேருரையை முன்னிட்டு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு திட்டத்தைத் தீட்டித் தந்திருக்கும் தன்மைக்கு கவர்னர் அவர்களை மனமார வாயாரப் பாராட்டு கிறேன். இருபத்து மூன்று பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத் தில் ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்டு விவசாயத்தைப் பற்றியும், கிராம மக்களைப் பொருத்தும். விவசாயப் பெருங்குடி மக்களைப் பொருத்தும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக போட்டிருக் கும் திட்டங்களைப் பார்க்கும் போது, மிக மிக பூரிப்படைகிறோம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ஒருவர் விவசாயத்தைப்

பற்றிக் குறிப்பிடும் போது, உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்றார். இன்றைன்றும் சொன்னார்கள், ஏரு போட்டவனுக்கு காடு விளையுமா, ஏர் உழுதவனுக்கு காடு விளையுமா என்று.

நானும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறேன். கட்டுபடியாக வில்லை என்கிறார்கள். எங்கள் நிலைமை அப்படியில்லை. எழுபத் தைந்து அடி ஆழத்தில் கிணறு வெட்டி, பம்ப் செட்டு வைத்து, தண்ணீர் இறைத்து விவசாயம் செய்கிறோம். ஆற்று நீரைக் கொண்டோ, ஏரித் தண்ணீரைக் கொண்டோ பாசனம் செய்ய வில்லை. கட்டுபடியாகவில்லை என்கிற நிலை எங்களுக்கு இல்லை. விவசாயத்தில் புள்ளி விவரங்கள் கேட்டார்கள், எவ்வளவு செலவு என்று கேட்டார்கள். ஏக்கருக்கு 30 மூட்டைக்கு ஒவ்வொரு போகமும் செய்கிறோம். எங்களுக்குக் கட்டுபடியாகிக் கொண்டு தான் இருக்கிறது. வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது. முன்பு இருந்த வாழ்க்கையைவிட, இன்று தர மாகத்தான் இருக்கிறது. விவசாயத்தை அக்கறையோடு கண் காணித்து, உற்பத்தியைப் பெருக்கி, விவசாயத்தை நல்ல முறை யில் காலா காலங்களில் செய்துகொண்டுதான் இருக்கிறோம். மீதம் ஆகிக்கொண்டு வருகிறது. படிப்படியாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறோம். கட்டுபடியாகவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. விவசாயத்தைச் சரிவர பாதுகாக்காவிட்டால், பயிர்களை அந்த அந்த காலங்களில் கண்காணிக்காவிட்டால், விவசாயம் அழிந்துவிடும். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், சர்க்கார் வேலைக்கு 11 மணிக்குப் போக வேண்டுமென்றால், கரெக்டாக 11 மணிக்குப் போகிறோம்; அதேபோல கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று சம்மன்ஸ் வந்தால், 11 மணிக்குப் போக வேண்டும் என்றால், போகிறோம். அதே மாதிரித்தான் விவசாயமும். காலாகாலத்தில் எதையும் செய்ய வேண்டும். விவசாயத்தை அலட்சியம் செய்து, 'சரிதான், நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்று விட்டு விட்டால் விவசாயம் முன்னுக்கு வரக்கூடிய நிலைமை வராது. விவசாயிகளுக்கு, கிராமப் பகுதி மக்களுக்கு, நல்வாழ்க்கை தர கவர்னர் பெருமகனாரின் உரையில் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவே அதைத் திரும்பத் திரும்ப நான்கு தடவை, ஐந்து தடவை படிக்கலாம் என்று தோன்றுகிறது. கூட்டுறவு முறையில் உரம், நல்ல விதை, மின்சார வசதி, இதுபோன்று எவ்வளவோ நல்ல திட்டங்களை விவசாயிகளின் நன்மைக்காக வகுத்து, சர்க்காருக்கு நல்ல நல்ல யோசனைகள் கூறியிருப்பதற்காக கவர்னர் பெருமகனாரைப் பாராட்டுகிறேன். அவருடைய உரையைப் பெரிதும் வரவேற் கிறேன். ஏற்கனவே இருந்த மின்சார பம்ப் செட்டுகளைவிட இந்த ஆண்டு 42 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருப்ப தாகக் கணக்குக் கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்ததை 7½ கோடி ரூபாயாக உயர்த்தி, விவசாயத்திற்காக பம்ப் செட்களுக்கு வகை செய்திருக்கிறார்கள். அதைக் கண்டு நாம் மிக மிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்





கிறோம். விவசாயத்திற்கு பம்ப் செட்கள் முக்கியம். அவற்றிற்கு மின்சாரம் அதைவிட முக்கியம். அதன் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்து, கிராமப் பகுதிகளில் மக்கள் நல்ல முறையில் விவசாய வேலைகளில் ஈடு பட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, விவசாய பம்ப் செட்டுகளுக்காக, அதற்கு வேண்டிய மின்சாரத்திற்காக ஒன்றரை கோடி ரூபாய் அதிகமாக இந்த அரசு உயர்த்தியிருப்பதைக் குறித்து கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு நான் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு பாசனத் திட்டங்களைப் பொறுத்தும் இந்த அரசு நல்ல ஊக்கம் காட்டி வருகிறது. பருவ மழையில் வரும் தண்ணீர் ஓடை உடைப்புகளில் ஓடி, காவிரியில் கலந்து, அதிலிருந்து சமுத்திரத்தில் வீணாகக் கலந்துவிடுகிறதென்பது எல்லா விவசாயிகளும் கண்டு வரும் உண்மைதான். ஓடை உடைப்பு களில் வீணாகப் போகும் தண்ணீரை அந்தந்தக் கிராமங்களில் உள்ள ஏரிகளில் தடுத்து நிறுத்தி, தேவைப்படும்போது, ஏரிகளி லிருந்து வாய்க்கால்கள் வழியாகப் பாயச் செய்தால் நலமாக இருக்கும். அதற்குரிய வகையில், சிறு பாசனத் திட்டம் என்ற முறையில் நல்ல திட்டத்தை இந்த அரசு வகுத்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் இந்த அரசை மிக மிகப் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்கு நல்ல உர வகைகள் கிடைக்கவும், கடன் வசதிகள் கிடைக்கவும், ஏ.டி.டி. 27 ரக நெல் விதை குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைக்கவும் வழிவகைகளை இந்த அரசு செய்திருப்பதைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விதைத் தானியங் கள், உரங்கள், கடன் வசதி முதலியவற்றை விவசாயிகளுக்குச் செய்து கொடுத்திருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டு கிறேன். தற்போது கிராமப் பகுதிகளில் நைட் ஷிப்ட் ஏற்படுத்தி நூற்றுக் கணக்கான மின்சார பம்ப் செட் மூலம் பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல முறையாகத் தோன்றுகிறது. மேற்கொண்டு அந்த முறையைத் தீவிரப்படுத்தி அமல்படுத்த இந்த ஆண்டு திட்டத்தில் 1½ கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் மின்சாரக் கம்பங்களையும், கம்பியையும் வைத்துக் கொண்டே இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் பம்ப் செட்களைவிட 50 சத வீதம் அதிகமான பம்ப் செட்களை இயக்கக்கூடிய ஒரு திட்டத்தை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக அமைச்சர் அவர்கள் மின்சார இலாக்கா அதிகாரிகளிடம் கலந்து ஆலோசிக்க அனுமதி தந்தால், அவர்களிடம் கலந்து பேசி, இன்னும் நல்ல முறையில் நல்ல திட்டத்தை வகுக்க முடியும். இப்பொழுதுள்ள கம்பங்களில், அதே கம்பிகளில் நூற்றுக்கு 50 மோட்டார்கள் அதிகமாக ஓட்டுவதற்கு வேண்டிய நல்ல திட்டங்களையெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த யோசனைகளையெல்லாம்

கலந்து பேசி, கூடிய விரைவில் விவசாயிகளுக்குப் பம்ப் செட் வைகக முடியவில்லை என்ற பிரச்சனையே இலலாமல் தீர்ப்பதற்கு நல்ல வகை இருக்கிறது. விவசாயத்திற்குப் பல வகைகளில் ஆக்கம் தரும் வகையிலும், விவசாயத்தைப் பெருமைபடுத்தக் கூடிய வகையிலும் உள்ள கவர்னர் உரைக்காக நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மேன்மை தாங்கிய ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தினருக்கு அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாகவே ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை ஏதோ சம்பிரதாயமாக நிகழ்ததப்பட்ட சடங்காகவே இருந்ததே தவிர, அந்த உரை மூலம் தமிழக மக்கள் என்ன அறிவிப்பும் மகிழ்ச்சிச் செய்தியும் வரும் என்று எதிர்பார்த்தார்களோ அந்த அறிவிப்பும் மகிழ்ச்சிச் செய்தியும் அந்த உரையில் இல்லாதது அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

அமைச்சர் பெருமக்களால் வெகுவாகப் பேசப்பட்டு, பெரிதும் மக்களால் எதிர்பார்க்கப்பட்ட படி அரிசி விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆளுநர் உரையில் இல்லாதது எல்லோருக்கும் ஏமற்றத்தை அளித்திருக்கிறது. அமைச்சர் பெருமக்கள் ஆங்காங்கு, படியரிசி விஸ்தரிப்புத் திட்டம் எந்த எந்தத் தேதியில் வரும் என்பதை, அவர்களுக்கு உசிதம்போல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பொதுவாக, படி அரிசி விஸ்தரிப்புத் திட்டம் என்பது " எடுப்பார் கைப்பிள்ளையாகப் " போய்விட்டதே தவிர, உண்மையிலேயே அது செயல்படுத்தப்படவில்லை.

ஜனநாயகத்தில் எதிர்க் கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சியினர் செய்யும் நல்ல காரியததுக்குத் துணை செய்ய வேண்டும், 'co-operation if possible' என்பதற்கிணங்க, மக்களுக்கு நலன் விளைவிக்கும் திட்டத்திலே காங்கிரசைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு முழுஒத்துழைப்பும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆளுநர், தம் உரையில், ஓராண்டுக் காலத்தில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று விமரிசனம் செய்திருக்கிறார்கள். நடுநிலைமையில் இருந்து, விருப்பு வெறுப்பு இன்றிப் பார்ப்போமானால், பொதுவாகவே, தேர்தலுக்கு முன்னால், இன்றைக்கு ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் மக்களுக்கு என்ன என்ன வாக்குறுதிகள் அளித்தார்களோ அந்த வாக்குறுதிகளை அவர்கள் சரியாகச் செவ்வனே ஓராண்டுக் காலத்தில் நிறைவேற்றவில்லை என்ற அதிருப்தி மக்களுள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கிறது.

உலகத் தமிழ் மாநாடு பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். உலகத் தமிழ் மாநாடு வெகு கோலாகலமாகவே ஆடம்பரமாகவே நடைபெற்றது. உண்மையிலேயே அது ஆளுங் கட்சியினர் நடத்திய ஒரு விழாவாக இருந்ததே தவிர, மற்ற எல்லாக் கட்சிகளுக்குச் சம வாய்ப்பும், எல்லாத் தமிழ் அறிஞர்களுக்குச் சம வாய்ப்பும் அளிக்கப்படவில்லை என்று நான் குறிப்பிட விரும்பு





கிறேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அந்த மாநாடு ஒரு திராவிட முன்னேற்றக் கழக விளம்பர மாநாடாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆளுநர் அவர்களின் உரையிலே, 9-வது பாராவில், வேளாண்மையைப் பற்றிச் சொல்லும் இடத்தில், "இதற்கு முந்திய திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாமல் இருந்தமைதான் இன்றைய நமது பொருளாதாரச் சீர்கேடுகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் என்று இந்த அரசாங்கம் உணர்கிறது," என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்பு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் வேளாண்மை சிறக்க வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, வரப்பு உயர்ந்தால் நாடு செழிக்கும் என்பதை நினைவில் இருத்தி, வானத்திலிருந்து வரும் தண்ணீரில் ஒரு சொட்டுத் தண்ணீரையும் வீணுக்கக் கூடாது என்பதற்காகப் பல அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். பாலையாக இருந்த இடங்கள் இன்று சோலைகளாக வளம் கொழிக்கின்றன. இதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழகம் உணவு உற்பத்தியில் வியக்கத்தகு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. 1950-ஆம் ஆண்டில் தமிழகத்தில் மொத்த உணவு உற்பத்தி 30 லட்சம் டன் ஆகும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பின்னர் தமிழகத்தின் மொத்த உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாக உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அது 53 லட்சம் டன்னாக உயர்ந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அது 60 லட்சம் டன்னாக உயர்ந்தது. மூன்றாவது திட்ட இறுதியில் 70 லட்சம் டன் அளவை எட்டும் என்று கருதியிருந்த நிலையில், பருவ மழை தவறியதன் காரணமாகவும், ரசாயன உரம் கிடைக்காமையாலும் உற்பத்தி ஓரளவு குறைந்தது. சுருக்கமாகப் பார்த்தால், பதினைந்து ஆண்டுகளில் காங்கிரஸ் அரசாங்கத்தின் திட்டங்களினால் விவசாயம் இருமடங்காகப் பெருகியிருக்கிறது. பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருந்த நிலையில், எட்டியிருக்கிற அந்தச் சாதனை இமாலயச் சாதனையல்லாவா? கடந்த அரசாங்கம் போட்டிருந்த திடமான தீர்க்கமான, தெளிவான திட்டங்களினால், அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்த ஆக்கத்தினாலும் ஊக்கத்தினாலும் தமிழகம் 1950-ம் ஆண்டுக்கு முன்னால் பற்றுக்குறை மாநிலமாக இருந்த நிலை மாறி, இன்று அண்டை மாநிலங்களுக்குக் கொடுத்து உதவும் அளவிற்கு உபரி மாநிலமாக இருந்து வருகிறது. இப்பொழுது இந்த அரசு ஏ.டி.டி. 27 ரக நெல்லை விரும்பி, வரவேற்று பாராட்டி, முனைந்து செயல்படுத்தி வருகிறதே, இந்த ஏ.டி.டி. 27 ரக நெல் விஸ்தரிப்புத் திட்டம் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்த திட்டமாகும். ஆக, இந்த அரசாங்கம் செயல்படுத்துகிற திட்டங்களுக்கு அஸ்திவாரம் போட்டது காங்கிரஸ் தான். அதனைப் பாராட்டுவதற்குப் பதிலாக, நன்றி சொல்லுவதற்குப் பதிலாக, குறை கூறியிருப்பது எந்த நாகரீகத்தைச் சேர்ந்தது என்பது விளங்கவில்லை.

[திரு. என். எஸ். வி. சித்தன்] 1968 பிப்ரவரி 14]

கடந்த ஓராண்டுக் காலமாக தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பல முறை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். போலீஸ் நிலையங்கள் எனப்படும் காவல் நிலையங்களில் அட்டகாசங்கள் அதிகரித்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், போலீஸ் "லாக்-அப்ஸ்" கசாப்புக் கடைகளாக மாறுகின்றன என்றுதான் சொல்ல வேண்டும். உதாரணத்திற்குப் பல சொல்ல முடியும். அண்மையில் வேட்டைக்காரன்-புதூரில் விவசாய வருமான வரி பாக்கிக்காக ஒரு விவசாயி கொடுமைப்படுத்தப் பட்டதையும், தூத்துக்குடியில் அரசாங்கத் தரப்பிற்கு எதிராக சாட்சி சொன்னதற்காக ஒருவர் கொலை செய்யப்பட்டதையும் என்னால் சான்றுகளாகக் கூற முடியும். விருதுநகரையடுத்த ஆமத்தூர் என்ற கிராமத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் உயர்ஜாதி மக்கள் வாழும் பகுதியில் வீடு வாங்கினார் என்பதற் காக, லாக்-அப்பில் வைக்கப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்டிருக் கிறார். இது போன்ற நிகழ்ச்சிகள் பல தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் பேசிய கூட்டங்களில் நடந்த ரகளையைப்பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். திண்டுக்கல்லில் டிக்கட் வசூல் செய்து மாநாடு நடந்துகொண்டிருந்த இடத்தில் குழப்பம் விளை வித்தார்கள். அந்தக் குழப்பத்தை, அந்த ரகளையை, அந்த வன் முறைச் செயலைத் தடுப்பதை விட்டு, "கூட்டத்தைச் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்" என்று போலீஸ் அதிகாரிகள் அறி வுரை கூறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் பல தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. திருநெல் வேலியில் மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினார். அவர் கார் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களுக்காக காங்கிரஸ்காரர்கள் பழிவாங்கப்படும் செயல் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. வன் முறைச் செயல்களை எதிர்த்துப் போராட, சமாளிக்க நாங்கள் தெளிவாகவும் துணிவாகவும் இருக்கிறோம். இது போன்ற அராஜகங்களைக் கண்டு நாங்கள் மனம் கலங்க மாட்டோம். ரத்தம் சொட்டச் சொட்ட அடித்த நேரத்திலேகூட, கொள்கையில் உறுதியாக நின்று, பிடித்த கொடியை நழுவ விடாதிருந்த குமரன் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். படை பலம் இன்றி, பண பலம் இன்றி, ஆள் பலம் இன்றி, மனப் பலம் ஒன்றையே வைத்துக்கொண்டு, "சூரியன் எங்கள் சாம் ராஜ்யத்தில் ஒருபொழுதும் மறைவதில்லை" என்று சொன்ன ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாங்கள் பெருத்த வெற்றி கண்டிருக்கிறோம் ஆனால் இதுபோன்ற வன்முறைச் செயல் தொடர்ந்து நடைபெறுமானால், சமூக விரோத சக்திகளை அரசாங்கம் ஏடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், அரசாங்கத் தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை தளரும் என்பதை



1968 பிப்ரவரி 14] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் தினசரி நிர்வாகங்களிலும் பல இடங்களில் தலையிட் டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அரசாங்கம் தலையிடுவதாகச் சொல்கிறார்கள். அரசாங்கம் என்பதே நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்குத்தான்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அமைச்சர் அவர்கள் திருத்தி யமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு தவறாகத் தலையிடுகிறது. அண்மையில் நமது சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் விருதுநகருக்கு அருகிலுள்ள தாலுக்கப்பட்டியில் சட்டத்தை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டு, அரசாங்கம் தலையிட்டதன் பேரில் அவர் மீதுள்ள வழக்கைத் திரும்பப் பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நண்பர் அவர்கள் குறிப்பாகச் சொன்னதனால் இதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் சட்டத்தை மீறியதாகக் கைது செய்யப்பட்டார். பொதுவாக ஒருவர் வழக்குப் போடும் போது முதலில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்கிறார்கள். பிறகு சார்ஜ் ஷீட் போடுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு போட்ட வழக்கைத் திரும்பப் பெறும் உரிமை சட்டத்திலே இருக்கிறது. வழக்கு போட்டவரையும், வழக்குக்கு உள்ளானவரையும் அழைத்துப் பேசி, இருவரும் சமாதானமாகப் போகிறோம் என்று சொல்லும் நேரத்தில், மேற்கொண்டு வழக்குத் தொடராமல் மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். சட்டப்படி அவருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிச் செய்யும்போது தனிப்பட்ட கட்சிக்கோ, தனிப்பட்ட நபருக்கோ சாதகமாகச் செய்தால், சட்ட நிர்வாகத்திற்கு முரணாகச் செய்தால் அது தவறு. இருசாராரையும் அழைத்துப் பேசி, சமாதானம் செய்து பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால், அவர்களிடத்தில் ஒப்புதல் பெற்றுக்கொண்டு வழக்கைத் திரும்பப் பெறலாம். அம்முறையிலேயே சட்டமன்ற உறுப்பினர் விவகாரமும் நடந்திருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR: Is it on the motion of the District Collector that the case was withdrawn or on the application of the individuals concerned?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறதென்று முன்பு கூறியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது அவருடைய விருப்பம். நாங்கள் பின்பற்றிவரும் கொள்கை என்னவென்றால், இரண்டு தரப்பாரையும் அழைத்துப் பேசி, அவர்களுக்குள்ளே இருக்கிற பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, உடன்பாடு செய்துகொள்ள முயற்சிகள் எடுத்துக் கொள்வதுதான்.

THIRU R. PONNAPPA NADAR : May I take it that the management initiated the proceedings for the withdrawal of the case?

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** அவர் என்ன கேட்கிறார் என்று புரியவில்லை. இரண்டு தரப்பாரையும் அழைத்துப் பேசி, பிரச்சினைகளைத் தீர்த்து ஒப்புதல் கண்டபிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் வழக்கைத் திரும்பப் பெறுகிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : My question is : Is it the management that presented the petition and initiated the proceedings for the withdrawal of the case?

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** இக் கேள்விக்கே இடம் இல்லை. இரண்டு பேரையுமே அழைத்து சர்க்கார் தரப்பில் பேசப்படுகிறது. பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இரண்டு பேரும் சமாதானத்திற்கு வருகிறார்கள். அதன்பேரில் வழக்கு வாபஸ் பெறப்படுகிறது.

***திரு. என். எஸ். வி. சித்தன்:*** தலைவர் அவர்களே, ஜனவரி என்று சொன்னாலே வரியை நினைவுபடுத்துவதுபோல 1968-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து வெல்லம், சர்க்கரைமீது வரி போட்டு இருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு மாதத்திலே பட்ஜட் வரவிருக்கிறது. இதற்கிடையிலே இப்பொருள்களின் மீது வரி போட வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது? வெல்லமும் சர்க்கரையும் அன்றாடம் ஏழை மக்களால் உபயோகிக்கப்படுகிற பொருள்கள். இந்த வரியினால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்த வரியை அரசு ரத்து செய்ய வேண்டுமென்று பரிவோடும் கனிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த ஆண்டு மழை இல்லாததால், தமிழகத்தின் மூன்றில் ஒரு பகுதி பஞ்சப் பகுதியாக இருக்கின்றது. இதை 'பஞ்சப் பகுதி' என்று அறிவித்து அங்குள்ள விவசாயிகளுக்கு வரி வஜா செய்துகொடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்துடன் உறவை ஏற்படுத்தி, Famine Relief Act மூலம் தக்க உதவிகளைக் கோர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இந்த ஆண்டு பஞ்சம் நிலவுகிறது. ஆகவே, அங்கும் வரி வஜா செய்து கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுத்துள்ள கடன்களை இப்போது வசூலிக்காமல், கடன் வசூல் செய்வதை ஒத்திப்போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, எல்லாக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, அங்குள்ள விவசாய மக்களுக்கும் பொதுமக்களுக்கும் உணவுத் தானியங்கள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல இடங்களில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு பொருத்துமாறு கோரி மாதங்கள் பல ஆகியும் இன்னும் வேலைகள் நடைபெறவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையில் மின்சார கம்பங்கள் நடுபவர்கள் ஒரு துறையினராகவும், மின் கம்பிகள் பொருத்துபவர்கள்,





மின் இணைப்பு தருபவர்கள் வேறு துறையினராகவும் இருப்பதால் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு தருவதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த இரு வேலைகளைச் செய்பவர்களையும் ஒரே துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்தில் கனரகத் தொழில்கள் ஒன்றும் அரசாங்கத் துறையில் இல்லை. இருக்கக்கூடிய ஒன்றிரண்டு நிறுவனங்களும் தனியார் துறையில்தான் இருக்கின்றன. ஆகவே, அரசுத் துறையில் கனரகத் தொழில் நிறுவனம் ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருமங்கலத்தில் உள்ள மாவட்ட முன்சீப் கோர்ட் அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும். அந்த இடத்தில் அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களும் நான்கைந்து மாதங்களுக்கு முன்னால் அவ்விடத்தை வந்து பார்த்தார். ஆகவே, மாவட்ட முன்சீப் கோர்ட் அலுவலகம் வேறு இடத்திற்கு விரைவில் மாற்றப்பட வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச எனக்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவாக்குகிறேன்.

***திரு. செஞ்சி. வெ. முனுசாமி :*** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களின் பேருரையின்மீது நடக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு, நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை வழங்கலாம் என்றிருக்கிறேன். கவர்னர் அவர்கள் தங்களுடைய உரையின் துவக்கத்திலேயே, இந்தியத் துணைக் கண்டத்திலே மற்ற மாநிலங்களில் ஏற்படுகின்ற கொந்தளிப்பையும், சூழ்நிலைகளையும் விளக்கி, தமிழகத்தில் நிலையான முறையில் அரசு நடைபெறுகிறது என்பதை—தாய் தன்னுடைய குழந்தையை மடியிலே வைத்துக் கொண்டு தட்டிக் கொடுத்து பூரிப்படைகிற வகையில்—பாராட்டியிருப்பது கண்டு உண்மையிலேயே அனைவரும் பெருமிதமடைகிறோம். அரசியல் வட்டார சூழ்நிலை நன்றாக அமைந்துள்ளது.

அடுத்தபடியாக, இன்றைக்கு நடைபெறுவது தமிழர் ஆட்சி, தமிழருக்காக இருக்கின்ற ஆட்சி, தமிழ் உணர்வுடன் இருக்கின்ற ஆட்சி என்று கவர்னர் அவர்கள் மொழிக் கொள்கையைப்பற்றித் திட்டவட்டமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் மேடைகளிலும், முச்சந்திகளிலும் தமிழ், தமிழ் என்று பேசலாமே தவிர, உண்மையில் இவர்களுடைய மொழிக் கொள்கை என்னவென்று கேட்டால், திட்டவட்டமாகக் கூறமாட்டார்கள். இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே, தமிழக அரசின் மொழிக் கொள்கை இதுதான் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள். தமிழகத்தில் தமிழும் ஆங்கிலமும்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்படுகிறவரையில் இணைப்பு மொழிகளாக இருக்கும் என்று

அறிவித்துவிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மொழிக் கொள்கையைப்பற்றி ஒன்றும் தெளிவாக பேசவில்லை. இப்பொழுது கேட்கிறேன். 'எது உங்களுடைய கொள்கை?' நாங்கள் கூறுவதெல்லாம், 'எந்த மொழியும் எந்த மொழியின் மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. இந்தி இங்கே நுழைந்தால் அதை எதிர்த்து நிற்போம். இங்கே தமிழும் ஆங்கிலமுமே இணைப்பு மொழிகளாக இருக்கும்' என்பதே ஆகும். உங்களுடைய கொள்கைகள் என்ன என்பதை வெளியிலே சொல்லுவதைவிட, இங்கே சட்ட மன்றத்திலே அறுதியிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே தமிழ் வந்தால் ஆங்கிலத்தின் தரம் குறைந்து கெட்டுவிடுமே என்று கூறிவருகிறார்கள். நம்முடைய கவர்னர் அவர்கள் தம் உரையில் 4-வது பாராவில் மிக அழுத்தமாக, "எந்த வகையிலும் ஆங்கிலத்தின் தரத்தைக் குறைத்து விட மாட்டோம். தமிழ், ஆங்கிலம் இரண்டையும் பள்ளிகளில் சொல்லித் தருவோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மொழிக் கொள்கையைத் திட்டவட்டமாக அறுதியிட்டுச் சொல்லியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். முந்தைய அரசு, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே திரை போட்டு இருந்தார்கள். அந்தத் திரை இப்போது அகற்றப் பட்டு இருக்கிறது. 'இதுதான் சென்னை மாநில அரசின் கொள்கை' என்று கவர்னர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக் கிறார்கள். தமிழ் உணர்வு, தமிழர் தன்மானம் போன்றவற்றை நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு யாரும் தடையாக இருக்க மாட்டார்கள். அகில இந்திய ரீதியில் கட்சியை வைத்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே, மேலிருந்து தாக்கீது வரும் என்று
பி.ப. பயப்படலாம். அந்தப் பயம்தான் அவர்களுக்கு முட்டுக்கட்டை
1-00 யாக இருக்கிறது. இன்றைய தினம் இருக்கிற அரசியல் சட்டம் நிச்சயமாக மாற்றப்படவேண்டும். திருத்தம் செய்யப்பட வேண்டும். அப்படி ஒன்றும் திருத்தப்பட முடியாதது என்று சொல்வதற்கில்லை. காலுக்குத் தகுந்த செருப்பே தவிர, முப்பது வருடத்திற்கு முன்னால் போட்டுக் கொண்ட செருப்பைத்தான் இன்றைக்கும் போட்டுக் கொள்ளவேண்டுமென்றால் செருப்பு காலைக் கடிக்கும். கால் வீங்கத்தான் செய்யும். 1945-இல் இருந்த சட்டங்கள் இப்போது இல்லை. உண்மையில் பதினைந்து வருடங் களுக்கு முன்னால் இருந்த இந்து திருமண சட்டமே வேறு. இன் றைக்குள்ள சட்டமே வேறு. அன்றைக்கு இருந்த சட்டங்கள் தான் இன்றைக்கும் இருக்கின்றன என்று கூற முடியாது. அன்றைக்கு அம்பேத்கார் போன்றவர்களால் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டமேதான் இன்றைக்கும் இருக்கிறது என்று சொல்ல முடியாது. இருபத்தோரு தடவைகள் அதைத் திருத்தியிருக்கிறார்கள். கடந்த 1967 ஏப்ரலிலே கூட திருத்தப் பட்டிருக்கிறது. திருத்தப்படாத புனித சட்டம் என்று சொல்ல முடியாதபோது மொழிப் பிரச்னை விஷயத்திலும் அதைத் திருத்துவதனால் ஒன்றும் கெடுதல் வந்துவிடப்போவதில்லை.





மாநில அரசுகளை அடிமைப்படுத்தவேண்டும், வடவரின் ஆதிக்கம் நிறுவப்படவேண்டும் என்பதற்காக இந்தியைத் திணிப்பதை ஒருநாளும் தமிழகம் ஏற்காது.

ஆளுநர் அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டம் எந்த எந்த வகையில் திருத்தப்படவேண்டும் என்று தெளிவாகக் குறிப் பிட்டிருக்கிறார்கள். பாரா பாராவாக எடுத்துக்கொண்டால் 3, 5, 7, 13, 17 என்கிற பாராக்களைப் பார்க்கிறபோது, ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, அரசியல் அமைப்புச் சட்டம் புனர் ஆய்வுக்கு விடப்பட்டாகவேண்டும். ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்ல முடியும். இருந்தும் நேரம் இல்லாத காரணத்தினால் அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாகச் சொல்ல விரும்புகிறேன். மூன்று பாராவில் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் 14 மொழிகள் அல்ல, இந்தியையும் சேர்த்து 15 மொழிகள் தேசிய மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த 15 மொழிகளிலும் நிர்வாகம் நடைபெறவேண்டும். அது வரை ஆங்கிலமே தொடர்ந்து நிர்வாக மொழியாக இருந்தாக வேண்டும் என்பதை வற்புறுத்தியிருக்கிறார்கள். இதற்கான திருத்தம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்தாக வேண்டும்.

அடுத்து, ஐந்தாவது பிரிவுக்கு வருகிறோம். மத்திய அரசு வழங்கும் விருப்பக் கடன்களும் மானியங்களும் என்கிற பிரிவு. பெயரே டிஸ்க்ரிஷனரி லோன்ஸ் அண்டு கிராண்ட்ஸ்--விரும்பினால் கொடுக்கலாம், விரும்பாவிட்டால் இல்லை என்று சொல்லலாம். அதுதான் இப்போது நடந்து வருகிறது. இப்படி விருப்பத் திற்கு கொடுப்பது, மறுப்பது என்கிற முறை மாறவேண்டும். அந்த அந்த ராஜ்யங்களுக்குள்ளது நியாயமான அடிப்படையில் கொடுக்கப்பட்டாக வேண்டும். டெல்லியில் உள்ளவர்களுக்கு—அவர்களது ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு--கொடுப் பது, அதை மறுத்தால் அவர்களது உதவியையும் மறுப்பது என்கிற அதிகாரம் அங்கே இருக்கக் கூடாது. இதைக்கொண்டு அவர்கள் எப்படி காங்கிரஸ் அல்லாத ஆட்சியைக் கவிழ்க்க வழி செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அது போல இந்த ஆட்சியையும் கவிழ்த்துவிடலாம் என்று நினைத் தால் அதுவெறும் கதை, நிச்சயமாக நடைபெறாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி டெல்லி சர்க்கார் அதிகாரங்களை எல்லாம் தங்கள் கையில் குவித்து வைத்துக்கொண்டிருக்கிற நிலை மாறவேண்டும்.

நண்பர் திரு. மார்டின் அவர்கள் பொருளாதாரத் தத்துவத்தை எடுத்துச் சொல்லும்போது வருவாய் பெருகப்பெருக இந்த கடன், மானியத் தொகைகளும் பெருகவேண்டும் என்று சொன்னார்கள். இதுவரை அப்படி வளர்ந்து வந்திருக்கலாம். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்திருக்கிறது. அதுவும் தமிழகத் திற்கு மிகமிகக் குறைந்திருக்கிறது.

அடுத்து, 20 கோடி ரூபாய்த் திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் வைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கேரளாவுக்கு அரிசி அனுப்பச் சொன்னால் அனுப்பவேண்டும், மைசூருக்கு

அனுப்பச் சொன்னால் அனுப்பவேண்டும். அதுதான் ஒருமைப்பாடு என்று சொல்கிறோம். ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய சர்க்காரிடம் எங்களுக்கு 20 கோடி ரூபாய் கொடுங்கள், இங்கே இருந்து அரிசி ஏற்றுமதி செய்யத்தக்க அளவுக்கு விளைவைப் பெருக்கிக்காட்டுகிறோம் என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மத்தியில் இருக்கிறவர்கள் காதில் இது விழவில்லை. கேட்டும் கேளாதவர்கள் போல் இருக்கிறார்கள். மறுக்கிறார்கள் . . . (மணியடிக்கப்பட்டது)

* **திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, அவர்களின் பேருரையின் மீது எனது சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று முன் நிற்கிறேன். அந்த அறிக்கையில் பல நல்ல அம்சங்கள் இருந்தபோதிலும், மக்கள் இன்று எதிர்பார்த்திருக்கக் கூடிய நிலைமையோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது அந்த அறிக்கையில் சிலவற்றை எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இருக்கிறது. முக்கியமாக உணவு உற்பத்தி ஒரு பக்கம் பெருகியிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இந்த ஆண்டு பருவ மழை தவறியதன் காரணமாக எல்லா மாவட்டங்களிலும் ஓரளவு விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் மேலூர் தாலூக்கா, திண்டுக்கல் தாலூக்கா, மதுரை தாலூக்கா இவைகளில் பல கிராமங்கள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா பூமி வைத்திருப்பவர்களுக்கு இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய இன்னும் தொடர்ந்து இரண்டாண்டுகள் ஆகும். அவ்வளவு சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், இந்த அரசு அவர்களுக்கு தக்க நிவாரணம் அளிக்கும் என்று எதிர்பார்த்து பல மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் சரி, மாவட்ட கலெக்டர்களுக்கும் சரி, அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக இந்த அரசு அவர்களுக்கு இந்த ஆண்டு கடன் நிவாரணம் அளிக்க வேண்டும். அதோடு அடுத்த ஆண்டுக்கு கடன் வழங்கக்கூடிய ஏற்பாட்டையும் செய்தாக வேண்டும். அதோடு, விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் அந்தப் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தானியங்கள் கிடைக்கச் செய்ய நிவாரணக் கடைகளை அங்கெல்லாம் ஏற்படுத்தியாகவேண்டும் என்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதுதான் நில அபிவிருத்தி வரி வசூலிக்கக்கூடிய சமயம். ஆகையால் அபிவிருத்தி வரியையும் நிறுத்தி வைக்க வேண்டும். இதுபற்றி மதுரை மாவட்ட கலெக்டரிடமும் கூறியிருக்கிறேன். மாவட்ட கலெக்டர் அவர்கள் தம் அதிகாரத்திற்கு உட்பட்டதைச் செய்வதாகவும், எங்களது மனுக்களை அரசுக்கு அனுப்பி வைப்பதாகவும் சொன்னார்கள். இந்த அரசு அதைக் கவனித்து விவசாய மக்களுக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விளைச்சல் இல்லாது பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு கண்மாய் வெட்டுதல், ரோடு போடுவது போன்ற வேலைகளை எடுத்து நடத்தி





வேலை வாய்ப்பை அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சாகுபடியாளர்களுடைய நிலைமையும் கவனிக்கப்படவேண்டும். ஏற்கனவே நிலச் சுவான்தார்கள் 60, 40 வாரம் கொடுக்காமலே ஏய்த்துக்கொண்டு வருகிறார்கள். இன்றைய தினம் விளைச்சல் இல்லாத காரணத்தினால் குத்தகை அளக்கவில்லை என்ற காரணம் காட்டி அவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றும் முயற்சி எடுக்கப்படுகிறது. மேலும் நிலச் சுவான்தார்கள் தங்களுக்குச் சாதகமாக அதிகாரிகளையும், போலீஸ்காரர்களையும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த அரசு சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டும். மேலும் நியாய வாரச் சட்டம், வருகிற 1968 ஏப்ரல் மாதத்தோடு முடியும் நிலை இருக்கிறது. அந்தச் சட்டத்தையும் நீடிக்க வேண்டுமென்று இந்தச் சபையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று இருக்கக் கூடிய சட்டங்கள் நல்ல முறையில் இல்லை என்று ஒரு வருஷமாகவே சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே அரசு நல்ல முறையில் சட்டங்களைத் திருத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, இன்றைக்கு உணவுப் பொருள்கள் விளையாத பகுதிகளில் இருக்கின்ற மக்கள், நகரப் புறங்களில் இருக்கின்ற மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், இவ்வாண்டு விளையாததால் அடுத்த ஆண்டில் என்ன நெருக்கடி ஏற்படுமோ என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கு, வெளி மார்க்கட்டிலே இரண்டு ரூபாய்வரையில் இன்று அரிசிவிலை இருக்கிறது என்றாலும் அடுத்த ஆண்டில் 3 ரூபாய் 4 ரூபாய் என்று வந்துவிடுமோ என்ற ஐயப்பாடு வந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய 6 அவுன்ஸ் அரிசியை 12 அல்லது 10 அல்லது 12 அவுன்ஸ் என்ற அளவுக்குப் போட்டால், அதை இப்போது ஏற்பட்டிருக்கிறது.. மக்களிடத்தில் பணம் சுருங்கி விட்டது—வாங்கும் சக்தி குறைந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே அவர்கள் வெளி மார்க்கட்டிலே இரண்டு ரூபாய்க்கு அரிசி வாங்கக்கூடிய நிலைமையே சமாளிக்க முடியாதது. ஆகவே 10 அல்லது 12 அவுன்ஸ் என்ற அளவுக்குப் போட்டால், அதை வைத்துக்கொண்டு ஐந்தாறு நாட்களுக்குச் சமாளித்துக் கொள்ளலாம். வெளியிலே மீதியுள்ள நாட்களுக்காக வாங்க வேண்டிய அரிசியின் அளவு குறைந்துவிடும். ஆகவே அதிகப்படியாக அரிசி கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

ஆளுநர் அவர்களுடைய அறிக்கையிலே 8.5 லட்சம் டன் கொள்முதல் செய்திருப்பதாக விவரம் கொடுத்திருக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டே 10 அல்லது 12 அவுன்ஸ் கொடுத்துவிட முடியாது. ஆகவே மூன்று ஏக்கர் வரையிலும் வைத்திருக்கக் கூடிய விவசாயிகளை விட்டுவிட்டு, மூன்று முதல் 10 ஏக்கர் வரையில் வைத்திருக்கிறவர்களிடம் லெவி சிஸ்டத்தில் கொள்முதல் செய்தும், 10 ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடியவர்களிடத்தில் உபரியாக உள்ள முழுவதையும் கொள்முதல் செய்யும் முயற்சிகள் மேற்

கொள்ள ஆரம்பித்தால்தான் 15 லட்சம் டன் வரை கொள்முதல் செய்ய முடியும். அப்படிச் செய்வதற்கு முன்வந்தால் நாங்கள் முழு ஆதரவையும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாதிரி கொள்முதல் செய்தால் 12 அவுன்ஸ் அரிசி கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அதைத்தான் இன்று மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டிய கடமையும் நமக்கு அவசியமாகிறது. நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பேசியிருக்கிறோம், காங்கிரஸ் அரசு கொண்டுவந்த உச்சவரமபுச் சட்டம் மோசடியானது என்று. உச்ச வரம்புச் சட்டத்திலே விதிவிலக்கு அளித்து அதன்மூலம் மாடு மேய்க்கும் தரிசு, புஞ்சைத் தரிசு, பழத் தோட்டங்கள், எலுமிச்சைத் தோட்டங்கள், புஷ்பத் தோட்டங்கள், மேய்ச்சல் தரிசு இவற்றிற்காகவும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விளைக்கக்கூடிய நிலைமையைச் செய்துள்ளார்கள். உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்திலே அந்த நிலங்களையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். இதைப்பற்றி அரசு கவலையுடன் யோசித்து உச்சவரம்புச் சட்டத்தின் விதிகளை மாற்றியமைத்து விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஏற்ற முறையில் ஒரு நல்ல சட்டமாகக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, இந்த அறிக்கையில் கைத்தறித் தொழிலாளர்கள் பற்றிய விஷயம் விட்டுப்போய் இருக்கிறது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன். இன்று தமிழகத்தில் 5 லட்சம் தறிகள் உள்ளன; 30 லட்சம் நெசவாளர்கள் இருக்கின்றனர். குறிப்பாக தளவாய்புரம், பரமக்குடி இந்த இடங்களிலே உள்ள தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு பட்டினியால் வாடுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் துணி ஸ்டாக் தேங்கிவிட்டது. விற்பனையாகவில்லை. அவர்கள் தங்கள் தங்கள் ஊர்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பரமக்குடி பகுதியில் உள்ள மக்களின் நிலைமையை கவலையோடு அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நிவாரணக் கடன் கொடுத்தும், அரிசியின் அளவை அதிகமாகக் கொடுத்தும் உதவி செய்ய உடனடியாக அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி யடிக்கப்பட்டது.)

* திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்களின் உரையின்மேல் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் ''முந்திய திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாமல் இருந்தமைதான் இன்றைய நமது





பொருளாதாரச் சீர்கேடுகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம்' என்று மொட்டையாகச் சொல்லியிருப்பது கண்டிக்கத் தக்கது. முந்தைய அரசு என்ன என்ன வழிகளில் எல்லாம் திட்டமிட்டுச் செயல்பட்டதோ அந்த அடிப்படையில்தான் இந்த அரசு இன்றைக்கு உற்பத்தியைப் பெருக்க மேற்கொண்டு செய்ய முடிகிறது. குறிப்பாக ஆடுதுறை 27 திட்டத்தை அதிகப்படியாக தஞ்சை மாவட்டத்திலே ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி விளைச்சலை அதிகப்படுத்த ஏற்பாடு செய்தார்கள். எந்தத் திட்டமும் இயற்கை முரணாக இருந்தால் வெற்றி தராது. வேளாண்மையைப் பெருக்குவதற்கு புதிய கிணறுகள் தோண்டுவதற்கும் எண்ணெய்ப் பொறிகளையும் விசையேற்றங்களையும் நிறுவுவதற்கும் கடன் கொடுக்கப் போவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் புதிய கிணறுகள் வெட்டுவதற்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. முதல் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது தவணை கொடுக்கப்படவில்லை. கிணறுகள் வெட்டப்பட்டு ஆறு மாத காலமாகியும் இரண்டாம் தவணை கொடுக்கப்படவில்லை. உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் உபரி நிதிகளைக்கொண்டு டிராக்டர்கள், ஏனைய வேளாண்மைக் கருவிகள் இவற்றை வழங்குவதற்கு முயற்சி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் ஏ.பி.சி.டி. என்று நான்கு பிரிவுகளாக இருக்கின்றன. ஏ.பி. பிரிவுகளில்தான் உபரி நிதி அதிகமாக இருக்கமுடியுமே தவிர சி.டி. பிரிவுகளில் இருக்கமுடியாது. ஏனென்றால் ஏ.பி. பிரிவுகளில் நஞ்சை நிலங்கள் உள்ளன. சி.டி. பிரிவுகளில் புஞ்சை நிலங்களைத்தான் சேர்த்திருக்கிறார்கள். டிராக்டர்கள் பொதுவாக சி.டி. பிரிவுகளுக்குத்தான் தேவையாக இருக்கும். ஆகவே சி.டி. பிரிவுகளில் உள்ளவர்கள் டிராக்டர்கள் வாங்குவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் கடன் வசதி அளிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் வேளாண்மை மானியத்திலிருந்து வாங்க வழி வகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு படியரிசித் திட்டம். இது நல்ல திட்டம் தான். ஆனால் ஒரு படி அரிசியை கோயம்பத்தூர், சென்னை மக்களுக்குப் போட்டுவிட்டால் போதாது. எல்லோருக்கும் போடவேண்டும் என்பது தான் எங்கள் கட்சியின் கோரிக்கை. ஒரு படியரிசித் திட்டத்தைப்பற்றி ஆளுநர் அவர்கள் தம்முடைய அறிக்கையில் 'படி அரிசித் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு ஓர் அருட் கொடையாக இருந்து வந்துள்ளது' என்று இருக்கிறது. ஏழை எளிய மக்கள் சென்னையிலும் கோவையிலும் மட்டும்தானா இருக்கிறார்கள்? மற்ற ஊர்களிலே இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். உங்களுடைய அருட்கொடை எல்லா இடங்களிலும் இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1966-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 7.26 டன் உணவுத் தானியங்களை கொள் முதல் செய்ததற்கு மாறாக 1967-ஆம் ஆண்டில் 8.5 டன் கொள்

முதல் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். 1966-ஆம் ஆண்டில் 7.26 டன் கொள்முதல் செய்யப்பட்டாலும்கூட தமிழகத்தின் எல்லா இடங்களிலும் உணவு விநியோகம் நன்றாக இருந்தது. ஆனால் இப்பொழுது 8.5 டன் கொள்முதல் செய்திருந்தாலும் கூட குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில், வறண்ட பிரதேசங்களில் உணவுப் பங்கீடு சரிவரக் கொடுக்கப்படவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சங்கரன்கோவில், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் கரிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி இருந்தும் கூட, அரசாங்கத்தின் கவனத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கும் பல தடவை கொண்டு வந்தும் கூட, ஏன் உணவுப் பங்கீட்டு முறை இதுவரை கொண்டு வரப்படவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. முன்னால் பேசிய அங்கத்தினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் கூறியது போல் மூன்று போகம் பயிராகக்கூடிய தாம்பிரபரணி பாசனத்தில் ஓராண்டுக் காலமாக உணவுப் பங்கீடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பாரபட்சம் ஏன் காட்டவேண்டும்?

மாவட்டத்திற்குள்ளே அரிசி, நெல் கொண்டு போகக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ராதாபுரம் உப வட்டத்திற்கு ஒரு பக்கத்தில் இருந்தும் அரிசி வரமுடியாத நிலை இருப்பதால் மக்கள் அவதிப்படுகிறார்கள்; பஞ்சத்தால் வேதனைப்படுகிறார்கள். ராதாபுரம் உப வட்டத்தைப் பொருத்தவரை வரிவஜா செய்ய இந்த அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். பருவ மழை தவறியதன் காரணமாக, புதுக் கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் கொடுக்கப்பட்ட கடன் தொகைகளை இப்போது வசூலிக்காமல் பின்பு செலுத்த இந்த அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அத்துடன் புதுக் கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் கடன் கொடுப்பதோடு பஞ்ச நிவாரண வேலைகள் செய்யவேண்டும்.

உலகத் தமிழ் மாநாடு சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அது தமிழர்கள் அனைவருடைய மகிழ்ச்சிக்கும் உரிய விஷயம். இந்த மாநாடானது அரசாங்கமும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் நடத்திய மாநாடு என்று சொன்னார்கள். மிகவும் மகிழ்ச்சி. அந்த மாநாட்டுக்காக அரசாங்க ஊழியர்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டார்கள். அதற்காகச் செய்த நிதி வசூலைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் காவல் துறை ( Police ) மூலமாக நிதி வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் தமிழ் மாநாட்டுக்காக எல்லோரும் நிதி அளிக்கத் தயாராக இருந்தும் கூட நன்கொடைக்காகக் கொடுக்கப்பட்ட சீட்டுகளின் மதிப்பைப் பார்க்கும்போது ரூ. 250, ரூ. 500, ரூ. 1,000 என்ற அளவில் நன்கொடை வசூலிக்கப்பட்டது. என்ன அங்கு எல்லாம் பணக்காரர்களா இருக்கிறார்கள்? வட்டார ஆட்சித் தலைவர், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள்





நிதி வசூலித்தார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் 25 ரூபாய், 50 ரூபாய் என்று வசூலித்து மொத்தமாக 250, 500 1,000 ரூபாய்க்குச் சீட்டுக் கொடுக்கப்பட்டது. இந்த கணக்கு எப்படி இருக்கும் என்பதை அரசு நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். யாராவது 250 ரூபாய், 500 ரூபாய் என்று கொடுத்திருந்தாலும் கூட அவர்களுக்கு அழைப்புக் கூட அனுப்பவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பொதுப் பணித் துறைக் கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல திட்டங்கள் பற்றி அந்தக் கருத்தரங்கிலே எடுத்துச் சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றையெல்லாம் சீக்கிரத்திலே முடித்துத் தருவதாகக் கூறினார்கள். என்னுடைய தொகுதியில் பணகுடி மலையில் ஆலத்துறையாறு திட்டத்தை இந்த ஆண்டு மார்ச் முடிவுக்குள் அரசு அனுமதி வழங்கி வேலையை நடத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இதுவரை அதுபற்றி ஏதும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. கருத்தரங்கில் எடுத்த முயற்சி வெற்றி பெற வேண்டுமென்றால் கருத்தரங்கிலே சொல்லப்பட்ட கருத்துக்களை நன்றாக கவனித்து என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சிந்தித்து இந்த வரவு-செலவுத் தொடருக்குள்ளாகத் தெரிவித்தால் நலமாக இருக்கும். ஆலத்துறையாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மானாவாரி குளங்களில் 60 நாட்களுக்குத் தண்ணீர் இருந்து அந்தப் பகுதி நிலங்களில் பயிர்கள் விளைந்தாலும் சரி, கரிவு ஏற்பட்டாலும் சரி, இப்போது வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே, கரிவு ஏற்பட்டுவிட்டால் எப்படி தீர்வை செலுத்த முடியும்? இதை அரசு சிந்தித்துப் பார்த்து எப்படி இருந்தாலும் வரி கட்ட வேண்டுமென்று இல்லாது தீய்வு ஏற்பட்ட நிலங்களுக்கு வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீரணிப் படையைப் பற்றி ஒரு கருத்து. எங்கள் மாவட்டத்தைப் பொருத்தவரை சீரணிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அனுதாபிகளையும், அங்கத்தினர்களையுந்தான் சேர்க்க வேண்டுமென்று சூசகமாகச் சொல்லப்பட்டு அந்த முறையில் சேர்க்கப்பட்டு அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டுக்காக அனுப்பப்பட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எல்லாக் கட்சிக்காரர்களும் கட்சிசார்பற்ற முறையில் சீரணிப் படையில் உறுப்பினர்களாக ஆகலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலுள்ள காங்கிரஸ் இதைச் செங்காவல் படை என்று கூறிவிட்ட காரணத்தால் யாரும் இதிலே சேர வேண்டாம் என்று சூசகமாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் உறுப்பினர்களாக ஆகாமல் இருக்கின்ற குற்றம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்ததுதான். அவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டுவது முறையல்ல.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்** : அப்படி காங்கிரஸ் கட்சியி லுள்ளவர்கள் விண்ணப்பம் செய்தும் கூட அதிகார பூர்வமாக அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : யார் யார் உறுப்பினராக வேண்டுமென்று விண்ணப்பம் அனுப்பினார்கள், எது எது நிராகரிக்கப்பட்டது என்பதைத் தயவு செய்து அவர்கள் பட்டியல் தருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்** : அடுத்த தடவை வரும்போது பட்டியல் தருகிறேன். சீரணிப் படைக்குச் சீருடை வழங்க வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 50 பேருக்கு சீருடை வழங்க வேண்டு மென்று உத்தரவிட்டு, பஞ்சாயத்து யூனியன் ஆணையர் தெருத் தெருவாக பிச்சை எடுத்து 50 பேருக்குச் சீருடை கொடுத்திருக் கிறார்கள். மாவட்ட அளவில் இது போன்ற காரியங்கள் நடக் கின்றன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே தொழில் அபிவிருத்தி பற்றி ஒன்றும் சொல்லப்படாதது வருந்தத்தக்க விஷயம். நாட்டில் தொழில் அபிவிருத்தி அதிகமாகப் பெருக வேண்டும். குறிப்பாக, விவசாயக் கருவிகள் செய்வதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். தற்போது உலகவர்த்தகக் கண்காட்சி நடை பெறுகிறது. அங்கு பல நாடுகளில் இருந்து கொண்டுவரப் பட்டிருக்கிற விவசாயக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை நமது நாட்டுக்கும் உகந்தவைகளாக இருப்பதால் மாண்பு மிகு தொழில் அமைச்சரவர்களும், தொழில் துறை அதிகாரிகளும் அதைக் கண்ணுற்று அப்பேர்ப்பட்ட கருவிகளை நம்முடைய நாட்டிலேயே செய்ய வழி செய்தால் விவசாய அபிவிருத்திக்கு வழி கோலுவதாக இருக்குமென்று கூறி அதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(திரு. வி. எஸ். கோவிந்தராசன் தலைமை)

* **திரு. எம். சி. பாலன்**: தலைவர் அவர்களே, கவர்னர் பெரு மானார் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து ஒரு சில வார்த்தைகள் பேச சந்தர்ப்பம் தந்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். குமரி மாவட்டத்தில் பஸ் போக்குவரத்துகளில் 100-க்கு 90 பங்கு தீவிரமாக தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. புதிய தடங்களிலும் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. தனியார் பஸ் துறையில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 35 டிரைவர்களையும், 35 கண்டக்டர்களையும் அரசாங்க பஸ் துறையில் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றுக் காக நான் அமைச்சர் அவர்களையும், அமைச்சரவையையும் மனமாரப் பாராட்டுகிறேன்.



அருமை நண்பர் ஜார்ஜ் அவர்கள் பேசிய நேரத்தில் இரண்டு பெரிய குற்றச் சாட்டுகளைத் தமிழக அரசுக்கு எதிராகத் தெரிவித் தார்கள். ஒன்று, குமரி மாவட்டத்திலே ரேஷன் ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லை என்பது. பொதுவாக, குமரி மாவட் டத்தில் உள்ள 80,000 ஏக்கர் நிலங்களில் இரண்டு போகமும் கிருஷி செய்யப்படுகிறது. பத்து லட்சம் மக்கள் வாழ்கின்ற 600 சதுர மைல் பரப்புள்ள இந்த மாவட்டத்தில் இவ்வளவு நிலங்களில் கிருஷி செய்தும் அது போதாது என்று சொல்லி குமரி மாவட்டத்தில் உள்ள எல்லோருக்கும் குடும்பக் கார்டு இருக்கிற நிலையில் தஞ்சை மாவட்டத்திலிருந்து 30,000 டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் ரேஷன் கடைகளில் போய்ப் பார்த்தால் அரிசி அரிசி யாக இல்லாமல் கட்டி கட்டியாக இருந்தது எல்லோருக்கும் தெரியும். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஓட்டு கேட்கப் போகும் போது நாற்றமடிக்கும் அரிசியை அள்ளி அள்ளிக் காட்டினார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இப்போது புழுத்த நெல் கொடுக்கப்பட்டது தங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா?

**திரு. எம். சி. பாலன்** : அதைப் பற்றியும் பேச இருக்கிறேன். அன்று பெரிய கட்டி கட்டியாக, புழு நெளிந்த அரிசி கொடுக்கப் பட்டது. எந்தப் பகுதியில் ரேஷன் கடை இருக்கிறது என்பதை அந்த நெருங்குவதற்குள்ளாகவே தெரிந்து விடக்கூடிய அளவுக்கு அரிசி மோசமாக, நாற்றமாக இருந்தது. அன்று தனி நபர் ஒருவருக்கு ஆயிரம் கிராம் அரிசிதான் தரப்பட்டு வந்தது. இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு விளவங்கோடு தாலுகாவில் 1,400 கிராம் அரிசி கொடுக்கப்படு கிறது. நாகர்கோயில், தக்கலை, குளச்சல் ஆகிய மூன்று நகர சபைப் பகுதிகளிலும் 1,200 கிராம் அரிசி கொடுக்கப்படுகிறது. கடலோரப் பகுதிகளில் வாழுகிற மீனவர்களுக்கும் மலையடிவாரத் தில் வாழ்கின்ற மக்களுக்கும் 1,200 கிராம் அரிசி போடப்பட்டு வருகிறது.

இப்படி 30,000 டன் நெல் குமரி மாவட்டத்திற்கு ஆறு மாதங் களுக்கு தரப்படுகிறது. அதில் சென்ற வருடம் திருத்துறைப் பூண்டியில் மில் அதிபர்கள் நெல் கொள்முதல் செய்யும் பொறுப் பைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்--அதோடு அங்கு பெரு மழை யும் ஏற்பட்டிருந்தது—சில மூட்டைகள் முளைத்திருந்ததை இல்லை என்று சொல்லவில்லை. நானும் திரு. ஜேம்ஸ் அவர்களும் சென்று பார்த்தோம். பத்தாயிரம் மூட்டைகளில் இரண்டு மூட்டைகளில் தான் முளைத்திருந்தது. காங்கிரஸ் தலைவர்கள் 57 கிலோ இருப்ப தற்குப் பதிலாக 17 கிலோ தான் இருக்கிறது என்று பெரிய பெரிய அறிக்கைகளை எல்லாம் தந்தார்கள். நானே சென்று பார்த்தேன், 10,000 மூட்டைகளில் இரண்டு மூட்டைகளில்தான் முளைத் திருந்தது. அதற்குக் காரணம் திருத்துறைப்பூண்டியிலிருந்து

1968 பிப்ரவரி 14]   [திரு. எம். சி. பாலன்]

கொள்முதல் செய்யப்பட்டு ரயிலில் ஏற்றி திருநெல்வேலியில் இறக்கி நாகர்கோவிலில் உணவு தானியக் கிட்டங்கியில் மூன்று மாதங்கள் வைக்கப்பட்டு பிறகுதான் விநியோகிக்கிறோம். மழை காலத்தில் கொள்முதல் செய்யப்பட்டதாலும், அங்கு சரியான காய்வு இல்லாததினாலும் சில மூட்டைகளில் எடை குறைவாக இருந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு பகுதிகளில் 128 பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்கள் வழியாகவும், கிட்டத்தட்ட 40 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் வழியாகவும், நூற்றுக்கு மேற்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் வழியாகவும் ஆக 450 கூட்டுறவுச் சங்கங்கள் வழி வந்த அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. அந்த 450 கூட்டுறவுச் சங்கங்கள்---அவர்கள் மனதில் கை வைத்துச் சொல்லும்படிக் கேட்டுக் கொள்கிறேன்---99 சதவிகிதம் காங்கிரஸ்காரர்களிடம் இருக்கின்றன. இவை அனைத்தும் காங்கிரஸ் காரியாலயமாகக் காட்சி தருகின்றன. அவர்கள் ஒரு மூட்டையில் 75 கிலோ இருக்கவேண்டியதில் இரண்டு மூன்று கிலோ குறைவாக இருந்தாலும் என்ன செய்கிறார்கள் என்றால் ஒரு யூனிட்டுக்கு 50 அல்லது 100 கிராம் குறைத்துக் கொடுக்கிறார்கள்.

THIRU V. GEORGE rose.

THIRU M C. BALAN: I am not yielding,

இப்படி ஒவ்வொரு சொஸைட்டியிலும் இரண்டு அல்லது மூன்று மூட்டை அரிசியை மிச்சப்படுத்தி அந்த அரிசியை கேரளாவிற்கு மறைமுகமாக அனுப்பி வருகிறார்களென்பதை நான் பல முறை பல சந்தர்ப்பங்களில் என் மாவட்டத்திலுள்ள எல்லா மக்களிடமும் அரசுக்கும் தெரிவித்திருக்கிறேன். இப்படி அவர்கள் அரிசியை கேரளாவிற்கு அனுப்பும் நோக்கம் ஒன்று லாபம் பெறவேண்டுமென்பது. மற்றொன்று இந்த சர்க்காரின் பேரில் மாசு கற்பிக்க வேண்டுமென்பது. லாப நோக்குடன் அரிசியை பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக கேரளாவிற்கு அனுப்புகிறார்கள். பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் எதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்கவேண்டும். அங்குள்ள ஏழை பனை மரத் தொழிலாளிகளுக்கு கடன் தருவதற்காகத்தான்; அந்தக் கடனை கருப்புக்கட்டியாக திரும்பப் பெறவேண்டும், பனம் நும்பு உற்பத்தி செய்யவேண்டுமென்றுதான் அவை ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அவர்களுக்கு வேண்டிய அவ் வசதிகளைச் செய்யாமல் இவர்கள் அரிசிக் கடைகள் வைத்துக்கொண்டு நடத்தி வருகிறார்கள் என்பதை. வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். குமரி மாவட்டத்தில் விளையக்கூடிய நெல்லும், தஞ்சையிலிருந்து வருகிற 30,000 டன் நெல்லும் குமரி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு தாராளமாக போதுமானதாகும். ஆனால் அங்கிருந்து நெல்லையும் அரிசியையும் பல வகைகளில் கேரளாவிற்கு அனுப்பி விடுகிறார்கள். ஆகவே அங்குள்ள எம்.எல்.ஏ.-க்கள், மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் மக்களிடம் சொல்லி தயவுசெய்து



1968 பிப்ரவரி 14]  [திரு. எம். சி. பாலன்]

நெல்லையும் அரிசியையும் கேரளாவிற்கு அனுப்பாதீர்கள் என்று அளவிற்கு பிரசாரம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அங்குள்ள மக்கள் நான்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வாங்காமல் செய்ய முடியும். குமரி மாவட்டத்திலுள்ள மக்கள் வயலில் அறுத்தவுடன் முழுமையும் கேரளாவிற்கு அனுப்பவேண்டுமென்று குறிக்கோள் இருந்தால் நான்கு அல்ல பத்து ரூபாய் வரை அரிசியின் விலை போகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குக் காரணம் இந்த அரசாங்கம் அல்ல. இதற்கு முன்னால் இருந்த சர்க்கார் ஆட்சியில் ஆறு ரூபாய்க்குக்கூட அரிசியின் விலை வந்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்களின் கட்சிக்காரராகிய ராஜகோபால் அவர்கள் மார்த்தாண்டத்தில் நடத்துகிற மொத்த டிப்போவிலிருந்து ஒழுங்காக தானியம் விநியோகம் செய்து தூக்கிக் கொடுக்கிறார்களா என்பதை அருள்கூர்ந்து விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். சி. பாலன்:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களே ஒரு நாள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்கள், ராஜகோபால் அவர்கள் மட்டும் கொடுக்கும் அரிசியும் நெல்லும் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதற்குக் காரணம் என்னவென்றால் சர்க்காரிலிருந்து அவர்களுக்கு நன்கு நிறுத்துத் தருகிறார்கள் என்றும் ஆனால் பாக்கியுள்ள காங்கிரஸ் ஹோல் சேலர்க்கு அப்படி நிறுத்துத் தருவதில்லை என்றும் தெரிவித்தார்கள். இதிலிருந்து காங்கிரஸ் மொத்த வியாபாரிகளின் மோசடி நமக்குப் புரிகிறது. வேர்ஹௌசிங் கார்ப்பரேஷனில் இருந்து அரிசியை அல்லது நெல்லை எடுக்கும்போது நன்கு நிறுத்துப் பார்க்காமல் கிடைத்ததை எடுத்துக்கொண்டு போகிறார்கள், தாங்களும் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்குக் கீழுள்ள சொஸைடி நடத்துகிற காங்கிரஸ்காரர்கள் படுமோசடி செய்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவேதான் எடை குறைகிறது. இதை திரு. ஜார்ஜ் மறுக்கிறாரா? அடுத்தபடியாக, அங்கு ஒரு விவசாயக் கருத்தரங்கு நடைபெற்றது. பம்ப் வைத்து தண்ணீர் அடித்து விவசாயம் செய்வதுபற்றி பேசப்பட்டது. அங்கு வந்திருந்த அமைச்சர் அவர்கள் கருத்தரங்கு முடிந்த பிறகு சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கு வந்த பிறகு அவர்களோ அல்லது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களோ அதைப் பற்றிக் கவனிக்கவில்லை என்று சொன்னார்கள். நானும், திரு. சிதம்பரநாதன் அவர்களும் அதில் கலந்து கொண்டோம். வேறு எந்த எம்.எல்.ஏ.-யும் அந்த கருத்தரங்கில் கலந்துகொள்ளவில்லை. திரு. ஜார்ஜ் அவர்கள் விவசாயத்தில் அக்கறை உள்ளவர்கள் என்றிருந்தாலும் அவர்களும் அந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவில்லை. அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தவுடன் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி அவர்கள் மறுநாளே சிப் என்ஜினியர் அவர்களை குமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அங்குள்ள

[1968 பிப்ரவரி 14

**திரு. எம். சி. பாலன் :** அதேபோல் தம்பத்து கோணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 4 பேர் காங்கிரஸ்காரர்களை கோடரியால் வெட்டிவிட்டார்கள், கேஸ் இல்லாமல் போய் விட்டது என்றார்கள். இரண்டு கூட்டத்தினர் மோதியிருக்கி றார்கள். ஆனால் அவர்கள் எந்தக் கட்சியும் கிடையாது. ஒருவர் கத்தியால் குத்தினார், ஒருவர் கோடரியினால் வெட்டினார். முறையே இ.பி.கோ. 324, 326-இல் வழக்கு தொடர்ந்தார்கள். எனவே நண்பர் சிதம்பர நாடார் அவர்கள் இப்படிப் பேசுவது அவரது வயதுக்கும், அனுபவத்துக்கும் உகந்தது அல்ல. தெங்கம் பூர் பகுதியில் காங்கிரஸ்காரரை அடித்ததாகவும், அடித்தவர் தி.மு.க.-வையும் சேர்ந்தவர்கள் என்றார். இரண்டு பேருமே எனக்குத் தேர்தலில் வேலை செய்தவர்கள். தனிப்பட்ட சண்டை: வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நண்பர் சிதம்பரநாத நாடார் அவர்களுக்கு தினமும் பத்து முறையாவது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகாமல் உறக்கம் வராது. அவருக்குப் போலீஸுக்குப் போவதே 'புரொஃபஷன்'. அவர்க போலீஸ் ஸ்டேஷன் வக்கீலாகப் பணியாற்றுகிறார். நண்பர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஏ.ஈ.-ஆக இருந்தபொழுது என்னுடன் தங்கினார்கள். உடனே அவரை மாற்றினார்கள். இருபது ஆண்டு காலமாக கலெக்டர், டெபுடி ஆர்.டி.ஓ. அவரை வீட்டிலே போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காட்டு ராஜா வாக அவர் வாழ்ந்த வாழ்க்கை என்ன? இப்பொழுது யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை. அதனால் ஆத்திரப்படுகிறார் ஆவேசப் படுகிறார். அதனால் இப்படிப் பேசுகிறார்கள். அவருடைய டாக்டர் கூட வாத நோய் காரணமாக இப்படிப் பேசுகிறார் என்று சொன்னார். அந்த நோய் காரணமாக இப்படி பேசியிருக்கிறார் களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவரை பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர் களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு கவர்னர் பெருமான் அவர் களுடைய உரை மீது என்னுடைய கட்சி சம்பந்தப்பட்ட கருத்துக்களைத் தெளிவாகக் கூற வேண்டுமென்று விரும்பு கிறேன். நம்முடைய ஆளுநர் அவர்களுடைய அறிக்கையைப் பற்றி கடந்த நேரத்திலே இந்த மன்றத்திலே வெகு அழகாகச் சித்தரித்தும், அதைத் திருத்தியும், அதைப் புறக்கணித்தும் பல நண்பர்கள் பேசினார்கள்.

இந்த அறிக்கையைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே நடந்த விஷயங்களைப்பற்றியும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் விஷயங்களைப்பற்றியும் சற்றுத் தெளிவாக அதிலே எழுதப் பட்டிருக்கிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் விவசாயத்திற்கு எவ்வளவோ முக்கியத்துவம் கொடுத்து அதை நல்ல முறையிலே அபிவிருத்தி செய்து வந்திருக்கிறார்கள், ஏ.டி.டி. 27 என்ற நெல் பழமையான நெல்லாக இருந்தாலும்



1968 பிப்ரவரி 14] [திரு. கே. பி. எஸ். மணி]

அதற்குப் புத்துயிர் அளித்து அதை நல்ல முறையிலே செய்து அபிவிருத்தியைக் கண்டு இருக்கிறார்கள் என்பது தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் வெகு அழகாக அவைகளை முறைப்படுத்தி நடத்த வழிதொகைகள் ஏற்படுத்தப் படவிருக்கிறது, முயல்கிறது, முயலவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இறுதியாக நீர்ப்பாசனத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நீர்ப்பாசனத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது, கடற்கரையோரங்களிலே உள்ள பிரதேசங் களில் உள்ள ஆற்றுப்பாசன நீர் கடலிலே போய் விழாமல் வழி தொகைகள் செய்யலாம். தஞ்சை ஜில்லாவில் ஒரு பகுதியிலே வளமும், மற்றொரு பகுதியிலே வாட்சியும் இருக்கிறது. பட்டுக் கோட்டை, அறந்தாங்கி, ஒரத்தநாடு வளமான பிரதேசமாகக் காணப்படவில்லை. அந்த இடங்களிலே தண்ணீரை பம்புசெட்டு மூலமாகச் செலுத்தி அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இந்த ஒரு திட்டம் மிகச் சிறந்த திட்டமாகக் கருதப்பட்ட போதிலும் அது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விஷயங்களைப் பற்றி கவர்னர் பெருமான் உரையிலே காணப்படுகிறதே தவிர நடைபெறப் போகின்ற விஷயங்களைப்பற்றி ஒன்றும் புதியதாகக் காணப்படவில்லை.

இந்த உரையின்படி இருக்கின்ற விஷயங்களை முறைப்படி எடுத்துக் கொண்டால் நம்முடைய தாய்மொழிக்கு முதலிடம் கொடுத்து இருக்கிறார்கள். கவர்னர் பெருமான் அவர்கள் தமிழில் வெகு அழகாகப் பேசினார்கள் என்று சொன்னார்கள். அது எனக்கு வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருக்கிறது. அவர் எப்படித் தமிழ்மொழியில் பேசினார்? எப்படி ரோமன் உருது பேசப்படுகிறதோ அப்படி ரோமன் தமிழில் இரண்டொரு குறளைச் சொன்னார். உண்மையிலே தமிழ் படித்துப் பேசவில்லை. இது மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்துவிட்டதாக ஆக முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கவர்னர் அவர்களுடைய உணர்ச்சியைத்தான் பாராட்ட வேண்டுமே தவிர அவர் தமிழைச் சரியாகப் படிக்கவில்லை என்று கூறுவது நல்ல மரபு அல்ல.

**திரு. கே. பி. எஸ். மணி :** தமிழ்மொழிக்கு உண்மையிலேயே ஆக்கம் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிற நாம் திட்டவட்ட மாக ஒரு முடிவுக்கு வர வேண்டும். வெள்ளைக்காரர்கள் சாம்ராஜ்யத்திலே வெள்ளைக்காரர்கள் ஆங்கிலத்தை தேசத்திலே நுழைத்து ஆட்சிமொழியாக்கிவிட்டார்கள், அதன் பலனாக பெரிய உத்தியோகங்களிலே ஆங்கிலம் படித்தவர்கள்தான் வரமுடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக டிஸ்டிரிக்ட் கலெக்டர்கள் போன்ற பதவிகளில் வெள்ளைக்காரர்களையே வைத் திருந்தார்கள். அந்த முறையைத்தான் இந்தியும் பின்பற்றி ஆதிக்கம் செலுத்த முயல்கிறது. மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர் களும் இதை உணராமல் இல்லை, உணர்கிறார்கள். ஆனால் எப்படி ஒப்புக்கொள்வது என்று நினைக்கிறார்கள். வெள்ளைக்காரர்கள்

இந்த தேசத்தைவிட்டுச் சென்ற பிறகும் 15, 20 வருஷங்கள் ஆகி விட்டன நாம் அவர்கள் விட்ட இடத்தைப் பிடிப்பதற்கு. அவர்கள் விட்டுப்போன செக்ரட்டேயட்டில் உள்ள மேலான இடங்கள், கலெக்டர் பதவிகள், இன்னும் இரயில்வே டிபார்ட்மெண்டில் டிரைவர் பதவியைக்கூட நாம் பிடிப்பதற்கு 15 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இன்னும் கூட சில இடங்களில், வட இந்தியாவிலே அவர்கள் மேல் நிலையிலே இருக்கிறார்கள். அப்படி இந்தி தேசப் பொதுமொழியாக்கப்பட்டால், அதைத் தாய் மொழியாகக் கொண்ட வட இந்தியர்கள் முதலிலே அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வார்கள். நாமும் அதைச் சிறுகச் சிறுகப் படித்து அந்த இடத்தைப் பிடித்துக்கொள்ளலாம், அந்த அறிவு நமக்கு இருக்கிறது என்றாலும் கூட, அவர்கள் பிடித்துக் கொண்ட இடங்களை மறுபடியும் நாம் பிடிப்பது என்பது முடியாத காரியம். காரணம் அவர்கள் பாரம்பரியத்திலேயே அதைக் கொண்டு வந்து விடுவார்கள். ஆகவே இதற்கு ஒரு வரையறை செய்து கொள்ள வேண்டும். இப்படி ஒரே கொள்கையிலே இப்பொழுது மூன்று கட்சிகள் உள்ளன. ஒன்று ஒரு மொழிக் கொள்கையைப் பரப்புகின்ற கட்சிகள். மற்றொன்று இரண்டு மொழிக் கொள்கையைப் பரப்புகின்ற கட்சிகள். இன்னொன்று மூன்று மொழிக் கொள்கையைப் பரப்புகின்ற கட்சிகள். இப்படி மூன்று கட்சிகளாகப் பிரிந்து பிரிந்து விட்டன. இந்த முறையிலே நாம் எடுத்துக் கொண்டிருக்கிற இந்த ஒரு மொழிக் கொள்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிற நிலையிலே பெரும்பாலானவர்கள் வட இந்திய இராஜ்யங்களில் இருக்கிறதனால் இந்த மொழிப் பிரச்சினையை ஒரு சுமுகமான முறையிலே தீர்த்துக்கொள்ள முடியும் என்று என்னால் கருத முடியவில்லை. நாங்கள் கருதவில்லை. இதற்குக் காரணம் அடிப்படையிலேயே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மறைந்த உலகச் சமாதானத்தின் மாதா என்று சொல்லப்பட்ட நேருஜி அவர்கள் காலத்திலேயே அவர்களாலேயே இந்தியாவை ஒன்றாக கட்டி ஆள முடியாது என்பதை உணர்ந்து விட்டார்கள். இதற்கு உதாரணமாக நான் ஒன்று சொல்ல வேண்டுமானால் 1946-லே அங்கே மகாராஷ்டிரா ரெஜிமெண்ட்ஸ், அதாவது 'மேகா ரெஜிமெண்ட்ஸ்' என்று ஒரு 'ரெஜிமெண்ட்' இருந்தது. இந்த 'மேகா ரெஜிமெண்ட்' முற்றிலும் அங்கு இருக்கிற மகாராஷ்டிர தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டது. அந்த ரெஜிமெண்டிலே தான் பாபாஜி, டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய தந்தையார் சுபேதாராக இருந்தார். அந்த ரெஜிமெண்ட் தான் இவர்கள் ஆட்சிக் காலத்திலே முதன் முதலாகக் கலைக்கப்பட்டது. அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஹிந்தி வெறியர்களுடைய ஆளுகையிலிருந்து மகாராஷ்டிர வெறியர்கள் பிரிந்து விடுவார்கள் என்று. ஆகவே தான் அதை முதலில் கலைத்து விட்டார்கள். மகாராஷ்டிர மக்களைக் கொண்ட தனி ஒரு ஆர்மி ஃபோர்ஸ் இருந்தால் அவர்கள் பிரிந்து விடுவார்கள் என்று உணர்ந்ததனால் தான் அவர்கள் அதைக் கலைத்து விட்டார்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு கான்ஸ்டிட்டியூஷன்-லே முதல் திருத்தம் கொடுத்தது, ஜெனரல்களுக்கு பதவியிலே எந்த சக்தியும் இருக்கக் கூடாது என்பது. அப்





பொழுது ஜெனரல்களுக்கு அதிக சக்தி இருந்தது. ஆகாயப் படையும், கப்பற் படையும், தரைப் படையும் ஒரே ஜெனரல் கையிலே தான் இருந்தது. அந்த ஜெனரல் கையிலே எல்லா சக்தியும் இருந்தால், அவர்களைக் கட்டிக் காப்பது முடியாது. எதைக் காக்க முயன்று நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார்களோ அந்தத் திரை கிழிக்கப்பட்டு, ஒரு காலத்திலே மக்கள் உணர்ந்து கொள்ளுவதற்கு வாய்ப்பு வரும் என்ற அந்தக் காரணத்தாலேயேயும் அவர்கள் தனித்தனி ஜெனரல்களை வைத்துக் கொண்டு தனித்தனி மக்களைக் கொண்ட ஃபோர்ஸ்களை அமைத்துக்கொண்டு இவர்களே எல்லா பொறுப்புகளையும் வைத்துக் கொள்ளுவார்கள். ஆகவே, முதலில் இந்த ஜெனரலுக்கு எந்தவித சக்தியும் இல்லாதபடி செய்ய வேண்டுமென்ற காரணத்தால், முதல் திருத்தத்தையே இந்த ஜெனரல் கையில் இருக்கிற சக்தியை வாங்க வேண்டுமென்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு தான் இப்பொழுது இருக்கிறபடி நிலப்படைக்கு ஒரு தனி ஜெனரல், நீர்ப்படைக்கு ஒரு ஜெனரல், ஆகாயப்படைக்கு ஒரு ஜெனரல் என்று தனித்தனியாக ஜெனரல் பதவியைப் பிரித்தார்கள். ஆகவே . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: தங்களுடைய மொழிக் கொள்கையையும் தயவு செய்து விளக்க வேண்டுமென்று பொதுவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி**: நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். கல்வி மானியம் வரும்போது விளக்குகிறேன்.

படைப் பிரிவினை எப்பொழுதும் வரும் என்று எதிர்பார்த்துத் தான் முன் கூட்டியே அவர்கள் செய்து வைத்தார்கள். ஆக, இப்போது நாம் ஏதோ பிரிவினை கேட்கிறோம், அதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னால் அது சபைக்கு உதவாத பழைய விஷயம். அதற்கு ஏதோ ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தினோம். அதைக் கொண்டு பயங்கரப்படுத்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். மழை வரும்போதுதான் வெள்ளம் வரும். மழை வராதபோது வெள்ளம் வராது. ஆகவே, மக்கள் உணரும்போது தான் அவர்களுடைய உரிமையைப் பற்றி எண்ணுகிறார்கள். ஜனநாயக முறை என்று வந்த பிறகு அடங்கியிருந்த மக்கள் ஒடுங்கி இருந்த மக்கள் தங்கள் நிலைகளைப் பற்றி எண்ணுகிற பொழுது தான் தங்கள் தங்கள் இடத்திற்குப் போக வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். இப்படி முயற்சி செய்வதைத் தடுப்பது தவறு என்று உணர்ந்த அண்ணல் அம்பேத்கார் அவர்கள் மாநில குடியாட்சியைக் கொடுத்து விடுங்கள், நீங்கள் அடக்கிக் கட்டிக் காக்க முடியாது என்று அன்றே சொல்லிவிட்டார்கள். யாரும் சொல்லுவதற்கு முன்னாலே அம்பேத்கார் அவர்களே முதலிலே சொல்லி விட்டார்கள். ஆனால் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி ஏற்றுக்கொள்ளாததால் தான் இப்படிப்பட்ட நிலை வந்தது. இவர்கள் எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் நாங்கள் உலகத்தைக் கட்டிக் காப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் முடிவு கண்ட பிரச்சினையைப் பற்றி ஒன்றாவது சொல்ல முடியுமா? காஷ்மீர்

பிரச்சினையில் முடிவு கண்டீர்களா? அல்லது மொழிப் பிரச்சினையில் முடிவு கண்டீர்களா? அல்லது அந்நிய நாட்டு உறவுப் பிரச்சினையில் முடிவு கண்டீர்களா? எதற்குமே முடிவு காணாத நிலையிலே மதிப்பிற்குரிய நேருஜி அவர்களே மறைந்து விட்டார்கள். மீதி இருக்கிறவர்கள் பிரச்சினையை வைத்துக் கொண்டு இந்த மக்களுடைய மத்தியிலே தீர்வு காணாத நிலையிலே இருந்து வருகிறார்கள். மொழிப் பிரச்சினை காரணமாக ஏதேதோ புரிந்துவிட முயற்சிக்கிறார்கள். இப்படி அவர்கள் சட்டத்தைப் போட்டு பயமுறுத்துவது என்பதும் முடியாது. அதற்கு நாம் பயந்து கொண்டிருப்பது என்பதும் முடியாது. ஆனால் அதைத் தான் காங்கிரஸ் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே ஏதாவது ஒரு முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும். அப்படி இல்லை யென்று சொன்னால் நிச்சயமாக நாம் நம்முடைய பின் சந்ததியார்கள் அவர்களுக்கு அடிமையாகக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியவர்களாவோம்—அந்த நிலை வந்துவிடும் என்று இந்த மன்றத்திற்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயப் பண்ணை சம்பந்தப்பட்ட மட்டிலே பம்ப் செட்ஸ் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே ஒரு தீர்வு காண வேண்டும். இந்த ஆண்டு எந்தெந்த இடங்களிலே பம்ப் செட் தேவை என்பதைத் தெரிந்து உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டும். 1969-லே யாரும் பம்ப் செட் கேட்கக் கூடாது. அந்த முறையில் முறைப்படுத்திச் செய்ய வேண்டும். ஏதோ ஒரு 10 இடங்களிலே பம்ப் செட் போட்டு விட்டால் போதுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். கடந்த சாம்ராஜ்யத்திலேகூட மாடு கொடுப்பதாகச் சொன்னார்கள். ஹரிஜனங்களுக்கு மாடுகள் கொடுக்கிறோம் என்று சொல்லி ஒரு கிராமத்திற்கு 2 ஜோடி அல்லது 4 ஜோடி மாடுகள் கொடுத்தார்கள். அந்த 2 ஜோடி அல்லது 4 ஜோடி மாட்டை வைத்து உழ முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்வார்கள். அப்படிச் சொல்லுகிற நிலையிலே நாம் பம்ப் செட் கொடுக்கிறோம் என்று சொல்லி ஒரு கிராமத்திற்கு 10 பம்ப் செட் கொடுத்து, அதிலே 4-க்கு மின்சார கனெக்ஷன் கொடுத்து, அதிலே இரண்டு வேலை செய்து, ஒன்றுக்கு கரெண்ட் கிடைக்காமல், மற்றொன்று ரிப்பேராகிவிட்டது என்று சொன்னால் நம்முடைய திட்டங்கள் எல்லாம் நிறைவேறா என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இருக்கிற மற்ற செலவினங்களை ஒதுக்கி வைத்து விட்டு, இரண்டு பாலங்கள் கட்டுவதை ஒதுக்கி வைத்துவிட்டு, வேறு வகையான அவசரம் இல்லாத காரியத்தை ஒதுக்கி வைத்துவிட்டு இந்தக் காரியங்களுக்கு ஏதாவது வழிவகை செய்ய ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த விவசாய அபிவிருத்தித் திட்டத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டு வர முடியும்.

இன்னும் ஒரு வருத்தமான செய்தி கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே நாம் காண்பது, விவசாயத்தை அபிவிருத்தி





செய்ய வேண்டும், பம்ப் செட் போட வேண்டுமென்று தான் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, அதற்காக உழைக்கிற உழைப்பாளிகள் பாட்டாளிகள் அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லப்படாமல் இருப்பது. இது மிகுந்த வருந்தத்தக்க விஷயம். உழைக்கிறவர்கள், பாட்டாளிகள், ஆயிரக்கணக்கான லட்சக் கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல் நீங்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியுமா? இப்பொழுது மன்னார்குடியிலேகூட ஒருவர் சுடப்பட்டுச் செத்தார். ஏன்? அறுவடைக் கூலித் தகராறு. அவர்களுக்குக் குறைந்த பட்ச கூலியையாவது நிர்ணயிக்க வேண்டாமா? விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக இப்பொழுது அதிகமாக இருக்கிற அளவின்படி ஆதி திராவிட மக்கள் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி ஒரு வார்த்தை கூட கிடையாது. இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையிலே மூன்றிலே ஒரு பங்கு நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கு ஏதாவது ஒரு சலுகை உண்டா? அவர்கள் காட்டிய வழியிலே தான் நீங்களும் நடக்கிறீர்கள். எப்படி ஆமாம் ஆமாம் என்று சொல்லிக்கொண்டே இருக்க முடியும்? கேட்கக் கேட்க, கொடுப்பார்கள் கொடுப்பார்கள் என்று கேட்டுக் கொண்டே தான் இருக்க வேண்டுமா? நாங்களும் ஒரு முடிவுக்கு வந்து விட வேண்டிய காலம் வந்து விடும். அந்த அளவிலே எங்களுடைய வாழ்க்கை பிந்திக் கிடக்கிறது. விவசாய வாழ்க்கையிலே பின் தங்கி இருக்கிறோம். வாழ்க்கையிலே பின் தங்கி இருக்கிறோம். அரசியல் வாழ்க்கையிலே அடிமைகளாக வாழ்கிறோம். நாங்கள் எப்படி முன்னேற முடியும்? மிகப் பெரிய அகில மகா சபை எங்களை வைத்துக் கொண்டே தான் ஆண்டது. அதே நிலை தான் இன்றும் நீடிக்கிறது. ஆகவே தயவு செய்து இதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இந்த மாநிலத்திலே வாழக் கூடிய மூன்றில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லப் படவில்லை. அவர்களுடைய கல்வி உயர வேண்டுமென்று, பொருளாதாரம் உயர வேண்டுமென்று, தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று இன்னும் எத்தனையோ சொல்வேன். இன்னும் ஒன்று இந்த அரசாங்கத்திற்குச் சொல்வேன். எது எப்படி இருந்தாலும் எந்தத் திட்டத்தை நீங்கள் போட்டாலும் இந்தத் தீண்டாமையை ஒழிக்காத வரையில் நீங்கள் எந்தத் திட்டத்திலும் வெற்றி பெற முடியாது. காரணம் உழுகிறவர்கள் நாங்கள், உழைப்பவர்கள் நாங்கள். வாழ்வெல்லாம் அவதிப்படுபவர்கள் நாங்கள்.

ஹரிஜன நல இலாகாவை எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்காரால் நடத்தப்படுகிற ஹாஸ்டலிலே தங்கியிருக்கிற ஹரிஜன மாணவனுக்கு ரூ. 40 அளிக்கப்படுகிறது. அதே நேரத்திலே பக்கத்திலே இருக்கிற சர்க்கார் பாடசாலை ஹாஸ்டலிலே தங்கி இருக்கிற மாணவனுக்கு கொடுக்கிற பணம் ரூ. 70. உழைப்பவனுடைய மகன் சாப்பிடுவது ரூ. 40-க்கு. உண்டு களித்திருப்ப

வனுடைய மகன் சாப்பிடுவது ரூ. 70-க்கு. அவர்கள் தான் 19 வருஷம் இப்படி எங்களை வைத்திருந்தார்கள். உங்கள் காலத்திலாவது எங்களுக்கு ஒரு விடுதலைக் கொடுக்கக் கூடாதா?

போலீஸ் இலாகாவை எடுத்துக்கொண்டாலும், நாங்கள் அதில் அதிகமாக சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த நாட்டை அன்னியன் ஆண்ட காலத்தில் மிகப் பெரிய ரெஜிமெண்டு எங்க
பி பகல் 2-00 ளுடையதுதான். பங்களூரில் 'ஸாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்' என்று கேள்விப்பட்டிருக்கலாம். 1946-ம் ஆண்டில் மதிப்பிற்குரிய முதலியார் அவர்கள் உலக மகாநாட்டில், அமெரிக்காவில் நடந்த மகாநாட்டில், எங்களுடையதுதான் பெரிய உயர்ந்த சேனையாக இருந்தது என்று சொல்லியிருக்கிறார். ரஷ்யாவிலுள்ள ரெட் ஆர்மியைக் காட்டிலும் மிக உயர்ந்தது . . . (மணி அடிக்கப் பட்டது).

பிற் பகல் 2-01 **மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்):** இத்துடன் பேரவையின் கூட்டம் நாளைக் காலை 9 மணி வரையில் தள்ளி வைக்கப்படுகிறது. மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

### 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*—Nil.

B. *Reports, Notifications and other papers.*

5. Report and Proceedings of the Select Committee on the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 18 of 1967).

## தமிழக சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1968 பிப்ரவரி 15.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று நிமிடங்கள் பின்தங்கி வந்தமைக்கு பேரவையினர் என்னை மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*State Transport Buses*

*1 *S.N.Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government is aware that in some of the Government buses the State Emblem is not painted; and

(*b*) the details of the buses in various routes in Madras City not having such emblems?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) பேருந்துகளில் அரசாங்க இலச்சினையை பொறிப்பதற்கான இலச்சினைப் பாளங்கள் இராத காரணத்தினால் 40 பேருந்துகள் அரசாங்க இலச்சினையின்றி ஓடிக்கொண்டிருந்தன. இப்பாளங்கள் இப்பொழுது பெறப்பட்டுள்ளபடியால் பெரும்பான்மையான பேருந்துகளில் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பேருந்துகளிலும் இலச்சினை விரைவில் பொறிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இம்மாதிரி இலச்சினை பொறிக்கப்படாத பேருந்துகள் எத்தனை ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சென்னை நகரில் 40 வண்டிகளும், வெளியூர்களில் ஓடும் சாதாரண வண்டிகளில் 9-ம், விரைவு வண்டிகளில் 3-ம் ஆக 52 பேருந்துகள் ஓடுகின்றன.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** அரசாங்க இலச்சினை பொறிக்கப்படாமல் ஓடுவது தேசவிரோதமான செய்கையென்று பேசப்படுகிறதே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எத்தனையோ விஷயங்கள் அப்படிப் பேசப்படலாம். ஆனால், இந்த அரசு அரசாங்க சின்னங்களையோ, தேசிய சின்னங்களையோ என்றைக்கும் அவமதிக்கவில்லை. தேசிய கீதத்திற்குக்கூட அவமதிப்பு தெரிவிப்பது அல்ல. ஆனால் அப்படிப் பேசப்படுவது எல்லாம் உண்மை அல்ல.

[1968 பிப்ரவரி 15

**திரு. கே. வினாயகம் :** நமது அரசாங்க பேருந்துகளில் பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கின்ற சொற்கள் எல்லாம் தமிழ் மொழியிலே இருக்கின்றன. குறிப்பாக 'குறிப்பிட்ட சில்லரை தரவேண்டும்', 'இங்கே பீடி, சிகரெட் பிடிக்கக்கூடாது', 'பெண்கள் உட்காரும் இடம்' என்றெல்லாம் இருக்கின்றன. இதெல்லாம் தமிழிலே இருப்பதினாலே, தமிழ் தெரியாதவர்கள் நம் நாட்டுக்கு வரும்பொழுது, அவர்கள் பஸ்ஸிலே செல்லும்போது, சரியான இடத்தில் உட்கார முடிவதில்லை. அவர்களுக்கெல்லாம் வசதியாக இருக்கும் பொருட்டு ஆங்கிலத்திலே இவற்றை எழுதுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இம்மாதிரி சிறிய விஷயங்கள்—அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி சில்லறை விஷயங்கள்—எல்லாம் ஆங்கிலத்திலே எழுதப்படவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் பதில் அளித்ததில் இருந்து கேள்வி கேட்கிறேன். தமிழக அரசு போக்குவரத்து என்ற சொற்றொடரிலே பிழையிருக்கிறது என்று சொல்லப்பட்ட நேரத்தில் அமைச்சர் அவர்கள் அரசாங்க இலச்சினை இடையில் வருகின்ற காரணத்தால் அது பிழையில்லை என்று சொன்னார்கள். இந்த அரசாங்க இலச்சினையை மேலே பொறித்துவிட்டு தமிழக அரசு போக்குவரத்து என்பதை பிழையில்லாமல் கீழே எழுதுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்பே கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு நீண்டதொரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். இலக்கணப்படி இது தவறு அல்ல.

**திரு. கே. வினாயகம் :** இவைகள் எல்லாம் சில்லறை விஷயங்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழிலே 'பெண்கள் மட்டும்' என்று எழுதிபோட்டிருப்பதால் தமிழ் தெரியாத வடக்கத்திய ஆண்கள், பெண்கள் உட்காருகிற இடத்தில் உட்கார்ந்ததால் பேச்சு முற்றி, கண்டக்டருடன் சண்டையிடும் நிலைமையேற்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போகக்கூடிய அளவிற்கு 'எனக்குத் தமிழ் தெரியாது ஆங்கிலம்தான் தெரியும், ஆகவே நான் உட்கார்ந்தேன்' என்று எல்லாம் தாராறு செய்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதை நிவர்த்தி செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களா ? அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள் என்று தட்டிக்கழிக்க முயற்சிக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி இலச்சினையைப் பொறுத்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் மொழிப் பிரச்சினைக்குச் சென்றிருக்கிறார்கள். அரசாங்க பஸ்களில் மாத்திரம் அல்லாமல் மற்ற பஸ்களிலும் இருக்கிற கண்டக்டர்கள் யார் யார் எங்கெங்கே உட்காரவேண்டுமென்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலமும் தெரியாமல் தமிழ் மொழியும் தெரியாதவர்களாக இருந்து இந்தி மட்டும் தெரிந்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு இந்தியில் எழுதவேண்டியிருக்கும். அப்படிப்பட்ட சங்கடங்களைச் சமாளிப்பதற்குத்தான் பெண்கள் உட்காருகின்ற இடத்தைப்பார்த்து அங்கே பெண்கள்தான் உட்காரவேண்டுமென்று தெரிந்து வேறு இடத்தில் உட்கார்ந்து கொள்வார்கள். காலியாக இருக்கிற இடத்தில் கண்டக்டர் சொல்லி அமரச்செய்வார்கள் என்ற முறையிலே இருக்கிறது.



1968 பிப்ரவரி 15]

**திரு. வ. ஜார்ஜ் :** அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள பஸ்களும் சேர்ந்துள்ளனவா ? ஏனென்றால் என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் அரசாங்க இலச்சினை இல்லாமல் அங்கே 40 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வெளி ஊர்களிலே 9 பேருந்துகள் ஓடுகின்றன என்று குறிப்பிட்டேன். இப்போது அங்கங்கே எல்லா பேருந்துகளிலும் பொறிக்கப்பட்ட காரணத்தால் முன்பு 40 ஆக இருந்தது இப்போது குறைந்திருக்கக்கூடும். இலச்சினையை நாமே எழுத முடியாது. தனிப்பட்ட கம்பெனியாரிடமிருந்து வரவழைக்கப்பட வேண்டியிருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டப்படி இதற்கான வார்னிஷ் பிக்ஸிங் டிரான்ஸ்பர் ஷீட் varnish fixing transfer sheets தமிழிலே பாளம் என்று சொல்லலாம். குழந்தைகள் பொம்மை படத்தைத் தண்ணீரில் அமுக்கி கையிலே அழுத்தினால் அந்த பொம்மை ஒட்டிக்கொள்ளும் அதுபோல் பாளம் இருக்கிறது. ஏற்கெனவே இதைப்பற்றி லிமிடட் கம்பெனிகளிடமிருந்து டென்டர் கேட்டோம். சென்னையிலுள்ள கம்பெனி எதுவும் டென்டர் அனுப்பவில்லை. ஆனால், கல்கத்தாவிலுள்ள கம்பெனி டென்டர் அனுப்பியது. அரசு அந்த டென்டரை ஏற்றுக்கொண்டு 1966-ம் வருஷம் நவம்பர் மாதம் பாளம் வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இடையில் அவைகள் எல்லாம் தமிழாக்கப்பட்ட காரணத்தாலே திருத்தி அமைக்கப்பட்டது. அப்படித் திருத்தி அமைக்கப்பட்ட பாளங்கள்கூட சரிவர அமையவில்லை. அவற்றைச் சரிவர அமைப்பதற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டன. அந்தத் திருத்தத்தை செய்து அங்கிருந்து அவைகள் திருப்பி அனுப்பப்பட்டன. அப்படிப் பட்டவை இப்போது விரைவாகப் பொறுத்தப்பட்டுவருகிறது.

DR. H. V. HANDE : Sir, what is the total cost of converting these things in Tamil and what is the cost of each emblem?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நூறு ஷீட்டுகள் ரூ. 112 ஆகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தமிழ் தெரிந்தவர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை ; ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு தமிழ் தெரியவில்லை ; இரண்டும் தெரியாதவர்களுக்கு இந்தி மட்டும் தெரிந்திருக்கும், என்கிற நிலைமைதான் என்று இருப்பதால் தமிழிலே எழுதுவதோடு, பொம்மைகளையும் போட்டு தெரியப் படுத்த ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

[1968 பிப்ரவரி 15

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்னும் பொம்மை போடும் அளவுக்கு இருந்தால், நம்முடைய கல்வித்தரத்தை நாம் குறைத்துக் கொண்டவர்கள் ஆகிவிடுவோம்.

**திரு. ஆ. கருப்பையா :** தலைவர் அவர்களே, வெளியூர்களில் அரசாங்க வண்டிகளில் அதிகப்படியான, ஓவர்-டிக்கெட் ஏற்றி செல்லப் படுகிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? சரியாகச் சில்லரையும் கொடுப்பதில்லை என்கிற புகார் பரவலாக இருக்கிறது. அதைப் பற்றியும் அரசாங்கம் கவனித்து அரசு லாபகரமாக ஓட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பஸ்ஸைப் பற்றி என்றதும், எல்லாவிதமான கேள்விகளையும் கேட்கிறார்கள். மூலக் கேள்வி இலச்சினையைப் பொறுத்த விஷயம்.

### கல்லூரி முதல்வராகவுள்ள தமிழ் ஆசிரியர்கள்

*35 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்கள் எவ்வளவு பேர் கல்லூரி முதல்வராக உள்ளனர் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆறு தமிழ் ஆசிரியர்கள் அரசாங்கக் கல்லூரிகளில் முதல்வராக உள்ளனர்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, வரும் கல்லூரி ஆண்டிலிருந்தாவது, அரசாங்கக் கல்லூரிகளில் தமிழாசிரியர்களை, புதிதாகத் தொடங்கும் கல்லூரிகளிலாவது அதிகமாக அவர்களுக்கு இடம் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர் ஆவதற்கு உள்ள தகுதிகளும், கால வகைகளும் இருக்கின்றன. ஆகவே அந்தப் பதவியை ஏற்பவர்கள் எத்தனை ஆண்டு பணியாற்றியிருக்கிறார்கள், அவர்களுடைய சீனியாரிடி என்ன என்பதையெல்லாம் பார்க்கும்போது, தமிழாசிரியர்களுக்கும் அந்தத் தகுதிகளெல்லாம் இருந்தால், அந்தத் துறைக்கு வருவதற்கு தடங்கள் எதுவும் இல்லை. அந்த வகையில் ஆறு கல்லூரிகளில் இப்பொழுது முதல்வராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** கல்லூரிகள் ஏராளமாக இருக்கின்றன, ஆனால் ஆறு கல்லூரிகளில்தான் தமிழ் படித்தவர்கள் முதல்வராக இருக்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட குறைந்த நிலைக்கு காரணம் என்ன ? கல்லூரி முதல்வராவதற்கு நியமித்துள்ள தகுதிகள் என்னென்ன என்பதை அமைச்சர் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி தகுதி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அது கூறப்படும். இருக்கும் கல்லூரிகளில் குறிப்பிட்ட துறையைச் சேர்ந்தவர்கள்தான் முதல்வர்களாக வருகிறார்கள் என்பதில்லை. சில கல்லூரிகளில் பாடனி பேராசிரியர்கள் முதல்வர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலவற்றில் ஆங்கிலப் பேராசிரியர்களும், ஜுவாலஜி பேராசிரியர்களும், இன்னும் பிஸிக்ஸில் தேர்ச்சிபெற்றவர்கள், மற்றவர்களும் வருகிறார்கள். அதே வகையில் தமிழ் பேராசிரியர்களும், அந்த தகுதிகள் உள்ளவர்களாக இருந்தால் முதல்வர்களாக இருக்கிறார்கள். அதற்கு முக்கியமாக பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.



1968 பிப்ரவரி 15]

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் பேராசிரியர்களைப் பொறுத்தவரைக்கும், சமீப காலத்தில்தான் அவர்களுடைய வேலை நிர்ணயிக்கப்பட்டு இருப்பதால், அவ்விதம் அவர்களுடைய கடந்தகால சேவை ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு உரிய சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவா ? அவர்களுடைய சேவை உறுதிப்படுத்தப் படுவது காலந்தாழ்த்தப் பட்டது என்பதை மனதில் கொண்டு தமிழாசிரியர்களை கல்லூரி முதல்வர்களாக ஆக்குவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வராகத் தேர்ந்தெடுப்பதில், தகுதி பெற்றவர்கள் அம்மாதிரிப் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உறுதியைத் தரமுடியும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அதே மாதிரி உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது என்றிருக்கிறதா ? அப்படி ஜி.ஓ. இருந்தும், தமிழாசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிப்பதில் கல்வி இலாகா பல இன்னல்களை ஏற்படுத்தி வருகிறதென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. ஆனால், அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால், அது பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நடப்பு கல்லூரி ஆண்டில் அவர்களுடைய எண்ணிக்கையை விரிவுபடுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, now that the Tamil Professors have been elevated to the position of Principals of colleges, may I know whether the efficiency of the Principal of the colleges has gone down or is it on a par with that of any other Professor who

becomes a Principal? Also, in the matter of emoluments—salaries and allowances, paid to the Principals who were once Tamil professors, is there any difference between them and those who have qualifications in other subjects and who became Principals ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர் சம்பளம், மற்றவைகள் இவற்றில் எந்த விதமான வேறுபாடும் கிடையாது. அவரவர்களுடைய கல்வியறிவு வேறு, அட்மினிஸ்ட்ரேடிவ் திறமை வேறு. அப்படிப் பட்ட நிர்வாகத் திறமை தமிழாசிரியர்களுக்குக் கிடையாது, மற்ற மற்ற துறையினருக்குத்தான் இருக்கிறது என்பதில்லை. எவ்வளவோ தமிழாசிரியர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற வர்கள், நல்ல திறமையுடையவர்களாக இருக்கிறார்கள், நிர்வாக திறமை வேறு, அறிவியல் தன்மை வேறு. அவர்களுடைய சம்பளம் மற்றவைகளில் வேறுபாடு எதுவும் இல்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : இந்த ஆறு கல்லூரி முதல்வர்கள் சர்க்கார் கல்லூரிகளில் இருக்கிறார்களா அல்லது மற்ற கல்லூரிகளிலும் இருக்கிறார்களா? சர்க்கார் கல்லூரி என்றால், அவற்றின் பெயர்களைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : சர்க்கார் கல்லூரி களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. அவை, வேலூர் கவர்மென்ட் ட்ரெயினிங் கல்லூரியில், திரு. கோவிந்தராசன் முதல்வராக இருக் கிறார்; புதுக்கோட்டை ராஜாகல்லூரியில் திரு. வன்மீகநாதன் என் பவர் தலைவராக இருக்கிறார். திரு. ஏ. கிருஷ்ணமூர்த்தி என்கிற கல்லூரி முதல்வர் வேறு பணியில் இருக்கிறார். கிருஷ்ணகிரி கல்லூரியில் திரு. பி. முருகன் என்பவர் தலைவராக இருக்கிறார்; சென்னைக் கலைக் கல்லூரியில் திரு. ராசாகண்ணு என்பவர் தலை வராக இருக்கிறார்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : சார், கல்லூரிகளில் போதனை மொழி ஆங்கிலமாக இருக்கும் மட்டும், ஆங்கிலத்தில் தேர்ச்சியுள்ளவர் முதல்வராக இருந்தால்தான் கல்லூரிகளில் கல்வி முறைகளை மேற்பார்வை இடவும், நிர்வாகத்தை சரியாகச் செய்யவும் ஏதுவாக இருக்கும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, தமிழாசிரியர்களை முதல்வர்களாக ஆக்குவதில் அரசு நன்றாக சிந்தித்து செயல்பட முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்களாக இருக்கத் தகுதிகள் இருக் கின்றன. நான் ஏற்கனவே சொன்னபடி, அவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்று இருக்க வேண்டும். சில ஆண்டுகள் பணிபுரிந்து தகுதி வந்திருக்க வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister, it appears as though only Government colleges are having Principals who know Tamil and those who have



qualifications in Tamil. In view of the fact that the previous Government and this Government have been telling in season and out of season that they are for improving the standard of Tamil and for giving encouragement to Tamil, why is there this hesitation to have more Principals who know Tamil? Also will the Government give a categorical answer that they would not show any distinction between those who have Tamil qualifications and those who have science qualifications ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, அதில் எந்த வேறுபாடும் யாருக்கும் காண்பிப்பது இல்லை. பிரின்சிபாலாக வருகிறவர் களுக்கு என்ன தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அது இருக்க வேண்டும். அதாவது, போஸ்ட்-கிராஜுவேட் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டம் பெற்றவர் யாராக இருந்தாலும், ஸீனியாரிடி அடிப் படையில் அந்த இடத்தைப் பெறுவதற்குரியவராகிறார்.

அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்து நான் சொன்னேன். தனியார்க் கல்லூரிகளைப் பொறுத்து, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த ஒருவர்தான் முதல்வராக இருக்கிறார். மதுரை தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் முதல்வராக இருந்தார். தனியார்த் துறையில் கணக் கெடுத்துப் பார்த்தாலும் பலர் இருக்கிறார்கள். ஆனால், கேட்டது அரசாங்கக் கல்லூரியைப் பொறுத்து என்ற காரணத்தால் அந்த விடை அளித்தேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : It is stated that Tamil Lecturers will be posted as principals of colleges. Will the Hon. Minister be pleased to state whether Lecturers in other languages will be given similar facilities?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : நான் முதலிலேயே சொன்னேன். அவர்கள் என்ன பாடம் சொல்லிக் கொடுக் கிறார்கள் என்பதைப் பொறுத்து வேறுபாடு காண்பிப்பதில்லை. வேறு மொழி சொல்லிக்கொடுப்பவராக இருந்தாலும், ஸீனியாரிடி அடிப்படையில், தகுதி பெற்றிருப்பாரானால், அவரும் முதல்வராக ஆக்கப்படுவார்.

DR. H. V. HANDE : On a point of clarification, Sir.

MR. SPEAKER : A point of clarification does not arise. Under what rule is the hon. Member asking for clarification?

DR. H. V. HANDE : I am rising on a point of order. The question is about the number of Tamil Lecturers in "colleges" working as Principals. But the Hon. Minister has said that his answer is with reference to "Government colleges".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விடை இல்லை.

[1968 பிப்ரவரி 15

**திரு. ஆர். நாகசுந்தரம்** : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும், தமிழாசிரியர்களுக்கு ஸ்விட்ச் போடக் கூடத் தெரியாது என்றும் காங்கிரஸ்காரர்கள் கூறிவந்தார்களே, இப்போதாவது தமிழாசிரியர்கள் தகுதி மிக்கவர்கள் என்று அவர்கள் உணர்கிறார்களா? அல்லது முதலைக் கண்ணீர் வடிக்கிறார்களா?

THIRU K. VINAYAKAM : I object to this kind of question. Let him substantiate his charge. This insinuation and allegation are all baseless. The Chair should categorically discourage this kind of thing.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சட்டப்பேரவை நடைமுறை விதியின்படி, கேள்வி நேரத்தில், ஊகங்கள் (inferences) குற்றங் குறைசாட்டுகள் (imputations) கூடாது. பொது விவாதத்தின்போது சால்லலாம். கேள்வி நேரத்தில் கூடாது.

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவர் அவர்களே, நடைமுறைக் கேள்வியொன்றை எழுப்ப விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்களைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் ஆதாரமின்றி குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். அதைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : 'ஆதாரமில்லாத குற்றச்சாட்டு' என்று நண்பர் அவர்கள் சொன்னார்கள். முன்பு ஒரு முறை, திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள், இதே மன்றத்தில் அப்படி ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது விதி 235-இன் கீழ் வருவது இல்லை. நேரம் தவறிப் பேசிவிட்டார். கட்சியைப்பற்றி குற்றச்சாட்டுகள் கூறவேண்டுமானால், அதை விவாத நேரத்தில் வைத்துக்கொள்ளலாம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. பத்து மணிக்கு மேல் விவாத நேரத்தில் வேண்டுமானால் பேசலாம். அதனால், உறுப்பினர் திரு. நாகசுந்தரம் அவர்களுடைய வினாவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை. வினா அனுமதிக்கப்படவில்லை.

## நத்தத்தில் தொழில்பேட்டை

* 36 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

மேலூர் வட்டம் நத்தத்தில் தொழில்பேட்டை அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இல்லை, ஐயா.



1968 பிப்ரவரி 15]

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, இந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதால், வருகின்ற ஆண்டுகளிலாவது அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனிலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, முதல் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து, இருக்கிற நிதி வசதி, மற்ற வசதிகளைப் பொறுத்து, தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 48 ரெவின்யூ டிவிஷன்களில் இப்பொழுது 30 ரெவின்யு டிவிஷன்களில் இந்தத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுமானவரை, அந்தத் தொழிற்பேட்டைகள், அந்தந்த ரெவினியூ டிவிஷனில் உள்ள முக்கியமான பெரிய நகரத்தையொட்டி அமைக்கப்படும். தொழிற்சாலைகள் பல வைப்பதற்கு யார் யார் முன்வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும், வாணிகத்தின் தன்மையைப் பொறுத்தும், மற்ற நிலைமைகளைப் பொறுத்தும் ஆராய்ந்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, நத்தத்தில் தொழிற்பேட்டை வைப்பதற்கான கூறுபாடு ஏதும் இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம், திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த வினா, மேலூர் வட்டம் நத்தத்தில் தொழிற்பேட்டை அமைப்பது பற்றியது. அதைப் பற்றி மட்டும் வினா கேட்க சுதந்திராக் கட்சி துணைத் தலைவர் அவர்களை அனுமதிக்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்** : தொழிற்பேட்டை, ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒன்று அமைப்பது என்ற கொள்கை சர்க்காரில் இருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைக் கேட்க சந்தோஷமாக இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி ஜில்லாவில், சேரன்மகாதேவி ரெவின்யூ டிவிஷனைப் பொறுத்தும் சர்க்கார் அனுதாபத்துடன் கவனித்து, அங்கே ஒரு தொழிற்பேட்டையை அனுமதிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, 48 ரெவினியூ டிவிஷன்களிலும் தொழிற்பேட்டைகள் இருக்கவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொழுது கிட்டத்தட்ட 30 டிவிஷன்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 11 தொழிற்பேட்டைகள் ஆங்காங்கு வைக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் தொடர்ந்து நிலைமைகள் வரும்போது கவனத்தில் கொள்ளப்படும்.

## கோத்தகிரியில் பாலிடெக்னிக் பள்ளி

* 37 வினா.—திரு. ஜெ. பெள்ளி கௌடர் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் பாலிடெக்னிக் பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *State Transport Buses*

* 38 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state the cost of body building for one bus in the State Transport Department?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

| பேருந்தின் வகை | 'பாடி' கட்டுவதற்குச் சராசரிச் செலவு |
|---|---|
| | ரூ. |
| 1. சென்னை மாநகர வகைப் பேருந்து | 12,870 |
| 2. வெளியூர் வகைப் பேருந்து | 13,838 |
| 3. சீர்வசதி வண்டி (விரைவுப் பேருந்து) | 26,270 |

திரு. ஏ. எம். ராஜா: இந்த பஸ் பாடிகள் எத்தனை ஆண்டுகளுக்கு உழைக்கின்றன என்பதை அரசு தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைகளை பாடிகளைப் பொறுத்து மாத்திரம் வைத்துக்கொள்ளுவதில்லை. அதோடு சேர்ந்திருக்கிற 'சாஸி'யைப் பொறுத்தும், வண்டிகளினுடைய வயது கணக்கிடப்படுகிறது. இதற்கு முன்பு நான்கு ஆண்டுகள் என்று இருந்ததை ஐந்தாண்டுகள் அளவுக்கு அதிகமாக உழைப்பதற்கு அவைகளினுடைய ஆயுளைக் கூட்டவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாகர்கோயிலில் இராணித் தோட்டத்தில் அமைந்திருக்கிற அந்த ஒர்க்ஷாப்பில் ஒரு பஸ் பாடி கட்டுவதற்கு ஆகும் செலவினத்தைப்பற்றி தயவு செய்து அமைச்சர் அவர்கள் விவரம் இருந்தால் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாகர்கோயிலுக்கென்று தனியாக விவரம் இல்லை. நாகர்கோவியிலில் மாதமொன்றுக்குப் பத்து வண்டிகள் கட்டப்படுகின்றன. சென்னைக்கும் நாகர் கோயிலுக்கும் சிறிதுதான் வித்தியாசம். தனித்தனியாக விவரம்—சென்னையைப் பொறுத்துச் சொன்னால்--நாகர்கோயிலைப் பொறுத்து, சற்றுதான் வித்தியாசம் இருக்கும்.



திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்கப் போக்குவரத்துத் துறையில், மாடிப் பேருந்து கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா? அப்படிக் கட்டவேண்டுமானால் ஒரு பஸ்ஸுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இம்மாதிரி அரசாங்க பாக்டரியில் பாடி கட்டுவதற்கு ஆகும் செலவிற்கும் தனியார்த் துறையில் பாடி கட்டுவதற்கு ஆகும் செலவிற்கும் உள்ள வித்தியாசம் என்ன ? தனியார்த் துறையில் ஆகும் செலவை விட அரசாங்கத் துறையில் அதிகமா ? அல்லது குறைச்சலா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏராளமான தொழிலாளர்கள் அரசாங்க பஸ் போக்குவரத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதை விட்டுவிட்டு தனியாத் துறைக்கு இந்த வேலையைக் கொடுப்பதாக இல்லை. அது மாத்திரம் அல்ல. தனியார் துறையில் எவ்வளவு, அரசாங்கத் துறையில் எவ்வளவு என்று ஒப்பிட்டு கணக்கு எடுக்கப்படவில்லை. கொஞ்சம் செலவு அதிகமானாலும் இங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் வகையில் இங்குதான் இந்த பாடி கட்டும் வேலை நடைபெறும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இருந்தாலும், தனியார் பஸ் பாடி கட்டுவதற்கும் நாம் கட்டுவதற்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டு, கட்டுபடியாகக் கூடிய அளவுக்குச் செய்ய முன்வருவார்களா ? சொகுசு பஸ்ஸைப்பற்றி முன்பிருந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டிருந்தது. அந்த பஸ்ஸுக்கு பாடி கட்டும் செலவு எவ்வளவு ஆகும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சீர்வசதி வண்டிக்கு முற்
(விரைவுப் பேருந்து) பாடி கட்டுவதற்கு ரூ. 26,270 ஆகிறது பகல்
என்று சொன்னேன். தனியார் பஸ்ஸைவிட அதிகமா, குறைவா 9-30
என்று உறுப்பினர் அவர்கள் கேட்டதனால், அதுபற்றி விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இங்கு பாடிகள் கட்டப்படுகிற காரணத்தால் தொழிலாளர்கள் நல்ல சலுகைகளைப் பெற முடிகிறது. ஆகவேதான் இங்கே தொடர்ந்து பாடிகள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இப்போதிருக்கின்ற 35 சீட்டுகள் கொண்ட துரித பஸ்களை, 45 சீட்டுகளாக உள்ள பஸ்களாக மாற்றினால் வருவாய் அதிகமாகக் கிடைக்கும் அல்லவா ? அப்படி மாற்றுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா ? அதற்கு எவ்வளவு தொகை செலவாகும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

[1968 பிப்ரவரி 15

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய தேசிய மயமாக்கும் திட்டத்தின்கீழ், தனியார் துறையிலுள்ள பல பஸ்கள் ரூட்டுகளில் ஓடாமல் இருக்கின்றனவே, அவற்றை அரசாங்கம் வாங்கி எடுத்துக்கொண்டால், பஸ் பாடி கட்டும் செலவு போன்ற செலவுகள் தவிர்க்கப்படலாம் அல்லவா? அதனால் அரசாங்கத்திற்கும் செலவு குறையும் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தப் பஸ்களை எடுத்துக்கொள்கிற நேரத்தில், அதனுடைய இயந்திரங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்க்காமல் எடுத்துக்கொள்ள முடியாது. பஸ் பாடிகள் வேண்டுமானால் நன்றாக இருக்கலாம் இயந்திரங்கள் நன்றாக இருக்காது. நல்லவர்களாக இருப்பவர்கள் பஸ்களிலுள்ள இயந்திரங்களை மாற்றாமல் அப்படியே விற்று விடுவார்கள். நல்லவராக அல்லாதவர்கள் அதனுடைய இயந்திரத்தை மாற்றி, அரசாங்கத்தின் தலையில் சுமத்திவிடக் கூடும். பின்னர் அவரே, 'பார், பார், அரசாங்கத் துறையிலுள்ள பஸ் ஓடாமல் அடிக்கடி நின்றுவிடுகிறது' என்று கூறுவார்

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், 'கொஞ்சம் விலை கூடினாலும் பரவாயில்லை. அரசாங்கத் துறையில் கட்டுவதே நல்லது. ஏனென்றால் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்' என்றெல்லாம் கூறினார்கள். தனியார் துறையில் முதலாளிகளா பஸ் பாடி கட்டுகிறார்கள்? அங்கும் தொழிலாளர்கள்தானே பாடி கட்டுகிறார்கள், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தனியார் துறையிலும் கிடைக்கிறது அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'இதிலே வேறுபாடு கணக்குத் தெரியாது' என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். தனியார் துறையில் பாடிகளைக் கட்டினால், அரசாங்கத் துறையில் இப்போதிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலையின்றி, அவர்கள் வேலையை இழப்பார்கள் என்றுதான் நான் சொன்னேன். மேலும், முதலாளிகள் பாடி கட்டுவதுபோன்ற கஷ்டமான காரியத்தைச் செய்யமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, பஸ்களில் பாடி கட்டுவதில் உள்ள சேஸிஸ் விலை என்ன? பர்கோ, பெட்போர்டு இவைகள் எல்லாம் முறையே டி.வி.எஸ்., சிவராஜ் கம்பெனிகளில் வாங்கப்படுகின்றனவா? விவரம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லேலண்ட், பென்ஸ், பர்கோ முதலியவைகள் டி.வி.எஸ். மூலமாக முன்பு வாங்கப்பட்டன. மேலும் புதிதாக வாங்குவதில்லையென்று இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. பெட்போர்டு சிவராஜ் மூலமாக முன்பு வாங்கப்பட்டிருக்கலாம். இப்போது வாங்குவதாக உத்தேசம் இல்லை.



1968 பிப்ரவரி 15]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் பஸ்கள் அதிகமாக தேவைப்படுவதால், ராணி தோட்டத்திலிருக்கும் ஒர்க் ஷாப்பை மேலும் விஸ்தரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட உத்தேசம் இருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்றைய தமிழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டபிறகு, பேருந்துகளை அதிகமாகக் கட்டியிருக்கிறார்களா? அப்படியானால் எவ்வளவு? மேலும், ஒரு பேருந்து கட்டுவதற்காகும் செலவு சென்ற ஆண்டைவிட குறைந்திருக்கிறதா? அப்படியானால் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பேருந்துகள் அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், எண்ணிக்கையைக் குறிப்பாகத் தருவதற்கு இடமில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அரசாங்க பஸ் போக்குவரத்தைப்பற்றிய கால அட்டவணை ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசு, அந்தக் கால அட்டவணையைத் தமிழில் வெளியிட முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

Thiru T. MARTIN : Sir, defective body-building leads to accidents and therefore, may I request the Hon. Minister to state whether any special technical staff has been employed by the department to supervise the body-construction?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பாடிகள்—தமிழிலே கூடுகள்—என்று சொல்லப்படுபவைகளினால் எந்த விதமான விபத்துக்களும் ஏற்படுவது இல்லை. இயந்திரத்தில் ஏற்படுகிற கோளாறுகளினால்தான் விபத்துக்கள் நிகழ்கின்றன. சிலசமயங்களில் டிரைவருடைய அஜாக்கிரதையினால் அல்லது வழிப்போக்கர்களுடைய அஜாக்கிரதையினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அரசு, பஸ்களுக்குப் பாடி கட்டும் ஏற்பாட்டைத் தனியார் கம்பெனிகளுக்குக் கொடுத்ததன் காரணமாக பல ஊழல்கள் ஏற்பட்டன என்பது உண்மையா? அது சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டப்பட்டதா? அரசாங்கமே சொந்தமாக பாடி கட்டும் ஏற்பாட்டைச் செய்தது எந்த அரசு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் குற்றச்சாட்டு சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டப்பட்டது உண்மை. அரசாங்கமே

பாடி கட்டும் ஏற்பாட்டைச் செய்தது பழைய அரசாங்கம் செய்த ஏற்பாடு. அதைத் தொடர்ந்து இந்த அரசும் செய்துவருகிறது.

**திரு. க. மு. ராசகோபால்** : தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கம் கட்டுகின்ற பாடிகள், தனியார் கம்பெனிகளில் கட்டப்படுகின்ற முறைப்படி இல்லாத காரணத்தால், பொதுமக்கள் தங்களுடைய சாமான்களை எடுத்துச்செல்ல வசதியில்லாமல் இருக்கிறது. அரசாங்கப் பஸ்களில் மேலே கம்பிகள் மட்டும் போடப்பட்டிருக்கின்றன. சாமான்கள் கீழே விழுந்துவிடுகின்றன. தனியார் பஸ்களில் இருப்பதுபோன்று இருந்தால் சமான்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கும். மேலும், பஸ் செல்லும் வழியிலுள்ள முக்கிய ஊர்களின் பெயரை இருபக்கங்களிலும் எழுதினால் பொது மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விடை இல்லை.

**திரு. வ. ஜார்ஜ்** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், உள்ளூர் பஸ்களைவிட, வெளியூர் பஸ்களில் பாடி கட்டும் செலவில் சுமார் 1,000 ரூபாய் அதிகமாகிறது என்று சொன்னார்கள். அப்படி கூடுதலாகக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பாடிகள் கட்டுவது அடித்தளத்தைப் பொறுத்த விஷயம். வெளியூர் பஸ்கள் நீண்ட நாட்களுக்கு வர வேண்டும். நீண்ட தூரம் ஓடக்கூடியவை. அதனால் அதற்குத் தக்கவாறு அடித்தளம் பொருத்தப்பட வேண்டும். இதன்காரணமாக கூடுதல் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**Dr. H. V. HANDE** : Sir, arising out of the answer given by the Hon. Minister for Public Works, will he be pleased to state the number of employees who are now working under this scheme and the various demands put forth by them and also the number of demands met by the Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இந்த பாடி பில்டிங்கைப் பொறுத்தவரையில் குரோம்பேட்டையில் 1,115 தொழிலாளர்களும் ராணித்தோட்டத்தில் 193 தொழிலாளர்களும் இந்தப் பணி புரிகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எடுத்துச்சொல்லப்பட்டு, அவைகளிலே நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுவரை பெற்றுவந்த ஊக்க போனஸ் 20 சதவிகிதத்தை 40 சதவிகிதமாக மாற்றியதன் காரணமாக சென்னையிலுள்ள தொழிலாளி வருடம் ஒன்றுக்கு 225 ரூபாய் பெறுகிறார்; ராணித்தோட்டத்திலுள்ள தொழிலாளி 93 ரூபாய் பெறுகிறார். அவர்களுடைய ஊக்க போனஸ் அவர்களுடைய சம்பளத்தின் அடிப்படையில் தரப்பட்டு வருகிறது.



**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, சீவராஜ் கம்பெனி, டி.வி.எஸ். கம்பெனிகளின் மூலமாக இனிமேல் பஸ் வாங்குவதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, பொதுக் கூட்டங்களிலும், மேடைகளிலும் பல பேர், 'அமைச்சர் சீவராஜ் கம்பெனியுடன் தொடர்பு கொண்டு பேரம்பேசி, அவர்களுடைய பஸ்களை வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள்' என்று பேசிக்கொண்டு வருவதைக் குறித்து நண்பர் அவர்கள் காரணம் அறிய விரும்புகிறார் என்று கருதுகிறேன். நமக்கு நல்ல தரமான வண்டிகள் தேவை. லேலண்ட், பென்ஸ் என்ற இரண்டு வகை வண்டிகள் போதும். அவை பல ஆண்டுகளுக்கு நன்றாக உழைக்கக் கூடியவை. ஆகவேதான் லேலண்ட், பென்ஸ் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பர்கோ முன்பு வாங்கியிருக்கலாம். வாங்கியவரைக்கும் பர்கோ போதும். இனிமேல் புதிதாக வாங்க வேண்டாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

*39 வினா—**திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பழனியிலிருந்து நத்தம் வழியாகத் தேவகோட்டைக்கு அரசினரின் துரித பஸ் விடுவதற்கேற்ற செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி**: தலைவர் அவர்களே, செட்டிநாட்டுப் பகுதியில் இருந்து பழனிக்கு அதிக மக்களும், வணிகத் தொடர்பும் இருப்பதனால் அந்தப் பகுதியில் மிக விரைவில் செல்லக்கூடிய பேருந்து வண்டி விடுவதற்கு அரசினர் முயல்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: பழனி, தேவகோட்டை ஆகிய இருமுனைகளிலும் இன்று டெப்போக்கள் இல்லாததால் உடனடியாக விடுவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. மேலும் தற்போதுள்ள வழித்தடங்களை தேசியமாக்குவதன் காரணமாக அதிக பஸ்கள் தேவைப்படுகிற காரணத்தினால் இந்தப் புதிய ரூட் பற்றி சற்று நிதானமாக யோசிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. பி. எஸ். மணியன்**: தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து கொடைரோடு வழியாக பிற இடங்களுக்கு இன்றைக்கு அரசாங்கப் பேருந்து வண்டிகள் செல்கிறபோது இடையில் ரயில்வே கேட்டுகளில் மணிக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த ரூட்டை மதுரையில் இருந்து சோழவந்தான் வழியாக கோடைரோடு சென்று பிற இடங்களுக்கு விடுவதனால் இந்தக் காலதாமதம் தவிர்க்கப்படுவதோடு மொத்த தூரத்திலும் 2½ மைல்கள் குறைவாக வரும் என்பதனால் இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது குறித்த விவரங்களை கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் இந்தத் துறையினரும், இயக்குநரும் கவனிப்பார்கள்.

## Over-bridge near Kumbakonam Railway station.

*40 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal to construct an over-bridge at the level-crossing on the Kumbakonam-Karaikkal road, on the eastern side of Kumbakonam Railway Station; and

(b) if so, when it will be taken up for execution?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம், அந்தச் சாலையின் மைல் 0/7-ல் மேல் பாலம் கட்டுவதற்கான திட்டம், நான்காம் ஐந்தாண்டுத் திட்டச் செயற்குறிப்புகளில் சேர்க்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்ட பின்னர், வரிசை முறைப்படியும் நிதிவசதி கிடைப்பதைப் பொறுத்தும் இவ்வேலை மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : What is the estimate for this project?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்படவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார் இப்படிப்பட்ட வேலைகளுக்கு எல்லாம் இந்திய சர்க்காரில் இருந்து பூராவும் மானியமாக வருகிறதா? அல்லது நமது சர்க்காரும் ஓரளவுக்கு அந்தச் செலவை ஒத்துக்கொள்ளவேண்டுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசீய நெடுஞ்சாலைகளில் இந்த வேலை அமைந்தால் அதற்காகும் செலவில் பாதியை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பாதித்தொகையை மத்திய சர்க்கார் அளிக்கிறது.

## நல்லம்பாக்கத்தில் புதிய ஏரி

*41 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நகர் கிராமத்தைச் சேர்ந்த நல்லம்பாக்கத்திற்கு ஓர் புதிய ஏரி கட்டிக்கொடுக்க கோரி 19—3—1966-ஆம் தேதியில் மேற்படியூர் பஞ்சாயத்து தலைவர் மூலமாக மகசர் மனு ஒன்று நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) நல்லம்பாக்கம் கிராமத்திலுள்ள பழைய ஏரி ஒன்றைப புதுப்பிக்க வேண்டுமென்று தென் ஆர்க்காடு மாவட்டம், நல்லம்பாக்கம் உழவர்களிடமிருந்து பொதுப் பணித்துறை அமைச்சருக்கு 1966, மே மாதத்தில் முறையீடு ஒன்று வந்தது.

(இ) விரிவான புலனாய்வுக்காக இவ்வேலைத்திட்டத்தை எடுத்துக்கொள்ளுமாறு மேற்பார்வைப் பொறியாளா உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: ஏரியை அமைத்துக் கொடுப்பதறகு எத்தனை ஆயிரம் ரூபாய் மதிப்புப் போட்டிருக்கிறார்கள்? அமைச்சர் அவர்கள் சொல்கிற பதில் ஒருவகையில் இருககிறது, ஆனால் அங்கு இருக்கிற நிலைமை ஒன்றும அப்படி இருப்பதாகத தெரியவில்லையே.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதன்மூலம் 75 ஏக்கரா பாசன வசதிபெறும் என்பதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போபது நடைபெற்றிருக்கிற ஆராய்ச்சிக் குறிப்பில இருந்து நமக்குத் தெரியவருவது 25 ஏக்கராதான் பாசனவசதி பெறமுடியும் என்பதாகும். ஆகவே, அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படவேண்டுமா என்ற கேள்வி இருந்தும் தொடர்ந்து பரிசீலனை நடைபெறுகிறது.

## உர விநியோகம்

*42. வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேளவிகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் நமது மாநிலத்திற்கு விவசாயிகளுக்குத் தேவையான அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளை கோரி பெறப்பட்ட டன்கள் எவ்வளவு?

(இ) அப்படி வாங்கியிருந்தால் இந்த ஆண்டில் மேற்படி ரசாயன உரங்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுவிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: 1967–68-ஆம் ஆண்டில் நமது உறுதியான தேவை அமோனியம் சல்பேட் அளவில் 8·15 லட்சம் டன்னாகும். 23—3—1967, தேதியிட்ட கடிதத்தில் இந்திய சர்க்கார் இம்மாநிலத்திற்கு 1967–68-ம் ஆண்டில் 4·15 லட்சம் டன் (அமோனியம் சல்பேட் அளவில்) ஒதுக்குவதாக குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பிற்பாடு அதை 5·20 லட்சம் டன்னை (அம்மோனியம் சல்பேட் அளவில்) உயர்த்தினர். எனினும் இவ்வாண்டிற்கு அவர்கள் ஒதுக்கியிருக்கும் அளவு நம்முடைய உறுதியான உரத்தேவைக்கு குறைவாகவே இருப்பதால் இம்மாநிலத்தில் உரம் வழங்கப்படுவதில் ஓரளவுக்கு பற்றாக்குறை இருக்கும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மத்திய அரசாங்கம் நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நமக்குத் தேவையான அளவுக்கு உரம் கொடுக்க முடியாது என்று அறிவித்துவிட்டால் நாம் நமக்குத் தேவையான உரத்தை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள முயற்சி செய்ய முடியாதாத?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நமது ராஜ்ய அரசாங்கம் இது விஷயத்தில் தலையிடுவதற்கில்லை. மத்திய சர்க்கார்தான் வாங்கித் தரவேண்டியிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்திய சர்க்கார் நமக். 1967-68-க்கு 5.20 லட்சம் டன் உரம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். இதற்கு முந்திய ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1966-67-க்கு 6.75 லட்சம் டன் உரம் ஒதுக்கவேண்டுமென்று நாம் கேட்டோம். ஆனால் அவர்கள் 4.33 லட்சம் டன் தான் ஒதுக்கினார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**திரு. மு. ச. சிவசாமி :** மத்திய சர்க்கார் நமது ராஜ்யத்திற்கு சர்க்கரை, உரம் போன்றவைகளை ஒதுக்குவதில் 1967-68-ஆம் ஆண்டில் இருந்து குறைத்திருக்கிறார்களே, அதற்குக் காரணம் இங்கே அரசாங்கம் மாறியிருக்கிறது என்பதுதானா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது உரத்தைப்பற்றிய கேள்வி, நமக்குப் போதுமான உரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று பலமுறைகள் வற்புறுத்தியதன் பேரிலும், முதல் அமைச்சர் அவர்கள் முதல் மந்திரிகளின் மகாநாட்டில் இதை மிகவும் வற்புறுத்தியதன் பேரிலும், மத்திய உணவு அமைச்சர் திரு. ஜக்ஜீவன்ராமின் நல்லெண்ணத்தின் காரணமாகவும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாகத்தான் கிடைத்திருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இப்போது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு எந்த அடிப்படையின் கீழ் உரம் ஒதுக்கி வருகிறார்கள்? நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு கிடைததிருக்கிறதா? அல்லது குறைந்திருக்கிறதா? ப்ரொக்யூர் மெண்டு கணக்கை வைத்து உரம் ஒதுக்கியிருக்கிறார்களா? அல்லது சாகுபடி நில அளவைக்கொண்டு ஒதுக்குகிறார்களா? எந்த அடிப்படையில் ஒதுக்குகிறார்கள் என்பதைக் கூறுவதோடு, நமக்குக் கிடைக்கவேண்டிய அளவு கிடைக்காவிட்டால் அதைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நம்முடைய தேவைக்குக் குறைவாகத்தான் ஒதுக்குகிறார்கள். அதுவும் இன்றைய தினம் அமோக விளைச்சல் தரக்கூடிய ஆடுதுறை ஏ.டி.டி. 27 போன்ற ரகங்களுக்குத்தான் ஒதுக்குகிறார்கள். 1962-இல் இருந்து நம்முடைய தேவையில் பாதி மட்டுமே ஒதுக்கி வந்திருப்பதன் காரணத்



தினால்தான் தொடர்ந்து பற்றாக்குறை இருந்து வந்திருக்கிறது. நெய்வேலியில் உற்பத்தியாகக்கூடிய யூரியாவைக் கூட ஓப்பன் மார்க்கெட் என்று சொல்லி, கரி வாங்கிக் கொள்கிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். கரிக்கும் உரத்திற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. அதை நமக்கே தரவேண்டும் என்று நாம் கோரி வருகிறோம். நெல் கொடுப்பவர்களுக்குத் தருவதாகச் சொன்னார்கள். நாங்கள் நெல் தருவதாகக் கூறியும் உரம் வந்தபாடில்லை. அந்தப் பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருப்பதனால்தான் இந்தச் சங்கடமான நிலைமை இருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை.** மாண்புமிகு தலைவரவர்களே, சர்க்காருடைய கொள்கை ஏ.டி.டி. 27-க்கு மட்டும் ரசாயன உரம் அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம் எல்லா இடங்களிலும் எல்லாவகையான நெல்லையும், கிச்சடி சம்பா, சம்பா, கார் போன்ற எல்லாவற்றையும் கொள்முதல் செய்கிறார்களே, ஆகவே அவற்றிற்கும் ரசாயன உரம் அளிப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நமக்கு வரக்கூடிய உரத்தை எந்த அளவுக்கு பகிர்ந்து அளிக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏ.டி.டி. 27-க்கும் ஹைப்ரீட் ரகங்களுக்கும் அவற்றிற்கு அதிகமாகத் தேவைப்படுவதால் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட ரகங்களுக்கு உரத்தை அளிக்கவில்லையென்றால் அவற்றின்மூலம் நாம் எதிர்பார்க்கின்ற விளைச்சல் வராது. அதன் காரணமாகத் தான் அமோக விளைச்சல் ரகங்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கமும் அப்படிப்பட்ட அமோக விளைச்சல் ரகங்களுக்குத் தான் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டித்தான் (C.O.) 25 (C.O.) 29 இவற்றையெல்லாம் அமோக விளைச்சல் ரகங்களாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் அது சம்பந்தமாக விஞ்ஞானிகளைக் கலந்து அனுமதிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அனுமதித்தால் கூடுதலாக அப்படிப்பட்ட ரகங்களுக்கெல்லாம் உரம் கிடைக்க வழி இருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** செயற்கை உரம் பற்றாக்குறையாக இருப்பதாலே இயற்கை உரத்தை அபிவிருத்தி செய்யத் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இயற்கை உரத்திலேயும் கவனம் செலுத்தி வருகிறோம். பசுந்தாள் உரத்தைத் தயார் செய்கிறோம். முனிசிபாலிடிகளிலே குப்பையைச் சேகரித்து கம்போஸ்ட்டு உரம் தயார் செய்கிறார்கள். அப்படித் தயார் செய்வதிலே அகில இந்தியாவிலேயே மதுரை மாவட்டம்தான் முதல் பரிசு பெற்றிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் உரத்திற்காக தமிழ்நாட்டுக்கு வழக்கமாகத் தந்து உதவி வந்த சப்ஸிடியை நிறுத்தி இருக்கிறதே, அதை எப்பொழுது முதல்

நிறுத்தியிருக்கிறது ? அப்படி நிறுத்தியிருப்பதன் உள்நோக்கம் என்ன ? 1967-ஆம் வருடத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றம்தான் அதற்குக் காரணமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** உள்நோக்கம் ஒன்றும் சொல்வதற்கில்லை. மத்திய அரசாங்கம் சப்சிடி வழங்கியதற்குக் காரணம் மக்களுக்கு ரசாயன உரம் பிடிக்கவேண்டும், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் மானியம் வழங்கினார்கள். இப்பொழுது ரசாயன உரத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டு அது தேவை என்று உணர்ந்துவிட்ட காரணத்தினாலே அந்தச் சலுகையை வழங்க முடியாது என்று அவர்கள் தகவல் தருகிறார்கள். உரத்தினுடைய விலை ஏறி இருப்பதாலே சப்சிடி கொடுங்கள் என்று நாம் கேட்டோம். டீவேல்யுவேஷன் காரணமாக 1-4-1967 முதல் ஏற்பட்ட ரூபாய் மதிப்பின் குறைவு காரணமாக ஒரு டன்னுக்கு 8 ரூபாய் என்ற அளவுக்கு கூடி இருக்கிறது. நெல்லினுடைய விலையைக் கூட்டவேண்டுமென்று விவசாயிகள் கூறுகிற நேரத்திலே உரத்தினுடைய விலையும் கூடியிருக்கிறது என்ற புகார்கள் வருகின்றன. ஆகவே மத்திய அரசாங்கம் மானியம் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும்கூட அவர்கள் முடியாது என்றுதான் சொல்லிவருகிறார்கள்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** சார், இப்பொழுது இருக்கிற உர விநியோக முறையிலே கொஞ்சம் கொஞ்சமாக அலாட்மெண்ட் கொடுப்பதினாலே சீசனிலே உரம் போட முடியாமல் போய்விடுகிறது. கிடைக்கின்ற உரத்தை விவசாயிகள் சீசனுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் முன்னாலேயே சேமித்து வைத்து பின்பு ஒரேயடியாக உரத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மத்திய அரசாங்கம் நமக்கு இரண்டு மூன்று தவணைகளில்தான் கொடுக்கிறார்கள். வருகிறபொழுது அதை நாம் பகிர்ந்து அளிக்கிறோம். அதிலேகூட சில விவசாயிகள் தேவையில்லாமல் போய்விட்டால் அவர்கள் வைத்திருப்பதை மலிவான விலைக்கு விற்றுவிட்டு பிறகு தேவைப் படுகிற நேரத்தில் உரம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த ஆண்டு இப்படிப்பட்ட சிரமங்கள் இல்லாமல் இருப்பதற்கு மாவட்ட கலெக்டர்கள் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சு. துரைசாமி:** உணவு உற்பத்தியைப் பெருக்கி எல்லா மக்களுக்கும் உணவைக் கொடுக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் போதுமான உரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டும்கூட மத்திய அரசாங்கம் போதுமான அளவுக்கு உரம் கொடுக்காத காரணத்தினால் தமிழக அரசாங்கமே உரத் தொழிற்சாலைகளை அமைக்கும் நோக்கம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தமிழக அரசாங்கம் உரத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி தேவையாக இருக்கிறது. மேலும்,



உணவு அமைச்சர் ஜக்ஜீவன்ராம் அவர்களைப் பார்க்கின்ற போது எல்லாம் நாம் அதிகமாக உரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் ஏற்கனவே அதிகமாகத் தந்திருக்கிறார்கள். அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாலே நாம் வாங்க முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாகக் கேட்டிருக்கிறோம். கிடைக்கும் என்று நம்பலாம். ஏனென்றால் நாம் மத்திய அரசாங்கத்திற்கு கொடுத்த வாக்குறுதியை, அதாவது உற்பத்தியைப் பெருக்கிக் காட்டுவோம் என்ற வாக்குறுதியைக் காப்பாற்றி இருக்கிறோம். அந்த அளவிலேதான் அவர்களும் ஏற்கனவே 1 லட்சத்து, 5 ஆயிரம் டன் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். லைசன்ஸ் வழங்குவதிலேகூட காலதாமதம் ஏற்படும் என்ற காரணத்தினாலே தான் நாம் இப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளவில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** ஏழை விவசாயிகளுக்கு உரம் வழங்கக்கூடிய முறையில் கிராமத்தில் லோன் வாங்கி உரம் வாங்கக்கூடிய பழக்கம் இருக்கிறது. 500 ரூபாய் லோன் வாங்கி உரம் வாங்கவேண்டுமென்றால் 300 ரூபாய்க்குத்தான் உரம் வாங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடிய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அப்படியில்லாமல் விவசாயிகள் தேவைப்படக்கூடிய அளவுக்குத் தங்களுக்குத் தேவையான உரத்தையும் கடனையும் வாங்கிக்கொள்ளக்கூடிய அளவில் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கட்டாயம் ஒன்றும் இல்லை. எவ்வளவு உரத்திற்காகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுப்பார்கள். அம்மையார் அவர்கள் சொல்வதுபோல் 500 ரூபாய் கேட்டால் 300 ரூபாய் கொடுக்கிறார்கள் என்பது இல்லை.

**திரு. கே. விநாயகம்:** உரம் ஒதுக்குவதிலே, அமோனியம் சல்பேட், யூரியா போன்ற உரங்களை மத்திய சர்க்கார் இன்றைக்கு தி.மு.க. ஆட்சிக்கு வந்திருப்பதினாலே குறைவாகக் கொடுப்பதாகவும் ஏற்கனவே இருந்த சர்க்கார் காங்கிரஸ்காரர்கள் சர்க்கார் என்ற காரணத்தினாலே அதிகமாகக் கொடுத்ததாகவும் ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எங்கு பார்த்தாலும் பிரச்சாரம் செய்வது. அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதிகமாகத்தான் அவர்கள் தருகிறார்கள், பாரபட்சமில்லாமல் மத்திய சர்க்கார் நடந்து கொள்கிறார்கள் என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எங்கள் கட்சிக்காரர்கள் பேசுகிறார்களோ இல்லையோ திரு. விநாயகம் அவர்கள் பேசுகிறார்கள் என்பது தெரிகிறது. நான் தமிழிலேதான் பேசினேன். இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று நினைக்கிறேன். இதைப் பற்றி ஏற்கனவே என்னுடைய கட்சிக்காரர் கேட்டார். அப்படி ஒன்றும் இல்லை, ஒரு லட்சத்து ஐயாயிரம் டன் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்களும் நானும் வற்புறுத்தி கேட்ட காரணத்தினாலேதான் இது கிடைத்ததே ஒழிய இல்லா

விட்டால் கிடைத்திருக்காது ஏற்கனவே இருந்த அரசாங்கம் பயந்து இப்படி வற்புறுத்தாத காரணத்தினாலே தொடர்ந்து உரம் போதுமான அளவுக்குக் கிடைக்காத நிலை இருந்தது. நாம் கேட்கிறோம், அவர்கள் கொடுக்கிறார்கள் என்ற நிலைமை இப்பொழுது உருவாகியிருக்கிறது.

**திரு. கே. சகாதேவ கண்டர்:** தமிழ்நாட்டிலே உரப் பற்றாக் குறையை நீக்குவதற்காக சிறிய சிறிய உரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி உரப் பற்றாக்குறையை நீக்குவோம் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார்களே, அதை எப்பொழுது நிறை வேற்றுவார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு கிடையாது.

**கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சர்க்கரை முதலியவை விநியோகம்**

*43 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டிகளிடமிருந்து ரசாயன உரங்கள், சர்க்கரை முதலிய பல்வேறு பண்டங்களைத் தாலுகா கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டிகளின் மூலம் வழங்குவதற்கான திட்டம் ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சேலம், மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களிலுள்ள தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில கூட்டுறவுச் சங்கங்களையும் தவிர மற்ற எல்லா தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமும் இரசாயன உரங்களின் மொத்த வினியோகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கிராம நாணயச் சங்கங்கள் ஆரம்பக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் மட்டுமின்றி தாலுகா விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் சர்க்கரை வினியோகிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவரவர்களே, என்னுடைய கேள்வியின் தாத்பரியம் என்னவென்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் சொசைடியிலே விநியோகிக்கக்கூடிய உரம் டிஸ்டிரிக்ட் மார்க்கெடிங் பிராஞ்சுகளிலேதான், அதாவது ஐக்கிய நாணய சங்கத்தின் மூலமாகத்தான் விநியோகிக்கவேண்டுமென்று செய்யவேண்டும். தாலுகா மார்க்கெடிங் சொசைடிகளிலேயிருந்து விநியோகிக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் ஒரு சிலர் ஆதிக்கத்தின் கீழ் அவை வந்து அவர்கள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். ஆகவே, டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் பிராஞ்சு மூலமாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வியும் சரி, பதிலும் சரி. வேறு விளக்கம் கேட்கிறார்கள். உரம் வந்தவுடனே அதை சர்க்கார் பொறுப்பேற்றுக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் சொசைடிகளிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள் டிஸ்டிரிக்ட் மார்க்கெடிங் சொசைடிகள் அரசாங்கத்தின் சொந்த ஸ்டாக்கிஸ்டுகளாக அதை ஒப்புக்கொள்கிறார்கள். அது அங்கே செல்கிறது, அங்கேயிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள்தான் நிர்ணயிப்பார்கள், கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிப்பதில்லை. அதன்பிறகு தாலுகா மார்க்கெட்டிங் சொசைட்டிகள் விநியோகிக்கிறார்கள். எவ்வளவு வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்தான் நிர்ணயிக்கிறார். அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடிகள் மூலம் சப்ளை செய்கிறார்கள். இப்பொழுது நேரடியாக தாலுகா அளவிலேயே சப்ளையை ஏற்றுக்கொள்ளலாம் என்ற யோசனை இருக்கிறது, அதற்குரிய பணம் ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற யோசனையும் ஆலோசனையில் இருக்கிறது. இதைப்பற்றி மீண்டும் திருச்சியில் இம்மாதம் 27-ம் தேதி நடக்கும் கூட்டத்தில் முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறோம்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state
on what basis fertiliser and sugar are allotted to different districts மு. ப. 10-00
in this State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அலாட் செய்யும் உரத்தையும், சீனியையும் விநியோகம் செய்யும் உரிமை கூட்டுறவு இலாகாவினுடையது. எந்த அடிப்படையில், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று கூறும் பொறுப்பு உணவு இலாகாவுடையது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** உரம் மிகவும் முக்கியமானது. மாமியாரிடத்தில் மருமகள் நிற்பது போலவும், ஆண்டயிடத்தில் அடிமை காத்து நிற்பது போலவும், மத்திய சர்க்காரிடத்தில் மாகாண சர்க்காரும் மாகாண சர்க்காரிடத்தில் ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடியும், ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடியிடத்தில் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடியும் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடி காங்கிரஸ்காரர்களிடத்தில் இருக்கிறபடியால் ஐந்து வருஷத்திற்கு முன்னால் மாகாண ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சிபாரிசு செய்தும் எங்களுடைய தாலுகா சொசைடி—எங்கள் கட்சியினர் தலைமையில் உள்ளது—உரத்தை வாங்கி விற்பனை செய்ய முடியாதபடி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் தலைமை வகிக்கும் சொசைடிகளுக்கு மட்டுமே உரத்தை விநியோகிக்கிறார்கள். இந்த வேறுபாடு இல்லாமல் எல்லா சொசைடிகளுக்கும் கிடைப்பதற்கு வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதுள்ள விநியோக முறையை ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கிறார்கள். அரசியல் கட்சி வேறுபாட்டின் காரணமாக கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எழுதி அனுப்பினால் நிச்சயம் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

விட்டால் கிடைத்திருக்காது ஏற்கனவே இருந்த அரசாங்கம் பயந்து இப்படி வற்புறுத்தாத காரணத்தினாலே தொடர்ந்து உரம் போதுமான அளவுக்குக் கிடைக்காத நிலை இருந்தது. நாம் கேட்கிறோம், அவர்கள் கொடுக்கிறார்கள் என்ற நிலைமை இப்பொழுது உருவாகியிருக்கிறது.

**திரு. கே. சகாதேவ கண்டர்:** தமிழ்நாட்டிலே உரப் பற்றாக்குறையை நீக்குவதற்காக சிறிய சிறிய உரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி உரப் பற்றாக்குறையை நீக்குவோம் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார்களே, அதை எப்பொழுது நிறைவேற்றுவார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு கிடையாது.

**கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சர்க்கரை முதலியவை விநியோகம்**

*43 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டிகளிடமிருந்து ரசாயன உரங்கள், சர்க்கரை முதலிய பல்வேறு பண்டங்களைத் தாலுகா கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டிகளின் மூலம் வழங்குவதற்கான திட்டம் ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சேலம், மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களிலுள்ள தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில கூட்டுறவுச் சங்கங்களையும் தவிர மற்ற எல்லா தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமும் இரசாயன உரங்களின் மொத்த வினியோகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கிராம நாணயச் சங்கங்கள் ஆரம்பக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் மட்டுமின்றி தாலுகா விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் சர்க்கரை வினியோகிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவரவர்களே, என்னுடைய கேள்வியின் தாத்பரியம் என்னவென்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் சொசைடியிலே விநியோகிக்கக்கூடிய உரம் டிஸ்டிரிக்ட் மார்க்கெடிங் பிராஞ்சுகளிலேதான், அதாவது ஐக்கிய நாணய சங்கத்தின் மூலமாகத்தான் விநியோகிக்கவேண்டுமென்று செய்யவேண்டும். தாலுகா மார்க்கெடிங் சொசைடிகளிலேயிருந்து விநியோகிக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் ஒரு சிலர் ஆதிக்கத்தின் கீழ் அவை வந்து அவர்கள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். ஆகவே, டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் பிராஞ்சு மூலமாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வியும் சரி, பதிலும் சரி. வேறு விளக்கம் கேட்கிறார்கள். உரம் வந்தவுடனே அதை, சர்க்கார் பொறுப்பேற்றுக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் சொசைடிகளிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள் டிஸ்டிரிக்ட் மார்க்கெடிங் சொசைடிகள் அரசாங்கத்தின் சொந்த ஸ்டாக்கிஸ்டுகளாக அதை ஒப்புக்கொள்கிறார்கள். அது அங்கே செல்கிறது, அங்கேயிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள்தான் நிர்ணயிப்பார்கள், கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிப்பதில்லை. அதன்பிறகு தாலுகா மார்க்கெட்டிங் சொசைட்டிகள் விநியோகிக்கிறார்கள். எவ்வளவு வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்தான் நிர்ணயிக்கிறார், அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடிகள் மூலம் சப்ளை செய்கிறார்கள். இப்பொழுது நேரடியாக தாலுகா அளவிலேயே சப்பளையை ஏற்றுக்கொள்ளலாம் என்ற யோசனை இருக்கிறது, அதற்குரிய பணம் ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற யோசனையும் ஆலோசனையில் இருக்கிறது. இதைப்பற்றி மீண்டும் திருச்சியில் இம்மாதம் 27-ம் தேதி நடக்கும் கூட்டத்தில் முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறோம்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state on what basis fertiliser and sugar are allotted to different districts in this State? மு. ப. 10-00

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அலாட் செய்யும் உரத்தையும், சீனியையும் விநியோகம் செய்யும் உரிமை கூட்டுறவு இலாகாவினுடையது. எந்த அடிப்படையில், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று கூறும் பொறுப்பு உணவு இலாகாவுடையது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** உரம் மிகவும் முக்கியமானது. மாமியாரிடத்தில் மருமகள் நிற்பது போலவும், ஆண்டயிடத்தில் அடிமை காத்து நிற்பது போலவும், மத்திய சர்க்காரிடத்தில் மாகாண சர்க்காரும் மாகாண சர்க்காரிடத்தில் ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடியும், ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடியிடத்தில் தாலுகா மார்க்கெட்டிங் சொசைடியும் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஜில்லா மார்க்கெட்டிங் சொசைடி காங்கிரஸ்காரர்களிடத்தில் இருக்கிறபடியால் ஐந்து வருஷத்திற்கு முன்னால் மாகாண ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சிபாரிசு செய்தும் எங்களுடைய தாலுகா சொசைடி—எங்கள் கட்சியினர் தலைமையில் உள்ளது—உரத்தை வாங்கி விற்பனை செய்ய முடியாதபடி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் தலைமை வகிக்கும் சொசைடிகளுக்கு மட்டுமே உரத்தை விநியோகிக்கிறார்கள். இந்த வேறுபாடு இல்லாமல் எல்லா சொசைடிகளுக்கும் கிடைப்பதற்கு வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதுள்ள விநியோக முறையை ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கிறார்கள். அரசியல் கட்சி வேறுபாட்டின் காரணமாக கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எழுதி அனுப்பினால் நிச்சயம் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** இந்தச் சர்க்கரை விநியோகத்தைத் தனிப்பட்ட விநியோகஸ்தர்களிடத்தில் கொடுத்திருக்கும் காரணத்தால் அது பற்றி மக்களிடமிருந்து பல புகார்கள் வருகின்றன. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்ய வேண்டுமென்று இந்தச் சர்க்கார் வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுறவுச் சங்கங்கள் சரியாகச் செயல்படாத இடங்களில் மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் டிஸ்கா'ஷனாக, ஆங்காங்குள்ள நிலைமைக் கேற்றவாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் யார் யார் மூலம் கொடுக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டால் மக்களுக்குப் பாதகமாக அமையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுப்பதில் ஊழல் இருக்கிறது என்பதை எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள், அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். இந்தக் கூட்டுறவு சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களையாவது அமைச்சர் அவர்கள் மாற்ற முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாநில ஆட்சித் தலைவர் உரையைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டிருப்பார்கள். அது பற்றி ஆராய, இந்திய நாட்டிலே நல்ல நிலையில் இருந்த பெரிய அறிவாளி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் அங்கத்தினர்களை எல்லாம் சேர்த்து ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு விரைவில் செயல்படும். அப்போது கனம் அங்கத்தினர்கள் போன்றவர்கள் அவர்களுடைய கருத்தைக் குழுவினிடத்தில் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது மதுரை போன்ற சில மாவட்டங்களில் தாலுகா கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைடிகளில் உரம் சரியாக விநியோகிக்கப்படவில்லை என்று சொன்னார்கள், அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதற்கும் நான் முன்னாலேயே பதில் சொன்னேன். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள கூட்டுறவுப் பதிவாளர்களைக் கலந்து முடிவு செய்கிறார்கள். எந்தக் கூட்டுறவுச் சங்கமாவது சரியாக நடக்காவிட்டால் அதன் காரணமாக மக்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்ற முறையில்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Government have been making elaborate arrangements for distribution of fertilisers through marketing and other societies. But in practice these societies are not discharging their duties properly. Middle-class agriculturists, poor agriculturists and agriculturists in distant places are not able to get them. Will the Government think of supplying these fertilisers through Government mobile vans?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த ஆண்டு நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் ‘எங்களை உரம் கட்டாயமாக வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்; அந்தப் பணத்தை எங்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள்; உரம் வேண்டாம்’ என்று சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். எங்காவது உரம் தேவையென்று எழுதியனுப்பினால் ஏன் அங்கு கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தை அறிந்து கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகைகளைச் செய்யும்.

**திரு. வ. ஜார்ஜ்:** அமைச்சர் அவர்கள் கூட்டுறவு அமைப்பைத் திருத்தியமைப்பது பற்றி ஆராய ஒரு கமிட்டியை நிறுவியதாகக் கூறி இருக்கிறார்கள். கழிந்த கவர்னர் பேருரையின்போது இந்தக் கமிட்டி பற்றி அறிவிக்கப்பட்டு இப்போதுதான் தலைவரை நியமித்திருக்கிறார்கள். இதற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலே யார் யாரை பங்கு பெறச் செய்ய வேண்டுமென்ற முறையில் டில்லியில் உள்ள சில அறிஞர்களையும், பொருளாதார நிபுணர்களையும் சேர்க்க வேண்டுமென்று முடிவு செய்து அவர்களுக்குத் தனித் தனியாக எழுதி அவர்களுடைய அனுமதியைப் பெறுவதற்கு கொஞ்சம் காலம் ஆகியிருக்கிறது. அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்து தங்களுடைய முடிவைக் கூறுவதற்குக் கொஞ்சம் காலம் தர வேண்டியிருந்தது. அமைதியாகச் சென்றாலும் உறுதியாகச் செல்ல வேண்டுமென்பதுதான் நோக்கம். கனம் விநாயகம் அவர்கள் உட்கார்ந்துகொண்டே ‘உரம் வாங்கித்தான் தீர வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுகிறார்களா?’ என்று கேட்டார்கள். கட்டாயப் படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறதே தவிர, இந்த அரசாங்கம் கட்டாயப்படுத்தவில்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** உர விநியோகமாக இருந்தாலும் சரி, சர்க்கரை விநியோகமாக இருந்தாலும் சரி, விநியோகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் வாரிசு மாதிரி இருக்கிற காரணத்தால் தொடர்ந்து தவறுகள் நடந்து கொண்டே வருகின்றன. ஆகவே, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை விநியோக அனுமதியை மாற்றுவதற்கு வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** யார் எப்போது தவறு செய்தாலும் உடனடியாகக் கண்டித்து அனுமதியை ரத்து செய்யக் கூடிய அதிகாரம் இப்போதே இருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பாக எழுதி அனுப்பினால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

## தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு

*44 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் Post-Graduate course ஏற்படுத்தும் திட்டம் எவ்வளவு காலமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது?

(இ) எப்போது அத் திட்டம் செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ்-க்கு மேற்பட்ட படிப்பு ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் அரசினர் கவனத்தில் தற்சமயம் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்:** அடுத்த ஆண்டாவது இது பற்றிப் பரிசீலிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தற்சமயம் உத்தேசம் இல்லை.

## பழைய மாம்பலம் ஏரிக்கரை சாலை

*45 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை, பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடை அகலப் படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன்:** இது பற்றி அடுத்த ஆண்டாவது பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏரிக்கரைப் பாதையை அகலப்படுத்தும் பொறுப்பு மாநகராட்சியினுடையது. அவர்களைக் கேட்டபோது அந்த மாதிரித் திட்டம் எதுவும் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடைப் பற்றிய துணை வினா ஒன்றை மாண்புமிகு திரு. விநயகம் அவர்கள் கேட்பார்கள்.

**திரு. கே. விநயகம்:** பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடு என்னுடைய கான்ஸ்டிடுவன்சியைச் சேர்ந்தது. முன்பு அந்த ஏரிக்கரை ரோடில் அரசுப் பொறுப்பில் இருக்கும் பேருந்து வண்டிகளும் போகின்றன. ஒன்று போக இன்னொன்று வர அதற்கு வேண்டிய அளவுக்கு பாதை அகலமாக இல்லை. அதனால்





நம்முடைய பஸ்கள் அடிபட்டு நொறுங்கிப் போகாமல் இருப்பதற்காகவாவது "easy facility for traffic negotiation" என்ற அளவில் மறுபடியும் பரிசீலித்து ஒரு சில கட்டங்களை ஆர்ஜிதம் செய்தாவது, அந்த செலவை ஏற்றுக்கொண்டாவது இது பற்றி மறு பரிசீலனை செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கனம் உறுப்பினர் அவர்களுடைய பழைய பாசத்திற்காக மிகுந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற பேருந்து வழித் தடங்களை விரிவு படுத்துவதற்காகவும், சீர்படுத்துவதற்காகவும் மாநகராட்சிக்குக் கடனாகவும், மானியமாகவும் அரசு தொகை வழங்குகிறது. 1967-68-ம் ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் மானியமாகவும், 5 லட்சம் ரூபாய் கடனாகவும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் மாநகராட்சி மன்றத்தை அணுகி இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**DR. H. V. HANDE:** Sir, this particular area, Old Mambalam which happens to be in the constituency of our Hon. Minister for Public Works, is something like a Cinderella of the Madras City. It is a most neglected area and nobody is bothered to rectify the situation there. In spite of petitions sent to the Government—we have sent a petition to the Hon. Minister for Public Works also—and in view of the tragic situation there, will the Hon. Minister for Local Administration go a little out of the way and pull up the Corporation and see that it is rectified there? If the Corporation cannot do it, will he and the Hon. Minister for Public Works take some immediate and concrete steps in the matter?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** டாக்டர் ஹாண்டே அவர்கள் என் தொகுதிக்காக இவ்வளவு பரிந்து பேசுவதுபற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம்

*46 வினா.—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்யச் சென்ற கதர்போர்டு தணிக்கை ஊழியர்களை மேற்படி சம்மேளனத்தின் காரியதரிசி அனுமதி மறுத்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அரசும் கதர் போர்டும் மேற்கொண்டு கணக்குகளைத் தணிக்கை செய்ய எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

[1968 பிப்ரவரி 15

**திரு. ஏ. எம். ராஜா:** இந்தச் சம்மேளனம் சட்டப்படி கூட்டுறவுத் தணிக்கையில் வருகிறதா? ஆம் எனில், இதுவரை எவ்வளவு தடவை கூட்டுறவுத் தணிக்கை செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கூட்டுறவுச் சம்மேளனக் கணக்குகள் கூட்டுறவு தணிக்கையில் தணிக்கை செய்யப்படுகிறது. 1963-64-க்கு தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. 1964-65-க்கான தணிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** செங்கல்பட்டு மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அது எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அந்தக் கோரிக்கையின் மீது பரிசீலனை நடைபெற்று வருகிறது. பரிசிலனை முடிந்த பிறகு திட்டமான முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பதனீரிலிருந்து பனைவெல்லம் செய்தால் அதில் லாபம் இல்லை என்று அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களால் முடிவு செய்யப் பட்டு இப்போது அதைக் கள்ளாகவே விற்று வருகிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கச் செலவிற்காக இருக்கிற தனி நிர்வாகத்தை நீக்கிவிட்டால் அது அரசுக்கு லாபகரமாகக்கூட இருக்கும் என்ற கருத்தை ஏற்று அதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பனை மரங்களிலிருந்து எடுக்கப்படுகிற பதனீரிலிருந்து வெல்லம் தயாரிக்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஒரு வேளை கள் இறக்குவதற்காக அப்படிப்பட்ட சமாதானங்களைச் சொல்லக்கூடும். அதுபற்றியெல்லாம் திட்டமாக அறிவித்தால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** பனைவெல்லம் காய்ச்சுவது அவ்வளவு கட்டுபடியாகவில்லை என்று ஒரு உறுப்பினர் கேட்டார். அதற்கு அமைச்சர் அவர்களும் ஏதோ பதில் சொன்னார்கள். பதனீர் விற்பதற்கு பலயிடங்களில் எற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஒரு உறுப்பினர் ஏதோ கேட்டார் என்றும் அமைச்சர் ஏதேதோ சொன்னதாகவும் சொன்னார்கள். கேட்ட கேள்விக்கு உரிய விடை கொடுக்கப்பட்டி ருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதனீராகவும் விற்கப்படுகிறது, பனைவெல்லமாகவும் விற்கப்படுகிறது. கட்டு படியாகவில்லை என்று ஏதோ ஒரு குறை சொல்லப் பட்டாலும் பலயிடங்களில் அது நல்ல லாபகரமாக நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 15]

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** நஷ்டக்கணக்காக இருக்கிறதே என்பதற்காகத் தெரிவித்துக்கொண்டேனே தவிர வியாக்கியானம் செய்யவில்லையென்று தெதரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைப் போடுங்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** நான் கேட்கும்போது ஏதோ என்ற ஒரு வார்த்தையைச் சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதேதோ என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். ஏதோ என்று சொன்னது நஷ்டக் கணக்காக இருக்கிறதே என்ப தற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனா?

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பனை ஏறுகிற தொழிலுக்கு லைசென்ஸ் முறை வைத்திருக்கிற காரணத்தினால் அனாவசியமான முறையில் அந்த ஏழைத் தொழிலாவர்கள்மீது சந்தேகக் கேஸ்கள் போடுகிற வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, அந்த முறையை ரத்து செய்ய வேண்டுமென்று பலமுறை இங்கு கேட்டும் இதுவரை செய்ய வில்லை. ஆகவே இந்த லைசென்ஸ் முறையை ரத்து செய்ய நமது அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இதுபோன்ற அனுமதிகள் வழங்கப்படுகிற நிலையில் கூட குறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதுவும் இல்லை என்ற நிலை ஏற்படு மானால் அந்தக் குறை மேலும் அதிகமாகிவிடும் என்ற அச்சம் காரணமாக அது அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லப் படுகிறது. வழங்குவதில் உள்ள நிர்வாகச் சிக்கல்களைக் கவனத் திற்குக் கொண்டு வருவார்களானால் அவற்றை உடனடியாகத் தீர்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதை ரத்து செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### உலகத் தொழில்-பொருட்காட்சிக்கு அழைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு அறிவிப்பு. சென்னையில் அறிஞர் அண்ணா நகரில் நடைபெறுகிற உலகத் தொழில்-பொருட் காட்சிக்கு வருகை தரவேண்டுமென்று பேரவை உறுப்பினர்கள் எல்லோரையும் பொருட்காட்சித் தலைவர் அவர்கள் அழைத் துள்ளார்கள். எனவே, 16-2-1968; 17-2-1968 இரண்டு நாட்களிலும்

மாலை ஐந்து மணிக்கு பொருட்காட்சிக்குப் போக வரவும், பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருட் காட்சித் தலைவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ள விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைச் செயலாளரிடம் நாளைக் காலை ஒன்பது மணிக்குள் தெரியப்படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 8. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் அவர்களின் பேருரையின்மீது விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. பத்து நிமிடங்கள் என்ற காலவரையறைக்குள் உறுப்பினர்கள் அருள் கூர்ந்து உரையாற்றும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் ஆளுநர் அவர்களின் உரையின்மீது சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பல வருடங்களாக இம் மன்றத்தில் ஆளுநர் உரையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதன்மீது விவாதங்களும் நடத்தி வந்திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு உரை மற்ற ஆண்டுகளைவிட நல்ல முறையில், அத்தனை பேர்களும் வரவேற்கத்தக்க அளவிற்கு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அந்த உரையில் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் தேவைப்படுகிற அத்தனையும், சிறப்பாக மூக்காலங்களையும், பற்றிக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால்—ஒரு சிலர் வேண்டாதவர்கள் அதைக் குறை சொல்வதும் எங்களைப் போன்றவர்கள் இருப்பதை எடுத்துச் சொல்வதும் என்ற முறையில் இருப்பதை எடுத்துச் சொல்லி இதில் சொல்ல விட்டு விட்டதை அரசாங்கத்திற்கு நினைவுபடுத்துவதும் எங்கள் கடமை என்ற காரணத்தினால் நானும் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில், (1) உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, (2) மொழி, (3) விவசாயம் இவைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது எனக்கு முன் பேசியவர்கள் நாட்டின் நிலைமைபற்றியும், கொள்கைகள் பற்றியும், நாட்டு மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பது பற்றியும் இப்படிப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி விட்டால் நானும் அவை பற்றி பேசிக்கொண்டு போவது நலன் பயக்காது என்பதினால் சில முக்கியமான கருத்துக்களை அதிலும் குறிப்பாக என் தொகுதி பற்றிய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது அரசு விவசாயத்திற்கு முதலிடம் தந்து, விவசாயிகளினுடைய மனம் புண்படாமல் இருப்பதற்கு அவர்கள் என்னென்ன கருதுகிறார்களோ, அவர்கள் என்னென்ன கேட்கிறார்களோ, அத்தனையையும் அரசாங்கம் ஏற்று அவர்களுக்கு உறுதுணையாக இருந்து விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற காரணத்தால், விவசாயத்திற்குப் புதிது புதிதாக எந்தெந்தக் கோணங்களிலே விவசாயத்தைப் பெருக்குவதற்குக் கடன் வேண்டுமோ அத்தனையையும் தருகிறார்கள்.





அதே நேரத்திலே நாட்டிலே இதுவரைக்கும் இல்லாத, பரம்பரையாக செய்த விவசாய பழக்க வழக்கங்களையெல்லாம் மாற்றி இன்றையதினம் புதிதாக எஞ்சின்கள் மூலம் விவசாயத்திற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அறிகுறிகள் எல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே விவசாயம் பெருக வேண்டும், விவசாயம் பெருக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலையிலே மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு கூறும் இதைதான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நெல்லின் விலையை ஏற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்கள், அதே நேரத்திலே நாடு பூராவும் படி அரிசி போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது பொருளாதரம் என்கிறார்கள். ஆனால் நான் பொருளாதாரம் படிக்கவில்லை. இருந்தாலும், என்னுடைய அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன். நெல் மூட்டைக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதே நேரத்திலே படி அரிசி போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது எப்படிச் சாத்தியமாகும்? வேண்டுமானால் டெக்னிக்கல் பாயிண்ட் என்று சொல்லி கொண்டிருக்கலாமே தவிர, என்னைப் பொறுத்தவகையில் விவசாயத்தில் அனுபவமுள்ளவர்களை சரிக்கட்ட முடியாது. பதில் சொல்வது முடியாது என்பதைத் தயவுசெய்து அந்தக் கருத்தை வலியுறுத்தும் நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே உங்கள் வாதப்படியே வந்தாலும் எங்களைப் பார்த்து எல்லா இடங்களிலும் படி அரிசி ஏன் போடவில்லை என்று சொல்கிறீர்களே தவிர நீங்கள் ஏன் அதைகூட செய்யவில்லை என்பது ஒரு கேள்வி, சரி, வாதப்படியே நீங்களும் சொல்வதாக வைத்துக்கொள்வோம். நாங்களும் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த அளவுக்கு நீங்கள் என்ன வைத்து விட்டுப் போனீர்கள். 400 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு போனீர்கசிள். அதிலும் சென்ற மார்ச் மாதம் 6-ஆம் தேதி அரசு பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நேரத்திலே ஒரு நாள் உணவைக் கூட வைத்து விட்டுப் போகாத நீங்கள் இன்றைக்கு எங்களைப் பார்த்து ஒரு படி அரிசி எங்கே, ஒரு படி அரிசி எங்கே என்று மூலை முடுக்குகளிலெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். படித்தவர்கள் எப்படி ஒப்புக்கொள்ளுவார்கள்? இதுதான் எங்கள் பிரச்சனை. நீங்கள் சொல்லுகிறபடி வாங்கிக் கொடுப்பதாக வைத்து கொள்வோம். பணம் ஏது? 400 கோடி ரூபாய் கடனை வைத்து விட்டுப் போயிருக்கிறீர்கள். இப்போது இருக்கும் வரியை வாங்கினால்கூட இருக்கிற செலவைச் சரிக்கட்டலாமே தவிர அதிக நெல் வாங்க என்ன வழி? எங்கே இருக்கிறது வழி? இது தெரியாமல் எதையாவது சொல்ல வேண்டுமென்ற அடிப்படையிலே, ஏழை எளியமக்களிடையே பேசி வருகிறார்கள். பட்டத்திலும், கோயம்புத்தூரிலும் மட்டும்தான் படி அரிசியா? மற்ற கிராம மக்களுக்கு வேண்டாமா? கிராமத்திலே உள்ளவர்கள் யாரும் படி அரிசி சாப்பிடக் கூடாதா என்று பிரச்சினையை இனிமேலாவது விட்டு

விட வேண்டும். காரணம், சென்ற ஆண்டிலேயே கவர்னர் உரை மீது படி அரிசிக்குப் பதில் சொல்லித் தீர்த்தாகிவிட்டது. தொடர்ந்து இந்த ஆண்டும் படி அரிசி, படி அரிசி என்று சொல்லிக் கொண்டே இருந்தால் நேரம்தான் வீணாகுமே தவிர எடுக்கும் முயற்சியிலே பலன் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

அதே நேரத்திலே சில மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பிரச்சினையைத் தொடும்பொழுது சண்டை போட்டுக்கொள்வது மாதிரி தொடுகிறார்கள். நாம் எந்த நோக்கத்துடன் இந்த மன்றத்திற்கு வந்தோமோ அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து எண்ணுகிற எண்ணத்தை நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டுமே தவிர தொகுதியிலே இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது. நேரிடையாக இதை அவர் சொன்னார், அதை இவர் சொன்னார் என்று கூறிக் கொண்டிருப்பதால் நேரம்தான் வீணாகும். அவர்களுக்குப் புத்தி சொல்வதாகச் சொல்லவில்லை. சண்டை போடுவது மேடையிலேயே இருக்கட்டும். அதே மாதிரியே இங்கும் வைத்துக்கொண்டால் தொகுதிக்குச் செய்ய வேண்டுமென்று நினைத்தது, சொல்ல நினைத்தது எல்லாம் போய் நேரமும் வீணாகி சொல்வதற்கும் செய்வதற்கும் வழியில்லாமற் போய்விடும். மற்றவர்களின் நேரத்தையும் கெடுத்து விடுகிறார் களே என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்த அளவில் இரண்டு பிரச்சனைகள் இதில் வரும் என்று நினைத்தேன். தயவு செய்து குறை கூறுவதாகக் கருத வேண்டாம். வருகிற பட்ஜெட்டிலேயாவது சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எனது வேண்டுகோள். ஒன்று வானூர் தொகுதியிலே 25,000 ஏக்கர் நில விஸ்தீரணமுள்ள ஒரு இடம் நீண்ட காலமாக இருக்கிறது. கழிவெளி, ஸ்வாம்ப் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலங்களிலே அரசாங்கத்தின் முயற்சி இல்லாமலேயே அண்டை கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகள் சொந்தமாகவே பயிரிட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். இதில் அரசாங்கம் அதிகார பூர்வமாக செய்து ஏதாவது பலனைக் கண்டு பிடிக்க வேண்டும். விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்கு 25,000 ஏக்கர் உள்ள ஒரு சதுரமான இடம் இருக்கிறது. வேறு என்ன வேண்டும்? குறைந்த நீர்ப் பிடிப்பு என்று 5 ஏக்கர், 10 ஏக்கர் அல்லது 100 ஏக்கரா போனாலும் சரி, மீதி இருக்கிறதே, இது சம்பந்தமாகப் பல முறைகள் அரசாங் கத்தின் கவனத்திற்கும் கொண்டுவந்து, மனுக்கள் கொடுத்தும் இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்று 1962-லிருந்து சொல்லிக்கொண்டே வருகிறார்களே தவிர பரிசீலனை எப்போதுதான் முடியப் போகிறதோ தெரியவில்லை இப்பொழுதாவது அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டி, செய்வோம் அல்லது செய்ய மாட்டோம் என்று சொல்லிவிட்டால் பொது மக்களுக்கு நான் சொல்ல வேண்டிய பதிலும் தீர்ந்துவிடும் என்ற காரணத்தால் அதை வலியுறுத்துகிறேன்.





எனது பகுதி பாண்டிச்சேரி பார்டர். அங்கு அரவிந்த ஆஸ்ரமம் என்று அமைத்துக் கொண்டு அதில் இருக்கிறார்கள். அவர்கள் அகில உலகத்திலிருந்தும் 50,000 ஜனத்தொகையை இறக்குமதி செய்து ஆரவல்லி நகர் என்று ஏற்படுத்தி அதை உலக நாடு போல் உண்டு பண்ணுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்ப தாகப் பல ஆதாரமற்ற செய்திகளைக் கேட்கிறோம். சில பத்திரி கைகளிலேகூட பார்த்தேன். பத்திரிகைக்காரர்கள் கூட இதை எப்படி எழுதுகிறார்கள் என்று தெரியவில்லை. அங்கேயே நான் இருக்கிறேன். எனக்குக் கூடத் தெரியவில்லை. பத்திரிகைக்காரர் கள் அங்கு நேரில் பார்த்தது மாதிரியே எழுதுகிறார்கள். பத்திரி கைகள் இருப்பவைகளைச் சொல்வதுதான். 50,000 பேர்களை வெளிநாடுகளிலிருந்து அங்கே கொண்டு வந்து இறக்குவதாய் இருந்தால் அங்குள்ளவர்களை எங்கே வெளியேற்றுவது ? இதற்கு யாராவது பதில் சொல்ல வேண்டாமா ? என்னைப் பார்ப்பவர்கள், அமைச்சர்களைச் சந்தித்தோம், இசைவு தருகிறார்கள், நீங்கள் மட்டும் ஏன் மறுக்கிறீர்கள் என்கிறார்கள். அமைச்சர்களைக் கேட்டால் அந்த விவரமே எங்களுக்குத் தெரியாது, பத்திரிகை களிலேதான் பார்த்தோம், மத்திய அரசாங்கத்தின் உதவியோடு நடக்கிறதோ என்னவோ என்று சொல்லுகிறார்கள். அப்படி ஏதாவது நிலைமை உருவாகுமானால், உங்கள் தொகுதி விஷயத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் என்னச் செய்யப் போகிறோம் என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் கூறும் விஷயமாக இன்னும் முதலமைச்சர் அவர்கள் அனுமதி தரவில்லை. வெளியிலே செல்கிற நேரத்திலே விவசாயிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பதை அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறேன். அந்தப் பகுதி விவசாயிகள் கூட முதலமைச்சரவர்களிடத்தில் இதுபற்றித் தெரிவிக்கவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தி மூலம் தெரிகிறதே தவிர அதிகார பூர்வமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மேலும் முதலமைச்சர் அவர்களிடத்தில் இது பற்றிப் பேச நிறைய வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்ச முற்பகல் 10-30
ருடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த அரசாங்கம் போகிற போக்கிலே அது எதைச் செய்கிறதோ, எதைக் கூறுகிறதோ அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதில் மத்திய அர சாங்கத்தினுடைய அனுமதி என்று ஒரு வார்த்தை இருப்பதி னாலே தான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நிலம் நம் முடைய நிலம். பாதுகாக்கப்பட வேண்டிய பொதுமக்கள் நம் மக்கள். அதில் மத்திய அரசாங்கம் தலையிடுவானேன். ஆர வல்லியிலே அது தலையிடுவானேன் என்பது தான் என்னுடைய வருத்தமான கேள்வி. இந்த நிலையிலே மத்திய அரசாங்கம் தலையிட்டாலும் சரி, அல்லது வேறு எந்த நாடு தலையிட்டாலும் சரி. அல்லது அவர்கள் போற்றுகின்ற ஆண்டவனே வந்து தலை யிட்டாலும் சரி, நாடு நம் நாடு, இடம் நமது இடம், அந்த இடத்

*மனை வேண்டுமென்று கேட்ட அந்த இடத்தைக் கூட விட யாட்டோம் என்று ஸ்டே வாங்கிவிட்டவர்கள் எப்படி வீடு கட்டித் தருவார்கள் என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்து விட்டால் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மாண்புமிகு பேரவைத் தலைவர் மணி அடிக்க உறுப்பினரைப் பார்த்த பொழுது) மத்தியிலே அமைச்சரவர்கள் குறிப்பிட்டதால் கொஞ்சம் நேரமாகிவிட்டது.*

*இந்த நிலையிலே இந்த ஆரவல்லி நகரை அமைப்பதன் மூலம் அங்குள்ள மக்களுக்கு எந்த வித பாதகமும் ஏற்படாது என்ற முறையில் அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டால் எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனது வானூர் தொகுதியிலே இருக்கிற 25,000 ஏக்கர் நிலத்தைப் பயிர் செய்வதற்கு வேண்டிய கிணறுகளுக்கு வேண்டிய பம்ப் செட்களுக்கு மின்சார வசதி செய்து அந்த நிலங்களில் பயிர் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் இந்த மின்சாரத்தைப் பொறுத்த வரையிலே, அவர்கள் பம்ப் செட் அமைப்பதற்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தத்தில் யூனியனுக்கு 5 மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்கோ அல்லது 6 மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்கோ தான் நிதி வசதி அளிக்கப்படுகிறது. அவ்வளவு பெரிய நிலப் பகுதி உள்ள இடத்திற்கு மின்சார பம்ப் செட்டுகள் வாங்குவதற்குக் கடன் உதவி தாராளமாகக் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.*

** ஹாஜி. ம. மு. பீர். முஹம்மது* · *நாம் தமிழர்! ஆம். நாம் தமிழர் என்ற நல்லற உணர்ச்சியை தமிழ்ப் பெருமக்களின் ஊனிலும், உயிரிலும், உணர்விலும் ஊட்டி வளர்த்த பெருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே! நமது தமிழ்நாடு ஆளுநர் உரைமீது நன்றி தெரிவித்துப் பேசும் வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். — —*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைத் தலைவரை இகழ்ந்தும் பேசக் கூடாது; புகழ்ந்தும் பேசக் கூடாது.*

*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நாடாளு மன்றமாகவும் இந்திய அரசியல் அமைப்பவையாகவும் சேர்ந்து செயல்பட்ட நேரத்தில் அம்மாமன்றத்தில் இந்தியாவை ஒன்றுபடுத்தி ஆண்ட பெருமையுடைய ஆங்கிலத்தையே அனைத்து இந்தியத் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளலாம். அது வெளிநாட்டு மொழியாக இருப்பதால் வேண்டாம். நம் நாட்டு மொழி ஒன்றுதான் வேண்டுமென்று கூறுகிறீர்களா? அப்படி என்றால் இலக்கண வரம்பும் இலக்கியச் செறிவும் தனித் தியங்கும் தன்மையும் தரணி ஆண்ட பாரம்பரியத்தையும் தனக்கே உரித்தாக்கிக் கன்னடத்தையும் களி*





*தெலுங்கையும் கவின் மலையாளத்தையும் துளுவையும் தனது சேய் மொழியாகக் கொண்டுள்ள என் தாய்மொழியாகிய இன்பத் தமிழ் மொழியை இந்தியத் துணைக் கண்டத்தின் இணைப்பு மொழியாகக் கொள்ளுங்கள் என்று அறைகூவல் இட்ட இந்திய தேசிய மைனாரிட்டி மக்களின் தந்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் அல்ஹாஜ் காயிதே மில்லத் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் தலைமையைப் பெறும் பாக்கியம் பெற்றுள்ள நான் உலகளாவி பெருமை படைத்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை கற்றவர்களும் மற்றவர்களும் கண்டு மகிழும் வண்ணம் நடத்துவதற்குத் துணைநின்ற அமைச்சர் பெருமக்களையும் அதற்குழைத்த தமிழ் அன்பர்களையும் பாராட்டியவனாக எனது நன்றியுரையைத் துவக்குகின்றேன்.*

*இன்பத் தமிழ் நாட்டிற்குத் தமிழ்நாடு என்றும், கொஞ்சுகின்ற ரஞ்சிதமான கோலத் தமிழ்தான் அனைத்து இடங்களில் கோலோச்சும், இந்தியத் துணை கண்டத்துடனும் அனைத்துலகோடும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் பயன்படுத்திக் கொள்ளப்படும் என்ற காலத்தால் வேண்டப்பட்ட கருத்திற்குகந்த நல்ல முடிவை மிகத் துணிவுடன் இம் மாமன்றம் நிறைவேற்றியுள்ளதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். நமது மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களும் தங்களது உரையில் அதைச் சிறப்புடன் கூறியுள்ளதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம் நாடு விவசாய நாடாக இருந்தும், கடந்த காலத் திட்டங்களில் கனரகத் தொழில்களுக்கும் பெரிய நீர்பாசனத் திட்டங்களுக்கும். . . .*

THIRU V. GEORGE : I request the Speaker to give a ruling as to whether a member is entitled to read a written speech, because it will amount to reading anybody's opinion. Especially the Member concerned is an experienced Member who can make an effective speech even without reading a written matter.

MR. SPEAKER : The rule is that a member cannot read a speech, but he can refer to notes for the purpose of making the speech.

*ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : என்னுடைய குறிப்பை அடிப்படையாக வைத்துத்தான் நான் பேசுகிறேன். எந்த நிலையிலும், எந்தப் பிரச்சினையைக் குறித்தும் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றவன் நான் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்களுக்கு மிகவும் நன்றியோடு தெரிவித்துக்கொள்வதுடன் எனது பேச்சைத் தொடர்கின்றேன். கனகரகத் தொழில்களுக்கும், பெரிய நீர்பாசனத் திட்டங்களுக்கும் நம்முடைய பழைய அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்த காரணத்தினால் நமது வேளாண்மைத்துறை அதிக வளம் காண முடியாது போய்விட்டது என்ற உண்மையை உணர்ந்து, நமது அரசு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்துள்ளதை வரவேற்கின்றேன்.*

திலே குடியிருக்கிற விவசாயிகள் நமது மக்கள். அவர்களுடைய நிலமாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் என்ன வேண்டுமென்று கருதுகிறார்களோ . . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துப் பற்றிய விளக்கம் கூறுவதற்கு நான் வந்துள்ளேன். பாண்டிச்சேரிக்குப் பக்கத்திலே, ஆரவல்லி என்கிற உலக நகர் ஒன்று உருவாவதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரவல்லி என்கின்ற நகர் உலக நகராக அமைவதற்கு ஏற்ற முறையில் உலகத்திலே முதல் முறையாக தமிழ் நாட்டிலே தான் பெற இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் அவை முடிவு எடுத்ததற்கிணங்க அந்த நகரை இந்தியாவிலே பாண்டிச்சேரிக்குப் பக்கத்திலே, தமிழகத்திலே அமைக்கலாம் என்றும் அதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளலாம் என்றும் ஒரு முடிவுக்கு வரப்பட்டது. உலக நகர் அமைக்கப்படுவதிலே முதல் முயற்சியாக ' இண்டர் நேஷனல் சிட்டி ' என்ற பெயரில் இது அமைக்கப்பட இருக்கிறது. உலகத்தில் இருக்கிற எல்லா நாடுகளும் இதிலே பங்கு பெற்று எப்படி பொருட்காட்சியிலே ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு நாடும் தனித் தனி ' பெவிலியன்-கள் ' அமைக்கின்றதோ அதைப் போல இந்த நகரை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அவை திட்டமிட்டிருக்கிறது. அதற்கு ஏற்கனவே இருந்த அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த அரசும் அதை ஆதரிக்கின்ற முறையில் அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இதனால் ஏற்படுகின்ற லாபம் என்ன என்று பார்த்தால் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாயாகும். உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் எல்லா பகுதிகளிலிருந்தும் உள்ளவர்கள் அமைக்கப் போகிற இந்த நகருக்கு அவரவர்கள் தங்கள் தங்களுக்கென்று அமைக்கப் போகும் பகுதிக்கு அவரவர்களே செலவை ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள். தமிழகமும் தங்களுக்கென்று ஒரு ' பெவிலியன் ' ஒரு பகுதியை அங்கு அமைக்க இருக்கிறது. அங்கேயே பல்கலைக் கழகங்கள், கலைக் கூடங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவ மனை, வாணிகக் கூடங்கள், விளையாட்டு நிலையங்கள் உட்பட எல்லாவற்றையும் ஏற்படுத்தி, எதிர்காலத்திலே 'ஃப்ரீ போர்ட் ' என்று சொல்லக் கூடிய அளவிலே அந்த இடத்தை மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உலகத்திலேயே சிறப்பான தன்மையில் அமையப் பெறும் என்ற அளவிலும், 2 கோடி ரூபாயைக் கொண்டு அமைக்கப்பட இருக்கிறது என்ற அளவிலும் இந்த அரசாங்கம் அதில் ஈடுபட்டிருக்கிறது. அந்த இடத்திலே உள்ள நிலங்களும் கரம்பு நிலங்களாகவும் மற்ற உபயோகமற்ற நிலங்களாகவும் இருக்கின்றன. சிலபல பகுதிகளிலே மட்டும் குடியிருப்புகள் இருக்கின்றன. குடியிருப்புகளுக்கு வேண்டிய வீடுகளைப் பக்கத்திலேயேக் கட்டித் தருகின்றன முழுப் பொறுப்பையும் இந்த ஆரவல்லியை அமைக்கிறவர்கள் ஏற்றிருக்கிறார்கள். அந்தக் குடியிருப்புகளில்





இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பையும் அந்த ஆரவல்லி நகரிலேயே தருவதற்கு அதன் அமைப்பாளர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 2 கோடி ரூபாய் செலவிலே ஒரு நகரம் அமைக்கப்பட இருப்பதால், வேலை வாய்ப்புகள் ஏராளமாக அங்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதிலும் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்குக் கொடுத்து விட்டுத் தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் அந்த ஆரவல்லி நகரத்தை உருவாக்குகிறவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே 28-ம் தேதி அன்று அதன் துவக்க விழாவை வைத்துள்ளார்கள். 56 நாட்டிலிருந்து அந்த அந்த நாட்டினுடைய மண்ணை அந்த அந்த நாட்டுக் குழந்தைகள் கொண்டு வருகிறார்கள். அந்த 56 தேசத்திலிருந்து குழந்தைகளால் கொண்டு வரப்பட இருக்கின்ற அந்த அந்த தேசத்தினுடைய ஒரு பிடி மண்ணை அந்த ஆரவல்லி நகரிலே ஒரு குழியிலே போட்டு, அந்த நகரை உருவாக்குவதற்கான நிலையில் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆகவே, அந்த நகரம் நமக்கும் தமிழகத்திற்கும் அனுகூலமாக அமைய முடியும். அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு எந்த விதக் குறைபாடுகளும் ஏற்படாமல் நிறைபாடுகள் ஏற்படுகிற அளவில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. என்ன செய்தாலும் சரி, அங்கே இருக்கிற ஏழை விவசாய மக்களை அங்கிருந்து எங்கே அனுப்புவது என்பது தான் என்னுடைய சந்தேகம். அங்குள்ளவர்களுக்கு அருகிலேயே வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் அந்த ஆரவல்லி நகரை அமைக்கப் போகிறவர்களே ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கேள்வி என்னவென்றால், நமது நாட்டைப் பொறுத்த அளவிலே ஒரு குடும்பத்திலே 10 பேர் இருந்தால், அவர்களிலே எத்தனை பேர் வேலை செய்கிறார்கள், எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பது என்னுடைய சந்தேகம். வேலை செய்பவர்களுக்குத் தான் வேலை கொடுக்கப் போகிறார்கள். கிழம் கட்டைகளுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. அவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை இந்த அமைச்சரவை ஏற்றுக் கொள்ளுமானால் எனக்கு ஆட்சேபணை இல்லாத முறையிலே அதை விட்டு விடுகிறேன்.

இந்த ஆரவல்லி ஆசிரமத்தை ஏற்பாடு செய்தவர்களைப் பற்றி மற்றொரு சந்தேகமும் எனக்கு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே பாப்பாஞ்சாவடி என்ற ஒரு கிராமத்திலே ஹரிஜனங்களுக்கு மனைகள் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே கெஜட் நோடிபிகேஷன் பண்ணியாகிவிட்டது. ஆனால் அப்படி பாஸ் ஆகி விட்ட பிறகு அமைச்சரவையிடத்திலே வந்து அதன் உரிமையாளர்கள் நாங்கள் அந்த இடத்தைக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். அந்த ஸ்டே இன்று வரைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஹரிஜனங்கள்

அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தில் கடனாநதி-இராம நதி நீர்த்தேக்கத் திட்டங்கள் தேக்கிவைக்கப்படாது விரைந்து நடைபெற்றுவருவதைப் பாராட்டி, அது முடிந்தவுடன் நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் நெல்லை மாவட்ட விவசாயக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு, நல்ல பயன் உள்ள திட்டம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பச்சையாற்று நீர்த்தேக்கத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கி ஆரம்பித்துவிடுவதன் மூலம் அதிக உணவுப் பொருள் உற்பத்திக்கு ஊக்கமளிக்க வேண்டுகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், ஊராட்சி ஒன்றியங்கள் டிராக்டர்களை வாங்கிக் குறைந்த வாடகையில் உழவர்வர்களுக்குக் கொடுத்து உதவச்செய்துள்ளதை நன்றியுடன் நினைவு கூர்ந்து, அதே போன்று ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு புல்டோசரை அரசு வாங்கிக் கொடுத்து, தூர்ந்து மேடு தட்டியுள்ள குளங்களை ஆழப்படுத்தும் பணிக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காண நமது அரசு முயற்சித்தால், குளங்கள் ஆழமாகி நீர் நிலை பெருகும், உணவு உற்பத்தி அதிகப்படும். அத்துடன் இப்பொழுது கடனாநதி-இராம நதி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் புல்டோசர்களை அவைகளுக்கு வேலை இல்லாத நாட்களில் அப் பகுதியில் உள்ள மேட்டு நிலங்களைப் பள்ளமாக்கவும், குளங்களை ஆழப்படுத்துவதுமான ஆக்க வேலைகளுக்குக் குறைந்த வாடகையில் கிடைக்கச் செய்தால் அப் பகுதி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்வர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்த வரையில் இரண்டாவது பெரிய தொழில் கைத்தறி ஜவுளி உற்பத்தித் தொழில். அத் தொழில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையையும், ஜவுளி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள தேக்கத்தையும் நீக்கும் முகத்தான் நமது பெருந்தலைவர்களான அறிஞர் அண்ணாவும், தந்தை காயிதே மில்லத்தும், பெருமைக்குரிய இராஜாஜி அவர்களும் கூறிவந்துள்ள வேஷ்டி, துண்டு, சேலை ஆகிய ரகங்களின் உற்பத்தியைக் கைத்தறிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யும் உரிமை வழங்க, நமது மத்திய அரசை ஈடுபடச் செய்ய, கைத்தறியாளரிடம் அதிக அக்கறை கொண்டுள்ள நம் அரசு முயற்சிப்பதுடன், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்களின் எதிர்கால நலனை உத்தேசித்து வேறு தொழில் துறைகளில் ஈடுபட வாய்ப் பளிக்கச் செய்வதுடன், கைத்தறித் தொழிலுக்கு என்று தனியொரு அமைச்சரை அமைச்சரவையில் இடம் பெறச் செய்ய வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டில் இருக்கிற தொழில் பீடித் தொழில். ஏராளமான பெண்களும், குழந்தைகளும், பிறரும் ஈடுபட்டுள்ள ஒரு தொழில் பீடி சுற்றும் தொழில். அத் தொழிலாளருக்குரிய குறைந்த அளவு கூலி நிர்ணயத்திற்காக வேண்டி ஏறக்





குறைய நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பழைய ஆட்சியினர் ஒரு குழுவை நியமித்தனர். அதனுடைய முடிவு இன்று வரையிலும் வெளிவரவில்லை. அத்துடன் அத் தொழிலில் ஈடுபட்டுள்ளாரில் அதிகம் பெண்களாக எம் மாவட்டத்தில் உள்ளனர். பீடிசக்கரவர்த்தினி கூட எங்கள் மாவட்டத்தில் முதலாளியாக உள்ளார். இந்நிலையில் விலைவாசி ஏற்றத்திற்கு இணங்க அவ்வப்போது கூலி நிர்ணயம் செய்து அதை அமல் நடத்துச் செய்ய, பீடித் தொழில் முதலாளிகளையும் தொழிலாளிகளையும் கொண்ட ஒரு நிரந்தரக் குழு அமைக்க ஆவன செய்ய நம் அரசை வேண்டுகின்றேன். காரணம், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பப் பெண்கள் கூலி உயர்விற்காக வேண்டி கிளர்ச்சியோ, புரட்சியோ, செய்ய இயலாதவர்கள்.

ஈழத்திலிருந்து புதிய அகதிகள் வந்து சேருவதற்கு முன்னால், பர்மாவிலிருந்து வந்துள்ள பரிதாபத்திற்குரிய அகதிகளுக்கு வீட்டு வசதியும், வேலைவாய்ப்புகளும் செய்து, விரைவில் கொடுப்பதுடன், அவர்கள் தம் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகையும், பிற சலுகைகளும் கிடைக்கச் செய்ய நம் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்வதுடன், ரூ. 500 என்றும், ரூ. 2,000 என்றும் வணிகத்தில் ஈடுபடுவதற்குக் குறைந்த அளவு கடன் கொடுக்காது பாகிஸ்தானில் இருந்து வந்துள்ள அகதிகளுக்குக் கிடைத்த சில சலுகைகளும், சில ஆண்டுகளுக்கு வரி விதிவிலக்கு உரிமைகளும் கிடைக்கச் செய்து, குறைந்தபட்சம் வியாபாரம் செய்வோருக்கு ஒரு ஐந்தாயிரம் ரூபாயாவது உதவிநிதிக் கடன் கிடைக்கச்செய்வதோடு, பர்மாவில் விட்டுவந்துள்ள அவர்களது சொத்துக்களுக்கு விரைவில் இழப்பீட்டுத் தொகை கிடைக்க மத்திய அரசை தூண்டவும் வேண்டுகின்றேன்.

எல்லா சமயத்தினரும், சமூகத்தினரும் உண்டு வருகிற உணவுப் பொருள்களில் இன்றியமையாத பொருள் ஒன்று ஆட்டு இறைச்சியாகும். நமது மாநிலத்திலிருந்து பக்கத்து மாநிலங்களுக்கு ஆடுகள் வாங்கிச் செல்வது அதிகப்பட்டுள்ள காரணத்தால் கசாய் வர்த்தகர்களும், வாங்கி உண்போரும் அதிக விலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத் தடை செய்யும் உரிமை நமது மாநில அரசிற்கு இல்லை என்பதை நான் அறிவேன் என்றாலும், விற்பனை வரியிலிருந்து விலக்களித்துள்ள சில்லரை ஆட்டிறைச்சி வியாபாரிகளுக்கு ஒரு நெருக்கடி இப்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ளது. தங்களது பகுதிகளில் ஆடுகள் விலை அதிகம் உள்ளதால் 50 மைல், 100 மைல் தொலைவில் உள்ள சிற்றூர்களுக்கு நான்கைந்து சில்லரை வியாபாரிகள் சென்று ஆடுகளை வாங்கி ஒரு லாரியின் மூலம் கொண்டு வரும் வழியில் மொத்தமாக லாரியில் ஆடுகள் உள்ளன அதனால் மொத்த வியாபாரத்திற்குத்தான் என்று காரணம் கூறி, வரி விதிக்கும் தொல்லைகள் கோவை, சேலம், மதுரை மாவட்டங்களில் பரவலாக உள்ளன. உண்மையிலேயே அவர்கள் மொத்த வியாபாரிகள் அல்ல. அந்த ஆடுகள் மொத்த வியாபாரத்திற்கும் கொண்டு செல்லப்படுபவை அல்ல. அதனால் சில்லரை வர்த்தகர்களின் இந்நெருக்கடிக்கு நம் அரசு விரைந்து பரிகாரம்

[ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது] [1968 பிப்ரவரி 15

காண்பதன் மூலம் விலைவாசி ஏற்றத்தையும் கட்டுப்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று வள்ளுவர் பெருந்தகை கூறியிருக்கிறார். "பெருமைக்குரிய இம் மாநில மக்கள் அனைவரும் எச்சமயத்தவராயினும், எச்சாதியினராயினும், எம்மொழியினராயினும் நலமுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் முறையில் நல்லதொரு சூழ்நிலையைப் பேணி வளர்ப்பதே நமது முயற்சியாக இருக்கவேண்டும்" என்று மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் தனது உரையில் கூறியுள்ளதை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன். நமது அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையும், அரசினரும் கூடியவரையில் அப்படியே நடந்து வருவதை நான் அறிவேன். அதற்காகவும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரண்டாம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற நேரத்தில், தமிழ்மொழி உணர்வையும், பண்பாட்டையும் நாட்டுப் பற்றையும் ஊட்டி வளர்த்த நம் தந்தையர்களான தமிழ்ப்பெரும் புலவர்களுக்கு, பெருமைக்குரிய பாட்டன்மார்களுக்கு பாட்டிமார்களுக்கு இந்நகர கடற்கரையோரத்தில் சிலை அமைத்து பெருமைப் படுத்தி பெருமைப்பட்டுக்கொண்டதை நானும் மிக்க மகிழ்வோடு பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இன்பத் தமிழில் இனிய காப்பியங்களை, கோவைகளை, அந்தாதிகளை, பிள்ளைத் தமிழ்களை, உலாக்களை, மாலைகளை, இன்னபிற பல்வகை இலக்கியங்களை யாத்துத்தந்துள்ள இஸ்லாமிய சமயப் பெரும்புலவர்களான எம் பாட்டன் மாருக்கு சிலை அமைக்கப்படவில்லை. அதற்குக் காரணம் சிலை வைப்பதை எங்களது சமயம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தான். அதே நேரத்தில் உலக அதிசயங்களில் ஒன்றாகிய கவின்மிகு காதல் கட்டிடமான, சித்திர தாஜை, முத்து மஸ்ஜிதை, மன்னனின் மகன் தான் மகுடம் சூடலாம், ஆளலாம் என்ற நிலையை தலைகீழாக மாற்றி அவனது அடிமையும் மணி மகுடம் சூடலாம், ஆளலாம், மன்னனாகலாம் என்ற நினைவின் சின்னமாக குதுப்மினாரை கட்டித் தந்து இந்நாட்டின் அழகிற்கு அழகூட்டிய இஸ்லாமிய பெருங்குடி மக்கள் சிலை வைப்பதை தமது சமயம் ஏற்காத காரணத்தினால், அதுபோன்ற ஒரு கலைச் சின்னத்தை காலமெல்லாம் கன்னித்தமிழ் வளர்த்த தமிழ்த்தந்தையருக்கு, எம் பாட்டன்மாருக்கு, தமிழ்நாட்டு கடற்கரையோரத்தில் ஏற்படுத்துவதற்கு முயற்சித்து, பெருமதிப்பிற்குரிய அண்ணா அவர்களையும், ஏனைய அமைச்சர்களையும் பணிவோடு அணுகினோம் என்றாலும், ஏனோ அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதே நேரத்தில்

"அன்று அலர்ந்த மலர் போல் கரமிருக்கும்
அதில் அள்ளி அள்ளிக் கொடுத்த தழும்பு இருக்கும்
பொதிகைத் தமிழ் மணம் அவர் இல்லில் மணக்கும்"

என்று கவிஞர்கள் பாடிய வள்ளல் சீதக்காதியின் திருப்பெயரையும், நெஞ்சை அள்ளுகின்ற செஞ்சொற் காப்பியமாகிய சீறாவை



1968 பிப்ரவரி 15] [ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது]

யாத்துத்தந்த புலவர் பெருமான் உமறுவின் திருநாமத்தையும், சென்னையிலுள்ள இரண்டு வட்டங்களுக்கு சூட்டியுள்ளார்கள் என்றாலும், அது கலைச்சின்னம் அமைக்கக் கேட்டதற்குப் பரிகாரமாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநாட்டையொட்டி வெளியிட்டுள்ள மலரில்கூட பல்வேறு சமயப் பெருமக்கள் வளர்த்துள்ள தமிழ் குறித்து கட்டுரை இடம் பெறச்செய்துள்ளனர். ஆனால், இஸ்லாமிய சமயத்தவர் வளர்த்த தமிழ் பற்றிய கட்டுரை இடம் பெறச்செய்யவில்லை என்பது கண்டு எம்மவர் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்பதையும் பணிவுடன் நினைவுபடுத்திக்கொள்கிறேன். இன்பத் தமிழ் நாட்டில் வாழும் 35 லட்சம் முஸ்லிம்கள், தங்கள் சமயத்துப் புலவர்களுக்கு, தங்கள் பாட்டன்களுக்கு, ஒரு நினைவுச்சின்னம் சென்னை நகரின் அழகுக்கு அழகு செய்யும் இஸ்லாமிய கவிச் சின்னத்தை அமைக்க இஸ்லாமிய சமயத்திடம் அன்பும் மதிப்பும் உடைய பேரறிஞர் அண்ணா இடம் தரவில்லை என்பது அதிர்ச்சியையும் மிக்க ஆச்சரியத்தையும் கொடுத்திருக்கிறது. அந்த அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் போக்க புனராலோசனை செய்து முஸ்லீம்களும் ஒரு சின்னத்தைக் கட்டுவதற்கு, அனுமதிப்பதன் மூலம் எங்கள் சமயத்தோரின் நம்பிக்கையையும், அன்பையும் என்றென்றும் அறிஞர் அண்ணா பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று குரல் கொடுக்கும் கொங்கு நாட்டுக் கம்பருக்கும், திருத்தணி விநயகருக்கும் ஒன்றே ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒருமைப்பாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அதற்கு அடிமைப்பாடு என்றும் ஒரு பொருள் உண்டோ என்று கேட்கிறேன். இன்பத் தமிழ் மொழியை இந்திய நாட்டின் 14 மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டிருக்கும் போது, இந்தி ஏகாதிபத்தியத்திற்கு இடம் கொடுத்து, இன்பத் தமிழை அடிமைப்படுத்துவதுதான் ஒருமைப்பாடா என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்திய பாராளுமன்றத்திலே நம்முடைய நாட்டின் குரலை எதிரொலிக்க எழுந்த நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களைப் பேசுவதற்கு அனுமதிக்காத வண்ணம் கூக்குரல் இட்டார்களே இந்தி உணர்ச்சியுள்ள பலர், அதுதான் ஒருமைப்பாடா என்று பணிவோடு கேட்கின்றேன். ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று கூறுகின்றீர்களே, எங்கள் தலைவர் சொல்லிய ஒரு கதை நினைவுக்கு வருகிறது. அதைச் சொல்கின்றேன்! காட்டுப் புலியும் நாட்டு மனிதனும் நட்புக்கொண்டார்கள். காட்டுப் புலிக்கு நாட்டு மனிதன் ஒரு விருந்து வைத்தான். புலி விருந்தை உண்டு, பின்னால், மனிதனைக் காட்டிற்கு அழைத்தது. மனிதனும் புலி நண்பனுடன் அதனுடைய குகைக்குச் சென்றான். அங்கே போனதும் புலி கூறியது, நண்பா நமக்குள் வேறுபாடு கூடாது, ஒருமைப்பாடு வேண்டும். உனக்கு நான் தனியாக விருந்து வைக்க வேண்டாம்; உன்னையே விருந்தாக உண்டுவிடுகிறேன், என்னுடைய ரத்தத்தோடு ரத்தமாக ஒன்றித்து விடு, கலந்து விடு என்று புலி கூறியதாம். அதே போல்,

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1968 பிப்ரவரி 15

இந்தி ஏகாதிபத்திய புலிகள் இன்பத்தமிழை அதன் இனிய பண்பாட்டை சாப்பிட்டு ஜீரணித்துக் கொள்வேன் என்று சொல்வது தான், இவர்கள் சொல்லும் ஒருமைப்பாடா என்று கேட்கிறேன். இந்த நாடு ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று சொல்வதெல்லாம், இந்தி ஏகாதிபத்தியப் புலிக்கு இரையாகிவிடுவதுதான் ஒருமைப்பாடா என்று பணிவன்போடு கேட்கின்றேன். (ஆரவாரம்) இந் நாடு ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்றால், இந்த நாடு பிளவு படாமல் இருக்கவேண்டுமென்றால், நாட்டில் உள்ள, அங்கிகரிக்கப்பட்ட எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கும் நிலையில் தான் அது சாத்தியமாக இருக்கும். அதன் மூலம் தான் ஒருமைப்பாடு என்றென்றும் இருக்க முடியும் என்பதை தெளிவாகத் தெரிவித்து, அந்த ஒருமைப்பாட்டிற்கு இந்திய யூனியன் முஸ்லிம்லீக் மிகப் பெருமையோடு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளச் சித்தமாக இருக்கிறது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்! இந்திய ஐக்கியத்தை நினைவில்கொண்டு கொங்கு நாட்டுக் கம்பரும், திருத்தணி விநாயக்கரும் நமக்கு வடக்கே உள்ளவர்களை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லா நிலையிலும், எல்லாக் காரியங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இன்பத் தமிழ் துள்ளித் திரிகின்ற புள்ளி மான் போல் இருக்கும். அந்த மானை இந்திப் புலி வேட்டையாட வருமானால், அந்தப் புலியை விரட்ட 'வேட்டைக்காரராகவும்', துள்ளித் திரியும் புள்ளி மானைக் காப்பாற்ற 'காவல்காரனாகவும்' எம்.ஜி.ஆர். அவர்கள், அறிஞர் அண்ணாவின் அரசுக்குத் துணையாக இருக்கிறார் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு டுடுத்து முன், என்னுடைய அன்பு மொழி, இன்பத் தமிழ் மொழி அரசு மொழியாகவும், பல்கலைக் கழக மொழியாகவும், உயர் நிலைப் பள்ளி மொழியாகவும், சட்டமன்றத்திலும், அதே போன்று வழக்காடு மன்றங்களிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் ஆற்றல் அதற்கு உண்டு என்று எடுத்துக் கூறி அமர்கிறேன். மிக்க நன்றி!

THIRU K. VINAYAKAM : Sir, on a point of clarification coupled with personal explanation நண்பர் சொன்னார்களே ஒரு கதை, அந்தப் புலிக் கதை, அது கதைதானா அல்லது ஏதாவது உண்மையாகவே மனிதனும் புலியும் பேசியது என்பது உண்டா? அதைச் சற்று விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்க தங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் 65-வது விதிப்படி அவர்கள் பதில் சொல்லவேண்டிய தேவையில்லை. விரும்பினால் பதில் சொல்லலாம்.

திரு. எல். கணேசன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்றவர்களுடைய வரிசையில் என்னுடைய பெயரையும் பதிவு செய்து கொள்ளுவதில் நான் பெரு மகிழ்ச்சி யடைகிறேன்.



1968 பிப்ரவரி 15] [திரு. எல். கணேசன்]

எந்தப் பிரச்சினைக்கும், அது நிதிப் பிரச்சினையானாலும் சரி, விலை வாசிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மொழிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி அவையெல்லாம் மத்திய மாநில அரசுகளின் தொடர்புப் பிரச்சினையில்தான் இருக்கின்றன. விவசாயத்தை விரிவு படுத்த வேண்டும் என்று மிகத் தீவிரமாக மாநில அரசு இயங்கிய நேரத்தில் உழவர்களுக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய உரம் தேவை என்று சொல்லும்போது, திடீரென்று உரத்தின் விலையைச் சரிக்கட்டாமல், அதற்குத் தந்துவந்த சப்சிடியைஅவர்கள் நிறுத்தி விட்டார்கள். உடனே உரத்தின் விலை ஏறத்தொடங்கியது. ஆகவே, அந்தப் பிரச்சினையும் மத்திய மாநில அரசுகளின் உறவில்தான் வந்து நிற்கிறது. அன்றைக்கு இந்திய அரசியல் சட்டம் தொகுத்த நேரம், இப்பொழுது இருக்கும் சூழலுக்கும் கால நிலைக்கும் முற்றிலும் வேறுபட்டது. அப்பொழுது இருந்த நிலை வேறு; இப்பொழுது இருக்கும் நிலை வேறு. அன்றைக்கு ஆங்கிலேயன் நம்மை அடிமைப்படுத்தியிருக்கிறான். அதை அகற்ற வேண்டும் என்கிற ஒரே பிரச்சினை. அப்பொழுது இருந்த நிலையில் இந்திய மொழியின் ஒரு பகுதியினர் மற்றப் பகுதியினரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியும் என்கிற நிலைமை இல்லை. ஆங்கிலேயனிடமிருந்து அடிமைத்தனத்தை அறுத்துக் கொண்டோம் என்று பெருமைப் பட்டோம். அந்தப் பெருமையில் இருந்தோமே யல்லாது, இந்தி வெறியர்களின் ஆதிக்கம் நம்மை அடிமை கொள்ளும் என்று நாம் நம்பவில்லை. அது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. இன்றைக்கு இந்தி வெறியர்கள் மற்றைய மொழிக்காரர்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கிற எண்ணம் உடையவர்களாக இருக்கிறார்கள், அதற்கான முயற்சிகளை எடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். அந்த ஆதிக்கமும் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றால், நிச்சயமாக இந்திய அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும். இன்றைக்கு மாநில அதிகாரம் குறைந்தும், மாநில அரசுகளின் அதிகாரங்கள் மத்திய அரசின் அதிகாரங்களுக்கு உட்பட்டும், மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகமாகவும், மத்திய அரசின் வருவாய்த் துறைகள் மிக மிக அதிகமாகவும், மாநிலவருவாய்த் துறைகள் மிக்க குறைந்தும் இருக்கிறது. சுருங்கச் சொல்லப் போனால், மாநில அரசுகள் மத்திய அரசிடம் கெஞ்சுகின்ற நிலையில், பிச்சை கேட்கும் நிலையில் தான் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை மாறவேண்டுமென்றால், புதிய வகையில் சிந்தனை தேவை. அரசியல் சட்டத்தின் தன்மை பற்றி மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். மாநில அரசுகளின் அதிகாரங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். அந்த வகையில் நிலைமைகள் உருவாக்கப்படவேண்டும். அதே போல, மொழிப் பிரச்சினை கூட அதே போன்று தீர்க்கப்படவேண்டும். அதுவும் கூட்டாட்சிக்கு ஒரு அங்கமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய கூட்டாட்சி முறை, கூட்டாட்சியாக இல்லாமல் தனித்த ஆட்சியாகத்தான் இருக்கிறது. யூனிடரி

ஸ்டேட்டாகத்தான் இருக்கிறது. நல்லதொரு ஃபெடரல் ஸ்டேட் என்று சொல்லும் வகையில் இருக்கவில்லை என்று சட்ட நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்திய அரசியல் சட்டம் நல்ல கூட்டாட்சிச் சட்டமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். அந்த வகையில் மொழிப் பிரச்சினை கூட ஏற்படும் ஒன்றுதான். நல்ல வழியாக, தமிழக அரசு மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், திட்டவட்டமாக தன்னுடைய, இந்த நாட்டினுடைய நிலையை அறிவித்திருக்கிறது. கழக ஆட்சி இங்கே இருக்கும் வரையில், இந்தி ஏகாதிபத்தியம் இங்கே காலை எடுத்து வைக்க முடியாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அந்த நிலைக்கு மாநில அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்திலே, நம் மாநில அரசின் நடவடிக்கைகள், தமிழுக்கு மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களுக்கும் தமிழக அரசு ஒரு சிறந்த வழி காட்டியாக இருக்கிறது, தலைவர் அறிஞர் அண்ணா வழி காட்டியாக இருக்கிறார்கள்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், அதிகக் கவனம் செலுத்
மு. ப. 11-00 தப்பட்டு வருகிறது. புஞ்சை நிலங்களுக்கெல்லாம் வரியை ரத்து செய்ததை நான் பாராட்டுகிறேன். உரிய காலத்தில், தேவையான உரங்களை விவசாயிகள் பெறுவதற்கான தனியான முயற்சிகளையும் வேளாண்மைத் துறை எடுத்துக்கொண்டது. அதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். குறைந்த அளவிற்கே தண்ணீர் அணைக்கட்டில் இருந்தாலும், அதைத் தேவையான அளவிற்கு, உரிய காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்க வகை செய்ததற்காகப் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் தமிழக அரசோடு அதிகமாக ஒத்துழைத்தார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக, இன்றைய நிலையில், சற்று இயற்கையினுடைய ஒத்துழைப்பு இன்மையாலும், மேட்டூர் தேக்கத்தில் போதுமான அளவு நீர் இன்மையாலும், புதாற்றுப் பாசனப் பகுதி, ஜி.ஏ. கனல் பகுதி, அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் விவசாயிகளின் பிரச்சினையை அனுதாபத்தோடு, பரிவோடு அணுகும் மாநில அரசுக்கு நான் என்னுடைய வேண்டுகோளைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், பல கிராமங்களில் முதலிலேயே பயிர் பட்டுப்போய்விட்டது. போதுமான அளவு தண்ணீர் இன்மையால் பல கிராமங்களிலே முதல் போகம் போட்டது எதற்கும் பயனற்றுப் போய்விட்டது. அதேபோல், பட்டுக்கோட்டை, அறந்தாங்கிப் பகுதிகளில் புதாற்றுப் பாசனப் பகுதிகளில் பயிர் முதலடியிலேயே பட்டுவிட்டது. எனவே, அரசு தயவு செய்து பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். இத்தகைய நிலைமையில் வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற விதியிருக்கிறது. அதைச் செய்வார்கள் என்றாலும் கூட,





நிர்வாகத்தினுடைய மந்தமான போக்கின் காரணமாகவும், 'ரெட் டேபிஸம்' என்று சொல்லக்கூடிய சிவப்பு நாடா முறையின் காரணமாகவும், கிடைக்கவேண்டிய பலன் காலத்தில் கிடைக்கவில்லை. ஆகவே, தயவு செய்து நிர்வாகத்தை ஊக்குவிக்கவேண்டும்.

நான் வேறொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். உழைப்பு அத்தனையையும் செலவிட்டு, உரமிட்டு, இருந்த விதை நெல்லையும் பயிராக்கிவிட்டு, பயிர் பட்டுவிட்டிருக்கிற நிலையில் விவசாயிகள் அத்தனை பேரும் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள். நானும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியும், மாவட்டக் கலெக்டரும் அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம். அப்பொழுது அந்தப் பகுதி மக்கள் இருக்கும் அவல நிலையை, பரிதாப நிலையை அவர்கள் கண்டார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறைக்குத் தரவேண்டிய கடனையும், அரசாங்கத்திற்குத் தரவேண்டிய கடனையும் இந்த ஆண்டு வசூலிக்கவேண்டிய கடன்கள் அனைத்தையும் தயவுசெய்து மாநில அரசாங்கம் இந்த ஆண்டு தவணைகளைத் தள்ளி வைத்து அடுத்த ஆண்டு வசூலித்துக்கொள்ளலாம் என்ற உத்தரவை உடனடியாகப் பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விவசாயிகளால் எந்த விதக் கடனையும் செலுத்த முடியாமல் அவர்களுடைய பயிர் பட்டுப்போன நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை பல கிராமங்களில் இருக்கிறது. வரி விலக்கு அளிப்பதோடு, அத்தனை விவசாயிகளுக்கும் எல்லாக் கடன்களின் தவணைகளையும் இந்த ஆண்டு தள்ளித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அதை நெற்களஞ்சியம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். தஞ்சை மாவட்டம் தான் பிற மாவட்டங்களுக்கு நெல்லை அதிகமாக அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கும் நிலையில், தஞ்சை மாவட்டம் இந்த ஆண்டு அந்தச் சிறப்பான நிலையில் இருக்க முடியுமா என்று நான் மிகவும் சந்தேகிக்கிறேன். காரணம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி ஆவுடையார்கோயில் போன்ற பல பகுதிகளில்—புதாற்றுப் பாசனத்தின்கீழ் வரும் பகுதிகளில் இந்த ஆண்டு விவசாயமும் நாம் எதிர்பார்த்த அளவு பல்கிப் பெருகவில்லை. கொள்முதல் செய்யும் அதிகாரிகள் நெல்லை வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி விடாமல், தஞ்சை மாவட்டத்திலேயே ஒரு பகுதி பஞ்சப் பகுதியாகிவிடுமோ என்று சந்தேகித்துக்கொண்டிருக்கும் நிலையில், அந்தப் பகுதிக்கென்று ஒரு பகுதி நெல்லை தஞ்சை மாவட்டத்திலேயே தயவு செய்து வைத்திருக்கவேண்டும். அந்தப் பகுதியிலேயே வைத்திருப்பதற்கான வழிவகைகளை இப்போதே முன்கூட்டிச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் ஒரு வகையில் அதிகமாக விரிவுபடுத்தமுடியும். கழிவு நீர் வாய்க்கால்களை அதிகமாகப் பயன்படுத்தி, நீரேற்று நிலையத்தின்

மூலமாக மேல் பகுதிகளில் பாசனத்தை விரிவுபடுத்த முடியும். ஒக்கநாடு கீழையூரில் நீரேற்று நிலையத் திட்டம் இருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மன்னார்குடி மாநாட்டில் அவர் பேசியபோது, சென்ற ஆண்டு செப்டம்பர், திங்களில் அது முடிந்து பயன்தரத் தொடங்கும் என்று அறிவித்தார்கள். துரதிருஷ்டவசமாக அது முடிவு பெறாமல் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் அடுத்த ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள்ளாவது அது நிறைவேறத்தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பிரத்தியேக வளைவுக் குழாய்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் கால தாமதம் ஆகி வந்தது. நல்ல வேளை பொதுப்பணித் துறைஅமைச்சர் அவர்கள், அத்தகைய குழாய்களை நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்து கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்து, இப்பொழுது அது உற்பத்தி செய்யப்பட்டு, அங்கே வந்துகொண்டிருக்கிறது. எனவே, இனிமேல் வேலையைத் துவக்குவதற்கும் பெருந் தடைகள் எதும் இல்லை. இப்பொழுது மூன்று முக்கியமான வேலைகள் இதில் பாக்கி இருக்கின்றன. இப்பொழுது பம்ப் ஹவுஸ் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ரெகுலேடர்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை முடிந்ததும் அடுத்ததாக இருப்பது, தொட்டிகளைக் கட்டுவதாகும். அடுத்ததாக இருப்பது வாய்க்கால்களைத் தோண்டுவதாகும். பிறகு, குழாய்களைப் பதிப்பது. (லேயிங் ஆப் பைப் லைன்ஸ்). கால்வாய்களைக் கட்டினாலும், மதிப்பீடுகளை (எஸ்டிமேட்ஸ்) அங்கிருந்து தயாரித்து அனுப்புவதும், அங்கிருக்கும் பொறிஞர்கள் மீண்டும் கீழே அனுப்புவதும், அதற்குப் பின்னால் மேலேயுள்ள தலைப் பொறிஞருக்கு அனுப்பிவைப்பதும், அவர் வேறு காரணம் காட்டித் திருப்பி அனுப்புவதுமாக இப்படி அவர்கள் மதிப்பீட்டையேகூட இன்னும் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்கக்கூடிய நிலையில் இல்லை தயவு செய்து அந்த மதிப்பீடுகளை உடனடியாக வரவழைத்து, ஒப்புதல் அளித்து, வேலையை தொடங்குவார்களானால், குழாய்களைப் பதிப்பதையும் கால்வாய்கள் வெட்டுவதையும், ஒரே நேரத்தில் தொடங்குவார்களானால் நிச்சயமாக வருகிற ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள்ளாக அதை நிறைவேற்றிவிட முடியும் என்று நம்புகிறேன். அந்த துறையில் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கழிவு நீர்க் கால்வாய்களை முழுக்கப் பயன்படுத்தினால் ஓரத்தநாடு தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கும் தண்ணீர்ப் பஞ்சத்தைத் தவிர்க்க முடியும். அரசுப்பட்டு கிராமத்தில் ஐம்புகவாரி கழிவு நீர் வாய்க்காலையொட்டி பம்பிங் ஸ்கீம் வைக்கலாம். சின்னப்பருத்திக்கோட்டை ஊருக்குப் பக்கத்தில் உளூர் வடிகால் வாய்க்கால், கண்ணந்தங்குடி ஊருக்குப் பக்கத்தில் சிங்கனேரி வடிகால் வாய்க்கால், சோழகன்குடிக்காடு, சேதுராயன்குடிக்காடு, ஊர்களுக்குப் பக்கத்தில் வேடம்புரி வடிகால் வாய்கால், அருமுளை ஊருக்குப் பக்கத்தில் அருமத்தரி வடிகால் வாய்க்கால், ஆலிக்கோட்டை ஊருக்குப் பக்கத்தில் திருமேனி ஏரி வடிகால் வாய்க்கால், வடிசேரி, நெம்மேலி ஊர்களுக்குப் பக்கத்தில் காலகம் வடிகால் வாய்க்கால், ஆகிய பகுதிகளில் நீரேற்று நிலையங்களை (பம்பிங் ஸ்கீம்ஸ்) அமைக்க வசதி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சென்ற மாதம் நானும், செயற் பொறிஞர், துணைப் பொறிஞர் ஆகியவர்களோடு நீரேற்று நிலையங்கள் அமைப்பது குறித்துப் பல்வேறு ஊர்களுக்குச் சென்று பார்வையிட்டதில், 'சாத்தியம் இருக்கிறது, நிச்சயம் செய்ய முடியும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் துறையில் தயவு செய்து மிகவும் கவனம் செலுத்தி, நீரேற்று நிலையங்களை வைப்பதற்கு வசதிப்பட்ட இடங்களில் உருவாக்கித் தர வேண்டும், அதற்கான தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்த வரையில், தஞ்சை மாவட்டத்திலேதான் அது மிகக் குறைவாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில், குறிப்பாக, கோவை, வட ஆற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் மிக அதிகமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லத்தக்க அளவில் அதிகமாக விஸ்தரிப்பு நடந்திருக்கிறது. ஆனால், துரதிருஷ்ட வசமாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த விஸ்தரிப்பு மிகக் குறைவாக இருக்கிறது. குறைவாக இருந்தாலும், அதை விரிவுபடுத்துவதிலே அவர்கள் செய்கிற முறைகளில் பல கோளாறுகள் இருக்கின்றன. திருப்பதி மொட்டை என்று சொல்வதைப் போல, ஊர் ஊருக்கு இரண்டு கம்பங்களை நட்டு, ஊர் ஊருக்கு இரண்டு விளக்குகளை எரிய வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். முழுமையாக எந்தக் கிராமத்திற்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. எனவே, விரைந்து எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், மதுக்கூர் ஓரத்தநாடு, பாப்பாநாடு, உளூர் போன்ற இடங்களில் அதிகமாக வனஸ்பதி செய்யும் மூலப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. அரசே, அந்தப் பகுதியில் வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையையும், உழவுக் கருவிகள் செய்யும் தொழிற்சாலையையும் தோல் பதனிடும் தொழிற்சாலையையும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய நன்றியைக் கூறி உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாக்கியமாக, இந்த நாட்டிலிருந்து பர்மாவுக்குச் சென்ற தமிழர்கள், அந் நாட்டை வளம் கொழிக்கும் நாடாகவும், செல்வம் பெருகும் நாடாகவும் மாற்றுவதற்காகச் சென்றார்கள். ஆனால் அவர்களு

டைய வாழ்க்கையின் வளம் எல்லாம் இன்றைய தினம் இழந்து, 'பர்மா அகதிகள்' என்ற பெயரில் இந் நாட்டிற்குத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இடமும் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவி என்ற பெயரில் இரண்டாயிரம் ரூபாய் கடனாகத் தரப்படுகிறது. தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள கொடுத்த அந்தப் பணத்தையே தங்களுடைய உணவுக்காகச் செலவிட்டு, இப்போது சாப்பாட்டுக்கே வழியில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இலங்கையிலிருந்தும் அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. பர்மா, இலங்கையை வளமாக்கச் சென்றவர்கள், இன்று தங்கள் வளத்தையெல்லாம் இழந்து அகதிகளாகத் திரும்புகிறார்கள். இம்மாதிரியான நிலைமை ஏற்படாமல் இருக்க அரசு வழி செய்யவேண்டும். அகதிகளுக்கு நல் வாழ்வு அளித்துப் பரிகாரம் காண தக்க வழி வகைகளைக் காணவேண்டும்.

பர்மா தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி இலங்கைத் தமிழர்களுக்கும் இன்று ஏற்பட்டிருக்கிறது. மலேயாவிலுள்ள தமிழர்களும் தங்களுக்கு இந் நிலைமை வருமோ என்று மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் வெளிநாடுகளிலிருக்கும் தமிழர்களின் நிலைமைகளைக் கண்டு ஆய்ந்து நல்ல வழி வகைகளைக் காண ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்தக் குழுவை வெளி நாடுகளுக்கு அனுப்பி நிலைமைகளை நேரில் கண்டறிந்து தக்க பரிகாரம் காண நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

திருச்சி என்று சொன்னாலே, மலைக் கோட்டையும், மகுடியும் உச்சிப் பிள்ளையார் கோயிலும்தான் நினைவுக்கு வரும். அப்பேர்ப்பட்ட திருச்சி நகரிலே இன்றைய தினம் சொல்லமுடியாத நாற்றம் தான் அதிகமாக வீசுகின்றது. திருச்சி எறி சாராய கழிவு நீர் உய்யக் கொண்டான் ஆற்றில் கலக்கிறது. அதில் ஓடும் கழிவு நீர் நாற்றத்தினால் நகர மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக என் பகுதி மக்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த கழிவு நீர் காரணமாக கிட்டத்தட்ட ஐந்து ஆயிரம் எக்கர் நிலங்கள் சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கின்றன. இது குறித்து எங்கள் பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கிறோம். திருச்சி மாவட்ட மன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கு சுற்றுப் பயணம் வந்திருந்த முதலமைச்சர், பொதுப்பணி அமைச்சர், தொழில் அமைச்சர் அவர்களையும் அழைத்து நேரில் காட்டியிருக்கிறோம். ஆனால் இதுவரையில் தொழிற்சாலை அதிபர்களோ, அரசாங்கமோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதன் காரணமாக எங்கள் பகுதியிலும் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கற்றவைகளாகப் போய்விடும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்



கொள்ளாவிடில், இது குறித்து கட்சி வேறுபாடு இல்லாமல் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்த நிலை எவ்வளவு நாளாக இருக்கிறதென்பதை அறிய விரும்பலாமா?

**திரு. வை. சுவாமிநாதன்:** கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த நிலைமை இருந்து வருகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** போராட்டம் இப்போது தான் ஏற்பாடாகிறதா? அல்லது முன்பே இதைப்பற்றி யோசனை செய்து நடத்த திட்டமிட்டிருக்கிறீர்களா?

**திரு. வை. சுவாமிநாதன்:** அன்றிலிருந்து நாங்கள் தீர்மானங்களை போடுகிறோம். அது நிறைவேறவில்லையென்றால், அது குறித்துப் பின்னர் திட்டமிடுவோம்.

அடுத்தபடியாக, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்காக, திருச்சி மக்கள் ஏராளமாக நிதியுதவியை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அளித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய் அரசாங்கத்திடம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 'திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஏற்பட வாய்ப்பில்லை' என்று சில தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா, அல்லவா என்பது எனக்குத் தெரியாது. இந்த ஆண்டிலிருந்தாவது அல்லது அடுத்த ஆண்டிலிருந்தாவது மருத்துவக் கல்லூரி செயல்பட அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், திருவெறும்பூரில் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக எங்கள் பகுதி மக்கள் சுமார் 5 லட்சம் ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் திருவெறும்பூரில் ஒரு கலைக் கல்லூரியை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்புக்கும் வெல்லத்திற்கும் பலமுனை விற்பனை வரி விதிப்பதாக அரசு தீர்மானித்திருக்கிறது. இந்த வரி விதிப்பினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அரசாங்கம் இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியிலே ஒரு லிட்டர் பால் ரூ. 1.05-க்கு விற்கப்படுகிறது. ஆனால் திருவெறும்பூரில் ஹெவி எலக்ட்ரிகல் பகுதியில் ஒரு லிட்டர் பால் விலை ரூ. 1.15-க்கு விற்கிறது. அங்கு ஒருநாளைக்கு சுமார் 1,500 லிட்டர் பால் செலவாகிறது திருச்சியிலே ரூ. 1.05-க்குக் கிடைக்கும் பால் திருவெறும்பூரிலே ரூ. 1.15-க்கு விற்கப்படுகிறது. ஒரு லிட்டருக்கு 10 பைசா வித்தியாசம் என்றால் 1,500 லிட்டருக்கு ரூபாய் 150 பொதுமக்கள் பணம் நஷ்டமாகிறது. ஆகவே, உணவு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, எல்லா இடங்களிலும் ஒரே விலைக்கு விற்கவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வை. சுவாமிநாதன்] [1968 பிப்ரவரி 15

அடுத்தபடியாக கரும்பு, சர்க்கரையைப் பொறுத்தவரையில், ஆலை முதலாளிகள் 40 சதவிகிதப் பொருள்களை தங்கள் இஷ்டம் போல் விற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு முறை இருந்துவருகிறது. அந்தச் சலுகையை நெல் உற்பத்தி செய்பவர்களுக்கும் விஸ்தரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குச் சரியான காலத்திலே உரம் கிடைப்பதில்லை. உர விநியோகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு யூனியனுக்கும் இவ்வளவு என்று நிர்ணயம் செய்து அதைக் கமிஷனர்களுக்கு அளிக்கிறார்கள். கமிஷனர் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இவ்வளவு என்று கணக்கிட்டு அதை வாங்கி அனுப்புகிறார். இதற்கெல்லாம் பத்து நாட்களுக்கு மேல் ஆகிறது. அதனால் விவசாயிக்கு உரம் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. பருவம் தவறிவிடுகிறது. விவசாயிக்கு உரம் சரியான நேரத்தில் கிடைக்க வழிசெய்ய வேண்டும், கார்டு முறைத் திட்டத்தைக் கொண்டு வரப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டிலிருந்து அந்த முறை வந்தால் விவசாயிகளுக்குச் சீக்கிரமாகவும், உடனடியாகவும் உரம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாக உரம் சரியான முறையில் வினியோகிக்கப்பட்டு வருகிறது. எந்த ஊரில் கிடைக்கவில்லையென்பதைக் குறிப்பாக எடுத்துச்சொன்னால் நல்லது. பொதுவாக உர வினியோகம் சரியாக நடைபெறவில்லையென்று பேசக்கூடாது.

**திரு. வை. சுவாமிநாதன்:** உரம் கிடைக்கவில்லையென்று நான் சொல்லவில்லை. உரம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று தான் கூறினேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எந்த ஊரில் ?

**திரு. வை. சுவாமிநாதன்:** சாதாரணமாக ஒரு விவசாயிக்கு கலப்பு உரமோ, மற்ற உரமோ வேண்டுமென்றால், முதலில் மாவட்ட கலெக்டர் அவருடைய விண்ணப்பத்தை அங்கீகரிக்க வேண்டும். மாவட்டக் கலெக்டர் உரத்தை முதலில் சென்ட்ரல் பாங்கிற்கு ரிலீஸ் பண்ணுவார். அதை சென்டரல் பேங்க் வட்டார சொஸைட்டிக்கு அனுப்பிவைக்கும். சிலசமயங்களில் போட்ட அலாட்மெண்டை அந்த சொஸைட்டி எடுப்பதில்லை. ஏற்கெனவே கடன் பாக்கியிருக்கிற காரணத்தினால் அவர்கள் அலாட்மெண்ட் எடுப்பதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போவார்கள். சிலசமயங்களில் அலாட்மெண்டை எடுப்பதே கிடையாது. இந்தச் சமயங்களில் விவசாயிக்கு உரம் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர் அவர்கள் பொதுப்படையாகச் சொல்லுவதைவிட, குறிப்பாக, இந்த ஊரில், இந்தச் சங்கத்தில், இப்படி ஏற்பட்டது என்று சரியாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். அதைவிட்டு பொதுப்படையாகச் சொல்வது நல்லதல்ல.



1968 பிப்ரவரி 15]

**திரு. வை. சுவாமிநாதன்:** இதுகுறித்து அமைச்சர் அவர்களுக்கு விளக்கமாக எழுதிக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

பம்பு செட்டுகளுக்கு கடனாக வழங்கும் தொகை போதுமானதாக இல்லை. அதை அதிகமாகச் சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

அடுத்து, கிணறு வெட்டுவதற்கு, கடன் தொகையை இனிமேல் அரசு நில அடைமான பாங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிட்டிருப்பதாகக் கருதுகிறேன். இந்த முறை மத்திய அரசாங்கத்திடம் பணம் பெறுவதற்கு ஒரு தந்திர வழியாக இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் இந்த முறை விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் அதிகக் காலதாமதம் ஏற்படும் என்று கருதுகிறேன். நில அடைமான பாங்குகளின் மூலமாக ஒரு விவசாயி கடன் தொகையைப் பெற சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிடும். ஆகவே, இம்முறையைக் கைவிட்டு முன்போல் பஞ்சாயத்து யூனியன் மூலம் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக ஆளுநர் அவர்களுடைய உரையில் பஞ்சாயத்துகளில் இருந்து பணத்தை எடுத்து கிணறு வெட்ட உபயோகப் படுத்திக்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கக்கூட பஞ்சாயத்துக்களில் பணம் இல்லை. அப்படி இருக்கிறபோது பஞ்சாயத்து பணங்களை எடுத்து வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவது என்று வந்தால் நிச்சயமாக ஆசிரியர்களும், மற்ற சிப்பந்திகளும் சம்பளம் கூடப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த யோசனைக்கு மாறாக பஞ்சாயத்துகளின் வருமானத்தைப் பெருக்கக்கூடிய வழிவகைகளைக் காணவேண்டும். அரசாங்கம் புதிய பஸ் ரூட்டுகளுக்கு சுலபமாக லைசென்ஸ் வழங்குவதுபோல பஞ்சாயத்துகள் தங்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள சினிமாக் கொட்டகைகள், ரைஸ் மில்கள் இவற்றை நடத்த சுலபமான முறையில் லைசென்சு வழங்கினால் அவற்றின் வருமானம் பெருகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கும் கிராண்டையும் அதிகப்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, படி அரிசித் திட்டத்தை எங்கள் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக திருச்சிக்கு கொடுக்கிறபோது எங்கள் பகுதியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். எங்கள் பகுதியில் தான் கோல்டன்ராக் தொழிற்சாலை, பாய்லர் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, போன்ற பல தொழில்கள் இருக்கின்றன. தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பகுதியிலும் படி அரிசித் திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சர்க்கரை விநியோகத்தில் அதிகமான அளவு நகர்ப்புறங்களில் தான் கொடுக்கப்படுகிறது. பொங்கலுக்குக் கூட

கிராமப்புறங்களில் அதிகம் கொடுக்கப்படவில்லை. கிராமங்களில் உள்ளவர்கள் தான் அதிகமான அளவு பொங்கல் கொண்டாடு கிறார்கள். ஆகவே கிராமப்புறங்களுக்கும் அதிக அளவு சர்க்கரை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்** : கனம் துணைச் சபா நாயகர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னைப் பேச அழைத்தமைக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆளுநர் அவர்கள் விவசாயத்துறையிலும், உணவுத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் இந்தத் தமிழக அரசாங்கம் நல்லமுறையில் பணியாற்றி வருவதைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விவசாயத்துறையை எடுத்துக் கொண்டால் தமிழக அரசு விவசாயிகளுக்கு எந்த எந்த சமயங் களில் என்ன என்ன செய்யவேண்டும் என்பதைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து அந்த அந்த ஜில்லாக்களில் விவசாயக் கருத்து அரங்குகளை ஏற்படுத்தி, விவசாயிகளுடைய குறைபாடு களை அறிந்து ஆவன செய்துகொண்டு வருகிறது. தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அது மிகவும் பிற்போக்கான மாவட்டம் என்று கருதி அந்த மாவட்டத்திற்குக் கிணறு வெட்டவும், பம்பு செட்டுகள் அமைக்கவும் விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களை விநியோகம் செய்யவும் 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நில அடைமான பாங்குகளின் மூலமாக விவசாயிகளுக்கு வேண்டிய கடன்களைத் தரவும் தமிழக அரசாங்கம் ஆவன செய்திருக்கிறது. இப்படி இந்த அரசாங்கம் நல்லமுறையில் விவசாயிகளை அணுகுகின்ற தன்மையும், உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்துக்கொள்ளுகின்ற எல்லா முயற்சிகளையும் கண்டு நாம் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். முன்னால் இருந்த அரசாங் கத்தில் விவசாயிகள் உரம் கிடைக்கவில்லை, விதை கிடைக்கவில்லை என்று அல்லல்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது எந்த சொசைடிக்குப் போனாலும் உரம் நல்லமுறையில் கிடைக்கின்றது. அதை நமது காங்கிரஸ் தோழர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். " ஆளுநர் உரையில் நாங்கள் கொண்டு வந்த திட்டங்கள் தானே இருக்கின்றன, புதுத் திட்டங்கள் எதையும் இந்த அரசாங்கம் கொண்டு வரவில்லையே" என்று காங்கிரஸ் தோழர்கள் பேசிவந் தார்கள். புதிய திட்டம் இல்லை என்று சொன்னவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆளத் தெரியுமா என்று தான் பல வருடங்களாகச் சொல்லிவந்தார்கள். பொது ஜனங்கள் இவர்களுக்கும் ஆளத்தெரியும் என்று தீர்ப்பு அளித்து, தங்களுடைய ஆதரவைத் தந்திருக்கிறார்கள். பலகாலமாக தமிழ கத்தை துயரத்திற்கு ஆளாக்கி வந்த மொழிச் சிக்கலை நமது அறிஞர் அண்ணா அவர்கள் தான் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அதைப்பார்த்து முன்னால் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தோழர்கள்





பொறாமைப் படக்கூடிய அளவில் ஊருக்கு ஒவ்வொருவிதமாகப் பேசி மீண்டும் மும்மொழித் திட்ட சிக்கலை உண்டாக்கப் பார்க் கிறார்கள். அவர்களது ஆட்சிக் காலத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தாங்கள் ஓரிடத்தில், தங்கள் குழந்தைகள் ஓரிடத்தில், தங்கள் தாய்மார்கள் ஓரிடத்தில், தங்கள் தந்தைமார்கள் ஓரிடத்தில், தங்கள் மனைவிமார்கள் ஓரிடத்தில் என்று பலவிதமான அல்லல்களுக்கு உட்பட்டார்கள். அவை போதாது என்று இன்றைக்கும் காங்கிரஸ் தோழர்கள் அவர்களை வம்புக்கு இழுக்கிறார்கள். ஆங்காங்கே வீண் குழப்பத்தை உண்டாக்கி வருகிறார்கள்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், நூற்றுக்குத் தொண்ணூறு சங்கங்கள் காங்கிரஸ்காரர்களின் கையிலேயே இருக்கின்றன. அதன் காரணமாக எங்கள் பகுதியில், " நீங்கள் காங்கிரசுக்கு எதிராக வோட்டுப் போட்டீர்கள் அல்லவா? உங்களுக்கு இங்கே கடன் ஏது " என்று சொல்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இன்றைக்கு பெருவாரியாக இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களே ஒரு லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம், ஐந்து லட்சம் என்பதாக நான்கைந்துபேர்களை வைத்துப் பங்கு போட்டுக் கொண்டு வருகிறார்கள். இதன் காரணமாக, அந்தச் சங்கங்கள் அந்த மாவட்ட மக்களுக்குச் சரியான முறையில் பயன்படாமல் இருந்து வருகின்றன. இந்த நேரத்தில் தமிழக அரசாங்கம் நில அடைமான பாங்குகளின் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் வழங்க ஓர் ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத் தக்க விஷயம். கூட்டுறவு சங்கங்களை யும் சரியான முறையில் திருத்தி அமைத்தாகவேண்டும்.

அதேபோன்று தர்மபுரி மாவட்டத்தில் இந்த ஆண்டு சரியான மழை இல்லாத காரணத்தினால், விளைவு ரொம்ப குறைச்சலாக இருக் கிறது. ஆனால் அங்கே உள்ள கூட்டுறவு சங்கங்கள்—அதில் உள்ள காங்கிரஸ் தோழர்கள் " நீங்கள் காங்கிரசுக்கு எதிராக வோட்டுப் போட்டீர்களே, இன்றைக்கு உங்கள் அரசாங்கம் தான் தீவிரமாகக் கடன்களை வசூல் செய்யச் சொல்கிறது " என்பதாக மக்களிடத்தில் தவறாகப் பிரச்சாரம் செய்து விவசாய மக்களைத் துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். சில உத்தியோகஸ்தர்களும் அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் உடன டியாக ஆவன செய்யவேண்டும். உண்மையில் இன்றையதினம் அந்த மாவட்டத்தில் விளைந்திருக்கும் நெல் அவர்களுக்கே பற்றாக் குறையாக இருக்கிறது. அதை நமது உணவு அமைச்சர் அவர்கள் நன்கு தெரிந்துகொண்டு கலெக்டருக்கு எழுதி கொள்முதல் திட்டத்தில் அவர்களை துன்பத்திற்கு ஆளாக்காது இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது. இது சிலருக்குப் பிடிக்கவில்லை. வேண்டுமென்றே சில அதிகாரி களும் இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வாங்கி வைக்கப்

பார்க்கிறார்கள். மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால், விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் கொடுக்கவேண்டும், விவசாய பம்பு செட்டுகளுக்கு உடனடியாக கனெக்ஷன் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு இருந்தும் ஒருசில அதிகாரிகள் வேண்டுமென்றே விவசாயிகளை அல்லல் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு உடனடியாக பம்பு செட்டுகள் கொடுக்கவும், அந்த பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கவும், தமிழக அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் இடைத்தேர்தல் நடந்தபோது, தர்மபுரி ஜில்லா வேண்டுமா, வேண்டுமென்றால் வோட்டுப் போடுங்கள் என்று முன்னால் இருந்தவர்கள் பறை சாற்றினார்கள். அந்த மாவட்டத்தை இரு பிரிவாகப் பிரித்து கலெக்டர் ஆபீஸ் தர்மபுரியிலும், மாவட்ட நீதி மன்றத்தை கிருஷ்ணகிரியிலும் வைத்தார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் பொருளாதார அடிப்படையிலும் அவற்றை ஒன்று சேர்த்தாகவேண்டும். தர்மபுரியிலேயே மாவட்ட நீதி மன்றத்தை வைக்க கட்டடம் கட்ட 19 லட்சம் செலவாகும் என்று சொல்வதாகத் தெரிகிறது. தர்மபுரியிலே கலெக்டர் ஆபீசிலே நிறைய இடம் இருந்தது. தர்மபுரியிலே முன்னால் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட் இருந்தது. அதை
11-30 மு.ப. இப்பொழுது டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட் கோர்ட்டாக கிருஷ்ணகிரிக்கு மாற்றியிருக்கிறார்கள். சுமார் 50, 60 மைல் தூரத்திலிருந்து சிறிய சிறிய கேஸ்களுக்கு எல்லாம் அப்பீல் செய்ய வேண்டுமென்றால், கிருஷ்ணகிரிக்கு வரவேண்டியிருக்கிறது. தர்மபுரியிலே மாவட்டம் என்று சொல்லிவிட்டு, தர்மபுரி மாவட்டத்திலே உள்ளவர்கள் அல்லல் படக்கூடிய அளவிலே, முன்னிருந்த அரசாங்கம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட் கோர்ட்டை கிருஷ்ணகிரிக்கு மாற்றி அங்கே வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதை மறுபடியும் தர்மபுரி ஹெட்குவார்ட்டர்ஸிலேயே வைத்துக்கொள்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தர்மபுரி மாவட்டம் மிகவும் பிற்போக்கான மாவட்டம், அந்த மாவட்டத்தின்மீது அமைச்சர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து அவர்களுக்கு இருக்கிற குறைபாடுகளை என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று அங்கே வந்து பார்த்து அவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு கவர்னர் அவர்கள் உரைமீது பேச வாய்ப்பு அளித்த மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன் : மேன்மைதங்கிய துணைச் சபாநாயகர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த கூட்டத் தொடரின் பொழுது மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் உரைமீது நான் பேசியபொழுது காங்கிரஸ்காரர்கள் ஜனநாயக விரோதமாக





நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு ஜனநாயகம் எப்படி இருக்கிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஜனநாயகத்தைப்பற்றி அவ்வளவு அழுத்தமாகப் பேசுவதற்குக் காரணம் இந்த தேசத்திலே சோஷலிசம் வேண்டுமென்று சொல்லும்பொழுது அந்த சோஷலிசம் ஜனநாயகம் சேர்ந்துகொண்ட ஒன்றாக இருந்தால் தான், சரியாக இருக்கும் என்று சொன்ன கட்சிகளிலே என்னுடைய கட்சி, பிரதானமானது. ஆகவே மற்ற அம்சங்களை விட ஜனநாயகத்திற்குப் பிரதான பங்கு உண்டு என்று நாங்கள் கருதுகிறோம்.

சமீபத்திலே சென்ற 23-ஆம் தேதி நடந்த சட்டசபைக் கூட்டத்திலே மொழித் தீர்மானம் வந்தது. அந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சி தன்னுடைய கருத்துக்களைத் தெளிவாகவும், சட்டசபையில் பேசும்பொழுது விளக்கமாகவும் சொல்லியிருக்கிறது. அப்படிச் சொல்லியதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தின்மீது அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதால் ஓட்டுப் போடவில்லை. அதுசம்பந்தமாக ஆட்சிசெய்யும் கட்சியைச் சார்ந்தவர்கள், மேட்டூர் பிரதான ஊழியர்கள் பொதுக்கூட்டத்தைப் போட்டு, அண்ணாவின் திருத்தத்துக்கு ஓட்டுபோடாத சுரேந்திரன் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொன்னார்கள்; ஓட்டுப் போடாமல் இருக்கிற சுரேந்திரன் ஆணா, பெண்ணா, அலியா என்று பேசினார்கள். அது மட்டுமல்ல, ஓட்டுப் போடாமல் இருக்கிற சுரேந்திரன் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று ரோடுகளில் எழுதி வைத்தார்கள்; நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல ஆட்சியாளர் கொண்டுவந்த மொழித் தீர்மான திருத்தத்தில் தேசத்திலே இருக்கிற தேசீய மொழிகள் அனைத்தும் எல்லா ராஜ்யங்களிலும் வளர்ச்சி பெறவேண்டிய முறையில் இருக்கவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்கும் பொழுது, இந்தியை வேசி மொழி, தாசி மொழி என்று பேசி இருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒரு சக மொழியைப் பேசுவது, கேவலமாகப் பேசுவது சரியானதல்ல, முறையானதல்ல. இது அரசியல் ஜனநாயகத்திற்குப் பொருந்தியது அல்ல. நாங்கள் ஒரு அரசியல் கட்சியாக இருக்கிறோம், மற்றவர்களும் அரசியல் கட்சிகளாக இருக்கிறார்கள். எந்தக் கட்சியினுடைய கருத்தையும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் அதைச் சகித்துக்கொள்ள வேண்டும். சகித்துக் கொள்ளமுடியாமல் கேவலமாக கீழாகப் பேசுகின்ற தன்மையிருக்கிறது என்றால், அது முறையான ஜனநாயகப் போக்கல்ல; முறையல்ல என்பதை நான் சட்டசபையிலே மிகவும் கவலையோடு அறிவித்துக் கொள்கிறேன். நாங்கள் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஓட்டுச் சிதறாமல் இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் உறவை வைத்துக்கொண்டோமே தவிர, அவர்கள்

சொல்கின்ற கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்காக அல்ல. அப்படி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், தனியாக இப்படி ஒரு கட்சி இருக்கவேண்டியதில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், அந்தக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் இப்படிப்பட்ட விஷயங்கள் சரியாக கவனத்தில் கொள்ளவேண்டுமென்பதைக் குறிப்பிடுவதற்குத் தானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஜனநாயகம் வளர வேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன். ஒரு தவறு நடந்து இருக்கிறது என்பதைச் சொன்னால்தான் அப்படிப்பட்ட தவறுகள் மேலும் நடக்காமல் இருப்பதற்கு வழி ஏற்படும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நிர்வாகத்திலே இருக்கிறவர்கள், அமைச்சர்களும் சரி, மற்றவர்களும் சரி, சட்டசபை உறுப்பினர்கள் கடிதங்கள் அல்லது விண்ணப்பங்கள் கொடுத்தால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி எந்தவிதமான தகவலும் வருவதில்லை, அந்தக் கடிதமோ அல்லது விண்ணப்பமோ கிடைத்தது என்பதற்குக்கூட கடிதம் வருவதில்லை. இது நிர்வாகத்திலே இருக்கிற ஜனநாயகக் குறைவு என்றுதான் நான் நினைக்கிறேன். நிலமில்லாதவர்கள் நிலம் வேண்டுமென்று விண்ணப்பம் அளித்தார்கள். அந்த விண்ணப்பத்தையும் வரைப்படத்தையும் நான் விவசாய அமைச்சர் அவர்களிடம் இந்த சபையில் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவரையிலும் எனக்குத் தகவல் வரவில்லை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அங்கத்தினர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான சில விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அவர் அழைத்த பகுதிக்கு நானே நேரடியாகப் போய்ப் பார்த்து விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே அவர்கள் இப்படி திரித்துக்கூறுவது சரியல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. நான் சொன்ன பகுதி கந்திரிப்பட்டி என்பது. அங்கே நிலம் இருக்கிறது. காட்டிலாகா நிலம் இருக்கிறது என்பதற்கு வரைபடமும் அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் நான் கேட்டேன். . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆரம்பத்திலே அப்படிக் குறிப்பிட்டு அவர்கள் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னார்கள். அதனால்தான் நான் பக்கநாடு வனவாசி பகுதிகளைப் பற்றிச் சொன்னேன். அந்தப் பகுதியிலே நான் போய்ப்பார்த்து நிலம் வழங்க நடவடிக்கை நடக்கிறது. அப்படிச் செய்கிற நேரத்திலே அங்கத்தினர் அவர்கள் அங்கேயுள்ள விவசாயிகளைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிற நிலையெல்லாம் இருக்கிறது என்பதை நான் இங்கு சொல்லக்கூடிய சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்படுத்தியதற்



காக நான் வருந்துகிறேன். விவசாயிகளைப்பற்றி அவர்களை விட இந்த மன்றத்திலே உள்ள அத்தனை பேர்களும் அக்கறையுடன் இருக்கிறார்கள். குறிப்பாக சேலம் மாவட்டத்திற்கு இங்கேயுள்ள அத்தனை பேர்களும் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை பற்றி நான் சொல்லவில்லை. அதற்கு இனிமேல் வருகிறேன், நேரமிருந்தால் அதையும் தெளிவாகப் பேச விரும்புகிறேன். சட்டசபையில் நான் கொடுத்த விண்ணப்பத்தின்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைப்பற்றிய தகவல் தெரியவில்லை என்ற குறைபாட்டைத்தான் நான் இப்பொழுது சொல்கிறேன். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சபையிலே அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அமைச்சர்களின் குறிப்புகளுடன் அந்தந்த இலாகாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்தந்த இலாகாவினால் பரிசீலிக்கப்பட்டபிறகு முடிவுக்கு வருகிற நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பதில் அனுப்பப்பட்டுக்கொண்டுதான் வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. மெம்பருக்கு கடிதம் கிடைத்தது என்றாவது பதில் வரவேண்டுமென்ற ஆசையினால்தான் சொன்னேன்ன . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சபையில் அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நேரடியாக விண்ணப்பம் அளிக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். அப்படியிருக்க மறுபடியும் கிடைக்காமல் போனது என்ற சந்தேகம் வருவதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** அனுப்புகின்ற விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆகவே, அது நிர்வாகத்தில் இருக்கிற ஒரு கோளாறாக இருக்கலாம் என்றுதான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் பதில் வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது அதைப் பொதுக் கூட்டத்தில் படித்துக் காட்டித் திருப்திப்பட்டுக் கொள்வதற்காகவா அல்லது உண்மையிலேயே பிரச்சினை தீர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறார்களா? பிரச்சினை தீர வேண்டுமென்ற நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் கனம் அங்கத்தினர் அவர்களையும் கூட அழைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட காடுகளை எல்லாம் நேரிலேயே சென்று பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்கு, விவசாயக் கருத்தரங்கு மாநாடு கூட்டி நான் வந்து பேசிய பிறகு மாநாடு முடிந்து விட்டது என்று அறிவித்த பிறகும் முடிக்காமல் தொடர்ந்து மாநாட்டை நடத்தினார்கள். கனம் அங்கத்

தினர் அவர்கள் குறைசொல்ல வேண்டுமென்ற நோக்கத்திலேயே பேசுவதாகத் தெரிகிறதே தவிர, பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற முறையில் பேசுவதாகத் தெரியவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்**: அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கேட்டு உண்மையிலேயே வருந்தப்படுகிறேன். உங்களுடைய கடிதத்தை எந்தக் கூட்டத்திலாவது படித்து செல்வாக்குப் பெற வேண்டுமென்று முயற்சித்ததாக ஒரு உதாரணம் கூடக் காட்ட முடியாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: அந்த மாநாட்டில் விவசாயிகளும், அனைத்துக் கட்சி எம்.எல்.ஏ. க்களும் கலந்து பேசி தீர்மானம் போட்டு முடித்த பிறகு தொடர்ந்து மாநாட்டை நடத்தியதன் நோக்கம் என்ன என்பதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்**: அன்று அமைச்சர் அவர்களோடு நானும் புறப்பட்டு விட்டேன். அதற்குப் பின்னர் மாநாடு நடந்திருக்கலாம். மாநாடு தொடர்ந்து நடப்பதைப் பற்றி நான் பேசவில்லை. நிர்வாகத்தில் இருந்து பதில் கடிதங்கள் வரவில்லை என்று மட்டுந்தான் கூறுகிறேன்.

பொருளாதார ஆதிக்கம் கொண்டவர்கள் பொருளாதார ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் என்று இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள் என்று கடந்த பட்ஜட் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையில் கூறியிருக்கிறார்கள். அந்தப் பொருளாதார ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கிறவர்களை ஒன்று சேர்த்து, ஒருமுகப்படுத்தி வலிவுள்ளவர்களாகச் செய்தவன் மூலமாகத்தான் அந்த ஆதிக்கத்தைக் குறைக்க முடியும். அந்த ஆதிக்கத்தை குறைக்க அனைவரும் ஒன்று சேர்ந்து அக்கறை செலுத்தவேண்டும். அந்த ஆதிக்கத்திற்கு உட்பட்ட மக்களை, தொழிலாளர்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்று கனம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கூறி வருகிறார்கள். ஆங்காங்கு இருக்கிற தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக பேரம் செய்கிற சக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் பல சங்கங்களாகப் பிரிந்து இருப்பதுதான். அந்தச் சங்கங்களை எல்லாம் ஒன்றுபடுத்தி தொழிலாளர்களை ஒன்றுபடுத்தவேண்டும். அமைச்சர் அவர்கள் இது பற்றிப் பல இடங்களில் பேசியிருப்பதோடு என்னிடத்திலே நேரிலும் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை அரசியலுக்குப் பயன்படுத்தக்கூடாது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரியான காரியத்தைச் செய்வதற்கு ஆட்சியிலுள்ள அமைச்சர்களும், அந்தக் கட்சியிலுள்ள மற்றவர்களும் முனைந்து பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபடுவதன் மூலம் அந்த லட்சியத்தை நிறைவேற்ற முடியும். ஆனால் அந்தக் காரியத்திற்குப் பதிலாகத் தொழிலாளர்களைப் பிளவுபடுத்துவதற்கான காரியங்கள் நடப்பதைத்தான் நான் பார்க்கிறேன். மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலை மேட்டூரில் இருக்





கிறது. அதிலே உள்ள தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைத்து கோரிக்கைகளைப் பெறுகிற நேரத்தில் அங்கிருக்கிற தொழிற்சாலை நிர்வாகிகளுடைய தூண்டுதலின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சங்கத்தை அமைத்து தொழிலாளர்களிடையே பிளவை உண்டாக்கினார்கள். மேட்டூர் கெமிகல்சிலும் ஏற்கனவே இரண்டு சங்கங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தொழிற்சாலை நிர்வாகிகளின் தூண்டுதலின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அங்கே சங்கத்தை அமைத்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்?

**திரு. எம். சுரேந்திரன்**: மானேஜ்மெண்டிலிருந்து சைக்ளோஸ்டைலில் ஃபாரம் தயார் செய்யப்பட்டு அந்தச் சங்கத்தில் சேர வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கப்பட்டது. அதை அரசாங்கத்திற்கும் அனுப்பி வைத்திருக்கிறேன். நான் சொல்லுவதை வேறு கட்சிக்காரன் சொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ளாமல் உண்மையை ஆராய வேண்டுமென்று மிகப் பணிவோடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒரு லட்சியத்தில் பற்றுள்ளவன்; ஒரு கொள்கையில் பற்றுள்ளவன். திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பாதையில் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதனால்தான் சொல்லுகிறேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லுகிறேன் என்று தயவு செய்து எடுத்துக் கொள்ளக்கூடாது என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: அப்படியானால் தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொள்கையும், லட்சியமும் இல்லையென்ற கருத்தில் பேசுகிறீர்களா?

**திரு. எம். சுரேந்திரன்**: அம்மாதிரி கொள்கை ஒன்றும் இல்லாதவர்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட கருத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது. சோஷலிசக் கருத்திற்கு உகந்த காரியங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. அம்மாதிரி எண்ணத்தின் மீதுதான் பேசுகிறேன். அம்மாதிரியான காரியங்களை செய்வதன் மூலமாகத்தான் பொருளாதார ஆதிக்கத்திலுள்ளவர்களிடமிருந்து தொழிலாளர்களை விடுவித்து அவர்களை ஒன்றுபடுத்த முடியும். இன்றைக்கு இருக்கும் நிலையில் முதலாளிகள் தங்களுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு பக்கத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தொழில்களை மூடிக் கொண்டிருக்கிறார்கள். பல தொழில்களை மூடியிருக்கிறார்கள். இன்னும் பல தொழில்கள் மூடப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லும்போது பத்திரிகைக்காரர்களும் மற்றவர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால், மாட மாளிகையிலும் கூட கோபுரத்திலும் இருந்த முதலாளிகள் ஏதோ குடிசைகளில் வாழ வேண்டிய

நிலைக்கு வந்து விட்டது போன்ற அனுதாபத்தோடு பார்க்கிறார்கள். நாட்டின் பொருளாதாரம், மற்ற அம்சங்கள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கின்றபோது நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. இந்த மோசமான நிலையைப் பயன்படுத்தி குழப்பத்தை உண்டாக்குகின்ற கட்சியினரும் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அந்தக் கட்சிகள் குழப்பமான நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழக்கமுடையவர்கள். சமீபத்தில் வங்காளத்தில் ' நக்சல்பாரி ' நடந்து அது எல்லா இடங்களுக்கும் பரவி விடுமோ என்று ஐயப்பட்டார்கள். உலகத்தில் அம்மாதிரிக் காரியங்களைக் கையாண்டவர்கள் சோவியத் ரஷ்யா ஒன்று; சைனா ஒன்று. இந்த நிலையை வைத்துக் கொண்டு அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்த நாட்டில் இருக்கும் ஜனநாயகத் தன்மையை அறவே கெடுத்து விடுவார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஒரு பக்கத்தில் முதலாளிகளின் நிலைமை இப்படி இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் குழப்பத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலை. இந்த இரண்டு நிலையை வைத்துக் கொண்டு பார்க்கும்போது ஜனநாயகத்தின் மீது பற்றுக் கொண்டவர்கள் எல்லாம் உறுதியாக, நிச்சயமாக, ஒன்றாக இருந்து அத்தகைய நிலையைப் போக்குவதற்கு வழி காண வேண்டுமென்ற வகையில் தான் நான் இவற்றையெல்லாம் எடுத்துக் கூறுகின்றேனே தவிர, அமைச்சரவையின் மீது குற்றம் காணவேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல.

கவர்னர் உரையின் இன்னொரு பகுதியில், 'எல்லா இடங்களிலும் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது; அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன; கொள்முதல் அதிகப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மைதான். பாராட்ட வேண்டிய விஷயந்தான். முன்பு இருந்ததைவிட கொள்முதல் பெருகத்தான் வேண்டும். அதற்கேற்றவாறு உற்பத்தி பெருகத்தான் வேண்டும். அதைச் செய்ய இந்த அரசு முற்படுகிறது என்பதை உணருகிறேன். ஆனால் அதிகப்பட்டிருக்கிற அந்தப் பொருள்கள் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதிலே கவனம் செலுத்த வேண்டும். சரியான முறையில் விநியோகம் செய்வது பிரதானமானது. எல்லாப் பகுதிகளுக்குச் சீரான முறையில் விநியோகிக்கப்பட வேண்டும். விநியோகிக்கும் பொருள்களின் அளவு உயரவேண்டும். அதற்கான முறையில் இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

இரண்டு இடங்களில் மட்டும் குறைந்த விலையில் அரிசி வழங்கி வருவதால் ஐந்து கோடி ரூபாய்க்கும் மேலாகச் செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி எல்லா இடங்களிலும் பரவலாக வழங்கினால்தான் சரியானமுறையில் பலன் பெற முடியும். அப்படிக் கொடுக்கின்ற இடங்களில் கூட அளவு அதிகப்பட வேண்டும். அளவு அதிகப்படவில்லை என்றால், குறைந்த அளவில் கொடுப்பதன் மூலம் அவர்கள் மீண்டும் வெளியில் அதிக விலைக்கு





வாங்க வேண்டிய நிலை இருப்பதன் காரணமாக முழுப் பலனையும் அவர்கள் உணர்ந்து கொண்டு பாராட்டுவதற்குப் பதிலாக சங்கடப்படும் நிலைமையில் இருக்கிறார்கள்.

ஆகவே, அந்தப் பிரச்சனையை நாம் ஆழமாக ஆராய்ந்து முடிவு எடுக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். இப்போது நாம் உற்பத்திப் பெருக்கத்தில் அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறோம் என்பது உண்மையே. இந்த அரசு வந்ததற்குப் பிறகு காட்டு இலாகா நிலமாக இருந்தாலும்சரி அல்லது மற்ற நிலங்களாக இருந்தாலும் சரி, அவற்றை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு எடுத்து அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்பட்டவுடன் பலவிடங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்தன. பல விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்ற நிலையிருக்கிறதென்று அறிகிறேன். பலவிடங்களில் ஃபாரம்கள் அடித்து கையெழுத்து வாங்கி ஆங்காங்கே அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தநிலையில் அது எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது. எவ்வளவு நிலங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன, எவ்வளவு வழங்கியிருக்கிறார்கள், எந்தெந்த முறையில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் அறிவிக்கப்படவேயில்லை. அவற்றை துரிதமாகச் செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) இந்தமுறையில் சில அம்சங்களை மட்டும் சொல்லிவிட்டு நேரம் இல்லாததினால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். மீண்டும் சந்தர்ப்பம் பட்ஜெட் கூட்டத்தில் வரும், அப்போது அதிகமாகப் பேசமுடியும் என்று நம்பி இந்தளவு கவர்னர் உரையின்மீது என் கருத்துக்களை அறிவித்து நிறுத்துகிறேன். வணக்கம்.

* திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களது உரையில் விலைவாசிபற்றி நன்றாகக் கூறியிருக்கிறார்கள். விலைவாசிகளின் ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு மாநில அரசாங்கம் தனது அதிகாரத்திற்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டபோதிலும், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளே தற்போதைய பணவீக்க நிலைக்கு முக்கிய காரணம் என்பதை ஆளுநர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதுமட்டுமல்ல, உணவு தானியங்களின் விலைவாசிகளையும் ஏனைய இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளையும் நியாயமான அளவுகளில் நிறுத்த முயற்சி எடுத்துள்ளது. அதற்கு மத்திய அரசு ஓரளவிற்காவது உதவி புரியவேண்டுமென்று வற்புறுத்தியும், மத்திய அரசு எந்தவிதமான செயலும் செய்யாதிருந்தும்கூட விலைவாசிகளை கட்டுப்படுத்தக்கூடிய முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

1962-ஆம் ஆண்டுவரையில் கவர்னர் அவர்கள் உரையிலோ அல்லது அமைச்சர்களோ விலைவாசிகளைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. எங்கள் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம்தான் விலைவாசி விஷம்போல் ஏறுகிறது என்று கூறிவந்தார்கள். அதற்கு

அப்போதிருந்த அமைச்சர்கள் கேளாக்காதினராக இருந்தார்கள். ஆனால் அமைச்சர்களின் மனைவிமார்களோ விலைவாசி ஏறிவிட்டது, எங்களால் வாழ்க்கை நடத்தமுடியவில்லை என்று மாநாடு போட்டு பேசியபோதும்கூட அமைச்சர்கள் இந்த மன்றத்தில் "விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது"? என்றுதான் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டத்தை நடத்தி ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் சிறைபட்டு, கட்டிளங்காளைகளான பொற்செழியன், கோ. சு. மணி இவர்களை பறிகொடுத்ததற்குப் பிறகு 64-ல் இந்த மன்றத்தில் அமைச்சர்கள் விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது என்று கூறியதை மாற்றி ஆமாம், ஏறியிருக்கிறது அதற்கான வழி வகைகளைக் காணவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டார்கள். "திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அங்கத்தினர்களும் பேசினார்கள், எங்களிடம் ஆட்சியைக் கொடுங்கள், பதுக்கப்பட்டிருப்பதை நாங்கள் எடுத்து விடுவோம், விலைவாசியைக்குறைப்போம் என்று சொன்னார்கள். அதற்காக இவர்களிடம் ஆட்சியைக் கொடுப்பதா, மக்கள் ஆட்சியை காங்கிரஸிடம் கொடுத்திருக்கிறார்கள், அதை எப்படி மற்றவர்களிடம் கொடுப்பது" என்று முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கவர்னர் அவர்கள் உரை மீது 1962-ல் ஏப்ரல் மாதம் 27-ம் தேதியில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். சட்டமன்ற நிகழ்ச்சி 450-ம் பக்கத்தில் இருக்கிறது. பாவம் பக்தவச்சலம் அவர்கள் கவலைப்பட்டதுபோல் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கையில் ஆட்சியைக் கொடுத்துவிட்டார்கள்.

சென்ற ஆண்டு நடந்ததுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். "விலைவாசியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டே இருக்கின்றன. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியதை தங்களுடைய கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். 1952--53-ல் இருந்த விலைவாசியைவிட இன்றைக்கு பன்மடங்கு அதிகமாகியிருந்து கொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் மிக்க அதிகமாகி இருக்கிறது. அப்படி விலைவாசிகள் உயர்ந்திருக்கின்ற காரணத்தினால் எவ்வளவுதான் நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தாலும், வெற்றி பெறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் என்னென்ன காரியங்களை மேற்கொள்ளப் போகிறது என்பதை நாங்கள் இந்த உரையில் எதிர்பார்த்தோம். ஆனால், உருப்படியாக எதையும் காணவில்லை. அதனால் பொதுமக்களும், நாங்களும் மிக்க ஏமாற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்" என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இதே சட்டமன்றத்தில் மார்ச் 21-ம் தேதி கூறியிருக்கிறார்கள். மேலும், அவர்கள் கூறியிருக்கிறார்கள், "பண்டங்களை சப்ஸிடைஸ்ட் ரேட்களில் கொடுப்பது நல்ல வழியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிலோன் கவர்ன்மெண்டில் உணவு தானியங்களுக்கு ஸப்ஸிடி கொடுத்து வந்தார்கள். அதிகமாக பணத்தைக் கொடுத்து வாங்கி, தன்னுடைய பிரஜைகளுக்கு குறைந்த விலையில் கொடுத்து வந்தது. அதே முறையை இந்த அரசாங்கமும் கையாள முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யலாம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுபற்றி நிபுணர்களை வைத்துப் பரிசீலித்துப் பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்" என்றும், "முதல் பிரச்னை உணவுப் பிரச்னையாகும். முதலாவதாக உணவுப் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் கண்டால்தான் மற்றப் பிரச்னைகளுக்குச் செல்வது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்" என்றும் கூறியுள்ளார்கள். எனவேதான் நமது முதலமைச்சர் அவர்கள் உணவுப் பிரச்னையில் விலைவாசிகளைக் குறைக்க முதல் இடம் கொடுத்து, "புத்துயிரும் புது மெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு உணவுப் பொருள்களின் விலைவாசிக் குறைப்பே திறவுகோலாக அமையுமென்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும்" என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். "உணவுப் பண்டங்களின் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க நாம் உறுதியோடு இன்றே, இன்னே செயல்பட வேண்டும். அப்போதுதான் விலைவாசி ஏற்றத்தால் ஆற்றாது அல்லல்படும் மக்களுக்கு அவர்கள் ஏங்கித் தவிக்கும் துயர் தணிப்பு உடனடியாகக் கிட்டும். அத்துடன் விலையேற்றம், செலவேற்றம் என்கிற இந்த நச்சு வட்டத்தின் உயிர் நாடியையும் தகர்த்தெறிய முடியும். இத்தகைய துணிச்சலான கொள்கையின் துணை கொண்டே கடக்க முடியும்." என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள், இந்த மன்றத்தில் பட்ஜெட்டை சமர்ப்பிக்கும் நேரத்தில். சலுகை விலைகளில் உணவு தானியங்கள் வழங்குவதினால், ஏனையப் பொருள்களின் விலைகளும் குறையும் என்பதை மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கு நான் ஒருசில புள்ளிவிவரங்களைத் தருகிறேன். 13—2—1967-ல் இருந்த விலைகளும், 13—2—1968-ம் நாளன்று இருந்த விலைகளும். புளி பெர் க்வின்டால் 13—2—1967-ல் ரூ. 400 என்றிருந்தது——ரூ. 800 வரை விற்றிருக்கிறது——13—2—1968-ல் ரூ. 210. இது சென்னையில் உள்ளவிலை. ஒரு சில இடங்களில் மணப்பாறையில் ரூ. 125-தான். மிளகாய் க்வின்டாலுக்கு ரூ. 480 இருந்தது 13—2—1968-ல் விலை ரூ. 150. தனியா ரூ. 250 என்றிருந்தது ரூ. 100-க்கு வந்திருக்கிறது. பூண்டு ரூ. 540 என்றிருந்தது ரூ. 125-க்கு வந்திருக்கிறது. மஞ்சள் ரூ. 300 இருந்தது ரூ. 250 ஆகியிருக்கிறது. ஜீரகம் ரூ. 103-25 என்றிருந்தது ரூ. 96-க்கு வந்திருக்கிறது. துவரம் பருப்பு ரூ 280 என்றிருந்தது ரூ. 140-க்கு வந்திருக்கிறது. கடலைப் பருப்பு ரூ. 240 என்றிருந்தது ரூ. 190-க்கு வந்திருக்கிறது. உளுத்தம் பருப்பு ரூ. 175 என்றிருந்தது ரூ. 140-க்கு வந்திருக்கிறது. சீயக்காய் ரூ. 180 என்றிருந்தது ரூ. 115-க்கு வந்திருக்கிறது. பட்டாணி ரூ. 140 என்றி ரூ. ருந்தது 115-க்கு வந்திருக்கிறது. நல்லெண்ணெய் (16 கிலோ) ரூ. 128-ஆக இருந்தது ரூ. 59-க்கு வந்திருக்கிறது.

லாமென்று வீணை கனவு காண வேண்டாம் என்று எச்சரித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஆதாரம் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். மத்திய அரசின் துணை கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்து விடலாமென்று கனவு காண்கிறார்கள்.

> "The Centre—State conflict will not lead to any serious complications" என்று "Future of Non-Congress Government, Madras."

என்ற தலைப்பில் 'அஸ்ட்ராலாஜிகல் மாகசின்' என்ற புத்தகத்தில் பக்கம் 552-இல் வால்யூம் 56-இல், நெம்பர் 6-இல் எழுதப் பட்டிருக்கிறது

> "Regarding the administrative abilities of the Party, Jupiter well placed indicates that the Planning of the Party will be on sound lines and sane."

என்று டாக்டர் பி. வி. இராமன் டிசம்பர் 66 இலேயே எழுதப் பட்டிருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கூட அல்ல, அதற்கு முன்னாலேயே எழுதப்பட்டிருக்கிறது மேலும்,

> "Saturn's Dasa runs till 1979 November, and it must be presumed that the Party will have its Hey-day during this period. The Party has got long life and a bright future. Till 1979 the D.M.K. will be very popular with the masses"

என்றிருக்கிறது, எனவே வீணைக் கனவுகள் காண வேண்டாமென்று காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. கே. விநாயகம்: இப்பொழுது ஜாதகத்திலேயும், சாஸ்திரத்திலேயும் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஜாதகத்திலே அமைச்சர்களுக்கும், அங்கத்தினருக்கும் நம்பிக்கை இருப்பது பற்றி சந்தோஷம். அந்த நம்பிக்கை அவர்களுக்கு உண்மையிலேயே இருக்கிறதா ? அல்லது எங்களுக்காகப் படித்துக்காட்ட வேண்டுமென்று படித்துக் காட்டுகிறார்களா ?

திரு. ஆர். நாகசுந்தரம்: எங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் ஆட்சியை இராத்திரி 12 மணிக்கு ஒப்புக்கொண்டார்களே அவர்களின் நம்பிக்கையின் பேரிலேதான் டாக்டர் பி. வி. இராமன் எழுதியுள்ளார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதன்மீது நம்பிக்கை வைத்திக்கவலையில்லை. தமிழக மக்கள் மீது எங்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. அவர்களது தொண்டிலும், நல்லெண்ணத்திலும் நிறைய நம்பிக்கை உண்டு. அதில் சந்தேகம் வேண்டாம்.

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் தமிழ் வளர்ச்சியிலும், மொழிப்பிரச்சினையிலும் மிகவும் அக்கறை





செலுத்தி இருக்கின்றார்கள் என்பது அவர்களுடைய உரையிலேயிருந்து நன்றாகத் தெரிகிறது. அதற்காக அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இப்பொழுது சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை போன்ற இடங்களிலே பல கலவரங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்படுவது நாட்டுக்கு நல்லது அல்ல, அரசுக்கும் இது நல்லது அல்ல, இதை எப்படியாவது தடுப்பதற்கு மந்திரிகள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்பட்டால் மக்களுடைய பலவிதமான பொருள்களுக்கு மட்டுமின்றி மற்றவைகளின் பாதுகாப்பிற்கும் இன்னல் விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. இதனால் மக்கள் கலவரப்பட்டிருக்கிறார்கள். இதைப்போன்ற கலவரங்களைத் தூண்டி எப்படியாவது ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று ஒருசிலர் நினைக்கிறார்கள். எனவே இதுசம்பந்தமாகக் கவனம் செலுத்தி இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலவரங்களிலே ஈடுபட்டுள்ளவர்கள் எந்தப் பகுதியினராக இருந்தாலும், அவர்கள் இந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி பாகுபாடு இல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆளுநர் உரையிலே கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே ஏற்பட்ட புயல், வெள்ளத்தைப்பற்றிக் குறிப்பிடப்படாதது மிகவும் வருந்தத்தக்கது. அங்கு ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக கிராம ரோடுகள் முழுவதும் அழிக்கப்பட்டிருக்கின்றன. கிராம ரோடுகள் கிராமங்களிலிருந்து தொடர்பே இல்லாமல் அறுந்து போயிருக்கிறது. இதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்த ரோடுகளைச் செப்பனிடுவதற்கு இன்னும் ஏற்பாடு செய்யப்படவில்லை. இதைப்பற்றிக் கேட்டால் மத்திய அரசாங்கத்திலிருந்து நிதி கிடைக்கவில்லை, அதனாலேதான் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். பல பள்ளிக்கூடங்களும் இதே நிலையிலேதான் இந்தப் புயலினால் பாதிக்கப்பட்டு அழிந்திருக்கின்றன. ஏரிகளைப் பொறுத்தவரையில் ஏரிகள் எல்லாம் உடைந்து போயிருக்கின்றன. இன்னும் அதற்கு எஸ்டிமேட் போட்டு, வேலை துவங்காமல் இருக்கிறது. அதையும் உடனடியாகச் செய்து, அந்த ஏரிகளையெல்லாம் மராமத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது பரமக் குடியிலே ஒரு ஸ்பெஷல் டிவிஷனை ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த டிவிஷன் இன்னும் வேலையைத் தொடங்கவில்லை. இப்பொழுதே வேலையைத் தொடங்கினால்தான் அடுத்த வருடத்திலாவது இந்த ஏரிகளெல்லாம் செப்பனிடப்படும். அதன்மூலம் நல்ல நிலையிலே விவசாயம் செய்வதற்கு முடியும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

[1968 பிப்ரவரி 15

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் உறுப்பினர் அவர்கள் எங்கிருந்து சேகரித்திருக்கிறார்கள் ? அதுமட்டுமல்ல. இந்த விலைக்கு எங்கிருந்து வாங்கலாம் என்பதையும் தயவு செய்து விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தினமணிப் பத்திரிகை வாராந்திர ரிப்போர்ட்டிலிருந்து எடுத்திருக்கிறேன். அந்தப் புள்ளிவிவரம் இது.

**திரு. கே. விநாயகம் :** அதிகாரபூர்வமான விலைகளைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால், அரசாங்க அதிகாரிகள் சேகரித்திருக்கிறார்களே அதைத்தான் நம்பக்கூடுமே தவிர, உங்களுக்கு வேண்டிய பத்திரிகைகள், எங்களுக்கு வேண்டிய பத்திரிகைகள் என்று வைத்துக்கொண்டு விவாதம் செய்வது சரியல்ல. கவர்ன்மென்ட் ஸ்டாட்டிஸ்டீஷியன் கொடுத்திருக்கும் விலைகளிருந்தால், தயவு செய்து படியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அங்கத்தினர் கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்களது கட்சிக்காரர்கள் தாறுமாறாக விலைவாசிகள் ஏறிற்று, ஏறிற்று என்று கடந்த ஒரு ஆண்டாக இந்தச் சபையிலும் வெளியிலும் கூறிவருகிறார்கள். விலைவாசிப் பட்டியலைக் கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல இங்கும் வெளியிலும் விலை ஏறிவிட்டது, ஏறிவிட்டது என்று கூறுகிறார்கள். ஒரு விவகாரத்தில் மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இதனால் யாருக்கும்
நண் பகல் 12-00 பெருமை தேடிக்கொள்வதற்காகச் சொல்லவில்லை, இதனால் அரசாங்கம் சிறப்பைப் பாராட்டிக்கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை. பொதுவாக, விலைவாசிகளைப் பொறுத்தவரையில் 1966-ஆம் வருஷமும் 1967-ஆம் வருஷமும் ஆகிய இரண்டு வருஷங்களுக்கும் ஆன வாழ்க்கைச் செலவு புள்ளி விவரங்கள் இருக்கின்றன. பொருளாதார இலாக்காவினால் தயாரிக்கப்பட்டது. ஒன்று தெளிவாகச் சொல்ல முடியும். நம்முடைய மத்தியநிதி அமைச்சர் உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பழைய அரசாங்கம் பொறுப்பிலேயிருந்தபொழுது 1966-ஆம் வருஷம் ஜனவரி மாதத்திலே வாழ்க்கைச்செலவு, காஸ்ட் ஆப் லிவ்விங் இன்டெக்ஸ்ஸில் என்ன இருந்தது என்றால், 1966-ஜனவரியில் 620-ஆக இருந்தது கடைசியிலே டிசம்பர் மாதத்திலே 701-ஆக மாறியது. 1966-ஜனவரியிலே 620-ஆகயிருந்தது 701-ஆகி, 80 புள்ளிகள் உயர்ந்தது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபிறகு 701-லிருந்து இந்த வருஷக் கடைசியிலே எந்த அளவு ஏறியிருக்கிறது என்றால், 20 புள்ளிகள் தான் ஏறியிருக்கிறது. விலைவாசி ஏறவில்லை என்பது அல்ல இதன் பொருள். கடந்த ஆண்டிலே எந்த ஒரு வேகத்திலே விலை ஏறிக் கொண்டிருந்ததோ, அது முக்கால் பகுதியாகக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்



1968 பிப்ரவரி 15] [திரு. கே. ஏ. மதியழகன்]

கத்திற்குப் பெருமைவேண்டுமென்பதற்காக இதைச் சொல்லவில்லை. பின்னாலே வருகிற விவாதங்களில் இந்த விலைவாசிகளை எந்த முறையில் கட்டுப்படுத்தவேண்டும், எந்த முறையில் விலைவாசிகள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் கட்டுபடுத்தாதற்குக் காரணங்கள் யாவை ? குற்றவாளிகள் யார், யார் ? என்பதையும் இந்த மன்றத்தில் விவாதிக்கத்தான் இருக்கிறேன். இப்போது குறுக்கிட நேர்ந்ததற்குக் காரணம் இது சம்பந்தமாக ஒரு தவறான கருத்து தமிழகத்திலேயும், மக்களுக்கும் ஏற்பட அரசியல் ரீதியில் செய்யக்கூடாது என்பதற்காகத்தான். காங்கிரஸ்காரர்கள் இவ்வாறு கூறினால், அவர்கள் கட்சியினைச் சேர்ந்த மொரார்ஜி தேசாய் அவர்களையே மறுக்கிறார்கள் என்பது தான் பொருள். பல பொருள்களின் விலைவாசிகள் குறையவில்லை. அதற்கான காரணங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், அதை விளக்குகின்றோம். கடந்த காலத்திலே வாழ்க்கைச் செலவுப் புள்ளி எந்த வேகத்திலே சென்றதோ அந்த ஓட்டத்திலேயே செல்லாமல், இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 20 புள்ளியிலே வைத்திருக்கிறது என்பதை நான் மிகுந்த உறுதியோடு, ஆதாரத்தோடு சொல்லிக்கொள்ள முடியும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவரவர்களே, தினமணி பத்திரிகை காங்கிரஸ் பத்திரிக்கையோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிக்கையோ அல்ல. அது செய்திப்பத்திரிகை. அந்தப் பத்திரிகை தயாரித்த புள்ளிவிவரம். அதற்கு நிருபர்கள் சொல்லுகிறார்கள். அரசாங்கப் புள்ளி விவரம் கிடைக்க ஆறு மாதம் ஆகும். நான் சொல்லுவது இன்றையநிலை. இந்த லிஸ்டைப் படித்தால், அதிகமாக இருக்குமென்ற காரணத்தால், எதிர்க்கட்சி நண்பர்கள் தடுக்கிறார்கள். ஆனால், அதிகார பூர்வமாக வரத்தான் போகிறது. இதில் 4, 5 அயிட்டங்கள் மட்டும் படித்துவிடுகிறேன். கடலெண்ணெய் முன்பு 433 ரூபாய், இப்போது 260 ரூபாய். ரிபைண்ட் ஆயில் முன்பு 90 ரூபாய் 20 காசு, இப்போது 59 ரூபாய். சோப்பு முன்பு 8 ரூபாய் 40 காசு, இப்போது 7 ரூபாய் 10 காசு, நெய் முன்பு 14 ரூபாய், இப்போது 12 ரூபாய், வெங்காயம் முன்பு 42 ரூபாய், இப்போது 18 ரூபாய். உருளைக்கிழங்கு முன்பு 52 ரூபாய், இப்போது 36 ரூபாய். பச்சை மிளகாய் முன்பு 2.75 ரூபாய், இப்போது 60 பைசா. இப்படியே படித்துக்கொண்டு சென்றால், நீங்கள் மயங்கி விழுந்து விடுவீர்கள். அந்த அளவிற்கு இன்று விலைகள் குறைந்திருக்கிறது. மேலும். விலைகள் சரியும் என்று வியாபாரிகள் பயப்படுகிறார்கள். நாட்டிலேயுள்ள நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் மட்டும் தலையை வளையிலே வைத்துக்கொண்டு உலகமே தன்னைப் பார்க்கவில்லை என்று நினைக்கும் நெருப்புக்கோழியைப் போல நிலைமையைக் காண மறுக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் போன்றவர்கள் இவ்வாறு விலைவாசியைக் குறைத்தமையைப் பாராட்டுவார்கள் என்று பார்த்தோம். அவர்களும் அதற்கு முன்வரவில்லை. திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த நல்ல ஆட்சியை ஒழித்து விட வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். அவ்வாறு ஒழித்துவிட

எல்லா ஏரிகளின் கரைகளும் உடைந்து, அந்த ஏரிகளிலே தண்ணீர் அதிகம் தேங்கியிருப்பது மிகமிகச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, இந்த வேலைகளை இந்த வருடத்திலே செய்யாத நிலை ஏற்படுமானால் அடுத்த வருடத்திலும் விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரைத் தருவதிலே கஷ்டம் ஏற்படும். இதற்கெல்லாம் எப்படியாவது ஒரு கிராண்ட் கொடுக்க வேண்டும். வரப்போகின்ற பட்ஜெட்டிலே இதற்குத் தனி கிராண்ட் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். காங்கிரஸ் அரசாங்கம் 20 வருடம் ஆண்ட பொழுது இப்படிப்பட்ட அபிவிருத்திகளிலே நாட்டம் செலுத்தாமல் இருந்தார்கள். இப்பொழுது கூட சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கிராண்ட் கொடுக்காமல் இருந்தது. இந்த கிராண்ட் கிராமங்களுக்கெல்லாம் கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதால் வேலைகள் நடைபெறவில்லை. இருபது வருடமாக ஆண்ட காங்கிரஸ் அரசாங்கம்தான் கிராமப் புறங்களைக் கவனிக்காமல் இருந்தது. இந்தப் புதிய ஆட்சியாவது இதைக் கவனிக்கவில்லை என்றால் கிராமப்புறங்கள் நன்மை அடைய முடியாது. மெட்ராஸ் போன்ற சிட்டிகளிலே இருப்பவர்கள் ஏரோப்ளேன்களிலே பறந்தாலும் கூட என்னைப் போன்ற கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் கட்டை வண்டியிலாவது போவதற்கு வழி செய்ய வேண்டும். 20 வருட ஆட்சிக்குப் பிறகு உங்களுடைய ஆட்சியிலாவது அதற்கு ஏதாவது வழி வகை செய்தாக வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள ரோடுகள் எல்லாம் அழிந்து மற்ற இடங்களோடு தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது. நிச்சயமாக கிராமப்புறங்களைக் கவனிக்கின்ற முறையிலே பட்ஜெட்டிலே பணம் ஒதுக்க வேண்டும். அப்படிப் பணம் ஒதுக்கி, கிராமப்புற ரோடுகள், பள்ளங்கள் இவைகளை எல்லாம் சரி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். உற்பத்தி பெருகினால்தான் இந்த நாட்டிலே எல்லா மக்களுக்கும் நன்மை செய்ய முடியும் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. இதற்குத் திட்டங்கள் மட்டும் போட்டு பிரயோஜனம் இல்லை. முதலாவது எல்லா கிராமங்களுக்கும் ரோடுகள் தேவை. ரோடுகள் இருந்தாலொழிய உற்பத்தி அதிகரிக்க முடியாது என்பது என்னுடைய பூரணமான நம்பிக்கை. விவசாயிகள் விவசாயத்திற்குத் தேவையான சாதனங்களையும் ரசாயன உரம் போன்ற பொருள்களையும் கிராமத்திற்குக் கொண்டு வர ரோடுகள் அவசியம். அந்த முறையில் கிராமப்புறங்களில் ரோடுகள் இல்லாத குறையைப் போக்கி, எந்தக் கிராமத்திலிருந்து எந்தக் கிராமத்திற்கு வேண்டுமானாலும் போவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். வெறும் கட்டை வண்டிகள் மட்டும் அல்ல கார் போவதற்கும் வழி இல்லை என்ற நிலையை மாற்றினாலொழிய கிராமப் புறங்கள் நிவர்த்தி அடையவே முடியாது. ஆகவே இந்த அரசு இதிலே மிகவும் அக்கறை கொண்டு, இந்தக் கிராமப் புற ரோடுகளைச் செப்பனிட்டுக்





கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய ரோடுகளைப் போடவும் பழைய ரோடுகளைச் செப்பனிடவும் இந்தப் பட்ஜெட்டிலே நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது புஞ்சை நிலவரியைத் தள்ளுபடி செய்திருக்கிறது இந்த அரசாங்கம். ஆனால் இந்த புஞ்சை நிலங்களுக்கு இருக்கிற அடிப்படைத் தீர்வைக்கு இருக்கிற சர்சார்ஜ்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அதுதான் அதிகமாக இருக்கிறது. அடிப்படைத் தீர்வையைக் காட்டிலும் சர்சார்ஜ் அதிகமாக இருக்கிறது. அதுவும் விவசாயிகளுக்கு மிகப் பளுவாக இருக்கிறது. ஆகவே இந்த அடிப்படைத் தீர்வையை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற சர்சார்ஜ்களை எல்லாம் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த சர்சார்ஜ்கள் எல்லாம் பஞ்சாயத்துக்குச் செல்கின்றன.) பஞ்சாயத்துக்கு அந்த சர்சார்ஜ்கள் போய் விடும் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். வேறு ஏதாவது வழி கண்டு பிடித்துப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கட்டும். பஞ்சாயத்து வருமானத்தைப் பெருக்க வேறு நல்ல வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று நமது அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள்மீது வரி போட்டுத்தானா பணத்தைப் பெற வேண்டும்? வேறு பல காரியங்களிலே அதிக வரி போடட்டுமே? அல்லது வேறு அபிவிருத்தி செய்தோ பஞ்சாயத்துக்களுடைய நிதியைப் பெருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நஞ்சை நிலங்களின் வரியை அகற்றுவதுபற்றி ஏற்கனவே இருந்த அரசாங்கம் யோசித்து வருகின்றோம், யோசித்து வருகின்றோம் என்றே சொல்லிக் கொண்டு வந்தார்கள். நான் கடைசியாக அவர்களை . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அரசாங்கத்திலே இருந்தவர்கள் சொல்லவில்லை. அவர்கள் வெளியிலே பொதுக் கூட்டத்திலே மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அகற்றுவதாகச் சொன்னார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நான் கடைசியாக முதலமைச்சர் அவர்களிடம் கேட்ட பொழுது நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த நில வரியை அகற்றியிருப்போம் என்றே உறுதி மொழி கொடுத்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழியைக் காப்பாற்றாமலே அவர்கள் போய் விட்டார்கள். இப்பொழுது இருக்கிற அரசாங்கமும் இதைப் பற்றிச் சொல்லும்பொழுது இது பரிசீலனையில் இருக்கிறது, இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறது. விவசாயத்தைப் பெருக்கவேண்டும். உணவுப் பஞ்சம் இல்லாமல் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் விவசாயி உற்சாகமாக விவசாயம் செய்ய வேண்டும். விவசாயிக்குப் பல நன்மைகள் செய்தால் ஒழிய விவசாயி உற்சாகமாக விவசாயம் செய்ய முடி

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1963 பிப்ரவரி 15

யாது. ஆகவே இந்த அடிப்படை நில வரியை மட்டுமல்லாமல் நஞ்சை மீது இருக்கிற எல்லா வரிகளையும், அதாவது முறையாக ஒரு வரியை மட்டும் லேசாக வைத்துக் கொண்டு பாக்கி வரிகளை எல்லாம் நீக்கினால்தான் இந்த நாட்டிலே உணவுப் பஞ்சத்தைப் போக்க முடியும்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை)

விவசாயத்தைப் பற்றி நன்குஉணர்ந்த ஒருவர் விவசாய அமைச்சராக இருக்கிற காரணத்தாலே பெரும் பாரத்தைக் குறைக்கலாம். ஏதேதோ விவசாய வரிகள் இருக்கின்றன. ஏதேதோ சர்சார்ஜ்கள் இருக்கின்றன. இந்த மாதிரி நிலை இருப்பதனாலே மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. . வெள்ளம், புயல் அடித்த நேரத்தில் கூட வசூல் செய்வதற்கு ஒரு பக்கம் ரெவின்யூ அதிகாரிகள் முற்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். வருவாய் இல்லாத நேரத்தில் கூட விவசாயிகள் வரி செலுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. பார்க்கின்றபொழுது விவசாயி வரியை செலுத்த முடியாத நிலையே தவிர, வைத்துக் கொண்டு கொடுக்காமல் இருக்கிற நிலை இல்லை. ஆகவே இருக்கிற வரியை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

ஒரிசா அரசாங்கத்திலே அவர்கள் புதிதாக ஆட்சிக்கு வந்த உடனேயே இந்த நிலவரி முழுவதையும் ரத்து செய்து இருக்கின்றார்கள். அவர்கள் ரத்து செய்து காண்பித்து விட்டார்கள். ஆகவே, இந்த தமிழக அரசு அதைப் பின்பற்றி இந்த விவசாய வரியை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தேவகோட்டை பகுதியிலே எலக்ட்ரிக் பல்புகள் எல்லாம் எரிவது இல்லை. ஒரே இருட்டுமயமாக இருக்கிறது. இதைக் கேட்டால் பல்பு கிடைக்க வில்லை என்று சொல்கிறார்கள். பல்பு கிடைக்கக்கூட வழி பண்ண முடியாத நிலை உதய சூரியன் ஆட்சியிலே இருக்கலாமா? இது உதயசூரியன் ஆட்சி. இங்கே இருள் இருப்பதை என்றால் புரிந்து கொள்ள முடிய வில்லை. இந்த பல்புகளை எல்லாம் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று இராமநாதபுரம் டி. டி. சி. மீட்டிங்கிலே கூட. தீர்மானம்போட்டு அனுப்பியிருக்கிறோம். அந்தப் பகுதிகளிலெல்லாம் ஒரே இருட்டு மயமாக இருக்கிறது. அங்கே போகவே முடியவில்லை. ஒரே பயங்கரமாக இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக நிவர்த்தி பண்ண வேண்டும். மத்திய சர்க்கார் இதற்கும் தடை போடுகிறதா? இல்லையென்றால் கொடுக்க முடியாமல் பண்ணி விட்டதா? இந்த நிலைமையைப்பற்றி அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1968 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவர்கள் பகுதிக்குப் போனேன். அவர்களுடைய பகுதியின் தெருக்களி லெல்லாம் நன்றாக வெளிச்சம் இருந்தது. ஒருவேளை உதயசூரியன் இல்லாத நட்சத்திரக் காலத்திலே சூரியன் அல்லாத சமயத்திலே இருள் இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் இந்தப் பல்பைப் பொறுத்த வரையில் அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் ஏற்கனவே பரிசீலித்து வருகின்றது. அது இந்த உதய சூரியன் ஆட்சியிலே வந்தது இல்லை. நான் எதிர்க்கட்சியிலே இருந்த பொழுது கூட, அங்கே டி.டி.சி. கூட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த பல்பு எப்படி சப்ளை செய்வது என்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை மாற்றுவது பற்றி இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களும் தெருக்களுக்கு நாங்களே இந்த பல்பு சப்ளையை ஏற்றுக் கொள்கிறோம், எங்களிடமே பல்பு வாங்குவதற்கு அதிகாரம் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தில் எப்பொழுதுமே விளக்கு இருக்கிறது. அந்த ஜில்லாவிலே இருள் என்று சொன்னது தவறு என்று அவர்களிடத்திலே கூறிக் கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியிலே வரிவஜா செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டுவருகிறது. இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வரி வஜா செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்பது 'விளைந்தாலும், விளையாவிட்டாலும் எங்களுக்கு வரி வஜா செய்து கொடுக்கவேண்டும்' என்பதுதான், அது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

அடிப்பட நிலவரியைப்பற்றிச் சொன்னார்கள். அடிப்படை நிலவரியை எப்படி நீக்குவது, அதோடு சேர்த்து இருக்கக்கூடிய வரியை எப்படி நீக்குவது என்பதுபற்றி அறிக்கைகளெல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கைகளையெல்லாம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் முடிவு எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். அமைச்சர் அவர்கள் உதய சூரியன் ஆட்சியில் லைட் இல்லை என்று சொன்னேன் என்று தவறாக நினைக்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. உதய சூரியன் ஆட்சியில் இருட்டு இருக்கக்கூடாது என்றுதான் சொன்னேன். அதைத்தான் நான் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. இதற்கு விரைவில் ஏதாவது வழிவகை செய்து, எங்கு பார்த்தாலும் லைட் இருப்பதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நன்சைக்கு நிலவரியை நீக்க வேண்டும் என்பது உங்களது கட்சிக் கொள்கையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், புஞ்சைக்கு வரி நீக்கியதைப் பற்றியே

சுதந்திரகக் கட்சி அங்கத்தினர்கள் விவசாயக் கருத்தரங்கில் கண்டித்துப் பேசுகிறார்கள். ஆகவே, அதுபற்றி விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்** : எங்கள் கட்சிக் கொள்கை, விவசாயிகளுக்கு . மிகவும் பிரயோசனமாக இருப்பதோடு, விவசாய அபிவிருத்திக்கு இது உதவியாக இருக்குமாதலால், இந்த வரியைத் தள்ளவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : விவசாய வருமானம் இல்லாதவர்களுக்கு வரி கூடாது என்று அங்கத்தினர்கள் வாதாடுகிறார்கள். வருமானம் உள்ளவர்களுக்கு விவசாய வரி போடுவதை எதிர்க்கிறார்களா, ஆதரிக்கிறார்களா?

**திரு. ந. வீராசாமி** : மாண்புமிகு சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே 10—2—1968 அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் . . .

**திரு. வி. கே. கோதண்டராமன்** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், தயவு செய்து கூறுகிறேன். இந்தமாதிரி அங்கத்தினர்கள் பேசுகிற நேரத்தில் கனம் அமைச்சர்களுடைய குறுக்கீடு அதிகமாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். முக்கியமான கட்டங்களில், சந்தர்ப்பங்களில், குறுக்கீடு இருக்கட்டும், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எல்லாவற்றிற்கும் குறுக்கீடு செய்து பதில் சொல்லிக்கொண்டிருந்தால், குறுக்கீட்டில் நேரம் அதிகமாகப் போய், பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லாத அளவுக்குப் போய்விடுகிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகப்படியான குறுக்கீடு இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அவசியம் ஏற்படும் பொழுது குறுக்கிட்டு விளக்கம் தருகிறோமே ஒழிய, கனம் அங்கத்தினர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல, நீங்கள் பேசிய அத்தனை கருத்துக்களுக்கும் பதில் கிடைக்க வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். குறிப்பிட்ட பிரச்சினைகள் வரும்பொழுது, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் விளக்கம் சொல்வது அங்கத்தினர்களுக்கு பிரயோசனமாக இருக்கும் என்று நினைத்துத்தான் நாங்கள் குறுக்கிட்டுப் பேசுகிறோம். பேசக்கூடாது என்று கனம் அங்கத்தினர் நினைத்தால், அவர்களுக்கு வேண்டிய விளக்கம் கிடைக்காமல் போய்விடும் என்றுதான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : உறுப்பினர்கள் தவறாகச் சொன்னால், உண்மையான நிலையை வெளிப்படுத்தத்தான் செய்வோம். அதில் வருத்தப்படுவதில் பிரயோசனம் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தவறைச் சுட்டிக்காட்டுவது பற்றி நான் கூறவில்லை. பேசுவது அவ்வளவும் தவறு என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்வது என்று ஆரம்பித்தால், அது எந்த அளவுக்கு உதவியாக இருக்கும்? அது முறையாக இருக்குமா? அபபடி அடிக்கடி குறுககடு செயய வேணடாம் எனறுதான் சொன்னேனே ஒழிய, தவறைச் சுட்டிக்காட்டவே கூடாது, திருத்தவே கூடாது என்ற கருத்தை நான் சொன்னதே கிடையாது. முக்கியமான சந்தர்ப்பததில் சுட்டிக்காட்டலாம். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். அப்படி பதில் சொல்லக்கூடிய நேரத்தில் போதுமான அளவுக்கு அவகாசம் இருக்கிறது. அந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளலாம்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்)**: கனம் உறுப்பினர் கூறியது பாயிண்டு ஆப் ஆர்டர், ஒழுங்குப் பிரச்சினை அல்ல. வெறும் விளக்கம்தான. உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

* **திரு. ந. வீராசாமி** : தலைவரவர்களே, 10—2-–1968 அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எனது ஒரு சில கருத்துக்களை இங்கே வழங்க விரும்புகிறேன். இதுவரையில் இந்த சட்டமன்றத்திலே பல ஆளுநர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். பலமுறை உரையாற்றியிருக்கிறார்கள். இருந்தாலும், இவர் ஆற்றிய உரையைப் பார்க்கிற நேரத்தில், தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஆளுநரும் இதுவரையில் இத்தகைய உரையை ஆற்றவில்லை என்று என்னால் சொல்ல முடியும். ஏனென்று கேட்டால், ஆளுநர் அவர்கள் தனது உரையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு அரசு நல்ல முறையில் நடப்பதற்கு முக்கியமான தேவை நிதியும், அதிகாரமும் என்று. அந்த நிதியையும், அதிகாரத்தையும் மத்திய அரசாங்கம் அதிகமாக வைத்துக்கொண்டிருப்பதால் மாநில அரசுகள் ஜனநாயக அடிப்படையில் இயங்குவதற்கு அதிக நிதியும் அதிகாரமும் மாநிலங்களுக்கு கிடைக்க வழி செய்யவேண்டும் என்ற வகையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே காங்கிரஸ்காரர்கள் பேசுகின்ற நேரத்தில் அப்படிப்பட்ட உரையை ஆதரிக்கின்ற வகையில் இல்லாமல் இதிலே ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று சொல்வதைக் கண்டு நான் மிகவும் வேதனைப் படுகிறேன். கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு அவர்கள் நன்றி தெரிவிக்க உண்மையிலேயே கடமைப்பட்டிருக்கிறார்கள். இதை விட ஒரு நல்ல உரையை நிச்சயமாக அவர்கள் இதுவரையில் கேட்டிருக்க முடியாது. ஆனால், அதற்குப் பதிலாக அவர்கள் எடுத்து சொன்ன கருத்துக்களையெல்லாம் பார்த்தால், ஏதோ உலகத் தமிழ் மாநாடு நடந்ததற்கு அழைப்பு வரவில்லை என்பதுபோன்ற குற்றச் சாட்டுகளைத்தான் அவர்களால் சொல்ல முடிந்ததே தவிர, உருப் படியான குற்றச்சாட்டுகள் எதையும் அவர்களால் சொல்ல முடியவில்லை.

அடுத்து, இங்கே பேசிய திரு. ஜார்ஜ் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டுக்காக வசூல் செய்த விவகாரத்தில் ஏதோ தவறு நடந்ததாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தவறு எப்படி நடந்தது என்று

[திரு. ந. வீராசாமி] [1968 பிப்ரவரி 15

'நம்முடைய அரசுதான் நடக்கிறது, சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி அவர்களை நேரே அணுகி கேட்டு கொள்வார்களேயானால், தமிழகத்தில் இப்படிப்பட்ட கலவரங்களும் மோசமான சூழ்நிலைகளும் ஏற்படாது. அதற்கு உகந்த வகையில் செயல்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை கேட்டுக்கொள்வதோடு அந்த வகையில் இந்த அரசுக்கு அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மின்சார இலாகாவைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்தபிறகு அதிகமாகப் பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறது என்று சொன்ன நேரத்தில், மதிப்பிற்குரிய ஜார்ஜ் அவர்கள் சொன்னார்கள், 'வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் அப்படித் தான் இருக்கும், இது ஒரு சாதனையா' என்று. அவர்களைக் கேட்கிறேன். 1965-ம் ஆண்டில் தமிழகத்தில் 30,000 பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றிருந்தன. 1966-ல் காங்கிரஸ் ஆட்சியில் 33,000 பம்பு செட்டுகளுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், அப்பொழுது உயர்ந்த 3,000-க்கு எதிராக, 1967-ல் முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 42,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது. காரணம் காங்கிரஸ்காரர்கள், ஆட்சியில் ஆண்டுக்கு 4 கோடி ரூபாய் முதலிலும், அதன்பிறகு 2 கோடி ரூபாயும் ஆக ஆறு கோடி ரூபாய் என்ற வகையில் நிதி அளித்து வந்தார்கள். ஆனால் முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், முதலிலேயே ஆறு கோடி ரூபாயைக் கொடுத்து, அது போதவில்லை என்றதும், மேலும் 1½ கோடி ரூபாயை கொடுத்து உதவியிருக்கிறது. அதன் காரணமாக அந்த இலாகா துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது. இது வளருகின்ற அரசாங்கத்தின் காரணத்தால் நடந்தது என்றால் அது சரியாகுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் . . .

திரு. வ. ஜார்ஜ் : ஆன் எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் சார். அவைத்தலைவர் அவர்களே, நான் கூறியது 42,000 விசையேற்றம் என்பது ஒரு சாதனையா, வளரும் பொருளாதாரத்தில் ஏற்படும் நிகழ்ச்சி. ஏற்கனவே காங்கிரஸ் போட்ட திட்டத்தின் காரணமாக வளர்ந்திருக்கிறது. ஒரே வருஷத்தில் புதிய அரசின் திட்டத்தால் இல்லை என்றுதான் குறிப்பிட்டேன் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. ந. வீராசாமி : அப்படிப் பார்ப்பதானால், 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஏதாவது ஒரு கட்சி ஆட்சிக்கு வந்து அந்த கட்சியின் சாதனையால் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றாலும் கூட, அதற்குக் காங்கிரஸ்தான் அடிப்படைக் காரணம் என்பார் போல இருக்கிறது. ஆறு கோடி ரூபாய் முதலிலே ஒதுக்கப் பட்டது, அதுவும் போதாது என்றதும், மேலும் 1½ கோடி



1968 பிப்ரவரி 15] [திரு. ந. வீராசாமி]

கொடுத்தது. அதன் காரணத்தால் மேலும் 9,000 (ஒன்பதாயிரம்) பம்புசெட்டுகளுக்கு இணைப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அங்கத்தினர் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, மின்சார இலாகாவிலே 60,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்த அரசு அரசாங்க ஊழியர்களுக்கு எப்பொழுதெல்லாம் சம்பளம் முதலியவற்றை உயர்த்துகிறதோ, டி. ஏ. போன்ற அலவன்சுகளை உயர்த்திக் கொடுக்கிறதோ, அப்பொழுதெல்லாம் மின்சார இலாகா தொழிலாளர்களுக்கும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது தமிழக அரசு சென்ற நவம்பர் மாதத்தில் உயர்த்திக் கொடுத்த பஞ்சப்படி மின்சார இலாகா தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. நகர் ஈட்டுப்படி அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த விவகாரத்தில் அரசாங்கம் உடனடியாக அவர்களுக்கும் அத்தகைய சம்பளவிகிதங்களை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் சொல்லுகிறேன். அது ஒரு பெரிய மாவட்டம். இருபது ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காரணத்தாலோ என்னவோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே அதிகமாக வளர்ந்திருக்கிறது என்ற காரணத்தலோ என்னவோ, அந்த மாவட்டத்திலே இதுவரை ஒரு தொழில் கூடம் கூட அமைக்கப்படவில்லை. அங்கே உள்ள படித்தவர்கள், தொழிலாளர்கள் ஏதாவது தொழில் வேண்டும் என்று விரும்பினால், அப்படிப்பட்ட கூடங்களில் வேலை செய்ய வேண்டும் என்றால், அவர்களெல்லாம் சென்னையை நோக்கிதான் போகவேண்டியிருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில், 'க்வார்ட்ஸ்' என்ற பொருளும், 'ஃபில்ஸ்பயர்' என்ற பொருளும் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. வாலாஜா தாலுகா காவனூர், வள்ளிமலைப் பகுதிகளில் இப்பொருள்கள் கிடைக்கின்றன என்று ஜியாலஜிஸ்டுகள் கண்டு பிடித்திருப்பதாகத் தெரிகிறது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்து அப்பொருள்களைக் கொண்டு என்ன தொழிற்சாலைகள் நிறுவமுடியுமோ அந்த வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த அளவிற்குப் பேச அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : அவைத்தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது நடக்கும் இந்த விவாதத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு அளித்ததற்காக தங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைத் துருவித் துருவிப் பார்த்தேன். அந்த உரையில் இந்த அரசாங்கம் தன்னைப் பாராட்டிக் கொள்ளும் நிலைமை இருக்கிறதே அல்லாது, "பாலிஸி ஸ்டேட்மெண்ட்." என்று சொல்லும் அளவில், வருகிற ஒரு ஆண்டுகாலத்தில் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதற்கான விளக்கங்கள், குறிப்புக்கள் எதுவும் காணப்படாத நிலைதான் இருக்கிறது. இந்த உரையில் நாட்டிலே இருக்கும் மிக மிக முக்கியமான பிரச்சினைகளை நழுவ

ஆதாரத்தோடு ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொன்னதெல்லாம், உலகத் தமிழ் மாநாட்டுக்காக நிதி வசூல் செய்யும்போது நிதி கொடுக்காத ஒரு லாரிக்கு சொந்தக்காரரை ஏதோ போலீஸ் அதிகாரி ஒருவர் கூப்பிட்டு, ரோனியோ பாரம் கொடுத்து, பிரேக் சரி இல்லை என்று சொல்லி அனுப்பினார்கள் என்பதுதான். நான் இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக ரோனியோ பாரம் கொடுத்தார்கள் என்றால், அது நடைமுறை நிர்வாகத்தில் இருக்கக்கூடிய வழக்கமே தவிர வேறு ஒன்றுமில்லை. காங்கிரஸ் ஆண்டு வந்த நேரத்தில் கூட அப்படிப் பட்ட ரோனியோ பாரங்கள் போட்டு, எங்கே குற்றம் நடக்கிறதோ, அந்த நேரத்தில் குற்றம் செய்தவர்களுக்கு அதை அனுப்புவதுண்டு. ஏதோ உலகத் தமிழ் மாநாட்டுக்காக தனிப்பட்ட முறையிலே ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலை அல்ல அது.

அடுத்து மதிப்பிற்குரிய திரு. சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள் ‘நாங்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? ரத்தம் சிந்தியவர்கள், அப்படிப்பட்டவர்கள், இப்படிப் பட்டவர்கள், இப்பொழுது நடைபெறுகிற ஆர்ப்பாட்டங்களுக்கு நாங்கள் அஞ்ச மாட்டோம்’ என்று. அவர்களுக்கு தயவு செய்து நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்தில் மாணவர்கள் கொதித்து எழுந்திருக்கிறார்கள் என்று சொன்னால், தி.மு.க.-வா அதற்குக் காரணம்? நான் இந்த மன்றத்தில் குற்றம் சாட்டுகிறேன். மாணவர்களைத் தூண்டிவிட்டார்கள் காங்கிரஸ் காரர்கள், இந்த ஆட்சியை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்று திட்டம் போட்டார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாணவர்களைத் தூண்டி விட்டார்கள் காங்கிரஸ் என்று கனம் உறுப்பினர் கூறுகிறார்கள். எந்த காங்கிரஸ்காரர், எந்த இடத்தில், எப்பொழுது தூண்டி விட்டார்கள் என்பதை ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியுமா என்று அன்னாரைக் கேட்கிறேன்.

திரு. ந. வீராசாமி: கோவையில் இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் ஆரம்பித்த இந்த விவகாரத்தை தமிழ் நாடே தெரிந்து கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற கல்லூரி முதல்வர்கள் மாணவர்களை வேண்டுமென்றே தூண்டிவிட்டு, ‘நீங்கள் கல்லூரிக்குக் கூட வரவேண்டியதில்லை, நீங்கள் இந்தி ஒழிக என்று எழுதுங்கள், அதே நேரத்தில் ஒரு படி அரிசித் திட்டம் எங்கே என்றும் எழுதுங்கள்’ என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சம்பவங்கள் கோவையில் நடந்தன என்பதை எல்லோரும் அறிவார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது? மாணவர்கள் இந்தி ஒழிய வேண்டும் என்று கூறுவதுபற்றி நான் சொல்ல வரவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரு படி அரிசித் திட்டம் எங்கே என்று கேட்பதினால், நான் யாரை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது? அந்தப் பள்ளி முதல்வர்கள் அல்லது அந்தக் கல்லூரியை நடத்துபவர்கள். இப்படிப்பட்ட திட்டங்களை தூண்டிவிட்டார்கள். அதேபோல நவ இந்தியா



பத்திரிகை என்று சொல்லப்படுகிற, திரு. ராமகிருஷ்ண நாயுடு நடத்துகின்ற பத்திரிகையில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களுக்கு பெரிய விளம்பரம் கொடுத்து, விளம்பரப் படுத்தியிருந்தார்கள். இதிலிருந்து நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும். அது மாத்திரமல்ல. இந்த ஆட்சியை ஒழிப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் போட்ட முதல் திட்டம், தொழிலாளர்களை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், ஆலை அரசர்களை அணுகி தொழிற் சங்கங்களுக்கும், தொழில் கூடங்களுக்கும், தகராறு நடந்துவந்த விவகாரங்களில் இடையூறுகளை உண்டாக்கினார்கள். ஆண்டுதோறும் போனஸ் கொடுப்பதுபோல் இந்த ஆண்டு கொடுக்கவேண்டாம் என்ற முறையிலே முதலாளிகளை அவர்கள் அணுகியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஸிம்ப்ஸன் கம்பெனி போன்ற பெரிய கம்பெனிகளெல்லாம், காங்கிரஸ்காரர்களுக்கு ஆதரவு அளித்த கம்பெனிகள் இதுவரையில் கொடுத்து வந்திருந்த போனஸை ஓரளவுக்கு குறைத்துக் கொடுப்பது என்றோ அல்லது சில இடங்களில் கொடுக்க முடியாது என்றோ அவர்கள் அறிவித்தார்கள். எனவே அங்கெல்லாம் தொழிலாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அதுபோலத்தான் கடந்த ஆண்டிலும் எத்தனையோ போராட்டங்களை தொழிலாளர்கள் நடத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள். காங்கிரஸ்காரர்கள்தான் அந்த நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு உருவாக்கியதற்குப் பிறகு, இந்த அரசிற்கு திறமை அதிகமாக இருப்பதால், மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அக்கறை எடுத்துக் கொண்ட காரணத்தால், இவைகளெல்லாம் ஒன்றுமே இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் ‘இந்து பத்திரிகையில் வேலைநிறுத்தம் செய்தார்கள் தொழிலாளர்கள். அந்த சமயத்தில் தொழிலாளிகள் பிரச்சினையில் காங்கிரஸ்காரர்கள் நல்ல ஒரு முடிவைக் காணவில்லை. ஆனால் அதே போன்ற நிலையில் இந்த ஆண்டு இந்த அரசு தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு வெற்றி தேடித் தந்திருக்கிறது. அதே போலத்தான், கோவையில் ஆலை அரசர்கள் தொழில் கூடங்களை மூடியிருந்த நேரத்தில், இந்த அரசு அவர்களை அணுகி, அவர்
களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, முதலாளிகளின் கஷ்ட பி.ப.
நஷ்டங்களைக் கேட்டு அவைகளைப் போக்க முயற்சி எடுத்துக் 12-30
கொண்டு, சில மில்களைத் திறந்து வைத்திருக்கிறது. காங்கிரஸ் எந்தத் திட்டத்தைப்போட்டாலும், இந்த வகையில் எந்த சாதனையையாவது செய்ததா என்றால் இல்லை.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்து வரும்போது, இடதுசாரி கம்யூனிஸ்ட் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், இந்த மன்றத்திலே இந்த அரசோடு ஒத்துழைக்கிறோம் என்றும், காங்கிரஸ்காரர்களால் எங்களைப் பிரிக்க முடியாது என்றும் கூறும் நண்பர்கள். காங்கிரஸ் காரர்கள் போடும் சதித் திட்டங்களுக்கு சில இடங்களில் தொழிலாளர்கள் ஆளாக்கப்படும்போது, கம்யூனிஸ்ட் தோழர்கள்,

விட்டு, கவனத்தில் கொள்ளாத உரையாகத்தான் அமைந்திருக்கிறது. இன்றையதினம் நாட்டிலே எங்கே பார்த்தாலும், சட்டம், ஒழுங்கு, நீதி இவைகளெல்லாம் சீர்குலைந்து இருக்கின்றன என்பதைக் காண்கிறோம். மேலும், தமிழ் நாட்டிலே தொழில் கூடங்களிலும், நகரங்களிலும், மற்ற இடங்களிலும், பெரும் அளவு தொழில் பிரச்சினைகள் காரணமாக ஒரே குழப்பமாகவும், மந்த நிலையாகவும் இருப்பதைக் காண்கிறோம். அவற்றிற்கு என்னென்ன பரிகாரங்கள் இருக்கின்றன, வழிவகை என்னென்ன அரசு செய்யவிருக்கிறது என்பதையெல்லாம் இந்த உரையிலே காணவில்லை. இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு விவசாயத் துறையிலே, ஏற்பட்டிருக்கிற உயர்வைப் பற்றிப் பேசும்போது விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கவும், அவர்கள் பயிரிடும் பொருள்களுக்கு விலையை உயர்த்தும் திட்டங்களும் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அரசிற்கு, ஆட்சிக்கு வருவதற்கு முன்பெல்லாம், பொறுப்பேற்பதற்கு முன்னால் பேசிவந்த பேச்சு பயிர் பாதுகாப்பு அல்லது "க்ராப் இன்ஷூரன்ஸ்," என்பது. அந்தத் திட்டத்தைப் பற்றியாவது கவர்னர் உரையில் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், ஒரு வார்த்தை கூடக் காணோம். அதற்கெல்லாம் மாறாக, விவசாயிகளைத் தொந்தரவு செய்யும் வகையில், விவசாய வருமான வரியை உயர்த்துவது என்று சொல்லி அதன் மூலம், விவசாயிகளின், அவர்களின் நலனுக்குப் புறம்பாக நடக்கும் அரசாக இருக்கிற நிலையைத்தான் காண்கிறோம். அவர்களை மட்டந்தட்டும் அரசாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இயங்கிக் கொண்டு வருகிறது என்பதைச் சொல்லவிரும்புகிறேன்.

சட்டம், ஒழுங்கு இவற்றைப் பொறுத்தவரையில், நாட்டில் இருக்கும் நிலையை நான் இங்கே அதிகமாக விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். நாட்டிலே நடக்கும் ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் இந்த சட்ட மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே நம்முடைய தலைநகரில் முழுமையாக ஒரு இரயில் கொளுத்தப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும், பொதுமக்களும், "அதைத் தடுக்க போதுமான முறையில் இந்த அரசு யத்தனிக்கவில்லை நடவடிக்கை எடுக்கவில்லை" என தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் எதிர்க்கட்சியாக—மிகப் பிரதான எதிர்க்கட்சியாக—இயங்கிக்கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சிக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் எல்லாம், அங்கே போதுமான பாதுகாப்பு தரப்படவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக உள்ள மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் செல்கிற இடங்களிலெல்லாம், அங்கே கூட்டம் நடத்த முடியாத குழப்ப நிலை இருக்குமானால், அதற்குப் போதுமான போலீஸ் பாதுகாப்பு தரவேண்டியிருக்க, அப்படிப் பாதுகாப்புத் தருவதற்குப் பதிலாக இந்த ஆட்சி பாதுகாப்பு தராத நிலையில் இருக்கும் காரணத்தால்



தான், அதன் விளைவாக, இவர்களுடைய அன்பைப் பெற்றவர்கள் அல்லது ஆதரவைப் பெற்றவர்கள்—எப்படி எடுத்துக்கொண்டாலும் சரி—இவர்களைச் சார்ந்தவர்கள், இவர்களுடைய கவனத்தை ஈர்த்தவர்கள், அனுதாபத்தைப் பெற்றவர்கள், அங்கே வன்முறைகளில் ஈடுபடுகிற நிலையும், அதன் காரணமாக, அப்படிப்பட்ட இடங்களில் இவர்களுடைய பிரதிநிதிகளாக அங்கே விளங்கிகொண்டு, இவர்களுடைய செயல் திட்டங்களை, உத்தரவுகளை அமல்படுத்திக்கொண்டிருக்கிற, அதிகாரிகளும் அங்கே கல் அடி படுகிற நிலை நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்சியில் இவர்களுடைய பிரதான அதிகாரிகளாக இருப்பவர்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் தங்களைக்கூடப் பாதுகாத்துக்கொள்ள முடியாத ஒரு நிலை இன்றைதினம் இருந்து கொண்டிருக்கிறது என்றால், அந்த அளவுக்கு இந்த அரசு தங்களையே பாதுகாத்துக் கொள்ளாத அளவுக்கு, தங்களுடைய அதிகாரிகளுக்கே கூடப் பாதுகாப்பு அளிக்காத ஒரு அரசாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன். எதிர்க்கட்சிகள் கூட்டம் நடத்துகிற இடங்களில் மட்டும் இப்படிப்பட்ட நிலைகளை கறுப்புக் கொடி காட்டுவது, மற்ற ஆர்ப்பாட்டங்களைச் செய்வது என்பவற்றை அனுமதிக்கிறது. ஆனால், அதே நேரத்தில், அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செல்லும் நேரத்தில், அங்கே இவர்களுக்கு எதிர்ப்பாக இத்தகைய நடவடிக்கைகளிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடுகிறவர்களைக் கைது செய்வதற்குத் தயங்கவில்லை என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு ஒரு முறையாகவும் நாட்டிலே இருக்கும் எதிர்கட்சிகளுக்கு ஒரு முறையாகவும் இந்த அரசு ஒரு பாகுபாடு படுத்தி, சட்டம், நீதி, ஒழுங்கு இவற்றிலே தலையிடுமானால் நாட்டிலே ஜனநாயகம் நிலைக்காது என்று இந்த அவைக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக தமிழகத்தினுடைய தலைநகரிலும் மற்றும் தமிழகத்தினுடைய தொழில் நகரங்களிலும் மிகப் பெருமளவிற்கு தொழில் துறையிலே மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு மிக முக்கியமான காரணம், இந்தத் துறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு திட்டவட்டமான, தெளிவான கொள்கை இல்லாத ஒரு அரசாக இருந்துகொண்டிருப்பதுதான்.

நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மிகத் திட்டவட்டமாக அறிவித்தார்கள். "இந்த சர்க்கார் 'கேரோ'வை அனுமதிக்காது" என்று சொன்னார்கள். "This Government will not tolerate 'gherao' " என்று அவர்கள் தெளிவாக அவர்களுடைய பாலிஸி ஸ்டேட்மெண்டில் சொன்னார்கள். ஆனால், இன்றைய தினம் இந்தத் தலைநகரத்தில் மிகப் பெரும்பான்மையான தொழிற்கூடங்களில் கேரோ நடந்திருக்கிறது. அதை ஒப்புக் கொள்ளக்கூட மறுக்கிறார்கள். "கேரோவை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று தைரியமாக பாலிஸி ஸ்டேட்மெண்டாகச்

சொன்னால் மட்டும் போதாது. அது நடக்காமல் தடுக்கின்ற ஒரு தைரியம் வேண்டும். ஆனால், அந்த நேரத்தில், நடப்பதைத் தடுக்காமல், 'கேரோ நடைபெறவில்லை' என்று சொல்லுகிற நிலைதான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. இவர்கள் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நடப்பது என்ன? சென்னையைப் பொறுத்து மட்டும் நான் சில தொழிற்கூடங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தொழிற்கூடங்களிலெல்லாம் கேரோ நடந்திருக்கிறது. கேரோ நடந்தது மட்டுமல்ல, இந்தச் சர்க்காரினுடைய தொழிற்கொள்கை தெளிவாக இல்லாத காரணத்தால், அங்கே குழப்பம் ஏற்பட்டது. அங்கே, சட்டம்-ஒழுங்கு சீர்குலையும் நிலைமை ஏற்பட்டது. அம்பத்தூரில் மெட்டல் பாக்ஸ் பாக்டரியின் பங்குதாரர்—பார்ட்னர்—முதலாளி—கேரோ செய்யப்பட்டிருக்கிறார். அதைப் போலவே, ஈ.ஐ.டி. பாரி என்ற கம்பெனி எண்ணூரில் இருக்கிறது. அதிலும் கேரோ நடந்திருக்கிறது. அதைப்போலவே, ஆக்லண்டு ஹாக்ஸா கம்பெனி எண்ணூரில் இருக்கிறது. அங்கும் கேரோ நடந்திருக்கிறது. மவுண்ட் ரோடில் உள்ள பி.ஆர். அண்டு சன்ஸ் என்கிற கம்பெனியிலும் கேரோ நடந்திருக்கிறது. அதை மற்றவர்கள் மறுத்தாலுங்கூட, அங்கிருக்கும் தொழிலாளர்களே கூட, "கேரோ நடத்தியது வாஸ்தவம்" என்று சொல்லும் நிலையைக் காண்கிறோம். "இந்து" பத்திரிகையைச் சார்ந்த ஆசிரியர், அந்தத் தொழில் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களால், அந்த ஆசிரியருடைய வீட்டிலேயே கேரோ செய்யப்பட்டதோடு, அவர் அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலும், அங்கே வேலைக்குச் செல்வதற்கு ஆயத்தமாக இருந்த அல்லது விருப்பப்பட்ட தொழிலாளர்கள் மற்ற தொழிலாளர்களால் அடக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். கிண்டியிலுள்ள செல்பார்க் கம்பெனியிலும் இந்த நிலை ஏற்பட்டு, அந்தக் கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. ஓரியண்ட் பார்மா ப்ரைவேட் கம்பெனி பல்லாவரத்தில் இருக்கிறது. அந்தத் தொழில் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருக்கிற, நமக்கெல்லாம் தெரிந்த சினிமா நடிகர், 'சோ' என்று அழைக்கப்படும் திரு. ராமசாமி அவர்களை, அங்கே பணி புரிந்துகொண்டிருக்கிற பெண் தொழிலாளர்கள் கேரோ செய்திருக்கிறார்கள். அதைப் போலவே, யூனியன் க்ரூப் இன்டஸ்ட்ரீஸினுடைய பர்ஸனல் ஆபீசர்—உயர் அதிகாரி—கேரோ செய்யப்பட்டிருக்கிறார். விம்கோ கம்பெனியிலும் கேரோ நடந்திருக்கிறது. அதனுடைய ஜெனரல் மானேஜரை அடித்திருக்கிறார்கள். அவர் காயங்களோடு அமைச்சர்களிடம் வந்ததாகக் கேள்விப்படுகிறோம்—உண்மையோ என்னவோ தெரியாது. அதெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இவர்களுடைய அதிகாரியாகவுள்ள கமிஷனர் ஆஃப் லேபர்—திரு. சங்கரன் அவர்களை வேலையைச் செய்யவிடாமல் தொழிலாளர்கள் சூழ்ந்துகொண்டு, மிரட்டியதோடு, 'இண்டிமிடேட்' செய்ததோடு, அவருடைய காரை நொறுக்கி இருக்கிறார்கள். இந்த நிலை எதற்காக?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பாகச் சில குற்றச்சாட்டுக்களைச்





சொல்லியிருக்கவில்லையானால் நான் குறுக்கிட வேண்டியிருந்திருக்காது. அவர்கள் ஏதோ 'கேரோ' என்று ஆரம்பித்தார்கள், பிறகு, வேறு எங்கெங்கோ சென்றுவிட்டார்கள்.

'கேரோ' என்பது வேறு, 'அடிபிடி' என்பது வேறு. கேரோவை இந்த அரசாங்கம் 'சட்ட விரோதம்' என்று அறிவித்திருக்கிறது. 'சட்ட விரோதம்' என்று சொன்னதனாலேயே எல்லோருமே அதை செய்யாமல் இருப்பார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. செய்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறோம். சில கட்சிகள், 'கேரோ நியாயமானது', 'சட்டவிரோதமானது அல்ல' என்று சொல்லுகின்றன. அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எங்கெங்கோ நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அங்கே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். விவரம் கேட்டால், எந்த எந்த இடத்தில் கேரோ நடந்து, எங்கெங்கே சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்ற விவரம் எல்லாம் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைச் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. கமிஷனர் ஆஃப் லேபர் தாக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்படி ஒரு அபாண்டத்தைப் பொறுப்புள்ள அங்கத்தினர் சொல்வது தவறு. அதைப்பற்றி விவரம் வேண்டுமானால் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். அந்தக் கமிஷனர் ஆஃப் லேபர் அலுவலகத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் சில பேர்கள் சென்றிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கோபமாகப் பேசியிருக்கிறார்கள். அவ்வளவுதான். வெளியே வரும்போது, ஏதோ காரை நொறுக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். இப்படி மிகைப்படுத்திச் சொல்லுகிற காரணத்தினால்தான், இடதுசாரிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள், "நாங்கள் செய்தது சரி' என்று வாதாட ஆரம்பித்துவிடுகிறார்கள். உண்மை அது அல்ல. யாரோ சில பேர் கார்ச் சக்கரத்திலுள்ள காற்றைப் பிடுங்கி விட்டிருக்கிறார்கள். இதுதான். இதை மிகைப்படுத்திச் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தக் கமிஷனர் ஆஃப் லேபர் திரு. சங்கரன் அவர்களைப்பற்றிய நிகழ்ச்சியைக் குறித்துக் கூடுமான வரையிலும் விவரம் தெரிந்துகொண்டுதான் சொல்லுகிறேன். 'இன்டிமிடேஷன்' நடந்தது உண்மை. அவருடைய கார் சேதம் ஆகியது உண்மை. அதுபற்றி அவர் போலீசுக்கு ரிபோர்ட் கொடுக்க இருந்துங்கூட, அரசாங்கத்தின் தலையீட்டினால் அது கொடுக்கப்படாமல். . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பொறுப்புள்ள அங்கத்தினர் மீண்டும் இப்படிச் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வதற்குப் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருந்து, அப்படி எழுதிக் கொடுப்பார்களானால், நிச்சயம் அதுபற்றி விசாரணை செய்யப்படும். அங்கத்தினர் அவர்கள், சாட்சி ஏதோ இருப்பதாகச் சொன்னார்கள், எந்த சாட்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. விவரமாகச்

சொன்னால் பரவாயில்லை. 'அரசாங்கம் தலையிட்டது' என்பது உண்மைக்குப் புறம்பான வார்த்தை. இப்படி அபாண்டம் சொல்வது பொறுப்புள்ள அங்கத்தினருக்கு அழகல்ல. உண்மையிலேயே அவர்கள் சொல்லுகிறபடி நடந்தது என்று அவர்கள் கருதுவார்களானால், நிச்சயம் இந்த அரசாங்கம் விசாரணை நடத்தத் தயாராக இருக்கிறது. அதை அவர்கள் எழுதி அனுப்பலாம்.

திரு. க. இராமமூர்த்தி: நான் எழுதியனுப்பத் தயாராயிருக்கிறேன். ஆனால், ஒரே ஒரு வேண்டுகோள். விசாரணை நீதி விசாரணையாக இருக்க வேண்டுமே தவிர, டிபார்ட்மெண்டல் விசாரணையாக இருந்தால் அதிலே நீதி கிடைக்காது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அரசாங்கம் தலையிட்டு, உரிய நேரத்தில், உரிய முறையில் செய்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இங்கேயிருக்கும் உயர்நீதிமன்றத்தினர், அரசு தங்களுடைய கடமையைச் செய்யத் தவறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, சில கம்பெனிகளுக்கு அரசு தங்களுடைய கடமையைச் செய்யவேண்டும். போலீஸ் பாதுகாப்பு தரவேண்டும், இவற்றிலே கடமை தவறியிருக்கிறார்கள் என்று கூடச் சொல்லியிருக்கிறார்கள்.

THIRU N. VEERASWAMY: On a point of order, Sir.

THIRU K. RAMAMOORTHY: I am not yielding.

THIRU N. VEERASWAMY: I am rising on a point of order.

கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிற நேரத்தில், "நீதி விசாரணை வேண்டும், டிபார்ட்மெண்டல் விசாரணையாக இருந்தால் அதில் நீதி கிடைக்காது" என்று சொல்லியிருக்கிறார்கள். டிபார்ட்மெண்டல் ஆபீசர்களை இவர்கள் நம்பவில்லையானால், அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் மீது இவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது உண்மையாக இருக்குமானால், இதற்குமுன்பு காங்கிரஸ் ஆட்சியில் பல விசாரணைகளை அதிகாரிகள் நடத்தியிருக்கிறார்களே அவை நியாயமானவையல்ல என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா என்று நான் கேட்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இதற்கு நான் ஒன்றைத்தான் பதிலாக சொல்லமுடியும். இந்த அரசில் வேலை செய்கின்ற அதிகாரிகள் அடிக்கப்பட்டும் கூட, போலீசுக்குச் சொல்லாத நிலை, மாவட்டக் கலெக்டருக்கும் ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட அதிகாரிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகையிலே பார்க்கிறோம், அவர் கல் அடிபட்டார், இவர் கல் அடிபட்டார் என்று. போலீஸ் துறையினர் சென்று அதற்கான நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை தமிழக அரசிலே நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரிகளால் நடத்தப்படும் ஒரு விசாரணையில் நீதி கிடைக்கும் என்று நான் நம்ப முடியவில்லை.

அடுத்து, அன்றாட நிர்வாகத்திலே அரசு தலையிடுகிறது என்பதைப்பற்றிப் பல புகார்கள் வந்து இருக்கின்றன. ஒன்றை



மட்டும் சொல்ல விரும்புகிறேன். 'இளம் விவசாயிகள் பரிவர்த்தனை செய்கின்ற திட்டம்' 'பார்ம் யூத் எக்சேஞ்ச் புரோகிராம்' என்ற திட்டத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் இன்ன இன்னார் செல்லலாம் என்று தேர்ந்தெடுக்கின்ற முறை இருக்கிறது. முதல் லிஸ்ட் அனுப்பப்பட்டபொழுது காலங்கடந்துவிட்டது. இதனால் நம்முடைய மாநிலம் பாதிக்கப்பட்டுவிடக்கூடாதே என்ற காரணத்தினால் டெலிகிராபிக் லிஸ்ட் ஒன்றை அனுப்பினார்கள். பிறகு செகண்டு லிஸ்ட்டை அனுப்பினார்கள். அதிலே ஒருவர் பெயரை மட்டும் அனுப்பியிருக்கிறார்கள். அவர் வயது கடந்தவர் என்று தெரிகிறது. அதோடு மட்டும் திருப்தியடையாமல் மூன்றாவது லிஸ்டை அனுப்பி, அதிலே சிலரைச் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள். இதை நாங்கள் எடுத்துச் சொன்னால், 'இது நாங்கள் செய்தது இல்லை; மத்திய அரசாங்கம் செய்தது' என்று சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஒரே ஒரு லிஸ்ட்தான் போயிருக்கிறது. உறுப்பினர் கற்பனையில் வேண்டுமானால் ஒன்று, இரண்டு, மூன்று என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு ஆதாரம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி எழுந்தார் (மணியடிக்கப்பட்டது).

* திரு. க. மு. ராசகோபால்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள், இதற்கு முன்னால் இருபதாண்டுக் காலமாக ஆட்சியை நடத்திய காங்கிரஸ் ஆட்சியில் எந்தவிதமான குற்றமும் நடக்காதது போலவும், தி.மு.க. பொறுப்பேற்றுக்கொண்ட இந்த ஓராண்டுக் காலத்திற்குள் தான் பலவிதக் குற்றங்கள் நடந்திருப்பதாகவும், ஒழுங்கும், சட்டமும், நேர்மையும் நீதியும் இல்லையென்று குறிப்பிட்டார்கள். எந்தச் சட்டத்தைப் பற்றியும், எந்த நீதியைப்பற்றியும் இன்று பேசுகின்ற காங்கிரஸ்காரர்கள் இதற்கு முன்னால் அவர்களுடைய ஆட்சியில் இவைகள் எல்லாம் எந்த நிலைமையில் இருந்தன என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். கடந்த தேர்தலின்போது நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை கோட்டூர் அடையாறில் மடக்கி ஓட ஓட விரட்டியடித்ததும், அங்கே அவருக்கு எந்தவிதப் பாதுகாப்பும் எந்தப் போலீஸும் செய்துதரவில்லையென்பதும், பின்னாலே எந்த நீதிமன்றத்திற்கும் அவருடைய குற்றச்சாட்டு கொண்டுபோகப்படவில்லையென்பதும் காங்கிரஸ்காரர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏதோ தற்செயலாக கும்பலாகக் கூடுகின்ற கோவை நிகழ்ச்சியை மட்டும் காங்கிரஸ்காரர்கள் எடுத்துப் பெரிதாக்குகிறார்கள்.

திரு. வ. ஜார்ஜ்: தலைவர் அவர்களே, நண்பர் அவர்கள் பேசும்போது, 'நீங்கள் நீங்கள்' என்று குறிப்பிட்டுப் பேசுகின்றார். நீங்கள் என்று சொல்வது பேரவைத் தலைவரைக் குறிப்பதாகாதா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) : உறுப்பினர் அவர்கள் எதிர்த்தரப்பில் சொன்ன கருத்துக்கு பதில் கூறுகிறார். சாதாரணமாக நீங்கள் என்றால் சபாநாயகரையே குறிக்கும்.

திரு. க. மு. ராசகோபால் : இதற்குமுன் கோவையில் அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற நேரத்தில் வழி மடக்கிக் கொலை செய்யப் போவதாக போலீஸுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் காவல் துறையினர் எந்தவிதமான பாதுகாப்பும் அறிஞர் அண்ணாவுக்கு அளிக்கவில்லை. இயக்க நண்பர்கள் அண்ணாவை வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டபொழுது, அங்கு இருந்த நண்பர்கள் பலர் தாக்கப்பட்டார்கள். அச்சமயத்தில் யாருக்கும் எந்தவித பாதுகாப்பும் ஆட்சியாளர் செய்து தரவில்லை. அப்பொழுது சட்டம், ஒழுங்கு, நேர்மை நீதி செயல்படுத்தப்பட்டதா? திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கோவைக்கு வந்தபோது அவருடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கூடவே மாவட்ட காவல் துறையைச் சேர்ந்த அதிகாரியும் சென்றிருக்கிறார்கள். யாரோ சிலர் குழப்பம் விளைவித்தார்கள். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு இந்த தி.மு.க. அரசாங்கம் நல்ல பாதுகாப்பு அளித்திருக்கிறது. நண்பர் அதை உணர்ந்து பார்க்க வேண்டும். உலகத்தின் சிற்பி—சோஷலிசத்தின் தந்தை காலாகாந்தி என்றெல்லாம் புகழப்பட்ட பெருமதிப்புக்குரிய காமராஜர் அவர்கள் வடபுலத்தில் தாக்கப்பட்டபொழுது, அவர் தங்கியிருந்த வீட்டிற்குத் தீ வைத்தபொழுது உங்கள் ஆட்சி என்ன செய்துகொண்டிருந்தது ? அப்பொழுது மாநிலத்திலே காங்கிரஸ் ஆட்சிதானே நடந்துகொண்டிருந்தது. மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சிதான் நடந்துகொண்டிருந்தது. ஏன் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு அழைத்துப் போய் விசாரணை நடத்தி, தண்டிக்கவில்லை? இப்படிப்பட்ட செயல்களையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது மட்டும், நீதி கெட்டுவிட்டது நேர்மை கெட்டுவிட்டது, பாதுகாப்பு இல்லையென்று சொல்வதன் பொருள் என்ன ?

எங்களுடைய ஆட்சி, தமிழக மக்கள் எங்களுக்கு அளித்திருக்கின்ற ஐந்தாண்டுக்காலம் வரைக்கும், தமிழுக்காக, தமிழருக்காக, தமிழ்நாட்டிற்காக பாடுபடும் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். இந்த இருபதாம் நூற்றாண்டில், குறிப்பாக டெல்லி அரசால் நியமிக்கப்பட்டு தமிழகத்தை ஆள்வதற்கு வந்திருக்கும் கவர்னர் அவர்கள், தம்முடைய நீண்ட உரையை முடித்துவிட்டு, இறுதியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட வள்ளுவர் குறளை எடுத்துக் கூறினாரே. அதுதான் எங்கள் பெருமை. அந்தப் பெருமை எங்களைச் சார்ந்தது. கவர்னர் அவர்களுடைய உரையில் நாங்கள் செய்துவந்த தமிழ்த் தொண்டு மிளிர்ந்து பளித்திருக்கிறது.

‘ நாங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் தலைவர் காமராஜர்



இருக்கும் வரையில் இந்தி தென்புலத்தில் நுழையாது’ என்று சொன்னீர்களே, அப்படிப்பட்ட காமராஜர் பேச்சையும் கேட்காமல் வடபுலத்தில் இருந்தவர்கள்தானே இந்தியை அவசரம் அவசரமாகக் கொண்டுவந்து தீர்மானம் போட்டு ஆட்சி மொழி என்று நிறைவேற்றினார்கள். அவர்கள் காமராஜரைக் கலந்து பேசினார்களா? அல்லது இங்கிருக்கும் ஆட்சியைத்தான் கலந்து பேசினார்களா? மத்திய ஆட்சியில் இந்தி ஆட்சி மொழி என்ற தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியபின்னர்தான், இங்கு இந்தச் சட்டமன்றத்தில் ஜனவரி 23-ம் தேதி ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். தமிழகக் குடிமக்களை ஒரு மொழியின் ஆதிக்கத்தின்மூலம் அழிக்க முடியாது என்பதைத் தீர்மானம் போட்டு நிறைவேற்றி எடுத்துக் காட்டினோம். வடநாட்டு ஆட்சியில் இருப்பவர்கள் இந்தி வெறி கொண்டு, பேசுகிறார்கள். திரு. மொரார்ஜி அவர்கள், ‘ இந்திதான் ஆட்சிமொழி’ என்று பேசுகிறார். விபூதி மிஸ்ரா என்ற வடநாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், “ இந்தத் தமிழர்கள் 25 ரூபாய் கொடுத்தால் இந்தியைக் கற்றுக்கொள்வார்கள்” என்று இழிவாகப் பேசியிருக்கிறார். தமிழர்களை பிச்சையெடுக்கின்ற மக்களாக நினைத்துக் கொண்டு அந்த இந்தி வெறியர் பேசியிருக்கிறார். இவர்கள் பேச்சுக்கெல்லாம் என்ன பதில் சொன்னீர்கள். ஆகவே, மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கொள்கை என்ன? இப்பொழுதும் தலை மூழ்கி போய் விடவில்லை. இந்த நாட்டிற்கு எது பொது மொழியாக இருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாக, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அறிவிக்க வேண்டும். இதற்கு முன் திரு. சி. சுப்பிரமணியமே ‘ தமிழால் முடியும்’ என்று ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் புரட்சியை மாணவர்கள் நடத்திய நேரத்தில் பல மாணவர்கள் செத்தார்கள், பல மாணவர்கள் பலவிதத் தொல்லைகளுக்கு ஆளானார்கள். பல குழப்பங்கள் ஏற்பட்டன. அந்தச் சமயத்தில் திரு. சி. சுப்பிரமணியமும், திரு. ஓ. வி. அழகேசனும் தாங்கள் வகித்து வந்த மந்திரிப் பதவியை ராஜிநாமா செய்தார்கள். அப்படிச் செய்தது மோசடியா? ஒரு கட்சியை வளர்ப்பதற்காக நீங்கள் இந்த மோசடியை நடத்தினீர்களா? ஆகவே நீங்கள் ராஜிநாமா செய்ய வேண்டும். எங்களுக்கு மொழியைப் பற்றித் தெரியவில்லையென்று நீங்கள் கூறும் நேரத்தில், எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்? தமிழ் எந்த நிலையில் இருக்க வேண்டும். மொழிக் கொள்கையில் உங்களுடைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர் அவர்கள் பேசும் போது, ‘ நீங்கள் ராஜிநாமா செய்யவேண்டும்’ என்று சொன்னார். நீங்கள் என்று கூறுவது சரியில்லை. அந்த வார்த்தையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மு. ராசகோபால் : தவறைத் திருத்திக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய மக்களுக்கு ஆதரவு கொடாமல், தமிழை இழிவுபடுத்துகின்ற நிலைமையில், இன்னும் வடநாட்டிலுள்ளவர்

களுக்கு அஞ்சி பயந்துகொண்டு இருக்கின்றார்கள் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு
பி.ப. 1-00 கிறேன்.

மொழி விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் நல்லதொரு ஆதரவைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு மேலும் ஒரு 5 நிமிடம் கொடுக்க வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் . . (மணியடிக்கப் பட்டது).

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) :** ஓர் அறிவிப்பு. இங்கே இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஏற்கனவே எடுத்துக்கொள்ளவேண்டிய கால அளவு வரையறுக்கப்பட்டு விட்டதால் பேசுகின்ற உறுப்பினர்கள் அருள்கூர்ந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது. அந்தக் காலத்திற்குள் அவர்கள் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலைக்கண்ணன் பேசுவார் கள்.

*** திரு. வி. மலைக்கண்ணன் :** அவைத்தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத் தான் நடைபெறும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு பேசுவ தற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் " ஆளுநர் உரையை நாங்களும் துருவித் துருவிப் படித்துப் பார்த்தோம். இன்றைக்கு நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைப் பற்றி திட்டவட்டமான கொள்கை எதையும் காணோம்" என்று சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் மட்டும் அல்ல, அவருக்கு முன்னாலும் பேசியுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லோருமே அதைச் சொன்னார்கள். ஆனால் மேன்மைதங்கிய ஆளுநர் உரையில் முதல் 3 பக்கத்தில் நாட்டை இன்று எதிர் நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பற்றித்தானே இந்த அரசின் திட்டவட்டமான கொள்கை என்ன என்பது விளக்கப் பட்டிருக்கிறது. மூன்றாவது பக்கத்தில் மொழிப் பிரச்சினை பற்றிக் கூறியிருக்கிறார்களே, ஏன் அதைப்பற்றி காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் யாருமே கண்டும் காணாததுபோல ஆதரிக்கா மலும், மறுக்காமலும் அப்படியே தங்கள் பேச்சில் விட்டுவிட்டார் கள். நான் எண்ணுகிறேன். அவர்கள் மௌனம் சாதிப்பது அந்தக் கருத்துக்கு சம்மதம் தெரிவிக்கும் நிலையில் இருக்குமோ என்று. உண்மையில் அப்படி இருக்குமானால், அதை நான் வரவேற்கிறேன். அவர்கள் மௌனத்தின் மூலம் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆளுநர் கூறியிருக்கும் கருத்தை வரவேற்பார்களானால் நான் அதை வரவேற்கிறேன். மேலும் அரசியல் பெருந்தன்மை வாய்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் கால் அடியைப் பின்பற்றிச் செல்கிற கட்சியைச் சேர்ந்தவன் என்கிற முறையில் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். அவர்





களது கட்சி வளர்ந்து வருகிற கட்சி. மொழித் தீர்மானத்தை மௌனத்தின் மூலம் ஆதரிப்பதைவிட, வெளிப்படையாகவே இந்த அரசின் மொழிக் கொள்கையை ஆதரிக்க முன்வருவார்களானால் நிச்சயமாக அந்தக் கட்சி வளர்வதற்கு பெருவாய்ப்பை அளித்த வர்களாவார்கள். அந்தக் கட்சியும் வளர்ந்தாகவேண்டும். இழந்த வாய்ப்பை நீங்கள் மீட்டும் பெறுவதற்கு வெளிப்படையாக இந்தக் கொள்கையை ஆதரிக்கவேண்டுமென்று அரசியல் பெருந் தன்மையோடு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டம், ஒழுங்கு இவைகளைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள். சட்டம், ஒழுங்கு இவை களைப் பற்றி பேசுகின்ற அவர்களது கைகளில் உள்ள இரத்தக் கறை இன்னும் போகவில்லை. 1965-ஆம் ஆண்டிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது திரு. ராஜேந்திரனைச் சுட்டுக்கொன்றார்களே, ராணுவத்தை அழைத்து தமிழ்நாடு முழுவதும் சுட்டுக் கொன்றார்களே, அப்படிப்பட்ட அக்கிரமத் தைச் செய்து தமிழக அரசியல் வரலாற்றிலே இரத்தக் கறை படிய வைத்திருக்கிறார்களே, அது இன்னும் மறையவில்லை. கலைஞர் கருணாநிதி அவர்களைக் கைது செய்து லாரியிலே ஏற்றி பாளையங் கோட்டைச் சிறையில் கொண்டுபோய் அடைத்தார்களே, அக்கிரமமாக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ராஜாங்கம் அவர் களைக் கைது செய்து, உண்மைக்கு மாறாகக் குற்றஞ்சாட்டி சிறையிலே தள்ளி சித்திரவதை செய்தார்களே, அது அவர் களுடைய ஆட்சிக் காலத்தில் தான். காங்கிரஸ் ஆட்சியின் லட்சணம் தெரியாதா? அதைவிட்டு காந்திய வழியைப் பின் பற்றி, இன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் புத்தராக ராஜ்யம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தவறி விட்டது என்று சொல்வது—டெவில் கோட்ஸ் த பைபிள்—சாத்தான் பைபிள் ஓதுகிறது என்ற தன்மையில் தான் இருக்கிறது. தமிழ்மொழி காக்கப்படவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால் ஆளுநர் அவர்களது உரையில் எல்லா மொழிகளுக்கும் சமவாய்ப்பை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டியிருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சிமொழிச் சட்டத்தையும், அதையொட்டிக் கொண்டு வரப்பட்டுள்ள மொழித் தீர்மானத்தையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்பதைப் பாராட்டியிருக்க வேண்டும். ஆட்சி மொழிச் சட்டமும், மொழித் தீர்மானமும் நாடாளு மன்றத்தில் வந்தபோதே இது இந்தி பேசாத பகுதி மக்களின் மீது அதிகச் சுமையை ஏற்றி வைக்கும் என்பதை எல்லாக் கட்சியினரும் உணர்ந்து இருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளும் அந்தக் கருத்தை எதிர்த்தும் கூட நாடாளுமன்றத்தில் அதைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். நாம் அதை எதிர்க் கிறபோது நிர்வாக உத்தரவின் மூலம் அதனால் ஏற்படும் சிரமங் கள் தவிர்க்கப்படும் என்கிறார்கள். ஏன் இந்த அநீதி? இந்தி பேசுகின்ற பகுதி மக்களுக்கு சட்டத்தின் மூலம் பாதுகாப்பு. இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நிர்வாக உத்தரவின் மூலம் பாதுகாப்பு அளிப்பது பற்றி யோசிப்பதாக வாக்கு. இதுதான்

அரசியல் நாணயமா? அரசியல் சட்டத்தில் எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் என்பதற்கு இதுதான் விளக்கமா? உண்மையைச் சொல்லப்போனால் ஒரு பெரிய அரசியல் பித்தலாட்டம் இது. இந்தி பேசுகின்ற பகுதி மக்கள் மட்டும் தான் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார்களா? இந்தி பேசாத தமிழகத்தைச் சேர்ந்த திரு. ராசகோபாலாச்சாரியார் சுதந்திரத்திற்காக சொல்லொணாத் தியாகத்தைப் புரியவில்லையா? செக்கிழுக்கவில்லையா, சிதம்பரனார்? சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள் தமிழர்கள் இல்லையா? இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த நாம் அதனால் நேரிடையாக பாதிக்கப்படுவது தெரிந்தும் காங்கிரஸ் அன்பர்கள் அதை ஆதரித்தார்கள். இராச்சிய சபை உறுப்பினர்கள் அதை ஆதரித்தார்கள் என்றால் இவர்கள் லட்சணம் தெரியவில்லையா? மொழிவழி மாநிலங்கள் அமைந்திருக்கும்போது எல்லா மொழிகளும் வளர்ச்சி பெற சம வாய்ப்பை மத்திய அரசு தேடித்தரவேண்டாமா? சற்று நேரம் நாம் கற்பனை செய்து பார்த்தாலே பயங்கரமாக இருக்கிறது. 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி பதவியைவிட்டு அகற்றப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இங்கே அமையாதிருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும், ஆட்சி மொழிச் சட்டமும், மொழித் தீர்மானமும் நாடாளு மன்றத்திலே கொண்டுவரப்பட்டபோது அங்கு அது நிறைவேற்றப்படுவது மட்டுமல்ல, இந்த ராஜ்ய காங்கிரஸ் அரசாங்கம் அதை ஏற்று இருக்கும். மாணவர்கள் சமுதாயம் கிளர்ந்தெழுந்திருக்கும். 1965-லே செய்ததுபோல எத்தனை இடங்களிலே எத்தனை பேர்களை இவர்கள் சுட்டுக் கொன்றிருப்பார்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்து, அந்தத் தீர்மானத்தை எதிர்த்து இங்கே ஒரு தீர்மானம் கொண்டுவருகிறபோது இங்குள்ள சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நடுநிலை வகிக்கிறார்கள். இவர்கள் இங்கே நடுநிலை வகிக்கிறபோது ராச்ய சபையிலே இவர்கள் கட்சியைச் சேர்ந்த தமிழக காங்கிரஸ் உறுப்பினர் ஆதரித்திருக்கிறார். உண்மையிலேயே மத்திய ஆட்சி கொண்டு வந்த ஆட்சி மொழிச் சட்டத்தையும், அதையொட்டிய தீர்மானத்தையும் ஆதரிப்பதாக இருந்தால் நாங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை இவர்கள் ஏன் எதிர்த்திருக்கக் கூடாது ? எதற்காக நடுநிலை வகித்திருக்க வேண்டும்? காங்கிரஸ் மேலிட ஆணைக்கு அஞ்சுகிறார்கள், ஆனால் நாட்டு மக்களை வெளியே போய் எந்த முகந்தோடு பார்ப்பது என்கிற வெட்கத்திற்கும் அச்சம்—ஆகவே தான் நடுநிலை வகித்தார்கள். அவர்களுக்குள்ள சங்கடம் எனக்குப் புரியாதது அல்ல. இதற்கு ஆவரேஜ் அரசியல் அறிவு போதும். காங்கிரஸ்காரர்கள் மட்டும் இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இந்த ராஜ்யத்தில் இருந்திருந்தால் எத்தனையோ ராஜேந்திரன்களைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள், எத்தனையோ ராஜாங்கங்களை உள்ளே அடைத்து சித்திரவதை செய்திருப்பார்கள். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களாக இருக்கக்கூடிய எங்கள் மாபெரும் தலைவர்களை எல்லாம்—லாரியில் அல்ல—கப்பலில் ஏற்றி அந்தமானுக்கே அனுப்பி அடைத்திருப்பார்கள். அந்த அளவுக்கு அக்கிரமம் செய்யக் கூசாதவர்கள்—இன்றைக்கு இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு காக்கப்படவில்லை என்று சொல்வது எவ்வளவு அபத்தமானது என்று





தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அருமை காங்கிரஸ் நண்பர்கள் இன்றைக்கு நல்லதொரு எதிர்க்கட்சியாக இருந்து இந்த நாட்டிற்குப் பயன்படவேண்டுமானால் மொழிப் பிரச்சினையில் இரண்டா, மூன்று என்பதற்கு சீக்கிரம் பதில் சொல்லியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக மௌனத்தின் மூலம் நீங்கள் சம்மதிக்கிற கொள்கையை வெளிப்படையாகவே சொல்லிவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தின் கீழ் பகுதி சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், புயலினாலும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நேரிலேயே வந்து அந்தப் பகுதியைப் பார்த்தார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய நிவாரண வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக இந்த அமைச்சரவைக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் விளைவு பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நமது அரசாங்கம் உடனடியாக வரி வஜா செய்யவும், கடன் வசூலை ஒத்திப்போடவும், முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரை மீது எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக்கூற முனைகிறேன். கவர்னர் பெருமான் தனது உரையை கழிந்த ஆண்டில் இந்த அவையில் ஆற்றியபோது இந்த அரசினரின் கொள்கைகள் வரையறுக்கப்படவில்லை என்பதை எனது கட்சியைச் சார்ந்த பல மெம்பர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் கூறினார்கள் "நாங்கள் பதவிபெற்று சில நாட்கள் தான் ஆகின்றன. அதற்குள் நீங்கள் இவ்வாறு கேட்கின்றீர்களே" என்று எடுத்துரைத்தார்கள். ஆகையால் இந்த ஆண்டு உரையிலாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை வரையறுக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்திருந்தோம். இந்த உரையிலும் அரசின் கொள்கைகள் விளக்கப்படவில்லை. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, இந்த நாட்டிலுள்ள பல்வேறு முக்கியப் பிரச்னைகள் கவர்னர் உரையில் இடம்பெறவில்லையென்று மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த நாட்டில் சமூகத்தில் பெரும் பகுதியாக இருக்கிற தொழிலாளர்கள் நலன்பற்றி ஒரு வார்த்தை கூட நம்முடைய கவர்னர் உரையில் காணப்படவில்லையென்று சொன்னால் இந்த அரசு தொழிலாளர்களைப் புறக்கணிக்கிறது என்பதுதான் பொருள் என்று நினைக்கிறேன். தொழிலாளர்கள் இந்த நாட்டில் எவ்வளவு முக்கியமான இடம் பெறுகிறார்கள், இந்த நாட்டில் உணவுப் பிரச்னையில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் எவ்வளவு முக்கியமான துணைபுரிகிறார்கள் என்பதை இந்த அரசு அறியாதது அல்ல. இருந்தாலுங்கூட அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கேற்ற வகையில் அவர்களுடைய கூலி நிர்ணயம் செய்வதிலே இப்பொழுதிருக்கிற நெருக்கடியான நிலைமையை மாற்றியமைப்பதைப்பற்றி யாதொன்றும் இதில் கூறப்படவில்லை. நாம் அறிவோம், பல ஆண்டுகளுக்கு முன்பு விவ

சாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டது. அந்தக் காலத்திற்கும் இப்பொழுது இருக்கிற சூழ்நிலைக்கும் எவ்வளவு வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் ஊதியம வரையறுக்கப்படவேண்டும். அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்படவேண்டும் என்று அவ்வப்பொழுது சட்டமன்றத்தில் பல்வேறு அங்கத்தினர்கள் எடுத்து உரைத்துக் கொண்டே வருகிறார்கள். இருந்தாலும்கூட கவர்னர் அவர்கள் உரையில் இதுபற்றிக் குறிப்பிடவில்லையென்பதை நினைக்கும்பொழுது வியப்பை அளிக்கிறது. இன்றைய நிலையில் ஆண்டுதோறும் சுருங்கச்சொன்னால் மாதத்திற்கு ஒரு முறை விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால் கூலியோ அன்று நிர்ணயிக்கப்பட்டதுதான் இன்றைக்கும் இருந்து வருகிறது. விவசாயிகளினுடைய தொழில் சீசனல் தொழில், ஒரு சில மாதங்களுக்குத்தான் அவர்களுக்குத் தொழில் இருக்கிறது, மற்ற மாதங்களில் வேலையிழந்திருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு எள்ளளவும் எண்ணவில்லை என்பதை மிக வருத்தத்துடன் நான் கூறிக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்திலே டாலர் சம்பாதிக்கின்ற ஒரு தொழில் ரப்பர் தொழில். ரப்பர் தொழிலாளர்கள் இங்கே அதிகமாக இருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில்தான் ரப்பர் தோட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒன்றைக் கூற விரும்புகிறேன். தொழிலாளர் நலன் அமைச்சர் அவர்களிடம் இரண்டு தினங்களுக்கு முன்பு தொழிலாளர் சம்பந்தமாக எடுத்துரைத்தபொழுது அவர்கள் சொன்னார்கள், தொழிலாளர் நலன் சட்டங்கள் அத்தனையும் மத்திய சர்க்கார் வகுத்திருக்கிறது. அந்தச் சட்டங்களில் இருக்கின்ற சிக்கல்களின் காரணமாகத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்வதற்கு வழிவகை இல்லை என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நமது சர்க்கார் நடத்தி வருகின்ற கன்னியாகுமரி ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலியைக் கொடுக்கவில்லை, என் சட்டப்படியான நன்மைகள் அவர்களுக்குச் செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்களை நான் சபாநாயகர் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பு அவர்களிடம் ஒரு மெமோரண்டம் கொடுத்தேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் இல்லாமல் இருக்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு அங்கத்தினர் இவ்வளவு பேசுவது அவ்வளவு நல்லதல்ல. அவர் நேற்றுத்தான் கொடுத்தார், கொடுத்தவுடன் அவர் முன்னதாகவே அந்த அடிஷனல் செகரட்டரியை கூப்பிட்டு பேசினேன். அப்படியிருக்கும் பொழுது உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார்கள். அல்லது சொல்லக்கூடாத வார்த்தையைச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** முன்னதாகக் கொடுத்ததாக நான் சொல்லவில்லை. நேற்றுத்தான். கொடுத்தேன் என்று சொன்னேன். அரசாங்க நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு சட்டப்படி கூலி





யும், நன்மைகளும் நாமே கொடுக்கவில்லை என்றால் மற்றவர்கள் எப்படிக் கொடுப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். அரசாங்க நிறுவனமாகிய ரப்பர் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியான எல்லா நன்மைகளும் வழங்கியிருக்கவேண்டும். இந்த அரசாங்கம் அதில் தவறியிருக்கிறது என்று சொன்னால் அதற்கு எக்ஸ்க்யூஸ் (மன்னிப்பு) இல்லை என்று தான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் ஒரு வேஜ்போர்டு நிர்ணயித்து ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு மினிமம் சம்பளம் இவ்வளவு என்று வரையறுத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் தனியார் வைத்துள்ள நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 3.05 பைசா கூலிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நடத்துகின்ற தோட்டத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் கூலி ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 2.49 பைசாதான். ஆகவே இந்த நிர்ப்பந்தமான நிலைமையை மாற்ற அமைச்சர் அதிகமாகக் காலதாமதம் செய்யாமல் நிவர்த்திசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் இன்று அதிகமாக இருப்பது வேலையில்லாத் திண்டாட்டம். அதைப்பற்றி கவர்னர் உரையில் ஒரு வார்த்தை கூட கூறப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். நாம் அறிவோம். கடந்த ஆண்டு இந்த அரசின் கொள்கையின் பயனாகத்தான் வேலை வாய்ப்பு இல்லாமல், படித்துவிட்டு வேலையில்லாமல், வாலிபர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற வேலை தேடித் தரும் நிறுவனத்தில் எஸ்.எஸ்.எல்.சி.-யில் ஒப்பேறியவர்களும், தோற்றவர்களும், பட்டதாரிகளும், பாலி-டெக்னிக்குகளில் படித்தவர்களும், எஞ்சினியர் பட்டதாரிகளும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காத்துக்கொண்டே இருக்கிறார்கள்; இலவு காத்த கிளிபோல் பல மாதங்களாக வேலைக்கு அருகதையுள்ள வயதைக்கூட தாண்டிவிட்ட நிலைமையில் அதிகமானவர்கள் இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எஸ்.எஸ்.எல்.சி. படித்த வாலிபர்கள் 2500 பேர்கள் கண்டக்டர் வேலைக்கு பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் நம்முடைய மாநிலத்தில் இவ்வளவு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் பொழுது ஒரு நிவர்த்தி தேடவோ அல்லது பரிகாரம் தேடவோ அரசாங்கம் முன்வரவில்லையென்றால் படித்த இளைஞர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் கைக்கொண்டிருக்கிற மொழிக் கொள்கையின்படி வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகப்படியாக இருக்கிறது. எனவே நமது மாநிலத்தில் இருக்கின்ற வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க நன்கு சிந்தித்து நமது மாநிலத்தில் இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு கைக்கொண்டிருக்கிற மொழிக்கொள்கையின் காரணமாக மூவாயிரம் இந்தி ஆசிரியர்கள் வேலையிழந்து இருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு மாற்று வேலையாக ஏதாவது கொடுக்கப்படும் என்று

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1968 பிப்ரவரி 15

முதலமைச்சர் கூறியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதற்கும் விரைவில் ஒரு பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் நம்முடைய உணவுக் கொள்கையின் காரணமாக ஏழை எளியவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் வேதனையோடு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் கார்டு முறைப்படி போடுகின்ற அரிசியின் அளவைப் பார்ப்போமானால் ஒரு வாரத்திற்குக் கொடுக்கப்படுகின்ற அரிசி ஒரு நாளைக்கு கூடப் பற்றவில்லை. ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்குக் கொடுப்பது எவ்வளவு என்றால் 700 கிராம், அதாவது உத்தேசமாக பட்டணம் படிக்கு அரைப்படிதான். இந்த நிலையில் ஒரு நாளைக்குப் போக மீதம் ஆறு நாட்களுக்கு வெளிச் சந்தையில்தான் வாங்கியாக வேண்டிய நிலைமை இருக்கிறது. வெளிச் சந்தையிலே 3 ரூபாய் அல்லது 4 ரூபாய் என்ற அளவில்தான் விலை இருக்கிறது. இந்த நிலைமை இருப்பதற்குக் காரணம் அரசாங்கத்தின் உணவுக் கொள்கைதான். நம்முடைய மாநிலத்திலே ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு உணவு தானியம் கொண்டுபோகக் கூடாது என்ற சட்டம் இருக்கிறது. நம்முடைய கொள்கையின்படி 6 நாட்களில் வெளிச் சந்தையிலே வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறவர்கள் வேறு எங்கிருந்து வாங்கமுடியும். கள்ளக் கடத்தல்காரர்கள் மிகச் சௌகரியமாக தங்கள் வேலையைச் செய்கிறார்கள். அவர்களிடமிருந்துதான் அதிகமாக விலைகொடுத்து மக்கள் 6 நாட்களுக்குத் தேவைப்படும் உணவை வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதையும் பரிசீலனை செய்து இதற்கு ஒரு மாற்றுப் பரிகாரம் தேடித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு படி அரிசித் திட்டம் ஒருவேளை தேர்தலுக்கு முன்னதாகச் சொல்லப்பட்ட வாக்குறுதி என்று நினைத்தாலும், மீண்டும் மீண்டும் அமைச்சரவை அமைத்த பிறகும் கூட அதைப் பற்றித் தாராளமாகக் கூறி வந்திருக்கிறார்கள். பொங்கலன்று மேலும் சில பகுதிகளில் போடுவதாகக் கூடக் கூறினார்கள். ஆனால் இன்று வரை நடக்கவில்லை. கோவையிலும் சென்னையிலும் மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசு வடக்கை வாழ வைக்கிறது. தெற்கைத் தேய வைக்கிறது என்று பல காலமாக இவர்கள் சொல்லி வந்தார்கள். இவர்கள் இன்று கோவை மாவட்டத்திலும் சென்னை மாவட்டத்திலும் மட்டும் படி அரிசித் திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறார்களே தவிர மற்ற மாவட்டங்களுக்கு சேலம் மாவட்டத்திற்கு, குமரி மாவட்டத்திற்கு எல்லாம் விஸ்தரிக்கப்படவில்லை. இந்த ஒரு படி அரிசித் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் விஸ்தரிக்க வேண்டும். பத்திரிகையின் வாயிலாக அறிந்திருக்கலாம்—ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் இந்தத் திட்டத்தை எல்லா இடங்களிலும் கொண்டு வரவில்லையென்றால் வரிகொடா இயக்கம் நடத்துவோம் என்று குரல் எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே, எல்லா இடங்களுக்கும் ஒரு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)



1968 பிப்ரவரி 15]

* திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்றுப் பேசுகின்ற நான் எனக்கு முன்னாலே பேசிய மதிப்பு மிக்க காங்கிரஸ் நண்பர் இந்த மாமன்றத்தில் தொடர்ந்து நடைபெறுகிற விவாதத்தில் பேசி வருகிறபோது நான் கவனித்து வந்தது ஒன்றே ஒன்றுதான். எப்படியாவது ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, அந்தக் கழகம் இந்த நாட்டை ஆளுகின்ற தகுதி உடையதல்ல என்று காரணத்தைச் சொல்லிக்காட்ட ஏதாவது ஒரு தவறு நிகழாதா என்று ஆதார பூர்வமாக விளக்கிக் காட்ட சிரமப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். எப்படியாவது அரிச்சந்திரனை ஒரு பொய் சொல்ல வைக்க வேண்டுமென்ற முயற்சியில் விஸ்வாமித்திரர் இறுதியாகத் தோற்றாரோ அதே போன்ற நிலைமைதான் இதிலும் ஏற்படும்.

காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டுகாலமாக ஆட்சி செய்தார்கள். அவர்கள் ஆட்சியின் போது இழைத்த கொடுமைகளை எல்லாம் இணைத்துப் பார்த்து, இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற அரசு ஓராண்டுக் காலத்தில் செய்திருக்கின்ற சாதனைகளைக் கவனித்துப் பார்த்தால் இந்த ஆட்சியின் சிறப்பு தெரியும். ஜனநாயக நாட்டில் ஒரு கட்சி ஆளுகின்ற கட்சி, இன்னொரு கட்சி எதிர்க்கட்சி என்ற நிலையில் பணியாற்றுகின்ற போது எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் என்ன முறையில் செயல் திட்டங்களை வகுத்தால் நாட்டுக்கு நலம் பயப்பதாக அமையும் என்ற முறையில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னால் சிறப்பாக இருக்கும். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ராமமூர்த்தி அவர்கள் வெளியே நடமாட முடியாத நிலைமை இருப்பதாகச் சொன்னார்கள். அண்மையில் நான் நெல்லை மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்தேன். அப்போது ஸ்ரீவைகுண்டம் போயிருந்தேன். அங்கே, நம்முடைய பேரவைத் தலைவருடைய இல்லம் இருக்கிறது. அன்று மாலை ஒரு பெரிய காங்கிரஸ் ஊர்வலம் நடந்தது. அதிலே காங்கிரஸ் நண்பர்களிலே ஒருவர் ஒரு சட்டியைத் தூக்கிக் கொண்டு, அதிலே ஒரு படி அரிசித் திட்டம் எங்கே என்று எழுதி அதனைப் பேரவைத் தலைவருடைய இல்லத்தின் முன்னாலே கொண்டு வந்து போட்டு உடைத்தார்கள். அதற்குப் போலீசார் பாதுகாப்புத் தந்தார்கள். அதைக் கண்டு நான் மிக மிக வேதனைப்பட்டேன். அதைச் செய்கிறவர்கள் காங்கிரசின் பெயரால் செய்கிறார்கள். மிகப் பெரிய தேசிய ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு இவ்வாறு செய்கிறார்களே என்று வருத்தப்பட்டேன். அந்த ஸ்தாபனத்திலே யார் யார் இருந்தார்கள்? எப்படி எப்படிப் பாடு பட்டார்கள்? என்ற வரலாறு எல்லாம் இன்றைய காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாத காரணத்தால் இது போன்ற நிகழ்ச்சிகளிலே ஈடுபட்டார்கள். உலகமே அதிருகின்ற முறையில் விடுதலைக் குரல் எழுப்பிய லோகமான்ய திலகர் இருந்தார். என் மீது விழுகின்ற ஒவ்வொரு அடியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சவப்பெட்டியில் அடிக்கின்ற ஒவ்வொரு ஆணியாகும் என்ற அளவுக்கு நெஞ்சுரம் கொண்ட லாலா லஜபதிராய் இருந்தார். கொடி காப்பதற்காகக் குருதியை கொட்டிய குமரன் இருந்தார்.

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1968 பிப்ரவரி 15

செக்கிழுத்த சிதம்பரம் பிள்ளை இருந்தார். ஆயுதம் தாங்கிய பிரிட்டிஷாரை ஆயுதம் தரித்துப் போர் தொடுக்க வந்த மாவீரர் சுபாஷ் சந்திரபோஸ் இருந்தார். மனிதனுடைய வாழ்வின் இணையில்லாத வாலிபப் பருவத்தையே தேசத்திற்காக தியாகம் செய்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் இருந்தார். இப்படிப்பட்டவர்களெல்லாம் வளர்க்கப்பட்ட ஸ்தாபனத்திலே இன்று இருப்பவர்கள் சட்டியைத் தூக்கிக் கொண்டு சந்தியிலே வந்து 'ஒரு படி அரிசி எங்கே' என்று கூறி உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை யாரும் மறுத்துவிடவில்லை. 1946-ம் ஆண்டில் கல்கத்தாவிலே ஜவகர்லால் நேரு அவர்கள் மூன்று லட்சம் மக்கள் அடங்கிய கூட்டத்தில் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். நான் ஆட்சிக்கு வந்த பிறகு 'இந்த நாட்டிலே கள்ள மார்க்கட்காரன் எவனாவது இருந்தால் அவனைத் தூக்கிலே போடுவேன்' என்று வாக்குறுதி கொடுத்தார். இந்த 20 ஆண்டுக் கால ஆட்சியிலே அந்தக் கள்ள மார்க்கட்காரர்களை என்ன செய்தீர்கள்? வாக்குறுதியை அவர் நிறைவேற்றினாரா?

திரு. க. இராமமூர்த்தி: நேரு அவர்களுடைய பேச்சு தேர்தல் அறிக்கையாக வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் போலவே திண்டிவனம் உறுப்பினர் அவர்கள் படி அரிசித் திட்டம் தேர்தல் அறிக்கையிலே வந்ததா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அது தேர்தல் அறிக்கையில் வரவில்லை. அதுமாத்திரமல்ல; தேர்தல் நேரத்திலே இது பேசப்பட்ட ஒன்றே தவிர, தேர்தல் பிரகடனமாக இல்லை. பேசியதைக் கூட நாங்கள் வாக்குறுதியாகக் கருதி நிறவேற்றி வருகிறோம், நிறைவேற்ற முயற்சித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நேரு கொடுத்த உறுதி மொழி தலைசிறந்த தலைவர் கொடுத்த உறுதிமொழி அல்லவா? அதை நிறைவேற்றினாரா?' என்றுதான் கேட்டார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: எது எப்படி இருந்தாலும் படி அரிசி பற்றிய ஒப்புதல் இந்த மன்றத்திலும் கூட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நாங்கள் அதைச் சொன்னது உண்மை. அதிலிருந்து திரும்பி ஓடிவிட நினைக்கவில்லை. இப்போதும் நெஞ்சழுத்தத்தோடு ஒத்துக் கொள்ளுகிறேன். அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். சொல்லிவிட்டு மாற்றிக் கொள்ளுகின்ற கட்சி அல்ல எங்கள் கட்சி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கள்ள மார்க்கட்காரர்களைத் தூக்கில் போட வேண்டுமென்று பண்டித நேரு அவர்கள் கூறியதாக உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். எந்தச் சட்டப்படி இந்தக் கள்ள மார்க்கட்காரர்களைத் தூக்கில் போடுவது என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கேள்வியைத் துணைத் தலைவர் அவர்கள் அப்போதே நேருவைப் பார்த்துக் கேட்டிருக்க வேண்டும்.



1968 பிப்ரவரி 15]

திரு. ஏ. ஆர். பெருமாள்: இந்த மாதிரிப்பெரும் பெரும் தலைவர்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகளைக் காலக்கிரமத்தில் நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் கொடுத்தார்களே தவிர, படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் கொடுத்தார்களே தவிர உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்ற வகையில் கொடுத்துவிடவில்லை. ஆகவே, இதற்காகக் கூக்குரல் போடுவது உகந்ததாக இருக்காது என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். ஒரு படி அரிசி போட வேண்டுமென்பது இந்த அரசின் திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'ஒரு படி அரிசித் திட்டத்தைக் கை விட்டு விட்டோம்' என்று கூறுகின்றபோது தான் 'ஏன் கைவிட்டு விட்டீர்கள்?' என்று குரல் எழுப்ப வேண்டுமே தவிர, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் போதே கூக்குரல் எழுப்புவது சரியல்ல. ஜனநாயக சோஷலிசம் என்பது காங்கிரஸ் கட்சியின் திட்டம். இதைப் பற்றி நாடு பூராவும் பேசுகிறார்கள். ஜனநாயக சோஷலிசத் திட்டத்தை ஏன் பரிபூரணமாக நிறைவேற்றவில்லை என்று கேட்டால் அந்த நோக்கத்தில், பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்..

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கம்யூனிஸ்ட் நாடு என்று சொல்லக்கூடிய சோவியத் அரசாங்கத்தில் கூட, கம்யூனிசத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, நடைமுறையில் இருப்பது சோஷலிசந்தான். ஒரு அரசு அதனுடைய லட்சியத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது; திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது என்ற நிலையில் இருக்கும் போது சட்டியைத் தூக்கிக் கொண்டு சந்தியில் போய் உடைப்பது என்பது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பாரம்பரியத்திற்கு உகந்தது அல்ல.

இங்கே பேசுகிறபோது காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் தாங்கள் தான் தேசிய பாரம்பரியத்தில் வந்தவர்கள் போலும் மற்றவர்கள் எல்லாம் விதேசியத்தில் வந்தவர்கள் போலும் பேசினார்கள். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் தேசிய பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான். பிரிட்டிஷ்காரர்கள், அமெரிக்கர்கள் ஆகியோர்தான் விதேசியத்தில் வந்தவர்கள் என்று சொல்ல வேண்டும்.

வெள்ளைக்காரனை எதிர்த்து நேருக்கு நேர் போர் புரிந்த நேதாஜி பாபுவை விட வெள்ளைக்காரனை எதிர்த்த இந்தியர் யாரும் இருக்க முடியாது. நேதாஜி பாபு அவர்கள் பார்வேர்ட் பி.ப. 1-30
ப்ளாக் கட்சியைத் துவக்க மதுரைக்கு வந்திருந்தபோது அப்போது பத்திரிகை நிருபர்கள் அவர்களிடம் மொழிப் பிரச்னை பற்றிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசக்கூடிய மக்கள் இருக்கிறார்கள், அவ்வளவு மக்களும் சேர்ந்து ஏகோபித்து மனமுவந்து ஒரு முடிவை எடுத்துக் கொள்ள

வேண்டும், அப்படி ஒரு முடிவு எடுக்கப்படுகிற வரையில், அந்தக் காலம் வரை இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலமே இருக்கலாம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் வேண்டுமென்று கேட்டால் ஒரு மில் அதிபரிடம் அன்று நடந்த அந்தச் சம்பவம் பற்றிய செய்திக் குறிப்பு. அந்தப் பத்திரிகைக் குறிப்பு இருக்கிறது. ஆங்கிலம்தான் நாட்டின் பொது மொழியாக இருக்கவேண்டுமென்று நேதாஜி பாபு அவர்கள் கூறியுள்ளதை என்னால் நிரூபிக்க முடியும். நான் நிரூபித்துக் காட்டத் தயார். திரு. முத்துராமலிங்க தேவர் அவர்களை விட உண்மையான தேச பக்தர் வேறு யாரும் இருக்க முடியாது. 1937-ல் அவர்கள் காங்கிரஸ் அங்கத்தினராயிருந்தபோது ராஜாஜி அவர்கள் இந்தியைக் கட்டாய பாடமாக கொண்டுவந்தபோது இன்றைய நம் முதல் அமைச்சர் அவர்களும், பெரியார் ராமசாமி அவர்களும் இந்தியை எதிர்த்து போராடியபோது, தமிழ் மொழி மீது இந்தி ஆதிக்கம் செலுத்தும் நிலை வருமானால் இந்தியை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் நானும் பங்கு கொள்வேன் என்று முழக்கமிட்டார் திரு. முத்துராமலிங்க தேவர் அவர்கள். அரசியல் கொள்கைகள் வேறு, கோட்பாடு வேறு, ஆனால் தமிழைப் பாதுகாப்பது என்பது வேறு என்றார்கள். உங்கள் நெஞ்சில் சிறிதளவு துணிவு இருக்குமானால் சொல்லுங்கள். உங்களுக்கு மொழிப் பற்று உண்மையில் இருக்குமானால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை நீங்கள் கொடுத்துவிட்டால் உங்களைப் பாராட்டலாம். அப்படி ஒரு அறிவிப்பு கொடுப்பதால் என்ன இடர்பாடு ஏற்படப் போகிறது? காங்கிரஸைக் கலைத்து விட்டு காங்கிரஸில் யாரும் சேரக் கூடாது என்று சொல்லிவிட்டால் புதிதாக எந்த காங்கிரஸ்காரர்கள் இங்கு முளைக்கப் போகிறார்கள்? அதை வைத்து வேறு எந்தக் காங்கிரஸ் கட்சி இங்கு பிரசாரம் செய்யும்? அதைச் செய்ய துணிவு வேண்டும், துணிச்சல் வேண்டும். அத் துணிவு வந்தால் நிச்சயமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பணிவை எதிர்பார்க்கலாம்.

அடுத்து என் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இரண்டு நிமிடங்கள் அதிகமானாலும் தலைவர் அவர்கள் பொறுத்தருள வேண்டும். எங்கள் தொகுதியில் க்ருதமால் நதி என்ற நதி இருக்கிறது. அதுபற்றி கடந்த இருபது ஆண்டுகளாக பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிராந்தியம் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டது. அந்தப் பிராந்தியத்தின் மீது கடந்த கால அரசாங்கத்திற்கு மிகுந்த அக்கறை, அதாவது அரசியல் அக்கறை. ஆகவே கவனிக்காமல் விட்டு விட்டார்கள். இதுபற்றி சென்ற ஆளுநர் உரையின்மீது பேசும் போதே கூறினேன். நீர்ப்பாசன போக்குவரத்து மாநாடு நடத்தும் போது அதுபற்றி கவனிக்கப்படும் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். எழுத்து மூலம் எழுதியிருந்தார்கள். திடீரென்று அமைச்சர் அவர்களுக்கு விபத்து ஏற்பட்டதால் மாநாடு ஒத்தி





வைக்கப்பட்டது. பிறகு கூட்டப்படவில்லை என்று அறிகிறேன். அந்த க்ருதமால் நதித் திட்டத்தை எங்கள் பகுதியில் நிறைவேற்றித் தந்தால் முதுகுளத்தூர் தொகுதி, கரியாப்பட்டித் தொகுதி, மானாமதுரை, அருப்புக்கோட்டை போன்ற கிழக்கு ராமநாதபுரத்தில் உள்ள ஐந்து, ஆறு தொகுதிகளில் 50,000 ஏக்கர்களுக்கு அதிகமான ஏக்கரா நிலங்கள் பாசன வசதி பெற முடியும். இது சிறிது சிரமமான திட்டம்தான். ஐந்து கோடி ரூபாய் வரை ஆகும் என்று என்ஜினியர்களைக் கலந்து ப்ளான் அமைத்து வைத்திருக்கிறோம். ஆண்டொன்றுக்கு 50 அல்லது 60 அல்லது 70 லட்சம் ரூபாய் நிதி வசதிகேற்ப கொஞ்சங் கொஞ்சமாக ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடலாம். இப்படி ஐந்தாறு வருடங்களில் சிறிது சிறிதாக நிதி ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் அது ஒன்றே போதும், வேறு எதுவும் நான் இங்கே கேட்க மாட்டேன். அத்திட்டத்தை தொடங்கி வைக்க வேண்டும். முப்பது லட்சம் ரூபாய் முதலில் செலவழித்தாவது க்ருதமால் நதித் திட்ட வேலையைத் துவக்கி வைக்கவேண்டும். அந்த நதி பழைமையானது. அந்நதி இப்போது தூர்ந்து போயிருக்கிறது. தேசிய நண்பர்கள், காங்கிரஸ் நண்பர்கள் அந் நதியை ஆக்கிரமித்து வீடுகள் கட்டி தோட்டங்கள் வைத்ததால் அந்நதி பாழ்பட்டது. ஆக்கிரமிப்பு செய்த இடங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும். நதி வைகையிலிருந்து துவரிமான் ஓரத்தில் உதயமாகி முதுகுளத்தூர் கடலோரத்தில் சங்கமமாகிறது. அந்த நதித் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பட்ஜெட்டில் அந்த வேலையைத் தொடங்கி வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் அல்லது அமைச்சர் அவர்களாவது நிச்சயமாக அதைக் கவனித்து ஆவன செய்வேன், இந்த வருடத்திற்குள்ளே அந்த வேலையைத் தொடங்குவோம் என்று வாக்குறுதியாவது அளிக்கவேண்டும்.

அருப்புக்கோட்டை தாலுக்காவில் ஒரு தொழிற்பேட்டையும் இல்லை. ஆகவே கரியாப்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற பிரச்சனைகள் பற்றி அமைச்சர் அவர்களிடம் நேரிடையாகச் சொல்லிப் பேசுவதற்கு, வாய்ப்பிருப்பதால் இதுவரையில் பேசுவதற்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி உரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. என். குமாரசாமி:** துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரைமீது சில வார்த்தைகள் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் அவர்கள், விவசாய உற்பத்தித் துறையில் அரசாங்கத்தின் கடமைகளைப் பற்றி விளக்கமாக கூறியிருக்கிறார்கள். தொழில்துறை பற்றிக் குறிப்பிடுகையில், 18 ஆலைகளுக்கு அரசின் உத்தரவாதத்தின்மீது அவை நிற்காமல் ஓடுகிற பிரச்னை குறித்தும் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 60,000 தொழிலாளர்கள் வேலை செய்கிற ஒரு பிரதேசத்தில் ஆலைகள் மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்தன்றன என்பதைக் கூற விரும்புகிறேன். அறிக்கையில் குறிப்

பிட்டிருப்பதைப் பார்த்தால், அரசு உதவி செய்ததன் மூலம் அந்த ஆலைகள் எல்லாம் ஓடி தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் வேதனையோடு சொல்கிறேன், மூன்று ஆண்டுகளாக முயற்சி எடுத்துக்கொண்டும் அந்த ஆலைகள் ஓடாமல் அப்படியே இருக்கின்றன. திரு. லோகநாதன் கமிட்டி பரிசீலனை செய்தது. அந்தக் கமிட்டியில் அரசு காரண்டி கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த ஆலைகள் அப்படியே அதே நிலையில்தான் இருக்கின்றன. அதில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் இன்று பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுக்கு வேறு வாழ்வு கிடையாது. இது சம்பந்தமாக அரசு உடனடியாக தக்க முடிவு எடுக்க வேண்டும். தேசத்தின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற இந்தப் பெரும் தொழில் நசிந்துக் கொண்டிருக்கிறது. மில் முதலாளிகள், எங்களுக்கு தொழில் நெருக்கடி ஏற்பட்டு விட்டது, எங்களால் தொழிலை நடத்த முடியாது, சம்பளத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று தொழிலாளர்களிடம் பேரம் பேசுகிற அளவிற்கு வந்துவிட்டார்கள். இந்நிலையில் தொழிலாளர்கள் மட்டும் தியாகம் செய்யவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். விலைவாசியேற்றம் காரணமாக இன்று தொழிலாளர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்ற மனோபாவம் வளர்ந்துவிட்டால் தொழிலாள வர்க்கம் வாழ முடியாதென்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே தயவுசெய்து அரசு அப்பிரச்சனை குறித்து ஆலோசித்து ஒரு முடிவு காணவேண்டும். மூடப்பட்டிருக்கும் பஞ்சாலைகளுக்கு விமோசனம் இல்லை என்ற நிலையிருக்கிறது. மூடிக்கிடக்கிற ஆலைகளை மத்திய அரசு மூலம் எடுத்து நடத்த நிர்பந்திக்கிற முறையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதிலே காலதாமதம் செய்வதன் மூலம் இந்த நாட்டிலே மிகப் பெரிய அபாயம் வந்து கொண்டிருக்கிறது. பிறகு அதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விடும். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "ஸ்மால் இண்டஸ்டிரிஸ் கார்ப்பொரேஷன்"—இல் பல தொழிலாளர்களை நிறுத்திக்கொண்டு வருகிறார்கள். அது சர்க்காரின் ஒரு அங்கமாக இருக்கிறது. அதில் ஆயிரம் பேர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த மாற்று வேலை கொடுக்கும் நிலைமையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலைப் பொறுத்தவரையில் நிதி வசதி போதாததின் காரணமாக தொழில் அபிவிருத்திக்கு முதலீடு செய்ய முடியாத நிலையிருக்கிறது என்று அரசு சொல்கிறது. உண்மைதான். இருந்தாலும் இருக்கின்ற தொழில்களைச் சரியாக நடத்த முயற்சி எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாகப் படியரிசித் திட்டம் பற்றிப் பேசப்பட்டது. அதைப்பற்றி இங்கு ஆலோசனை செய்தார்கள். நான் இதுபற்றி ஆலோசனை ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கிராமத்திலுள்ள மக்கள், சாதாரண மக்கள், குறைவான கூலி பெற்றுக்





கொண்டிருக்கும் மக்கள் ஆகியோருக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கவில்லை. ஆனால் நகரத்திலேயுள்ள அதிகமாகச் சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு நிறைந்த அளவில் சரியான, நியாயமான விலையில் கிடைக்கிறது. கிராமத்திலேயுள்ள ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் கூலிபெறும் மக்களும் அத்திட்டத்தின் மூலமாக அரிசி பெறக்கூடிய வாய்ப்பை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மக்கள் அதைத்தான் எதிர்பார்ப்பார்கள். அதுதான் அவர்களுடைய வாழ்வைச் சரிக்கட்டிக்கொள்ள உதவியாயிருக்கும்.

என்னுடைய தொகுதியாகிய பல்லடம் பஞ்சம் நிறைந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தப் பிரதேசத்தில் வரட்சி ஏற்பட்டு விவசாயிகள் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டங்களோ கிடையாது. அங்கேயுள்ள சகல கிராமங்களிலும் இருக்கின்ற மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று மூன்று மாதங்களுக்கு முன்பு நான் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அதற்கு அரசு ஆவன செய்வதாகவும் சொன்னார்கள். ஆனால் அங்கு இதுவரை எந்த விதமான விமோசனமும் ஏற்படவில்லை. தவிர அங்கு வரியை நிர்ப்பந்தமாக வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன்களைத் தள்ளிவிடுவதாக இருந்தால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழில் நெருக்கடி, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகள் இவற்றைப் பரிசீலனை செய்வதோடு அந்தப் பிரதேசத்திலே உள்ள இந்த மக்களுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசினருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலையிலே இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்தப் பிரதேச மக்களுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தில் பெரிய திட்டம் கூட வேண்டியதில்லை. அங்கிருக்கின்ற ஏற்கெனவே அரசு போட்டிருக்கிற குந்தா கழிவு நீர்த் திட்டத்தில் வரும் உபரித் தண்ணீரை அந்தப் பிரதேசத்தில் பாய்ச்சினால் அந்தப் பிரதேசத்திலுள்ள மூன்று தாலுக்காக்கள்—அதாவது கோவை தாலுக்கா, பல்லடம் தாலுக்கா, அவிநாசி தாலுக்கா—பயன்பெறும். அவ்வாறு செய்தால் அங்குள்ள இரண்டரை இலட்சம் ஏக்கரா நல்ல பூமிகளில் விளைபொருள்களை நிச்சயமாக எடுக்கலாம். அப்படிப்பட்ட பூமிக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே நாலரை கோடி ரூபாயில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் கூடச் செலவு செய்தால் திட்டம் செயல்படுமென நம்புவதால் அவ்வாறு செய்தால் அது அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்கும் திட்டமாக இருக்கும். அதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பரம்பரையாக நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் போய்விட்டது அங்குள்ளவர்களுக்கு. இந்த நேரத்தில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமேயானால் அந்த விவசாயிகள் மிகவும்

நல்ல முறையிலே இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்கின்றேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

தொழிலிலே ஏற்பட்டிருக்கும் மந்த நெருக்கடிக்கு மத்திய அரசு காரணம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொள்கை வழியிலேதான் நடக்கப் போகிறார்கள். அதனால் தமிழகத் தொழில்கள்தான் பாதிக்கப்படும். அது நம்மைத்தான் பாதிக்கிறது. மத்திய அரசு காரணம் என்று சொல்லிக்கொண்டிருக்காமல் தமிழக அரசு ஏதாவது முடிவு எடுத்து அந்த நெருக்கடிகளைத் தீர்க்க முன் கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. தொழில் நெருக்கடி ஏற்பட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் புதிய தொழிலில் ஈடுபடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அவர்களைக் காக்க வேண்டும். சிறு தொழில்களையும், மற்றச் சிறு தொழில்களையும் ஏற்படச் செய்வதன் மூலம் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நிலைமைகள் மாற வேண்டுமென்று சொன்னால் சிறு தொழில்கள் மூலமாகவோ, அல்லது வேறு முறையிலேயாவது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இந்த நிலையில் அரசு முன் கை எடுத்து செய்வார்களேயானால் அப்பொழுதுதான் மக்களுக்கு நன்மை தெரியும். அப்படி இல்லையென்று சொன்னால் நிலைமைகள் வேறுவிதமாகப் போகலாம். ஆகவே அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி :** மேன்மைமிகு சட்டமன்றத் தலைத் தலைவரவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்பேரில் கொண்டு வந்த நன்றியறிவிப்பு தீர்மானத்தினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கவர்னர் அவர்கள் உரையில் முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளது மொழிக் கொள்கை. நமது மாநிலத்தில் ஆட்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் இடம்பெற நம் தாய்மொழியான தமிழ் மொழியே பொருத்தமானது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாகவும், நீதி ஸ்தலங்களில் நிர்வாக மொழியாகவும் தமிழ் மொழியே அமைய வேண்டுமென்பது எல்லோருடைய அபிப்பிராயம். அந்தவிதமாக ஏற்பட்டாலொழிய இயற்கையான சூழ்நிலை அமையாது. அடுத்து ஆங்கிலத்தை நன்றாகக் கற்று "மாஸ்டரி ஆப் தி லாங்குவேஜ்" ஏற்பட்டால் ஒழிய நாம் பிற நாடுகளிலிருந்து பின் தங்கித்தான் நிற்போம். எனவே தமிழுக்கு முதலிடம் கொடுத்த போதிலும் நமது அரசு ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை புறக்கணிக்கவில்லை. எனவே தான் இருமொழிக் கொள்கையை நமது அரசு மேற்கொண்டு





உள்ளது. இருமொழிக் கொள்கையை நிறைவேற்றவேண்டுமென்று உறுதிகொண்ட நமது சர்க்காரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்ட வேண்டும், வரவேற்க வேண்டும். இந்தி மொழிதான் வேண்டும், ஆங்கிலம் தேவையில்லை என்று சொல்லக் கூடிய ஒரு சாரார் இருக்கும் இந்நாளில், கிளர்ச்சி, குழப்பம் செய்து கொண்டு, கலகம் செய்து கொண்டிருக்கும் இந்நாளில் நமது அரசானது நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும், எல்லோரும் கூடி நல்வாழ்வு வாழ வேண்டும், அதற்காக ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் எல்லா தலைவர்களின் கூட்டு ஆலோசனை நடத்தலாம் என்று சொல்லியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அந்த வகையிலே நாம் இந்த அரசைப் பாராட்ட வேண்டும். இந்தி மொழியை நமது பள்ளிகளிலே நுழையவிடக் கூடாது என்று சொன்ன நேரத்திலே இந்தி ஆசிரியர்களை வேண்டாமென்று சொல்லவில்லை. அது மட்டும் அல்ல. இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுக்கலாம் என்றும் சொன்னார்கள். அரசின் அந்த பரந்த நோக்கத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த அளவிலே மொழிப் பிரச்சினையைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு கைத்தறி தொழிலின் நிலையை பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் ஈடுபட்டிருக்கிற தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலைப்பற்றி எடுத்துக்கொண்டால் உண்மையிலே அவர்களின் நிலை வேதனைக்குரியது. ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களின் நிலை மிகவும் பின் தங்கியுள்ளது. அவர்களது நிலையைப் பார்த்தால் மிகவும் கவலையாக இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், ஜவுளித் தேக்கம் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வழிவகை காண நமது அரசு முற்பட வேண்டும். நான் ஒரு ஆலோசனை கூறிக்கொள்ளுகிறேன். ஒரு தனி குழு ஏற்படுத்தி ஆலோசனை செய்தால் மிகவும் சிறந்ததாக இருக்கும். அதுமட்டுமல்ல. கைத்தறி நெசவாளர்களில் நகர்ப்புறத்திலுள்ளவர்களுக்கு உணவுக்கு குடும்பக் கார்டு கிடைத்திருக்கிறது. அரிசி நியாயமான விலைக்குக் கிடைக்கிறது. ஆனால் கிராமப் பகுதிகளில் வசிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலைக்கு அரிசி கிடைக்கவில்லை.

அந்த மாதிரி கிராமங்களிலே வசிக்கக்கூடிய நெசவாளர்களுக்கு, குடும்பக் கார்டு முறையை ஏற்படுத்தி அவர்களுக்குக் குறைந்த விலைக்கு உணவுப் பொருள்கள் கொடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று உணவு அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கே, எந்தெந்த கிராமத்தில் கைத்தறி நெசவுத் தொழிலில் உள்ள மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் குடும்பக் கார்டு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட வேண்டும். அதுதான் அவர்கள் செய்ய வேண்டிய நல்ல காரியம்.

அடுத்தபடியாக இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் வாங்க சப்சிடி கொடுக்க வேண்டும். அது கொடுத்தால்தான் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கும். அது மட்டுமல்ல. கைத்தறி

[திரு. க. முருகேசன்] [1968 பிப்ரவரி 15

20—1—1968-ல் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஓசூர் துணை ஆட்சித் தலைவர் அவர்களும் அணை கட்டப்படும் இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். இதற்கான அவர்களுடைய அறிக்கையும் அரசினருக்குக் கிடைத்திருக்குமென எண்ணுகிறேன். இந்தத் திட்டம் ஏற்படுவதனால் விவசாய அபிவிருத்தி அடையும். கூடுதலாக சுமார் 2,500 ஏக்கருக்கு அதிகமாகப் பாசன வசதி கிடைப்பதுடன், மாரண்டஅள்ளிக்கு அடுத்துள்ள செங்கன் பசந்தலா, ஜேர்தலாவ் ஏரிகளுக்கும், ஜேர்தலாவ் ஏரிக் கோடியிலிருந்து உபரி தண்ணிரை கால்வாய் மூலம் கொண்டு போனால் பாப்பாரப்பட்டி, கடகத்தூர், சோகத்தூர், தர்மபுரி முதலிய பெரிய ஏரிகளுக்குக் கீழ் உள்ள நிலங்கள் பயனடையும். இதனால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் புதிய பாசன வசதி ஏற்பட்டுக் குடிமக்கள் நன்மை அடைவார்கள்.

சமீபத்தில் தர்மபுரியில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கிற்கு வருகை தந்த விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் பாலக்கோட்டிலும், அரங்கிலும் இதை வலியுறுத்தி கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனவே இதன் முக்கியத்துவத்தைக் கருதி இதை உடனடியாக முதல் அமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த தினத்தன்று இத் திட்டத்தைத் துவக்கி, தர்மபுரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில் அன்று பாசன, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் வருகை தந்து இத்திட்டத்தை அண்ணாவின் பிறந்த நாள் விழா சிறப்புற நடத்தப்படும் பல திட்டங்களில் இதையும் சேர்த்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வரவிருக்கும் 1968-69-ம் வருட பட்ஜெட்டிலேயே இடம்பெறச் செய்ய வேண்டுமாய்க் கோருகிறேன்.

விவசாய அபிவிருத்திக்கும் தொழில்கள் அபிவிருத்திக்கும் அதிகப்படியாக மின்சாரம் தேவைப்படுகிறது. எனவே ஒகேனக்கல் மின் விசைத் திட்டத்தை விரைவில் மேற்கொள்ளத் தக்க நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி நீண்ட நாளாக எதிர் பார்த்திருக்கும் மக்களின் அவாவினைப் பூர்த்தி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாலக்கோட்டிலிருந்து கெசரகுளி போகும் பாதையில் சின்னாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட மதிப்பீடு போடப்பட்டு அவை செயல் முறைக்கு வராமலேயே உள்ளது. எனவே இத்திட்டத்தையும் இந் நிதி ஆண்டின் அறிக்கையிலேயே எடுத்து பூர்த்தி செய்து, இதனால் சுமார் 25 கிராம மக்களின் தினசரி துன்பத்தைப் போக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாரண்டஅள்ளியிலிருந்து பஞ்சப்பள்ளிக்குச் செல்லும் பாதையில் சின்னாற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டினால் இதனால் தினசரி அதில் செல்லும் ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பெரும் பயன் ஏற்படும் என்பதுடன் நீர்ப்பெருக்கெடுத்தோடும் காலத்தில் நிகழும் உயிர்சேதங்கட்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதையும் விழைந்து கூறிக்கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 15] [திரு. க. முருகேசன்]

படி அரிசித் திட்டத்தை வரவேற்பதுடன், இத்திட்டத்தை மற்ற எல்லா ரேஷன் ஏரியாக்களுக்கும் குறிப்பாக நெசவாளர்கள் வாழும் இடங்களுக்கு உடனடியாக விஸ்தரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நிறைய இன்ஜினீரிங் படித்த பட்டதாரிகளும் பாலிடெக்னிக்கில் படித்து டிப்ளமோ பெற்றவர்களும் வேலையின்றி இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்து ஒன்றரை ஆண்டு ஆகியும் மாவட்ட நூலக ஆணைக் குழு, இன்னும் குழு அங்கத்தினர்களை நியமிக்காமலும் பிரிக்கப்படாமலும் இருக்கிறது. அதை உடனடியாகப் பிரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 90 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தும் தனி மாவட்ட கல்வி அதிகாரி நியமிக்கப்படவில்லை. ஆகையால், தர்மபுரிக்குத் தனி மாவட்ட கல்வி அதிகாரி ஒருவரை நியமித்து, நிர்வாகத்தைத் தனியாக பிரிக்கவேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக இயங்கக்கூடிய அசிஸ்டெண்ட் என்ஜினீயர் ஃபார் அக்ரிகல்ச்சுரல் டிரில்லிங், அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இத்துடன் பேரவையின் கூட்டம் நாளை காலை 9 மணி வரையில் தள்ளி வைக்கப்படுகிறது. மீண்டும் பேரவை நாளை காலை 9-மணிக்குக் கூடும். பி.ப. 2-00

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

48. Notification issued with G.O. Ms. No. 2988, Home, dated the 31st October 1967, making certain amendments to the Madras Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

### B. Reports, Notifications and other Papers.

6. Annual Report of the Madras State Khadi and Village Industries Board for 1965-66.

† 7. Resume of Work (XXX Session) transacted by the Madras Legislative Council during the period from 24th to 30th November 1967.

† Despatched to Members on 14th February 1968.

## தமிழக சட்டப் பேரவை

---

**வெள்ளிக்கிழமை, 1968 பிப்ரவரி 16**

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### நடத்த இயலாத தனியார் பள்ளிகள்

* 47 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகட்குப் பதிலளிப்பாரா :—

தனியார்களால் நடத்த இயலாத பள்ளிகளை அந்தந்தப் பகுதி ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களை ஏற்று நடத்த வேண்டும் என்று அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இனிமேலாவது அத்தகைய ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிப்பு எப்படிப்பட்ட பகுதிகளில் துவக்கப் பள்ளிகளை வைத்து நடத்தவேண்டுமென்ற பொறுப்பு ஊராட்சி ஒன்றிப்புகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தனியார் பள்ளிகளைத் தனியார் நடத்துவதற்கு முடியவில்லையானால், அவற்றை ஊராட்சி ஒன்றிப்பு நடத்த வேண்டுமென்று சொன்னால், அப்படி நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றிப்புக்கு உரிமையும் வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், ஊராட்சி ஒன்றிப்புகள் தனியார் பள்ளிகளை எடுத்து நடத்தும் சூழ்நிலை இப்போது ஏற்படவில்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தனியார் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா ? ஜில்லா போர்ட் பள்ளிகளையெல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக மாற்றும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தனியார் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தும் உத்தேசம் இப்போது இல்லை. உயர் நிலைப் பள்ளிகளாக இருந்தவை இப்போது அரசாங்கப் பள்ளிகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அரசாங்கப் பள்ளிகளை நடத்துவது ஒரு பக்கம், மாவட்டக் கழகப் பள்ளிகளை நடத்துவது ஒரு பக்கம் இருந்து வருகிறது. இரண்டையும் ஒன்றுபடுத்தக்கூடிய முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

நெசவாளர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் கொடுக்க வேண்டும். ஸ்காலர்ஷிப் போன்ற சலுகைகள் கொடுக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டுமென்று ஆட்சியாளர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செயற்கைப் பட்டுநூல் இறக்குமதி செய்வதற்காக ஒரு வழி இருக்கிறது. ஆக்சுவல் யூசர்ஸ் ஆக இருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு இறக்குமதி லைசென்ஸ் கொடுப்பது ஒரு முறை. அந்த முறையில் இறக்குமதி விலை ஒரு கிலோ கிராம் 10 ரூபாயாக இருந்தால், ஆக்சுவல் யூசர்ஸ்-க்கு வெளி மார்க்கெட்டில் 25 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. அந்தச் செயற்கை பட்டு நூல் வெளியிலிருந்து 10 ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டதை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக விநியோகிக்கப்படுகிற நிலை இருப்பதால் அவர்கள் அதை அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள். பத்து ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்படுவதை 22 ரூபாயாக உயர்த்தி நெசவாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். அப்படி செய்வதனால் உண்மையிலேயே எந்த விதமான பயனும் கிடையாது. நேரடியாகவே, நெசவாளர்களுக்கு இறக்குமதி லைசென்ஸை அளித்துவிட வேண்டும். அதன் மூலம் எந்தவித பாதகமும் கிடையாது. ஆகவே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக விநியோகிக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்லில் புதிதாக நியமிப்பதாக இருந்தாலும் சரி, பழைய ஆட்களையும் சரி, அதிலே இருக்கிற மேனேஜிங் டைரக்டர்களையும் மற்ற அதிகாரிகளையும் சேர்மன் போன்றவர்களையும் நூல் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கும்படியானவர்களாகப் பார்த்து நியமிக்க வேண்டும். நூலைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் எல்லாம் டைரக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இந்தப் புதிய அரசு நெசவாளர்களுக்காக இருக்கிற காரணத்தால், இந்த விதமான ஒரு நிலையை மாற்றி, நூல் சம்பந்தப் பட்டவர்கள், நூல் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், ஜவுளியைப் பற்றித் தெரிந்தவர்கள் ஆகியவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே மலைப்பகுதிகள் இருக்கின்றன. மணலூர் கிராமம், ஆடலூர் கிராமம், சோலக்காடு கிராமம், பன்றிமலை கிராமம் போன்ற கிராமங்கள் எல்லாம் அந்த மலைப் பகுதிகளில் உள்ளன. அங்குள்ளவர்கள் வாழை, காபி, போன்ற பயிர்களை விவசாயம் பண்ணுகிறவர்கள். நெல் விவசாயம் பண்ணுவது கிடையாது. அவர்களுக்கெல்லாம் கீழிருந்துதான் அரிசி போக வேண்டும். அதிகாரிகள் மலைப் பகுதிகளுக்கு அரிசி போகாமல் தடுக்கிறார்கள். அவர்களுக்குத் தாராளமாக அரிசி விநியோகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மணலூர், ஆடலூர், சோலக்காடு, பன்றிமலை போன்றவையெல்லாம் முக்கியமான கிராமங்கள். அன்னியச் செலாவணி சம்பாதிக்கக்கூடிய கிராமங்கள். ஏலக்காய், வாழை, காபி இவைகள் எல்லாம் உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள் ஏராளமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு அரிசி கிடைக்கவில்லை. அரிசியைக் கீழிருந்து கொண்டு போவதைத் தடுக்கிறார்கள். அதைத் தடுக்காதவாறு, கீழிருந்து அரிசி மலைக்குத் தாராளமாகப் போக வழிவகைச் செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து நீர்ப்பாசனத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியான ஆத்தூர் மதுரையிலே இருக்கிறது. அந்தத் தொகுதியில், அணைக்கட்டு கட்ட ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் முந்தைய சர்க்கார் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. காரணம் நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். எதிர்க்கட்சியிலே இருந்த காரணத்தால் அந்தத் திட்டத்தை அனுமதிக்காமலிருந்தார்கள். மருதா நதி திட்டம் எனப்படும் அந்த திட்டத்திற்கு ரூ. 56 லட்சம் எஸ்டிமேட் அனுப்பப்பட்டிருக்கிறது. பாசனத்திற்கு நீர் ஏராளமாகக் கிடைக்க வசதி செய்யக்கூடிய அருமையான திட்டம். அந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து, வரக்கூடிய பட்ஜெட்டிலே அதைச் செய்ய வேண்டுமென்று நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே நரசிங்கபுரம் கிராமம் ஒன்று இருக்கிறது. அங்கு பாசனம் ஒரு வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்காலிலே வந்து விழுகிற தண்ணீரை ஏழை விவசாயி பயன்படுத்த முடியாதபடி அங்குள்ள செல்வாக்கு படைத்தவர்கள் பலசாலிகள் தடுத்து, கீழே கொண்டு போய் வேறு எங்கெங்கோ பாய்ச்சுகிறார்கள். அதற்கு ஒரு முறை வைத்து, இந்தச் சர்க்கார் அந்தத் தண்ணீரை வீணாகாதவாறு முறையாக பாயக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நமது அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. முருகேசன்: மாண்புமிகு உதவி அவைத் தலைவர் அவர்களே, 10—2—1968 தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என் தொகுதியில் நடைபெற வேண்டிய சில நல்ல காரியங்களைப் பற்றிக் குறிப்பிட விழைகிறேன்.

புதியதாக நிர்மாணிக்கப்பட்ட தர்மபுரி மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிட பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் பின்தங்கிய மாவட்டமாகும். நீண்ட காலமாக 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விவர அறிக்கை 2-ல் இடம் பெற்றுள்ள சின்னாறு திட்டம் எடுத்துக்கொள்ளப்படாமலேயே இருக்கின்றது. இதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன. எஸ்டிமேட்ஸ் சுமார் 107 லட்சம் என நினைக்கிறேன். கடந்த மாதம்

**திரு. எம். எஸ். மணி :** நகராட்சி எல்லைக்குள் நடத்தப்படுகின்ற தனியார் பள்ளிகளை நடத்த இயலவில்லையென்றால் அவற்றை நகராட்சி எடுத்து நடத்துவதற்கு அனுமதி கேட்டால் உடனடியாகக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனியார் நடத்துகின்ற பள்ளிகளை அவர்கள் நடத்த முடியாமல் விட்டுவிட்டால் அவற்றை நகராட்சி ஏற்று நடத்தவேண்டுமென்று விரும்பினால் நகராட்சியே அவற்றை நடத்த முன்வந்தால் அவற்றை எடுத்துக் கொள்ளலாம், ஒன்றும் தடையில்லை.

**திரு. கே. விநயகம் :** பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற தனியார் நடத்துகின்ற பள்ளிகள் 'நான்-வயபில்' என்று சொல்லி நடத்த முடியவில்லை என்று விண்ணப்பம் செய்தால் அவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்று உத்திரவு பிறப்பிப்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'நான்-வயபில்' என்று சொன்னால் நஷ்டம் வருகிறது என்றுதான் பொருள். ஏற்கனவே நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நஷ்டத்தையும் கொடுக்கமுடியாமல் இருந்தால், அந்த நஷ்டத்தையும் 'இன்க்லூடிங் தி லயபிலிடி ஆப் தி இன்ஸ்டிட்யூஷன்', சேர்த்து எடுத்துக் கொள்ளுமா ? அல்லது அவற்றை நீக்கிவிட்டு வெறும் பள்ளிகளை மாத்திரம் எடுத்துக் கொள்வதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பொதுப்படையாகச் சொல்வதற்கில்லை. அந்தந்த நிலைமைகளைப்பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. என். வரதராஜன் :** சர்க்காருடைய ஆணைக்குப் புறம்பாக நடத்தப்படுகின்ற உதவி பெறும் பள்ளிகளையாவது உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சர்க்காருடைய ஆணைகளுக்குப் புறம்பாக நடத்தப்படுகிற பள்ளிகளுக்குக் கொடுக்கப்படும் மான்யங்கள் நிறுத்தப்படும். அந்தப் பள்ளிகளுக்கு அனுமதியும் மறுக்கப்படும். மான்யங்களும் நிறுத்தப்பட்டு, அனுமதியும் மறுக்கப்பட்டவுடன் அவற்றை நடத்தப்பட முடியாத நிலைமைதான் ஏற்படும். மீண்டும் நடத்தவேண்டுமென்று ஊராட்சியோ, அல்லது நகராட்சி மன்றமோ அல்லது அரசினரோ தக்க முயற்சியை மேற்கொள்ளலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வையிலுள்ள பள்ளிகளை அரசாங்கமே நடத்தவேண்டும் அல்லது கலெக்டர் மேற்பார்வையிலே நடத்தவேண்டுமென்று ஆசிரியர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்தென்ன?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கருத்து ஆசிரியர்கள் சங்கத்தில் இருந்து தரப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தும் நிலவிக் கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிப்பு நடத்தவேண்டுமென்ற கருத்தும் இருக்கிறது. அதை இன்னும் பரிசீலிக்கவில்லை. பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ந. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் பெரும்பாலும் வாணிப நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன என்று ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து புகார்கள் வந்திருக்கின்றனவே அவைபற்றி அரசாங்கத்தின் கருத்தென்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெரும்பாலும் வாணிப நோக்கத்தோடு நடைபெறுகிறது என்று சொல்வதற்கில்லை. பலரும் நன்கொடை வழங்கி அது நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கமும் உண்டு. இதிலே தவறுகள் ஏற்பட்டால், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அரசாங்கப் பள்ளிகளில் சில பள்ளிகள் மழையின் காரணமாக இடிந்து, பல ஆண்டுகளாகக் கட்டப்படாமல் அவல நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கோ அல்லது தனியார்களுக்கோ கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பொதுப்படையாகக் கூறுவதற்கில்லை. தனியார்கள் எல்லா வசதிகளையும் செய்து தருவார்களானால் அப்படிப்பட்ட இடங்களைக் கொடுக்க முன்வரலாம்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தனியார் பள்ளிகளை அவர்களே சரியாக நடத்த முடியாமல் இருக்கும்பொழுது அரசாங்கமே எடுத்துக்கொள்ள முயற்சி செய்கின்ற காலத்திலே, அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று அதையும் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். அப்படிச் செய்வதால் மாணவர்கள்தானே பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு என்ன வழி செய்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்டத்தில் வழக்கு மன்றங்களுக்குச் செல்லுகின்ற வாய்ப்பு இருக்குமானால், அதைத் தடுத்து நிறுத்த நம்மால் இயலாது. பொதுமக்களின் நன்மையை முன்னிட்டு உறுப்பினர் போன்றவர்கள் தலையிட்டுப் பேசி நியாயமாகச் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டப்படி ஒழுங்கான முறையைக் கடைப்பிடிக்க எந்த முயற்சியை எடுத்துக்கொள்ள முடியுமோ அதை அரசு எடுத்துக்கொள்ளும்.

THIRU K. VINAYAKAM : Is there any policy with the Government to nationalise all the private-managed elementary schools as has been done in other States like Kerala ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லையென்று முதலிலேயே குறிப்பிட்டேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சர்க்கார் பள்ளிகள், தனியார் பள்ளிகள், ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகள் என்றெல்லாம் இருப்பதை ஒருமுகப்படுத்தி, கல்வி எல்லோருக்கும் சமமானது என்ற அடிப்படையில் ஆரம்பக் கல்வி நிலையங்களை ஸ்தல ஸ்தாபனங்கள் எடுத்துக்கொண்டு, அதற்குமேல் உள்ள கல்வியைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் புதிய ஒரு கொள்கையை வகுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கொள்கை நல்ல கொள்கையென்றாலும்கூட இருக்கிற நிதி வசதி, வேறு பல வசதிகள், நாட்டின் நிலைமைகள் அத்தனையும் கவனித்துப் பார்க்கும்போது இப்போது நாம் எப்படியேனும் கல்வி நிலையங்கள் அமைத்து மக்கள் எல்லோரும் படிப்பதற்கான முயற்சியை செய்து வருகிறோம். ஆகையினால் அத்தனை பள்ளிகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியவில்லை. அப்படி அத்தனையையும் எடுத்துக் கொள்ளப்படும் நிலைமை வரும்போது தனியார்களின் கட்டடங்கள் போன்றவைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வார்களானால், எல்லாவற்றையும் நாம் எடுத்துக்கொண்டு ஈடுகட்டமுடியாது. ஆகவேதான், இப்பொழுது அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடவில்லை.

**திரு. இல. பலராமன் :** நகரப் புறங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இன்னும் நகரஈட்டுப்படி தரவில்லை என்று அறிகிறேன். அதைத் தருவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கோரிக்கை வந்துள்ளது. பரிசீலனையில் இருந்துவருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, தனியார் நடத்தக்கூடிய பள்ளிகளையும், பஞ்சாயத்து யூனியன் நடத்தக்கூடிய பள்ளிகளையும், அங்குள்ள ஆசிரியர்களுக்கு சரிவரச் சம்பளம் கொடுக்கப்படவில்லையாதலால், ஏன் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அதில் ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நமது மாநிலத்தில் கிட்டத்தட்ட 36,000 துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அத்தனை பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரிவர கொடுக்கப்படவில்லை என்பது சரி இல்லை. ஒரிரண்டு இடங்களில் அப்படிப்பட்ட தலைமை ஆசிரியர்கள் வாயிலாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் நிலைமைகள் ஏற்படுமேயானால், நேரடியாகவே டி.ஈ. ஓக்கள் மூலம் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நடத்துவது என்றால், அரசாங்கமே இடம் பார்த்து, கட்டடம் பார்த்து, மற்ற வசதிகளையும் பார்த்து



செய்யக்கூடிய நிலைமைகள் ஏற்படுமேயானால், அரசாங்கம் அதிகப்படியாகப் பணம் செலவழிக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். அப்படி அதிகமாகப் பணம் செலவழிப்பதற்கான வசதி இப்பொழுது இல்லை. கூடுமானவரையில் பள்ளிகள் பரவலான முறையில் அமையவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இப்பொழுது பள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எல்லாப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்வதென்றால், அந்த அளவுக்குப் பொருளாதார வசதி ஏற்படுகிற காலத்தில் வேண்டுமானால் இதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** குழந்தைகளைப் படிக்க வைத்து நல்ல பிரஜைகளாக ஆக்கவேண்டியது சர்க்காரின் கடமை. அந்தக் கடமையைச் சர்க்கார் ஒழுங்காகச் செய்யாமல் இருக்கும் பொழுது தனிப்பட்டவர்கள் தங்களுடைய லாபத்தைக் கருதி, விருப்பு, வெறுப்புகளை அனுசரித்து, குழந்தைகள் படிப்பதற்காகப் பள்ளிகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது அரசாங்கமே எல்லாப் பள்ளிகளையும் எடுத்து நடத்துவதற்குப் பொருளாதார நிலைமை வசதியாக இல்லை என்றாலும்கூட, சர்க்காரே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்தவேண்டும் என்ற கருத்தை இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எல்லா வசதிகளும் இருந்து, எல்லாப் பள்ளிகளையும் திறம்பட நடத்துவதற்கு வாய்ப்பும், வசதியும் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், எந்தத் தனியார் எடுத்து நடத்துவதையும்விட, அரசாங்கமே ஏற்று நடத்துவதுதான் நல்லது என்ற கொள்கைதான். இருந்தாலும், அந்தக் கொள்கையை உடனே நடைமுறைப்படுத்த முடியுமா என்பதில் பல ஐயப்பாடுகள் ஏற்படுகின்றன. நாம் ரூபாய் 54 கோடி கல்வித் துறைக்காக செலவழித்தும்கூட, இன்னும் அரசாங்கப் பள்ளிகளிலேயே போதுமான அளவுக்கு வசதிகள் ஏற்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், கல்வியைப் பொறுத்தவரையிலும், யார் உதவி, எந்தப் பக்கத்தில், எந்த வகையில் வந்தாலும், அதற்கு ஆதரவு தரும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது. கனம் உறுப்பினர் கூறுவது போன்று லாப நோக்கத்தோடு யாராவது நடத்திக்கொண்டிருந்தால், அதைத் தடுத்து நிறுத்துவதற்குச் சட்டப்படி இயலுமா என்பதைப் பரிசீலிப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், அதைப்பற்றி முடிவு எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** சில தனியார் பள்ளிகளில் ஆரம்ப முதலே தமிழ் அல்லாத வேறு மொழியில் கற்றுத் தரப்படுகிறது. தமிழே பயிற்சி மொழியாகவேண்டும் என்ற அரசினர்

திட்டத்திற்கேற்ப அவர்களும் தமிழையே பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று சர்க்கார் கேட்டுக்கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெரும்பாலான இடங்களில் பயிற்சி மொழி தமிழ் மொழியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. வேறு மொழி பயிற்சி மொழியாக இருக்கிறது என்றால், அங்கு இருப்பவர்களுடைய தாய் மொழியைப் பொறுத்து அது அமையக் கூடும். ஆகவே, சிறுபான்மையோர் தங்களுடைய மொழியில் கற்றுக்கொள்ளலாம். ஆரம்பத்தில் தமிழ் அல்லது தாய்மொழி என்றுதான் போட்டிருக்கிறோம். அந்த வகையிலேதான் வேறு பயிற்சி மொழியாக இருக்கும். எங்கே எங்கேயாவது வற்புறுத்தப்படுகிறது என்றால், அது பற்றிக் கவனத்திற்கு கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** ஸார், பஞ்சாயத்து யூனியன் ஏரியாவில் இருக்கிற தனியார்கள் பள்ளிகள் ஒழுங்காக நடப்பதில்லை என்று ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்தால், அந்தப் பள்ளிகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தனியார் பள்ளி சரியாக நடக்கவில்லையென்றால், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். நான் முதலிலே சொன்ன மாதிரி மான்யம் நிறுத்தப்படும், அனுமதி நிறுத்தப்படும். இரண்டும் நிறுத்தப்பட்டால், அந்தப் பள்ளியை நடத்துவதற்கு வழி இராது. அந்த நிலையில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அப்படிப்பட்ட பள்ளியை ஏற்று நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

**திரு. மு. ச. சிவசாமி:** ஒழுங்கீனம் என்ற காரணத்தினால் சில தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை அரசினர் திரும்பப் பெற்றதற்குப் பின்பும், மீண்டும் அந்தப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிற நிர்வாகிகள்மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கம் அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்துவதற்கு அனுமதிக்கவில்லை, அதற்கு மான்யம் கிடையாது, அதில் யாரும் பயிற்சி பெற்றாலும்கூட, அதை ஒப்புக்கொள்வதற்கு இல்லை என்று சொன்னபிறகும் கூட, பள்ளி தொடர்ந்து நடைபெறுகிறது என்றால், அங்குள்ள பொது மக்கள், பத்திரிக்கைகள் வாயிலாக, அல்லது கனம் உறுப்பினர் போன்ற தலைவர்கள் மூலம் அதில் மாணவர்கள் சேராமல் இருப்பதற்கு, ஈடுபடாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்தப் பள்ளிக்குச் சர்க்கார் அங்கீகாரம் இல்லை, ஆகவே, அங்கு போய் மாணவர்கள் படிக்காமல் இருக்கும் முறையில் பொது மக்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால், 'சீட்டிங்' என்ற முறையில் ஏதாவது நடந்தால், அது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால்,





அதன்மேல் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். சாதாரணமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால், திண்ணைப் பள்ளிக்கூடங்கள்கூட பல பேர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழி இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** குழந்தைகளுடைய உள்ளத்தில் ஜாதியின் உணர்வை வளர்க்கக்கூடிய முறையில், சில தனியார் பள்ளிகளை ஜாதியின் பெயரால் நடத்துகிறார்கள். அந்தப் பெயரைப் போடக்கூடாது என்று உத்தரவிட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஜாதியின் உணர்வை ஊட்டக்கூடாது என்ற முறை தற்பொழுது இருக்கிறது. அப்படி ஊட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுமேயானால் அது தடுத்து நிறுத்தப்படும்.

**திரு. எம். எஸ். மணி:** தனியார் நடத்த இயலாத பள்ளிகளை நகராட்சி மன்றமும் எடுத்து நடத்துவதற்கு முன் வரவில்லை என்றால், அப்படிப்பட்ட நேரத்தில் அரசாங்கத்தின் கொள்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம் ஏற்று நடத்த இயலுமா என்று பார்த்து, வாய்ப்பும், வசதியும் ஏற்படுமேயானால், அரசாங்கம் நடத்த முன்வரும்.

**திருமதி. கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளியில் சில ஒழுங்கீனம் நடந்ததன் காரணமாக, அதன் அங்கீகாரத்தை ரத்து செய்தபிறகு, யூனியன் அதை எடுத்துக் கொள்ளக்கூடிய காலத்தில், பள்ளியையும் மட்டும் எடுத்துக் கொண்டு, ஆசிரியர்களை எடுக்காமல் விடப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமை வரும்பொழுது, ஆசிரியர்களையும் சேர்த்து எடுத்துக்கொள்வதுதான் சரி என்று அரசாங்கம் கருதினால், அப்படி எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கூடுமானவரையில் அந்தத் தவறு ஆசிரியர்கள் மீதோ அல்லது மாணவர்கள் மீதோ அமைவதில்லை, அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகிகள் மீது தான் அமைவதால், நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது, கூடுமானவரையில் ஆசிரியர்களையும் சேர்த்து எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் சில பள்ளிகளை எடுத்துக்கொண்டபொழுது, அவற்றிலுள்ள ஆசிரியர்களையும், அவர்கள் வேலைக் காலம் அத்தனையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தனிப்பட்டு, எங்கேயாவது ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலைமை இருக்குமேயானால், கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் நடத்தும் பள்ளிகளில் கல்வியின் தரம் சிறப்பாக இருக்கிறதா? தனியார் நடத்தும் பள்ளிகளில் கல்வியின் தரம் சிறப்பாக இருக்கிறதா? இதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கல்வியின் தரம் எந்தப் பள்ளியாக இருந்தாலும், அதனுடைய தலைமை ஆசிரியரையும், நிர்வாகத்தினருடைய தன்மையையும் பொறுத்திருக்கிறதே தவிர, தனியார் அல்லது அரசாங்கம் என்கின்ற அடிப்படையில் அது அமையவில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** தனியார் நடத்தும் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் ஒழுங்கான சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. சர்க்காரே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் சொன்னபடி பெரும்பாலான பள்ளிகளில் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. சிலபல இடங்களில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறது. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அரசாங்கமே ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் கொடுப்பதற்குப் பொறுப்பை சிலபல பள்ளிகளில் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. க. மு. ராசகோபால் :** தனியார் நடத்துகிற பள்ளிகளில் நிர்வாகிகளே ஆசிரியர்களாகவும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஆசிரியர்களாகவும் பணிபுரிவதால், சில குறைபாடுகள் இருக்கின்றன. அது தவிர்க்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட குறைபாடுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### சரஸ்வதி துவக்கப்பள்ளி, பூம்புகார்

*** 18 வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சீர்காழி வட்டம் 'பூம்புகார்' என்ற ஊரிலிருக்கும் சரஸ்வதி துவக்கப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களுக்குப் பல மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.



(இ) ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. எஸ். கணேசன்:** அப்படிச் சம்பளம் கொடுக்கப்படாத நிலைமை எப்பொழுது ஏற்பட்டது, எவ்வளவு மாதச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தது, புகார் வந்தது எப்பொழுது, நடவடிக்கை எடுத்தது எப்போது என்று கூற இயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பூம்புகாரிலுள்ள சரஸ்வதி துவக்கப் பள்ளியில் பணி புரிகிற ஆசிரியர்களுக்குச் சென்ற ஓராண்டுக் காலமாகச் சம்பளம் சரிவரத் தரப்படவில்லை என்ற புகார் இருந்தது. அதற்குக் காரணம் அந்தப் பள்ளிச் செயலாளர், கரெஸ்பான்டெண்டு, யார் என்பதில் வழக்கு ஏற்பட்டு கீழ் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. 19—9—1966-ல் கீழ் மன்றம் தீர்ப்பு அளித்தது. அதன் பேரில் மேல் மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள். 1967-லிருந்து, ஜனவரியிலிருந்து தொடர்ந்து சம்பளம் கொடுக்காத சூழ்நிலை இருந்தது. அவர்களுடைய நிலைமை எப்படியானாலும், பள்ளியை அரசாங்கம் அங்கீகரித்து, டி.ஈ.ஓ. மூலமாக, தலைமை ஆசிரியர் வாயிலாக. ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இப்பொழுது அவர்களுக்குச் சம்பளம் தரப்பட்டு வருகிறது.

(Dr. H. V. HANDE rose.)

Mr. SPEAKER : This question is about a particular school in Poompuhar and not about Poompuhar.

Dr. H. V. HANDE : Sir, this non-payment of the salary has been a chronic disease even during the Congress regime . . .

Thiru K. VINAYAKAM : We are against this kind of allegation. The hon. Member cannot say that it has been there even during the Congress regime. How does he know about it ? Is he going to substantiate his argument ?

Dr. H. V. HANDE : Sir, I asked a number of questions in the Upper House and I can substantiate it.

Mr. SPEAKER : I think Dr. Hande is capable of substantiating it and I do not deny it. But this is not the time. This is question hour. Therefore, that part of his question is disallowed. Let the hon. Member please put a question.

Dr. H. V. HANDE : Sir, this non-payment of salary has been a chronic disease for a number of years. I want to know from the Government, what is the definite and permanent remedy that they are going to institute with regard to the payment of the salary of these poor teachers—they get a very paltry sum and even that is not paid regularly—and whether they are going to see that in future teachers are paid on the first of every month ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றுதான் எல்லாப் பள்ளிகளுக்கும் உத்தரவு இடப்பட்டிருக்கிறது. துவக்கப் பள்ளி

கள் 36,000-மும், உயர்நிலைப் பள்ளிகள் 2,600-ம் இருக்கின்றன; அத்தனைப் பள்ளிகளிலும் தகராறு இல்லை. குறிப்பிட்ட இடங்களில் 'கரஸ்பான்டென்டு' களுக்குள் தகராறு காரணமாகச் சம்பளப் பட்டுவாடா செய்வதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. ஒழுங்கினம் நடக்கிறது என்று தெரிந்தால் அரசாங்கமே, நேரிடையாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் போய்ச் சேரும் அளவிற்கு, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து இப்பொழுது அதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : சபாநாயகர் அவர்களே, தனியார் துறைப் பள்ளிகள் ஒருபுறம் இருக்க, பஞ்சாயத்துப் பள்ளிகளில் மாதாமாதம் சம்பளப் பட்டுவாடா நடக்காமல் இருக்கிறது. மண்டபம் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களிடமிருந்து அப்படிப்பட்ட புகார் ஏதாவது வந்திருக்கிறதா? அந்தப் புகார்கள் தவிர்க்கப்பட, ஒரு தனி உத்தரவு போட்டு, கட்டாயமாக அந்த ஆசிரியர்களுக்கு மாதத்தின் முதல் வாரத்தில் சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: மண்டபம் புகார் பற்றி விவரக் குறிப்பு எதுவும் இல்லை. அதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கலாம். முதல் தேதியே பட்டுவாடா செய்யப்படவேண்டும் என்றுதான் ஆங்காங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு இடத்தில் குளறுபடியோ, இடையூறோ ஏற்பட்டால், அது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. கே. பி. எஸ். மணி, பூம்புகாரில் உள்ள சரஸ்வதி பள்ளிக்கூடம்பற்றி துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி**: சார், ஆரம்பப் பள்ளிகளிலும், யூனியன் பள்ளிகளிலும் மாதா மாதம் முதல் தேதி சம்பளம் கொடுக்கவில்லை என்கிற புகார் ஆதாரமற்றது என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, யூனியன் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும், பில்களைக் கொடுப்பதில் தலைமை ஆசிரியர்கள் காலதாமதம் செய்வதன் காரணமாகத்தான் தடங்கல்கள் ஏற்படுகிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதற்கு விடை இல்லை.

**திரு. கே. விநாயகம்** : சார், இந்தக் குறிப்பிட்ட பூம்புகார் பள்ளியில் ஆசிரியர்களுக்குச் ச்ம்பளம் சரிவர அளிக்காததற்கு, கரஸ்பான்டெண்டுகளுக்குள் யார் பெரியவர், அண்ணன், தம்பி என்கிற தகராறு காரணமாக ஏற்பட்டது என்று அமைச்சர் சொல்கிறார்கள். மாதம் தோறும் டீச்சிங் கிராண்ட் பில் என்று சொல்லி தயார் செய்து டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் அவர்கள் மூலம் டி.ஈ.ஓ-க்கு அனுப்புவது வழக்கமாயிற்றே ? அப்பொழுது தகராறு இருக்கிறது என்றால், சம்பளத்தை நேரிடையாகவே





பட்டுவாடா செய்யாமல், மானேஜ்மெண்டுக்கே எவ்வளவு பணம் அனுப்பப்பட்டிருக்கிறது? ஆசிரியர்களுக்கே அன்றே கொடுக்க ஏன் முயற்சி எடுக்க முடியாதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: அதுபற்றி முழுக் குறிப்பு விவரங்கள் இல்லை. ஆனால், கரஸ்பாண்டெண்டுகளுக்குள்ளே ஏற்பட்ட தகராறு காரணமாக கிராண்ட் நிறுத்தி வைக்கப்பட்டது. வழக்கு விரைவில் முடியும் என்று எதிர்பார்த்து, வழக்கு மேலே போய்விட்ட காரணத்தால், முடிவைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை, உடனடியாகச் சம்பளப் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியை ஒட்டிய துணைக் கேள்வியைக் கேட்பார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : 100-க்கு 90 சதவிகிதம் பாடசாலைகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடிய நேரத்தில் 5, 10 சம்பளத்தில் பிடித்துக்கொண்டு கொடுக்கிறார்கள் என்கிற விஷயம் அமைச்சருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம் அல்லவா? ஆகவே, அப்படியிருக்க, இன்றைக்கு அந்த ஆசிரியர்களைப் போடுவதில்கூட 100, 200 என்று வாங்கிக்கொண்டு தான் போடுகிறார்கள். தேவைப்பட்டால், அப்படிப்பட்டவர்களை டிஸ்மிஸ்கூட செய்துவிடுகிறார்கள் என்று இருப்பதால், அவர்களை நியமிப்பதில்கூட சர்க்காரே தன் பொறுப்பில் நியமிக்கும் அளவில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : உறுப்பினர் குறிப்பிடும் முறையில் 90 சதவிகிதம் பள்ளிகளில் நடைபெறுகிறது என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஒரு சில இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன என்பதுபற்றி விண்ணப்பங்கள் செய்தால், அதன்மீது விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம். ஆசிரியர்கள் நியமனம் பொறுத்தவரையில், அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், அவர்களுடைய தகுதி மற்றவற்றைக் கண்காணிக்கிறது என்பதைத் தவிர, நியமிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியப்புக்கும், தனியார் நிர்வாகத்திற்கும்தான் இருக்கிறது.

## வால்பாறையில் காகிதத் தொழிற்சாலை

* 19 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வால்பாறை மலைக்காடுகளில் பெருமளவில் உற்பத்தியாகும் மூங்கிலைப் பயன்படுத்தும்வகையில் அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இல்லை.

[1968 பிப்ரவரி 16

**திரு. இ. ராமசாமி**: தலைவர் அவர்களே, வால்பாறை மலைக்காடுகளில் உள்ள மூங்கில்கள் ஈரோட்டிற்கு அருகில் இருக்கும் காகிதத் தொழிற்சாலைக்குப் போகின்றன. அதற்குப் பதிலாக, பொள்ளாச்சியில் ஒரு காகித ஆலையை ஏற்படுத்தினால், மூங்கில்களைக் குறைந்த செலவில் அந்த ஆலைக்கு அனுப்பலாம், அத்தோடு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவிற்குச் சரிக்கட்ட முடியும். ஆகவே, அதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன் வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, ஈரோட்டிற்கு, காவிரி அருகிலே இருக்கிற காகிதத் தொழிற்சாலைக்கு, போதுமான அளவிற்கு மூங்கில் கிடைக்கவில்லை. 50,000 டன் அளவிற்கு அதற்கு சப்ளை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் போதவில்லை. அதோடு, மூங்கில், கூடை, முறம் பின்னை, இன்னும், வீட்டு வசதிகளுக்காக வீடு, கட்டடங்கள் கட்ட, போக பாக்கியிருக்கும் மூங்கில்தான் நாம் கொடுக்க முடிகிறது. இன்னொரு காகித ஆலையை வைக்கப்போய், அந்த மூங்கில்களைப் பயன்படுத்தினால் காவிரிக் கரையிலிருக்கும் ஆலைக்கு மூங்கில் அனுப்பாமல் அந்த ஆலையை மூடி, அந்தத் தொழிலாளர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நிலை வரும், இப்பொழுதே அந்த ஆலைக்குப் போதுமான மூங்கில் கிடைக்கவில்லை; அதற்கு வேண்டியதைக் கொடுக்க முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. அப்படியிருக்கும் நிலையில் வேறொரு ஆலையை அங்கே கிடைக்கும் மூங்கிலை நம்பி ஆரம்பிக்க முடியவில்லை.

**திரு. பி. வேலுசாமி**: ஐயா, இந்த மூங்கில் காடுகளை அதிகமாக வன இலாகா அழிப்பதன் மூலமாக, தமிழ் நாட்டில் மழை தடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, இந்த மூங்கில் காடுகளால் மழை பெறுகிறோம் என்று சொல்ல முடியாது. வேறு பல அடர்ந்த காடுகள் இருப்பதால், மேகங்கள் கூடி மழை பொழிகிறது. அவை அழிக்கப்பட்டால் அதனால் இடையூறு ஏற்படாது என்கிற கருத்து இருக்கிறது. ஆனால், மூங்கில் காடுகள் அழிக்கப்பட்டால், வேறு வகையில் நாட்டிற்கு வருமானம் ஏற்படுகிறது. அதை அப்படி எடுத்து உபயோகப் படுத்தாவிட்டாலும், மூங்கில் காய்ந்து போகும். எப்படியும் அதை எடுக்கத்தான் வேண்டும். அதை எடுத்து காகிதத் தொழிற்சாலைக்குப் பயன்படும் அளவில் அது செய்யப்படுகிறது.

முற் பகல் 9-30

**திரு. சி. கோவிந்தராசன்**: காவிரிக் கரையிலிருக்கும் காகிதத் தொழிற்சாலை சேஷசாயி நிறுவனத்தினிடம் இருக்கிறது. அவர்களுக்கு அதில் நஷ்டம் வருகிறது என்றும், அவர்களால் அதை நடத்த இயலாது என்றும், அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்றும் ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறார்களா? அரசாங்கத்தின் மூலதனம் அதில் 51 சதவீதம் இருப்பதால் அதை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா?



1968 பிப்ரவரி 16]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்ற கோரிக்கை ஏதும் வரவில்லை. ஆனால் அதை அரசாங்கமே ஏற்று நடத்துவதா என்பதைப்பற்றி முடிவு செய்யப்படவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. இல. பலராமன்**: காகித ஆலைகளுக்கு வழங்கப்படும் மூங்கில் காட்டுக் குத்தகைதாரர்களிடமிருந்து வாங்கப்படுகிறது. இதற்குப் போதிய விலை இல்லை என்று காட்டிலாக்கா அதிகாரிகள் மூலமாகவும், காட்டுக் குத்தகைதாரர்களிடமிருந்தும் கோரிக்கை வந்து, மேலும் விலையைக் கூட்டித்தர இப்பொழுது அரசாங்கம் பரிசீலித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: அந்த ஆலைச் சொந்தக்காரர்களுக்கும் காட்டிலாக்காவிற்கும் இடையே, எந்த அடிப்படையில் சப்ளைசெய்வது என்பதுபற்றி, ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி இப்பொழுது சப்ளை ஆகிறது. என்ன விலையில், எந்த அடிப்படையில் என்ற குறிப்பு இல்லை.

**திரு. ந. தர்மலிங்கம்**: ஒரு பகுதியில் மூங்கில்மட்டும் அதிகமாக உற்பத்தி ஆகியிருந்தால், அங்கே காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ? வேறு ஏதேனும் துணைப் பொருள்களும் தேவைப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: மூங்கிலிலிருந்தும், வேறு பல கட்டைகளிலிருந்தும், ஈத்த நார் போன்றவற்றிலிருந்தும் காகிதம் செய்யலாம் என்ற நிலைமை இருக்கிறது. மூங்கில் அதிகமாக இருக்கும் இடத்தில் மூங்கில்களைப் பயன்படுத்தலாம். தொழிற்சாலைக்குப் போதுமான அளவு தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும். ஆண்டு முழுவதும் திட்டம் போடும் அளவிற்கு மூங்கிலும் கிடைக்கவேண்டும். இரண்டும் முக்கியமாகக் கிடைக்குமானால் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்**: நீலகிரி மாவட்டத்தில் கடலூர் பகுதியிலும், இன்னும் மற்றப் பகுதிகளிலும் ஏராளமான மூங்கில் விளையும் காரணத்தால் அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: அரசின் சார்பாகக் காகிதத் தொழிற்சாலை வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று இந்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குச் சொல்லியிருக்கிறது. தனியார் இத்தகைய தொழிற்சாலைகளை வைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கலாம் என்ற அளவுக்குத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பத்துப் பன்னிரண்டு பேர்கள் அதற்காக விண்ணப்பம் செய்து, லைசன்ஸ் வாங்கியும் கூட, நடத்தாமல் விட்டுப்போன நிலையும் இருக்கிறது. பாபநாசத்திற்கு அருகே கூட, ஒரு தொழிற்சாலை வைக்க முயற்சி எடுத்து, ஒரு

[1968 பிப்ரவரி 16

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னேன். 15—2—1968 வரையில் மாநிலம் முழுவதும் 141 வழித்தடங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே 288 வண்டிகள் இப்பொழுது அரசுடைமையாக்கப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி:** என்னுடைய தொகுதியிலிருந்து சென்னைக்கு வருவதாக இருந்தால், மூன்று பஸ்கள் மாறி வர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றி, மேல்மலையனூர், அவலூர்ப்பேட்டை, வளத்தி வழியாகச் சென்னை வந்துசேர ஒரு பஸ் விட அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக எழுதியனுப்பினால் அது கவனிக்கப்படலாமா என்பதுபற்றி யோசிக்கப்படும். (சிரிப்பு)

**திரு. இல. பலராமன்:** தற்போது அரசாங்க பஸ்களில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்பது என்ன காரணத்தைக் கொண்டு என்று அறிய விரும்புகிறேன். ஆரணியிலிருந்து வேலூர், வேலூரிலிருந்து சென்னை ஆகிய இந்த இரண்டு வழித்தடங்களில் ஓடும் பஸ்களிலெல்லாம் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தனி பஸ் அதிபர்கள் ஒரு கோரிக்கை அளித்து, மாநாட்டின் மூலமாகவும் தெரிவித்தபடி, "நாங்கள் மூன்று பைசா என்று கட்டணம் வசூலிக்கிறோம்; அரசினர் இரண்டு பைசா என்று கட்டணம் வசூலிப்பதால் எங்களுக்கு ஏராளமான நஷ்டம் வருகிறது; ஆகவே, அதை மூன்று பைசாவாக ஆக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இணங்க, "நீங்கள் மூன்று பைசாவிலிருந்து இரண்டரை பைசாவுக்கு வாருங்கள்; நாங்கள் இரண்டு பைசாவிலிருந்து இரண்டரை பைசாவிற்கு வருகிறோம்" என்று சமரச நிலை உருவாகி, அந்த சமரச நிலை ஏற்பாட்டுக்கிணங்க, இரண்டு பைசா என்றிருந்தது இப்பொழுது இரண்டரை பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, ஒரே தடத்தில் ஓடுகிற அரசாங்க பஸ்களில் ஓரிடத்திற்கு ஒரு பஸ்ஸில் 30 பைசா கட்டணமும், அதே இடத்திற்கு மற்றொரு பஸ்ஸில் 40 பைசா கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இது போன்ற கட்டணத் தகராறுகள் திண்டிவனத்திலிருந்து, காஞ்சீவரம், வேலூர் வரை செல்லும் பஸ்களில் ஏற்படுகிறது. இதுபோன்ற தகராறுகளினால் கண்டக்டர்களுக்கும் பயணிகளுக்கும் இடையே தகராறு ஏற்படுகிறது. ஆகவே, அதைப் போக்கி, ஒரே முகமான கட்டணத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைத்தான் இப்பொழுது குறிப்பிட்டேன். இரண்டு பைசா சில இடங்களில் இருந்தது இன்னும் அகற்றப்படாமல் இருக்கிறது. அது இரண்டரை பைசாவாக ஆக்கப்படும்போது ஒரே சீரான கட்டணமாகிவிடும்.



1968 பிப்ரவரி 16]

**திரு. கே. விநாயகம்:** தனிப்பட்டவர்கள் ஏற்கனவே நடத்தி வந்த பஸ் ரூட்களில் அரசாங்கமும் பஸ்களை விடுவது என்ற அமைப்பு வந்தபோது, தனிப்பட்டவர்கள் அதிகமாகக் கட்டணம் வைத்திருக்கிறார்கள் என்று காரணம் சொல்லப்பட்டது. அவர்களுக்குத் தொல்லை தர அரசாங்கம் தங்களுடைய பஸ்களில் கட்டணத்தைக் குறைத்திருந்து, தனிப்பட்டவர்களுடைய பர்மிட் எல்லாம் காலாவதியாகி, அவர்கள் வெளியே சென்ற பிறகு, அந்த ரூட்களில், ஏற்கனவே குறைவாக இருந்த அரசாங்கக் கட்டணத்தை இப்பொழுது அதிகப்படுத்தியிருக்கிறதாக ஒரு புகார் வருகிறதே, அது அமைச்சருக்குத் தெரியுமா? அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரு ரூட்டை எடுத்துக் கொள்ளுவது என்றால், முழுவதும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அந்த ரூட்டில் இரண்டு மூன்று பஸ் முதலாளிகள் பஸ்கள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதிலே ஒரு ரூட்டை எடுத்துக் கொண்ட பிறகு அந்த பஸ் முதலாளி ஓட்டிக்கொண்டிருக்கும் பஸ்களைத்தான் எடுத்துவிடுவதே தவிர, வேறு முதலாளிகளினுடைய பஸ்கள் ஓடிக்கொண்டு இருக்கும். அப்பொழுது ஒன்றுக்கொன்று வேறுபாடான கட்டணம் வேண்டாம் என்பதற்காக அந்த உடன்பாட்டுக்கு அரசு ஒத்துக்கொண்டது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** அரசாங்கப் பேருந்துகளிலும் தனியார்ப் பேருந்துகளிலும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக 'ஓவர்லோடு' ஏற்றிச் செல்வதாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால், ஓவர்லோடு ஏற்படுவதைத் தடுக்க ஏதாவது முயற்சி எடுக்க அரசாங்கம் உத்தேசித்து உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உறுப்பினருக்கு அப்படி ஏதாவது புகார் வந்துள்ளதா? வந்திருந்தால், அதை அரசாங்கத்திற்கு அனுப்பினால் கவனிக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வரும் பஸ்கள் பல ரூட்களில் வருகின்றன. ஆனால், ஒரே அளவு கட்டணம் இல்லாமல், ஒரு ரூட்டில் ரூ. 1.42 என்றும் இன்னொரு ரூட்டில் இரண்டு ரூபாய் என்றும் பலவிதமாக இருக்கிறது. இப்படிப் பல இடங்களில் இருக்கிறது. இதையெல்லாம் ஒருமுகப்படுத்தி, நிர்ணயமான ரேட்களை விதிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதற்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன்.

**திரு. வி. டி. அண்ணாமலை:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளைத் தொடுகின்ற மாதிரி தமிழக அரசின் போக்குவரத்து அமைந்திருக்கிறதா? அப்படி எந்தப் பகுதிகளிலாவது பஸ் போக்குவரத்து இல்லாமலிருந்தால், அந்தப் பகுதிகளையும் இணைக்க அரசாங்கம் முன்வருமா?

நாளைக்கு 35 டன் உற்பத்தி செய்வது என்று திட்டமிட்டு, ஆரம்பித்து, 'டீ-வால்யுவேஷன்' காரணமாக, ரூபாய் மதிப்புக் குறைந்ததன் காரணமாக, அந்த அளவுக்கு ஆரம்பிக்க முடியாது என்ற நிலையில், நாளொன்றுக்குப் பத்து டன் அளவில் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் சார்பாகக் காகிதத் தொழிற்சாலை வைக்க உத்தேசம் இல்லை.

*திரு. ஆர். கருப்பையா:* மூங்கிலிலிருந்து காகிதம் செய்வதைப் போலவே, கரும்புச் சருகு சக்கையிலிருந்தும் காகிதம் செய்யலாம் என்ற கருத்து இருந்து வருகிறது. அப்படியானால், கரும்பு அதிகமாகப் பயிராகும் லால்குடி பகுதியில் இதுபோன்ற தொழிற்சாலையை அரசாங்கம் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கரும்புச் சக்கையிலிருந்தும் காகிதம் செய்யலாம். ஆனால், காகிதத் தொழிற்சாலைக்குப் பல ஆயிரக்கணக்கான டன் சக்கைகள் ஆண்டொன்றுக்கு வேண்டியிருக்கும். அந்த அளவுக்கு ஆண்டுதோறும் கரும்புச் சக்கைகள் சப்ளை செய்ய முடியுமா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அந்தச் சக்கைகளைக் கொண்டு வேறு பல பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. ஈ. எம். நடராசன் :** கோவை மாவட்டத்தில் அந்தியூர் மலைப் பகுதியில் ஏராளமாக மூங்கில் விளைகிறது. அந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. ஆகவே, அந்தியூர்ப் பகுதியில் விளையும் மூங்கிலைக் கொண்டு அங்கே ஏதாவது தொழிற்சாலையை அமைக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூங்கில் தோப்புகள் ஆங்காங்கு இருக்கின்றன என்று கண்டவுடனே அங்கே காகிதத் தொழிற்சாலை வைக்கலாம் என்ற முடிவிற்கு வருவதற்கில்லை. காகிதத் தொழிற்சாலை வைக்கவேண்டுமானால், அதற்குத் தொடர்ந்தாற்போல் மூங்கில்கள் சப்ளை ஆகிக்கொண்டே இருக்கவேண்டும். மூங்கில்களைக்கொண்டு ஒரு காகித தொழிற்சாலை துவக்கவேண்டுமென்றால், அங்குள்ள மூங்கில்கள் வேறு அவசியமான தேவைக்கும் பயன்படுத்தியது போக எஞ்சியிருக்கவேண்டும். வீடு கட்டும் தொழிலுக்கும், வேறு பல வகைகளுக்கும் இன்றியமையாத முறையில் மூங்கில் தேவைப்படுகிறது. அதற்காக ஆங்காங்கு இருக்கும் மூங்கில்கள் வெட்டப்பட வேண்டிய நிலைமையும் இருக்கிறது. காகிதத் தொழிற்சாலை அமைப்பதென்றால், அதற்குக் கடைசி வரை தொடர்ந்தாற்போல் மூங்கில் கிடைத்துக்கொண்டே இருக்க வேண்டும். போட்ட திட்டத்தை கடைசி வரையில் நிறைவேற்றும் அளவுக்குத் தொடர்ந்து மூங்கில் தங்கு தடையில்லாமல் கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும். அந்தக் கூறுபாடுகளையெல்லாம் ஆலோசித்துத்தான் காகிதத் தொழிற்சாலை வைக்க





முயற்சி செய்யப்படுகிறது. இதையெல்லாம் ஆலோசித்து வைத்தும், காவிரிக் கரையில் இருக்கும் தொழிற்சாலை பல வகைகளில் கஷ்டப்படும் நிலைமையை நாம் பார்க்கிறோம்.

## செஞ்சி-சென்னை அரசுப் போக்குவரத்து பஸ்

* 50 வினா—**திரு. செஞ்சி முனுசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகட்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சிக்கும் சென்னைக்குமிடையே, அரசினர் நடத்துகின்ற பேருந்து (சாதாரண) வண்டிகள் விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இந்த வழித்தடத்தில் பேருந்துப் போக்குவரத்து நடத்தும் தனியார் பேருந்து உரிமையாளருக்கு அளிக்கப்பட்ட அனுமதிச் சீட்டின் செல்திறன் 21—2—1968-ல் முடிவடைகிறது. அத்தேதி முதற்கொண்டு மேற்படி பேருந்து வழித்தடத்தினை அரசு மேற்கொள்ளக் கருதுகிறது.

**திரு. செஞ்சி முனுசாமி :** இப்பொழுது அரசாங்கம் எடுக்க இருக்கிற தடங்கள் துரித வண்டித் தடங்களாக இருக்கின்றன. அவைகள் சாதாரண வண்டிகளாக மாற்றப்படுவது பற்றி கெஜட்டில் நோட்டிபிகேஷன் வந்திருக்கிறது. துரித வண்டிகளை மாற்றி சாதாரண வண்டிகள் விட ஏன் அரசு முயற்சி செய்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாம் விரைவு வண்டி விட்டால் அதில் 35 இடங்கள்தான் இருக்கும். அது மாத்திரமல்ல, கட்டணமும் அதிகமாக இருக்கும். சாதாரண வண்டிகள் விடக்கூடிய காரணத்தால், ஏற்கனவே சென்ற கால அளவைவிட அவ்வளவாக அதிகமாகிவிடாது.

*(திரு. கே. எஸ். கோதண்டராமையா அவர்கள் எழுந்தார்.)*

MR. SPEAKER : The hon. Member will put a supplementary question relating to the bus service between Gingee and Madras.

THIRU K. S. KOTHANDARAMIAH : In view of the ever increasing huge traffic between Bangalore and Madras *via* Krishnagiri and Hosur, will the Hon. Minister be pleased to introduce some more buses on that route ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. எஸ். முருகையன் :** நேற்று வரையில் எத்தனை பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்பட்டிருக்கின்றன ? அரசுடைமையாக்கப்பட்டதிலே எத்தனை பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன ? இன்னும் எத்தனை பஸ்கள் விடாமல் இருந்துகொண்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எந்தத் தொகுதி தொடாத் தொகுதி என்பதை உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அதைப் பற்றிப் பரிசீலிக்க வசதியாயிருக்கும்.

**திரு. ந. வீராசாமி** : தலைவர் அவர்களே, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 2½ பைசா என்று தனியார் பஸ் உரிமையாளர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டதற்குப் பின்னால் தனியார் பஸ்களில் சிலவற்றில் குறைவாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால் அதே தூரத்திற்கு அரசாங்க பஸ்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : குறிப்பிட்ட ஒரு நிலையைச் சுட்டிக்காட்டினால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that the traffic from Tiruvannamalai to Madras is much more than the traffic from Gingee to Madras, will this Government come forward to nationalise this route up to Tiruvannamalai as this route will not work at a loss but will be a profitable proposition?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்கின்ற எல்லா வண்டிகளும் செஞ்சி வழியாகத்தான் செல்கின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, கிலோவுக்கு 2½ பைசா என்ற ஒப்பந்தம் நீண்ட தூரம் ஓடும் பஸ்களுக்கா? அல்லது குறுகிய தூரம் ஓடும் பஸ்களுக்கா? அல்லது இரண்டுக்குமா ? அல்லது நீண்ட தூரம் ஓடும் பஸ்களுக்கு மட்டுமா? குறுகிய தூரத்தில் ஓடுகின்ற தனியார் பஸ்களில் அதிக கட்டணம் குறைக்கப்படாமல் அப்படியே இருந்து வருகிறது ஆனால் அதேசமயத்தில் சர்க்கார் துறை பஸ்களில் குறைக்கப்பட்டிருக்கிறதல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, விரைவு வண்டிகளில் ஏற்கனவே இருந்த கட்டணத்தில் மாறுதல் இல்லை. தனியார் துறையில் இருப்பவர்கள் வேண்டுமென்றே கட்டணத்தை குறைக்காமல் இருந்தால், நம்முடைய பஸ்கள் குறைந்த கட்டணத்திலேயே லாபகரமாக ஓடும். மக்கள் தனியார் துறையை விட்டு அரசாங்க பஸ்களில் அதிகமாகப் பிரயாணம் செய்வதால், அரசாங்க பஸ்களை லாபகரமாக நடத்த முடியும். ஆகவே, தனியார் துறையினர் கட்டணங்களைக் குறைப்பது பற்றி அவர்களே ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு** : தலைவர் அவர்களே, 75 மைல் பாதையை நாம் எடுத்துக்கொள்ளும்போது, அந்தத் தூரத்தை இரண்டாகப் பிரித்து ஏற்கனவே பஸ்களை ஓட்டியிருந்தவர்களுக்கு, பர்மிட் வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த அமைப்பினால் சர்க்காரின் வருவாய் குறையும் அல்லவா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அப்படி ஏதாவது பர்மிட் கொடுக்கப்பட்டிருந்தால், அது, ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஆல்ட்டர்நெடிவ் ரூட் நிலைக்கேற்ப கொடுக்கப்பட்டிருக்கலாம். இம்மாதிரியான நிகழ்ச்சி இன்ன இடத்தில் நடந்தது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எழுதியனுப்பினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி** : தலைவர் அவர்களே, பொள்ளச்சியிலிருந்து கோவைக்குப் போகும் ஏ.பி.டி. பஸ் கட்டணமானது கிணத்துக்கடவுக்கும் கோயம்பத்தூருக்கும், பொள்ளாச்சிக்கும் கிணத்துக்கடவுக்கும் ஓடுகின்ற டவுன் பஸ்ஸுக்கு ஆகும் கட்டணத்தை விட அதிகமாக இருக்கிறது என்பது தெரியுமா? அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அது பற்றி கவனிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து தஞ்சைக்கு நேரடியாக ரயில் மூலமாக அல்லது பஸ் மூலமாக போக்குவரத்து வசதி இல்லாததால், ஈரோட்டிலிருந்து தஞ்சைக்கு நேரடியாக துரித பஸ் வண்டிகளை விட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது பற்றி எழுதியனுப்பினால், துரித பஸ் விடுவதுபற்றி பரிசீலிக்கப்படும்.

### திருத்துறைப்பூண்டி தொகுதியில் வடிகால் வசதி

* 51 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

திருத்துறைப்பூண்டி தொகுதியில் எடையூர், அம்மனூர், அனுமந்தக் கோட்டகம், மூவரசங் கோட்டகம், உதயமார்த்தாண்டபுரம், நாச்சிக்குளம், பல்லியமேடு, ஆகிய கிராமங்களில் வடிகால் வசதியில்லாமல் சுமார் 7,000 ஏக்கர் நஞ்சை நிலம் சாகுபடி காலங்களிலும் அறுவடை நேரங்களிலும் பெரும்பாலான வேளைகளில் தண்ணீரில் மூழ்கிவிடுவதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இடையூர், அம்மனூர் முதலிய கிராமங்களில், தாழ்ந்த பகுதியிலுள்ள நிலங்கள், மாரிக்காலங்களில் நீரில் மூழ்கிவிடும் நிலையில் இருந்து வருகின்றன. இதற்கான வடிகால் வசதி அமைப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. ஆய்வு வேலை முடிவுற்றபின் செயல்படுத்துவதற்கேற்ற திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

**திரு. ந. தர்மலிங்கம்** : தலைவர் அவர்களே, கடந்த இருபதாண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்கள் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் வாயிலாகவும், அமைச்சர் அவர்களை நேரில் அழைத்து

வந்து காட்டியும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஒரு அதிகாரியை நியமித்து தக்க நிவாரண வேலையைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்காக 'ஸ்பெஷல் டிரைனேஜ் ஸ்கீம், தஞ்சாவூர்' என்ற ஒரு ஸ்கீம் அமைக்கப்பட்டிருக்கிறது. 64 வடிகால் திட்ட வசதிகளை ஆய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்று 1—9—1967-ல் அந்த அமைப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆய்வு வேலை முடிந்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு அதற்கான வேலைகள் நடக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே பொதுவாக மழை பெய்தால் நீர் வடிய வடிகால் வசதியில்லை. சென்ற காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. ராமய்யா அவர்களை நேரில் அழைத்து வந்து காட்டியதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். முன்பிருந்த அரசாங்கம் இதுபற்றி ஏதாவது பரிசீலனை செய்ததா? அல்லது இப்போதுதுள்ள அரசு வந்தபிறகுதான் இதுபற்றி பரிசீலனை நடந்ததா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஸ்பெஷல் டிரைனேஜ் ஸ்கீம், தஞ்சாவூர், என்ற பெயரில் ஒரு ஸ்கீம் அமைக்கப்பட்டது. சென்ற அரசு இருந்தபோதே இதுபற்றி பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டன. 1—9—1967-ல் வடிகால் திட்ட வசதிகளைக் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு வேலை 31—8—1968-க்குள் முடிந்துவிடும். அதன்பின்னர் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, அடுத்த சாகுபடி காலத்திற்குள் இந்தத் திட்டத்தை முடித்துவிடுவார்களா ? அதற்கான வேலைகளைத் துரிதமாகச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 31—8—1968-க்குள் இந்த ஆய்வுவேலை முடிவுறும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவர் அவர்களே, இந்த டிரைனேஜ் ஸ்கீம் சம்பந்தமாக கடந்தகால அரசு பரிசீலனை செய்து, கைவிடப்பட்டு விட்டதா? கும்பகோணம், மாயவரம் போன்ற இடங்களில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் பேசும்போது அமைச்சர் அவர்கள் போதுமான நிதிவசதி இல்லையென்று குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்படி திட்டத்தைத் தீட்டுவதற்கு முன் போதுமான நிதி வசதியிருக்கிறதா? என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படியிருந்தால் எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வடிகால் வசதி திட்டங்கள் கைவிடப்பட்டதாக எப்போதும் அறிவிக்கப்படவில்லை. ஆங்காங்கு நடக்கும் மெயின்டனன்ஸ் செலவுகளிலேயே இதை முடித்துவிடலாம். இந்த 64 வடிகால் திட்டங்களைப்பற்றி ஆய்வுக்குழு என்ன திட்டம் சமர்ப்பிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த வினா 52. திரு. என் காசிராமன் அவர்களுடைய வினாவை, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேட்பார்கள்.

*Damages due to fire in Vedaranyam taluk*

* 52 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that quite a number of houses have been affected by fire in Vedaranyam taluk;

(b) if so, the reasons therefor;

(c) the extent of damages caused; and

(d) whether the Government have any immediate proposals to construct fire-proof houses for those who have been affected by the said fire?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம். வேதாரணியத்தில் 8—8—1967 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் ஓடுவேய்ந்த 14 வீடுகளும், 106 கூரை வீடுகளும் அழிந்து விட்டன.

(இ) அடுப்பிலிருந்து பறந்த தீப்பொறிகளினால் இது எதிர்பாராதவிதமாக ஏற்பட்டது.

(உ) தீயினால் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 5,49,705 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இந்த தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று சொல்ல அமைச்சர் முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 30 ரூபாயும், துணிமணிகளுக்காக 10 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் முதலிலே கொடுக்கப்பட்டு வந்தது. புது அரசு வந்ததற்குப் பிறகு 1—7—1967-லிருந்து, வீடுகள் புதுப்பித்துக்கொள்ள 30 ரூபாய் என்றிருந்ததை 60 ரூபாயாகவும், துணிமணிகளுக்காக 10 ரூபாய் என்றிருந்ததை 20 ரூபாயாகவும் மொத்தம் 80 ரூபாயாக உயர்த்தி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தவகையில் 118 குடும்பங்களுக்காக 9,440 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல்,

[1968 பிப்ரவரி 16

மீனவர் குடியிருப்புப் பகுதிகளில், மீன்பிடிக்கும் வலை, நைலான் வலை போன்றவை மீன்வளத் துறையிலிருந்து கொடுக்கப்பட்டிருகிறது.

**திரு. எஸ். ராமலிங்கம்:** தீப் பிடிக்காத வீடுகளைச் சென்னையில் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல அந்தப் பகுதியிலும் ஏன் கட்டிக்கொடுக்க முன்வரவில்லை என்று கேட்கிறேன்.

(விடை இல்லை.)

**திரு. கே. விநாயகம் :** சென்னையில் மாத்திரம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதே வினாவை . . .

**திரு. கே. விநாயகம்:** இல்லை, நான் மாற்றிக் கேட்கிறேன். (சிரிப்பு) சென்னையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் நிதியைச் சேகரித்து தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நல்லெண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதே, அதுபோல இனியாகிலும் மற்ற பகுதியில் உள்ளவர்களுக்கும் ஏதாவது நிதியைச் சேகரம் செய்து தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நாட்டில் கூரை வீடுகளே இல்லாமல் தீப்பிடிக்காத வீடுகளாகவே ஆக்கவேண்டுமென்பது லட்சியமாக இருக்கலாம். கிராமப்புறங்களில் ஜனத்தொகை குறைவு, தீப்பிடிக்கும் சந்தர்ப்பங்களும் குறைவு. ஆனால் சென்னையில் ஜனநெருக்கமும் அதிகமாக இருக்கிறது, தீ விபத்து என்றால் ஏராளமான [illegible]நமும் ஏற்பட்டுவிடக்கூடும் என்கிற நிலை இருப்பதனால் உடன[illegible]ாகச் செய்யவேண்டியிருக்கிறது. இதனால் மற்ற இடங்களில் இந்த அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என்பதும் சரியாகாது. நிதி நிலைமைக்குத் தக்கபடி, பொது மக்களின் வள்ளல்தன்மையையும் பொறுத்து ஒவ்வொரு இடத்திலும் தீப்பிடிக்காத வீடுகளே கட்டப்படவேண்டும்.

**திரு. இரா. அரங்கண்ணல்:** பொதுவாகவே தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை ஏழை எளியவர்களின் வாழ்விலும் இந்த அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது என்று சொன்னாலும், சென்னை மாநகரில் மட்டும் 650-க்கும் மேற்பட்ட குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன என்ற காரணத்தினால், அதுவும் சென்ற அரசாங்கத்தினால் இந்தக் குடிசைவாழ் பகுதிகள் புனரமைக்கப்படாமல் போய்விட்டன என்ற காரணத்தினால்தான் இங்கு தீப்பிடிக்காத வீடுகளை உடனடியாக கட்டித்தர இந்த அரசாங்கம் முன்வந்தது என்பது உண்மையா? இந்தத் துறையில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம். சென்னை நகரத்தை முன் மாதிரியாக கொண்டுதான் அமைத்துக்காட்டுவதில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறையும், சிரத்தையும் கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 16]

## சிங்கோனா துறை, கோவை

* 53 வினா—**திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசினர் சிங்கோனா துறையில் பணியாற்றிவரும் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் (மேற்பார்வையாளர்) முறையே எத்தனை பேர்?

(இ) மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

| | | நீலகிரியில் அமைந்துள்ள சிங்கோனாத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும். | ஆனைமலையில் அமைந்துள்ள சிங்கோனாத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| (அ) | (1) பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் உள்பட பணியாற்றி வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 795 | 1,110 |
| | (2) அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் உள்பட பணியாற்றி வரும் மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை. | 22 | 41 |
| (இ) | இல்லை. | | |

**திரு. இ. ராமசாமி :** தனியார் நடத்துகின்ற தோட்டத்தையும் அரசு நடத்துகின்ற எஸ்டேட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசு நடத்துகின்ற சிங்கோனா துறையில் அதிகமான அளவு மேற்பார்வையாளர்கள் இருப்பதனால், இதற்குத் தக்க அளவு தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, வேலைப் பளுவைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன் வருமா என்று கேள்வி கேட்கப்பட்டது, இப்போது அதிகமாக எண்ணிக்கை இருப்பதனால் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவார்களா என்று கேட்கிறார். தொழிலாளர்களின் எண்ணிக்கை தேவைப்படுகிறபோது அதிகரிக்கப்படும்.

## மங்கலம் கிராமத்தில் மண் அரிப்பு

* 54 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருப்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட மங்கலம் கிராமத்தை மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன நிலையில் உள்ளது?

[1968 பிப்ரவரி 16

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஒரு முட்டையின் விலை ஒரு ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று செய்தித்தாளில் வந்திருக்கிறது. இப்படி விலை ஏறியிருப்பதற்குக் காரணம் நிர்வாகப் பளுதான் என்று பொது மக்களிடம் அபிப்பிராயம் இருக்கிறது. இதைப் பற்றி ஆராயவும் இந்தக் கமிட்டிக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் 1 ரூபாய் என்று குறைத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேலதிகாரிகள் கலெக்டர் மட்டத்தில் உள்ள ஒரு அதிகாரி ஒரு முட்டையின் விலை இரண்டு ரூபாய் ஆகிறது என்று பத்திரிக்கையிலே வெளியிட்டார். அப்படித் தவறான கருத்தை வெளியிட்டதற்குக் காரணம் அவர் கோழிப் பண்ணையின் கட்டடங்களுக்கு ஆகும் செலவு, அதிகாரிகளுடைய சம்பளம் இவற்றையெல்லாம் ஈடு கட்டி கணக்கு வைத்துக்கொண்டு, இதுவரையில் இடப்பட்ட முட்டைகளையும் கணக்கு வைத்துக்கொண்டு ஒரு முட்டை 2 ரூபாய் என்ற அளவிலே சொல்லியிருக்கிறார்கள். இன்றைய நிலையில் முட்டையின் விலை 2 ரூபாய் அல்ல; 25 பைசாவுக்கு முட்டை கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு வந்து அதை 25 பைசாவுக்கு கொடுத்தால் ரூபாய் 1.75-ஐ நஷ்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிப்புகளின் சார்பில் தனியார் கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்குக் கொடுக்கிற உதவித் தொகை முறையாகப் பயன் படுத்தப்படாமல் கோழிகளே இல்லாத நிலையில் உதவித் தொகைகள் ஊராட்சி ஒன்றிப்புகளிலிருந்து பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா? இது போன்ற நிலையை மாற்றுவதற்கு நம்முடைய அரசிடம் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சில பேர்கள் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிறையப் பணம் உதவியாகப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு கோழிகளையும் வாங்காத நிலையும் இருந்திருக்கிறது. வாங்கிய கோழிகள் எல்லாம் ஒரே நாளில் காலராவால் இறந்துவிட்டதாக தகவலும் கொடுத்து இருக்கிறார்கள். இறந்துவிட்ட காரணத்தினாலே அரசாங்கம் கொடுத்த உதவித் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கடிதங்கள் அடிக்கடி வந்திருக்கின்றன. பர்மாவிலிருந்து வந்த அகதிகளில் சில பேர் குரோம்பேட்டைப் பகுதியிலே கோழிப் பண்ணை வைத்து நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். அந்தச் சாணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, காய்கறித் தோட்டங்கள் போட்டு விளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே அதைப் பயன்படுத்தியும் இருக்கிறார்கள்; ஏமாற்றியும் இருக்கிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையில் நடத்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் "பாரூர் கலாதில்" என்பவருடன் இரண்டு சட்டசபை உறுப்பினர்களைக்கொண்ட கமிட்டி போட்டிருக்கிறது.



1968 பிப்ரவரி 16]

**திரு. என். வரதராஜன்:** தலைவரவர்களே, சில குறிப்பிட்ட உயர்ந்த ஜாதி இனக் கோழிகளை வளர்ப்பதற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் கோழிகள் பஞ்சாயத்து யூனியினில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொன்று கொடுப்பதன் மூலமாக அங்கே இருக்கிற தாழ்ந்த இனக் கோழிகள் இவற்றை அமுக்கி வைத்து விடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியில்லாத முறையில் ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய எல்லாக் கோழிகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு உயர்ந்த ஜாதிக் கோழிகளைச் சர்க்கார் கொடுக்க முயற்சி செய்தால் அபிவிருத்தி செய்யலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த மூவர் கமிட்டியினர் அத்தகைய அரிய கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** யஜா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் தனியார் துறைகளில் நடத்தி வருகின்ற கோழிப் பண்ணைகள் லாபகரமானவை, மிகச் சிறந்த முறையிலே இருப்பவை என்றெல்லாம் பத்திரிகையிலேயிருந்தும், அங்கு சென்று வந்தவர்களின் மூலமாகவும் தெரியவருகிறது. ஆகவே, இங்கேயும் அதுபோன்று தனியார் துறைகளிலே இவற்றை நடத்துவதற்கு அரசினர் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அமெரிக்கா போன அனுபவம் எனக்கு இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற யோசனை தனியார் துறையின் மூலமாக இந்தப் பண்ணைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்பது. சில இடங்களில் இங்கே நஷ்டமாக நடக்கக்கூடிய தனியார்களும் இருக்கிறார்கள். ஒருவர் கோழிப்பண்ணை வைக்குகன் மூலமாக 10 ஆயிரம் ரூபாய்வரை நஷ்டப்பட்டார். அவர் ஜவுளிக்கடை வைத்து இருந்தவர், கோழிப்பண்ணை வைத்து இப்படி நஷ்டமடைந்து விட்டார் என்ற தகவலும் வந்திருக்கிறது. சில பேர்கள் வேடிக்கையாகவும் தகவல் கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி, காட்பாடி போன்ற இடங்களில் உள்ள கோழிப்பண்ணைகள் சிறமையாக நடந்து வருகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளிலே எத்தகைய முறையிலே நடத்தி வருகிறார்கள் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நன்றி. அதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவரவர்களே, இந்தக் கோழி வளர்ப்பு சம்பந்தமாக அமைக்கப்பட்ட மூவர் கமிட்டி தனித் தனியாகச் சென்று விசாரிக்கிறார்களா அல்லது மூவரும் ஒன்றாகச் சென்று விசாரிக்கிறார்களா? அப்படி விசாரிக்கின்றபொழுது இதுவரை எத்தனை தனியார் துறை பண்ணைகளுக்குச் சென்று இருக்கிறார்கள்? எத்தனை அரசாங்கப் பண்ணைகளுக்குச் சென்று இருக்கி

[1968 பிப்ரவரி 16

## வைசூரி தடுப்பு

*57 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா:

(அ) நமது மாநிலத்தில் வைசூரியை தடுப்பதற்கு உபயோகப்படுத்தப்படும் ரஷிய அம்மைப்பால் மருந்து மிகவும் கடுமையான விளைவுகளை உண்டாக்குவதாக ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அந்தக் கடுமையான விளைவைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ரஷியாவிலிருந்து தருவிக்கப்பட்ட அம்மைப்பாலை Freeze Dried Vaccine) பயன்படுத்துவதால் கடுமையான விளைவுகள் உண்டாவதாக முறையீடு ஏதும் அரசுக்கு வரவில்லை. முதன் முறையாக ரஷியா அம்மைப்பாலைக் கொண்டு அம்மை குத்தப் பட்ட மக்களில் சுமார் 20 முதல் 30 சதவீதம் பேருக்கு சற்றுக் கடுமையான விளைவு ஏற்பட்டதாக சென்னை மாநகராட்சியின் சுகாதார அதிகாரி இப்போது அரசுக்கு அறிவித்துள்ளார். அம்மை குத்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே நோய் எதிர்ப்புத் திறன் இல்லாததே இதற்குப் பெரிதும் காரணமாகும். அடுத்த படியாகத் தருவிக்கப்பட்ட அம்மைப்பால் மருந்து சாதாரண விளைவுகளையே உண்டாக்கியது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** ரஷ்யாவிலிருந்து வரக்கூடிய அம்மைப்பால் தற்போது கடுமையானதாக இல்லையென்று மாநகராட்சி அதிகாரி கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கிருந்து தருவிக்கக்கூடிய அம்மைப்பால் தரம் உயர்ந்ததா அல்லது தரம் குறைந்ததா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தரம் குறைந்ததாக இல்லை. சற்று விளைவு கடுமையாக இருந்தது. இப்போது தருவிக்கப்படும் அம்மைப்பால் சாதாரண விளைவை உண்டாக்குவதாக இருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, is the Minister aware of the fact that three or four years ago when Russian vaccine was used there was serious reaction and that after this information was brought to the notice of the Government only the vaccine was withdrawn and the manufacture of the entire vaccine was given to the King Institute, Guindy?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனிக் கேள்வி போடவேண்டும்.



1968 பிப்ரவரி 16]

## மேற்கு மாம்பலத்துக்கு விளக்கு வசதி

*58 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை மேற்கு மாம்பலம், 96-வது டிவிஷனில் இன்னும் விளக்கு வசதிகள் செய்து கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை, மேற்கு மாம்பலத்தில் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது 500 விளக்குகள் உள்ளன.

(இ) எழாது.

**திரு. வை. சுவாமிநாதன்:** 96-வது வட்டத்தில் இன்னும் சில பகுதிகளில் விளக்கு வசதி செய்யப்படாமல் இருக்கிறது. சில இடங்களில் சோழர்கால விளக்குகள் கூட எரிந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தற்போது 500 விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது வட்டார உறுப்பினரும், பொதுமக்களும் கேட்பதற்கு ஏற்ப, மாநகராட்சியின் நிதிநிலைமையை ஒட்டி விளக்குவசதிகள் அதிகரிக்கப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** மேற்படி டிவிஷனில் வீட்டு வசதி போர்டாரால் கட்டப்பட்டிருக்கும் பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. நீண்ட நாட்களாகியும், மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் கோடம்பாக்கம்-புதூர் என்ற பகுதியில் இருப்பவர்கள் இன்னும் இருளில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விளக்கு வசதி செய்து கொடுக்கும் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் மாநகராட்சிக்கு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** விளக்கு வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு விளக்கு வசதிகள் செய்து கொடுக்க விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது நிச்சயமாக அறிவிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம்:** மேற்கு மாம்பலத்திலே இன்னும் தனிப்பட்ட கண்டிராக்டர்களுக்கு ஒப்பந்தம் செய்ததன் காரணமாக அங்கெல்லாம் சாதாரண விளக்குகளே வீதிகளில் எரிவது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். புதிய மாம்பலம் பகுதியில் நியான் விளக்குகளும், ப்ளூ வேபர் விளக்குகளும் இருக்க இந்த மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ளவர்களுக்கு அந்த மாதிரி விளக்குகள் இல்லாமல் இருப்பது பாகுபாடு காட்டுவதாக இருக்கும் என்ற காரணத்தால் அரசாங்கம் இந்நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கார்ப்பரேஷனுக்கு அதிகாரபூர்வமாகச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சென்னப்ப நாயக்கன் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டுந்தான் முதலில் விளக்குகள் இருந்தன; மற்றப் பகுதிகள் இருளில்தான் இருந்தன. படிப்படியாகத்தான் மற்றப் பகுதிகள் விளக்கு வசதிகளைப் பெற்றன. அதே போன்று இப்போது புதிதாகத் தோன்றியிருக்கும் மேற்கு மாம்பலம் பகுதியிலும் ஒளி விளக்குகள் அமைக்கப்படும்.

DR. H. V. HANDE : Yesterday I had to say that West Mambalam was the Cindrella of Madras City. To-day I have to say that there is more no-man's land in West Mambalam, belonging neither to the State Housing Board nor to the Corporation. There are a number of private roads. Neither the Housing Board nor the Corporation want to come into the picture and put up electric lights. In view of this confused picture, will the Hon. Minister take steps to have the streets properly lighted and will he give per instructions to the Corporation?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தொடர்புடைய மாநகராட்சி மன்ற அதிகாரிகளை அழைத்து வைத்து அது பற்றிப் பேசுவதாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

திரு. கே. விநாயகம்: இந்தப் பகுதியில் அதிகமான பிரைவேட் ரோடுகள் இருப்பதால் அதிலே வசிக்கின்ற மக்கள் எல்லாம் சேர்ந்து எங்களுடைய சொந்தத் தன்மையை விட்டுக் கொடுக்கிறோம் என்று எழுதிக் கொடுத்தாலொழிய கார்ப்பரேஷன் அதாரிடிஸ் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால், கார்ப்பரேஷன் அந்த மக்களை அணுகி நயமாக அவர்களிடமிருந்து எழுதி வாங்க முயற்சி செய்தால் முடியும். அல்லது சட்ட மன்றத்தில் சட்டம் கொண்டு வந்து பிரைவேட் ரோடுகள் தானாகவே ஸ்தல ஸ்தாபனங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக கருத வழி செய்ய வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தனிப்பட்டவர்கள் இடத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் நயமாக எடுத்துச் சொல்லி அந்த முயற்சியில் தோல்வி கண்டால் பிறகு அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைக் கேள்வி.

## திரு. சுப்ரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும் (தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. இளம்வழுதி அவர்கள் கொண்டு வந்துள்ள அவை உரிமைக் கேள்வி. அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ளபடி



பேரவையின் கண்ணியத்தைப் பாதிக்கக்கூடியதாக முதல் தோற்றம் இருக்கிறதா என்று முடிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். இறுதி முடிவு எதுவாக இருந்தாலும், எடுத்த எடுப்பிலே" Mr. Subramaniam described the recent language bill adopted by the State Assembly as the biggest political fraud என்று சொன்னதிலே உள் கருத்து எப்படி இருந்தாலும் முதல் தோற்றம் எப்படி இருக்கிறது என்பதை முடிவு செய்யக் கடமைப்பட்டவன். அதோடு நமது விதி 187 (1)-ன் கீழ் அது அண்மையில் நடந்த நிகழ்ச்சியாக இருந்தாக வேண்டும். இதிலே கொடுத்திருக்கும் வாசகத்தில் Language Bill என்று இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் 1956-ம் ஆண்டு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலேதான் 'லாங்வேஜ் பில்' என்று வந்தது. இப்போது 23—1—1968-ல் வந்தது, ரெசல்யூஷன், தீர்மானம் அல்லவா? அப்படியானால் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றதுதானா என்பது பற்றி முடிவுக்கு வருவதற்கு அது பற்றி விளக்கி உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. இரெ. இளம்வழுதி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்று நான் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மீது கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சினை 11—2—1968-ல் 11-ம் பக்கம் இரண்டாவது காலத்தில் இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியாகும் "Mr. Subramaniam described the recent language bill adopted by the State Assembly as the biggest political fraud." என்று வெளியிடப்பட்டிருப்பது உரிமைப் பிரச்சனைக்கு உரியது என்பது என்னுடைய கருத்து. கனம் அவைத் தலைவர் அவர்கள் 'இது அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியா? 'லாங்வேஜ் பில்' என்று குறிப்பிட்டிருப்பதால் 23—1—1968-ல் நிறைவேற்றப்பட்ட ரெசல்யூஷனைக் குறிக்குமா' என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த வாசகத்தில் 'ரீஸெண்ட் லாங்குவேஜ் பில்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ரீஸெண்ட்' என்று சொன்னால் அண்மை. அதுமட்டுமல்லாமல், அந்தப் பத்திரிகைக் குறிப்பில் அவர்கள் பேசியதாகச் சொல்லப்பட்ட இடம் 'Mr. Subramaniam was inaugurating the 11th Annual Conference of the Dindigul Town Congress Committee.' திண்டுக்கல் நகர காங்கிரஸ் கட்சியின் ஆண்டு விழாவைத் துவக்கி வைத்து அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாக இந்தப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. ஆனால் அந்தப் பேச்சில் மற்ற இடங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் நாம் 23—1—1968-ல் நிறைவேற்றிய அந்த மொழித் தீர்மானத்தைப்பற்றித்தான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாசகம் வேண்டுமானால் 'லாங்வேஜ் பில்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர அவர்களால் பேசப்பட்டிருக்கிற செய்திகள் பூராவும் 21—1—1968 நாம் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தைப்

[திரு. இரெ. இளம்வழுதி] [1968 பிப்ரவரி 16

பற்றியிருப்பதால் இந்தக் குறிப்பு நாம் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தைப்பற்றியது என்று நான் முதலில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் இந்த வாசகத்தில், 'பிக்கஸ்ட் பொலிட்டிகல் ஃப்ராட்', 'பெருத்த அரசியல் மோசடி' என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது இந்த அவையில் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவை மிகவும் புனிதமானது, மக்களுடைய உரிமைகளைக் காப்பாற்று வதற்காக இருக்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க இருக்கிறது. எல்லோருடைய நலன்களையும் பாதுகாக்க இருக்கிற, இந்த மாநிலத்தின் நிர்வாகத்திற்காக இருக்கிற ஒரே ஒரு அவை நம் சட்டப் பேரவை. இந்தச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பிரதிநிதிகளாகிய நாம் அனைவரும் அமர்ந்திருந்து செய்யக்கூடிய காரியங்களை வெளியிலே இருப்பவர்கள் அந்தக் காரியத்தைப்பற்றி ஒரு கண்ணியமான முறையில் விமர்சித்தால் பரவாயில்லை. ஆரோக்கியமான முறையில் அதை விமர்சனம் செய்திருந்தால் அதை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் செய்யப் பட்ட விமர்சனம், பெருத்த அரசியல் மோசடி என்று குறிப்பிட் டிருப்பது உள்ளபடியே இந்தச் சபையின் கௌரவத்தையும், இந்த சபையின் மானத்தையும், மரியாதையும் மிகவும் இழிவாக தரக் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் 'பிக்கஸ்ட் பொலிட்டிகல் ஃப்ராட்' என்று சொல்லியிருப்பதைக் கண்டு சில பேர்கள் சொல்லலாம், திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த மொழித் தீர்மானத்தைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார். இந்த அவையை இணைத்துச் சொல்லவில்லை என்று. அவர்கள் குறிப் பிட்டிருப்பது இந்த அவையைப்பற்றி அல்ல என்றுகூட யாராவது சொல்லலாம். ஆனால் இந்த உரிமைப் பிரச்சினைகளைப்பற்றி நம் சட்ட மன்றங்களோ அல்லது பாராளுமன்றமோ திட்டவட்டமான, தீர்மானமான ஒரு கொள்கையை வகுத்திருக்கிற காரணத்தினால் நம் அரசியல் சாசனத்தில் 194-வது பிரிவு மூன்றாவது சப்-கிளாசில் எழுதியிருக்கிறார்கள்.

'In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of House of such Legislature, shall be such as may from time to time be defined by the Legislature by law, and until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom and of its members and committees, at the commencement of this Constitution.' என்று தெளிவாக அரசியல் நம் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதால் 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்' விதிமுறைகளை நாம் பின்பற்றக் கடமைப் பட்டவர் களாவோம். 'ஹௌஸ் ஆஃப் காமன்ஸ்' விதி பற்றி 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டிஸில்" குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் 117-வது பக்கத்தில் இந்த உரிமைப் பிரச்சனை பற்றிக் குறிப்பிடும் போது அங்கு எழுதப்பட்டிருக்கிறது.

'In 1701 the House of Commons resolved that to print or publish and books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignities offered to their House by words spoken . . .'



1968 பிப்ரவரி 16] [திரு. இரெ. இளம்வழுதி]

I want to emphasize the word 'spoken'.

'or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, are equivalent to reflections on the House'.

இந்தவிடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'indignities offered to their House by words spoken or writings published reflecting on its character or proceedings. . . .' அவையின் தரத்தைப் பற்றியோ அல்லது நடவடிக்கைகள் பற்றியோ குறிப்பிட்டால், பேசினால், எழுதினால் அது மானநஷ்ட முறையில் இருக்குமானால் அது உரிமைப் பிரச்னைக்கு ஏற்றது என்ற முறையில் குறிப்பு இருக்கிறது. அதே புத்தகத்தில் 'ப்ரொஸீடிங்க்ஸ்' என்பதற்கு ஒரு இலக்கணம் சொல்லப் பட் டிருக்கிறது. 62-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'*The meaning of the term "proceedings in Parliament"*—The primary meaning, as a technical parliamentary term, of "proceedings" is some formal action, usually a decision, taken by the House in its collective capacity. This is naturally extended to the forms of business in which the House takes action, and the whole process, the principal part of which is debate, by which it reaches a decision.'

'ப்ரொஸீடிங்ஸ் இன் பார்லிமெண்ட்' என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விவாதங்கள், விவாதங்கள் மூலம் எடுக்கப்படும் முடிவுகள் இவைகள் அனைத்தும் 'ப்ரொஸீ டிங்ஸ் இன் பார்லிமெண்ட்' என்பதற்கு இலக்கணமாகக் கொடுத் திருக்கிறார்கள். எனவேதான், இங்கு நாம் 23—1—1968-ல் விவாதம் செய்து பல உறுப்பினர்கள் கருத்துகளைத் தெரிவித்து அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுத்து அந்த முடிவுதான் மொழித் தீர்மானம் என்பதை அனைவரும் அறிவோம். எனவேதான் அப்படி எடுக்கப்பட்ட அந்த முடிவு, அப்படி குறிப்பிடப்பட்ட அந்தத் தீர்மானம்தான் 'ப்ரொஸீடிங்ஸ் இன் பார்லிமெண்ட்' என்ப தற்குள் வருகிறது. அது மட்டுமல்லாமல் அந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கு முன்னால் நம் தமிழ்நாட்டில் இருந்த நிலை மையை யோசிப்போமானால் மிக மிக அவசியமான ஒரு தீர்மான மாகும். இந்த அவை தமிழ்நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு, தமிழ் மக்களின் கலாசாரம், நாகரீகம் ஆகியவைகளை மனதில் கொண்டு ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தது. அந்தத் தீர்மானம் நம் அவை முதல்வர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு அதன்மீது காங்கிரஸ் கட்சி சார்பாக எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு கருத்திருமன் அவர்களும், திரு. பூவ

[திரு. இரெ. இளம்வழுதி] [1968 பிப்ரவரி 16

ராகன் அவர்களும் சுதந்திராக் கட்சி சார்பாக டாக்டர் ஹாண்டே அவர்களும், தமிழரசுக் கட்சி சார்பாக மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், முஸ்லீம் லீக் சார்பாக மாண்புமிகு டாக்டர் ஹபிபுல்லா பேக் அவர்களும், குடியரசுக் கட்சி சார்பாக மாண்புமிகு திரு. கே. பி. எஸ். மணி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி (இடதுசாரி) சார்பில் மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், வலதுசாரி சார்பில் மாண்புமிகு திரு. ஏ. கே. சுப்பையா அவர்களும் எஸ். எஸ். பி., பி. எஸ். பி. சார்பில் மாண்புமிகு திரு. மாரிமுத்து, மாண்புமிகு திரு. நல்லசிவம் ஆகியோர்களும் பல திருத்தங்களை அத் தீர்மானத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதேநேரத்தில் முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தைத் தவிர மற்ற திருத்தங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன அல்லது வோட்டுக்கு விடப்படவில்லை. அவற்றைக் கொண்டு வந்த மாண்புமிகு தலைவர்களும், உறுப்பினர்களும் அந்தத் திருத்தங்களை நிறைவேற்றவேண்டும், அந்தத் திருத்தங்கள் மீது வோட்டு எடுக்க வேண்டுமென்று யாரும் கேட்கவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தம் நிறைவேறியது. வோட்டு எடுக்கும் போது பார்ப்போமானால் திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திராக் கட்சி, தமிழரசுக் கட்சி, முஸ்லீம் லீக், குடியரசுக் கட்சி ஆகியவைகள் அத் தீர்மானத்தை ஆதரித்தார்கள். காங்கிரஸ் கட்சியும், எஸ். எஸ். பி. யும் ஒதுங்கிக் கொண்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளும், பி. எஸ். பி. யும் நடுநிலைமை வகித்தார்கள். எனவே அந்தக் தீர்மானத்தை யாருமே எதிர்க்கவில்லை, ஒரு வோட்டு கூட எதிர்த்துப் போடவில்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர். எஸ். எஸ். பி. யும் காங்கிரஸும் ஒதுங்கிக் கொண்டார்கள், பி. எஸ். பி. யும், கம்யூனிட்களும் நடுநிலைமை வகித்தார்கள் என்று சொல்கிறார்கள். எதை ஆதாரமாக வைத்துச் சொல்கிறார்கள். எஸ். எஸ். பி. சார்பாக நாங்கள் ஒதுங்கிக் கொண்டோம் என்று சபை நடவடிக்கைகளில் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னால் நடைமுறை பற்றியுள்ள கேள்வியாக இருக்க வேண்டும். பாயின்ட் ஆஃப் க்ளாரிஃபிக்கேஷன் என்றால் என் அனுமதியோடுதான் கேட்கமுடியும். திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கிளாரிஃபிக்கேஷன் கேட்கிறார்களா அல்லது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறார்களா?

மு.ப. 10-30 **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் அன்று என்ன செய்தார்கள் என்பதைச் சொன்னால் திரு. இளம்வழுதி அவர்கள் திருத்திக்கொள்வார்கள்.



1968 பிப்ரவரி 16]

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** நாங்கள் எங்கள் தீர்மானத்தை வலியுறுத்தவில்லை.

**திரு. இரெ. இளம்வழுதி:** எஸ். எஸ். பி. நடுநிலைமை வகித்ததாக ரெகார்டுகள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சியும், பி. எஸ். பி. யும் (abstained from voting) ஓட்டுப்போடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். எனவே இந்த நம்முடைய அவையில் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், தமிழ்நாட்டிலேயுள்ள மூன்றரை கோடி மக்களினுடைய பிரதிநிதிகளும் இந்தத் தீர்மானம் நிறைவேறும் வகையில் ஆதரவாக இருந்தார்கள். யாருமே எதிர்க்கவில்லை. எனவே அப்படிப்பட்ட ஒரு நல்ல தீர்மானம் நிறைவேறிய பிறகு தமிழ்நாட்டிலே ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றத்திற்குப் பிறகு, மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும், கல்விமான்களிடமும், அரசியல்வாதிகளிடமும் ஏற்பட்ட பெரிய மாற்றத்தைப் பார்த்த பிறகு, அந்த மாற்றத்தினால் அரசியலிலே சிலருக்கு லாபம் இல்லை என்று உணர்ந்த பிறகு அந்த மாற்றத்தினால் தமிழ்நாட்டிலே கலவரங்களுக்கு இடமில்லை என்ற நிலையைப் பார்த்த பிறகு இதைப் போன்றதொரு கருத்தை அவர்கள் கூறியிருப்பார்களேயானால் அந்தக் குறிப்பு, அந்தக் கருத்து இந்த அவையின், இந்தப் பேரவையின் மரியாதையைக் குறைக்கிறது. அவ்வாறு மரியாதைக் குறைவாக ஆக்குகின்ற அந்தக் குறிப்பைப் பார்க்கும்பொழுது அதைச் சொல்கின்றவர்கள் எவ்வளவு பெரியவராகக் கூட வேண்டுமானாலும் இருக்கலாம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கலாம், முதலிலே அமைச்சராக இருந்திருக்கலாம், அறிஞராகவும் இருந்திருக்கலாம், ஆனால் அவர்கள் கூறிய அந்தக் கருத்து இந்த அவையின் மரியாதையையும், மானத்தையும் எந்த அளவிலே பாதிக்கிறது என்பதுதான் பிரச்சினை. இந்தக் கருத்து எப்படி நம்மைப் பாதிக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். இதே மாமன்றத்தில் 1960-இல் ஒரு அறிஞர் இதே கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கிறார், இந்த உரிமைப் பிரச்சினை போன்ற ஒரு பிரச்சினையில் கட்சிகளைப்பற்றிக் கவனிக்கக் கூடாது, வேறு எதையும் கவனிக்கக் கூடாது, நண்பர்களைப்பற்றிக் கவனிக்கக் கூடாது, ஆனால் கவனிக்கப்பட வேண்டியது இந்தச் சபையின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறதா, இந்தச் சபையின் கௌரவம் குலைக்கப்பட்டிருக்கிறதா என்ற ஒரே விஷயத்தைப் பற்றித்தான் என்று கூறியிருக்கிறார், அவ்வாறு கூறியவர் வேறு யாருமில்லை. பிரச்சினைக்குக் காரணமான திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான். அன்று 1960-இல் சென்னை மாநகராட்சி மன்றத்தின் மீது ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப் பட்டது. மாநகராட்சி மன்றம் அப்பொழுது இங்கு இருந்த மூன்று நண்பர்கள் பேச்சின் மீது வருத்தத்தைத் தெரிவித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைக் குறிப்பிட்டு, மாநகராட்சிமன்றம் அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது இந்தச் சபையின் மதிப்பைப் பாதிக்கிறது என்று திரு. எ. ஏ. ரஷீத் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். இன்றைய

[திரு. இரெ. இளம்வழுதி] [1968 பிப்ரவரி 16

முதலமைச்சர் அன்று சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கட்சியின் தலைவராக இருந்தார். இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. கருத்திருமன் அவர்களும், காங்கிரஸ் கொறடா திரு. விநாயகம் அவர்களும் இதே மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சராகவும், அவை முன்னவராகவும் இருந்திருக்கிறார்கள். அந்த உரிமைப் பிரச்சினை மீது அப்பொழுது பேசிய மூன்றே மூன்று வரியை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். 'இது கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய ஒரு விஷயம் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைப் பற்றிய ஒரு விஷயம் அல்ல, அல்லது காங்கிரஸ் கட்சியைப் பற்றிய விஷயம் அல்ல. இது இந்தச் சபையைப் பற்றிய விஷயம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் இன்று ஏதாவது தவறு செய்திருக்கிறது என்றால் அது தனிப்பட்ட ஒரு அங்கத்தினரைக் குறித்து அல்ல, இந்தச் சபையின் உரிமையைப் பாதிக்கக்கூடிய விஷயம். எனவே அவர் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவர் என்பதற்காகவோ அல்லது அவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்ற காரணத்திற்காகவோ இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வரவில்லை. அல்லது தனிப்பட்ட ஒருவரை எதிர்த்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று அதற்காகவும் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வரவில்லை. அனைவரும் கூடி இந்த மன்றத்தில் முடிவெடுத்த ஒரு தீர்மானத்தை " " The biggest political fraud " என்று அவர் கூறியிருக்கிறார் 'ப்ராடு' என்றால் அகராதியில் தமிழிலே 'மோசடி', 'பித்தலாட்டம்', 'நியாயமற்ற வேலை' என்று அர்த்தம் இருக்கிறது. யார் என்ன பித்தலாட்டம் செய்து விட்டார்கள்? நாமெல்லாம் பித்தலாட்டக்காரர்களா? நாம் எல்லாம் மோசடிக்காரர்களா? இந்த அவை நிறைவேற்றிய தீர்மானம் மோசடித் தன்மானதா? இந்த அவை பித்தலாட்டக்காரத்தனமானதா? என்கிற அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்த உரிமைப் பிரச்சினை எழுப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் கூறியிருந்தாலும் நான் அதிகமாக இதிலே கவனம் செலுத்த மாட்டேன், கவலைப்பட மாட்டேன். The Language Bill adopted by the State Assembly " என்று சொல்லாமல் the Language Bill piloted by the D.M.K. Party என்று ஆளுகிற கட்சியின் மீதோ அல்லது தோழமைக் கட்சிகளின் மீதோ குறிப்பிட்டுச் சொல்லியிருப்பார்களேயானால் அதிகம் கவலைப்பட்டிருக்கமாட்டேன். ஆனால் சொல்லியிருப்பது, the Language Bill adopted by the State Assembly இந்த மாநில சட்டமன்றம் நிறைவேற்றியிருக்கிற மொழித் தீர்மானம் அல்லது மொழிச் சட்டம் என்ற முறையிலே சொல்லியிருப்பதால், இந்தச் சட்டமன்றத்தைக் குறித்துச் சொல்லியிருப்பதால் இது உரிமைப் பிரச்சினையின் அடிப்படையிலே வருகிறது. " The biggest political fraud", என்று இந்த மொழித் தீர்மானம் நிறைவேறியிருப்பதைப் பற்றிச் சொல்லியிருப்பதால் *Prima facie* case of breach of privilege இருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.



1968 பிப்ரவரி 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறியது பாயின்ட் ஆப் ஆர்டரா? அன்றைய நடவடிக்கையின் குறிப்புகள் என் முன்னால் இருக்கின்றன. அன்று அவர்கள் கட்சியின் தலைவர் திரு. நல்லசிவம் அவர்கள் "என்னுடைய கட்சியும் அரசினர் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் நடுநிலை வகிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். ஆதலால் அதிலே ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.

அடுத்து, இந்த அவையுரிமைக் கேள்வியை எழுப்பிய நண்பர் திரு. இளம்வழுதி அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்கள் சொல்லியிருப்பது 'பில்' என்று. பில் என்பது 1956-ஆம் வருஷத்தில் வந்திருக்கிறது. எனவே இந்தத் தீர்மானத்தைப் பொறுத்துத்தான் 'ப்ராடு' என்று சொல்லப்பட்டிருக்கிறதா? இல்லையா என்று சொல்லியாக வேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரதி அவர்கள் கை வசம் இருக்கிறதா? அதிலே 'ப்ராடு' இருக்குமானால் அவர்கள் சொல்லுவது நியாயமாக இருக்கும். அந்தத் தீர்மானத்தின் பிரதிகள் இருந்தால் அதில் பூராவுமோ அல்லது ஒரு பகுதியோ 'ப்ராடு'-ஆக இருந்தால் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியது நியாமாக இருக்க முடியும்.

**திரு. இரெ. இளம்வழுதி** : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, அன்று நிறைவேறிய தீர்மானத்தை நான் கையிலே வைத்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தினுடைய முதல் பகுதி, "1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தையும், அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியதின் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து ஆய்வு செய்தல் வேண்டும்" என்ற மூலத் தீர்மானம், அவைமுன்னவர் கொண்டு வந்த தீர்மானம். அதன்மீது பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் நிறைவேறிய தீர்மானம் பல பகுதிகளாக இருக்கிறது. நான் அதைப் படிக்கிறேன் : 'பல்வேறு மொழி-பண்பாடு-நாகரீகங்களைக் கொண்ட இந்தியாவில், ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்தப் பகுதியிலே 'ப்ராடு' இல்லையா?

**திரு. இரெ. இளம்வழுதி** : இல்லை, இந்தப் பகுதியிலே 'ப்ராடு' இல்லை எந்தப் பகுதியிலும் 'ப்ராடோ' பித்தலாட்டமோ', 'மோசடியோ' இல்லை.

**திரு. பெ. சீனிவாசன்** : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சட்டசபையில் நிறைவேறிய தீர்மானத்தை 'The biggest political frand",

என்று சொல்லியிருக்கிறார். தீர்மானத்தின் ஒரு பகுதி உண்மையிலேயே 'ப்ராடாக' இருந்தாலும் இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை வெளியிலே இருக்கும் ஒரு பிரஜை அவமதிக்கும் முறையில் கூறலாமா? எனவே நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை பற்றி 'ப்ராடு' இருக்கிறதா, இல்லையா என்று தனித்தனியாகப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. இரெ. இளம்வழுதி: இரண்டாவது பகுதி, தமிழும் மற்ற தேசீய மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதல் பகுதியிலே ஃப்ராட் இல்லை அல்லவா?

திரு. இரெ. இளம்வழுதி: எந்தப் பகுதியிலும் ஃப்ராட் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தாங்கள் அந்தத் தீர்மானத்தின் கருத்து என்ன என்று கூடச் சொல்லவில்லை. தீர்மானத்தின் முடிவு என்ன ஆயிற்று?

திரு. இரெ. இளம்வழுதி: இந்தத் தீர்மானத்தின் கருத்து மும்மொழித் திட்டத்தை மாற்றி தமிழ்நாட்டுக்கு இரு மொழிகள் வேண்டுமென்பது. ஆங்கிலமும் தமிழும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது.

நமது அரசியல் சட்டத்திலே 8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள அத்தனை மொழிகளும் சமமானவை. அந்த மொழிகளில் இந்தியும் ஒன்று; தமிழும் ஒன்று. தலைசிறந்த அத்தனை வட்டார மொழிகளும் இந்த மொழி ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆகையால் அந்த வட்டார மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியும் இந்தியோடு ஒரே நிலையில் இருக்க வேண்டுமே தவிர ஒரு மொழி இன்னொரு மொழியை அழிக்கின்ற அளவுக்கு அது அமையக் கூடாது என்ற அளவிலேதான் அந்த மும்மொழித் திட்டத்தை மாற்றி இரு மொழி வேண்டுமென்ற அடிப்படையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதோடு கூட, என். சி. சி. போன்ற அணிகளில் இந்தி கட்டளைச் சொற்களுக்குப் பதிலாக முன்பிருந்தது போல் ஆங்கிலம் அல்லது தமிழாக இருக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மேலும் சபாநாயகர் அவர்கள் இந்த 'பில்' என்பது எப்படி ஒத்து வரும் என்று கேட்டார்கள். அதே பத்திரிகைக் குறிப்பில் பிறகு தெளிவாக இப்பொழுது நிறை வேற்றிய அந்த மொழித் தீர்மானத்தைக் குறிக்கிற அளவில் பேசி இருக்கிறார்கள். அதாவது,

He said that the two-language formula would cut off Madras from other parts of the country and also would take away its voice in the administration at the Union Government level. A unilateral





decision to scrap the three-language formula by the Madras State would not solve the language problem but only adversely affect the people of Madras, the T.N.C.C. President added என்று பேசியதாகக் குறிப்பு இருக்கிறது. எனவேதான் மும்மொழித் திட்டத்தை அகற்றி இருமொழித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நாம் அதைப் பற்றியத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆகவே, இது 1956-லே நிறைவேற்றப்பட்ட மசோதாவை எந்தவிதத்திலும் குறிப்பதாக இல்லை. இப்பொழுது 23—1—1968-ல் நிறைவேற்றிய மொழித் தீர்மானம்பற்றிய குறிப்புதான் அது. 'பில்' என்று ஒருவேளை மொழி பெயர்ப்பில் தவறாக இருக்கலாம். ஆனால், அது மொழித் தீர்மானம். அந்தப் பேச்சின் பிற்பகுதியிலே நாம் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதால் அதை நாம் உரிமைப் பிரச்சினைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைய, அதாவது 23—1—1968-அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றித்தான் அது குறிப்பிடும் என்று சபைத் தலைவர் அவர்களுக்குச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குச் சொல்லலாம், அல்லது திங்கட்கிழமை சொல்லலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை முதலாவதாக, திரு. சி. சுப்பிரமணியம் அண்மையிலே சொன்னதாகச் சொல்லப்பட்ட ஒரு கருத்தைப்பற்றியது. அவர் சொன்னது இந்தச் சபையினுடைய உரிமையையும் நடவடிக்கையையும் பாதிப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்திருக்கிறார்கள். முதலாவதாக, நான் குறிப்பிடுவது என்னவென்றால் பத்திரிகையிலே வந்த செய்தியையே ஆதாரமாகக் கொண்டு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது என்று சபாநாயகர் அவர்களே பல தடவைகளிலே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்ததை ஆதாரமாகக் கொண்டு உரிமைப் பிரச்சினை எழுப்பியதைச் சரி என்று ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால், ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் என்ன ஆயிற்று என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். அதோடு உரிமைப் பிரச்சினை என்பது சாதாரணமானது அல்ல. அவர்கள் சொன்னதாகச் சொல்லப்பட்டு அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தால், சொன்னதாகச் சொல்லப்பட்ட அவருக்கும் பல உரிமைகள் இருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும். முதலாவதாக, சபையிலே இருக்கிறவரைப் பற்றியோ அல்லது சபையினுடைய நடவடிக்கையையோ பாதிக்கத்தக்க விதத்தில் யார் சொல்வதாக இருந்தாலும், அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். ஆனால்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 பிப்ரவரி 16

அவர்கள் இந்தச் சபையைப்பற்றியும் சொல்லவில்லை, இந்த அவையை அவமதிக்கிற விதத்திலும் சொல்லவில்லை. சபையினுடைய நடவடிக்கையைப்பற்றியும் சொல்லவில்லை. சபையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றியோ அல்லது சட்டத்தைப்பற்றியோ வெளியிலே இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் பேச உரிமையுண்டு. இந்த ஜனநாயக நாட்டிலே சபையிலே நிறைவேற்றப்பட்டதைப்பற்றி விமர்சனம் செய்ய யாருக்கும் உரிமை உண்டு என்பதை நாம் அறிந்து கொள்வது மிக மிக அவசியம். ஆகவே, அவர் சபையைப்பற்றி, சபை நடவடிக்கையைப்பற்றிச் சொல்லவில்லை. இந்தச் சபை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார். அதற்கு யாருக்கும் உரிமை உண்டு.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன், சார். அப்படியானால், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் மோசடி என்று சொல்லியிருந்தாலும் அது தவறில்லை என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாதமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியல் மோசடி என்றுதான் சொன்னார். மோசடி என்று சொல்லவில்லை. அதை விட நீங்கள் எத்தனையோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். பாராளு மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கும்போது 1008 ஃப்ராடை வைத்துக் கொண்டு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். 1008 ஃப்ராடை வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விமர்சனம் செய்வதிலே தவறில்லை. மோசடி என்று சொல்லவில்லை. அரசியல் மோசடி என்று சொன்னதாலே அது தவறில்லை. மோசம் செய்து. . .

**ஓர் உறுப்பினர் :** 1008 ஃப்ராடை வைத்துக்கொண்டு பேசினார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான், 1008 ஃப்ராடை வைத்துக் கொண்டு என்று சொல்லவில்லை. விமர்சனம் செய்வதிலே . . .

**ஓர் உறுப்பினர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் நான் ஃப்ராட் என்று சொல்லவில்லை என்று சொல்கிறாரே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஃப்ராட் என்கிற வார்த்தையை அவர்கள் பாதகமாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஃப்ராட் என்று இங்கு இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். '1008 ஃப்ராடை வைத்துக் கொண்டு' என்று அவர் பேசவில்லை என்று சொல்லுகிறார் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்.



1968 பிப்ரவரி 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் அதைச் சொல்லவில்லை என்று சொல்லி விட்டாரே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிச்சயமாக நான் சொல்லவில்லை, சொல்லவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். விமர்சனம் செய்வதைப்பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 1,008 தடவைகள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் சொன்னேன். ஃப்ராடை வைத்துக்கொண்டு என்ற முறையில் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஃப்ராட் என்று சொல்லவில்லை என்று சொன்ன பிறகு அதிலே எதுவும் பிரச்சினை இல்லை. ஒரு மாண்புமிகு உறுப்பினர், தான் சொல்லவில்லை என்று சொன்னபிறகு அதை நாம் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரெக்கார்டில் இருந்தால் அதை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகவே, எந்தச் சட்டத்தைப் பற்றியும் அல்லது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றியும் வெளியிலே அபிப்பிராயம் சொல்ல ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஜனநாயகத்திலே இந்த அடிப்படை உரிமை கொடுக்கப் பட்டுள்ளது. அதை விட்டுவிட்டு, நாம் அவர் பேசியதன் பேரில் உரிமைப் பிரச்சினை கொண்டுவருகிற நிலைமை இருக்குமேயானால் நம்முடைய அடிப்படை ஜீவாதார உரிமை பாதிக்கப்படும்படியான நிலைமை ஏற்படும். அவர் சொன்னதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைக்கொண்டு உரிமைப் பிரச்சினை கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதுவும் பொலிட்டிகல் ஃப்ராட் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசியல் மோசடி என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். ஃப்ராட் என்று சொன்னால் தவறுதான். ஃப்ராட் என்று தனிப்பட்ட முறையில் சொன்னால், அது உரிமையைப் பாதிப்பதாகும். அரசியல் மோசடி என்ற நிலையிலே அந்தத் தவறான தன்மை. விஷத்தன்மை நீங்கிவிடுகிறது. அரசியல் மோசடி என்று சொல்வதிலே தவறு இல்லை. அரசியல் மோசடி என்று சொல்வதற்கும் அரசியல் பித்தலாட்டம் என்று சொல்வதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இப்படிச் சொல்வதனால் மோசடி என்னும்படியான ஒரு விஷத் தன்மை குறைந்து விடுகிறது. அதைச் சொல்வதற்கு அரசியல் சட்டத்திலே உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. அது அரசியல் சட்டத்திலே இருக்கிற ஜீவாதார உரிமை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, இப்பொழுது இருக்கும்படியான சி. சுப்பிரமணியம் என்ன சொன்னார்கள் என்பதில் என்னுடைய நிலைமை என்னவென்றால், இந்தச் சட்டசபையைப்பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை, இந்தச் சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி அவர்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 பிப்ரவரி 16

குறிப்பிடவில்லை. தீர்மானம் செய்யப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றித்தான் குறிப்பிட்டார்கள். தீர்மானத்தையோ, அல்லது சட்டத்தையோ பற்றிக் குறிப்பிட வெளியிலே உள்ள ஒவ்வொரு வருக்கும் உரிமை உண்டு. அவரவருடைய அபிப்பிராயத்தைப் பற்றிச் சொல்ல ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆகவே, இந்த உரிமைப் பிரச்சினை அவருடைய உரிமையையும் பாதிக்கிறது என்பதை நாம் உணரவேண்டியது அவசியம். 'மேல் பார்லி மெண்டரி பிராக்டிஸி'ல் கூட சட்டசபையைப்பற்றியோ, அதன் நடவடிக்கையைப் பற்றியோதான் குறிப்பிடக்கூடாது என்று விளக்கமாக இருக்கிறது. அதாவது சபை நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னால்தான் தவறு; சபையிலே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைப்பற்றிச் சொல்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவே, அப்படிச் சொல்வது நம்முடைய சபை உரிமையைப் பாதிப்பதாக இல்லை என்பதை மிகவும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இப்படி பொலிட்டிகல் ஃப்ராட் என்று சொல்லலாமா என்று உரிமைப் பிரச்சினை வர வேண்டியதில்லை. பொலிட்டிகல் ஃப்ராட் என்று என்ன நிலையில் சொன்னாரோ, எப்படிச் சொன்னாரோ அதை யெல்லாம்பற்றி யோசிக்க வேண்டும். நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைப்பற்றி அரசியல் பித்தலாட்டம் என்று சொல் வதற்கு உரிமை உண்டு. அந்த உரிமை நம்முடைய உரிமையைப் பாதிக்காது என்றும், நியாயமான எந்த விதமான உரிமையையும் பாதிக்காது என்றும், அங்கத்தினருடைய உரிமைப் பிரச்சினையிலே, குறிப்பிட்டுள்ள சொற்கள் எந்தவிதமான உரிமையையும் பாதிக்க வில்லை என்றும், அதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் எழவில்லை என்பதை நினைக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

DR. H. V. HANDE: On a point of order. After the hon. Member Mr. P. G. Karuthiruman has been given an opportunity to explain I wish to say that we of the Swatantra Party have been affected, because the remark that it is a political fraud affects everybody who has voted for the resolution. I want to know (1) in what way Mr. Karuthiruman is competent to defend Mr. C. Subramaniam, and (2) in what way Mr. Subramaniam is competent to pass a remark of such a derogatory nature about every member who voted for the resolution. He has passed the remark indirectly about every one of us who has voted for the resolution. In what way Mr. Karuthiruman can substantiate that it is right? The only way is to call Mr. Subramaniam and find out the explanation from Mr. Subramaniam's mouth and not from Mr. Karuthiruman's mouth. He is not competent to defend Mr. Subramaniam.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் பொறுமையை இழக்கக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை,



1968 பிப்ரவரி 16] [பேரவைத் தலைவர்]

ஒழுங்குப்படி பிரச்சினையை எழுப்பினார்கள். அதாவது, நடை முறை விதியின்படி திரு. கருத்திருமன் அவர்கள் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டார்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன். அது என்னுடைய உரிமையைப் பாதிக்கிறது.) அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்கள். ஆகவே, அவர் களுக்குப் பேசுவதற்கு உரிமை உண்டு. மேலும், நமது விதிகளின் படி, நான் அழைத்த பிறகு யாரும் பேசலாம். நான் யாரையும் பேசச் சொல்லலாம். அவர்கள் பேசுவதற்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறிய கூற்றை இங்கே சுட்டிக் காட்டி, அது இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கிறது என்ற முறையில் உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அதற்கான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் தெளிவாக எடுத்துத் தெரிவித்திருக் கிறார்கள். உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்து 'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிற அளவில் பார்த்தால்,

"The Language Bill adopted by the State Assembly is the biggest political fraud."

என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். 'இந்த மாநில அவையிலே நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் பெரிய அரசியல் மோசடி.' என்ற கருத்தை அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை மறுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பது, எந்தக் கருத்தையும்பற்றிக்கூட எடுத்துச் சொல்லவில்லை. இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றி கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட அத்தகைய தீர்மானம் பெரிய அரசியல் மோசடி என்று குறிப் பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கொள்கையைப்பற்றி அவர்கள் எடுத்துச் சொல்ல எல்லா உரிமையும் உண்டு. ஜனநாயக அரசிய லிலே இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிற உரிமைகளின் அடிப்படையில் அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்க உரிமை உண்டு. இரு மொழிக் கொள்கை, மும்மொழிக் கொள்கை, ஒரு மொழிக் கொள்கை, பல மொழிக் கொள்கையைப்பற்றி அவரவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்கவும், மற்ற அரசியல் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் கூறுகிற கருத்துக்களை மறுத் துரைக்கவும், தாக்கவும் அல்லது அதுபற்றி தன்னுடைய மாறுக் கருத்தையும் எடுத்துச் சொல்லவும் முழு உரிமை உண்டு. அது மட்டுமல்லாமல், கொள்கையையோ அல்லது கருத்தையோபற்றி, 'ஒரு கட்சி இந்தக் கொள்கையைச் சொல்கிறது, அந்தக் கொள்கையை நான் மோசடி என்று கருதுகிறேன் அல்லது

அரசியல் மோசடி என்று கருதுகிறேன்' என்று எடுத்துச் சொல்வதிலோ அல்லது அதே நிலையில் அது மோசடி அல்ல என்று மற்றவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தங்களுக்கிருக்கிற உரிமைகளின் அடிப்படையில் விளக்குவதிலோ எந்தத் தவறும் இல்லை. உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள் எந்த மொழிக் கொள்கையைக் கொண்டிருக்கவேண்டும் என்று வற்புறுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் கொள்கையை வைத்துக் கொள்ள உரிமை உண்டு. அவருக்கு மும்மொழிக் கொள்கை பிடித்ததாக இருக்கலாம். மற்றக் கட்சிகளுக்கு இருமொழிக் கொள்கை பிடித்ததாக இருக்கலாம். அதைப் பொறுத்தல்ல விஷயம். அவர் கூறியிருக்கிற கூற்று இந்த அவையைப் பாதிக்கிறது என்ற அளவில் வருகிறது. இந்த மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு பெரிய அரசியல் மோசடி என்றால், எந்த வகையில்? தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வகை மோசடியா? கடைப்பிடித்த முறையிலே மோசடியா? அல்லது இந்த அவை முழுவதையும் பாதிக்கத் தக்க அளவிலே இருக்கிறதா? பெரிய அரசியல் மோசடி என்று சொல்வது தனிப்பட்ட நிலைமையில் அல்ல. ஒரு அரசியல் கருத்தை எடுத்து வைத்துக்கொண்டு, அது அரசியல் மோசடி என்று சொன்னால், அது யாரையும் பாதிப்பது ஆகாது. சாதாரணமாக கருத்திருமன் அவர்கள் அரசியல் மோசக்காரர் என்று சொன்னால்—நான் உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன்--அரசியல் மோசக்காரர் என்று கருத்திருமனோடு தொடர்புபடுத்தும்போது. கருத்திருமன் அவர்கள் அதை எதிர்த்துரைக்கவோ, மறுத்துரைக்கவோ அவருக்கு உரிமை இருக்கிறது. 'பெரிய அரசியல் மோசடி' என்ற சொற்றொடர் எதோடு பொருத்தப்பட்டிருக்கிறது? இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு பெரிய அரசியல் மோசடி என்று இருக்கிற நிலையைப் பார்க்கிறபொழுதுதான். இந்த அவையினுடைய முழு உரிமையையும் பாதிக்கத் தக்க அளவிலே அது அமைந்திருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இருமொழிக் கொள்கையைக் கண்டித்து உரைக்க உயர்திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது, அதிலிருந்து வேறுபட முழு உரிமை இருக்கிறது. அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எடுத்துவைத்துக்கொண்டு, அதை அலசிப் பார்த்து, தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. சட்டமன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தில் இருக்கிற கருத்துக்கள் சரியானவை அல்ல. அவை சரியான நிலைமைகள் அல்ல. இதைக் கொண்டுவந்த கட்சியின் நோக்கமே வேறு என்று அப்படியெல்லாம் பேசுவதில்கூட எந்தக் தவறும் இல்லை. அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெரிய அரசியல் மோசடி என்று கூறியிருக்கும் காரணத்தினால், அது அவையினுடைய முழு உரிமையையும் பாதிக்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே





முன்பு உரிமைப் பிரச்சினை வந்தபொழுது பேசியிருக்கிற அளவுக்கு, ஆளும் கட்சியைப்பற்றியோ, மற்றவர்களைப்பற்றியோ எடுத்துப் பேசாமல், அந்தக் கருத்தை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுகிறபொழுது, இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெரிய அரசியல் மோசடி என்று கூறியிருக்கிற காரணத்தினால், இந்த அவையில் இருக்கும் அத்தனை உறுப்பினர்களுடைய கௌரவத்தையும் இந்த அவையினுடைய கௌரவத்தையும் பாதிக்கத்தக்கதாக இருககிறது.

அவரைக்கூட கருத்துக்கள் கேட்கவேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எடுத்துக் குறிப்பிட்டார்கள். பத்திரிகையிலே வந்தது, இந்த அவையிலே உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. 'அது தான் சொன்ன கருத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது, நான் அப்படிச் சொல்லவில்லை, மாறுபட்டுச் சொன்னேன்' என்று வேறு எந்தக் கருத்தோ அல்லது விளக்கமோ உயர்திரு. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்து இதுவரையில் வரவில்லை. அந்த அளவிலே பார்க்கிறபொழுது பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு நாம் இங்கே பேசவேண்டிய அவசியம் இருக்கிறது. பத்திரிகையிலே போடப்பட்டிருப்பது அவ்வளவும் உண்மை, 100-க்கு 100 உண்மை என்று சொல்வதற்கு இல்லை. சில தவறாக வரலாம். மாறுபட்டு வரலாம், திருத்தப்பட்டு வரலாம், சொல்லாததுகூட வரக்கூடும். ஆனால், நடைபெற்றதே வரவில்லை என்றும் சொல்வதற்கில்லை. நடைபெற்றதும் வரும், உண்மையும் வரும், உண்மை இல்லாததும் வரும், மாறுபட்டும் வரும். திருத்தப்பட்டும் வரும். அதற்குரியவர்கள் அதை அவ்வப்பொழுது திருத்தவோ, மாற்றவோ, மறுக்கவோ செய்து, மாறுபட்டு வந்திருக்கிறது, சொல்லாதது வந்திருக்கிறது என்று சொல்வதன்மூலம் உண்மை நிலையை உலகத்திற்கு உணர்ந்த வேண்டும். உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள், 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்றோ, 'நான் வேறு கருத்தைச் சொன்னேன்' என்றோ இதுபற்றி பிரச்சினை வந்த பிறகு பத்திரிகையில் அத்தகைய விளக்கம் சொல்லவில்லை, எந்தக் கூட்டத்திலும் அவர்கள் விளக்கம் சொல்லவில்லை, நிருபர்களிடமும் விளக்கம் சொன்னதாகத் தெரியவில்லை. ஆகவே, நாம் பத்திரிகையில் வந்த கூற்றை வைத்து முடிவு கட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பொழுது உரிமையைப் பாதிக்கின்ற பிரச்சினையா என்று கேட்டால், உரிமையைப் பாதிக்கின்ற பிரச்சினை என்ற முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த அவை முழுவதையும் சேர்த்து, இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு பெரிய அரசியல் மோசடி என்று சொல்லியிருப்பதினால், இந்த அவையினுடைய கண்ணியத்தையும், அவையினுடைய உரிமையையும், பெருமையையும் குறைப்பதாக இருக்கின்ற காரணத்தினால், இது அவையின் உரிமையை பாதிக்கிறது என்ற காரணத்தினால் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிந்துகொள்ளவேண்டிய

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 பிப்ரவரி 16

அவசியம் இருந்தாலும் இருக்கக்கூடும். இந்த அவையைப் பாதிக்கின்றது என்பதை நாம் உணர்கிறோம். 'இந்த அவையின் உரிமையை பாதிப்பதாக இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் என்ன கருதுகிறீர்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்' என்று வேண்டுமானால் அவர்களுடைய கருத்தை அறிவதற்கு இந்த அவை அனுப்பி வைக்கலாம். 'இதைப்பற்றி பத்திரிகையில் வந்தது உண்மையா அல்லவா, அல்லது வேறு கருத்தைச் சொன்னீர்களா, மாற்றப்பட்டிருக்கிறதா' என்று கேட்டு அறியலாம். அவர் சொல்லாமலே பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது என்றால், பத்திரிகையின்மீது உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இப்பொழுது பத்திரிகை மீது மட்டுமல்ல, உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள்மீதும் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. 'நான் சொல்லாத ஒன்றைப் பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள்' என்று அவர்கள் சொன்னால், பததிரிகையின்மீது உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொள்ளவேண்டிய நிலைமைகள் ஏற்படும். 'இப்பொழுது உரிமைப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்கிறீர்கள்?' என்று கேட்கலாம். அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்க இருக்கிறார்கள். அவர் சொல்வதைப் பொறுத்து எடுத்துக் கொள்ளலாம். இதில் உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்பதைமட்டும் கூறிக்கொள்கிறேன்.

மு.ப. 11-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் (லீடர் ஆப் தி ஹவுஸ்) சொல்வதைப் பொறுத்தவரையில், இப்பொழுது மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியது தவறு, அதில் உண்மையிருக்கிறதா என்கிற பேச்சு இப்பொழுது கிடையாது. எடுத்த எடுப்பில், 'ப்ரைமா ஃபேசி', முகத் தோற்றத்திலே, அவையின் கண்ணியத்தைப் பாதிக்கிறதா? அவர்கள் உள்கருத்து பின்னால் இருக்கட்டும். எடுத்த எடுப்பில் தவறு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விளக்கம் எனக்குக் கொடுக்க வேண்டும். நான் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னால் எனக்கு இருக்கும் மனச்சங்கடம் எல்லாம், அதிலே (லாங்வேஜ் பில்' என்று சொல்லி இருக்கிறது. (குறுக்கீடு) சொல்கிறேன். கேளுங்கள். 'பில்' என்றால், 1956-ம் வருஷம் திரு. சி. சுப்பிரமணியம் கொண்டுவந்து தமிழக ஆட்சி மொழி என்று செய்த சட்டம் 'மோசடி' என்று குறிப்பிட்டிருப்பது அதுவா அல்லது 'பில்' என்று இருப்பதால் வேறு எதுவுமா என்பது தெரியவேண்டும். 23—1—1968 அன்று, பள்ளிகளில் இந்தி வேண்டாம், தமிழும் ஆங்கிலமும் போதும் என்று நிறைவேற்றியது 'தீர்மானம்' தான். பில்' அல்ல. இங்கே குறிப்பிட்டு இருப்பது 'பில்' என்று இருப்பதால், எந்த பில்லைக் குறிப்பிட்டிருக்கிறது. இந்த ரெஸல்யுஷனையா அல்லது வேறு எதை என்பதைமட்டும் எனக்கு விளக்கம் சொல்லுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். (பலத்த ஆரவாரம்.)



1968 பிப்ரவரி 16]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, பத்திரிகையில் வந்ததாக கனம் அங்கத்தினர் இளம்வழுதி கொடுத்திருப்பது, "adopted by State Assembly" என்பது. அப்படிச் சொன்னால், அது சட்டசபையையோ அல்லது அதன் நடவடிக்கைகளையோ, கனம் அங்கத்தினர்களையோ பாதிக்கிறது என்பதாகாது. எந்தச் சட்டமும், எந்தத் தீர்மானமும் நிறைவேற்றியிருந்தால் அதை விமர்சனம் செய்ய உரிமை உண்டு. திரு. சுப்பிரமணியம் அவர்கள் எதை நினைத்துக்கொண்டு இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. இந்தச் சட்டசபையின் கண்ணியத்தையோ, நடவடிக்கைகளையோ அல்லது கனம் அங்கத்தினர்களையோ குறிப்பிடவில்லை என்றுதான் நினைக்கிறேன். நிறைவேற்றப்பட்டது பில்லோ, தீர்மானமோ, அதைப்பற்றி அக்கறைஇல்லை; அதைப்பற்றிச் சொல்வதற்கு உரிமை உண்டு. அவர்கள் ஃப்ராட, அரசியல் மோசடி, என்று சொல்வதற்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த அவையின் உரிமைபற்றிய தீர்மானத்தின் பேரில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பாக நான்கு முக்கியமான குறிப்புகளைச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது, நான் புரிந்துகொண்ட வரையில், முதலாவதாகப் பத்திரிகையில் வந்ததை வைத்துக்கொண்டு நாம் எந்த முடிவுக்கும் வரக் கூடாது; பத்திரிகைச் செய்தி தவறாக இருக்கலாம், அப்படி திரு. சுப்பிரமணியம் அது தவறு என்று சொன்னால், அந்தப் பத்திரிகையின் பேரில் உரிமைப் பிரச்சனை எழும். குற்றம் பத்திரிகை மீது இருக்கக்கூடும் என்றார்கள். திரு. இளம்வழுதி அவர்கள் பத்திரிகையையும் சேர்த்துதான் உரிமைப் பிரச்சனை கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் முடிவுக்கு வரவேண்டும். இரண்டாவதாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது, இந்த அசெம்பிளி, பேரவையைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்பதாகச் சொன்னார்கள். எனக்கு கொடுக்கப்பட்டுள்ள பிரதியில் 'ஸ்டேட் அசெம்பிளி' என்று இருக்கிறது. உறுப்பினர் இளம்வழுதியினுடைய பிரதியிலும் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "Passed by the State Assembly" என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே "adopted by the State Assembly" என்று இருக்கிறது. அது ஸ்டேட் அசெம்பிளியை குறிப்பிடவில்லை என்று சொல்லுகிறார்கள். மூன்றாவதாக, 'தீர்மானம்' எப்பொழுது முடிந்துவிட்டதோ, அப்பொழுதே பொது மக்கள் எல்லோருமே அதன்மீது கருத்துத் தெரிவிக்க உரிமை உண்டு என்கிறதான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நான்காவதாக அவர்கள் சொன்னது, 'ஃப்ராட்',

மோசடி என்று சொன்னால்கூட, அரசியல் என்கிற அடைமொழி முன்னால் இருப்பதால், மோசடி என்பதன் வேகம் குறைந்து விட்டது என்பதான நான்காவது குறிப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இப்படி நான்கு குறிப்புக்களைச் சொல்லியிருப்பதால், அவர்கள் சொல்லியபடி இருக்கிறதா இல்லையா என்று நானும் விதிகளைப் பார்த்து—நான் விதிகளை நுணுக்கமாகப் பார்க்கப்பட்டவன் என்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம்—திங்கட்கிழமை என்னுடைய முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (i) இராமநாதபுரம் மேல் பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்தல்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** சபாநாயகர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில், மேல் பகுதியில் பருவமழை தவறியதால் அரசாங்கம் உடனடியாக இந்த மாவட்டத்தை பஞ்சப் பிரதேசமாக பிரகடனம் செய்து கட்டாயக் கொள்முதலை நிறுத்துவது பற்றி விவாதிக்க வேண்டி இச்சபையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோருகின்றேன்" என்ற தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு, விதி 50, உள்விதி (8)-ன் படி, எனது இசைவைக் கொடுக்க மறுக்கிறேன்.

### (ii) சிதம்பரம் வட்ட நிலச்சுவாந்தார்கள்—விவசாயக் கூலிகள் தகராறு.

*** திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன். "சட்டப் பேரவையின் விதிகளின் 42-வது பிரிவின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க இச்சபையின் அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்ட ஊடையார் கிராமத்திலுள்ள நிலச்சுவாந்தார்களுக்கும் கூலி விவசாயிகளுக்கும் அறுவடைக் கூலி சம்பந்தமாக கடந்த 22—1—1968-ல் மாவட்ட கலெக்டர் முன்னால் ஏற்பட்ட ஒப்பந்தப்படி நிலச்சுவாந்தார்கள் கூலியைக் கொடுக்க மறுப்பதுடன், வெளியூர் ஆட்களை வைத்து போலீஸ் பந்தோபஸ்துடன் அறுவடை செய்து வருவது பற்றி விவாதிக்க".

இதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளும் சொல்ல விரும்புகிறேன். 22—1—1968-ம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்ட கூலியைக் கொடுக்க, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் டெபுடி தாசில்தார் அலுவலகத்தின் முன்னால் உண்ணா



விரதம் இருந்தார்கள். அதன் பேரில் அதிகாரிகள் தலையிட்டு வாக்குறுதி கொடுத்தார்கள், நிலச்சுவாந்தார்களை அந்தக் கூலியைக் கொடுக்கச் சொல்வதாக. ஆனால், நிலச்சுவாந்தார்கள் வெளியூர் ஆட்களைக் கொண்டு வந்து அறுவடை செய்கிறார்கள். அதன் காரணமாக பல விளைவுகள் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. அதன் பிற நிலச்சுவான்தார்கள், தங்களை மிரட்டினார்கள் என்கிற தவறான புகார்களைக் கொடுத்து, போலீசிலே சொல்லி 13 விவசாயிகளை ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். உடனடியாக இந்த விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்திற்கு உகந்த விதிகளுக்கு உட்பட்டது அல்ல என்பதைத் தெரிவிக்கிறேன். ஒரு பிரச்சினையை வலியுறுத்திச் சொல்லத்தான் இது பயன்படுகிறது. தொடர்ந்து நிலைமைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கடந்த மாதம் சிதம்பரம் தாலுகாவில் பல கிராமங்களில், கலெக்டர் செய்த உடன்பாட்டின்படி, மிராசுதார்களுக்கும், விவசாயிகளுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் இங்கே குறிப்பிடுவது போல, போலீசாரை வைத்து அறுவடை செய்தார்கள் என்றோ, அல்லது ஒரு பரபரப்பான சூழ்நிலை இருக்கிறது என்றோ சொல்வது சரியில்லை. 15 நிமிஷத்திற்கு முன்தான், நான் தென்னாற்காடு கலெக்டரோடு தொடர்பு கொண்டு கேட்ட நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள், அங்கே சுமுகமான நிலைதான் இருக்கிறது என்றும், இரண்டு தரப்பாருக்கும் எந்த வேறுபாடும் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கிற்கு ஊறுவராமல் பார்த்துக் கொள்ள இரண்டு போலீஸ்காரர்களை வைத்திருக்கிறது. அறுவடைசெய்ய பந்தோபஸ்துக்காக அல்ல. உள்ளூர், வெளியூர் விவசாயிகளைக் கொண்டு சுமுகமான முறையில் அறுவடை நடந்திருக்கிறது என்றும் அவர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்று இது. அரசாங்கம், விவசாயிகளிடமும், மிராசுதார்களிடமும், விவசாயத் தொழிலாளர்களிடமும் அக்கறை கொண்டவர்கள், அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற கனம் அங்கத்தினரை விட அதிக அக்கறை கொண்டவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே இந்தச் சட்டசபையை ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு முக்கியமானதல்ல இந்தத் தீர்மானம். இன்றைக்கு அங்கே சுமுகமான நிலைமை இருக்கிறது என்று 15 நிமிஷத்திற்கு முன்தான் கலெக்டர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம்தான் என்பதால், இதற்கு என்னுடைய இசைவு மறுக்கப்படுகிறது.

## (iii) கோவில்பட்டி வட்ட விவசாயிகளிடமிருந்து கடன் பாக்கிகளை மொத்தமாக வசூல் செய்தல்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன். "சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி பின்வரும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க பேரவையின் அலுவலை ஒத்திவைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்:

"நெல்லை மாவட்டம் கோவில்பட்டித் தாலுக்காவில் பருவ மழைக் கோளாறால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் விவசாயிகள் கட்ட வேண்டிய பம்புசெட் கடன், கிணறு வெட்ட வாங்கிய கடன் தவணைகளையும், பதினைந்து வருடங்களுக்கு முன் ஜமீன்தாருக்குச் சேரவேண்டியதாகச் சொல்லும் பாக்கிகளையும், மொத்தமாக வசூல் செய்ய ரெவின்யூ அதிகாரிகள் விவசாயிகளின் பம்புசெட்டுகள், ஆயில் இன்ஜின்கள், உழவு மாடுகள் இவைகளை ஜப்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை விவாதிக்க."

இது சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 15, 20 வருடங்களுக்கு முன்னால் எட்டையபுர ஜமீனுக்குச் சேரவேண்டியதாகச் சொல்லப்படும் பாக்கிகளை— முன்னால் இருந்த நிலத்தின் உடைமைகளையெல்லாம் வேறொருவருக்கு மாற்றி, அந்த நிலங்களெல்லாம் கைமாறிய பிறகும் கூட— இப்பொழுது வசூலிக்க முயற்சிக்கப்படுகிறது. இருபது வருஷ பழைய பாக்கிகளையும் இப்பொழுது வசூல் செய்வதற்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சென்ற இரண்டு வருஷங்களாகப் பருவ மழை தவறியதால், அரசாங்கமே ஒத்திவைத்த அந்தக் கடன் தவணைகளையும், இந்த வருடம் செலுத்தவேண்டிய கடன் தவணையையும் சேர்த்து இரண்டு மூன்று தவணைகளையும், பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இருந்த பாக்கிகளையும் ஒட்டு மொத்தமாகக் கொடுக்கவேண்டும் என்று விவசாயிகளைக் கட்டாயப் படுத்தி, அவர்கள் கொடுக்க முடியாத கஷ்டமான நிலை இருப்பதையும் பாராமல், அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அத்தியாவசியமாக உள்ள பம்பு செட்டுகளையும், ஆயில் என்ஜின்களையும் இயங்கவிடாமல் ஸீல் வைப்பதிலும், அவற்றை ஜப்தி செய்வதிலும் அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதால், விவசாயிகளுக்கு அதிகமான இன்னலை ஏற்படுத்துகிறது. ஆகவே, இது சம்பந்தமாக விவாதிப்பதற்கு அவை அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானமும் அரசாங்கத்தின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களில் ஒன்றாக இருந்தாலும்,



அவர்கள் சொன்ன வாதத்திற்கு முற்றிலும் மாறான செய்திகள் அங்கிருந்து இந்த அரசுக்கு வந்திருப்பதாலும், உறுப்பினர் அவர்கள் இதை ஒரு வியாஜ்யமாக ஆக்கிய காரணத்தாலும், அதைப்பற்றி சில வார்த்தைகள் இங்கே சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில்பட்டி தாலுக்காவில் பருவ மழை தவறிவிட்டது என்ற காரணத்தைக் காட்டி இந்த அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கோருகிறார்கள். ஆனால் பொதுவாகப் பருவ மழை கெட்டிருந்தாலும், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மற்ற இடங்களைக் காட்டிலும், கோவில்பட்டியில் ஓரளவு மழை பெய்து, ஏற்கனவே நல்லமுறையில் சீர்திருத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ள குளங்களிலெல்லாம் தண்ணீர் தேங்கும்படியான நிலை வந்திருக்கிறது. பத்தாயிரம் ஏக்கர் நெல் சாகுபடி இன்றைக்கு அறுவடையாவதற்குக் கோவில்பட்டித் தாலுக்காவில் தயாராய் இருக்கிறது. அங்கே அதிகமாகப் பயிராகிற பருத்தி, கம்பு போன்றவை நல்ல பயிராகத்தான் இருக்கின்றன. கொத்தமல்லி போன்றவை வேண்டுமானால் கொஞ்சம் சீர்கெட்டிருக்கலாம் என்ற நிலைமை இருக்கலாமே தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் மற்றப் பகுதிகளைப் பார்க்கும்போது, கோவில்பட்டி தாலுக்காவில் பருவ மழை ஓரளவு பெய்திருக்கிறது என்றே சொல்லலாம். அதன் காரணமாக, கண்மாய்கள் நிறைந்து, பாசன வசதி ஏற்பட்டு, பத்தாயிரம் ஏக்கர் பயிராகியிருக்கிற நிலை இருக்கிறது. சாதாரணமாகக் கடன் வசூலிக்கப்படுகிற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு, பேராபத்து இருக்கிறது என்று சொல்வது சரியான விவரங்களை அடிப்படையாக வைத்துச் சொல்லப்பட்டவை அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சற்று நேரத்திற்கு முன்னால், திருநெல்வேலி மாவட்டக் கலெக்டருடன் தொடர்பு கொண்டு விசாரித்து நிலைமையைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் கொடுக்கும் தகவல்களின்படி, திருநெல்வேலி மாவட்டத்தின் மற்ற இடங்களைக் காட்டிலும் கோவில்பட்டித் தாலுக்காவில் நிலைமை ஓரளவு நன்றாக இருக்கிறது என்றே தெரிய வருகிறது. உண்மையான கோரிக்கையாக இருந்தால் எப்போதும் இந்த அரசாங்கம் கவனிக்கத் தயாராக இருக்கும். ஆனால், அதையே ஒரு பொதுக் காரியமாக ஆக்குவது சரியானதல்ல என்று தெரிவித்துக் கொள்வதோடு, இது உடனடிப் பொது முக்கியமுள்ள குறிப்பிட்ட ஒரு காரியமல்ல. அவையை ஒத்திவைப்பதற்குரியதல்ல, ஆகவே, தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (iv) கோவையில் நடந்த சம்பவங்கள்.

*திரு. பி. ஜி. கருத்திருமன்:* சபாநாயகர் அவர்களே, நான் இம்மாதம் 12-ந் தேதியே அறிவிப்புக் கொடுத்திருந்த கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தீர்மானமாவது—

'The occurrence in Coimbatore on 8th February 1968, at the Congress Meeting held in the V.O.C. Park when indiscriminate throwing of stones and brickbats happened and Hon'ble Sri K. S. Ramaswamy, Union Deputy Home Minister received sevre injuries and the people were lathi-charged on the dais where Sri C. Subramaniam, President, Tamilnad Congress Committee, myself and other Congress leaders were standing.'

நடந்த நிகழ்ச்சி ஒன்றாக இருந்தாலுங்கூட, அதற் முன்னாலேயும், அதற்குப் பின்னாலேயும், 7-ந் தேதியிலிருந்து 14-ந் தேதி வரைக்கும், தொடர்ந்து இத்தகைய நிகழ்ச்சி நடந்து கொண்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் காங்கிரஸ் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தனவோ, எங்கெங்கெல்லாம் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசினார்களோ, அங்கெல்லாம் கறுப்புக் கொடி காட்டுவதும், கல் எறிவதும், மக்கள் அடிபட்டு ஓடிப்பட்டு இருப்பதையும் கண்ணால் பார்த்து வருகிறோம். அங்கு இருக்கும்படியான போலீஸ் இதைத் தடுப்பதற்கு வழிவகை செய்யாமல், கறுப்புக் கொடி காட்டுபவர்களுக்குத் துணை செய்பவர்களாக இருந்தார்களோ, ஆதரவு கொடுத்தார்களோ என்னும்படியான நிலை இருந்தது. நேரிலே பார்க்கும்படியான நிலை எனக்கு ஏற்பட்டது. பொள்ளாச்சிக் கூட்டத்தில் கல்லை வீசிக் கொண்டிருக்கும்போது போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கறுப்புக் கொடி காட்டும்படியான சமயத்தில், "முன்னாலே போய்க் கறுப்புக் கொடி காட்டுங்கள்" என்று சொன்னதை நானே நேரில் கேட்டுக் கொண்டிருந்தேன். வ.உ. சிதம்பரம் பிள்ளை பார்க்கில் கூட்டம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் மாணவர்கள் வந்தார்கள். மாணவர்கள் செய்யும்படியான செயலைக் குழந்தைகள் செயல் என்று கூட நாம் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தீய சக்திகள், சமூக விரோதிகள், அதைச் சாக்காக வைத்துக் கொண்டு, குழந்தைகளை முன்னாலே தள்ளிப் பின்னாலே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்குப் போலீஸ் சரியானபடி பாதுகாப்புக் கொடுக்காத, அல்லது தடுக்க முடியாத நிலையில் இருந்தார்கள் என்பதைத்தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கோவையில் நடந்த கூட்டத்தில் பெருவாரியாகக் கற்கள் வீசப்பட்டன. அப்பொழுது கற்கள் வீசியவர்களை அந்த இடத்தில் தடுக்கவில்லை. வேறு இடங்களில் மக்கள் ஆத்திரப்பட்டு, வீசும்படியான கற்களைத் தடுக்கும்படியான சமயத்தில், தடுக்கும்படியான மக்களுக்குத்தான் அடிதடி எல்லாம் விழுந்தது. மேடைமீது ஒரு பகுதி மக்கள் பாய்ந்து வந்தார்கள். பாய்ந்து வந்தபோது,



சார்ஜ் உத்தரவு செய்து, அடிக்கப்பட்டது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் நானும் அங்கிருந்த சமயத்தில் கூட்டத்திலே சிக்கிக் கொண்டோம். அப்பொழுது அவர்கள், "தடுப்பவர்களை அடிக்காதீர்கள், எங்களை அடியுங்கள்" என்று சொல்லி முன்னால் வந்த பிறகுதான் அடி நின்றது.

திண்டுக்கல்லில் மாநாடு ஒரு பந்தலில் நடந்தது. ஆனால், வெளியிலே இருந்தவர்களுக்கும் பந்தலுக்கும் சம்பந்தம் இல்லை. ஆயிரக்கணக்கான சமூக விரோத சக்திகளும் சில மாணவர்களும் கூடியிருந்தார்கள். தீப் பந்தம் எறியப்பட்டது. போலீஸ் தடுக்கவில்லை.

அதே மாதிரி, தூத்துக்குடியில் திரு. சி. சுப்பிரமணியம் போயிருந்த சமயத்தில், மாணவர்கள் என்ற சாக்கில் சமூக விரோத சக்திகள் கல் எடுத்துப் போட்டு, கார்களை நொறுக்கினார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? சட்டம், அமைதி, ஒழுங்கு பாதுகாக்கப்படவில்லை, தகுந்த நடவடிக்கை சர்க்கார் எடுக்கவில்லை. சில சமயங்களில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த அன்பர்கள் கூட தூண்டி விட்டதாகவும், பல இடங்களில் லாரிகளில் கொண்டுவந்து மக்களை இறக்கிவிட்டதாகவும், வதந்திகள் கிடைத்திருக்கின்றன. இவர்களுக்குத் தகுந்த கட்டுப்பாடு சொல்லி, ஆளுங் கட்சியில் இருக்கக் கூடியவர்கள், அவர்களுடைய நண்பர்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லியிருப்பார்களானால், ஒரு தரம் நடந்தது மீண்டும், நடந்திருக்காது. ஒரு தரம் செய்வதை மறுமுறையும் செய்வதற்குத்தான் போலீஸ் பாதுகாப்பாக இருந்ததே தவிர, அதைத் தடுப்பதற்காக இல்லை. சட்டம் காக்கப்படவில்லை. அமைதி நிலைநாட்டப்படவில்லை. எந்தப் பகுதியில் யார் வேண்டுமானாலும் பொதுக் கூட்டத்தைப் போட்டு, கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்க வேண்டும். இதே சட்ட மன்றத்தில், திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசும்போது, "திரு. கே. எஸ். ராமசாமி அவர்கள் அங்கே எதற்காகச் சென்றார்?" என்று கேட்டார்கள். நான் கேட்கிறேன்—"திரு. ராமசாமி அவர்கள் எதற்காக அங்கே சென்றார் என்று கேட்பதற்கு இவர் யார்?" என்னும்படியான கேள்வியை நான் கேட்கிறேன். இந்த நாட்டிலேயிருக்கும் ஒவ்வொரு குடிமகனும் எல்லா இடங்களுக்கும் போக உரிமை உண்டு; பேச உரிமை உண்டு; கருத்துக்களைச் சொல்ல உரிமை உண்டு. ஒருவருடைய கருத்துக்கள் மற்றவர்களுக்குப் பிடிக்காமலிருக்குமானால், அதை எதிர்த்துக் கறுப்புக் கொடி காட்டுவதிலும் எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது; அதற்கு உரிமை உண்டு. எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு உரிமை உண்டு. ஆனால், வன்முறைகளில் ஈடுபட வேண்டாம் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். ஜனநாயக நாட்டிலே ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கோ, மறுப்புத் தெரிவிப்பதற்கோ, கறுப்புக் கொடி காட்டுவதற்கோ உரிமை உண்டு. ஆனால், ஒரு வாரமாக நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, இப்பொழுது இருக்கும்படியான ஒரு நிலையில், சர்க்கார் தீவிரமான

நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள இதைக் குறித்து விவாதிக்கவேண்டும், விவாதித்துத்தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மத்திய உதவி அமைச்சர், அதுவும் போலீஸ் உதவி அமைச்சர் அவர்களுக்கே இந்தக் கதி என்றால், சாதாரணக் குடிமகனுக்கு எப்பேர்பட்ட நிலை இருக்கும், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது சட்டம், அமைதி, ஒழுங்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் குறித்து விவாதிப்பதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கு இந்தத் தீர்மானத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து இந்த அவையினுடைய நடவடிக்கைகள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டு, அந்தத் தீர்மானத்தை விவாதிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, விவாதிக்கக்கூடிய அளவுக்கு அவசியமான காரண காரிய விளக்கங்கள் இந்தத் தீர்மானத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டிலே ஒழுங்கு, சட்டம், அமைதி இவை எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும், நிலைநாட்டப்பட வேண்டுமென்றுதான் இந்த அரசு மிக அக்கறை எடுத்துக் கொண்டு வருகின்றது. இவற்றை நிலைநாட்ட எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றது, இனியும் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் சிலபல நிகழ்ச்சிகளின் காரணமாக மத்திய அரசின் துணை அமைச்சர் தாக்கப்பட்டதன் விளைவுகளைக் குறித்து அறிஞர் அண்ணா அவர்களும் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரியான நிகழ்ச்சிகள் யாராலும் விரும்பத்தக்கதல்ல. ஜனநாயக நாட்டிலே கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். அந்தக் கருத்துவேறுபாடுகளை, ஒருவருடன் ஒருவர் கலந்துபேசி விவாதிப்பதன் மூலமாகத்தான் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை எல்லாக்கட்சி சார்பினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை எல்லா ஜனநாயகவாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

காவல் துறையினர் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சிலபல முறைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறை, ஆட்சித் துறை, நிர்வாகத் துறை இவையெல்லாம் தொடர்ந்து இருக்கக்கூடியவை. ஆட்சி வரும்--ஆட்சி போகும். இந்தத் துறைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற, முறை வகுக்கப்பட்டு செயல்புரிகின்றன. சட்டம், ஒழுங்கு, அமைதி காக்கப்பட வேண்டும் என்பதை நான் எதிர்க் கட்சித் தலைவரைப் பணிபுரிந்த





நேரத்திலும் சொல்லியிருக்கிறேன். அண்மையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் விளைவுகளுக்காக நாம் மிகுந்த வருத்தமும் தெரிவித்திருக்கிறோம். சிலபல நேரங்களில் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் கட்டுக்கடங்காமல், கட்டுமீறிப் போவதை நாம் பன்னெடுங்காலமாகவே பார்த்து வந்திருக்கிறோம். இந்தியாவை வெள்ளைக்காரர்கள் ஆண்ட 1920-21-ம் ஆண்டுக் காலத்திலிருந்து அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் தொடர்ந்து வருகின்றன.

கோயம்புத்தூரிலும், திண்டுக்கல்லிலும் காவல் துறையினர் தங்களுடைய முறைப்படி என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அவற்றை யெல்லாம் ஒழுங்காக எடுத்து வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், உயர்திரு. சி. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றிய கூட்டங்கள் கலைக்கப்பட வேண்டும். அவை நடக்கவிடக் கூடாது என்ற மனப்பான்மையில் காவல் துறையினர் நடந்துகொள்ளவில்லை. திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்தில் நமக்கு மிக்க மதிப்பு உண்டு. இதை அண்ணா அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இதற்கு முன்னால் தமிழகத்திலுள்ள எல்லா ஊர்களுக்கும் சென்றிருக்கிறார். எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். அவர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னாலும், பின்னாலும் பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறார். அப்போதெல்லாம் இம்மாதிரியான நிலைமை ஏற்படவில்லை. சிலபல நேரங்களில் நிலைமை கட்டுக்கு மீறிவிடுகின்ற தன்மையைப் பார்க்கிறோம்.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறிய 'கூற்றை' அடிப்படையாக வைத்து மாணவர்கள் கொதித்து எழும் நிலையையும், அதன் காரணமாக நிலைமை கட்டுக்கடங்காத முறையில் போய்விட்டது என்பதையும் நாம் காணலாம். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் கூற்று மாணவர்களின் மனம் புண்படுவதாக இருக்கிறது என்று மாணவர்களின் சார்பில் கூறப்படுகிறது. 'ஆட்சியாளர்கள் எடுத்துக் கூறிய பிறகும் மாணவர்கள் போராட்டம் அடங்கவில்லையே' என்று கூறுகிறார்கள். இம்மாதிரியான ஒரு நிலைமை வந்த பிறகு அதைக் கட்டுப்படுத்தி, அதைச் சரிப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் கூற்றும் அதைத் தொடர்ந்து நடந்து வரும் நிகழ்ச்சிகளையும் நாம் பார்க்கிறோம். இதைக் கட்டுப்படுத்துவதற்கும் மட்டுப்படுத்துவதற்கும் காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

அண்மையில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கும், விவேகானந்தா கல்லூரி மாணவர்களுக்கும் ஒரு தகராறு ஏற்பட்டு, அதில் விவேகானந்தா கல்லூரி மாணவர் ஒருவரை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அடித்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. உடனே விவேகானந்தா கல்லூரி மாணவர்கள்

கல்லூரிக்குப் போகாமல், அப்போது இருந்த பேராசிரியரும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாகக் கண்டனம் தெரிவித்துக் கொண்டு கூட்டமாக வந்தார்கள். இதைப்பற்றிய செய்தி 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகையில் வந்திருந்தது. தங்கள் கல்லூரியைக் குற்றஞ்சாட்டி அந்தப் பத்திரிகை எழுதிற்று என்பதாக அந்தப் பத்திரிகாலயத்தை கல்லூரி மாணவர்கள் முற்றுகையிட்டு, 'செய்தியை வாபஸ் பெற வேண்டும், பத்திரிகை ஆசிரியர் மன்னிப்பு கோர வேண்டும்' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இந்த நிலைமையைக் கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களையும், பத்திரிகை ஆசிரியரையும் கலந்துபேசி மாணவர்களின் கொதிப்பு நிலையைத் தீர்த்து வைத்தார்கள். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் கொதித்து எழுகின்ற நிலைமையை நாம் பார்க்கின்றோம்.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்களே உணர்ந்து, "தான் கூறிய கூற்று மாணவர்களின் மனம் புண்படுவதாக இருந்தால் அதைத் திரும்பப் பெறுகிறேன்" என்று கூறினார். அதன் பின்னர்தான் இப்போது அமைதி ஏற்படும் சூழ்நிலை இரண்டொரு நாட்களாக உருவாகிக் கொண்டு வருகிறது. கோவையில் காவல் துறையினர் தங்களுடைய முயற்சிகள் அத்தனையையும் செய்து நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். திரு. சி. சுப்பிரமணியத்துடன் கலந்து பேசியிருக்கிறார்கள். மத்திய அரசு அமைச்சர் திரு. ராமசாமி அவர்கள் வந்திருந்தபோது மாணவர்கள் கறுப்புக் கொடி காட்ட வந்தார்கள் என்றும், முதலில் அமைச்சருடைய கார் போய் விட்டதென்றும், அதை மாணவர்கள் பார்க்காததால் காரை நோக்கி மாணவர்கள் ஓடி வந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, திரும்பவும் மத்திய மந்திரியுடன், டி.ஐ.ஜி. அவர்களின் துணையுடன் வந்தார். மாணவர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள். யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் கல்லெறியப்பட்டது என்று கூறப்படுகிறது.

நான் அண்மையில் வேலூருக்குச் சென்றபோது எனக்குக்கூட கறுப்புக்கொடி காட்டினார்கள். கறுப்புக்கொடி காட்ட வந்திருப்பவர்களுக்கு ஒரு தனி இடம் கொடுக்கப்பட்டிருந்தது. நான் வந்தவுடனே கறுப்புக்கொடி காட்டினார்கள். நானும், 'ஏதோ நமக்கு மரியாதை காட்டுகிறார்களே, நாமும் மரியாதை செய்ய வேண்டும், என்ற எண்ணத்தில் ஒரு கும்பிடு போட்டு விட்டுச் சென்றேன். பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் குடியாத்தத்திற்குப் போனபோதுகூட கறுப்புக்கொடி காட்டினார்கள்.

திண்டுக்கல்லில் கூட்டத்தைக் கட்டுப்படுத்த போலீஸார் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். காங்கிரஸ் பந்தலில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக தடியடி நடத்தப்பட்டு, அதில் 11, 12, மாணவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்





கிறார்கள். முதலில் ஒரு குழுவாக இருந்தது, 'மாபாக' மாறி, பின்னர் 'ரையட்டாக' மாறாமல் இருக்கத்தான் போலீஸார் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலின்போது பலத்த கட்டுக்காவல் இருந்த நேரத்திலும், அப்பொழுது ஏற்பட்ட நிலைமை காரணமாக கல்லெறியப்பட்டு, திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் மூக்கில் காயம் ஏற்பட்டது. இது திட்டமிட்டுச் செய்கிற காரியம் அல்ல. அண்ணல் காந்தியார் அவர்களும் தகுந்த பாதுகாப்புடன் இருந்த போது பெருங்கூட்டத்தில் ஒருவனால் சுடப்பட்டு மாண்ட நிலைமையைப் பார்க்கிறோம்.

கோவையில் நடந்த நிகழ்ச்சிபற்றி உள்ளபடியே இந்த அரசு வருந்துகிறது. போலீஸாரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் அவரவர்களுடைய முறைப்படியான நடவடிக்கைகளை எங்கெங்கு எடுக்க வேண்டுமோ அதைச் செய்திருக்கிறார்கள். நேற்றைய தினம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்திற்கு எந்தவிதத் தடங்கலும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக எவ்வளவு பாதுகாப்புத்தர வேண்டுமோ அவ்வளவையும் தந்திருக்கிறோம். எந்த அரசியல் தலைவராக இருந்தாலும் அமைதி நிலவ வேண்டும் என்ற முறையில்தான் இந்த அரசு சொறுப்பு ஏற்றுக் கொண்டு வருகிறது. எந்த ஆட்சியிலும் அமைதி நிலவ வேண்டும்.

மதுரையில் நடந்த ஒரு மாநாட்டில் பெரியார் ராமசாமி அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்ட நேரத்தில் அப்போதிருந்த நிலைமையைக் கண்டு 12 மணியோடு கூட்டத்தை முடித்துவிடுங்கள் என்று காவல் துறையினர் கூறினர். நாங்களும் கூட்டத்தை முடித்துவிட்டோம். வைகை ஆற்றில் போடப்பட்டிருந்த பந்தல் எரிந்து சாம்பலாகிவிட்டது. இம்மாதிரிப் பல மு. ப.
சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நானும் இருபத்தைந்து ஆண்டு 11-30
களாகப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வந்திருக்கிறேன். கல்லெறிதலையும், குழப்பம் விளைவிப்பதையும் நான் பார்த்து வந்திருக்கிறேன். ஆகவே, காவல்துறையினர் தங்கள் கடமைகளை ஆற்றவில்லை என்று சொல்வதிற்கில்லை. அவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கட்டுப்பாட்டையும் மீறிய நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதன் காரணமாகச் சட்டம், அமைதி குலைந்து விட்டது என்கிற நிலைமை இல்லை. சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றை நிலைநாட்ட எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுதான் இருக்கின்றன. இனியும் எடுத்துக்கொள்ளப்பட்டுதான் வரும். இது இந்த அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகப் பொறுப்பாகவும் அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சபையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்கு அவசியம் இல்லை. இது பற்றி நிறையப் பேசுவதற்கு ஆளுநர் உரையின் மீது விவாதம் நடந்து

கொண்டிருக்கிறபோதே வாய்ப்பு இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் தம் உரையில் எடுத்துச் சொல்லலாம். இன்னும் பட்ஜெட் கூட்டம் வருகிறபோதும் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக, போலீஸ் மானியத்தின் மீது இதுபற்றி மாண்புறு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மத்திய அரசின் துணை அமைச்சர் காயம்பட்ட நிகழ்ச்சி குறித்து முதல் அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளார்கள் என்பதாக நமது அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். கல் எறி அல்லது கட்டி. போன்றவைகளை எடுத்து எறிதல் காரணமாகவும், போலிசார் தடியடி பற்றியும் இந்தப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவும் அனுமதிப்பதில்லை என்பதாக முந்திய இந்தப் பேரவைத் தலைவர்கள் பல முறை தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். 7-5-1952-ல், 15-7-1953-ல், 18-8-1956-ல், 29-9-1956-ல் தீர்ப்புக்கொடுத்திருக்கிறார்கள். 1963 ஆம் வருடம் ஏழாவது பிரிவில் 123 ஆம் பக்கத்தில் கூட இதே தீர்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பார்க்கலாம். அவர்களுடைய தீர்ப்பைப் பின்பற்றியே நானும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து இந்தப் பேரவை முன்னவர் 1967-68-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டை அளிப்பார்கள்.

### 4. 1967-68-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை அளித்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1967-68-ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இப்பேரவையின் முன்வைப்பதற்காக முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கையொன்று மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மானியக் கோரிக்கையின் மொத்தத் தொகை ஏறக் குறைய 41 கோடியே 82 லட்சம் ரூபாயாகும். இதில் 11 கோடியே 60 லட்சம் ரூபாய், நடைமுறைக் (Revenue) கணக்கின்கீழ் வருகிறது. கடந்த ஜூன் திங்களில் நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கியுள்ள "புதுப் பணித்" திட்டங்களும் இந்தத் துணை மதிப் பீடுகளில் அடங்குகின்றன. இத் தறுவாயைப் பயன் படுத்தி பல்வேறு துறைகளில் நாளது தேதி வரையில் செய்துள்ள செலவினங்களைக் குறித்து ஆய்வு செய்து, நடப்பு ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் தோன்றக் கூடிய செலவின உயர்வுகளுக்கும் வகை செய்யப் பட்டுள்ளது.





இத்துணை மதிப்பீடுகளில் காணும் மிகப் பெரிய கோரிக்கை, அரசாங்க வாணிபத்திற்கான மூலதன முதலீட்டைப் பற்றியதாகும். சட்ட பூர்வமான பங்கீட்டுப் பகுதிகளிலும், அவ்வாறல்லாத ஏனைய பங்கீட்டுப் பகுதிகளிலும், உணவுப் பொருள்கள் தங்கு தடையின்றிக் கிட்டும் வகையில், நடப்பு ஆண்டில் கொள்முதல் செய்வதை அரசு மும்முரப்படுத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இதற்கிணங்க, அரிசி கொள்முதலுக்காக எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவுகளுக்கென இக் கோரிக்கையின்கீழ் 9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் சர்க்கரை வேண்டுவோர்க்கு அதனை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செம்மைப்படுத்த அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, அரசாங்கக் கணக்கில் சர்க்கரை வாணிப நடவடிக்கைகளின் அளவு விரிவடைந்திருப்பதற்கிணங்க, 3 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. சர்க்கரை இருப்புகளை விற்பனைக்கு அனுப்பும்போது இத் தொகைகள் வசூலிக்கப்பட்டு விடுமாதலால், அவை அரசாங்க நிதி நிலையில் எந்த விதமான விளைவையும் ஏற்படுத்த மாட்டா. இவ் வண்ணமே, நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள உர இருப்புகளுக்காக, இந்திய அரசிற்குச் செலுத்த வேண்டிய தொகைக்காக 8 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்குமாறு இப்போது வேண்டப் படுகிறது. இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கமும் உர வகைகளின் விற்பனை வாயிலாகக் கிடைக்கும் வரவினங்களின் மூலம் சரிக்கட்டப்படும்.

துணை மதிப்பீடுகளில் வேண்டப்படுகிற நிதி ஒதுக்கங்களில் பெரும் பகுதி, நடப்பு ஆண்டிற்கான திட்டத்திலே, முன்பு ஒதுக்கப்பட்டிருந்த முதலீடுகளைவிட இப்போது அதிக அளவில் முதலீடு செய்யக் கருதியுள்ள துறைகளைப்பற்றியதாகும். கடந்த ஜூன் திங்களில் இப் பேரவையின் முன் வைக்கப்பட்டிருந்த வரவு-செலவுத் திட்டத்துடன் வகுக்கப்பட்ட 1967-68-ம் ஆண்டுத் திட்டத்திற்கென 85 கோடியே 28 லட்சம் ரூபாய் முதலீடு செய்யக் கருதியிருந்ததை நினைவு கூறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளிலிருந்து உருவாகக்கூடிய திட்டம் 88 கோடி ரூபாய் அளவில் இருக்குமென எதிர்பார்க்கிறோம். மின்சாரம், சிறுபாசனம், மீனளங்கள் போன்ற முதன்மை அளிக்க வேண்டிய துறைகளின் கீழ் மேலும் அதிக அளவில் முதலீடு செய்திருப்பதுதான், திட்ட முதலீடு உயர்ந்திருப்பதற்கு முக்கிய காரணமாகும். நடப்பு ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலதனச் செலவு 30 கோடியே 60 லட்சம் ரூபாய் அளவில் இருக்குமென மதிப்பிடப் பட்டதற்கு மாறாக, இப்போது அதன் மூலதனச் செலவு 33 கோடியே 60 லட்சம் ரூபாய் அளவில் நிற்குமென எதிர்பார்க்கிறோம். எண்ணூர் அனல் மின் நிலையத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவரும் விரைவிற்கிணங்க,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 பிப்ரவரி 16

அத் திட்டத்திற்கான முதலீடு 9 கோடியே 80 லட்சம் ரூபாயிலிருந்து 11 கோடியே 80 லட்சம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. கிராம மின் வசதித் திட்டங்களுக்காக மேலும் 1½ கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சாரத் திட்டங்களுக்கான முதலீடு உயர்ந்திருப்பதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 3 கோடியே 77 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கடன் உதவி அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 47-வது கோரிக்கையின் கீழ் இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்கள் வாங்கக் கடன்கள் வழங்குதல் போன்ற திட்டங்களின் கீழ் நமது நிதி வரம்பிற்குட்பட்டு நம்மாலியன்ற பேரளவுத் தொகையை ஒதுக்கியிருந்தாலும், உழவர்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு நோக்கும்போது இது எவ்வளவோ குறைந்துள்ளது என்பதை நாம் உணர்வோம். எனவே ஆயுள் காப்புறுதிக் கழகம், வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்று, இந் நிதி ஒதுக்கங்களைப் பெருக்க முற்பட்டுள்ளோம். இந்த நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவியை மத்திய நில அடமான வங்கி பெறும் பொருட்டு, ஏற்கப்பட்டுள்ள திட்டத்தின் பகுதியாக, அவ் வங்கியின் கடன் ஈட்டு ஆவணங்களில் (debentures) 134 லட்சம் ரூபாய் முதலீடு செய்வதற்கு வகை செய்துள்ளோம். இத் தொகையின் பெரும்பகுதி ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டுவிட்டது. இத் திட்டத்திற்கென, மத்திய அரசிடமிருந்து இது வரை 67 லட்சம் ரூபாய் சிறப்புக் கடன் உதவி கிட்டியுள்ளது. அடுத்த ஆண்டில் இத்தகைய நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவியை மேலும் அதிக அளவில் பெறக் கருதுகிறோம். மீனளங்களின் கீழ், விசைப் படகுகளைக் கட்டி வழங்கும் திட்டத்தில் முதற்கண் நாம் வழங்கக் கருதியிருந்த படகுகளைவிட அதிக எண்ணிக்கையுள்ள படகுகளை வழங்குவதற்காக, 17-வது கோரிக்கையின் கீழ் 45 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது.

அடுத்தபடியாக நடைமுறைக் (Revenue) கணக்கில், சென்னை மாநகரிலுள்ள மாநில அரசாங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நகர ஈட்டுப் படிக்காகும் செலவிற்கென வெவ்வேறு கோரிக்கைகளின்கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்டிருப்பார்கள். இக் கணக்கில், ஒரு முழு ஆண்டில், 75 லட்சம் ரூபாய் அளவில் செலவாகும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது முற்றிலும் எதிரொளிப்பதைக் காணலாம். கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கென இப்போது 43.5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு இத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தை தன் செலவிலேயே வாங்கி வழங்குவதாக அளித்த வாக்குறுதி அனைத்தையும் மாநில



1968 பிப்ரவரி 16] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அரசு நிறைவேற்றியுள்ளது. இந்திய அரசும் தனது பங்கில், இத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்காகப் போதிய நிதி வசதிகளை ஒதுக்கித் தருமென நம்புகிறேன். காவல் துறையின் கீழ், பணியாளர் செலவுகளுக்கான நிதித் தேவைகள் உயர்ந்திருப்பது ஒருபுறமிருக்க, படைக்கலங்கள், வெடி மருந்துகள் இவற்றை வாங்குவதற்கும் பேருந்து வண்டிகளைப் பேணி வருவதற்கும் முன்பு எதிர்பார்த்த செலவினத்தைவிட அதிகச் செலவினத்திற்காக இப்போது நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. முந்திய ஆண்டுகளில் இவற்றை இத்துறைக்கு வழங்கியதற்கான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு இந்த நிதி ஒதுக்கத்தில் கணிசமான பகுதி தேவைப்படுகிறது. மருத்துவத் துறையின்கீழ், பற்பல அரசாங்க மருத்துவ மனைகளின் தற்போதைய தேவைகளுக்கேற்ப, மருந்து வகைகள், உணவுப் பண்டங்கள், மருத்துவ மனைக்குரிய ஏனைய தேவைகள் இவற்றிற்கென மேலும் அதிக அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்கள் தலைப்பில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ள பெருந்தொகை, உண்மையில் செலவினமாக அமையாது; ஏனெனில் அது முக்கியமாய் மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இம் மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு பயன்படுத்தப்படும். இம்மூலப்பொருள்கள் மதுரையிலுள்ள மூலப்பொருள்கள் கிடங்கின் மூலமாகவும், கிண்டியிலுள்ள பணி நிலையத்தின் மூலமாகவும் பற்பல தொழிற் பிரிவுகளுக்குப் பிறகு விற்பனை செய்யப்படும். இப் பிரிவுகள் தமிழ்நாடு சிறு தொழில்கள் கழகத்திடமிருந்து அண்மையில் அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால். இவற்றின் வாணிபம் காரணமாக நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் எத்தகையான நிதி ஒதுக்கமும் செய்ய இயலவில்லை. சாலை, நீர் வழிப் போக்குவரத்துத் தலைப்பின் கீழ், அத் துறையின் பணிகள் பெரிதும் விரிவடைந்திருப்பதால், வேண்டப்பட்டுள்ள கூடுதல் நிதி ஒதுக்கமும், கிட்டும் அதிக வரவினங்களிலிருந்து சரிக்கட்டப்படும். இவ்வரசு மேற்கொண்ட துயர்துடைக்கும் முக்கியமான ஒரு பணி, சட்டப்படியான உணவுப் பங்கீட்டுப் பகுதிகளான சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், கோவையிலும் ரூபாய்க்கொரு படி அரிசி வழங்கும் திட்டமென்பதை இம் மன்றம் நன்கு அறிந்திருக்கிறது. இதற்கென, இவ்வாண்டின் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில், 5 கோடி ரூபாய் "124. அரசு வாணிபத்திற்கான மூலதனச் செலவின்" கீழ் வகை செய்யப்பட்டிருந்தது. நடைமுறைக் (Revenue) கணக்கில் இதற்கேற்ற தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டிருந்தது. நடைமுறையில் இருந்துவரும் உதவித் திட்டத்திற்கான மொத்தச் செலவு 5 கோடியே 10 லட்சம் ரூபாய் ஆக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இச் செலவு முழுவதையும் நடைமுறைக் கணக்கின்கீழ் எழுத இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறோம். எனவே, 33-வது கோரிக்கையின்கீழ் 5 கோடியே 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது.

மூலதனக் கணக்கின்கீழ், உழவர்கள், இரசாயன உர வகைகளை வாங்குவதற்கும் (50 லட்சம் ரூபாய்) நிலத்தைப் பண்படுத்துவதற்கான கடன்கள், வேளாண்மைக் கடன்கள் சட்டங்களின்கீழ் கடன்கள் வழங்குவதற்கும் (19 லட்சம் ரூபாய்) "கடன்கள்—முன் பணத் தொகைகள்" என்கிற தலைப்பில் அதிக அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்களென உறுதியாக நம்புகின்றேன். பெருந்தொகை ஒதுக்கப்பட்டிருக்கும் மற்றொரு இனம் 1961-ம் ஆண்டு தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கான ஒரு கோடியே பதினொரு லட்சம் ரூபாயாகும். இந்த இழப்பீட்டுத் தொகைகள், முக்கியமாக, 10 ஆண்டுக்கால அளவில் ரொக்கமாக மாற்றிக்கொள்ளும் வகையில் உள்ள கடன் பத்திரங்கள் வடிவில் வழங்கப்படும். எனவே, இதற்கென 37-வது கோரிக்கையின்கீழ் வேண்டப்படும் நிதி ஒதுக்கங்களால் நடப்பு ஆண்டில் மாநில அரசின் நிதி வசதி நிலை அதிக அளவிற்கு இறுக்கம் அடையாது. திட்டத்தில் சேராத மற்றொரு பெரிய செலவினம், மண்டபத்தில் இலங்கை அரசிற்குச் சொந்தமான சில கட்டிடங்களை நமது அரசு எடுத்துக் கொண்டதற்காக அக் கட்டிடங்களின் கிரயத் தொகைக்காக 42-வது கோரிக்கையின்கீழ் 19 லட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டதாகும்.

மணலியைச் சுற்றித் தொழில் வளங்களை விரைந்து பெருக்குவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு விறுவிறுப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்த்து இப்பேரவை களிப்படையுமென்று நம்புகின்றேன். சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்காக (Madras Refineries) நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப் பெற்றுள்ளது. இதற்கு நடப்பு ஆண்டில் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிற 40 லட்ச ரூபாய்ச் செலவினம் தற்போதைய துணை மதிப்பீடுகளில் 42-வது கோரிக்கையின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மற்றும் இப் பகுதியில் நிலத்திற்கடியிலுள்ள நீர் வளங்களை ஆய்வதற்காகப் பயன்படும் கருவிகளை வாங்குவதற்கு 18.5 லட்சம் ரூபாயும், இன்றியமையாத சில சாலைகளை அமைப்பதற்கு 15 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறோம்.

ஏனைய தலைப்புகளின்கீழ் வகை செய்யக் கருதியுள்ள கூடுதல் நிதி ஒதுக்கங்கள் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு மேல் இயல்பாக ஏற்படும் செலவின உயர்வினையே பொதுவாக எதிரொலிக்கின்றனவாதலின், அவற்றிற்குச் சிறப்பான விளக்கம் ஏதும் தேவையில்லை யென்று கூறி, இந்த முதல் துணை மதிப்பீடுகளை ஏற்குமாறு இப் பேரவையை வேண்டிக் கொள்கிறேன்.





## 5. ஆளுநரின் பேருரை மீது விவாதம் (தொடர்ச்சி.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த அலுவல், ஆளுநர் பேருரையின்மீது விவாதம் தொடங்குகிறது. ஆளுநர் அவர்கள் பேருரைக்கு நன்றியுரை கூறும் தீர்மானத்திற்குத் திருத்த தீர்மானங்கள் இப்பொழுது முன்மொழியப்பட்டு வழிமொழியப்படும். இத் திருத்தத் தீர்மானங்கள் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move—

*Add* at the end, the following :—

'but regret to note—

(1) that no reference has been made regarding the Law and Order situation in general and the deterioration of the Law and Order situation during the last two weeks and the failure to give adequate protection to the Union Deputy Home Minister at Coimbatore and to the Tamilnad Congress Committee President.

(2) that no reference has been made about the growing unemployment of the educated young men;

(3) that no reference has been made about the relationship of the employer and employee in the industrial sector and the mounting labour unrest which retards production;

(4) that no reference has been made regarding the extension of one Rupee a measure scheme throughout the rural areas of the State and bringing down the price level;

(5) that no reference has been made about the payment of fair prices to the producers of food grains to augument production;

(6) that no positive steps have been outlined to hold up the soaring price level of all essential commodities; and

(7) that no mention has been made about the Developmental work in rural areas namely Panchayats and Panchayat Union Councils.'

THIRU K. VINAYAKAM : Sir, I second it.

DR. H. V. HANDE : Sir, I move—

*Add* at the end, the following :—

'but regret to note—

(1) that the Governor's Address does not make any mention of the fact that this Government has caused great alarm in the minds of the students as well as the parents by threatening to remove English from the medium of instruction in Government Colleges from the next academic year;

(2) that a measure of this type contemplated by this Government does incalculable harm to the furtherance of the prospects of the student community for higher studies and also in the matter of seeking openings in the Centre; and

(3) that the Governor's Address is also silent on the protection given to the minority languages such as Telugu, Urdu, Malayalam and Kannada, all of them being languages regularly in vogue even before the creation of Madras Presidency (Old Composite State) a few decades ago.'

The amendment was duly seconded.

THIRU J. JAMES : Sir, I move—

*Add* at the end, the following :—

' but regret to note—

(1) that no mention is made in the Governor's Address about the growing unemployment among the educated in this State;

(2) that no mention is made about the schemes of the Government if any, for the welfare of the labourers of the land such as agricultural labourers, plantation labourers and the handloom weavers, etc.

(3) that no mention is made in the Governor's Address about the failure of crops in the Kanyakumari District due to the failure of the North East monsoon;

(4) the failure to refer in the Address about the three thousand Hindi teachers affected by the present language policy of the Government and about the 400 bee field men ousted from service by the Government.'

THIRU G. GOMOTHYSANKARA DIKSHIDAR : Sir, I second it.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move—

*Add* at the end, the following :—

' but regret to note—

(1) the failure to mention about fixing Fair Rent to the agriculturists and fair price to the agricultural produce (food crops), i.e., the price fixed after taking into consideration the agricultural labour, manure, capital investment, etc., and thereby relieve the agriculturist from his losing industry;

(2) the failure to mention the self contradicting resolution passed by this House over the language issue, confused situation created out of the same as also the bleak future that await our students as a result of the resolution;

(3) the failure to mention the failure of this Government to take steps to foster the industrial development of this State in both the private and public sectors by effectively solving the labour disputes in industries;

(4) that no mention has been made about the uplift of Harijans and Backward Classes, extension of the One Rupee a measure scheme throughout the State, abolition of land tax on wet lands and free education up to University level;



(5) that there is no mention about the improper manner in which the Government servants engaged themselves to collect funds for the " II World Tamil Conference "; and

(6) that no mention has been made of the failure of the Law and Order situation in the State for the past six months in the form of setting fire and destroying the Central Government's property and that of the public in general under the disguise of Anti Hindi Agitation, open violence in the functions and public meetings in which Leaders of the Congress Party participate and the failure of this Government to safeguard and protect our Central Ministers during their visit to this Sate.'

The amendment was duly seconded.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட திருத்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

'கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டதால் அவதியுறும் நெசவாளர்களுக்கு அரசாங்கம் துவக்கும் பெரிய ஆலைகளில் முதல் சலுகை அளித்து வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைப் பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது.'

**திரு. சோ. அழகர்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I move—

*Add* at the end, the following :—

' but regret to note—

(1) that the Address of the Governor does not mention about the concrete steps that would be taken by the Government to bring down the general level of prices of consumer goods prevailing in the State;

(2) that it does not mention about the steps that should be taken to extend the ' One rupee a measure ' rice scheme for the entire State, and

(3) that it does not give an assurance to continue and retain English as a medium of instruction in the technical institutions like Medical Colleges, Engineering Colleges, Polytechnics and Law Colleges. "

The amendment was duly seconded.

THIRU V. GEORGE : Sir, I move—

*Add* at the end, the following :

' but regret to note the manner in which the entire blame for the failure of the Government is tried to be shifted on the Central Government and the omission to state anything with regard to the extension of One Rupee a measure scheme to the entire State and with regard to Harijan Welfare Schemes and the failure to

லட்சத்திற்கும் அதிகமான மக்களின் வாழ்க்கைநிலே மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதையும் இந்த நெருக்கடியைப் போக்க அரசு எடுத்துக்கொள்ளப்போகும் நடவடிக்கையைப்பற்றியும் குறிப்பிடாமல் விட்டது வருந்தத்தக்கது."

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** கீழ்க்கண்ட திருத்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

" இருப்பினும், மாநிலத்தில் உள்ள ஆதி திராவிட பழங்குடி மக்களின் கல்வி, அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்கும் குறிப்பாகத் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படவேண்டிய குறிப்பு எதும் சேர்க்காதது வருந்தத் தக்கது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** கீழ்க்கண்ட திருத்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

" இருப்பினும்—

(1) அரசியல் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளை எந்த நிலையிலும் பாதுகாக்கவும்,

(2) நமது இராஜ்யத்தின் பஞ்சாலைகள், இஞ்சினியர்கள் போன்ற தொழில்களில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் காரணமாக, தொழிலாளர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் பாதுகாக்கவும்,

(3) கார்ப்பரேஷன் குடும்பக் கார்டு முறை இருக்கின்ற பகுதிகளில் உணவு வினியோக அளவை அதிகப்படுத்துவதோடு இந்த முறை இல்லாத இடங்களுக்கும் விஸ்தரிக்கவும்,

(4) விவசாயத்திற்கு லாயக்கான காலியாகக் கிடக்கும் எல்லா நிலங்களையும் நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கி அவர்கள் விவசாயம் செய்வதற்குத் தேவையான எல்லாவித உதவிகளைச் செய்யவும்,

(5) அனைவரும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவும் ஆன குறிப்புக்கள் ஏதும் சேர்க்கப்படாதது வருந்தத்தக்கது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—





இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

" இருப்பினும், கீழ் பவானித் திட்டப் பகுதியில் மாற்று முறை மூலம் (Turn S.s'e.n) நீர்ப்பாசனம் அமலாக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கின்ற நிலைக்கு மாறாக, இரண்டாம் பயிருக்குத் தண்ணீர் விட இயலவில்லை என்று உரையில் குறிப்பிட்டு இருப்பது வருந்தத்தக்கது."

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இப்பொழுது உரையாற்றுவார்கள்.

* **திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் முன்மொழிந்துள்ள ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் மனநிறைவுடன் வரவேற்கிறேன். இந்த உரை பற்றியும் உரையையொட்டியும் என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரையிலே உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்புக்களைப்பற்றியும், அதன்காரணமாக தமிழ் மொழி அடைந்துள்ள பெருமையினையும் பற்றிக் குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார்கள். இது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. நான் கடந்த ஆண்டு கவர்னர் அவர்களின் உரையின்மீது பேசியபோது நடந்த விவாதத்தில் குறிப்பிட்ட மாதிரி தமிழ் மொழி தெரிந்தவராக இருந்தால் மிக்க நன்றாக இருந்திருக்கும் என்று சொன்னேன். ஆனால் இந்த ஆண்டு ஆளுநர் அவர்களின் தாய்மொழி தமிழாக இல்லாமலிருந்தாலும் தமிழ் மாநாட்டினை தமிழர்கள் எந்த உணர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களும் அதை வரவேற்றிருப்பதற்கு நான் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய சொற்பொழிவில் சிந்தனையைக் கிளறக் கூடிய பல செய்திகள் சேர்ந்திருக்கின்றன. சிலர் அவற்றை விவாதத்திற்குரியன என்று கருதினாலும், மகிழ்ச்சியடையக்கூடிய கருத்துக்கள் அதில் சேர்ந்திருக்கின்றன. ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் மொழிச் சிக்கலைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கடந்த மாதம் இந்த மன்றம் 23-ஆம் தேதியன்று நிறைவேற்றிய தீர்மானத்தைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 'இந்த மொழிச் சிக்கலை மீண்டும் ஆய்வு செய்வதற்கும், மொழித் தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இன்னல்களை நீக்குவதற்கான வழிவகைகளை ஆய்வதற்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் உயர்மட்ட மாநாடு ஒன்றினைக் கூட்ட வேண்டுமென்று எனது அரசு வலியுறுத்தும்' என்றும் 'இம் மாநிலப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்படவேண்டுமென்கிற இச் சட்ட மன்றப் பேரவையின்

முடிவினைச் செயல்படுத்த இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தத் தீர்மானத்தில் பிரதானமாக இருக்கக்கூடிய தமிழ் போதனா மொழி ஆகும் என்று இருப்பதை வரவேற்கும் முறையிலேயும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலேயிருந்து ஒன்று தெரிகிறது. கடந்த மாதம் 23-ஆம் தேதி மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திருத்தத்தில் மற்றவர்கள் கொடுத்துள்ள திருத்தங்களையும் சேர்த்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆளுநர் அவர்கள் பகுதி பகுதியாக வரவேற்றுக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் குடியரசுத் தலைவருடைய பிரதிநிதியாக இங்கே இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மன்றமோ அமைச்சரவையோ தவறிழைத்தாலும்கூட தேசத்தின் ஒருமைப்பாட்டைக் கெடுக்கக் கூடியதாக அல்லது தேசத் துரோகமாக இருந்தாலும் அவற்றைத் தடுத்து நிறுத்தும் கடமையோடு அவர்கள் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள், இந்த மன்றத்திலே கடந்த மாதம் 23-ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மொத்தமாக மட்டுமல்லாமல் பகுதி பகுதியாகவும் வரவேற்று இருப்பதிலிருந்து, நாம் தேசத் துரோகம் செய்யவில்லை; ஒருமைப்பாட்டிற்கு கேடு இழைக்கவில்லை, குறிப்பாக மோசடி செய்யவில்லை என்பதை நாம் உணர முடிகிறது. இந்தத் தீர்மானத்திற்கு ஐந்து கட்சிகள் ஆதரவு அளித்திருக்கின்றன; அதற்கு ஆதரவு அளித்த கட்சிகளில் ஒன்றாகிய என்னுடைய தமிழரசுக் கட்சியின் சார்பாக அதைப்பற்றி குறிப்பிட்ட ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். தமிழும் ஆங்கிலமும் கட்டாயமானாலும் வேறு எந்த மொழியையும் விரும்பிப் படித்துக்கொள்ள உரிமை இருக்கிறது, உரிமை இருந்து வந்திருக்கிறது. மத்திய ஆட்சியினுடைய ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கையாக இது இருக்கும் என்றுதான் நான் இதை ஆதரிக்கிறேன் என்று அன்று ஆதரித்தேன். அதே முறையில்தான் அதை நான் மீண்டும் ஆதரிக்கிறேன். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் ஏற்பட்ட விளைவு என்ன என்று நாம் பார்க்க வேண்டும்.

மத்திய அரசு இதுவரை அந்தத் தீர்மானத்தை மதித்து நம்மைத் திருப்தி செய்வதற்கோ அல்லது நம்முடைய மன மாற்றத்திற்கோ எதுவும் செய்ய முன்வரவில்லை. முன் வந்திருந்தால் அது ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கும். காங்கிரஸ் வட்டாரத்தில் பெருந் தலைவர்கள் அதுபற்றிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். எந்த அடிப்படையில் அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள்? 'மும்மொழித் திட்ட அடிப்படையில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இருமொழித் திட்ட அடிப்படையில் முயற்சிகள் எடுக்கப்பட மாட்டா' என்று கூறியிருக்கிறார்கள். மும்மொழித் திட்டம் என்பது வடக்குக்கு ஒன்று, தெற்குக்கு ஒன்றாக இருக்கக் கூடாது. மும்மொழித் திட்டம் சரி என்று அதை





ஏற்றுக் கொண்ட காலத்தில் நம்பினோம். வட மாநிலங்களில் நாணயமாக அமல் நடத்துவார்கள் என்று நம்பினோம். இப்போது அந்த மும்மொழித் திட்டம் வட மாநிலங்களில் அமல் நடத்தப்படவில்லை. எனவே, நிலைமையைப் புரிந்து கொள்ள முடிகிறது. எந்த வித பலனும் இல்லாமல், இந்திய நாட்டு மொழிகளுள் ஒன்று என்பதற்காக, வடக்கில் உள்ளவர்கள் தமிழ் மொழியையோ, தெலுங்கு மொழியையோ படிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்ப்பது முறையும் ஆகாது. வடபுலத்திலே இரு மொழி தான் இருக்குமென்று கூறிவிட்டு, நாம் மும்மொழித் திட்டத்தை ஏற்க வேண்டுமென்று சொன்னால் கூடுதலான பாரம் நம் மீது ஏறுகிறது. ஆகவே, அரசுத் தரப்பில் இருந்து அதற்குத் தக்கவாறும் சரியான விடை கிடைக்கவில்லை.

ஜவஹர்லால் நேரு அவர்கள் வாக்குறுதி அளித்தபோது என்ன சொன்னார்? இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை, இந்தி, ஆங்கிலம் இரண்டும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக இருக்கும் என்று கூறினார்கள். தென்புலத்தில் இருப்பவர்களுக்கு ஆங்கிலம் என்றும், வடபுலத்தில் இருப்பவர்களுக்கு இந்தி என்றும் நேரு அவர்கள் கூறவில்லை. இரண்டும் மத்திய ஆட்சி மொழிகளாக இருக்கும் என்றுதான் கூறினார். அவர்கள் அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்தில் இந்தி அல்லது ஆங்கிலம் தெரிந்தவர்கள் உத்தியோகத்திற்கு வரலாம் என்பதால் தென்புலத்தை ஆங்கிலப் பிரதேசம் என்றும், வட புலத்தினை இந்திப் பிரதேசம் என்றும், இருவேறு மொழிகள் இருக்கின்ற முறையை வைத்துப் பார்க்கும்போது அது ஒருமைப்பாட்டு நோக்கத்திற்குக் கேடு விளைவிக்காதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தன் தந்தையார் கொடுத்த வாக்குறுதியை மகள் புரிந்து கொள்ளத் தவறி விட்டார் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இந்தத் தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றியதன் விளைவாக கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. மாணவர்கள், இளைஞர்கள் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் பலரும் இதிலே ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இந்தக் கிளர்ச்சிகள் மாநில அரசின் தகுதியற்ற தன்மையால் ஏற்பட்ட விளைவு அல்ல. மத்திய அரசு மாநில மக்களின் மனப் போக்கைத் திருப்தி செய்யத் தவறி விட்டதன் விளைவே இந்தக் கிளர்ச்சிகள். வடக்கே இருப்பவர்கள் ஆவேசமாக இருப்பார்கள், அதற்காகத் தெற்கே இருக்கின்ற மக்களை அடக்கிக் கொண்டே இருக்க வேண்டுமென்றால் அது முடியாது. வடக்கே இருக்கிற மத்திய அரசு சுப்ரீம் பவர், இறுதி அதிகாரம் படைத்தது. தென்புலத்து மக்களின் மனப்பான்மையை உணர்ந்து தன் நிலையை மாற்றிக் கொண்டிருக்குமானால், அதற்குப் பிறகும் கிளர்ச்சிகள் பெருகுமானால் இந்த அரசு அதை அடக்கக் கடமைப்பட்டிருக்கிறது; அடக்க வேண்டும் என்று கேட்கத் தவற மாட்டேன்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1963 பிப்ரவரி 16

இப்போது ஆந்திரத்திலே கிளர்ச்சிகள் நடக்கின்றன. மைசூரிலே கிளர்ச்சிகள் நடக்கின்றன. அவை தி.மு.க. செல்வாக்கு இல்லாத பகுதிகள். கன்னடத்தில் பலாத்கார ரீதியில் கிளர்ச்சிகள் நடக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகம் நடந்து உயிர்ப்பலி ஆகியிருக்கிறது. இவ்வளவுக்குப் பின்னரும் மத்திய அரசினர் ஏன் இவ்வளவு பிடிவாதம் காட்டுகின்றனர்? நான் ஐயுறுகிறேன்—அபவாதமாகச் சொல்லவில்லை—இதை ஒரு வாய்ப்பாக வைத்து, கலவரங்களுக்கு வாய்ப்புகள் கொடுத்து, தூண்டுதல் செய்து, கலவரத்தை அடக்க திறனற்ற ஆட்சி என்று கூறி தமிழக அரசைக் கலைக்க வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறதோ என்று சேத் கோவிந்ததாஸ் என்ற காங்கிரஸ் உறுப்பினர் பேசிய பேச்சிலிருந்து தோன்றுகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோவையிலே மத்திய அரசாங்கத்தின் போலீஸ் படை வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இல்லை என்று தமிழக அரசாங்கத் தரப்பிலிருந்தும் சொல்லப்படவில்லை. மத்திய அரசின் உள்துறை துணையமைச்சர் காயப்படுத்தப்பட்டார்; அது மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்று கண்டிக்கத் தயங்கோம்; கண்டித்திருக்கிறோம். அதற்காக, மத்திய அரசாங்க போலீஸ் கோவைக்கு வருமானால் அது சரியான ஜனநாயக முறை தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆட்சியை நீக்கிவிட்டு மத்திய போலீசைக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்த ஆட்சியை வைத்துக் கொண்டிருக்கிற நிலையில் மத்திய அரசு போலீஸ் வந்திருக்குமானால் அது இந்த மாநிலத்தின் உரிமை மறைமுகமாகப் பறிப்பதாகும் என்றுதான் கருத வேண்டும்.

அமெரிக்காவில் டெக்சாஸ் என்ற மாகாணத்தில் அதிபர் கென்னடி சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அது கென்னடி கட்சிக்கு எதிர்க்கட்சியின் ஆட்சியில் உள்ள மாகாணம். பிரசிடென்ட் தேர்தலில் கூட கென்னடிக்குப் பெரும்பான்மையான வாக்குகள் வராத மாகாணம் அது. அவர் அந்த மாகாணத்திற்குப் போகும்போது போக வேண்டாமென்றகூட எச்சரித்தார்கள். உண்மையுணர்வும், துணிவும் கொண்ட அவர் அங்கு போக, சுட்டுக் கொலையாகி விட்டார். அந்தக் கொலையின் பேரில் அந்த மாகாண ஆட்சி போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐயுற சிலர் "மத்திய அரசு பொறுப்பேற்று போலீஸ் அதிகாரத்தை ஏற்க வேண்டுமென்றனர்." இப்பிரச்சினை அமெரிக்க காங்கிரசுக்கு வந்தபோது அதிபர் ஜான்சன் 'மாகாண உரிமையில் தலையிட நாங்கள் தயாராக இல்லை' என்று சொன்னார். ஆனால் இங்கே மத்திய அரசு துணையமைச்சருக்குச் சிறு காயம் ஏற்பட்டவுடன் மத்திய அரசு போலீஸ் வந்து விடுகிறது. அந்தத் துணை அமைச்சர் வேறு யாருமில்லை; நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்தான்.



1963 பிப்ரவரி 16]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மத்திய போலீஸ் மத்திய உளதுறை துணையமைச்சர் காயப்பட்டதற்குப் பிறகுதான் வந்தது என்பதை என்ன ஆதாரத்தின் பேரில் மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார்கள் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு போலீஸ் இதற்கு முன்னதாகவே வந்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் வந்தது என்பதற்கு என்ன ஆதாரம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்க அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு என்றாலும், அதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

திரு. ம. பொ. சிவஞானம்: அங்கே எப்போது போலீஸ் வந்தது என்பது அடிப்படைப் பிரச்சினை அல்ல. மத்திய போலீஸ் மாநிலத்திற்கு வர உரிமையுண்டா, முறைதானா என்பதுதான் முதல் பிரச்சினை. கோவையிலே நடந்த நிகழ்ச்சியைத் தடுக்க மாநில அரசு தவறி விட்டது என்று கூறுவார்களானால் சென்ற பொதுத் தேர்தலின் போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஐக்கிய மாகாணத்திற்குச் சென்றபோது கல்லெறியால் மூக்கில் காயம்பட்டுப் படுக்கையில் கிடந்தார்களே, அப்போது அந்த மாகாண போலீசை நம்பாமல் மத்திய அரசு போலீஸ் போயிற்றா?

திரு. கே. விநாயகம்: கிண்டலாகக் கேட்க வேண்டுமென்று எழுந்தேன் என்று நினைக்கவேண்டாம். மத்திய சர்க்கார் போலீஸ் படையெடுத்ததாகக் கூறப்படுகிறது. மத்திய சர்க்கார் பெடாலியனாக 4,000 போலீசையா அனுப்பியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிறு குற்றம் நடந்ததைப்பற்றி ஆராய, 4 போலீஸ்காரர்கள், அதுவும் உடையில்லாமல் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். அப்படி இருக்கும்போது இதிலே ஏதோ படையெடுத்து வந்தது போல் கற்பனை செய்து கூறுவது சரிதானா என்று ஐயா அவர்களைக் கேட்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: மதிப்பிற்குரிய நெடுநாளைய நண்பர், மாண்புமிகு விநாயகம் அவர்கள் விளக்கம் கோரினார்கள். திரும்பவும் சொல்லுகிறேன், இதிலே எத்தனை பேர் வந்தார்கள் என்பது பிரச்சினை அல்ல. நான்கு பேர் வந்தார்களா அல்லது நானூறு பேர் வந்தார்களா என்பது பிரச்சினையல்ல. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் மத்திய ஆட்சி இன்று நான்கு பேரை அனுப்பும், அடுத்து 40 பேரை அனுப்பும். பிறகு 400 பேரை அனுப்பும், பிறகு மத்திய ஆட்சியே இங்கு வந்து விடும். மத்திய போலீஸ் இங்கே வருவதற்கு முன்னாலேயே மாநில ஆட்சியின் அனுமதி பெற்றுவருவதுதான் முறை. என்னை விட அதிக அளவில் அசெம்பிளியில் அனுபவம் பெற்ற நண்பர் விநாயகம் அவர்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டும். நேற்று அவர்கள் ஆண்டார்கள். பின்னாலே ஆள வேண்டுமென்ற ஆசையோடுதான் அவர்கள் இருக்

கிறார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மாநிலத்தின் உரிமை பறிபோகாமல் காப்பது அனைத்துக் கட்சிகளின் பொறுப்பாகும், கடமையாகும்.

ஏதோ இந்த மாநிலத்தில் சட்டம் அமைதி குறைந்து விட்டதாகக் கூறுகிறார்கள். நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் வட மாநிலங்களுக்குப் போனபோது பேச முடியாமல் திரும்பியதை நாம் பார்க்கிறோம். ஆனால், அவர் இங்கே அழைக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் அமர்த்தப்பட்டு, பூ மாலைகள் போடப்பட்டு புகழ் மாலைகள் சூட்டப்பட்டார்கள். குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பவனி வந்து போயிருக்கிறார்கள். இதுதான் சட்டம், அமைதி குறைந்து விட்டது என்பதா? பிரதமர் இந்திரா காந்தியம்மையார் அந்தமான் போகும் வழியில் வந்தபோது கூட ஏதோ ஒரு சில ஆர்ப்பாட்டம் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. திரும்பவும் நான் சொல்வதெல்லாம் என்னுடைய கழகத்தின் கொள்கைப்படி மாநிலங்களுக்கு இன்று இருக்கும் அதிகாரம் குறைவு; கூடுதலான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் இருக்கும் நிலையோ, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளுகின்ற இடங்களில் இருக்கின்ற அதிகாரத்தைக் கூடப் பறிக்கின்ற முயற்சிகளிலே மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது.

ந.ப. 12-00 இந்த மொழிப் பிரச்சினை எதில் தோன்றுகிறது? மாநிலங்களுக்கு அதிகாரங்கள் இல்லாமல் மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டதன் விளைவு என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இல்லாது போனதின் ஒரு பகுதி மொழிப் பிரச்சினை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கிறேன். மலேசியா சின்னஞ்சிறு நாடு, அது 14 ராஜ்யங்களையும் ஒரு கோடி மக்களையும் கொண்டதுமாகும். அப்படி ஒரு கோடி மக்களையும், 14 ராஜ்யங்களையும் கொண்ட அந்த நாட்டில் 45 சதவிகித மக்கள் மலாய் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். நாற்பது சதவிகித மக்கள் சீன மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். பத்து சதவிகித மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஐந்து சதவிகிதத்தினர் மற்றவர்கள். ஆக, 45 சதவிகிதத்தினர் பேசும் மொழியை மலேஷியா மொழியாக, சமஷ்டி மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது 1967-ல். அது நடைமுறைக்கும் வந்துவிட்டது. அதை 40 சதவிகிதத்தினராகிய சீனர்கள் எதிர்க்கவில்லை. அதற்குக் காரணம், மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படாமல் மூன்று நான்கு துறைகளை மட்டுமே மத்திய அரசு வைத்துக்கொண்டு மற்றத் துறைகளை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டிருப்பதுதான் அங்கு மத்தியில் ஆதிக்க அரசு இல்லை. ஆகவே, மத்திய ஆட்சிமொழி ஆதிக்க





மொழியாக இருக்கமுடியாது என்று அவர்கள் மலாய் மொழியை மத்திய ஆட்சிமொழியாக அங்கீகரித்திருக்கிறார்கள். இங்கு ஐயப்பாடு வரக் காரணம் என்ன?

மத்திய அரசு எல்லா அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு இங்கு ஒரு சிறிய குழப்பம் ஏற்பட்டாலும் கூட போலீசை அனுப்பும் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. மத்தியில் ஆங்கிலம் நீடித்தாலும்கூட அதுவும் ஒரு ஆதிக்க மொழித்தானே தவிர அது ஒன்றும் நம்மால் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக ஆகிவிடாது. மாகாண சுயாட்சி என்று சொல்லும்போது ஏதோ சில அதிகார மாற்றங்கள் என்ற பொருளில் நான் சொல்லவில்லை. மாநிலங்கள் தனித்தன்மை அங்கீகரிக்கப்பட வேண்டும். அமெரிக்காவில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி கொடி உண்டு. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி ராஜிய கீதங்களுண்டு. சோவியத் ரஷ்யாவில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி கொடி உண்டு. ஒரு கோடி மக்களைக் கொண்டதும், 14 ராஜ்யங்களைக் கொண்டதுமான மலேஷியாவில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி கொடியும் தனித்தனி ராஜிய கீதமும் உண்டு என்பதை நான் போய் பார்த்துவிட்டு வந்து சொல்லுகிறேன். நம்மோடு அடிமைப்பட்டு நமக்குப் பின்பு சுதந்திரம் பெற்ற சமஷ்டிநாடு அது.

இந்த நாட்டில் ஒரு மாறுதலைச் செய்யவேண்டுமானால், அப்படிச் செய்ய விரும்பினால், உடனே ஒருமைப்பாட்டிற்குக் கேடு என்று சொல்கிறார்கள். ஒருமைப்பாடு என்பது காகிதச் சுவரா அல்லது கண்ணாடி மதிலா மத்திய அரசு நெருப்போடு விளையாடிக் கொண்டிருக்கிறது. நிலைமை கை மீறிப்போகும் அளவிற்கு விட வேண்டாம். இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றவேண்டுமென்பதில் யாரையும்விட நான் பின்வாங்கியவன் அல்ல. மற்றக் கட்சிகளும் அப்படித்தான். ஒருமைப்பாட்டைக் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் நம்மோடு உறவு கொண்டிருக்கிற நேரம். இதை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் மொழிப் பிரச்சினையை மத்திய அரசு சரியான முறையில் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். அதற்கு இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் காங்கிரஸ் ஒரே எதிர்க்கட்சி என்று. அந்தப் பெருமையோடு என்றென்றும் இருக்க விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன். மொழிப் பிரச்சினையில் இரு தரப்பாரும் கூடிப் பேசி நல்ல முடிவிற்கு வரவேண்டும். மொழிப் பிரச்சினையினால் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு இந்தப் பிரச்சினை ஆவேசத்திற்கும் ஆத்திரத்திற்கும் இரையாகியிருக்கிறது. இப்படிப் போனால் நாடு முன்னேறாது. ஆகவே, இப்பிரச்னையைத் தீர்க்க மத்திய அரசு முன் வர வேண்டும். மும் மொழி அடிப்படையில் அல்ல, மத்தியில் எந்த மொழி ஆட்சி மொழியானாலும் ஒரே மொழி

மத்திய ஆட்சிமொழியாக ஆக முடியாது. 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்கவேண்டுமென்று சொல்கிருர்கள். அப்படி 14-ம் வரவேண்டிய அவசியமிருக்காது. அதைப் பூதமாகக் கண்டு பயப்படத் தேவையில்லை. குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி போன்ற மொழிகள் இந்தியோடு தொடர்புள்ள மொழிகளாதலால் அவர்கள் இந்தியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அவர்கள் விட்டுத்தரலாம், ஆகவே, இது பயங்கரமான பிரச்சினை அல்ல. நம் முதல்வர் அவர்களை இந்தியப் பிரதமர் அழைத்து, மற்றவர்களையும் அழைத்து கூடிப் பேசினல் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும், விரைவில் தீர்க்க வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

அடுத்து, பயிற்சிமொழிபற்றியும் ஆளுநர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். ஆங்கிலத்தின் தரம் குறையாது, குறையாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று கூறியிருக்கிருர்கள். நிபுணர்களின் அறிவையும், ஆலோசனைகளையும் கேட்டு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். கடந்த கூட்டத்தில் கூட முதல் அமைச்சர் அவர்கள் இத்தகைய உறுதிமொழியை ஆங்கிலத்தை விரும்புவோர்களுக்குக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்ததில் நானும் சேர்ந்து கொள்கிறேன். இங்கு நம் விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆங்கிலத்தின் தரம் குறையக்கூடாது என்பதில் எனக்கும் அக்கறையுண்டு. ஆனல் மூன்ரும் வகுப்பிலேயே ஆங்கிலங்கற்க துவங்கி, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தை போதனு மொழியாகக்கொண்டு ஆங்கிலேயர்களிடம் ஆங்கிலம் பயின்று, ஆங்கிலேயர்களின் ஆங்கிலம் கற்று, ஆங்கிலேயர்கள் வழியில் ஆங்கிலம் பேசும் முறையில் பழக்கப்பட்ட அந்தக் கால ஆங்கிலப் புலமை இனி வராது என்பதை புரிந்து கொள்ள தவறிவிட்டால் நிலைமையை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்ருகும். தமிழை ஆட்சிமொழியாக்கி, பயிற்சிமொழியாக்கி, எல்லாம் தமிழில் நடக்கும்போது எப்படி ஆங்கிலப் புலமை வரும் என்ருல் குஜராத், பஞ்சாப், மகாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களில் அவர்கள் தங்கள் மொழியில் எல்லாவற்றையும் நடத்தும்போது எந்தளவிற்கு ஆங்கில அறிவு பெறுவார்களோ அந்த அளவை விட குறையாது இங்கே நாம் தமிழைக் கையாள்வதால்.

**டாக்டர்** ஹாண்டே அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். தமிழ் பயிற்சிமொழியாக வருவதினுல் மாணவர்கள் பெரும்பாலோர் கவலைப்படுகிருர்கள் என்று. சிறுபான்மையினருக்கு அப்பயம் இருக்கிறது என்ருர். தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசுவோர் இடையே உள்ள அந்த அச்சத்தைப் போக்க வேண்டுமென்று சொல்வதில் நானும் அவரோடு சேர்ந்து கொள்கிறேன். இம் மாநிலத்தில் சிறுபான்மையினர் என்று யாரையும் நாம் கருதுவது கிடையாது. எந்த மாநில அரசின் செகரெட்டேரியேட்டை எடுத்துக் கொண்டாலும் அங்குள்ளவர்களை தமிழ் நாடு அரசாங்க அலுவலர்களோடு ஒப்பிடும்போது வீட்டு மொழி வேற்றுமொழியாக இருப்பவர்கள் சதவிகிதத்தில் அதிகமாக இருக்கிருர்களே தவிர குறைவாகயிருந்ததில்லை. ஒரு அதிகாரியோ அல்லது ஒரு நீதிபதியோ அல்லது ஒரு அமைச்சரோ வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் அப்பதவி கொடுத்தீர்கள் என்று தமிழ் மக்களில் யாரும் கேள்வி கேட்டதில்லை. இங்குள்ள சிறுபான்மையினர் எங்களோடு கலந்துவிட்டார்கள். நாங்கள் இணைந்து விட்டோம். ஆகவே, மொழிப் பிரச்சனையிலே அவர்களை ஒரு கருவியாக யாரும் பயன்படுத்த வேண்டாம்.





இந்த ஒரு மாநிலத்திலாவது அமைதி நிலவுவது நீடிக்கட்டும். சனவரி திங்கள் 23-ம் தேதி அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ் பயிற்சிமொழியாக வர வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை டாக்டர் ஹாண்டே அவர்களும் ஏற்று ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் தம் திருத்தத்தை வாபஸ் பெற்ருர்கள். இன்ன பகுதி எனக்குப் பிடிக்கவில்லை, ஆனுலும் பொதுவாக இதை ஏற்றுக் கொள்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருக்கலாம், ஆனல் அப்படிச் சொல்லவில்லை. அத்தீர்மானம் நிறைவேறி ஒரு திங்கள்கூட ஆகவில்லை. இப்போது தமிழ் பயிற்சிமொழியானல் நாடு கெட்டு விடும், சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படும் என்று சொல்கிருர்கள். திரு. லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள்கூட ஆங்கிலம்தான் நீடிக்கவேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டியவர். அவர்கள்கூட மற்றத் துணைவேந்தர்களோடு சேர்ந்துக் கொண்டு கல்லூரி முதல்வர்களோடு கூடிப்பேசி தமிழ் பயிற்சி மொழியாவதற்கு ஒப்புதல் தந்திருக்கிருர்கள் என்பது மகத்தான புரட்சி. இது நல்ல ஆரம்பம். இதைச் செய்த ராஜதந்திரியாகிய நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்களை நான் பாராட்டுகிறேன். துணைவேந்தர் அவர்களை இந்த அளவிற்குக் கொண்டு வந்ததற்கு அவரது முயற்சிதான் காரணம் என்பதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இந்த ஆண்டு முதல், புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் போதிக்க வேண்டுமென்று துணைவேந்தர்கள் கூட்டத்தில் தீர்மானித்திருக்கிருர்கள். சில நூல்களும் வெளியிடப்பட இருக்கின்றன. நேற்று முன்தினம் இங்கு திரு. விநாயகம் அவர்கள் விஞவிற்குப் பதிலளிக்கையில் கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், "அடுத்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாக ஆகாது" என்று ஆக்கவேண்டுமென்ற என் கழக நிலையைப் பற்றிக் கூறவில்லை. உண்மை நிலைமை என்ன என்று கவனிக்க வேண்டும். 1968-69-ல் புகுமுக வகுப்புகளில் பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, நேச்சுரல் ஸயன்ஸ், மாத்தமாட்டிகஸ் இவையெல்லாம் தமிழில் போதிக்கப்படுமானல் தமிழில் படித்து விட்டு பொறியியல் கல்லூரிக்கு அல்லது மருத்துவ கல்லூரிக்கு போகும்போது அங்கு எந்த மொழியில் அங்கு படிப்பது? அங்கு போதனுமொழி ஆங்கிலமாக இருக்குமானல் அது மாணவர்களுக்கு

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 பிப்ரவரி 16

எளிதாகயிருக்குமா? இந்தப் போக்கு எங்கு கொண்டு போய் விடும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, தெளிவாக இருந்து 1969-70-ல் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரி களிலும் தமிழ்தான் போதனுமொழியாக இருக்கும் என்பதை முன் கூட்டியே தெரிவித்து இந்த ஆண்டு முதல் விஞ்ஞானப் பாடங்கள் போன்றவற்றை தமிழில் கொண்டு வந்தாலொழிய இத்திட்டம் வெற்றிபெருது என்றுதான் சொல்ல வேண்டும். தோற்றுப்போய் விட்டது நம் திட்டம் என்று சொல்வதற்காக, யாராவது தவருக வழி காட்டுகிருர்களோ, இத்திட்டம் தோற்றுப் போக வேண்டு மென்று நினைக்கிறவர்கள் தவருக வழி காட்டுகிருர்களோ என்ற ஐயப்பாடு கூட எழுகிறது. தனி ஒரு அமைச்சர் அவர்களின் கொள்கையோ அல்லது இந்த மந்திரிசைபையின் கொள்கையோ கூட அல்ல இது, இது இம்மன்றம் எடுத்த முடிவு. 1969-70-ல் பொறி யியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் பயிற்சி மொழி தமிழாகத்தான் இருக்கும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். புத்தகங்கள் இல்லை என்ற சாக்கைக் காட்டுகிருர்கள். இருபது ஆண்டு காலமாகக் கேட்டாகிவிட்டது. புத்தகம் இல்லை, புத்தகம் இல்லை என்ற வாதத்தை, இருக்கக்கூடாது என்று நினைப்ப வர்கள் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். புத்தகத்தை யார் தயாரிப்பார்கள்? சிறுகதை, நாவல் போன்ற புத்தகங்கள் என்ருல் பொதுச்சந்தையிலே கிடைக்கும். பாடப் புத்தகங்கள் என்ருல் பல்கலைக் கழகமோ அல்லது அரசாங்கமோ தான் தயாரிக்க வேண்டும். இந்த இரண்டும் தயாரிக்கவில்லை என்ருல் வேறு யார் தயாரிப்பார்கள்? வேறு யாரும் தயாரிக்க மாட்டார்கள். புத்தகங்களைத் தயாரிக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தாகிவிட்டது. அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இன்னென்று கூறிக்கொள்ளுகிறேன். அதைத்தவருக கல்வி யமைச்சர் அவர்கள் எண்ண மாட்டார்கள் என கருதுகிறேன். அது தவருக இருந்தாலும் தாய்மொழிப்பற்றுக் காரணமாகச் சொல்லுகிறேன் என்று எடுத்துக்கொள்ளுவார்கள். ஒரு முறையை எடுத்துவிட்ட பிறகு வெளியிலே பிரச்சாரம் நடக் கிறது, "இது படித்து விஷய ஞானம் உள்ளவர்களுக்கும், படிக் காமல் இருப்பவர்களுக்கும் உள்ள வர்க்கப் போராட்டம்" என்று ஒரு வர்ணனையை பத்திரிகை ஒன்றிலே பார்த்தேன். பயங்கரமான வர்ணனை! வரக்கூடாத இடத்திலேயிருந்து வருகிற வர்ணனை! எச்சரிக்கைக்காக ஒன்று சொல்கிறேன். பொது மொழிச்சிக்கலை அணுகும் முறையிலே அணுகாமல் சுதந்திரப் போராட்டத்தின் நடுவே கொண்டு வந்த விஷத்தன்மை காரணமாக பின்வாங்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது. இது போன்று பயிற்சி மொழி யிலும் வரக்கூடாது. மக்கள் போர்க் கோலம் பூண்பதற்கு முன்னால் நன்மை செய்யவேண்டும்.



1968 பிப்ரவரி 16] [திரு. ம. பொ. சிவஞானம்]

அரசாங்க கல்லூரிகளில் மட்டும்தான் தமிழ் விஞ்ஞானத்திற்குப் பயிற்சி மொழியாக இருக்கும், மற்றவைகளில் அதிகமாக இருக் காது என்று கல்வியமைச்சரவர்கள் சொன்னுர்கள். அரசாங்க கல்லூரிகளில் மட்டும்தான் என்ருல், சேருகிற மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தால் அரசு என்ன செய்யப் போகிறது? எண்ணிக்கை குறைவைக்காட்டி அதற்கு ஆதரவு இல்லை என்று சொல்லுவார்கள். "எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில் யாவர்க் கும் அந்த நிலை பொதுவாகும், முப்பது கோடியும் வாழ்வோம், வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்" என்று பாரதியார் சொன்னபடி நல்லதோ, கெட்டதோ எல்லோருமாக தமிழைப் பயிற்றுமொழியாக அதை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டும். தமிழில் புலமையுடையவர் கல்வியமைச்சராக இருக்கின்ற இந்த நாளில் தமிழிலே ஆர்வமுடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்யக் கூடிய இந்த நாளில் தமிழ்ப் பயிற்சிமொழியாக ஆக்குவது தோற்றுவிட்டது என்பதாக ஆகுமானல் அதுவே நிரந்தரத் தன்மையாக ஆகிவிடும் என்று அச்சப்படுகிறேன். அந்த அச்சத்தின் காரணமாகத் தான் 1968-69-லே புகுமுக வகுப்பில் தமிழில் விஞ்ஞானம் என்ருல் 1969-70-இல் மருத்துவம், பொறியியல் ஆகியவற்றிற்குத் தமிழ் பயிற்சி மொழியாக ஆக்கப் படும் என்று உறுதிகூறுமாறு கேட்டுக் கொண்டு விதிவிலக்கு இல்லாமல் எல்லோரும் கற்க வகை செய்யுமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

DR. H. V. HANDE: Sir, on a point of personal explanation.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: பர்சனல் எக்ஸ்பிளனேஷனு? அல்லது கிளாரிபிகேஷனு?

DR. H. V. HANDE: Sir, on a point of personal explanation and also clarification.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: முதலிலே பர்சனல் எக்ஸ் பிளனேஷனை முடித்து விடுங்கள்.

DR. H. V. HANDE: The hon. Member, Thiru M. P. Sivagnanam has now made a remark about our accepting the Resolution passed by this House on 23rd January 1968. Now, I want to clearly state my view and that of my leader, Rajaji. Though we differed in some parts of the Resolution here and there, we fully supported the Resolution because we wanted to strengthen the hands of the D.M.K. Government. Rajaji also felt that whatever be our policy in this regard, we should strengthen the anti-Hindi forces and pro-Tamil forces. He also stated that though we might differ from the Resolution here and there, we should try to avoid giving trouble to them and we should give our full support to it. For instance, even though we differed on the particibility or feasibility of 14 languages being the official languages of the Union and Tamil as the medium of instruction in view of the assrances given by the Hon. Chief Minister, we did not press our amendments. Thus our stand has been made clear before.

[Dr. H. V. Hande] [1968 பிப்ரவரி 16

Now, I want one clarification. The hon. Member has stated that in Malaysia powers have been distributed considerably to the States and therefore the people there have not objected to the Malay language which is spoken by about 40 per cent of the people only, being the language of the Central Government. Similarly, does the hon. Member, Thiru Sivagnanam come forward to say that if the powers of the Central Government are greatly distributed to the States, he is prepared to accept Hindi as the official language of the Union Government or does he still hold that English should be the link language?

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, கடந்த திங்கள் 23-ஆம் தேதிய தீர்மானத்தில் முக்கிய இரண்டு பகுதிகள் இரண்டு. ஒன்று, தமிழ் மாநில ஆட்சிமொழியாக ஆகவேண்டும். மற்றொன்று இந்த மாநிலத்திலே ஐந்தாண்டுகளிலே எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சிமொழியாக வர வேண்டும். இந்த இரண்டையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. பின், எதை ஒப்புக் கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. பொதுவாக ஒப்புக்கொள்வது அல்ல இந்தப் பிரச்சினை. ஜீவாதாரமான, நாடு முழுதுக்குமான பிரச்சினை இது. இதில் பொதுத்தன்மை, சிறப்புத்தன்மை, நடு நிலைமை என்று ஒன்றும் கிடையாது. மலேசியாவிலுள்ளதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்தியிலே ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக இருந்தால் எல்லாவற்றிற்கும் மொழி பெயர்ப் வைத்துக்கொண்டால் அரசின் மொத்த வருவாயையும் அது முழுங்கிவிடும். 'கன்கரண்ட் லிஸ்ட்'-இலே இரண்டு ஆட்சிக்கும் பொதுவான பொறுப்புகள் இருக்கின்றன. அவற்றை மாநிலங்களுக்கு உரிமையாக்கிவிடலாம். அயல்நாட்டு உறவு, பாதுகாப்பு நம் கையில் இல்லை. அந்நிலையில் சுமார் ஒன்பது மொழிகளை மத்தியிலே ஆட்சிமொழியாக ஆக்கலாம். இந்தி மட்டும் ஆட்சி மொழி ஆக வேண்டுமென்பது எனக்கு உடன்பாடு இல்லை. தமிழ் உள்ளிட்ட பல மொழிகள் ஆட்சி மொழிகளாக வேண்டுமென்பதுதான் என் கொள்கை.

**திரு. கே. விநாயகம்:** உயர்திரு. ம. பொ. சி. அவர்கள் பேசும்பொழுது பி.யூ.சி.-யிலே தமிழிலே சொல்லிக் கொடுத்து விட்டு, மேலே போகிறபோது மருத்துவக் கல்லூரி பொறியியல் கல்லூரிகளில் ஆங்கிலமே இருந்தால் தமிழை பயிற்சிமொழியாக எப்படிப் படிக்க முடியும் என்றார்கள். அது சரியான வாதம்தான். அதற்காகத்தான் நாங்கள் சொல்லுகிறோம். மருத்துவக் கல்லூரி என்பது நாளைக்கே போய் தமிழிலே படித்து விட்டு திரும்புவது என்ற நிலை இருக்க முடியாது. "கிரேஸ் அனாட்டமி" என்று ஒரு புத்தகம் இருக்கிறது. எண்ணூறு பக்கங்கள் அடங்கியது. அதை நாளைக்கே மொழி பெயர்க்க முடியுமா? உதாரணத்திற்காக அந்த ஒரு புத்தகத்தைச் சொன்னேன். எத்தனையோ புத்தகங்கள் இருக்கின்றன. ஐந்தாண்டுகள் படிக்க வேண்டும் இந்தப் புத்தகங்களையெல்லாம்.



1968 பிப்ரவரி 16] [திரு. கே. விநாயகம்]

ஆகவே, இதிலே ஆர்வமுள்ள காரணத்தினால் உடனடியாகத் தமிழ், தமிழ் என்று ஆரம்பித்து விட்டு மத்தியிலே விட்டுவிடுவதா? எனவே, முதலிலே முடியுமா என்று ம. பொ. சி. அவர்களும் நினைக்க வேண்டும், அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிற ஆட்சியாளர்களும் தெளிவான கருத்தைச் சொல்ல வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை என்றாலும், இதுபற்றி என் விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்ப்புலவர் ஒருவர் இப்பொழுது தலைமை தாங்குகின்ற காரணத்தால் என்னை அனுமதிப்பார்கள் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு விநாயகம் சொன்னார்கள், புத்தகங்கள் தயாரில் இல்லை என்று. வகுப்புக்குத் தேவையான பாட புத்தகங்கள் வேறு. தகவல் தெரிந்து கொள்வதற்காகப் படிக்கும் புத்தகங்கள் வேறு. ரெப்ஃபரென்ஸஸுக்கு என்று தனியாக புத்தகங்கள் இருக்கின்றன. வகுப்புக்குத் தேவையான பாடப புத்தகங்களை முதலில் தமிழில் எழுதிக்கொள்ளலாம். ரெபஃபரென்ஸ் (தகவல்) புத்தகங்கள் ஆங்கிலத்திலேயே இருக்கலாம். நம்முடைய பள்ளிகளிலே மூன்றும் வகுப்பிலிருந்து மேல் பட்டப்படிப்பு வரை ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்கப் போகிறது என்ற அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சினை அணுக வேண்டும். இப்பொழுது மாணவர்கள் ரெப்ஃபரென்ஸ் புத்தகங்கள் படிப்பதில்லை. நோட்ஸ்தான் படிக்கிறார்கள். விநாயகம் அவர்கள் அதிருஷ்டவசமாக எல்லப் புத்தகங்களையும் படித்தார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. எனக்கு அந்த அனுபவம் இல்லை. பாடப்புத்தகங்களை முதலில் தமிழில் மொழி பெயர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து பி.யு.சி.யில் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் படித்தால், மேலே பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேருங்கால் சிக்கல் ஏற்படும் என்று நான் சொன்னதைப் பற்றிச் சொன்னார்கள். அதற்காக பி.யு.சி.யில் தமிழில் படிக்காதே என்று நான் சொல்லவில்லை. பொறியியல், மருத்துவக் கல்லூரிகளிலும் தமிழில் படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள். அதற்கான அடித் தளங்களை அமைத்துக்கொள்ளுங்கள் என்றுதான் கூறினேன். நண்பர் விநாயகம் அவர்கள் ஏழை மக்களின் தொகுதியாகிய திருத்தணியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்கள்கூட அவரது போக்கை ஆதரிக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய ம. பொ. சி. அவர்கள் கேட்டார்கள், இந்தத் தீர்மானத்திலே தமிழைப் பயிற்சி மொழியாக்குவதையும் 14 மொழிகளையும் மத்திய அரசிலே ஆட்சி மொழியாக்குவதையும் ஆகிய இரண்டு கருத்துக்களையும் தவிர வேறு எது முக்கியம் என்று. இது இரண்டு தான் முக்கியமானவை என்று அவர்கள் கூறினார்கள்.

நம்முடைய கருத்து என்னவென்றால்

The Official Languages (Amendment) Act and the Resolution on language policy cause injustice, dissatisfaction, additional burden, etc.

மத்திய அரசின் தீர்மானத்தின் காரணமாக நாங்கள் பாதிக்கப்படுகிறோம்; அது இல்லாத நிலைமையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அந்த ரெசலூஷன்லே இருக்கிறது. இத்தகைய முக்கியமான விஷயங்கள் இருக்கிற காரணத்தாலே நமக்குள்ளே கருத்து வேறுபாடு கொள்வதனாலே இந்த அரசின் தீர்மானத்தினுடைய தன்மையை பாதிக்கக் கூடாது என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்.

The spirit of the resolution should not be disturbed by obstructing it or by voting against it. The Congress Party also did not vote against the D.M.K. sponsored resolution, because they did not want to vote against the spirit of it. That is the only thing I want to say.

*திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையின் துவக்கத்திலேயே இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களில்—வெளிப்படையாகச் சொல்லப் போனால்—இந்த மாநிலத்திலேதான் அமைதி தவழ்கிறது என்றும் சீரான, சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக இந்திய மாநிலங்களினுடைய ஆட்சி அமைப்புக்களைப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் கலகங்களும் குழப்பமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வேளையில் நம்முடைய ஆளுநர் அவர்கள் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் மிகவும் சிறப்போடும் சீரோடும் ஆட்சி நடத்துகிறார்கள் என்று டில்லி அரசுக்கு எடுத்துச் சொல்லுகின்ற பொழுது, அது திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் தரப்படுகின்ற சிறப்பான சான்றிதழ் என்பதை நான் முதலிலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டே அடிக்கடி ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் தயாரித்துக் கொடுப்பதை கவர்னர் அவர்கள் படித்துதானே 'ஆளுநர் உரை' என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நான் அதையே திருப்பிக் கூறுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் எழுதிக் கொடுத்து அதைக் கவர்னர் அவர்கள் படிக்கக்கூடிய அளவில் ஆட்சியை மாற்றி அமைத்திருக்கிறோம் நாங்கள். நாங்கள் எழுதிக் கொடுத்ததைக் கவர்னர் அவர்கள் எடுத்துச் சொல்லுகின்றார் என்று எண்ணும் போது பெருமிதம் எங்களுக்கு மிக அதிகமாக வருகிறது. அது மட்டுமல்ல, அவர் தமிழிலே பேசுகின்ற வகையில், இறுதியிலே திருக்குறளைத் தமிழிலேயே படித்தார்கள். அந்த வகையில்



தமிழைப் பாராட்டியும் பேசி இருக்கிறார்கள். ஆனால் இப்படி ஆளுநர் அவர்கள் பாராட்டுகின்றவற்றையும் மத்திய அரசைச் சேர்ந்தவர்கள் பாராட்டுகின்றவற்றையும் கண்டு நம்முடைய எதிர்த் தரப்பிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் எரிச்சல் அடைந்து, 'இது ஒரு சிறப்பா' என்று கேட்கிறார்கள். ஹைதராபாத்திலே நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் பேச்சுக்களைப் பார்த்தால் காங்கிரஸ் தரப்பைச் சேர்ந்தவர்கள் இந்தியா முழுவதும் குறிப்பாக எதிர்க்கட்சி அரசுகள் அமைந்திருக்கிற பகுதிகளிலெல்லாம் தங்களால் எந்த வகையில் முடியுமோ அந்த வகையிலே குழப்பத்தை ஏற்படுத்துகின்ற முயற்சிகளில்தான் காங்கிரஸ் ஈடுபட்டிருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிலைமைகளை நாம் இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தொடர்ந்துதான் நேற்றைய தினம் டில்லி பாராளுமன்றத்திலே உரையாற்றி இருக்கிற, இந்தி மொழியின் மேல் அதிகமாக பற்றும் பாசமும் வைத்திருக்கிற ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வெட்ட வெளிச்சமாகவே சொல்லியிருக்கிறார், திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையை உடனடியாக டிஸ்மிஸ் செய்தாக வேண்டுமென்று, தெருவிலே அல்ல, பாராளுமன்றத்திலே வெளிப்படையாக சொல்லியிருப்பதைப் பார்க்கிறபோது இந்தக் காந்தியவாதிகள் எந்த அளவுக்கு பாராளுமன்றத்திலேயே ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற பொழுது மிகவும் வேதனையாக இருப்பது மட்டுமல்ல; இந்த மனப்பான்மை வெளிநாட்டினரிடத்தில் எப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை உண்டாக்கும் என்பதைத் தான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் இதற்குப் பதிலளிக்கிறவகையிலே அண்மையிலே இருக்கிற கேரளத்து முதலமைச்சர் திரு. நம்பூதிரிப்பாட் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். டில்லி அரசாங்கம் இப்பொழுது பஸ்மாசுரனைப் போல் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்தையும் அவர்கள் பஸ்மாசுரனைப் போல் கவிழ்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசியில் மத்திய அரசே கவிழ்ந்து விடும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பஸ்மாசுரன் கதையைப் பார்க்கிறபொழுது பஸ்மாசுரன் ஒவ்வொருவன் தலையிலேயும் கையை வைத்துக் கொண்டு அழித்துக் கொண்டு வந்தான். அதைப் போல் மத்திய அரசு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொடுக்கப்பட்டிருப்பது 10 நிமிடங்கள் தான். அதில் கதை சொல்ல ஆரம்பித்தால் . . .

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் அப்படி ஒரு விளக்கத்தைச் சொல்லுவதற்கே காரணம், எதிர்த் தரப்பிலே இருக்கிற நண்பர்களின் இதயத்திலே பதியவேண்டுமென்பதற்காகத்தான் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பஸ்மாசுரன் கதை அவர்களுக்குக் கூட நன்றாகத் தெரிந்திருக்கும். பஸ்மாசுரன் ஒவ்வொருவர் தலையிலேயும் கையை வைத்து அழித்துக் கொண்டு வந்த நேரத்திலே திருமால் மோகினி வேஷத்திலே

[திரு. கா. வேழவேந்தன்] [1968 பிப்ரவரி 16

வந்து பஸ்மாசுரன் தன் தலையிலேயே கையை வைக்கும் நிலையை ஏற்படுத்தி அவன் அழிக்கப்பட்டான் என்று பஸ்மாசுரன் கதை சொல்லப்படும். அதைப் போலத்தான் இன்றைக்கு இந்த மொழிப் பிரச்சனையை மூடிவையுங்கள், கொஞ்ச காலம் நிறுத்தி வையுங்கள் என்று நல்லவர்கள் எல்லாம் சொன்ன நேரத்திலே மொழிப் பிரச்சினையை மேலும் மூட்டி டில்லியிலே ஒரு சட்டம் கொண்டு வந்த நேரத்திலே, அதைப் பற்றிய பிரச்சினையை உருவாக்கிய நேரத்திலே, இன்றைக்கு தமிழக அரசு என்ற மோகினி மத்திய அரசு என்ற பஸ்மாசுரன் தங்கள் தலையிலேயே கையை வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமையை உருவாக்கி இருக்கிறது. சென்ற 23-ம் தேதி உருவாகியிருக்கிற ஆட்சி மொழித் தீர்மானத்தைப் பார்த்து, ஆந்திராவிலேயும் மைசூர் மாநிலத்தையும் அந்தமாதிரி தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அங்கே இருக்கிற மாணவர்களும் பொதுமக்களும் கருதுகின்றார்கள். அந்த மனப்பான்மையைப் பார்க்கின்ற பொழுது அது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய முக்கியமான சாதனை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டதை சிலர், உலகத் தமிழ் மாநாடு சிறப்பாகத் தான் இருந்தது, இருந்தாலும் அதற்கு வசூலிக்கப்பட்டப் பணத்திலே தான் கெடுபிடி இருந்தது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த பதிலை சொல்ல ஆசைப்படுகிறேன். அன்றைய தினம் ஜாகீர் உசேன் அவர்களை வரவழைத்து அந்த மாநாட்டை நடத்தியவர்கள் கடற்கரையிலே மாபெரும் கூட்டத்தைக் கூட்டி நம்முடைய மொழியைப் பற்றியும் தமிழ் மக்களுடைய இதயம் தொடத்தக்க அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில், கடலை போல் கூடி இருந்த கூட்டம் கையொலி செய்து, தமிழ் வாழ்க என்று சொல்லியதும், எங்களுடைய மொழி அழிக்கப்படாமல் எங்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட நாங்கள் போராடுவோம், இதுதான் எங்களுடைய இலட்சியம் என்பதை கூடியிருந்த கோடிக்கணக்கான மக்கள் ஒரே நேரத்திலே சொன்ன காட்சிதான் இந்த தமிழ் விழாவினுடைய உண்மையான பலனே தவிர, வேறு அல்ல என்பதை அவர்களுக்கு நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஆனால் விருந்து சாப்பிட்டு விட்டுப் போகிற நேரத்தில் கத்தரிக்காய்ச் செடியிலிருந்து கத்தரிக்காயைப் பறிக்கிறபொழுது அதன் கீழ் இருந்து முள் குத்தி விட்டது என்கிற மாதிரி இவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய விழாவை நடத்திய இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவிக்காமல் எங்கோ, எதிலோ வசூல் செய்வதில் சிறு கெடுபிடி நடந்தது என்பதற்காக அதை மிகப் பெரியதாகக் காட்டி, ஆகவே விழா சிறப்பாக அமையவில்லை என்று சொல்வது மிகவும் வேதனைப் படத்தக்கதாக இருக்கிறது.

இங்கே காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் எல்லாம் ஒரு கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில்லாத கருத்தை 100 முறை



1968 பிப்ரவரி 16] [திரு. கா. வேழவேந்தன்]

திருப்பித்திருப்பிச் சொல்வதால், அது உண்மையாகிவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும். சட்டமும் ஒழுங்கும் நீதியும் இங்கே சரியாக இல்லை; ஒழுங்கே இல்லை என்று அவர்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதே தரப்பைச் சேர்ந்தவர்கள் இன்னொரு கருத்தையும் சொல்கிறார்கள். எங்கள் பகுதியில் குழப்பம் நடந்தபோது நாங்கள் போலீஸை அழைக்கிறோம். அப்படி அழைக்கும்போது அவர்கள் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதில்லை, கலவரங்கள் நடக்கும்போது தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். ஒரு இடத்திலே போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். இன்னொரு இடத்திலே அவர்களே தீவிரமாக இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கிற பொழுது அவர்கள் எப்படி அவர்களுக்குள்ளேயே முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாக புலப்படும். தெனாலியிலோ அல்லது மங்களூரிலோ கேட்கின்ற துப்பாக்கிச் சத்தம் இன்றைக்கு இங்கே கேட்காமல் இருப்பதற்குக் காரணம், தமிழக அரசு என்பதை அவர்களுக்கு நினைவூட்டிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் இறுதியாக ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். தமிழக ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே பி.ப. 12-30
ஒரு முக்கியமான செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 280-வது இந்திய அரசியல் சட்டப் பிரிவை சுட்டிக்காட்டி இந்திய அரசாங்கம் அமைக்க இருக்கிற பினான்ஸ் கமிஷன் என்று சொல்லப்படுகிற நிதி ஆய்வுக் குழு எந்த அளவுக்கு அந்தப் பிரிவின்படி தமிழ் நாட்டையும், மற்ற மாநிலங்களையும் சீராக வைத்து இனி ஆராய வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கிறபொழுது அந்த யோசனையை மேற்கொண்டால், உண்மையில் தமிழ் நாட்டில் இருக்கிற தொழில் வளமும், மற்ற வசதிகளும் பெருகும் என்பதை அவர் வெளிப் படையாகச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். செங்கை மாவட்டத்தில் கும்முடிப்பூண்டி தொகுதியைப் பொறுத்தவரையில் அதிகமாக கிணறு, ஏரிப் பாசனங்களைக் கொண்ட பகுதியாக அது அமைந்திருக்கிறது. பொது மராமத்துத் துறையினரை ஒன்றாக இணைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைப் பார்க்கிற பொழுது, அவர்கள் இந்தக் கருத்தை மனதிலே வைத்துக் கொண்டு செயல்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மொத்தத்தில் ஆளுநர் அவர்களுடைய உரை அழுகிற குழந்தைக்கு ஒரு 'ஆராரோ' பாட்டாக அமைந்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களுடைய வரவு செலவுத் திட்டம் என்ற பாலைக் கொண்டுவரப்போகிறார். அதற்கு முன்னால், இந்த இனிய பாட்டு நமக்கெல்லாம் ஒரு கீதமாக அமைந்திருக்கிற காரணத்தினால், கவர்னர் உரைக்கு நான் நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

சிறிய ஏற்பாட்டைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமே தவிர, அதற்காக இந்தி மொழியை மீண்டும் இங்கே படிக்க வைப்பது அல்லது திணிப்பது என்று சொல்கிறார்களே, அம்மாதிரி திணிப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நான் எண்ணவில்லை. நாம் செய்த தீர்மானத்தின் மீது நாம் உறுதியாக இருக்கிறோம்.

ஆங்கிலம் ஒரு அன்னிய மொழி, அன்னிய மொழியை தன் மொழியாகக் கொண்ட தேசம் இந்த உலகத்தில் எதுவுமில்லை என்று நேற்று ஒரு அரசியல் தலைவர் பேசியிருக்கிறார். அது அன்னிய மொழி அல்ல என்பதை நாம் இன்றைக்கு ஒத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தி மொழி எப்படி தமிழனுக்கு அன்னிய மொழி இல்லையோ, அதேபோல ஆங்கிலமும் அன்னிய மொழி அல்ல. ஆங்கிலேயன் அந்த மொழியை பேசினான் என்பதற்காக அதை அன்னிய மொழி என்று சொல்வதற்கில்லை. ஆங்கிலம் தமிழுக்கு இந்தியைவிட மிகவும் நெருங்கிய மொழியாக இருக்கிறது, சாதாரணமாக படிக்கக்கூடிய மொழியாக இருக்கிறது; இதுவரை அதைப் புரிந்துகொண்டு, அதில் ஊறிப்போனவர்களா இருக்கிறோம். ஆகவே, ஆங்கில மொழி ஒரு அன்னிய மொழி என்று சொல்வதற்கு இல்லாமலும், இந்தி நம்முடைய மொழி என்று சொல்ல முடியாமலும் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொண்டு, ஒரு சமரச உடன்பாட்டுக்கு வருகிற காலத்தில், நாம் இயற்றியுள்ள தீர்மானத்திற்கு பங்கம் இல்லாமல், நம்முடைய கௌரவம் குறைந்துபோகாமல், நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று நமது சர்க்காரையும் மற்ற பெரியவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் தமிழக அரசை தி.மு.க. நடத்திக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டு அரசாட்சி செய்த காலத்தில் ஜனநாயக சோஷலிசம், ஜனநாயக சமத்துவம் நமக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஜனநாயகத்தில் மக்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று ஒப்புக்கொள்ளும் முறையை நாம் அறிவோம். அந்த முறையில்தான் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது காங்கிரஸ் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் வரலாற்றைப் பார்த்தால் ஒன்று தெரியவரும். எந்த நாட்டிலும், யார் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தாலும், சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர்கள் அந்த நாட்டை ஆளுவதற்கு தாங்களே உரியவர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பது, சாகும் வரையில் அந்த நாட்டை அவர்களேதான் ஆளவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிராம்வெல், நெப்போலியன், ஹிட்லர், ஸ்டாலின் செய்தது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கும் அயர்லாந்து நாட்டிற்கு டிவாலரா தலைவராக இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி எத்தனையோ நடந்திருப்பது வரலாற்றில்





தெரியவருகிறது. ஆனால் இதற்கெல்லாம் விதிவிலக்காக நம் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்த காந்தி மகான் அரசாட்சியை தான் ஏற்றுக்கொள்ள விரும்பாமல், தன்னுடைய சிஷ்யர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். ஆனால், அவருடைய சீடர்கள் 20 வருஷகாலமாக ஆண்டார்கள். தாங்களே ஆளவேண்டும் என்று நினைப்பதும் சகஜமாகப் போய்விட்டது. வரலாறு படித்தால் மனதில் உருவானது அந்த எண்ணம். ஜனநாயகம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். தங்களுக்கு வாக்களித்தால்தான் ஜனநாயகம், மற்றவர்களுக்கு வாக்களித்தால் அது ஜனநாயகம் அல்ல என்று நினைக்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால் இம்மாதிரி வாதாடும் நிலை ஏற்பட்டிருக்காது. ஜனநாயகமானது கடந்த தேர்தல்களிலே காங்கிரஸுக்கு வாக்களித்த தன்மையைக் கொண்டிருந்தது. சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பெருமை அவர்களுக்கு உண்டு, சில நாட்களுக்கு அவர்களேதான் ஆளட்டும் என்று மக்கள் விட்டு வைத்திருந்தார்கள். ஆனால் இந்த ஒரு தேர்தலில்தான் மக்கள் மாறி வாக்களித்திருக்கிறார்கள். அது ஏன் என்று காங்கிரஸ்காரர்கள் சிந்தித்துப்பார்த்துக் கொண்டு, விமரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏதோ புதிதாகச் செய்ய வேண்டும், பழைய முறையை மாற்ற வேண்டும் என்று புதிதாகச் செய்தார்கள் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் அது சரியாக இருக்காது. அதை விட்டுவிட்டு, இந்த நாட்டில் மக்கள் தங்களை ஒதுக்கக் காரணமாக இருந்தது எது என்பதை சிந்தித்து பார்த்து, அதைச் சொல்லாமலேயே மனதில் தவற்றை உணர்ந்து கொண்டு, நல்ல முறையில் நடந்து கொண்டால் நலமாக இருக்கும். இருபது ஆண்டுகள் ஆண்டார்கள். கூவம் ஆற்றின் கரையில் குடிசைகள் அகற்றப் படவில்லை; குளத்துப் பள்ளங்களில் கூடாரங்கள் அப்படி அப்படியே தான் இருக்கின்றன. கஷ்டப்பட்ட மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஏழை ஏழையாகவே தான் இருக்கிறான். எங்கெல்லாமோ பணக்காரர்கள் வந்து விட்டார்கள். ஏழை கண்டு குமுறுகிறான், நாம் கஷ்டப்பட்டு பகலெல்லாம் உழைக்கிறோம்; எவன் எவனோ சுகமாக இருக்கிறான். நாம் இரவெல்லாம் சீரழிந்து கிடக்கிறோம். யாரோ வாழ்கிறார்களே என்று மனம் வெந்து போகிறான். வாழ வைக்கிறவர்கள் வாழவைக்கவில்லையே என்று நினைக்கிறான். ஆகவே, இந்த ஆட்சியை மாற்றிப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். மாறி வாக்களித்தார்கள். அதன் காரணமாக காங்கிரஸ் அகற்றப்பட்டது. அதை உணர்ந்தால், தாங்கள் செய்த திட்டங்களிலும், போட்ட திட்டங்களிலும் எங்கெங்கே குறை என்பதைப் புரிந்து கொண்டு இனிமேலாவது நல்ல முறையாக நடந்துக் கொண்டால், நல்ல நிலைக்கு வரமுடியும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் ஜனநாயகம் என்று ஒன்று இருப்பதை உணர வேண்டும். அந்த ஜனநாயகந்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்றைக்கு அரசைக் கொடுத்திருக்கிறது. சோஷலிசம் பற்றிப் பேசிய காங்கிரஸ், ஜனநாயகம் என்று பேசிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் இன்றைக்குள்ள அரசை குறைகூறிக்கொண்டு இருப்பதில் பலன் இல்லை. அப்படிக்

குறை கூற வேண்டும் என்றால், ஜனநாயக ஆட்சியில், ஏதாவது அந்த வழியிலிருந்து சர்க்கார் பிறழுமேயானால், அப்பொழுது 'நீங்கள் செய்வது சரியில்லை' என்று அந்த நேரத்தில் எடுத்துச் சொன்னால் நன்றாக இருக்கும். இன்றைக்கு சோஷலிசப் பாதையில் செல்லும் இந்த அரசு, காங்கிரஸ் பாதையிலிருந்து மாறுபட்டு இருக்கவில்லை. அவர்கள் மாறுவார்கள் என்றும் நான் நினைக்கவில்லை. ஆகவே எதிர்க் கட்சி என்ற காரணத்திற்காக எதிரிக் கட்சியாக செயல் படவேண்டும் என்று நினைத்தால் அது பிரயோசனம் இல்லை. எங்கேயாவது நல்ல காரியத்தைச் செய்யத் தவறினால் 'அதைச் செய்யுங்கள்' என்று சொல்லலாம். தவறான முறையில் செய்யப்படும் நல்ல காரியம் என்றாலும், அதையும் எடுத்துச் சொல்லலாம், தவறான முறை என்று. அப்பொழுது எதிர்க் கட்சி நல்லபடியாக செயல்படுவதாக இருக்கும். காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில் நல்லதொரு எதிர்க் கட்சி வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்ததற்கிணங்க இப்பொழுது அவர்களுக்கே நல்லதொரு வாய்ப்பு கிடைக்கிறது. அவர்களைக் கேட்கிறேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு மக்களுக்குச் செய்துவிட்டோம்; நான்காவது திட்டமும் கொடுக்கப் போகிறோம். பாலும் தேனும் வருவதை வாயிலே வாங்கிக் கொள்ள மக்கள் நமக்கே வாக்களிப்பார்கள் என்கிற நம்பிக்கையிலே உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் மக்கள் மனம் மாறி வாக்களித்து விட்டார்கள். மக்கள் விசுவாசமாக இருக்கவில்லை என்பதா? 20 வருஷமான ஆட்சியில் இருந்திருக்கிறோம், ஆட்சியை மாற்றி, நம்மை அகற்றிவிடுவார்கள் என்ற எண்ணமே தோன்றாமல், பெருமிதத்துடன் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். "குணதிசை முடியை வைத்து, குட திசை பாதம் நீட்டி . . ." அறிதுயிலில் படுத்திருந்த பரமனைப்போல நாம்தான் சர்வ வியாபகம், இமயம் முதல் குமரி வரை இருக்கிறோம் என்று நினைத்து இருந்தார்கள். இமயத்தில் தலையை வைத்து, விந்தியத்தில் இடுப்பை வைத்து குமரியில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தார்கள் பரமனைப் போல. நித்திரையில் ஆழ்ந்து விட்டார்கள். தலைவர் ராஜாஜியும் அறிஞர் அண்ணாவும் கிளப்பிய பெரும் வெள்ளம், காங்கிரஸ் புரிந்து எழுந்திருக்குமுன் தலைப் பக்கம் உத்தரபிரதேசத்தையும், மார்புப் பக்கம் மத்திய பிரதேசத்தையும், கால் பக்கத்தில் தமிழ் நாட்டையும் கொண்டு போய் விட்டது. இப்பொழுது காங்கிரஸ் சங்கடப்படுவது நியாயம் தான். ஆனால், தான் புரிந்த தவறுகளைத் தெரிந்து கொண்டு, அந்த வழிகளிலிருந்து மாறுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். நண்பர் கருத்திருமன் கம்ப ராமாயணப் புலவர். அவருடைய கதாநாயகன் ஸ்ரீராமன் நிலையை அவர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதிலும்
சித்தி ரத்தி னலர்ந்த செந்தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்.





என்றது போல, ஆத்திரப்படாமல், நிதானமாக இருக்க வேண்டும். இன்றைக்கும் இராமனை போல அவர்கள் திருப்தியோடு இருந்து, சிறையிலிருந்த செல்வியைப் போல்

அரசு கட்டில் இருந்தரசாளவும்
புரிசை விதியுல் யானையிற் போகவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்—என்று

அங்கலாய்க்காமல் பணியாற்றினால் நலமாக இருக்கும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

என்றது போல, இன்றைக்குச் சிறுத்தவர்களாக இருந்தாலும், உயர்ந்தவர்களாக இருந்து, சர்க்காருக்கு நல்ல கருத்துக்களைக் கொடுத்துக் கொண்டு, தவறும் இடத்தில் எடுத்துக் காட்டி, சர்க்காருக்கு ஏதாவது புலப்படாமல் இருந்தால்—அப்படியொன்றும் இராது என்று நம்புகிறேன்—எடுத்துச் சொல்லி, ஆக்க வழியில் செயல்படவேண்டும் என்று எடுத்துச் சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. டி. மார்டின்:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரையின் மீது என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் உரையைப் பார்க்கும் போது, அதில் எந்தப் புதுமையான அம்சமும் இல்லை என்று முதலிலேயே கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் நிலை நிறுத்தப் படாமல், அராசகம் தாண்டவமாடும் நிலைதான் இருக்கிறது. அதைப்பற்றி கவர்னர் பெருமானின் உரையில் ஒரு வார்த்தைக்கூட இல்லை என்பதை மனக் குறைவுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் தஞ்சைத் தரணியில், பூந்தாழங்குடியில் விவசாயக் குடிமகன் பக்கிரியை இந்த அரசின் துப்பாக்கி பலி கொண்டதற்கு நீதி விசாரணையில்லை. அதேபோல திருவொற்றியூரில் தொழிற்சாலைமுன் தொழிலாளர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. அதற்கும் நீதி விசாரணையில்லை. ஏன், இன்னும் கூறவேண்டுமானால், இந்த மாமன்றத்திற்கு, கடந்த கவர்னர் உரையின்போது இரண்டு கால்களோடும் வந்திருந்த ஒரு சட்ட மன்ற உறுப்பினர், இந்த பத்து மாத காலத்திற்குள்ளாக இரண்டில் ஒரு காலை இழந்து, பாண்டியன் அவையில் ஒற்றைக்கால் சிலம்போடு நீதி கேட்கச் சென்ற கண்ணகியே போல, இந்த இரண்டாவது கவர்னர் உரை கேட்க வந்தார் என்றால், தமிழகத்தில் அதைவிட சட்ட ஒழுங்கு கெட்ட நிலைக்கு வேறு எதைச் சொல்லியும் விளக்க முடியாது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். திரும்பிக் கூறலாம். நெல்லிக்குப்பம் மஜீத், உடையார்பாளையம் வேலாயுதம் கோயம்பத்தூர் ஆரோக்கியசாமி கதை என்ன ஆயிற்று என்று பழைய சம்பவங்களைக் காட்டி. ஆனால், முன்னே நடந்த தவறினை எடுத்துக் காட்டி மற்றொரு தவறினைச் செய்ய ஆதாரமோ, மேற்கோளோ காட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகிறது

என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, படி அரிசித் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு அருள் கொடையாக இருந்து வந்துள்ளது என்று கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எங்கே ஏழை எளியவர்களுக்கு இது அருள் கொடையாக இருந்து வந்து இருக்கிறது? என்று நான் கேட்கிறேன். கோவையிலும் சென்னையிலும் ஏழை எளிய மக்களுக்கு இது அருள் கொடையாக இருந்தாலும், மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களில் எல்லாம் ஏழைகள் இல்லையா? மந்தகாச முகவதிகள் புடைசூழ, மலர் தூவப்பட்ட கட்டிலிலே அமர்ந்து, ஓவியன் தீட்டிய ஒய்யாரமான சித்திரத்தைக் காட்டி அதர பானத்தையும் இதர விருந்துகளையும் உண்டு, கேளிக்கையால் களைத்து, பின்பு சல்லாபித்துக் கிடக்கும் உல்லாசச் சீமான்களா மற்ற மாவட்டங்களில் இருக்கிறார்கள்? அங்கே ஏழைகளே இல்லையா? எந்தக் காரணங்களுக்காக, எந்த அடிப்படையில், படி அரிசித் திட்டம் கோவைக்கும் சென்னைக்கும் கொடுக்கிறார்களோ, அதே காரணங்களுக்காகவும் அதே அடிப்படையையும் கொண்டு, மற்ற வறண்ட பகுதிகள், மற்ற விளைநிலம் இல்லாத பகுதிகள், தொழிலாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகள் ஆகியவற்றுக்கும் விரிவாக்கப்படவேண்டும் என்று கேட்டால், ஜனநாயகக் காவலர்கள், ஜனநாயகத்தை மதிப்பவர்கள், அதைப்பற்றிக் கோபப் படலாமா? என்று நான் கேட்கிறேன்.

"எங்களுக்குப் புசிக்க உணவு வேண்டும் அரிசி கொடுங்கள்" என்று பொது மக்கள் கேட்டால், திருச்செந்தூரில், "இதோ வாங்கிக்கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு வேல்கம்புக் குத்தும், அரிவாள் வெட்டும் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு அராஜக நிலை தாண்டவம் ஆடுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கோயம்பத்தூரில் உணவு கேட்ட மக்களை அழைத்துக்கொண்டு ஊர்வலம் வந்த பழைய போலீஸ் அதிகாரி அர்ஜுனனை சுட்டுக் கொன்றார்கள்.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். முன்னால் ஒரு தவறு நடந்திருந்தால், அந்தத் தவறை வைத்து, மறு தவறை மறைக்கவேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

படி அரிசிக்காகப் பானையைத் தொங்கவிட்டால், அதைக் காங்கிரஸின் கருமாதிக் கலையம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது, "பானை கட்டி மாரடிக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்" என்று கூறியிருக்கிறார்கள். நான் சொல்லுகிறேன் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** "பானை கட்டி காங்கிரஸ் காரர்கள் மாரடிக்கிறார்கள்" என்று சொல்லவில்லை. நான் சொன்னதை முழுவதும் சொல்லவேண்டும். "யானை கட்டிப் போரடித்த அழகான தமிழகத்தில் பானை கட்டி மாரடிக்கிற அளவுக்கு இருபதாண்டுக் கால ஆட்சி அல்லவா வழி வகுத்து விட்டது?" என்று சொன்னேன்.





**திரு. டி. மார்டின்:** பரவாயில்லை. ஆனால், அது பானையைக் கட்டி மாரடிக்கிறார்கள் என்று காங்கிரஸ்காரர்களைக் குறிப்பிடுப் பேசி இருப்பதாக நான் கருதுகிறேன். அது எங்களுக்கு வழக்கம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றைச் சற்றுத் திருப்பிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தேர்தலுக்கு முன்பு, அழகிய நங்கையின் படத்தைச் சுவரொட்டியில் போட்டு, அவிழ்ந்த கூந்தலை அவளுக்குக் கொடுத்து நெற்றியிலே பொட்டு இல்லாதபடி, அவளுடைய பக்கத்தில் சில வாக்கியங்கள் எழுதி போஸ்டர் போட்டது ஞாபகத்தில் இருக்கலாம். அந்தப் போஸ்டரில் கூறியிருந்தது என்ன? "கூலி உயர்வு கேட்டான் அத்தான்—குண்டடி பட்டான் அத்தான்—பூ இழந்தாள்— பொட்டு இழந்தாள்" என்று போடவில்லையா போஸ்டர்? இன்று பானையைக் கட்டியவுடன் ஏன் கோபப்பட வேண்டும்? பானையைக் கட்டி. "பொதுமக்கள் படி அரிசி கேட்கிறார்கள். பானை இருக்கிறது; கையிலே பணம் இருக்கிறது; கொடுங்கள் அரிசி" என்று கேட்டால், ஜனநாயகக் காவலர்கள், ஜனநாயகத்தைப் பெரிதும் மதிப்பவர்கள் ஆத்திரப் பட வேண்டியதில்லை.

இன்று விலைவாசியின் உயர்வு ஒரு விஷச் சக்கரம் போல் ஏறி வருகிறது. அந்த விஷச் சக்கரத்தை எந்த நேரத்திலாவது உடைத்துவிட வேண்டும்; என்றைக்காவது ஒருநாள் உடைக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரில் கூறியிருந்தார்கள். ஆனால், எந்த அளவு அதை உடைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிக் கொண்டிருக்கும் உறுப்பினர் பேசி முடிந்த பிறகு தாங்கள் கேட்கலாம்.

**திரு. டி. மார்டின்:** சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும் முகத்தான் ஆளுங்கட்சியிலிருந்து சொன்னார்கள், விலைவாசி இறங்கி வருகிறது என்று. நேற்று கடையில் கேட்டால், ஒரு கோழி முட்டையின் விலை 32 காசு என்று கூறுகிறார்கள். "1966-இல் 20 காசாக இருந்ததே கோழி முட்டை, அது திடீரென்று 32 காசாக ஏன் வந்தது?" என்று கேட்டால், "அன்று கோழி 20 காசுக்கு முட்டையிட்டது, இப்பொழுது தமிழக அரசில் கோழி 32 காசுக்கு முட்டையிடுகிறது" என்று கடைக்காரர்கள் கேலியாகச் சொல்லுகிறார்கள்.

1966-இல் ஒரு கிலோ இறைச்சி (மட்டன்) நான்கு ரூபாயாக இருந்தது. இன்று, அது ஆறேமுக்கால் ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. பட்டினப்பாக்கத்தில் தமிழக அரசு ஊழியர்கள் வசிக்கும் அந்த இடத்தில் உள்ள மட்டன் ஸ்டால் சொந்தக்காரர் இதைக் கூறுகிறார் என்றால், விலைவாசி இறங்கியிருக்கிறதா? விலைவாசி இறங்கவில்லை. விலைவாசி உயர்வு மக்களை இன்னும் தாக்கிக்கொண்டே போகிறது.

நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு—அவர்கள் சார்ந்துள்ள ஜாதியைப்பற்றிக் கவனிக்காமல், அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அல்லது உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம், அவர்கள் குடியிருப்பதற்கு நிலம் கொடுத்து, அதற்கான உதவி செய்யும் திட்டம் காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தது. அது இந்த அரசின் அலுவலகத்தில் செயற்குறிப்பில் இருக்கும் என்று கருதுகிறேன். அதைத் தொடர்ந்து நடத்துவதற்கான அறிகுறி கவர்னர் உரையில் வருமா என்று எதிர்பார்த்தேன். வரவில்லை. எனவே, சாதாரண நிலமில்லாத ஏழைகள், பனை மரத் தொழிலாளர்கள், மீனவர்கள் முதலியவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு மனை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இலங்கையிலிருந்து தமிழர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள். இலங்கைக்குச் செல்லுகிறபோது, கப்பலின் மேல் தட்டிலிருந்து தமிழகத்தை உற்று நோக்கினான். வற்றாத ஜீவநிதிகள் வளைந்து ஓடுகின்றன, வளமான வயல்கள் ஏராளமாக இருக்கின்றன, மனிதன் காலுக்கடியில் பொன், கடலுக்கு அடியில் முத்து என்ற நிலை இருந்தும் நீ பெற்றெடுத்த மகன் உன்னிடம் வாழ முடியாமல் வெளிநாடு செல்கின்றேன் என்று கூறிச் சென்றான். தமிழகத்திலிருந்து இலங்கை சென்ற மக்கள் அங்கே வாழ வழியில்லாமல் தாயகத்திற்குத் திரும்பி வருகிறார்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வு தருவதற்கான திட்டங்கள் கவர்னர் உரையில் ஏதும் இல்லை.

29—1—1968-இல் முதல் அமைச்சர் அவர்கள் பேசியதாக, 'மெயில்' பத்திரிகையில் 6-வது பக்கத்தில் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது இந்தச் சபையையும் உள்ளடக்குமா என்று தெரியவில்லை. தலைவர் அவர்களின் சம்மதத்தின் பேரில் நான் அதை வாசிக்க ஆசைப்படுகிறேன்.

" The Chief Minister referred to the widespread agaitations and defiance of law and stated that unfortunately to-day laws are made in Assemblies and Parliament by people who are not fully qualified or equipped to make laws . . .

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, நடைமுறைக் கேள்வியொன்றை எழுப்ப விரும்புகிறேன். அதாவது—சட்ட மன்றத்திலே பத்திரிகையிலிருந்து படிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சுக்கு ஆதாரமாக இருந்தால், பத்திரிகையிலிருந்து 'கோட்' பண்ணலாம்.

திரு. டி. மார்டின்:—

" **They were passed hastily and for political reasons.** This led the people to defy laws which were harmful to their interest.

என்று "மெயில்" பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறது. "சட்ட மன்றங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், இந்தச் சட்ட மன்றத்தையும் அது உள்ளடக்கும் என்று நான் கருதி,





தலைவர் அவர்களிடம் இதை நான் கூற ஆசைப்படுகிறேன். இந்த சட்ட மன்றத்தையும் அது உள்ளடக்கினால், இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி, அவர்களை எல்லாம் " not fully equipped " என்று கூறினால, சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனைபேருமே, அவர்கள் இங்கு ஆற்றக் கூடிய பணிக்குக் களங்கம் கற்பிப்பது போல் ஆகாதா என்று நான் கேட்கிறேன்.

கொள்முதல் பற்றி ஒரு வார்த்தை கூற ஆசைப்படுகிறேன். 1967-ல் 8.5 லட்சம் டன் உணவுத் தான்யம் கொள்முதல் ஆகியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1966-இல் 7.26 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயற்கை சீற்றம் அடைந்த நேரம்; இயற்கை அன்னை கோபம் அடைந்த நேரம், 1966-ம் ஆண்டில் 7.26 லட்சம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது. ஆனால், 1967இலோ இயற்கை அன்னை பூரித்த நேரம்; இயற்கை அன்னை சிரித்த நேரம். நீர்த் தேக்கங்களில் எல்லாம் நீர் நிரம்பி வழிந்த நேரம். இந்த நேரத்தில் 8.5 லட்சம் டன்தானே கொள்முதல் ஆகியிருக்கிறது? இன்னும் அதிகமாக கொள்முதல் ஆகியிருந்தால், அதைப்பற்றிப் பாராட்டியிருக்க முடியும். ஆனால், இதுவும் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் விவசாயியை கட்டிவைத்து அடித்துத் துன்புறுத்தி, அதிகாரமாகக் கொள்முதல் செய்தும் இவ்வளவுதானே வந்திருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப் பட்டது).

* திரு. ஆலடி அருணா: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ள உரையினை ஆதரிக்கும் வகையில் எனது கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பும், இந்தியத் துணை கண்டத்தின் வரலாற்றில் புதிய திருப்பத்தையே உருவாக்கக்கூடிய அளவுக்குச் சிறப்பான உரையைத் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். அந்த உரையின் மீது கருத்தைக் கூறுகிற அருமை காங்கிரஸ் நண்பர்கள், வழக்கமான ஒரு குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் மேடைகளிலும் கூறிவருகிறார்கள். " திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் மத்திய அரசின் மீதே புகார் சொல்லுகிறது; தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதற்கு மத்திய அரசின் மீதே பழி போடுகிறது" என்ற குற்றச்சாட்டை வழக்கமாகக் காங்கிரஸ் அன்பர்கள் கூறி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதற்காக மத்திய அரசின் மீது குற்றம் சாட்டுகிறது, என்ன என்ன பிரச்சினைகளில் குற்றம் சாட்டுகிறது என்பதைக் குறித்து, கட்சிக் குரோதம் இன்றி, நடுநிலைமையோடு ஆராய்ந்து பார்ப்பார்களானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை, தேவையானவை, இந்த நாட்டுக்கு அத்தியாவசியமானவை என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் நிச்சயமாக ஒப்புக் கொள்ளுவார்கள்.

(திரு. என். முருகையன் தலைமை)

பி.ப. 1-00 இன்றைய தினம் மாநில அரசின் தேவைகளும், கோரிக்கைகளும், உரிமைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. அவைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற கடமை மாநில அரசுக்கே இருக்கிறது. சீனாவின் சீற்றமா? பாகிஸ்தானின் படையெடுப்பா? மத்திய சர்க்கார் செய்வது என்ன? என்று கேட்கிறார்கள். ஆனால் விலைவாசியேற்றத்தைத் தடுத்து நிறுத்தவும், ஒழுங்கு அமைதியைக் கட்டிக் காக்கவும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், கல்வியிலே முன்னேற்றம் காணவும், நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் காக்கவும் இந்த மாநில அரசிடம் தான் எதிர் பார்க்கிறார்கள். இந்த அளவுக்கு மக்கள் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு இருக்கின்றது மாநில அரசு. மக்களுக்கு நல்லதைச் செய்யக்கூடிய அளவுக்கு, நல்வாழ்வை அளிக்கக்கூடிய வகையில் மாநில அரசுக்கு அதிகாரம் ஏதாவது இருக்கிறதா? நிதி வசதி ஏதாவது இருக்கிறதா என்பதைக் காங்கிரஸ் அன்பர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மிதமிஞ்சிய அதிகாரத்தைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கும் மத்திய அரசிடம் 'தரிசனம் கிடைக்காதா?' என்று நந்தனைப் போல் மாநில அரசு காத்து நிற்கிறது. ஆனால் மத்திய அரசோ கந்தனைப்போல் ஊர்சுற்றுகிறது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் மத்திய அரசின் தயவை மாநில அரசு நாடி நிற்கும் நிலைமையால், மாநில அரசுகள் கடமை, பொறுப்பு குறைந்து கொண்டு வருகிறது. இதனை காங்கிரசிலுள்ள அறிவாளிகளே சிறப்பாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

"The inherent defects in the concentration of authority at the Centre are beginning to show. The growing dependence of the States on the Centre is weakening the accountability of the State Cabinets to State Legislatures."

g

என்ற இந்தக் கருத்தை, இப்போது புதிதாக காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருக்கின்ற டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களே கூறியிருக்கிறார். எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசு வைத்திருக்கிறது. மத்திய சர்க்கார் பலமாக இருக்க வேண்டுமென்று வெள்ளைக்காரன் நினைத்து திட்டமிட்டான். 1853-ம் வருஷம் ஒரு சட்டம் வெள்ளைக்காரர்களால் இயற்றப்பட்டது. அந்த வெள்ளைக்காரன் கூட நாள் செல்ல செல்ல மாநிலங்களின் உரிமைகளை மதித்து, நியாயங்களை எண்ணிப் பார்த்து, 1919-ம் ஆண்டிலும், 1935-ம் ஆண்டிலும் மாநிலங்களுக்குச் சில உரிமைகளை அளிக்கும் சட்டங்களைக் கொண்டுவந்தான். ஆனால் காங்கிரசால் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டம் மாநிலங்களை மேலும் அடிமைக் கூடாரமாக மாற்றிவிட்டது. இதன் காரணமாகத்தான் பல்வேறு மாநிலங்களில் மத்திய அரசுக்கு எதிராக போர்க்குரல்கள் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன. மத்திய அரசிடம் 97 அதிகாரங்கள் இருக்கின்றன. கன்கரன்ட் லிஸ்டில் 47 அதிகாரங்கள் இருக்கின்றன. மாநில அரசு இடத்தில் 67 அதிகாரங்கள்தான் இருக்கின்றன. இந்த அதிகாரத்தில் கூட மாநில அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றினாலும்,





அதை அமல் செய்ய முடியாதவாறு தடுக்கும் அதிகாரம் குடியரசு தலைவருக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தரப்பட்டிருக்கிறது.

தமிழக மக்களின் சார்பாக, பொதுமக்களின் நன்மையைக் கருதி எழுதப்படும் கோரிக்கைகள் எல்லாம் மத்திய சர்க்காரால் பரிசிலிக்கப்படுகின்றனவா என்பதைக் காங்கிரஸ் அன்பர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்கார் மாநில அரசுக்கு உதவி செய்ய முன்வரவில்லை, கடன் கொடுக்க முன்வரவில்லை, மானியம் கொடுக்கவில்லை. மத்திய சர்க்கார் ஏதோ தங்களுடைய பிதுரார்ஜித சொத்து என்று காங்கிரஸ்காரர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாநில அரசு கூறும் குற்றச்சாட்டிலுள்ள நியாயங்களை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. மார்டின் அவர்கள், "நாங்கள் பானையைக் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் எப்போது படி அரிசி போடப் போகிறீர்கள்" என்று கூறினார். நீங்கள் பானையை அல்லது சட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தாலும் தமிழக அரசு கோபித்துக் கொள்ளாது. தேர்தல் நேரத்தில் படி அரிசித் திட்டம் அமல் செய்ய முடியாதது; கனவு, கற்பனை என்றெல்லாம் சொன்னவர்கள், இன்றைக்கு பானையைத் தூக்கிக் கொண்டு வந்து 'படி அரிசி எங்கே?' என்று கேட்கிறார்கள். தமிழக அரசு பொறுப்புணர்ச்சியோடு இன்றைய தினம் ஏறத்தாழ 36 லட்சம் மக்களுக்கு படி அரிசித் திட்டத்தை வழங்கிவருகிறது. 36 லட்சம் மக்கள் இதனால் பயன் அடைகிறார்கள். இந்தத் திட்டம் நாடு பூராவும் அமல் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மாநில அரசு முழு நம்பிக்கையோடு பாடுபட்டு வருகின்றது. இந்தத் திட்டம் நாடு முழுவதற்கும் உடனடியாக அமலாக்காததற்குக் காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன். ஏனென்றால் இந்தத் திட்டத்தை தி. மு. கழகம் கொண்டுவந்தபோது எப்பொழுதாவது இதை ஆதரித்திருக்கிறார்களா? படி அரிசித் திட்டத்தை செயல்படுத்த அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் மானியம் கேட்டார்கள், கிடைக்கவில்லை. கடன் கேட்டார்கள், கிடைக்கவில்லை. மக்கள் நலனுக்காகக் கொண்டுவரப்படும் திட்டத்திற்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் உங்கள் எஜமானர்களைப் பார்த்துச் சொன்னீர்களா? மாநில அரசு கேட்ட கடன் தொகை கிடைக்காமலிருப்பதற்கு எவ்வளவு தடையாக இருந்தீர்கள் என்பதை நீங்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும். மத்திய சர்க்கார் மானியம் கொடுக்கவும் மறுக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. விவசாயிகளைக் கூப்பிட்டு, நிலச்சுவான்தார்களைக் கூப்பிட்டு மாநாடுகளைக் கூட்டி, "இனிமேல் நீங்கள் உங்கள் நிலங்களில் கரும்பு பயிரிடுங்கள், வாழை சாகுபடி செய்யுங்கள், சவுக்கு சாகுபடி செய்யுங்கள், நெல் சாகுபடி செய்யாதீர்கள்" என்றெல்லாம் கூறியிருக்கிறீர்கள். இம்மாதிரி சொன்னதை காங்கிரஸ்காரர்கள் மறுக்கிறார்களா? உதவிக்கு வருபவர்களைத் தடுக்கிறீர்கள். உடமையாளர்களைத் தூண்டிவிடுகிறீர்கள்.

[திரு. ஆலடி அருணா] [1968 பிப்ரவரி 16

இத்தனையும் செய்துவிட்டு 'படி அரிசி' 'படி அரிசி' என்று மக்களைத் தூண்டி விடுகிறீர்கள். 'படி அரிசி ஆட்சி' என்று எங்களைப் பார்த்துக் கேலியாக வில்லுப்பாட்டு நடத்துகிறார்கள். எங்களிடத்தில் நீங்கள் அரிசி கேட்கிறீர்கள். உங்களிடத்தில் மக்கள் அரிசி கேட்ட நேரத்தில் என்ன செய்தீர்கள் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு படி அரிசி மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்று உங்கள் ஆட்சியில் விற்ற பொழுது மக்களிடத்தில் வாங்குகிற சக்தி இருக்கின்றது என்று நீங்கள் வாதிட வில்லையா? அரிசி கேட்ட மக்களிடத்தில் செஞ்சோளத்தைக் கொடுத்தீர்கள், மக்காச்சோளத்தைக் கொடுத்தீர்கள், இவையெல்லாம் மறந்துவிடக்கூடியவைகளா? உணவு வேண்டும் என்று கேட்டபோது 'எலிக்கறி சாப்பிடுங்கள்' என்று சொன்னவர்கள் எங்களைப் பார்த்து, 'படி அரிசி போகிறான் பார்' என்று சொல்லும்போது, நாங்களும், 'பார், பார், மக்காச்சோளம் சாப்பிடச் சொன்னவர் போகிறார் பார், எலிக்கறி சாப்பிடச் சொன்னவர் போகிறார் பார்', என்று திருப்பிச் சொல்ல முடியாதா? படி அரிசித் திட்டத்தை நாடு பூராவுக்கும் அமல்படுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்புணர்ச்சியோடு நடந்து வருகிறது. பொறுப்புள்ளவர்களும் அதற்கு ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

படி அரிசிப் பிரச்சினையிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந் நேரத்தில் மொழிப் பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். தமிழக மக்கள் மொழிப் பிரச்சினையில் அதிகமான கவனத்தைச் செலுத்துகிறார்கள். தமிழகத்தில் மும் மொழிக் கொள்கைத் திட்டம் வேண்டாம், இருமொழிக் கொள்கை போதும் என்று இந்தச் சட்டப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். அதைப்பற்றி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில மேடைகளில் பொருத்தமில்லாத சில வாக்கியங்களைக் கூறியிருக்கிறார். இதை இங்கு கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது)

"தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க என்று கூறப்படும் அந்த மொழித் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை, கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவில்லை, ஆதரிக்காதவர்கள் 52 சதவிகிதம். எனவே, பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத தீர்மானம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அவருடைய கருத்தை வாதத்திற்கு வேண்டுமானால் ஒப்புக் கொள்கிறேன். 1952-ம் வருஷத்தில் அகில இந்திய அடிப்படையில் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த வோட்டுகள் 45 சதவிகிதம்; 1962-ம் ஆண்டில் காங்கிரசுக்குக் கிடைத்தது 44.7 சதவிகிதம் வோட்டுகள்; 1967-ல் காங்கிரஸுக்குக் கிடைத்த வோட்டுகள் 40.85 சதவிகிதந்தான். இந்த நிலையில் நீங்கள் மத்தியில் மந்திரி சபையை அமைத்திருக்கிறீர்கள். மொழித் தீர்மானத்தை 52 சதவிகித மெஜாரிட்டி மக்கள் ஆதரிக்கவில்லையென்று குற்றம் சாட்டும் நீங்கள், 40 சதவிகித வாக்குகளைப் பெற்று நாடாளு மன்றத்தில் இருக்கலாமா? நீங்கள் மந்திரி சபையை அமைக்கலாமா? ஆட்சி



1968 பிப்ரவரி 19] [திரு. ஆலடி அருணா]

மொழிச் சட்டம், ஆட்சிமொழித் திருத்தச் சட்டம் ஆகியவை எல்லாம் உங்கள் கருத்துப்படி பெரும்பான்மை மக்களால் ஒப்புக் கொள்ளப்படாததுதானா? இவற்றையெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொள்கிறாரா? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "மொழித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தேசத் துரோகம்" என்று பொதுமேடைகளில் பேசிக் கொண்டு வருகிறார். அவர் சொல்வதனால் தேசத் துரோகம் ஆகிவிடாது. 'எவன் ஒருவன் இந்த மண்ணிலே பிறந்து, இந்த மண்ணின் உரிமைகளை அனுபவித்துவிட்டு, இதன் வளங்களைப் பெற்றுக் கொண்டு, பெற்றெடுத்த தமிழ் மாதாவுக்கும் பிறந்த தமிழ் நாட்டிற்கும் தீங்கு விளைவிக்கிறானோ, அவன்தான் தேசத் துரோகி. அவனைச் சிந்தியிலே நிறுத்தி தேசத் துரோகி என்று குற்றம் சாட்டித் தண்டிக்கவேண்டும் என்று கூறி, இத்துடன் உரையை முடித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். காங்கிரஸ்காரர்கள், நெல்லை, குமரி போன்ற ஏழைகள் வாழ்கின்ற பகுதிகளுக்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவராது சென்னை, கோவை போன்ற பகுதியில் அமல்படுத்துவது தவறு, நெல்லை, குமரி போன்ற மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இது தவறு என்று கனம் உறுப்பினர் கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

DR. HABIBULLAH BAIG: Mr. Chairman, Sir, I welcome the speech of His Excellency the Governor and I convey my thanks to him on behalf of the Muslim League Party. His Excellency has stated in his speech that every linguistic group should have the satisfaction that it has equal rights and privileges as other members of the linguistic groups. This country is a sub-continent with more than 500 languages. The Hindi protagonists want to impose their language on us. It is our experience that we have been one religion dominating over other religions; one colour dominating over other colours; one race dominating over other race; and one society dominating over other society and now we are observing one linguistic group dominating over other linguistic groups which have got their own cultures and civilisations.

The Official Languages (Amendment) Act, 1967, recently passed by the Parliament and the Resolution on language policy passed simultaneously with the Official Languages (Amendment) Act, have placed the non-Hindi regions under a special disadvantage not only casting on the people unequal burdens but also creating disturbances in the country. When the country is facing vital problems like food, water, housing scarcity and unemployment of millions of people, there is no such immediate necessity for the Government of India to bring the issue of national language. Apart from that, we have got many more vital problems—national and international—facing us. Instead of solving these problems, the Government of India has unnecessarily created trouble and turmoil in this country by introducing the link language problem. English is not only an international language but also one of the national

languages which is the mother tongue of the Anglo-Indians who are also the citizens of this country. This language cannot be called as a foreign language. In a democratic set-up, always the majority community will form the Government. In such a case any one need not be afraid of the Anglo-Indians who are in minority dominating over the majority who forms the Government. Apart from this, science and technology has been developed and is developing day by day through the medium of English language.

If Hindi protagonists want that Hindi should be the link language, that means to say that the Hindi speaking people want to dominate over the non-Hindi speaking people through then language which cannot be tolerated by non-Hindi speaking people. The Congress and the Congress Government have committed a great blunder in reorganising the States on linguistic basis instead of making five zones, i.e., Northern, Southern, Eastern, Western and Central Zones. Instead of doing so, with an ulterior motive the majority of Northern Indians who are in the top ranks in the Centre have created these States on linguistic basis with the intention of making Hindi as a link language instead of English. English has not been icluded at the time of Constitution making as one of the national languages. But the Hindi protagonists are saying that 22 crores of population are speaking Hindi only which is not a fact because they include Rajasthan, Punjab, U.P., Bihar, Assam and Madhya Pradesh as Hindi-speaking areas. The recent statement of the Maharajah of Bikaner when he came down to Madras is that Rajasthani is a different language and it has not been considered as a national language. Punjabi has its own Persian script which is not even similar to Devanagari and Bihari and Assamese languages have got the linguistic similarity with the Bengali language. In U.P. more than 50 per cent of the people are speaking Urdu. There are 8 crores of Muslims living in our country. Except a few lakhs of Muslims in Tamilnad who speak Tamil and a few lakhs of Muslims in Kerala who speak Malayalam, the rest of the Muslim population in the whole of this country are speaking Urdu, their mother-tongue. Unfortunately, the Hindi-speaking people have included the Urdu speaking people also as a part of the Hindi speaking people and claim that there are 22 crores of Hindi-speaking people. The present Hindi is nothing but a Sanskritised language. Gandhiji's Hindustani is the language spoken by the people of the northern part of this country but not this type of Sanskritised Hindi. The Hindi fanatics feel that the Devanagari script is God's script and Sanskrit is the language of Vedas. So, the Hindi-speaking people claim that they are Aryans and they went to introduce their Vedic language, Sanskrit, with Devanagari or God's script. They feel always superior to the rest of the people of this country. In a harmonious family of our, when one person wants to dominate over others who disagree with him and they want to have their own way due to their disagreement, this will lead to a quarrel among the members of the family. The country of ours is a big family and several language groups will not come to a decision when one





wants to dominate over others and this will also lead to balkanisation of the country which will give an opportunity to our enemies who are sitting on the North-Western and North-Eastern boundaries of our country to swallow and enslave us.

The Government have already taken steps to implement the decision of the State Assembly that Tamil and English should alone be taught in all the schools in our State. The decision to change over to Tamil as medium of instruction at the University level will cause more apprehension. The Government are fully aware of the importance of English in our curriculam because in higher studies and research without English, it is very difficult for us to advance ourselves along with the other countries. If every State introduces its own regional language in the curriculam, then it will be very difficult for us to have co-ordination with other States and other Universities. If any invention or high research has been undertaken, then it will be very difficult for the other linguistic people to understand it if it is published in Tamil instead of English. Then the Universities in every State have to keep translators of various languages and a huge amount of expenditure has to be incurred for this purpose. Instead of evolving an integration, we are going down to disintegrate the federal States. In this connection, I want to point out that in the Madras State alone there are Telugu-speaking, Malayalam-speaking, Kanarese-speaking and Urdu-speaking people and if Tamil is introduced at the University level, these linguistic minorities have to face a great problem. In the same way if Telugu is introduced at the University level in the Andhra Pradesh, the Tamilians living there would face the same problem.

Now, coming to Centre-State relationship, there is improper and unequal distribution of resources to various States. There must be a true federalism between the Centre and the States with equal distribution of adequate resources for discharging their respective responsibilities. Unfortunately, for the past two years, the trend has been reversed and the Central assistance to the States has, in fact, come down. The State could not have adequate independent resources of its own. There must be high level review of the provisions of the Constitution with regard to the delimitation of resources and powers between the Centre and the States. To fulfil the developmental programme there must be greater transfer of resources in terms of the award of Finance Commission. In the regular Budget for 1967–68 we had presented a Plan of the order of Rs. 85.28 crores and the Planning Commission wanted us to restrict the Outlay of the Plan for the current year to Rs. 77.28 crores on an assessment of our resources and it is not possible to minimise the rate of progress needed in vital sectors like Minor Irrigation, Agricultural Production and Power. The State has to fulfil a Plan of the order of Rs. 88 crores for the current year in the production sectors like Minor Irrigation, Fisheries and Power. The fulfilment of bigger plan without Central assistance will naturally deplete our resources and add to our difficulty next year. As the Mayor of Madras, I want to say that provision of water-supply and drainage to the City of Madras is very

essential. At the recent All-India Local Administration Ministers Conference held in Madras, the Central Ministers for Local Administration stated that to provide water and drainage to urban area alone, leaving aside the rural area, would cost Rs. 1,500 crores. For the Madras City alone, to provide water we have to spend Rs. 10 crores for putting appliances with overhead tanks. So far, a sum of Rs. 1 crore has been already received and spent within these two years for the Distribution System. Rupees 7 crores are further required for the completion of a Master Plan for the whole City as far as the scheme of distribution is concerned. Again, the problem of getting water is itself a separate issue which will cost us Rs. 25 crores for implementing the scheme of bringing Cauvery water to our City. In the same way, for the Drainage Scheme for the whole city in five zonal systems we require Rs. 12 crores, Rs. 3 crores have been spent in the Third Five-Year Plan. Rs. 4 crores have yet to be spent in the Fourth and Fifth Five-Year Plans. Afterwards Rs. 5 crores have yet to be spent to achieve the Master Plan for the whole city. For the City of Madras alone to provide water and drainage for the population of nearly two millions, it costs nearly Rs. 22 crores. So far Rs. 4 crores have been spent. For the quicker implementation of the schemes for the better provision of water and drainage, financial resources to the tune of Rupees 18 crores are essentially needed by us. The Government of Madras with their meagre resources are not in a position to come to our aid without Central assistance.

There is a hue and cry every now and then from the City people that there is a great menace of mosquito and dirty smell and improper water-supply. Unless the Centre comes to the assistance of the State Government, the Corporation of Madras cannot get the financial aid from the State Government to solve the problems of water-supply and drainage alone which are facing the Corporation and also for the complete eradication of mosquitoes and flies which are the sources of infection of various diseases. So, the Centre must come to the assistance of the State and the State must help the Corporation. Only then, the Corporation could solve the various problems facing the City and make the City more beautiful. The Centre should distribute the resources properly among the various States, particularly the Madras State. The Centre is not giving fully the resources needed by our State. Thank you, Mr. Chairman.

* **திரு. பி. எஸ். சந்தானம்:** கனம் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது என்னுடைய கருத்தினைச் சொல்கிறேன். ஆளுநர் அவர்கள் கொடுத்திருக்கிற கருத்தினையொட்டிப் பலர் பல கோணங்களிலே பேசி வருவது உண்மையிலேயே சகஜமான ஒன்றுதான், சில குற்றச்சாட்டுக்களும் அவர்கள் பேசுவதிலே இருக்கின்றன. அதே நேரத்திலே எதிர்க்கட்சியிலே அமர்ந்து இருக்கின்றவர்கள் படியரிசித் திட்டம்பற்றிச் சொல்வதும்கூட சகஜம்தான். இருப்பினும் இந்த ஆண்டு ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிட்ட கருத்தினை நாம் ஆழ்ந்து



பார்ப்போமானால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நல்ல நிலையிலே நாடு இருக்கிறது என்பது தெரியும். சிலர் சொல்கிறார்கள், விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது, உயர்ந்திருக்கிறது என்று. சொல்லக்கூடியவர்கள் உயர்த்துவதற்குத்தான் வழிவகை செய்கிறார்களே தவிர, அவர்கள் சொல்வது உண்மையல்ல. சென்னையும் கோயம்பத்தூரையும் எடுத்துக்கொண்டால், அங்கே மட்டும் ஏன் படியரிசி போட வேண்டும், மற்ற மாவட்டங்களில் ஏன் போடக் கூடாது என்று கேட்கிறார்கள். சென்னையிலும் கோயம்புத்தூரிலும் இருக்கின்ற மக்கள் தொழில் செய்யக்கூடியவர்கள். அவர்கள் காசுக்கு அரிசி வாங்கக்கூடியவர்கள். மற்ற இடங்களில் உள்ளவர்கள் விவசாயத் தொழிலைச் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். விவசாயத்தை அண்டித்தான் அவர்கள் பிழைக்கின்றனர். சில இடங்களில் வேண்டுமானால் வேறு மாதிரி இருக்கலாம்.

விவசாயிகளுடைய நிலையை நாம் எடுத்துக்கொண்டோமானால் அதிகமாகப் பணப்பயிரை உற்பத்தி செய்வதற்கு மூலக் காரணமாக இருக்கின்றவர்கள் உண்மையிலேயே காங்கிரஸ்காரர்கள்தான் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். எங்கு சென்றாலும் அவர்கள் கரும்பு சாகுபடி செய், மணிலா சாகுபடி செய், புகையிலை சாகுபடி செய் என்று தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். கரும்பு சாகுபடியை எடுத்துக் கொண்டால் விவசாயிக்கு அநேக துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே 14 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 70 ஆயிரம் டன் வெல்லப் பாகு கிடைக்கிறது அவைகளின்மூலம். அதற்கு மத்திய சர்க்கார்தான் பெர்மிட் வழங்குகிறார்கள். அவர்கள் யாருக்குப் பெர்மிட் வழங்குகிறார்கள் என்றால், வடநாட்டில் இருக்கின்ற பணக்கார சேட்டுகளுக்குத்தான் வழங்குகிறார்கள். அவர்கள்தான் டன் 6.70 பைசா கொடுத்து வாங்கி, அதையே மீண்டும் டன் ரூ. 500 என்ற அளவுக்கு விற்கிறார்கள். அதேமாதிரித் தமிழகத்திலே உள்ள 70 ஆயிரம் டன்னும் அவர்கள்தான் கொள்முதல் செய்கிறார்கள். இத்தகைய அவல நிலையைப் போக்குவதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துத் தமிழகத்திலே உள்ளவர்களுக்குப் பெர்மிட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

என்னுடைய மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே செங்கம் தாலுகா, போளூர் தாலுகா இவற்றிற்குப் பக்கத்தில் ஜவ்வாது மலை இருக்கிறது. அங்கே ஆண்டொன்றுக்கு ஒன்றரை கோடி ரூபாய் பெருமானமுள்ள சந்தனம் அன்னிய மாநிலங்களுக்குப் போய் அங்கேயிலிருந்து திரும்பி சந்தனத் தைலமாக இங்கே வந்து 4 பங்கு 5 பங்கு அதிகமாக விலைவைத்து விற்கப்படுகிறது. சாத்தனூர் அருகே அநேக கட்டிடங்கள் இருக்கின்றன, தண்ணீர் வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்த ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனத்தை அங்கே கொண்டுபோய் நாம் தைலம் செய்தால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். இதையே நான்

இங்கே 1958-ஆம் ஆண்டில் குறிப்பிட்டேன். உண்மையான முறையிலே இந்தச் சர்க்கார் இதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிற்க.

என்னுடைய தொகுதியான சங்கம் தாலுகாவானது செய்யாறு குறுக்கே ஓடுகின்ற நிலைமையில் இருக்கிறது. செய்யாற்றில் திடீரென்று மழை பெய்யுமானால் இரண்டு மூன்று நாட்களுக்குத் தண்ணீர் அதிகமாக ஓடுகின்ற காரணத்தினால் ஆற்றுக்கு வடக்கே உள்ள கிராமங்களிலே இருந்து ஆற்றைத் தாண்டி உயர்நிலைப்பள்ளிகளுக்கு வந்து படிக்கக்கூடிய மாணவர்கள், சிறிய சிறிய பிள்ளைகள், வயது 10 அல்லது 12 வயதுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல முடியாமல் தடைபடுகிறார்கள். ஆகவே, செய்யாற்றின் நடுவே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று முன்னாலே இருந்தவர்கள் அதற்காக 3¼ லட்சம் ரூபாய்க்கு டெண்டர் கால்பார் பண்ணி, நாட்டில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், அதை ஒத்தி வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அதைத் தமிழக அரசு நிறுவுவதற்கு ஆவன செய்ய அந்தப் பாலத்
பி.ப 1-30 தைக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது தமிழக அரசு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. விவசாயிகளும் அதற்காகப் பாடுபடுகிறார்கள். செங்கம் வட்டத்தில் நல்ல உழைப்பாளிகள் இருக்கிறார்கள். பலர் பூமியை வைத்துக்கொண்டு பாசன வசதி இல்லாமல் இருக்கிறார்கள். கிணறுகளுக்கு மின்சாரம் வேண்டுமென்று அக்ரிமென்ட் செய்து, ஷெட்டுகள் எல்லாம் கட்டி முடித்தும், அணைப்பாடி, கரிமலையப்பட்டி, இளங்காநல்லூர் போன்ற பல கிராமங்களில் மின்சார வசதி கிடைக்காமலே இருக்கின்றது. இந்த நிலையில் எப்படி விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியும்? ஆகவே, அவர்களுக்கு மின்சாரத்தை உடனடியாகக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்திலே கவர்னர் உரையாற்றிய பிறகு பேசிய காங்கிரஸ் நண்பர்கள் 'இன்று சில அபிவிருத்திகள் நடைபெற்றிருக்கின்றன என்று கூறினால், அது ஏற்கனவே காங்கிரஸ் போட்ட திட்டங்களின் அடிப்படையில்தான்' என்று பெருமைப் பட்டுக்கொண்டார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன்—கடந்த 15 ஆண்டுக் காலத்தில் இந்த நாட்டில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக ஏகபோக முதலாளிகள்தான் வளர்ந்திருக்கிறார்கள் என்று ஏகபோகம்பற்றி விசாரித்த கமிஷன் ரிப்போர்ட் கூறியிருக்கிறதே. அது காங்கிரஸ் போட்ட திட்டத்தின் அடிப்படையில்தானே. கிராமப் புறங்களில் நிலச் சீர்திருத்தம் என்ற மோசடியின் பெயரால் ஒரு சிலர் கையில் நிலம் குவிந்து விவசாயிகள் நலிந்து வருகிறார்களே, அது உங்களுடைய திட்டத்தின் அடிப்படைதானே. இந்த நாட்டில் இருக்கும்படியான





பாங்குகளை ஒரு சிலருடைய கையிலே ஒப்படைத்திருப்பதன் மூலமும், நமது நாட்டின் நாணய மதிப்பைக் குறைத்ததன் மூலமாகவும், விலைகள் உயர்த்தி விற்க அனுமதித்து வருவதின் மூலமும் கள்ள மார்க்கட்டுகளைத் திறந்து விட்டிருப்பதன் காரணமாகவும் விலைவாசிகள் மேலும் மேலும் ஏறிக் கொண்டே போவதும் அவர்களுடைய திட்டத்தின் மூலமாகத்தானே? இவற்றைத்தான் நான் இந்த மாமன்றத்தின் முன்னால் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விலைவாசிகள் ஏறிவிட்டன என்ற பட்டியலுக்கு முழுப் பொறுப்பு மாநில சர்க்கார் அல்ல, மத்திய சர்க்கார்தான் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஒரு பக்கம் உழைப்பாளிகளும், ஒரு பக்கம் விவசாயிகளும் வேதனைப்படுகிறார்கள், கூக்குரல் கொடுக்கிறார்கள், வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இந்தத் துயரமான நிலையில் நம்முடைய மாநில அரசு தன்னிடம் இருக்கின்ற அதிகாரத்திற்கு உட்பட்டு என்ன செய்யமுடியும் என்று பார்த்து அவற்றைச் செய்வதிலே கவனம் கொண்டு, திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்பதே எங்களுடைய கட்சியின் கருத்தாகும்.

தமிழ்நாட்டில் பஞ்சமான நிலை பல பகுதிகளில் இருக்கின்றன என்பது இந்த மாமன்ற விவாதத்தில் இருந்து தெரிகிறது. மதுரை மாவட்டம் வேடசந்தூர் தொகுதியில், பாளையம் பகுதியில் பற்றி எரியும்படியான பஞ்ச நிலைமை இருக்கிறது. அமைச்சர்கள், அதிகாரிகளின் ரிப்போர்ட்டை மட்டும் நம்பாமல், ரெவின்யூ அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சுற்றுப் பயணம் வந்து, அந்தப் பஞ்சப் பகுதிகளைப் பார்த்து நிவாரணம் அளிக்க வழி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

படி அரிசித் திட்டத்தைத் தமிழகம் பூராவும் விஸ்தரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் நண்பர்கள் பேசினார்கள். அவர்களுடைய உண்மையான நோக்கம், படி அரிசி கொடுக்கப்பட வேண்டுமென்பதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் எப்படியாவது சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டுமென்ற அரசியல் நோக்கத்தில்தான் அவர்கள் கூறுகிறார்கள். உண்மையான நோக்கம் அவர்களுக்கு இருந்தால், மத்திய அரசு இந்த வகையில் பத்துக் கோடி ரூபாயை மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று கோருவார்கள். தமிழ்நாட்டில் 40 லட்சம் டன்னுக்குமேல் அரிசி உற்பத்தியாகி இருந்தாலும், எட்டு லட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்போது தமிழ் நாட்டில் இருக்கும் எல்லா நகர்ப் புறங்களுக்கும், நகரப் பஞ்சாயத்துகளுக்கும் உணவு தானியம் வழங்க முடியாத நிலை இருப்பதால் 15 லட்சம் டன்னாவது அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டும். இதைத்தான் எங்களுடைய திருத்தத்திலே கூறியிருக்கிறோம்.

[திரு. என். வரதராஜன்] [1968 பிப்ரவரி 16

இன்று தமிழ்நாட்டில் பல இடங்களில் தானியத் தட்டுப்பாடு இருக்கிறது. நண்பர் வி. எஸ். எஸ். மணி அவர்கள்கூடக் கூறினார்கள். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அரிசி கொடுங்கள் என்று கேட்டார்கள். இன்று ரூபாய் 1½-க்கு ஒரு படி அரிசியாவது கொடுக்க முயற்சி செய்யுங்கள் என மக்கள் கேட்கிறார்கள். மதுரை, ராமநாதபுரம், நெல்லை, குமரி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பற்றாக்குறை மாவட்டங்களில் நகரங்களிலும், கிராமங்களிலும் 1½ ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கவாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முதலமைச்சர், உணவு அமைச்சர் மற்றக் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து இது பற்றிப் பரிசீலனை செய்தால் பலன் ஏற்படும். இன்று தமிழகத்தில் ஓரளவு நமக்குப் போதுமான உணவுப் பொருள் இருக்கிறது. இன்று கொடுக்கும்படியான 6 அவுன்ஸ் போதாது. அதனால் மக்கள் கள்ள மார்க்கட்டை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரை, அரிசிதான் என்றில்லாமல் ஏதாவது தானியத்தை, சோளம் போன்ற தானியத்தைப் போதுமான அளவுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்தால் போதும். அதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கக் கடன் வசூலைப்பற்றிக் குற்றம் சாட்டிப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். வருமானம் உள்ளவர்களிடத்தில், வசதி உள்ளவர்களிடத்தில் வசூல் செய்வதைப்பற்றிக் கவலை இல்லை. சாதாரண விவசாயிகள், சிறு வியாபாரிகள் ஆகியோரை அரசாங்க அதிகாரிகள் நிர்ப்பந்திக்கின்ற நிலை இருக்கிறது. அரசாங்கக் கடன், சிறு சேமிப்பு, உலகத் தமிழ் மாநாட்டு நிதி வசூல், மின்சாரக் கடன் என்று பல வசூல்களை ரெவின்யூ இன்ஸ்பெக்டர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோர் செய்ய வேண்டியிருக்கிறது. கடன் வசூலிக்கும்படியான பணியே அவர்களுக்குச் சரியாக இருப்பதாகவும் கூக்குரல் வருகிறது. இது பற்றியெல்லாம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வசூல் செய்த பணத்திற்கு ரசீது கொடுப்பதில்லை. இந்த மோசமான முறை தவிர்க்கப்பட வேண்டும்.

துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி ஒரு வார்த்தை. திரு. மார்ட்டின் அவர்கள் ஏதோ ஒரு பாட்டைப் படித்தார்கள். அது தமிழ் நாட்டைப்பற்றிய பாட்டா அல்லது அகில இந்தியாவுக்கும் பொருந்துமா என்று தெரியவில்லை. துப்பாக்கிப் பிரயோகங்களில் உருண்டு பழக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியினர், இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவதாகப் பேசுகிறார்கள். இந்த 20 ஆண்டுக் காலக் காங்கிரஸ் ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகங்களில் நீதி விசாரணை தீர்ப்புகள் பெரும்பாலும் அதிகாரிகளின் தவறால் ஏற்பட்டன என்பதேயாகும். பழைய அரசாங்கத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த மறு நிமிடமே திரு. பக்தவத்சலம் அவர்கள் 'துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதுதான்' என்று சொல்லுவார்கள். ஆனால் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவொற்றியூரில்



1968 பிப்ரவரி 16] [திரு. என். வரதராஜன்]

நடந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கும், தஞ்சையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் வருத்தம் தெரிவித்து, அது நடைபெற்றிருக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள். கவலை தெரிவித்ததோடு நின்று விடாது, இது நடக்கவொட்டாது தடுக்க வேண்டும். திருவொற்றியூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவத்திற்குள் நான் போகவில்லை. இது நம் அரசின் தலைநகரம். இங்கு முதல் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். மற்ற அமைச்சர்களும் இருக்கிறார்கள். ஆகவே இங்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் அமைச்சர்களோடு கலந்து கொண்டு அதிகாரிகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். அங்கு நடந்திருக்கும் சம்பவங்களைப் பார்த்தால் இதுபோல் நடைபெறவில்லை என்பது புரியும். ஆகவே கேட்கிறோம், நீதி விசாரணை செய்யுங்கள் என்று. அதன் மூலம் நியாயம் வழங்கலாம். தொழிலாளர்கள் பக்கத்தில் தவறு இருந்தால் அவர்களைத் திருத்த முடியும். அதிகாரிகள் பக்கம் தவறு இருந்தால் அவர்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு போக முயற்சி செய்ய முடியும்.

அடுத்து, முக்கியமாக பஞ்சாயத்து யூனியன்கள் சீர்திருத்தம் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். பஞ்சாயத்து யூனியன்களினால் நடைபெறும் பல காரியங்கள் வீணானவை என்பது தெரிய வரும். அவை பணத்தை மோசடியாகச் செலவு செய்யும் காரியங்களாக இருக்கின்றன. சமூகக் கல்வி என்று சொல்கிறார்கள். சிலரை நியமித்து எப்படி வடை சுடுவது, எப்படி காராபூந்தி செய்வது என்று சொல்லிக் கொடுப்பதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வதா? மாதிரி பாத்தி என்ற பெயரால் ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவு செய்வதா? ஆக பஞ்சாயத்து யூனியன்களினால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வீணாச் செலவாகின்றன. ஆட்டுக்கிடாக்கள் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேருவதில்லை. கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கோழிகளும் சரியாகப் போய்ச் சேருவதில்லை. சில அதிகாரிகளின் செயல்கள் சரியாகவே இல்லை. ஆகவே, இதில் அடிப்படைச் சீர்திருத்தம் தேவை. நரி வலப்பக்கம் போனாலும் சரி அல்லது இடது பக்கம் போனாலும் சரி, மக்களைப் பிடுங்காமல் இருக்க வேண்டும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களை சீர்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆளுநர் அவர்கள் உரையில் நிதியும், அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தினிடம் குவிந்து கிடக்கின்றன என்று கூறியுள்ளார். சென்ற ஆண்டும் குறிப்பிட்டவர்கள், இதுபற்றி முதலமைச்சர் அவர்களையும், அமைச்சரவையையும் நான் கேட்டுக் கொள்கிறேன். வெறும் உரையில் மட்டும் இப்படிக் குறிப்பிட்டால் பணம் வராது. தமிழ்நாட்டின் பெருமக்களை எல்லாம் அழைத்து இக்கருத்தைக் கூறி அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டியது அவசியம் என்ற கருத்தை தமிழகத்தில் உருவாக்க வேண்டும். இங்கு சொல்லும்

[திரு. என். வரதராஜன்] [1968 பிப்ரவரி 16

இந்தக் கருத்து அகில இந்தியாவிற்கும் பொருந்தும். தமிழகத்தில் மட்டுமல்லாது அகில இந்தியாவில் உள்ள எல்லா ஜனநாயகப் பிரியர்களிடமும் இக்கருத்தை வளர்க்க வேண்டும். இந்த அரசுக்கு அதிகாரங்கள் வேண்டும், பணம் வேண்டும். இதை வெறும் நகரசபையாக வைத்திருக்க முடியாது என்பதை பேச்சு வடிவத்தில் மட்டுமல்லாது கருத்து வடிவத்தில் அதற்கான உணர்ச்சியைப் பெறும் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அந்த வழிதான் தமிழ்நாட்டிற்கும், நம் நாட்டிற்கும் விமோசனம் பிறக்கும் வழி.

*திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்: மதிப்பிற்குரிய அவைத் துணைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரைமீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரை பெரிய ஏமாற்றத்தைத் தந்துவிட்டது. புரட்சிகரமான மாறுதல்களும், பல புதுத்திட்டங்களும் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி ஒன்றும் இல்லாதது வருந்தத்தக்க செயலாகும். உதாரணமாக, விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால் பல திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையில். ஆனால் அவைகள் நடைமுறையில் வந்திருக்கின்றனவா என்று பார்த்தால் அவற்றை நடைமுறையில் அரசாங்கம் நடத்திக் காண்பித்ததாகத் தெரியவில்லை. கிராமங்களில் பம்ப் செட்கள் வழங்கப்படுகின்றன, உரங்கள் வழங்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் கிராமங்களிலிருந்து அடிக்கடி தகவல்கள் வருகின்றன. அங்கு சரியானமுறையில் பம்ப் செட்களோ அல்லது உரங்களோ விநியோகிக்கப்படுவதில்லை என்று தகவல் வருகிறது. அது மேல்மட்டத்தில் உள்ள குறையோ அல்லது கீழ்மட்டத்தில் உள்ள குறையோ தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அங்கத்தினர் அவர்கள் புதுக்கோட்டையில் தங்கியிருந்தால் விவசாயிகளுக்கு குறை இருக்கிறதா இல்லையா என்பது தெரியவரும். அவர்கள் பெரும் பகுதி சென்னையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, உரத்தட்டுப்பாடு இல்லாத நிலை அவர்களுக்குத் தெரியாது. உரத் தட்டுப்பாடு அங்கு கிடையாது.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்:** நான் இங்கிருந்த போதிலும் அடிக்கடி புதுக்கோட்டை செல்கிறேன். மாதம் இருபது நாட்கள் புதுக்கோட்டையில் இருப்பதால், எனக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதால் சொல்கிறேன். எனக்கு ரிப்போர்ட்கள் வருகின்றன. அநியாயமாக குற்றம் சாட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அதுபற்றி எழுதியனுப்பினால் விசாரணை நடத்தலாம், எந்தயிடத்தில் உரம் கிடைக்கவில்லை என்று.



1968 பிப்ரவரி 16]

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்:** எழுதியனுப்புகிறேன். விவசாயத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம். இப்போது பழைய முறைகளையே கையாண்டு வருகிறோம். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அது நல்ல வழியாகாது. ஆகவே, நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உணவுப் பிரச்னையைத் தீர்ப்பது என்பது கஷ்டமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் ஜனத்தொகை கட்டுப்பாடு பற்றி ஒன்றும் சொல்லவில்லை. உணவு உற்பத்தியை நாம் பெருக்கி வருகிறோம். அதே சமயத்தில் ஜனத்தொகையும் அதிகரித்து வந்தால் உற்பத்தியை எவ்வளவுதான் பெருக்கினாலும் அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு நாம் உணவு கட்டுப்பாடோடு போட முடியாது. ஆகவே அரசாங்கம் முயற்சி எடுத்து மக்களிடையே அந்த எண்ணத்தை நல்ல எண்ணமாக ஏற்படுத்த வேண்டும்.

இப்போது விளைச்சல் முடிந்து விட்டது. ஒவ்வொரு ஊரிலும் ப்ரொக்யூர்மென்ட் நடக்கிறது. ஜனநாயக முறையில் ப்ரொக்யூர்மென்டை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அதை வரவேற்கிறோம். நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஆற்றுப் பாசனத்தில் உள்ள நிலங்களுக்கும் குளத்துப் பாசன நிலங்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கவேண்டும். ஆற்றுப் பாசன நிலங்களில் எப்படியும் இந்த வருடம் விளைந்துவிடும் என்று தெரியும். ஆனால், குளத்துப் பாசன நிலங்கள் மழை பெய்தால் தான் விளையும். ஆகவே, இந்த வருடம் விளைந்த நெல்லை ஒரு வருடத்திற்கு ரிசர்வ் செய்து வைத்தால்தான் அடுத்த வருடம் மழை இல்லையென்றால் உபயோகிக்கலாம். ஆகவே, வரண்ட பிரதேசங்களில் உள்ள நிலங்களுக்கு ஒரு தனிச் சலுகை கொடுத்து ப்ரொக்யூர்மென்ட் செய்யும்போது ஆற்றுப்பாசனத்திற்கும், குளத்துப்பாசனத்திற்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கும் படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை, ராமநாதபுரம் பகுதிகளில் சரியான மழையில்லாமல் விளைவு குறைவாக இருக்கிறது. விவசாயிகளிடம் அதிகாரிகள் சென்று லோன் கட்ட வேண்டும், அல்லது வரி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவற்றிற்காக விவசாயிகளின் மாடுகள், இவ்வழியில் ப்ராப்பர்டியை எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மனு எழுதிக்கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் கிடைக்கும். அதற்குள், லோன் கலெக்ஷனை இரண்டு மூன்று மாதங்களுக்குத் தள்ளிப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடம் விளையாத இடங்களைப் பார்த்து ரெவின்யூ டாக்ஸையும் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையை ஒரு ஜில்லாவாக ஆக்கவேண்டுமென்று பல முறை கேட்டு வந்திருக்கிறோம். இந்த வருடப் பட்ஜெட்டில் அதையும் சேர்த்து புதுக்கோட்டையை ஒரு ஜில்லாவாக ஆக்க

## தமிழக சட்டப் பேரவை

---

**சனிக்கிழமை, 1968 பிப்ரவரி 17.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### உல்லாசப் பயணத்துக்கான பேருந்துகள்

* 59 வின.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கம் டூரிஸ்டு பஸ்களை குறைந்த கட்டணத்தில் விட உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசாங்கச் சுற்றுலா பேருந்துகளைக் குறைந்த கட்டணத்தில் விட உத்தேசம் இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது உலகப் பொருட்காட்சி நடைபெற்றுவருவதால், அதைப் பார்ப்பதற்கு வெளி ஜில்லாக்களில் இருப்பவர்கள் இங்கே வந்து வசதியாகப் பார்க்கக்கூடிய அளவில் அவர்கள் ரிடர்ன் டிக்கட் வாங்கக்கூடிய அளவிற்கு 25 சதவிகிதம் கட்டணத்தைக் குறைத்து சலுகைகள் கொடுப்பதற்கு, மார்ச் 1-ம் தேதி முதல் 15-ம் தேதி வரையிலாவது கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி, சுற்றுலா பஸ்களைப் பற்றியது. அங்கத்தினர் அவர்கள் சாதாரண வண்டி, விரைவு வண்டி இவற்றைப்பற்றிக் கேட்கிறார்கள். அவைகள் இப்பொழுது நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற நேரத்திலே இப்படிப்பட்ட சலுகைகள் அளிப்பதற்கில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** அரசாங்க பேருந்துகளிலேதான் பயணம் செய்யவேண்டுமென்ற நல்ல எண்ணம் பொதுமக்களிடையே வந்திருக்கிறது. ஆகவே பொது மக்களுக்கு வசதியாக இருக்கும் முறையில் குறைந்த கட்டணத்திற்கு சுற்றுலா பஸ்கள் விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கலை, கல்வி நிறுவனங்களுக் குத்தான் குறைந்த கட்டணம் என்ற அளவில் சுற்றுலா வண்டிகள் விடப்படுகின்றன. அரசாங்க பஸ்கள், பொதுவாக போக்கு வரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகத்தான் பெரிதும் பயன் படுத்தப்படுகின்ற நிலையில் இன்றைய தினம் இருக்கின்றன.

[திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்]
[1968 பிப்ரவரி 16

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாப்பை பார்த்தால் தெரியும். மதருஸ் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் பற்றியது. திருச்சி ஜில்லாவில் இரண்டு மூன்று இருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் திருச்சியைவிட அதிகமாக இருக்கிறது. புதுக்கோட்டை ஒரு ஜில்லாவானால் இந்த வசதிகள் நிச்சயமாகக் கிடைக்கும். அடுத்து, இந்த விவசாயத்திற்கு நாங்கள் ஆற்று நீரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த கரம்புக்குடி உளவயல் கால்வாய்த்திட்டம்பற்றி சீப் எஞ்சினியர் 17—3—1967-ல் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றினால் சுமார் எட்டாயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசனத்திற்கு உதவும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் அவசியம் ஏற்பாடு செய்தால் புதுக்கோட்டையிலே உள்ள மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும் என்று நான் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

புதுக்கோட்டையிலே இனாம் லேண்ட்ஸ் என்று இருக்கின்றன. இவை சம்பந்தமாக ஏகத் தகராறுகள் இப்பொழுது ஏற்பட்டு பல தொந்தரவுகள் எல்லாம் உண்டாகின்றன. எது இனாம் லேண்ட்ஸ், எது சொந்தமான நிலம் என்று ஒன்றும் விவரம் இல்லாமல் இருக்கிறது. அரசாங்கம் அதற்கென்று ஒரு அதிகாரியை நியமித்து அதை எது இனாம் லேண்ட்ஸ், எது தனிப்பட்ட சொந்த நிலங்கள் என்று பரிசீலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிறைய நடக்கிறது.

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான் : அதற்குள் புதுக்கோட்டையிலே கலகங்கள் ஏற்படாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொடைக்கானலிலே காட்டிலாக்காவிலே 'வாட்டில் பிளாண்டேஷன்' போட்டனர். அதனால் அங்கு ஆடு, மாடுகள் மேய்வதற்கு இடமில்லாமல் அடைத்து விட்டார்கள். இப்பொழுது அரசாங்கத்தை, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களை இதனை அதோடு நிறுத்தி அதற்குமேல் இன்னும் போகாமல் ஆடு, மாடு மேய்வதற்கு ஏதா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதுவரையிலும் அநேக மனுக்கள் வந்திருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கடைசியாக, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் உரையிலே பின் தங்கிய வகுப்பினருக்கு ஷெட்யூல்ட் கேஸ்ட்டுக்கு அவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான ஒரு அறிகுறியும் இல்லாமல் இருக்கிறது. அதற்கு ஏதாவது ஒரு வழி செய்து பின் தங்கிய வகுப்பினருக்கும், ஷெட்யூல்ட் கேஸ்ட்டைச் சார்ந்தவர்களுக்கும் மற்ற கம்யூனிட்டிகளைப்போல் சமமாக வரும் வரையில் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இங்கு பேச வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைச் சொல்லிக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.



1968 பிப்ரவரி 16]

திரு. எம். கந்தசாமி : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் பேருரையின் மீது எனது கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன். கடந்த 4, 5 நாட்களாக கவர்னர் பெருமான் உரையின்மீது பேசுகையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம், அந்த உரையை ஆதரிக்க வேண்டிய காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் ஆதரிக்காமல், அதைப் பாராட்டாமல் இருந்தது மிக வருத்தமான செய்தியாகும். நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால் கடந்த கவர்னர் உரைகளெல்லாம் சென்னை மாநில கவர்னர் உரையாகும், ஆனால் இப்பொழுது நடக்கும் உரையானது தமிழக ஆளுநர் அவர்களின் உரையாகும். இந்த உரைகள் பெரும்பாலும் ஆளும் கட்சியினரால் பாராட்ட வேண்டும், எதிர்க்கட்சிகளால் நன்றி தெரிவிக்காமல் இருப்பது என்பது ஒரு மரபாக இருக்கும் என்று எண்ணி இங்குள்ளவர்கள் அதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையாக இதுதான் பேருரையாகும். தமிழக அரசு ஓராண்டு காலத்தில் சாதித்த சாதனைகளை மிகத் தெளிவாக கோடிட்டுக் காட்டி, அதை வரவேற்று அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக 1967-ஆம் ஆண்டு தமிழகத்திலேயும், மக்களிடையேயும் ஏற்பட்ட மறுமலர்ச்சியைப் பற்றியும், அதற்குப்பின்னாலே இந்த மக்களுடைய குறைகளையெல்லாம் போக்குவதற்குத் தயாராக இருப்பதையும் கவர்னர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு ஒட்டுமொத்தமாக 1968-லே தமிழகத்திலே நீண்ட நாட்களாக தோன்றியிருந்த மொழிப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணும் வகையில் மிகத் தெளிவாக, திட்டவட்டமாக தமிழக அரசின் முதல்வர் கடந்த திங்கள் 23-ஆம் நாள் எல்லா மக்களும் பாராட்டும் வண்ணம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதில் மிகத் தெளிவாகத் தமிழகத்தில் தமிழ்மொழி, ஆங்கிலம் இரண்டும் மட்டும்தான் இருக்கும், இந்தி அறவே இருக்காது என்ற அளவிலே இருந்தது. அவ்வாறு மிகத் தெளிவாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் மன நிறைவோடு ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கொண்டுவந்தார்கள். அதைக் கவர்னர் பெருமான் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் கடந்த 30 ஆண்டுகளாக தமிழக மக்கள் நீண்ட பெரும் ஏக்கத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த விதத்தில் மொழிப்பிரச்சினையை மிகச் சுமுகமான முறையிலே எந்தவித இடர்ப்பாடு இல்லாமலும், கலவரம் இல்லாமலும் நிறைவேற்றிய பிறகு தமிழகம் நல்ல முறையில் இருக்கிறது. இதைப் பார்த்த மற்ற மாநிலங்களும் இங்கேயும் அம்மாதிரி நிறைவேற்றாவிட்டால் நம்முடைய மாநிலம் மிக மோசமான நிலைமையை அடையும் என்ற விதத்திலே இந்தத் தீர்மானத்தை மற்ற மாநிலங்கள் நிறைவேற்றும் நிலையிலே இருப்பதைக் காண்கிறோம்.

அடுத்து, உணவுப்பிரச்சினையை எடுத்துக்கொண்டால் தமிழக அரசின் சாதனைகள் கொஞ்சமல்ல. நமது மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் தஞ்சை ஜில்லாவைக் காணச்

சுற்றுலாவுக்கென்ற முறையில் விடப்படுகின்ற பஸ்கள், 788 பஸ்கள் சென்ற ஆண்டிலே விடப்பட்டன. அவற்றிலும் லக்சுரி பஸ் என்று ஒரு பஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கலை, கல்வி நிறுவனம் சம்பந்தப்பட்டவரையில்தான் குறைந்த கட்டணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலேயுள்ள பல உறுப்பினர்கள் தாங்கள் தமிழ்நாடு பூராவும் சுற்றிப் பார்க்கவேண்டுமென்ற முறையில் அரசாங்க பஸ்கள் அனுமதிக்கப்படவேண்டுமென்று பல கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அரசாங்க பஸ்களில் ஏறிச் செல்ல வேண்டுமென்று அழைப்புவிடத் தயாராயிருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : கலை, கல்வி நிறுவனங்களுக்கு கட்டணச் சலுகை கொடுப்பது மாதிரி தொழிலாளர் நிறுவனங்களுக்கும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் சேர்த்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொழிலாளரின் நிறுவனமும் நாடகம், நடனம் என்ற அளவிலே அவர்கள் சுற்றுலா சென்றால் அதுவும் கவனிக்கப்படும்.

திரு. கே. போஜன் : இப்பொழுது நம்முடைய மாநிலத்திலே உள்ள மக்கள் விசேஷம் நடக்கும் இடங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் அடிக்கடி பயணம் செய்கிறார்கள். அவர்கள் தனியார் பஸ்களிலேதான் இப்பொழுது சுற்றுலா செல்கிறார்கள். தனியார் பஸ்கள் அவர்களுக்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே, ஒவ்வொரு பெரிய முக்கிய நகரத்திலாவது சுற்றுலாவிற்கு அரசாங்க சுற்றுலா வாகனம் அமைத்தால் வசதியாக இருக்கும். சுற்றுலா செல்கிறவர்களுக்கு குறைந்த கட்டணம் இல்லாவிட்டாலும், உடனடியாக அவர்களுக்கு வாகனம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் முதலிலே நான் சொன்னேன். சென்ற 1966-67-ம் ஆண்டிலே மாத்திரம் 788 பஸ்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : கலைக்காகவேண்டி குறைந்த கட்டணத்திலே பஸ்கள் விடப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நடைபெறுகிற எக்சிபிஷனும் ஒருவிதமான கலை மட்டும் அல்லாது பலவிதமான கதம்பக் கலைகளைக் கொண்டதாக இருக்கிறது. அதைப்பார்க்க வருகிறவர்கள் நன்மைக்காக கலைக்காக என்று அமைச்சர் அவர்கள் கூறினார்களே அந்த அடிப்படையில்---குறைந்த கட்டணத்திலே பஸ்கள் விடுவதற்கு புனர் ஆலோசனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சலுகை, கலையைப் பார்ப்பவர்களுக்காக அல்ல. அதில் பங்கு பெறுபவர்களுக்காக.



திரு. கே. விநாயகம் : மத்திய சர்க்காரிலேகூட அங்கே இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடு முழுவதும் சுற்றிப் பார்க்கிற எண்ணத்தில்—காலத்தை விரைக்குவதற்காக அல்ல. நாட்டிலே என்னென்ன இருக்கிறது என்னென்ன தேவை என்பதை அறிந்து கொள்வதற்கு வசதி இருக்கிறது. ரயிலில் செல்வதற்கு இலவச பாஸ் வசதி இருக்கிறது. இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும்—காலத்தை விரைக்குவதற்காக அல்ல. நம்முடைய மாநிலத்தில் நடைபெறுவதைத் தெரிந்துக்கொள்வதற்காக 'To know our own country, to know our own State, to know our heritage' என்று சொல்வார்களே அதற்காக இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாக அரசாங்க பஸ்ஸிலே போவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு ஆண்டில் ஏதாவது ஒரு நாளைக் குறிப்பிட்டு எல்லா உறுப்பினர்களும் முடிவு எடுத்தால் அதைப்பற்றி முதல் அமைச்சரிடம் கலந்து முடிவு எடுக்க இந்த அரசு யோசிக்கும்.

### வாடகைக் கார்கள்

*60 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :

திரு. டி. மார்டின் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள வாடகை ( Taxis) கார்களை தேசியமயமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையி லுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னை நகரில் உள்ள வாடகைக் கார்களை தேசியமயமாக்கும் செயற்குறிப்பு ஒன்றும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மலிவான விலையில் சிறிய கார்கள் தயாரிக்கும் யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா? அதற்கு யாராவது விண்ணப்பம் செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் கேள்வி கேட்க வேண்டிய இடமே இதுவல்ல.

THIRU T. MARTIN : Mr. Speaker, may I request the Hon-Minister to state whether the State Government would come Minister to state whether the State Government would come among whom there are some drivers ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றிய விவரம் எதுவும் இப்போது இல்லை. பரிசீலிப்பதற்கு கடமைப்பட்டதா இல்லையா என்பதைப்பற்றி யோசிக்கும் நிலையில் இருக்கிறோம்.

திரு. பெ. மலைச்சாமி : சென்னை நகரத்தில் மொத்தம் எத்தனை வாடகைக் கார்கள் ஓடுகின்றன, அவைகளால் அரசுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய் எவ்வளவு ?

[1968 பிப்ரவரி 17

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: சென்னை மாநிலத்தில் மொத்தம் 2,605 வாடகைக் கார்கள் ஓடுகின்றன. மொத்தம் எவ்வளவு வருவாயென்று தனிப்பட்ட முறையில் கணக்கு இல்லை.

**திரு. கே. விநாயகம்**: சென்னையில் ஓடுகின்ற டாக்சிகளிலே ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பிரயாணிகளைவிட ஒருவர் அதிகமாகப் பிரயாணம் செய்ய ப்ரபோசல் வந்து அதை முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை, தொழிலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கட்டம் வந்தபோது அமைச்சர் அவர்கள் 'ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் டாக்சிகளை தேசியமயமாக்கிவிடுவேன்' என்று சொன்னது அவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? இப்போது அந்தப் ப்ரபோசலை ஏற்றுக்கொள்ளுகிறார்களா அல்லது அவர்களைப் பணிய வைக்க முயற்சிக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: மானுபாக்சரிங் கம்பெனியிடம் இருந்து அதைப்பற்றி தகவல்கள் கேட்டோம். ஃபியட் காரில் 3 + 1 அதாவது மூன்று பயணிகளும் டிரைவரும் என்று இருப்பதை 4 + 1 என்று போடலாம் என்று மானுபாக்சரிங் கம்பெனியிடமிருந்து அனுமதி கிடைத்திருக்கிறது. அதை விரைவிலே அமுலாக்குவதற்கு திட்டம் இருக்கிறது. அம்பாசிடர் கார்களைப் பொறுத்தவரையில் சென்னையிலே உள்ளவர்கள் 4 1-தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், வெளி ஊர்களிலே இருக்கிறவர்கள் 5 1 இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். வெளி ஊர்களிலே இருப்பவர்களைத் திருப்தி செய்வதா அல்லது சென்னையிலே உள்ளவர்களைத் திருப்தி செய்வதா? இதைப்பற்றி யோசித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்**: சென்னை மாநகரத்திலே வாடகைக் கார்களில் சம்பாதிப்பதற்கு வசதி இருக்கிறது. ஆனால் வெளி ஊர்களில் அம்பாசிடர் போன்ற மீடியம் கார்களில் 5 பேர்கள் போவதுதான் உசிதமாக இருக்கும் என்பதாலும் பக்கத்தில் உள்ள மாநிலங்களிலே 5 பேர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதாலும், சென்னை தவிர வெளியூர்களில் இருக்கும் டாக்சிகளில் 5 பேர்கள் செல்ல அனுமதி அளிக்க உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: சட்டப்படி எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. ச. சிவசாமி**: தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற நகரங்களில் உள்ள தனியார் நகர பேருந்துகளை நகராட்சி மன்றங்கள் ஏற்று நடத்த அரசு சம்மதிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: நகரங்களில் ஓடுகிற பேருந்துகளின் நிலை என்ன என்பதை அறிந்திருக்கும் பொழுது, நகராட்சி மன்றங்களே கூட அதற்கு முன்வருமா என்பது சந்தேகமே.

**திரு. வ. ஜார்ஜ்**: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வாடகைக்கார்களை தேசியமயமாக்கும் திட்டம் செயலாக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது



1968 பிப்ரவரி 17]

இருக்கும் வாடகைக் கார்களை தேசியமயமாக்கும் திட்டத்தை செயலாக்காமல் இருந்தாலும், புதியதாக வாடகைக் கார்களை தேசியமயமாக்கும் திட்டத்தை அனுமதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: புதியதாக தேசியமயமாக்குவது என்றால், சர்க்காரே டாக்ஸிகளை வாங்கி விடுமா என்பது பொருள். அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே**: சென்ற பல ஆண்டுகளாக டாக்ஸி டிரைவர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. அது மட்டுமல்லாமல் டாக்ஸி டிரைவர்கள் பல பிரச்னைகள், பல கோரிக்கைகள் இருந்து, அடிக்கடி ஸ்ட்ரைக் செய்யக்கூடிய நிலைமையும் இருந்தது. இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது? போலீஸ்காரர்களுக்கும், டாக்ஸி டிரைவர்களுக்கும் இப்பொழுது உறவு எப்படி இருக்கிறது, அவர்களுடைய நட்பு எப்படி இருக்கிறது? டாக்ஸி டிரைவர்களுக்கு இப்பொழுது ஏதாவது கோரிக்கைகள் இருக்கின்றனவா? அந்தக் கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு முன் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா? அதைப்பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இப்பொழுது அப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதில்லை என்பதை டாக்ஸி டிரைவர்கள் ஸ்ட்ரைக் அதிகமாக நடக்காமல் இருப்பதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்துகொண்டிருக்கலாம். அவர்கள் சில பிரச்னைகளை, கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றியெல்லாம் அரசாங்கம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

*61 வினா.—**திரு. வை சுவாமிநாதன்**: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் உள்ள வாடகைக்கார்களுக்கு மீட்டர்கள் வைத்திருப்பது போல் திருச்சியிலும் மற்ற நகரங்களிலும் உள்ள வாடகைக் கார்களுக்கும் மீட்டர் சிஸ்டம் வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை நகரங்களில் ஓடும் வாடகைக் கார்களில் மீட்டர் இருக்கவேண்டும் என்ற விதி இப்போதும் செயலில் உள்ளது. இது குறித்து எவ்விதப் புதிய செயற்குறிப்பும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன்**: தலைவர் அவர்களே, இம்மாதிரி மீட்டர் வைப்பதால், நகரத்தைச் சுற்றி வரும்பொழுதும், டாக்சி கார் ஓனர்களுக்கும், டாக்சி டிரைவர்களுக்கும் வெளியூர்களுக்குச் செல்லும்பொழுது பிரயாணிகளுக்கும் இடைஞ்சல் உண்டாவதால், மீட்டர் முறையை எடுத்துவிட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திருச்சி, கோவை போன்ற நகரங்களில் வெளியூர் செல்லுகின்ற பிரயாணத்திற்கு, பிரயாணிகள் அப்படி வெளியூர் செல்லும்பொழுது, அந்தக் கார்களுக்கு மீட்டர் தேவையில்லை என்று நாம் உத்தரவு போட்டிருப்பதால், அப்படிப்பட்ட இடைஞ்சல் வராது. ஆனால், உள்ளூரில் பிரயாணம் செய்யும்பொழுது அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உதாரணமாக, திருச்சி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மலைக்கோட்டைக்குப் போவதற்கு ரூ. 5, ரூ. 7 என்ற முறையில் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உள்ளூரில் செல்லும் பொழுது மீட்டர் வைத்து விட்டால் பொது மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும். அதே நேரத்தில் வெளியூர் போகும் பொழுது மீட்டர் இல்லை என்ற நிலை இருப்பதினால், பிரயாணிகளுக்கும் சௌகரியமாக இருக்கும், டாக்ஸி சர்விஸ் நடத்துகிறவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, வாடகைக் கார்களில் மீட்டர் வைப்பது சம்பந்தமாக கோவை நகரத்தில் ஏற்கனவே மீட்டர் வைப்பது என்றும், அதன் பின்னர் கிளர்ச்சி காரணமாக அதை எடுத்துவிடுவது என்றும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதன் பின்னால் தொடர்ந்து மீட்டர் வைப்பது இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மீட்டர் வைப்பது பற்றிய விஷயம் 1964-ம் ஆண்டிலிருந்து, இங்கு அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் காலத்திலிருந்து யோசிக்கப்பட்டு. அடிக்கடி அதற்காக தவணைகள் கொடுக்கப்பட்டு, கடைசியாக மீட்டர் வைத்துக்கொள்ளவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு, அவர்களெல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று, மீட்டர் வைக்கவேண்டாம் என்று ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு, அதற்குப் பிறகு ஆக்ட் திருத்தப்பட்டு, அதற்குப் பிறகு மீட்டர் வைக்கப்படும் என்ற நிலைமை வந்தது. அதை இந்த அரசு வந்தவுடன் அமுலாக்கியிருக்கிறது. கோவையில் மீட்டர் வைக்கப்பட்ட டாக்ஸிகள் ஓடுகின்றன.

திரு. சு. துரைசாமி : கோவை நகரத்தில் டாக்ஸிகளில் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தாலும், அதை ஓட்டுகிற டிரைவர்கள் மீட்டரை சரியாக பயன்படுத்தாமல், அதிகமான கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படிப்பட்ட டாக்ஸி டிரைவர்களின் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட டாக்ஸிகளில் ஏறுகிற பிரயாணிகள் உடனடியாக போலிஸுக்குத் தெரிவித்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : ஃபியட் கார்களில் நான்கு பேர்கள் போக முடியும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையில் வாடகைக்கார்கள் பெரும்பாலும் ஸ்டாண்டர்டு 10, ஹெரால்டு 10 மாடலாக இருப்பதால், ஸ்டாண்டர்டு கார்களிலும் நான்கு பேர்கள் போவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மான்யுபாக்சரிங் கம்பெனியிடமிருந்து வருகிற அறிக்கையை மீறிச் செய்தால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்களேயானால், நாம் அங்கே தோற்றுவிட நேரிடும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : டாக்ஸிகளில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு டாக்ஸிக்கும் வித்தியாசப்படுகிறது. அது தணிக்கை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனியாகக் குறித்து எழுதினால், கவனிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : I was told that some unscrupulous drivers meddled with the working of meters and put the passengers to the inconvenience of paying a larger amount of fare than what was actually due. During nights after the night cinema show is over, the drivers seem to demand two or three rupees more than the actual fare. Has the Government any steps to check these malpractices?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிச் செய்கின்ற டிரைவர்களை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தயவு செய்து கொஞ்சம் ஜாடையாக கவனித்துக்கொண்டு இருந்து, அவர்களே அந்த டாக்ஸியில் ஏறி, போலீஸ்காரர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு அந்த டிரைவர்களைப் பிடித்துக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், எல்லா இடங்களிலும் ஓடுகின்ற டாக்ஸிகளுக்கு இது போன்று மீட்டர்கள் பொருத்தப்பட்டால், பொதுமக்களுக்கு டாக்ஸியில் போவது சௌகரியமாக இருக்கும், அதிகக் கட்டணம் கொடுப்பது தவிர்க்கப்படும். ஆகவே, இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குறிப்பிட்டுள்ள நகரங்களைத் தவிர எல்லா இடங்களிலும் மீட்டர் வைப்பதைப் பொது மக்களே விரும்பவில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் ஓடக்கூடிய டாக்ஸிகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 6 வசூலிக்கிறார்கள். அங்கு மீட்டர் வைக்கும் முறை அமுலாக்கப்படவில்லை. கண்டிப்பாக அமுல் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கு 43 வண்டிகளில் மீட்டர் வைக்கப்பட்டிருக்கின்றன. எழுபத்தொரு வண்டிகளுக்கு இன்னும் மீட்டர் வைக்கப்படவில்லை என்ற குறிப்பு இருக்கிறது. அதுபற்றி இப்பொழுது தகவல் கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. ச, சிவசாமி: டாக்சிகளுக்கு மீட்டர் வைக்காமல் இருப்பது ஒரு பக்கம் இருந்தாலும், மதுரை, தூத்துக்குடி நகரங்களில் பெரிய முதலாளிகள் சொந்த உபயோகத்திற்காக 4, 5 கார்களை வைத்துக்கொண்டு, அவைகளைத் திருட்டுத்தனமாக டாக்ஸியாக ஓட்டுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பிரயாணிகளும் அப்படிப்பட்டவர்களோடு ஒத்துழைக்கிறார்கள். இவைகளையெல்லாம் எழுதியனுப்பினால், ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகளே கூட இவைகளைக் கவனிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 62, 63 எண்ணுள்ள வினாக்கள் தள்ளிவைக்கப்படுகின்றன. வினா. 64.

### கோவையில் கால்நடை மருத்துவக் கல்லூரி.

* 64 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி: கோவைப் பகுதியில் சிறந்த முறையில் கால்நடைகள் வளர்கிற ஒரு அமைப்பு இருக்கிற காரணத்தினால், கோவை மாவட்டத்தில் பல்வேறு விதமான கல்லூரிகள் இருப்பதனால், அங்கு ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிற நிலையில், அங்கு ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி மிகவும் தேவை என்று கருதுகிற காரணத்தினால், அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கோவையில் மேலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பது விஷயமாக திரு. வைத்தியநாதன், ஐ.ஸி.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதைப் பரிசீலனை செய்தார்கள். அப்படிப் பரிசீலித்ததில் கோவையில் ஒரு கல்லூரி அமைப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால், அது கைவிடப்பட்டது.

திரு. பி. வேலுசாமி: நாம் கால்நடை பராமரிப்பிற்காக ஏராளமாக பணம் செலவு செய்துகொண்டிருக்கிறபொழுது, தமிழ்நாட்டிலிருந்து தினசரி ஆயிரக்கணக்கான காளை மாடுகள், சிறு கன்றுகள் கேரளத்திற்குச் செல்வதைத் தடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும், நல்ல தரமான கால்நடைகள் போவதாக கனம் அங்கத்தினர்கள் இங்கே சொல்கிறார்கள். ஆனால், எனக்குக் கிடைத்திருக்கிற தகவல், அடி மாடுகள் தான் கொண்டுபோகப்படுகின்றன என்பது. அத்தகைய மாடுகள் இந்தப் பகுதியிலிருந்து போவது நல்லது.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: அமைச்சரவர்கள் பதிலிலே கோவையில் வசதிகள் இல்லாததால், ஆராய்ந்தவருடைய ரிபோர்ட்டில் வசதி இல்லை என்று குறிப்பிட்ட காரணத்தினால், ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே சென்னையில் ஒரு கால்நடைக் கல்லூரி இருப்பதே இராச்சியத்திற்குப் போதுமானது. ஆகவே மேலும் ஒரு கல்லூரி அவசியம் இல்லை என்ற காரணத்தினால்தான் அதை கோவையில் அமைக்க வேண்டாம் என்று தீர்மானித்தது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: 1961-லிருந்து மேலும் ஒரு கால்நடைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று முயற்சிகள் செய்யப்பட்டு, பல மாவட்டங்களிலிருந்தும் கோரிக்கைகள் வந்து கொண்டு இருந்தன. கோவையில் அமைக்கப்படவிருந்த கல்லூரியைப் பொறுத்த கேள்வியாக இருந்ததால், அங்கே சாத்தியக் கூறுகள் இல்லை என்று குறிப்பிட்டேன். சென்னையிலுள்ள கல்லூரியில் பி.வி.எஸ்ஸி. வகுப்பில் 136 மாணவர்களும், எம்.வி.எஸ்ஸி. வகுப்பில் 42 மாணவர்களும் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். அவர்களே போதுமான அளவுக்கு, இன்றைய அவசியத்திற்குப் போதுமானது என்கிற கணக்கில்தான் மேலும் எந்தப் பகுதியிலும், அது மதுரையோ, திருச்சியோ, திறக்க முடியுமா என்று பார்த்து, முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒன்று என்று டிஸ்பென்சரிகள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு, 267 டிஸ்பென்சரிகள் அமைத்து, அதிலேயும் பி.வி.எஸ்ஸி. பட்டம் பெற்ற டாக்டர்களையே போடலாமா என்று பார்த்து, அது அவசியம் இல்லை, ஒரு லைவ்ஸ்டாக் ஃபர்ஸ்ட் கிரேட் அஸிஸ்டெண்டைப் போட்டால் போதும் என்ற அளவில் செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, சென்னைக் கால்நடைக் கல்லூரியில் உள்ள மாணவர்களில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

(திரு. வி. டி. அண்ணாமலை எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை கால்நடைக் கல்லூரி பற்றி திரு. அண்ணாமலை அவர்கள் ஒரு துணை வினா கேட்பார்கள்.

திரு. வி. டி. அண்ணாமலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஒரு கால்நடைக் கல்லூரி அவசியம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி அவசியமாக இருக்கிறது. அப்பொழுதுதான் நாட்டில் 80 சதவிகிதம் ஆக உள்ள விவசாயிகள் அதிகமாக விவசாயத்தை நல்ல முறையில் செய்து உற்பத்தியைப் பெருக்க முடியும். விவசாயிகளுக்கு கால்நடைகள் அவசியம் என்பதை சர்க்கார் அறியும். ஆதலால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரியை அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இதே கனம் அங்கத்தினர் ஐந்து ஆண்டுகள் கழித்து, படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவில்லையே என்ற கேள்வியைக் கேட்கும் நிலை வரலாம். சென்னைக் கல்லூரியிலிருந்து படித்துப் பட்டம் பெற்றவர்கள் அனைவருக்கும் இப்பொழுதுதான் வேலைவாய்ப்புகள் கொடுத்து பூர்த்தி செய்திருக்கிறோம். இப்பொழுது வேலையில்லாத கால்நடை மருத்துவர்கள் யாரும் இல்லை. இவ்வளவு காலம் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்த இவர்களுக்கு இப்பொழுது தான் வேலை கிடைத்திருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** சார், வைத்தியநாதன் சிபாரிசு செய்தார்; கல்லூரி வேண்டாம் என்று குறிப்பிட்டார்கள். அது பத்து ஆண்டுகளுக்கு முன்பே செய்த சிபாரிசு. இப்பொழுது பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சூழ்நிலை மாறியிருக்கும், அபிவிருத்தி அதிகமாக ஏற்பட்டிருக்கும். படிக்க வேண்டிய மாணவர்கள் அதிகமாக இருப்பவர்கள். ஆகவே, மாறிய சூழ்நிலையை மனதில் வைத்து இதைக் கவனிக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கோவையிலே ஒரு கல்லூரியை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்தால், வைத்தியநாதன் பரிசீலனை செய்து 1961-லேயே, அப்படி ஒரு கல்லூரியை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று சர்க்கார் தீர்மானித்தது. இன்றைய சூழ்நிலையில் நண்பர் பாலசுப்பிரமணியத்திற்குப் பதிலளித்தது போல, இன்றைக்கு பி.வி.எஸ்ஸி.-யில் 136 மாணவர்களும், எம்.வி.எஸ்ஸி.-யில் 42 மாணவர்களும் படிக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் தேடிக் கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டில் தான் அது பூர்த்தியாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் புதிதாக ஒரு கல்லூரியை அமைப்பது என்றால், அந்தக் கல்லூரியிலிருந்தும் வெளியே வரும் பட்டதாரிகளுக்கும் உத்தியோகம் கொடுக்கும் வாய்ப்பு இல்லை. கனம் விநாயகம் அவர்கள், பின்னால் இவர்களுக்கு வேலை கொடுக்கவில்லையே என்று மீண்டும் கேட்கக் கூடாது என்றுதான் இதை யோசிக்க வேண்டியிருக்கிறது.

Dr. H. V. HANDE rose.

Mr. SPEAKER : The hon. Member, Dr. Hande, will put a supplementary question relevant to the main question. Our rule says that it should be relevant to the answer given to the main question. The answer to the main question is 'No'. So, the hon. Member should put a supplementary question to elucidate any matter regarding which an answer has been given to the starred main question.





Dr. H. V. HANDE : Sir, I am going to put a very, very relevant question arising out of the answer given by the Hon. Minister. The Hon. Speaker need not have any fear about it.

Mr. SPEAKER : Answer given not to a supplementary question but the answer given to the main question.

Dr. H. V. HANDE : As the Hon. Minister has already pointed out there is a fear among the graduates who are going to pass and who have already passed, about the employment potential. A number of these graduates are not likely to get employment and in view of this grave position of graduates who are likely to pass, will the Government reconsider the matter and not yield to the desires of the people coming from different parts of the State to start a number of Veterinary Colleges and also see that no new college is started till adequate employment potential is created in all the districts?

Mr. SPEAKER : That is in Coimbatore district !

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினருடைய கேள்வி என்னுடைய பதிலுக்கு உதவியாக இருக்கிறது.

(திரு. எம். எஸ். மணி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எம். எஸ். மணி அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்புள்ளதாக ஒரு துணைக் கேள்வியைக் கேட்பார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** சென்ற ஜூலை மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலேயும், கோவையில் ஒரு கூட்டத்திலேயும், தம்முடைய கால்நடை உதவி மருத்துவர்கள் பற்றிக் குறிப்பிடும் போது அமைச்சரவர்கள், அவர்களைப் பதிவு பெற்ற ஊழியர்களாக ஆக்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி ஒரு முடிவு எப்பொழுது எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்விக்கு, விரைவிலேயே அவர்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்ற விடையைத் தெரிவிக்கிறேன்.

(திரு. வி. டி. அண்ணாமலை எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. டி. அண்ணாமலை அவர்கள் செயற்குறிப்பு சம்பந்தப்பட்ட, மூலக் கேள்வியின் பதிலை ஒட்டி ஒரு துணை வினா கேட்பார்கள்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே உத்தியோகத்திற்காக, பதவிக்காக என்று படிக்காவிட்டாலும், பெரிய பெரிய விவசாயிகள் தங்களுடைய

[1968 பிப்ரவரி 17

கால்நடைகளை, அரசாங்கத்தில் மானியம் வாங்கிக்கொண்டு, தாங்களே பராமரித்துக்கொள்ள, அவர்களுக்கு வாய்ப்பாக அவர்கள் படிக்கவென்று ஒரு கல்லூரியைத் தொடங்க முன் வருவார்களா? அதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரியை அமைக்கவும் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உத்தியோகத்திற்குப் படிக்காமல் சொந்தப் பண்ணையில், தான் பெற்ற அறிவைப் பயன் படுத்த என்று ஒரு சில பண்ணைகள்தான், அப்படிப் பெரிய பண்ணைகளாக இருக்கின்றன. அதுவும் வட ஆற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட பண்ணை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கோவையில் என்றால், பட்டகார் போல இருப்ப வர்கள் செய்யலாம். சாதாரணமாக உத்தியோகத்திற்கு வர வேண்டும் என்றே பெரும்பாலோர்கள் படிக்கிறார்கள்.

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, இப்படிப் படித்தவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பது அவசியம் என்று சொல்வதனால், எல்லாக் கல்லூரிகளிலும், பள்ளி களிலும் படித்து வருகிறவர்களுக்கு அரசாங்கம் பொறுப்பு எடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது தொழில் சம்பந்த மான படிப்பு; இந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகிறவர் களுக்கு உத்தியோக வாய்ப்புக் கொடுக்க அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது. அந்த முறையில் சாதாரண பி.ஏ., எம்.ஏ., என்று படிக்கிறவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. இது தொழில் கல்வி. ஐந்து அல்லது ஏழு ஆண்டுகாலம் செலவு செய்து படித்து, பட்டம் பெறுகிறவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க பொறுப்பு ஏற்கிறது சர்க்கார். அந்த முறையில்தான் பதில் அளித்தேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து, மதுரை பிரிந்து தனியாகப் போய் விட்டது. ஆகவே, மதுரை பல்கலைக் கழகத்திற்கு என்று ஒரு காலேஜ் ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மதுரை மாவட்டத் திலிருந்து ஒரு கல்லூரி அங்கே அமைக்கப்படவேண்டும் என்று 1961-லேயே கோரிக்கை இருக்கிறது. நான் இப்பொழுது அளித்த பதில்களிலிருந்து மதுரையிலேயும் அமைக்க முடியாத நிலையிருக் கிறது. அதோடு, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளி லிருந்தும் கேட்டார்கள். கோவையிலிருந்தும் கேட்கிறார்கள். எந்த மாவட்டத்திலும் இப்பொழுது அமைக்க சாத்தியம் இல்லை என்பதை, கோரிக்கை வராவிட்டாலும் எல்லா மாவட்டங் களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.



1968 பிப்ரவரி 17]

## குளிர்பதன சாதனம் அமைத்த வண்டிகள்

*65 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் மீன் விற்பனை செய்வதற்கென குளிர் பதன சாதனம் அமைத்த லாரிகள் எத்தனை வாங்கப்பட்டன?

(இ) அவை என்ன விலையில் வாங்கப்பட்டன?

(உ) அவைகளுள் தற்போது உபயோகத்தில் இருந்துவரும் வண்டிகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) குளிர்பதனக் கருவி பொருத்தப்பட்ட மூன்று வண்டிகள் Vans ஹங்கேரியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

(இ) சுங்க வரி, இன்ஷூரன்ஸ், விற்பனை வரி, கப்பற் கூலி நீங்கலாக, மாற்றுப் பாகங்களுடன்கூடிய இந்த மூன்று வண்டி களின் விலை ரூபாய் 4,12,950 (ரூபாய் நான்கு லட்சத்துப் பன்னிரண் டாயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது).

(உ) வண்டிகள் மூன்றும் இப்பொழுது சாலைகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** குளிர்பதன கருவி பொருத்தப்பட்ட வண்டி ஒரு நாளுக்கு எவ்வளவு மீன்களை ஏற்றிக்கொண்டு செல்லும்? ஒரு வண்டி மூலம் ஒரு மாதத்திற்கு எவ்வளவு மீன் விற்பனை ஆகிறது? முற்பகல் 9-30

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு வண்டியில் 3½ டன் மீன் ஏற்றிப் போகலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தற்போது குளிர்பதன கருவி பொருத்தப்பட்ட லாரிகள் எத்தனை இருக்கின்றன? அவை எந்த எந்த ஊர்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** முதல் கேள்விக்கு நான் அளித்த பதிலைக் கனம் அங்கத்தினர் கேட்டிருப்பார் என்று நினைக் கிறேன். "மூன்று வண்டிகள்" என்று குறிப்பிட்டேன். மூன்று வண்டிகளில் ஒன்று, புலிக்காட் கோவாபரேடிவ் ஃபிஷிங் மார்க் கெடிங் யூனியனிடமும், ஒன்று, கடலூர் ஃபிஷிங் மார்க்கெடிங் யூனியனிலும், ஒன்று, இராமனாதபுரம் ஃபிஷர்மென்கூட்டுறவு சொசைட்டியிலும் இருக்கின்றன.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** இந்த வண்டிகளில் நெல்லை மாவட்டத்திற்கு ஏதாவது வண்டிகள் ஒதுக்கப்படும் உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது மூன்று வண்டிகள்தான் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி பகுதிக்கு அவசியம் என்பதை நான் உணர்கிறேன். அரசாங்கத்தின் நிதி நிலை சரியானால், அதுபற்றியும் கவனிக்க வேண்டியதுதான்.

[1968 பிப்ரவரி 17

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, அந்த மூன்று 'வான்'-களும் மீன் எங்கு கிடைக்கிறதோ, அந்தப் பகுதிகளில்தான் ஓடிக்கொண்டு வருகிற மாதிரி தெரிகிறது. ஆகையால், மீன் கிடைக்காத பகுதிகளில், எந்த எந்த நகரங்களில் விற்கவேண்டுமோ, அந்த நகரங்களுக்கு அந்த 'வான்'-களை அனுப்பி, அங்கே மீன் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மீனை கிடைக்காத பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்பதனால் ஆதாயம் அதிகமாக இருக்குமானால், அங்கே கொண்டு சென்று விற்கலாம். ஆனால் அருகிலேயே உடனடியாக விற்க வாய்ப்பு இருக்குமானால், அங்கே விற்று ஆதாயம் அடைவதுதான் லாபம் என்று கருதப்படுகிறது.

**திரு. க. மு. ராசகோபால்:** இப்படி மீனைப் பிடித்து, பதனிட்டு, அது தமிழகத்தில் மட்டும் விற்பனை ஆகிறதா? அல்லது, கேரள மாநிலத்தைப் போல், அயல்நாடுகளுக்கும் அனுப்பி விற்பனை செய்து, பணம் சம்பாதிக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சென்னையில் கிடைக்கின்ற இறாவும், கடலூரில் கிடைக்கின்ற இறாவும் கொச்சின் பகுதிக்குச் சென்று, அங்கிருந்து ஜப்பான் போன்ற அயல்நாடுகளுக்கெல்லாம் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. அத்தகைய தொழிற்சாலையைச் சென்னையை அடுத்த எண்ணூரில் அமைக்க வேண்டும் என்ற திட்டமும் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின்:** நெல்லை மாவட்டத்தில், பெரியதாளை, கூடுதாளை, உவரி, மணப்பாடு போன்ற இடங்களில் ஏராளமான மீன்கள் அகப்பட்டும், அங்கே இந்தக் குளிர்பதன சாதன வசதி இல்லாத காரணத்தால், அங்குள்ள மீனவர்களுடைய வருவாய் குறைந்து, அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை அரசுக்கு நானே எழுதினேன். அந்தப் பெரியதாளை என்ற ஒரு கிராமத்திலாவது குளிர்பதன சாதன அறையைத் தற்காலிகமாக ஏற்படுத்த இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மூலக் கேள்வி, குளிர்ப்பதனக் கருவி பொருத்தப்பட்ட வண்டியைப் பற்றியது. கனம் உறுப்பினர் அவர்கள் 'கோல்ட்டு ஸ்டோரேஜ்' பற்றிக் கேட்கிறார். தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து, எண்ணூரில் ஒரு தொழிற்சாலை அமைத்து, அங்கே மீனைப் பதனப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்ப வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய தொழிற்சாலை துரிதமாக ஆரம்பிக்கப்படுமா? ஏனெனில், உண்மையிலேயே, யார் மீன் பிடிக்கிறார்களோ, அவர்களுக்கு இப்பொழுது லாபம் கிடைக்கவில்லை. சீர்காழியில் ஒரு கிலோ மீனை 9 ரூபாய்க்கு வாங்கி, அதை 12 ரூபாய்க்குச் சென்னைக்கு அனுப்பி, சென்னையிலிருந்து அதையே 16 பாய்க்கு கொச்சிக்கு அனுப்பி, அங்கிருந்து அது



1968 பிப்ரவரி 17]

வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறது. உண்மையிலேயே, இந்த அரசாங்கம் யாருடைய வாழ்க்கையை வளம்பெறச் செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறதோ, அவர்களுடைய வாழ்வு வளம்பெறப் பயன்படவில்லை. ஆகையால், எண்ணூரில் அமைக்கவிருக்கும் தொழிற்சாலையைச் சீக்கிரம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எண்ணூரில் அமையவிருக்கும் தொழிற்சாலை இறாவைப் பதனிடுவதற்கு கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது மீன் பதனிடுவது குறித்து என்று கருதுகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** இரண்டும் ஒன்றுதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பேசும்போது குறுக்கிட முடியாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இறாவும் மீனும் ஒன்று என்று நான் ஒத்துக்கொள்ள முடியாது. அந்த விஷயத்தில் நான் விவரம் தெரிந்தவன். (சிரிப்பு) இறாவும் மீனும் வேறு வேறு. இறாவைப் பதனிடுவது என்பதுதான் அரசாங்கத்தினுடைய உத்தேசமாக இருக்கிறது. மீனவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அந்தத் தொழிற்சாலை எண்ணூரில் அமைய இருக்கிறது. (குறுக்கீடு) நண்டு, வேறு விஷயம். அந்த இறா பதனிடும் தொழிற்சாலை வருகிறபோது, குறிப்பாக மீனவர்களுக்கு—ஆண்களுக்கும் பெண்களுக்கும்—வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. மீன் பிடிக்கிறவர்களுக்கு ஆதாயம் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக, சென்னை, இராயபுரம், எண்ணூர் பகுதிகளில் அதிக இறா கிடைக்கிறது. கடலூர், பரங்கிப்பேட்டை, நண்பர் மணி அவர்களுடைய பகுதி, இவற்றில் இறா கிடைப்பதாகத் தகவல் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** சென்னையில் இரண்டு குளிர்பதனக் கருவி பொருத்தப்பட்ட மீன் விற்பனை வண்டிகள் இருக்கின்றன. அதில் ஒரு வண்டி எப்போதும் அந்த ஆபிசிலேயே இருக்கிறதே தவிர, அது சரிவரப் பயன்படுத்தப்படுவதில்லை. அதன் மூலம் விற்பனை செய்வதும் கிடையாது. ஆகவே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா? விசாரித்து, சும்மா இருக்கும் அந்த வண்டியின் மூலமும் மீன் விற்பனை செய்ய வழிவகை செய்வார்களா? அடுத்து, இன்னொன்று. மீன் துறையில் நமது அமைச்சர் அவர்கள் நல்ல ஆர்வம் உடையவர்கள். அதை நன்கு ருசித்துச் சாப்பிடக்கூடிய அமைச்சர் அவர்கள் இந்த வண்டிகளைக் கடற்பிரதேசத்தை அடுத்த மற்ற இடங்களுக்கும் அனுப்ப அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? கடற்கரை இல்லாத மற்ற பிரதேசங்களுக்கும் இந்த வண்டிகளை அனுப்புவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மூலக் கேள்வி ஹங்கேரியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்பதனக் கருவி பொருத்தப்பட்ட வண்டிகளைப் பொறுத்தது. அது சாதாரண

வண்டியைப் பொறுத்தது அல்ல. கனம் உறுப்பினர் குறிப்பிடுவது சாதாரண வண்டியைப் பொறுத்தது என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரம் அறிந்து சொல்லுகிறேன். கனம் உறுப்பினர் கேட்ட கேள்வியின் பிற்பகுதிக்குப் பதில் சொல்லவேண்டுமானால், நான் அதிகமாக மீன் சாப்பிடுகிறவன் என்றால், திரு. ராமசாமி அவர்கள் கூடுதலாகச் சாப்பிடுவார்கள். (சிரிப்பு.)

**திரு. எம். எஸ். மணி** : குளிர்பதன சாதனம் அமைத்த லாரிகளில் மீன்களை வைத்து அனுப்புவதற்குப் பதிலாக, மீன் ஊறுகாய் போட்டு வெளியே அனுப்பலாம் அல்லவா? அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மீனை ஊறுகாய் போடுவதாக இதுவரை நான் கேள்விப்படவில்லை. கருவாடாகத்தான் பயன்படுத்துகிறார்கள்.

**திரு. எம். எஸ். மணி** : நம்முடைய உலகக் கண்காட்சியில் மீன் ஊறுக்காய் இப்பொழுது விற்கிறது. (சிரிப்பு.) ஆகவே, அந்த முறையில் மீன் ஊறுகாய்க்கு வெளிநாட்டில் ஏராளமான கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அரசாங்கம், அத்தகைய தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அங்கு விற்கப்படுவது மீன் ஊறுகாய் அல்ல. அரைப் பக்குவமாய் வேக வைத்தது. அதைக் கொண்டுவந்து மீண்டும் நாம் நல்ல முறையில் பக்குவப்படுத்த வேண்டும். இதையெல்லாம் சொல்லுகிறபோது, மீன் சாப்பிடாதவர்களுக்கெல்லாம் கொஞ்சம் யோசனையாக இருக்கலாம்.

(திரு. ப. மகாதேவன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உறுப்பினருடைய துணை வினா மீனை ஒட்டிய வினாவாக இருக்க வேண்டும். (சிரிப்பு.)

**திரு. ப. மகாதேவன்** : நம்முடைய மாநிலத்திலேயே சில இடங்களில் கடலில் பிடித்த மீனைப் புதிதாகச் சாப்பிடக்கூடிய வசதி இல்லாமலிருக்கிறது. ஆகவே, குளிர்பதன வண்டிகளில் கடல் மீன்களை ஏற்றி 200, 300 மைல்கள் தள்ளிக்கொண்டுபோய் அங்குள்ளவர்களுக்கும் கடல் மீன் கடைக்கும்படியான ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இப்போதும் ஐஸ் வைத்து பல பகுதிகளுக்கு மீன் அனுப்பப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. கே. வினயகம்** : இந்த வண்டிகள் ஹங்கேரி நாட்டிலிருந்து வாங்கப்பட்டன. அங்கிருந்து நமக்குக் கிடைக்கிற சலுகையைவிட நார்வேயிலிருந்து அதிகம் கிடைக்கும் என்று கருதுகிறேன். நார்விஜியன் ஃபிஷிங் ப்ராஜெக்ட்டின் உதவியோடு, கேரளாவில் நல்ல முறையில் அவர்கள் மீன்களை அதிகமாகப் பிடித்து அன்னியச் செலாவணியைச் சம்பாதிக்கிறார்கள். அதேமாதிரி நம்முடைய மாநிலத்திலும், நார்விஜியன் ப்ராஜெக்டோடு தொடர்பு கொண்டு, ஏதாவது உற்பத்தி செய்வதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் உறுப்பினர் திரு. வினயகம் அவர்களுக்கு கேரளப் பகுதியில் நடக்கிறது தெரிகிறதே தவிர, நமது தமிழ்நாட்டிலே நடப்பது தெரியாதிருப்பது வருந்தத்தக்கது. இராமேசுவரம் பகுதிக்குப் பக்கத்தில் மண்டபத்தில் நார்வீஜியன் ப்ராஜெக்ட் வேலை நடந்து கொண்டிருப்பது கனம் உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். 'போட்' கட்டும் தொழிற்சாலைதான் நடக்கிறது. கோளத்தில்கூட 'போட்' தான் கட்டப்படுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கீழ் பவானி நீர்த் தேக்கத்தில் மீன் வளம் மிகவும் நன்றாக இருக்கிறது. அங்கே பிடிக்கப்படும் மீன்களையெல்லாம் பட்டணப்பகுதியில் கொண்டு போய் விற்கிறார்களே தவிர, கிராமப் பகுதிகளுக்கு, எடுத்துச் செல்வதில்லை. அங்கும் எடுத்துச் சென்று, சாதாரண கிராமவாசிகளுக்கும் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் சர்க்கார் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கிராமப் பகுதிகளுக்கும் கூடைகளில் மீன் செல்கிறது. நஞ்சைபுளியம்பட்டிக்கு வரவில்லையானால், விரைவிலே அனுப்ப முயற்சிக்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்** : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் மீன் சந்தை ஒன்றை நடத்தி வருகிறது. அந்த மீன் சந்தைக்காக ஒரு குளிர்ச்சாதன வண்டி ஒன்றும், குளிர்ச்சாதன அறை ஒன்றும் வேண்டும் என்று நீண்டநாட்களாக கோரிக்கை ஒன்றை வற்புறுத்தி வருகிறது. அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்று நடத்தித் தருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : குளிர்ச்சாதன வண்டியைப்பற்றியும், குளிர்ச்சாதன அறையைப்பற்றியும் கனம் உறுப்பினர் எழுதியனுப்பினால், அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. போஜன்** : தலைவர் அவர்களே, இப்போது நீலகிரி மாவட்டத்திற்கு கேரள மாநிலத்திலிருந்துதான் மீன் வந்து கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள மீன்கள் குளிர்ச்சாதன வண்டி மூலம் கொண்டுவந்து விற்பனையாவதில்லை. மேலும் கீழ்பவானி போன்ற ஆற்றிலிருந்து கிடைக்கும் மீன்களும் வரக்கூடிய சூழ்நிலை இல்லை. ஆகவே, நீலகிரி மாவட்டத்திற்கு இந்த நதி மீன்களைக் கொண்டுவந்து வினியோகம் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இப்போது இந்த மீன்கள் மேட்டூர் பகுதியில் விற்பனையாகின்றன. அந்த மீன்களை உதகைக்கும் எடுத்துச் செல்கிறார்கள். உதகையிலிருந்தும் மேட்டூர் பகுதிக்கு மீன் வந்து கொண்டிருக்கிறது.

## Livestock Farms

* 66 *Q*.—THIRU A. M. RAJA : }
THIRU V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the Government Poultry and Livestock Farms have shown profit from the year 1960; and

(*b*) if so, in which years?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: (அ) & (இ) இல்லை. கால்நடைப் பண்ணைகள் பொதுமக்களின் நலனுக்காக "விதைப் பண்ணை பணி அமைப்பாகப்" பயன்படுத்தப்படுகின்றன. கால்நடைப் பண்ணைகள் மூலம் கிடைக்கும் ஆதாயத்தை அல்லது ஏற்படும் இழப்பை, மதிப்பிட அவற்றின் வரவுகள், செலவுகள் குறித்த கணக்குகள் வாணிக முறையில் வைத்து வரப்படுவதில்லை. நல்ல விதைகளை விற்பதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் வசதி ஏற்பட வேண்டுமானால், பண்ணைகள் திறம்படச் செயல்படவேண்டும். இதற்காகும் செலவைத் தவிர்க்க முடியாது. இச் சூழ்நிலைகளில் கோழியினப் பண்ணைகளிலும், கால்நடைப் பண்ணைகளிலும் ஆதாயம் கிடைக்கின்றதா அல்லது இழப்பு ஏற்படுகின்றதா என்ற வினா எழவில்லை.

**திரு. ஏ. எம். ராஜா** : தலைவர் அவர்களே, ஐந்து கோழிகள் ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்குத் தேவையான உணவை உட்கொள்ளுகின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். தற்போதைய உணவுப் பற்றாக்குறை நிலையில், கோழிப்பண்ணைத் திட்டத்தைக் கைவிட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கோழிபற்றிய ஆராய்ச்சி செய்வதற்காகத்தான் இந்தக் கோழிப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றனவா, நஷ்டத்தில் நடக்கின்றனவா என்பதை அறிந்து, எந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பதைக் கண்டறிய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி பல இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து விவரங்களை நேரில் கண்டறிந்து வருகிறார்கள். பின்னர் அக்கமிட்டி ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அந்த அறிக்கை இந்தச் சபையில் வைக்கப்படும். அதன்மீது உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து, நல்ல ஆலோசனைகளை வழங்கினால், மேற்கொண்டு இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட வழி வகுக்கலாம். இந்தத் திட்டத்தைக் கைவிடுவதைவிட எப்படி இன்னும் சிறப்பாகச் செய்யலாம் என்பதுபற்றி உறுப்பினர்கள் ஆலோசனை கூறலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, கோழி அபிவிருத்திக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் இன்னும் வரவில்லையென்று சொன்னாலும், 1960-ம் ஆண்டு முதற்கொண்டு இதுவரையிலும் சர்க்காரிடத்தில் இதுபற்றி கணக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். இதனால் இதுவரையில் எத்தனை கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா? அதற்குக் காரணம் என்ன?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கின்ற முதல் கேள்வியிலேயே நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதையெல்லாம் பரிசிலனை செய்யத்தான் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்டைப் பார்த்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதுபற்றி யோசிக்கப்படும். இது கமர்ஷியல் பேசிஸில் நடத்தப்படுவது இல்லை. தரமான நல்ல கோழிகளை உண்டாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன்தான் இந்தப் பண்ணைகள் எல்லாம் இயங்கி வருகின்றன.

**திரு. ரா. ராமசந்திரதுரை** : தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கால்நடைப் பண்ணைகளிலும், ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையிலும் சேர்ந்திருக்கும் உரம் பல ஆண்டுகளாக வினியோகம் செய்யாமல் அப்படியே இருக்கிறது. அதைப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்தால், விவசாயிகள் பலன் அடைவார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப் பொதுமக்களுக்குக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : ஒரத்தநாடு பண்ணைக்கு நான் சமீபத்தில் சென்றிருந்தேன். கால்நடைகளின் சாணம் வீணாகக் குவியல்களாகப் பல ஆண்டுகளாகச் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அந்தச் சாணத்தை எருவாக்கிப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டார்களே என்று அங்குள்ள அதிகாரியைக் கண்டித்ததுடன் மட்டுமல்லாமல் அவர்மீது நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறேன். அங்கேயுள்ள மாட்டுச் சாணத்தையெல்லாம் சுரண்டி எருவாக ஏலம் விட்டுவிடுமாறு சொல்லியிருக்கிறேன். மீண்டும் அங்கு போக இருக்கிறேன். தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். அந்த உரம் விவசாயத்திற்குப் பயன்படுத்த வழி செய்யப்படும்.

**திரு. ப. மகாதேவன்** : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் ஒரு கால்நடைப் பண்ணை வைக்க ஒரு திட்டம் அரசாங்கத்திடம் உண்டா? அது நடைமுறையில் சாத்தியப்பட்டால் அதை நடத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : குமரி மாவட்டத்தில் அம்மாதிரி ஏற்படுத்த தற்சமயம் திட்டம் ஒன்றும் இல்லை. அதற்கு வேண்டிய ஆலோசனைகளை கனம் உறுப்பினர் எழுதியனுப்பினால் பரிசீலனை செய்து அது வைக்க முடியுமா என்பதை அரசாங்கம் யோசிக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is a Government Livestock Research Station at Hosur. It contains a Poultry Farm, a Cattle Farm and Agricultural Farm. But unfortunately the public do not know anything about the working of the institution. It has become almost a sealed institution. Last September the Hon. Minister for Agriculture visited the Station

and he went to the Stores and also inspected one or two items there. Will he think of constituting a High Power Committee to go into the working of the farms there?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: ஓசூர் பண்ணை மட்டுமல்ல. எல்லாப் பண்ணைகளையும் நேரில் பார்த்து, அங்கு நடக்கக் கூடிய வேலைத் திட்டங்களையும், நல்லது ஏற்படுகிறதா, கெட்டது ஏற்படுகிறதா, தவறுதல் ஏற்படுகிறதா என்பவைகளையெல்லாம் பரிசீலிக்கவே ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம். இந்தக் கமிட்டியிலே அனுபவப்பட்டவர்கள் இருக்கிறார்கள். கால்நடை விஷயத்தில் தொடர்புள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பரிசீலனை செய்து தங்களுடைய குறிப்பினை வழங்குவார்கள். அதன்மீது தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். ஓசூர் பண்ணையை நானும் பார்த்திருக்கிறேன். ஒரே நாளில் பண்ணையில் நடக்கும் காரியங்கள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியாது. ஆகவே, ஒரு நாளோ, இரண்டு நாட்களோ, இன்னும் கூடுதலான நாட்களோ தங்கியிருந்து எல்லா விவரங்களையும் சேகரித்து, அதற்கான குறிப்புகளை இந்தக் கமிட்டி தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் எல்லா வித தவறுதல்களையும் தடுக்க வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மு. ராசகோபால்**: தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கத்தின் கொள்கைப்படி தீவிர கோழி வளர்ப்புத் திட்டத்தினால் 1965-66-ல் கிட்டத்தட்ட 70 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதே, அதற்குண்டான காரணங்களைக் கண்டறிந்து இந்த அரசாங்கம் தெரிவிக்குமா? அந்த அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: சில இடங்களில் கோழி, கால்நடைகளுக்கான தீவனம் வாங்கியதில் தவறுகள் இருக்கின்றன என்பதை நேரிடையாகச் சில பண்ணைகளில் பார்த்ததன் காரணமாகத்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டது. சட்டமன்ற அங்கத்தினர்கள், முக்கிய பிரமுகர்கள் போன்றவர்கள் இதிலுள்ள குறைகளை எடுத்துச்சொல்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளில் சில உண்மையாகவும், சில மிகைப்படுத்தியும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. கோழி வளர்ப்புத் திட்டத்திற்காக அமைக்கப்பட்ட கமிட்டியின் சுற்றுப்பயணம் முடிந்துவிட்டது. அறிக்கையை விரைவில் தருவார்கள். அதன்மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கால்நடை அபிவிருத்திக்கான கமிட்டி அமைக்கப்பட்டு, இப்போதுதான் அதன் முதல் கூட்டம் நடந்திருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. பி. எம். முனுசாமி கவுண்டர்**: ஓசூரில் இருக்கும் பண்ணை தமிழகத்திலேயே மிகப் பெரிய பண்ணையாக இருக்கிறது. இந்தப் பண்ணை லாபகரமாக நடக்கிறதா, அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: இதுகுறித்து முழுத் தகவலும் என்னிடத்தில் இல்லை. இது லாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா என்பதுபற்றிய விவரம் தற்போது இல்லை. இது கமர்ஷியல் பேசிஸில் இல்லாததால் அதைப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். தவிர அங்கு முழுக்க முழுக்க ஊழல்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் கமிட்டியை வைத்திருக்கிறோம். அது எல்லாவற்றையும் பரிசீலனை செய்யும். கமிட்டி பரிசீலனை செய்து வேண்டிய ஆலோசனைகளைக் கூறும். ஓசூர் பண்ணை மிகப் பெரிய பண்ணை. ஆகவே விவசாயிகள் அதன்மூலம் நல்ல ஆதாயத்தை அடையக்கூடும். இதை யாரும் மறுக்க முடியாது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்**: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்க்கார் நடத்துகிற பண்ணையில் வரவு-செலவுக்கணக்கு பார்ப்பது இல்லை என்று சொன்னார்கள். தனிப்பட்ட முறையில் வைத்து நடத்துகின்ற கோழிப் பண்ணைகளிலும் நஷ்டம் வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? சர்க்கார் மானியம் மட்டும் வழங்காமல், அவை லாபகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுகிற வகையில் உதவி செய்ய உத்தேசம் உண்டா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: தனியார் நடத்துகின்ற பண்ணைகள் அனைத்திலும் நஷ்டம் வருவதாகச் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. குறிப்பாக, காட்பாடியில் ஒரு பண்ணை இருக்கிறது. கன்னியாகுமரி மார்த்தாண்டம் பக்கத்தில் ஒரு பண்ணை இருக்கிறது. இவை சிறப்பான முறையில், லாபகரமான முறையில் நடைபெறுகின்றன. சர்க்கார் பண்ணைகளுக்கே எடுத்துக்காட்டாக இயங்கிவருகின்றன. பர்மாவில் இருந்து வந்து குடியேறிய அகதிகளுக்கு க்ரோம்பேட்டை பக்கத்தில் பண்ணை வைப்பதற்கு சர்க்கார் நிதி வழங்கியிருக்கிறார்கள், இந்தப் பண்ணைகளையும் சிலர் நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். ஆதாயமும் பெற்று வருகிறார்கள். சில பேர்கள் சர்க்கார் மானியம் பெற்று கோழிகள் வாங்காமலேயே இருக்கிறார்கள். கேட்கிறபோது கோழிகள் செத்துப்போய்விட்டன, இருப்பதை எடுத்துக்கொள்ளுங்கள், பாக்கிப் பணத்தை தள்ளுபடி செய்து விடுங்கள் என்று கோரிக்கை விடுக்கிறார்கள். இதைப்பற்றி எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்காகத்தான் அரசாங்கம் ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர்**: தமிழ் நாட்டில் கோழிப் பண்ணைகளும், கால்நடைப் பண்ணைகளும் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமாக இருக்கின்றன. அதனால் அரசாங்கத்திற்கு சிறிது நட்டம் ஏற்படுகிறது என்றாலும் அதைப் பொருட்படுத்தாது இந்தப் பண்ணைகளை விஸ்தரிக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: இப்போது இருக்கிற பண்ணைகளை முதலில் சரியாக இயங்கும்படியாகச் செய்தாக வேண்டும். இவை எல்லாம் லாபகரமாகச் சரியான முறையில்

[1968 பிப்ரவரி 17

இயங்குகின்ற சூழ்நிலை வந்தபிறகு இவற்றை விஸ்தரிக்கின்ற நிலைமை வந்தாலும் வரலாம். இப்போது ஆடு வளர்ப்பதற்காக கட்டடம் கட்டி, ஆடு மேய்க்கும் பையனைக் கூட நியமித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே ஆடுகள் இல்லை என்பதை நானே நேரில் போய்ப் பார்த்து வந்தேன். ஆடுகள் வாங்கவே இல்லை. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் பார்த்துத்தான் தற்போது ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறோம். அவர்கள் இவற்றையெல்லாம் நல்ல முறையில் பரிசிலனை செய்வார்கள்.

**திரு. ஈ. எம். நடராசன்:** தலைவர் அவர்களே, பர்கூர் கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்காக என்று பவானி சாகரில் ஒரு பண்ணை ஆரம்பிப்பதாக இருந்தது. என்ன காரணத்தினாலோ அது செயல்படவில்லை. பர்கூர் இனக் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய பர்கூர் மலைப் பகுதியிலேயே பண்ணையை ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பரிசீலிக்க முடியும்.

**திரு. கே. விநாயகம்:** அரசாங்கத்தினிடம் பணம் வாங்கி கோழிகளோ, ஆடுகளோ வாங்காமல் நட்டப்படுத்திய தனியார் பண்ணைகள் இருக்கிறது என்பது உண்மையோ, இல்லையோ, அது பரிசீலிக்க வேண்டிய விஷயம். அரசாங்கம் நடத்துகின்ற கோழிப் பண்ணையிலேயே—இங்கேயே—இன்குபேடரில் ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் எல்லாம் எரிந்துபோய் சர்க்காருக்கு லட்சக்கணக்கில் நட்டம் ஏற்பட்டது என்பது உண்மையில்லையா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நாங்கள் பொறுப்பேற்ற பிறகு நட்டம் ஏற்பட்டதாக இல்லை. ஏற்கனவே இருந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தில் அப்படி ஏற்பட்டிருந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல.

**திரு. ந. வீராசாமி:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் ஆடு வாங்கப் பணம் கொடுக்கப்பட்டது, ஆட்டைக் காணோம், ஆடுமேய்க்கும் பையன் இருந்தான் என்றார்கள். இந்தத் தவறுக்குக் காரணம் முந்தைய அரசாங்கமா? இந்த அரசாங்கமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆடு வாங்கப் பணம் கொடுத்ததாக இல்லை. கட்டடம் கட்டி, நிலத்தை ஒதுக்கி, ஆடு மேய்க்கிற பையனைக் கூட நியமித்து வைத்திருந்தார்கள். ஆனால் ஆடு வாங்கப்படவில்லை என்றுதான் தெரிவித்தேன். இதற்கும் ஏற்கனவே இருந்த அரசாங்கம்தான் பொறுப்பு.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகமான அளவு கோழிப் பண்ணைகள் துவக்கப்பட்டதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். அங்கேதான் நஷ்டமும் அதிகம் ஏற்பட்டிருப்பதாகக் கருதுகிறார்கள். இது உண்மையா?



1968 பிப்ரவரி 17]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகம் ஏற்பட்டது என்பது உண்மை. சென்னையில் இருந்து காரில் போகிறபோதே, பெரிய பெரிய பங்களாக்கள், ஏர் கண்டிஷன் கட்டடங்கள் இந்தப் பண்ணைகளுக்காகக் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்துத்தான் கேட்கிறார்கள். தீவிரத் திட்டம், அதி தீவிரத் திட்டம் என்றெல்லாம் இங்கே அதிகம் ஏற்படுத்தப்பட்டதற்கான காரணம் கனம் உறுப்பினருக்கு நான் சொல்லாமலேயே தெரியும்.

**திரு. என். துரைபாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை இவற்றின் மூலமாக அரசாங்கத்திற்கு சிறிது நஷ்டம் என்றாலும் இன அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்ற முறையில் நடைபெறுகிறது என்கிறபோது நாங்குநேரியில் அமைக்கப்பட்ட பண்ணையை திடீரென்று மாற்றிவிட்டார்களே, ஏன் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தனிக் கேள்வி போட்டால், முழு விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, இங்கிலாந்து நாட்டில் (Bernha d) என்ற கும்பெனி 1956-ஆம் ஆண்டில் 50 ரூபாய் மூலதனத்தில் ஆரம்பித்த கோழிப்பண்ணை இன்றைக்கு 30 கோடி ரூபாய் மூலதனத்தில் இயங்குகின்ற நிலைக்குப் பெருகியிருக்கிறது. அதன் நுட்பங்கள் என்ன என்பதைத் தெரிந்து வருவதற்கு—நமக்கு ஏற்படும் 50 லட்சம் ரூபாய் நட்டத்தைத் தவிர்ப்பதற்கு ஒரு நிபுணரையாவது அங்கே அனுப்பி வைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் இது பற்றிய விவரத்தை முழுமையாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

**வடார்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைட்டி**

*67 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைட்டி, 1964-65 முதல் இன்றுவரை சிவில் சப்ளை இலாகாவில் இருந்து வாங்கிய கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை முதலிய உணவுப் பண்டங்களுக்காக கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு, வருடவாரியாக?

(இ) பாக்கித் தொகை கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) பாக்கி ஒன்றும் கிடையாது.

(இ) இக் கேள்வி எழவில்லை.

[1968 பிப்ரவரி 17

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : ஆனால் அந்த சொஸைடியில் சிவில் சப்ளை இருந்தும் சர்க்கரையோ, கோதுமையோ எடுக்காமல் இருக்கிறார்களே—இரண்டு மாதங்களுக்கு முன்பு. பாக்கி இல்லை என்றால் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : பாக்கித் தொகை எவ்வளவு என்பது கேள்வி. இல்லை என்பது பதில். எடுக்காமல் இருந்தால், அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்** : வடார்க்காடு மார்க்கெட்டிங் கமிட்டி பற்றி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறியவிரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தகவல் இல்லை.

மு ப 10-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வட ஆர்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைடியில் கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை இவற்றிற்காகக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைப்பற்றி திரு. பலராமன் அவர்கள் ஒரு துணை வினா கேட்பார்கள்.

**திரு. இல. பலராமன்**: வட ஆர்க்காடு கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் நடந்துவருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான பொருள்கள் விநியோகிக்கப் படுகின்றன என்பதைப்பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்து. அரசாங்கத்திற்கு அதைப்பற்றி கருத்து இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வட ஆர்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைடியில் பாக்கியைப்பற்றி மட்டும் திரு. கோதண்டராமன் அவர்கள் ஒரு துணை வினா எழுப்புவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இந்த வட ஆர்க்காடு விநியோக மார்க்கெட்டிங் சொசைடி நல்லவிதமாக நடப்பதாக இப்பொழுது அங்கத்தினர் அவர்களால் சொல்லப்பட்டது. 1964-65-ஆம் ஆண்டு முதல் பல லட்சக்கணக்கான ரூபாய் ஊழல் ஏற்பட்டு அந்த ஆண்டு முதல் கணக்குகளைத் தணிக்கை செய்யாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? ஆகவே அப்படிப்பட்ட ஊழல்களைப் போக்கக்கூடிய முறையிலே உடனடியாகக் கணக்குகளைத் தணிக்கை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THIRU. K. VINAYAKAM : Sir, on a point of order. The Hon. Minister has stated that there are no dues from the society. So, is the hon. Member objecting to that statement or suspecting the *bona fides* of the Hon. Minister. Let him make it clear.



1968 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சட்ட அமைச்சர் அவர்கள் விரும்பினால், இதற்குப் பதில் சொல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்ட உண்மையை மறைக்கக்கூடிய தன்மையில் நியாயமாக நேர்மையாக நடக்கிறது என்று அங்கத்தினர் சொன்ன காரணத்தினால்தான், நான் நேர்மையற்ற தன்மையில் அது நடக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துக்கூறக்கூடிய தன்மையில்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : பாக்கி இருக்கிறதா என்பது கேள்வி. இல்லை என்பது பதில். ஊழலாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்வது நல்லதல்ல. அப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது என்பதுபற்றி தகவல் எழுதியனுப்பினால், அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

## பழம் பதனிடும் தொழிற்சாலை

*68 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி** : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவுவதற்கென கடனாக வழங்கப்பட்ட தொகை என்ன?

(இ) தற்போது எந்த அளவுக்கு அத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கியுள்ளது?

(உ) அதனிடமிருந்து மேலும், கடன் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவுவதற்காக, அரசாங்கம் வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்திற்கு ரூ. 2,83,700 மூலதனப் பங்குத் தொகையோடு ரூ. 5,67,400 கடனாகவும் வழங்கியுள்ளது.

(இ) இத் தொழிற்சாலை இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை.

(உ) இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : அந்தத் தொழிற்சாலைக்கு இடங்கள் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது? அது சம்பந்தப்பட்ட பத்திரம் முதலியவற்றை அரசாங்கம் பரிசீலித்ததா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: இந்த இடம் மட்டும் 1,22,566 ரூபாய். அந்த இடத்திற்குப் பத்திரத்தையும் பார்த்தாகிவிட்டது. கனம் அங்கத்தினர் சொல்கிறபடி தவறுகள் இருக்கின்றன என்ற தகவல்கள் இருக்குமானால், அதை எழுதியனுப்பலாம்.

[1968 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வட ஆர்க்காடு பழம் பதனிடும் தொழிற்சாலையைப்பற்றி திரு. முருகையன் அவர்கள் துணை வினா கேட்பார்கள்.

**திரு. எஸ். முருகையன்:** அந்த இடத்தைப்பற்றிய தவறுகள் பற்றிய தகவல்கள் இருந்தால் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம். சம்பந்தப்பட்ட இடத்தை வேறு யாரோ ஒருவரிடமிருந்து தப்பாக பத்திரத்தை எழுதி வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த இடத்தைச்சுற்றி காம்பவுண்ட் போடப்பட்டு, அங்கே கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் எல்லாம் அதை ஆட்சேபிக்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமாகத்தான் இந்த இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனிக் கேள்வி போட வேண்டும்.

## குடி நீர் விநியோகத் திட்டங்கள்

***69 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பஞ்சாயத்தில் பொது குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது துவங்கப்பட்டது?

(உ) இத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா:** (அ) குறிச்சி பஞ்சாயத்து குடி தண்ணீர்த் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15,06,000.

(இ) இத்திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை.

(உ) இத்திட்டத்திற்கான விரிவான அமைப்புப் படங்களும், மதிப்பீடுகளும் தயாராகின்றன.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, குறிச்சி பஞ்சாயத்துப் பகுதி கோவை நகரத்தையொட்டி ஐந்தாறு மைல்கள் தூரத்தில் இருக்கிற காரணத்தினால், குடி நீர் இல்லாது மக்கள் குடிநீருக்காக தாய்மார்கள் இரண்டு மூன்று மைல்கள் எல்லாம் நடந்து சென்றும், தொழிலாளர்கள் எல்லாம் சைக்கிளிலே சென்றும் தண்ணீர் எடுத்துப்போகக்கூடிய கடுமையான சூழ்நிலை அங்கே இருப்பதால், மேற்படி திட்டத்தை விரைவிலேயே நடைமுறைக்குக் கொண்டுவந்து மக்கள் பயன்படுத்தக் கூடிய முறையில் எப்பொழுது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.



1968 பிப்ரவரி 17]

***70 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறுவாணி தண்ணீர்த் திட்டத்தை சிங்கநல்லூர் நகருக்கும் குறிச்சி, குனியமுத்தூர் பகுதிக்கும் விரிவு படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** உண்டு.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் உண்டு என்று தெரிவித்தார்கள். மேற்படி திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்? எப்பொழுது அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா:** சீஃப் எஞ்சினியர்களுடைய ப்ராஜக்ட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு பேசி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு இப்பொழுது தொடர்பு கொள்ளப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## திருப்பூர் கூட்டுறவு பால் விநியோகச் சங்கம்

***62 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு, வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்கக் கடன் கொடுப்பதில் விதி முறைகள் உண்டா?

(இ) ஆம் எனில், விதி முறைகள் யாவை?

(உ) இந்த விதி முறைகளை மீறி சிலருக்குக் கடன் கொடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) திருப்பூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது, சங்கத்தின் 38-ஏ, 38-பி துணை விதிகளின்படி முறைப்படுத்தப்படுகிறது.

(உ) இல்லை.

**திரு. சு. துரைசாமி:** கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட சில்லிங் ப்ளான்ட் மூலமாக எவ்வளவு லிட்டர் பால் பதனப்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது மூலக் கேள்வியோடு சம்பந்தப்பட்ட கேள்வியல்ல.

[1968 பிப்ரவரி 17

*63 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்திற்கு மேய்ச்சல் காடுகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எந்த இடங்களில், எவ்வளவு ஏக்கர் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) Yes.

(b) The right to cut and remove the grass from the Kolukkattai grass plots extending over 102 acres at Chennimalai and Voipadi Plots of Bhavani Range, Coimbatore District has been leased out to Tirupur Co-operative Milk Supply Society for a period of three years.

**திரு. சு. துரைசாமி:** கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்களுக்கு மேய்ச்சல் காடுகள் ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தைப் பாழ்படுத்தக்கூடிய முறையில் கூட்டுறவுச் சங்கம் நடந்து கொண்டு இருந்தால் நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இனிமேலாவது அப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க முடியும் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** என்ன மாதிரியான தவறு செய்தது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், தவறு நேர்ந்திருக்குமானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறாது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே திருப்பூர் பால் விநியோக சொசைடிக்கு சென்னிமலைப் பகுதியிலே நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது வன இலாகாக்குச் சொந்தமானது என்று சொல்கிறார்கள். அது என்னுடைய தொகுதி அந்த நிலங்களைக் கூட்டுறவு பால் விநியோக சங்கம்தான் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அது அனுபவிக்காமல் கூட்டுறவுச் சங்கத்திற்கு வேண்டிய ஒரு பெரிய பிரமுகருக்குக் கொடுத்து வருகிறது என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்தருக்கிறதா, அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட புகார்கள் இப்பொழுதுதான் முதன்முதலாக அரசாங்கத்திற்கு வருகின்றன. அவை உண்மையா என்பதைப்பற்றி தொடர்ந்து பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். எஸ். மணி:** தலைவரவர்களே, மேய்ச்சல் காடுகளுக்கு என்று நிலங்களை வாங்கி கொண்டு இன்றையதினம் விவசாயம் செய்து கொண்டு சிலர் பலன் பெறுகிறார்கள் என்ற தகவல்கள் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(விடை இல்லை)



1968 பிப்ரவரி 17]

**திரு. சி. கோவிந்தராசன்:** இந்தப் பால் சொசைட்டியிலே எப்படிப்பட்ட ஊழல்கள் இருக்கின்றன என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். எப்படிப்பட்ட ஊழல்கள் என்று சொல்லும்பொழுது பணத்தைக் கையாடுகிறார்கள், அதுமட்டுமல்ல, மற்றொருவர் பெயரில் பொய்க் கையெழுத்திட்டுப் பணத்தை வாங்குகிறார்கள் என்ற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்து போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்பொழுது பால் கோவாப்ரேடிவ் சொசைட்டிகளின் ரிஜிஸ்திரார் விசாரணைக்குரிய தஸ்தாவேஜுகளைக் கொடுக்க மறுக்கிறார், ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அம்மாதிரி ஒழுங்கீனங்கள் கையாடல்கள் ஏற்பட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் அரசாங்கம் எந்த எந்த காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதற்குரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். அவர்களே கவனத்திற்குக் கொண்டு வந்த நிகழ்ச்சியின் மீது அரசாங்கம் எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. சு. துரைசாமி:** கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்களுக்குக் காடுகளைக் குத்தகைக்கு எடுப்பதன் நோக்கம் அது மட்டுமல்ல. கிடைக்கக்கூடிய தீவனங்களைக் கால்நடைகளுக்கு ஏராளமான முறையில் கொடுத்து அதிகமாகப் பால் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது நோக்கமாக இருக்க வேண்டும். முன்பு அமைச்சராக இருந்த ஒருவருடைய உறவினர் என்ற காரணத்திற்காகக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எடுக்கப்பட்ட நிலத்தை தனிப்பட்ட அந்த அமைச்சரின் உறவினர் ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் மீது இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஏற்கனவே கூறினேன். அதுபற்றி அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறது.

**திரு. எம். கண்ணப்பன்:** திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு பால் சேமித்து அனுப்பப் படுகிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்குச் சம்பந்தமான துணை வினாவை திரு. பி. வேலுசாமி அவர்கள் கேட்பார்கள்.

[1968 பிப்ரவரி 17

திரு. பி. வேலுசாமி : இந்த திருப்பூர் பால் சொசைடியானது வெகு காலமாக நடந்து வருகிறது. இதற்கு வருஷா வருஷம் மானியம் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதுவரை மானியத்தைக் கொண்டு வாங்கப்படுகிற கால்நடைகளில் எத்தனை உயிரோடு இருக்கின்றன ? எத்தனை இறந்து விட்டன ?

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூல வினாவை ஒட்டியதாக இல்லை.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (i) பல்லடம் வட்டத்தில் கடன், கிஸ்தி வசூலைத் தள்ளி வைத்தல்

திரு. கே. என். குமாரசாமி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை இச் சபையில் கொண்டுவர முன்னறிவிக்கை கொடுத்திருக்கின்றேன் :

" கடந்த பல மாதங்களாகப் பல்லடம் தாலுகாவில் பருவ மழை தவறிவிட்டதால் பஞ்ச நிலைமையேற்பட்டு கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயம், கால்நடை, நிவனம், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை, இவை எல்லாம் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் விவசாயிகளின் கடன் கிஸ்தி வசூல் செய்வதில் நிர்பந்தப்படுத்துவது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பிரதேசத்தில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து கடன், கிஸ்தி எல்லாம் வசூல் செய்து வருகிறார்கள். அதைக் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்படுகிறார்கள். இதை யெல்லாம் வசூலிக்காமல் வருகின்ற வருஷம் வரை தள்ளிப் போடுவது நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல்லடம் தாலுகாவில் பருவ மழை தவறியதோடு கூட, வழக்கமாகவே செழிப்பான கோவை மாவட்டத்தில் மிகத் துயரமான நிலைமைக்கு ஆளாகிறவர்கள் பல்லடம் தாலுகா மக்கள் செழுமையான காலத்தில் கூட அங்கு சிரமங்கள் அதிகம். கனம் உறுப்பினர் அவர்கள் இது பற்றிய தம்முடைய கருத்தை கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதத்தின் போதும், ஒரு மாத காலம் நடைபெற இருக்கிற பட்ஜட் கூட்டத்தின் போதும் தெளிவாக எடுத்துக் கூறலாம். அங்குள்ள நிலைமைகளை, சிரமங்களைப் பற்றிக் கண்டிப்பாக எடுத்துச் சொல்ல எல்லா விதமான உரிமையும் உண்டு. அரசாங்கமும், பல்லடம் மாவட்டம் மட்டுமல்லாமல் சிரமங்கள் இருக்கின்ற பகுதிகளுக் கெல்லாம் அந்தச் சிரமங்களைப் போக்கும்



1968 பிப்ரவரி 17 [திரு. கே. மதியழகன்]

வகையில் அதற்கான காரியங்களைச் செய்ய என்றைக்கும் தயாராக இருக்கிறது. ஆனால் இது ஒத்தி வைப்புத் தீர்மானங்களின் விதி முறைகளுக்கு உட்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தின் மீது பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை.

### (ii) திண்டுக்கல் மாணவர்கள் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம்

* திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. சி. சுப்பிரமண்யம் அவர்கள் மாணவர்கள் பற்றிச் சொன்ன தவறான கருத்துக்களுக்குத் தங்களது அதிருப்தியை அமைதியாகத் தெரிவித்துக் கொண்ட திண்டுக்கல் நகர் மாணவர்கள் மீது 10-2-1968-ம் தேதி போலீசாரால் தடியடிப் பிரயோகம் நடந்துள்ள தால் இப் பகுதி மாணவர்கள் மத்தியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதுபற்றி விவாதிக்க இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோருகிறேன்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படித் தமிழக அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டது என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : திண்டுக்கல் விஷயமாக ஏற்கனவே நான் ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி இங்கே கேட்க முடியாது.

திரு. என். வரதராஜன் : பொதுவாக, சாதாரணமாகத் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காக சுமார் 50 மாணவர்கள் காலை எட்டு மணிக்குத் திண்டுக்கல் நகரத்தில் திரண்டு வந்திருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பற்றிச் சொன்ன சில தவறான கருத்துக்களுக்காகத் தங்களுடைய அதிருப்தியைக் காட்ட வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். அவர்களை நிர்ப்பந்தமாக வெளியேற்ற வேண்டுமென்று சுப்பிரமணியம் கட்சியைச் சேர்ந்தவர்கள் முயற்சித்ததன் காரணமாக போலீசார் தலையிட்டு தடியடிப் பிரயோகம் நடந்தது. அதன் காரணமாக அந்த ஐம்பது மாணவர்கள் திரும்பிச் சென்று கல்லூரி மாணவர்கள், உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் என்று ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திரட்டிக் கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் காரணமாக மீண்டும் தடியடி ஏற்பட்டு 14 வயதுக்குட்பட்ட 50 மாணவர்கள்

காயமடைந்தார்கள். ஆனால் அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் செய்தார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. The Hon. Speaker has asked the Member to say how the subject comes under the day to day administration or under the purview of the rules.

MR. SPEAKER : I have asked him to say how it does not come under the ordinary administration of the law.

THIRU K. VINAYAKAM : He is going into the merits of the subject and giving details. Let him explain why the subject does not come under the ordinary administration of the law.

**திரு. என். வரதராஜன் :** நான் அதைத்தான் சொல்ல வருகிறேன். அன்று 50 மாணவர்கள் தாக்கப்பட்டுக் காயமடைந்திருக்கிறார்கள். திண்டுக்கல் நகரம் அமைதியற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இதைச் செய்தார்கள் என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறுவது தவறு. அன்று மாணவர்கள்தான் திரண்டு வந்தார்கள். நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு, ஆட்சேபத்தைத் தெரிவிப்பதற்கு இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு என்று கூறினார். திரு. சுப்பிரமணியம் அவர்கள் தவறான ஒரு கருத்தைக் கூறியதன் காரணமாக அதற்கு ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் வகையில் கூடிய மாணவர்கள் மீது தடியடிப் பிர்யோகம் நடைபெற்றிருக்கிறது. இத்தகைய நிலைகள் தமிழகத்தில் பரவும் படியான சூழ்நிலை இருப்பதால் இதைப் பற்றிச் சட்ட மன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த ஒற்றிவைப்புப் பிரேரணையில் திண்டுக்கல் காங்கிரஸ் மாநாட்டின்போது மாணவர்கள் தாக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாநாட்டின்போது மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பற்றிச் சொன்ன ஒரு கருத்தின் அடிப்படையில் மாணவர்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்காகக் கறுப்புக்கொடி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துகிற நோத்தில் அங்கு ஏற்பட்ட மோதலின் விளைவாக போலிசார் தலையிட நேர்ந்தது. அந்த மோதலைத் தவிர்க்க போலீசார் தலையிட்டபோது மாணவர்களைக் குறிப்பிட்டுத் தாக்கவேண்டுமென்று தாக்கவில்லை. போலீசார் மோதலைத் தவிர்ப்பதற்காகத் தலையிடுகின்ற நேரத்தில் மாணவர்கள் சிலரும் தாக்கப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கலாம். மாணவர்கள் தாக்கப்படுவதையோ, மாணவர்கள் மட்டுமல்லாமல் மற்ற யாருமே தாக்கப்படுவதையோ, வரவேற்பது என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை அல்ல, இந்த அரசின் விருப்பமல்ல.



எந்த ஒரு காரியமும் அமைதியான முறையில் நடைபெற வேண்டும். எந்தக் கிளர்ச்சியானாலும் அதில் வன்முறைகள் நுழைந்து விடக் கூடாது. வன்முறைகள் நுழையும் என்று தெரியுமானால் கிளர்ச்சிகள் நடத்துபவர்கள்கூட அதிலிருந்து ஒதுங்குவது நல்லது என்றளவில் இந்த அமைச்சரவையும், இந்த அமைச்சரவையின் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான அறிஞர் அண்ணா அவர்கள் பல நேரங்களில் எடுத்துக் கூறி வந்திருக்கிறார்கள். திண்டுக்கல்லில் நடைபெற்ற சம்பவத்திற்குப் பிறகு, இதுபோன்று நாட்டில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்குப் பிறகு மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பார்த்து, தான் கூறிய வார்த்தை தவறு எனப்படுமானால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள். அந்த வார்த்தைகளை திரும்பப் பெறுகிறேன் என்று அவர்கள் கூறியதை மாணவர்களும் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டு இப்போது ஒரு அமைதியான சூழ்நிலை நாட்டில் உருவாகியிருக்கிறது. ஆகவே, இந்த அமைதியான சூழ்நிலையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் சொல்லிவிட்ட காரணத்தினால் இதை வற்புறுத்த மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போலீஸ் தடியடிப் பிரயோகம் . . .

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன கேட்கிறீர்கள் ?

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** சென்ற வருட ஆரம்பத்தில் வேட்டைக்காரன்புதூரில் ஒரு கவுண்டரைப் பற்றி, சரித்திரம் காணாத அளவில் போலீசார் செய்த அக்கிரமங்களைப்பற்றி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதுபற்றி வாயைத் திறக்கக் கூட அனுமதிக்கவில்லை. இப்போது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இன்னும் பேசிக் கொண்டு போனால் தவறாக முடியும் என்பதற்காக நிறுத்துகிறேன். நீங்கள் பேசி முடிக்க வேண்டுமென்றால் முடியுங்கள். நீங்கள் பேச விரும்புகிறீர்களா ? நான் பலமுறை சொல்லியாகிவிட்டது. 68-வது விதிக்கு முரணான ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் என் அறையிலேயே தள்ளப்படும். 68-வது விதிக்கு உட்பட்ட தீர்மானங்கள் மட்டும்தான் இந்தப் பேரவைக்கு வரும். அப்படி வந்த பிறகு அது 50-வது விதிக்குள் வருகிறது என்பதைச் சொல்ல வாய்ப்புக் கொடுக்கப்படும். இவ் விதிகள் எல்லோருக்கும் பொருந்தும். உங்களுக்கு மட்டும் ஏதோ சொன்னதாகச் சொல்லத் துணிய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பேரவைத் தலைவர்] [1968 பிப்ரவரி 17

திரு. என். வரதராஜன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள காரியத்தை விவாதிப்ப தற்காக பேரவையைத் தள்ளி வைக்கத் தேவையில்லை. போலீஸ் தடியடிகளுக்காக பேரவையை ஒத்தி வைக்கக் கூடாது என்பது பற்றி, பேரவைத் தலைவர்களின் ஐந்தாறு தீர்ப்புகளை ஏற்கனவே கூறியிருக்கிறேன். இதற்காக ஒத்திவைப்புத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திண்டுக்கல் சம்பவத்தைப் பற்றி நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையை இரண்டு மூன்று நாட் களுக்கு முன் கொடுத்திருக்கிறேன் என்ற ஞாபகம் இருக்கிறது. அது என்னவாயிற்று என்று அறியலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த முறை கடைசியாகத் தெரிவிக்கிறேன். ஏதாவது ஒரு நோட்டீஸ், முன்னறிவிக்கை, ஒரு தீர்மானம், ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம், அல்லது ஒரு அவை யுரிமைக் கேள்வி இவற்றை அலுவலகத்தில் கொடுத்துவிட்டு, அது என்னவாயிற்று என்று இங்கே—பேரவையில் கேட்கக் கூடாது என்று விதி தெளிவாக இருக்கிறது. கேட்க வேண்டிய இடம் என் அறை. என் அறையில் கேட்க வேண்டும்.

## ( iii) திரு. சேத் கோவிந்ததாஸ் தமிழக அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று பேசியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொடுத்துள்ள இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களில் ' தமிழக அரசு ' என்பது மட்டும் 68-வது விதிக்கு உட்பட்டிருப்பதால் இங்கு அதைப் பற்றிக் குறிப்பிடலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசர அவசிய விஷயத்தைப்பற்றி விவாதிக்க அனுமதி கோரி அறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

" இன்றுள்ள தமிழக அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று சேத் கோவிந்ததாஸ் பேசியதன் காரணமாகத் தமிழ் நாட்டில் ஏற் பட்டுள்ள கொதிப்பைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்கக் கோருகிறேன்."

நாம் மொழி சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யுள்ளோம். மொழி அடிப்படையில் மாணவர்கள் மத்தியில் எவ் வளவு பெரியதொரு அதிருப்தி ஏற்பட்டு அந்த அடிப்படையில் எவ்வளவு பெரிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது என்பதை மட்டுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 50 உள்விதி 10-ன்படி தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக அது இருத்தல் வேண்டும். யாரோ கவிழ்க்க வேண்டுமென்று பேசியது, தமிழக அரசின் பொறுப்பில் அடங்கியுள்ள காரியமா என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 17]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நம் மாநிலத்தைப் பொறுத் தவரை எந்த மொழி இருக்க வேண்டும், எந்த மொழியில் நம் காரியங்கள் அமல் படுத்தப்பட வேண்டும் என்பது இந்த சர்க்கார் முடிவு செய்ய வேண்டிய ஒரு பிரச்சினை. அந்த அடிப்படையில் நாம் முடிவு செய்திருக்கிறோம். இது சட்டவிரோதமானது என்ற அடிப்படையில், இந்திதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டு மென்ற அடிப்படையில், அரசியல் சட்டத்தில் இந்திதான் ஆட்சி மொழி என்றிருக்கக்கூடிய நேரத்தில் இப்படி நிறைவேற்றியுள்ள தீர்மானம் சட்ட விரோதமானது. ஆகவே, இந்தச் சர்க்கார் டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டும், கவிழ்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 14 தேசிய மொழிகள் என்று கூறிவிட்டு அந்த 14 தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்க முடியாத அளவிற்கு இந்த இருபது வருட காலமாக நீடிக்கப்பட்டு வந்திருப்பதே ஒரு சட்டவிரோதமான போக்கு என்பதை நாம் அதிலிருந்து பார்க்க முடிகிறது. ஏற்கனவே இந்தி தான் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் நிறைவேற்றி இருந்தாலும் காலஞ்சென்ற பிரதம அமைச்சர் மதிப்பிற்குரிய நேருஜி அவர்கள் கூட அதைத் தள்ளிப் போட வேண்டும், இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் இது இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களும் சட்டவிரோதமாக நடந்து கொண்டார்கள் என்பதுதான் பொருளா ? நாம் நிறைவேற்றியிருக்கும் தீர்மானம், நம் உரிமைப் பிரச்சினை, நம் மக்களின் பிரச்சினை என்பது மட்டுமல்லாமல் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதைத்தான் இதிலிருந்து பார்க்க முடிகிறது. ஆகவே, இந்தச் சர்க்காரை மொழியைக் காட்டி, மொழி சம்பந்த மாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைக் காட்டி இந்த அரசை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென்கிற அளவிற்கு ஏதோ பேசிவிட்டார் கள் என்று நாம் விடக் கூடாது. இப்படி ஒரு உறுப்பினர் டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று பேசியிருப்பதும், அதேநேரத்தில் இன் னொரு உறுப்பினர் ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய சர்க்கார் பலம் வாய்ந்த ஒரு ரிசர்வ் படையை வைக்க வேண்டுமென்று பேசி யிருப்பதும், இவைகளையெல்லாம் பார்க்கும்போது . . . .

* THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. When the Hon. Speaker gives one ruling, it is the duty of every hon. Member to obey it. Rules are very clear. The Hon. Speaker has requested the hon. Member to explain how it falls within the purview of the Madras Government. But my hon. Friend is deviating, expatiating, going out of the way and explaining every-thing. That means that before the Hon. Speaker disallows the adjournment motion, the purpose for which he has brought forward the motion has been completely served. Are we to just tolerate this kind of position and that too under your chairmanship? You are supposed to be the Speaker of this House and you are the topmost custodian of the rights and privileges of the Members and should this happen under your nose? That is my fear.

MR. SPEAKER : The point of order raised by the hon. Member, Thiru Vinayakam, is upheld and it is correct. The Hon. Member, Thiru Kothandaraman, has stated enough to explain how it is within the responsibility of this Government.

தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமா இது, என்பதுபற்றி அரசினரின் கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பாராளுமன்றத்தில் சேத் கோவிந்த தாஸ் அவர்கள் தமிழக அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று கூறியிருப்பது தமிழ்நாட்டு மக்களைக் கொதிப்படையச் செய்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கொதிப்படையச் செய்

முற்பகல் 10-30 திருப்பது உண்மையாக இருக்கலாம். கொதிப்பு ஊட்டக்கூடிய வார்த்தைகளைச் சொல்வதையே சிலபேர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பண்புப்படி, "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்னும் பண்பாட்டின் அடிப்படையிலே தமிழ்நாட்டு மக்கள் அமைந்திருக்கிறார்கள். அந்தவகையில் சிறுசிறு தவறுகள் இருந்தாலும், இன்னல்கள் இருந்தாலும் அவைகளையெல்லாம் நாம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒரு நல்ல பண்பாட்டினை வளர்க்க வேண்டும் என்ற அளவிலும் அதே நோக்கில் இந்திய ஒருமைப்பாட்டைத் தூய்மையான நோக்கத்தோடு உருவாக்க வேண்டும் என்ற அளவிலும் இன்றைய தமிழக அரசை ஆதரித்து நிற்கும் மக்களும், ஏன், எதிர்க் கட்சிகள் பலவற்றை ஆதரித்து நிற்கும் மக்களும் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்திமொழி ஆதிக்கத்திலே இந்திய ஒருமைப்பாடு குலைந்து விடக்கூடும் என்ற ஒரு காரணத்தால் இந்திமொழி ஆதிக்கத்தைத் தமிழகம் வரவேற்காமல் இன்றைய தினம் தமிழகச் சட்டமன்றத்திலே மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இதை வைத்து சேத் கோவிந்ததாஸ் அவர்கள் கடுமையான சொற்களை வாரி வீசியிருக்கிறார்கள் என்றாலும் தமிழக மக்களுடைய கொதிப்பை அவர் பலமுறை உணர்ந்திருக்கிறார் என்றாலும் மேலும் மேலும் புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதைப் போல கடுமையான சொற்களை வாரி வீசியிருக்கிறார் என்றாலும் இது தமிழக அரசினுடைய பொறுப்பிலே வராது என்ற காரணத்தால் இந்த ஒத்தி வைப்புத் தேவையில்லை என்ற கருத்தைத் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள காரியம், நடத்து விதி 50 உட்பிரிவு 10-க்கு, அதாவது தமிழக அரசின் பொறுப்புக்குள் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக இருத்தல் வேண்டும் என்ற இந்த விதிக்குப் புறம்பாக இருக்கிற காரணத்தால் இதற்காக இப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று முடிவு கூறுகிறேன்.





## 3. 1967-68-ம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது பொதுவிவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, முதல் துணை நிதி நிலை அறிக்கையின் மீது பொதுவிவாதம் இரண்டு மணி நேரம். 12-30 மணியளவில் இவ் விவாதம் முடிவுறும். திரு. இராமச் சந்திரன் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

***திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, 1967-68-ம் ஆண்டிற்ககான முதல் துணை மதிப்பீடுகளை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1967-68-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை இந்த மாமன்றம் தமிழக அரசுக்கு அளித்த பிறகு முதன்முதலாக துணை மதிப்பீடுகள் பேரறிஞர் அண்ணா அவர்கள் மூலம் இந்த மன்றத்திற்குத் தரப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் தமிழக அரசு மிகவும் முன்யோசனையுடன் நல்லமுறையிலே செலவினங்களைச் செய்து வந்திருக்கிறது என்பது இந்தத் துணை மதிப்பீடுகளைப் பார்க்கிறபொழுது நமக்கு நன்றாகத் தெரிகிறது. வீணாக விரயமாக்குவதற்கோ, அல்லது மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கோ அல்லது பாதைகளுக்குத் தார் போடுவதற்கோ பணத்தைச் செலவழிக்காமல் இந்த நாட்டிலே இருக்கின்ற முக்கியமான உணவுப் பிரச்சனையைச் சமாளிக்க மின்சாரத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதியைவிடக் கூடுதல் நிதி ஒதுக்கல் செய்திருக்கிறார்கள். மேற்கு ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூடக் குறிப்பிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு மின்சாரபம்பு செட்டுகள் 33,000, இந்த ஆண்டு மின்சாரப் பம்பு செட்டுகள் கிட்டத்தட்ட 42,000. இந்த வகையில் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற தமிழக அமைச்சரவை உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக அதிகமான நிதி ஒதுக்கம் செய்து மின்சார வாரியத்தை அந்தப் பணியிலே ஈடுபடுத்த ஆதரவு தந்திருக்கிறது. அந்த வகையில் 3 கோடியே 66 லட்சம் ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்தது பாராட்டத் தக்கது, வரவேற்கத் தக்கது.

அடுத்தபடியாக, நம்முடைய சர்க்காரிலே பணியாற்றும் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியை இந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கின்ற ஈட்டுப்படிக்கும், மாநில சர்க்கார் கொடுக்கின்ற ஈட்டுப்படிக்கும் இருக்கின்ற அந்த வித்தியாசத்தை, வேறுபாட்டைப் போக்க அறிஞர் அண்ணா அவர்கள் வருகின்ற வரவு-செலவுத் திட்டத்தில் 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்ய இருக்கிறார்கள்.

அடுத்து, இன்றையதினம் இந்த நாட்டிலேயுள்ள மக்களை விலைவாசி உயர்வு கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே ஏழை நடுத்தர மக்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு வசதி செய்வதற்காக, அவர்களுடைய அத்தியாவசிய உணவுப் பண்டங்களை அவர்களுக்கு அளிப்பதற்காக நம்முடைய சர்க்கார் படியரிசித்

திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, வளர்ச்சித் திட்டங்களுக்கு முதலீடு அதிகமாக அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினாலே வளர்ந்த உணவுப் பெருக்கத்தை வாங்குகின்ற வகையிலும், கொள்முதல் செய்கின்ற வகையிலும் நம்முடைய சர்க்காருக்கு இந்த ஆண்டு 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருந்தோம். ஆனால் பல அத்தியாவசிய சர்க்கரை போன்ற பொருள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்ட காரணத்தால் கொள்முதல் செய்வதற்கு 3 கோடி ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கி, மக்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை நல்ல விலையில், தரமான விலையில் அளிப்பதற்குத் தமிழக அரசு சமயமறிந்து எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டத் தக்கது, வரவேற்கத்தக்கது.

இதற்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னார்கள். தமிழக அரசு சென்ற ஆண்டைவிட கொள்முதல் அதிகமாகச் செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1967-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே கொள்முதல் செய்யப்படாமல் 1 லட்சம் டன் குறைவாக விடப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல், தமிழக அரசு எக்கர் ஒன்றுக்குக் கீழே உள்ளவர்களிடம் கொள்முதல் செய்ய வேண்டாமென்று ஒரு முடிவை எடுத்து, அதனால் 20 லட்சம் விவசாயிகள் கொள்முதலுக்கு ஆளாகாமல் இருந்தார்கள். இவைகளெல்லாம் போக கொள்முதல் செய்யப்பட்டதைத்தான் இங்கே தரப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தால் அவர்கள் கூற்றில் உண்மையில்லை என்பதைக் கண்டு கொள்வார்கள். இந்த விலைவாசி பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், விலைவாசி உயர்வுக்கு யார் காரணம்? இந்த மாமன்றம் அதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். விலைவாசி உயர்வு எதனால் ஏற்படுகிறது? விலைவாசியைத் தடுக்க யார் நடவடிக்கை எடுக்க வேண்டும்? விலைவாசி ஏற்றத்திற்கு யார் காரணம் என்பதை இந்த மாமன்றம் மிகத் தெளிவாக மக்களிடையே விளக்கிவிட வேண்டும். நோட்டடிக்கின்ற அதிகாரம் டெல்லி சர்க்காரிடம் இருக்கிறது. மொத்தப் பணத்தின் அளவு உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு ஏற்ப இருக்க வேண்டும். இதுதான் அடிப்படைப் பொருளாதாரம். ஆனால் இந்திய நாட்டில் உற்பத்திப் பொருள் அதிகமாகவில்லை, பண நோட்டுப் பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பொதுவாக விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கிறதைக் கடந்த இருபது ஆண்டுக் காலத்திலே விலைவாசி ஏறியதற்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சி தான். விலைவாசியேற்றத்திற்குக் காரணமாக இருந்த காங்கிரசுக் கட்சியால் தான் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் இந்தக் கஷ்டத்திற்கு ஆளானார்கள். இதற்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சியின் நடைமுறைக் கொள்கைதான். இந்த நாட்டில் மக்கள் தொகை பெருக்கத்தைவிட, ரூபாய் நோட்டுக்களின் பெருக்கம் தான் அதிகம். இந்த ஆண்டே 400 கோடி ரூபாய்க்கு





நோட்டை மேலும் அச்சடித்து விட்டிருக்கிறார்கள். வெறும் காகித நோட்டுக்களின் புழக்கத்தினாலே, காகித நோட்டை அச்சிட்டு வெளியிடுவதனாலே அத்தியாவசியப் பொருள் விலை ஆகாயத்திலே தூக்கி எறியப்பட்டிருக்கிறது. இதற்கு யார் காரணம் என்றால், இந்திய சர்க்காரில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் கட்சிதான் காரணம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் கட்சியாக இருந்தபொழுது விலைவாசி உயர்வுக்காகப் போராடியதே, ஏன் விலைவாசிகளை இப்பொழுது குறைக்கவில்லை என்று அவர்களே கேட்பது வேடிக்கையாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபொழுது காங்கிரஸ் கட்சிதான் மாநிலத்திலும் சரி, மத்தியிலும் சரி ஆளும் கட்சியாக இருந்தது. அவர்கள்தான் விலைவாசியைக் குறைக்க வேண்டிய பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். ஆகவேதான் எதிர்க் கட்சியாக இருந்தபொழுது விலைவாசியைக் குறைப்பதற்கு காங்கிரஸ் ஆட்சி தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகப் போராட்டத்தை நடத்தி சிறை சென்றிருக்கிறோம். விலைவாசி குறைய வேண்டுமானால் மத்திய சர்க்காரிலே, நோட்டு அடிப்பதை, ரூபாய் நோட்டுகளை கத்தை கத்தையாக அடிப்பதைத் தடுக்க வேண்டும். அவர்கள் ஆட்சிகாலத்திலே ரூபாய் நோட்டுகள் அதிகமாக அச்சடித்து விடுவது மட்டுமல்லாமல் தனியார் துறையிலும் வேறு அச்சடித்து கள்ள ரூபாய் வெளியாகின்றது. அவற்றைச் சரிவர தடுத்து நிறுத்த முடிந்ததா? அதுவும் இல்லை. இப்படியெல்லாம் ரூபாய் நோட்டுகளை அச்சடித்துவிட்டு, புழக்கப்படுத்திவிட்டு அவர்கள் இன்றையத் தினம் விலைவாசி ஏறிவிட்டதே என்கிறார்கள்.

(திரு. ஆர். பொன்னப்ப நாடார் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுகிற உறுப்பினர் உட்கார்ந்தால் நீங்கள் கேட்க முடியும் உட்காரவில்லையென்றால் நீங்கள் கேட்க முடியாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கள்ள நோட்டு அடித்ததன் காரணமாகப் பண வீக்கம் இருப்பதாகக் கூறினார்கள். அதைப் பற்றி ஏதாவது தகவல் அவர்களுடைய கையிலே இருந்தால் அருள் கூர்ந்து சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ அதைக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அது இருந்தது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அது இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஒரு புறம், விலைவாசி ஏறிவிட்டது என்று மறு புறம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விலைவாசி . . .

**திரு. என். துரைபாண்டியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்,

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : திரு. துரைபாண்டியன் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பியுள்ளார்கள்.

*திரு. என். துரைபாண்டியன்* : தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் இருந்தது கள்ள நோட்டு என்று சொன்னார்கள். அப்படித் தெரிந்திருந்தால் அதையும் சொல்லியிருக்கலாம். இப்பொழுது பத்திரிகையிலே வருகிறதே அந்த மாதிரியா? அல்லது திட்டவட்டமாகத் தெரிந்திருந்தால் அதையும் கொடுக்கலாம் அல்லவா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி* : அவர்களுடைய ஆட்சிக் காலம் என்று சொன்னது அவர்களைக் குறை கூற அல்ல. ஒரு காலக் கட்டத்தைக் குறிப்பிடத்தான் சொன்னார்கள்.

*திரு. எஸ். இராமச்சந்திரன்* : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய விலைவாசிக் கொள்கையை அவர்கள் திட்டவட்டமாக அறிவித்து விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற விலைவாசி அதிகமா ? இப்பொழுது இருக்கிற விலைவாசி நியாயமானதா ? இப்பொழுது இருக்கிற விலைவாசி குறைவா ? இப்பொழுது இருக்கிற விலைவாசி அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் கருதுவார்களானால் மேற்கொண்டு மத்திய சர்க்கார் ரூபாய் நோட்டுக்களை அச்சடிப்பதற்குத் தடைச் செய்வதற்கு அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பார்களா? வெல்லம் விலை ஏறி விட்டது, மிளகாய் விலை ஏறி விட்டது என்றெல்லாம் பட்டியல் போடுகிறார்கள். அப்படியானால் இப்பொழுதுள்ள விலைவாசி அதிகம் என்று கருதுகிறார்களா ? ஆனால் அதே சமயத்தில் நெல்லுக்குக் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் அப்படியானால் மேலும் விலை வாசிகள் ஏறாதா? ஏழை மக்கள், நடுத்தர மக்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியினுடைய பண வீக்கக் கொள்கையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் போக வேண்டுமானால் இந்த நெருக்கடி நிலைமைகளிலேயிருந்து ஏழை மக்கள் விடுதலை பெற வேண்டுமானால் இந்திய அரசு நோட்டு அடிப்பதற்கு உள்ள அந்த உரிமையை மாநிலங்களுக்குத் தர வேண்டும். இல்லையானால் மாநிலங்களைக் கலந்து ஆலோசித்த பிறகுதான் அவர்கள் நோட்டு அடிக்கின்ற முயற்சியை மேற் கொள்ள வேண்டும். விலைவாசியை அங்கே இருக்கிற சர்க்கார் ஏற விட்டுவிட்டது. இதனால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு மட்டும் மாநில சர்க்காரைப் பொறுப்புக் காட்டுவது எந்த விதத்திலே நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். எதிர்க் கட்சியிலே இருக்கிற அங்கத்தினர்கள் விலைவாசி ஏறிவிட்டது என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியிலே தான் விலைவாசிகள் ஏறியதே தவிர, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விலைவாசிப் பிரச்சனை வரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதாரத்திலே சொல்லுவார்கள் MV=PT. M என்பது பணம் P என்பது



விலைவாசி, எந்த அளவிற்குப் பணம் அச்சடிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு உற்பத்தி பெருகவில்லையானால் விலைவாசிகள் கூடிக் கொண்டே போகும். ஆகவே பணத்தை அச்சடிக்கின்ற அதிகாரத்தை மாநில அரசாங்கங்களுக்கு நீங்கள் விட்டு விடுங்கள், வெறும் ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதைக் கட்டுப் படுத்தி, உற்பத்தியைப் பெருக்கி விலைவாசியைக் குறைத்துக் காட்டுகிறோமா இல்லையா என்பதைப் பாருங்கள் ?

அது மட்டுமல்ல, இன்றைய தினம் நம்முடைய ஆட்சி மிக நல்ல முறையிலே இயங்கி வருவதாலும் அரசியல் நெருக்கடியை உருவாக்க முடியாத அளவுக்கு முன்னேற்றக் கழக அரசு நல்ல பலம் வாய்ந்திருக்கிற காரணத்தாலும் மத்திய சர்க்கார் முரட்டுப் பொருளாதார நெருக்கடியை உருவாக்கியாவது தமிழ்நாட்டிலே விலையேற்றத்தை உருவாக்கியாவது இங்கே ஒரு நெருக்கடியை உருவாக்க வேண்டுமென்ற நிலைமை உருவாகி இருக்கிறது.

எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் எந்த வளர்ச்சித் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் எந்த வாழ்க்கைத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் மத்திய சர்க்காரிடம் கையேந்தி நிற்க வேண்டிய நிலைமை தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகையினாலேதான் தமிழக அரசு தன்னுடைய நிதி நிலைமைகளை நிதி நெருக்கடிகளை சமாளித்துக் கொள்ள தமிழ் நாட்டிலே நாம் உடனடியாக ஏதாவது ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே தமிழ்நாட்டு சர்க்காரே பாங்குத் தொழிலைப் பண்ணலாம். இந்த மாநிலம் முழுவதும் இருக்கிற நம் நாட்டு மக்கள் அவர்களிடத்திலே இருக்கிற பணத்தை தமிழ்நாட்டு சர்க்காருக்குக் கொடுத்து உதவுகின்ற வகையிலே அது பயன்படும். இன்றையதினம் இந்த நாட்டிலே இருக்கிற பாங்குகள் கூட மத்திய சர்க்காரின் கையிலே இருக்கின்றன. நம்முடைய மக்களின் பணம் மத்திய சர்க்காரின் பாங்குகளிலே போடப்படுகின்றன. அவைகளிலே வருகின்ற அந்த பாங்க் ஃபெசலிட்டீஸ், அதாவது பாங்கு வசதிகள் மத்திய சர்க்காரால் பயன்படுத்தப்படுகின்றன. நிதி நெருக்கடியிலிருந்து தமிழகத்தை விடுவிக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி நாம் இந்த பாங்குகளை பல்வேறு இடங்களிலே ஆரம்பிக்கலாம். அதற்கு இடம் உண்டு. காங்கிரசார் கண்டுபிடித்த கடன் எழுப்புகின்ற முறையை மேற் கொள்ளுவதைவிட இது சிறந்தது. இன்றைய தினம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள், பலாத்காரத்திலே ஈடுபடுகிறார்கள் என்று. சட்டச் சலுகைகளைக் காட்டிக் கடனைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்ற நிலைமைகள் எல்லாம் இருந்து கொண்டு வருகின்றன. இந்த நிலைமைகள் எல்லாம் நீக்கப் படுவதற்கு, பண வசதியைப் பெருக்குவதற்குப் பொருளாதாரத் துறையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்துவதற்கு

[திரு. எஸ். ராமச்சந்திரன்] [1968 பிப்ரவரி 17

தமிழக அரசு தனக்குச் சொந்தமான பாங்குகளை இந் நாடு முழுவதும் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைய நிலைமையில் நான் இன்னென்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இப்பொழுது இருக்கிற குழப்பங்களுக் கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் காரணம் என்று சொல்லி வருகிறார்கள். உண்மையான காரணத்தை உணர்ந்து கொள்ள இன்னும் மறுக்கிறார்கள். மாணவர்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற குழப்பம் இந்த மாநிலத்திலே மட்டும் அல்ல ; ஆந்திராவிலே குழப்பங்கள் ; மைசூரிலே குழப்பங்கள். இன்னும் நம்முடைய நாட்டிலே காங்கிரஸ் கட்சியைப் பார்க்கின்றபொழுது மாணவர்கள் கொதிப் படைகிறார்கள். இது ஏதோ சட்டம், ஒழுங்கு பிரச்சினை என்று நாம் கருதவில்லை. இதில் அடிப்படை பிரச்சினைகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். தமிழகத்திலே இருக்கிற மாணவர்கள் வருங்காலத் திராவிடர் சமுதாயம் காங்கிரஸ் கட்சியினுடைய மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சி கொண்டிருக்கிற இந்தித் திணிப்புக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை; இன்று மாணவர்களிடத்திலே இருக்கின்ற ஆத்திரம் எல்லாம் இந்தி ஒழிந்து விட்டது, இன்னும் காங்கிரஸ் இருக்கிறதே என்பதுதான். இந்தி ஒழிந்தாலும் காங்கிரஸ் ஒழியவில்லையே என்பதுதான் அவர்களிடத்திலே இருக்கிற குறையே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையினாலே தான் எனது அருமை காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து இனியும் காங்கிரஸை வைத்திருக்காதீர்கள். காங்கிரஸ் கட்சி இனி எந்த வகையிலும் தென் மாநிலங்களுக்குப் பயன்படப் போவதில்லை. காங்கிரசைக் கலைத்தால்தான் நாட்டிற்கு நன்மை ஏற்படும். வருங்கால இளைஞர் சமுதாயம் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தி விட்டது. அவர்கள் தங்களுடைய மொழியை உயிருக்கும் மேலாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுதே மகாத்மா காந்தி அவர்கள் காங்கிரசைக் கலைத்து விடும்படி கூறினார், கேட்கவில்லை. நான் இப்பொழுது சொல்கிறேன், இதையாவது கேளுங்கள். உடனே காங்கிரசைக் கலைத்து விடுங்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் எனக்குத் தெரிந்து பல நல்ல நண்பர்கள் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறார்கள். அவர்களுடைய திறமை நாட்டுக்குப் பயன்பட வேண்டும் ; அவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்க வேண்டும் ; ஆகையினாலேதான் அந்தக் கட்சியை வைத்துக் கொண்டு அவர்கள் வருங்கால வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயத்தில் இடம் பெறுவதை விட, ஒளி மிகுந்த அத்தியாயத்தில் இடம் பெறுவதற்கு காங்கிரஸ் கட்சியை உடனடியாகக் கலைத்துவிட வேண்டும். தங்களுடைய விலைவாசிக் கொள்கையைக் கண்டித்து விட்டு, பண வீக்கத்தைக் கண்டித்து விட்டு, மொழிக்



1968 பிப்ரவரி 17] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

கொள்கையைக் கண்டித்துவிட்டு, காங்கிரஸ் கட்சியைக் கலைக்க வேண்டுமென்றும் அவர்களுடைய திறமை வேறு முறையில் பயன் படுவதற்கு வழி ஏற்படுமென்றும் அவர்கள் மீது கொண்டிருக்கிற நட்பாலும் நல்ல எண்ணத்தாலும் இதைக் கூற விரும்புகிறேன்.

இந்த நல்ல வரவுசெலவுத் திட்டத்தை இந்த மாமன்றத்திலே தந்து நல்ல முறையிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் இன்னும் ஒன்று அவர்களுக்குச் சொல்வேன். இந்த வரவுசெலவுத் திட்டத்தில் மறுபடியும் விலைவாசி ஏறி விட்டது; கொள்முதல் சரியாக இல்லை என்று சொல்கிறபொழுது தயவு செய்து ஆதாரத்தோடு பேச வேண்டும். ஏனென்றால், ஏழை மக்களுடைய பிரச்சனை, தொழிலாளி மக்களுடைய பிரச்சினை, பாட்டாளி மக்களுடைய பிரச்சினை, விலைவாசி ஏற்றம். விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் இந்திய சர்க்கார். அந்தக் கொடுமையிலிருந்து விடுபடுவதற்குப் பாடுபட இயங்கி வருவது தமிழக சர்க்கார் என்பதை உணர்ந்து அவர்கள் நல்லமுறையிலே இதை ஆதரிக்க வேண்டுமென்று கூறி, இந்த மானிய மதிப்பீடுகளை வரவேற்று ஆதரிக்கிறேன்.

MR. SPEAKER : The Deputy Leader of the Opposition will have ten minutes, and the Leader of the Opposition will have fifteen minutes later on.

* திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் ஆழ்ந்த கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு முற்படுகிறேன்.

முதலில் எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் எங்களுடைய கட்சியைக் கலைத்து விட வேண்டும் என்று காந்திஜி அவர்கள் முன்னால் கூறியுள்ளதாகவும், அதை மேற்கோளாகக் காட்டி, நாங்கள் மாணவர்களுக்கு எதிராக இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்று சுட்டிக் காட்டி, எங்கள் கட்சியையே கலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். முதலில் மாணவர்களுடைய நலனிலே நாட்டம் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிற இந்த அரசு செய்த ஓரிரு காரியங்களைச் சுட்டிக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

குறிப்பாக, மெடிகல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது சம்பந்தமாக, அதற்குப் பிற்பாடு உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஏற்பட்டது பற்றியும், பிறகு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு ஏற்பட்டது பற்றியும் எனது கருத்துக்களைக் கூறுவது எனது கடமை என்றே கருதுகிறேன். அதிக எண் பெற்ற மாணவர்கள் அந்தத் தேர்விலே இடம் பெற முடியவில்லை, மூன்று கமிட்டிகள் பணிபுரிந்தபோதிலும், சரியான முறையில், ஒழுங்கான முறையில், சட்டபூர்வமான முறையில் தேர்வு நிதானிக்கப்படவில்லை என்று கண்டு அவர்கள் உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்து

கொண்டார்கள். அந்த மனுவை எதிர்த்து அரசாங்கத் தரப்பில் அதற்கு வேண்டிய எதிர் விவாதங்களெல்லாம் நடத்தினார்கள். விவாதங்கள் நடத்தியது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. நமது அட்வகேட் ஜெனரல் இருந்தார்கள், கவர்ன்மெண்டு ப்ளீடர்கள் இருந்தார்கள். அவர்களெல்லாம் திறமை மிக்கவர்களாக இருந்த போதிலும், அது போதாது என்று நினைத்து, இன்னொரு பெரிய அட்வகேட்டை அவர்கள் கேஸை வாதாடுவதற்காக அமர்த்திக் கொண்டார்கள். கடைசியாக நடந்த நிகழ்ச்சி என்ன என்பதை நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த நிகழ்ச்சியைப் பொறுத்த வரையிலே அங்கு ஹைகோர்ட்டில் நமது அட்வகேட் ஜெனரல் கவர்ன்மெண்டோடு அடிக்கடி தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளையெல்லாம் மாணவர்கள் மறந்திருக்க முடியாது என்றே கருதுகிறேன். கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட அஃபிடவிட், கவுண்டர் அஃபிடவிட் எல்லாம் எந்த முறையிலே இருந்தன என்பதெல்லாம் இந்து பத்திரிகையிலும், ஏனைய பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தன. அதையெல்லாம் இன்னும் மாணவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். அவர்களுடைய பெட்டிஷன்கள் பேரில் இடங்களெல்லாம் ராஜியாக ஒதுக்கப்படுவதற்கு அட்வகேட் ஜெனரல் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அதற்குத் தனியாக ஒரு அட்வகேட் தேவையா என்பதை இந்த மன்றமே முடிவு செய்ய வேண்டிய ஒரு விஷயமாகும் என்பதை நான் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆயிரக் கணக்கான ரூபாய் அவர்களுக்கு வக்கீல் பீஸாகக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அத்தகைய முறை தேவையா என்பதைப்பற்றி நீங்களே சற்றுச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அட்வகேட் ஜெனரல், கவர்ன்மெண்டு ப்ளீடர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவும், அவர்களுடைய உதவியும் போதா? இம்மாதிரி ராஜி செய்து கொள்வதற்கு அவர்களைச் சமரசப்படுத்துவதற்கு இவர்களுடைய திறமையும், ஆற்றலும் போதாது என்று. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் சார்பாக தனி வழக்கறிஞர் அமர்த்தப்படவில்லை. வழக்கில் அந்தக் கமிட்டியில் பணிபுரிந்தவர்களையும் பார்ட்டியாகச் சேர்த்திருந்தார்கள். அவர்களெல்லாம் சேர்ந்து தங்களுக்கு வாதாட, அரசாங்க வழக்கறிஞரைத் தவிர, தனியாக ஒரு வழக்கறிஞர் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு இந்த அரசாங்கம் அனுமதி கொடுத்து, அவர்கள் சார்பாக அந்த வழக்கறிஞர் ஆஜராகி வாதாடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இதற்காக அரசாங்கம் பணம் செலவழித்ததா அல்லது இந்தக் கமிட்டியினர் பணம் செலவழித்தார்களா என்பதுதான் பிரச்னை.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலில் அரசாங்கத்தின் சார்பாக வாதாடுவதற்கு தனியாக வழக்கறிஞர் நியமிக்கப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது இல்லை என்று சொன்னேன். அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் அவர்கள். ஆகவே, அவர்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால், அதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே, அரசாங்கம்தான் அந்தச் செலவை ஏற்றது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மிக்க மகிழ்ச்சி. இம்மாதிரியாக ஒரு செலவினம் ஏற்படுவதற்கு இந்தத் தேர்வு காரணமாக இருந்ததே என்று மாணவர்கள் வருந்தமாட்டார்களா, பொது மக்கள் அதைப்பற்றி சிந்திக்க மாட்டார்களா என்பதை இந்த மன்றம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கு சென்ற பொழுது மார்க் லிஸ்டு "டெஸ்ட்ராய்" செய்யப்பட்ட பிரச்சனையின் பேரில் சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைமை நீதிமன்றம் மார்க் லிஸ்டைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பதை துணைத் தலைவர் அவர்கள் படித்திருக்க வேண்டும். அவர்கள் சொன்னதெல்லாம் மார்க் லிஸ்டை அழித்தது என்பது ஆச்சரியமாக இருக்கிறது என்பதுதான். அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். மார்க் லிஸ்டை அழிக்க வேண்டும் என்ற அந்த வழக்கம் இந்த அரசாங்கத்தினால் தோற்றுவிக்கப்படவில்லை. காங்கிரஸ் ஆட்சியில்தான் தோற்றிவைக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டது என்பது உண்மையாக இருந்தால் அதைப்பற்றி நாங்கள் எப்பொழுதும் பெருமைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டது என்று முதலில் ஒரு அஃபிடவிட்டில் சொன்னார்கள். அதற்குப் பிற்பாடு பாக்கி இருக்கிறது என்று உயர்நீதி மன்றத்தில் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவர் அவர்கள் விவரங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொன்ன மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. சில மார்க் லிஸ்டுகள் அழிக்கப்படவில்லை என்று பின்னால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டது ஆச்சரியத்திற்குரியது என்று சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு கூறிய பிறகு, அதற்கு என்ன விளக்கம் இந்த அரசாங்கம் கொண்டுவரப் போகிறது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மார்க் லிஸ்டு அழிப்பது என்ற பாரம்பரியம் எங்கள் ஆட்சியில் தோற்றிவைக்கப்படவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதை அழிக்கக் கூடாது என்று தான் வற்புறுத்தினோம். ஆனால், அந்தக் கமிட்டி அங்கத்தினர்கள் 'பாரம்பரியமாக அந்த உரிமை எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது காங்கிரஸ் ஆட்சியினால். நீங்கள் பொறுப்பேற்ற பிறகு அதைப் பறிக்கக் கூடாது' என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று அப்படியே செய்தோம். அடுத்த ஆண்டிலிருந்து எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றி விதிகள் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படியானால் மார்க் லிஸ்டை அழிக்கக் கூடாது என்று அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு திட்டவட்டமாக அறிவித்திருக்கலாமே ? அது அல்லாமல் ஏதோ முன்பு பல ஊழல்கள் நடந்தன என்றெல்லாம் சொல்வது . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னால் சொன்னதை துணைத் தலைவர் அவர்கள் சரியாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மார்க் லிஸ்டை அழிக்கக் கூடாது என்று தான் சொன்னது. ஆனால் அந்தக் கமிட்டி அங்கத்தினர்கள் திருப்பிச் சொன்னார்கள் 'இது எங்களுக்கு தரப்பட்ட உரிமை அல்லவா காங்கிரஸ் ஆட்சியினால்? அதை இந்த ஆட்சி எப்படித் திடீரென்று பறிக்கலாம்' என்று கேட்டார்கள். மீண்டும் பரிசீலனை செய்யலாம் என்று நினைத்து, இந்த ஆண்டு மட்டும் அழிப்பதற்கு உரிமை கொடுக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஜில்லாவாரியாக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது, ஜில்லாவுக்கு கோட்டா என்பது கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதை இந்த அரசாட்சி செய்த தவறாகச் சிலர் குறிப்பிடுகிறார்கள். அது கூட பழைய அரசாங்கம் நடத்தி வந்த காரியம்தான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் அறிந்த மட்டில், சட்ட அமைச்சர் கூறுகிற கூற்று இந்தக் கமிட்டி உறுப்பினர்கள் சொன்னதால்தான் அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்று புலப்படுகிறது என்று கருதுகிறேன். அப்படியானால், திட்டவட்டமாக நீங்கள் எந்த விதமான மார்க் லிஸ்டையும் அழிக்கக் கூடாது என்று ஏன் நீங்கள் உத்தரவு போடக் கூடாது? மேலும், சிறப்பாக நீங்கள் ஆட்சிபுரிகிறீர்கள் என்று சொல்லும் பொழுது, ஏன் நீங்கள் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கக் கூடாது என்று திரும்பவும் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மறுபடியும் பிரச்சனையைக் குழப்புகிறார்கள். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் இருந்த காங்கிரஸ் பாரம்பர்யம் மார்க் லிஸ்டை அழிக்கலாம் என்பதுதான். நாங்கள் ஆட்சிக்கு வந்ததும்





அழிக்கக் கூடாது என்று சொன்னோம். பழைய பாரம்பரியம் இருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதற்கு ஒத்துக் கொண்டோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிற்பாடுதான் இந்தக் கமிட்டியை இந்த அரசாங்கம் நிறுவியது. ஆகவே, வேண்டிய உத்தரவு பிறப்பிப்பதற்கு எந்தவிதமான சட்ட இடர்ப்பாடும் இருக்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்னொரு விஷயம் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். வழக்குகளை வாபஸ் வாங்குவதில் இந்த அரசாங்கம் கையாண்டிருக்கிற ஒரு பிரச்சினையைப்பற்றி அடுத்தபடியாகக் கூற வேண்டும் என்று நான் கருதுகிறேன். தூத்துக்குடி நிகழ்ச்சி சம்பந்தமாகப் போலீசார் வழக்குத் தொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். தொழில் அதிபர்கள் சார்பிலும், அதில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பிலும் அந்த வழக்கை அரசு வாபஸ் பெற்றுக் கொண்டது என்று சட்ட அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னதாக இந்த அவையிலே கூறினார்கள். இந்த வழக்கை வாபஸ் பெறுவதுபற்றி ஜில்லாக் கலெக்டர் அவர்களையும், ஜில்லா போலீஸ் அதிகாரிகளையும் கேட்கப்பட்டதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது. சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்று நாம் கூறிக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரியாக அரசு வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்வதற்குப் பரிபூரண உரிமை இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. இம்மாதிரியான சட்டமன்ற உறுப்பினர் நடந்து கொண்டால், அதற்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். நான் புரிந்து கொண்ட மட்டில், உண்மையில் போலீஸ் இலாக்காவிலிருந்து இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கு பெரிய ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள் என்பதுதான் நிலை. ஆதலால், இம்மாதிரியான வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்வதில் எல்லோருக்கும் சமமான நீதி இருக்க வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர் ஆனாலும் சரி, அல்லது தனியாராக இருந்தாலும் சரி, சட்டத்தின் முன்னாலே எல்லோரும் சமம் என்கிற தத்துவத்தைப் பாவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சட்டம் ஒழுங்கு நாட்டில் நல்ல முறையில் பரிபாலிக்கப்படவில்லை, தவறுகள் இருக்கின்றன, பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. நாம் கூர்ந்து கவனிக்கும்போது, கழிந்த இரண்டு வாரங்களில் நடந்திருக்கும் நிகழ்ச்சிகள் நம்மை அச்சத்தில் கொண்டு வைக்கிறது. நாம் நிம்மதியாக இருக்க முடியவில்லை. மத்தியத் துறை அமைச்சருக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஆளும் கட்சி அமைச்சராக இருந்தாலும் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எல்லோருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு

முற்பகல் 11-00

அளிக்க வேண்டியது சர்க்காரின் கடமை. அராஜகச் செயல்கள் நடக்கும்போது போலீசார்கள் சரிவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி அவர்கள் இப்பொழுது செய்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதனால் அச்சமாகவும் இருக்கிறது. அவர்கள் ஊக்கமற்ற முறையில் செயல்படுகிறார்கள். சமாதானத்திற்கு, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது போலீசாருடைய தலையாய கடமை. அந்த முறையில் சட்ட இலாக்கா அமைச்சர் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மாதிரியான நிலைமைகள் தொடர்ந்து தமிழகத்தில் இருக்குமேயானால், நாம் பெரும் கஷ்டத்திற்கும், இன்னல்களுக்கும் ஆளாகிவிடுவோம். போலீஸ்காரர்கள் நல்ல முறையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பரிபாலிக்கும் வகையில் காரியங்களைக் கையாள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சொத்துக்கள் நாசமாகிவிடுகின்றன. தமிழகத்திலேயே அதிகமாக ரெயில்வே சொத்துக்கள் நாசமாகியிருக்கின்றன. அதைப்பற்றி பத்திரிகைகளிலும், பாராளுமன்றத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்காக வேண்டிய காரியங்களை நம்முடைய சர்க்கார் செய்ய வேண்டும். இம்மாதிரி ரெயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் வன்முறைக்காரர்களை போலீசார் தக்கமுறையில் கையாள அவர்களுக்கு வேண்டிய அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் நடந்த காலத்திலெல்லாம், இன்றைய ஆளும் கட்சி எதிர்த்தரப்பில் இருந்தபோது, எவ்வளவு ஆட்சேபனைகள் கூறினார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டுமென்பது சரியா தவறா என்கிற விவாதத்திற்குப் போகவில்லை. சட்டம், ஒழுங்கு இவற்றைக் காப்பாற்றுவதிலே அரசாங்கம் முனைந்திருக்க வேண்டும் என்பதை மறுமுறையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு தவறிவிட்டது என்று சொல்லுகிறார்கள் என்று காங்கிரஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டினால் மட்டும் போதாது. ஏன், காந்திஜியைக் கொல்லவில்லையா, பிரதமர் மீது கல்லெறிந்து மூக்கில் காயம் ஏற்படவில்லையா என்று சொல்லி சமாதானம் தேடுவது சரியாகாது. தேர்தல் காலத்திலே பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. கொந்தளிப்புகள் இருந்தன. இன்றைக்குத் தேர்தல் முடிந்து, தாங்கள் அரசுப் பொறுப்பை ஏற்று ஒரு வருஷம் ஆகிறது. மக்கள் நியாயமான, அமைதியான ஆட்சியை எதிர்பார்க்கிறார்கள். நல்ல முறையிலே போலீஸ் நிர்வாகத்திலே வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவுப் பங்கீட்டுக்குத்தான் இந்த உபமானியக் கோரிக்கையில் அதிகமான பணத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். கவர்னர் பெருமான் உரையிலேகூட படி அரிசித் திட்டத்தின் காரணமாக



ஐந்து கோடி ரூபாய் செலவாகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதற்கு மத்திய சர்க்கார் உதவி அளிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மத்திய சர்க்காரின் கொள்கையின் காரணமாகத்தான் விலைவாசி ஏறியிருக்கிறது. நோட்டு அடிப்பின் காரணமாகத்தான் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குற்றம் சாட்டுகிறார்கள். இன்றைக்கு இருக்கும் பெடரல் பைனான்ஸிங் அடிப்படையில் நமக்கு என்னென்ன மத்திய வரியிலிருந்து கிடைக்க வேண்டும் என்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் போதாது, அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்பது வேறு. அதற்கு அரசாங்கம் முற்படலாம். ஆனால் எதற்கெடுத்தாலும், மத்திய சர்க்காரையே குறை கூறிக் கொண்டு இருக்க வேண்டும் என்று நினைத்து, நோட்டு அடிக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்குங்கள் என்று சொன்னால், அது சரியாகுமா? நோட்டு அடிப்பதற்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது; இத்தனை தங்கம் ரிசர்வில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது, கவர்ன்மென்ட் செக்யூரிடி இவ்வளவு இருக்க வேண்டும் என்றும் இருக்கிறது. அந்த அடிப்படையில் நோட்டுகள் அடிக்கப்படுகின்றனவேயல்லாது, அதற்கு மேலும் அடிக்கப்படுவதில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** நோட்டு அடிப்பதில் (Inconvertible assets) என்றும், (convertible assets) என்றும் இருக்கிறது. ஆகையினால், 'இன்கன்வர்டிபிள் அஸெட்'கள்தான் பண வீக்கத்திற்குக் காரணம். அதைத் தொடர்ந்து மத்திய சர்க்காரில் நமக்கு இருந்த நம்பிக்கைக்கு விரோதமாகச் செய்து கொண்டு போகிறார்கள். ஆகவேதான் நாமே ஏன் அதைச் செய்யக் கூடாது என்று சொன்னேனே அல்லாது வேறு இல்லை. தங்கத்தை வைத்துக் கொண்டு நோட்டு அடிப்பது என்பது பழைய தத்துவம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்பொழுது இருக்கும் நிலையில் அரசியல் சட்டத்தில் மத்திய சர்க்காருக்கு உரிய விஷயங்கள் எவை, மாநில சர்க்கார்களுக்கு உரிய விஷயங்கள் எவை என்பதெல்லாம் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அரசியல் சட்ட அமைப்பை மாற்றி அமைக்க வேண்டுமா என்பது அரசியல் தலைவர்கள் கூடி முடிவு காணவேண்டிய விஷயம். அந்த விஷயத்தை இங்கே நாம் சர்ச்சைக்குரிய விஷயமாகச் செய்துவிட முடியாது. நோட்டு அடிப்பதனால் விலைவாசி ஏறுகிறது, ஆகவே, மத்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். நாம் பார்க்கும்போது இந்தியா முழுவதிலும் விளைச்சல் அதிகமாகி, தானியங்கள் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது. அது பற்றி பிரசிடெண்டு அவர்களுடைய பேருரையிலும் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். 90 மிலியன் டன் ஃபுட் க்ரெயின்ஸ் கிடைத்திருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலும் 8 லட்சம் சொச்சம் டன்கள் உணவு தானி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1968 பிப்ரவரி 17

யங்கள் கொள்முதல் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் யாரும் ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால் கொள்முதலைப் பொறுத்தவரையில், நியாயமான முறையில் இருக்க வேண்டும். கெடுபிடிகள் இருக்கக் கூடாது. உத்தியோகஸ்தர்கள் தன்னிச்சையாக நடந்து கொண்டு விடக் கூடாது. தரமான அரிசி வினியோகம் செய்யப் படுவதில்லை, என்பதை பகிரங்கமாகச் சொல்லுகிறேன். உளுத்த அரிசியை, க்யூ வரிசையில் ரேஷன் ஷாப்புகளில் நின்று வாங்க வேண்டி இருந்த நிலைமை இன்றைக்கும் மாறவில்லை. எங்கள் பகுதியில் முளைத்த நெல்லை வாங்கி, அரிசி வாங்கிச் சாப்பிட மக்கள் க்யூ வரிசையில் நிற்கிறார்கள். விலைவாசிகள் குறையவில்லை. வாழ்க்கைப் புள்ளி உயர்வை கணக்குப் பார்த்தால் கோயம்புத்தூரிலும், கன்னியாகுமரியிலும் இந்த இரண்டு மாவட்டங்களில்தான் அதிகமாகியிருக்கிறது. வாழ்க்கைப்புள்ளி வேறு எங்கும் அந்த அளவு உயரவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் வருத்தப்படக் கூடாது. இதிலும் மத்திய சர்க்காரைக் குறை சொல்லுகிறேன் என்றும் சொல்லக் கூடாது. சமீபத்திலே நவம்பர்-டிசம்பர் மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் வகைகள் தரக் குறைவாக இருந்தன என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அரசாங்கம் அதை ஒளித்து மறைக்கவில்லை. அக்டோபர் மாதத்திற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தில் பெரும் மழைக்கு மத்தியில் அறுவடை ஆகியிருக்கிறது. அங்கே வழக்கமாக இப்படித்தான் இரண்டு மூன்று மாதங்கள் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அதிலும் மத்திய சர்க்கார் மீது குற்றம் சாட்டவில்லை. விளக்கம் சொல்லுவதற்காகச் சொல்ல வேண்டியிருக்கிறது. குறுவை அறுவடை அக்டோபர் மாதத்தில் நடந்த பிறகு பெரு மழைக்கு நடுவில், லாரி, லாரியாக களத்து மேட்டிலிருந்தே நேராக, உலராத நெல்லை மில்களுக்கும், மற்ற வேறு இடங்களுக்கும் எடுத்துப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இப்படி எடுத்துச் செல்ல முடியாது என்று, மத்திய சர்க்காரிலிருந்து உதவி கேட்டோம். அவர்களும் மனமுவந்து ஒரு கோடி ரூபாய் அளவில் 30 'ட்ரையர்', உலர்த்தும் ஆலைகளை நிர்மாணம் செய்தார்கள். துணைத் தலைவர் கொஞ்சம் கவனிக்க வேண்டும். பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது, அரிசி தரம் கெட்டுப் போனதற்கு மத்திய சர்க்கார் தான் காரணம் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன். இந்த மாதத்தில் பாருங்கள், உங்களுக்கு நல்ல அரிசியாகக் கிடைக்கும். இதை யெல்லாம் சபையில் சொல்ல வேண்டாம் என்றிருந்தேன். ஆனால் விளக்கம் கொடுக்க வேண்டியிருப்பதால் இதை யெல்லாம் சொல்லுகிறேன். அக்டோபர் மாதத்திற்குப் பிறகு பெரும் மழை பெய்தது. அதோடு புயலும் சேர்ந்து கொண்டு அடித்தது. தஞ்சாவூர் நெல் அறுவடை ஆகி, களத்து மேட்டிலிருந்தே பல்வேறு மாவட்டங்களுக்கும், இரண்டு லட்சம் டன் அளவுக்கு உணவு தானியங்கள் எடுத்துச் செல்லப்பட



1968 பிப்ரவரி 17] [திரு. கே. ஏ. மதியழகன்]

வேண்டிய பேராபத்து இருந்தது. வெயில் கிடையாது. அந்தப் பெரிய காரியத்தில் ஒரு கோடி ரூபாய் கொடுத்து உலர்த்தும் ஆலைகள் வைக்கப்பட்டன. இங்கே உள்ள உறுப்பினர் ஊரில் கூட கொடவாசலில் கூட, ஒரு ஆலை இருக்கிறது. 30 ட்ரையர்களை, உலர்த்தும் ஆலைகளை அமைத்தார்கள். ஆனால் அவற்றில் மத்திய சர்க்காரைக் குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. ஆறு ஆலைகள்கூட சரியாக வேலை செய்யவில்லை. ஒரு கோடி ரூபாய் செலவு செய்தும் இந்த நிலை. ஆகவே, நெல்லை உலர்த்த முடியாமல், அவசரம் அவசரமாக கலெக்டர் பலத்த கஷ்டத்தின் பேரில் லாரிகளை வைத்து, நாள் பூரா வேலை செய்து, 24 மணி நேரமும் வேலை செய்து, குமரி மாவட்டம், கோயம்புத்தூர், இன்னும் மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால், தரமான அரிசி கிடைக்கவில்லை, கொடுக்கவில்லை. இந்த நிலை குறுவையைப் பொறுத்த வரையில் வழக்கமாக ஏற்படுவதுண்டு. அதோடு கூட கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும். அரிசி ஆலைக்காரர்கள், 20 வருஷ காலமாக காங்கிரஸ்காரர்களுடைய வளர்ப்புப் பண்ணையில் வளர்ந்த சொகுசுக்காரர்கள் இன்னும் மாறவில்லை. ஆகவே, துரிதமாக, நல்ல முறையில் அரிசி அரைக்க கூட்டுறவுத் துறையில் நவீன, புதுமையான ஆலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கிறது. இந்தத் தடவை தஞ்சாவூரிலிருந்து வந்த அரிசி கெட்டதற்கு அதுதான் காரணம். மழையில் நனைந்து, பிழிகிற நெல்லை லாரிகளில் எடுத்துக் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு கோடி ரூபாய் செலவு செய்தும் பயன் இல்லாமல் போயிருக்கிறது என்பதைத்தான் சொல்ல விரும்பினேன். ஐந்தாறு இடங்களில்தான் உலர்த்திய அளவுக்குச் செய்ய முடிந்தது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, தரமான அரிசியைத் தருவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறினதற்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குற்றம் யார் பக்கத்தில் இருந்தாலும், யார் இதை விநியோகம் செய்கிறார்களோ அவர்கள் மீதுதான் மக்கள் குற்றம் சொல்லுவார்கள். சாதாரணமாக, இந்தத் தரமான அரிசி கிடைப்பதிலே கஷ்டங்கள், சங்கடங்கள் உண்டு என்பதை உணர்கிறேன். ஆனால், அப்படி முளைத்த நெல்லை அதிகாரிகள் விநியோகத்திற்கு விடாமல், அதை அவர்கள் எடுத்து அப்புறப்படுத்தி இருக்கலாம். அதைச் செய்யாமல், அதையும் விநியோகம் செய்த காரணத்தால் போராட்டம் நடந்தது. ஆளுங் கட்சிக்குத் தோழமைக் கட்சியாக இருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் அங்கு போராட்டம் நடத்தினார்கள். இதற்கெல்லாம் காரண காரியத்தைப்பற்றி விளக்குவதற்கில்லை. இம் மாதிரியான பல கஷ்டங்களும் சிக்கல்களும் இருக்கின்றன. உணவு விஷயத்தில் இருக்கின்ற தகராறுகளை அப்புறப்படுத்த வேண்டுமானால், இந்த அரசாங்கம் இந்த உணவு

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1968 பிப்ரவரி 17

விஷயத்தில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். ஏதோ உயர் மட்டத்தில் பெரிய அதிகாரிகள் நல்ல எண்ணத்தோடு இருந்தாலும், எங்கள் மாவட்டத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.

குறிப்பாக, எங்கள் பகுதியில் இருக்கும் கஷ்டங்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் செக் போஸ்ட்கள் அமைக்கப்பட்டு பலருக்கும் கஷ்டமாக இருந்து கொண்டே இருக்கின்றன. வயலிலிருந்து நெல்லை அறுவடை செய்து களத்திற்குக் கொண்டு போவதற்குக் கூட, பர்மிட் வாங்கக்கூடிய நிலை ஒரே மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால், எங்கள் மாவட்டத்தில் இயற்கைக் கோளாறின் காரணமாக விளைவு அதிகமாக இல்லை. அங்கு பம்ப் செய்து, தண்ணீரை இறைப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதாக அமைச்சர்களும் இன்ஜினீயர்களும் எங்களுக்கு வாக்குறுதி தந்தார்கள். ஆனால், அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைப் பம்ப் செய்து கொடுத்து பல காரியங்களைச் செய்திருக்கிறது. முன்பிருந்த அரசாங்கம். அந்த முறைகளையெல்லாம் இந்த அரசாங்கமும் கடைப் பிடித்திருக்கலாம். பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்திருப்பார்களானால் அந்தப் பகுதியில் பஞ்ச நிலை ஏற்பட்டிருக்காது, அங்குள்ள மக்கள் இன்று சுபீட்சமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதை இந்த உணவுப் பங்கீடு முறையில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலே பட்சபாதமாய் நடக்கிறது என்பதை நான் கூறுவதற்குக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் கூட்டம் போட்டால், ஒலிபெருக்கிக்கான லைசன்ஸ் இரவு 9-30 மணி வரையில்தான் தரப்படுகிறது, எங்கள் ஜில்லாவில். ஆனால், ஆளுங் கட்சியினர் கூட்டம் போட லைசன்ஸ் கேட்டால், இரவு 12, 12½ மணி வரையில்கூட ஒலிபெருக்கி வைத்துக் கொள்ள அனுமதி கொடுக்க அங்கிருக்கும் அதிகாரிகள் தயங்குவதில்லை. இந்தச் சின்ன விஷயத்தைக்கூட இந்த சட்டசபையில் சொல்ல வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்களே என்று நான் வேதனைப் படுகிறேன். எங்கள் பகுதியில் உள்ள கருங்கல் என்னும் ஊரில் நடந்த நிகழ்ச்சியைத்தான் நான் இதற்கு ஆதாரமாகக் கூறுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் பேசிக் கொண்டிருந்த அந்தக் கூட்டத்தில் இரவு 9-30 மணி ஆனதும் ஒலி பெருக்கியை உடனடியாக நிறுத்தி விட்டோம். ஆனால், அடுத்த பகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்று நடந்து கொண்டு இருந்தது. அந்த இடத்தில் இரவு 12½ மணிவரை கூட்டம் கூடுவதற்கு அதிகாரம் வழங்கப்



1968 பிப்ரவரி 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பெற்றிருந்தது. இம்மாதிரி சில்லரை விஷயங்களில் அதிகாரிகள் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்களுக்குச் சட்டசபை உறுப்பினர்களானாலும் சரி, அரசியல் கட்சி ஊழியர்களானாலும் சரி தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதில்லாமல் இம்மாதிரியான நிலையில் விட்டுவிட்டால், மக்கள் கையிலேயே இந்தச் சட்டத்தையும் ஒழுங்கையும் விட்டுவிட்டால், அது நல்ல முறையாக இருக்காது, வன்முறைச் செயல்கள் அதிகமாக வந்துவிடும் என்று பணிவோடு சுட்டிக்காட்டிக் கொண்டு, எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசலாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். தலைவர் அவர்களே, இந்த அவையில் சற்றுமுன் பேசிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும், ஏனைய காங்கிரஸ் மெம்பர்களும், தூத்துக்குடி விவகாரத்தைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நான் கைது செய்யப்பட்டு, அது சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, பிறகு அது வாபஸ் பெறப்பட்டதை ஏதோ சட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சியாகக் கருதிக்கொண்டு, எனக்குத் தனிப்பட்ட முறையில் காட்டப்பட்ட சலுகையாகப் பேசிக்கொண்டிருப்பது எனக்கு உள்ளபடியே வேதனையைத் தருகிறது.

தொழிற்சங்க விவகாரங்களில் தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்படுவதும், பிறகு சமரசம் ஏற்படும்போது கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையோடு பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதும், தொழிற் தகராறுகள் ஆரம்பித்த காலத்திலிருந்து, காங்கிரஸ் ஆட்சி நடக்கும்போதுகூட, பல நிகழ்ச்சிகள் இம்மாதிரி நடந்து வருகின்றன. கம்யூனிஸ்டு தலைவர்கள் மட்டுமல்ல; ஐ.என்.டி.யு.ஸி. தலைவர்களும் இப்படிக் கைது செய்யப்பட்டு, வழக்கு போடப்பட்டு, நீதி மன்றத்தில் இரண்டு, மூன்று விசாரணைகள் நடத்திய பிறகு, சில வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. ஆகவே, இது புதுமை அல்ல. எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்ட சலுகை அல்ல.

அத்துடன், தூத்துக்குடி தொழிற்சாலையில் எந்தவிதமான விவகாரமும் இல்லை. எங்களுடைய போராட்டத்தில் கோரிக்கைகள் முழுவதும் நிறைவேறி, முதலாளிகளும் தொழிலாளிகளும் சமரச நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்வது தன்னிலை விளக்கமாக (personal explanation) இருக்கிறது. தன்னிலை விளக்கம் (personal explanation) என்றால், தங்களைப்பற்றி மட்டும் பேச வேண்டும், மற்ற காரியங்களை அதில் கொண்டுவரக் கூடாது.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, when a Member from the Congress Party has alleged something, it is for the Government to reply and not for any Member to take up the cause of the Government and explain. Let the Government give the explanation as to why they have withdrawn the case. A member should not take the cudgels and argue for the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் நான் விளக்கிச் சொல்லிவிடுகிறேன். (point of personal explanation) என்றால், எந்த உறுப்பினரைப் பற்றியாவது நீங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிட்டால், அந்த உறுப்பினர் தன்னிலை விளக்கம் (personal explanation) அளிப்பதாகச் சொல்லி. விளக்கிவிடலாம். அதன்படி. திரு. சீனிவாசன் தன்னிலை விளக்கம் சொல்லலாம். ஆனால். மற்றவர் பேசியதற்கு மறுப்புச் சொல்லுகிறீர்கள். clarification கேட்கவில்லை. தன்னிலை விளக்கம் தங்களைப்பற்றி மட்டும் இருக்கவேண்டும். தங்களைப்பற்றி மட்டும் பேசி முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தொழிற்சங்க விவகாரத்தில் எந்தவிதமான தகராறும் இல்லை. அந்த விவகாரத்தை மீண்டும் மீண்டும் இங்கே இழுத்து என்னுடைய பெயரைக் களங்கப்படுத்தும் முறையில், தங்களுடைய கட்சியின் விளம்பரத்திற்கான முயற்சியில் தொடர்ந்து மற்றவர்கள் ஈடுபட வேண்டாம். அந்த இடத்தில் ஒருவிதமாகச் சமரசம் ஏற்பட்டிருக்கிறது. சட்டத்திற்கு நீங்கலாகவோ, புறம்பாகவோ எந்தவிதமான சலுகையும் எனக்குக் காட்டப்படவில்லை என்பதை நான் தெளிவாக என்னுடைய சொந்த முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : A member may, with the permission of the Speaker make a personal explanation. But in this case no debatable matter may be brought forward, and no debate shall arise.

தன்னிலை விளக்கம் தங்களைப்பற்றி மட்டும் இருக்கவேண்டும், அவ்வாறு தாங்கள் பேசி முடித்துக் கொண்டீர்கள்.

இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசலாம். அவருக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I wish to offer a few remarks on this first supplementary budget. My only request to the Members of the Treasury Bench is to take what I say in the right spirit and I have absolutely no doubt that they will take it in the right spirit. I wish particularly to refer briefly and pointedly



to ten reasons to show why one-rupee-a-measure scheme is full of hazards. I was prompted to say this after my respected Friend and the Minister for Public Works remarks day before yesterday on Mr. D. S. Audimoolam's speech. On page 4 of the speech presenting the First Supplementary Estimates delivered by the Hon. Leader of the House on behalf of the Chief Minister, it is clearly stated :

The House will recall that one of the important beneficial measures implemented by the present Government is the supply of rice at rupee-one-a-measure in the statutory rationed areas of Madras, its belt areas and Coimbatore. A provision of Rs. 5 crores was made towards the cost of subsidy under the capital head . . .

Now we should understand the background of the problem with which this present Ministry is seized. The first point that I would like every hon. Member in this House to appreciate is that it is a very, very hazardous and difficult task to supply food properly, to collect food properly, to store food properly and to distribute it properly. If only my hon. Friends sitting on my right side would recollect the difficult situation which the previous Government encountered especially in the year 1965, when they had to change horses in the midstream, and the erstwhile Food Minister, my hon. revered friend, Mr. Manradiar had to be shifted to another portfolio and Mr. Ramiah had to be brought in—they would understand the problem faced by this Government. I know the great difficulties and problems faced by them and it is a difficult task. Now, I must clearly state that it is being looked after very, very, ably by the present Food Minister and I do not say this by way of a random compliment but I say this in all seriousness and with all authority. Therefore, whatever I say in this context should be taken in the right spirit. At the same time, I must say that they should not fall into the trap or into the quick-sand. One-rupee-a-measure-rice scheme is just like quick-sand and they should not be lost in that quick-sand. It is a very dangerous thing to implement it throughout the State. Now, they have introduced it in two cities, Madras City and Coimbatore but that would cost the exchequer about Rs. 5 crores. So, my point is that this 'one-rupee-a-measure' rice scheme is full of risks. The motive of the Government is above board and it is unquestionable because they have come forward with this measure for a very good purpose, viz., to give cheap food to the poor people. We, in the Swantantra Party, are always for increased productivity and for greater benefits to the people. But I want to know, whether the purpose for which this scheme has been introduced, viz., the supply of cheap rice to the poor, has been fulfilled and whether the remedial measures that they are offering is correct or not. That is the only question. It is not a question of who is right and who is wrong but the question is what is right. Though the intention of the Government is above board, the method adopted by them is not scientific. The presumption that this scheme is good for the poor people is not

[Dr. H. V. Hande] [1968 பிப்ரவரி 17

correct because it does not give an opportunity to the Government to introduce other beneficial measures for the poor people. Also what is given with one hand is taken away by the other hand. I mean the levy of increased sales-tax. It is only a transfer of burden from one particular commodity to another commodity. The fact is that the sales-tax has been increased by half a per cent to augment the resources of the exchequer and so what is gained by way of the cheap rice scheme, is not fully appreciated by the poor man. Now I shall explain it in detail. I have calculated that a sum of Rs. 8 is the net profit that a family of four or five persons would get under this scheme and a sum of Rs. 3-1/2 or 4 would be the amount he would lose by way of extra sales-tax. This is the first point. The second point is that we are not against rice becoming cheap. We would like cheap rice being given to the people and the production also being increased. There is no use in the Madras Government complaining against the Central Government and the Central Government begging for food from foreign countries. Unfortunately our misfortune is that for the last 20 years, we have not been able to get out of this quagmire. As I have already stated, we are not against rice becoming cheap. We are only worried that the method by which this is going to be made, is a costly enterprise. Ultimately the whole burden is going to be thrown on the common man. The third point is that as I have already stated, what is gained in this scheme is lost in increased sales-tax. In this particular context, I want to point out that the amount that we are getting from out of the Income-tax collected by the Central Government is not elastic. The amount that we get by way of sales-tax, agricultural income-tax and land revenue is only Rs. 75 crores. This is the only elastic revenue that the State Government can get through their efforts. Out of these Rs. 75 crores we are spending Rs. 5 crores on the cheap rice scheme alone. This aspect of the matter has to be examined by the Government.

The fourth point is that this subsidy scheme has been tried in Ceylon and it has been found to be a thorough failure. They have found it very difficult to make good the extra amount that they have spent by way of subsidy. So, I would like the Hon. Minister for Food to find out the facts and approach the matter in a scientific manner. Of course, I would only be too happy if we can implement the scheme without affecting the potential resources of the State for development projects.

The fifth point is with regard to the Central sanction. The Congress Party has stated that the D.M.K. Government is blaming the Centre for everything. The State Government say that the Centre should have given them more money.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் நண்பர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் சிலோனில் அரிசி கொடுக்கும் சமாசாரம் பற்றிச் சொன்னார்கள். சமீபத்தில் சிலோன் அரசில் இருக்கிற ஓர் அமைச்சருடன் நான் இது பற்றி விவாதிக்க நேர்ந்தது.



1968 பிப்ரவரி 17] [திரு. கே. ஏ. மதியழகன்]

" சிலோன் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 280 கோடி ரூபாய். அந்த 280 கோடி ரூபாயிலே 80 கோடி ரூபாய் சப்சிடியாக அரிசிக்காகச் செலவு செய்கிறார்கள். மீதி உள்ள 200 கோடி ரூபாயை பாதுகாப்பு, நிர்வாகம் போன்ற மற்ற காரியங்களுக்குச் செலவிடுகிறார்கள். முதலில் படி அரிசித் திட்டம் மாதிரி ஆரம்பித்து, பின்னர் எல்லோருக்கும் வாரத்திற்கு ஒரு நாள் இலவசமாக அரிசி கொடுக்கும் திட்டம் இருக்கிறது. 280 கோடி ரூபாயிலே 80 கோடி ரூபாய் இதற்காகச் செலவிடப்படுகிறது. இருந்தாலும் எங்களுடைய அரசாங்கம் நன்றாக நடக்கிறது " என்று சிலோன் அமைச்சர் எனனிடம் தெரிவித்தார்.

Dr. H. V. Hande : I am very glad to hear the explanation of the Hon. Minister. He might have met a number of Members belonging to the Treasury Benches there and they might have said so. But I met a member belonging to the Opposition and he told me that the initial subsidy of Rs. 20 crores has gone up to Rs. 80 crores. I shudder to think, to what dangerous length it would go if the subsidy is granted on such a large scale here. That is only an economic point. Now, the question raised is that the Central sanction for it should have been obtained earlier. My view is that we should have fought it out with the Central Government and got their sanction earlier. Now the Central Government are saying that we have done it without consulting them. We should have explained the whole position to the Central Government earlier. For instance, yesterday I was happy to hear our Hon. Minister for Agriculture saying that he, by his persuasive methods, was able to get 5-lakh tonnes of fertilizers from the Central Government. மு. ப. 11-30
That is really a creditable thing which the previous Government did not do. Let us not get hurt about it; let us not get lost in arguments. (Interruption). It is not accusing, it is only a question of creating a friendly atmosphere. Our present Agriculture Minister was able to achieve substantially by his persuasive methods and also by pointing out that he can also do some good things to the State. In the same way our Government could have explained the facts to the Centre and told them that we will be able to subsidise rice and make it cheap, instead of asking for a subsidy after the scheme became a *fait accompli*. We could have taken our Friends Mr. P. G. Karuthiruman and Mr. K. Vinayakam with us and fought for it with Mr. Jagjivan Ram or the Union Finance Minister. We can join together and retrieve the position. My opinion is scientific and fundamental. My personal view is that we should have got the sanction of the Centre beforehand. Then there would have been greater chances of compliance with our request.

If the scheme is to be extended to all the areas of the State where the family card system or statutory rationing is in vogue, eight lakh tonnes of rice are required and a huge amount will have to be paid by way of subsidy and what will be the fate of our finances ? The Hon. Minister for Food pointed out the example of Ceylon where the subsidy for rice has gone up to Rs. 80 crores.

[Dr. H. V. Hande] [1968 பிப்ரவரி 17

With our meagre resources, can we afford Rs. 20 crores and 30 crores? Persons who are against this one-rupee-a-measure scheme will say that there are thousands of labourers in other areas and that the scheme should be extended to those areas, that the Ministry is making a differentiation, and thus whip up passions. There is no differentiation. The scheme was started only as an experimental measure. That is not our method. Our Leader Rajaji has given us clear instructions, and he has shown by personal example, that we should give advice even though it may be unpalatable. Let us not fall into the trap of those who want the extension of the scheme to the whole State. The D.M.K. will see through the game and we also will see through it. Could we not have got better yield if we had invested this five crores and more on agriculture? That is the next question which we have to address ourselves to. I feel that the shift could have been to agriculture. We have to divert as much resources as possible to agriculture. Mr. D. S. Authimoolam and Mr. Karuthiruman will support this. What about the thousands of agricultural labourers? The teachers felt very much as their children were not given free education when the children of somebody else were given free education. We have to satisfy agricultural labourers also who are directly responsible for production of food. The same amount could have been invested on teachers, schools and colleges.

The next point is the most important point and I want the Food Minister to consider it carefully. Several shop-keepers are torturing the poor people. Out of this five crores of rupees, nearly two to two and a half crores goes—I do not know in what mysterious way—to the shop-keepers over whom this Government is trying to exercise control. I know what type of people they are and what type of allegiance they owe to this Government. Some people purposely want to sabotage the scheme. When this was pointed out to the Minister for Public Works, he was good enough to say that he will take action. Several Secretaries of the D.M.K. Party themselves and neutral people give us this information. With tremendous sacrifice, the sum of five crores is allotted. This should go to the consumer. Rice bags are going out mysteriously. One such place is in 60, V. V. Koil Street. It is in the ex-Deputy Mayor's constituency. As I was coming yesterday, a friend of mine gave me the information. We have to bring all this information to the notice of the Ministry. Bags of rice are going out mysteriously. The shop-keepers ask the customers to come on Friday or Saturday. When the poor people go to the shop for the 'N'th time on Saturday evening, the shop-keeper says '*stock innum varavillai*'. (ஸ்டாக் இன்னும் வரவில்லை). The consumer loses the week's ration. That should be very, very carefully observed. We must see that the profit does not go to the middleman, who is already making profit.

There are those who raise slogans "Where is the one-rupee-a measure scheme in Madurai, Tirunelveli and Tiruchirappalli?" Here is a group of people belonging to a particular party who want



1968 பிப்ரவரி 17] [Dr. H. V. Hande]

one-rupee-a-measure scheme. Here is the Swatantra Party saying "don't give". Government may think like that. Even at the risk of becoming unpopular, I say that economic measures must be properly considered.

I sincerely hope that the Ministry will give due consideration to the important points I have made. I have made them without any malice or bitterness and with the only purpose of seeing that the meagre 75 crores that we are collecting from the people from Sales Tax, Agricultural Income-tax and land revenue is spent in a very good manner on development projects, for projects whose execution will bring in more revenue. There are more things I have to say, but I reserve them for the budget discussion.

I hope that the Food Minister will, within his remaining period of four years, be able to do substantial good to the poor people of Madras. With these words, I wind up my speech.

***திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, 1967-68 ஆம் ஆண்டு முதல் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், சிறு பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சங்கள் என்றாலும், தமிழகத்தில் இருக்கக்கூடிய சிறு நிலம் படைத்த விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கும், மின்சாரக் கடன் கொடுப்பதற்கும் இன்றையதினம் பல கஷ்டங்கள் இருந்து வருகின்றன. யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவர்களுக்கு உதவி கிடைக்கவில்லை. யார் உணவு உற்பத்தியைப் பெருக்குகிறார்களோ அவர்களுக்கு உதவி கிடைக்கவில்லை. இந்த நிதி ஒதுக்கல் மூலமாக சிறு நிலம் படைத்த விவசாயிகளுக்கு மின்சாரக் கடன், மின்சார இணைப்பு கொடுக்க இந்த சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் கடந்த பருவ மழையின் காரணமாக சிறு நில விவசாயிகளின் நிலம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக சிறு நிலக்காரர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வரிவஜா செய்வதோடு கூட, அடுத்த சாகுபடிக்கு வேண்டிய வசதிகளை அவர்களுக்கு எற்படுத்திக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இன்றையதினம் பலவிடங்களில் மின்சார பல்புகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் திண்டுக்கல் நகரத்தில் பல லட்சக்கணக்கான ஜனங்கள் வாழக்கூடிய நகரத்தில் ஆயிரம் பல்புகளுக்கு மேல் இல்லை. மின்சார போர்டிடம் கேட்டால் ஸ்டாக் இல்லை என்கிறார்கள். இந்த நிலையை நீக்கவேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள சிறு நிலக்காரர்களுக்கு பம்பு செட்டுகள் வைப்பதற்கு கடன்கள் கிடைப்பது இல்லை. பவர் டிரில்லர்களை உபயோகப்படுத்தி, சிறு நிலக்காரர்கள் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பம்பு செட்டு விதம் அமைத்துக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கும் வழி செய்யவேண்டுமென்ற முறையில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே பல கிராமங்களிலே மின்சார இணைப்பு இல்லாமல் விவசாயிகள் விவசாயத்திற்காக தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலே கச்சனம் கிராமத்தில் ஒரு விவசாயி தனது சொந்தச் செலவிலே பம்பு செட் அமைத்தாங்கூட—ஒரு போஸ்ட்டுக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது, அப்படியிருந்தும்கூட, இன்னும் மின்சார இலாகா மின்சார இணைப்பு கொடுக்காமல் இருப்பதால் அந்த விவசாயியே ஒரு ஆயில் பம்பு செட் போட்டு விவசாயத்தை நடத்தி வருகிறார். அதேபோல திருவாரூருக்குப் பக்கத்திலே கீழப்படுகை என்ற இடத்திலே ஒரு விவசாயிக்கு மின்சார இணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார். இப்படிப்பட்ட நிலையைப் போக்கி மின்சார இணைப்பு கொடுப்பதற்கும் சிறுநில்க்காரர்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பதவி ஏற்ற பிறகு தஞ்சை மாவட்டத்திலே பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆட்சி தவறுகளுக்கு இடம் அளிக்காது என்பது எனக்கு நன்ருகத் தெரியும். ஆட்சியிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய தவறுகளினுல், தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பெரிய நிலப் பிரபுக்கள் செய்கின்ற தவறுகளினுல் தஞ்சை மாவட்டத்திலே பரபரப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகக் கூறுகிறேன். தஞ்சை மாவட்டத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிலப் பிரபுக்கள் ஒரு சிலர் ஆட்சிக்கு கெட்ட பெயர் வரவேண்டுமென்ற நோக்கத்தினுல் சர்க்கார் கொள்முதலை முடக்கம் செய்யவேண்டுமென்ற நோக்கத்தினுல், விவசாயத் தொழிலாளர்கள்மீது துவேஷத்தை ஏற்படுத்துகின்ற முறையிலே ஒப்பந்தத்தை மீறுகிருர்கள். வலிவலம் எஸ்டேட்டில் ஏழு கிராமங்கள் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கின்றன. ஆனுல் காங்கிரஸ்காரர்கள் சொல்லிக்கொள்கிருர்கள், நாங்கள் நிலச் சீர்திருத்தம் செய்துவிட்டோம், நிலத்திற்கு 30 ஏக்கரா என்று உச்சவரம்பு கட்டிவிட்டோம் என்று சொல்கிருர்கள். வலிவலம் எஸ்டேட்டில் அதனுடைய சொந்தக்காரர் நான்தான் ஏழு கிராமங்களுக்கும் சொந்தக்காரன், என்னுடைய ஏஜெண்ட்தான்





வருகிருர் என்றெல்லாம் சொல்கிருர். நமச்சிவாயபுரம் என்கின்ற கிராமத்திலே 30 வேலி நிலத்தை விவசாயத் தொழிலாளர்களுக்கு அறுவடை வேலை கொடுக்காமல் அந்த நிலம் எல்லாம் அறுக்காமல் வீணுகவே இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களைப் பழி வாங்கவேண்டுமென்பதற்காக வெளியூர்களிலிருந்து ஆட்களை வைத்து அறுவடை வேலை செய்துகொண்டு தஞ்சை மாவட்டத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு வருகிருர்கள். இப்படி அவர்கள் செய்துவிட்டு விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிருர்கள், அக்கிரமம் செய்கிருர்கள். என்ற குற்றச்சாட்டைச் சொல்கிருர்கள். இதில் சர்க்கார் தலையிட்டு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பல மாவட்டங்களில் புன்செய் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் பயிர்கள் மழையின்மையால் காய்ந்துவிட்டன. ஆகவே அங்கே மலிவு தானியக் கடைகள் வைத்து உணவு கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தையும், நிலத்திலிருந்து வெளியேற்ரு வண்ணம் இருப்பதற்கு நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கும் சட்டத்தையும்—இந்தச் சட்டங்கள் எல்லாம் வருகிற ஏப்ரல் மாதத்தோடு காலாவதியாகின்றன—மீண்டும் மூன்று வருடங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மின்சார வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடியவர் மேல் ஊழல் புகார்கள் வந்ததைப்பற்றி சென்ற சட்டசபைக் கூட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை நிதிக்கோரிக்கையின் மீது மட்டும் பேசவேண்டும். இப்போது நடைபெறுவது பொது நிதி விவாதம் அல்ல, ஆளுநர் பேருரையும் அல்ல. ஆளுநர் பேருரையில் பேசும்போது இதைப் பற்றி பேசலாம். இப்பொழுது துணை நிதிக் கோரிக்கையிலே அதிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் பற்றித்தான் பேச வேண்டும் என்று 160-வது விதியிலே இருக்கிறது. பட்ஜெட் பற்றிப் பேசும் போது விரிவாகப் பேசலாம். ஆளுநர் பேருரையின்போது பேசலாம். இதிலே பேசும்பொழுது துணை நிதிக் கோரிக்கையைப் பற்றி மட்டும்தான் பேச வேண்டும். காலம் குறைவாக இருப்பதால்தான் சொல்கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, இன்றையதினம் துணை மானியத்தின் மீது இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சர்க்காரால் பஞ்சாயத்துகளுக்குப் பல புறம்போக்குகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட புறம்போக்குகள்

எல்லாம் தனியார்களிடம் இருக்கின்றன. பஞ்சாயத்துகளிடம் கொடுக்கப்பட்ட புறம்போக்குகள் தனியார்களிடம் இருப்பதற்கு சில சட்டச் சிக்கல்கள்தான் காரணம். அப்படிப்பட்ட சட்டச் சிக்கல்களை நீக்கி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் உணவு உற்பத்திக்கு உதவும்; ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் மேஜர் பஞ்சாயத்து, முனிசிபாலிடி இவற்றில் இருக்கக்கூடிய நிலம் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் வந்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே சட்டச் சிக்கல்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்குத் தேவையில்லாமல் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களில் பல வருஷங்களாக ஏழைகள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களை அங்கேயிருந்து வெளியேற்றாமல் இருப்பதற்கு சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ புறம்போக்குகளிலே இருக்கக்கூடிய மரங்கள், லட்சக் கணக்கான மரங்கள் இருக்கின்றன, கோடிக்கணக்கான வருமானம் வரக்கூடிய மரங்கள் இருக்கின்றன. அதன் மூலம் வரக்கூடிய வருமானம் சர்க்காருக்குக் கிடைக்கக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டால் குறைந்த வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அவற்றைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அது ஏதுவாக இருக்கும். ஆகவே அதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளிலே மின்சார இணைப்புப் பாசனம் கிடைக்கவேண்டியிருக்கிறது. வேதாரண்யம் பகுதியில் இருக்கக்கூடிய புன்செய் பகுதிகளுக்கெல்லாம் அது கிடைத்தால் சாகுபடிக்கு ஏதுவாக இருக்கும். இறைவைப் பாசனம் கிடைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. புகையிலை சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. பணப் பயிர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இறைவைப் பாசன வசதி செய்துகொடுத்தால் வேதாரண்யப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அது உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆர்வத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கக்கூடிய முறையிலே நல்ல நடவடிக்கையாக இருக்கும். ஆகவே அந்தப் பிரதேசத்திற்கு மின்சார பம்பு செட்டு ஏற்படுத்திக் கொடுத்து இறைவைப் பாசனத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளைப்பற்றி என் கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கனவே,



எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் மிக அழகாகவும், விரிவாகவும் பேசிவிட்டார்கள். துணை மதிப்பீடுகள் 41 கோடி ரூபாய்க்கு வைக்கப்பட்டிருக்கிறது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஆந்திரா உள்பட சென்னை மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டமே 45 கோடி ரூபாய்தான். அந்த அளவுக்கு தற்போது துணை மதிப்பீடு வந்திருக்கிறது என்றால் இதற்குக் காரணம் இதுவரை போட்ட திட்டங்கள், இதுவரை நடந்த அரசாங்கம் என்று சொன்னால் அது மிகையாகாது. இருந்தாலும் கூட விவாதத்தை ஆரம்பித்து வைத்த திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நோட்டு அடிக்கும்படியான காரியத்தை நம்மிடத்திலே விட்டு விட வேண்டுமென்று சொன்னார்கள். நோட்டு அடிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து விட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விட முடியாது. மக்கள் உழைக்க வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும். உழுபவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய அளவு ஊதியம் கிடைக்கவேண்டும். வெறும் நோட்டை மட்டும் அடித்து விட்டோமானால், அது எப்படி இருக்கும் என்றால் இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஜெர்மனியிலே பல ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்தால்தான் ஒரு கோப்பை காப்பி குடிக்க முடியும் என்று இருந்த நிலைமைக்குச் சென்று விடும். தவறுகள் நடக்கும்போது அவை காங்கிரஸ் கட்சியினால்தான் ஏற்பட்டன என்று கூறுகிறார்கள். ஆனால் நன்மைகள் ஏற்படும்போது காங்கிரஸ் கட்சியின் திட்டங்களினால் ஏற்பட்டன என்பதை ஒத்துக் கொள்வதில்லை. (இச் சமயத்தில் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்கள் விளக்கம் கோர எழுந்தார். பேசுகின்ற உறுப்பினர் குறுக்கீட்டுக்கு இணங்கவில்லை.) நோட்டு அடிப்பதெல்லாம் மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது என்று எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைப்பற்றியே கூறிக் கொண்டிருப்பதால் எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற உங்களுக்கு மக்களுக்கு வேண்டிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. நாங்கள் பொது மக்களிடம் சென்றோம்; பொதுமக்கள் எங்களை வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். மகிழ்ச்சியுடன் எதிர்க் கட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு.) ஆம், பூரண மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. மூன்று படி அரிசியை நிச்சயமாகப் போடுவீர்கள், ஒரு படி அரிசித் திட்டத்தை இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் மாகாணம் பூராவும் விஸ்தரிப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. வாய்மையே வெல்லும் என்று போட்டவர்கள் நீங்கள். ஆகவே, வாய்மையைக் காப்பாற்றுவீர்கள் என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் இல்லை. (திரு. டி. எஸ். ஆதிமூலம் உட்கார்ந்தபடியே குறிக்கீடு.) வாய்ப் பேச்சு வெல்லும், காரியத்தில் அல்ல என்று கூறுகிறார்கள். கட்சி

நோக்குடன் விவாதத்தில் பேசுவதால் பிரச்சனை திராது. மக்களுடைய எதிர்கால வாழ்வு எப்படி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் திட்டங்களைப் போட்டு நிறைவேற்ற வேண்டுமென்று பார்க்கும்போது, துணை மதிப்பீட்டின் தொகையை எண்ணிப் பார்க்கும்போது, வரும்படியான பட்ஜட்டில் எத்தனை கோடி ரூபாய்க்குத் துண்டு விழுமோ அது ஆண்டவனுக்குத்தான் தெரியும். நிதியமைச்சருக்கு ஓரளவு தெரியலாம், நிதிக் காரியதரிசிக்கு ஓரளவு தெரியலாம். பல கோடி ரூபாய்க்கு துண்டு விழுமென்று சூசகமாகத் தெரிகிறது. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : துண்டை விழாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.) பணத்தைப்பற்றி எவ்வளவு மதிப்புக்காட்டுகிறீர்கள் என்பது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூற்றிலிருந்து புரிகிறது. இந்த ஆட்சி வந்த பிறகு பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

ஸ்டாச்சுடரி ரேஷனை காங்கிரஸ்காரர்கள்தான் வைத்தார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். இப்போதுதான் நீங்கள் அதிகாரத்திற்கு வந்து விட்டீர்களே, எடுத்து விடுவதுதானே? குற்றத்தைச் சாட்ட காங்கிரஸ் கட்சியும் காங்கிரஸ் அரசாங்கமும். நல்லது ஏற்பட்டால் தங்களுடைய சாதனை என்பார்கள். தஞ்சையிலே விளைவித்த நெல் இதுவரை வெளியே அனுப்பப்படவில்லையா? இப்போது அதை அனுப்புவதற்கு மத்திய அரசாங்க அமைச்சர் வரவழைக்கப்படுகிறார். முன்பும் பல லட்சக்கணக்கான டன் அரிசி வெளியே அனுப்பப்பட்டது. இப்போது அதற்கே ஒரு விளம்பரம் செய்து கொள்கிறார்கள். ஒரு படி அரிசித் திட்டத்தினால் ஐந்து கோடி ரூபாய் அதிகச் செலவாகிறது. போட வேண்டாமென்று சொல்லவில்லை. ஏழைக் குடியானவரின் தலையிலே கை வைக்கிறார்களே. உற்பத்தியைப் பெருக்க என்ன வழி என்று பார்க்க வேண்டுமே தவிர, பத்துக்கு வாங்கி எட்டுக்கு விற்பது பெரிய சாதனையா? உற்பத்தி பெருக நல்ல திட்டங்கள் இல்லை. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. ஏதோ ஜகஜீவன்ராம் இவர்களுக்கு பாராட்டு கொடுத்து விட்டார்கள் என்றார்கள். அதே ஜகஜீவன்ராம் 'தமிழ்நாட்டு சர்க்கார் விவசாயிகளுக்குத் துரோகம் செய்கிறது' என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நீங்கள் திரு. ஜகஜீவன்ராமுக்கு விவசாயம் தெரியாது என்று சொல்ல அவர்கள், கருத்திருமனுக்குத்தான் விவசாயம் தெரியாது என்று சொன்னது பத்திரிகையில் வந்ததைப் பார்த்தீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவரோடு எவ்வளவோ நாட்களாகத் தொடர்பு கொண்டவர்கள் நாங்கள். இப்போது அதிகாரத்தில் இருக்கும்படியான நிலையில் நீங்கள் அவரைப்பற்றி அறிந்திருக்கலாம். கருத்திருமனுக்கு விவசாயம் தெரியாது என்று



அவர்கள் சொன்னதற்கு நான் சொன்ன பதிலைப் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்த விலைக்கு கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கு எப்படிக் கட்டுபடியாகும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலே எங்களுக்கு இருக்கும் சந்தேகம்—திரு. ஜகஜீவன்ராம் கருத்திருமனுக்கு விவசாயம் தெரியாது என்று சொல்கிறார்; திரு. கருத்திருமன் ஜகஜீவன்ராமுக்கு விவசாயம் தெரியாது என்று சொல்லுகிறார். இதிலே யாருக்கு விவசாயம் தெரியாது என்பது எங்களுக்கு விளங்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தயவு செய்து என்னுடைய பண்ணைக்கு வந்து பார்க்கட்டும்; திரு. ஜகஜீவன்ராம் அவர்களுடைய வீட்டுப் பண்ணைக்கும் சென்று பார்க்கட்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியானால் திரு. ஜகஜீவன்ராம் அவர்களுக்கு விவசாயம் தெரியாது என்பதை நாங்கள் திரு. கருத்திருமன் அவர்கள் மூலமாக ஒப்புக்கொள்ளலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குத் தெரிந்த அளவு நிச்சயமாக திரு. ஜகஜீவன்ராம் அவர்களுக்கு விவசாயம் தெரியாது என்பதை இந்தச் சட்டசபையில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். இங்கே இல்லாத ஒருவரைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் ஒரு சச்சரவைக் கிளப்பிவிட்டு சபையிலே பேசும்போது அதிலே ஆளும் கட்சியை இடையிலே இழுக்க வேண்டுமா? இது ஒழுங்கானதுதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் இல்லாதவரைப் பற்றிப் பேசலாம். பேசக்கூடாது என்று விதி இல்லை. குறிப்பிட்டுப் பேசலாம், தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தமிழக அரசு விவசாயிகளுக்கு துரோகம் செய்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தனிப்பட்ட முறையில் சொன்னதாகச் சொன்னார். அதை நாங்கள் நம்பலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வேண்டுமென்றால் நேரிலே, பேட்டியிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கொள்முதல் விலையை . . . .

**திரு. கே. பி. எஸ். மணி:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். இந்தச் சபையிலே மத்திய அரசிலே உள்ள பொறுப்புள்ள அமைச்சரைப்பற்றி 'ஒன்றும் தெரியாதவர்' என்று சொல்வது அந்த அமைச்சருக்கு, அந்தப் பதவிக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக அமையாதா? அப்பேர்ப்பட்ட கருத்தை பொறுப்புள்ள அங்கத்தினர் இந்தச் சபையில் கூறுவது தவறல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது அவையில் இல்லாதவர்களைப் பற்றியும் பேச லாம். இந்தப் பேரவையின் உறுப்பினர்களைப்பற்றி குறைவாகப் பேசக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் மத்திய அமைச்சர் இங்கு உறுப்பினர் அல்ல. ஆகவே, அவரைப்பற்றி இங்கே பேசக் கூடாது என்று விதி இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாரையும் தவருக நினைத்துப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 67-ல்--

'A member must not use offensive expression about the conduct of proceedings of the Parliament or any State Legislature '

நண்பகல் 12-00 என்றுதான் இருக்கிறது. மத்திய அமைச்சர்களைக் குறை கூறக் கூடாது என்று இல்லை.

பார்லிமென்டில் நடந்ததைப் பற்றி இங்கு குறைவாகப் பேசக் கூடாது. அவ்வளவுதான். அமைச்சர்களைப்பற்றி குறைவாகப் பேசக் கூடாது என்று இதில் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எந்தவிதத்திலும் நான் குறைவாகப் பேசவில்லை. அபிப்பிராயபேதங்களைத்தான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜனுதிபதி அவர்களைப் பற்றியும், கவர்னர் அவர்களைப் பற்றியும் குறைவாகப் பேசக் கூடாது என்றும் இருக்கிறது. மத்திய அமைச்சர்களைப்பற்றி பேசலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மத்திய அரசாங்கம் இப்போதுள்ள விலைவாசிகளை உத்தேசித்து குவின்டால் நெல்லுக்கு ரூபாய் 46-ல் இருந்து ரூபாய் 56 வரை கொடுக்கவேண்டுமென்று திர்மானம் செய்திருக்கிருர்கள். அந்த விலையைக் கூட தமிழக அரசு கொடுக்க வில்லை. ஏற்கனவே காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோது கொடுத்து வந்த விலையைத்தான் கொடுத்து வருகிருர்கள். தமிழக சர்க்கார், மத்திய அமைச்சர் அவர்களே அதை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்ஞர்கள். நான் மத்திய அமைச்சர் அவர்களிடம் கேட்ட போது அவர்கள் சொன்ஞர்கள், மாநில சர்க்கார் எந்த விலையை வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம், அதற்கு நாங்கள் ஒப்புதல் கொடுக்கிருேம் என்று. உங்கள் சர்க்கார் செய்யவில்லை என்ருல் விவசாயிகள் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற நிலை தான் என்று சொன்ஞர்கள். ஆந்திர சர்க்கார் க்வின்டாலுக்கு ரூபாய் 46-ல் இருந்து 60, 70 ரூபாய் வரை கொடுத்திருக்கிருர்கள். மேற்கு வங்காளத்தில், அங்கு காங்கிரஸ் சர்க்கார் இல்லை, ரூபாய் 60-ல் இருந்து ரூபாய் 70 வரை கொடுக்கப்படுகிறது. கேரளாவில், அங்கும் காங்கிரஸ் சர்க்கார் இல்லை, கூட்டணி சர்க்கார்தான் இருக்கிறது, ரூபாய் 60-ல் இருந்து ரூபாய் 75 வரையில் கொடுக்கப் படுகிறது. ஆகவே இங்குள்ள விவசாயிகளுக்கும் அப்படி ஏன் கொடுக்கக்கூடாது? உங்கள் மாநில சர்க்கார் அந்த விலையை





எங்களிடம் கேட்கவில்லை. அவர்கள் வற்புறுத்தியிருக்க வேண்டும். தமிழக விவசாயிகளின்பேரில் அவர்களுக்கு அக்கறையில்லை என்று அவர்கள் சொன்ஞர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிருர்கள் என்று சொல்லுகிருர்கள். அப்படி அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று சொல்ல எனக்கு உரிமை கிடையாது. ஊர் அறிய, உலகம் அறிய, எல்லோரும் அறிய இதே கோட்டையில் நடந்த பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இப்படி கேள்வி கேட்டபோது, இதுதான் நிர்ணயிக்கப்பட்ட விலை, இதைக் கொடுப்பதை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன், தமிழக சர்க்கார் செய்வது நியாயம், தமிழக சர்க்கார் ஒன்றுதான் உண்மையாக எங்களுடைய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு சரியாகச் செய்திருக்கிறது என்று என்னிடமல்ல, கோட்டையில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் சொல்லியிருக்கி ருர்கள். அதை மாற்றி அவர்களிடம் சொல்லியிருக்கலாம். அப்படி அவர்கள் சொல்லியிருந்தால் அது அவர்கள் இரண்டு பேர்களும் இடையே உள்ள விவகாரம். இது என்னிடமல்ல, உலகத்தினிடம் தெளிவுபடுத்திய விவகாரம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்றும், அது நல்லது என்று அவர்களும் சொல்லு வார்கள், எல்லோரும் சொல்லுவார்கள். இவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறீர்களா என்று கேட்ட தற்கு, அப்படி எந்தவிதமான உத்தரவும் போட எனக்கு உரிமை கிடையாது என்று அவர்கள் சொன்ஞர்கள். எந்த மாநில சர்க்கார் எந்த விலையைச் சொன்னுலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன், அது மாநில சர்க்காரின் பொறுப்பு என்ருர்கள். போனஸ் வேண்டுமானுலும் அதற்கு மேல் கொடுக் கலாம். காங்கிரஸ் சர்க்கார் இங்கிருந்தபோது நெல் விலை 42, 43 ரூபாய் இருந்தபோது மூன்று ரூபாய் இன்ஸென்டிவ் போனஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளிடம் அக்கறையுள்ள சர்க்காராக இருந்தால், உற்பத்தியில் நாட்டம் கொள்ளும் சர்க்காராக இருந்தால், நிச்சயமாக விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்கும் பொறுப்பு இருக்கிறது. தமிழக சர்க்கார் விவசாயி களுக்கு துரோகம் விளைவித்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். உண்பவர்க ளிடம் காட்டும் அக்கறை உண்டாக்குபவர்களிடம் காட்டப்பட வில்லையென்பதை விவசாயிகள் சார்பில் நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

படி அரிசித் திட்டம் வெற்றி பெறவேண்டுமென்ருல், அதிகம் வாக்குறுதிகள் கொடுக்கவேண்டுமென்ருல், உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்படவேண்டும்.

கொஞ்சம்தான் கொள்முதல் செய்திருக்கிறோம். வெளியே எவ்வளவோ இருக்கிறது. வெளியில் இதை விட இரண்டு மூன்று மடங்கு விலை இருக்கிறது என்று சொல்லலாம். திட்டவட்டமாக இரண்டு மூன்று மடங்கு அதிக விலைக்கு விற்றுக்கொள்ளலாம் என்றிருக்கிறதா? ஏழைகள் ஏதாவது நெல்லை எடுத்துக்கொண்டு போனால் கடத்தல் என்று கூறி அவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். களத்திலிருந்து வீட்டிற்கு நெல்லை எடுத்துச் சென்றால் தவறான முறையில் நெல்லைக் கொண்டு போகிறான் என்று குற்றம் சாட்டப்படுகிறது. கொள்முதல் நியாயமான அளவில் எல்லாவிடங்களிலும் நடைபெறவில்லை. கொடுத்தவன் இளிச்சவாயனாகவும், கொடுக்காதவர்கள் கெட்டிக்காரர்களாகவும் இருக்கிறார்கள். சேலம் ஜில்லாவிற்கு அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் வந்திருந்தபோது நான் அவர்களிடம் சொன்னேன், கிராமங்களிலிருந்து கொஞ்சம் விலைக்கு வாங்கி பட்டணத்தில் குறைந்த விலையில் போடுவதில் லாபம் இல்லை என்று. முதல் அமைச்சர் சொன்னதாக பத்திரிகையில் படித்தேன், பாருங்கள், கருத்திருமன் அனாவசியமாக குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறார்கள், நாங்கள் இங்கு 410 டன்தான் கொள்முதல் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் புள்ளி விவரப்படி சேலம் ஜில்லாவில் 3,37,000 ஏக்கர் நிலம் சாகுபடியில் இருக்கிறது. கோவையில் சாகுபடியிலுள்ள நிலம் சேலம் ஜில்லாவில் உள்ளதைவிடக் குறைவு. ஆனால் சேலம் ஜில்லாவைவிட இரண்டு பங்கு அதிகமாக கோவையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலிருந்து ஒரு அமைச்சர் இருப்பதால் இஷ்டம்போல் செய்யலாமா? தேர்தல் சமயத்தில் சங்கரியில் கொள்முதல் சரிவரச் செய்யப்படவேயில்லை. எங்கும் நியாயமாக, பாரபட்சம் இல்லாத நிலையில் செய்யும் நிலை இருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: சேலம் மாவட்டத்தில் இருந்து ஓர் அமைச்சர் இருக்கிறார் என்பதற்காக நெல் கொள்முதல் குறைவாகச் செய்யப்பட்டிருக்கிறது என்றால் கோவை மாவட்டத்திலிருந்து இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்னும் அதிகமாக குறைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்கள் ஜில்லா அமைச்சர்களுக்கு கெட்டிக்காரத்தனம் போதாது. எங்களைக் காட்டிக் கொடுத்து அதிகமாக கொள்முதல் செய்கிறார்கள். உங்கள் கெட்டிக்காரத்தனத்திற்கு உங்களை மெச்சுகிறேன். எங்கள் மாவட்ட அமைச்சர்கள் ஜாக்கிரதையாக இருந்து எங்கள் விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டுமென்ற விண்ணப்பத்தை சபாநாயகர் அவர்கள் மூலம் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அமைச்சர் கெட்டிக்காரர். ஆகவே, 3,37,000 ஏக்கர் நிலமிருந்தும் அந்த மாவட்டத்தில் 410 டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்ட அமைச்சர்கள்



* எங்கள் விவசாயிகளைக் காட்டிக் கொடுத்து அதிகப்படியான நெல்லை வாங்கிக் கொடுத்திருக்கிறார்களென்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

(இரண்டு உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

**திரு. டி. எஸ். ஆதிமூலம்**: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுமென்று சொல்லவில்லை. அவசரத்தில் *[redacted]* என்று சொல்லி விட்டார்கள். அந்தச் சொல்லை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்த ஒரு சொல் நீக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நம் தமிழ்நாட்டில் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது விவசாய உற்பத்தி சரிவர நடைபெற விடவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான என்ஜினீயர்கள்—மூவாயிரம், நாலாயிரம் பேர்கள்—வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு அளித்து, உற்பத்தியைப் பெருக்கினால் தான் நாடு சுபிட்சம் பெறமுடியும். வருகிற பட்ஜட்டில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது என்பது தெரியவில்லை. விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்றால் அவர்களுக்குக் கொடுக்கும் கொள்முதல் விலை லாபகரமாக இல்லாவிட்டாலும் நியாயமானதாக இருக்க வேண்டும், க்வின்டாலுக்கு ரூபாய் 60-ஆவது குறைந்த அடிப்படை விலையாகக் கொடுக்க வேண்டும். ரூ. 65 முதல் ரூ. 70 வரை கொடுக்கும் நிலை ஏற்படுமானால் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி நம் நாட்டின் பசியையும், பிணியையும் போக்க அவர்கள் பாடுபடுவார்கள். நாம் திட்டங்களை நீண்ட நோக்கோடு போடவேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்து உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்றும், பின்னர் உற்பத்தி அதிகமாக இல்லை என்றும் சொன்னால், மக்களிடம் போய் நாம் திட்டங்கள் போட்டிருக்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? கஷ்டமான நிலை, மழை பெய்யாத ஒரு நிலை ஏற்படலாம். எந்தக் கட்சி ஆண்டாலும் சரி, இயற்கையை ஒன்றும் செய்ய முடியாது. மீண்டும் மீண்டும் எல்லாவற்றிற்கும் காங்கிரஸ்தான் பொறுப்பு, அவர்கள் இருந்த போது தவறுகளே செய்து கொண்டிருந்தார்கள் என்று சொல்வதையெல்லாம் மறந்துவிட்டு இப்போது நாம் ஆளும் கட்சியில் இருக்கிறோம், நம் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அளவில் நிச்சயமாக அவற்றை நிறைவேற்றுவார்கள் என்று நினைத்து என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளைப்பற்றிய இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய மாண்புமிகு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதில் மிக முக்கியமாக அநேகமாக

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[திரு. மு. கருணாநிதி] [1968 பிப்ரவரி 17

துணை மதிப்பீடுகளைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதம்தான் இதில் பிரதிபலித்ததைக் காண முடிந்தது. துணை மதிப்பீடுகள் என்ற ஒரு தலைப்பில்தான் வித்தியாசமே தவிர வேறு எந்தவித வித்தியாசமும் இல்லாமல் அநேகமாக அதே கருத்துகள்தான் தொடர்ந்து பேசப்படுவது போன்ற ஒரு சூழ்நிலை இருந்தது.

இப்பொழுது என்னுடைய இந்த உரைக்குப் பிறகுகூட, கவர்னர் உரை மீது விவாதம் நடைபெறுகிற நேரத்திலே கூட புதிதாக வருகிறவர்கள் துணை மதிப்பீடு மீது நடக்கின்றது என்று எண்ணுகிற வகையில் ஒரேவிதமான விவாதம் தொடர்ந்து நடைபெறுவதை நாம் மறுப்பதற்கில்லை. முக்கியமாக காங்கிரஸ் தரப்பிலே உள்ளவர்கள் படியரிசி தேவை, படியரிசி தேவை என்பதை வேகமாக, வன்மையாக வலியுறுத்தினார்கள். சுதந்திராக் கட்சியினுடைய சார்பிலே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் படி அரிசியே தேவையில்லை என்பதற்கு பத்துக் காரணங்களைச் சுட்டிக் காட்டினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட ஒருவேளை திராவிட முன்னேற்றக்கழக அரசிற்காக டாக்டர் ஹாண்டே அவர்களை பேசச்சொல்லி இப்படி ஒரு திட்டம் செய்யப்படுகிறதோ என்று எண்ணிக்கொள்ளலாம். தயவு செய்து அவர்கள் அப்படி எண்ணிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். படியரிசித் திட்டம் ஏழைமக்களின் ஓரளவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் என்னும் அளவிலேதான் இந்த அரசும், அதற்கேற்ப உணவு அமைச்சரவர்களின் ஒத்துழைப்புடன் இந்த ஓராண்டு காலத்திலேயே கோவையிலும், சென்னையிலும், சென்னை சுற்றுப்புறங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நடத்திக்கொண்டு வருகிறோம். இது மற்றப் பகுதிகளுக்குப் பரவவில்லை என்னும் காரணத்தினாலேயோ அல்லது கொடுக்கின்ற படியரிசியிலே சில இடர்ப்பாடுகள், ஆங்காங்கு நிர்வாகத்திலே இருக்கின்ற சிக்கல்கள், ஆங்காங்கு கடை நடத்துபவர்கள் சிலரிடம் காணப்படும் இடர்ப்பாடுகள் காரணமாக இந்தக் கொள்கையே சரியில்லை என்று விவாதிப்பது அவ்வளவு சரியான வாதமாக இருக்காது. டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் சுட்டிக் காட்டிய குறைகளைப் போலுள்ள இந்தக் குறைபாடுகளை இந்த மன்றத்திற்கோ அல்லது துறையாளர்களுக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ எடுத்துச் சொன்னால் அதுபற்றி உடனடியாகக் கவனித்துத் தடைக்கற்கள் எறியப்பட்டு இந்தத் திட்டம் தகுந்த முறையில் நிறைவேற வழிவகைகளை இந்த அரசு மேலும் நல்ல முறையிலே ஆராய பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் விவசாயத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் இந்த அரசில் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசு பதவியேற்ற நேரத்திலே விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட ஆக்கம் ஊக்கம் இந்த அரசு பதவிப்பொறுப்பை ஏற்ற பிறகு அளிக்கப்பட்ட ஆக்கம், ஊக்கம், அதற்குச் செலவழித்த இந்தத் தொகை



1968 பிப்ரவரி 17] [திரு. மு. கருணாநிதி]

களை எடுத்துச் சொல்வது என்பது சென்ற அரசு விவசாயிகள் பிரச்சினையிலே இப்படி கவனம் செலுத்தவில்லை என்று குற்றம் சாட்ட அல்ல, புதிய அரசு அந்தப் பிரச்சினைகளை விட்டுவிடவில்லை, அதைவிட நேர்த்தியான முறையில், அதைவிடத் தீவிரமாக, அதைவிட அக்கறையாக அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறது என்பதற்காக இந்தப் புள்ளிவிவரங்களைக் கொடுப்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1966-67-இல் உணவு உற்பத்தித் திட்டத்திற்காக உரம், விதை, டிராக்டர்கள் கடன் என்ற இந்த வகையிலே 428 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-இல் உரம், விதை, டிராக்டர்கள் கடன் என்ற இந்த வகையிலே 482 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் சிறு பாசனத்தில் கிணறுகளுக்கு, புதிய கிணறுகள் சப்சிடி ஸ்கீமிற்கும் சேர்த்து 501 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-இல் 515 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. எஸ்.எம்.ஐ.பி. என்று சொல்லக்கூடிய திட்டத்திற்கு 1966-67-இல் 306 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-க்கு இன்னும் எஸ்டிமேட் "பைனலைஸ்" ஆகவில்லை. 273 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 'பைனலைஸ்' ஆகி வருகிற நேரத்தில் 306 லட்சத்திற்கு மேல் போகும். அந்த அளவிற்குச் செலவழிக்கப்படும் நிலை இருந்தது. சிறு பாசனத் திட்டங்களுக்கு இந்த அரசு செலவழித்தது விவசாய இலாக்கா மூலம் டியூப் வெல்ஸ், போர் வெல்ஸ் போன்ற இந்தத் திட்டங்களுக்கு 1966-67-இல் 5.47 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. 1967-68-இல் "பைனல் எஸ்டிமேட்" வராத இந்த நிலையில் 5 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பிரைவேட் வெல்ஸ்-க்கு 1966-67-இல் 51 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1967-68-இல் 87 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய், வடிமுனை குழாய் சம்பந்தமாக 1966-67-இல் 43 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1967-68-இல் அதற்குக் குறையாமலேயே, 43 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. டி.சி.ஆர்-க்காக (டிசில்ட்டிங்-கம்-ரெக்ளமேஷன்) 1966-67-இல் 8 லட்சம் ரூபாய், 1967-68-இல் 7 லட்சம். பம்பு செட்டுகள் வழங்க 1966-67-இல் 175 லட்சம் ரூபாய், 1967-68-இல் லேண்ட் மார்ட்கேஜ் பேங்கின் மூலம் கடன் வழங்க 414 லட்சம் என்ற அளவில் ஒதுக்கப்பட்டு உருவாகியிருக்கிறது. மொத்தத்திலே விவசாயத்திற்கு மிக உதவிகரமாக இருக்கின்ற இந்தச் சிறு பாசனத் திட்டங்களுக்குச் சென்ற அரசு 1966-67-இல் 11 கோடி ரூபாய் செலவழித்தது. 1967-68-இல் இந்த அரசு அதற்குமேல் 2 கோடி போட்டு 13 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. ஆக, விவசாயத் துறையிலே இந்த அரசு காட்டுகின்ற அக்கறையினுடைய அடையாளத்திற்காகத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் கூறப்பட்டனவே தவிர வேறு எதற்காகவும் காட்டப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நீங்களும் அவ்வாறு கருதமாட்டீர்கள். மத்திய அரசு 1966-67-ஆம் ஆண்டிற்கு இந்த

[திரு. மு. கருணாநிதி] [1968 பிப்ரவரி 17

சிறு பாசனத் திட்டங்களுக்கு 3 கோடி ரூபாய் தந்தது. இந்த 3 கோடி ரூபாயையும் சேர்த்து 11 கோடி ரூபாய் அளவில் 1966-67-இல் சிறு பாசனத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டது. ஆனால் 1967-68-இல் மத்திய அரசு இந்த 3 கோடி ரூபாயை நமக்குத் தரவில்லை. அப்படியிருந்தும் 13 கோடி ரூபாய் சிறு பாசனத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தின் மேன்மையைக் கருதி, விவசாயத்தின் வளர்ச்சியைக் கருதி அவ்வாறு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்னும் நிலையில் விவசாயத்திற்கு இந்த அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத்திற்கு இந்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவில்லை என்று கூறும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட இங்கு நிற்கிறவரையில் அவ்வாறு சொல்லலாம். ஆனால் உட்கார்ந்து தனியாக இருக்கும்பொழுது பேசினால் அவரேகூட அதை ஒப்புக்கொள்ளமாட்டார். நின்று பேசுகிற வாதத்தை உட்கார்ந்துவிட்டால் அவரே ஒப்புக்கொள்ளமாட்டார். அவர் நிலைக்கண்ணாடியின் முன் நின்று பேசினால் நிலைக்கண்ணாடியேகூட மனச்சாட்சியறிய இப்படி உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்லலாமா என்று அவரையே திருப்பிக் கேட்கும். ஏனென்றால் நண்பர் கருத்திருமன் அவர்களுடைய உள்ளம் தூய உள்ளம், வெள்ளை உள்ளம். அந்த உள்ளத்திற்கு அவர் பதில் சொல்லியாக வேண்டும். ஆக, மத்திய அரசு கொடுத்த 3 கோடி ரூபாய் கிடைக்காத நேரத்திலும் 2 கோடி ரூபாய் அதிகமாகச் சேர்த்து விவசாயத்திற்கு, இந்தத் திட்டங்களுக்கு நாம் செலவழித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பொதுப்பணித்துறையைப் பொறுத்து நீர்ப்பாசனத்திற்கு 1966-67-இல் 461 லட்சம் ரூபாய் செலவழித்தோம். இதிலே 1967-68-இல் கொஞ்சம் குறைவாக, 422 லட்சம் செலவழிக்கப்பட்டது. அதற்குக் காரணம் நீரார் திட்டம்பற்றி பேச்சு நடந்துகொண்டிருப்பதுதான். அந்தப் பிரச்சினை தீர்ந்தால் அதிலும் முன்பு செலவழித்த தொகையைச் செலவழிக்கும் அளவுக்கு நாம் இருக்கிறோம். இந்த பம்பு செட்டுகளைப்பற்றி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளதைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத்தலைவரவர்கள் எடுத்துச்சொன்ன பிரச்சினை கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. அங்கு அப்படிப்பட்ட தவறு நடந்திருக்குமேயானால், அங்கு அவ்வாறு அலட்சியப்படுத்தப்பட்டிருக்குமானால் அதை உடனடியாக இந்த அமைச்சரவை கவனித்து தக்க வகையிலே யோசித்து அதைப்பற்றி ஆராய்ந்து நல்லவகையிலே கவனிக்கும் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சேலத்திலே இருக்கிற கொள்முதலைவிட கோயம்புத்தூரிலே அதிக



1968 பிப்ரவரி 17] [திரு. மு. கருணாநிதி]

மாகச் செய்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். சேலம் மாவட்டத்தில் டார்ஜெட் 5,000. கோவை மாவட்டத்தில் 8,000 அல்லது 10,000 என்ற அளவிலேதான் என்று கருதுகிறேன். இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. சேலம் மாவட்டத்தையும், கோவை மாவட்டத்தையும் ஒரு ஆகாய விமானத்திலே சென்று பார்த்தால் எது வளமான மாவட்டம் என்று நன்றாகத் தெரியும். சேலத்திலேயிருந்து வந்திருப்பவர்களையும், நமது எதிர்க் கட்சித் தலைவரவர்களையும் பார்த்தாலும் நன்றாகத் தெரியும். ஆகவே, சேலம் மாவட்டத்தில் 400 டன் தேர்தல் காலத்திலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சங்கரியில் திரு. கருத்திருமன் அவர்களும், காங்கிரஸ் தலைவரும் சென்றபொழுது, ஏழை மக்களுடைய பயனையெல்லாம் உறிஞ்சி உங்களுடைய உழைப்பையெல்லாம் கொட்டி விளைவித்த அரிசியை இங்கிருந்து எடுத்துக்கொண்டுபோய் சிங்காரபுரி சென்னையிலும், கோலாகல நகரமான கோயம்புத்தூரிலும் அரிசியைப் போடுகிறார்களே, இது நியாயமா ? சினிமாக்காரர்களுக்குப் படியளக்கிறார்களே, இது நியாயமா ? என்று கேட்டார்கள். சங்கரியில் இதுவரையிலும் எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் சேலத்தில் மொத்தம் 400 டன் என்றால் சங்கரியில் 75 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான் நாம் செய்துவிட முடியும். இந்த அளவுக்கு மாவட்ட ரீதியாக, தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களுக்கு இருக்கிற கணக்கையும், சேலம், கோவை போன்ற மாவட்டங்களுக்கு இருக்கிற கணக்கையும் பார்த்து, இந்தக் கொள்முதலை நாங்கள் ஏதோ புதிதாக—இந்த அரசு உருவாகிய பிறகு—கொண்டு வந்ததைப் போலவும் அவர்களுடைய ஆட்சியிலே கொள்முதலே இல்லாதது போலவும் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான பூதத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் கொண்டு வந்துள்ளதுபோலவும் பேசுவது முறையாகாது.

கொள்முதல் இப்பொழுதைக்குத் தேவைப்படுகிற ஒரு கொள்கையாகும். அந்தக் கொள்கையை நாம் இப்பொழுது எடுப்பதற்கு இல்லை. கொள்முதலில் நெல் வாங்குகிறோம் என்றால், அரிசி வாங்குகிறோம் என்றால், விவசாயிகளுக்கு அந்தக் கொள்முதல் பணத்தை அதிகமாகத் தரவேண்டுமென்று பேசுகிற அதே நேரத்தில் அப்படி விவசாயிகளிடத்திலே வாங்குகிற அந்த நெல்லும், அரிசியும் வேறு மாநிலங்களுக்கு விற்கப்படுகிறதா? கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டுமென்று கூறியநேரத்தில் முதலமைச்சர் அவர்கள் நல்லமுறையிலே இதற்கான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு, பாடுபடுகிறவர்களுக்கு, தமிழ் நாட்டிலே இருக்கிற ஏழை மக்களுக்கு விநியோகிப்பதற்குத்தான் நாம் நெல்லை வாங்குகிறோம். அப்படியில்லாமல் இவைகளை வாங்கி விற்கிற—அந்த வியாபாரத்திலே ஈடுபடுகிற—சர்க்காராக இது இருக்குமானால் விவசாயிகளிடத்திலே அதிக விலை கொடுத்து

வாங்குவதற்கு நியாயம் இருக்கமுடியும். இது ஏழை எளிய மக்களுக்கு இப்பொழுது இருக்கிற விலையை விடக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தோடு ஆலோசிக்கப்படுகின்ற காரணத்தாலேதான் இப்பொழுது கொள்முதலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுவதாக இல்லை. மத்திய அரசினுடைய உணவு அமைச்சர் அவர்களும் இதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள், 'என்னிடம் தனியாக ஏதோ சொன்னார்கள்' என்று குறிப்பிட்டார். அவர் அவரிடம் ஏதோ தனியாக சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டால் நமது உணவு அமைச்சர் அவர்களும் 'என்னிடம் தனியாக இப்படி சொன்னாரே' என்று சொல்லலாம். பொதுவாக பத்திரிகை நிருபர்களிடத்திலே அறிவித்தது இன்றைய தமிழக அரசினுடைய இந்த முறை ஏற்கத்தக்கது; இதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்பதுதான். இது சரியானதுதான், இது தவறானது அல்ல என்ற முறையிலேதான் மத்திய அரசினுடைய உணவு அமைச்சர் அவர்கள் இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் துணை மதிப்பீடுகள் விவாதத்திலே பேசிய நேரத்திலே எதிர்க்கட்சி துணைத் தலைவர், தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி அனைத்தும் கெட்டுவிட்டது, எங்களுக்கே பாதுகாப்பு இல்லை என்ற ஒரு பாதுகாப்பற்ற பயங்கரமான சூழ்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் வாழ்வது போன்ற ஓர் உருவகத்தை இங்கே சித்தரித்துக் காட்டினார்கள். அது வெறும் உருவகமே தவிர, உள்ளபடியே உண்மை நிலை அல்ல. தமிழ்நாட்டில் என்ன பாதுகாப்பு யாருக்குக் குறைந்து விட்டது? இது ஒரு சாதாரண விஷயம். புராணிகர்களுக்கு இது பெரிய விஷயம். மகாமகம் தமிழ்நாட்டில் நடைபெற்றது; பாட்னாவில் நடைபெற்றது. பாட்னாவில் நடைபெற்ற மகாமகத்தில் ரயிலே கவிழ்ந்தது. ரயில்வே ஸ்டேஷன் சூறையாடப்படக்கூடிய அளவிற்கு பெரிய அமளி நடைபெற்றது. தமிழ் நாட்டில் 20 லட்சம் பேர் கும்பகோணம் மகாமகத்தில் கலந்து கொண்டார்கள் என்ற செய்தி வந்தது. மிக அமைதியான முறையில் நடைபெற்றது. போலீஸ் பாதுகாப்பு பந்தோபஸ்து ஏற்பாடுகள் சாலை வசதிகள் அத்தனையும் செய்யப்பட்டது என்கின்ற செய்திகளையும் படிக்கிறோம். மகாமகத் திருவிழாவையும்கூட பாதுகாப்பாக நடத்த வேண்டும். அதிலே யாருக்கும் ஒரு தீங்கும் ஏற்படக்கூடாது என்பதிலே தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறது. இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகள் எல்லாம் கெட்டுவிட்டது என்று எதை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள்? அண்மையில் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கல்லெறியப்பட்டதை வைத்துக்கொண்டா சொல்கிறீர்கள்? கோவையிலே நடைபெற்ற சம்பவம் என்ன? மாணவர்கள் கறுப்புக் கொடி காட்டினார்கள். அன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்,



மாணவர்களைப்பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சொல்லவில்லை, வந்த கூட்டத்தைப்பற்றித்தான் சொன்னார் என்று சொன்னார். நான் அப்பொழுதே மறுத்துச் சொன்னேன். வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களைத் தாக்கச் சென்ற மக்களைத் தாக்கினார்கள் போலீஸ்காரர்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, மாணவர்கள்தான் வன்முறையில் ஈடுபட்டிருப்பதாக அவருடைய அறிக்கை சொல்லுகிறது என்று அவர்களுக்கு எடுத்துக்காட்டினேன். மாணவர்களுடைய மனம் புண்படும்படியான ஒன்றை தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் கூறி விட்டார்கள். அதற்காக கொதித்தெழுந்த உணர்ச்சியின் காரணமாக சிலபல இடங்களிலே இத்தகைய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடந்ததில் வன்முறைக் காரியங்கள் நடைபெற்றன. அதை உடனடியாகக் கண்டித்து முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விடுத்தார்கள். நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை மிகுந்த கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த 20 ஆண்டுக் காலத்தில் எத்தனையோ முறை எதிர்க் கட்சியிலே இருந்த நாங்கள் தாக்கப்பட்டிருக்கிறோம். எத்தனையோ கூட்டங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரமல்ல; சுதந்திரா கட்சி மாத்திரம் அல்ல; கம்யூனிஸ்டு கட்சி மாத்திரம் அல்ல; எல்லாக் கட்சியைச் சேர்ந்த கூட்டங்களும் கலைக்கப்பட்டன. இந்தி மீது எங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்கு 1965-ஆம் ஆண்டு எங்களுடைய சொந்த வீடுகளில் எங்களுடைய சொந்தப் பொறுப்பிலே கறுப்புக் கொடி கட்டிக் கொள்ளக்கூட உரிமை தரப்படவில்லை. கறுப்புக்கொடி காட்டக் கூட எங்களுக்கு உரிமை கிடையாது. இன்றைக்கு ஆயிரம் பேர் இரண்டாயிரம் பேர் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுகிறதைப் பார்த்து, அவர்களுக்கு உரிமை உண்டா இல்லையா என்ற விவகாரம் எழுகிறது. அன்றைய தினம் முதலில் எல்லா இடங்களிலும் கறுப்புக் கொடி காட்டத் திட்டமிட்டோம். இதனால் குழப்பம் ஏற்படக் கூடும் என்று அறிந்த அறிஞர் அண்ணா அவர்கள் அவரவர்களுடைய தனிப்பட்ட இல்லங்களிலே கட்டிக் கொண்டால் போதும். அவர்களுடைய உடைகளிலே கறுப்புக் கொடி அணிந்தால் போதும் என்று விடுத்த அறிக்கைக்கு இணங்க எங்களுடைய சொந்தப் பொறுப்பில் எங்களுடைய வீடுகளில் கறுப்புக் கொடி கட்டிய நேரத்தில், போலீஸ் படை சூழ குண்டர்கள், சமூக விரோதிகள்—நான் எந்தக் கட்சிக்காரர் என்று குறிப்பிட்டுச் சொல்லி யாருடைய மனதையும் புண்படுத்தவில்லை—எங்களுடைய வீடுகளில் ஏறி கொடிகளையே நாசப்படுத்தவில்லையா? என்னுடைய தாயார், சகோதரிகளை, பெண்டு பிள்ளைகளை வீட்டிலிருந்தவர்களைப்பற்றி எல்லாம் வீட்டு வாயிற்புறத்திலே நின்றுகொண்டு கேவலமான மொழிகளை உதிர்க்கவில்லையா? ஓர் அனுதாபச் சொல்—ஓர் ஆழ்ந்த இரங்கல்—ஒரு வருத்தம் தெரிவிக்கின்ற அறிக்கை—எந்த நேரத்திலாவது அன்றையதின முதலமைச்சரவர்

[திரு. மு. கருணாநிதி] [1968 பிப்ரவரி 17

களால் விடப்பட்டது உண்டா? இன்றையதினம் சட்டம், ஒழுங்கு, அமைதி எல்லாம் கெட்டு விட்டது, கெட்டு விட்டது என்று பேசுகிறார்கள். பக்கத்து மாநிலம்—மைசூர் மாநிலம்—காங்கிரஸ்காரர்களால் ஆளப்படுகின்ற மாநிலம்தான். அங்கே நமது மதிப்புமிக்க துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் வந்தபோது ஏற்பட்டக் குழப்பத்தின் காரணமாக 6 பேர், 8 பேர் சுடப்பட்டுச் சாகக்கூடிய அளவு அமளி நடைபெற்றதாகச் செய்திகள் வருகின்றன. ஆனால் இங்கே ஒரு கூச்சல், இங்கே சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டு விட்டது, கெட்டு விட்டது என்று. டெல்லியிலுடைய அமைச்சர் வந்தார்கள். கூட்டத்திலே இருந்து கல் வீசப்பட்டது. அதை யாரும் ஆதரிக்க மாட்டார்கள். கறுப்புக் கொடி காட்டினார்கள். மாணவர்களில் யாரோ கல் வீசி இருக்கலாம், அல்லது மாணவர்களுடைய சொல்லுக்குக் கட்டுப்படாத ஓர் ஆளாகக் கூட இருக்கலாம். அந்த விவாதத்தைக் துவக்குவதற்கு இப்பொழுது வழி இல்லை. யாரோ ஒருவர் கல்லை வீசி விட்டார். அது டில்லியிலே இருந்து வந்த துணை அமைச்சருடைய தலையிலே பட்டது. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். உடனடியாக, 'போலீஸார் வேண்டுமென்றே திட்டமிட்டுத்தான் இதைச் செய்திருக்கிறார்கள், ஆகவே, எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை' என்று கூறுவது? நேற்றைய தினம் கூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'நாங்கள் எடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை எல்லாம் எடுக்கிறோம். ஆனால் அதையும் மீறி சில சமயங்களில் வன்முறைகள் நடைபெறுகின்றன' என்று குறிப்பிட்டார். இன்றையதினம் நம்மை எல்லாம் இங்கே உட்கார வைத்திருக்கிற, ஜனநாயகப் போஷகர் என்று பெருமை பேசக் கூடிய அளவுக்கு இந்தியாவினுடைய பிதா என்று போற்றப்பட்ட மகாத்மா காந்தி அவர்கள் கல்லடிப்படுவார் என்று பல முறை எச்சரிக்கப்பட்டு, இரண்டொரு முறை அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தில் குண்டுகள் வீசப்பட்டு, இரண்டொரு முறை பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போனபோது கத்தியால் குறிபார்க்கப் பட்டார் என்றெல்லாம் செய்திகள் வெளியான பிறகும் அவர் குண்டடி பட்டு மடிந்தார் என்றால் அது என்ன திட்டமிட்டா போலீஸார் குண்டடிபடுவார் என்று தெரிந்தா விட்டு வைத்தார்கள்? கூட்டத்திலே கூடியுள்ள யாரும் அறியாத நேரத்தில் திட்டமிட்டிருந்த ஒரு காரியத்தை செய்து விட முடிகிறது. ஆகவே, அதைத் தடுக்க இயலாத காரணத்தால் போலீஸ் அதற்கு உடந்தை என்று கூறுவது? இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு வேண்டுமென்றே காங்கிரஸ்காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க மறுக்கிறது என்று கூறுவது தவறான விவாதமாகும். நமது மதிப்பிற்குரிய முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் டில்லிப் பட்டணத்தில் இருந்தபொழுது அவருடைய வீட்டிற்குள்ளேயே குண்டர்கள் நுழைந்தார்கள். டெல்லி தெருக்களிலே ரத்த மழை பொழிந்தது. அங்கு கூடியிருந்தவர்கள் பலவந்தமாகப் போலீஸாரைத் தாக்கினார்கள். அதற்காக, சட்டம்,



1968 பிப்ரவரி 17] [திரு. மு. கருணாநிதி]

ஒழுங்கு, அமைதி குலைந்து விட்டது உடனே ராஜினாமா செய் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்? காமராஜருடைய உயிரையே பாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்தன. சூலாயுதத்தையும் வேலாயுதத்தையும் கொண்டுவந்து அவரைத் தாக்க முற்பட்டனர். உடனே சட்டம், ஒழுங்கு, அமைதி குலைந்து விட்டது, போலீஸாரால் இம் மூன்றையும் நிலைநாட்ட முடியவில்லை, ஆகவே போலீஸாரே தேவையில்லை என்று அங்கே கூறி விட்டார்களா?

கடந்த ஜனவரி 1-ஆம் தேதி அன்று டெல்லிப் பட்டணத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிற தெருவில் 10, 20 இளைஞர்கள் குடித்து விட்டு இந்தியா வந்திருக்கிற வெளிநாட்டுத் தூதுவர் ஒருவருடைய மனைவியை மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு டாக்டர் அதே தெருவிலே போயிருக்கிறார் அவருடைய மனைவியுடன் அவர் போன காரை நொறுக்கி, டாக்டருடைய மனைவியை வெளியே இழுத்து அவர்களையும் மானபங்கம் செய்திருக்கிறார்கள். ஒரு நகர மன்ற உறுப்பினரையும் அவருடைய மனைவியையும்—இருவரையும் துன்புறுத்தியிருக்கிறார்கள். அவருடைய மனைவியையும் மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகாமையிலேதான் இவ்வளவும் நடைபெற்றிருக்கின்றன. அந்தத் தெருவிலேயே இருந்தும் அந்தப் போலீஸாரால் திடீரென்று ஏற்பட்ட தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. அங்கே நீதி விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்ட நிலையிலும் மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கக்கூடிய அளவுக்குத்தான் நீதி விசாரணை நடைபெறுகிறது—இவ்வாறு பெரிய காரியங்கள் நடைபெற்ற பிறகும் கூட. ஆகவே, சட்டம், ஒழுங்கு, அமைதி, மிக கெட்டுவிட்டன என்று கூறுவது பொருந்தாத வாதமாகும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கும், தொடர்ந்து பேசி வருகிற காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் பதிலாக அளிக்க விரும்புகிறேன். பிற் பகல் 12-30

வேலைவாய்ப்பு குறைந்துவிட்டது இந்தப் புதிய அரசில் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். படித்த என்ஜினியர்களெல்லாம் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், அமைப்பில், படித்திருக்கிற என்ஜினியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அவர்களைக் கொண்டுவந்து, டிலாகாக்களில் வேலைக்கு அமர்த்தினால், உடனே முன்பு அந்த வேலையில் இருந்த சில 'அன்குவாலிபைட்' என்று சொல்லத்தக்க அளவிலே, சூபர்வைசர்ஸ் என்ற அளவிலே பதவியில் உள்ளவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. ஆகவே, அவர்கள் வேலைக்கு வந்தால், இவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. ஆகவே, பார், பார், வேலை வாய்ப்பை இழந்தார்கள் என்று கூறப்படுகிற கூற்றுக்கும் இந்த அரசு சமாதானம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணராதவர்கள் அல்ல. இந்த வேலை

வாய்ப்பு இல்லாத நிலைமை ஏன் ஏற்பட்டது? நம்முடைய திட்டங்களெல்லாம் மத்திய அரசாங்கத்தினால் ஆரம்ப காலத்திலிருந்தே ஒழுங்காக போடப்படாத காரணத்தினால், ஒழுங்காக உருவாக்கப்படாத காரணத்தினால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏழை எளியோர்களுடைய இல்லங்களைத் தொடாத காரணத்தினால், இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. இன்றைக்குப் போடப்பட்டிருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் சரிசமமாக நடை போட ஆரம்பித்திருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு அடி எடுத்து வைப்பது என்று சொல்லாமல் சரிசமமாக நடை போட்டிருக்குமானால், ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்திருக்க முடியும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய என்ஜினியர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பரிந்து பேசினார்கள். நன்றி செலுத்திக்கொள்கிறேன். நிலைமைகளை நாம் உணரவேண்டும். மத்திய அரசு அந்த அளவுக்கு நம்மோடு ஒத்துழைக்கவில்லை. விவசாயத்தைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். ரூ. 20 கோடி கேட்டோம். எதற்காக? உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ. 20 கோடி மத்திய அரசாங்கத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கேட்டது.

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| எஸ். எம். ஐ. பி-க்காக | 425 |
| புதிய கிணறுகளுக்கு சப்ஸிடி ஸ்கீமுக்காக | 306 |
| பம்பு செட் ஸ்கீமுக்காக | 409 |
| கம்யூனிடி வெல்ஸ் ஸ்கீமுக்காக | 27 |
| பிரைவேட் டியூப் வெல்ஸ்-க்காக | 112 |
| பில்டர் பாயிண்டு டியூப் வெல்ஸ்-க்காக | 61 |
| ஸ்டேட் டியூப் வெல்ஸ்-க்காக | 13 |
| டிராக்டர் ஹயரிங் ஸ்கீமுக்காக | 185 |
| ரூரல் எலக்டிரிபிகேஷனுக்காக | 400 |

என்ற அளவிலே ரூ. 20 கோடி தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டது. அந்த ரூ. 20 கோடி தமிழக அரசுக்குத் தரப்பட்டிருக்குமானால், நிச்சயம் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல, இன்னும் பல பகுதிகளுக்கு நாம் படி அரிசி திட்டத்தை விரிவுபடுத்தியிருக்க முடியும். ஆனால், இதை அளிக்காதது மாத்திரம் அல்ல. 1966-67-ல் தந்த ரூ. 3 கோடி கூட 1967-68-ல் தருவதற்கு தயக்கம் காட்டிவிட்டார்கள். இந்த நிலையிலே நாம் நமக்குள்ளே இருக்கிற பண்டத்தை வைத்துக்கொண்டு தான் நாம் நம்முடைய காரியங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு நமக்கு நிரம்பத் தேவை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைந்த நம்பிக்கையோடு சொன்னார்கள். 'இன்னும் இரண்டு மாதங்களில் ஒரு படி அரிசித் திட்டம் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று நம்புவோம், இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் மூன்று படி அரிசித் திட்டம் அமலுக்கு வந்துவிடும் என்று நம்புவோம்' என்று சொன்னார்கள். அதே பாணியில் நானும் பேசினால் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒத்துழைப்போடு ரூ. 20 கோடி மத்திய அரசு சாங்சன் செய்யும் என்று நம்புவோமாக என்றும் நானும் பேசலாம். ஆகவே, அவர்கள் இப்படிப்பட்ட நல்ல ஒத்துழைப்பை நமக்குத் தருவார்களேயானால் நாம் இந்த விஷயங்களில் வெற்றிகரமான சூழ்நிலைகளைக் காண முடியும் என்று கூறி, இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கம் அளிப்பார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது உற்பத்தி பெருகாமல் நோட்டு அடிப்பதிலே பயனில்லை என்று சொன்னார்கள். அதே பாடத்தைத் தான் 20 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை நோக்கிச் சொல்லிக்கொண்டிருந்தது. ஆகையினால்தான், நீங்கள் அதைச் செயல்படுத்தவில்லையே, நாங்களாவது செயல்படுத்தலாம் என்பதற்காகத்தான் அந்த அதிகாரத்தை நாங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் உடன்படுவார்களா?

4. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணை நிதிக் கோரிக்கையைப் பற்றிய பொது விவாதம் முடிவடைந்தது. அடுத்து, ஆளுநர் அவர்களின் பேருரையின்மீது விவாதம் இனிமேல் தொடர்ந்து நடைபெறும். உறுப்பினர்கள் 10 நிமிடம் என்ற காலவரைக்குள் உரையாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. வீரமணி அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. சி. வீரமணி :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த்தாயின் மூத்த தலைமகனாக அண்ணா அவர்களின் ஆட்சியின் கீழ் என் கன்னிப் பேச்சினை பேசுவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி கூறும் முகத்தான் ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு உயிர் நீத்த கழகக் காளைகளுக்கும், தமிழ் காக்க தன் உயிர் நீத்த மாணவர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணல் காந்தி அவர்கள் மறைந்து விட்டாலும், அவருடைய உயிர் நாடியான கொள்கைகள் மறக்கப்படவில்லை என்பதற்கு சாட்சியாக அவர்களுடைய உருவப் படத்தை மாமன்றத்திலே வைத்திருக்கிறோம். அவர்கள் தனது "ஹரிஜன்"

[திரு. சி. வீரமணி] [1968 பிப்ரவரி 17

என்ற ஏட்டில் 'மறு பிறவி என்பதை நான் நம்பவில்லை, அப்படி மறு பிறவி எனக்கு இருந்தால், ஒரு ஏழை அரிஜன வகுப்பில் பிறக்க வேண்டும், என்ற விருப்பததைத் தெரிவித்து, அபபடித் தான் அரிஜன வகுப்பிலே பிறப்பதன் மூலம் தான் அரிஜனங் களுடைய ஏழ்மையையும், அவர்களுடைய துயரத்தையும் நீக்க நான் பாடுபட முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார்கள். அப்படிப் பட்ட உத்தமர் அண்ணல் காந்திஜி அவர்களுடைய கொள்கையிலே "கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்ததுபோல" காங்கிரஸ் நண்பர்கள் அந்தத் திட்டங்களை யெல்லாம் பாழ்படுத்தி விட்டார் கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய நல்ல வாய்ப்புகளை உண்மையிலேயே செய்துகொடுக்கவில்லை. அவர்கள் "அரிஜன நல இலாகா" என்ற ஒரு இலாகாவை ஏற்படுத்தி, அரிஜனமக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு அதை ஒரு விளம்பர சுவரொட்டியாக பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, அரிஜன மக்களுக்கு உள்ளபடியே நம்பிக்கை தரும் வகையில் திட்டங்களை தீட்டவில்லை.

(திரு. வி. எஸ். கோவிந்தராசன் தலைமை)

அரிஜனங்களுக்கு விழிப்பு உணர்ச்சி ஏற்படவில்லை. அரிஜனங் களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தவில்லை. எனவே அரிஜனங் களுக்கு எந்தவிதமான வசதியும் ஏற்படுத்தித் தராமல் அவர்தந்த பட்டப்பெயரை தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தந்து, அந்தப் பட்டப் பெயர் தான் நிலைத்ததே தவிர, என்ன திட்டம் போட் டார்கள் என்றால், ஒன்றுமில்லை. எந்த அளவுக்கு சமுதாயத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது ? ஜாதி வேற்றுமை ஒழிக்கப்பட வில்லை 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில்.

இந்த மாமன்றத்தில் நான் இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் தீண்டாமை நாட்டில் ஒழிக்கப்பட வில்லை. தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்றால், அதிலுள்ள கருத்துக்கள் ஆராயப்படவேண்டும். அந்தத் தீண்டாமை என்பது தொழிலின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. தொழில் வர்ணங்கள் அடிப்படையில் ஏற்பட்டது. ஆகவே, இதைப்போக்க வேண்டுமென்றால் வர்ணங்களின் அடிப்படையிலே ஏற்பட்ட தொழில் துறைகளிலே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். ஒருவர் ஒரு நல்ல நிலையில் வாழவேண்டுமென்றால், சமுதாயத்தில் எல்லோருடனும் ஒன்றுபடக்கூடிய தன்மையை பெற்றிருந்தால் தான், நல்ல வாய்ப்புகளைப் பெற முடியும். மற்ற சமுதாயங் களுடன் ஒன்றுபடக்கூடிய சூழ்நிலை தாழ்த்தப்பட்டவர்களுக்கு இல்லாத காரணத்தால், சமுதாயத்தில் மேலும் மேலும் கீழே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, ஏழ்மையில் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, தொழிலில் மாற்றங்கள் தேடிக் கொடுக்கப்படவில்லை. பரி தைக்கும் செக்கிலியனுக்கு அந்தத் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட என்ன வழி இருக்கிறது? அதே போன்று தோட்டி தொழிலில் உள்ளவர்கள் முன்னேறுவதற்கு என்ன வழியிருக்கிறது. அந்தத் தொழிலில் வளர்வதற்கு என்ன



1968 பிப்ரவரி 17] [திரு. சி. வீரமணி]

வழி இருக்கிறது? ஆகவே, தொழில் வளத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும், தொழிலுக்கு மதிப்பு அளிக்கப்படக்கூடிய தன்மை இருக்க வேண்டும். தொழிலுக்கு மதிப்பும், வாய்ப்பும் அளிக்காமல் இருப்பார்களேயானால், அரிஜன மக்கள் மேலும் மேலும் ஏழ்மை யில் சிக்கி தவிக்கவேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. அவர் களுடைய குழந்தைகள் ஏழ்மைத் தனத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றன. தான் பெற்ற பிள்ளைகளை, தான் பேணி வளர்த்த பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்ப முடியாமல், ஐந்து வயது குழந்தையை பண்ணையங்களில் கூலிவேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்படிக் குழந்தைகளுடைய ஊதியத்தைப் பெற்றுத் தான் வயிற்றைக் கழுவக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே ஏழைகள் காப்பாற்றப்பட வேண்டும். அரிஜன மக்கள் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை கட்டாயமாக பள்ளி களுக்கு அனுப்ப வேண்டும். அவர்களுக்குக் கட்டாயமாக கல்வி கற்பிக்க வேண்டும் என்பதை சட்டமாக்க வேண்டுமென்பதை, இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, அரிஜன இலாகா என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதனால் மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை 20 ஆண்டு காலத்தில். ஆகவே, அரிஜன மக்களுக்கு ஒரு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்தி, இந்த அரசு அரிஜன மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும்படி தொழில் மாற்றத்தை ஏற்படுத்தித் தந்து, அரிஜன மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும், அதற்கான வழிவகைகளை வகுக்கவேண்டும் என்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் நீர்ப்பாசனத் துறையைச் சேர்ந்த அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் மூன்று திட்டங்களிலும் நீர்ப்பாசனத் திற்கு முக்கியத்துவம் கொடுத்தும், உணவுப் பொருள்களை இறக்கு மதி செய்யும் நிலைதான் இருக்கிறது. நீர்ப்பாசனத்தில் இன்னும் அதிகமான அக்கறை காட்டவேண்டும் என்று குறிப்பிட்டிருக் கிறார். இது எதைக் காட்டுகிறது என்றால், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும் என்பதைத்தான் காட்டுகிறது. ஆகவே, நீர்ப்பாசனந்தான் மிக முக்கியமானது. குடி உயர்ந்தால்தான் விவ சாயத்தைப் பெருக்க முடியும். விவசாயத்தைப் பெருக்கினால் தான் அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கைகள் பெருக முடியும். ஆகவே நீர்ப்பாசனத் திட்டத்தைப் பெருக்க வேண்டும். இந்த அரசு 10 மாத காலத்திற்குள்ளாக 100 கோடி ரூபாய் அளவில் திட்டம் அளித்திருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்ட வேண்டும். வரும் ஆண்டில் மைனர் இர்ரிகேஷனுக்காக மத்திய சர்க்காரை நம் சர்க்கார் 20 கோடி ரூபாய் கேட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் தனக்கு வாய்க்கால் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இந்த 20 கோடி ரூபாய் நம் அரசுக்கு வரக்கூடிய வழியை மத்திய சர்க்கா

சிடம் வற்புறுத்த வேண்டும். அந்த 20 கோடி ரூபாய் வந்தால், நம்முடைய எஞ்ஜினியர்களுக்கும் வேலை கொடுக்க முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி தமிழுக்கு மேலும் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்த் தாயின் பழைமையான தன்மையை உலகத்தவர்களுக்கு எடுத்துக் காட்டியதற்காக நாம் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த மாநாட்டின்போது, அமெரிக்க அறிஞர் ஒருவர் தமிழிலே தத்துவங்கள் நிறைந்திருக்கின்றன என்று குறிப் பிட்டு, ஒரு பழமொழியையும் எடுத்துக்காட்டினார். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்கிற பழமொழியைச் சொன்னார்கள். 23—1—1968-ஆம் தேதி, இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானம் வந்தபோது, எதிர்க்கட்சிக் காங்கிரஸ்காரர்களுக்கு இந்திக் கூழையும் கையில் வைத்துக்கொண்டு, மாணவர்கள் என்ற மீசை தடுத்ததின் காரணமாக இந்தி என்ற கூழை குடிக்க முடியாமல் தவித்தார்கள் என்பதைக் கண்டு களித்தோம். மாநில அரசிலே தீர்மானம் போட்ட பிறகும், நாம் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும், மத்திய அரசு மொழிப் பளுவை பகிர்ந்து கொள்ளலாம் என்கிறார்களே அல்லாது, நாம் கேட்கும் வகையில் மொழிப் பளுவைக் குறைக்கத் தயாராக இருக்கவில்லை. பளுவைப் பகிர்ந்து கொள்ளலாம் என்பது முறையற்றது. வாய்ப்பாடு படிப்பது கணக்குப் போடத்தான், வாய்பாட்டையே படிப்பது பயனற்ற தாகும். பல மொழி படிப்பது, பன்மொழிப் பண்டிதனாகலாமே தவிர, நாட்டிற்குப் பயனில்லை. ஆகவே, மத்திய சர்க்காரை நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன், மொழிக் கொள்கையை தளர்த்துங்கள். தேசத்தில் ஒற்றுமை குலையாமல் இருக்க வேண்டும் என்றால், ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்றால் ஒரே மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்வது சரியாகாது. சைனாக்காரனும் பாகிஸ்தான்காரனும் நம்மீது படை யெடுத்தபோது, மொழியாலேயா மக்களை ஒன்று சேர்த்தோம்? இந்தியா நம்மைக் காப்பாற்றியது? 'யாமார்க்கும் குடியல்லோம்' என்கிற தத்துவந்தான் நம்மைக் காப்பாற்றியது. ஆகவே மத்திய அரசு சிந்தனைக்கு எருவிட்டு, சேனைக்கு எருவிடுவதை விட்டு, செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பளித் ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வாழ்க தமிழ். (பலத்த ஆரவாரம்).

* திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி செலுத்தி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

காங்கிரஸ் கட்சி ஹைதராபாதில் நடந்த மாநாட்டில், காங்கிரஸ் அல்லாத அரசுகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அவற்றை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி





யிருக்கும் சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்வியை சகிக்க முடியாமல், இம்மாதிரியான வழியில் அது இறங்கியிருக்கிறது. காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்களைக் கவிழ்க்க வேண்டும் என்று இருக்கும் நிலையில் நம் மாநிலத்தில் மத்திய சர்க்காருடைய தவறான கொள்கைகளை எதிர்த்துப் போராட வேண்டுமென்றால், ஏராளமான அளவில் மக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு இந்த மாநிலத்தில் இருக்கும் அரசு ஏதாவது மக்க ளுக்கு நல்லது செய்யப் புகுந்தால், அது இடதுசாரி கம்யூனிஸ்டு களுக்கு சலுகை காட்டுவதாக சுரண்டும் வர்க்கப் பிரதிநிதிகள் கூறுகிறார்கள். அதைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை.

நம்முடைய நாட்டில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்திற்கு உரைக்கல்லாக எதை வைத்துப்பார்க்கலாம் என்கிற பிரச்சினை இருக்கிறது. நாடே பெருமைப்படும் அளவில் நம்முடைய மாநிலத்தில் நிலையான ஒரு மாற்று அரசாங்கம் தேர்தலிலிருந்து கிடைத்திருக்கிறது. கடந்த 20 ஆண்டு காலமாக விவசாயிகளுக்கு நிலப்பரப்புக்களைப் பகிர்ந்களிக்கும் கொள்கையில் எந்தவிதமான முன்னேற்றமும் காணவில்லை என்று மாபெரும் காங்கிரஸ் தலைவர் களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்படவில்லை என்று ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். நிலச் சீர்திருத்த சட்டம் என்று சொல்வது ஒரு மோசடியாகத் தான் இருக்கிறது. ஆகவே, அதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். விவசாயக் கூலிகளுக்கு வேலை கிடையாது. விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன. லேவாதேவிக் கடைகள் அதிகரித்து விட்டன. வேறு எந்தத் தொழில் வளராவிட்டாலும், வட்டிக் கடைகள் அதிகமாகிவிட்டிருக்கின்றன. கள்ளப் பணத்தை வைத்துக் கொண்டு இருப்பதால், பணம் படைத்தவர்கள் ஊரெல்லாம் ஏராளமான வீடுகளை வாங்கவும், வாடகையை தன்னிஷ்டம்போல உயர்த்தவும் எதுவாக இருக்கிறது. இது சாதாரணமான காட்சியாக இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அடிக்கடி விவசாயிகளின்பேரால் பரிந் துரை பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அம்மாதிரியான பிரச்சினைகளை இந்த சபையில் கொண்டு வருவதன் மூலம், விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை. அவை, பெரிய மிராசுதார்களுக்கும், பெரு நிலக்கிழார்களுக்கும் தான் நன்மை பயக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கைத்தறித் தொழிலில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நான் இந்த மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய வேண்டு கோள் இதுதான். உயர்மட்டக் கமிட்டியொன்றை உடனடியாக அமைத்து, இந்த மாநிலத்தில் பல இடங்களில் கைத்தறித்

[திரு. என். சங்கரய்யா] [1968 பிப்ரவரி 17

தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களின் நிலையைக் கண்டறிந்து, கைத்தறித் துணிகளின் தேக்க நிலையைக் கவனித்து, அவற்றை விற்கும்படியான ஏற்பாட்டைச் செய்து, தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதற்கு நம்மாலியன்ற அளவு ஒரு நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம், யாரோ மூன்றாவது சக்தி தூண்டிவிடுகிறது என்பதல்ல. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் சில சமயங்களில் கூறுகிறார்கள், யாரோ தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்று. தொழிலாளர்களைத் தூண்டிவிடுவது அவர்களுடைய வயிறு; தொழிலாளர்களைத் தூண்டிவிடுவது அவர்களுடைய குடும்பங்கள்; தொழிலாளர்களைத் தூண்டி விடுவது அவர்களுடைய குடும்பங்களில் உள்ள வேதனை. இருபதாண்டுக் காலமாக நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்த்து, இன்றைக்கு மந்த நிலைமை ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டமும் ஆட்குறைப்பும் ஏற்படும் காரணத்தால், அவர்களுக்குக் கடுமையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமையில், அந்த நெருக்கடியின் சுமைகள் பூராவையும் தொழிலாளர் வர்க்கத்தின் மீது சுமத்துவதற்கு இந்த நாட்டில் இருக்கும் பெரிய முதலாளிகள் முயற்சிக்கிறார்கள். தங்களுடைய லாபத்தைக் குறைத்துக்கொள்வதற்கு முதலாளிகள் தயாராய் இல்லை. வேலைப் பளுவைச் சுமத்தியும், ஆட் குறைப்பு செய்தும், பஞ்சப்படியில் வெட்டு ஏற்படுத்தியும், தொழிலாளர்கள் மீது பெரிய மோசடி செய்து, அவர்கள்மீது பளுவைச் சுமத்தி வருகிறார்கள். அதன் காரணமாக, இயற்கையாகவே தொழிலாளர்கள் எதிர்க்கிறார்கள். அவர்கள் எதிர்ப்பது இயல்பு. இந்த அடிப்படைக் காரணத்தைப் புரிந்துகொள்ளாமல், இதில் வேறு யாரோ குழப்பம் ஏற்படுத்திவிட்டார்கள் என்று சொன்னால், பிரச்சினையினுடைய உண்மையான காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசுவதாகத்தான் இருக்கிறது.

மத்தியதர வகுப்பாரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. நாடு பூராவும், ஐம்பதாயிரம் இன்ஜினியரிங் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை. நம்முடைய மாநிலத்திலும் இன்ஜினியரிங் பட்டதாரிகள் பலருக்கு வேலை இல்லை. இந்த நாட்டிலுள்ள சுரண்டல் கூட்டங்கள் மாநில அரசாங்கத்தையும் மத்திய அரசாங்கத்தையும் தங்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்வதற்காகப் பல காரியங்கள் செய்கின்றன. நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. மத்திய அரசாங்கத்தில் இன்றைக்கு இருக்கும் கொள்கை நீடிக்குமானால், எந்த மாநில அரசாங்கமும் இன்று மக்களுக்கு அதிகமான நன்மையைச் செய்ய முடியாது. பாங்கு



1963 பிப்ரவரி 17] [திரு. என். சங்கரய்யா]

களையெல்லாம் தேசீயமயம் ஆக்காமற்போனால், தொழில்களைத் தனிப்பட்ட பெரு முதலாளிகள் கையிலிருந்து நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் சொந்தமாக்காமற்போனால், அயல்நாட்டு வியாபாரத்தில் இந்திய, அயல்நாட்டு முதலாளிகள் கொண்டிருக்கும் ஏகபோக உரிமைகளைத் தவிர்த்து, அயல் நாட்டு வியாபாரத்தை ஏகபோகமாக இந்திய அரசாங்கமே மேற்கொள்ளாமற்போனால், நாட்டில் நிலப் பிரபுத்துவ முறையையும், லேவாதேவி முறையையும் இன்றைக்கு ஒழிக்காமற்போனால், இந்த நாட்டில் இருக்கும் சாதாரண மக்களுக்கு, எந்த அரசாங்கம் வந்தாலும், அதிகமான நன்மையைச் செய்ய முடியாது. இந்த மாநில அரசாங்கத்தினுடைய வரம்புக்கு உட்பட்டு என்ன செய்யலாம் என்று நாங்கள் கூற விரும்புவது இதுதான். நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய பெரும் பகுதி மக்கள் விவசாயிகள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிற 'விவசாயிகள்' யார் என்றால், கையில் விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய எண்ணிக்கையினராகத்தான் இருப்பார்கள். ஆனால் விவசாய வேலை செய்யக்கூடிய விவசாயக் கூலிகள், பண்ணையில் வேலை செய்யக்கூடிய விவசாயிகள், வாரம், குத்தகைக்கு சாகுபடி செய்கிற விவசாயிகள், சிறு நிலச்சுவான்தார்கள், இவர்களுடைய இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் இந்த மாநிலத்தில் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்திருந்த நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம், இன்று மோசடியாக மாறிவிட்டது. அதன் காரணமாக, சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் கூட உபரியாகக் கிடைக்கவில்லை. ஏராளமாக விதிவிலக்கு என்று சொல்லிக்கொண்டு, பெரிய மிராசுதார்கள் எல்லாம் அந்தச் சட்டத்தின்கீழ் வராமல் தடுத்துக்கொண்டார்கள். ஆகவே, நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தை மீண்டும் திருத்த வேண்டும். ஒரு குடும்பத்திற்குப் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கக் கூடாது என்று சட்டத்தைத் திருத்த வேண்டும். 'ஒரு நபருக்கு' என்று இருப்பதை 'ஒரு குடும்பத்திற்கு' என்று நிலவுடைமைக்கு அளவு கட்டும் வகையில் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பழத் தோட்டங்கள், பால் பண்ணைகள், கரும்பு சாகுபடி என்றும், தேயிலை, காப்பி ஆகியவை பயிரிடுவதற்கான தோட்டங்கள் என்றும் சொல்லிக்கொண்டு, ஏராளமான விதி விலக்குகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதி விலக்குகள் பூராவையும் ரத்துசெய்ய வேண்டும். ரத்து செய்தால், இன்றைய தினம் லட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு உபரி நிலம் கொடுக்க முடியும்.

இந்த மாநிலத்தில் வார, குத்தகை சாகுபடியாளர்களின் பாதுகாப்புக்கான சட்டம் 1966-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. அது, இந்த வருஷம் ஏப்ரல் மாதம் 20-ம் தேதியோடு காலாவதியாகிறது. அது காலாவதியாகிவிட்டால், அதை மீண்டும் நீடிக்குமாறு மாநிலத்தில் உள்ள குத்தகை, வார விவசாயிகள் கோரும்

றார்கள். ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும், அதை நீடிக்கக் கூடாது என்று நிலச் சொந்தக்காரர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், 20—4—1968 அன்றோடு சட்டம் முடிந்துவிட்டால், அதற்குப் பிறகு உடனடியாக குத்தகை, வார பாக்கிக்காக ரெவினியூ கோர்ட்டின் மூலம், பல்லாயிரக்கணக்கான வார, குத்தகை விவசாயிகளை வெளியேற்ற வேண்டும் என்று திட்டமிடு கிறார்கள். ஆகவே, மாநில அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது என்னவென்றால், 20—4—1968-க்குள் ளாகவே, குத்தகை, வார பாக்கிக்காக எந்த ஒரு விவசாயியையும் நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது என்பது மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய சட்டத்தை நாம் இந்த மன்றத்தில் நிறைவேற்றி, ஏராளமான சாகுபடியாளர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் இந்த அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில், இந்த மாநிலத்தில் இருக்கும் குத்தகை வாரதாரர்களுக்கு, அவர்களுடைய உரிமைகள் பாதுகாக் கப்படும் அளவிற்குச் சட்டம் கொண்டுவரப்படும் என்று கூறப்பட் டிருக்கிறது. இங்கு நான் வருத்தத்தோடு சொல்வது என்ன வென்றால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள், தாங்கள்தான் விவசாயிகளுடைய நண்பர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். ஆனால், சென்ற காலத்தில் திரு. குல்சாரிலால் நந்தா அவர்களின் தலைமையில் இந்திய அரசாங்கம்—அதனுடைய திட்டக் குழு—நாடு பூராவும் உள்ள நிலச் சீர்திருத்தங்களைப் பரிசீலனை செய்வதற் காக ஒரு குழு நியமித்தது. அந்தக் குழுவில் நனம் பக்தவத்சலம் அவர்களும் அங்கத்தினராக இருந்தார்கள். ஆனால், அந்த நில சீர் திருத்தக் குழு கொடுத்திருக்கும் அபிப்பிராயம் என்னவென்றால், தமிழ் மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்காக, குத்தகை, வார சாகுபடியாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்களிலே ஏராளமான ஓட்டைகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பொருளாதார நிபுணர், திரு. லாட்ஜின்ஸ்கி என்பவர், தஞ்சை மாவட்டத்திலே வந்து, அங்கே சட்டத்தைப்பற்றிய பரிசீலனை நடத்தும்போது, ஏராளமான ஓட்டைகள் அதில் இருப்பதைக் காண்பித்தார்கள். ஆகவே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே உள்ள ஏராளமான வார குத்தகை விவசாயிகள் இந்த அரசாங்கத்திடமிருந்து இந்தக் காரி யம் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது மாத்திர மல்லாமல், இன்னாருடைய நிலத்தை இன்னார்தான் சாகுபடி செய்கிறார் என்று பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், விளைச்சலில் முக்கால் பங்கு விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். இன்றைக்கு அந்த விவசாயிகள் தாங்கள் கொடுக்கவேண்டிய வார, குத்தகையை அரசாங்கத்திடம் கொடுத்து, அரசாங்கம் அதை நிலப் பிரபுக்களுக்குக் கொடுத்துவிடும் என்ற ஏற்பாடு இருந்தால், நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மார்க்கம் ஏற்படாது.





ஆகவே, இன்றைக்கு சாகுபடியாளர்களைப் பாதுகாக்கக்கூடிய விரிவான சட்டத்தை இந்த மாநில அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தியை நாம் ஆழ்ந்த கவனத்தோடு செய்தாலும், மேலும் உணவு உற்பத்திக்கு நாம் என்ன செய்ய முடியும் என்று பார்க்கும்போது, அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய, ஆனால் சாகுபடிக்கு லாயக்காக இருக்கக்கூடிய தரிசுப் புறம்போக் காக இருந்தாலும், அல்லது காட்டிலாக்காவிற்குச் சம்பிரதாய பூர்வமாக சொந்தமாக இருந்து, ஆனால், காடு வளர்ச்சிக்குத் தேவையில்லை என்று இறுதியாக முடிவு செய்யும் நிலங்களாக இருந்தாலும், அவைகளை இந்த மாநிலத்தில் கணக்கெடுத்தால், ஒரு கணிசமான அளவு நிலம் கிடைக்கும். ஒவ்வொரு மாவட்டத் திலும் கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களில் 40 அல்லது 50 சதவீதத்தினர் நிலமற்ற விவசாயிகளாக இருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை மேலும் மேலும் பெருகிக்கொண்டு வருகிறது. இவர்கள் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இவர்கள் பாடுபடுவதற்கு நிலம் வேண்டும். இன்றைக்கு நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தை அடியோடு திருத்துவதன் மூலமும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும், சாகுபடிக்கு லாயக்காக இருக்கும் தரிசுப் புறம்போக்கு நிலங்களை மாவட்ட ரீதியாகக் கணக்கிட்டு, அவற்றை நிலமற்ற விவசாயிக் கூலிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் ஓராண்டுக் காலத்திற்குள் விநியோகிக்க ஏற்பாடு செய்தால், இந்த மாநில அரசாங்கத்திற்குப் பின்னால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களும் ஏழை விவசாயி களும் திரளுவார்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

கொள்முதல் கொள்கையைப் பொறுத்தவரையில், என்னுடைய கட்சியின் சார்பாக நான் கூறிக்கொள்ளுவது என்னவென்றால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் இங்கே பேசினார்கள். பல பேர் பேசும்போது, "எல்லா ஊர்களிலும் ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வாருங்கள்" என்று பேசுகிறார்கள். அதே நேரத்தில், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் பேசும்போது, "நீங்கள் கொள்முதல் திட்டத்தின் மூலம் விவசாயி களைக் கொள்ளை அடிக்கிறீர்கள்" என்று சொல்லுகிறார்கள். இரண்டில் அவர்கள் எதைச் செய்ய விரும்புகிறார்கள் என்று நான் கேட்கிறேன். கொள்முதல் நீடிக்க வேண்டும் என்று விரும்பு கிறார்களா? அவ்வாறு நீடிக்கப்பட்டு, இன்றைக்கு மக்களுக்கு ஒரு மலிவான விலையில் அரிசி கிடைக்க வேண்டும் என்கிறார்களா? அல்லது, அவர்களுடைய கட்சித் தலைவர் கூறுவதுபோல், கொள் முதல் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று கூறுகிறார்களா? இரண்டு நிலைகளையும் ஏக காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று, இரண்டு நாக்கு உள்ளவர்கள்தான் அப்படிப் பேச முடியும். இந்த மன்றத்தில் அவ்வாறு பேசுவது பொருத்தமற்றது.

எங்களுடைய அபிப்பிராயத்தில், தமிழ்நாட்டில் குடும்பக் கார்டு முறை அமலில் இருக்கும் பிரதேசங்களில் கொடுக்கும்படியான அரிசியின் அளவை 12 அவுன்சுக்கு உயர்த்துவது நிச்சயமாக மக்களுக்கு நன்மை அளிக்கும். இன்றைக்குக் கொடுக்கும் அளவு தானியம் போதவில்லை என்று கூறுகின்றார்கள். நகரசபைப் பகுதிக்கும், மேஜர் பஞ்சாயத்துப் பகுதிக்கும் நாம் குடும்பக் கார்டு முறையைக்கொண்டு வந்துவிட்டால் அங்குள்ளவர்களுக்கு வேண்டிய தானியங்களை அரசாங்கமே சப்ளை செய்தால் நிச்சயமாக பாக்கி தானியங்கள் பூராவும் கிராமங்களில் நின்றுவிடும். நகர மக்களின் தேவைதான் கிராமத் தானியங்களை நகரங்களுக்கு இழுக்கிறது. நகர மக்களின் தேவையையும் மேஜர் பஞ்சாயத்துக்களில் உள்ள மக்களின் தேவையையும் அரசாங்கத்தினுடைய நியாய விலைக் கடைகளின் மூலம் பூர்த்தி செய்தால், நகரங்களுக்கு கிராமங்களிலிருந்து அரிசி ஈர்க்கப்படாமல், பாக்கி அரிசி பூராவும் கிராமங்களில் தங்கி, கிராமங்களில் விலைவாசி குறையும். நாங்கள் கூறுவது என்னவென்றால், இன்றைக்கு ரூ. 1.44-க்கு ஒரு படி அரிசி கொடுக்கப்பட வேண்டுமானால், அதாவது ஒரு கிலோ 90 பைசாவுக்கு என்று கொடுக்கப்படுகிற முறையில் இன்றைக்கு கொடுக்கப்படுவதைக் காட்டிலும் அதிகமான மக்களுக்கு நகரப் புறங்களிலும், மேஜர் பஞ்சாயத்துக்களிலும் வாழும் மக்களுக்கு குடும்பக் கார்டு மூலம் 12 அவுன்சு அளவு கொடுத்துவிட்டால், இந்த மாநிலத்தில் உணவுப் பிரச்சினை பெருமளவு தீரும்.

இன்று காங்கிரஸ் கட்சியினர் விவசாயிகளின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கவேண்டும் என்றால், மாநில சர்க்காரை எங்களுடைய கட்சி கேட்டுக்கொள்வது என்னவென்றால், மூன்று ஏக்கருக்கும் அதற்கும் கீழே நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் இன்றைக்கு இந்தவிதமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள். பத்து ஏக்கருக்கு மேலே நஞ்சை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து, உபரி தானியம் முழுவதையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்பது திட்டம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட வேண்டும். அப்படி பத்து ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்துள்ள நிலப் பிரபுக்களிடமிருந்து உபரி தானியம் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டால், நிச்சயமாக மாநிலத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு, தேவைப்படக்கூடிய மக்களுக்கு உணவுத் தானியம் கொடுக்க முடியும். இந்த முறையை யதார்த்த பூர்வமாக அணுக வேண்டுமென்று விரும்புகிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும், கீழ் பவானிப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில். இது 'மார்ஜினல் ஸர்ப்ளஸ்', அதாவது, ஓரளவுக்கு உபரியாக இருக்கும் ஒரு மாநிலம் என்று இருக்கக்கூடிய நிலை இருந்தாலும், இந்த வருஷம் நிலைமை மோசமாக இருக்கும் காரணத்தால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஜாக்கிரதையாக இருந்து, சற்று அதிகமாகவே கொள்முதல் செய்துகொள்வது நல்லது என்ற கருத்தை இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வாறு அதிகமாகக் கொள்முதல் செய்தால்தான், எதிர்காலத்தில் மேலும் பல கிராமங்களில் விவசாயக் கூலிகளுக்கு வேலையில்லாத நேரத்தில் அந்த இடங்களில்கூட, நியாய விலையில் அரிசி கொடுக்கமுடியும். ஆகவே, நாம் முன்ஜாக்கிரதையோடு, அதிகப்படியாகக் கொள்முதல் செய்யவேண்டுமென்றால், குறிப்பாக மூன்று ஏக்கரிலிருந்து பத்து ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து ஒரு லெவி சிஸ்டம் வைத்து கொள்முதல் செய்துகொண்டு பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து அவர்களுடைய சொந்த உபயோகம், விவசாயத்திற்குத் தேவையான விதை முதலியவற்றுக்குப் போக பாக்கியிருக்கக்கூடிய தானியத்தைக் கொள்முதல் செய்தால், இந்தப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.





இன்றையதினம் மாநில அரசாங்கமானது கொண்டுவந்திருக்கக் பி.ப.
கூடிய மொழிப் பிரச்சினையைக் குறிப்பிட விரும்புகிறேன். 1-00
மொழிப் பிரச்சினையிலே எங்கள் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்கும் பொதுவான சில அம்சங்கள் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பதினான்கு மொழிகளையும் இந்திய அரசாங்கத்தினுடைய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எங்கள் இருவருக்கும் உள்ள பொதுவான அம்சம். அந்தந்த மாநிலங்களில் அந்தந்தப் பிரதேச மொழிகள்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பதிலும் உடன்பாடு உண்டு. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் மத்திய அரசாங்கத்தின் ஒரு மொழியாக நீடிக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் எங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்திப் பார்க்கிறோம். தமிழகத்திலேயும், மற்ற இந்தி பேசாத பகுதிகளிலேயும் உள்ள மக்கள் எப்படி இந்தியை விரும்பவில்லையோ, அதேபோல இந்தி பேசக்கூடிய மாநிலங்களில் உள்ள மக்கள் ஆங்கிலத்தை விரும்பவில்லை. எல்லாப் பிரதேச மொழிகளும் ஆட்சிமொழியாகின்ற வரைக்கும், இந்த இடைக்காலத்தில் ஆங்கிலமும் இந்தியும் இந்திய அரசாங்கக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கருதுகிறோம். மொழித் தீர்மானம் இந்தப் பேரவையில் வந்த நாளன்று நாங்கள் நடுநிலைமை வகித்தோம். எங்கள் கட்சியின் அபிப்பிராயம் முதலாவதாக, தமிழகத்தில் தாய்மொழியாகிய தமிழ் ஒன்றுதான் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக கல்வி வல்லுநர்கள் தீர்மானிக்கக்கூடிய முடிவின்படி ஆங்கிலத்தையோ, அல்லது இந்தியாவிலுள்ள வேறு மொழிகளையோ அவர்களுடைய இஷ்டத்தின்படி படித்துக்கொள்வதற்கு விட்டுவிட வேண்டும். அதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டும். இப்பொழுது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய மொழிச் சிக்கலைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்சித் தலைவர்களையும்

அழைத்து, கல்வி வல்லுநர்களையும் அழைத்துப் பேசி ஓர் உடன்பாட்டிற்கு வரவேண்டும். இந்திய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ரத்து செய்யப்பட வேண்டும். இதற்காக இந்திய அரசாங்கம் ஒரு மாநாட்டைக் கூட்டி ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் உகந்த வகையில் மொழிப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்பது தான் எங்கள் கருத்து.

இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய மைனாரிட்டி மொழி பேசும் சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் மைனாரிட்டிகள் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த சிறுபான்மையினரின் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளில் தங்கள் தாய்மொழியிலேயே கல்வி பயில வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும். பாரதியார் கூறியதுபோல்,

"செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்,
சிந்தனை ஒன்றுடையாள்"

என்ற நிலைமை ஏற்படவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக புகுத்தியபோதுதான் இந்திய மக்கள் அதைப்பற்றி நினைத்தார்கள். பல மொழி பேசும் இந்தியாவில் ஆங்கிலம் ஒன்றே ஆட்சி மொழியாக இருந்தது. அதனால் பிரதேச மொழிகள் நலிந்து போயின. இதைப்போல்தான் இந்திய அரசாங்கம் இந்தி ஒன்று தான் ஆட்சிமொழி என்று கூறுகிறது. எல்லாப் பிரதேச மொழிகளும் இந்திய அரசின் மொழிகளாக ஆக முடியாது என்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும், இந்த பதினான்கு மொழிகளும் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாக ஆனால்தான் இந்த மொழிப் பிரச்சினை தீரும். சிறுபான்மையினருக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும். சாதாரண மக்களுக்கும் சகலவித உரிமைகளும் அளித்து தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களில் இந்த தமிழக அரசு பாடுபட்டால், நாங்கள் ஊக்கம் அளிப்போம். இப்படிப்பட்ட காரியங்களுக்கு தொடர்ந்து எங்களுடைய ஆதரவு கிடைக்கும். மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசாங்கம் சீரும் சிறப்புமாக ஆட்சியை நடத்த வேண்டும்; இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு முன்னோடியாக விளங்க வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. போஜன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் பேருரையின்மீது ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூற நான் விரும்புகிறேன். எந்த ஒரு அரசு—அது முடியரசாக இருந்தாலும் அல்லது குடியரசாக இருந்தாலும்—நாட்டு மக்களின் குறிப்பறிந்து, மக்களுடைய குறைகளை அறிந்து அவற்றைப் போக்கி மக்களின் விருப்பம்போல் நடந்து வருகிறதோ அதுதான் நல்ல ஆட்சி என்று கொள்ளப்படும். அதனால் தான் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். நம்முடைய ஆளுநரின் பேருரை நன்றாக அமைந்திருக்கிறது. விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நல்ல முறையில் ஆளுநரின் உரை அமைந்ததற்கு இந்த நாட்டு மக்களும், இந்தப் பேரவை உறுப்பினர்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.





மொழிப் பிரச்சினை விவகாரம் சம்பந்தப்பட்டமட்டில், நாடாளுமன்றத்தில் 1967-ம் ஆண்டு ஆட்சிமொழித் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது. இந்தத் திருத்தச் சட்டம் இந்தியாவிலுள்ள மற்ற தேசிய மொழிகளுக்கு மதிப்பளிக்காத நிலையில், மற்ற மொழிகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற கொள்கைக்கு முரணாக, இந்தி பேசாத மக்களுக்குப் பெரும் சுமையாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையைத் தீர்க்க எல்லாக் கட்சித் தலைவர்களும், பெரிய கல்வி வல்லுநர்களும் ஒரு மாநாடு கூட்டி பேசிக் கலந்து உரையாடி நல்ல முடிவுக்கு வர வேண்டும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கின்றேன்.

மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு அளிக்கப்பட்டு வந்த கடன் தொகைகளும், மானியங்களும் கடந்த இரண்டாண்டுகளாக உயர்ந்துவருவதற்குப் பதிலாகச் சுருங்கியுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காருடைய கையில் இருப்பதால் மாநில அரசு எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரின் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்காரின் அதிகாரத்தைக் குறைத்து, மாநில சர்க்கார்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு போன்ற முக்கியமான அதிகாரங்களை மட்டும் மத்திய சர்க்கார் வைத்துக்கொள்ள வேண்டும். மற்ற அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆளுநர் அவர்கள் தம்முடைய எண்ணத்தைத் தைரியமாக எடுத்துச்சொல்லியிருப்பது பாராட்டுதற்குரியது. ஆளுநர் என்ற பெயருக்கு ஏற்றபடி அவர் உரையாற்றியிருக்கிறார். மற்ற மாநில ஆளுநர்களுக்கு நம் மாநில ஆளுநர் உதாரணமாக விளங்குகிறார். அவரைப் புகழ்ந்து பேசுவதில் தவறு இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினையிலே, 1968 ஜனவரி 23-ம் நாளன்று நமது பேரவையில், "தமிழகத்தில் ஆங்கிலமும் தமிழும்தான் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இது எல்லோராலும் வரவேற்கத்தக்கது. மேலும் சிறுபான்மை மக்கள் பேசும் கன்னடம், தெலுங்கு போன்ற மொழி பேசுவோருடைய குழந்தைகள் தங்கள் தாய் மொழியில் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினையைத் தமிழக அரசு நல்ல முறையில் தீர்த்து வைத்திருக்கிறது. கடந்த ஆண்டில் இருந்த நிலைமைக்கும், இப்போது இருக்கும் நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசம்

இருக்கிறது. முன்பு நீலகிரி மாவட்டத்தில் அரிசி கிடைப்பது கஷ்டமாக இருந்தது. அரிசியின் விலையும் அதிகமாக இருந்தது. பட்டணம் படி அல்ல, சாதாரண ஒரு லிட்டர் அரிசி வெளி மார்க்கெட்டுகளில் ரூ. 1.75 முதல் 2 ரூபாய் வரையில் விற்றுக்கொண்டிருந்தது. ரேஷன் கடைகளில்கூட அரிசி கிடைக்காமல் மக்கள் பொருத்த அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. ரேஷன் கடைகளில் தாராளமாக அரிசி கிடைத்து வருகிறது. வெளி மார்க்கெட்டில் ஒரு லிட்டர் விலை ரூ. 1.25 முதல் ரூ. 1.40 வரை நல்ல அரிசி கிடைத்து வருகிறது. இப்போது நீலகிரி மாவட்ட மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இந்த முறையில் நல்ல அரிசி கிடைக்க, நீலகிரி மாவட்டத்திற்குச் சலுகை தந்த நமது உணவு அமைச்சரை, நீலகிரி மாவட்ட மக்களின் சார்பாகவும், பொதுமக்களின் சார்பாகவும், பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் பாராட்டி, அவருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்தை எடுத்துக் கொண்டால் அதிலும் கூட அநேக முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. ஆனால், காங்கிரஸ் உறுப்பினர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் குறை சொல்லலாம். காரணம் அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு எதிராக எதுவும் சொல்லவில்லை என்றால் எதிர்க்கட்சியாகச் செயல்படவில்லையே என்று பொது ஜனங்கள் நினைத்துக்கொண்டுவிடலாம் என்று நினைத்துப் பேசுவதாகத்தான் நான் நினைக்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால் இயற்கை நிலை நமக்கு எதிராக இருந்தாலும் கூட, சாதகமாக இல்லை என்றாலும் கூட, அரசு விவசாயத் துறையில் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் பல. அதன் காரணமாக பல நன்மைகள் விவசாயிகளுக்கும், நாட்டிற்கும் ஏற்பட்டு வருகின்றன. இன்னும் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயத் துறையில் சில காரியங்களை இந்த அரசு செய்தாக வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிழங்குப் பயிர்கள் தான் அதிகம். கிழங்குப் பயிர்களுக்குப் பூச்சி விழுகிற நேரத்தில் மருந்து தெளிக்க பூச்சி மருந்துகள் அந்த அந்தச் சமயத்தில் கிடைக்கவில்லை. இரண்டு மாதங்களாக மருந்து கிடைக்கவில்லை. நானும் அடிக்கடி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். அனுப்புகிறேன் என்கிறார்களே தவிர இன்னமும் அனுப்பவில்லை. இனியாவது அந்தப் பகுதியில் தேவைப்படுகிறபோது பூச்சி மருந்து கொடுக்க தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு முன்பு நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவிகிதம் சகாய உதவி பூச்சி மருந்துக்கு அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அதை 3-இல் ஒரு பங்கு குறைத்து 33 சதவிகிதம் தான் கொடுக்கிறார்கள். முன்போலவே 50 சதவிகிதம் கொடுக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பூச்சி மருந்து தெளிக்கும் சாதனங்களை





முன்பு 50 சதவிகிதம் சகாய விலையில் கொடுத்து வந்தார்கள். இப்போது நாற்பது ரூபாய்தான் குறைத்துக்கொடுக்கிறார்கள். முன்போலவே கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இப்போது விவசாயிகள் உரத்தை உபயோகிப்பதில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் காட்டி வருகிறார்கள். ஆனால் உரம் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி இன்னும் அதிகமான அளவுக்கு உரத்தைப்பெற்று விநியோகிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது அரசாங்கம் கொண்டு வந்துள்ள படி அரிசித் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். நிதி நிலை வசதி இல்லாத காரணத்தினால் இதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க முடியாத நிலை இருக்கிறது. நிதி நிலை சீர்பட்டு இந்தத் திட்டத்தை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க சர்க்கார் முடிவு செய்கிறபோது முதலில் நீலகிரி மாவட்டத்திற்கு இதை விஸ்தரித்தாக வேண்டும். அங்குள்ள 5 லட்சம் ஜனங்களில் 4½ லட்சம் பேர்கள் ஏழைத் தொழிலாளர்கள்தான். ஆகவே அந்த மாவட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ஆளுநர் அவர்களுடைய உரையில் கிராம மின்சார அபிவிருத்திக்காக 6 கோடியை 7½ கோடியாக அதிகரித்திருப்பது பற்றிச் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். கிராமங்களை மேலும் பலவகையிலும் முன்னேற்றம் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத்துறை. முக்கியமாக எல்லா மாவட்டங்களும் ரயில் மூலமாகத்தான் தொடர்பு படுத்தப்படுகிறது. குறிப்பாக இரண்டு நாட்களுக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தை ரயில் இணைப்புச் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டார். இப்படி புதிதாக ரயில் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிற நிலையில் மத்திய சர்க்கார் சமீபத்தில் இருக்கக்கூடிய சில ரயில்போக்குவரத்துத் தொடர்பை நட்டம் வருகிறது என்று சொல்லி எடுத்துவிட்டால் என்ன என்று மாநில அரசாங்கத்துடன் கலந்து கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதில் மேட்டுப்பாளையம் நீலகிரி சர்வீசை ரத்து செய்துவிடலாம் என்கிற யோசனை இருக்கிறது. இது சரியான யோசனை அல்ல. அப்படி எடுப்பது இந்தச் சர்க்காருக்கும், குறிப்பாக மத்திய சர்க்காருக்குமே பின்னால் பல சங்கடங்களை உண்டாக்கும். குறிப்பாக நீலகிரிப் பகுதியில் தான் பாதுகாப்புக்கு இன்றியமையாத வெடிமருந்து சாலையும், ராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளியும் அமைந்திருக்கின்றன. மத்திய சர்க்கார் அங்கேதான் பிலிம் தொழிற்சாலை ஏற்படுத்த இருக்கிறார்கள். அணுசக்தி நிலையமும் அமைய

இருக்கிறது. ஆகவே முக்கியமாக அந்த ரயில்வே லைன் தொடர்பை எடுக்கக் கூடாது என்பதை நமது சர்க்கார் வற்புறுத்தியாக வேண்டும் . . .

திரு. பி. ஜெயராமன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கவர்னர் உரை மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய தினம் கவர்னர் பெருமான் தமிழ் மொழியைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கின்ற நேரத்தில், காங்கிரஸ் தலைவர்களுக்கு இல்லாத கடமையுணர்ச்சியோடு எடுத்துச் சொல்லியிருக்கின்ற நேரத்தில் அவரது வார்த்தைகள் தமிழகச் சரித்திரத்தில் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவையாக அமைந்திருக்கின்றன. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

மேலும், எனக்குக் கொடுத்திருக்கிற சிறிது நேரத்தில் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்ல முடியாத காரணத்தினால் பெருமதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறேன். அவர்களைக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு பேசவில்லை. படி அரிசித் திட்டத்தைப் பற்றி ஏளனம் செய்கிறீர்களே தவிர, படி அரிசித் திட்டத்தை இன்ன இன்ன இடங்களில்தானே போட்டிருக்கிறீர்கள், மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்காத காரணம் என்ன என்பதுபற்றி காரணகாரியங்களோடு எடுத்துச் சொல்லி இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தருவோம் என்கிற நிலையில் ஏன் உங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது வீதி வீதியாக ஒரு பிடி அரிசி கூடக் கிடைக்காமல், குழந்தை குட்டிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் வெய்யிலில் க்யூவில் நின்று பசியாலும், பட்டினியாலும் செத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தோம். நண்பர் மார்டின் அவர்கள் கையில் பணம் இருக்கிறது, அரிசி எங்கே என்றார்கள். கையில் பணம் இருந்தால் இன்றைக்கு எந்தக் கடைக்குப் போனாலும் மூட்டை மூட்டையாக அரிசி இருக்கிறது. உணவுப்பொருள் கிடைக்கவில்லை என்கிற பிரச்சினையே இல்லை. அப்படி இருக்க வெள்ளைக்காரன் ஆட்சியில் பேசிக் கொண்டு போனதைப் போலப் பேசுவதில் பயன் இல்லை. இந்த அரசு வந்தபிறகு தான் அரிசிப் பஞ்சம் நீங்கிற்று. குடியாத்தத்தில் இருந்து முன்பு சென்னை வரவேண்டுமானால் 4¼ ரூபாய் கொடுத்தால்தான் வர முடியும். பஸ் முதலாளிகள் அப்படிக் கொள்ளை அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்படியிருந்ததையெல்லாம் இன்றைய தினம் தமிழக அரசு வந்தபிறகு மாற்றி சென்னையிலிருந்து குடியாத்தத்திற்குப் போகவேண்டுமானால், போணம்பட்டிலிருந்து சென்னைக்கு பஸ் போட்டு, குடியாத்தத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டுமானால் 3½ ரூபாய் என்ற அளவுக்குக் கட்டணத்தைக் குறைத்து இருக்கிறது; இதைப் பார்த்து அங்கே இருக்கின்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.-வுக்கும் அந்த ஞாபகம் வந்து அவரும் 3½ ரூபாய் என்று குறைந்து இருக்கிறார் என்று சொன்னால், இப்படிக் குறைத்ததின் காரணமாக சென்னையிலிருந்து குடியாத்தத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்கு 1½ ரூபாய் வரை மிச்சப்படுகிறது. இந்த மாதிரி 1½ ரூபாய்





வீதம் எத்தனை ஆண்டுகளாக அவர் ஏழை மக்களைப் பிழிந்து பணம் சம்பாதித்து இருக்கிறார் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். இது சாதனை இல்லையா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இது சாதனை இல்லையா? இருபது ஆண்டுகளாக ஏழை மக்கள், விவசாயிகள், ஹரிஜனங்கள், பாட்டாளிகள், தொழிலாளர்கள் இவர்கள் அத்தனை பேர்களைப்பற்றியும் இந்தச் சட்ட மன்றத்திலே பேசத் துணிவில்லாமல், இங்கே பேச முடியாதவர்கள் இன்றைய தினம் விவசாயிகளைப்பற்றியும், தொழிலாளர்களைப்பற்றியும் . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சபையின் முன்னால் இல்லாத ஒருவரைப்பற்றி திறமையில்லாதவர், துணிவு இல்லாதவர் என்றெல்லாம் அவர் தன்னைக் காத்துக்கொள்ள முடியாத நிலையில் பேசுவது நியாயமா, ஒழுங்கா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. ஜெயராமன் : திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் ஏறிய பிறகு ஏழை விவசாயிகளுக்கு மேட்டு நிலங்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறது, வரியைத் தள்ளுபடி செய்திருக்கிறது, சிறுகச் செய்திருக்கிறது, சீராகவும் செய்திருக்கிறது என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படவில்லை. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்குச் செய்யமுடியுமோ அந்த அளவுக்குச் செய்துகொண்டே இருக்கிறது. மீண்டும் விவசாயிகளுக்கு நல்ல காரியங்களைச் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் காத்து இருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் நம்முடைய நாட்டிலே மொழிப் பிரச்னை என்று சொல்லும்பொழுது நான் காங்கிரஸ் நண்பர்களை பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன், மொழிப்பிரச்னையில் உங்களுடைய முடிவைத் திட்டவட்டமாக ஏன் அறிவிக்கவில்லை, மும்மொழித் திட்டமா அல்லது இருமொழித் திட்டமா என்பதை வரையறுத்து சொல்லவேண்டுமென்று காங்கிரஸ் நண்பர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய திரு. வீரமணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஹரிஜனங்களைப் பற்றிப் பேசுகின்றபொழுது அதை அலட்சியப்படுத்தக்கூடிய நோக்கத்தில் சிலருடைய முகபாவம் இருந்தது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள் காங்கிரஸ் அரசாலே முன்னுக்கு வரவில்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் குதிரைப் பந்தயத்தில் எப்படி சான்ஸ் கிடைக்கிறதோ அதைப்போன்றுதான் நன்மைகள் வந்தனவே தவிர காங்கிரஸ்காரர்களால் நன்மைகள் வரவில்லை. அவர்களுக்கு எல்லாம் நன்மைகள் இந்த அளவுக்காவது கிடைத்ததற்குக் காரணம் அறிவுலக மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் முயற்சிதான். 1932 ஆம் ஆண்டிலே பூனாவிலே நடைபெற்ற வட்ட மேஜை மாநாட்டிலே காந்திஜி அவர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு காந்திஜி

[திரு. பி. ஜெயராமன்] [1968 பிப்ரவரி 17

அவர்கள் தீண்டாமையைப் பத்து ஆண்டுகளுக்குள்ளே ஒழித்து விடுகிறேன் என்று சொன்னதாலே அன்றிலிருந்து ஹரிஜன் என்ற பெயரை வைத்தார். ஆகவே, அவையெல்லாம் டாக்டர் அம்பேத்கார் மூலமாக அளிக்கப்பட்டதே தவிர வேறு யாராலும் இல்லை. பத்து ஆண்டுகள் கழிந்தபிறகு 1942 ஆம் ஆண்டிலே அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள், 10 ஆண்டுகளுக்குள் ஒழித்துவிடுவேன் என்று சொன்னீர்கள் தீண்டாமையை உங்களால் ஒழிக்கமுடியவில்லை, ஆகவே தனித்தொகுதி கொடுக்க வேண்டுமென்று காந்திஜியிடம் கேட்டார். அதை ஏற்றுக் கொண்டுதான் வெள்ளைக்காரன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி கொடுத்தான். காந்திஜி தனித்தொகுதி பிரிக்க வேண்டாம் என்று சொன்னார். பின்னர் மீண்டும் தனித்தொகுதி வேண்டுமென்று அம்பேத்கார் கேட்டார். சுதந்திரம் பெற்ற பிறகு காந்திஜி, நேருஜி போன்றவர்கள் சேர்ந்து அம்பேத்கார் அவர்களை அழைத்து உங்களுக்கு என்ன என்ன உரிமைகள் செய்யவேண்டுமென்று கேட்டதின்பேரில் அம்பேத்கார் அவர்கள் மனமுவந்து 10 ஆண்டுகளுக்குச் சலுகைகள் தரவேண்டுமென்று ஒத்துக்கொண்டதற்குப் பிறகுதான் இந்தச் சலுகைகள் அளிக்கப் பட்டனவே தவிர, காங்கிரஸ்காரர்களாலோ, மற்றவர்களாலோ இவை வந்துவிடவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை வீரமணி அவர்கள் ஆர்வத்தோடு எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. எஸ். ராமலிங்கம் :** கனம் தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடக்கின்ற இந்த விவாதத்திலே நானும் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்லு கின்ற வாய்ப்பினைக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைப் பாராட்டுகின்ற முறையிலே இந்த தமிழக அரசு நல்ல முறையிலே செய்து கொடுத்தது என்று பாராட்டினார்கள். என்னைப் பொறுத்த வரையிலே நானும் சேர்ந்து பாராட்டுகிறேன். இப்பொழுது நடந்தது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு. முதலாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் அப்பொழுது இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய நெடுஞ்செழியன் அவர்களை அனுப்பினார்கள். எந்த காரணத்தினாலே அனுப்பினார்கள் என்றால் இன்றைய ஆளுங்கட்சியாக இருக்கின்ற தி.மு.க.-விலே உள்ள தலைவர்களில் அவரும் ஒருவர், அவருக்கும் தமிழுக்கும் நெருங்கிய உறவு என்று கருதியதால்தான். அப்படித்தான் நாங்களும் கருது கிறோம், மக்களும் கருதுகிறார்கள். அவர்களை அனுப்பாமல் முன்பு அமைச்சராக இருந்த பூவராகன் அவர்களையோ அல்லது எங்களில் யாரையாவது அனுப்பியிருக்கலாம். ஆனால் அவரைத்தான் அனுப்பினோம். காங்கிரஸ்காரர்கள் தமிழை வளர்ப்பதிலே ஈடு பட்டிருக்கிறார்கள், தமிழை வளர்க்கவேண்டுமென்ற நோக்கத் திலேதான் அவரை அனுப்பினோம். தமிழை வளர்ப்பதற்கு நீங்களும் பாடுபடவேண்டும். மாநாட்டிலே பண்டைக்கால



1968 பிப்ரவரி 17] [திரு. எஸ். ராமலிங்கம்]

முறைகளை எல்லாம் கொண்டுவந்து காட்டி பூம்புகார் என்ற பெயரை எல்லாம் வைத்ததற்கு நன்றி. அதை நான் பாராட்டு கிறேன். ஆனால் அதே நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் தமிழுக்கு என்ன செய்தார்கள், தமிழ்வளர்ச்சிக்காக ஏதாவது செய்திருக் கிறார்களா என்று குற்றஞ்சாட்டுவது சரியல்ல. அப்படிச் சொல்லும்பொழுது எங்களைக் காத்துக் கொள்வதற்காக வேண்டி நாங்களும் பதில் சொல்லவேண்டியிருக்கிறது.

நாங்கள் உங்களை ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கவில்லை, பொது மக்கள்தான் ஓட்டுப்போட்டு இருக்கிறார்கள். நீங்கள் சந்திக்கப் போவது ஓட்டர்களைத்தான், அப்படியிருக்கும்பொழுது எங்களைப் பார்த்து பாய்கிறீர்கள் என்றெல்லாம் சொல்வதால்தான் நாங்கள் தற்காத்துக்கொள்வதற்காகப் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் ஆசைத்தம்பி பேசும்பொழுது காங்கிரஸ்காரர் கள் தாங்கள் போடும் திட்டங்களை ஆதரிக்கவில்லை என்று சொன்னார். பூம்புகாரில் பாரியைக் கொண்டுவந்து முல்லைக்குத் தேரைக் கொடுத்ததுபோல் காட்டினார்கள். அதேபோல் அதியமான் நெல்லிக்கனியைக் கொடுத்ததுபோல் காட்டினார்கள். இப்படிப் பண்டைக்கால முறைகளையெல்லாம், பண்டைத் தமிழகத் தில் இருந்தவற்றையெல்லாம் பொது மக்கள், வெளிநாட்டு மக்கள், பேரறிஞர்கள் இவர்களுக்குக் காட்டுகிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஐலண்டு கிரவுண்டில் பூம்புகார் மாநாடு எப்படிக் கொண்டுவரப்பட்டதோ அந்த முறை யில்தான் நாங்கள் பஞ்சாயத்து மாநாட்டைக் கூட்டினோம். பஞ்சாயத்து முறை வெள்ளைக்காரன் காலத்திற்கு முன்னதாக இருந்ததாக சோழர்கள் காலத்தில் இருந்ததாக உத்திரமேரூர் செப்பேட்டு சாஸனத்திலிருந்து தெரிகிறது. பஞ்சாயத்து ஆட்சி முறையை சோழர்கள் சிறப்பாக நடத்தினார்கள் என்று ஒரு வரி பி. ப. 1-30
அதில் இருந்தது. அதைத்தான் நாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தோம். அதே இடத்தில் தமிழக மக்களை ஒன்று கூட்டி . . .

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நாடு விடுதலையடைந்து காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்றுக் கொண்ட காலத்திலே பஞ்சாயத்து முறை அமலில் இல்லையென்று கூறுகிறார்களா அல்லது இருந்ததை விரிவுபடுத்தியதாகக் கூறுகிறார்களா?

**திரு. எஸ். ராமலிங்கம் :** பஞ்சாயத்து யூனியன் என்ற முறையில் இல்லை. யூனியன் ஆப் பஞ்சாயத்ஸ் என்ற முறையில், இல்லாத ஒன்றை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். 12,500 பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு மேலாக நாங்கள் உண்டு பண்ணி யிருக்கிறோம். அதைப் பற்றிப் படம் போட்டு தேரிலே வைத்துத் தெருவிலே சுற்றவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்தில் கிராம மக்கள் இருந்த நிலையையும், இன்று உள்ள நிலையையும் எண்ணிப் பாருங்கள். முன்பு கிராமத்தில் போய்க் குப்பனைப் பற்றிக் கேட்டால், எந்தக் குப்பன் குடுமி வைத்த குப்பனா, குண்டாய் இருக்கும் குப்பனா; சிண்டு வைத்த குப்பனா---அதிசயமாய் ஒருவன் சட்டை போட்டிருந்தால் சட்டை போட்ட குப்பனா

என்றுதான் முன்பு கேட்க வேண்டியிருக்கும். இப்போது போய்க் கேட்டால் பஞ்சாயத்துத் தலைவர் குப்பனா, சொசைடி தலைவர் குப்பனா என்று கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆக, ஒருவரைப் பற்றித் தெரிந்து கொள்ள இருந்த பழைய சங்கடம் இப்போதும் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

**திரு. எஸ். ராமலிங்கம்:** இல்லாத ஒன்றை ஏற்படுத்தினார்கள் என்பதற்காகச் சொன்னேன். 12,500 பஞ்சாயத்துத் தலைவர்கள் 374 பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகியவரை அதே இடத்திலே கூட்டி நேருஜி அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அதை நீங்கள் நல்ல முறையில் விரிவு செய்கிறீர்களா என்பதைக் குறித்து கேட்பதற்குள்ளாக ஒரு குழப்பத்தையே கூடக் கொண்டு வந்து விட்டீர்கள். நீங்கள் பொறுப்பேற்றவுடனேயே எங்கே பஞ்சாயத்துக்கள் ஒழிக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகத்தை மக்கள் மனதிலே ஏற்படுத்திவிட்டீர்கள். இந்த நிலையில் கவர்னர் பெருமான் உரையில் பஞ்சாயத்தைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. பஞ்சாயத்து முறையில் ஏதாவது மாற்றம் செய்யப் போகிறார்களா இல்லையா என்பது பற்றி ஒன்றும் கூறவில்லை. டெல்லி சட்டசபைக்கு அதிகாரம், சென்னை சட்டசபைக்கு அதிகாரம், அதே போன்று கிராம மக்களுக்கும் அதிகாரம் வழங்க வேண்டுமென்ற முறையில், குடியாட்சியில் மக்களை ஈடுபடுத்த வேண்டுமென்ற முறையில் இந்த பஞ்சாயத்து முறை கொண்டு வரப்பட்டது.

காங்கிரஸ்காரர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று பேசுகிறார்கள். விருதுநகர் அங்கத்தினர் பேசும்போது 20 வருஷமாக இருந்த இந்தி என்ற பேயை நாங்கள்தான் ஒழித்தோம் என்று கூறுகிறார். நீங்கள் எந்த முகத்தோடு ஊருக்குள் போகப் போகிறீர்கள் என்று கேட்டார். நான் அவருடைய தொகுதிக்குச் சமீபத்தில் போய் வந்தேன். அங்கு தலைவிரித்தாடும் தீண்டாமை என்ற பேயை ஒழிக்க என்ன செய்தார்? காங்கிரசாரின் கடுமையான சட்டத்தினாலும், பிரசார பலத்தினாலும் ஊரை விட்டு ஒதுங்கி இருந்த தீண்டாமைப் பேய் இப்போது ஊருக்குள்ளேயே வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** திரு. சீனிவாசன் அவர்கள் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதான் இருக்கிறதா? அல்லது அதற்கு முன்பே இருக்கிறதா?

**திரு. எஸ். ராமலிங்கம்:** இருபது வருஷமாக நாங்கள் போராடிப் போராடி அதை நாங்கள் ஓரளவிற்கு ஒழித்துவிட்டோம். இந்திப் பேயை விரட்ட நீங்கள் தீர்மானம் போட்டு நிறைவேற்றி வெற்றி விழா கொண்டாடியது போல் இதற்கும் ஒரு தீர்மானம் போட்டு ஒழித்து விடலாம். 'அண்டச்பிலிடி அபாலிஷன்' என்று கான்ஸ்டிடியூஷனிலேயே போடப்பட்டிருக்கிறது. உடனே நாங்கள் தீண்டாமை ஒழிந்து விட்டது என்று பிரகடனப்படுத்திவிடவில்லை. இந்த நிலையில் எங்களைப் பார்த்து எந்த முகத்தோடு ஊருக்குள் போகப் போகிறீர்கள் என்று



கேட்கிறார்கள். நீங்கள் எந்த முகத்தோடு போகப் போகிறீர்களோ அதே முகத்தோடு தான் போகப் போகிறோம். ஏதோ உங்களுக்கு மாலை மரியாதை கிடைக்கும். எங்களுக்குச் சாதாரண மரியாதையாவது கிடைக்காதா? ஒரு படி அரிசியை சென்னையிலும், கோவையிலும் மட்டும் போடுகிறார்கள். இது பொங்கலன்று தமிழகம் முழுவதும் விஸ்தரிக்கப்படும் என்று விளம்பரம் செய்தார்கள். ஆனால் போடவில்லை. இப்போது நீங்கள் எந்த தைரியத்தில் ஊருக்குள் போகிறீர்கள்? எந்த முகத்தோடு ஊருக்குள் போகிறீர்கள்? கவர்னர் உரையிலே இது போன்ற பல விஷயங்கள் இடம் பெறவில்லை. இந்த உரையின் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நண்பர் அவர்கள் பேசும் போது இடையிலே குறுக்கிட்டுப் பேசவேண்டாமென்று அப்போது கூறவில்லை. அவர்கள் பேசும்போது ஏதோ எங்களுடைய நாவலர் கொஞ்சம் தமிழ் அறிந்திருந்த காரணத்தால் பழைய முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் முதல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றதாகக் கூறினார்கள். ஏதோ தயவு தாட்சண்யத்தில் அழைத்துச் சென்றதுபோல் குறிப்பிட்டார். அந்த மாநாட்டுக்கு யார் யார் போனார்கள் என்ற விவரத்தைப் பார்த்தால் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் குடும்பத்தோடு போனார்கள் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அவர் போகும்போது தமிழ் தெரிந்த பூவராகன் அவர்களை அழைத்துப் போகாதது எங்களுடைய கட்சிக்குக் கூட வருத்தந்தான். அவரை ஏன் அழைத்துப் போகவில்லை என்று திரு. பக்தவத்சலத்தைக் கேட்கவேண்டும். எங்களைக் கேட்டுப் பயன் இல்லை.

**திரு. பி. எஸ். மணியன்:** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் பெருமகனாருடைய பேருரை இந்தத் தமிழக அரசின் சாதனையை எடை போட்டுப் பார்த்த பேருரை என்று இந்த நாடே வரவேற்கிறது. காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில், கவர்னர் பெருமகனார் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் தமிழகத்திலே தன்னுடைய பொறுப்பை ஏற்றிருப்பது போல் பேசினார்கள். கவர்னர் அவர்கள் இன்றுள்ள எதிர்க் கட்சி ஆட்சி செய்த நேரத்திலும் இங்கே கவர்னராக இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்கிற இந்த நேரத்திலும் இங்கே கவர்னராக இருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்காக மத்திய ஆட்சி பொறுப்பிலே இருக்கிறவர்களால் அனுப்பப்பட்டவர்கள். இங்கே இரண்டு ஆட்சியையும் எடை போட்டுப் பார்த்து காங்கிரஸ் ஆட்சியை விட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு வருஷ காலத்திலே நல்ல சாதனைகளைச் செய்திருக்கிறது என்ற தீர்க்கமான

முடிவுக்குப் பிறகுதான் கவர்னர் பெருமான் அவர்கள் இந்த ஆட்சியைப்பற்றிப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த நாடே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

கவர்னர் பெருமான் பேருரையின் மீது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்றைத் தெரிவித்தார்கள். சட்டமும் அமைதியும் கெட்டு விட்டது என்று சொன்னார்கள். போலீஸ் அதிகாரிகள் அத்து மீறி நடப்பதாகக் கூறினார்கள். தமிழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அரசு, காருண்யமிக்க அரசு, பெருந்தன்மை மிக்க அரசு என்று துணிவோடு கூறுகிறேன். காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில் நடந்த கொடுமைகள் எதுவும் இப்போது இல்லை. அந்த மாதிரியான காரியம் எதையும் தமிழக அரசு இந்த ஓராண்டுக் காலத்தில் செய்யவில்லை என்று தைரியமாகக் கூறுகிறேன்.

இந்த ஒரு ஆண்டு கால ஆட்சியின்போது நாட்டில் அமைதியில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். அமைதி இல்லை என்ற ஒரு நிலை ஏற்படவேண்டுமென்ற அவர்களது ஆசையைத்தான் இன்று மறைமுகமாக எடுத்துக் காட்டுகிறார்களே தவிர, உண்மையில் அமைதி இல்லையா என்று பார்த்தால் நிச்சயமாக அமைதி நிலவிக்கொண்டுதானிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொது மேடைகளில் பேசும்போது—முன்னால் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சாதாரண கட்சித் தொண்டர்கள் பேச்சுக்களைக் கூட குறிப்பு எடுக்கக்கூடிய ஒரு நிலை இருந்தது. இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வந்தபிறகு அந்நிலை தளர்த்தப் பட்டதால் இன்று ஆங்காங்கே காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களைத் தாக்கக்கூடிய அளவிற்கு காங்கிரஸ்காரர்களைத் தூண்டி விடக்கூடிய அளவிற்கு அசம்பாவிதங்கள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது காங்கிரஸ் அரசாங்கத்தால் தாக்கப்பட்டார்கள். இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களால் இன்று தாக்கப்படுகிறார்கள். கடந்த 12-ம் தேதி அன்று மதுரை மாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்களால். மதுரை மாவட்டச் செயலாளரும் மேலவை உறுப்பினருமான உயர்திரு. முத்து அவர்களின் வீட்டைத் தாக்க வேண்டுமென்ற முயற்சி நடைபெற்றிருக்கிறது. போலீஸ் பாதுகாப்பு போட்டதினால் அது தடுக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சிக்குப் பின்னால் 15-ம் தேதி சென்னை மாநகரத்தில் பேசிய முன்னாள் போலீஸ் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள், தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லை என்று மாணவர்கள் இதேபோல் கலாட்டா செய்கிறார்கள், மதுரையில் தட்டிக் கேட்டு விட்டோம். இனி என்ன செய்யப்



போகிறார்கள் என்று 15-ம் தேதி அன்று பேசியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்பட்டு அந்தப் பேச்சுகளை பதிவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டதால் தான் இன்றைய தினம் அவர்களது பேச்சுக்கள் நமக்கு வெளிப் படையாகத் தெரிய முடியவில்லை. ஏன் திரு. கக்கன் அவர்கள் பேசியிருப்பதைக் குறிப்பிட்டுப் பேசுகிறேன் என்றால், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். முன்னாள் போலீஸ் அமைச்சராகவும் இருந்தவர் அவர். இன்று பதவி பறிபோய் விட்டதால் பொதுமேடைகளில் பேசக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறார். 15-ம் தேதி அவர்கள் பேசிய பிறகு நேற்றையதினம் பகலில் மதுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு வார்ட் செயலாளர் திரு. எ. வி. ராஜு என்பவர் தாக்கப்பட்டிருக்கிறார். அவரது கடை சூறையாடப்பட்டிருக்கிறது. திரு. அழகிரி என்ற தொண்டரின் சைக்கிள் கடை சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேச்சுக்கும் இதற்குமுள்ள பொருத்தத்தை தயவு செய்து அமைச்சரவை கண்காணித்துப் பார்த்து இனிமேலாவது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர்களின் கூட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக அசம்பாவிதங்களைத் தூண்டி விடவேண்டுமென்று நினைக்கக் கூடியவர்களின் பேச்சுக்களை எடுப்பதற்கு, அது கூட முடியவில்லை என்றால் முன்னாள் காங்கிரஸ் ஆட்சியில் மந்திரி பீடத்தில் உட்கார்ந்து இன்று தோல்வி அடைந்ததால் இன்று மேடைகளில் பேசக்கூடிய மாஜி மந்திரிகளின் பேச்சுக்களுக்காவது சுருக்கெழுத்தாளர்களை அனுப்பவேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் பெருமகனார் அவர்கள் உரையில் முந்திய திட்டங்களில் வேளாண்மைத் துறை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாத காரணத்தினால்தான் விவசாயம் விருத்தியடையவில்லை என்று கூறியிருக்கிறார்கள். முன்பெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பேசும்போது அந்தத் திட்டங்களைப் போட்டோம், இந்தத்திட்டங்களைப் போட்டோம் என்று சொல்வார்கள். இந்த ஒரு ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயத் துறையில் பல சாதனைகளை நிறைவேற்றியிருக்கிறது. எடுத்துக் காட்டாக என் தொகுதி சம்பந்தப்பட்ட இரு எடுத்துக் காட்டுகளை மட்டும் கூற விரும்புகிறேன். ஏன் அதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால் காங்கிரஸ் ஆட்சி செய்ததை விட இந்த ஒரு ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்குத் தேவையானதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறது என்பதை நினைவூட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். என்தொகுதியில் பெரியாற்று கால்வாய் பாசனத்தில் போனைப் பிரிவிலிருந்து திருமங்கலம் பகுதிக்கு தண்ணீர் சென்றுகொண்டிருந்தது. இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசனவசதி செய்து தரவேண்டுமென்ற முயற்சி நடைபெற்று வந்தது பத்தாண்டுகளாக. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் விவசாயிகள் அந்த வாய்ப்பைப் பெறமுடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு ஒரு ஆண்டிற்குள்ளாக அது நிறைவேற்றப்

தோண்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் கடன் கொடுத்து உதவ வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் கிராமத்திலுள்ள ஒரு ஜனநாயக அமைப்பான ஊராட்சியிலிருந்து தமிழக அரசு வரைஇப்படிப்பட்ட விவசாயச் சீர்திருத்தம் அதிக அளவில் காணப்பட வேண்டுமென்ற முறையிலே முழுமூச்சுடன் ஈடுபட்டு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன் காரணமாக வரும் ஆண்டில் விவசாயத்தில் நிச்சயமாக நல்ல எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறோம் என நாம் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளலாம். இதேமுறையிலேயே இந்தத் தமிழக அரசு அவசரமும், அவசியமுமான காரியங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வந்துகொண்டிருக்கிறது என்பதைக் காணலாம்.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 18, 19, 20 தேதிகளில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி தாலுக்கா கிழக்கு பகுதியிலும் பெருவெள்ளத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குளங்களில் உடைப்பு ஏற்பட்டது. அந்தச்சமயத்தில் பொறியாளர்கள் எவ்வளவு குளங்களை உடனடியாகப் பழுதுபார்த்துத் தண்ணீரைத் தேக்க முடியுமோ, அந்த அளவில் தேக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டு அந்தப்பணியை வெற்றிகரமாகச் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் வெள்ளம் ஏற்பட்டு குளங்களை அடைக்கவில்லையா என்று கேட்கலாம். அவர்கள் இதற்கு முன்பு அடைத்தது அந்தப்பருவம் முடிந்தபிறகு. பருவம் முடிந்த பிறகு கோடையிலே அடைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாதிரி அந்தப் பருவத்திலேயே பழுதுபார்த்து தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படத் தக்க அளவிற்கு உடனடியாகச் செய்திருக்கிறார்களா? என்று கேட்டால் நிச்சயமாக எந்தக்காலத்திலும் அவ்வாறு நடைபெறவில்லை. அந்த அளவிற்கு விவசாயிகள் மகிழ்ச்சிகரமாக விவசாயத்தில் ஈடுபடக்கூடிய அளவிற்கு இன்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் கடந்த 20 ஆண்டுகாலமாக ஆண்டுவந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள் சிலபல பகுதிகளை மிக நல்ல முறையில் கவனித்தும், சிலபல பகுதிகளை கவனிக்காமல் விட்டுவிட்டும் இருக்கிறார்கள். அந்த முறையில் திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் சப்-தாலுக்கா என்ற பகுதி காங்கிரசார் ஆட்சி செய்து வந்த நேரத்தில் 'பனிஷ்மெண்ட் ஏரியா' என்று சொல்லத்தக்க விதத்தில் அதை வைத்து வந்துள்ளனர். அலுவலர்களுக்கு விளாத்திகுளம் பகுதி பனிஷ்மெண்ட் ஏரியா என்று சொல்லத்தக்கவிதத்தில் அவ்வூர் இருந்தது. அங்கே போடக்கூடிய அதிகாரிகள் அனைவரையும், தண்டனை பெற்றவர்களையோ அல்லது அவர்கள் மேலதிகாரிக்குக் கீழ்ப்படியாமல் இருந்தார்கள் என்ற காரணத்தைக்காட்டியோ, அவர்களை அந்தப்பகுதியில் நியமனம் செய்து அங்கே மிகவும் ஒரு மோசமான நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வந்தார்கள். இப்படிப்பட்ட அந்த நிர்வாகம் இப்பொழுது நல்லமுறையிலே மாறியிருந்தாலும் அந்தப்பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருக்கிறது.





அந்தப்பகுதியில் விவசாயம் செய்யக்கூடிய பெரும்பாலான மக்கள் எல்லோரும் புஞ்சை விவசாயத்தையே நம்பி வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு 90 நாட்கள்தான் ஆண்டிலேயே வேலை செய்யக் கூடிய வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையை மாற்றி, அங்கே செழிப்புள்ள பகுதியாக மாற்ற வேண்டிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.

கடற்கரை ஓரப்பகுதியாக இருப்பதால், மேற்கே பெய்யக்கூடிய மழை, ஆறுகள், ஓடைகள் வழியாக கடலுக்கு வந்து வீணாகக் கலக்கின்றது. அங்கே அந்த நீரைத் தேங்க வைக்க நிறைய புதிய குளங்களை ஏற்படுத்தினால் நஞ்சை விளைச்சல் பெருகும். அதேநேரத்தில் அந்தப்பகுதியிலே குடிப்பதற்குக் கூட நல்ல தண்ணீர் இல்லாத நிலையிலே இருக்கிறது. குடிப்பதற்கான தண்ணீரைக்கூட பல மைல்கள் சென்று எடுத்துவரும் ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு நலையான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆகவே, இப்பொழுது அந்தப்பணியை மேற்கொண்டு சிறப்பு நீர்ப்பாசனப் பிரிவினர் ஒரு கோடி ரூபாய் செலவு செய்தால் அங்கே பல புதிய குளங்களை ஏற்படுத்தி, ஓடிவரக்கூடிய தண்ணீரை வைப்பாற்றிலே மூன்று இடங்களில். அணைகட்டி பல குளங்களை நிரப்புவதற்கான திட்டத்தைத் தீட்டி அது அரசினர் பார்வையில் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றி அந்தப் பகுதியை நல்லமுறையில் மாற்றம் செய்யும் என்று நம்புகிறேன். கூடிய விரைவில் அதைச் செய்யவேண்டுமென்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் நண்பர்கள் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபிறகு அமைதி குலைந்து விட்டது, அராஜகம் தலைவிரித்தாடுகிறது என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே நடந்த ஒரு சம்பவத்தை நான் இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். கடந்த 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிஞர் அண்ணா பிறந்த தினத்தைக் கொண்டாடினோம். அதற்காக வேம்பார் என்ற இடத்திலே ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக்கூட்டத்தில் நானும் பல தோழர்களும் பேசவிருந்தோம். ஆனால் கூட்டம் ஆரம்பம் ஆனவுடனே அந்த ஊர் காங்கிரஸ்காரர்கள் இந்தக் கூட்டத்தை நடத்தவிடாமல் கல்லை எறிந்து அங்கே மேடையிலேயுள்ள குழல் விளக்குகளை உடைத்து பெரும் கலகத்தை உண்டாக்கினார்கள். தாய்மார்கள் அலற அலற ஓடக்கூடிய அளவில் விரட்டிவிரட்டி அடித்தார்கள். அந்தக் கலகத்தில் என் மீதும், தோழர் ஒருவர் மீதும் கல்லை வீசினார்கள். அந்த நிகழ்ச்சியைக் கண்டிக்க வேண்டிய காங்கிரசார் அந்த நேரத்தில் என்ன சொன்னார்கள்? அந்தக்கூட்டம் நடத்த இரண்டு தினங்கள் கழித்து தூத்துக்

[திரு. மு. இரத்தினசபாபதி] 1968 பிப்ரவரி 17

குடியிலே காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அன்றைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கலந்து கொண்டு பேசிய நேரத்தில் அந்த வேம்பார் நிகழ்ச்சியைக் கண்டிப்பதை விட்டுவிட்டு அந்த நிகழ்ச்சியை அப்படித்தான் செய்வார்கள் என்ற முறையிலே, அதற்கு உற்சாகமூட்டத்தக்க அளவுக்கு பேசினார்கள். இதன்காரணமாக காங்கிரஸ்காரர்கள் மனதிலே என்ன எண்ணி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்த நாட்டிலே குழப்பம் ஏற்படவேண்டும், அந்தக் குழப்பத்தின் காரணமாக இந்த ஆட்சி மீது களங்கத்தைச் சுமத்த வேண்டுமென்றுதான். அதன் காரணமாகத்தான் இவ்வாறெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த வாதத்தை அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, இந்த ஆளுநர் பேருரையிலே மொழிப்பிரச்சினையைப் பற்றி மிகத்தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலேயுள்ள மாணவர்கள் நல்லமுறையிலே நமது கொள்கையை ஒத்துக்கொண்டார்கள். இந்த மொழித் தீர்மானமானது உண்மையிலேயே நம் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு மாபெரும் ஏற்பாடாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்): இத்துடன் இன்றைய பேரவை நடவடிக்கைகள் முடிவுறுகின்றன. மீண்டும் நாளை மறுநாள் காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பிற்பகல் 1-58 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

**A. Statutory Rules and Orders.**

'NIL'.

**B. Reports, Notifications and Other Papers.**

† 8. Demands for Grants for Further Expenditure and Detaild Supplementary Estimates thereof for the year 1967-68 (English and Tamil).

† 9. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1967-68 (English and Tamil).

† 10. Speech of Hon. the Chief Minister presenting the First Supplementary Estimates for the year 1967-68 (English and Tamil).

---

† Placed on the Table of the House on 16th February 1968.

## தமிழக சட்டப் பேரவை

---

திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Periyar and Mettur Power Houses.*

* 2 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Periyar and Mettur Power Houses have been shut down recently ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மேட்டூர் சுரங்க மின் நிலையம் ஓர் ஆண்டில் சுமார் 7 திங்கள்களுக்கு மட்டுமே, அதாவது ஜூன் முதல் ஜனவரி வரையில் மட்டுமே, ஏரி நீர் மட்டம் 710 அடியைத் தொடுகின்ற வரையில் செயல்படுமாறு அமைக்கப்பட்டுள்ளது. 7—1—1968-ல் நீர் மட்டம் 711.3 அடிக்குக் கீழே சென்றபோது இம் மின் நிலையம் மூடப்பட்டது எனினும், பழைய மேட்டூர் அணை மின் நிலையம் செயல்பட்டு வருகின்றது. பெரியாறு மின் நிலையம் ஓர் ஆண்டில் 9 திங்கள்களுக்கு, அதாவது ஜூன் முதல் பிப்ரவரி வரை, பெரியாறு ஏரியின் நீர் மட்டம் 109 அடியை தொடுகின்ற வரையில் செயல்படமுடியும். 4—2—1968-ல் நீர் மட்டம் 109.2 அடிக்குக் கீழே சென்றபோது அம் மின் நிலையம் மூடப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, எவ்வளவு பவர் இதன் மூலம் குறைக்கப்பட்டிருக்கிறது? இதன் மூலமாக எத்தனை இடங்களில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது ? இன்னும் கேரளம், மைசூர் மாநிலங்களில் விதிக்கப்படும் விலைக்கும் நம்முடைய மாநிலத்தில் விதிக்கப்படும் விலைக்கும் வித்தியாசம் என்ன? நெய்வேலியிலிருந்தே இந்த மின்சாரப் பற்றுக்குறையை ஈடு செய்துகொள்ள முடியாதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலே குறிப்பிட்டபடி இவ்வளவு அளவுக்குக் குறைந்தால் மூடப்பட வேண்டும் என்ற முறையின்படிதான் அந்த அளவு குறைந்து

மின்சார நிலையம் ஒன்றை எண்ணூரில் அமைத்துக்கொண்டிருக்கிறோம். 1970-ல் இருந்து அதுவும் மின்சாரம் தரும் சூழ்நிலை ஏற்பட்டால் தட்டுப்பாடு குறைய வழி ஏற்படும்.

THIRU K. VINAYAKAM : In view of the abundance of the supply of electric energy in our State as well as the agreement with the Mysore Government for supply of electric energy, are we to take it that there will not be any power-cut this year ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த ஆண்டு மின்சார வெட்டு இருக்காது என்று உறுதியாகச் சொல்லலாம்.

**திரு. கே. சகாதேவகண்டர் :** அணையிலிருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டுவிட்டதால் பயிர்கள் ஏதாவது சேதமடையுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்த அளவிற்குத்தான் நான் பதில் சொல்ல இயலும். ஆனல் நீர்ப்பாசனம் சம்பந்தமாக பிரச்சினைகள் இருக்குமானல் அதுபற்றி அதற்குரிய அமைச்சர்தான் பதில் சொல்ல முடியும்.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லை மாவட்டம் பாபநாசம் நீர் மின் திட்டத்தில் இரண்டு ஸ்டேஷன்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அவை இந்த பட்ஜெட் ஆண்டிலே நடைமுறைக்கு வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

## புதிய தொழில்கள் துவக்கம்

* 71 வினு.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இந்த அரசு பதவியேற்றதிலிருந்து ஜூன் 15 வரை எத்தனை புதிய தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி (லைசென்ஸ்) அளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இதற்கு முன் அனுமதி அளிக்கப்பட்டவையில் எத்தனை தொழில்கள் இந்தக் காலத்தில் (ஜூன் 15 வரை) தொடங்கப் பட்டுள்ளன ?

(உ) சென்ற ஆண்டு இதே சமயத்தில் எத்தனை அனுமதிகள் வழங்கப்பட்டன ? எத்தனை தொடங்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) பத்து.

(இ) ஐந்து.

(உ) வழங்கப்பட்ட அனுமதிகள் ஆறு. தொடங்கப்பட்டவை இரண்டு.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இது 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் போடப்பட்டதுதானே ? 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய எத்தனை புதிய தொழில்கள் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் கொடுக்க முடியுமா ? இந்த அரசு கொடுத்த லைசென்ஸ்கள் மூலம் துவக்கப்பட்ட தொழில்களின் மொத்த முதலீட்டுத் தொகை எவ்வளவு ? சென்ற ஆண்டு இதே காலத்தில் முந்தய அரசு கொடுத்த லைசென்ஸ்களின் மூலம் துவக்கப்பட்ட தொழில்களில் முதலீட்டுத் தொகை எவ்வளவு ? இந்த அரசின் தெளிவற்ற தொழில் கொள்கையின் காரணமாக தொழில் துறையில் மந்த நிலை உருவாகியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். 6-3-1967 முதல் 15-6-1967 வரை புதிய தொழில்கள் துவங்குவதற்கு லைசென்ஸ்கள் வழங்கியது 10. இதற்குமுன் அனுமதி அளிக்கப்பட்டு 6-3-1967-ல் இருந்து 15-6-1967 வரை துவக்கப்பட்ட தொழில்கள் 5. சென்ற ஆண்டு இதே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டவை 6 தான். தொடங்கப்பட்டவை 2 தான். ஆனல், 1967 டிசம்பர் முடிய எவ்வளவு என்று கேட்கிறார்கள். இதற்குத் தனிக்கேள்வி கேட்டால் தான் பதில் கூற இயலும். இந்த அரசு கொண்டிருக்கிற கொள்கை என்ன என்பதைப் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே இருந்த அரசின் கொள்கையிலிருந்து எந்த அளவிற்கும் மாருமல், துவக்கப்பட்ட தொழிற்சாலைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதிலும், அதிகமான அளவு தொழிற்சாலைகள் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்திலும் அரசாங்கம் அதற்கு வேண்டிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. மந்த நிலை என்பது இந்த மாநிலத்தைப் பொறுத்தது மட்டும் அல்ல. ரிசெஷன் என்பது சென்னை மாநிலத்தில் மாத்திரம் அல்ல, அகில இந்தியா முழுவதும், வெளிநாடுகளிலும்கூட, உலகம் முழுவதும் கூட இத்தகைய ரிசெஷன் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பல்வேறு அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் சீர்படுத்த முடியாமல் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதும் ஒரு காரணம். சொல்ல வேண்டுமானல் ரயில்வேயில் போட்டிருந்த பல கோடி ரூபாய்த் திட்டங்கள் நிறுத்திவிட்டால் அவர்களுக்கு சப்ளை செய்கின்ற தொழிற்சாலைகள் நிறுத்தி வைக்காமல் நடத்திக் கொண்டிருந்தால் அப்பொழுது தொழிற்சாலை உற்பத்தி செய்யக் கூடிய பொருளை வாங்குபவர்கள் இருக்கமாட்டார்கள். மேலும் உற்பத்தி செய்ய வழியில்லாத தொழிற்சாலை நடக்காது. ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கும் நிலையில் ரிசெஷன் வந்திருக்கிறது. இதைப் போக்க அரசு, தனியார், ரிசர்வ் பாங்க், மற்ற பாங்குகள், உலக பாங்க் எல்லாம் சேர்ந்து முயற்சி செய்துதான் ரிசெஷன் மேலும் வளராமல் தடுக்க இயலும் என்ற அறிகுறி இருக்கிற காரணத்தால், எதிர்காலத்தில் நாம் நம்பிக்கை கொள்ளலாம்.

[1968 பிப்ரவரி 19

Dr. H. V. HANDE : Sir, instead of indulging in mutual recrimination, it is always better to come to some concrete proposals and some concrete ideas as to how exactly we can get over the present recession in the industrial field. Will this Government come forward with some concrete and definite proposals to solve the miserable problem of under-employment and unemployment which is clearly indicated by the Employment Exchange statistics? Do the Government realise that the absence of industrial peace is also one of the factors which is responsible for the recession and if so, what steps the Government are going to take to solve recession as far as Madras State is concerned.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த 'ரெசஷன்'—மந்த நிலையை மாற்றுவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு தன்னால் இயன்ற அளவுக்கு எடுத்துக் கொண்டு வருகிறது. அந்த மந்த நிலை நீங்க வேண்டுமென்றால் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டும். அதோடு, ஏற்கெனவே இருக்கிற தொழிற்சாலைகளால் உற்பத்திசெய்யப்பட்டிருக்கிற பொருள்கள் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன. அதை வேண்டும். மற்ற மாநிலங்களால் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் விநியோகப்படுவதற்கான முறைகளும் ஏற்பட உடனடியாக அந்தந்த அரசினர் எடுத்துக் கொண்டால்தான் இந்த தொழில் நடைபெறும் என்று அந்தந்த மாநிலத்திற்கு எழுதிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்யவும் இந்த அரசு தயாராக இருக்கிறது. அதோடு, இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன், மாநில இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஆகியவைகள் இது போன்ற தொழிற்சாலைகளுக்கு கடன் உதவி செய்வதையும் அதிகமாக ஆக்க இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதுவரை ஒரு லட்ச ரூபாய் கடன் கொடுத்து வந்தது. அதை இரண்டு லட்ச ரூபாயாக உயர்த்திக் கொடுக்க முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு தொழிற்சாலைகள் அதிகமாக ஏற்படுகின்றனவோ அதைப் பொறுத்துத்தான் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்க வழி ஏற்படும்.

**திரு. ஆ. துரையரசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச்சு மாதத்திலிருந்து ஜூன் மாதம் 15-ம் தேதி வரையில் இந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் எத்தனை? அதற்கு லைசென்சு அனுமதி கேட்டவர்கள் எத்தனை பேர்? ஏற்கனவே, 1966-ம் ஆண்டு இருந்த காங்கிரஸ் சர்க்காரின் ஒழுங்கற்ற தொழில் கொள்கையின் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எவ்வளவு? அதனால் பாதிக்கப்பட்ட தொழிற் சாலைகள் எவ்வளவு என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். காங்கிரஸ் சர்க்காரின் ஒழுங்கற்ற கொள்கை தான் இந்த மந்த நிலைக்குக் காரணம் என்கிறார்கள். முந்தைய அரசின் கொள்கையையே



1968 பிப்ரவரி 19]

இந்தச் சர்க்காரும் பின்பற்றி வருகிறது என்று வெளியே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே தி.மு.க. அரசு ஒழுங்கற்ற கொள்கையைப் பின்பற்றுகிறது என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மந்த நிலை என்பது வேறு, ஒழுங்கற்ற நிலை என்பது வேறு. ஆனால் இன்றைக்கு ஒரு சின்ன தொழிற்சாலை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று சொன்னால் பல லைசென்சுகளை வாங்க வேண்டியுள்ளது. கடன் கொடுக்கக்கூடிய பல கார்ப்பரேஷன்களிலே அந்தக் கடனை வாங்குவதற்காகப் பல முயற்சிகளிலே ஈடுபட வேண்டியுள்ளது. இதற்கு நூற்றுக்கணக்கான முறை சுற்றி அலைந்து, ஆயிரக் கணக்கான ரூபாயை கையை விட்டு முதலாகப் போட்டு, வருடக் கணக்கிலே காத்திருந்து அனுமதி வாங்கக்கூடிய ஒரு மந்த நிலை இருக்கிறது. அதை மாற்றி துரிதமாக உடனடியாக வரக்கூடிய அளவுக்கு இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த லைசென்ஸ் என்பதே சாதாரணமாக 25 லட்ச ரூபாய்க்கு மேல் தொழிற்சாலை துவக்குவதற்கு இந்திய சர்க்காருடைய அனுமதி பெற வேண்டும் என்பது தான். அவைகளிலே புதிய தொழிற்சாலைகளுக்கும் லைசென்ஸ் தருகிறோம். இருக்கிற தொழிற்சாலைகளை விரிவுபடுத்த வேண்டுமானால் 7½ லட்ச ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அதற்கும் இந்திய சர்க்காருடைய அனுமதி பெற வேண்டும். அந்த முறையில் 10 தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் காலதாமதத்திற்கு அந்தத் துறை அதிகாரிகள் அத்தனை பேரும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளார்கள். சாதாரணமாகக் கொடுக்கப்பட வேண்டிய அனுமதியைப் பாராமல் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கி உதவி செய்யுமாறும் துறை அதிகாரிகள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றிய நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட வேண்டுமென்றும் கூறி இருக்கிறேன். முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** சார், இந்த 15 தொழில்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதாகவும் 5 தொழில்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எந்தெந்த தொழில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது, அது என்னென்ன தொழில்கள் என்ற விவரத்தைக் கூற முடியுமா?

[1968 பிப்ரவரி 19

**திரு. மு. சின்னசாமி :** மத்திய அரசு நாணய மதிப்பைக் குறைத்த—தேவையற்ற பொருளாதாரக் கொள்கையின்—காரணமாக தமிழகத்தில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு நம்புகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய கருத்து நம்முடைய நாட்டிலிருக்கிற எல்லா பொருளாதார நிபுணர்களாலும், பாராளுமன்றத்திலும், சட்டமன்ற உறுப்பினர்களாலும், இந்த அரசினாலும் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்னாலும் இதே சட்டமன்றத்தில் இதைப்பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ரூபாயின் மதிப்பைக் குறைத்ததற்கு அவர்கள் வேறு பல காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால், அதன் விளைவை ஆராய்ந்ததற்குப் பிற்பாடு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு அது ஒத்ததாக இருக்கக்கூடும்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகு ஏற்படுத்தப்பட்ட தொழில் ஏதாவது மூடப்பட்டிருக்கிறதா ? பல தொழிற்சாலைகள் இதற்கு முன்பு மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, பஞ்சாலைகள் மூடப்பட்டன. அவைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பஞ்சாலைகள் மூடப்பட்ட தன்மைகள் இருந்தன. அவற்றில் இரண்டு, மூன்று திறக்கப்படுவதற்கும், மற்றவைகளும் திறக்கப்படுவதற்குமான சூழ்நிலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் சிபார்சுகள் வந்த பிறகு, சிலபல நூற்பு ஆலைகள் திறக்கப்பட்டன. 18 நூற்பு ஆலைகள் மூடப்பட்டு விடுமோ என்ற அச்சம் இருந்ததால், அந்த நூற்பு ஆலைகளுக்குக் கடன் கொடுப்பதற்கு வசதியாக ரூ. 1 கோடி 13 லட்சம் அளவுக்கு காரண்டி தருவதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது. வேறு பாங்குகள் கடன் கொடுக்க முன்வராத நிலையில் மத்திய அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். நானும் பங்களூரில் துணைப் பிரதமர் அவர்களோடுகூட இதுபற்றி எடுத்துத் தெரிவித்து, இந்திய சர்க்கார் இந்த மில்களை எடுத்து நடத்துவதற்கும், காரண்டி கொடுத்து கடன் வசதி பெறுவதற்கும் உதவி செய்தால், இந்த மில்கள் திறக்கப்படலாம் என்றும் கூறியிருக்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து, நான்கு தொழில் ஸ்தாபனங்கள் தங்களுடைய தொழிலை ஆரம்பிக்கவில்லை என்று தெரிகிறது. எந்தக் காரணத்தினால் அவர்கள் தொழில்களை ஆரம்பிக்கவில்லை என்பதை அரசு பரிசீலனை செய்து, அந்த நான்கு தொழில்களுக்கும் கொடுக்கப்பட்ட உரிமங்களை இந்த அரசு ரத்து செய்ய முன்வருமா ?



1968 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. ஆனால், முறைப்படி ஒரு கால அளவிற்குள் ஆரம்பிக்காவிட்டால், இன்னும் ஒரு கால அளவிற்குள் தொடர்ந்து ஆரம்பிப்பதற்குக் கூட முன்வரக்கூடும். ஒரு குறிப்பிட்ட கால வரைக்குள் ஆரம்பிக்க முடியாவிட்டால், சிறிது கால அளவு தொடர்ந்து கேட்கலாம், அப்படிச் சிறிது அவகாசம் தொடர்ந்து அளிக்கலாம். அப்பொழுதும் கூட ஆரம்பிக்கவில்லை என்றால், அந்த அனுமதி மறுக்கப்பட்டு, வேறு ஒருவருக்கு அனுமதி கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** பொருளாதாரம் ,தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டிருப்பதாக நண்பர் சித்தன் அவர்கள் கூறினார்கள். சில தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களும், இயந்திரங்களும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. சில தொழில்களுக்கு மூலப்பொருள்கள் 'கோட்டா' மத்திய அரசு தர வேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் இறக்குமதிக் கொள்கை குறைபாட்டின் காரணமாகவும், லைசென்ஸ் வழங்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாகவும், தொழில்துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பதை இந்த அரசு உணர்கிறதா ? அதன் பேரில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு .இரா. நெடுஞ்செழியன்:** கனம் உறுப்பினர் அவர்கள் சில விளக்கங்கள் தந்திருக்கிறார்கள். மந்த நிலைமை என்பது இருக்கிற நிலைமையை விட, பேசுவது கொஞ்சம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், சில நிலைமைகள் நாட்டில் ஏற்படுகின்றன. பொருளாதார நிபுணர்களும், மற்றவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மெல்ல மெல்ல மந்தநிலை நீங்க ஆரம்பித்திருக்கிறது என்ற நம்பிக்கை எல்லா மட்டத்திலும் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Industries be pleased to state the number of licences granted for starting new industries in the Dharmapuri district ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எம். சண்முகம் :** தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் மெட்ராஸ் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ரூ. 45 லட்சம் பொதுமக்கள் மூலதனம் போட்டு, 10 ஆண்டுகளாக துவக்கப்படும் என்று சொல்லப்பட்டபோதிலும், இன்று வரையில் துவக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? ஏற்கனவே மத்திய அரசாங்கம் துவக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருந்தும்கூட, இதுவரையில் துவக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. மூலக்கேள்வி ஜனவரித் திங்களிலிருந்து ஜூன் திங்கள் வரை வாங்கப்பட்ட உரிமங்கள் பற்றியது. ஆகவே, தொழில்துறை பற்றிய எல்லா கேள்விகளுக்கும் இப்பொழுதே பதில் அளிப்பது இயலாது. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

### மீனாட்சி கோயில் தேவஸ்தான ஊழியர்கள்

* 72 வினா.—**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி கோயில் தேவஸ்தான ஆலய ஊழியர்களிடமிருந்து சம்பள அமைப்பு திருத்தி உயர்த்தப்பட வேண்டுமென்றும், உரிய பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டுமென்றும் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம், வந்துள்ளது.

(இ) இம் முறையீடு பற்றி தம் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறையின் ஆணையாளர் கேட்கப்பட்டார். கோவில் ஊழியர்கள் சம்பளம், அகவிலைப்படி முதலியவற்றைத் திருத்தி அமைப்பது குறித்து கோவில் நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் அறிவித்துள்ளார்.

**திரு. என். சங்கரய்யா :** மதுரை மீனாட்சி ஆலய தேவஸ்தான ஊழியர்கள், இராமேசுவரம் தேவஸ்தான ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்கள், நகரசபை ஊழியர்கள் எந்தப் பொறுப்பில் பணியாற்றுகிறார்களோ, அதே பொறுப்பு அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தினால், அரசாங்க ஊழியர்களைப் போல் இவர்களுக்கும் பஞ்சப்படியும், சம்பளமும் அமைப்பதற்கான ஒரு ஏற்பாட்டை இந்தத் துறை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த அடிப்படையில் இது வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை. ஆனால் அவை பற்றி அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இந்தக் கோவில்களில் வைக்கப்பட்டிருக்கிற சில முறைகளைப் பொறுத்து, அவர்கள் கேட்டிருக்கிற கோரிக்கைகள் எந்த





அளவுக்கு நிறைவேற்றப்படலாம் என்று பரிசீலிக்க அறநிலையப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டு, அதுபற்றிய நடவடிக்கைகள் எடுப்பதில் நிர்வாகிகள் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, recently an Archakars' Mahanadu was held and it was addressed by the Hon. Minister for Industries and I also participated in that Mahanadu. In that Mahanadu a number of requests were made by the members of that Association. In view of the fact that there are some funds with the Religious Endowments Board and in view of the fact that these archakars have lost all the advantages that they had got in the olden days by way of traditional rights, will this Government re-examine their difficulties and accept liberally whatever demands that they make.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த மகாநாட்டில் அர்ச்சகர்கள் சிலபல கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகள் இப்பொழுது இந்த இலாக்காவின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பரிசீலனை முடிந்த பின்னால், இதுபற்றி என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.

### சங்க காலத்து நாணயங்கள்

* 73 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) சங்க காலத்து நாணயங்கள் மதுரை மாவட்டம், ஆண்டிப் பட்டியில் அண்மையில் கண்டெடுக்கப்பெற்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை நாணயங்கள் ?

(உ) அவை பண்டைய வரலாற்றினைத் தொகுப்பதில் எப்படி உதவுகின்றன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 143 ஈய நாணயங்கள்.

(உ) இந்த நாணயங்கள் வரலாற்று முறையிலும், எழுத்தியல் வகையிலும் சுவையுடையவையாகும். அந்த நாணயங்களின் மேல் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்த நாணயங்கள் சென்னைப் பொருட்காட்சிசாலைக்கெனப் பெறப்பட்டுள்ளன. இவை சங்க காலத்தைச் சேர்ந்தவையா இல்லையா என்பது இன்னும் உறுதியாகவில்லை. இந்த நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சென்னைப் பொருட்காட்சி சாலையில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. இந்த நாணயங்களின்

சேகரிப்பு குறித்து சென்னைப் பொருட்காட்சிசாலையின் சிறு அறிக்கையாக தனி ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிடக் கருதப் பட்டுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, பண்டைத் தமிழ் அகத்தின் வரலாற்றினை அறிய செப்பேடுகள், நாணயங்கள், உதவி யாக இருப்பதன் காரணமாக, அவற்றைப் பற்றி பொதுமக்கள் அறியும் வகையில், அரசு புத்தகங்கள் வெளியிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத்தலைவர் அவர்களே, இந்த நாணயங்களில் ஒரு புறத்தில் பிராமி எழுத்துக் களும், மறுபுறத்தில் கடல் அலை போன்றவைகளும், முக்கோண மலைகள் போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன; இவை
முற் பகல் 9-30 ஆராயப்பட்டு வருகின்றன. அந்த எழுத்துப்படி, சின்னன், சேந்தன், என்ற பெயரும் காணப்படுகிறது. இந்த சேந்தன் சங்க காலத்தைச் சேர்ந்தவன்தானா அல்லது வேறு ஒருவனா என்பது பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு முழு விவரங்களும் தெரிந்த பிறகு, ஒரு சிறு நூலாக வெளியிட சர்க்கார் கருதி யுள்ளது.

*Special exhibition of manuscripts.*

*74 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government Museum at Madras has organised a special exhibition of some of the manuscripts of the great freedom fighters and Tamil Poet Subramania Bharathi ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) புகழ் பெற்ற தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் கையெழுத்துப் படிகளைக்கொண்ட சிறப்புப் பொருட்காட்சி ஒன்று 1967, செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு அரசாங்க அரும்பொருட் காட்சி சாலையால் நடத்தப்பட்டது. இந்தப் பொருட்காட்சியில் கவிபாரதி யாரின் கண்ணம்மா பாட்டுக்கள், குயில் பாட்டு, கீதை உரை, அகச்சித்திரம் என்னும் தலைப்பில் ஒரு நாடகம், பதஞ்சலி யோக சூத்திரம் சந்திரிகாவின் கதை பற்றிய உரைநடைப் பகுதி ஆகியவை இடம்பெற்றன. இந்த அரும் பொருட்காட்சியில் கவி பாரதியாரின் கையெழுத்துப் படிகள் மட்டுமே வைக்கப்பட்டிருந் தன. ஏனைய சுதந்திரப் போராட்ட வீரர்களின் கையெழுத்துப் படிகள் இடம் பெறவில்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், வ. உ. சிதம்பரனார் எழுதிய சில நூல்கள் இருப்பதாகத் தெரிகிறதே, அவர் கையாலேயே எழுதிய கையெழுத்துப் பிரதி யாரிடம் இருக்கிறது என்று அறிந்து, அதை வாங்கி ம்யூசியத்தில் வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சுப்பிரமணி பாரதி யார் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் இங்கே வைக்கப் பட்டிருக்கின்றன.

The Museum does not have manuscript of any other freedom fighter. என்று இருக்கிறது

ஆகவே, வ.உ.சி. கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாகத் தெரிய வில்லை. எங்கேயாவது இருப்பதாகத் தெரிந்து கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதை அரும் பொருள் காட்சியில் வைக்கலாம்.

**ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது :** தலைவர் அவர்களே, பழம் பெரும் புலவர்கள் இயற்றிய பல இலக்கியங்கள் ஏட்டுப் பிரதிகளாக பல குடும்பங்களில் இருக்கின்றன என்கிற உண்மை தெரிகிறது. அது போன்ற கையெழுத்துப் பிரதிகளை சேகரித்து, அவற்றைக் காட்சி சாலையில் வைக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பழங்காலத்தில் திரு. உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்கள் ஓலைகளையும், பல்வேறு சுவடிகளையும் சேகரித்திருக்கிறார்கள், சரஸ்வதி மஹாலிலும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சென்னை யிலும் பழங்கால ஏடுகள் பல்கலைக் கழகத்தால் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட படிவுகள், அரும் பெரும் சுவடிகள் இருந்து, யாராவது தருவதற்கு முன்வந்தால், அதைக் காப்பாற்ற மாநில அரசு முயற்சி செய்யும்.

*நிலப்பரப்பு அளவு முறையில் மாற்றம்*

*75 *வினா.*—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நமது ராஜ்யத்தில் பூமியின் விஸ்தீரணம் ஏக்கர் லிங்க்ஸ் என்கிற கணக்கிலிருப்பதை மெட்ரிக் சிஸ்டத்தின் அடிப் படையில் மாற்றியமைக்குமாறு மத்திய சர்க்கார் மாநில அரசாங்கத்தைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) & (இ) ஆம். இது அரசாங்கத்தின் ஆய்விலுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதுவரையில் மெட்ரிக் சிஸ்டம் அடிப்படையில் மாற்றியமைக்க முடியாத நிலைமை இருக்கும் போது, அதிலே ஈடுபட்டிருக்கிற சர்வேயர்கள் போன வாரத்தில் கூட 100 பேர்களை வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக் கிறார்கள். இந்த வேலையைப் பூர்த்தி செய்யும் உத்தேசம் உண்டா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1968 பிப்ரவரி 19

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வேலையிலிருந்து நீக்கப் பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நம்முடைய அளவு முறைகளை பொது மக்கள் ஏக்கர், லிங்க்ஸ் முதலிய அளவைகளில் இருக்கின்றன என்று புரிந்து கொண்டு இருக்கிறார்கள். அதை யெல்லாம் மெட்ரிக் முறைக்கு மாற்ற வேண்டும் என்று இந்திய அரசாங்கம் சட்டம் செய்திருக்கிறார்கள். தலைமுறை, தலைமுறை யாக இது இருந்து வந்திருக்கிற காரணத்தால், அவர்கள் குறிப் பிடும் வகையால் மாற்ற 10 வருஷ காலம் பிடிக்கும். ஆகவே, அந்த மாற்றம் செய்யும் வேலையை தள்ளி வைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தை நம் அரசாங்கம் கேட்டிருக்கிறது.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத்தலைவர் அவர்களே, மெட்ரிக் நில அளவை முறை இப்போது மறுநில அளவு செய்யப்படுகின்ற இடங்களில் கூட அமுல் படுத்தப்படவில்லை, இப்பொழுதும் கன்னியாகுமரியில் நடைபெறுகிற ரி-சர்வேயில் இம்முறை பயன் படுத்தப் படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மெட்ரிக் முறையை அமுல் படுத்த வேண்டும் என்று இந்திய அரசு சட்டமும் நிறை வேற்றி அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறது. நடைமுறையில் இருக்கும் சங்கடங்களைக் கவனத்தில் கொண்டு நம் அரசாங்கம் அந்த வேலை முடிவடைய 10 ஆண்டு காலமாவது ஆகும், ஆகவே அதைத் தள்ளிப் போட வேண்டும் என்று கேட்டிருக்கிறது என்று தெரிவித்தேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இது ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி. இந்த இலாகாவிலே பட்டாக்கள் ஜாயின்ட் பட்டாக்களாக இருக்கின்றன. லோன்கள் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. கிணற்றுக்கும் பம்பு செட்டுகள் வாங்கவும் முடிவதில்லை. ஆகவே ,உடனடியாக, அரசாங்கம் ஜாயின்ட் பட்டாக்களை தனிப்பட்டாக்களாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது மூலக் கேள்வி யிலிருந்து எழாவிட்டாலும், கனம் உறுப்பினர் அவர்களுடைய சிரமங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. கே. விநாயகம் :** சார், இப்பொழுது இருக்கிற பிரிட்டிஷ் சிஸ்டத்தை மாற்றி அமைக்க சில ஆண்டுகள் பிடிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அந்த பிரிட்டிஷ் சிஸ்டத்திலேயே, இவ்வளவு ஏக்கர் என்றால் பொதுமக்களுக்குத் தெரியும். ஆனால் அதையே இவ்வளவு லிங்க்ஸ் என்கிறார்கள். " So many links in length and breadth " என்று எழுது கிறார்கள். அப்படி எழுதுகிறவர்களுக்கே அது தெரியுமா, அந்த சர்வேயர்களுக்கே தெரியுமா என்று தெரியவில்லை. ஆகவே,



1968 பிப்ரவரி 19]

குறைந்தபட்சம் இவ்வளவு 'ஃபீட்', 'இஞ்சஸ்', 'யார்ட்ஸ்' என்று மாற்றியமைக்கவாவது ஏதாவது உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது இருக்கிற சங்கடமான நிலைமை அடிப்படையில் 'ஹெக்டர்' என்று விஸ்தீர்ணத்தை குறிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சட்டம் செய்திருக்கிறது. அதற்காகத்தான் காலம் வாங்கிக் கொண்டிருக் கிறோம். இன்றைக்கு மாநிலத்தில் இருக்கும் முறையை மெட்ரிக் முறைக்குக் கொண்டுவருவதில் நடைமுறையில் கஷ்டங்கள் இருக் கின்றன.

## கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகிலுள்ள காட்டுப் புறம்போக்கு

*76 வினா—**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடு புறம்போக்கு 213 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்கும்படி நிலமற்ற விவசாயிகளிடமிருந்து அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்திருக் கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (*a*) & (*b*) The petition referred to by the Member was forwarded to the District Revenue Officer, Ramanathapuram, for necessary action (in Government Memorandum No. 105624 F2/67-1, Revenue( dated 16th November 1967).

**திரு. என். சங்கரய்யா :** ஐயா, இப்பொழுது மனுச் செய்து கொண்டவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள். காட்டுப் புறம் போக்கு நிலங்களை அவர்கள் சாகுபடி செய்ய உரிமை கொடுக்க அரசாங்கம் மாவட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்ப வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் வருவாய்த் துறையினர் இராமநாதபுரம் அதிகாரிக்கு 16-11-1967 அன்று அரசாங்கத் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது. அதன் மீது நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் மூல வினாவை ஒட்டி, 'தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடுபுறம் போக்கு . . . . நிலத்தைச் சாகுபடிக்குக் கொடுக்கும்' தகவல் பற்றி ஒரு துணை வினாவைக் கேட்பார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இது சம்பந்தப் படாத கேள்வியாக இருந்தாலும் கூட, பட்டா வழங்குவது முக்கிய விஷயம். அதைப் பற்றித்தான் திரு. சங்கரய்யாவின் கேள்வி இருக்கிறது என்று நினைக்கிறேன். பட்டா வழங்குவதில் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு, பெரிய நிலக்காரர்களுக்குக் கொடுக்காவிட்டாலும், உடனடியாக பட்டாக்கள் வழங்கத்தக்க சிபாரிசுகளை சர்க்கார் அதிகாரிகளுக்கு அனுப்புவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விவரங்களை ரெவின்யூத் துறை விவாதத்தின்போது எடுத்துச் சொன்னால், அதற்கான வழிவகை காண உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

*Special exhibition of manuscripts*

* 77 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a cotton package programme would be extended to about 60,000 acres of land in Pollachi and Erode divisions ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 5.80 லட்சம் பேல் அளவிற்கு கச்சாப்பருத்தி உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் இந்த வேலைத் திட்டம் 1967-68-ம் ஆண்டுக்காலத்தில் ரூ. 1,47,740 மதிப்பீட்டுச் செலவில் செயல் படுத்தப்படும். இந்த வேலைத் திட்டத்தின் கீழ், குடியானவர்களுக்குக் கூடுதல் கடன் வசதிகள் கிடைக்கும்; உரங்களும், தர விதைகள் முதலிய தேவைப் பொருள்களும் தவறாமல் கிடைக்க வகை செய்யப்படும்.

**திரு. கே. விநாயகம் :** பாக்கேஜ் ப்ரொக்ராமின்படி பருத்தி உற்பத்தி செய்கிற விவசாயிகள் எத்தனை பேருக்கு லாபம் கிடைக்கும் ? அவர்கள் இதற்காக ஏற்கனவே எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்கிற விதிகள் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதனால் எத்தனை விவசாயிகள் நன்மை அடைகிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரம் இப்பொழுது என்னிடம் கிடையாது. எவ்வளவு ஏக்கரில் பருத்தி விளைகிறது என்ற தகவல்தான் கொடுக்க முடியும். அந்த அளவில், கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களில், பாசன வசதியோடு, குளிர் காலக் கம்போடியா பருத்தி 80,000 ஏக்கர் நிலங்களில் பயிராகும். இராமனுதபுரம், மதுரை மாவட்டங்களில், கோடைகாலக் கம்போடியா பருத்தி 50,000 ஏக்கர் நிலங்களில் பயிராகும். திருச்சி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் நஞ்சை நிலத்தில் நெல்



பயிரிட்ட பிறகு, பருத்தி விளைவிக்கப்படும். இதற்காக எவ்வளவு செலவு ஆகும் என்பதை நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன்.

**திரு. எம். கண்ணப்பன் :** நமது மாநிலத்தில் போதிய அளவு பருத்தி உற்பத்தி செய்யப்படாததால், இதை அதிகரிக்க ஏதேனும் தீவிர திட்டம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பருத்தியைக் கூடுதலாக உற்பத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 1967-68-ம் ஆண்டில் கூடுதலாக 90,000 ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடத் திட்டமிடப்பட்டது. அதில், கோயமுத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய இரண்டு பகுதிகளில் 60,000 ஏக்கர் நிலங்களில் பாசனக் கம்போடியா பயிரிடப்படும். மதுரை மாவட்டத்தில், உசிலம்பட்டி பகுதியில் பத்தாயிரம் ஏக்கரில் மானாவாரி கம்போடியாவும், திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில்பட்டி பகுதியில் இருபதாயிரம் ஏக்கரில் கருங்கண்ணி பருத்தியும் பயிரிடப்படும்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** இந்தத் தீவிரப் பருத்தி உற்பத்திச் சாகுபடித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட பருத்தி விதை, உரம், மருந்துகள் எல்லாம், அந்தப் பிராந்தியத்தில் கீழ் பவானி ஆயக்கட்டுக்கு இரண்டாம் முறை தண்ணீர் விடாததாலும், பருவ மழை இல்லாததாலும், பல நாள் கிடங்குகளில் வீணாகக் கிடந்து, பிறகு மற்ற பயிர்களின் உபயோகத்திற்கும் கொடுக்கத் தாமதம் ஆனதால், அதிலே பல அசௌகரியங்கள் ஏற்பட்டன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி ஏற்படாமல் தடுக்க, இனிமேல் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்து அளிக்கலாம்.

**திரு. சு. துரைசாமி :** நம்முடைய தமிழகத்தில் இருக்கும் பஞ்சாலைகளுக்குச் சில நேரங்களில் பஞ்சு கிடைக்காமல் தட்டுப் பாடு ஏற்படுகிறதன் காரணமாக, வேலை பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமையைப் போக்குவதுடன், நமது தமிழகத்தில் பஞ்சு எவ்வளவு உற்பத்தி ஆகிறது, நமது தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளுக்கு எவ்வளவு பஞ்சு தேவைப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றி முழு விவரம் இப்பொழுது இல்லை. நான்காவது ஐந்தாண்டுத்திட்ட கால இறுதியில், 90,000 ஏக்கரில் பருத்தி பயிரிடுவதற்குத்தான் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** பருத்தி சாகுபடியைத் தீவிரப் படுத்துவதற்காக, தஞ்சை போன்ற மாவட்டங்களில் நஞ்சை நிலங்களில் கோடைகாலப் பயிராகப் பருத்தியை அபிவிருத்தி

[1968 பிப்ரவரி 19

செய்யத் திட்டம் போடப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தின் விளைவு என்ன ஆயிற்று ? அதனால், லாபம் கிடைத்ததா ? அல்லது திட்டம் கைவிடப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திருச்சி மாவட்டத்தில், மணப்பாறைப் பகுதியில்தான், நஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி ஆன பிறகு, பருத்தி பயிரிடும் நிலைமை இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே இருக்கும் நிலைமை தஞ்சை மாவட்டத்திலும் இருக்குமானால் செய்யலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி, ஏற்கனவே முன்கூட்டி திட்டம் இருக்குமானால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதற்குமேல் முழு விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து அளிக்கலாம்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டம், ஹாஸூர் வட்டம் போன்ற பகுதிகளில், 15,000 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இந்தத் தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்தில் அந்தப் பகுதிகளையும் இணைத்துக் கொள்ள அரசினர் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தப் பகுதி தீவிர திட்டத்தின் கீழ் வரவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த முனைப்புத் திட்டம், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் தாலுக்காவிற்கும் விஸ்தரிக்கப்படுமா ? இந்த முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏக்கரொன்றுக்கு அதிகப் பருத்தி மகசூல் எந்த அளவு கிடைக்கிறது ? அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மதுரை மாவட்டத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற பகுதிக்கு இந்தத் தீவிரத் திட்டம் விஸ்தரிக்கப்படவில்லை. பெரியகுளம் பகுதியில் தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** பருத்தித் தீவிர சாகுபடித் திட்டம் வரவேற்கத் தகுந்தது என்றாலும், நல்ல ரகப் பருத்திக்கே கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, விவசாயிகள் பருத்தியைக் கொடுப்பதற்கு முன்வருவது இல்லை. ஆகவே, கட்டுபடியாகக்கூடிய விலை, இப்போதிருக்கும் விலையைவிட இன்னும் கூடுதலான விலை, பருத்திக்குக் கிடைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இம்மாதிரி ஒரு குறையைக் கனம் உறுப்பினர்கள்தான் குறிப்பிடுகிறார்கள். பருத்தி பயிரிடுகிற விவசாயிகள், தங்களுக்கு பாக்கேஜ் ஸ்கீமின்கீழ் போதுமான வசதி கிடைப்பதைக் கருதி, அதை வரவேற்கிறார்களே தவிர, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற மாதிரி நிலைமை இல்லை.



1968 பிப்ரவரி 19]

**திரு. சி. வீரமணி :** தீவிரச் சாகுபடி திட்டத்தின்கீழ் பருத்தி பயிர் செய்யப் படுவதைப் போல, புஞ்சைப் பயிரான நிலக்கடலைக்கும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், கனம் அங்கத்தினர் புதிதாக இருக்கும் காரணத்தால் பதில் சொல்கிறேன். மணிலாவுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** யுகண்டா, எகிப்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து உயர்ந்த ரகப் பருத்திகளை நாம் தருவிக்கிறோம். அதனால், அன்னிய நாட்டுச் செலாவணி மிகப் பெரிய அளவுக்கு நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இப்படி உயர்ந்தரகப் பருத்திகளை எந்த அளவுக்கு விவசாயம் செய்வதிலே கவனம் செலுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இறுதித் துணை வினாவொன்றை உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள் கேட்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** இந்த பாக்கேஜ் ப்ரொக்ராம் வருவதற்கு முன்னால், ஏக்கரொன்றில் எவ்வளவு பருத்தி விளைந்துவந்தது ? இந்த பாக்கேஜ் ப்ரொக்ராமை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், ஏக்கரொன்றில் எவ்வளவு அதிகமாக பருத்தி உற்பத்தி ஆகும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது ? அறுபதாயிரம் ஏக்கரை, அதாவது உணவுத் தானியம் பயிர் செய்கிற நிலத்தை இந்த பாக்கேஜ் ப்ரொக்ராமின்கீழ் பருத்தி சாகுபடி செய்வதற்காக மாற்றும் திட்டம் ஏதாவது இருக்கிறதா ? அதையும் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உணவுத் தானியம் விளையக்கூடிய நிலத்தில் பருத்தி விளைவிப்பதில்லை. திருச்சி பகுதியில் மட்டும்தான் அவ்வாறு செய்யப்படுகிறது, என்று முதல் கேள்விக்கே பதிலளித்தேன். நெல் சாகுபடி செய்யப்பட்டபின், மணப்பாறை பகுதியில் மட்டும் இந்த நிலைமை இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள், 'கூடுதலாக எவ்வளவு விளையும்' என்று கேட்டார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால், ஏற்கனவே எவ்வளவு விளைந்தது, இந்த பாக்கேஜ் ஸ்கீமினால் எவ்வளவு விளைந்தது என்று தெரிவிக்கலாம். இந்த பாக்கேஜ் ஸ்கீமின் மூலமாக, கடன் வசதி கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு உரம் கொடுக்கப்படுகிறது. தரமான விதை கொடுக்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் ஆதாயம் அடைகிறார்கள். எந்த அளவு உற்பத்தி கூடுதலாக ஆகியிருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, ஏற்கனவே 4.35 லட்சம் பேல் பருத்தி விளைந்தது

என்றால், இப்பொழுது திட்டத்தின் கீழ் 5.80 லட்சம் பேல் அளவிற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்று விவரம் தனிக் கேள்வி போட்டால் பிறகு தரப்படும்.

## மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக மார்க்கெட்டிங் சொசைட்டி

* 78 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டக் கூட்டுறவு சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொசைடி நிர்வாகிகள் குழு (Board of Directors) அரசாங்கத்தால் கலைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இக்குழுவிற்கான மறு தேர்தல் எப்போது நடைபெறும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) மதுரை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நிர்வாகக் குழு திருச்சிராப்பள்ளி பிராந்திய கூட்டுறவு சங்கக் கூட்டு பதிவாளரால் கலைக்கப்பட்டது.

(இ) இதற்கான காரணங்கள் பின்வருமாறு —

(1) இச்சங்கத்தின் நிர்வாகக்குழு மத்திய அரசு உதவும் கூட்டுறவுச் சங்கத்திட்டத்தைச் சரிவர அமல் நடத்தாமல், தன் பொறுப்புகளைத் தட்டிக் கழித்தது.

(2) 1958-59, 1961-62, 1962-63, 1963-64-ம் வருடங்களுக்குரிய தணிக்கை அறிக்கையில் கண்டுள்ள குறைகளை நிவர்த்திக்கும்படி மதுரை கூட்டுறவுச் சங்க உப பதிவாளர் வருடந்தோறும் சட்டப்படி உத்திரவுகள் பிறப்பித்தும் சங்கத்தின் நிர்வாகக்குழு அவைகளை நிவர்த்திக்கத் தவறிவிட்டது.

(3) நிர்வாகக்குழு சங்கக் கணக்குகளைச் சரிவர எழுதி வைத்திருக்கவில்லை. அறுமைத்து இனங்கள் Suspense accounts பற்றிய கணக்குகளை ஒப்பிட்டுப்பார்த்து சொத்து சம்பந்தப்பட்ட சான்றிதழ் வழங்கும்படி மதுரை மாவட்ட கூட்டுறவு தணிக்கை அதிகாரி உத்தரவிட்டும் அவ்வுத்தரவிற்கு இணங்கவில்லை.

(4) அரசிடமிருந்து பெற்ற உணவு தானியங்கள் பற்றிய கணக்குகளை முறைப்படி வைத்திருக்கவில்லை. இதன் விளைவாக அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 9,29,455-ஐ நீண்டகாலமாகச் செலுத்தத் தவறியதோடு அரசிடமிருந்து வரவேண்டிய ரூபாய் 7,91,335-ஐ வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.





(5) 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1966-ம் ஆண்டு மே மாதம் வரை அரசிடமிருந்து பெற்றதும் கொள்முதல் செய்ததுமான உணவுதான்ய இருப்பில் ரூ. 1,37,390 மதிப்புள்ள தானியங்கள் குறைவு ஏற்பட்டது.

(6) இரசாயன உர வியாபாரத்திலும் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டன, உர இருப்பில் குறைவு ஏற்பட்டதால், அதற்கு யார் பொறுப்பாளி என்று தீர்மானித்து அதற்குரிய தொகைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கத் தவறிவிட்டது.

(7) நைட்ரஜன் உரங்கள் சம்பந்தப்பட்ட கணக்குகளை முறைப்படி எழுதிவைக்காதிருந்ததால், உரங்களை விற்கும் தனது ஏஜண்டு சங்கங்களிடமுள்ள இருப்பையும் விற்ற தொகையையும் கணக்கிட முடியாமல் போயிற்று. 30-4-1967-ம் தேதியில் ஏஜண்டு சங்கங்களிடமுள்ள ரூ. 7,39,935 வரவேண்டியிருந்தது. ஏஜண்டு சங்கங்களிடமுள்ள உர இருப்பை அடிக்கடி சரிபார்த்து உரவிற்பனைத் தொகைகளை வசூலிக்கத் தவறிவிட்டது.

(8) சில்லரை விற்பனைக் கடைகள் நடத்துவதற்கான விதிமுறைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காததால், திண்டுக்கல்லில் நடத்திய சில்லரைக்கடை ஒரே ஒரு குமாஸ்தாவின் பொறுப்பில் விடப்பட்டு, 1967-ம் ஆண்டு மொத்தத்தில் அவரால் ரூ. 12,094-86 களவாட ஏதுவாயிற்று.

(உ) ஒழுங்கீனங்கள் எல்லாம் சரிவர நிவர்த்திக்கப்பட்டபின், சங்கத்தின் அடுத்த நிர்வாகக்குழுவிற்குரிய தேர்தல் பற்றி கூட்டுப் பதிவாளர் தீர்மானிப்பார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இப்போது அந்த நிர்வாகம் யாருடைய பொறுப்பில் இருக்கிறது ? அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து பல ஊழல்கள் அங்கே நடந்திருப்பதாகத் தெரிகிறது. இதை நிவர்த்திக்க அரசாங்கம் சட்டத்தைத்திருத்த உத்தேசம் செய்திருக்கிறதா? அல்லது வெறும் நடவடிக்கை மட்டும் எடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தப் பொறுப்பை ஒரு தனி அதிகாரியிடம்—ஸ்பெஷல் ஆபீசரிடம்—ஒப்படைத்திருக்கிறது. அவர் இந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்திக்க முயற்சி எடுத்துகொள்வார்.

**திரு. வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகம் எங்கும் இயங்குகின்ற கூட்டுறவு சப்ளை அன்ட் மார்க்கெட்டிங் சொசைடி நிர்வாகிகள் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அரசியல் நோக்கத்தோடு பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அதைப் போக்குகின்ற முறையில் சர்க்கார், கூட்டுறவு சொசைடிகள் நிர்வாகிகள் குழு அனைத்தையும் கலைத்து விட்டு, புதிய குழுவினைத் தேர்ந்தெடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது அங்கத்ினர் அவர்களுடைய யோசனை.

**திரு. ரா. கனகசபை :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டக் கூட்டுறவு சப்ளை அன்ட் மார்க்கெடிங் சொசைடியிலே அரசாங்க அலுவலர்கள் வேலை பார்த்தார்களா ? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவரம் தற்போது என்டனிம் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக ஊழல்களுக்கே உறைவிடமாக இருந்துவந்த மதுரை மாவட்டக் கூட்டுறவு சொசைடிக்குச் சென்ற கால ஆட்சி பாதுகாப்பாக இருந்து வந்ததை, இன்றைய ஆட்சி கண்டுபிடித்து அதைக் கலைத்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள சொசைடிகளில் ஊழல்கள் உள்ளன. அவைகளையெல்லாம் கண்டுபிடித்து, குற்றவாளிகளின்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்கெல்லாம் ஊழல்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றனவோ, அங்கங்கெல்லாம் தக்க நட்வடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : It is surprising that no action has been taken against the persons who are responsible for the atrocities committed in this Marketing Society. Will the Minister tell us when exactly the Santhanam Committee will start functioning and what the terms of reference to it are?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லவில்லை. விசாரணை நடந்து முடிந்தவுடன் அதன் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அந்த அமைப்பின்மீது 72-வது பிரிவிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரி விசாரித்து யார் யார் பொறுப்பாளிகள் என்று கண்டுபிடித்து, எந்த எந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவிப்பார்கள். ' திரு. சந்தானம் குழு ' மிக விரைவிலே தன் வேலையைத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்களாக இருந்து கையாடல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் பலர், 1967-லிருந்து 1968-ம் ஆண்டுக்குள் இறந்துவிட்டதாகத் தெரிகிறது. அப்படி இறந்துபோன நபர்களிடமிருந்து கையாடப்பட்ட பணம், அரசாங்கத்திற்குத் திரும்பி வருமா ? அல்லது அரசாங்கம் அதை விட்டுவிடுமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட வருந்தத்தக்க நிகழ்ச்சி நடந்ததாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவர்மீது கிரிமினல் பிராசிகூஷன் இருந்தால் ஏதும் செய்ய முடியாது. சிவில் லையபிலிடிக்கு, சொத்து சுதந்திரம் இருக்குமானல் கையாடப்பட்ட தொகையை வசூலிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் உள்ள கோவாபரேடிவ் மார்க்கெட்டிங் ஸ்தாபனத்தின்மீது ஏதாவது புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் அதுபற்றி ஒரு குறிப்பு தந்திருக்கிருர்கள். அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை நிர்வகித்து வரும் தலைவர் இயக்குநர்கள், நிர்வாகி ஆகியோரின் பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் கீழையூர் கோவாபரேடிவ் சொசைடி பற்றி சர்க்காருக்குப் பல புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ? அந்த நிர்வாகம் யார் கையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மாநிலக் கூட்டுறவு பாங்க், மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலை மாவட்ட மார்க்கெட்டிங் சொசைடி போன்ற பல ஸ்தாபனங்களில் ஒரே நபர் இயக்குநராகவும், தலைவராகவும் Monoply Industrialists Chain Capitalists போல இருந்து ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க, ஒரேசமயத்தில் ஒரு நபர் டைரக்டராகவோ, செயலாளராகவோ, தலைவராகவோ ஒரு பதவியில்தான் இருக்கமுடியும், ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் இருக்க முடியும் என்று வரையறுக்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் உறுப்பினர் கூறுகிற மாதிரியான ஒரு நல்ல கருத்து தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. அந்தக் கருத்தையும் சந்தானம் கமிட்டி பரிசீலித்து நல்ல முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1968 பிப்ரவரி 19

## பூதான யக்ஞ போர்டு

* 79 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிப்பாரா —

(அ) பூதான யக்ஞ போர்டு எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அது ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் மொத்த செலவு எவ்வளவு ? அதற்காக சர்க்கார் கொடுத்த மான்யம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) 1959-ம் ஆண்டு.

(இ) நிலக்கொடை வேள்வி வாரியத்தின் பணியாளர் குறித்த செலவு முழுவதையும் மாநில அரசாங்கம் ஏற்கின்றது. 1961 முதல் 1968 வரை அரசாங்கம் இவ்வாரியத்துக்கு ரூ. 13,86,900 வழங்கியுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 13 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்தும் கூட, இப்போது பூமிதான இயக்கத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய நிலம் எவ்வளவு ? அந்த நிலத்தினுடைய மதிப்பு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தப் பூமிதான இயக்கத்திற்கு நிலங்களாகவும், கிராமங்களாகவும் தானம் பெற்றிருக்கிறார்கள். எவ்வளவு கிடைக்கப் பெற்றது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அரசாங்கம் லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கவில்லை. வரக்கூடிய நிலங்களைச் சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் இப்போது கவனம் செலுத்தி வருகிறது. அதற்கான முழு விவரமும் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, சமாதான முறையில் நிலப்புரட்சி வெற்றி பெறுவதற்கு, பூமிதான இயக்கக் கமிட்டி செய்துவரும் வேலையை இன்னும் அதிகரித்து, நிலமில்லாத விவசாயிகள் நிலம் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிலக்கொடை பெறப்பட்டதிலே பலர் நல்ல நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது சிலர் ' நான் கொடுத்தது இந்த நம்பர் பட்டா அல்ல ; வேறு நம்பர் பட்டா ' என்று மாற்றிச் சொல்கிறார்கள். இது போன்ற சிக்கல்கள் இருப்பதால் பல சங்கடங்களும் ஏற்படுகின்றன. மேலும் இன்னும் தாராளமாக மக்கள் நிலத்தை நன்கொடையாகக் கொடுத்தால், அதை நிலமில்லாத விவசாயிகளுக்குப் பிரித்துத் தருவதில் அரசாங்கத்திற்கு எந்தவிதத் தடையும் இருக்காது.



1968 பிப்ரவரி 19]

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே ஆட்சியானது ஒரு கட்சியிடமிருந்து இன்னொரு கட்சிக்கு மாறியிருப்பதாலே, இப்போது ஆட்சியில் இருக்கிற கட்சி இந்த பூமிதான இயக்கத்தை ஏற்றுக்கொள்கிறதா ? அதை நடைமுறையில் சீர்திருத்த இந்த ஆட்சி முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிலக்கொடை இயக்கத்தை இதுவரை இந்த ஆட்சி தடைசெய்யவில்லையென்பதையே கனம் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவர் அவர்களே, பூதானம் கொடுத்துள்ள நிலங்களை, தானம் கொடுத்தவர்களில் சிலர் கிரயத்திற்கு விற்றுவிட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிக் கிரயத்திற்கு விற்றவர்களிடம் கேட்கிறபோது, ' நான் தானம் கொடுத்தது இந்தப் பட்டா நிலம் அல்ல; வேறு நம்பர் பட்டா நிலத்தைத்தான் தானம் கொடுத்திருக்கிறேன் ' என்று சொல்கிறார்கள்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ' தானம் கொடுத்தவர்கள் வேறு பட்டா என்று சொல்கிறார்கள் ' என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பட்டா வேறாக இருக்கலாம்; ஆனால் சர்வே நம்பர் ஒன்றாகத்தானே இருக்கும். சர்வே நம்பர் மாற்றப்பட முடியாது அல்லவா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரே பட்டாதாருக்குப் பல சர்வேயிலுள்ள நிலங்கள் இருக்கக்கூடும். அதில் ஒன்றை அவர் கொடுத்ததாகச் சொல்லக்கூடும்.

DR. H. V. HANDE : Sir, obviously this Government must be having a lot of land given under the Bhoodan Movement in their possession. What has happened to these lands and whether any production is taking place and if so, what the Government propose to do with the produce of these lands and to whom they are going to distribute it ? I want to know from the Government a clear idea about the action that they propose to take in the matter ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கொடுக்கப்பட்டிருக்கிற நிலங்களில் பெரும்பாலானவை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலங்களாக இருக்கின்றன. மிகக் குறைந்த அளவு நிலங்களே விவசாயத்திற்கு லாயக்கான நிலங்கள். இவை பற்றிக் கவனிப்பதற்கு வாரியம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களை எல்லாம் பரிசிலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மு.ப. 10-00

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தமிழகத்தில் பூதானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு எக்கர்கள் ? அவற்றில் எவ்வளவு எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கொடுக்கப்பட்டுள்ள நிலங்களில் பெரும்பாலானவை விவசாயத்திற்கு லாயக்கற்றவை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இருக்க அவற்றுக்காக 13 லட்சம் செலவு ஏன் செய்யவேண்டும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே இதற்கு விடை அளித்திருக்கிறேன். நிலத்திற்காக இந்தப் பணம் செலவிடப்படவில்லை. பணியாளர்களின் ஊதியத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்களுக்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** பூதானத்திற்காக கொடுக்கப்பட்ட நிலத்தைப் பெற்றவருக்கு வாரிசு இல்லை என்றால், அந்த நிலம் திரும்ப யாருக்குச் சேரவேண்டும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றிய விவரம் இல்லை.

**திரு. பி. துரைராஜ் :** தலைவர் அவர்களே, பூதான இயக்கத்தின் கீழ் நிலம் கொடுக்கப்பட்டும் கடந்த பத்து வருடங்களாக அந்த நிலத்தைப் பயன்படுத்தாமல் யாராவது வைத்திருந்தால், அந்த நிலத்தைத் திரும்பப்பெற்று நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் அங்கத்தினர் கூறுவது நல்ல யோசனை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பூமி தானத்திற்கு நிலம் கொடுப்பது என்பது வேறு விஷயம். என்றாலும் கட்டாந்தரையையும், பாறை பூமியையும் தானமாகக் கொடுத்துவிட்டு—தியாகிகள் என்றும், உத்தமர்கள் என்றும் பெயர் வாங்கிப் போவதற்கு—அந்த நிலத்தை எதற்காக வாங்கிக்கொள்ள வேண்டும் ? இனி மேலாவது நல்ல நிலமாகக் கொடுத்தால் தான் வாங்கிக் கொள்வது என்று முடிவு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாமாகவே யார் முன்வந்து தங்களுடைய எந்த நிலத்தைக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்வது என்பதுதான் கூடும். ஒருசமயம் உதவாத நிலத்தைக் கொடுத்து அவர்கள் பெயர்பெற்றிருக்கக் கூடும்.

**திரு. பெ. பெரியசாமி :** இந்த பூமிதானம் வாயிலாக பத்து சென்ட், பதினைந்து சென்ட் என்று கொடுத்திருக்கிறார்கள், அதனால் சர்க்காருக்கு என்ன லாபம் ? நிலம் இல்லாத விவசாயிகளுக்கு போதுமான அளவு கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிலத்தை நன்கொடையாகக் கொடுப்பவர்கள் எந்த அளவு கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவர்கள்.





**திரு. ஆர். நாகசுந்தரம் :** காணமல்போன மாட்டை தானம் கொடுப்பதுபோல ஒன்றுக்கும் உதவாத நிலத்தைக் கொடுத்து பல பெரிய மனிதர்கள் விளம்பரம் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் பெயர்ப்பட்டியலை அரசாங்கம் வெளியிடுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாமாகவே நிலத்தைக் கொடுத்திருப்பவர்கள் அனைவரையும் பாராட்டத்தான் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது. என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைக் கேள்விகள்

### ( ) திரு. சி. சுப்பிரமணியம்மீதும், ‘இந்து’ நாளிதழ் மீதும் (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அவை உரிமைப் பிரச்சினை. இப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானம்—அதாவது இனி பள்ளிக்கூடங்களில் இந்தி மொழி நீக்கப்படும் என்ற தீர்மானம் ஒரு மோசடி என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாக ‘இந்துப்’ பத்திரிகையில் வெளியாகியிருப்பது உரிமைப் பிரச்சினைக்கு உரியது, எனவே அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தம்முடைய தீர்மானத்திற்கு அனுமதி கோரி திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றி நான் என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அப்படிச் சொன்னது உண்மையா, அது சரியா, தவறு என்று சொல்வது என் பொறுப்பு அல்ல. அது இந்தப் பேரவையின் பொறுப்பாக இருக்கிறது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியதாகக் கூறப்படுவது பற்றிய இறுதி முடிவு எப்படி இருப்பினும், முதலில் இதை எடுத்துக்கொள்வதற்கு ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறதா, முதல் தோற்றத்தில் அதைப் படிக்கிறபோது இந்தப் பேரவையை இழிவுபடுத்துகின்ற தன்மை இருக்கிறதா என்றுதான் நான் சொல்ல வேண்டும். என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்வதற்கு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் மிகவும் உதவினார்கள். நான்கு காரணங்களை சுட்டிக் காட்டினார்கள்.

முதலாவதாக, அரசியல் சட்டத்தில் சாதாரண பிரஜைக்கு—குடிமகனுக்கு அடிப்படைப் பேச்சுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியிருக்கக்கூடும் என்று சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் பேச்சுரிமை 19-வது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்

அதில் எதையும் பேசலாம் என்று இல்லை. எந்த அவதூறையும் பேசலாம் என்று இல்லை. அந்தப் பிரிவைப் படித்துப் பார்த்தால், சட்டத்திற்கு உள்ள கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய பேச்சுரிமை தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கக்கூடிய கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கிய—பேச்சுரிமை அடிப்படையில் திரு. சி. சுப்பிரமணியம் பேச்சு அமையவில்லை என்பதை திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பள்ளிகளில் இருந்து இந்தியை அகற்றுவதான இந்தத் தீர்மானம் மோசடி என்று திரு. சி. சுப்பிரமணியம் குறிப்பிட்டதாக இருக்கிறதே தவிர, அதை நிறைவேற்றிய இந்தப் பேரவையைக் குறிப்பதாக ஆகாது என்று கூறினார்கள். ஒருவர் செய்தது திருட்டு என்று சொன்னால் அந்தத் திருட்டுச் செய்கையைத்தான் அது குறிக்குமே தவிர செய்தவரைக் குறிப்பிடவில்லை என்பது பொருத்தமாக இருக்குமா ? அப்படியே வைத்துக்கொண்டாலும், இந்தப் பேரவை நிறைவேற்றிய தீர்மானமானது மோசடி என்றால், அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய இயல்பு—தன்மை உடையது இந்தப் பேரவை என்ற கருத்து உள்ளடங்குகிறது.

அடுத்து, பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்து—ப்ரிவிலேஜ் மாட்டர்—உரிமை பிரச்சினை எழுப்பக்கூடாது என்று ஏற்கனவே பலமுறைகள் இந்த பேரவையின் தலைவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லியதில் இருந்தே படிக்கிறேன் :

“ பத்திரிகையிலே வந்த செய்தியையே ஆதாரமாகக் கொண்டு உரிமைப் பிரச்சினை கிளப்பக் கூடாது என்று சபாநாயகர் அவர்களே பல தடவைகளிலே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ”

என்று சொன்னார். எந்த நாளில் அத்தகைய தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் கடந்த பத்து வருடங்களில், 1957-இல் இருந்து 1967-வரை எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைகளையும், அவற்றின் மீது கொடுக்கப்பட்ட தீர்ப்புகளையும் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதுபோல கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பு எதுவும் இல்லை. பத்திரிகையில் வந்ததை ஆதாரமாக வைத்துக்கொண்டு உரிமைப் பிரச்சினை எழுப்பக் கூடாது என்று ஒரு தீர்ப்பு—மொத்தம் 65 உரிமைப் பிரச்சினைகளைப் படித்துப் பார்த்ததில்—எதிலும் அத்தகைய தீர்ப்பு கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எந்தத் தேதியில் அப்படி ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதையும் ஆய்ந்து பார்க்க நான் தயாராய் இருக்கிறேன். ஆனால், பேரவைத்





துறையை, ஞாயிற்றுக்கிழமைகூட திறந்துவைத்து எல்லா அவையுரிமைப் பிரச்சினைபற்றிய பைல்களையும் எடுத்துப் பார்த்துவிட்டேன். பேரவைத் துறை சம்பந்தப்பட்ட வரையில் பைல்களில் எதுவும் தொலைந்துபோகவில்லை, ஏதாவது குறிப்பிட்ட தேதியில் அதுமாதிரி தீர்ப்பு இருக்கிறது என்று திரு. கருத்திருமன் சொன்னால், அதையும் நான் பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்த ஒரு காரணமாக அவர்கள் சொன்னார்கள், ‘ அரசியல் மோசடி ’ என்று சொன்ன காரணத்தால், ‘ மோசடி ’ என்பது தவறாக இருப்பினும், ‘ அரசியல் ’ என்ற அடைமொழி சேர்க்கப்பட்ட காரணத்தால், விஷம் போய்விட்டது என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே விஷம் போய்விட்டது என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே விஷம் குறைந்துவிட்டது என்று பேசினார்கள். பேரவையில் உள்ள எல்லா அலுவல்களுமே அரசியலையொட்டி இருக்கின்றபடியால் ‘ அரசியல் ’ என்ற சொல்லை அடைமொழியாகச் சேர்த்துவிட்டதால் அதற்குத் தனிப்பொருள் Special significance இருப்பதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். நான் பார்த்தவரையில் பழைய குறிப்புகளைப் படித்த வரையில் சட்டப் பேரவை அலுவல்கள் பொதுவாக அரசியலையொட்டியதாக இருக்கின்றன ; வேண்டுமென்றால் இரங்கற் தீர்மானங்கள் வேறாக இருக்கலாம். ‘ அரசியல் ’ என்ற சொல் இருப்பதால் தனிப் பொருள் இருப்பதாகவோ அல்லது அந்தச் சொல் விஷத்தைக் குறைவாக்கிவிட்டது என்பதாகவோ நாம் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். ‘ஹிந்துப்’ பத்திரிகையில் வெளியானது உண்மையாக இருக்குமானால்—உண்மை என்று நான் சொல்லவில்லை—அது உண்மையாக இருக்குமானால், மோசடி என்பது மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி, ஒன்று சாதாரண மோசடி fraud என்றும் ; அடுத்ததாக பெரிய மோசடி great frand என்றும் ; அடுத்ததாக greatest fraud மிகப் பெரிய மோசடி என்றும் வகைப்படுத்தி, மூன்றாவது வகையில் இப்பேரவையின் தீர்மானத்தை, திரு. சி. சுப்பிரமணியம் சேர்த்து உள்ளார். எனவே, பேரவையை இழிவுபடுத்திப் பேசியுள்ளாரா என்று ஆய்வதற்கு இடம் இருக்கிறது. பேசிவிட்டதாகச் சொல்லவில்லை ; ப்ரைமா பேஸி கேஸ் ஆக, ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு இடம் இருக்கிறது என்ற முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சபாநாயகர் அவர்கள் பத்திரிகையிலே இருப்பதை வைத்து எதையும் எடுத்துக்கொள்ளமுடியாது என்று இந்தச் சபையிலே பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்லவில்லை. நான் அப்படி ஒரு தீர்ப்பு சொல்லவில்லை என்று நான் இங்கு சொல்வதை உறுதியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

THIRU ERE. ELUMVAZHUTHI : Under rule 189 of the Madras Assembly Rules, I move—

"That the matter of privilege against Thiru C. Subramaniam and the publisher of 'The Hindu' be dealt with by this House itself".

THIRU K. V. SUBBIAH : I second it.

THIRU P. G. KARUTHIRUMAN : I move the following amendment to the motion :—

"That the *prima facie* case of breach of privilege be referred to the Committee of Privileges."

THIRU R. PONNAPPA NADAR : I second it.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதிலே அதிகம் பேசுவதற்கு இடமில்லை. 189-வது விதியின்கீழ் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். If the Speaker holds that the *prima facie* case exists, he may allow a motion to be made by any member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealth with by the House itself. இந்தப் பேரவையிலே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். 1958-ஆம் வருடம் மார்ச் மாதம் 12-ஆம் தேதி அன்று இருந்த தலைவருடைய தீர்ப்பு இப்படி இருக்கிறது. சம்பந்தப்பட்ட அந்த விதியைக் குறிப்பிட்டு "This rule says that if the Speaker holds that the *prima facie* case exists, he may allow a motion to be made by and member that the alleged breach of privilege be referred to the Committee of privileges, or in the alternative, that it be dealt with by the House itself. In pursuance of the alternative given in this rule, I place this matter before this House. என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பேரவையில் தீர்மானம் கொண்டு வராமலேயே பேரவையின் முடிவிற்கு அவையுரிமைப் பிரச்சினையை வைத்துவிட்டதாக தானகச் சொல்லியிருக்கிறார்கள். In pursuance of the alternative given in this rule, I place this matter before this House for its decision. பேரவைக்கு வைத்துவிடலாம் என்று முன்னிருந்த பேரவைத் தலைவர் சொல்லியிருந்தாலும், இப்பொழுது தீர்மான வடிவத்தில் கொண்டுவர அனுமதிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய திருத்தத் தீர்மானம் கமிட்டிக்கு விடவேண்டுமென்பது. இந்தத் திருத்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் 'ஆம்' என்க. இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறவர்கள் 'இல்லை' என்க. 'இல்லை' என்பவர்கள் அதிகம், எனவே இந்தத் திருத்தத் தீர்மானம் தோற்றுவிட்டது.

அடுத்ததாக, மூலத் தீர்மானம் திரு. இளம்வழுதி அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் 'ஆம்' என்க. எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்க.



*டாக்டர் எச். வி. ஹாண்டே :* பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பாயின்ட் ஆப் ஆர்டர் மூன்று நேரங்களிலே கூடாது. ஒன்று வாக்கெடுப்பு நடக்கும்பொழுது, இரண்டு, பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்பொழுது, மூன்று, ஆளுநர் அவர்கள் பேசுகின்றபொழுது, ஆகிய இந்த மூன்று நேரங்களிலும் பாயின்ட் ஆப் ஆர்டர் கூடாது That this matter be dealt with by the House itself. என்ற இந்தத் தீர்மானத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெறுகிறது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் 'ஆம்' என்க. எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்க. 'ஆம்' என்பவர்கள் அதிகம்.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

**ஆதரித்தவர்கள்.**

1. புலவர் கா. கோவிந்தன்.
2. திரு. மு. அலங்காரம்.
3. திரு. வி. டி. அண்ணாமலை.
4. திரு. எஸ். கணேசன்.
5. திரு. அ. ஆறுமுகம்.
6. திரு. எஸ். ஆறுமுகம்.
7. திரு. ஆலடி அருணா.
8. திரு. கே. ஆண்டி என்ற குருசாமி.
9. திரு. எம். சி. பாலன்.
10. திரு. எ. கே. பாலகிருஷ்ணன்.
11. திரு. ஜே. பெள்ளி கவுடர்.
12. திரு. மு. சின்னசாமி.
13. திரு. வி. சின்னசாமி.
14. திரு. ந. தருமலிங்கம்.
15. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
16. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
17. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.
18. திரு. து. ப. அழகமுத்து.
19. திரு. இராம. அரங்கண்ணல்.
20. திரு. வி. எஸ். எஸ். மணி.
21. திரு. எஸ். முருகையன்.
22. திரு. எம். எஸ். மணி.
23. திரு. எம். சண்முகம்.

24. திரு. ஆர். என். அரங்கநாதன்.
25. திரு. பழனிவேல் ராஜன்.
26. திரு. கே. ஆர். கோவிந்தன்.
27. திரு. கே. கோவிந்தராஜுலு.
28. திரு. டி. இராசரத்தினம்.
29. திரு. கி. ஜயராமன்.
30. திரு. ஏ. கே. மூர்த்தி.
31. திரு. எம். கண்ணப்பன்.
32. திரு. ஆ. கருப்பையா.
33. திரு. என். கிட்டப்பா.
34. திரு. கொளத்தூர் கோதண்டம்.
35. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி.
36. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
37. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.
38. திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்.
39. திரு. சி. வீரமணி.
40. திரு. பெ. மலைச்சாமி.
41. திரு. வீ. மலைக்கண்ணன்.
42. திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ.
43. திரு. பி. துரைராஜ்.
44. திரு. இரா. மாணிக்கவாசகம்.
45. திரு. பி. எஸ். மணியன்.
46. திரு. மு. மாரிமுத்து.
47. திரு. ரா. ரா. முனுசாமி.
48. திரு. ஏ. முனியாண்டி.
49. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
50. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
51. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி.
52. திரு. என். ராஜாங்கம்.
53. திரு. மா. இராசாங்கம்.
54. திரு. மு. ச. சிவசாமி.
55. திருமதி ஏ. சுவாரஸ்.
56. திரு. எஸ். முத்துலிங்கம்.
57. திரு. பு. செ. முத்துச்செல்வன்.
58. திரு. மு. வேதாசலம்.
59. திரு. ஆர். நாகசுந்தரம்.
60. திருமதி சு. குப்பம்மாள்.



61. திருமதி வி. ப. பழனியம்மாள்.
62. திரு. இரா. நாராயணன்.
63. திரு. மு. க. து. நடராசன்.
64. திரு. வெ. முனுசாமி.
65. திரு. ஈ. எம். நடராசன்.
66. திரு. சி. பழனி.
67. திரு. எம். பன்னீர்செல்வம்.
68. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்.
69. திரு. பி. பெரியசாமி.
70. திரு. ஏ. எம். ராஜா.
71. திரு. க. மு. ராசகோபால்.
72. திரு. சு. துரைசாமி.
73. திரு. டி. ஏ. ராஜவேலு.
74. திரு. க. ந. இராமச்சந்திரன்.
75. திரு. எஸ். இராமச்சந்திரன்.
76. திரு. மு. ராமன்.
77. திரு. வீ. கே. இராமராசன்.
78. திரு. இ. ராமசாமி.
79. திரு. மு. இரத்தினசபாபதி.
80. திரு. கே. என். சாமிநாதன்.
81. திரு. ஹபிபுல்லா பேக்.
82. திரு. ம. பொ. சிவஞானம்.
83. திரு. எம். அப்துல் கபூர் சாகிப்.
84. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
85. திரு. பெ. சீனிவாசன்.
86. திரு. எஸ். ஜே. ராமசாமி.
87. ஹாஜி ம. மு. பீர்முகம்மது.
88. திரு. இரெ. இளம்வழுதி.
89. திரு. கே. வி. சுப்பையா.
90. திரு. வி. எஸ். சண்முகம்.
91. திரு. தொ. க. சிறைமீட்டான்.
92. திரு. ந. சோமசுந்தரம்.
93. திரு. அ. லெ. சுப்பிரமணியம்.
94. திரு. க. ந. சிவபெருமாள்.
95. திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்.
96. திரு. எஸ். கே. வடிவேலு.

97. திரு. ந. வீராசாமி.
98. திரு. சி. வே. வேலப்பன்.
99. திரு. டி. எஸ். ஆதிமூலம்.
100. திரு. எச். வி. ஹாண்டே.
101. திரு. கரு. சீமைச்சாமி.
102. திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
103. திரு. எஸ். அழகுத் தேவர்.
104. திரு. கே. போஜன்.
105. திரு. பி. எஸ். எல்லப்பன்.
106. திரு. கே. எஸ். கோதண்டராமையா.
107. திரு. எஸ். பரமசிவம்.
108. திரு. ஏ. ஆர். பெருமாள்.
109. திரு. ரா. ரெத்தினத் தேவர்.
110. திரு. எஸ். சௌடி சுந்தரபாரதி.
111. திரு. பி. வெங்கடசாமி.
112. திரு. எஸ். ராமசாமி நாயுடு.

### எதிர்த்தவர்கள்.

1. திரு. பி. ஜி. கருத்திருமன்.
2. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
3. திரு. கே. விநாயகம்.
4. திரு. எஸ். ராமலிங்கம்.
5. திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்.
6. திரு. என். எஸ். வி. சித்தன்.
7. திரு. ஏ. பட்டாபி நாயுடு.
8. விஜய ரகுநாத தொண்டமான்.
9. திரு. ரா. ராமச்சந்திர துரை.
10. திரு. நா. காசிராமன்.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. திரு. கே. சகாதேவ கண்டர்.
13. திரு. அ. செல்லக் கவுண்டர்.
14. திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்.
15. திரு. இ. எம். சுப்பிரமணியம்.
16. திரு. நா. சௌந்தரபாண்டியன்.
17. திரு. வை. சுவாமிநாதன்.
18. திரு. பா. தம்பி நாயக்கர்.



19. திரு. ந. தீர்த்தகிரி.
20. திரு. பெ. வெங்கடாசல தேவர்.
21. திரு. ரா. கனகசபை.
22. திரு. கோ. பூவராகன்.
23. திரு. எம். வில்லியம்.
24. திரு. இல. பலராமன்.
25. திரு. என். துரைபாண்டியன்.
26. திரு. த. சி. சுவாமிநாதன் உடையார்.
27. திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
28. திரு. வ. ஜார்ஜ்.
29. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
30. திரு. ஆர். கருப்பையா.
31. திரு. ப. மகாதேவன்.
32. திரு. அ. மாரிமுத்து.
33. திரு. டி. மார்டின்.
34. திரு. தோ. மு. நல்லசாமி.

### நடுநிலைமை வகித்தவர்கள்.

1. திரு. என். சங்கரய்யா.
2. திரு. ஆ. கு. சுப்பையா.
3. திரு. வி. கே. கோதண்டராமன்.
4. திரு. கோ. பாரதிமோகன்.
5. திரு. கே. என். குமாரசாமி.
6. திரு. செ. பாலசுப்பிரமணியம்.
7. திரு. எம். பூபதி.
8. திரு. பி. எஸ். தனுஷ்கோடி.
9. திரு. கே. பி. எஸ். மணி.
10. திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.
11. திரு. சி. கோவிந்தராஜன்.
12. திரு. ஏ. அ. சுப்பராஜா.
13. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.
14. திரு. என். மருதாசலம்.
15. திரு. என். வரதராஜன்.
16. திரு. எ. பாலசுப்பிரமணியன்.

(Thiru K. Cheemaichamy left his seat and was talking with another Member.)

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir.

[1968 பிப்ரவரி 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கெடுப்பு நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது.

THIRU K. VINAYAKAM : Until the result is announced, no Member can leave his seat and indulge in walking across or talking across.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்திற்கு ஆதரவாக 112 வாக்குகள்; தீர்மானத்திற்கு எதிராக 34 வாக்குகள்; நடுநிலைமை வகிப்பவர்கள் 16 பேர். ஆகவே, தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-30

THIRU ERE. ELAMVAZHUTHI : Sir, I move—

" That this House resolves that although the words used by Thiru C. Subramaniam and published in ' The Hindu ', dated 11th February 1968 and quoted hereunder, are " the recent Language Bill ", the reference is in fact made to the " Language Resolution " passed by this House on 23rd January 1968 ; and

That this House further resolves and authorises, the Hon. Speaker to give show-cause notice to Thiru C. Subramaniam and to the Publisher of ' The Hindu ', why they should not be held to have committed contempt of this House in respect of the following passage in ' The Hindu ', dated 11th February 1968, page 11, column 2, under the sub-heading "Political fraud ". viz., " Mr. Subramaniam described the recent Language Bill adopted by the State Assembly as the ' biggest political fraud '. "

THIRU K. V. SUBBIAH : I second the motion.

திரு. இரெ. இளம்வழுதி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினையின் மீது 'ப்ரைமா ஃபேஸி ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ்' இருக்கிறது என்று தாங்கள் தீர்ப்புக் கொடுத்தவுடன் அதற்கு மேல் நடவடிக்கையாக இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன். மொழிப் பிரச்சினைபற்றிய தீர்மானத்தில், அதாவது 23—1—68-ல் நம்முடைய அவை நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தில் மிக முக்கியமான பகுதிகளாக ஏழு பகுதிகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.



1968 பிப்ரவரி 19] [திரு. இரெ. இளம்வழுதி]

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும் சங்கடத்தையும் புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமலாக்கப்படக் கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கி வைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது.

மூன்றாவதாக, மொழிப் பிரச்னைபற்றி ஆய்ந்தறியவும், மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழிகாணவும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் பேரரசு கூட்டவேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.

என்.சி.சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால், என்.சி.சி. போன்ற அணிகளைக் கலைத்து விடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும் நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது.

அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிறமொழிகளுக்கு கீழ்நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

இப்படி 23-1-1968-ல் நம் அவை நிறைவேற்றிய தீர்மானத்தின் அரிய கருத்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பற்றித்தான் மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திண்டுக்கல்

[திரு. இரெ. இளம்வழுதி] [1968 பிப்ரவரி 19

இளைஞர் காங்கிரஸ் மாநாடு ஆண்டு விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகிறபோது இந்தத் தீர்மானம், அவை நிறைவேற்றிய தீர்மானம், பெருத்த அரசியல் மோசடி என்று வர்ணித்துள்ளார்கள். அப்படி அவர்கள் வர்ணித்துள்ளதைக் கூட நம் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தமது தீர்ப்பில் குறிப்பிடும்போது எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் சொன்ன இரண்டொரு கருத்துக்களுக்குப் பதில் அளித்து தீர்ப்பளித்திருக்கிறார்கள். எந்த ஒரு இந்திய குடிமகனும் தன் கருத்தை எங்கு வேண்டுமானாலும் பேசலாம், அப்படி கருத்தை வெளியிடுவதற்கு பேச்சு உரிமையை அரசியல் சட்டம் அளித்திருக்கிறது என்பதற்கும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் பேச்சு உரிமையை அளித்திருக்கிறது என்பது 19-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அரசியல் சட்டத்தில் எல்லா குடிமக்களுக்கும் பேச்சு உரிமை வழங்கியிருந்தாலும் சட்டசபை அல்லது பாராளுமன்றம் போன்றவைகளில் பேசப்படுகிற கருத்துக்கள் அல்லது செய்யப்படுகிற தீர்மானங்கள் பற்றி கருத்தைத் தெரிவிக்கும்போது அவர்களுக்கு அந்த 19-வது பிரிவு உதவி செய்யவில்லை.

அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் பேச்சுரிமை அவர்களுக்கு உதவி செய்யவில்லை. இதை, 1958 என்று கருதுகிறேன், பாட்ணு பற்றிய ஒரு தீர்ப்பில் நம்முடைய இந்திய நாட்டு பிரதம நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே வரையறுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கிறது :

'In Pandit M. S. M. Sharma *v.* Shri Srikrishna, Chief Minister of Bihar and others or what is known as the "Search Light" case, the Constitution Bench of the Supreme Court has, in its judgment, delivered in December 1958, observed .

". . . The freedom of speech guaranteed by clause (1) of Article 194 is different from the freedom of speech and expression guaranteed under Article 19 (1) (a) and it cannot be cut down in any way by any law contemplated by clause (2) of Article 19. In the "Search Light" case already referred to, the Supreme Court has held :

" The argument that the whole of Article 194 is subject to Article 19 (1) (a) overlooks the provisions of clause 2 of Article 194. The right conferred on a citizen under Article 19 (1) (*a*) can be restricted by a law which falls within clause (2) of that Article and he may be made liable in a Court of Law for breach of such law, but clause (2) of Article 194 categorically lays down that no member of the Legislature is to be made liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature or Committees thereof and that no person will be liable in respect of the publication by or under the authority of the House of such a Legislature of any report, paper or proceedings. The provisions of clause (2) of Article 194 therefore, indicate that



1968 பிப்ரவரி 19] [திரு. இரெ. இளம்வழுதி]

the freedom of speech referred to in clause (1) is different from the freedom of speech and expression guaranted under Article 19 (1) (*a*) and cannot be cut down in any way by any law contemplated by clause (2) of Article 19 ".

It cannot also be held that Article 194 (1) is an abridgment of the freedom of speech available to a member of a Legislature as a citizen under Article 19(1) (a) and not something separate from it. '

அந்த வழக்கில் வெகு தெளிவாக அடிப்படை பேச்சுரிமை பற்றி வழக்குமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. மேலும் அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The Legislative Assembly claims that under Article 194 (3) it has all the powers, privileges and immunities enjoyed by the British House of Commons at the commencement of our constitution.

If it hasthose powers, privileges and immunities, then it can enforce the same as the House of commons can do . . .

கடைசியில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

' If, therefore, the Legislative Assembly has the power's privileges and immunities of the House of Commons and if the petitioner is eventually deprived of his personal liberty as a result of the proceedings before the Committee of Privileges, such deprivation will be in accordance with procedure established by law and the petitioner cannot complain of the breach, actual or threatened, of his fundamental right under Article 21.'

ஆகையால், திரு. சுப்பிரமணியம் அவர்கள் நம்முடைய அவையிலே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை, அதிலும் அவையைக் குறிப்பிட்டுச் சொல்ல பேச்சுரிமை இருக்கிறது என்று கூறி தப்பித்துக் கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல. இந்தப் பிரச்சினையை எழுப்பி சுமார் ஒருவார காலம் ஆகிறது. இதற்கிடையில் அவர், தான் அப்படிப் பேசவில்லை என்றோ அல்லது தன்னுடைய கருத்து நேர்மாறாகத் திரித்துப் போடப்பட்டிருக்கிறது இந்து பத்திரிகையில் என்றோ அவர் மறுப்பு வெளியிடவில்லை. அந்தப் பேச்சு வெளியிடப்பட்டிருக்கிற பத்திரிகை சாதாரண பத்திரிகை அல்ல. நம்முடைய நாட்டில் மிகப் பழம்பெரும் பத்திரிகை என்று சொல்லப்படுவது இந்து பத்திரிகை. அந்த இந்து பத்திரிகையில் குறிப்பிட்டதை வைத்து இங்கு எழுப்ப முடியாது என்று சொல்வது சரியாகாது.

அதுமட்டுமல்ல. இந்தத் தீர்மானத்தைப்பற்றி மேற்கொண்டு திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது "திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதனுடைய முதலமைச்சர் இந்தியை ஒழித்து விட்டதாகப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல. அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது

என்று அவர்களுக்குத் தெரியாதா?" என்று ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். இந்த இடத்தில் நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய இந்திய அரசியல் சாசனம் இந்த 10, 18 ஆண்டுகளில் எத்தனை முறை திருத்தப்பட்டிருக்கிறது, எத்தனை சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்குத் தேவையான முறையில் எப்படியெப்படி திருத்தப்பட்டிருக்கிறது என்பதை திரு. சுப்பிரமணியம் அவர்களே நன்கு உணர்வார்கள். ஏனென்றால் அவர் சாதாரணமானவர் அல்ல, அரசியலிலே 30 ஆண்டு இருந்தவர்கள், அமைச்சராக 10, 15 ஆண்டுகள் இருந்தவர்கள், சட்டமன்றத்தில் உறுப்பினராகவும், பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்தவர்கள். எனவே அவர்களுக்கு உரிமைப் பிரச்சினையைப்பற்றி நன்றாகத் தெரியும். நமது அரசியலமைப்புச் சட்டம் எந்தனைமுறை திருத்தப்பட்டிருக்கிறது என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதுமட்டுமல்ல. 8-வது ஷெட்யூலில் காணப்படும் 14 தேசிய மொழிகளோடு சிந்தி என்ற மொழியும் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரச்சினை வந்தது. அந்த சிந்தி என்ற மொழி சில லட்சம் மக்களால் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட சிந்தியை இதே அரசியல் சட்டத்தில் 8-வது ஷெட்யூலில் அண்மையிலே சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது எப்படி முடிந்தது? சில லட்சம் மக்களுக்கு, அவர்கள் உரிமைகளுக்காக அவர்கள் பேசும் ஒரு மொழியை தேசிய மொழிப்பட்டியலில் எப்படி சேர்த்துக் கொண்டார்கள்? அதற்கு அரசியல் சட்டம் எப்படி இடம் அளித்தது? ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சென்ற வாரம் என்று கருதுகிறேன், இதேமாதிரி ஒரு பிரச்சனை எழுந்தது. ராஜஸ்தானி மொழியையும் 8-வது ஷெட்யூலில் தேசீய மொழியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ராஜஸ்தானியைச் சேர்ந்தவர்கள் பார்லிமெண்டிலே தனி நபர் தீர்மானத்தைக் கொடுத்து பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்பொழுது, சிந்தி மொழி 30 லட்சம் பேர் பேசக்கூடிய மொழி, அது 8-வது ஷெட்யூலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது, ராஜஸ்தானி மொழி 1 கோடிக்கு மேல் உள்ள மக்களால் பேசப்படுகிற மொழி, எனவே, ஏன் ராஜஸ்தானி மொழியையும் சேர்க்கக் கூடாது? ஏன் அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது என்று அந்த உறுப்பினர்கள் விவாதித்து இருக்கிறார்கள். இவ்வாறிருக்க, திரு. சுப்பிரமணியம் அவர்கள் நாம் நிறைவேற்றிய, நம்முடைய அவை நிறைவேற்றிய தீர்மானத்தை, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற நம்முடைய தீர்மானத்தைபற்றி கேலி பேசுகிறார்கள்.

நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தை நிறைவேற்றியவர்கள் அதை எப்பொழுதுமே மாற்ற முடியாது, காலாகாலத்திற்கும் மாற்ற முடியாது என்று தீர்மானம் போட்டு வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அரசியல் சட்டம் தேவையான முறையில், தேவையான நேரத்தில், தேவையான காரியத்திற்காக நிச்சயமாகத் திருத்தப்படவேண்டும், திருத்தப்பட முடியும் என்ற முறையில்





அதை எழுதியவர்கள், நிறைவேற்றியவர்கள் கருத்திலே கொண்டிருக்கிறார்கள். ஆகையால் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்லும்பொழுது நமக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அவர்கள் என்ன கருத்திலே இதைச் சொல்லுகிறார்கள்? "இந்தியை ஒழித்துவிட்டோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சந்தோஷப்பட்டுக் கொள்கிறார்கள். வேறு கோட்டையைப் பிடித்துவிட்டோம் என்று சென்னைக் கோட்டையிலே இருந்து பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்." என்று கூறுகிறார்கள். இந்தியை நாம் ஒழித்து இருக்கிறோம். இந்தத் தீர்மானத்தின் மூலம் திட்டவட்டமாக நாம் ஒழித்திருக்கிறோம். ஒழித்தபிறகு அந்தத் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் கொடி போட்டுக்கொள்கிறார் என்று சொல்வது "மேலஃபைடி இன்டென்ஷன்", கருத்து உள்நோக்கத்துடன் பேசுவதைத்தவிர வேறொன்றுமில்லை. அதுமட்டுமல்ல. நாம் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு நாட்டிலே எவ்வளவு எவ்வளவு பிரச்சினைகள் நல்ல முறையிலே நடந்திருக்கின்றன என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்னர் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தீர்மானத்தில் கடைசிப் பகுதியாக, "அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிறமொழிகளுக்கு கீழ்நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா விந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்பட வேண்டும்" என்று அருமையாகக் கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசியல் சாசனத்தில் 'ப்ரீ ஆம்பிளில்' என்ன சொல்லியிருக்கிறார்கள்? அரசியல் சாசனத்தில் சொல்லியிருப்பது திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். "ப்ரீ ஆம்பிளில்" சொல்லியிருக்கிறார்கள்.

'We, the people of India, having solemnly resolved to constitute India into a sovereign democratic republic and to secure to all its citizens :

Justice, Social, economic and political;

Liberty of thought, expression, belief, faith and worship;

Equality of status and of opportunity . . . . .

என்று. இந்த, 'equality of status and of opportunity' எப்பொழுது வரும்? "equality of status" என்பது நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய சர்க்கார் முழு மனதோடு ஏற்று அரசியல் சட்டத்தைத் திருத்தினாலொழிய 'equality of status' வர முடியாது. ஏனென்றால் 8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற மொழிகள் இந்திய தேசிய மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த மொழிகளில் ஒன்றுதான் ஹிந்தி. அந்த மொழிகளில் ஒன்றுதான் தமிழ், அந்த மொழிகளில் ஒன்றுதான் தெலுங்கு, மலையாளம், வங்காளி போன்றவைகள். அப்படி அந்த 8-வது ஷெட்யூலில் கூறப் பட்டிருக்கிற

மொழிகளில் ஒரே ஒரு மொழியான ஹிந்தி மொழிக்கு மட்டும் அரசியல் அந்தஸ்து அளிக்கப்படுமேயானால் மற்ற மொழிகளுடைய நிலைமை என்ன ? ஹிந்தி ஆட்சிமொழி பீடத்திலே ஏற்றப்பட்டால் மீதி இருக்கிற 14 மொழிகளினுடைய நிலைமை என்ன ? ஹிந்திக்கு அரசாங்க மொழி என்ற அந்தஸ்து, மற்ற மொழிகளுக்கு வட்டார மொழி என்ற கீழான அந்தஸ்து என்றால் இதிலே இருக்கிற 'ஈக்வாலிடி ஆஃப் ஸ்டேடஸ்' எங்கே இருக்கிறது ? அதிலே கூறப்பட்டிருக்கிற **ஒருமையான** அந்தஸ்**து**, சமமான அந்தஸ்து எங்கே இருக்கிறது ? அது மட்டுமல்ல. 'ஈக்வாலிடி ஆஃப் ஸ்டேடஸ் அண்ட் ஆஃப் ஆப்பர்ச்சூனிட்டி' என்று சொல்கிறார்கள். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுகிறவர்கள் எல்லாம் எல்லா மொழிகளிலும், எல்லா தேசீய மொழிகளிலும் எழுத வேண்டுமென்றால் 'ஈக்வாலிடி ஆஃப் ஆப்பர்ச்சூனிட்டி' என்று ஒத்துக்கொள்ளலாம். ஆனால், அண்மையில் டில்லியிலே நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தில் சில பரீட்சை விடைகள் ஹிந்தியில் மட்டும், ஆங்கிலத்தில் மட்டும் எழுதவேண்டும்; மற்றதை வேண்டுமானால் எல்லா மொழிகளிலும் எழுத வேண்டுமென்கிற நிலைமை இருப்பதனால் ஹிந்திக்கு தனி மொழி அந்தஸ்து இருக்கிற ஒரே காரணத்தினால் அவர்களுக்கு எவ்வளவு சௌகரியம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால் இந்த 'ப்ரீ ஆம்பிளில் சொல்லப்பட்டிருக்கிற ஈக்வாலிட்டி ஆஃப் ஸ்டேடஸ் அண்ட் ஆப் ஆப்பர்ட்டியூனிட்டி' எப்படி நிறைவேற்றப்படும் ? அவர்கள் எழுதிய அரசியல் சட்டத்தில், நம்மை எல்லாம் ஆளுகிற அரசியல் சட்டத்தில், நம்முடைய நடவடிக்கைகளையும், வாழ்க்கையையும் நிர்ணயிக்கிற அரசியல் சட்டத்தில் இப்படி எல்லோருக்கும் சமத்துவ உரிமை கொடுக்கப்பட்டிருக்கும்பொழுது, மேற்சொன்ன இந்தத் தீர்மானத்தின் மூலம் 'ஈக்வாலிட்டி ஆஃப் ஸ்டேடஸ் அண்ட் ஆஃ ஆப்பர்ச்சூனிட்டி' நமக்கு இல்லாதபொழுது ஏன் நாம் நம்முடைய சபையின் மூலமாக நம்முடைய சமத்துவத்தை நிறைவேற்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாது ? இந்த நிலைமைகள் எல்லாம் திரு. சுப்பிரமணியத்திற்குத் தெரியாதா ? திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதையெல்லாம் அறியமாட்டாரா ? இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் தெரியாமல் சுப்பிரமணியம் பேசுகிறார்களா ? இல்லை. அவருடைய கருத்து வேறு எங்கோ செல்கிறது. அவருடைய நோக்கம் வேறு எங்கோ செல்கிறது. அப்படிப்பட்ட முறையிலேதான் திரு. சுப்பிரமணியம் அவர்கள் திருப்பித் திருப்பி நாம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, எந்த முறையில் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்ற அளவில்தான் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அவர், திரு. சி. சுப்பிரமணியம் பேசினாரா இல்லையா என்பதை தீர்மானத்தை போட்ட உடன் விட்டு விட வேண்டுமே தவிர மீண்டும் மீண்டும் அவரைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் எந்த விதமான அவசியமும் இல்லை. அந்த விஷயம் வரக் கூடாது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கருத்திருமன் அவர்கள் சொல்வது, பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை, மோசடி என்று சொன்னதாக வந்திருக்கிற செய்தியை, பற்றி, திரு. சுப்பிரமணியத்திற்கு எழுதிக் கேட்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றித் தான் பேசவேண்டும் என்பது. திரு. இளம்வழுதி அவர்கள் அந்தத் தீர்மானத்தை ஒட்டிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது இந்த அவை நிறைவேற்றிய மொழித் தீர்மானம் பற்றியது. அந்த மொழித் தீர்மானத்தில் கடைசிப் பகுதி, அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிற மொழிகளுக்கு கீழ்நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்ற தலைவர் அவர்களே, நம்முடைய கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசியது மேலெழுந்தவாரியாக இந்தச் சபையினுடைய உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது என்று சட்டமன்றத் தலைவர் அவர்கள் தீர்ப்பளித்ததாகி விட்டது. அதை இந்த அவையே கவனித்துக் கொள்ளலாம் என்று நண்பர் இளம்வழுதி அவர்கள் கொண்டு வந்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இனி, அதற்கு அடுத்த கட்டமாக அவருடைய விளக்கத்தைக் கேட்டு, பெற்று, அதற்குப் பிறகு விவாதிப்பது என்பதுதான் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மறுபடியும் அதைப் பற்றிய விவாதம் இப்பொழுது தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். அவையே அதைக் கவனித்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுத்த பிறகு 'ஷோ காஸ் நோட்டீஸ்' அவர்களுக்கு அனுப்புவதுதான் அடுத்த கட்டமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. இரெ. இளம்வழுதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், ஹிந்து பத்திரிகைக்கும் 'ஷோ காஸ் நோட்டீஸ்' அனுப்பி, அவர்களுடைய பதில் வந்த பிறகு இந்த அவையில் அதைப்பற்றி பேசி மேற்கொண்டு ஒரு முடிவு எடுக்க விரும்புகிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோட்டீஸ் கொடுக்க வேண்டுமா, இல்லையா என்பதைப்பற்றிய உங்களுடைய கருத்தை 2 நிமிடத்திற்குள்ளே சொல்லி முடியுங்கள்.

DR. H. V. HANDE : Before we give the show cause notice, we must examine the merits and demerits of the case very briefly and find out whether it merits a show cause notice. In my opinion it definitely merits a show cause notice for the following reasons. Thiru C. Subramaniam has made a statement derogatory to the status of this House. That is point one. I am quite sure our respectable Leader of the Opposition will agree with me that any one who brings disrepute to the House can be hauled up, called and asked to give evidence.

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not think that we should strengthen the resolution of the Assembly with any argument. It has been decided by the Assembly that a show cause notice should be issued. It may be issued.

DR. H. V. HANDE : It has affected our party also which has voted with the Government. An opportunity having been given to the other members, we too must be given an opportunity for expressing at least within five minutes what we feel about this. That is my request. I request the Minister to bear with me for a few minutes and see the important point that I want to stress.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறபாடு, சபைத் தலைவர் அவர்கள் அதைப்பற்றி பேசவேண்டாமென்ற பிறபாடு, மறுபடியும் அதுபற்றிப் பேசுவது அவசியமா என்பதற்கு ரூலிங் கேட்கிறேன்.

DR. H. V. HANDE : We can speak.

THE HON. THIRU C. N. ANNADURAI : I would like to make myself clear. The position has been explained by the Speaker that there is a *prima facie* case against the speech referred to and the motion moved by the mover is that a show cause notice may be issued. The House has decided that a show cause notice may be issued. Therefore discussion as to whether there is a *prima facie* case or whether a show cause notice may be issued becomes unnecessary.

DR. H. V. HANDE : I have to refute what the hon. Member Thiru A. R. Subbiah Mudaliar said, because we have to express our opinion and what the Chief Minister says is not implicitly binding. We have voted for the resolution. So we have to express our view. My only submission is that there has been a similar resolution adopted in the Andhra Assembly. For instance, Mr. Brahmananda Reddy. . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order. What is the question before the House? Should the facts of the case be discussed ? After the motion that a show cause notice should be given has been moved, why is the Speaker allowing the Member to digress and go on at a tangent ? The Speaker has been pleased to strike a note of relevancy and the Member is wasting the time of the House. We are in the midst of the supplementary budget and the discussion on the Governor's Address. Is the Speaker going to allow this kind of tangential discussion? Please uphold the dignity of this House. We should not waste the time of this House.



திரு. என். துரைபாண்டியன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஒரு மெம்பர் பேசும்போது இரண்டு பேர் நின்று கொண்டே இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிற்கக் கூடாது. முதலிலே நீங்கள் உட்காருங்கள்.

DR. H. V. HANDE : When a motion has been brought before the House, has a Member no right to speak on it ? Just because the Chief Minister gets up and says something, do we have to implicitly obey?

MR. SPEAKER : Privilege matter takes precedence even over the budget. That answers Mr. Vinayakam. Even if there is a budget, privilege matter must be taken up first. What is now moved is merely a formal matter that a show cause notice be sent to Thiru C. Subramaniam and the Publisher of 'The Hindu'. I think we will get some reply and that will again be placed before the House. It is enough if you merely say that you support the motion for issuing a show cause notice. மு.ப 11-00

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, my submission is that after the passing of the motion which provides for the serving of 'Show Cause Notice', there is no need for further strengthening of the argument. The next step might perhaps be to authorise the Hon. Speaker to issue 'Show Cause Notice' on behalf of the House.

DR. H. V. HANDE : Sir, only one point and I am done. So far as the question of 'political fraud' is concerned, 20 Members who belong to the Swatantra Party are affected by it. In this connection, I wish to refer to the resolution passed by the Andhra Pradesh Legislative Assembly. The resolution took note of the "grave anxiety on the part of the people of some States, including Andhra Pradesh", about representation in Central and all-India services and said if the disadvantage to any language group is continued, "it will be open to the State to evolve its policy in the interest of the people". Now, will Thiru C. Subramaniam say that this is also a political fraud . . . .

(Cries of 'points of order' from the Congress Benches)

DR. H. V. HANDE : Now, I am trying to express . . .

THIRU K. VINAYAKAM : Sir, why should the hon. Member disobey the Chair ? Are you presiding or the hon. Member is presiding ? When a point of order is raised he refuses to resume his seat. He is only bringing your office to disgrace. You must take him to task.

MR. SPEAKER : I can see to it that my office does not come to disgrace. A Member should be allowed to finish his sentence. Then I will hear the point of order.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட வேண்டும் என்பதற்காக பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லாத விஷயங்களைக்கூட பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிப் பேசுவதை கூடுமானவரையில் தவிர்ப்பதற்கு இந்த அவையிலே முடிவு எடுப்பது நல்லது அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் இருந்தால் எழுப்பலாம். ஆனால், உரையாற்றிக்கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்கள் வாக்கியத்தை முடித்தபிறகு பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். ஆனால், மீண்டும், மீண்டும் ஒருவரே எழுந்திருந்து பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டிருந்தால், பேரவையின் நடவடிக்கைகளை தடைப்படுத்துவதற்காக பாயிண்டு ஆப் ஆர்டர் என்று எடுக்கப்படுகிறது என்று சொல்லி அவரை நிறுத்த முடியும். இப்பொழுது பாயிண்டு ஆப் ஆர்டர் இருந்தால், சொல்லலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி, பிரச்சனை தீர்ந்த பிற்பாடும் கூட ஒரு வரி ஒரு வரி என்று சொல்லி 35 வரிகள் புல் ஸ்டாப் கூட இல்லாமல் பேசிக்கொண்டிருக்கலாம். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று. பிரச்சனை முடிந்துவிட்டது. வேறு விஷயத்திற்குப் போகவேண்டும். மீண்டும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

DR. H.V. HANDE : I am coming to the point raised by the Hon. the Leader of the opposition. Here is a report of the Committee of Privileges on the 'Madras Corporation Case' and I request the Hon. Chief Minister to examine it carefully. On page 12 of the report it is stated :

'Sri K. Vinayakam said that the second resolution of the Corporation Council rescinding the original resolution was only a pious resolution in the nature of correction. It was not an expression of regret.'

This shows that even after the original resolution was rescinded, the hon. Member Thiru. Vinayagam was not satisfied with the rescinding of the Resolution and he wanted the Corporation to express regret. Similarly, whatever be the explanation of my distinguished Friend, Thiru Subramaniam, we will not be satisfied with it till he expresses regret before this House in person.



MR. SPEAKER : When the 'Show Cause Notice' is issued to Thiru C. Subramaniam and to the publisher of 'The Hindu', we do not know what reply we will get. They might say that they never said it or published it. I have not held that there was a breach of previlege. I have merely stated that there is causse to inquire into the matter. Has the hon. the Leader of the Ojposition got any thing to say?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். பின்னாலே பார்த்துக்கொள்ளலாம். அவர்கள் என்ன பதில் கொடுக்கிறார்களோ, என்ன முறையில் பதில் வருகிறது என்று தெரிந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம். ஆகவே, இப்பொழுது இதைப்பற்றி விவாதம் தேவையில்லை என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இளம்வழுதி அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம் முழுவதும் ஆங்கிலத்தில் இருக்கிறது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு, அண்மையில் 23—1—68-ம் தேதியன்று, இந்தி, பள்ளிகளில் நீக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்ட இந்த மாமன்றத்தின் அந்தத் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி இருக்கிறார் என்றும், அதையே மிகப் பெரிய அரசியல் மோசடி என்று குறிப்பிட்டிருக்கிறார் என்றும், எனவே காரணம் கேட்டு எழுதுவதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் 'ஆம்' என்க, எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்க. 'ஆம்' என்பவர்கள் அதிகம். ஆகவே, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, இந்தத் தீர்மானத்தின்படி 'ஷோ காஸ் நோட்டீஸ்', காரணம் கேட்டு எழுதப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ii) முதலமைச்சர் குண்டூரில் பேசிய பேச்சு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய கட்சியைச் சார்ந்த திரு. மார்டின் அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைப் படிக்கட்டும். தாங்கள் பிறகு தீர்ப்பு எப்படி வேண்டுமானாலும் கொடுங்கள். அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வாசிப்பதற்கு அனுமதிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக் காரியங்களை நடத்திக்கொண்டு போவதற்கு பல சட்டங்கள் இருக்கின்றன. நான் தங்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் விதிகளுக்கு

முரணாக இருப்பதை இங்கே கொண்டுவருவதற்கு அனுமதிப்பதில்லை என்பதுதான். என்ன தீர்மானம் என்று கேட்பதற்குக்கூட நேரம் இல்லாமல், இன்றைக்கு மன்றத்திற்கு வருவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் கொண்டு வந்து கொடுத்தார்கள். பார்த்தவுடனே தீர்மானம் விதிக்கு முரணானது என்று தெரிந்தது. திரு. மார்ட்டின் அவர்களிடம் சொன்னேன், விதிக்குப் புறம்பாக இருக்கிறது என்று. இன்ன விதிக்குப் புறம்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டு தங்களுக்கு கடிதம் எழுதுகிறேன் என்றும் சொன்னேன். பேரவை அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்று தாங்கள் கேட்பதற்கும், நான் பதில் சொல்வதற்கும் இந்தப் பேரவையிலே இடம் கிடையாது. நீங்கள் ஒன்றைச் சொல்ல, நான் அதற்குப் பதில் சொல்ல, அதை நீங்கள் மறுத்துச் சொல்ல வேண்டிய நிலைமைகள் ஏற்படுமாதலால், இப்படிப்பட்ட விஷயங்களை பேரவையிலே எழுப்பக் கூடாது. தாங்கள் பேரவைத் தலைவர் அறையிலே அலுவலகத்தில் ஏதாவது நடநததா என்பது பற்றி கேட்கலாம்; ஆனால் அதை தாஙகள் பிரைவேட் நோட்டீஸ் மூலம் கேட்கலாம். அதைப் பற்றி நீங்கள் தனியாகத்தான் கேட்கவேண்டும். 'மேல் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ்', 350-வது கேட்கவேண்டும். 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ்', 350-வது பக்கத்திலே,

'questions dealing with matters within the jurisdiction of the Speaker. . . .

அதாவது ஒரு கேள்வியை அனுமதிப்பது, தள்ளுவது, ஒரு ப்ரிவிலேஜ் மோஷனை அனுமதிப்பது, தள்ளுவது இதுபற்றி கேள்வி இருக்குமானால், அது

'should be addressed to the Speaker by private notice since no written or public notice of questions addressed to the Speaker is permissible.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் அதைப் பற்றி தனியாக அறையில் பேசவேண்டும். ஏன் அதை அனுமதிக்கவில்லை என்று தனியாகத்தான் கேட்க வேண்டும். பேரவையில் கேட்க முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் நிற்கும்பொழுது பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது. பாயிண்டு ஆப் ஆர்டர் மூன்று நேரங்களில் எழுப்ப முடியாது. வோட்டு எடுக்கின்ற நேரம், பேரவைத் தலைவர் நின்றுக்கொண்டு பேசுகின்ற நேரம், கவர்னர் அவர்கள் பேசுகின்ற நேரம் ஆகிய மூன்று நேரங்களில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது. எனவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பவேண்டாம். நான் தீர்மானம் முழுவதையும் படிப்பதற்குக் கூட நேரமில்லை. நான் என்ன காரணத்தினால் அனுமதி மறுத்தேன் என்று குறிப்பிட்டு எழுதியபிறகு, நீங்கள்



அதைப் பார்த்தால், உங்களுக்கு மன நிறைவு உண்டாகும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுக்குக் கொடுப்பதற்கு முன்னாலே என்னுடைய கட்சி அங்கத்தினர் என்ற முறையில் நானும் அதை ஓரளவுக்குப் படித்திருக்கிறேன். உரிமைப் பிரச்சனை என்ன என்பதை உறுப்பினர் அவர்கள் இங்கே படிக்கட்டும். பிறகு அதை உங்கள் தீர்ப்புக்கு விட்டுவிடுகிறோம். தாங்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும் சரி, என்ன உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே படிப்பதற்கு தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேல் தாங்கள் எந்தவிதமான தீர்ப்பும் கொடுக்கலாம். இப்பொழுது அதை படிப்பதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது பேசுவது விதிக்கு உட்பட்டதா, இல்லையா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. என் பேரில் ஏதோ உரிமைப் பிரச்சினை இருப்பதாக மட்டும் அறிகிறேன். அது என்ன என்று அறிந்து கொள்ள நான்கூட ஆவல் உள்ளவனாக இருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. மார்டின் அவர்கள் படிப்பார்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, with your kind permission I wish to raise the following matter of privilege under rule 184 of the Madras Legislative Assembly Rules.

In the issue of the daily *The Mail*, dated 29th January 1968, on page 6, the following passage has been published under the caption "Domination in the Guise of Unity—Anna warns Govt.

*Passage marked 'A'*

Guntur, Jan. 29.

The Chief Minister of Madras, Mr. C. N. Annadurai, said here yesterday that while he stood for the unity of the country, such unity should not be brought about by the domination of one linguistic group over the others.

*Passage marked 'B'*

Mr. Annadurai, who was addressing members of the Guntur Bar Association, said that the "imposition of Hindi" as the sole official language would harm the cause of unity more than anything else. If unity was to be a reality, every part of the country should contribute something. The champions of Hindi should therefore change their attitude and recognise the rights and claims of other languages, he added.

[Thiru T. Martin] *[1968 பிப்ரவரி 19*

*Passage marked ' C '*

The Chief Minister referred to the widespread agitations and defiance of law and said that " unfortunately today laws are made in Assemblies and Parliament by people who are not fully equipped to make laws ". They were passed hastily and for political reasons. This led the people to defy laws, which were harmful to their interests.

*Passage marked ' D '*

While he did not advocate lawlessness, he wanted only laws which led to an orderly growth of society. Laws which were not conducive to public interest had to be discarded, Mr. Annadurai said.

The passage marked ' C ' discloses a reflection on the Assembly Members that they are not fully competent to function as such and brings the Assembly into contempt in the minds of the general public. This passage discloses that a breach of privilege has been committed by the Hon. Chief Minister Thiru C. N. Annadurai and, by the publication of the same, by the said daily ' The Mail '. I request that the matter may be taken note of by the Hon. Speaker and this Hon. House and proper action taken.

THE HON. THIRU C. N. ANNADURAI : I am very glad that this has been brought to the notice of the House. It is not a reflection on the House for any act done by the House. It is only an analysis of the present business of law making and the equipment that the lawmakers possess to-day. I never intended and I can never intend any contempt of the House of which I form a part.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *நம்முடைய 187-வது விதிப்படி, பேரவையின் உரிமையைப் பாதிப்பதாக இருந்தால்,* It must be a matter of recent occurrence *அதாவது அண்மையில் நடந்ததாக இருக்கவேண்டும். இரண்டாவது,* May's Parliamentary Practice.*-ன் 377-வது பக்கத்தில்,* the matter must be raised at the earliest opportunity *என்றும் இருக்கிறது. நமது பேரவை கூடியது 10-ம் தேதி. இங்கே குறிப்பிடும் சம்பவம் போன மாதம் 29-ம் தேதி நடைபெற்றிருக்கிறது. போன மாதம் 29-ம் தேதி, 30-ம் தேதிகளில் பேரவை கூடியிருக்கவில்லை. இந்த மாதம் 10-ம் தேதி பேரவை கூடிய அன்று இந்த பிரிவிலேஜ் மேட்டர் என்னிடம் கொடுக்கப்படவில்லை. 10-ம் தேதி இல்லை; 11-ம் தேதி இல்லை; 12-ம் தேதி இல்லை; 13-ம் தேதி இல்லை. அப்படியென்றால்,* ' earliest opportunity ' *அதாவது, இரண்டு நாட்கள் பிந்தினால் கூட* ' a matter of recent ocurrence ' *என்பது போய்விடுகிறது. போன மாதம் 29-ம் தேதி நடந்ததற்கு இன்றைக்கு 19-ம் தேதி அவை உரிமைக்கேள்வி கொண்டுவருவது சரியாக இருக்காது. பேரவை 10-ம் தேதியன்று கூடியும், அப்பொழுதும் வாளாவிருந்துவிட்டு, 10-ம் தேதி, 11-ம் தேதி, இன்னும் 17-ம் தேதிவரை சும்மா இருந்து*



*1968 பிப்ரவரி 19] [பேரவைத் தலைவர்]*

*விட்டு, இன்றைக்கு 19-ம் தேதி கொண்டு வருவது என்றால், அது விதிக்குப் புறம்பாக இருக்கிறது. அவர்கள் இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்ப விரும்பியிருந்தால், 10-ம் தேதி காலையில் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும். அல்லது இரண்டொரு நாட்களிலாவது கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், இரண்டு மூன்று நாட்கள் பிந்தினால் கூட, அது பிந்திப் போய்விடுகிறது என்று தீர்ப்புகள் இருக்கின்றன.*

*மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மனநிறைவு கொடுத்ததா இல்லையா என்று தெரியாது. விதிகளின்படி, ஆனால்* ' earliest opportunity ' *யில் கொண்டுவரப்படவில்லை என்கின்ற காரணத்தால் பிந்திப் போய்விட்டது.*

It is also not a matter of recent occurrence.

*தங்களுக்கு (எதிர்க் கட்சித் தலைவரைப் பார்த்து) ஒன்று சொல்லுகிறேன். பட்ஜெட்டையும்விட, பேரவை உரிமைப் பிரச்சினை முந்துவது. பட்ஜெட் மிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். அது அரசுக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசரம் உள்ளது. ஆனால், அதையும்விட மிக மிக முக்கியமானது, இந்தப் பேரவையின் மானம். இந்தப் பேரவையின் மானம் பெரியது. அதுபற்றி உடனடியாகச் சொல்லியாக வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படிச் சொல்லவில்லை. ஆகையால், அவை கூடிய 10-ம் தேதியிலிருந்து இத்தனை நாட்கள் ஆனபிறகு, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் கூறி, அதற்கு என்னுடைய சம்மதத்தைக் கொடுக்க மறுக்கிறேன்.*

## 3. அறிவிப்புகள்.

### (i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை, இப்பேரவைமுன் அறிமுகப்படுத்தவும், இப்பேரவை அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.*

## 4. அரசினர் மசோதாக்கள்.

### (i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு கே. ஏ. மதியழகன் :** துணை அவைத்தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**5. 1967-68-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான முதலாவது துணை நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.**

1. நிலவரித் துறை

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப் பின் கீழ் ரூ. 93,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

2. மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள் —நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழியவில்லை.

*** திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இந்த "மோட் டார் வண்டிகள்—சட்டம்—நிர்வாகம்" என்னும் நிதிக் கோரிக்கை யின்மீது நான் ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். மோட்டார் வாகனங்களுக்குச் செலுத்தப்படும் வரி இப்பொழுது ட்ரெஷரிகளிலும், ஸப்-ட்ரெஷரிகளிலும் செலுத்தப் படுகிறது. பொதுவாக, பஸ்களுக்கும் லாரிகளுக்கும் டாக்ஸிகளுக் கும் செலுத்தப்படவேண்டிய வரிகள், எவ்வளவு செலுத்தப்பட வேண்டும் என்று அந்தந்த ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசர் அவர்களால் குறிப்பிடப்பட்டு, ஆங்காங்கு, அந்தந்தப் பகுதிக்குத் தகுந்தாற்போல், ட்ரெஷரிகளிலும், ஸப்-ட்ரெஷரிகளிலும் செலுத் தப்படுகிறது. பிறகு, அந்தந்த வண்டிகளில் உள்ள ரிஜிஸ்ட்



ரேஷன் சர்ட்டிபிகேட்களை ஒழுங்காக நடைமுறையில் பரிசீலிப்ப தற்காக, அவை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசருக்கு அனுப்பப் படுகின்றன. அதற்குப் பதிலாக, வாடகைக்கு ஓட்டக்கூடிய பஸ்கள், லாரிகள், டாக்ஸிகள் ஆகியவற்றுக்கு உண்டான வரிகளை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசிலேயே கட்டும்படியான வாய்ப்பை ஏற்படுத்தினால், எத்தனை வண்டிகள் அந்த ஜில்லாவில் இருக்கின்றன என்பது அந்த ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசருக்கும் தெரியும். உடனே, இந்த இந்த வண்டிகளுக்கு வரி கட்டப்பட்டது, இந்த இந்த வண்டிகளுக்கு வரி கட்டப்படவில்லை என்ற ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வாய்ப்பு அந்த அதிகாரிக்கு ஏற்படும். அதனால், வரி கட்டாமல் ஏமாற்றக் கூடியவர்களையும், வரி கட்டாமல் நிற்கக்கூடிய அம்சங்களையும் தடுக்க முடியும். இது அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானத்தைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இதைப் பரிசீலனை செய்து, ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசிலேயே இந்த வரியைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மோட்டார் வாகனச் சட்டத்தை அமல் படுத்தும்போது, வரி கட்டாதவர்களுக்கு, அவர்கள் பர்மிட் கேட்கும் காலங்களில் அவர்களுக்குப் பர்மிட் வழங்காத வகையில் சட்டம் உண்டாக்க வேண்டும். பர்மிட்டின் 'கண்டிஷனில்'

"non-payment of tax is a disqualification for the grant ot permit for at least three years". என்று ஏற்படுத்தினால்தான், வரி கட்டாமலேயே ஏமாற்றுகிறவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும். அதைச் சர்க்கார் செய்ய வேண்டும்.

பஸ்களில் 'ஓவர்லோடு' ஏற்றப்படுகிறது. பஸ்கள், லாரிகள் அதிக வேகமாகப் போனால், அது டிரைவர்களுடைய குற்றம் என்று மாத்திரம் இருக்கிறது. பஸ்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாகப் பாசஞ்சர்களை ஏற்றினால், அந்த கண்டக்டர் மாத்திரம் குற்றவாளியாகக் கருதப்படாமல், பஸ் உரிமையாளரும் குற்றவாளியாகக் கருதப்படுகிற நிலைமை இப்பொழுதுள்ள சட்டத்தில் இருக்கிறது. பஸ் உரிமையாளர் வேறொரு இடத்தில் இருப்பதால், 'ஓவர்லோடு' ஏற்றிச்செல்லு வதற்கு அவர் பொறுப்பாகமாட்டார். அதிகப்படியாக பஸ்ஸில் பிரயாணிகளை ஏற்றிச்சென்றால், அதற்கு கண்டக்டர் மாத்திரம் தான் பொறுப்பாளியாகிறார். ஆகவே, அவர் பேரில் மாத்திரம் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். சில இடங்களில் பஸ் உரிமை யாளர்கள் 'ஓவர்லோடு' ஏற்றிச் செல்லும்படி சொல்லக்கூடியவர் களும் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, பஸ் உரிமையாளர் கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பஸ்களில் அளவுக்கு மேல் பாசஞ்சர்களை ஏற்றிக்கொண்டுபோகும்போது, அதனால் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பாசஞ்சர்களுக்குச் சங்கடங்கள்

[திரு. நா. காசிராமன்] [1968 பிப்ரவரி 19

உண்டாகின்றன. அப்படியில்லாமல் இருப்பதற்கு பஸ்ஸில் 'ஓவர்லோடு' ஏற்றக்கூடாது என்ற கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். தவறு செய்யும் கண்டக்டர்கள், தொழிலாளர்கள் இவர்கள் மீது பஸ் அதிபர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. முதலில் அவர்களுக்கு சார்ஜ் மெமோ கொடுக்கவேண்டும். "நீ ஏன் இப்படி ஓவர்லோடு ஏற்றிச் சென்றாய்?" என்று பஸ் உரிமையாளர் சார்ஜ் மெமோ கண்டக்டருக்குக் கொடுத்த பிறகுதான் அந்த கண்டக்டர் பேரில் நடவடிக்கை எடுக்க முடியும். அந்த சார்ஜ் மெமோவை அந்தத் தொழிலாளருக்கு ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசுக்கு அனுப்பினால், அது ஒன்றே போதும், அந்த ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசர் இந்த பஸ் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அத்தாட்சி. ஆகையால், பஸ் உரிமையாளர், ஓவர்லோடு ஏற்றிச்சென்ற கண்டக்டரைக் கண்டு பிடித்து, அதிகாரிக்குத் தெரிவித்தால், அந்தக் குற்றத்தைச் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்ற விதத்திலே சட்டத்திலே சில விதிகளை ஏற்படுத்தினால்தான் இந்தச் சட்டத்தை நன்றாக நிர்வகிக்க முடியும் ஓவர்லோடு இல்லாமல் குறைக்க முடியும். ஜனங்களுக்கும் அதிக நெருக்கடி இல்லாமல் பிரயாணம் செய்வதற்கான வசதியை உண்டாக்கிக் கொடுக்க முடியும்.

அடுத்து, அனுபவம் வாய்ந்த மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசர்களாக நியமனம் செய்வதும், ப்ரொமோஷன் கொடுப்பதும், இந்த மோட்டார் வாகன சட்டத்தை அமல்படுத்துவதற்கு உகந்ததாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் விரிவாகப் பேசவேண்டாம். துணை நிதிக் கோரிக்கையின்மீது பேசும்போது, எதற்காக நிதி கோரப்படுகிறதோ, அதைப்பற்றி மட்டும் கருத்தைச் சுருக்கமாகக் கூற வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் பேசும்போது, வரியினை வசூலிப்பது ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசராகவே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதிலுள்ள நிர்வாகச் சிக்கலை எப்படி எப்படியெல்லாம் பரிசீலிக்கவேண்டும் என்று அவர்களே கூறியிருக்கிறார்கள். ஆகவே, பரிசீலிக்கப்படவேண்டிய ஒரு விஷயத்தை இப்போதே நாம் ஏற்றுக்கொள்ளுகிற அளவிலே இல்லை என்ற காரணத்தினால், வெட்டுப் பிரேரணையைக் கொடுத்த உறுப்பினர் அவர்கள் அதை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் தம்முடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துவிட்டதால், அதை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ள அவையின் அனுமதி கோரப்படுகிறது.



1968 பிப்ரவரி 19]

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களின் வெட்டுப் பிரேரணை முன்மொழியப்படவில்லை.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 3. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,58,800 மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 4. முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 5. பத்திரப் பதிவுத் துறை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 6. மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக்கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

## 7. தேர்தல்கள்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,99,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss the failure of the Government to conduct the South Madras Lok Sabha Election (Bye-election) fairly, I move the following cut motion,—

"That the allotment of Rs. 20,99,100 under Demand No. 7—Elections be reduced by Re. 1".

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, துணை நிதிக் கோரிக்கைகள் வரும்போது, பொது விவாதத்தின்போது, வெட்டுப் பிரேரணைகளில் வரும் பல கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லி, பிறகு நிதிக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளும்போது, வெட்டுப் பிரேரணைகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டுவந்துவிட்டு, மற்றவற்றை வற்புறுத்தாமல் இருப்பதை ஒரு மரபாகக் கொண்டிருக்கிறோம். வெட்டுப் பிரேரணைகள் அத்தனையையும் எடுத்துக்கொள்ளாமல், ஏதேனும் ஒன்றைமட்டும் எடுத்துக்கொண்டு விவாதிப்பது வழக்கம். அந்த முறையைப் பின்பற்றி, பொது விவாதத்தின் போது கருத்துக்கள் வழங்கவும், நிதிக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்போது, ஏதேனும் ஒரு வெட்டுப் பிரேரணையை எடுத்துக்கொண்டு மற்றவற்றை வற்புறுத்தாமல் இருக்கலாம். ஒவ்வொரு வெட்டுப் பிரேரணை எடுத்துக் கொள்ளுவதென்றால், காலம் அதிகமாக ஆகும். ஆகவே அந்த முறையைக் கடைப் பிடிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, We have no objection to the guillotining of the Demands.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அவை முன்னவரின் கருத்தை எதிர்க்கட்சித் தரப்பினும் ஏற்றுக்கொள்ளும் காரணத் தால் வெட்டுப் பிரேரணைகள் யாவும் திரும்பப் பெறப்படுகின்றன என்று கருதுகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி :* வெட்டுப் பிரேரணைகளுக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அவற்றைப் படிப்பதற்கு அனுமதி தர வேண்டும். வலியுறுத்தாமல் வேண்டுமானால் விட்டுவிடுகிறோம்.



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானம் கொடுத்தவுடனே அது முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டது என்றுதான் கொள்ளப்படுகிறது. பேரவையில் மறுபடியும் சொல்ல வேண்டியதேவை இல்லை. வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவை யின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன என்று கொள்வது தான் முறையாகும்.

*திரு. க. இராமமூர்த்தி :* பேரவை நடவடிக்கைக் குறிப்பிலே, வெட்டுப் பிரேரணைகள் இடம் பெறுமானால் எனக்கு இதிலே ஆட்சேபணை இல்லை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அவை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறும்.

*திரு. ஏ. அ. சுப்பராஜா :* தலைவர் அவர்கள் சொன்ன பிரகாரம், ஏதாவதொரு வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபித்து, அதன் மீது பேசும்படியான ஒரு வாய்ப்பு அளித்தால் நன்றாக இருக்கும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானங் கள் எல்லாம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

## 8. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,07,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss policy relating to use of cars by Ministers, I move the following cut motion :—

"That the allotment of Rs. 6,07,000 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff be reduced by Re. 1".

THIRU V. GEORGE : Sir, to discuss the necessity and the timing of the announcement of payment of City Compensatory allowance to the City employees just on the eve of the bye-lection in the City, I move the following cut motion :—

"That the allotment of Rs. 6,07,000 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff be reduced by Re. 1".

வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியதொகை
மு.ப. 11-30 வழங்கப்பட்டது.

### 9. மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,88,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 10. நீதி நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU V. GEORGE : Sir, to discuss the undue delay of the Government to start a Sub-Court at Thuckalay in Kanyakumari District, I move the following cut motion :—

"That the allotment of Rs. 28,000 under Demand No. 10—Administration of Justice be reduced by Re. 1.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 11. சிறைச்சாலைகள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



### 12. காவல் துறை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,41,60,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி** : அவைத் தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுக்கு ஊதியம், பயணப்படி உயர்வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுபற்றி விவாதிக்க :—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,41,60,400-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி** : அவைத் தலைவர் அவர்களே, காவல் துறை பணியாளர்களுக்கு ஊதியம், பிரயாணப்படி முதலியவைகளை அதிகப்படுத்துவது சம்பந்தமாக விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,41,60,400-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 13. கல்வி.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the speedy disbursement of scholarships to the needy students, I move the following cut motion :—

"That the allotment of Rs. 98,000 under Demand No. 13—Education be reduced by Re 1."

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to start or to upgrade adequate number of schools in keeping with the evergrowing needs of the pupils of this State, I move the following cut motion :—

"That the allotment of Rs. 98,000 under Demand No. 13—Education be reduced by Re. 1".

THIRU T. MARTIN : Sir, to discuss about the scholarships to children of teachers, I move the following cut motion :—

"That the allotment of Rs. 98,000 under Demand No. 13—Education be reduced by Re. 1."

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவைத் தலைவர் அவர்களே, மதிய உணவிற்கு வழங்கும் அரசாங்க உதவித் தொகையின் அளவைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 98,000-ல் ரூபாய் 1 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 14. மருத்துவம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 14—மருத்துவம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 57,80,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss the policy of supply of medicines to Government Hospitals in the muffasil with special reference to Tindivanam Government Hospital, I move the following cut motion :—

"That the allotment of Rs. 57,80,100 under Demand No. 14—Medical be reduced by Re. 1."

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவைத் தலைவர் அவர்களே, மருந்துகள், மருத்துவ தேவைப் பொருள்கள் ஆகியவற்றின்கீழ் ஒதுக்கீடு செய்த நிதியளவைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 57,80,100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.



திரு. சோ. அழகர்சாமி : அவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி அரசினர் மருத்துவமனைக்கு அதிகமாக ஒரு ஆண் டாக்டரும், பெண் டாக்டர் ஒருவரும் நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 57,80,100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 15. பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 64,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

திரு. கே. பி. எஸ். மணி : அவைத் தலைவர் அவர்களே, இத்துறையில் கடைநிலை ஊழியர்களுக்குப் பாதுகாப்பு உடை வழங்குதல், ஊதியம் அதிகப்படுத்துதல் சம்பந்தமாக விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 64,500-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 16. வேளாண்மை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,26,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

திரு. சோ. அழகர்சாமி : அவைத் தலைவர் அவர்களே, அதிகமான சமுதாயக் கிணறுகள் வெட்ட அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,26,900-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவைத் தலைவர் அவர்களே, தனியார் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்த அரசாங்கம் அளிக்கும் உதவியைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,26,900-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 17. மீனளம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,61,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to protect the interest of Fishermen of the State by taking proper steps from the mechanised fishing boats of other countries, I move the following cut motion :—

"That the allotment of Rs.46,61,500 under Demand No. 17—Fisheries be reduced by Re. 1."

THIRU T. MARTIN : Sir, to discuss about the construction of mechanised fishing boats, I move the following cut motion :—

"That the allotment of Rs. 46,61,500 under Demand No. 17—Fisheries be reduced by Re. 1."

திரு. கே. பி. எஸ். மணி : அவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை பணியாளர்கள் நியமனம் பற்றியும், மீனவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டியதுபற்றியும் விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 46,61,500-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 18. விலங்கின வளர்ப்பு.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 19. கூட்டுறவு.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,89,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கைத்தறி செஸ் நிதி நிலைமையைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,89,800-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 20. தொழில்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,24,52,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** அவைத் தலைவர் அவர்களே, புதிய அரசாங்கத் தொழில்கள் பிற்பட்ட பகுதிகளில் அமைக்க வேண்டும் என்ற கொள்கையைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,24,52,500-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்கும் தொழில்களை கிராமப்பகுதிகளில்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள—

"நிதிக் கோரிக்கை என் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,24,52,500-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 23. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 54,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 24. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



### 25. ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கே. பி. எஸ். மணி :** அவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள், அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை அதிகமாக கொடுக்க வேண்டுமென விவாதிக்க :—

"நிதிக் கோரிக்கை என் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** அவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்ட பண உதவி கொடுப்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 27. பொதுப் பணிகள்—பணிகள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 28. பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

[1968 பிப்ரவரி 19

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** அவைத் தலைவர் அவர்களே, பங்கீட்டு முறையில் தரமான அரிசியை சோதனை செய்ய தனி அதிகாரிகள் நியமிக்கும் விஷயம் பற்றி விவாதிக்க :—

"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,83,66,000-ல் ரூ. 1 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 34. எழுதுபொருள்—அச்சுத் துறை

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,91,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**திரு. டி. மார்டின் :** அவைத் தலைவர் அவர்களே, தாங்கள் 'ஆதரிப்போர் ஆம்' 'மறுப்போர் இல்லை' என்று சொல்லும் நேரத்தில், யாரும் 'ஆம்' என்றோ, 'இல்லை' என்றோ சொல்லவில்லை. அப்படியிருக்கும்போது தாங்கள் நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாகக் கூறுகிறீர்களே, இது முறையா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவைத் தலைவர் அப்படிச் சொல்லும் நேரத்தில், தாங்கள் மறுப்பதாயிருந்தால், உடனேயே 'இல்லை' என்று சொல்லியிருக்க வேண்டும். தாங்கள் ஒன்றும் கூறாததால், நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தேன்.

### 35. காட்டுவளத் துறை

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 47,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



1968 பிப்ரவரி 19]

**திரு. கே. பி. எஸ். மணி :** அவைத் தலைவர் அவர்களே, இத் துறையில் கடைநிலை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டியதுபற்றி விவாதிக்க :—

"நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 47,900-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 37. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,10,64,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**திரு. கே. பி. எஸ். மணி :** அவைத் தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகை குறைக்கப்பட வேண்டுமென்று விவாதிக்க :—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,64,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 39. வேளாண்மை மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை என் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வேண்டிய பொறுக்கு விதைகளை எல்லாம் அரசாங்கப் பண்ணைகள் அமைத்து அதிலே தயார் செய்து மலிவான விலையில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள—

" நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 40. தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,46,78,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

**திரு. கே. பி. எஸ். மணி :** அவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் தொழில் வளங்கள் அதிகரிக்க வேண்டுமென விவாதிக்க—

" நிதிக்கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,46,78,100-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்",

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டு தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 41. பாசன மூலதனச் செலவு

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

" நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும். "

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 42. பொதுப் பணிகள், மூலதனச் செலவுகள்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள், மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,29,99,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to provide for the construction of highways roads in Kanyakumari district during the current year, I move the following cut motion :—

" That the allotment of Rs. 1,29,99,300 under Demand No. 42—Capital outlay on Public Works be reduced by Re. 1. "

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to provide for the construction of several school buildings in Kanyakumari district, I move the following cut motion :—

" That the allotment of Rs. 1,29,99,300 under Demand No. 42—Capital outlay on Public Works be reduced by Re. 1. "

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 44. காட்டுவள மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 46. அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,46,00,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss the supply of good quality of rice to the consumers in the State, I move the following cut motion :—

" That the allotment of Rs. 20,46,00,200 under Demand No. 46—Capital outlay on Schemes of Government Trading be reduced by Re 1. "

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to extend the one-rupee-a measure scheme to the entire State and the consequent inequality of treatment meted out to the citizens of this State, I move the following cut motion :—

"That the allotment of Rs. 20,46,00,200 under Demand No. 46—Capital outlay on Schemes of Government Trading be reduced by Re. 1."

**திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களை எல்லாம் நியாய விலையில் அரசாங்கமே கொள் முதல் செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ள—

"நிதிக் கோரிக்கை என் 46—அரசாங்க வாணிகத் திட்டங் களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 20,46,00,200-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

47. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன் களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,84,96,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவர் அவர்களே, விவசாயி களுக்கு உதவும் நோக்கத்துடன் அரசு கொடுத்துள்ள கடனை வசூலிப்பதில் கோவில்பட்டி தாலுக்காவில் நடைபெறும் கெடு பிடியை நிறுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொள்ள—

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன் களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,84,96,700-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** அவைத் தலைவர் அவர்களே, நசிந்து கிடக்கும் நெசவாளர்களை உயிர்ப்பிக்க தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரிய பண உதவி செய்யும் விஷயத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன் களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,84,96,700-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்"



வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது வாக் கெடுப்பு முடிவுற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**( i ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அடுத்து, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கு மசோதாவை பேரவைக்குக் கொண்டுவர மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகின்றன.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**( ii ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**(iii ) தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967) (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு).**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill[a] 1967 (Legislative Assembly Bill No. 18 of 1967) as amended by the Select Committee be taken into consideration'.

As the House is aware, this Bill was introduced in the House on 15th July 1967 and was subsequently referred to a Select Committee of the House for detailed scrutiny. On the invitation

---

**Published in the** *Fort St. George Gazette* **Extraordinary, dated 14th Feb. 1968.**

of the Chairman of the Committee, six members of the Legislative Council including the Hon'ble the Chief Minister attended the meetings of the Committee. The Committee received several written Memoranda and also visited important centres to record oral evidence from persons and institutions interested in the legislation.

In the original Bill, the following provisions had been proposed, namely :—

(i) that the exemption limit on the basis of the extent of land be reduced from 12-1/2 standard acres to 5 standard acres ;

(ii) that the definition of standard acre be recast to provide for the conversion rates on the basis of crops raised on the land ;

(iii) that the composition be permitted to holdings up to 20 standard acres only ;

(iv) that the rate of composition be doubled ; and

(v) that the exemption limit of agricultural income be raised from Rs. 3,600 to Rs. 4,000 per annum.

The majority of witnesses who either appeared before or sent Memoranda to the Committee by way of evidence on the legislation were not in favour of the proposal to levy the tax on the basis of the crops raised on the land and they wanted that the existing definition of 'Standard acre' in the principal Act should be retained. They were, however agreeable to increase the rate of tax if the Government were interested in augmenting its resources. Most of the Members of the Committee were also of the same view. In deference to the wishes of the people and the Members of the Committee it was decided to retain the existing definition of 'Standard acre' in the principal Act, namely—the Madras Agricultural Income-tax Act, 1955. It was also decided,

(1) that extent of land exempt from assessment of Agricultural Income-tax be reduced from 12-1/2 standard acres to 7-1/2 standard acres instead of 5 standard acres proposd in the Bill as introduced ;

(2) that the rate of composition specified in the Schedule to the principal Act be raised to 2-1/2 times of what it is now;

(3) that the composition of Agricultural Income-tax be allowed to all crops at all levels except for plantation in respect of which the composition provision will be limited to first 50 standard acres ; and

(4) that the revenue yield from the present legislation may be watched for one year in the first instance. Now I will proceed to explain the various charges made in the Bill by the Select Committee.

*Clause* 2.—Sub-clause (1) seeks to amend clause (i) of section 2 of the principal Act so as to reduce the extent of land exempt from assessment of Agricultural Income-tax from 12-1/2 standard acres to 5 standard acres and sub-clause (2) seeks to recast Clause (vv) of the same Section which deals with the definition of 'standard acre'. The Committee has decided that the extent of land exempt from assessment of Agricultural Income-tax be reduced to 7-1/2 standard acres instead of 5 standard acres as proposed in the Bill as introduced and that the definition of 'standard acre' in Clause (vv) of Section 2 of the principal Act be retained as it is. Accordingly, sub-clause (1) has been amended and sub-clause (2) has been omitted.



*Clause* 4.—This Clause seeks to amend Section 65 which deals with the composition of Agricultural Income-tax in respect of plantation and non-plantation crops. The Committee has decided that the existing position regarding the extent for which composition is permissible should be maintained. Accordingly, the Committee has decided that the composition of Agricultural Income-tax should be applicable to all crops at all levels except for plantation in respect of which composition will be limited to first 50 standard acres. The Committee has also decided that the rate of composition specified in Parts II and III of the Schedule to the Act be raised by 2½ times. Consequently, the proviso to Clause (c) of sub-section (1) of Section 65 of the Act has also been amended suitably.

*Clause* 5.—This Clause seeks to amend Part I of the Schedule in regard to rates of the Agricultural Income-tax and to revise Parts II and III in regard to rates of composition. The Committee has decided to retain the provision made in sub-clause (1) of Clause 5 in regard to the exemption limit and to revise Parts II and III in the light of the decision to raise the rate of composition to 2½ times of the present rates.

*Clause* 6.—The Committee decided to retain the provision with a slight consequential modification. However an apprehension was raised by certain Members of the Committee whether assessees who are ignorant of this provision will not be adversely affected if they failed to make fresh applications for permission for composition after the commencement of this legislation. The Government will give instructions to the departmental authorities that application forms for composition should be sent to every assessee. Necessary powers would also be given to the officers by suitable rules to condone delays in filing of applications for composition.

*Clause* 7.—This is a new Clause introduced by the Committee. The accounting year in respect of 99 per cent of the assessees is from 1st April to 31st March while there are some assessees who adopt a different accounting year. To cover such cases it is felt that this Clause is necessary.

As decided by the Committee the working of the Act will be watched for a year before the Government could think of any other modifications to the Act.

I request the House, Sir, to accept the motion.

THIRU K. RAMAMOORTHY : Sir, I may be permitted to move my amendment standing in my name, viz. . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இந்த மசோதாவில் உள்ள எல்லாக் கருத்துக்களையும் பற்றி பொதுவான முறையில் பேச விரும்புகின்றவர்கள் இப்போது பேசலாம். கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தை வற்புறுத்திப் பேச விரும்புகின்ற உறுப்பினர்கள் ஷரத்துவாரியாக எடுத்துக்கொள்கிறபோது பேசலாம்.

**திரு. ரா. கனகசபை** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டம் பழைய மாதிரியே வந்திருக்கிறது. பொறுக்குக் கமிட்டியில் முதலில் அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்தை டிஸ்பென்ஸ் செய்துவிட்டு அதற்கு முதலில் இருந்தமாதிரியே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆயினும் முதலில் எந்த நோக்கத்திற்காக இது கொண்டுவரப்படுவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்களோ, அது நிறைவேற வில்லை. 'should be prepared to forge a part of the income in the interest of the State' என்று ஓரிடத்தில் முதல் அமைச்சர் சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த நிலை வேறுபட்டிருக்கிறது. குறிப்பாக நெல் பயிரிடுகிறவர்களை இது பாதிக்கும் என்ற அச்சம் இருக்கிறது. ஏற்கனவே அவர்கள் நஞ்சை நிலத்திற்கு அதிக வரி செலுத்துகிறார்கள். இப்போது இந்தச் சட்டமும் வந்தால் அவர்கள் நிலைமை மோசமாகிவிடும் என்று பயப்படுகிறார்கள். இது நிலத்தின் மீது வரியில்லை. வருமானத்தின் மீது வரி. வருமானத்தைப் பார்க்கிறபோது அதற்கு அளிக்கப்பட்டுள்ள ஸ்டாண்டர்ட் ஏக்கர்படி கரும்பு போன்ற புஞ்சைப் பயிர்களைப் பயிரடக்கூடியவர்களுக்கு வரி வராது. ஆனால் அவர்களுக்குத்தான் அதிக வருமானமும் இருக்கிறது. இருபது ஏக்கர் வைத்திருக்கக்கூடிய நஞ்சை விவசாயி 150, 175 ரூபாய் வரி செலுத்த வேண்டியிருக்கும். இவர்களுக்கு இதில் கிடைக்கிற வருமானமும் குறைவு. இப்போதே சாதாரணமாகப் புகார் இருக்கிறது. உணவு தானியம் பயிரிடுகிறவர்கள் கூட புஞ்சைப் பயிர் வைக்க முயல்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தஞ்சை ஜில்லாவிலே உள்ளவர்களுக்கும் மற்றும் உள்ள நஞ்சை நிலம் பயிரிடுபவர்களுக்கும் கஷ்டமாக இருப்பதால் அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இப்பொழுது புதிதாக நஞ்சை நிலத்தின்மீது அரசாங்கம் பளுவை ஏற்றிவிடவில்லை. அப்படிப்பட்ட தொனி வருகிற மாதிரி அங்கத்தினர் பேச்சிலே அமைந்திருந்தது. இரண்டு ஏக்கர் என்று இருப்பதை ஒரு ஏக்காராக மாற்றிவிடலாமா என்று யோசிக்கப்பட்டது.





அவர்களுடைய கட்சிக்காரர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மற்ற விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து பழையபடியே இருக்கலாம் என்று சொன்னதால் செய்ததே தவிர, வேறு புதிதாக நெல் பயிரிடுபவர்களுக்கு ஒன்றும் செய்துவிட வில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கனகசபை** : முன்னால் இருந்த அரசாங்கம் செய்தது, அதைத் திருப்பிச் செய்திருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன், புதிதாகப் போட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி** : தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை வருமான வரி திருத்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். இந்த மசோதா 1967 ஆம் வருடம் ஜூலை மாதம் பிரசுரிக்கப்பட்டது. அது ஆய்வுக்குச் சென்று திருத்தி பிரசுரிக்கப்பட்டபொழுது உண்மையிலே நல்ல கருத்தை வலியுறுத்தினார்கள். இரண்டு ஏக்கர் நஞ்சை நிலத்தை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராக வைக்கவேண்டுமென்று பிரசுரமான வுடனே உண்மையிலேயே என் போன்றவர்களுக்கு அது மெத்த மகிழ்ச்சியளித்தது. விவசாயிகளுக்கு அரசாங்கம் சில சலுகை களைக் கொடுக்கவேண்டும். இரண்டு ஏக்கர் நிலத்தை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றவேண்டுமென்று இருந்ததை அது பழையபடி செலக்ட் கமிட்டிக்குப் போய்விட்ட நேரத்திலே அவர்கள் அதை மாற்றி 1955 ஆம் வருஷத்திலே எப்படி இருந்ததோ அதேமாதிரி இருந்தால் போதுமென்று சொன்னார்கள், அப்படிச் சொன்னதுதான் எங்களுக்கு வருத்தத்தை அளித்தது. விவசாய வருமான வரியைப் பொறுத்தவரையில் என்னுடைய சொந்தக் கருத்து என்னவென்றால் இப்படிப்பட்ட சட்டம் தேவைதானா என்பதுதான். ஏனென்றால் 80 லட்சம் ரூபாய் வருகிறது, அதிலே 40 லட்சம் ரூபாய் செலவாகிறது. இப்படியிருக்க இது தேவை தானா என்று சொல்லக்கூடிய சமயத்தில் இப்படியொரு திருத்தத்தைக் கொடுத்து, செத்துபோன சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து அதற்கு உயிர் ஊட்டியது போல் இருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குப் பலவிதமான தொல்லைகள் ஏற்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகமான மழை பெய்ததன் காரணமாக ஆயிரக்கணக்கான கண்மாய்கள் உடைந்து பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அதைப்போன்று மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் மழையில்லாததன் காரணமாகப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர புயல், பூச்சி இவற்றினால் விவசாயிகளுக்குப் பலவிதமான தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. நெல் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கவேண்டும். இரண்டு ஏக்கர் என்று இருப்பதை ஒரு ஏக்கராகக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன். முதலமைச்சர் அவர்களும் உணவு அமைச்சர் அவர்களும் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய சட்டத்திலே 12½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தால் என்று இருந்தது, அதை மாற்றி 7½ ஏக்கர் என்று செய்திருப்பது வருந்தத்தக்கது. பழைய சட்டத்தின் பிரகாரமே 12½ ஏக்கர் என்று செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழைய சட்டத்திலே 7½ ஏக்கர் நிலத்திற்கு 4½ ரூபாய் வரி போடப்பட்டது. இப்பொழுது இரண்டரை மடங்கு அதிகமாக ரூ. 11.25 வரை போடப்பட்டிருக்கிறது. இப்படி அதிகமாகப் போடப்பட்டிருக்கிற காரணத்தினால் விவசாயிகளுக்குத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. 1955-ஆம் வருஷ சட்டத்திலே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்தது, அதற்கு ரூ. 108.75 வரி போடப்பட்டது. அந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பித் திருத்திய பிறகு இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒரு ஏக்கராகக் குறைக்கப்பட்டது. பிறகு மீண்டும் அந்தச் சட்டம் திருத்தி வருகிறபொழுது 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துள்ளவர்கள் ரூ. 328.50 கட்டும்படியாகப் போடப்பட்டது. பழைய சட்டத்தைக் காட்டிலும் 219.75 ரூபாய் அதிகமாக இருக்கிறது. உணவு அமைச்சர் அவர்கள் 2½ மடங்கு அதிகம் என்று சொன்னார்கள், 2½ மடங்கல்ல, 3 மடங்கு அதிகமாக இருக்கிறது. விவசாயத்தைப் பொறுத்தளவிலே புஞ்சைக்கு வரியை எடுத்தவுடனே தமிழக அரசுக்கு விவசாய மக்களிடத்திலே பாராட்டு ஏற்பட்டது. படிப்படியாக அவர்கள் நஞ்சை நிலத்திற்கும் வரியை எடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, இப்பொழுது விவசாயிகள் அதிகமாகக் கட்டக்கூடிய நிலைமை ஏற்படுகிறது: தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வரிப் போடலாம், ஆனால், அதேபோல விவசாய மக்களுக்குப் போடமுடியாது. ஏனென்றால் தொழில் துறையில் உள்ளவர்களுக்குப் போட்டாலே அது கடைசியாக விவசாய மக்களால்தான் கொடுக்கப்படுகிறது, அவர்கள் வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழியில்லை. ஆகவே இந்த விவசாய வருமான வரித் திருத்தத்தின் மூலம் விவசாயிகளுக்கு மோசமான நிலைமை வந்துவிடும். ஒரு படி அரிசி போடுகிறோம். அப்படி ஒரு படி அரிசி போடுவதற்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி சப்ஸிடி கொடுத்துப் போடுவதால் 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது, அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறபோது, விவசாய மக்களுக்குச் சில சலுகைகளைக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். பழைய சட்டப் பிரகாரம் 12½ என்று வைக்கவேண்டும். 7½ என்று இருப்பதை 12½ ஆக மாற்ற வேண்டும். அதேபோல் 2 ஏக்கராக இருப்பதை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உணவு அமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் வேண்டிக் கொள்கிறேன். இவற்றிற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். சங்கரய்யா:** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய வருமானவரி திருத்தச் சட்டம் பொதுவான பரிசீலனைக்கு வருகிற நேரத்தில், என்னுடைய கம்யூனிஸ்ட்



(மார்க்ஸிஸ்ட்) கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த அளவு நிலத்திற்கும் விதிவிலக்கு இல்லாமல் முதலில் சபையில் தாக்கலான திருத்தச் சட்டத்தில் இருந்தது. சில சட்ட மன்ற அங்கத்தினர்கள் பேசியதன் காரணமாக முதலமைச்சர் அவர்கள் முன்வந்து, ஐந்து ஏக்கர் விதிவிலக்கு அளிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். துரதிருஷ்டவசமாக பொறுக்குக் கமிட்டிக்குப் போய் அங்கே மேலும் 7½ ஏக்கர் வரை விதிவிலக்கு என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கத்தைப் படிப்படியாக சிதறடிக்கக்கூடிய நிலைமையிலே வந்திருக்கிறது. இருபது ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையுள்ளவர்களுக்கு உடன்பட்டு வரி செலுத்துவதற்கு உச்ச எல்லை என்று முதலில் இருந்தது. இது பெரிய பெரிய நில முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் மேற்கொண்டு சலுகைகள் கொடுப்பதாகத்தான் அமைந்திருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதிலே வியாக்கியானம் செய்யப்பட்டிருப்பது 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை உள்ள விவசாயிகள் என்று இருந்தது. இருபது ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துள்ளவர்கள் சாதாரண விவசாயிகள் என்று யாரும் இந்த மாநிலத்தில் சொல்ல முடியாது. எங்களுடைய கட்சியின் சார்பிலே வலியுறுத்துவதெல்லாம் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உடன்பட்டு வரிசெலுத்தக்கூடிய எல்லை இருந்ததே அதற்கு மேல் அதை உயர்த்தக்கூடாது என்பதுதான். ஏழைக் குடியானவர்கள், மத்தியதரக் குடியானவர்கள், வசதியுள்ள குடியானவர்கள் எல்லாம் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரம்பிற்குள்ளேதான் வருகிறார்கள். அதற்குமேல் வரமாட்டார்கள். ஆகவே அதிகமாக உள்ளவர்கள் இந்த மாநிலத்தினுடைய நலனையொட்டி சற்றுக் கூடுதலாக வரி கொடுத்தால் என்ன? தோட்டப் பயிர்கள் அல்லாத இதரப் பயிர்களைப் பொறுத்தவரையில் உடன்பட்டு வரிசெலுத்துவதற்கு எந்தவிதமான எல்லையும் கிடையாது என்று மாற்றப்பட்டிருக்கிறது. 100 ஏக்கர் 300 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு இருந்தால் அவர்களும் உடன்பட்டு வரிசெலுத்துவதற்கு வசதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவந்தோமோ அந்த நோக்கத்தின் அடித்தளத்தை புதிய மாற்றங்கள் தகர்த்து விட்டன. மீண்டும் இந்தச் சட்டத்திலே உடன்பட்டு வரிச் செலுத்துவதற்கான எல்லையை 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் மேல் உள்ளவர்களுக்குக் கொடுப்பது பெரிய முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும்தான் உதவிசெய்யுமே தவிர, சாதாரண விவசாயிகளுக்கோ அல்லது ஜனநாயகத்திற்கோ அல்ல என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு மூலச் சட்டத்தில் இருக்கக் நண்பகல் 12-00
கூடிய நிர்ணயிப்பை வைத்துக் கொள்ளலாம் என்று செலக்ட் கமிட்டியில் முடிவு செய்திருக்கிறார்கள். திருத்த மசோதா கொண்டு வந்ததன் நோக்கமே ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையறை

[திரு. என். சங்கரய்யா] [1968 பிப்ரவரி 19

யில் சில குறைபாடுகள் இருந்த காரணத்தால் புதிய வரையறை இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்ட நேரத்தில் கொண்டு வரப்பட்டது. மூலச் சட்டத்தில் 'பாக்கு' என்று சொன்னால் மூன்றில் ஒரு பகுதி ஏக்கர் பாக்குத் தோட்டம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்பட்டது. திருத்தச் சட்டத்தில் 1/5 ஏக்கர், ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்தோம். இவையெல்லாம் ஏராளமான வருமானம் கிடைக்கக்கூடியவை. திராட்சைக் கொடிகளைப் பயிர் செய்கிறவர்களுக்கு 20 சென்ட் நிலம் இருந்தால் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கருதப்பட வேண்டுமென்று கொண்டு வந்தோம். மிளகாய், கரும்பு, பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றுக்கு ஒரு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கருதப்பட வேண்டுமென்று முதலில் திருத்த மசோதாவில் கொண்டு வந்தோம். நிலத்தின் அடிப்படையில் பார்க்காமல் வருமானத்தின் அடிப்படையில் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்தோம். ஆனால் இப்போது பணப் பயிர் செய்கின்றவர்களுக்குச் சாதகமாக, முதலாளிகளின் அதிகமான நிர்ப்பந்தத்தின் காரணமாக மூலச் சட்டத்திற்கே போயிருக்கிறார்கள். திருத்தச் சட்டத்தின் அடிப்படை தகர்ந்துவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் மதியழகன் அவர்கள் பேசும்போது பரிட்சார்த்தமாக இதை ஓராண்டு காலத்திற்குப் பார்த்துவிட்டு பிறகு அதன் விளைவுகளுக்கேற்ப என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி மீண்டும் புனராலோசனை செய்யலாம் என்று கூறியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் கருத்து 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் உடன்பாடு வரி செலுத்தக்கூடிய உரிமை இருக்கக் கூடாது. வருமானத்தின் அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும். இப்போது முடியாவிட்டாலும் ஓராண்டு கழித்தாவது முதலில் கொண்டு வந்த திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, வேளாண்மை வருமான வரி திருத்த மசோதாவின் மீது ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். வருமான வரியை முன்பு இருந்ததை விட இரண்டரை மடங்கு உயர்த்தியதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும் கூட, விவசாயிகளுக்கு வருமான வரியை உயர்த்துகிற இந்த நேரத்திலே, இந்த அரசு விவசாயிகளைப் பொறுத்த வரையிலே புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்குக் கொடுத்தது போல், நஞ்சை நிலங்களுக்கும் அடிப்படை வரியை ரத்து செய்து கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு சலுகையைக் கொடுக்க முடியும். இந்தக் கோரிக்கையைப் பரிவோடு கவனிக்க வேண்டும். நஞ்சை நிலங்களுக்கும் அடிப்படை வரிகளை ரத்து செய்து விட்டு வருமான வரியை இரண்டரை மடங்காக உயர்த்தினால் அது நியாயமானதாக இருக்கும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.



1968 பிப்ரவரி 19]

* **திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவிலே ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்குக் கொடுக்கப்பட்ட நிர்ணயிப்பில் சில மாற்றங்கள் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறேன். இது முன்னாலே இருந்த நிர்ணயிப்பை அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருக்கிறது. ஒன்றரை ரூபாய்க்குக் குறைவாகத் தீர்வை செலுத்தக்கூடிய நிலங்களுக்கு நான்கு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்குப் பதிலாக எட்டு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும், ஒன்றரை ரூபாய்க்கு அதிகமாகத் தீர்வை செலுத்தக்கூடிய நிலங்களுக்கு மூன்று ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்குப் பதிலாக ஆறு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி விதிப்பைப் பொறுத்தவரை 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயி முன்பு ரூ. 34.75 வரி செலுத்த வேண்டுமென்றால் இனி ரூ. 140.65 வரி செலுத்த வேண்டும். முந்திய வரியை விட நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில் பெரிய அளவு நிலம் வைத்திருப்பவர்களைப் பாதிக்கக்கூடிய வகையில் வரியைக் கூட்டுவதை ஆதரிக்கிறேன். ஆனால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொண்டு நேரடியாக நிலத்தில் பாடுபடக் கூடிய சாதாரண விவசாயி அதிகமான அளவு வரி செலுத்தக் கூடிய நிலை ஏற்பட்டால் உற்சாகமாக வேலை செய்ய முடியாது. ஆகவே, 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உள்ளாக இருப்பவர்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும். முதல் 12½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு விதிக்கப்பட்ட வரியை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 5 ரூபாயாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்டாண்டர்டு ஏக்கர் விகிதங்களைப் பொறுத்தவரை 1½ ரூபாய்க்குக் கீழ் தீர்வை செலுத்தக்கூடிய புஞ்சை நிலங்களில் எந்த விதமான வருமானமும் இல்லாதிருப்பதால் 4 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருப்பதை 8 ஏக்கர் என்றும், 1½ ரூபாய்க்கு மேல் இருப்பதற்கு 3 ஏக்கர் என்று இருப்பதை ஆறு ஏக்கர் என்றும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, அக்ரிகல்சர் இன்கம்டாக்ஸ் மசோதாவில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் நெற்பயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை இப்போது இல்லையே என்று சொன்னார்கள். முந்திய சட்டத்திலே நஞ்சைக்கு என்ன சலுகை கொடுக்கப்பட்டதோ அதுதான் இப்போதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு நன்மை என்னவென்றால் புஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி செய்தால் புஞ்சைத் தீர்வை ரேட்டு அடிப்படையில் தான் கணக்குப் பண்ணுகிறார்கள். புஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி செய்யும்போது 'இரிகேடெட் பை வெல்' என்பதால் நெல்லாக ஒப்புக் கொள்ளக் கூடாது என்ற அடிப்படையில் அதிகமான

சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பகுதியைப் போன்ற இடங்களில் கிணற்றை வைத்து புஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி செய்கிறார்கள். நான்கு ஏக்கரில் சாகுபடி செய்தால் ஒரு ஏக்கராகத்தான் கணக்கிடுகிறார்கள். ஆகவே, உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த மசோதாவைக் கொண்டு வந்தார்களோ என்று எண்ணும் விதத்தில் நெல்சாகுபடி செய்கின்றவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பணப் பயிர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் தப்பித்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். ஊன்றி கவனித்தால் பணப் பயிர்களுக்கு அடுத்த நிலையில் வரி இருக்கிறது. நெல்லுக்கு ஒரு வரிதான். மற்றவற்றுக்கு இரண்டு வரிகள் இருக்கின்றன. பயிர் அடிப்படையில் வரி இருப்பதைப் பற்றி விவசாய மக்கள் எதிர்த்தார்கள். பூமியில் நேரடியாக வேலை செய்யக்கூடிய மக்கள் அடிக்கடி வந்து, பயிர் அடிப்படை வரியை எதிர்த்து முறையிட்டார்கள். அவர்கள் நான்கு வரிகள் இப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். தன் தீர்வை, செஸ், பஞ்சாயத்தில் பஞ்சாயத்து அபிவிருத்தி வரி, பஞ்சாயத்து யூனியனுக்கு லோகல் செஸ் வரி என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நான்கு வரிகள். டெல்டா ஏரியாவில் இருப்பவர்களை விட 'நான்-டெல்டா' ஏரியாவில் இருப்பவர்களுக்கு ரொம்பக் கஷ்டம். கிணற்றை வைத்து விவசாயம் செய்கின்ற நாங்கள் கூட இந்த வரிகளைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே, முந்திய சட்டத்திலே என்ன சலுகை கொடுக்கப்பட்டிருந்ததோ அதே சலுகை இதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. புன்செய்ப் பயிர் செய்யும் ஆள்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும். அதன் மூலம் உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்காக அச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆக, இதை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக பொறுக்குக் கமிட்டியில் இருப்பவர்கள் திரும்பப் பேசக் கூடாது. இருந்தாலும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். முதன் முதலாகக் கொண்டு வந்த இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முதலில் உள்ளபடி நிறைவேற்றியிருந்தால் பல கஷ்டங்கள் இருக்கலாம். எங்கள் கட்சியின் கொள்கை, எங்கள் திட்டம், நிலத்திற்கு வரி இருக்கக் கூடாது, நில வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற நிலைதான். இருந்தாலும் விவசாய வருமான வரி என்பது எங்கள் கட்சி இருந்தபோதே வந்து அதில் சில தொந்தரவுகள் இருக்கும் என்ற முறையில் உச்சவரம்பு வந்தவுடன் நீக்கி விடுவதாகச் சொன்னார்கள். இம்மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, பொறுக்கு கமிட்டி பல இடங்களுக்குச் சென்றபோது, இப்போதுள்ள வரியை எல்லோரும் பூரணமாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதல்ல. சில கஷ்டங்கள்



இருக்கின்றன, சில நல்லவை இருக்கின்றன. கணக்குகளை ஒப்படைத்துத் தீர்மானம் செய்வது கஷ்டமாக இருக்கும். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, பயிர் அடிப்படையில் போடுவதால் கிராம அதிகாரிகள் தயவில் இருக்க வேண்டும். ஆகவே, கொஞ்சம் தியாகம் செய்து கொஞ்சம் வரியையாவது கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்ற நிலையில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது இந்தத் திருத்தப்பட்ட சட்டம். போட்டதற்குப் பின்னால் ஒரு சந்தேகம். ஏற்கனவே போட்டதில், 2½ பங்கு கொடுக்கக் கூட ஏற்றுக் கொண்டோம். ஆனால் கணக்குப் போடும்போது, முன்பு ரூ. 100 வருவது, இப்போது 150, 200 ரூபாய் வரும். ஏழரை ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று குறைப்பதால் மூன்று நான்கு பங்கு வரும் நிலை இருக்கிறது. இரண்டரை பங்கு வருவதாக இருந்தால் ஆட்சேபணையில்லை. ஏ., பி., அல்லது ஸி ஏற்கனவே கொடுத்து வரும் வரி 2½ பங்கு வருவதில் ஆட்சேபணையில்லை. முன்பு 40 ஸ்டான்டேர்ட் ஏக்கர் இருந்தால் ரூ. 456 வரும். ஆனால் இதன்படி, திருத்தப்பட்டபடி ரூ. 856 வருகிறது. ஆகவே, சர்க்கார் வரி வசூல் செய்யும் காலத்தில் 21/2 பங்கு வரும் நிலையில் அதற்குத் தக்க வகையில் ஒரு எக்ஸிக்யூட்டிவ் ஆர்டர் போட வேண்டும் என்று சொல்லி திரு. ராமமூர்த்தி அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். விவசாய வருமான வரி பயிர் அடிப்படையில் வைக்கும் நிலை இருந்தால் கிராம அதிகாரிகள் கையில் சிக்கி விவசாயிகளுக்கு அதிகத் தொல்லைகள் இருக்கும் என்ற நிலையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதில் சில பேர்களுக்குச் சலுகையிருந்தாலும் சில பேர்களுக்குக் கஷ்டம் இருந்தாலும், 2½ பங்கு ஒட்டு மொத்தமாக வரும்படிச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நிலத்தின் வரி, அளவு அடிப்படையில் இல்லாமல், பயிர் அடிப்படையில் இருக்கவேண்டுமென்று முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறுக்கிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பயிர் அடிப்படையில் இருப்பது சரியாக நடைபெறுமென்றால் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் கல்வி அறிவு இல்லாத நிலையில், கணக்குகள் வைக்க முடியாத நிலையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதுதான் சிறந்த முறையாக இருக்க முடியும் கொள்கை அளவில். ஆனால் காரிய சாத்தியமான முறையில் அது முடியுமா முடியாதா என்பதுதான் பிரச்னை. இதைவிட அது நன்றாகயிருக்கும், கொள்கை அளவில்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சுருக்கமாகச் சொன்னால் "பயிர் அடிப்படையில் வரி நாங்கள் வந்தால் போடுவோம், உங்களைப் போடவிடமாட்டோம்" என்பது தானா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு எல்லோரும் இந்த மசோதாவின் பொதுப்படையான அம்சங்களை ஆதரித்தும், இன்னும் இதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று சிலரும், இதில் விவசாயப் பெருங்குடி மக்களைப் பாதிக்கக் கூடிய காரியங்கள் நடை பெற்றிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் பொதுவாக இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் நோக்கம் முழுவதுமே வெற்றி பெறவில்லை என்பதை என் முன்னுரையில் சொன்னேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஐந்து எக்கர் வரைதான் இருக்க வேண்டுமென்று வைத்தார்கள். அதே மாதிரி உடன்பட்டு வரி செலுத்துவது 20 ஏக்கர் என்ற நிலையும் மாறி எல்லோருடைய பேராதரவையும் பெற்று இந்த மசோதா வடிவம் எடுத்திருக்கிறது. ஒரு காரியத்தைச் சொல்வது மிகவும் அவசியம். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டரை மடங்கு என்பதை ஒத்துக்கொண்டாலும் வேறு வகை இருக்கிறது என்ற முறையில் சொன்னார்கள். பொதுவாக இப்படிப்பட்ட காரியங்கள் வரும்போது விவசாயிகளுக்குக் கெடுதல் செய்யப் படுகிறது என்பதை ஒரு பிரசாரமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டது மிகவும் பொருத்தமானதுதான். யாருக்கு வரி என்றால் விவசாயிகளுக்கு அல்ல. வருமானமுள்ள விவசாயிகளுக்குத்தான் வரியே தவிர , இது சாதாரண விவசாயிகளுக்குள்ள வரி அல்ல. ஆகவே வருமானமுள்ள விவசாயிகளையும் 1/2 அல்லது 1 ஏக்கர் உள்ள விவசாயிகளையும் சேர்த்துக் குழப்பாமல் முதலில் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதல்ல. வருமானம் இருக்கிறவர்கள், 7½ ஸ்டாண்டர்டு எக்கருக்கு மேல், நல்ல வருமானம் உள்ளவர்கள் ஒரு சிறிய தொகையை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்ற வகையில், நினைத்த வகையில் நினைத்த அளவிற்கு இதில் வெற்றி பெறமுடியா விட்டாலும் எல்லோருடைய ஏகோபித்த கருத்துக்கும் மரியாதை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விரும்பிய காரணத்தால் 7½ ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்றும், உடன்பட்டு வரி செலுத்துபவர்களுக்கு வரம்பற்ற தன்மையிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டரை மடங்கு என்பது அதிகமில்லை. இன்னும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, சாதாரண மாற்றத்தோடு கூடியதுதான் இது. உணவுப் பெருக்கத்தில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறையிருக்கிறது என்பதால் அவையெல்லாம் விடப்பட்டிருக்கின்றன என்று கூறி இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். எந்தக் காரணத்தைக் கொண்டும் முன்பு ஒரு பட்டாதார் செலுத்திய விவசாய வருமான வரிக்கு இரண்டரை மடங்கிற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளப்படுமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதில் ஆபத்தான ஒரு காரியம் இருக்கிறது. சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள அப்படி குறிப்பாகச் சொல்லக் கூடாது. அது இந்த மசோதாவையே புறக்கணித்து விட்டதாகும். திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசியவுடன் அதைத் தொடர்ந்து விளக்கம் சொல்லி விடுகிறேன்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2-வது, 3-வது பிரிவுகள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

4-வது பிரிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது அவை முன் உள்ள தீர்மானம்—

"4-வது பிரிவு மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

'In sub-clause (2), after the proposed sub-section (8), the following shall be added as sub-section (8-A).—

(8-A). Notwithstanding anything said in sub-section (8) a person to whom permission has been granted under this section to compound the agricultural income tax payable by him and a company under Part II, 65 (1) (a) or a company under Part III, 65 (1) (*b*) which submits to this Act, shall at no stage pay more than $2\frac{1}{2}$ times the aggregate Agricultural Income Tax paid by the above for the same extent of lands paid by him or them under the Madras Act V of 1955 ".'

**திரு. கே. விநாயகம்:** நான் இதை வழிமொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மீது பேசுவதற்கு முன்பு என்னுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவினுடைய தமிழ்ப் பிரதி எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மசோதாவின் மீதான திருத்தங்களைத் தமிழில் கொடுக்க இயலாத நிலை இருக்கிறது. நம் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் தமிழில் நடத்திக் கொண்டிருந்தாலும், அஃபிஷியல் லாங்குவேஜஸ் ஆக்டின், 5-வது பிரிவின்படி . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தைத் தமிழில் கொடுத்தார்களா? அல்லது ஆங்கிலத்தில் கொடுத்தார்களா?

**திரு. க. இராமமூர்த்தி** : என்னுடைய திருத்தத்தைத் தமிழில் எழுதிச் சென்று 'பில் செக்ஷ'-னில் கொடுத்தேன். இதைத் தந்தால் உங்கள் கோரிக்கை நிறைவேறாது; திருத்தம் மன்றத்திற்கு வராது; நிராகரிக்கப்படும்' என்று சொன்னார்கள். தமிழ்த் திருத்தத்தைக் கையில் வைத்துக்கொண்டு காலையில் ஆங்கிலத் திருத்தத்தை எழுதிக் கொடுத்தேன். அரசாங்கம் வேண்டுமானால் காலம் கடந்து செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, என்னைப் பொறுத்த வரையில் சரியான காலத்தில் செய்து கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்போது ஆட்சி தமிழில் நடைபெறுகிறது என்று கொள்கை அளவில் ஒப்புக் கொண்டாலும், படிப்படியாக அந்த முயற்சியை மேற்கொள்ளும் வகையில், சட்ட சபைத் துறையில் தமிழில் நடத்தலாம் என்ற அப்படிப்பட்ட உத்தரவு வரவில்லை. அது வரையில் அவர்கள் ஆங்கிலத்தில் தான் எழுதச் சொல்லுவார்கள். அதனால் வந்ததே யொழிய, இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி** : தமிழில் மசோதாவைக் கொடுத்த பிறகு தமிழில் திருத்தத்தைக் கொடுத்தேன். தமிழில் மசோதாவைக் கொடுக்க உரிமை இருக்கும்போது, திருத்தத்தைத் தமிழில் கொடுக்க ஏன் உரிமை இல்லை என்பதுதான் என்னுடைய பாயிண்ட் ஆஃப்ஆர்டர்.

என்னுடைய திருத்தத்தின் பேரில் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் கொள்கை அளவில் எங்கள் கட்சித் தலைவர் சொல்லியது போல, விவசாய வருமான வரியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு, இந்த அமைச்சரவை வந்த பிறகு, கொள்கை அளவில் 2½ மடங்கு உயர்த்த ஒப்புக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினம் இந்த அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டரை மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிற முறை விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கிறது; அதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்குத் தீமை பயப்பதாக யாராவது கூறினால், உண்மையில் அவர்கள் பெரிய நிலச்சுவாந்தார்களுக்குப் பரிந்து பேசுகிறவர்கள் தான்; உண்மையில் சிறு விவசாயிகள் பாதிக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். இந்த முறையில் வரி விதிக்கப்பட்ட பிறகு, கணக்குப் பார்த்தால், அதிகப்படியாக சிறு விவசாயிகள் தான் வரி உயர்வால் பாதிக்கப்படுகிறார்களே தவிர, பெரிய விவசாயிகள் பாதிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்வதோடு, அவர்களுக்கு ஓரளவுக்கு நன்மையாகக் கூட இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த விவசாயியாவது 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்துக்



கொண்டிருந்தால், அவர் செலுத்த வேண்டிய வரி பழைய முறைப்படி ரூ. 33.75. இன்றைக்கு ஒப்புக்கொண்டுள்ள முறையில் 2½ மடங்கு நியாயமாகச் செலுத்த வேண்டிய வரி ரூ. 84.37. ஆனால், இன்றைய தினம் இந்த வரி விதிப்பின் அடிப்படையில் அவர் செலுத்த வேண்டிய வரி ரூ. 140.62. ஆகவே, 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கிற சிறு நிலச்சுவான்தார் ஏற்கனவே அவர் செலுத்தியதைப் போல நான்கு மடங்கு செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இரண்டரை மடங்கு என்று கொள்கை அளவில், சட்ட அளவில் வந்தாலும், உண்மை நிலை என்ன என்றால், சிறு விவசாயி—20 ஏக்கர் வைத்துள்ள சிறு விவசாயி—ஏற்கெனவே செலுத்திய வரியைப் போல நான்கு மடங்கு செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அதைப் போலவே, 30 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயி ஏற்கெனவே கட்டிய வரி ரூ. 108.75. அதை 2½ மடங்கு என்று செய்தால் அவர் செலுத்த வேண்டிய வரி ரூ. 271.87, ஆனால், இன்றைய வரி விதிப்பின் காரணமாக அவர் உண்மையில் செலுத்த வேண்டிய தொகை ரூ. 321.12. இதன் காரணமாக, அவர் ஏற்கெனவே செலுத்தியதைப் போல மூன்று மடங்கு செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இருபது ஏக்கர் விவசாயி 4 மடங்கு செலுத்த வேண்டியிருக்கிறது; அவரை விட 10 ஏக்கர் அதிகமாக வைத்திருக்கிற பெரிய நிலச்சுவாந்தார் அவர் செலுத்துவதை விட மூன்று மடங்கு செலுத்துகிற நிலைக்கு ஆளாக்கப்படுகிறார். நாற்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கிற விவசாயி ஏற்கெனவே செலுத்துவது ரூ. 208.75. இரண்டரை மடங்கு அவர் செலுத்த வேண்டுமானால் வரி ரூ. 521.87. ஆனால் அவர் இப்போது கட்டவேண்டிய வரி ரூ. 578.12. அது 2½ மடங்குக்குச் சற்று கூடுதலாக இருக்கிறது, 2¾ மடங்குச் சற்று குறைவாக இருக்கிறது. அதற்கு அடுத்தாற் போல 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கிற நிலச்சொந்தக்காரர் ஏற்கெனவே செலுத்தி வந்த வரி ரூ. 382.75. இன்றைய வரி விதிப்பின்படி அவர் கட்ட வேண்டியது ரூ. 953.12. ஆனால் அவர் 2½ மடங்கு கட்ட வேண்டிய நிலை ஏற்படுமானால் ரூ. 896.87 தான் கட்ட வேண்டும். அவர் அதிகப்படியாகச் செலுத்துகிற பணம் ரூ. 56.25. ஆகவே யார் அதிகமாக நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் ஏறக்குறைய 2½ மடங்குக்கு கட்டுகிறார்கள். குறைவாக நிலம் வைத்திருக்கிற சிறு விவசாயிகள் 3—4 மடங்கு என்ற அளவுக்குக் கட்ட வேண்டியிருக்கிறது. குறைவாக இருக்கிறவர்களுக்கு அதிகமான வரியும், அதிகமாக இருக்கிறவர்களுக்குக் குறைவான வரியும் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டரை மடங்கு என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறோம், ஒப்புக் கொள்கிறோம். விவசாயிகளைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே செலுத்தியதைப் போல மொத்தத்தில் 2½ மடங்கு செலுத்தும் அளவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். அதை ஒப்புக் கொள்கிறோம் என்று சொல்லி, அந்தக் கருத்தோடு தான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். இது நிச்சயமாக சிறு விவசாயிகளுக்கு நன்மை

பயப்பது. அதோடு மட்டுமல்ல, அரசாங்கம் விவசாயிகளிடம் அக்கறை கொண்டிருப்பதாக விவசாய அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு மிகப பெரிய நன்மையாக இருக்கிற இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி. ப. 12-30 **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்த இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதற்கு அடிப்படையான காரணம், அவர்கள் திருத்தம் கொடுக்கிறார்கள், அதனாலே ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது அல்ல. எல்லாக் கட்சிக்காரர்களாலும் ஒத்துக் கொண்ட ஒரு பெரிய அடிப்படை அம்சத்தையே அவருடைய இந்தத் திருத்தம் மறந்து விடுகிறது. 12½ ஏக்கர் என்று இருந்த வரம்பை நாம் 7½ ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கிறோம். அங்கேயிருந்து இப்பொழுது கணக்கு ஆரம்பிக்கிறது. பழையபடி கணக்கு இருக்கிறது, அந்த மசோதாவையே எடுத்து விடுங்கள், என்று கொடுத்திருப்பார்களானால், அப்பொழுது அதனால் ஏற்படும் விளைவைத்தான் இது கொடுக்கிறது. ஏன் நான் அப்படிச் சொல்கிறேன் என்றால் 12½ ஏக்கருக்கு மேல் கணக்கு ஆரம்பித்தோம். அவர்கள் கணக்கை வைத்துக் கொண்டு 20 ஏக்கருக்கு மேல் 3 மடங்கு 4 மடங்கு ஆகிறது என்று சொன்னார்கள். இந்த மசோதாவின் முக்கியமான அம்சம் 5 ஏக்கருக்கு அதிகமாக ஒரு விதிவிலக்குக் கொடுக்கக் கூடாது என்பதிலே துவங்கி 7½ ஏக்கராவுக்கு வந்தது. ஆகவே 12½ யிலிருந்து 7½ க்குப் போயிருக்கிறது. உதாரணமாக வரி 20 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நம்முடைய ஸ்டாண்டர்ட் ஏக்கரா இன்னும் அதிகமாக ஆகும். எவ்வளவு விவசாயிகள் என்பதையும் நாம் விவாதிக்கும் நேரத்தில் குறிப்பிலே வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது 20 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 12½ ஏக்கரா வரை ஒன்றுமே கொடுக்க வேண்டியதில்லை. மசோதா பாஸ் ஆவதற்கு முன்னுள்ள, பிரஸென்ட் ஆக்ட் படி இன்றுள்ள நிலைமை 2½ எக்கராவரை விவசாய வருமான வரியே கிடையாது. மொத்தம் 20 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 7½ ஏக்கராவுக்கு வரி 33 ரூபாய் 75 பைசாதான் இப்போது கொடுக்கிறார்கள். 20 ஸ்டாண்டர்டு ஏக்கரா வைத்துள்ள விவசாயிகள் மூலம் விவசாய வருமான வரி என்ற பெயரிலே அரசாங்கத்தின் கருவூலத்திற்கு வருவது 33 ரூபாய் 75 பைசா. இதுதான் இப்பொது கொடுக்கப்படுகிறது. அதிகமாக ஆக்கி விட்டார்கள் என்று கூறினால், இந்த 1 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 2 ஏக்கரா, 3 ஏக்கரா வெல்லாம் கூடச் சேர்கிறது. 1 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு 1 ரூபாய் கூட வருமான வரி கிடைப்பதில்லை என்று அவர்கள் சொன்னதற்கு 2½ மடங்கு அதிகம் செய்திருக்



கிறோம் என்று கூறிக் கொள்ளுகிறேன். 2½ மடங்கு அதிகமாகிறது என்றால் 4½ ரூபாயாக இருக்கும் வரியானது 1 ஏக்கருக்கு 11 ரூபாய் 25 பைசாவாக ஆகிறது. அதன்படி 12½ ஏக்கராவுக்குப் போட வேண்டும். அவ்வாறு போடும்பொழுது 1 ஏக்கராவுக்கு 11 ரூபாய் 25 காசு என்ற அளவில் பார்த்தால் 140 ரூபாய் 62 பைசா ஆகிறது. முன்பு எவ்வளவு கொடுத்தார்களோ அதே அளவிற்குக் கணக்குப் பார்த்தால் 20 ஏக்கராவுக்கு 84 ரூபாய் 37 பைசாதான் கொடுப்பார்கள். இதனால் என்ன நிலைமை ஏற்படுமென்றால் 140 ரூபாய்க்கும், 84 ரூபாய்க்கும் இடையேயுள்ள 56 ரூபாயை விட்டு விடுகிற பெரிய விளைவு ஏற்படுகிறது. இதனால் அதிகமாகப் பண்ணி இருக்கிறார்கள் என்பது சரியல்ல.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய இராமமூர்த்தி அவர்கள் இந்த 2½ மடங்கு உயர்த்துவதாலே சிறிய நிலச்சுவான்தாரர்களுக்குக் கஷ்டம் நேரிடுகிறது என்றும், பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு இது ஒரு மறைமுகச் சலுகை கொடுப்பதாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். பெரிய நிலச்சுவான்தாரர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகையை நீக்க அவர்களுக்கு என்னென்ன வரி போடலாம் என்று நண்பர் இராமமூர்த்தி சொல்வார்களானால் தரமாக அந்த யோசனை அமைந்திருக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னைப்பொறுத்தவரையிலும் மற்றவர்களுக்கு என்னென்ன வரிவிதிக்க வேண்டும் என்ற அரசியலிலே செல்ல விரும்பவில்லை. சிறிய விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும், அதற்கான வழிகளுக்கு அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கிறதோ அதிலே ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முன்பிருந்து வந்த சலுகை ரொம்பப் பெரிய சலுகை. திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்த விளைவைச் சொல்லிக்கொள்ளுகிறேன். பழைய கணக்குப்படி 7½-க்கு வரி இருந்தது. 20 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு 140 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு 6 ரூபாய், 7 ரூபாய் கூட ஆகவில்லை. இதுகூட விவசாயத்திற்கு வரி அல்ல. விவசாய வருமானத்தின் மீது வரி என்று சொல்லிக் கொள்கிறேன். 7½ ஏக்கரா என்ற வரம்பையும் எடுத்து விடுகிறது என்பது கனம் உறுப்பினர் அவர்களின் திட்டம். அந்த வகையிலும் விவசாயிகளைப் பார்க்கும்பொழுது பெரிய காரியம் இதிலே நடக்கவில்லை என்று கூறி இந்தத் திருத்தத் தீர்மானத்தை வற்புறுத்தாமல் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** திரு. இராமமூர்த்தி அவர்கள் இதை வற்புறுத்துகிறார்களா, அல்லது திரும்பப்பெறுகிறார்களா ?

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1968 பிப்ரவரி 19

ஆனால் இந்த அரசாங்கம் 1959-வது வருடத்திய இந்த சட்டத்தைத் திருத்தி ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து இப்பொழுது கொண்டு வந்திருக்கிற சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று—அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நோட்டிஃபிகேஷனைப் பிறப்பித்து, பிறகு இதைச் சட்டமாக்குவதற்கும், இந்த சட்டசபையிலே இதைக் கொண்டு வந்துள்ளார்கள்.

இது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் என்று முன்பே கூறினேன். சாதாரணமாக, இதைக் குடிசைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்களையும் இது அதிகமாகப் பாதிக்கும். இதற்கு எதிராக வியாபாரிகள் பல கிளர்ச்சிகள் ஆரம்பித்தார்கள். இதை எதிர்த்து அமைச்சரிடத்திலே கூட மகஜர் கொடுத்திருக்கிறார்கள். வேலூரிலே என்று நினைக்கிறேன்; திருச்சியிலே என்று நினைக்கிறேன், இந்தத் தீர்வை சுமத்துவது நியாயம் அல்ல, சரி அல்ல, தர்மம் அல்ல என்ற முறையிலே அவர்கள் பல கிளர்ச்சிகளையும் கண்டனக் கூட்டங்களையும் நடத்தினார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். இதை நாம் பார்க்கின்றபோது சராசரி வியாபாரத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு மட்டும் அல்லாமல் ஏழைகளையும் அதிகமாகப் பாதிக்கின்ற நிலைமையிலே இருக்கின்ற காரணத்தால், இந்தச் சட்டத்தைத் திருப்பப் பெற்று விட வேண்டுமென்று கூறி, இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று கூறி அமைகிறேன், வணக்கம்.

DR. H. V. HANDE : Sir, I am afraid I would have to take very, very strong exception to the manner in which this Bill has been brought forward in this House. Firstly, the notification was issued and now the whole thing has become an accomplished fact. The whole thing has been made into a Bill and brought before this House. Of course, the Government have got a very strong majority and they can pass it without any fear. Now everything has been done and perhaps after the issue of the notification, the increased rate of sales tax has been collected. What is the urgency for the notification to be issued ? Similarly, when the previous Ministry had brought forward such Bills to replace Ordinances we took strong exception to that. Whenever the House is proroged, we know that the Government are going to bring forward some Ordinance or other. In this connection, I want to point out that a notification has already been issued and now an amending Bill has been brought forward to replace that notification. There is a lacuna in the original Act which allows them to collect the increased rate of tax in the first instance and then ultimately to regularise it by means of an amending Bill. The way in which this Bill has been brought forward hurts our feelings. What are we here for, if we do not express our feelings in the matter ? We are in touch with the people.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் ஹாண்டே அவர்கள் குறிப்பிடுவது எனக்கு வியப்பாக இருக்கிறது. இதைக் கொண்டு வருவதைப் பற்றி நீண்ட நாட்களுக்கு முன்பே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தைப் பற்றி பேரவைத் தலைவர்



1968 பிப்ரவரி 19] [திரு. செ. மாதவன்]

அவர்கள்தான் முடிவுசெய்வார்களே தவிர, அரசாங்கத்திற்கும் நோட்டீஸ் கொடுப்பதற்கும் சம்பந்தம் இல்லை. இது விதிகளுக்கு உட்படுத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். அதைப் பேரவைத் தலைவர் தான் முடிவு செய்கிறார்கள். விதிகளைப் பின்பற்றித் தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

DR. H. V. HANDE : I am afraid that the Hon. Minister for Law has not understood me correctly. I am not saying that enough time has not been given or that the Bill has not been brought forward in a proper way. Also, if the required time was not given, it was against our rules and we would have objected to it. Now, my point is that there is a provision in the original Act which allows the Government to grant exemption from sales tax on certain articles and also to withdraw the exemption granted in respect of certain other articles. I want to know what was the idea behind the Government when the exemption from sales tax for jaggery and gur was given in 1959. There must have been some purpose in giving exemption to those articles. I presume that because jaggery comes under a cottage industry and is mostly consumed by poor people, they had given exemption to it. In the cities it is all right and we can consume sugar which is available. But if you go to the village, you will find that they do not get sugar at all. They do not know what colour sugar is and what sugar is. So they are using jaggery. As a medical man I may tell you that jaggery is healtheir than sugar. All these points might have been taken into consideration and on that basis jaggery might have been exempted. That is point No. 2.

Point No. 3 is that there must have been a number of representations to the Minister for Food and some people came and represented to me also. This representation argues that there is a possibility of jaggery going out of the Madras State and some other State exploiting this position and selling its jaggery cheaper in this State. Three per cent is not a small amount when it is a multipoint tax. My estimate is that it may be yield a revenue of Rs. 1 crore or even more. Whenever a tax is levied, the Revenue from it is under estimated. But in the actual process of collection, the Sales Tax Officers may collect even Rs. 2 crores because of their extraordinary efficiency—I do not know what connotation should be attached to the word ' effciency '. These taxes are resented by the people and they are not happy. If I do not tell this, this House will have no opportunity of knowing it. I do not think anything can be done at this stage judging from the helpless expression on the face of the Minister for Food.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not helpless; I am quite confident. The country welcomes it.

DR. H. V. HANDE : He says that the country welcomes it. The experience that I have had is that many people do not welcome it. Anyway this is a place where we can express our difference of opinion. I want the Government to consider all the points I have raised and do as best as they can.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கும்படியான இந்தத் திருத்த மசோதாவைப் பற்றி வெல்லம், சர்க்கரைக்கு மீண்டும் மல்டிபாயிண்டு சேல்ஸ்டாக்ஸ் விதிக்கும் இந்த மசோதாவைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறிய கருத்துக்களை நானும் ஆதரிக்கிறேன். ஏனென்றால், ஏற்கனவே இது குடிசை தொழில், கிராமப்புறங்களில் இருக்கும்படியான விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய பொருள் என்பதற்காக இதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. ஏற்கனவே அப்படி விதிவிலக்குக் கொடுத்திருந்த நிலையை மாற்றி, திடீரென்று ஒரு நோடிபிகேஷன் போட்டு பலமுனை விற்பனை வரி போட்டால், அது எத்தனை முனையில் போய் நிற்குமோ தெரியாது. 4, 5 இடங்களில், ரூ. 4, 5 என்று ரூ. 100-க்கு 20, 34 பாய் வரியாக கொடுக்கும் படியான நிலைமை ஏற்படும். அதனால் பொதுவாக ஏழை மக்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பெருத்த கஷ்டத்தையும், நஷ்டத்தையும் உண்டாக்கும் என்று நான் அச்சப்படுகிறேன். ரூ. 15,000-க்கு மேலே வியாபாரம் செய்பவர்களுக்குத் தான் வரி போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். விவசாயிகள் தங்களுடைய தோட்டத்தில் கரும்பு அடித்து, வெல்லத்திற்காகக் கொண்டுபோகும்பொழுது கூட, விற்பனைக்குத் தான் கொண்டுபோகிறார்கள் என்று பல இடங்களில் தடுக்கப்பட்டு, வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வியாபாரியா, வியாபாரி இல்லையா என்று இப்படித் தான் தீர்மானம் செய்கிறார்கள்.

அது மட்டுமல்ல. விற்பனை வரி உத்தியோகஸ்தர்கள் பல இடங்களில் தவறான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. விற்பனை வரி முதலில் ஒரு நயா பைசா என்று தொடங்கி, இப்பொழுது ரூ. 40, 45 கோடி அளவுக்கு பெருகியிருக்கிறது. எந்தத் தொழிலுக்கு வரி போட வேண்டும், எந்தத் தொழிலைப் பொதுமக்கள் மிகவும் விரும்புகிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ரூ. 50 லட்சம் வருமானம் வருவதாகச் சொல்லுகிறார்கள். ரூ. 50 லட்சம் அல்ல. எனக்குத் தெரிந்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் மட்டும் ரூ. 35 லட்சம் வரையில் வரி போடுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று அதில் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் தங்களது தூதுக் குழுவின் மூலம் என்னிடம் சொன்னார்கள். புள்ளி விவரக்கணக்கு என்னிடம் இல்லை. இருந்தாலும் கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல, வெள்ளைச் சர்க்கரையை பெரிய பணக்காரர்களும், மற்றும் பெரியவர்களும் உபயோகிப்பார்கள். ஆனால், கருப்பெட்டி, வெல்லம் இவற்றை சாதாரண மக்கள், ஏழை மக்கள் உபயோகப்படுத்துகிறார்கள். அதோடு கூட, வெளிப் பிரதேசத்திலிருந்து, மாகாணங்களிலிருந்து வந்து, தவறான முறையிலே கடத்திச் செல்லுவதற்கும் இது வழி வகை செய்யும். ஏற்கனவே விதிவிலக்கு அளிக்கப்பட்ட இந்தச் சலுகை நிச்சயமாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி,



இதற்காகக் கொண்டுவந்திருக்கும்படியான இந்த மசோதாவை என்னுடைய கட்சியின் சார்பாக மிகவும் வருத்தத்தோடு எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இதை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதவின்மீது பலரும் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் அரசாங்கம் ஏதோ கெடுதலான வரியைப் போட்டுவிட்டது போலவும், ஏழை எளியவர்களுக்கு இதனால் மிகவும் இன்னல்கள் ஏற்பட்டுவிட்டது போலவும் சொன்னார்கள். இதிலே மூன்று வகையாகச் சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கூட இதனால் இடைஞ்சல் வருகிறது என்று நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லும்பொழுது இது குடிசைத் தொழிலாக இருக்கிறது, ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் சொல்லும்பொழுது, வியாபாரிகள் இதனால் பாதிக்கப்படுவார்கள், வியாபாரிகள் இதுபற்றி ரொம்ப அழுத்தமாகச் சொல்லுகிறார்கள். . . .

DR. H. V. HANDE : I was referring to the point that the other States will exploit it. I have not come here to hold brief for any capitalist and I can say this categorically.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று எனக்கு ரொம்பத் தெளிவாகத் தெரியும். வியாபாரிகள் ரொம்ப அழுத்தமான கருத்துக்களைச் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். முதலிலே நான் சொல்லிக்கொள்கிறேன். இது ஒரு சாதாரணமான விஷயம்தான். அதிலும் சில சட்ட சம்பந்தமான மரபுகள் கடைப் பிடிக்கவில்லையே என்று அவர்கள் கேட்டார்கள். இந்த மாதிரி வரிவிதிப்பு முறைகளை நோடிபிகேஷன் மூலமாக மாற்றும் பொழுது, எல்லோருக்கும் அதைப்பற்றி முன்னதாக விளம்பரப் படுத்தினால், ஸ்பெகுலேஷன், வர்த்தகச் சூதாட்டங்கள் ஏற்படுவதற்கும், வேறு மாதிரியான காரியங்கள் ஏற்படுவதற்கும் பெரிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இந்த மாமன்றத்தினுடைய உரிமைகள், சம்பிரதாயங்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதில் இந்த அரசாங்கத்திற்கு மிகுந்த அக்கறை உண்டு. ஸ்பெகுலேஷனைத் தவிர்ப்பதற்குத்தான் இம்மாதிரியாக நோடிபிகேஷன் மூலமாக வரிகள் போடுவதை ரகசியமாக வைத்துக் கொள்ள நேருகிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொடர்ந்து அப்படிப்பட்ட வர்த்தக சூதாட்டங்கள், அப்படிப் பட்ட காரியங்கள் சமீப காலத்தில் நடைபெறுவதைக் தடுக்க வேண்டியது நம்முடைய கடமை. இந்தத் தொழில் குடிசைத்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 பிப்ரவரி 19

தொழில், ஏழைகளுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்ற நிலை உண்மையிலேயே இருந்தால், அதை நாம் வரவேற்றிருக்கலாம். ஏழைகளுக்கு சர்க்கரை கிடைக்கவேண்டும், விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. தங்கள் மனதில் எல்லோரும் கையை வைத்துப் பார்த்தால் இந்த மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் மூடப்படுகிற அளவுக்கு நிலைமைகள் மாறி, சர்க்கரை வெல்லக் கட்டியாக மாறி, நம்முடைய எல்லைகளைத் தாண்டி வெளியே பல மாநிலங்களுக்குப் போகும்படியான ஒரு பேராபத்து இன்றைக்குக்கூட இருந்துகொண்டு வருகிறது. அதைப் போக்குவதற்காகத்தான் தகுந்த முயற்சி எடுத்துக் கொண்டோம். இதை நம் மாநில மக்கள் மிகத் தெளிவாக உணர் வார்கள். விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது வெல்லமாக இருந்தால், என்ன செய்வார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இந்த மாநிலத்தில் சர்க்கரை பற்றுக்குறை ஏற்படும்படியான அளவுக்கு, கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்யப்பட் டிருக்கிற சர்க்கரை ஆலைகள், தனியார் சர்க்கரை ஆலையாக இருந் தாலும் சரி, கூட்டுறவு சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி பொது மக்கள் வரிப்பணம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிற சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டால் பொதுமக்களுக்கு அதனால் பெரிய பாதகம் ஏற்படும். வெல்லத் தொழிலில் சமீப காலமாக ஏற்பட்டுவிட்ட அந்தக் காரியங்களைத் தவிர்ப்பதற்குத்தான் இந்த மாநில அரசு வெல்லம் வெளியே போவதைத் தடுக்கவேண்டும், அதற்கு மத்திய அரசாங்கத்தின் உடன்பாடு வேண்டும் என்று இந்த மாநிலம் கேட்டு 8 மாத காலமாகியும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல மாநாடுகளில் முறையிட்டதற்குப் பிறகும்கூட, உடன்பாடு தராத நிலையில் இந்த மாநிலத்திற்கு வெகு வேகமாக விஷம் போல் விலை ஏறிக்கொண்டிருந்தது. இந்த மாநிலம் தன்னுடைய சக்திக்கு உட்பட்டு மத்திய அரசு அதற்கு உடன்பாடு தரும் என்ற நம்பிக்கையில் ஒரு தடை உத்தரவு போட்டது. அந்தத் தடை உத்தரவு இப்பொழுது வழக்கு மன்றத்திலே இருப்பது இந்த மாமன்றத்திற்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே இந்த இன்னல்களைக் குறைக்கவேண்டும், ஏழைகளுக்கு நல்ல காரியங் களைச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலின் மூலம் இந்த மாநிலத்தின் வளப்பத்தை யாருக்கோ எங்கேயோ

பிற் பகல் 1-00 அடமானம் வைக்கும்படியான பெரிய காயங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதனுடைய தொடர்ச்சியான விளைவுகளை, அம்சங்களை தடுப்பதற்காகத்தான் மிகச் சாதாரண முறையில், காரியம் நடைபெற்றிருக்கிறது.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். முதலிலே விளக்கம் பெறுவதற்கு முன் நான் கூட அப்படித்தான் நினைத்துக் கொண்டு இருந்தேன், பல முனை வரி என்றால் 4, 5 பங்கு அதிகமாக வரும், ஒரு முனை வரியென்றால் அப்படி வராது என்று. ஒரு முனை வரியென்றால் குறைவாகக்



1968 பிப்ரவரி 19] [திரு. கே. ஏ. மதியழகன்]

கிடைக்கும், பலமுனைவரியென்றால் அதிகமாகக் கிடைக்கும் என்றும் நினைத்தேன். அது அப்படியில்லை. பல முனை வரியாக இருப்பதில் சில பொருள்களுக்கு அனுகூலமாக இருக்கிறது. பெட்ரோல் பங்க், பியட் கார், அம்பாசிடார் கார் போன்றவைகள் பல கைகள் மாறும் போது, பல முனை வரியில் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். ரூ. 300, 400 என்கிற இடத்தில் ரூ. 125 தான் கொடுக்கிறார்கள். அது பல கட்டங்களிலே பிரிந்து வருகிறது.

விவசாயிகளுக்குச் சிரமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இருக்கலாம். அப்படிப்பட்ட சிரமங்கள் குறித்து, என்னுடைய துறைக்கு விண்ணப்பங்கள் அடிக்கடி வருகின்றன. நடவடிக்கை யும் எடுக்கப்படுகிறது. நடைமுறையில் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவற்றைத் தீர்க்க வழி காணலாம். விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு, சிறிய விவசாயிகளுக்கு வேண்டிய அளவில் நன்மை செய்யப் பட்டிருக்கிறது. ரூ. 15,000 வரை வரி கிடையாது. விவசாயப் பொருள்களில் பணப்பயிர் என்று சொல்வது போல, ரூ. 15,000-க்கு மேல் வருமானம் வருபவர்கள்தான் பண விவசாயிகள் என்று எண்ணப்படுவார்கள். இவர்கள் கரும்பு சாகுபடி செய்து, வெல்லம் உற்பத்திசெய்து சௌகரியமாக இருப்பவர்கள். அவர்களுக்கும் ரூ. 75,000-க்கு மேல் கம்பவுண்டிங் செய்யலாம் என்றிருக்கிறது. இன்றைக்கு வெல்லம் குடிசைத் தொழிலாக மட்டும் இருக்கவில்லை. அதோடு நமக்கு அதிகமாகச் சர்க்கரை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. வெல்லம் உற்பத்தி செய்வதன் மூலம், 100 டன் சர்க்கரை எடுக்கக் கூடிய கரும்பிலிருந்து, கிட்டத்தட்ட 40 சதவிகிதம் கொளுத்தி தீக்கு இரையாகிவிடுகிறது. இன்றைக்கு சர்க்கரைவிலை ஏறிக்கொண்டிருக்கும் நிலையில், அதிகப்படியான சர்க்கரைக்கு அவசியம் இருக்கும்போது, இப்படி 40 சத விகிதம் நாம் தீ வைத்துக் கொளுத்துவது துரோகச் செயலாகும் என்பதை யும் நாம் கவனிக்கவேண்டும். இன்றைக்கு சர்க்கரை இந்தியாவி லேயே மிகக்குறைவாக இருக்கிறது. இன்னும் 10 லட்சம் டன் சர்க்கரை நாம் உற்பத்தி செய்யவேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆகவே, வெல்லம் காய்ச்சுவது படிப்படியாகக் குறையவேண்டும். நல்ல சர்க்கரை அதிகமாக மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் பெரிய காரியத்தில் நம்முடைய அரசாங்கம், மத்திய சர்க்காரின் உதவியைக் கொண்டு முயற்சிகள் செய்கிறது. இன்றைக்கு நம்முடைய மாநிலம் இருக்கும் நிலையில் இந்தக் காரியம் மிகமிக அவசியமானது. ஆகவே, இந்த மசோதா, ஒரு சிறிய அம்சம். மன்றத்தின் எல்லாப் பகுதி உறுப்பினர்களும் இந்தக் கருத்துக்களை ஏற்று, வரி போட்டு விட்டார்கள் என்று எதிர்க் கட்சி பேசும் வியாஜ்யத்திற்கு உகந்தது இதுவல்ல என்று பணிவுடன் கூறி மன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த வரி பழைமையானது. வாங்குகிறவர்கள் தலையில் விழுகிறது என்பதால், இதை 'ரிக்ரெசிவ் டாக்ஸெஷன்' என்பார்களே அம்மாதிரி, 'இன்ஸிடென்ஸ் ஆன் தி பர்சேஸர்' என்பதால் இதைப்புனர் பரிசீலனைசெய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புனர் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம், ஸேல்ஸ் டாக்ஸ், வாங்குபவர்கள்மீது விழும் வரிதான். அவர்கள் தான் கொடுக்கிறார்கள். இதற்கு வியாபாரிகள் என் சிரமப்படுகிறார்கள் ?

DR. H. V. HANDE : Sir, I want only two clarifications from the Hon. Minister. One is with regard to the incidence of the multi-point tax. I want to know whether the tax of 3 per cent is at each point of sale and if so, whether it would be increased to 9 per cent or 12 per cent if an article changes hands by three or four times.

The second clarification is with regard to the bye-product, bagasse, left out after the sugarcane is crushed and which is used for the manufacture of paper. I want to know to what use the pulp left out after the cane is crushed for jaggery is put.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not quite conversant with the latter part of his question and the Hon. Minister for Industries will be able to clarify it.

மூன்று சத விகிதம் என்று நான் முதலிலே சொன்னாலும், உண்மையாக 1-3/4 சதவிகிதம்தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதிலும் ரூ. 15,000 வரை விலக்கும், ரூ. 75,000-க்குமேல் கம்பவுண்டிங்கும் இருக்கிறது. ரூ. 15,000 முதல் ரூ. 75,000 வரை பல ஸ்லாபுகள் இருக்கின்றன. கடைசியாக 1-3/4 சதவிகிதம்தான் வருகிறது. காகிதத்தில்தான் 3 சதவிகிதம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது பிரிவுகளின்மேல் வாக்கெடுப்பு நடக்கவேண்டும்.

**திரு. என். வரதராஜன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, பொதுவாகப் பலமுனை விற்பனைவரி சரியென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

அவைமுன் உள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனைவரி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 1/1968) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவு நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, முகப்புரை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள கேள்வி —

"குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு, இவை மசோதாவின் உரிய பகுதிகளாக ஆக்கப்படவேண்டும்".

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

'In the enacting formula, for the words "Eighteenth Year", substitute the words "Nineteenth Year".'

திருத்தம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு, திருத்தப்பட்ட முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவைத்தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1968-ம் ஆண்டு, பொது விற்பனைவரி (திருத்த) மசோதா, (சட்டப்பேரவை மசோதா எண் 1/1968) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்படவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா (திருத்தப்பட்டபடி) சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 6. ஆளுநரின் பேருரைமீது விவாதம் (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, ஆளுநர் அவர்களின் பேருரைமீது விவாதம் நடைபெறும். இப்பொழுது திருமதி சுவாரஸ் அவர்கள் உரையாற்றலாம்.

*THIRUMATHI A. SUARES : Mr. Deputy Speaker, Sir, I endorse the remarks of His Excellency the Governor when he states that this State has been reaping the benefits of a stable and close-knit Government supported by a sound and efficient administrative machinery. One of the achievements of the new Government mentioned by His Excellency in his Address is the intensification of the procurement scheme which was followed by an increase in food production, thus enabling rice to be sold at lower prices both in ration shops and in the open market.

The language problem has been disturbing the country to a greater or lesser degree in many States. The Government has been able to control the situation so far by closing all schools and

colleges and the student population has been kept out of any language agitation. Though the Language Amendment Bill has been passed, the problem has not been solved. Protagonists of Hindi say that English is a foreign language. It is not English alone that is foreign. There are many administrative systems and practices that may be considered foreign. Our Parliamentary system, our jurisprudence, our judicial structure, the structure of our army, our weapons and even our Constitution are all foreign in the sense that they are based on principles that are drawn from models followed in the Western democracies. The Supreme Court has held that English is as much an Indian language as any other language, because it is the mother-tongue of a minority community that is recognised in the Constitution. English is the dominant Indian language because it is the language of the Constitution, of the Supreme Court and the High Courts and of legislation. With the adoption of English as the regional language of Nagaland, English has become a regional Indian language. Further, in the amended Language Bill it is stated that English will continue to be used along with Hindi as the official language of the Union as it was used in the past.

The State Government has decided to give up the three-language formula and adopt the two-language formula. The three-language formula has been in existence in the Madras State for the last twenty years. At first Hindi was taught for a period of three years in the middle section of the high school Finding that no progress was made partly because the marks in this subject were not counted for promotion, it was shifted to the three top standards in the high school, namely the ninth, tenth and eleventh standards. Here again, though Hindi was taken as a subject for the public examination, it was not counted for admission into the Pre-University Class. The marks were counted only for moderation and it happened that often only single digit marks were secured by the candidates in the third language.

With effect from February, Tamil is the first language and English is the second language and the third language has been dropped. As days go by, individual difficult cases may come up. I request the Government to consider these cases on the merits of each case. An announcement by the Government in this respect will ease the minds of many troubled parents. There are English medium S.S.L.C. schools and parallel classes in English. These will require an interim period to get in line with the two language formula. There will be Central Government servants and others who will be transferred to the Madras State. Their children will not be able to pick up our first language in the middle of the high school course. I request the Government to make provision for such cases as they arise.

Anglo-Indian schools come under a separate category. English is the mother-tongue of Anglo-Indians. Tamil or Hindi as the second language was started from standard one. At present there





are pupils in all the various standards who had taken up Hindi as the second language in standard one. Special permission will be required for students who have already reached the middle of the course or even higher still very near the high school classes to continue this language till they finish the high school course. Heads of Anglo-Indian Schools are anxiously waiting for orders to continue Hindi particularly in the higher classes. At present Hindi is not being taught in any class in the Anglo-Indian schools. This year Hindi has been abolished in Standards 1 and 2 and I understand that progressively Hindi will be abolished in one or two classes each year till Standard XI is reached.

The resolution on the language policy passed by Parliament recently has caused great anxiety to people in non-Hindi regions If selection of candidates for recruitment to the Union Services is done in terms of his resolution, great troubles will arise. If all the languages in the eighth schedule to the Constitution are permitted to be the alternative medium for the U.P.S.C. examinations, a comparative study of the attainments of candidates will not be possible. If such a policy is followed, the sufferers will be the candidates from the non-Hindi regions. Our Government is taking action to prevent such a calamity.

It has been resolved by a resolution passed by this Assembly that within a period of five years, Tamil will be the medium of instruction in all colleges in the State. When implementing this resolution, the case of minority linguistic communities must be considered. Some colleges teaching through the medium of English will be required for such minorities.

It would be impossible for such students to study in the colleges through the medium of Tamil. Without certain colleges for imparting English and for catering to the needs of minorities and other groups, higher education in technical institutions will be impossible. There are people who might wish to go abroad. For instance, lawyers, engineers, scientists, businessmen, etc., may want to leave the State or even the country to acquire under knowledge and experience abroad. For such people a few colleges may be retained. Sir, I request the Government to consider some of these points while implementing the resolution passed by the Assembly recently. Thank you.

*(திரு. ந. தருமலிங்கம் தலைமை.)*

* திரு. ரா. ராமச்சந்திர துரை: அவைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய ஆளுநர் அவர்கள் உரைமீது ஒரு சில கருத்துக் களைக்கூற எனக்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே சென்ற ஆண்டிலே நடை பெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றியும், இந்த ஆண்டிலே நடைபெறப் போகின்றவைகளைப்பற்றியுமே காண முடிந்தது. சென்ற ஆண்டிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்னவென்று காணும்

போது, படி அரிசித் திட்டம் அளந்த பெருமையைப்பற்றியும், உலகத் தமிழர் மாநாடு நடத்திய பெருமையைப்பற்றியும்தான் அதிகமாகக் காண முடிகிறது. ஆளுநர் உரையில் உள்ள விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்ற ஒரு குறிப்பை உள்ளபடியே நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற நேரத்தில், விலைவாசி ஏற்றமாக இருக்கின்ற நேரத்தில், வேலைவாய்ப்புக்கான தொழில் திட்டங்கள் எதையும் ஆளுநர் உரையிலே காண முடியவில்லை. சென்ற பத்து தினங்களாக ஆளுநர் உரையின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. படி அரிசித் திட்டத்தைப்பற்றிய பிரச்சினை, மொழிப் பிரச்சினை, மொழிப் பிரச்சினையால் ஏற்பட்ட கிளர்ச்சிகள், அந்தக் கிளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பொருட் சேதங்கள், அந்த பொருட்சேதத்தின் காரணமாக மத்திய அரசு தலையீடு போன்ற பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் காரசாரமான விவாதங்கள், கிண்டலான விவாதங்கள், நேர்மையான விவாதங்கள் எல்லாம் இங்கு நடைபெற்றன.

முதலாவதாக, படி அரிசித் திட்டத்தைப்பற்றிப் பேசும்போது, நமது மதிப்பிற்குரிய நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் மிகவும் கிண்டலாகவும், ஆத்திரமாகவும் பேசினார்கள். நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் நேற்று பேசிய நேரத்தில், 'காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய ஒத்துழைப்பைக் கொடுத்து, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்தால் நாடு பூராவுக்கும் படி அரிசித் திட்டம் நிறைவேற்றப்படும்' என்று சொன்னார்கள். மத்திய அரசு 20 கோடி ரூபாய் மானியம் கொடுத்தால் படி அரிசி எல்லோருக்கும் கொடுப்போம் என்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், ஆட்சியாளருக்கும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் நீங்கள் பேசிய நேரத்திலே, விளம்பரங்களில் நீங்கள் எழுதிய நேரத்திலே, மத்திய அரசு மானியம் கொடுத்தால் படி அரிசி போடுவோம் என்று சொன்னீர்கள்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நேற்றைய தினம் பொதுப் பணித்துறை அமைச்சர், 'மத்திய அரசாங்கம் 20 கோடி ரூபாய் மானியம் கொடுத்தால் உற்பத்தியைப் பெருக்குவோம்' என்ற அளவில்தான் சொன்னார்களேயொழிய, மானியம் கொடுத்தால் படி அரிசி எல்லோருக்கும் தருவோம் என்று சொன்னது கிடையாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** நேற்றய தினம் அவர்கள் பேசிய குறிப்பை எடுத்துப் பார்த்தால் ஓரளவுக்கு அப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன். அதே நேரத்தில் நீங்கள் 1972 தேர்தல் நேரத்தில், தேர்தலில் வெற்றியடைந்தால் அரிசியைச் சும்மாவே கொடுப்போம் என்பீர்கள். மற்றும் வேறு சில கட்சிகள் அரிசி போடுவதுடன் 1 ரூபாயும் சேர்த்து கொடுப்போம் என்பார்கள். இம்மாதிரியான வாக்குறுதிகளுக்கெல்லாம் மத்திய அரசாங்கம்





தலையிட்டு மானியம் கொடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், 'படி அரிசித் திட்டத்திற்காக காங்கிரஸ்காரர்கள் இந்தப் பானையை விளம்பரமாகக் கட்டிய நேரத்தில் இந்தப் பானைகள் எல்லாம் காங்கிரசின் கருமாதிக் கலயமாக அமையப் போகிறது' என்று கூறினர். நான் அவருக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1972 தேர்தலில் படி அரிசித் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுவரும் போக்கினால், இந்தப் பானைகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்ளிச் சட்டிகளாகத்தான் அமையப் போகின்றன என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மொழிப் பிரச்சனை. மொழிப் பிரச்சனையில் காங்கிரஸ்காரர்களின் திட்டவட்டமான கொள்கை என்ன என்று கேட்டார்கள். சென்ற மாதம் 23-ம் தேதியன்று நிறைவேற்றிய மொழித் தீர்மானம் சரியானதுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீண்ட நாட்களாக மொழிப் பிரச்சினையால் பல தகராறுகள் இந்த நாட்டிலே இருந்துவருகிற நோக்கில் திடீரென்று ஒரு நாள் 23-ம் தேதி என்று குறிப்பிட்டு, தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது சரிதானா? மற்றக் கட்சிக்காரர்களைக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வராமல் அவர்களே ஒரு முடிவு எடுத்தது சரிதானா என்று கேட்டுக்கொள்கிறேன். 1967 ஏப்ரல் மாதத்தில் நடந்த கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே நமது மாநில கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த மெமோரண்டத்தின் சில வரிகளை, நினைவுபடுத்த விரும்புகிறேன். இவர்கள் அந்த மெமோரண்டத்தை அனுப்பிய பிறகுதான் காங்கிரஸ் தலைவர்களும், முக்யஸ்தர்களும் நேரு அவர்களது உறுதி மொழி காப்பாற்றப்பட வேண்டும் என வற்புறுத்திக்கொண்டிருக்கின்ற நோக்கில் மத்திய அரசு, நேரு அவர்களின் உறுதிமொழியை வலியுறுத்தவேண்டாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இம்மாதிரியான ஒரு மெமோரண்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அவர்களும் ஓரளவுக்கு இந்திக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்றுதான் மத்திய அரசு மொழிச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பார்கள் என்று கருத வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அந்த மெமோரண்டத்தின் பொருள் என்ன என்று கேட்டுக்கொள்கிறேன்.

'It is obviously impossible to develop too many link languages. i.e.. languages which will be spoken or understood by all the States in India. At present. English is the only language which satisfies the definition of link language. It is quite possible that in the fullness of time. perhaps after a century or two. Hindi may take the place of English as a link language. " On practice Hindi is already largely in use as a link language for the country ". It is not possible to visualize any other language in India becoming a link language. It is therefore necessary firstly, to retaken

English as a link language of all India language, without exercising any compulsion on non-Hindi States in a manner which will not put the Dravidian groups in a disadvantageous position'.

இம்மாதிரியான மெமோரண்டத்தை அவர்கள் கொடுத்ததன் காரணமாகத்தான் இந்தியை மத்திய அரசு கொண்டு வந்திருக்கக் கூடும் என்று கருத இடம் இருக்கிறது.

நாட்டிலே சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை யென்ப
பி.ப. 1-30 தற்கு எடுத்துக்காட்டாக ஒரு சில நிகழ்ச்சிகளை உங்களுக்குக் கூறுகிறேன். குடியேற்றத்திலே நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தில், காங்கிரஸ்காரர்கள் கலயங்களைக் காட்டினர்கள் என்பதற்காக 42 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டியைக் காங்கிரஸ்காரர்கள் காட்டினர்கள் என்ற காரணத்திற்காக 42 பேர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். போலீசார் கண்களுக்கு இந்தக் காங்கிரஸ் காரர்கள் கண்ணில்பட்டார்கள். ஆனால் அதே சமயம் மத்திய அரசாங்கத்தின் சொத்துக்கு 19 லட்சம் வரை சேதம் ஏற்படுத்திய போது அவ்வாறு சேதம் ஏற்படுத்தியது யார் என்பதுகூட அவர்கள் கண்ணில்படவில்லை. எப்போதுமே சென்னை மாநில போலீசார் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என்பது பேர். அப்படிப்பட்டவர்கள் இன்றைய தினம் கோழையாகப் போய் விட்டார்களா என்று உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தில் தலையீடு. புதுக்கோட்டையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியில் இருந்த நேரத்தில் ஒரே நாளில் 4 லாரிகள் பிடிபட்டன. அவை நான்கும் தனிப் பட்டவர்களுடையவை. நெல்லை வெளியூருக்குக் கள்ளக்கடத்தல் செய்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டன. கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் தலையிட்டு மூன்று பேர்களுடைய லாரிகளையும், கைப்பற்றிய நெல்லையும் திருப்பிக்கொடுத்து வழக்கும் வாபஸ் வாங்கப்பட்டது. ஆனால் ஒரு லாரிகாரருக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் அபராதம்; 6 மாத சிறை தண்டனை அளிக்கப்பட்டிருக் கிறது.

ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் ஒருவர் பள்ளியில் ஒரு ஆசிரியரைச் சேர்க்க வேண்டும் என்று டி.இ.ஒ.வுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் யூனியன் சேர்மெனுக்கு வந்திருக்கிறது. இதைப்பற்றிய விவரங்களைத் தனியாகக் கேட்டால் ரெக்கார்டு பூர்வமாக நான் கொடுப் பதற்குத் தயார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்த மாவட்டத்தைச் சேர்ந்த செயலாளர்?

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** அதுபற்றிய விவரங்களைத்தான் தனியாகக் கொடுப்பதாகச் சொன்னேன். அந்த மாவட்டச் செயலாளர் அனுப்பிய உத்தரவை இப்போதே கொண்டு வந்திருக் கிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர் உத்தரவாக அனுப்பி யிருக்கிறாரா? வேண்டுகோளாக அனுப்பியிருக்கிறாரா?

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** வேண்டுகோளாகத்தான் அனுப்பி யிருக்கிறார்.

**திரு. கே. விநாயகம்:** அவர் வேண்டுகோளாக அனுப்பினால் அதிகாரி உத்தரவாக எடுத்துக்கொள்கிறார்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** அடுத்து, அமைச்சர்கள் சுற்றுலா வரும்போது தனிப்பட்டவர்கள் வீட்டில் போய்த் தங்குகிறார்கள். நான் கெட்ட எண்ணத்தோடு சொல்லவில்லை. நல்ல எண்ணத் தோடுதான் சொல்கிறேன். சிலர் அமைச்சர்கள் வந்து தங்கப் போகிறார்கள், அவருக்கு விருந்து வைக்கவேண்டும் என்பதாக பண வசூல் கூடச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எங்களுக்குச் சாப்பாடு போட பிச்சை எடுப்பது பற்றி நாங்கள் வருத்தப்படவில்லை. பழைய மந்திரிகளைப்போல மாட மாளிகையில் போய்ச் சாப்பிட நாங்கள் விரும்பவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** மாடமாளிகையில் போய்ச் சாப்பிடுவது பற்றியோ, கழகத் தோழர்களிடம் போய்ச் சாப்பிடு வது பற்றியோ நான் ஒன்றும் சொல்லவில்லை. நேர்மையானவர்கள் வீட்டில் தங்குவதில் ஆட்சேபணை இல்லை. தவறான பாதையில் செல்கிறவர்கள் வீட்டில் போய்த் தங்குகிறபோது அமைச்சர்கள் பெயரை வைத்து அதிகாரிகளிடத்திலும், மற்றவர்களிடத்திலும் தவறான காரியங்களைச் செய்துகொள்கிறார்கள். இதனால் அமைச்சர் களுடைய பெயர்கள்தான் கெட்டுப் போகிறது. ஆகவே இது போன்று செய்ய வேண்டாம். நாட்டிலே ஜனநாயகப் பாதுகாப் காப்புக்கு நல்லதொரு முறையில், நாட்டு மக்கள் சுமுகமாக இருக்கும் அளவில் இந்த அமைச்சரவை பணிசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : What is the significance of celebrating the fundamental Rights Day on the 25th of this month ?

**திரு. கே. விநாயகம்:** தனியாக விளக்கம் கொடுப்பதாகச் சொல்லி விட்டார்கள்.

**திருமதி வி. ப. பழனியம்மாள்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நடக்கின்ற விவாதத்தில் நான் கல்வி பற்றிய துறை சம்பந்தமாக என் கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு பள்ளிக் கூடங்களும்; கல்லூரிகளும் அதிகப்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சி கரமான விஷயம். எல்லாவற்றுக்கும் சிகரமாக வரப்போகிற

கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் தமிழையே போதனமொழியாக ஆக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டதற்கு தமிழக மாணவ சமுதாயமே கடமைப்பட்டிருக்கிறது. இன்னும் கல்வித் துறையில் பற்பலத் திட்டங்களைக் கொண்டுவந்து, கல்வி கற்றவர் களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, தமிழகத்திற்கு கல்வித் துறையில் முதலிடம் தேடித்தரவேண்டிய பொறுப்பு அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஆசிரியர்கள் சார்பாக சில வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறேன். கடந்த 1962-ஆம் ஆண்டில் இருந்து கழகப் பெரும் பள்ளிகள் அரசினர் பள்ளிகளாக மாற்றப்பட்டு—கழகப்பள்ளி ஆசிரியர்கள் அரசினர் பள்ளியாசிரி யர்களாக ஆகிறபோது—அவர்களுடைய சர்வீசை ஒன்றாக இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கழகப் பெரும்பள்ளி ஆசிரியர்களது பதவி உயர்வும், ஊதியமும் கொடுக்கப்படவேண்டும். அடுத்து ஆசிரியர்களது ஓய்வுகால ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டு மென்றும் ஆசிரியர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் தனி மதிப்பு இருக்கவேண்டும். ஆகவே அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், கழகப்பள்ளி தலைமை ஆசிரியர்களை அரசிதழ்பெற்ற அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, ஆசிரியர்களுக்கு வீட்டுப் பிரச்சினை பெரும் பிரச்சினை யாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அநேக மாக எல்லா ஆசிரியர்களையும் உள்ளூர்காரர்களாகவே நியமித்தால் நன்மையாக இருக்கும். வெளியிடத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைப் போடும்போது பெண் ஆசிரியைகளுக்காவது விடுதிகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பெண் ஆசிரியை களுக்கு ஒரு வருட தொடர்ந்த சர்வீஸ் இல்லையென்றால் மெடர்னிடி லீவ் இல்லை என்கிறார்கள். இந்தக் குறையையும் நீக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பள்ளியில் நிரந்தரமாக நியமிக்கப்படாமல், தற்காலிகமாக இருக்கிற ஆசிரியைகள் விஷயத்தில் தான் ஒரு வருட சர்வீஸ் இல்லையென்றால் பிரசவ விடுப்பு இல்லையென்று வேறு விடுப்புகளைக் கொடுக்கும் ஏற்பாடு இருக்கிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியை களுக்கு பிரசவ விடுப்பு என்று இரண்டு மாதங்களே கொடுக்கப் படுகிறது. அதை மூன்று மாதங்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, கோவை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கலைக் கல்லூரி எல்லாம் இருக்கின்றன. அங்கே ஒரு வெடர்னரி காலேஜ் ஏற்படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், கோவையில் ஒரு பல்கலைக்கழகம் அமைத்து— அதை 'அண்ணா' பல்கலைக்கழகம் எனப் பெயரிடும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.





தவிர, உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி இல்லை, லாபரெட்டரி ஒழுங்காக இல்லை, விளையாடும் மைதானம், நூல் நிலையம் சரியான முறையில் அமையவில்லை. இந்தக் குறைகளை நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, தனியார் நடத்துகிற பள்ளி மாணவர்களுக்கு வசதி யாக அந்தப் பள்ளிக்கூடத்திலேயே பேருந்து வண்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கப் பள்ளிகளுக்கும் பேருந்து வண்டிகளை ஏற்பாடு செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, அரசாங்க மானியம் பெற்று இயங்குகின்ற தனியார் பள்ளிகள் பற்றி சில புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் சில தனியார் துறையில் அரசாங்க மானியம் பெற்று நடத்தப்பட்டு வருகிறது. அங்கே மாணவர்களை செலக்ஷன் செய்யும்போது அரசாங்கத்தால் நியமிக் கப்படுகின்ற கமிட்டியினரே தேர்வை நடத்த வேண்டும். தாராபுரம் போன்ற பஞ்சப் பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் அங்குள்ள மாணவர்கள் வெளியூருக்குச் சென்று விடுதியில் தங்கி படிக்க வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். அங்கேயே ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்றால் அங்குள்ளவர்களால் 5 லட்சம் ரூபாய் திரட்டிக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆதலால் அந்தப் பஞ்சப் பிரதேசங்களுக்கு அரசாங்கமே எல்லாப் பணத்தையும் போட்டு கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பு தாராபுரத்தில் மகளிர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது, அதை இப்பொழுது வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு மகளிர் ஆசிரியர் பயிற்சி பள்ளி அங்கே ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவத் துறை, கல்வித் துறை ஆகிய இரு துறைகளிலும் வேலைசெய்வதில் மகளிர் வேலைசெய்வதுதான் பொருத்தமாக இருப்பதால் இந்த இரு துறைகளிலும் மகளிரை அதிகப்படியாக நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக குழந்தைப் பராமரிப்பு நிலையங்களை ஒவ்வொரு நகர்புறத்திற்கும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் தையல், பாட்டு போன்ற அநேக கைத்தொழில்களைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்து வெளியே வரும்பொழுது தேர்ச்சிபெற்று வந்த நற்சான்று அளித் தால்தான் அவர்கள் ஏதேனும் ஒரு தொழிலுக்குப் போவதற்கு முடியும். தொடர்ந்து படிக்க முடியாதவர்களுக்கும் அவர் களுக்கு வேலை கிடைக்க அது உதவியாக இருக்கும். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அவற்றிற்காக வானொலியில் கல்வி ஒலிபரப்பு செய்யப்படுகிறது. அநேக பள்ளிகள் அவற்றை ஒழுங்காகப் பயன்படுத்துவதில்லை. நல்ல நல்ல நிகழ்ச்சிகள் ஒலிபரப்படுகின்றன. சில பள்ளிகள் அவற்றை நல்லமுறையில்

பயன்படுத்துவதில்லை. ஆகவே ஒன்று அவற்றை ரத்து செய்ய வேண்டும், இல்லையென்றால் எல்லாப் பள்ளிகளும் அவற்றைப் பயன்படுத்துமாறு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களுடைய வேலை செய்யும் நேரம் அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்களுடைய பாடத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், கட்டுரை ஏடுகள், மாதாந்திர தேர்வுத் தாள்கள் இவற்றைத் திருத்துவதற்கும் போதிய நேரம் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுடைய வேலை நேரத்தைக் குறைத்து ஆசிரியர்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கேற்ற முறையில் உதவுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்தமைக்காக மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. பாலசுப்பிரமணியன்** : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரைக்கு திரு. ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வந்திருக்கிற நன்றியுரைக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கவர்னர் அவர்களுடைய மொத்த உரையைப் படிக்கும்பொழுது இந்தச் சபையிலே எனக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. சரித்திரத்திலே சொல்வார்களே, பொற்காலம் பொற்காலம் என்று, அந்தக் காலம் வந்துவிட்டதோ எங்கு பார்த்தாலும் வளம் கொழிக்கிறதோ என்று நினைத்தேன். வெளியிலே சென்று பார்த்ததற்குப் பிறகுதான், அது பிரமைதான், கவர்னர் உரையிலே சொல்லியிருப்பதைப்போன்று வெளியிலே பிரத்யட்ச நிலைமை இல்லை என்று தெரிந்தது. . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : கனம் உறுப்பினர் வெளியிலிருந்து உள்ளே வரவில்லையா, உள்ளேயிருந்துதான் வெளியிலே போனாரா?

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : கவர்னர் அவர்கள் உரையைக் கேட்கும்பொழுது நான் என்னையே மறந்துவிட்டேன். அந்த அளவுக்கு உரை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரையில் சொல்லப்பட்டிருக்கின்ற அளவுக்கு வெளியிலே பிரத்யட்ச நிலை இல்லை என்பதை நான் குற்றங்குறை சொல்வதற்காக சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையிலே சில தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, இது ஒரு தவறு. இரண்டாவதாக கவர்னர் அவர்கள் உரை தமிழ்நாட்டிலே உள்ள கடுமையான பஞ்ச நிலைமையைப் பிரதிபலிக்கவில்லை. தவறான பகுதிகள் என்று சொல்லும்பொழுது ஒரு இடத்திலே கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், "கீழ்பவானி திட்டப் பகுதியில் மழை அளவு குறைந்ததால், வேளாண்மைப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளது. இங்கே இரண்டாம் பயிருக்குத் தண்ணீர்விட இயலவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இது கவனக் குறைவு காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம். கீழ்பவானிப் பகுதியில் இரண்டாம் பயிர்





என்ற பேச்சே கிடையாது. மொத்த ஆயக்கட்டை இரண்டு பகுதிகளாகப் பிரித்து முதலிலே ஒரு பகுதிக்கும், அடுத்ததாக மற்றொரு பகுதிக்கும் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது தண்ணீர் கொடுக்கப்படுகிற பகுதிக்கு ஏற்கனவே தண்ணீர் விடப்பட்டு இருக்காது. இந்தப் பிரச்னைகளையெல்லாம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள், அதற்காக எங்கள் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். அபிவிருத்தி வரியை வசூலிப்பதற்கு தண்ணீர் பாய்ந்த பகுதிகளில் மட்டும் வசூலித்துக் கொண்டு மற்றப் பகுதிகளில் நிறுத்தி வைக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையைத் தயாரிக்கும்பொழுது அதிகக் கவனத்தோடு எப்படி எப்படியெல்லாம் வார்த்தைகள் போட வேண்டுமென்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் குற்றச்சாட்டுக்களாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் ஏ.டி.டி. 27 பிரமாதமான விளைச்சல் தந்திருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை, அவர்களுடைய உற்சாகத்தை நான் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, இந்திய நாட்டில் உள்ள அத்தனை விவசாயிகளும் எந்தவிதமான முன்னேற்றக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். விவசாயிகள் போகின்ற அளவுக்கு அரசாங்கமோ அதிகாரிகளோ அல்லது நிர்வாக இயந்திரமோ போகவில்லை. அவர்களுக்காக எத்தனையோ செய்யவேண்டியிருக்கிறது. விவசாயத்திலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லாமல் இருக்கமுடியாது. விவசாயிகள் மத்தியிலே நாம் முன்னேற வேண்டும், முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் இருக்கின்ற காரணத்தால்தான் அந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

என்னுடைய பகுதி பிற்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே 80 அடி 90 அடி என்ற அளவில் ஆழமாகக் கிணறுகள் தோண்டி பம்புசெட்டுகள் வைத்து மின்சாரம் வேண்டுமென்று ஆயிரக்கணக்கான விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சப் பிரதேசத்திலேகூட விவசாயிகள் 10 ஆயிரம் 20 ஆயிரம் ரூபாய் என்று செலவழித்து பம்பு செட்டுகள் போட்டு அரசாங்கத்திற்கு முந்திச் செல்லக்கூடிய விழிப்புணர்ச்சி விவசாயிகளிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றம் விவசாயத்திலே ஏற்பட்டிருக்கிறது.

கவர்னர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல் அல்லாமல் தமிழ்நாட்டில் கடுமையான பஞ்சம் மூன்றில் ஒரு பகுதியில் வர தயாராக இருக்கிறது. குறிப்பாகக் கோவையிலே கீழ்பவானி, அமராவதி பகுதிகளைத் தவிர, மற்றப் பகுதிகளில் எல்லாம் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சில

இடங்களில் குடி தண்ணீர் 10 பைசா 20 பைசா என்ற அளவுக்கு பல்லடம், காங்கேயம், சென்னிமலை, பொங்கலூர் போன்ற இடங்களில் விற்கப்படுகிறது. சேலம் பகுதியிலே, மதுரைப் பகுதியிலே கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையைக் கருத்திலே கொண்டு அரசாங்கம் நிவாரண நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும். அதிகாரிகளைக் கேட்டால் அரசாங்கத்தைக் கேளுங்கள் என்கிறார்கள், அரசாங்கத்தைக் கேட்டால் அதிகாரிகளைக் கேட்கச் சொல்கிறார்கள். அந்த நிலைமையை விட்டுவிட்டு. மூன்றில் ஒரு பங்கில் பஞ்ச நிலைமை எதிர்பார்க்கப்படுகிறது, இப்பொழுது இருந்தே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். சென்ற வருடம் பீகாரிலே பஞ்சம் ஏற்பட்டபொழுது மத்திய சர்க்காரின் ஆட்சேபனைக்குப் பிறகுகூட சில பகுதிகளை அவர்கள் பஞ்சப் பகுதிகளாக அறிவித்துவிட்டு நிவாரண வேலைகளைக் கைக்கொண்டார்கள். அதேபோல நம் தமிழ் நாட்டிலும் எங்கெல்லாம் பஞ்ச நிலைமை இருக்கிறதோ அந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசமாக அறிவித்துவிட்டு நிவாரண வேலைகளைத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் மிகவும் கஷ்டம் ஏற்படும். விவசாயிகள் இப்பொழுது ஆடுமாடுகளை விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. திருப்பூர் பல்லடம் பகுதியிலே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் எல்லாம் தாசில்தார் ஆபீஸ் முன்னால் உண்ணாவிரதம் இருந்ததாக பத்திரிகையில் படித்தேன். முன்னேற்றம், முன்னேற்றம் என்று சொல்கிறோமே தவிர பிரத்யட்ச நிலைமையில் அது ஏற்படவில்லை, கண்ணை மூடிக் கொண்டு முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது, முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது என்பது சரியல்ல.

வேலைவாய்ப்பைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேலை வாய்ப்பு பற்றி கவனர் உரையில் ஒன்றும் காணோம், ஒருவேளை பட்ஜெட்டிலே கூறுவார்களோ என்னவோ தெரியாது. சென்ற வருஷம் இருந்ததை விட படித்தவர்களிடையே இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. எஞ்சினியரிங் டிப்ளோமா கோர்ஸ் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கும் அதே சமயத்தில் ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒரு பக்கம் இவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கிற நிலையில் பாலிடெக்னிக்குகளில் எல்லாம் அதிகப்படியான ஸ்தானங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது சரியான முறைதானா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களை விவசாயத் துறை, வியாபாரத் துறை என்று திருப்பி விடுவது பற்றிக் கொள்கை அளவில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, விலைவாசி உயர்வு பற்றிச் சொன்னார்கள். விலைவாசி உயர்வைத் தடுத்து நிறுத்த இந்த அரசாங்கத்திற்குப் போதிய அதிகாரம் இல்லையென்பதாகச் சொன்னார்கள். அதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அதே சமயத்தில் ஒருசில





வாக்குறுதிகளை, சபையில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதையும் பார்க்கிறோம். இனிமேலாவது அத்தகைய சிறுசிறு வாக்குறுதிகளையாவது நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நான் அதைப் படிக்கிறேன். 1966-ம் ஆண்டுக்கான வரவு-செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது 1967 மார்ச் 25-ம் தேதி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே "இந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது நான் முன்னாள் சொன்னதையே மறுபடியும் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்சல்டேட்டிவ் கமிட்டி அமைக்கும் பணியை இரண்டொரு நாளில் நான் மேற்கொள்ள இருக்கிறேன். அதிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், கட்சியில்லாத சுயேச்சை உறுப்பினர்களாக இருந்தால் விவசாயத்தில் அக்கறை உள்ளவர்கள். இந்த கன்சல்டேடிவ் கமிட்டியில் இடம் பெற வேண்டும். மொத்தத்தில் 20-25 பேர்களுக்குள் இந்த கன்சல்டேட்டிவ் கமிட்டி அமையுமானால் இன்னும் சிறப்பாக இருக்கும். பிரச்சினைகளை ஆராய்ந்து புள்ளி விவரங்களைத் துணைக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்த கன்சல்டேட்டிவ் கமிட்டியை அமைக்கிறேன் என்பதுதான் இந்த விவாதத்திற்கு நான் சொல்லக்கூடிய பதில் என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த வாக்குறுதியைக் கொடுத்து இப்போது பத்து மாதங்கள் ஆகின்றன. இது பெரிய விவகாரம் அல்ல. லட்சக் கணக்காகச் செலவாகக் கூடிய விவகாரம் அல்ல. கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர், திரு. விநாயகம் போன்றவர்களை எல்லாம் போட்டு இந்தக் கமிட்டியை அமைத்திருந்தால் விலைவாசி ஏன் இறங்கவில்லை என்று கேட்டால்கூட கமிட்டியிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம் என்று கூடச் சொல்லிவிடலாம். ஆகவே, சபையிலே சொல்லிவிட்டால் அதை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் சொல்லக்கூடாது. நான் இந்த அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களின் அந்தரங்கத்தினை அறிவேன். இந்த தேசத்தை முன்னேற்ற வேண்டும்; தமிழ் மக்கள் முன்னேற வேண்டும், விவசாயிகள், தொழிலாளர்கள் முன்னேறவேண்டும் என்பதில் எல்லாம் அவர்களுக்கு இருக்கின்ற சிரத்தையை நான் உணர்வேன். இந்தத் துறைகளைப் பொருத்து அனைத்துக் கட்சிகளின் கருத்துக்களையும் ஒருமுகப்படுத்தி கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் பேசும்போது, 'நாங்கள் அந்தப் பகுதியில் தண்ணீர் கேட்கிறோம். தண்ணீர் கேட்பதற்குக் காரணம் நாங்களெல்லாம் இந்திக்கு வால்பிடிப்பவர்கள் என்ற முறையில் மொழிப் பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்ப தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறோம்' என்று சொன்னார்கள். நாங்கள் மாத்திரம் தண்ணீர் வேண்டுமென்று கேட்கவில்லை. அங்கே இருக்கின்ற எல்லா

மக்களும் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சி வித்தியாசம் இல்லாமல் கேட்கிறார்கள்.

மொழிப் பிரச்சினையைப் பொருத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டைப் பொருத்தவரை தமிழ் தான் ஆட்சி மொழி என்றும், இந்தியாவைப் பொருத்தவரை 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்றும், அந்தக் கோரிக்கை நிறைவேறும் வரையில் ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். எங்களுடைய கொள்கை இதிலே என்னவென்றால், அந்தந்த மாநிலங்களில் தாய் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். மத்தியில் இருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம், போக்குவரத்து ஆகியவை தவிர மற்ற அதிகாரங்கள் எல்லாம் மாகாணத்திற்கே வந்து விட வேண்டும். இன்று பலர் இந்தியை ஒப்புக் கொள்கிறார்கள். குஜராத்தியினர் இன்று இந்தி மொழி ஆட்சி மொழியாவதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். பதினைந்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டுமென்று நீங்கள் சொல்லும்போது பேசாத மொழியாகிய சமஸ்கிருதமும் ஆட்சிமொழியாக வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? சமஸ்கிருதம் எந்த மாநிலத்திலும் இல்லை. அதை ஏன் தீர்மானத்திலே சேர்க்க வேண்டும். மத்திய ஆட்சி மொழியைப் பொருத்தவரை இந்த தேசத்தில் உள்ள பல மொழிகள் ஆட்சி மொழியாக இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதற்காகத்தான் நான் கேட்டேன். 15—2—1968 பாராளுமன்றத்தில் பேசிய ச. சோ. கட்சித் தலைவர் திரு. எஸ். எம். ஜோஷி அவர்கள் பேசும்போது ஆங்காங்கு வட்டார மொழியும் மத்தியில் இந்தியும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய கட்சியின் திட்டவட்டமான கொள்கை என்று அறிவித்திருக்கிறார். அதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** அந்தக் கொள்கை மாற்றப்பட்டது. சமீபத்தில் டிசம்பர் மாதம் 30-ம் தேதி நடந்த மாநாட்டில் அந்தக் கொள்கை மாற்றப்பட்டு 'இந்த தேசத்தில் யார் யார் தங்களுடைய தாய் மொழியை ஆட்சி மொழியாக மத்தியிலும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த மொழிகளை அவர்கள் வைத்துக் கொள்ளலாம்' என்று தீர்மானித்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** டிசம்பரிலே தீர்மானம், பிப்ரவரியிலே ஒரு பேச்சு.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** பார்லிமெண்டின் முழு நடவடிக்கையைப் பார்த்தீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தி—வட்டார மொழி ஆக இரு மொழித் திட்டந்தான் எங்களுடைய கொள்கை என்று 15—2—1968 அன்று பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார்.





**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** பத்திரிகைக் குறிப்பை வைத்துப் பேசுகிறீர்களா அல்லது அவருடைய முழுப்பேச்சையும் படித்தீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முழுப் பிரசங்கத்தையும் படித்து விட்டுத்தான் பேசுகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** அப்படி திரு. ஜோஷி அவர்கள் சொல்லியிருந்தால் அது கட்சிக்கு விரோதமானதுதான் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மற்றொரு தலைவர் திரு. மதுலிமாயி அவர்கள் மராட்டியத்தைத் தாய்மொழியாகக் கொண்டவராக இருந்தும் தமிழகத்திற்கு வந்த நேரத்தில் அவருடைய தாய் மொழியிலும் பேசாமல், ஆங்கிலத்திலும் பேசாமல் இந்தியில் பேசினாரே. அதற்கு என்ன காரணம்?

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** தெளிவாகச் சொல்லுகிறேன். ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று பள்ளிக்கூடத்தில் வற்புறுத்துவது வேறு; ஒரு மொழியிலே பேசுவது வேறு. மராட்டிய மொழியிலே அவர் பேசினால் அதற்குச் சரியான மொழி பெயர்ப்பாளர் இல்லாததால் அவர் இந்தியில் பேசினார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆங்கிலம் தெரிந்த அவர் ஆங்கிலத்திலே பேசி இருக்கலாமே.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** இந்த தேசத்திலே ஆங்கிலம் இருக்கும்வரை மற்ற இந்திய மொழிகள் முன்னேற முடியாது என்பது எங்களுடைய கட்சியின் கொள்கை. ஆங்கிலம் இந்த தேசத்தை விட்டு அகற்றப்படவில்லை என்றால் இந்தியோ, தமிழோ, தெலுங்கோ, வங்காளியோ எந்த மொழியும் முன்னேறாது. இன்று ஆங்கிலம் ஆதிக்க இடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்த மன்றத்திலே கூட ராமமூர்த்தி தமிழிலே கொடுத்த திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை,—ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கக்கூடிய காரணத்தால் ஆங்கிலம் அகற்றப்பட்டு விட்டால் தமிழ் உட்பட எல்லா மொழிகளும் முன்னேற முடியும் என்பது எங்கள் கட்சியின் திட்டவட்டமான கொள்கை. சோஷலிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கை தெளிவானது. மாநிலத்தைப்பொறுத்தவரை தாய் மொழி. மத்திய ஆட்சியைப் பொறுத்தவரை யார் யார் தங்கள் தாய் மொழியை வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் அந்த மொழியை வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் சோஷலிஸ்ட் கட்சியின் திட்டவட்டமான கொள்கை. இந்தக் கொள்கை கடந்த டிசம்பர் 29, 30 தேதிகளில் கயா மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்):** இத்துடன் பேரவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படுகின்றன. மீண்டும் பேரவை நாளை காலை 9 மணிக்குக் கூடும். பி. ப. 1-59

**பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**

### 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

**ஏதுமில்லை.**

மக்களும் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சி வித்தியாசம் இல்லாமல் கேட்கிறார்கள்.

மொழிப் பிரச்சினையைப் பொருத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டைப் பொருத்தவரை தமிழ் தான் ஆட்சி மொழி என்றும், இந்தியாவைப் பொருத்தவரை 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்றும், அந்தக் கோரிக்கை நிறைவேறும் வரையில் ஆங்கிலமே தொடர்ந்து நீடித்து வர வேண்டுமென்று கூறுகிறார்கள். எங்களுடைய கொள்கை இதிலே என்ன வென்றால், அந்தந்த மாநிலங்களில் தாய் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். மத்தியில் இருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம், போக்குவரத்து ஆகியவை தவிர மற்ற அதிகாரங்கள் எல்லாம் மாகாணத்திற்கே வந்து விட வேண்டும்.. இன்று பலர் இந்தியை ஒப்புக் கொள்கிறார்கள். குஜராத்தியினர் இன்று இந்தி மொழி ஆட்சி மொழியாவதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டுமென்று நீங்கள் சொல்லும்போது பேசாத மொழியாகிய சமஸ்கிருதமும் ஆட்சிமொழியாக வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? சமஸ்கிருதம் எந்த மாநிலத்திலும் கிடையாது. அதை ஏன் தீர்மானத்திலே சேர்க்க வேண்டும். மத்திய ஆட்சி மொழியைப் பொருத்தவரை இந்த தேசத்தில் உள்ள பல மொழிகள் ஆட்சி மொழியாக இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்காகத்தான் நான் கேட்டேன். 15—2—1968 நாடாளுமன்றத்தில் பேசிய ச. சோ. கட்சித் தலைவர் திரு. எஸ். எம். ஜோஷி அவர்கள் பேசும்போது ஆங்காங்கு வட்டார மொழியும் மத்தியில் இந்தியும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய கட்சியின் திட்டவட்டமான கொள்கை என்று அறிவித்திருக்கிறார். அதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** அந்தக் கொள்கை மாற்றப்பட்டது. சமீபத்தில் டிசம்பர் மாதம் 30-ம் தேதி நடந்த மாநாட்டில் அந்தக் கொள்கை மாற்றப்பட்டு 'இந்த தேசத்தில் யார் யார் தங்களுடைய தாய் மொழியை ஆட்சி மொழியாக மத்தியிலும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த மொழிகளை எல்லாம் வைத்துக் கொள்ளலாம்' என்று தீர்மானித்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** டிசம்பரிலே தீர்மானம். பிப்ரவரியிலே ஒரு பேச்சு.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** பார்லிமெண்டின் முழு நடவடிக்கையைப் பார்த்தீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தி—வட்டார மொழி ஆக இரு மொழித் திட்டந்தான் எங்களுடைய கொள்கை என்று 15—2—1968 அன்று பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார்.





**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** பத்திரிகைக் குறிப்பை வைத்துப் பேசுகிறீர்களா அல்லது அவருடைய முழுப்பேச்சையும் படித்தீர்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முழுப் பிரசங்கத்தையும் படித்து விட்டுத்தான் பேசுகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** அப்படி திரு. ஜோஷி அவர்கள் சொல்லியிருந்தால் அது கட்சிக்கு விரோதமானதுதான் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மற்றொரு தலைவர் திரு. மதுலிமாயி அவர்கள் மராட்டியத்தைத் தாய்மொழியாகக் கொண்டவராக இருந்தும் தமிழகத்திற்கு வந்த நேரத்தில் அவருடைய தாய் மொழியிலும் பேசாமல், ஆங்கிலத்திலும் பேசாமல் இந்தியில் பேசினாரே. அதற்கு என்ன காரணம்?

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தெளிவாகச் சொல்லுகிறேன். ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று பள்ளிக்கூடத்தில் வற்புறுத்துவது வேறு; ஒரு மொழியிலே பேசுவது வேறு. மராட்டிய மொழியிலே அவர் பேசினால் அதற்குச் சரியான மொழி பெயர்ப்பாளர் இல்லாததால் அவர் இந்தியில் பேசினார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆங்கிலம் தெரிந்த அவர் ஆங்கிலத்திலே பேசி இருக்கலாமே.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்த தேசத்திலே ஆங்கிலம் இருக்கும்வரை மற்ற இந்திய மொழிகள் முன்னேற முடியாது என்பது எங்களுடைய கட்சியின் கொள்கை. ஆங்கிலம் இந்த தேசத்தை விட்டு அகற்றப்படவில்லை என்றால் இந்தியோ, தமிழோ, தெலுங்கோ, வங்காளியோ எந்த மொழியும் முன்னேறாது இன்று ஆங்கிலம் ஆதிக்க இடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்த மன்றத்திலே கூட ராமமூர்த்தி தமிழிலே கொடுத்த திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை,—ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கக்கூடிய காரணத்தால் ஆங்கிலம் அகற்றப்பட்டு விட்டால் தமிழ் உட்பட எல்லா மொழிகளும் முன்னேற முடியும் என்பது எங்கள் கட்சியின் திட்டவட்டமான கொள்கை. சோஷலிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கை தெளிவானது. மாநிலத்தைப்பொறுத்தவரை தாய் மொழி. மத்திய ஆட்சியைப் பொறுத்தவரை யார் யார் தங்கள் தாய் மொழியை வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் அந்த மொழியை வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் சோஷலிஸ்ட் கட்சியின் திட்டவட்டமான கொள்கை. இந்தக் கொள்கை கடந்த டிசம்பர் 29, 30 தேதிகளில் கயா மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** இத்துடன் பேரவை நடவடிக்கைகள் ஒற்றி வைக்கப்படுகின்றன. மீண்டும் பேரவை நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி. ப. 1-59

**7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

ஏதுமில்லை.

## தமிழக சட்டப் பேரவை

---

*செவ்வாய்க்கிழமை, 1968 பிப்ரவரி 20*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மான்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

*80 **வினா—திரு. பெ. மலேச்சாமி** : மாண்புமிகு கல்வித்-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணைய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை துவக்க அரசு கருதியுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. மலேச்சாமி** : இனிமேலாவது அதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, இந்த மதுரைப் பல்கலைக்கழக பகுதியிலே 6 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இருந்துகொண்டிருக்கின்றன. மதுரையிலே பெண்கள் பயிற்சிக் கல்லூரி வைக்கவேண்டுமென்று மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. வினாயகம்** : தற்சமயம் நம் நாட்டில் போதிய பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்களா? அல்லது ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவு வேலைவாய்ப்பு கிடைக்காமல் பலர் அந்தத் தொழிலுக்குப் போகாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருக்கும்போது புதிதாக ஒரு கல்லூரியைத் திறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்றுதான் அரசு யோசித்துக்கொண்டு வருகிறது. இருபத்தோரு பயிற்சி பள்ளிகள் இப்போது இருக்கின்றன. இதிலே 1,300 பேர்கள் பயிலுவதற்கான வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கிற பயிற்சி கல்லூரிகளிலே போதுமான அளவுக்கு இடங்கள் இருப்பதனாலே

படித்து வருகின்றவர்கள் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் படித்து வருகின்றவர்களை அதிலிருந்து ஏற்றுக்கொள்ள முடியும் என்ற அளவிலே நிலைமை இருக்கிறது. மேலும் ஆண்கள் பயிற்சிக் கல்லூரிகளைத்தவிர பெண்கள் பயிற்சிக் கல்லூரிகள் இல்லாததால், பெண்கள் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது, முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : ஆறு பயிற்சிக் கல்லூரிகள் மதுரை பல்கலைக்கழகத்தோடு இணைந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். அந்த ஆறு பயிற்சி கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

*81 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவையில் மேலும் ஓர் பி.டி. பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இல்லை.

**திரு. கே. விநாயகம்** : கோயம்பத்தூர் நகரத்திலே இப்போது ஏதாவது பி.டி. கல்லூரி இருக்கிறதா? ஆண்கள் கல்லூரி பெண்கள் கல்லூரி என்று தனித்தனியாக கல்லூரிகள் இருக்கின்றனவா அவைகளிலே எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : கோயமுத்தூர் நகரத்திலே அரசினர் பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. கோயமுத்தூர் பக்கத்திலே பெரியநாயக்கன் பாளையத்தில் ஆண்களுக்கென்று பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கத்தின் சார்பாக பயிற்சிக் கல்லூரி நிறுவப்படவேண்டுமென்று அவசியம் இல்லை என்று அரசு எண்ணுகிறது. அவனாசிலிங்கம் செட்டியார் அவர்களும் பி.எஸ்.ஜி. கல்லூரி கரஸ்பாண்டண்ட் அவர்களும் புதிதாகப் பயிற்சிக் கல்லூரி துவக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்** : துணைத்தலைவர் அவர்களே, சேலத்தில் பி.டி. மகளிர் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



**திரு. சொ. கோவிந்தராசன்** : தலைவர் அவர்களே, பல உயர்தரப் பள்ளிகளிலே மாதமடிக்ஸ் பி.டி. ஆசிரியர்கள் கிடைக்காமல் கஷ்டமாக இருக்கிறது. அதற்காக பிரத்தியேகமாக மாதமடிக்ஸ் பி.டி. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : கணக்கியல் போன்ற துறையிலே மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெறச் செய்வதற்கு தக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்தச் சலுகைகள் தரலாம் என்று திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ந. தருமலிங்கம்** : பெரும் தொழில்களுக்கும், சிறந்த பல்வேறு ஆலைகளுக்கும் இருப்பிடமான கோவை மாநகரத்தில் வேறு பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிப்பதைவிட, அப்படிப்பட்ட கல்லூரிகள் இல்லாத இடங்களான தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் பயிற்சிக் கல்லூரிகளை ஆரம்பிப்பதன் மூலம் அந்தப் பகுதிகளுக்கும் முன்னேற்றம் ஏற்படும் என்பதை அரசின் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்குவேண்டிய முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : பயிற்சிக் கல்லூரி போதுமான அளவிற்குப் பரவலாக இருக்கவேண்டும். அந்தந்த வட்டாரத்திலே உள்ளவர்கள் பிரதிநிதித்துவம் கொண்டதாக அது அமைய முடியாது. பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள் எங்கெங்கே வேலை வாய்ப்பு இருக்கின்றதோ அங்கே சென்று பணியாற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகையினால் கல்லூரி ஏற்படுவதற்கான வாய்ப்பு வசதிகள் அதற்கான ஊக்கம் இவற்றை அடிப்படையில் வைத்துத்தான் 21 கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே புதிதாகக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்குப்பதிலாக நம்முடைய நாட்டில் இருக்கின்ற கல்லூரிகளிலேயே பணச் செலவைக் குறைப்பதற்கு ஆசிரியர்கள் பயிற்சி பாடப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா? அப்படி ஆசிரியர்கள் பயிற்சி பாடப்பிரிவுகள் இப்போது இருக்கிறதா? அப்படியென்றால் எத்தனைக் கல்லூரிகளில் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்ட யோசனையும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. இ. எம். சுப்பிரமணியம்** : திருநெல்வேலியிலே பெண்களுக்கான தனிப்பயிற்சி கல்லூரி இருக்கிறது. ஆண்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே பயிற்சிக் கல்லூரி ஆரம்பிப்பதாக இரண்டு மூன்று ஆண்டுகளாகப் ப்ரபோசல் இருந்தது. இன்னும் அந்தப் ப்ரபோசல் இருக்கிறதா? அப்படியென்றால் அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

என் விருப்பம் இதுபோன்று என்ஜினியரிங் கல்லூரிகளில் படித்து விட்டு வேலையில்லாமல் பலர் இருக்கிறார்கள். அந்தமாதிரிச் சச்சரவுகள் ஏற்படச் செய்யாமல் தேவைக்குத் தகுந்தபடி அந்த அளவிற்கு ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதெல்லாம் திட்டமிட்டு, 153 பேர்கள் என்றால் 153 பேர்களுக்குத்தான் பயிற்சி என்று செய்வது என்பது சாதாரணமாக இயலாத ஒன்று. எதிர்காலத்தில் அதிகப்படியான உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படும்போது, அதிகப்படியான வாய்ப்பு வசதிகள் ஏற்படும்போது, இவர்களையெல்லாம் அதில் ஈர்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும். ஓரளவு திட்டமிட்டு பரவலாக ஐந்தாண்டு அல்லது பத்தாண்டு திட்ட அடிப்படையில்தான் சிலபல அமைப்புகளைச் செய்து கொண்டு வர முடியும். வாய்ப்பைக் குறைப்பதும் ஏற்றுவதும் என்ற அடிப்படையில் இருக்கமுடியாது. ஆகவே சிலபேர்களுக்கு இந்த வேலை இல்லாவிட்டாலும் இதைச் சார்ந்த வேறு வேலைகளுக்கு செல்ல வாய்ப்பிருக்கிறது. எதிர்காலத்தில் அதிகப்படியான பள்ளிகள் துவக்கும்போது போதுமான அளவிற்கு ஆசிரியர்கள் இல்லை என்ற குறைபாடு ஏற்படலாம். இப்போது கணக்கியல், அறிவியல் போன்ற துறைகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. சிலயிடங்களில் மாணவர்கள் வரவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. சிலயிடங்களில் அதிகம் பேர்கள் வருகிறார்கள் என்ற நிலையும், பி.டி. தேர்வு பெற்றவர்களுக்கு இடம் இல்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே பொதுப்படையாகக் கவனித்து திட்டமிட முடியுமே தவிர சரியாக திட்டவட்டமாக திட்டமிடுவது என்பது எளிதான செயல் அல்ல.

**திரு. மு. ச. சிவசாமி:** ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 40 மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளிகளில் 4,000 பேர்கள் மனு செய்கிறார்கள். தனியார் பள்ளிகளில் மனு ஒன்றுக்கு ரூ. 1, ரூ. 2 என்ற முறையில் கட்டணம் வசூல் செய்கிறார்கள். 4,000 மாணவர்களுக்கும் இன்டர்வ்யூ கார்ட் அனுப்புகிறார்கள். இதனால் பொது மக்கள் பணம் விரயமாவதைத் தடுக்க அந்த மனுக் கட்டணம் ஒரு ரூபாய் என்றில்லாமல் ஃபாரம் கொடுக்க வேண்டுமென்றும் 4,000 பேர்கள் மனு செய்தால் பள்ளியிலேயே அவற்றை பரிசீலனை செய்து லாயக்குள்ளவர்களுக்கு மட்டும் இன்டர்வ்யூ கார்ட் அனுப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கட்டணத்தை வேண்டுமென்றால் ஓரளவு ஒரே சீராக அமைப்பதற்கான முயற்சிகளை நாம் எடுக்கலாம். அடுத்த ஆண்டு கல்லூரிகளில் தனித்தனியாக இருக்கிற பல்வேறு கட்டண வேறுபாடுகளை மாற்றி ஒரே சீராக அமைக்கும் முயற்சி எடுக்கும்படி பல்கலைக் கழக துணை வேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களைப் பொறுத்தவரையில் இன்னொரு யோசனையும் இருந்து வருகிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. சாதாரண மாணவர்களைச் சேர்த்து பி.டி. ஆகி வேலை கிடைக்கிறதா இல்லையா என்பதை ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் ஆசிரியர்களாகச் சேர்த்து அந்தத் தொழிலில் அவர்களுக்குப் பிரியம் இருக்கிறதா இல்லையா, தொடர்ந்து அவர் ஆசிரியராக இருக்க விரும்புகிறாரா, அது அவர்களுக்கு ஒத்துவருகிறதா என்று பார்த்து ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் பி.டி. பட்டம் பெறாமல் ஆசிரியர்களாக இருந்த பிறகு அவர்களுக்கு பி.டி. பயிற்சி அளிக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது. அப்போது பி.டி. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலை இருக்காது. அந்த இரண்டு ஆண்டுகளில் தெரிந்து விடும், இந்தத் தொழில் அவர்களுக்கு ஏற்றதா, இல்லையா என்பது சில பேர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் பயிற்சி பெற்று பி.டி. ஆகிய பின் பள்ளிக்குச் சென்ற பிறகு மாணவர்களுடன் பழகுவது, அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது பிடிக்காமல் விட்டு விட்டு வருகிற நிலைமையும் ஏற்படுகிறது. அப்படி பணத்தையும் வீணாக்கி, இடத்தையும் பாழாக்கிவிடுகிற நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே இதைக் குறித்து கலந்து ஆலோசிக்கும்படி இயக்குனர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.





**திரு. கே. சகாதேவக் கண்டர்:** திருவண்ணாமலையில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளிலுள்ள மாணவர்கள் அதில் படித்துவிட்டு மேல் படிப்பு படிக்க வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கு பி.எ. வகுப்பு ஆரம்பிக்க, வரப்போகும் கல்வி ஆண்டிலாவது அதை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கோரிக்கை வந்திருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

## திருமங்கலத்துக்கு தெற்கேயுள்ள பாலம்

* 82 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை-திருநெல்வேலி நெடுஞ்சாலையில், திருமங்கலத்தின் தெற்கே மிகவும் குறுகிய அகலம் உள்ளதாக அமைந்துள்ள ஆறுகண் பாலத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள வலிவற்ற கட்டமைப்புகளை வலுப்படுத்தல், அகலப்படுத்தல் வேலைத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து அந்தந்த ஆண்டில் கிடைக்கக் கூடிய நிதி ஒதுக்கத்தைப் பொறுத்து, அடுத்த நிலையில் இப்பணிகளை மேற்கொள்வது பற்றி ஆலோசிக்க முடியும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள இடத்தில் இந்தப் பாலம் அமைந்திருப்பதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே அதை விரைவாக விரிவுபடுத்த முடியுமா?

[1968 பிப்ரவரி 20

**திரு. எம். வில்லியம்** : சார், இந்த வேலைகள் எப்பொழுது முடிவு பெறும் என்றும், எப்பொழுது தண்ணீர் விடப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அந்த வேலைத் திட்டத்திற்காக மொத்தமாக ஒதுக்கிய தொகை 7 கோடி ரூபாய். மூன்று கோடி ரூபாய் வேலைகள் முடிந்துள்ளன. மேலும் வேலையைத் துரிதப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. குறிப்பிட்டு அதற்கான காலத்தைக் குறிப்பிடுவதற்கில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : சர்க்கார் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக காலதாமதம் ஏற்படுவதால் இந்தத் திட்டமானது காலாகாலத்தில் நிறைவேறுவதற்குத் தடஸ்தமாக இருக்கிறது. எனவே துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஏதாவது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : காங்கிரஸ் கட்சி துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்ட நில கையகப்படுத்துதல் சம்பந்தமாகப் பல சிக்கல்கள் இருக்கின்றன. துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : சார், பட்டனங்கால் திட்டத்தோடு வலது கரைக் கால்வாய்த் திட்டம் சேர்க்கப்பட்டால் அந்தத் திட்டத்தினால் தனி மனிதர்களின் நிலம் பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் அரசு அதைக் கைவிட்டுவிட்டது என்ற வதந்தி இருக்கிறது. அந்தத் திட்டத்தினால் பொதுமக்களுக்கு அதிக நன்மை இருக்கும் என்ற காரணத்தினால் சில தனி மனிதர்களுக்கு நிலங்கள் பாதிக்கப் பட்டாலும் அதனை அரசு பரிசீலனை செய்து சேர்த்துக்கொள்ள முன்வருமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்பொழுது பட்டனங்கால் திட்டம் இருப்பதால் வலதுகரைக் கால்வாய்த் திட்டத்தைக் கைவிட்டு விடலாம் என்று இப்பொழுது பொறியாளர்கள் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கூற்று உண்மையாக இருப்பின் அது சிந்திப்பதற்குரியது. அதுபற்றி அந்த வட்டாரத்து சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடத்தில் தனியாகக் குறிப்பிட்டுச் சொன்னாலோ அல்லது குறிப்பு அனுப்பினாலோ தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : தலைவரவர்களே, இந்தத் திட்டம் நிறைவேறுவதால் தண்ணீர் வந்து நிற்கக்கூடிய இடங்களில் உள்ள குடியிருப்புகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படியென்றால் அவர்களுக்கு மாற்று இடம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அப்படிச் சில முறையீடுகள் வந்ததால் மாற்று இடம் அளிக்க அரசு யோசனை செய்திருக்கிறது.



1968 பிப்ரவரி 20]

**திரு. கே. பி. எஸ். மணி** : இந்தத் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் செலவழிக்கவேண்டியிருக்கிறது. இந்த 4 கோடி ரூபாய்க்கு நம்முடைய சர்க்கார் பொறுப்பேற்று இருக்கிறதா? அல்லது மத்திய அரசாங்கத்தின் பங்கோடு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறதா? மத்திய சர்க்கார் பொறுப்பேற்றிருந்தால் அது சரியாக வந்து சேரும் என்ற நம்பிக்கை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது திட்டச் செலவிலே உள்ள திட்டம். வந்து சேரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாமாக எதற்காக நம்பிக்கையை இழக்க வேண்டும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்** : ராதாபுரம் கால்வாய்த் திட்டம் எப்பொழுது பூர்த்தியடையும்? அதில் எபபொழுது தண்ணீர் விடப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ராதாபுரம் கால்வாய்த் திட்டத்தில் கனம் உறுப்பினர் கவனம் செலுத்துவது அந்தப் பகுதிகளில் எப்பொழுது பாசன வசதி ஏற்படும் என்பதற்காக. விரைவில் முடிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : சார், அங்கே பல ஆறுகள் கீழே ஓடுகின்றன. மேலே வாய்க்கால் வெட்ட, 'சைஃபன் சிஸ்டம்", "அக்விடக்ட் சிஸ்டம்" கைக்கொள்வதால் வேலைக்குத் தாமதம் ஏற்படுகிறது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே இனிமேலாவது சுலபமான வழியைக் கையாண்டு, சீக்கிரம் வேலைகளை முடித்தல், சிக்கனத்தை ஏற்படுத்தல் ஆகிய இரண்டு துறைகளிலும் கவனம் செலுத்த அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அங்கு குன்று பகுதிகள் இருக்கின்றன. தோட்டம், துரவுகள் அதிகமாக உள்ளன. அவைகளின் காரணமாக இந்த வேலை சற்றுத் தாமதமாகிறது. ஏற்கனவே ஏற்பட்டவைகளை திரும்பச்சென்று அவைகளை மறுபடியும் ஏற்று நடத்துவது என்பது இப்பொழுது சாத்தியமான விஷயம் அல்ல. இப்பொழுது நடைபெறும் இந்தக் காரியத்தை விரைவுபடுத்த அரசு முன்னின்று முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. வ. ஜார்ஜ்** : அவைத் தலைவரவர்களே, கருங்கல், பாலப் பள்ளம் கிளைக்கால்வாய் ஆகிய திட்டம் முன்னர் திப்பரமலை என்ற இடத்திலிருந்து எடுப்பதாக இருந்தது. இப்பொழுது மாற்றி பரிசீலனை செய்வதாக அறிகிறேன். இதனால் அந்த இடத்திலுள்ள பிரதேச மக்களுக்குப் பெரிதும் கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மீண்டும் பரிசீலனை செய்து கருங்கல், பாலப்பள்ளம் திட்டத்தை முன்னர் போலவே எடுக்க அரசாங்கம் ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்படி தனித்தனியாக ஒவ்வொரு பிரச்சினையைப் பற்றியும், ஆங்காங்கு இருக்கின்ற மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைப் பற்றியும் கேட்பதை விட்டு விட்டு மாண்புமிகு அந்த பகுதி சட்டமன்ற உறுப்பினர்

ஒரு நாள் இதுபற்றிய விளக்கங்களை என்னையும் பொறியாளர்களையும் அதிகாரிகளையும் வைத்துப் பேசினால் இந்தக் கால்வாய்த் திட்டம் பற்றி முடிவெடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்** : தலைவரவர்களே, 1968 நடப்பு ஆண்டில் தமிழகத்தில் புதிய பாலங்கள் எவ்வளவு அமைக்க முடியும் என்று கணக்கு தருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது அணையைப் பற்றிய கேள்வி. பாலத்தைப் பற்றியது அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இந்தப் பட்டணங்கால் திட்டத்திலிருந்து ராதாபுரம் வாய்க்காலுக்கு பகிர்ந்து கொடுப்பதில் விதிமுறைகள் பற்றி அரசாங்கத்தில் பூர்த்தியாகிவிட்டதா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான் முதலிலேயே சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தனியே பேசிவிடலாம் என்று.

### போரிங் மெஷின்களுக்கான எரிபொருள், எண்ணெய் வகைகள்

*84 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவிலுள்ள போரிங் மிஷின்களுக்குத் தேவையான எரி பொருள், எண்ணெய் வகைகள் டிபார்ட்மென்ட் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : (அ) இல்லை ஐயா.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. சு. துரைசாமி** : பேரவைத் துணைத் தலைவரவர்களே, போரிங் மிஷின்கள் கொடுப்பது இவ்வளவு காலத்திற்குள்ளாக கொடுக்கப்பட வேண்டும், இவ்வளவு நாட்களுக்குப் பின்னால் கொடுத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று விதி இருப்பதாகவும், அதேபோல் எரிபொருள், எண்ணெய் இவ்வளவு தான் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறை இருப்பதாகவும் அந்த விதி முறையை மீறியும் கோவையில் இரண்டொரு அதிகாரிகள் அதற்கான காலத்திற்குப் பிறகு போரிங் மிஷின்கள் கொடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : போரிங் மிஷின்கள் வழங்குவதில் 'பிரியாரிட்டி லிஸ்ட்' வைத்திருக்கிறோம். அதன் படிதான் வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை. அப்படி யாருக்காவது வழங்கியிருந்தால் அதுபற்றிக் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும். எரிபொருள் விவசாயிகள்தான் தர வேண்டுமேயொழிய அரசாங்கம் அல்ல என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. வி. டி. அண்ணாமலை** : வணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் கிணறுகள் தோண்ட வேண்டுமானால் 30 அடி ஆழம் தோண்ட வேண்டி இருக்கிறது. அதற்குக் கீழேதான் தண்ணீர் இருக்கிறது. ஆகவே, ஜெர்மனி போன்ற நாடுகளில் உபயோகப்படுத்துகிற இயந்திரங்களைக் கொண்டு வந்து அந்தக் கிணறுகளை வெட்ட அரசு முன்வருமா ? சுமார் 10 லட்சம் அல்லது அதற்கு மேற்கொண்டு ஒதுக்கி விவசாயிகளுக்கு உதவி செய்து உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதுபோல் 30 அடி, 40 அடிக்கு அவ்வளவு உயர்ந்த இயந்திரங்கள் தேவை இல்லை. இப்பொழுது இருக்கிற போரிங் மெஷின்களே போதுமானவை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : போரிங் செட், பிளாஸ்டிங் மெஷின் என்று இரண்டு பாகுபாடு இருக்கின்றன. சில பகுதிகளுக்கு ஆயில் மட்டும் கொடுத்து பார்டி, எரி எண்ணெய் போட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எரி எண்ணெயை கொடுக்கும் பொழுது. எரி எண்ணெயையும் ஆயிலையும் கலப்படம் செய்து கொடுப்பதால் அந்த மெஷின்கள் கெடக் கூடிய முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த ஆப்ரிகேஷன் எரி எண்ணெய் பூராவும் டிபார்ட்மெண்ட்டலாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், இந்தமாதிரி கலப்படம் செய்வதன் மூலம் மெஷின்கள் கெட்டுவிடும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்கு சர்க்கார் ஏதாவது பரிகாரம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அதற்கு ரூ. 500 கடன் தொகை கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன் தொகையிலே 10 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. அதிலிருந்து எரி பொருளும் எண்ணெயும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஆப்ரிகேஷனில் கலப்படம் செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. மார்டின்** : அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினரின் கைவசம் எத்தனை போரிங் பம்ப் மெஷின்கள் இருக்கின்றன என்பதையும், அவற்றில் நெல்லை மாவட்டத்திற்கு எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எத்தனை வேலை செய்கின்றன என்பதையும் பற்றிய விவரங்களை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

[1968 பிப்ரவரி 20

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லாத வரண்ட பகுதிகளில் இவைகளை வினியோகப்படுத்துவதற்காக இவைகளை அதிகமாக வாங்குவதற்குச் சர்க்கார் எதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுதும் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறது. தேவையானபொழுது உயர்த்தி வாங்குவதற்காக வேண்டிய உதவியை மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இன்றைக்கு தஞ்சைக்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு மாவட்டத்திலே பாறைகள் நிறைந்த பிரதேசம் இருக்கிறது. அங்கு பத்தாயிரக்கணக்கான கிணறுகள் வெட்டியும் தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்தப் பாறைகளைப் போக்கி சுற்றியிருக்கிற இடங்களில் இருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமானால் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. விவசாயிகளுக்கு அது சாதாரணப் பிரச்சினை இல்லை. ஆகவே அதிகப்படியான போரிங் செட்டுகளை வாங்கி இந்த வசதியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா? அடுத்து, இதற்குக் கட்டணத்தை வசூலிக்கிறார்களே அதில் பாதிக் கட்டணத்தை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் கூடுதலாக பம்ப் செட்டுகள் வேண்டுமென்கிறார்கள். அதே நேரத்தில் தொகையையும் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இது அவருடைய கட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்கு வேண்டுமானால் உதவுமேயொழிய நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகள் கிடையாது.

**திரு. சு. துரைசாமி :** இந்த போரிங் மெஷின் வாங்குவதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன்படி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி பட்டியல் போட்டு ஏற்கனவே பலருக்கு வழங்கப்பட்டிருந்தாலும், திரும்பவும் அவர்களே கடந்த காலச் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த போரிங் மெஷினை வாங்கி இருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இன்று இருக்கிற நிலையில் இந்த பிரையாரிட்டி லிஸ்டு பிரகாரம்தான் வழங்கப்படுகிறது. அவர் கூறியது போல் எந்தப் பகுதியிலாவது அந்த விதி மீறப்பட்டிருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



1968 பிப்ரவரி 20]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, பிரையாரிட்டி லிஸ்டுபடிதான் போரிங் மெஷின் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு போரிங் மெஷின் வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன் விண்ணப்பித்தும் இன்னும் வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பிரையாரிட்டி லிஸ்டிலே அவருடைய பெயர் கடைசியிலே இருக்கலாம்.

## கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு, திருப்பூர்

*85 **வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கால்நடைத் தீவனத் தயாரிப்பு தொழில் பிரிவு எந்த ஆண்டு, எந்தத் தேதியில் ஆரம்பிக்கப் பட்டது?

(இ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு சத்து நிறைந்த தீவனங்களை விநியோகம் செய்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) கால் நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு 1967 ஆகஸ்டில் திருப்பூரில் நிறுவப் பட்டது.

(இ) 1967 செப்டம்பரில் 2.6 டன் கால்நடைத் தீவனம் விற்பனையாயிற்று.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த தீவனத் தொழிற்சாலையை ஆரம்பிக்கக் கூடிய நேரத்திலே, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் எந்த அளவுக்கு நாம் தீவனம் தயாரிக்க முடியும், அதை எவ்வளவு விநியோகம் செய்யலாம் என்று திட்டமிட்டுத்தான் துவக்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படித் திட்டமிட்டு ஆரம்பித்தும் அங்கே தீவனம் விநியோகிக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? அதை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள் ? அப்படிக் கடன் வாங்கியும் அதைச் செலவு செய்யாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** திருப்பூரில் கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு காங்கேயம் கால்நடைத் தீவனத் தயாரிப்பு விற்பனை செய்பவர்கள் மனுப் போட்டார்கள். அதற்கு ரூ. 1,20,000 கடனாகவும் உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டது. மூலதனக் கடனாக லட்ச ரூபாய் வழங்கி விட்டார்கள். நாள் ஒன்றுக்கு 3 டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த நிறுவனம் அமைக்கப் பட்டது. ஆனால் இங்கே செப்டம்பர் மாதத்தில் 3.6 டன் தான் உற்பத்தி ஆகிற்று. அதற்குக் காரணம் கேட்டதற்கு கச்சாப் பொருள்கள் போதுமான அளவு கிடைக்காத காரணத்தால் இது

எதிர்பார்த்த அளவு உற்பத்தி ஆகவில்லை என்று தெரிவித்தார்கள். காட்டன் சீட்ஸ் போன்ற கச்சாப் பொருள்கள் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அந்த நிறுவனம் சரியாக இயங்கி வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் கேள்வி கேட்பார்களானால் அதுபற்றிய புள்ளிவிவரம் தயாரித்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெங்கடசாமி.

**திரு. மு. சின்னசாமி :** அந்த காங்கேயம் கால்நடைத் தீவனம் தயாரிப்பு நிலையத்தில் முன்னாள் அமைச்சர் மன்றாடியார் அவர்களுக்கு பங்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் தகவல் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் குறிப்பிட்டது ஒருவரைப் பற்றி, கேள்வி கேட்பது வேறு ஒருவராக இருக்கிறார்.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister the varieties of fodder grown there and the acreage under the fodder crop?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தத் தீவனம் தயாரிப்புப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்வியோடு தொடர்பில்லை அது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மாட்டுத் தீவனத்தை தயாரிக்கின்ற முறையிலே பல கலப்படங்கள் நடக்கின்றன. அந்தத் தீவனத்தைக் கலக்கின்றபொழுது பல குடியானவர்கள் ஏமாற்றப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகையினால் அரசாங்கமே இந்த மாட்டுத் தீவனத்தை எந்தெந்த விகிதத்தில் கலக்கலாம், இன்னின்ன பொருள்களைப் போட்டு கலக்கலாம், இன்னின்ன பெர்சன்ஸ் கலக்கலாம் என்று விளம்பரப் படுத்தினால் நன்றாக இருக்கும். அந்த குறிப்பிட்டவர்களிடம் வாங்குவதற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இந்த விளம்பரத்தை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதுபோல தவறு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் எந்தப் பகுதியிலாவது அந்தமாதிரியான கலப்புச் செய்யப்படுவதாக நிலைமை இருக்குமானால் அந்த விவரத்தை அரசாங்கத்திற்கு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, கேர் ஸ்தாபனத்திலிருந்து தனியார் பள்ளிகளுக்குக் கொடுத்த கோதுமை ஏறத்தாழ 1,000 மூட்டை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்வியோடு ஒட்டிச் சொல்லுங்கள்.

**திரு. மு. ச. சிவசாமி :** அதற்குத்தான் வருகிறேன். கேர் ஸ்தாபனத்தால் பள்ளிக்கூடங்களுக்கு என்று கொடுக்கப்பட்ட 1,000 மூட்டை கோதுமை, மாட்டுத் தீவனம் என்ற பெயரால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி கொண்டுவந்து அதை அரைத்து கேரளாவுக்குப் போய்க்கொண்டிருப்பதை தடுக்க அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் விவரம் கொடுத்ததற்கு நன்றி. அதுபற்றிய முழு விவரமும் எழுதி அனுப்புவார்களேயானால் அதுபற்றி பரிசீலனை செய்து அப்படி தவறான காரியங்களில் ஈடுபட்டவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் முழு விவரமும் எழுதிக் கொடுப்பார் என்று நம்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** 'காட்டில் ஃபுட்' என்பதை பல கம்பெனிகள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்டுப்பாட்டுடன் ஸ்டாண்டர்டு மிக்ஸ்சர் என்று சொல்லக்கூடிய 'அக் மார்க்' போட்டு உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது பற்றி சர்க்கார் யோசிக்குமா? ஏனென்றால், ஒரு நேரம் கொடுக்கக்கூடிய காட்டில் ஃபுட் அடுத்த நேரம் இல்லாமல் இருக்கிறது. பல கம்பெனிகள் உற்பத்தி செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை செயல்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது இந்த நிறுவனத்திற்கு ரூ. 1,20,000 கடனாகவும், மானியமாகவும் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதில் கடன் எவ்வளவு ? மானியம் எவ்வளவு ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கடனாகவும், மானியமாகவும் மொத்தமாக வழங்கியது ரூ. 1,20,000. அது சரியாக இயங்கினால், அதில் 75 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படும்.

### தஞ்சை மாவட்டத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள்

* 86 வினா—**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வெளியூர்களிலிருந்து வேலைக்கு ஆட்களை இறக்குமதி செய்யும் மிராசுதார்களின் நடத்தையால் கிராமப்புறங்களில் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், அமைதியற்ற நிலையையும் அரசாங்கம் அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாய காலங்களில் வெளி ஊர்களிலிருந்து கூலியாட்கள் வருவது தொன்றுதொட்டு இருக்கும் வழக்கம். மிராசுதார்களுக்கும் அவர்களிடம் ஏற்கனவே வேலை செய்துவரும் வேலையாட்களுக்கும் கூலித் தகராறு ஏற்படுவதும் வாடிக்கை. வெளியூர்களிலிருந்து ஆட்கள் வருவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது என்பது சரியல்ல.

(இ) மிராசுதார்களுக்கும், கூலியாட்களுக்கும் வரும் பிரச்சனைகளை அப்போதைக்கப்போது அதிகாரிகள் சமரசம் செய்து வைக்கின்றனர்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, வெளியூர்களிலிருந்து நூற்றுக்கணக்கில் ஆட்கள் கிராமங்களுக்கு வருவதால், 20, 30 நாட்களுக்கு செய்யக்கூடிய வேலை ஒரே நாளில் 100 ஆட்களை வைத்துக்கொண்டு செய்யப்பட்டுவிடுவதால், மற்ற நாட்களில் உள்ளூர் ஆட்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் 500-க்கு மேற்பட்டவர்களை கொண்டு வந்து அறுவடை வேலையில் ஈடுபடுத்திவிட்டு, உள்ளூர் ஆட்களுக்கு வேலையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே உள்ளூர் ஆட்களை விரட்டிவிட்டு, 500 ஆட்களை வைத்துக் கொண்டு அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கனம் அங்கத்தினர் சொல்வது திடீரென்று ஏற்பட்டது அல்ல. கூலி வேலை செய்பவர்கள் எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். அதைத் தடுப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுக்காது. அதன் காரணமாக அமைதிக்கு பங்கம் ஏற்பட்டால் இந்த அரசாங்கம் அதைத் தடுப்பதற்கு ஆவன செய்யும்.

**திரு. என். கிட்டப்பா**: தலைவர் அவர்களே, கடந்த குறுவை அறுவடையின்போது தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட மன்னார்குடி முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் நடைமுறை கையாளப்படும் என்ற நிலைமை ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் அவசியம் இருந்தால் வெளியூர்களிலிருந்து வருபவர்களையும் வேலைக்கு வைக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டதா ? அந்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்ட சட்டப்பேரவையின் உறுப்பினர்களின் பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : சமரசக் கூட்டம் நடைபெற்றது. எல்லாத் தலைவர்களும் கூடி சில முடிவுகளை நிறைவேற்றினார்கள். எப்படி அந்த முடிவுகள் நிறைவேற்றப்பட்டன, அந்த முடிவுகள் என்ன என்ற விவரம் என்னிடம் இல்லை.

THIRU P. SEENIVASAN : It is a general fact that casual labourers in all fields are ill-treated. They are employed according to the whims and fancies of the bosses. This kind of trouble mainly



prevails in Government factories. I can cite the Ennore Thermal plant. . . . . .

(Interruption by Thiru K. Vinayakam.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: தஞ்சை மாவட்டத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள் வைப்பதுபற்றிய கேள்வி இது. அதுபற்றிய உப கேள்வி மட்டும் கேட்குமாறு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU P. SEENIVASAN : May I request the Hon. Minister to state whether the Government will think about insisting on the industrial institutions and the owners of agricultural land to maintain a seniority list of casual labourers?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : காஷுவல் லேபர் என்பது தொழிற்சாலைகளில் ஒரு பிரச்சனையாக இருக்கிறது. அதற்கும் கூலி வேலை ஆட்களுக்கும் சம்பந்தம் கிடையாது. காஷுவல் லேபர் எந்த நேரத்தில் வைக்கலாம், எப்பொழுது வைக்கலாம், அவர்களுக்கு என்ன வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதெல்லாம் பல ஆண்டுகளாக பரிசீலிக்கப்பட்டுவருகிறது. அது பற்றி தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. நா. காசிராமன்** : தலைவர் அவர்களே, இந்த விவசாயக் கூலிகள் நியமிப்பது பற்றி கூடிப் பேசி விவாதிப்பதற்கு சென்ற ஜனவரி 19-ம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் இல்லத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர், தொழில் அமைச்சர், தஞ்சை ஜில்லா நிலச்சுவான்தார்கள் ஆகியோர் கூடி பேசவேண்டும் என்று ஏற்பாடு செய்து, அந்தக் கூட்டத்திற்கு நமது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஞானசம்பந்தமும், திரு. தனுஷ்கோடியும் வருவதாக இருந்தது. அவர்கள் வரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அவ்வாறு அவைக்கு அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : குறிப்பிட்ட நாளன்று வரவில்லை என்பது உண்மை. அதற்காக எந்தவிதமான காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** : கனம் முதல் அமைச்சர் அவர்கள் வீட்டில் சந்திக்க ஏற்பாடாகியிருக்கிறது. என்பது எனக்குத் தெரியாது. நான் உடல்நிலை சரியாக இல்லாத காரணத்தினால் படுக்கையில் இருந்தேன். கடைசி நாள் வரையில் இந்தத் தகவல் எனக்கு எட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : தஞ்சை மாவட்டத்தில் அறுவடைக்கு கூலி ஆட்கள் போதவில்லை என்றால், வெளியூர் ஆட்களைக் கொண்டுவந்து அறுவடை செய்யலாம் என்று மன்னார்குடியில் குறுவை அறுவடைக்கு முன்பு முத்தரப்பு மகாநாடு நடந்து அந்த முத்தரப்பு மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கு மாறாக ஆங்காங்கு விவசாயத் தோழர்களிடையே கலகம்

செய்வதும், ஆங்காங்கு அறுவடைக்கு குந்தகம் ஏற்படுகின்ற அளவுக்கு காரியங்கள் நடைபெறுவதும் சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக நடக்கின்றவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல இது ஏதோ திடீரென்று ஏற்படுவதல்ல. கூலியாட்கள் வெளியூர்களிலிருந்து வருவது தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, என்னுடைய மாவட்டமாகிய ராமனாதபுரம் மாவட்டத்திலும் சரி இந்தப் பழக்கம் இருக்கிறது. அறுவடை காலத்தில் கூலி ஆட்கள் அதிகமாக தேவையாக இருக்கிற காரணத்தினால், பக்கத்து கிராமங்களிலிருந்து, பக்கத்து மாவட்டங்களிலிருந்து கூலியாட்கள் வருவது பழக்கம். தஞ்சை மாவட்டத்தில் அதிகமான நிலங்கள் ஒரே சமயத்தில் அறுவடை செய்யப்படக்கூடிய நிலை இருக்கிற காரணத்தினால் இந்தப் பிரச்சினை அங்கே கொஞ்சம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால், சட்டரீதியாக ஒப்பந்தம் ஏற்படவில்லை. மக்கள் பிரிதிநிதிகள் கூடி சமாசம் செய்து வைக்க வேண்டும், அமைதி காக்கவேண்டுமென்ற அடிப்படையில் செய்யப்படுகிறது. ஒப்பந்தம் மீறப்படாமல் பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்களது கடமையாகும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் கூலி கொடுக்கக்கூடிய விஷயத்தில் 20 ஆண்டு காலமாக தொடர்ந்து விவகாரங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. இது நன்றாக நமது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தொடர்ந்து இவ்வாறு விவகாரம் இல்லாமல் தடைசெய்வதற்கு வேண்டி நம்முடைய அரசு ஒரு கூலி நிர்ணயச் சட்டத்தைக் கொண்டு வருவதுபற்றி உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை இன்றைக்கு மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே இதைப்பற்றி சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று ஏற்கெனவே ஒன்று இருக்கிறது. அதை அக்ரிகல்சுரல், விவசாயத் தொழிலாளிகளுக்கும் பயன்படுத்தவேண்டும் என்ற ஒரு கொள்கைதான், தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, நீண்ட நாட்களாக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சட்டம் இயற்றியவுடன் அதை அமுல் நடத்துவதிலுள்ள குறைபாடுகள், சிக்கல்கள் இவைபற்றி ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டத்தை அமுல் நடத்துவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதுபற்றி நமது தொழிலாளர்களின் ஆணையாளர் (லேபர் கமிஷனர்) ஆந்திரா மாநிலத்திற்குச் சென்று அங்கே எப்படி இதுபற்றி அமுல் நடக்கிறது என்பதைப் பரிசீலித்து வந்திருக்கிறார். அதற்குப் பின்னாலே ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் மூலம் இதை அமுல் நடத்தலாம்



என்று யோசிக்கப்பட்டது. அதுவும் நன்றாகச் செயல்படவில்லை. வட்டார வளர்ச்சி ஆணையாளர், அதாவது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மூலமாக இதைச் செயல்படுத்தவேண்டும் என்று மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருக்கிறது. இந்த விஷயம் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது. எப்பொழுது அமுல் நடத்தப்படும் என்பதை நாம் விரைவிலே பரிசீலனை செய்து, சட்டப்படி முடியுமா என்பதையும் ஆராய்ச்சி செய்தபின் முடிவு செய்ய முடியும்.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, நெல் விளைந்தவுடன் ஒரு குறிப்பிட்ட நாளில் அதை அறுவடை செய்துவிட வேண்டும். அப்படியில்லை என்று சொன்னால், நெல் மணிகள் சிதறிவிடும். ஆகவே, இந்த அறுவடைக் காலங்களில் ஊர் ஊராக பல விவசாயிகள் அறுவடை செய்வதற்கு என்றே கூலிக்கு வேலை செய்யப் போவது வழக்கம் என்பது அரசுக்குத் தெரியுமா ? சில பேர்கள் குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்யாவிட்டால் நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதற்காக வெளியூர்களிலிருந்து விவசாயிகளைத் தருவிப்பதும் இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் ஏற்கனவே இதை ஒப்புக்கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிக உணவு உற்பத்தி இருக்கிற காரணத்தினால், இந்தப் பிரச்சினை அங்கே அதிகமாக இருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ராமனாதபுரம் மாவட்டத்திலிருந்து அதிகமான பேர்கள் அறுவடை காலத்தில் கூலி வேலை செய்வதற்காகப் போகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சில தொழிலாளர்கள் அவர்களை வேலை செய்ய விடாமல் தடுத்து, அதன் காரணமாக உணவு உற்பத்திக்கே பாதகம் ஏற்படுகிறது, வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படுகிறது. ஆகவே, இப்படி அவர்களை வேலை செய்ய விடாமல் தடுப்பதற்கு தூண்டி விடும் சமூக விரோதிகளைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ராமனாதபுரம் மாவட்டம் மட்டுமல்ல, இந்திய நாட்டில் எந்தப் பகுதிக்கும் யார் வேண்டுமானாலும் போய் வேலை செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அப்படி தடுத்து நிறுத்தப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது உண்மை. குறிப்பிட்ட நேரத்தில் அறுவடை செய்தால்தான் நெல் மணிகளைச் சேகரிக்க முடியும் என்பதும் உண்மை. ஆனால், அறுவடை செய்வதில் ஒரு நாளுக்கு மட்டும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு, மற்ற நேரத்தில் வேலை இல்லாமல் பழி

வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்களை ஒரே நாளில் அறுவடை செய்யச் செய்து மற்ற நாட்களில் வேலை இல்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்களே, அதைப் பற்றி அரசினர் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அறுவடை என்பது ஆங்காங்கு உள்ள சூழ்நிலையைப் பொறுத்தது. ஒரே நாளிலும் செய்ய வேண்டியிருக்கும், அல்லது பல நாட்களில் அறுக்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கும். பல நாட்களில்தான் அறுக்கவேண்டும், குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள தொழிலாளர்களை வைத்துக் கொண்டு தொடர்ந்து அறுவடை செய்யவேண்டும் என்று சொல்லுவதும் சரியல்ல. இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று பழி வாங்கும் நோக்கத்தோடு ஒரே நாளில் பலரை வேலைக்கு வைத்து அறுவடை செய்வது என்பதும் தவறாகும்.

**திரு. சி. வீரமணி :** தலைவர் அவர்களே, மிராசுதார்கள் கிணறுகளுக்கு பம்ப்செட் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பரி தைக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள அருந்ததியர் சமுதாயத்தினர் வேலை வாய்ப்பில்லாத காரணத்தினால் மேலும் மேலும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அரசு உணர்ந்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முன்வருமா?

(விடை இல்லை.)

**திரு. கே. விநயகம் :** ஸார், தஞ்சையிலே இதுமாதிரி விவசாயத் தகராறு ஏற்பட்டு, அதன் விளைவாக அங்கு விவசாயத் தொழிலாளி திரு. பக்கிரிசாமி என்பவரைச் சுட்டுக் கொல்லப்படவேண்டிய அளவுக்கு நிலைமை மீறியது. சுட்டுக் கொல்ல உத்தரவு கொடுத்தது அங்கே இருந்த அதிகாரிகளா? அல்லது அதற்கு முன்னே இப்படி நடந்தால் என்ன செய்வது என்று அரசாங்கத்தோடு கலந்து யோசித்துச் சுட்டார்களா ? சுட்ட பிறகு என்ன விளைவுகள் ஏற்பட்டன என்று சொல்லுவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். எந்த நேரத்தில் சுடவேண்டும் என்று சட்டம் இருக்கிறது, விதிகள் இருக்கின்றன. அரசாங்கம் எந்தக் காலத்திலும் சுடு என்று உத்திரவு போடுவது அல்ல. நிலைமைக்கு ஏற்ற வாறு அதிகாரிகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று வரைமுறை இருக்கிறது. அதை மீறியிருந்தால் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஸார், இந்த விவசாயக் கூலிகள் ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டவர்களுள் நானும் ஒருவன். தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்களும், டி. எஸ். பி. அவர்களும், சகல கட்சிகளும் சேர்ந்து ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதன் அடிப்படையிலே ஒரு ஷரத்தில் விவசாயக் கூலிகள் அந்த





வட்டாரத்தில் உள்ளவர்கள் போதவில்லை என்றால் வெளியூர்களிலிருந்து ஆட்களைத் தருவித்துக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்று இருக்கிறது. அதை மீறி ஒரு சில மிராசுதார்கள் வேண்டுமென்றே விவசாயக் கூலிகள் என்ற பெயரால் ராமநாதபுரம் மாவட்டம், மற்ற மாவட்டங்களிலிருந்து அடி ஆட்களைக் கொண்டு வந்து அங்குள்ள விவசாயக் கூலிகளை பயமுறுத்த வேண்டுமென்று செய்வதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா? அப்படித் தடுத்தால் விவசாயக் கூலிப் பிரச்சினையே இருக்காது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அடி ஆட்கள் என்பது சட்டமன்ற உறுப்பினருடைய பொறுப்பான பேச்சு அல்ல. இருந்தாலும் அவர்கள் கூறியது போல ஒப்பந்தத்தை மீறுவது மிராசுதாராக இருந்தாலும், தொழிலாளராக இருந்தாலும் தவறுதான். இரண்டு தரப்பாரும் அப்படிச் சொல்லுகிறார்கள். இவர்கள் மீறினார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறவர்கள் இதைத் தடுத்து மீறாமல் பார்த்துக்கொள்வது அவர்களது கடமை என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார், ராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறவர்களை ரௌடிகள் என்று சொன்னார்கள் (குறுக்கீடு). அடி ஆட்கள் என்று சொன்னார்கள். அதை உறுப்பினர் அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும் அல்லது சட்டமன்றக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணி அவர்கள் அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்வது நல்லது.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். கூலி ஆட்கள் என்ற பெயரால் என்றுதான் நான் குறிப்பிட்டேன். எல்லோரும் அல்ல. வேண்டுமென்றே ஒரு சிலர் இப்பேர்ப்பட்ட ஆட்களைக் கொண்டு வந்து, வேல் கம்பு, அரிவாளோடு ஆட்களைக் கொண்டு வந்து, பல கொலைகள் நடந்திருப்பதை நான் நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடி ஆட்களை அழைத்து வந்தார்கள் என்பதை வாபஸ் வாங்க வேண்டும். இல்லை என்றால் அந்த வார்த்தைகளை நீக்குவதற்கு நானே உத்திரவிட வேண்டியிருக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** அடி ஆட்களை என்ற வார்த்தையை நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த கேள்வி, 87-வது கேள்வி . . . .

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன்* : இந்த மன்னார்குடி ஒப்பந்தத்தை அமல் நடத்தவேண்டுமென்று வற்புறுத்தும்போது, அதிகாரிகளும் போலீஸும் எங்கள் ஆஃபீஸில் புகுந்து கைது செய்யும் நிலைமையெல்லாம் இருக்கிறது. இது முக்கியமான பிரச்னையாக இருப்பதால் இது சம்பந்தமாக விவாதிக்க அரை மணி நேர விவாதத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஏற்கெனவே இந்தக் கேள்விக்கு மட்டிலும் 12 துணைக் கேள்விகளுக்கு இடமளித்திருக்கிறோம். இதற்கு மேலும் இடமளிப்பது முறையாகாது. அடுத்து வருகிற நிதி நிலை அறிக்கையிலும் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கலாம். ஆகையால் இதற்கு அரை மணி நேர விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

*The Madras Cements, Tulukapatti*

* 87 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that there was a strike by the workers in Tulukapatti, Madras Cements Factory, Virudhunagar, during the month of August 1967; and

(*b*) the reasons therefor and the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: (அ) ஆம்.

(இ) மெட்ராஸ் சிமெண்ட்ஸ் திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், தன்னுடைய ஆறு கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. மேற்படி நிர்வாகத்தினரால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஏழு தொழிலாளர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவற்றுள் சிறப்பானதாகும். கூட்டுறவு அமைச்சரின் தலையீட்டால் 5—8—1967-ல் இதில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 7—8—1967-ல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that an hon. Member of this House headed the strike and then the Police on information from the complainants have framed charges under some section of the Indian Penal Code and if so, will the Government be pleased to Place on the table of the House a copy of the First Information Report and also the section under which the charges were laid against him under the Indian Penal Code?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஒரு சம்பவம் தொழிலாளர் சார்பில் நடைபெற்றது. மன்ற உறுப்பினர் ஒருவர் தொழிற் சங்கத்தின் தலைவராக இருந்தார். வழக்கு போடப்பட்டதா, வழக்கு விவரத்தில் என்னென்ன பிரிவுகள் போடப்பட்டன என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.



*திரு. பெ. சீனிவாசன்* : ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : உங்களைப்பற்றி ஒன்றும் வரவில்லை. உங்களுக்கு பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷனுக்கு இடமில்லை.

*திரு. பெ. சீனிவாசன்* : ஸார், துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலை அதிபர் கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு, அதுவும் திரு. காமராஜுக்காக லட்சக் கணக்கில் செலவு செய்ததாகவும், அந்த ஒரு காரணத்திற்காக காங்கிரஸ் நண்பர்கள் மேலும் மேலும் அக்கறை காட்டுவதாகவும் நாட்டு மக்கள், அதுவும் விருதுநகர் வட்டார மக்கள், பரவலாகக் கூறிக் கொள்ளுகிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

*திரு. எம். எஸ். மணி* : தலைவர் அவர்களே, திரு. சீனிவாசன் அவர்கள் அந்தத் தொழிற் சங்கத் தலைவர் என்கிற முறையில் அந்த ஆலை நிர்வாகிகளைச் சந்திக்கவோ, அங்கே உள்ள தொழிலாளர்களைச் சந்திக்கவோ, தொழிற்சாலைக்குள் போகலாம் என்கிற விதி ஏதாவது இருக்கிறதா, அதற்கு அவர்களுக்கு அனுமதி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எப்பொழுதும், தொழில் அதிபர்களையோ, தொழிலாளர்களையோ சந்திக்க உரிமை உண்டு. ஆனால், அவர்களுடைய காரியத்தால் சட்டத்தை மீறுவதோ அல்லது அமைதிக்கு பங்கம் விளைவதோ ஒத்துக்கொள்ளப்படமாட்டாது.

*திரு. என். எஸ். வி. சித்தன்* : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

*திரு. பெ. சீனிவாசன்* : தலைவர் அவர்களே, பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்பொழுது பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனுக்கு சமயம் இல்லை.

THIRU P. SEENIVASAN : Sir. my name has been mentioned by the Hon. Member Thiru M. S. Mani and therefore I should clarify my position.

சார், நான் இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்லுவதற்காக உள்ளபடியே வருந்துகிறேன். ஆனாலும் கூட, நாட்டு மக்களிடம், சட்டமன்றத்திலே, என்னுடைய பெயரைக் களங்கப்படுத்தும் வகையில் முயற்சிகள் செய்யப்படுகின்றன. என் பெயரில் இருந்த கேசுகளை வாபஸ் வாங்கியிருப்பது புதுமை ஒன்றும் இல்லை

அதற்காகவே வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்றோ, தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் என்றோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியை, அல்லது வேறு ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்றோ பிரிவு படுத்துவது கிடையாது. அதுபற்றி ஆதாரம் வேண்டுமென்றால், எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதுபற்றி விவரம் கொடுக்கத் தயார்.

DR. H. V. HANDE : Sir, apart from the Dravida Thozhilalar Munnetra Sangam headed by my distinguished friend, are there any other rival trade unions in the factory, **have those unions** made any demands and what action has been taken by the Government on them, what is the present situation and is there industrial peace in the factory? **Will the Minister answer** these points?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேறொரு யூனியன் அங்கே இருக்கிறது. அது எந்தக் கட்சியைச் சேர்ந்தது என்று சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன்; அதன் பிறகு அதன் பேரில் துணைக் கேள்விகள் எழலாம். எங்கள் கொள்கை, எந்தக் கட்சியாக இருந்தாலும், அது தொழிலாளர்களுடைய நன்மைக்காக பாடுபட்டால், அவர்களோடு ஒத்துழைக்கத்தயார். இந்தத் தொழிற்சாலையில் இப்பொழுது சமாதானம் ஏற்பட்டிருக்கிறது: நானே அங்கு சென்று வந்தேன். அங்கே சுமுகமான சூழ்நிலை இருக்கிறது. அதைக் கெடுத்து விடக் கூடாது என்று மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஸார், அமைச்சரவர்கள், கூறின பதிலிலிருந்து, ஐ.பி.ஸி. 376-வது பிரிவின் கீழ் ஏதாவது ' அலிகேஷன் '-கள் இருக்கின்றனவா என்பதை அன்னார் தகவல் கொடுக்கவில்லை. அந்த செக்ஷன் பிரகாரம், ' அலிகேஷன் '-கள் இருக்கின்றனவா என்பதை அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னரே பதில் சொன்னேன். எந்த எந்த செக்ஷன்களின் கீழ் என்பதற்கான விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை என்று. ஏதோ ஒரு குறிப்பிட்ட செக்ஷனிலே என்று சொல்லிவிடுவதால் மட்டும். அதை நிரூபிக்க முடியும் என்பதில்லை, என்பது வழக்கறிஞர்களாகிய உறுப்பினருக்குத் தெரியும். எப்.ஐ.ஆரில் என்ன வெல்லாமோ இருக்கலாம். ஒரு செக்ஷனைக் காட்டிவிடுவதால் மட்டும் குற்றம் சாட்டப்பட்டவர் சதிகாரர் என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, பல தொழில் தகராறுகள் ஏற்பட்டு, அதன் காரணமாக அடிதடி ஏற்பட்டு, அதன் விளைவாக சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். அதன் பிறகு சமரசம் ஏற்படுகிறது. அந்த நிலையில், தொழிற்சங்கத் தலைவர், சிறைக்குள்ளே இருப்பவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா ? அதுபற்றி அரசாங்கத்திற்கு விவரம் தெரியுமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கடந்த அரசாங்கம் அப்படி செய்தது உண்மை; இந்த அரசாங்கமும் அப்படியே செய்து கொண்டு வருகிறது. அதுதான் சரியான கொள்கை என்றும் கருதுகிறது.

### பவநகர் நிதி

* 88 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

பவநகர் நிதியிலிருந்து காச நோயாளிகளுக்கு மட்டும் உதவி செய்யப்படுகிறதா ? அல்லது வேறு என்னென்ன வகை நோயாளிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பவநகர் நிதியிலிருந்து ஆண்டு வருமானம் ரூபாய் 1,500.00-க்கு மேற்படாமலும் மருத்துவ மனையிலோ அல்லது உடல் நலம் பெறும் மனையிலோ தங்கி சிகிச்சை பெறாத காச நோயாளிகளுக்கு மட்டும் உதவி அளிக்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், காச நோயாளிகளுக்கு எப்படி உதவி அளிக்கப்படுகிறதோ, அதே மாதிரி, தொழுநோய், அதாவது லெப்ரஸி, வியாதியால் வருந்துகிறவர்களுக்கும் உதவி செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதிலே உதவி அளிக்க காச நோயாளிகளுக்கு மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழு நோயாளிகளுக்கு உதவியளிக்க இடம் இல்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** நோயாளிகளுக்கு மாதந்தோறும் எவ்வளவு ரூபாய் உதவியாகக் கொடுக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரூ. 1,500-க்கு மேல் வருமானம் இல்லாதவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 10 என்று கொடுக்கப்படுகிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரவலாக காச நோயாளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருப்பதால் மருத்துவ மனைகளில் தங்கி அவர்கள் சிகிச்சை செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இருக்கின்ற மருத்துவ மனைகளில் படுக்கைகளை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது உள்ள நிலையில் காச நோய்க்கு மருத்துவ மனையிலேயே இருந்து சிகிச்சை பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்களே பதில் கொடுத்திருக்கிறார்கள். மேலும், என்பேரில் போடப்பட்ட வழக்குகளை இப்பொழுது திரும்பப் பெறப்பட்டிருப்பது மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சிகாலத்திலேயே, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் 20 செக்ஷன்களில் என்பேரில் போடப்பட்ட வழக்குகளில் நான் தண்டிக்கப்பட்டிருந்தால், கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்குத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அன்று இருந்த முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், எப்படியும் சமரசம் ஏற்பட வேண்டும் என்றும், கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும் என்றும் நல்ல நோக்கத்துடன், அந்த வழக்குகளைப் போடவில்லை. அப்படி பரம்பரையாகத் தள்ளிப்போடும் முறையில்தான் இப்பொழுதும் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் காவல் துறையினரை அவமானப்படுத்தும் முறையில் ஏதாவது செய்ததாக எப்.ஐ.ஆர்.-ல் தகவல் ஏதாவது இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு) இருக்கட்டும். சட்டமன்றத்திலே உள்ள ஓர் உறுப்பினர் மீது வேண்டுமென்றே பழி சுமத்த வேண்டும் என்கிற நோக்கோடு சொற்கள் கையாளப்படுகின்றன. அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கலாமா ? அப்படிக் கேட்காமல் இருக்க வேண்டும் என்று உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர் . . . .

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். ஒவ்வொரு அங்கத்தினரும் எந்த எந்தக் கேள்விகளைக் கேட்கலாம் அல்லது கேட்கக்கூடாது என்பதற்கான விதிகள் இருக்கின்றன. அவைபற்றி முடிவு கொடுக்க அவைத் தலைவர் இருக்கிறார்கள். அப்படியிருக்க, அதைப்பற்றித் தங்களுக்கு எடுத்துச் சொல்ல ஓர் அங்கத்தினருக்கு உரிமை இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்குக் கேட்க எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை அவர்களுக்கும் இருக்கிறது. ‘ பாயிண்ட் ஆப் ஆர்டர் ’ என்று சொல்லிக்கொண்டு எழுந்து நிற்க அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பொறுமையாக இருந்தால் எல்லாவற்றிற்கும் பதில் கொடுக்க முடியும். எப்.ஐ.ஆரில் என்ன இருந்தது என்று கனம் அங்கத்தினர் திரு. சித்தன் கேட்டார்கள். அந்த விவரம் என்னிடம் இல்லை. இரு தரப்பாரும், ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகிறார்கள், போலீசார் தொழிலாளர்களைத்



தாக்கியதாகவும், தொழிலாளர்கள் போலீசாரைத் தாக்கியதாகவும் சொல்லுகிறார்கள். இரு தரப்பினரையும் அழைத்து, அரசாங்க அளவில் பேச்சுவார்த்தை நடத்தி, சமரசப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, சமரசம் ஏற்பட்டு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. அதன் விளைவாக, தொழிற்சாலையில் இருந்த அத்தனை பிரச்சினைகளும் நல்ல முறையில் தீர்க்கப்பட்டு, நல்ல அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அதை கனம் அங்கத்தினர்கள் கேள்விகள் போட்டு கெடுக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது கேள்வி நேரம், ஒரு மணி, முடிந்து விட்டது. பேரவையின் அனுமதியின் பேரில், பாக்கி இருக்கும் கேள்விகளை முடிக்க விரும்புகிறேன். பேரவையின் அனுமதி யிருக்கிறது என்று நினைக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: May I know from the Law Minister, when charges were laid against the incumbent under Section 376, I.P.C., and that section being a grave one, why was the case withdrawn and is the withdrawal at the intervention of the Government because he happens to be a member of the ruling party, or is it because the case could not be carried on in the public Court?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் வாபஸ் வாங்கப்பட்டது என்று கேட்கலாம். ஆனால், ‘ ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ’ என்று கேள்வியைக் கேட்க வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்விகள் கேட்கும்போது, ‘ இன்ஸினுவேஷன் ’ இருக்கக் கூடாது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கத்தினர், ‘ அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ’ என்று சொல்வது தவறு என்பது வழக்கறிஞராகிய அங்கத்தினர் அவர்களே உணர்வார்கள். வழக்கறிஞராகிய அவர்களுக்குச் சட்டத்தைப் பற்றியும் தெரியும். அரசாங்கம் எந்த எந்த நேரங்களில், எந்த எந்த காரணங்களுக்காக வழக்குகளை வாபஸ் பெறலாம் என்று சட்டத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சட்டத்தைக் கொஞ்சம் கூட மீறாமல் அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. சட்டத்தை ஒழுங்காக நிலைநாட்ட, சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட, வழக்குகள் போடுவதால் மட்டும், சிறைச்சாலைக்கு அனுப்புவதால் மட்டும், சாதித்துவிட முடியும் என்று நினைப்பது சரியாகாது. அமைதியை நிலைநாட்ட வேறு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதும் அரசியலில் இருப்பவர்களுக்கும் தெரியும். நாங்கள் விரும்புவது, அமைதி நிலவ வேண்டும், தொழிலாளர்களுக்கும், தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கும் இடையே நல்ல தொடர்பு நல்ல உறவுமுறைகள் இருக்க வேண்டும் என்பது.

**திரு. டி. மார்டின் :** அவைத் தலைவர் அவர்களே, சிறைச் சாலையில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிற கைதிகளில் சிலர் காச நோயினால் அவதிப்படுகின்றார்கள். அவர்கள் சென்னை அருகிலுள்ள காச நோய் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அவர்களைச் சரியான முறையில் குணப்படுத்தாத முறையில், திரும்ப அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதுபற்றி இந்த அரசு கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படியொரு நிலைமை இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. கனம் உறுப்பினர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு நிலைமை இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

*Madras Public Buildings (Licensing) Act*

* 89 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government had made it obligatory on the part of the owners of the existing public buildings to take out licences under the Madras Public Buildings (Licensing) Act, 1965; and

(*b*) if so, by which date?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1—4—1969 முதல். இதற்கான விண்ணப்பங்களை 1—4—1968-க்கு முன்பு அனுப்பிவிட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, under this Act it is obligatory on the part of the owners of buildings to take out a licence. So, will the Government come forward to make it a compulsory affair?

(No reply)

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கட்டடங்கள் நல்ல முறையில் அமைந்து பாதுகாப்பாக இருக்கவும், தொழில் நடத்துவதற்குரிய முறையில் அமைந்திருக்கவும், மாவட்ட நகரமைப்பு விதிமுறைகளிலும், மாவட்ட சுகாதார பிரிவின் விதி முறைகளிலும் போதுமான நிபந்தனைகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது மராமத்து செய்யும் போது, கட்டடங்களைப் பார்வையிட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். அவ்வாறிருக்க, அதே நோக்கத்திற்காக இந்தப் புதிய சட்டம் தேவையில்லை என நான் கருதுகிறேன். இந்தப் புதிய சட்டம் அமலுக்கு வருமானால், சிறிய கடைக்காரர் கள் பலவிதத் தொந்தரவுகளுக்கு உள்ளாவார்கள். அரசாங்க அதிகாரிகளின் தலையீடுகள் அவசியமற்ற முறையில் அதிகமாகும். ஆகவே, பொதுமக்களின் ஒருமித்த நன்மையைக் கருதி இந்தச் சட்டத்தைக் கைவிட அரசு ஆலோசிக்குமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம், பொது மக்கள் செல்லக்கூடிய இடங்களில் கட்டடங்கள் பழுதடைந்தவையாக இருந்தால், அவற்றினால் பொதுமக்களுக்கு ஆபத்து வருகிறது என்ற நோக்கத்திலே கொண்டுவரப்பட்ட தாகும். மதுரையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக அது கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் நடைமுறையில் எந்த எந்தக் கட்டடங்களுக்கு அமலாக்கப்படும் என்று 'டெஃபனிஷன் ஆஃப் பில்டிங்'-இன்படி வரும்போது சில பேருக்குப் பாதகமாக இருக்கிறது என்ற கோரிக்கைகளெல்லாம் அரசாங் கத்திற்கு வந்திருக்கின்றன. அதை அப்போதைக்கப்போது பரிசீலித்து, எந்த எந்தக் கட்டடங்களுக்கு அது அமல் நடத்தப் பட வேண்டும், எந்த எந்தக் கட்டடங்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு தரப்படவேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயிக்கும்.

**திரு. அ. லெ. சுப்ரமணியம் :** மெட்ராஸ் பப்ளிக் பில்டிங்ஸ் (லைசன்ஸிங்) ஆக்டின்படி இருக்கும் சங்கடங்கள்பற்றி அமைச்சர் அவர்களுக்கு திருநெல்வேலி வியாபாரிகள் சங்கம் ஒரு மனுவைத் தந்தார்களா ? இப்பொழுதுள்ள சட்டப்படி, சிறு கடைகள் கூட அந்தச் சட்டத்திற்குட்பட்டு வருகின்றன. அதைத் தவிர்த்து, பப்ளிக் ஆக்ஸெஸ் இல்லாத சிறு கடைகளுக்கு விதி விலக்கு தரும் அளவுக்கு டெஃபனிஷன் ஆஃப் தி ஷாப் என்பதைத் திருத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட கோரிக்கைகள் பல இடங்களிலிருந்து அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. பொது மக்கள் செல்ல வேண்டிய இடம் என்றால், சிறு கடைகளையும் குறிக்கத்தான் செய்யும். டெக்னிகலாக அப்படிக் குறிக்கத்தான் செய்யும். ஏற்கனவே கட்டியிருந்த சிறு கடைகளெல்லாம் இந்தச் சட்டத்திற்கு ஒத்ததாகக் கட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்தும்போது மக்களுக்கு இடையூறாக இருப்பதாக மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து முடிவு செய்யும்.

**திரு. கே. விநாயகம் :** பொதுமக்கள் அதிகமாகச் செல்கிற கட்டடங்களுக்குத்தான் அதுவும் தனிப்பட்டவர்கள் வசமாக இருக்கும் கட்டடங்களுக்குத்தான் இம்மாதிரி லைசன்ஸ் எடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் சொல்லுகிறது. ஆயினும் அரசாங்கத்திற்கு உடைமையாக இருக்கும் கட்டடங்கள் எப்படி யிருக்கின்றன என்று பார்த்தால், உள்ளே போகிறபோதே 'தட', 'தட' என்று ஆடுகிற கட்டடங்கள் பலவற்றை நான் பார்த்திருக் கிறேன். குறிப்பாக, சைதாப்பேட்டையில் உள்ள டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீஸ் அந்த நிலையில் இருக்கிறது. ஆகையால், அப்படிப்பட்ட கட்டடங்களை இந்தச் சட்டத்திற்கு உள்ளிட்டுக் கொண்டுவர முடியுமா ? அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? இல்லையென்றால், அந்தக் கட்டடங்களை இடித்து விட்டுப் புதுக் கட்டடங்கள் கட்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஓராண்டுக்குள் கட்டிய கட்டடம் எதும் ‘ தட ’, ‘ தட ’ என்று இருப்பதாகத் தெரிய வில்லை. (ஆரவாரம்). அதற்கு முன்னால் அப்படிக் கனம் அங்கத்தினர் அனுபவத்தில் பார்த்திருந்தால், அதைப்பற்றி எழுதி யனுப்பினால், இந்த அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெண்மீன்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைக் கேள்விகள்

### (i) ‘ மாலைமணி ’ நாளிதழில் வந்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்ரமணியன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது—

“ சென்ற மாதம் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவை யின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாக அவர் களிடம் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும்போது சென்னை யிலிருந்து வெளிவரும் ‘ மாலை மணி ’ என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக் கிறார்கள். அந்த இதழையும் இத்துடன் இணைத்திருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென்று நான் கருதுகிறேன். ஆகவே, ‘ மாலை மணி ’ நாளிதழ் ஆசிரியரும் வெளியிடுபவருமான திரு. பி. எஸ். இளங்கோ அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையைச் சபையில் எழுப்பத் தங்கள் இசைவை வேண்டுகிறேன்.”

இதுபற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

### (ii) தமிழக அரசு தலைமைச் செயலகத்திற்கும் பேரவை மண்டபச் சுற்றுப்புறங்களுக்கும் பார்வையாளர் வருகையை ஒழுங்கு படுத்தல்.

Mr. Deputy Speaker :

Hon. Member Thiru N. S. V. Chithan has given notice of a Privilege Motion in regard to regulation of visitors to the Secretariat Buildings and the Precincts of the House. This matter of privilege will be taken up later.



## 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) சிம்ஸன் கூட்டுக் கம்பெனி தொழிலாளர்களின் பாதுகாப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இப் பேரவையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று கோரி ஒரு தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள, சட்டப்பேரவை நடைமுறை விதிகளின் 42-வது விதியின் கீழ் பேரவை அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு அனுமதியை நான் கோருகிறேன். என்னுடைய தீர்மான மாவது—

“ சென்னை சிம்ஸன் கூட்டுக் கம்பெனியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் 12—2—1968 தேதி காலை சுமார் 10 மணிக்கு அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் தங்களின் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுவதற்காக, ஊர்வலமாகச் சென்றவர்கள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை யிலிருந்துவரும் தொழிலாளர்களின் பாதுகாப்பைப்பற்றி விவா திக்க.”

தலைவர் அவர்களே, இதையொட்டி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது மிக முக்கியமான பிரச்சினையாகும். எப்படியென்றால், இன்றைக்கு அங்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த நிகழ்ச்சி எவ்வளவு முக்கியம் என்பதைப்பற்றி அல்ல. இது எப்படி அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகும் என்பதைப்பற்றி மட்டும் இரண்டே வாக்கியங்களில் உறுப்பினர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது தொழிலாளர்களுக்குரிய ஜீவாதார அடிப்படைப் பிரச்சினையைப்பற்றியதாகும். அங்கே தகராறுக்குரிய நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு குறிப்பாக அந்தத் தொழிற்சங்கத்தினுடைய தலைவர் ஒரு காங்கிரஸ்காரர்; அதே போன்று, அந்தத் தொழிலாளர்களுக்காக வேண்டி இருக்கக் கூடிய அந்த ஸ்டோர்ஸ் காங்கிரஸ் தலைமையின்கீழே இயங்கக் கூடியது. ஆகவே, பலதரப்பட்ட கருத்துடையவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த நிகழ்ச்சி எப்படி அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி என்பதை மாத்திரம் விளக்க வேண்டுமே தவிர, இதிலே யுள்ளே இருக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றி கூறக்கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** காரணத்தைச் சொன்னால் தான் நிலைமை விளங்கும். அதனால்தான் குறிப்பிடுகிறேன். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலேதான், அவர்களுடைய உரிமைகளைப் பற்றி அதிகாரிகளிடத்திலும் அமைச்சர்களிடத்திலும் கூறுவதற்காக வேண்டி, ஊர்வலமாகச் சென்றபோது, காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டு, கத்தியாலும் தடியாலும் தாக்கப்பட்டு . . .

THIRU K. VINAYAKAM: Sir, that is an allegation.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்கிற இந்த நிகழ்ச்சி எப்படி அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாக இருக்க முடியும்? ஆகவே, உங்களை மேலும் பேசவிடுவதற்கில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தாக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி வேலை நிறுத்தம் கோரி, ஊர்வலமாகச் செல்லுகிறவர்கள் தாக்கப்படுவது, தாக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படுவது, ஆகிய இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் அரசாங்கத்தின் சாதாரண அன்றாட நிர்வாக நடைமுறையிலே வரக்கூடிய நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. இது பேரவை அலுவலை ஒற்றி வைத்து விவாதிக்கப்படக்கூடிய அளவுக்கு அவ்வளவு சிறப்புடைய நிகழ்ச்சியாகத் தெரியவில்லை. ஆகவே, இதற்கு அனுமதி அளிக்க நான் மறுக்கிறேன்.

### (ii) இராதாபுர உபவட்டத்தில் பருவ மழையின்மையும், நிலவரி, கடன் தவணை வசூலும்

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி பின்வரும் பொது முக்கியத்துவமும், அவசரமும் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க பேரவையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன் :

"திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டம் இராதாபுரம் உபவட்டத்தில் பருவ மழை தவறிவிட்டபடியால் நஞ்சை, புஞ்சை பயிர்கள் விளைச்சலின்றி அங்குள்ள மக்கள் உணவும், வேலை வாய்ப்பும் கிடைக்காமல் அவதிப்படும் நிலையில் விவசாயிகள் கட்ட வேண்டிய நிலவரியையும், கடன் தவணைகளையும் கட்ட அதிகாரிகள் நிர்ப்பந்தமான நடவடிக்கை எடுப்பதுபற்றி விவாதிக்க."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பருவ மழை தவறியதனால் பயிர்கள் பாதிப்பதும், வரி கட்ட முடியாத நிலை ஏற்படுவதும் அன்றாட நடைமுறையில் ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். இதற்காக பேரவையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டிய தேவை இல்லை. ஆகவே இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.





### (iii) ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களில் வறட்சி நிலையும், நிவாரண வேலைகளும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Under rule 42 of the Assembly Rules, I have given notice of the following motion :—

That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely the severe drought in Hosur Taluk and in the western part of Krishnagiri Taluk of the Dharmapuri District, and the need to take up immediate and suitable steps.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் விதிமுறைகளின் கீழ் வரவில்லை. பொதுவாக, ஓசூர் தாலுகாவும், கிருஷ்ணகிரி வட்டாரமும் வடகிழக்கு, தென்மேற்கு இரு பருவக் காற்றுகளினால் நல்ல மழையைப் பெற்றிருக்கின்றன. வழக்கமாக விளைகின்ற நெல், ராகி போன்ற பயிர்கள் நன்றாக விளைந்திருக்கின்றன. இந்தப் பயிர்கள் எல்லாம் 50 சதவிகிதத்திற்குமேல் அறுவடையாகியிருக்கின்றன. இன்றுகாலை ஒரு மணி நேரத்திற்குமுன் தர்மபுரி மாவட்டக் கலெக்டர் இந்தச் செய்தியை அறிவித்திருக்கிறார். கனம் உறுப்பினர் கூறுகின்ற ஜனவரி முதல் ஏப்ரல் வரையுள்ள நான்கு மாதங்கள் வரை அங்கு பஞ்ச நிலைமை என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. நீர்நிலைகள் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் புஞ்சைத் தானியங்களைப் பொறுத்தவரை, கொள், கம்பு, ராகி போன்றவை நல்லமுறையில் விளைந்திருக்கின்றன. கிருஷ்ணகிரி வட்டாரத்திலும் பஞ்ச நிலைமை நிலவவில்லை. கூடுமான வரையில், ரெவின்யூ அதிகாரிகளும், மாவட்டக் கலெக்டரும் எந்தெந்தக் காரியங்களை எப்பொழுது எப்பொழுது செய்ய வேண்டுமோ அதைச் சரியாகச் செய்து வருகின்றார்கள். கனம் உறுப்பினர் கூறுகின்ற மாதிரி இது அவசரப் பிரச்சினைக்கு உரிய நிகழ்ச்சி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பருவமழை தவறுவதும், அதன்காரணமாக விளைச்சல் குறைவதும் அன்றாடம் நடைபெறும் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இது அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்ததல்லவாதலால், சபையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

### (iv) இராமநாதபுரம் மாவட்டத்தில் சில வட்டங்களில் விளைச்சலின்மையும், வரி, கடன் வசூலும்

**திரு. கரு. சீமைச்சாமி :** துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக்கையை ஒற்றிவைத்து, கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம்

வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக சிவகங்கை, திருவாடனை, முதுகுளத்தூர் தாலூகாக்களில் கண்மாய்கள் உடைபட்டு இன்னும் பழுதுபார்க்கப்படாமல் உள்ளபடியாலும், தற்போது கண்மாய்களில் தண்ணீர் இல்லாததாலும் பயிர் விளைச்சல் ஏதுமின்றி மக்கள் வாழ்க்கை நடத்த வசதி இல்லாமல் அவதிப்படும் இத்தருணத்தில் அதிகாரிகள் வரி, கடன் முதலியவற்றை நிர்ப்பந்தமாக வசூலிப்பதுபற்றி விவாதிக்க."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது 41-வது விதிப்படி அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினை ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரால் கனம் அங்கத்தினர்கள் கொடுத்துவிடுகிறார்கள். இது பருவமழை தவறியதனால் உண்டான பிரச்சினை. ஆகவே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல என்பதைக் கூறி, இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான அவசரத் தீர்மானங்களைப் பேரவைத் தலைவர் ஒன்று, தன்னுடைய அறையிலேயே பார்த்து நிராகரித்திருக்க வேண்டும். அவர் சொல்வதற்கு நேர் மாறாக பருவமழை பெய்திருக்கிறது. கனம் உறுப்பினர் கொடுத்த தீர்மானத்திற்குப் பதில் கூறும் வகையில் அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் அன்றாட நடவடிக்கைகளின் கீழ் வருகிறது என்று கூறி தள்ளிவிடக்கூடாது. அப்படித் தள்ளிவிட வேண்டுமென்றால், அதை அவருடைய அறையிலேயே தள்ளியிருக்க வேண்டும். நண்பர் திரு. சீமைச்சாமியை காரணங்களைச் சொல்லச் சொல்லிவிட்டுவிட்டு, அரசாங்கத்தின் சார்பிலும் பதில் அளிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : The hon. Member is raising the adjournment motion. If the Food Minister wants to explain, we have no objection. But he cannot crop up at any moment and try to explain the point of view of the Government. This is an adjournment motion. Is the Minister accepting the adjournment of the business of this House?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am complaining that the Government must be given a chance to explain its position, since the Hon. Deputy Speaker has afforded a chance to the Member to explain his position.

(திரு. கரு. சீமைச்சாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் கருத்துக்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தால் போதும்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சீமைச்சாமி அவர்கள் சொல்லும்படியான நிலைமை அங்கு இல்லை. வெள்ளம் வந்திருக்கும் நிலைமைதான் ஏற்பட்டது. கண்மாய்களில் எல்லாம் தண்ணீர் இல்லையென்பது நிலைமை. வெள்ளத்தடுப்புக்காக மணல் மூட்டைகள் எல்லாம் திருவாடனைத் தொகுதியில் போடப்பட்டிருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அறுவடை கொஞ்சம் காலதாமதமாகிறது. வரி கட்டவில்லையென்பதற்காக யாருடைய உடைமையும் ஜப்தி எதுவும் செய்யவில்லை. நண்பர் கூறுகிற மாதிரியான அபாயகரமான நிலைமை இல்லை. அங்கு பொதுவான சிரமங்கள் ஏற்பட்டிருப்பது வெள்ளம் அதிகமாக வந்ததால்தான். இன்றுமாலை இராமநாதபுரம் கலெக்டர் அவர்களிடம் இருக்கும் நிலைமையைத் தெரிந்துகொண்டேன். நண்பர் கூறுகிற மாதிரி அபாயகரமானது அல்ல. ஆகவே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கெனவே ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் நிலைமையை விளக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் கேட்டதால் இதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்.

## (v) கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் கைமாற்றமும், தொழிலாளர் உரிமை பாதுகாப்பும்

**திரு. எம். பூபதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, கீழ்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"கோவை நகரில் 2,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்லை தற்சமயம் உள்ள உரிமையாளர் கைமாற்றம் செய்து தொழிலாளர்களின் உரிமைகளான மூடிய நாட்களின் சம்பளம், தறிகளை ஓட்டுவது, தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் போன்ற பல உரிமைகளைப்பாதுகாக்கும் பல பொதுமுக்கியத்துவம் கொண்ட விஷயங்களை விவாதிக்க."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி அல்ல. இது அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இதற்காக பேரவையின் அலு

வல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

(vi) மதுரை கிராமப்புர, நகர்ப்புர காங்கிரஸ் அலுவலகங்கள் தாக்கப்பட்டதும், கடைகள், இல்லங்கள் இவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களும்

THIRU N. S. V. CHITHAN : Sir, under rule 42 of the Madras Legislative Assembly Rules, I beg to give notice of a motion for adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely the attack on Madurai Urban District Congress Committee and the Rural District Congress Committee Office at Madurai recently and damages caused to the shops and residences on 17th February 1968 and arrests made on that day.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போலீஸ் தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்ற நிலையில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதற்காக பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பது முறையற்ற செயல் என்று கருதுகிறேன். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாகையால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(vii) கோயம்புத்தூரில் அவினாசி சாலை ரயில் பாதைக் கடப்பு வழியில் மா சே துங்கின் ஒட்டுப்படங்கள் திடீர் தோற்றம்

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker Sir, I have given notice of the following adjournment motion :

"That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the sudden appearance of Mao Tse Tung's posters for the first time in Coimbatore near Avinasi Road level crossing."

According to rule 50 (viii) and (x) the matter to be discussed must involve more than the administration of the law and the motion must refer to a mater in which the responsibility of the Government is clearly involved. I shall explain very briefly.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போஸ்டர் ஒட்டுவது என்பது இந்தச் சர்க்காருடைய நிகழ்ச்சிக்கு எந்தவிதத்தில் தொடர்புடையது? அதற்கு சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா? நிர்வாகத்துறையில் வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமே தவிர, போஸ்டர் ஒட்டுவது ஒரு சாதாரண நிகழ்ச்சிதானே, அதைப்பற்றி விவாதிக்க எதற்காக இந்தச் சபை நிகழ்ச்சியை ஒத்திவைக்க வேண்டும்?

DR. H. V. HANDE : I want a chance to explain the exact position. The relationship between India and China is very strained. China has made aggression and we have lost several of our brothers in the recent war. To have posters of Chinese



leaders in our country is not an ordinary thing. It is a very, very serious thing and the Ministry must immediately intervene in the matter and find out telephonicaly from the Collector of Coimbatore as to who put up the posters. I want the Ministry to act immediately. The posters of Mao Tse Tung and Chou En Lai will not be tolerated in Tamilnad.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க காவல் துறையினர் இருக்கிறார்கள். சட்டத்திற்கு மீறி இது நடந்திருக்குமானால், முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அதற்காக இந்தச் சபை நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எங்காவது தவறு நடந்தால், அதைத் திருத்துவதற்கு அரசாங்கத்திடம் பாதுகாப்புகள் இருக்கின்றன. இது அன்றாட நிகழ்ச்சியாகும். இதற்காக சபை நிகழ்ச்சியை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தினால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து பேரவை விதி 41-இன் கீழ் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியம் வாய்ந்த—கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

4. கவன ஈர்ப்பு

அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தல்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கடந்த சில மாதங்களாக சர்க்கரை, வெல்லம், கடலை எண்ணெய், பருப்பு வகைகளின் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக் கொண்டிருப்பதால் ஏழைமக்களும் தொழிலாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி, குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்".

என்கிற அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN, Mr. Deputy Speaker, Sir, the Honourable Member has, in his Call Attention Notice, referred to the rising price trends of sugar, cane jaggery, groundnut oil and pulses.

I shall deal with sugar first. Till February 1967, the quantity that was released by the Government of India for consumption in the Madras State was about 16.100 tonnes per month. Dur-

[Thiru K. A. Mathialagan] [1968 பிப்ரவரி 20

ing March and April 1967 this was drastically reduced to 11,500 tonnes per month. Between May 1967 and November 1967 this was again further reduced to 9,609 tonnes per month.

The scheme of partial de-control of sugar was introduced by Government of India with effect from 23rd November 1967. According to this revised policy, 60 per cent of the production of sugar in the sugar factories during 1967-68 season will be procured under a scheme of levy and distributed among domest is consumers at a fixed price. The balance of 40 per cent will be available to the sugar factories to be sold anywhere in India at any price. The Government of Madras vehemently opposed this policy of half-way-house. The Chief Minister and I conveyed to the Union Food Minister our emphatic view that the policy of partial de-control will be a short-sighted policy and injurious to the interests of the consumers. However, our objections were overruled and the Government of India persisted in their decision to implement this policy.

Under this revised policy, from December 1967 a quantity of about 6,096 tonnes of sugar per month only has been released by the Government of India for distribution under levy system in this State and about 750 tonnes per month under open market quota. Both these put together account for only about 9,000 tonnes per month. This House appreciate that as against 16,000 tonnes of sugar per month which the State was getting from the Government of India in February 1967 we have now to manage with about half that quantity namely about 9,000 tonnes. The steep and drastic reduction by the Government of India of the sugar available to this State has created considerable difficulties for the State.

A quantity of about 6,000 tonnes per month released under levy distribution is disributed to domestic consumers in the State at a price of Rs. 1.75 per kg. In order to make atleast the minimum quantities available for distribution to domestic card holders, the State Government are making the supplies to bulk consumers from the open market quoa of about 2.750 onnes per month. Although in accordance with the policy of the Government of India the open market quota will be available to the sugar factories to be sold anywhere in India at any price, in their anxiety to ensure that at least the whole of these limited quantities are sold within the State at reasonable price, the State Government have, after negotiations with the South India Sugar Mills Association representing all the sugar factories, come to an informal arrangement with them by which this open market sugar will also be taken over by the State Government for supply to the bulk consumers in the State at a fixed price. As a result of this arrangement, the quantity of 2,750 tonnes of sugar per month available under the open market quota is being sold entirely within the State to bulk cosumers at a price of Rs. 3.65 per kg.



1968 பிப்ரவரி 20] [Thiru K. A. Mathialagan]

This House will appreciate that while the prices of open market sugar are ruling very high in other States, it has been possible for this State Government as a result of the understanding reached with the sugar manufacturers to ensure circulatin of the entire quantity of the free market sugar at a reasonable price of Rs. 365 per quintal. This arrangement has been entered into in the first instance for a period of 3 months till the end of February 1968. Government have under consideration a proposal to extend this arrangement for a further period of 3 months.

The above narration of facts will, I a msure, convince the House.

(1) that the total quantities of sugar made available to the State have been drastically cut by the Government of India by about half; and

(2) that as a result of an arrangement entered into purely at the initiative of the State Government, it has been possible to ensure to bulk consumers assured supply at the reasonably low price of Rs. 3.65 per kg.

I shall now deal with prices of Khandasari and Cane Jaggery. The State Government were deeply concerned over the steadily increasing trend in the open market prices of cane jaggery and Khandasari sugar in all parts of Madras State. These high prices also resulted in large scale diversion of sugarcane from the manufacture of sugar to that of cane jaggery and Khandasari and contributed to a substantial short-fall in the production of sugar. This Government were therefore firmly convinced that some emergency measures were necessary to arrest these alarming price trends and accordingly proposed to impose a ban on the transpot of cane jaggery and Khandasari outside the Madras State. Although this Government have been urging the Government of India for the past 9 months to grant their concurrence for imposing such a ban, I am sorry to state that the Government of India have so far not seen their way to give their concurrence. Telegraphic reminders and personal communications from the Food Minister and the Chief Minister to the Union Food Minister have not been of any avail. After several months, the Government of India have sent a reply at the official level stating that in their view the ban would not now be necessary as the prices of these commodities have already come down. Statistics of price trends reveal that there is no basis for the assumption made by the Government of India that prices have come down and that, on the contrary, prices are again tending to go up. It is frustrating to note that under the present system of distribution of powers between the Centre and the States, the State Government do not have even the authority to take such an elementary measure as imposing a ban on the movement of cane jaggery and Khandasari outside the State even when they are firmly convinced that such a decision is essential in the interests of the State.

As the concurrence of the Government of India for the ban was not forthcoming, the State Government issued on 30th October 1967 a direction under sub-clause 2 of clause 4 of the Madras Gur and Khandasari Sugar Dealers Licensing Order, 1963 to the effect that no licensee shall sell cane jaggery or Khandasari sugar to any person outside the district except on permits issued by the Commissioner of Civil Supplies, Madras. The object of this order was not to prohibit movement of cane jaggery and Khandasari from one district to another but only to regulate its sale so as to ensure that a larger quantity circulates within the State and is available to consumers throughout the State at a reasonable price. This Order has now been challenged before the Madras High Court and their judgment is awaited. I am, therefore, not in a position to canvass before the House the merits of this Order. I would, however, like to point out that as a result of this regulatory order passed by the State Government there was a significant fall in the price of jaggery between November 1967 and January 1968. The price of cane jaggery which was Rs. 270 per quintal on 20th October 1967 in Madras City had, as a result of this regulatory order come down to Rs. 180 per quintal as on 1st December 1967. The price of second sort cane jaggery in the city which was Rs. 250 per quintal as on 20th October 1967 had come down to Rs. 160 per quintal as on 1st December 1967. In Vellore, the price of special sort cane jaggery was Rs. 225 per quintal on 20th October 1967 and had come down to Rs. 152.50 per quintal on 1st December 1967. The price of cane jaggery first sort in Coimbatore was Rs. 215.38 on 20th October 1967 but had come down to Rs. 161.53 as on 1st December 1967. Statistics of price trends for all categories of cane jaggery in other districts like Tiruchirappalli and Madurai also reveal the same downward trend.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. As the Hon. Minister has pertinently pointed out, this matter is before the High Court and when the matter is not yet decided by the High Court, is it right on the part of the Hon. Minister to canvass support for the case in his favour by quoting all these figures. This matter is *sub judice* but the Hon. Minister is giving details about the price that was prevailing last year and the price that has come down now due to regulatory orders of this Government. As the matter is pending before the High Court, if the Hon. Minister goes on giving details about the price, it would mean that he is trying to influence the Judiciary to pass judgment in favour of the Government. That is not doing proper justice.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, the hon. Member is not carefully following my statement. Now I am just referring to the price trend. The Court cannot interfere with my quoting the price of cane-jaggery in November and December. I am not at all canvassing and I am not at all questioning the validity of the order. I am just putting forth the



view of the Government. This significant decrease in prices is an eloquent testimony to the wisdom of the State Government in having issued a regulatory order. The continuance of this regulatory order will now depend on the orders of the High Court on the Writ Petition challenging these orders. If, for any reason, a situation arises by which these regulatory orders cannot hold the field any longer and if the Government of India still persist in their refusal to give their concurrence to the proposal of the State Government to impose a ban on the movement of jaggery outside the State, the good work done by the State Government in curbing the price increase will be nullified and the position will once again go out of control. I am sure the seriousness of the situation will not be lost on the Members of the House and that they will endorse this Government's plea for imposing a ban on the movement of jaggery outside the State. In the light of the position explained above, the Members of this House can appreciate that the State Government have been taking all possible efforts to reduce the price of cane jaggery in the face of the none-too-helpful attitute of the Government of India.

This State's position in respect of pulses is not too happy. Madras State is chronoically deficit in respect of Black Gram, Toor and Bengalgram. The local production of Black Gram is only 10,000 tonnes whereas the total requirements of the State are about 60,000 tonnes. The net deficit of 50,000 tonnes has got to be made good mainly by import from other States, Andhra Pradesh being our main source of import. Local production of toor dhall is only 20,000 tonnes while our total requirements are as high as 85,000 tonnes. The net deficit of 65,000 tonnes has to be met by imports mainly from Uttar Pradesh, Maharashtra and Rajasthan. In respect of Bengalgram, there is no local production worth name and our entire requirements of 1,50,000 tonnes of wholegram and 1,00,000 tonnes of dhall have to be met by imports from other States. Eighty per cent of this is supplied by Punjab and the balance from Rajasthan and Uttar Pradesh. While we are thus almost totally dependent on the supply of pulses from other States, the difficulty has been aggravated by some surplus States imposing restrictions on the movement of these pulses outside the States. We have been repeatedly impressing on the Government of India that in the overall interests of the country it is essential that the surplus States should not be allowed to take such unilateral action to the detriment of other States and have been requesting the Government of India to pursuade the surplus States remove these restrictions. It is discouraging to note that so far the Government of India have neither been able to persuade the surplus States to remove these restrictions or to make an increased allotment of pulses to Madras State. Here again the earnest efforts taken by the State Government have not so far yielded results for lack of a positive response from the Government of India.

[Thiru K. A. Mathialagan] [1968 பிப்ரவரி 20

In respect of groundnut oil also this Government have been feeling very strongly that the only effective solution to curb the steadily increasing prices was to ban the export of groundnut and groundnut oil. Here also our efforts for getting the concurrence of the Government of India have not met with success and we have been literally frustrated in our attempts. Thanks however, to larger areas been diverted to groundnut in 1966–67 the production has gone up considerably and the prices of both groundnut kernel and groundut oil now appear to be amenable to some control.

I have sought to take the House into confidence about the measures taken by us to hold down the prices in respect of these important commodities. The State Government are constantly vigilant in taking effective action to hold the price line. It is however galling to note that even in respect of such vital issues affecting the day-to-day life of the people of this State under the present dispensation the State Government have little powers to pursue an imaginative and bold policy. I may, however, assure **the Members of this House that notwithstanding these difficulties** and irksome annoyances, the State Government will continue their efforts to find a lasting solution for curbing the rising prices.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானம் யார் கொடுத்திருக்கிறார்களோ, அந்த உறுப்பினருக்கு இரண்டு கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பற்றி விதி இருக்கிறது. அதன்படி. வேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் இரண்டு கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கலாம்.

* **திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற அண்டை மாநிலங்களிலே மதுவிலக்குக் கொள்கை ரத்துசெய்யப்பட்டு விட்டதால்தான் வெல்லத்தினுடைய விலை ஏறியிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அப்படியானால் எந்த அளவுக்கு வெல்லத்தினுடைய விலை ஏறியிருக்கிறது ? இந்தியா முழுதும் மதுவிலக்குக் கொள்கையை அமலாக்க வேண்டுமென்று இந்த அரசு யோசனை கூறுமா ? பருப்பு அந்த மாநிலத்தால் தடைசெய்யப்பட்டது. நம்முடைய மாநிலத்திலே நாம் தடைப் படுத்துகிறபோதெல்லாம் மத்திய சர்க்காரிடமிருந்து அது பற்றி அனுமதி வரவில்லை, அனுமதி வரவில்லை என்ற நிலைமை இருக்கிறதே இதுபற்றியும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

(விடை இல்லை)



1968 பிப்ரவரி 20]

5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தொழிலாளர்கள், தொழிற்சாலைகள்' பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாம் அறிக்கையை இப்பேரவையின் முன் வைக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் புதிய அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை முதன் முதலாகத் தமிழில் பேரவையின் முன் அளிப்பதைத் தனக்குக் கிடைத்த பெருமையாக மதிப்பீட்டுக் குழு கருதுகிறது.

6. அரசினர் மசோதா

தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா

(சட்டப் பேரவை மசோதா எண் 3/1968)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1968) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, குறுந்தலைப்பு, அட்டவணை முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இம் மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

7. ஆளுநரின் பேருரை மீது விவாதம் (தொடர்ச்சி.)

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் நல்ல முறையான ஒரு உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். என்றுமே இல்லாத ஒரு முறையில் இன்றையதினம் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய யதார்த்த

சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்டு உரை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இதிலே மிக முக்கியமாக வரவேற்க வேண்டிய விஷயம் என்னவென்றால், மாணவர்களிடையே இன்றைய தினம் ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு எதிர்காலத்தில் மாணவர்கள் தங்களுடைய காரியத்தைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென்ற முறையில் கல்வியில் அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இரண்டாவதாக, மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் இடையே இருக்கக்கூடிய வேறுபாடுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். - மத்திய அரசாங்கம் எல்லா அதிகாரங்களையும் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு காங்கிரஸ் அல்லாத மாகாண அரசாங்களைப் பொருத்து இன்றையதினம் பாரபட்சம் காட்டக்கூடிய முறையில் நிதி வசதிகளையும், இதர உதவிகளையும் சன்னஞ்சன்னமாகக் குறைத்துக்கொண்டே வருவது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இது நாட்டில் ஏற்படக்கூடிய, ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில்களையும், இதர அபிவிருத்திகளையும், பாதிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும். ஆகவே, மத்திய அரசாங்கம் இம்மாதிரியான ஒரு பாரபட்சத்தைக் காட்டாமல் மாநில அரசாங்கங்களுக்கு, தமிழகத்திற்குத் தேவையான நிதியைக் கொடுப்பது நியாயமாகவும், பொருத்தமாகவும் இருக்கும். இந்த மாநிலத்திற்குத் தேவையான அளவுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கோரி, புதிய நிதிக் கமிஷனை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள்.

இந்த உரையிலே விவசாய அபிவிருத்தியைப் பற்றி அதிகமான அளவிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயி அபிவிருத்தியிலே அதிகமான அக்கறையைத் தமிழக அரசு செலுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு வெகு தீவிரமாக விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக பல்வேறு வகைகளிலே இன்றையதினம் வேலைகளைத் துவக்கியிருக்கிறார்கள். அதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வேளாண்மைக்கு மிக முக்கியமானது உரம். இந்த உரத்திற்குக் கொடுத்து வந்த உதவியை மத்திய அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. அதிலே, தேவையில்லாத அளவிற்குத் தங்களுடைய அதிகாரத்தை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். கூட்டுறவு நல்ல முறையில் அமைய வேண்டுமென்பதற்காகத் தமிழக அரசு கூட்டுறவுத் துறை பற்றிப் பரிசீலிப்பதற்காக வேண்டிய நடவடிக்கை எடுத்து திரு. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி நல்ல முறையில், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைக் கொடுக்கக்கூடிய முறையிலே இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய ஊழல்கள், ஒழுங்கினங்களைப் போக்கக்கூடிய முறையில் ஆலோசனைகளைக் கூறுவார்கள் என்று நம்புகிறேன்.





வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை இன்று அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிக உற்பத்தி செய்து நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய உணவுப் பற்றாக் குறையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், நில உறவு முறையிலே மாற்றம் ஏற்பட வேண்டும். நிலத்திலே நேரடியாகப் பாடுபடுகின்றவர்களுக்கும், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்களுக்கும் நிலத்திலே நெருக்கமான உறவு இருந்தாலொழிய நாம் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது.

குத்தகைதார் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை இந்த ஆண்டே செய்தால் மிக மிக உதவியாக இருக்கும். சென்ற கால ஆட்சியாளர்கள் வருஷா வருஷம் இதைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தார்களே தவிர, ஒன்றும் செய்யவில்லை. அதே மாதிரிதான் இப்போதும் சொல்லப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டுக்கு இடம் இல்லாத வகையில் குத்தகைதார் சட்டத்தை அவர்களுக்குக் கடன் வாரம் மற்ற வசதிகள் கிடைக்கத்தக்க வகையில் திருத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு விவசாயத் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அதிக உணவு உற்பத்தி செய்வதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செய்திருந்த போதிலும், அதிகமான மழை பெய்திருப்பதால் ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இன்னொரு பகுதியை எடுத்துக் கொண்டால், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு, மூன்று தாலுகாகளில் போதுமான மழை இல்லாததன் காரணமாகப் பயிர்கள் தீய்ந்து விவசாயிகள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக மழை பெய்ததன் காரணமாக 50,000 ஏக்கர் நிலங்கள் பத்துப் பதினைந்து நாட்கள் நீரில் மூழ்கி இருந்ததால், அங்கும் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தியும்கூட இப்படி ஒரு நிலைமை எதிர்பாராத அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். விளையாத நிலங்கள், பாதிக்கப்பட்ட நிலங்களுக்கெல்லாம் நில வரியை ரத்து செய்ய வேண்டும். தண்ணீர்த் தீர்வையை ரத்து செய்யவேண்டும். இதனால் குத்தகை விவசாயிகள் பெரிய அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குத்தகையைத் தள்ளுபடி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் குத்தகைதாரர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். வறட்சியான பிரதேசங்களில் விவசாயத் தொழிலாளிகளுக்கு யாய விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க நியாய விலை உணவு தானியக் கடைகளைத் திறந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 பிப்ரவரி 20

உணவுக் கொள்முதல் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உணவுக் கொள்முதல் சம்பந்தமாக, கொள்முதல் செய்யும்போது ஒரு ஏக்கர் வரையில் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டு ஒரு ஏக்கருக்கு மேல் உள்ளவர்களுக்கு பத்து ஏக்கர் வரையில் லெவி நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது சரியாக இருக்க முடியாது. அவ்வாறு இருப்பதன் மூலம் சாதாரண விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள். ஆகவே மூன்று ஏக்கர் வரையில் விதி விலக்கு அளித்தாக வேண்டும். மூன்று ஏக்கர்களுக்கு உட்பட்டவர்கள் அவர்கள் தானியத்தை அவர்கள் இஷ்டத்திற்கு விற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு பரிபூரண உரிமை அளிக்கவேண்டும். மூன்று ஏக்கர்களுக்கு மேல் பத்து ஏக்கர் வரையில் உள்ளவர்களுக்கு லெவி முறையில் நிர்ணயம் செய்துவிட்டு பத்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட நிலப் பிரபுகள்— அவர்கள் எப்போதுமே ஏமாற்றுவதில் கை தேர்ந்தவர்கள், உணவைப் பதுக்கி வைத்திருக்ககூடியவர்கள், அவர்களிடம் சென்று அதிகாரிகள் கொள்முதல் செய்ய தயக்கம் காட்டிக்கொண்டு வருவார்கள். பத்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடம்— தானியங்களை எல்லாம் செலவு போக மிச்சமுள்ளதை எல்லாம் கொள்முதல் செய்யவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதுதான் சரியாக இருக்க முடியும்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்காக அதிகச் செலவு ஏற்படுகிறது. அம்மாதிரி அதிகம் செலவு செய்து விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் செய்திருப்பது போதுமானதல்ல. அதையும் நாங்கள் குறிப்பிட்டு வருகிறோம். ஆகவே, அவ்விலையை உயர்த்துவதுதான் நியாயமாக இருக்க முடியும். அதையும் ஆலோசனை செய்ய வேண்டும். அவ்வாறு விலையை உயர்த்திக் கொடுப்பதால் அவர்களுக்கு ஊக்கம் ஏற்பட்டு அதிக உற்பத்தி பெருகுவதற்கான நிலை ஏற்படும். விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக காலையில்கூட இங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். விவகாரங்கள் வருகிறபோது சமரசமாக தீர்த்து வைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். என்னதான் சமரசம் செய்து வைத்தாலும் தஞ்சை மாவட்ட நிலப் பிரபுக்களைப்பற்றி நம் மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் வேண்டுமென்றே விவசாயத் தொழிலாளர்களைப் பழி வாங்கியிருக்கிறார்கள். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தபோது அந்தச் சட்டப் பிரகாரம் விவசாயத் தொழிலாளிகளுக்கு அதிக ஊதியம்
முற்பகல் 11-00
கொடுக்கவேண்டுமென்ற காரணத்திற்காக எல்லா விவசாயத் தொழிலாளர்களையும், பண்ணையாட்களையும் பண்ணையிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். இன்று தினம் தினம் கூலி வேலை செய்தால்தான் அவர்களுக்கு கூலி கிடைக்கும். அப்படி கூலி கிடைத்தால்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். நிலப் பிரபுக்கள் அதிகாரிகளிடம் அல்லது அமைச்சர்களிடம் பேசுகிறபோது மிகவும் நல்லவர்கள் மாதிரி ஒப்புக் கொள்கிறார்கள். ஒப்பந்தம் முடிந்த பிறகு அப்படியே மீறிவிடுகிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய மகாநாட்டைக் கூட்டி



[1968 பிப்ரவரி 20 [திரு. ஆ. கு. சுப்பையா]

இம்மியளவுகூட கூலியும் வேலையும் கொடுக்கமாட்டோம், கூலி கொடுக்கமாட்டோம் என்று கூறி ஒரு கலகத்திற்கு திட்டமிட்டார்கள். அதோடு அங்கு சட்டம், அமைதி குலைந்துவிட்டது என்றும் கூக்குரல் போட்டார்கள். அப்படி கூக்குரல் இட்டு கலகத்திற்கு அஸ்திவாரம் இட்டு தேவையில்லாத துப்பாக்கிப் பிரயோகத்தையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். அவர்கள் தூண்டுதலின் பேரில்தான் போலீஸ் அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஆக, நிரபராதிகளாக உள்ள, ஒரு ஆதரவும் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் இன்றைய தினம் பெரிய அளவிற்குப் பாதிக்கப்படக்கூடிய நிலையை நிலப் பிரபுக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பழக்கப் பட்டவர்கள். இருபது ஆண்டுகளாக யாரோடு பேசினார்களோ, அல்லது பழகினார்களோ அந்தப் பழக்கத்தை கைவிட இன்னும் அவர்களால் முடியவில்லை. அந் நிலை இருப்பது காரணமாகத்தான் இன்றைய தினம் துர்பாக்கியமான நிலைமைகள் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. புது ஆட்சி வந்தபிறகு இரண்டு மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் என் தொகுதியில் ஒரு ஏழைத் தொழிலாளி மரணம் அடைந்திருக்கிறார். அது தேவை இல்லாத துப்பாக்கிப் பிரயோகம் என்பது அமைச்சர்களுக்குத் தெரியும்.

விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக முன்னாலேயே ஒரு சட்டம் இருக்கிறது என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னாலேயே ஒரு சட்டம் இருக்கிறது என்று சொன்னால் அந்தச் சட்டம் மற்ற மாவட்டங்களுக்கு இருக்கிறதே தவிர தஞ்சை மாவட்டத்திற்கு அது இல்லை. தஞ்சை ஜில்லா நீங்கலாக அந்தச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள விவகாரத்தைக் குறைப்பதற்காக, நிரந்தரமான ஒரு அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக விவசாயத் தொழிலாளர்களுக்கு அறுவடை காலங்களில் இவ்வளவு கூலி, உழவு காலங்களில் இவ்வளவு கூலி இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தால் எந்தவிதமான விவகாரமும் இருக்காது. அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், சட்டம் இல்லாமல் நாங்கள் எப்படித் தலையிடமுடியும் என்று. இரு தரப்பாரையும் வைத்துக்கொண்டு, இரு தரப்பாரையும் அழைத்துப் பேசலாம் என்றால் அதற்கும் அதிகாரிகள் மறுக்கிறார்கள்; நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்டதொரு இக்கட்டான சிக்கல் விவசாயத் தொழிலாளர்களுக்கு இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள்தான் இன்று உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய முறையில், அவர்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு மழையினால் ஆறுகள் உடைந்து, சாலைகள் எல்லாம் உடைந்து, பயிர்கள் சேதமாகி விட்டன. குறுவைப் பயிருக்கு தண்ணீர் இல்லாமல் போய்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 பிப்ரவரி 20

விட்டது. இதனால் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நான்கு லட்சம் ஏக்கர்களில் ஆடுதுறை 27 விவசாயம் செய்து முதல் போகம் கைப்பற்றப்பட்டிருந்தாலும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சிகரமான காரியம் என்னவென்றால் இந்த ஆண்டு அந்தக் குறுவை தானியத்தை அரசாங்கம் உடனுக்குடன் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கூட்டுறவு சங்கங்கள் மூலம் செய்தார்கள். அதேபோல் இப்போதும் சம்பா தானியத்தையும் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வியாபாரிகளை நம்பவே கூடாது. கண்டிப்பாகச் சொல்கிறேன்; வியாபாரிகளை நம்பினால் அவர்கள் ஏமாற்றி விடுகிறார்கள்; அளவிலும் நிறுவையிலும் ஏமாற்றி விடுகிறார்கள். ஆகவே அரசாங்கமே விவசாயிகளிடமிருந்து நேரடியாக தானியத்தை கொள்முதல் செய்வதுதான் நியாயமாக இருக்க முடியும். ஆடுதுறை 27 சாகுபடி செய்த நிலங்கள் நான்கு லட்சம் ஏக்கரில் இன்று இரண்டாம் போகம் அறுவடை செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது. அதையெல்லாம் கணக்கில் எடுத்து அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I wish to say a few words on the motion of thanks to the Governor for his Address. It is nearly a year since the Hon. Members of the present Cabinet took up the administration. They took up the administration with vigour, determination and assurance and they were able to maintain the same spirit throughout the year.

The Address of the Governor is somewhat lengthy. The length is due to the comprehensiveness of the points in it. It is comprehensive because it contains some interesting and important points. The first among the important and interesting points is the second World Conference on Tamil Studies. Whoever conducted the conference, it was a grand success and it had many achivements to its credit, in linguistic, aesthetic and artistic aspects. The most important and valuable contribution is in the field of linguistics. A number of eminent scholars and research workers were able to come to our State from different parts of the world and tell us the results of their research, and we learnt a lot about the ancient glory and greatness of our past. I wish to offer my thanks to the convenors of the conference and also to the people who came from distant countries and gave us valuable information.

The next thing is about the abolition of the basic land revenue on dry lands. It is a good thing that the Hon. Ministers have abolished it and I think they will abolish the basic land revenue on wet lands also this year.



1968 பிப்ரவரி 20] [THIRU K. S. KOTHANDARAMIAH]

The third point is about agricultural production. They have devoted a lot of attention to, and made elaborate arrangements for the promotion of cultivation of the high yielding variety ADT-27.

The next important thing is the one-rupee-a-measure scheme. It is a very beautiful scheme and it has helped the starving and other poor people. I request the Hon. Ministers to extend the scheme to the border belt areas of our State as the next step.

The Address contains some omissions also. The most glaring omissions are with regard to the education of the linguistic minorities in this State and the absence of any reference to the drought affected areas of our State. With regard to linguistic minorities, the Address is silent and I do not think that the Governor has forgotten or neglected to remember them. We know that he is the supreme custodian of the rights of the people including those of the linguistic minorities. Therefore, I cannot believe that he has forgotten them.

The reason for his silence over this, as far as I think and understand it, is that the question of linguistic minorities comes altogether under a different category and this will not come under the purview of the present decision, that is about the two-language formula. The question of linguistic minorities is an All-India question and it has got a separate institution. The Commissioner for Linguistic Minorities has made elaborate and adequate recommendations. The Southern Zonal Council has accepted those recommendations. The Government of India have accepted those recommendations. All the States also have accepted those recommendations and they are being implemented in many States. The Madras Government also have accepted them, and they have also issued a Government Order in 1965 stating that they would give full protection to the educational and other facilities of the linguistic minorities in the State. In this connection, I wish to express my thankfulness on behalf of the Telugu-speaking people of the State in particular and other linguistic minorities in general, for the kind assurance given by the Hon. Chief Minister of Madras with regard to the educational facilities of the linguistic minorities. We think his assurance as a Magna Carta of the rights of the lingustic minorities in this State. The assurance came so spontaneously from the depths of his impartial and compassionate heart that it gave us great relief. Our doubts are cleared and we think we need not have any apprehension with regard to the educational facilities of the linguistic minorities in this State.

In addition to this, I wish to state that the linguistic minorities should have facilities to study through the English medium in the colleges. Dr. Sir A. Lakshmanaswami Mudaliar, an hon. Member of the other House and also the Vice-Chancellor of the Madras University has also clearly stated that the linguistic minorities should be given full protection and no language should

be forced on any one. Therefore, I request the Hon. Ministers to ponder over this important problem nd see that the safeguards already enjoyed by the linguistic minorities as per the recomcendations of the Commissioner of Linguistic Minorities are maintained and also facilities like the continuation of the English medium sections in colleges, elementary and secondary schools are continued. I request the Hon. Chief Minister and the Hon. Minister for Education to consider these aspects of the matter and give an official clarification and thus protect the linguistic minorities of the State. I wish the present Ministry good luck and speed and also wish that they will maintain and promote democratic administration of this stable Government.

* **திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** சட்ட பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு மாநில ஆளுநர் பேருரையிலே நடப்பு ஆண்டில் நமது மாநிலத்தில் இது வரையில் ஒரு போக நன்செய் நிலங்களாக இருந்த மூன்று லட்சம் ஏக்கர் நிலங்கள் இவ்வாண்டு இரு போக நன்செய் நிலங்களாக ஆக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

இவ்வாண்டு நெல் கொள்முதல் 8.5 லட்சம் டன் செய்யப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டு செய்த 7.26 லட்சம் டன்னை விட ஒரு லட்சம் டன்னுக்கு மேல் அதிகமாக இருக்கிறது என்பதிலிருந்தே, இந்த ஆண்டு மழை தவறியும்கூட, இன்னும் வேறு பல காரணங்கள் இருந்தும்கூட, மகசூல் அதிகம், நல்ல விளைவு என்பதைக் காட்டுகிறது. அதோடு அகில இந்தியாவிலேயே இதுவரையில் கண்டறியாத அளவுக்கு, 10 கோடி டன் உணவு தானியங்கள் விளைவு இருக்கும் என்று அகில இந்திய உணவு தானிய வியாபாரிகள் சம்மேளனம் மதிப்பிடுகிறது. அதையொட்டி இந்திய சர்க்காரும், 9.5 கோடி டன்னுக்கு விளைவு குறையாது என்று ஏற்றியிருக்கிறார்கள். அகில இந்திய உணவு தானிய வியாபாரிகள் இந்த நல்ல விளைச்சலை முன்னிட்டு இந்திய துணைக்கண்ட முழுமையும் ஒரு மண்டலமாக ஆக்க வேண்டும், தானிய நடமாட்டத்திலும் விலைவாசியிலும் எந்தவித கட்டுப்பாடும் இல்லாவிட்டால் உணவு தானியக் கொள்முதல் சிக்கல், மாவட்டத்திற்கு மாவட்டம் அல்லது மாநிலத்திற்கு மாநிலம் இருக்கிற தொந்தரவுகள், தொல்லைகள் எல்லாம் தீரும் என்று கூறியிருக்கிறார்கள். நமது மாநிலத்திலேயே தஞ்சை, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களிலே நெல் அதிகமாக விளைந்திருக்கிறது. திருவண்ணாமலை நகரிலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்பதற்கு மேலும் ஒரு படி அரிசி 10 பைசா குறைவாக, 90 பைசாவிற்குக் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நிலையிலே, நமது மாநிலத்திலே பற்றாக்குறை மாவட்டங்களான கோவை, சேலம் போன்றவைகளில் இன்னும் விலைவாசி விஷம்போல ஏறிக் கொண்டு மக்களுக்கு கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கிற நிலைமை சாதாரணமாக ஊருக்கு ஊர் உணவு தானிய நடமாட்டக் கட்டுபாட்டினாலும், சோதனை சாவடிகளாலும், சிவில் சப்ளை அதிகாரிகள் குறிக்கீட்டி-





னாலும், தடங்கல்கள் ஏற்பட்டு, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் "இந்த ரேஷன் திட்டமோ, ஒரு படி அரிசித் திட்டமோ, அல்லது உணவுக் கட்டுப்பாடு, பங்கீடு, சோதனைச் சாவடி எல்லாமே எடுபடவேண்டும் என்பது அரசின் நோக்கம் ; அந்த லட்சியத்தைத்தான் நோக்கி நடைபோடுகிறோம்" என்று சொல்லியிருப்பது வரவேற்கத் தக்கது. அதை எப்படிச் செய்வது? படிப்படியாக எப்படிக் கட்டுப்பாட்டை தளர்த்துவது என்பதை அரசு முனைந்து யோசித்து முடிவு எடுக்க வேண்டும். படிப்படியாக மாவட்டத்திற்கு மாவட்டம் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டால்தான் நாம் காரிய சித்தி பெறமுடியும்.

இந்த ஒரு படி அரிசித் திட்டம் நமது மாநிலத்திலே 33 லட்சம் மக்களுக்குக் கொடுக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மாநில ஜனத்தொகையில் மொத்தத்தில் 10-ல் ஒருவருக்கு இந்தச் சலுகை, இந்த வரப்பிரசாதம், இந்த நிலை இருக்கிறது. மேலும் 9 பேர்களுக்கு இந்த நிலை விஸ்தரிக்கப்படுமா? எப்பொழுது? உணவு தானியக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஏழை எளியவர்களுக்குச் சந்தைகளில், ஊர் வட்டங்களில் உணவு தானிய நடமாட்டம் ஏற்பட்டு, விலை குறைய ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற எல்லாப் பிரச்சனைகளிலும் மொழிப் பிரச்சனையிலும்கூட நிதானம் காட்டி கவனிக்கலாம். அரை வயிறும், கால் வயிறுமாக இருக்கிற, பசித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களை அதிக நாள் சோதனை செய்து கொண்டிருக்கக்கூடாது. "தாயும், பிள்ளையுமானாலும், வாயும் வயிறும் வேறு" என்று சொல்லுவார்கள். எல்லோருக்கும் உணவு கிடைக்க நம்மால் ஆன சௌகரியங்களைச் செய்யவேண்டும். பொங்கல் தினத்தன்று மேலும் 88 நகரங்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று சொன்னார்கள். சாத்தியக்கூறு இல்லாததாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒத்தி வைத்துக்கொண்டே போனால் அந்த நகர மக்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அல்லது உபரி மாவட்ட நகரங்களையாவது விட்டு விட்டு பற்றாக்குறை மாவட்ட நகரங்களுக்காவது விஸ்தரிக்கவேண்டும். கிராமங்களில்கூட, குடும்பக் கார்டு உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் உணவு தானியம் கொடுக்கப்படவேண்டும். குடும்பக் கார்டு இருந்து பற்றாக்குறைப்பகுதியாக இருக்கிற பாகங்களுக்கு ஏதாவது பங்கீட்டு முறையை உடனடியாக அமல் நடத்த வேண்டும். அதை அரசு தீவிரமாக யோசித்து உடனடியாக முடிவு எடுக்க வேண்டும். சாதாரணமாக எங்கள் பகுதியிலேயுள்ள மக்களுக்கு பங்கீட்டு முறை கொடுக்காததினால், உணவுப் பொருள்கள் கிடைக்காது மக்கள் அதிகம் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். நமது மாநிலம் பற்றாக்குறை உள்ளதாக இருக்காது என்று கருதுகிறேன். சாதாரணமாக நமது மாநிலம் கேரளத்திற்கு அரிசி அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தைப்போல் அவ்வளவு உபரியாக இல்லை என்றாலும் நமது மாநிலத் தேவைக்குப் போதிய

அளவு உற்பத்தி உள்ளது. கேரளம் போன்ற அண்டை மாநிலங்களுக்கு அரிசி அனுப்புகிறோம். ஆனால் கள்ளக் கடத்தலும் அதிகமாக இருப்பது தெரிகிறது. அதைத் தடுத்து நாம் நியாயமான முறையில் உடன்பட்ட முறையில் கொடுக்கும் பாகத்தைக் கொடுப்பதோடு நிறுத்த வேண்டும்.

அறுவடைக்காலங்களில் மாவட்ட ஆளுநருக்கு இருக்கும் அதிகாரத்தை வரம்புக்கு மீறி உபயோகப்படுத்தும் நிலையில் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கோபிசெட்டிப்பாளையத்தில் கீழ் பவானி அறுவடை சென்ற அக்டோபர் மாதத்திலே துவங்கிற்று அப்பொழுது ஊருக்கு ஊர், தாலுக்காவுக்கு தாலுக்கா நெல், அரிசி கொண்டு போகக்கூடாது என்று எங்கள் மாவட்ட ஆளுநர் உத்தரவிட்டார். தொடர்ந்து தடப்பள்ளி, அரக்கன் கோட்டை அறுவடையின்போது அதிகாரிகள் தானிய நடமாட்டக் கட்டுபாடு அதிகாரத்தை மிகைப்பட உபயோகிக்கிறார்கள். வட்டத்திற்கு வட்டம் தடுத்தாலும் கூட அர்த்தமிருக்கிறது. ஆனால் அதைவிட்டு விட்டு சாதாரணமாக கிராமத்திற்குக் கிராமம் தடுக்கிறார்கள். குன்னத்தூர், கொளப்பலூர், சிறுவலூர் ஆகிய நெல் விளையாத இடங்களுக்கு நெல்லைக் கொண்டு போனாலும் வழி மறித்து பறிமுதல் செய்ததால் ஏழைமக்கள் அங்கு எப்படி நெல், அரிசி வாங்க முடியும்? நன்றாகக் கவனிக்க வேண்டும். இந்திய நாடு முழுவதும் ஒரு உணவு மண்டலமாக மாற்றுவது மற்ற மாநில அரசுகளையும், மத்திய அரசாங்கத்தையும் பொறுத்தது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம் கொண்டு போகிற உணவு தானியங்களை கட்டுப்படுத்தாமல் இன்னல் இல்லாத வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சாதாரணமாக நாம் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். கட்டுப்பாடு அதிகாரிகளையோ, சிவில்சப்ளை அதிகாரிகளையோ, பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளையோ, அல்லது ரெவின்யூ அதிகாரிகளையோ மாநாடுகளுக்கு வசூல் செய்யச் செய்வது, சிறு சேமிப்பு நிதி வசூலில் ஈடுபடுத்துவது, சர்க்கார் பத்திரங்கள் வாங்குவதில் ஈடுபடுத்துவது போன்ற காரியங்களை செய்யச் சொல்லுவதால் காலம் விரயமாகிறது. அதோடு அந்த அதிகாரிகள் பண வசூலில் ஈடுபடுவதால் மக்களுக்கு சாதாரண ஏழை மக்களுக்குப் பெரும் தொல்லை ஏற்படுகிறது. அந்த மக்கள் அதிகாரிகளின் தாட்சண்யத்திற்காகக் கட்டுப்பட்டு ஏதாவது கொடுத்தாக வேண்டி இருக்கிறது. எனவே நமது அரசு—வள்ளுவன் வாக்கைத் தலைமேல் வைத்து நடக்கும் அரசு—அதிகாரிகள் செய்யும் வசூலை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைத்து வேண்டியபடி செய்ய வேண்டும். ஏனென்றால் சாதாரணமாக அதிகாரத்திலுள்ளவர்கள்—அரசு செலுத்துபவர்கள்—கேட்பது என்பது யாசகமாகக் கேட்பதாக இருக்காது. கொடுப்பவர்களுக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணுவதாகத்தான் இருக்கும். ஏனென்றால்.





"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு".

மக்கள் அதிகாரிகளைக் கண்டு பயப்படவேண்டிய நிலை இருக்கிறது. பணம் இல்லாதவர்கள் கடன் வாங்கி பெருத்த வட்டி கொடுத்து கஷ்டப்படுகிறார்கள். எனவே அதற்கு மாற்று வழி கண்டு பிடித்து அதிகாரிகளை வசூலில் ஈடுபடுத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகரவர்களே, மேதகு கவர்னர் பெருமானின் உரையின்மீது இதுவரை சுமார் 70 சட்டமன்ற அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். 71-வது நபராக

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

நான் பேசும்படியான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். தமிழ் நாட்டு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களின் உரை என்று அச்சடிக்கப்பட்டு பேசியிருக்கிறார்களே தவிர அவர்கள் பேசும்படியான பேச்செல்லாம் ஆளுநர் அவர்களின் பேச்சு அல்ல. திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், அந்த அமைச்சரவையிலே உள்ள முதலமைச்சர், தயார் செய்து . . . (குறுக்கீடு)
கவர்னரே வேண்டாமென்று சொன்னவர்கள் இப்பொழுது நன்றி சொல்லும்படியான நிலை இருக்கிறது. நாங்கள், கவர்னர் வேண்டாமென்று சொல்ல முடியாது, சொல்லவும் மாட்டோம். முதலமைச்சர் தயாரித்த உரையை அவர்கள் படித்திருக்கிறார்கள். உரையில் என்ன இருக்கிறது என்றால், எனக்குத் தெரிந்த அனுபவத்தில் நான் அதை ஆராய்ந்தபோதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை, அவர்கள் எப்பொழுதும் பேசும்படியான பேச்சுக்களை புகுத்தி, மத்திய சர்க்கரை குற்றம் சாட்டும்படியான ஒரு நிலை இதில் இருக்கிறதே தவிர, தமிழ்நாட்டு மக்களுக்கு, தமிழ்நாட்டின் எதிர்கால வாழ்விற்கு, சுபிட்சத்திற்கு எந்தவிதமான உருப்படியான விஷயமும் இல்லை என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். குற்றம் சாட்டுவது மட்டுமல்ல, இதில் ஏற்கனவே இருந்த சர்க்கார் பாழ்படுத்திவிட்டுப் போய் விட்டார்கள், அவர்களது ஆட்சியில் ஏற்பட்ட இந்தத் தவறுகளினால் குட்டிச்சுவராகிவிட்டது என்று கட்சிப் பிரச்சாரத்தைப் புகுத்தியிருப்பதைத்தான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதில், தவறுகள் நடந்துவிட்டன, 20 வருஷ ஆட்சியில் முன்னேற்றம் இல்லை என்ற குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த சர்க்கார் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டதையெல்லாம் விட்டுவிட்டு எந்த நிலையும் இல்லை என்று பொறுப்பில்லாமல் ஒரு வாக்கியத்தைப் புகுத்தியிருக்கிறார்கள் என்பது வருந்தத் தக்கது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னால் 30 லட்சம் டன் இருந்தது.

முடிந்த பிறகு 38 லட்சம் டன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தவுடன் 45 லட்சம் டன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தபின் 53 லட்சம் டன். 1966-67-லே இப்பொழுது 2, 3 லட்சம் டன் உபரியாக இருப்பதாக எனக்குத் தெரிந்த தகவல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், "இதற்கு முந்திய திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாமல் இருந்தமைதான் இன்றைய நமது பொருளாதாரச் சீர்கேடுகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் என்று இந்த அரசாங்கம் உணர்கிறது" என்று இதற்கு முன்னாலிருந்த சர்க்காரின் மீது அநீதியான, நியாயத்திற்கு விரோதமான குற்றச் சாட்டைச் சாட்டியிருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகிறேன். உணவு உற்பத்தியில் 30 லட்சம், 38 லட்சம், 45 லட்சம், 53 லட்சம் என்று அதிகரித்துக்கொண்டே வந்திருப்பதற்கு இந்தச் சர்க்கார் நிச்சயமாகப் பொறுப்பல்ல. முந்தைய சர்க்கார் இந்தத் திட்டங்களையெல்லாம் எடுத்துச் செய்திருக்கிறார்கள். இவர்கள் வந்து 2, 3 வருஷங்கள் திட்டம் போட்டு பிறகு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம். இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் சர்க்கார் வேளாண்மை உற்பத்திக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று கூட சொல்லவில்லை. திட்டாமல் இருந்தால் போதுமென்றுதான் சொல்லிக்கொள்கிறேன். ஏ.டி.டி. 27 எப்பொழுது வந்தது? இதற்கு யார் காரணம்? மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் இந்த வித்துக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துச் செய்தார்கள். தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்குக் காரணம், இன்று மாணவ மணிகள் சிறப்பாக இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் என்றால் மிகையாகாது; அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்றியிருக்காவிட்டால், இங்கே நிதி அமைச்சராக இருந்து 10 ஆண்டுகள் அவர் சரியாக
மு.ப. 11-30 பணியாற்றி இருந்திருக்காவிட்டால், மத்திய உணவு அமைச்சராக சிறந்த முறையிலே பணியாற்றி இருக்காவிட்டால் இன்றைக்கு இவ்வளவு தூரம் நாம் அந்தப் பெருமையைப் பேசும்படியான நிலையில் இருக்க முடியுமா என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வள்ளுவருடைய வழியிலே செல்லக்கூடிய இந்த அரசிற்கு அவருடைய குறளின் மூலமாகவே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்னும்படியான குறளை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இத்தகைய ஈடுபாட்டுக்குக் காரணம் சி. சுப்பிரமணியம் அவர்கள். ஆனால் அதேநேரத்தில் அவர் நான்தான் இந்த ஏடிடி 27-ஐ கண்டு பிடித்தேன் என்று சொல்லவில்லை. இத்தனைக்கும் காரணம் அவர்கள் தான். காங்கிரஸ்காரர்கள் செய்த திட்டங்களை தொடர்ச்சியாக நாங்கள் நன்றாக செய்து இருக்கிறோம், அதை செய்து வருகிறோம் என்று சொன்னால் அது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால் இதிலே ஏற்கெனவே திட்டம் செய்யப் படவில்லை



என்று சொல்வது தான் வருத்தத்திற்குரிய விஷயம். இந்த திட்டத்தை நாங்கள் செய்து இருக்கிறோம் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் போடப்பட்டிருக்கிறதா? இன்னின்ன திட்டங்கள் எங்களுடையவை; இந்த இந்த திட்டங்கள் நாங்கள் வகுத்தவை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனவா? குறிப்பிடவில்லை. ஒரே குழப்பமாகத்தான் இந்த கவர்னருடைய பேச்சு இருக்கிறது. குட்டையைக் குழப்புவதிலேயும் எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் மேல் குற்றச்சாட்டு சாட்டுவதிலேயும் தான் இந்த பேச்சு இருக்கிறது. அவர் மட்டுமல்ல; சர்க்கார் கட்சியைச் சேர்ந்த பலர் இந்தக் குற்றச்சாட்டைச் செய்திருக்கிறார்கள்.

நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் யார் மேலாவது பாரபட்சமாக நடந்து கொள்கிறதா? காங்கிரஸ் அல்லாத மந்திரி சபையும் இருக்கிறது. சில மாநிலங்களிலே—காங்கிரஸ் ஆட்சி செய்கிற மந்திரி சபையும் இருக்கிறது—சில மாநிலங்களிலே. மத்திய சர்க்கார் காங்கிரஸ் ஆதரிக்கிற மந்திரி சபைகளுக்கு ஒரு சலுகையாவது கொடுத்து பாரபட்சத்துடன் நடத்துகிறது, காங்கிரஸ் அல்லாத சர்க்கார் இருக்கும்படியான மாநிலங்களில் அந்த மாதிரி சலுகைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லியிருப்பார்களேயானால் அது வாஸ்தவம் தான் என்று ஏற்றுக் கொள்ளலாம். மத்திய சர்க்காரிலே இருக்கும்படியான பிரதம அமைச்சர் அவர்களும் பாக்கி இருக்கும்படியான அமைச்சர்களும் எந்த சர்க்கார் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும் காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களுக்கு ஒரு விதமாகவும் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களுக்கு ஒரு விதமாகவும் பாரபட்சம் காட்டாமல்தான் நடந்துகொண்டு வருகிறது. அப்படித் தான் நாங்கள் நடந்து கொண்டு வருகிறோம். காங்கிரஸ் அல்லாத சர்க்காருக்கு பாரபட்சம் காட்டுகிறார்கள் என்று வலியுறுத்தி வலியுறுத்தி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அப்படி ஏதாவது நிலையைக் காட்ட முடியுமா? குறிப்பாக இன்னின்ன காரியங்களிலே அவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுத்தார்கள், எங்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்க வில்லை என்று காட்ட முடியுமா? அப்படி காட்டியிருப்பார்களானால் நாம் ஏற்றுக் கொள்ளலாம். நாம் மீண்டும் கேட்கலாம். நானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு பாரபட்சம் காட்டாதே, எங்களுடைய நிலையை வேறுவிதமாக நினைக்காதே என்று வாதிடலாம். நாம் ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் இருக்கிறோம். சுதந்திரத்திற்குப் பின்னாலே இருந்து நாம் அரசியல் சட்டத்தின்படிதான் நடந்து வருகிறோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மாதிரி நிலையில் இருக்கும் போது இந்த ஆளுநர் உரையிலே போற்றும்படியான புதுத் திட்டங்கள் ஒன்றுமே கிடையாது.

ஏற்கனவே போட்டிருக்கும்படியான திட்டங்களை, ஏற்கனவே நடந்துகொண்டிருந்த திட்டங்களை—அந்தத் திட்டங்களை வைத்துக் கொண்டு குறை சொல்வது கொஞ்சமும் பொருத்தம் இல்லை.

ஏதாவது புதுத் திட்டங்கள் வைத்திருந்தால், அதைப்பற்றி சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு எல்லாம் அவர்களுடைய பொருளாதார சீர்குலைவுதான் காரணம் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன். குற்றச்சாட்டு என்றால், அவர்கள் எடுக்கும்படியான திட்டங்கள் எல்லாம், அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்தபொழுது கூறினார்கள் எங்களுக்கு ஆளுவதற்கு வாய்ப்பு கொடுத்தால் நாங்கள் இன்னின்ன செய்வோம் என்று, அப்படி அவர்கள் சொன்னபடி நடந்துகொள்ளவில்லை என்பது தான். உடனே அவர்கள் சொல்லுவார்கள் நாங்கள் சொல்லியபடி தான் படி அரிசி போடுகிறோம் என்று. அந்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்வார்கள். படி அரிசி திட்டம் வேண்டாமென்று நானோ காங்கிரஸ் கட்சியோ சொல்லவில்லை. ஆனால் அந்தத் திட்டத்தினுடைய விளைவு என்ன? இந்த நாட்டு மக்களுடைய 5 கோடி ரூபாய்—அவர்களுடைய பொருளாதாரம் வேறு விதமாக பிரயோஜனமாக பயன்படவேண்டிய பணத்திலே துண்டு விழுகிறது. இந்த 5 கோடி ரூபாய் செலவைப் பற்றி மேலெழுந்தவாரியாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இதற்கு ஆன செலவு, இதற்காக ஏற்பட்ட நிலை வரவு-செலவு திட்டத்திலேதான் வரும். இப்பொழுதுள்ள நிலையில் இதற்கு 5 கோடி ரூபாய்தான் துண்டு விழும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 5 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்களே, இது யார் யாருக்குப் போயிருக்கிறது, எங்கே எங்கே போயிருக்கிறது என்பதைப்பற்றி சிந்தித்திருப்பார்களா? அப்படியே இருந்தாலும் எல்லா மக்களுக்கும் பிரயோஜனப்படுகிறதா? முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள், இது எங்களுக்கு கடமை என்று. இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு ஏதாவது அனுகூலம் செய்திருக்கிறார்களா ? அதற்குப் பதில் சொல்வார்களா ? முன்னாலே இத்தனை லட்சம் கொடுக்கப்பட்டது என்றால் அதையே தான் இவர்களும் கொடுக்கிறார்கள். ஏதாவது, அதிகமாக கொடுக்கப்படுகிறதா இப்பொழுது ? சுமார் 50 லட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறார்கள். எத்தனையோ கோடி ரூபாய்களை இப்பொழுது மற்ற திட்டங்களுக்குப் போடுகிறோம். ஆனைப் பசிக்கு சோளப் பொறி போட்ட மாதிரி சில லட்ச ரூபாய்களை அதிகமாக கொடுத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

410 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது இதற்காக. 10 லட்சம் ரூபாய் எக்ஸ்ட்ரா கொடுத்துள்ளார்கள்—கடன் கொடுப்பதற்கு. 50 லட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுத்துள்ளார்களே, அது போதுமா? ஆகையினாலே இப்பொழுது இருக்கும்படியான இந்த உணவுப் பிரச்சினை பெரிய பிரச்சினை, சிக்கலான பிரச்சினை. சாதாரண பிரச்சினை அல்ல. உழுபவனுக்கு நிலம் சொந்தம்; உழுபவனுக்கு அவன் உழுகிற நிலம் கொடுக்க வேண்டுமென்ற





நிலையிலே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். உழுகிறவனை அந்த நிலத்தை விட்டு நீக்கக் கூடாது என்று சட்டம் வைத்திருக்கிறோம்.

நேற்று இடதுசாரி கம்யூனிஸ்டை சேர்ந்த ஒரு அன்பர் பேசிக்கொண்டிருந்தார்கள். என்னுடைய அறையிலே இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படி கேட்கும்படியான நிலையிலே அவர்கள் இரட்டை நாக்கிலே சொல்லுகிறார்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர்—எதிர்க்கட்சித் தலைவர்—இரட்டை நாக்குடனே பேசுகிறார்கள் ; படி அரிசி வேண்டுமென்று கேட்கிறார்கள், அதே நேரத்திலே விலைவாசியை அதிகமாக்க வேண்டும் என்று கேட்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் எப்பொழுதும் இரட்டை நாக்கிலே பேசுவதில்லை. அதைப் பேசும்படியான கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இரட்டை நாக்கிலே பேசுவார்கள். தொழிலாளர்களுடைய குறை நீங்க வேண்டுமென்பார்கள். அதே நேரத்தில் முதலாளிகளோடு போய் உங்களுக்கு சௌகரியமே இல்லை; இன்னும் வருவாய் அதிகம் வேண்டுமென்று சொல்லுவார்கள். அங்கே பார்த்தால் சீனாவோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இங்கே மா-சே-துங்கினுடைய படத்தை ஒட்டியும் இருப்பது அவர்களே தவிர நாங்கள் அல்ல என்பதை நிச்சயமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிகமான விலை வேண்டுமென்று கேட்பது மிராசுதாரர்களுக்கு அல்ல; நிச்சயமாக மிராசுதாரர்களுக்கோ அல்லது நிலச்சுவான்தாரர்களுக்கோ அல்ல. நான் பெரிய குடும்பத்தின் வழி வந்தவன் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சாதாரண நடுத்தரக் குடியானவன். அதுதான் உண்மையான நிலை. நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்; உற்பத்தியை அதிகமாகப் பெருக்கினேன். எங்களுடைய குடும்பத்திலே இருக்கும்படியான விளை பூமியில் எங்களுக்குப் போதுமான அளவுதான்—என்னுடைய குழந்தை குட்டி எல்லோரையும் சேர்த்து, குடும்பத்தினர் எல்லோரையும் சேர்த்து—சட்ட வரம்புக்குட்பட்டுதான் வைத்திருக்கிறேன், அதற்கு மேல் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். எல்லாரையும் சேர்த்து, சட்ட வரம்புக்கு மேல் இல்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய பாட்டனார் ஒரு சாதாரண ஏழை. அவர் உழைத்து, உழைப்பாலே வளர்த்ததுதான் இது. பிறப்பிலேயே இருந்து வந்த நிலங்கள் அல்ல இவை. நான் பிறப்பிலே ஜமீன்தார் அல்ல; மிட்டாதார் அல்ல; மிராசுதார் அல்ல என்பதை தெளிவாக சொல்லிக்கொள்கிறேன். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் யாரும் உழைத்து உற்பத்தியைப் பெருக்க முடியும், எல்லோரும் இதைப் பெறமுடியும் என்பதைச் சுட்டிக்காட்டி ஞாபகப்படுத்தத் தான். விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளுக்குத் தக்க ஊதியம் கொடுக்க வேண்டும். உழைக்கிறவனுக்கு உயர்வு கொடுக்க வேண்டும்; குடியானவனுக்கு அதிக விலையைக் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறேனே தவிர, பெரிய மிராசுதாரர்களை

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 பிப்ரவரி 20

நினைத்து, மிட்டாதார்களை நினைத்து அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை கேட்பதாக இல்லை என்று சொன்னார்கள். ஒரு விஷயத்தை அவர்கள் சொல்லிவிட்டால் போதுமானது. மொத்தம் அவர்களுக்கு எவ்வளவு நெல் விளைந்தது? அதற்காக அவர் பெற்ற பணம் எவ்வளவு? இந்தப் பருவத்திலே எவ்வளவு வந்தது? கொள் முதலுக்காக அவர்கள் கொடுத்தது எவ்வளவு? அவருடைய குடும்பத்தில் எல்லாரையும் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளட்டும். வெளியிலே வேறு விலையிலே விற்கப்படுகிறது என்பதை தெளிவு படுத்துவதற்கு இது பயன்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்கள் கட்சியிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விலை அதிகமாக கொடுக்கப்பட வேண்டும். மிராசுதாரர்களுக்காகக் கேட்பது அல்ல இது.

(மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: குறுக்கீடு)

I will give an answer.

ஆகவே, மிராசுதாரர்களுக்காக நான் கேட்கவில்லை. விவசாயத்தில் ஈடுபடும்படியான விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களான நிலச் சுவான்தார்கள் ஆகிய எல்லோருக்கும் சேர்ந்துதான் இருக்கவேண்டும். விலை நிர்ணயம் எல்லோருக்கும்தான் இருக்கவேண்டும். ஒரு கூலியாள் ஒரு நாளைக்கு இவ்வளவு மணி நேரம் வேலை செய்தால் அடிப்படைக் கூலி இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றுங்கள். ஆணுக்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று சட்டம் இயற்றுங்கள்; பெண்ணுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றுங்கள்; பிறகு உற்பத்தியை வற்புறுத்துங்கள், யாரும் வேண்டாமென்று கூறப்போவதில்லை. முதலமைச்சர் அவர்களுக்கு இதிலே இருக்கும்படியான சிக்கல் தெரியும். நாங்கள் கொடுக்கும்படியானது ஒரு குவிண்டாலுக்கு ரூ. 48, வெளியிலே ரூ. 98 கொடுக்கிறார்கள் என்று அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்களா? கொள்முதல் செய்வது 10 சதவிகிதம்தான் என்கிறார்கள். அந்த 10 சதவிகிதத்தைமட்டும் எடுத்துக்கொண்டு பாக்கி இருப்பதைப் பிடிக்காமல் விட்டுவிடுகிறோம் என்று அவர்கள் சொல்வார்களானால் நானே அதற்காகப் போராடி சரி என்று சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த விலை சரியாக இருக்கிறது என்பது சரியான வாதம் அல்ல. நீங்கள் கொடுக்கும்படியான விலை குறைந்த விலைதான் என்பதை முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கொடுக்கும்படியான விலை குறைந்த விலை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வெளியிலே இதைவிட 2 பங்கு விலை கிடைக்கிறது. அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அந்த விலைக்கு எங்களுக்கு உத்தரவாதம் உண்டா? எந்த நேரத்தில் எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் செய்கிறார்கள். நான்கு சந்தைகளுக்கு விடுகிறார்கள்?



1968 பிப்ரவரி 20] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

ஒரு செக் போஸ்டில் இருப்பவர்களுக்கு ஏதாவது செலவுக்குப் பணம் தேவையிருந்தால், உடனே ஆரம்பித்துவிடுகிறார்கள், பதுக்கல், கள்ளக்கடத்தல் என்று. நான் சொல்வது என்னவென்றால், இந்த லெவி ஸிஸ்டம் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்க் கட்சித் தலைவர் வேண்டுமென்றே குழப்ப விரும்புகிறார்கள். கொள்முதலுக்குக் கொஞ்சம்தான் நாம் எடுத்துக்கொள்கிறோம். அதுபோக மீதி உள்ளதை அவர்கள் சுதந்திரமாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் ரொம்ப விலையை ஏற்றி விடக்கூடாது, அதனால் வேறு கொள்முதல் காரியங்கள் தடைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் அங்கு அங்கு சோதனைச் சாவடிகள் வைத்திருக்கிறோம். யாராவது தவறுதல் செய்தால் சொல்லட்டும். அதைவிட்டுவிட்டு, எங்கு வேண்டுமானாலும் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பொழுதே நல்ல விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் பாக்கியிருப்பதை எவ்வளவுக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்கிறார்கள். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொள்முதலுக்கு அதிகமாகவே கொடுக்கிறார்கள், முதல்முதலாகக் கொடுத்துவிடுகிறார்கள், எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அவ்வளவையும் கொடுத்துவிடுகிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் ஊரிலே கொள்முதலுக்கு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கிறார்கள். அரசாங்கம் எவ்வளவு கேட்டதோ அதற்கு மேலேயே கொடுத்துவிடுகிறார்கள். 3,000 மூட்டைகள் அவர்கள் பக்கத்தில் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 30 மூட்டை விளைகிறது என்றால், ஒரு ஏக்கருக்கு கிடையாது, இரண்டு ஏக்கருக்கு 4 மூட்டைகள் கொடுக்க வேண்டும். ஏ.டி.டி. என்றாலும் இவ்வளவு நாட்களாக விளைச்சல் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகுதான், அண்ணா அவர்களின் ஆட்சியில்தான் இந்த நிலை ஏற்பட்டது. 30 மூட்டையிலே இரண்டு மூட்டை கொடுத்துவிட்டு, மீதி 28 மூட்டைகளை அவர்கள் நினைத்த விலையில் விற்கிறார்கள். அதற்காக இன்று எல்லோருக்கும் அரிசி வழங்குவதற்குச் செய்திருக்கக்கூடிய ஏற்பாடுகூட இல்லாமல், கேரளத்திற்கு விற்றுவிடவேண்டும் என்று சொன்னால் ஒத்துக்கொள்வதற்கில்லை. இப்பொழுது ஒரு இடைஞ்சலும் இல்லை, நல்ல விலைக்கு விற்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்படி அமைச்சர் அவர்கள் குறுக்கீடு செய்துகொண்டிருந்தால் என்னால் பேச முடியாது. நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டும் என்று நாம் ஒரு தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். பூரணமாக நான் பேசுவதைக் கேட்டுக்கொண்டு, அதற்குப் பின்னால் பதில் அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் குறுக்கிட்டு என்னைப் பாராட்டினார் என்றாலும், எனது மனதைத் திருப்பிவிட அவர் ஒன்றும் சொல்லவில்லை. 30 மூட்டைக்கு இரண்டு மூட்டை

கொடுப்பதுபற்றியெல்லாம் சொன்னார்கள். ஏக்கராவுக்கு 11 மூட்டை வீதம் சராசரி அளந்துவிட்டிருக்கிறேன். குடும்பம் பூராவுக்கும் சொல்லுகிறேன். 20 வருஷ காலமாக கொள்முதல் என்றால் காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும்சரி, எந்தக்கட்சி ஆட்சியாக இருந்தாலும்சரி, எனது குடும்பத்தில் சொல்லி யிருக்கிறேன், எனது தகப்பனார், எனது மனைவியிடம் சொல்லி யிருக்கிறேன், கொள்முதலுக்கு முதலில் கொடுத்துவிட்டுத்தான் பிறகு வீட்டிற்கு எடுத்துக் கொண்டுவரவேண்டுமென்ற நிலை தான். எப்பொழுதும் என் குடும்பத்திற்கு நஷ்டம்தான். கொள் முதலுக்கு ஆதரவு கொடுத்தாலும், இருக்கக்கூடிய கஷ்டத்தை, விவசாயிகளுடைய கஷ்டத்தை எடுத்துச் சொல்லக்கூடாது என்று சொல்ல முடியாது. பாராட்டினார்கள், நன்றி. இருக்கக்கூடிய நிலையைத்தான் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. நான் கொடுத்துவிட்டாலும் சந்தோஷமாக இல்லை. ஏனென்றால், கருப்பு மார்க்கெட்டில் விற்று லட்சக்கணக்கான ரூபாய் வைத்துக் கொண்டிருக்கவில்லை நான். என்னுடைய நிலை என்னுடைய கையிலே காசு இல்லை என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஆளைப் பார்த்தால் பெரியதாகத் தோன்றலாமேதவிர, கொள்முதல் திட்டத்தினால் எனக்கு எத்தனை லட்சம் ரூபாய் நஷ்டம் தெரியுமா ? ஒரு ஏக்கரில் விற்றதை வைத்துக்கொண்டு சராசரி சொல்வதில் பிரயோசனம் கிடையாது. உற்பத்திச் செலவை வைத்துக் கொடுக்கும்படியான விலை இருக்க வேண்டும், உற்பத்திச் செலவுக்குக் கட்டுபடியாகக்கூடிய நியாயமான விலையாக இருக்க வேண்டும். நாங்கள் படி அரிசித் திட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அதில் நஷ்டம் ஏற்படுகிறது, அதற் காகத்தான் நாங்கள் இந்த விலை கொடுக்கிறோம் என்று வாதாடி னால் நான் அதை ஆட்சேபிக்கவில்லை. மத்திய சர்க்கார் உணவு அமைச்சர் பாராட்டுகிறார்கள் என்று சொல்லலாம். எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால், உண்மை நிலை அது மாதிரி இல்லை.

ஆந்திர சர்க்கார் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 60-லிருந்து ரூ. 70 வரையில் கொடுக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில், காங்கிரஸ் அல்லாத சர்க்கார் இருக்கும்படியான இடத்தில், ரூ. 60, 65, 70 என்று கொடுக்கப்படுகிறது. கேரளத்தில் காங்கிரஸ் சர்க்கார் கிடையாது. அங்கே ரூ. 75 குவிண்டாலுக்கு கொடுக்கப் படுகிறது. நான் உத்தரவாதம் தருகிறேன். இந்த சர்க்கார் குவிண் டாலுக்கு ரூ. 60 நெல்லுக்குக் கொடுக்கிறோம் என்று மத்திய சர்க்காருக்கு எழுதட்டும், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால், 'நாங்கள் எழுதினால்கூட அவர்கள் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள்', என்று சொல்லித் தயவுசெய்து தப்பித்துக் கொள்ள வேண்டாம். கட்டுபடியான விலை ரூ. 60, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 60, 65, 70 மூன்று ரக நெல்லுக்கு என்று குடியானவர்களுக்குத் தந்துவிட்டோம் என்று நீங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதுங்கள். நான் மத்திய சர்க்காரிடம் சொல்லி, அதை ஏற்றுக்கொள்ளும்படி





செய்கிறேன். அவர்கள் அதற்குமேல் கிடையாது என்று உத்தரவு போட்டால், இங்கே அதற்கு எதிராகத் தீர்மானம் போடுவதற்கும் தயாராக இருக்கிறேன். பொது மக்கள் நலனைப் பாதுகாக்க, விவ சாயிகளின் நலனைப் பாதுகாக்க இந்த விலையை நாங்கள் கொடுத்து விட்டோம் என்று எழுதுங்கள். அதை மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ளும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்களே திருத்திவைத்த விலையைக்கூட நீங்கள் கொடுக்கவில்லை. ரூ. 46-லிருந்து 56 வரைக்கும் மத்திய சர்க்கார் திருத்தி வைத்திருக்கி றார்கள். மூன்று ரக நெல்லுக்கும் நீங்கள் அந்த விலைகூட கொடுக்க வில்லை. பழைய விலையைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

காங்கிரஸ் சர்க்கார் ஊழல் செய்தது என்று சொல்லிக்கொண் டிருக்கிறீர்கள். காங்கிரஸ் கொடுக்கும்படியான விலையை, போனவை நீங்கள் கொடுக்கவில்லை. விவசாயிகளுக்கு விலை கட்டுபடியாகவில்லை. உணவு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது 1966-67-க்கு முன்னால் விலைவாசிப் புள்ளி 80-ஆக இருந்தது, தாங்கள் வந்தவுடன் இப்பொழுது 20 புள்ளி ஏறியிருக்கிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். 80 புள்ளி என்பதே உச்சக் கட்டம் அடைந்துவிட்டது. அதற்குமேல் 20 புள்ளி ஏறி யிருக்கிறது. இன்னொரு விஷயத்தை எந்தச் சர்க்காராக இருந் தாலும், மறந்துவிட்டார்கள். பழைய சர்க்காரும் ஒரு விதத்தில் இதை மறந்துவிட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாழ்க்கைப் புள்ளி உயர்ந்திருக்கிறது என்றால், உற்பத்திச் செலவு விவசாயிகளுக்கு எவ்வளவு புள்ளி ஏறியிருக்கிறது என்பதை ஆராய்ந்தார்களா ? யாரும் இதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. உற்பத்திச் செலவு 1940-ல் 100 புள்ளி என்று வைத்துக்கொண்டால், அது இன்றைக்கு 1,200 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. ஏழை விவசாயக் குடிமகன்களின் உற்பத்திச் செலவு புள்ளி இப்படி ஏறியிருக்கிறது. முன்பு ஒரு மூட்டை நெல் ரூ. 5 என்றால், உற்பத்திச் செலவு ஒரு ஏக்கராவுக்கு ரூ. 30. இப்பொழுது ஏக்கராவுக்கு உற்பத்திச் செலவு ரூ. 350. ஆகவே உற்பத்திச் செலவு 11 பங்கு, 12 பங்கு ஏறியிருக்கிறது. ஆகவே, அப்பொழுது ரூ. 5-க்கு விற்ற நெல்லுக்கு இப்பொழுது 11 பங்கு விலை விவசாயிகளுக்குக் கிடைத்தால்தான் கட்டுபடியாகும். அதுதான் நியாயமான விலை. யாரும் உற்பத்திச் செலவைக் கணக்கில் எடுத்துக்கொண்டது கிடையாது. மக்களுடைய நன்மைக்காக, சுபிட்சத்திற்காக ஒரு காரியத்தைச் செய்து விட்டோம் என்றுமட்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும். உற்பத்திச் செலவு 100 புள்ளியிலிருந்து 1,100, 1,200 புள்ளிக்கு உயர்ந்திருக் கிறது. அந்த அளவுக்கு விலையும் அதிகரிக்கவேண்டாமா என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 10 பங்கு, 12 பங்கு விலைதான் பகிரங்க மார்க்கெட்டில் விற்றுக்கொண்டிருக்கிறது. அதைக் கருப்பு மார்க்கெட் என்று சொல்ல முடியாது. அந்த அந்த விலை கொடுத்து வாங்குவதற்குச் சக்தியுள்ளவர்கள் இருக்கிறார்கள். விவசாய மக்கள் 100-க்கு 75 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள்

தங்களுடைய வேறு பகுதிச் செலவுக்குத் தானியமாகத்தான் மக்களுக்குக் கொடுக்கும்படியான நிலை இருக்கிறது. அவர்களுக்கு நியாயமான விலை, உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும்படி செய்யவேண்டும். அவர்களுக்கு உற்பத்திச் செலவுக்குத் தகுந்தபடி கட்டுபடியான விலை கிடைக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேனே தவிர, மிராசுதாரர்களுக்கு நான் வக்காளத்து வாங்கிப் பேசுகிறேன் என்ற நிலை இல்லவேயில்லை. மாகாண சர்க்கார் இதுதான் விவசாயிகளுக்கு நியாயமான விலை, கட்டுபடியாகக்கூடிய விலை என்று அடித்துச் சொல்லவேண்டும். மொழி விஷயத்தில் இப்படித் தான் இருக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே, அதேமாதிரி விவசாயிகளுக்கு இதுதான் கட்டுபடியாகக்கூடிய விலை என்று தீர்மானம் கொண்டுவந்தால், அதை நான் பூரணமாக ஒத்துக்கொள்கிறேன். எல்லோரும் அதற்கு ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதே நிலையில் இந்த விலைதான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகும், இதே விலை இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, இந்த விலை இருக்குமானால், விவசாயத் தொழிலாளர்களுக்கு அடிப்படைக் கூலி இவ்வளவு கொடுக்க வேண்டும், குத்தகைதாரர்களுக்கு இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று நியாயமான முறையில் சட்டம் கொண்டுவாருங்கள்.

இப்பொழுது இருக்கும்படியான நிலை என்னவென்றால், காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை நாங்கள் கொள்முதலை வேண்டாம் என்று சொல்லக்கூடிய நிலை இல்லை. கொள்முதல் வேண்டும், நியாயமாக நடைபெறவேண்டும், எல்லா இடங்களிலும் ஒரே நிலையைக் கடைப்பிடிக்கவேண்டும், பாரபட்சம் இல்லாமல் கொள்முதல் நடக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலை. ஒவ்வொரு இடத்திற்குத் தகுந்த மாதிரி கொள்முதல் இருக்கக் கூடாது. சேலத்தை எடுத்துக்கொண்டால் மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்கள் சங்கரியில் 75 டன் வசூல் ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். சர்க்கார் புள்ளி விவரப்படி சேலத்தில் 3,37,000 ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அங்கே ஆற்றுப் பாசனம் அல்ல, குளத்துப் பாசனம், ஏற்றத்திலிருந்து தண்ணீர் வரவேண்டும் என்ற கடஷ்டமான நிலை எனக்குத் தெரியும். சர்க்கார் அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் மசோதாவிற்காகக் கொடுத்த புள்ளி விவரப்படி, கோவையைவிட சேலத்தில் அதிகமாக நெல் விவசாயம் செய்யப்படுகிறது. கோயம்புத்தூரில் 3,20,000 தான்; ஆனால் சேலத்தில் 3,37,000. சேலம் தர்மபுரி இரண்டும் சேர்ந்து, பழைய சேலம் ஜில்லாவில். சலுகை கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கிறது. கிணற்றுப் பாசனம் என்றால் குறைத்துக் கொள்ளுங்கள். ஏக்கராவிற்கு இரண்டு, மூன்று மூட்டைகள் குறைவாகக் கொள்முதல் செய்யுங்கள். ஆற்றுப் பாசனம் என்றால் அதிகமாக வையுங்கள். எந்த எந்தப் பாசனத்தில் நிலம் இருக்கிறதோ, அதற்குத் தக்கபடி இத்தனை ஏக்கருக்கு இத்தனை மூட்டை என்று நிர்ணயம்செய்து, சமுதாயத்திற்கு வேண்டும் என்று செய்யுங்கள். அப்பொழுது இந்தப்



பிரச்சனையைத் தீர்க்க முடியும். அப்படிக் கொள்முதல் செய்தது போக, பாக்கியை அவரவர்கள் இஷ்டப்படி விலைக்குப் பகிரங்கமாக, பகிரங்க மார்க்கெட்டில் விற்றுக் கொள்ளலாம் என்று உரிமை கொடுங்கள். அதுதான் உற்பத்தியைப் பெருக்க வழி செய்யுமே அல்லாது, இந்த மாதிரி சப்சிடி கொடுத்து, 5 கோடி ரூபாய் நட்டப்பட்டால், அதனால் எத்தனை திட்டங்கள் பாழாகிப் போகின்றன? எவ்வளவு வேலை வாய்ப்புகள் இழக்கப்படுகின்றன? எவ்வளவு பேர்கள் உத்தியோக உயர்வு இல்லாமல் தள்ளப்படுகிறார்கள்? இன்றைக்குச் சமுதாயத்தில் வேண்டிய திட்டங்கள் இல்லாததால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழந்துவிட்டிருக்கிறார்கள். வேலை வாய்ப்புகள் இல்லை. அது மட்டுமல்ல, பொருளாதாரத் துறையிலும், தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது இயற்கையாக ஏற்படும் நிலை என்று சொல்ல முடியாது. தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதால்—இந்தச் சர்க்காரை அதற்குப் பூரணமாகக் குற்றம் சாட்டவில்லை என்றாலும்—முதலீடு செய்பவர்களுக்கு, சுமுகமான நிலைமைகள் இல்லாமையால், சட்ட அமைதி ஒழுங்கு கெட்டிருக்கும் இந்த நிலையில் யாரும் முன்வருவதில்லை. மில்களெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. முதல் அமைச்சர் கோவையிலே வந்து ஒரு ஒப்பந்தத்தைச் சொன்னார்கள். அதை நிறைவேற்றவில்லை.

அது மட்டுமல்ல, இப்பொழுது இருக்கும் நிலைமை, செய்யப்படும் பிரச்சாரங்கள், பேச்சுக்கள், முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், ஒரு தீர்மானமான தீர்வு காணவேண்டும். உணவு அமைச்சர் தொழிலாளர்களுக்குச் சலுகை கிடைக்கும் என்று சொன்னார்கள். மாதாமாதம் வரும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லை என்கிறார்கள். மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டார்களா? இவர்களே ஒன்றைச் செய்துகொண்டு, கையெழுத்துப் போட்டார்கள். அது வரவேற்கத்தக்க விஷயம்தான் என்றாலும், அது எந்த அளவிற்குச் சாத்தியம், எந்த அளவிற்குச் சாத்தியம் இல்லை என்பதையெல்லாம் சிந்திக்கவில்லை.

நம்முடைய அமைச்சர்கள் பேசுவது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாகக் கொள்கையைப்பற்றிச் சொல்கிறார்கள். பின்னால் அது இல்லை என்று மறுக்கிறார்கள். அதனால் மக்களிடம் சந்தேகம் ஏற்படுகிறது. முதல் அமைச்சர் பல சந்தர்ப்பங்களிலே அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், அவரைச் சார்ந்த மற்ற அமைச்சர்களும், கட்சியைச் சார்ந்தவர்களும் எப்படி இருப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. முதல் அமைச்சர் பேசுவதற்கும், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க ஆரம்பிக்கும்போது பேசிய திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதற்கும் வித்தியாசம் இல்லை. ஒரே மாதிரி இருந்தது. ஆசைத்தம்பி பேசினார்கள் கலவரம்

நடக்கிறது, நடக்கிறது என்று சொன்னீர்களே, மத்திய உணவு அமைச்சர் ஏன் அங்கே சென்றார்? என்று கேட்டார்கள். அதைக் கேட்பதற்கு இவர்கள் யார்? என்று கேட்கிறேன். ஒவ்வொரு குடிமகனுக்கும் எங்கு வேண்டுமானாலும் போக உரிமை உண்டு. அப்படி வருகிற அமைச்சருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இந்த அரசின் பொறுப்பு. 'ஏன் போகவேண்டும்' என்று கேட்பது நியாயமானதுதானா என்று கேட்கிறேன். ஒரு கூட்டத்திற்குப் போகிறார்கள். கட்சியின் கொள்கையை, திட்டங்களை எடுத்துச் சொல்லப் போகிறார்கள். அங்கே கலவரங்கள் நடைபெறுகின்றன என்றால், அதற்குப் பொறுப்பானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலை இருக்க, அதை ஏன் என்பது சரியா ? அடிபட்டதற்காக முதல் அமைச்சர் வருத்தம் தெரிவித்ததற்குப் பாராட்டுகிறேன். அது பாராட்டுக்குரிய விஷயம். ஆனால் அதே நேரத்திலே கலவரத்திற்குக் காரணம் யார் என்று பார்த்து கைது செய்யப்பட்டிருக்கிறார்களா ? காங்கிரஸ் காரர்கள் என்று சொல்லுகிறார்கள். யார் வேண்டுமானாலும் இருக்கட்டும், யார் வேண்டுமானாலும் ஈடுபட்டிருக்கலாம். காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்தமான் போகும்போது சென்னை வழியாகப் போக வேண்டும் என்று விரும்பியபோது, போக வேண்டாம் என்று முதலமைச்சர் எழுதியிருப்பதாக சி. சுப்பிரமணியத்திடம், டெல்லியில் அவர்கள் சந்தித்தபோது, 'என்னை வரவேண்டாம் என்று சொல்லித் தகவல் கொடுத்திருக்கிறார்கள்' என்று சொன்னார். முதல் அமைச்சர் அதை அப்படி இல்லை என்று மறுத்துச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலும் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் இந்தியப் பிரதமர் சென்னையிலிருந்து தனக்கு அப்படித் தகவல் வந்திருப்பதாகச் சொன்னதாக எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகிறார்கள். இரண்டு சர்க்கார்களுக்கு இடையே நடக்கும் கடிதப் போக்குவரத்தைப் பிரதமர் இப்படிச் சொல்வதானால், அது முறையற்றது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இரண்டு சர்க்கார்களுக்கிடையே நடந்த கடிதப் போக்குவரத்து என்று முதல் அமைச்சர் இப்படிப் பேசுகிறார்கள் என்றால் அதிலிருந்து சந்தேகம் ஏற்படுகிறது. இதில் ரகசியமான விஷயம் ஒன்றும் இல்லை. இங்கே நிலைமை கொளிந்தளிப்பாக இருக்கிறது என்று கடிதம் எழுதியதாக . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கடிதம் எழுதப்பட்டதா என்கிற விவகாரத்தைப்பற்றிய பேச்சே இல்லை. இரண்டு சர்க்கார்களுக்குள்ளே நடக்கும் கடிதப் போக்குவரத்தைப் பிரதமர் கனம் சுப்பிரமணியத்திடம் சொல்லியிருந்திருப்பார்களானால், அது முறையற்றது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தக் கடிதப் போக்குவரத்தில் ரகசியம் என்கிற போர்வையில் புகுந்து கொள்ள முடியாது.





வரவேண்டாம் என்று சொல்லி எழுதியிருப்பதாகவும், கொந்தளிப்பான நிலைமை இருப்பதாகவும், விசாகப்பட்டிணம் வழியாகப் போகவேண்டும் என்று சொல்லியிருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, அப்படியொன்றும் பெரிய, அவ்வளவு ரகசியமான காரியம் இல்லை. இங்கே ஒன்றும் கொந்தளிப்பான நிலைமை கிடையாது. முதல் அமைச்சர் அப்படிச் சொன்னது உண்மையா இல்லையா ? இந்த அரசாங்கத்திலிருந்து அப்படிக் கடிதம் போயிற்று என்பது உண்மையா இல்லையா என்பதைத்தான் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர், பிரதம மந்திரி கொந்தளிப்பான நிலை இருப்பதால், வரவேண்டாம் என்று கடிதம் எழுதியதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கடிதம் எழுதப்படவில்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதைச் சாமர்த்தியமாக, கெட்டிக்காரத்தனமாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது நிகழ்ச்சி ஏற்பட்டிருக்குமானால், அவர்களும் தைரியமாக வந்திருக்கலாம், பார்த்திருக்கலாம். இந்த நாட்டில் எந்தக் குடிமகனுக்கும், யாரானாலும், எங்குவேண்டுமானாலும் போகும் நிலைமை இருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் தெரிவித்ததை முழு அளவில் புரிந்துகொண்டு எதிர்க் கட்சித் தலைவர் சொல்ல வேண்டும். பெரிய கொந்தளிப்பாக இருக்கிறது, ஆகவே, தாங்கள் வரவேண்டாம் என்ற முறையில் கடிதம் எழுதவில்லை என்று தெரிவித்தேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்பொழுது வேறு விதமாக எழுதியிருக்கிறது என்பது புலனாகிறது. அப்படிப்பட்ட தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், இந்த மாதிரி நிலையில், சில சமயங்களில் பேசும்போது, சட்ட மன்றத்திலே நடவடிக்கைகள் நடைபெறுகின்றன, ஏதாவது தவறு என்று சொன்னால் அதைத் திருத்திக் கொள்ளுவதில் எந்தவிதமான அவமானமும் கிடையாது. மன்னிப்புக் கேட்பதில், பெருந்தன்மை தான் இருக்கிறது. அதில் தவறு ஒன்றும் கிடையாது. மன்னிப்புக் கேட்பது, வருத்தம் தெரிவிப்பது போன்றவற்றிற்கு பாராட்டுகிறேன். சட்ட மன்றத்திலே தவறான தகவல்கள் கொடுக்கப் ந. ப. 12-00
பட்டு விடுகின்றன, அப்படி நடந்துவிட்டாலும், மீண்டும் திருத்திக் கொள்கிறோம். ஏற்கெனவே சொன்ன தகவல் தவறானது, அதற்காக நான் வருந்துகிறேன் என்றால் அது வரவேற்கத்தக்கது. வருந்துகிறேன் என்பதும், வாபஸ் பெறுகிறேன் அல்லது மன்னிப்புக் கோருகிறேன் என்பதும் எல்லாம் ஒரே நிலைதான். யாராக இருந்தாலும், தவறைத் திருத்திக் கொள்வது பெருந்தன்மையானது. காந்திஜிகூட மன்னிப்புக் கேட்டிருக்கிறார். அதைப்பற்றிக் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். கைதுசெய்து கொண்டுபோகப்படவில்லை என்றார்கள் முதலில். அதற்குப்

*பின்னால் தகவல் வந்ததும், வாஸ்தவந்தான், அதற்காக நான் வருந்துகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றே நான் பாராட்டுதலைத்தெரிவித்திருக்கிறேன். தேர்தல் காலத்தில் நடந்த பேச்சை வைத்துக்கொண்டு, மதிப்பிற்குரிய ஓர் அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சினை நான் பத்திரிகையில் படித்தேன். அதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவர் அங்கே என்ன பேசினார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்லுகிறேன். அவர் என்ன பேசினார் என்றால், " எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் மோசமான தலைவர்; அண்ணாதுரை எழுந்து நின்றால், இவர் உட்கார்ந்து கொள்ளுவார்; நடுங்கிக் கொண்டிருக்கிறார் " என்ற முறையில் பத்திரிகையில் வந்திருக்கிறது. இன்னும் என்ன என்னவோ பேசினார்கள். அதைவைத்து நான் அந்தச் சமயத்தில் சொன்னேன்—ஐயா, சட்டசபையில் முதல் அமைச்சர் எழுந்தால் நான் உட்கார வேண்டும்; நான் எழுந்தால் முதல் அமைச்சர் உட்கார்ந்து கொள்ளவேண்டும்; சபாநாயகர் எழுந்தால், முதல் அமைச்சரும் உட்கார வேண்டும்; எதிர்க் கட்சித் தலைவரும் உட்கார்ந்துவிட வேண்டும். இதுகூட அமைச்சருக்குத் தெரியாமல் பேசுகிறாரே என்று சொன்னேன். அதைச் சொன்ன சமயத்தில், அந்த அமைச்சர் அவர்கள், என்ன சொன்னார். அது இருக்கட்டும். அண்ணா அவர்கள் பொறுப்புடனும் கண்ணியத்துடனும் இங்கே நடந்து கொள்ளுகிறார் என்பதற்கு உதாரணம் சொல்லுகிறேன். சட்டசபையிலே தேனி விவகாரத்தை சொன்னேன். முதல் அமைச்சர் அவர்கள், ' இல்லை ' என்று மறுத்தார்கள். அதற்குப் பின்னால், அவர்கள் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து வந்து, " அவ்வாறு செய்தது தவறு; அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறேன் " என்னும்படியான நிலையில் அவர்கள் தெரிவித்ததற்காக நான் பாராட்டுகிறேன்.*

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு தகவல். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ' நவசக்தி ' என்னும் பத்திரிகையில், "அண்ணா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவருடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டார்கள் " என்ற முறையில் செய்தி வந்திருக்கிறது.*

*திரு. பி. ஜி. கருத்திருமன் : யாரோ பத்திரிகையில் போட்டால் அதற்கு நாங்களா பொறுப்பு ? (ஆளுங்கட்சித் தரப்பில் ஆரவாரம்) எதிர்க்கட்சித் தலைவர் ரொம்ப மட்டமாக இருக்கிறார் என்று பொதுக் கூட்டத்தில், அதுவும் என் தொகுதியில் பேசினால், என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. அவரைப்பற்றித்தான் சொல்லுகிறேன் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் குறுக்கீடு செய்கிறார்கள். சங்ககிரித் தேர்தலில் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் பேசினதாகத்தான் பத்திரிகையில் வந்திருக்கிறது. என்ன பேசினார்கள் ? " அண்ணா அவர்கள் மன்னிப்புக் கேட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகிறார். அதை அவர் நிரூபிப்பாரா ? கருத்திருமன் அவர்களுக்குத் தாய் இருக்குமானால், தந்தை*





*இருக்குமானால், குழந்தைகள் இருக்குமானால், ஆணையிட்டுச் சொல்லட்டும் " என்று பேசியிருக்கிறார்கள். பேசினது மட்டுமல்ல, ராஜினாமா செய்துவிடுகிறேன் என்றும் பேசியிருக்கிறார். பத்திரிகையைக் கொண்டுவந்து வேண்டுமானால் காட்டுகிறேன். அவர் அப்படிச் சொல்லவில்லையென்றால், ரொம்ப சந்தோஷம்.*

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். "அண்ணா அவர்கள் மன்னிப்புக் கேட்கவில்லை " என்றுதான் நான் சொன்னேன். " முதல் அமைச்சர் அவர்கள், தந்த தகவல் சரியானதாக இல்லை என்பதைப் பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்டு, தவறான கருத்தைத் தந்ததற்காக வருந்துகிறேன் என்று சொன்னால், அந்தப் பெருந்தன்மையைக் கருத்திருமன் அவர்கள், ' அண்ணாதுரை அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள் ' என்று பேசியது தவறு " என்று நான் சொன்னேன். ஆகவேதான், " தாய்-தந்தை மீது ஆணையிட்டுச் சொல்வாரானால் அவர் சொல்லட்டும், அண்ணா அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள் என்று சொல்லி நிரூபிக்க முடியுமா ?" என்று கேட்டேன். இப்பொழுதும் அதையேதான் கேட்கிறேன். (ஆளுங்கட்சித் தரப்பில் ஆரவாரம்).*

*திரு. பி. ஜி. கருத்திருமன் : சொல்லியிருக்கிறார். அதையே நான் சொல்கிறேன். அவர் கொடுத்த ஸ்டேட்மென்டைப் படித்துவிட்டு, பிறகு, ' கன்ஸைஸ் ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியில் ' பொருளைப் பார்க்கட்டும். ' மன்னிப்பு ' என்று சொல்வதில் தவறில்லை.* ' Regret ' *என்றால்* ' apology ' *என்று* concise Oxford Dictionary *இல் பொருள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைக்குறித்து கீழாகப் பேசியதற்காகத்தான் குறிப்பிட்டேன். தவறைத் திருத்திக்கொள்ளுவதும், வாபஸ் பெறுவதும், வருத்தம் தெரிவிப்பதும், மன்னிப்புக் கோருவதும் எல்லாம் ஒன்றுதான்.* 'I regret that I have given a wrong **information'** ***என்றால்,*** 'I apologise that I have given a wrong information to the House ' *என்றுதான் பொருள்.* 'F.G. Fowler's Dictionary ' *ஐப் பார்க்கலாம்.*

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : " ஆயிரம் முறை என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்; ஆகவே, இப்படி மன்னிப்புக் கேட்ட முதலமைச்சரைத் தமிழ்நாட்டிலேதவிர, உலக சரித்திரத்தில் எங்கு பார்த்ததில்லை " என்று கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள்.*

*திரு. பி. ஜி. கருத்திருமன் : விஷயத்தை விட்டுவிட்டு, வேறொன்றைப் பேசுகிறார். இந்த விஷயத்திலே அவர் மன்னிப்புக் கேட்டது உண்டா ? இல்லையா ? என்பதல்ல பிரச்சினை. மன்னிப்புக் கேட்டார் என்பதை நான் பெருமையாகவோ, தவறாகவோ நினைக்கவில்லை. ஆனால், " இதை நிரூபிப்பார்களா ? தந்தை இருக்குமானால், தாய் இருக்குமானால் ஆணையிட்டுச் சொல்லட்டும். அவர் ராஜினாமா செய்வாரா ? பாவம் ராஜினாமாச் செய்தால்*

திரும்பி வரமாட்டார்" என்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு பத்திரிகையில் வந்தது என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதைக் குற்றச்சாட்டாகத் தயவு செய்து நினைக்க வேண்டாம். "ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டார்" என்று நான் சொல்லவும் கிடையாது, சொல்லப் போவதும் கிடையாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவர் அவர்களே, அவையிலே நான் ஒரு விளக்கம் அளித்து வருத்தம் தெரிவித்தது, மன்னிப்புக் கேட்பதாகும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்கள். அதோடுகூட, அது பெருமையே தவிர, சிறுமை அல்ல என்றும் சொல்லுகிறார்கள். அந்தப் பெருமைபடத்தக்க விஷயத்தைப் பெருமைக்குரிய விஷயம் என்ற முறையில், அவர்கள் சங்ககிரித் தேர்தலில் அதைப்பற்றிப் பேசினாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பெருமைக்குரிய விஷயம், பெருந்தன்மையோடு நடந்துகொள்வது எல்லாம் இருக்கட்டும். "எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளுகிறார்கள்" என்று முதல் அமைச்சர் கொடுத்த சர்ட்டிபிகேட் என்னும்படியான நிலையில் நான் பேசியிருக்கிறேன் என்று நினைத்தால் நினைத்துக்கொள்ளட்டும். ஆனால், நான் கண்ணியமான முறையில்தான் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் அவையிலே சொன்னது பாராட்டுதலுக்கு உரியது, பெருந்தன்மைக்கு உரியது என்பதை எடுத்துச் சொல்லிவிட்டு, "ஆனால் அவர்களுக்கு ஓட்டுப் போடாதே" என்று தொடர்ந்து வந்திருக்காது. ஆகையால், அவர்கள் அதைப்பற்றி அந்த இடைத்தேர்தல் நேரத்தில் எந்த நோக்கத்தோடு குறிப்பிட்டார்கள் என்பதை அவர்கள் விளக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இடைத்தேர்தலில் நான் குறிப்பிட்ட விஷயம் எல்லாம் எதற்காக என்று பார்க்கவேண்டும். உங்கள் அமைச்சர்கள் இங்கே சபையிலே சொல்லக்கூடாத வார்த்தைகளை அங்கே சொன்னார்கள். நல்லசமுத்திரத்தில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வந்திருந்த கூட்டத்திலே நான் பேசினேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இதுமாதிரிப் பேச்சுக்களை அமைச்சர்களோ, நாங்களோ, மற்றவர்களோ, யாருமே பேச வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். நான் சொல்வது தவறு என்றால், திருத்திக் கொள்ள நான் முற்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதைக்கூடச் சொன்னேன். இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறதன் காரணமாக, முதல் அமைச்சர்கூடப் பேசிக்கொண்டிருக்கிறதன் காரணமாக, அவர்களே விளக்கம் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். தாய் இருக்குமானால், தந்தை இருக்குமானால் ஆணையிட்டுச் சொல்லட்டும் என்ற நிலையில் என்னைக் குறித்





சொன்னதுதான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. அந்தப் பத்திரிகையை முதல் அமைச்சர் அவர்களிடம் காட்டுகிறேன். அதை விட்டுவிடுவோம். பொறுப்பற்ற முறையில் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொறுப்பற்ற முறையில் சொல்லி இருந்தால் திருத்திக்கொள்ளுகிறேன் என்று திரு. கருத்திருமன் சொல்லுகிறார்கள். பட்டுக்கோட்டைத் தேர்தலில், பனியனைப் போட்டுக்கொண்டு ஊரெல்லாம் போய், உதய சூரியன் சின்னத்தைக் காட்டி, ஆட்சியைப் பிடித்ததாகச் சொன்னார்கள். ஆரம்பத்தில், 1947-ம் ஆண்டில், காங்கிரஸ் ஆட்சியிலேயே, உதய சூரியன் சின்னத்தைப் போட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்று சொன்னேன். திருத்திக் கொண்டு, குற்றத்தை ஒப்புக்கொண்டு, வருத்தம் தெரிவித்திருக்கிறாரா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது நீங்கள் வருத்தம் தெரிவித்துக்கொண்டீர்களா ? அதைப்போலத்தான். சின்னத்தை அப்போதே போட்டிருக்கலாம். கருப்பு சிவப்புக் கட்சிச் சின்னம் இருந்ததைச் சுட்டிக் காட்டினேன் என்று சொல்லுகிறார்கள். இன்னும் ஆயிரம் இடத்தில் காட்டுவேன்.

இன்னொரு விஷயம். காங்கிரஸ் ஆட்சியில்தான் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள், துப்பாக்கிச் சூடு நடந்தது என்று சொன்னார்கள். நீங்கள் போட்ட உத்தரவின் காரணமாக நூற்றுக் கணக்கான மக்கள் வார்னிஷ் குடித்துச் செத்தார்களே, அதற்குப் பொறுப்பு யார் ? நாங்களா குடிக்கச்சொல்லி அவர்களைச் சாகச் சொன்னோம் ? அந்தப் பிரச்சினை ஏன் வந்தது ? வார்னிஷ் குடித்துச் சாகும் நிலை வந்தது, ஏன் ? வார்னிஷில் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வார்னிஷைப்பற்றிய கேள்விகள் எல்லாம் இங்கே விவாதிக்கப்பட்டன. சர்க்கார் போட்ட உத்தரவுக்கும் வார்னிஷ் குடித்ததற்கும் சம்பந்தம் இல்லை என்றும், அந்த வார்னிஷில் என்ன என்ன பொருள்கள் கலக்கப் படலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டதோ, அந்தப் பொருள்கள் விஷப் பொருள்கள் அல்ல என்றும் நிபுணர்களே தெரிவித்து விட்டார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த நிபுணர்கள் சொன்னதை வைத்துத்தான் நான் சொல்கிறேன். இப்பொழுது எப்படி உத்தரவு போட்டிருக்கிறார்களோ தெரியாது. 'caoutchoucine என்ற பொருள் இருந்ததால் செத்தார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தப் பொருளினுடைய பெயர் சரியாக நினைவுக்கு வராததால், அந்தப் பொருளின் பெயரைச் சொல்லவில்லை. நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தப் பொருள் விஷப்பொருள் அல்ல என்று நிபுணர்கள் அறிவித்தாகிவிட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையில் வந்ததே, அதை வைத்துச் சொல்லுகிறேன். செத்ததற்குக் காரணம் என்ன ? நீங்கள் போட்ட உத்தரவுதானே ? இல்லையென்றால், வார்னிஷ் குடித்து, 150, 200 பேர்கள் இறப்பானேன் ? அதற்குக் காரணம் தான் என்ன ? இது காங்கிரஸ்காரர் போட்ட உத்தரவா ? இல்லையே. அப்படியானால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அத்தனை பேர் சாகவில்லையே. உங்கள் ஆட்சியில்தானே செத்திருக்கிறார்கள் ? ஜூலை 27-ந் தேதி இவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள், தி.மு.க. ஆட்சி வந்தபிறகு என்ன காரணம் என்று தெரியவில்லை. நாங்கள் உத்தரவு போட்ட காலத்தில் சாகவில்லையே. பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்லுகிறேன். இல்லையென்றால், திருத்திக்கொள்ளுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். 150 பேர்கள், 200 பேர்கள் செத்தார்களே, அதற்குக் காரணம்தான் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றி முழு விவரம் பொது மக்களுக்குத் தெரிவித்துவிடுவது நல்லது. இந்த வார்னிஷ் சம்பந்தமாக, தமிழக அரசை நாங்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, புதிதாக எந்த உத்தரவும் போடவில்லை. ஏற்கனவே இருந்த உத்தரவு, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்படுகிற முறையில், அந்தப் பழைய உத்தரவு புதுப்பிக்கப்பட்டது. அப்படிப் புதுப்பிக்கப்பட்ட பழைய உத்தரவில், எந்தெந்தப் பொருள்கள் சேர்க்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பொருள்கள், சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அந்தப் பொருள்கள், அப்படி அறிவிக்கப்பட்ட பொருள்கள்பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டு, அவை சாவுக்குக் காரணம் அல்ல, அவை விஷப் பொருள்கள் அல்ல என்று நிபுணர்களால் விளக்கப்பட்டுவிட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதே நேரத்திலே மக்களின் சாவுக்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொண்டீர்களா ? அப்படி மக்கள் சாகவில்லையென்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தப் பொருளினால் சாகவில்லையென்று நிபுணர்கள் நிரூபித்துவிட்டார்கள். சில குறிப்பிட்ட கம்பெனிகள் அதைத் தயாரித்த முறையில் சில கெடுதல்கள் ஏற்பட்டுவிட்டன என்று கூறியிருக்கிறார்கள். இது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுத்திய நிலை அல்ல. அண்மையில் மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு ஒரே நாளில் 90 பேர்கள் இதே காரணத்திற்காக இறந்திருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எந்தச் சர்க்காராக இருந்தாலும் அதனால் மக்கள் செத்திருந்தால் தப்பு தப்புதான். இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைமையிலே நீங்கள் இருக்கிறீர்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். எந்த விவகாரம் எடுத்தாலும் அவற்றிற்கெல்லாம் காங்கிரஸ் தான் காரணம், காங்கிரஸ்தான் காரணம் என்று குற்றம் சாட்டாதீர்கள்.





**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரஸைப்பற்றி நான் குறிப்பிட்டிருக்க மாட்டேன். ‘எங்கள் ஆட்சியில் யாரும் சாகவில்லை; உங்கள் ஆட்சியில் ஏன் செத்தார்கள் ?’ என்று நீங்கள் கேட்டதற்குத்தான் பதில் கொடுக்க முனைந்தேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவ்வளவு நாட்கள் கழித்து வார்னிஷ் விவகாரம்பற்றிச் சொன்னீர்கள். அண்மையில் ஜூலை மாதத்தில் பல தீ விபத்துக்கள் ஏற்பட்டன. 1,400 குடிசைகளுக்குமேல் எரிந்துவிட்டன. இதற்கெல்லாம் யார் காரணம் ? என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ? கிருஷ்ணசாமி ரிப்போர்ட்டை ஏன் வெளியிடவில்லை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு சட்டப் பிரச்சினை தெரிந்திருக்க வேண்டும். குற்றவாளிகள்மீது வழக்குத் தொடரப்பட்டு, நீதி மன்றத்தில் இருக்கும்போது, அந்த அறிக்கையை வெளியிடுவது கோர்ட்டை அவமதிப்பது ஆகும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காரணம் என்ன, யார் என்று தெரிவிக்காததால் சில பத்திரிகைகளில் ஏதேதோ செய்திகள் வருகின்றன. சமூக விரோத சக்திகள், தீய சக்திகள் எல்லாம் இதைச் செய்துவிட்டு காங்கிரஸ்காரர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லப்பட்டு வருகின்றது. அண்மையில் நடந்த கலவரங்களுக்கெல்லாம் காரணம் என்ன ? சில பத்திரிகைகள் கட்சியை ஆதரிக்கும் நிலைமையில் இருக்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு கட்சியை ஆதரிக்கின்றது. தலைவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் இந்தப் பத்திரிகைகள் விமர்சிக்கின்றன. ‘இந்தக் காரியத்தை இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள்’ என்று தூண்டுதல்கள் செய்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு விஷயத்திற்கு போகிறார்கள். கிருஷ்ணசாமியினுடைய அறிக்கை வெளியாகாததற்குக் காரணம், வழக்கு இன்னும் நீதி மன்றத்தில் இருப்பதால்தான் வெளியிட முடியவில்லையென்று சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த ஒரு கேஸ் விஷயத்தில் சொல்லாமல் இருக்கலாம். பொதுவான கருத்து அந்த அறிக்கையில் என்ன காணப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுவாக அறிக்கையை வெளியிடுவதன்மூலம் குறிப்பிட்ட அந்த வழக்குக்குச் சாதகமோ, பாதகமோ ஏற்படக்கூடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பல தீ விபத்துக்கள் ஏற்பட்டன. இவைகள் எல்லாம் ஒரே நாளில் ஏற்பட்டிருந்தால் அதைப்பற்றிக் கவலை இல்லை பத்து நாட்களாக வரிசையாகத் தொடர்ந்து

நடந்து வந்ததால் யாரோ திட்டமிட்டுத்தான் இதைச் செய்திருக்கிறார்கள் என்று கருத இடமிருக்கிறது. ஆகவே அதை மட்டும் விட்டுவிட்டு மற்ற கருத்தைச் சொல்லலாம். நீங்கள் எதையும் சொல்லவில்லை. நான் மிகுந்த வருத்தத்துடன் அதை ஏற்றுக் கொள்கிறேன். இந்த மாதிரியான வன்முறைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், சில பத்திரிகைகள் மக்களைத் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிட்டன. பொள்ளாச்சியில் நடந்தது திண்டுக்கல்லிலும் நடந்தது. நாலைந்து நாட்களாக மாணவர்கள் கிளர்ச்சி என்ற பெயரில் சமூக விரோத சக்திகள் பொள்ளாச்சியிலும் திண்டுக்கல்லிலும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டன. கற்கள் லாரிகளில் கொண்டுவரப்பட்டன. இந்த வன்முறைகளையெல்லாம் தூண்டும் முறையில் இரண்டு பத்திரிகைகள் எழுதி வந்தன. ஒன்று தினத்தந்தி, இரண்டாவது மாலைமுரசு. 'சுப்பிரமணியம் அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டியது தெரிந்ததே. மாணவர்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் மோதல், பொள்ளாச்சியில் கறுப்புக்கொடி காட்டிய மாணவர்களைக் காங்கிரஸ்காரர்கள் அடித்தார்கள். நிலைமை கொந்தளிப்பாக இருக்கிறது' என்றெல்லாம் ஆதாரமற்ற செய்திகளை பிரசுரித்து இருந்தன. 'கோயம்புத்தூரிலே மாணவர்கள் அடிக்கப்பட்டார்கள். திண்டுக்கல்லிலே நீங்கள் தயாராக இருங்கள், நெல்லையிலே, மாணவர்களே தயாராக இருங்கள்' என்று அந்தந்த ஊர்களில் இருக்கும் மாணவர்களைத் தூண்டும்படியான நிலையில் செய்திகளைப் போட்டு வந்தன. இதற்கெல்லாம் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ? நேற்றைக்கு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை சொல்லும்படியான நிலையில் பழனியிலே பேசியிருக்கிறார்கள். அதை அந்தப் பத்திரிகைகள் போட்டுவிட்டிருந்தால் நன்றாக இருக்கும். மத்திய அமைச்சர் திரு. கே. எஸ். ராமசாமி அவர்கள் அடிபட்டதற்குப் பின்னாலே யாரோ காங்கிரஸ்காரர்கள் மதுரையிலே கைது செய்யப்பட்டார்கள், மதுரையிலே கலவரம் என்று காரணம் சொல்லி செய்திகளைப் போடுகிறார்கள். கட்சி சார்பற்ற முறையில் பிரசுரிப்பதற்குப் பதிலாக, காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள், காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள் என்றுதான் போட்டுக்கொண்டு வருகின்றன. நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையிலே ஒரு படம் வெளியாகியிருக்கிறது. அதில் மாணவர் ஒருவர் ஒரு தடி எடுத்து வைத்துக் கொண்டு இருப்பதுபோலவும், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அடிபணிந்து இருப்பதுபோலவும் ஒரு படம் வந்திருக்கிறது. நடந்த விஷயங்களைப் போடுவதில் தவறு இல்லை. அதிலும் ஒரு முறை இருக்க வேண்டாமா ? 'காங்கிரஸ்காரர்களுக்கும் மாணவர்களுக்கும் போட்டி' என்று பத்திரிகைகளில் போடுகிறார்கள். இது தூண்டுதல் செய்தியாகத்தானே இருக்கிறது ? அரசு இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் உள்ள மாணவர்களின் முன்னேற்றத்திற்கு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய கல்வித் திட்டம்தான் காரணம். அதற்காக மாணவர்கள் அவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு நல்ல கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து, பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றை ஆரம்பித்து வைத்தார்கள். இந்த மாணவர்கள் தங்கள் வீடுகளில் இருக்கும்போதாவது கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இலவசக் கல்வி, மதிய உணவுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அவர் மிக அதிகமாகப் பாடுபட்டிருக்கிறார். அவர் மாணவர்களைப்பற்றிக் கூறியதெல்லாம், மாணவர்களுக்கு அறிவுரை கூறியதெல்லாம், தந்தை தன் மகனைக் கண்டிப்பது போல்தான் சொல்லியிருக்கலாம். வேறு முறையில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நடைபெற்று வருவதெல்லாம் மாணவர்களுடைய இயக்கம் அல்ல. மாணவர்களை முன்வைத்து ஏதோ ஒரு தீய சக்தி பின்னால் இருந்து கொண்டு தூண்டிக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டில் தற்போது எங்கே பார்த்தாலும் சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகள் எல்லாம் சீர்குலைந்துவிட்டிருக்கின்றன.





அண்மையிலே காம்பரத்திலே இரண்டு மூன்று நாட்கள் வரும்போது சிலர் சக்கிளையக் காட்டினார்கள், அவர்களை மிரட்டினார்கள் என்றெல்லாம் செய்தி வருகிறது. சர்க்காரே இவற்றிற்கெல்லாம் பூரண பொறுப்பு என்று குற்றம் சாட்டவில்லை. சர்க்கார் இவற்றிற்கெல்லாம் உடனடியாக தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லையென்றே தோன்றுகிறது. லாரியிலே பொதுக்கூட்டம் நடக்கும் இடங்களுக்குக் கல் கொண்டுவரப்படுகிறதென்றால் அது போலீசார்களுக்குத் தெரிந்திருக்காதா ? போலீஸ் லாரியைத் தடுத்திருக்கக் கூடாதா ? ஏன் இவர்கள் எல்லாம் தங்களுடைய கடமையிலிருந்து தவறுகிறார்கள் ? என்பதையெல்லாம் கொஞ்சம் யோசித்துப்பார்க்க வேண்டும். இதேமாதிரி போய்க்கொண்டிருந்தால் நாடு என்ன ஆவது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய நண்பர் அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகத்தான் நான் அடிக்கடி குறுக்கிடுகிறேன், மறுப்பதற்கு அல்ல. சில பத்திரிகைகளில் செய்திகள் தூண்டிவிடக்கூடிய முறையில் வருகின்றன என்று தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் குறிப்பிட்ட சில பத்திரிகைகளில் தவிர வேறு பத்திரிகைகளில் மாணவர்கள் கிளர்ச்சியை விமர்சிக்கும்போது, 'திராவிட முன்னேற்றக் கழக அரசால் தூண்டிவிடப்பட்ட மாணவர்கள்' என்று செய்தி வருகின்றதே, அதை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தித் தடுத்து நிறுத்துவார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தவறு என்று யார் சொன்னாலும் தவறுதான். அது எங்கள் சார்பில் இருந்தாலும் தவறுதான். எங்கள் சார்பில் அம்மாதிரி தவறு நடந்தால் தவறு செய்பவர்களை நாங்கள் கண்டிக்கிறோம், தடுத்து நிறுத்துகிறோம். உங்கள் சார்பில் நடந்தால் நீங்கள் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஒரு பத்திரிகை என்னைப்பற்றிக் குறிப்பிட்டு எழுதும்போது, 'டேய் கருத்திருமா' என்று எழுதுகிறார்கள். இன்னும் என்ன என்னமோ எழுதுகிறார்கள். நான் குறிப்பாக ஒன்றிரண்டு பத்திரிகைகளின் பெயரைச் சொன்னேன். கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் கொண்டு சிறந்த அரசியலை நாம் நடத்த வேண்டுமே தவிர, இப்படிக் கீழான முறையில் நம்முடைய தரம் இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இம் மாதிரியான போக்குகளையெல்லாம் தடுக்கவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அண்மையில் நடந்த வன்முறைகளையெல்லாம் நாம் பார்ப்போமானால் ஜனநாயகம் நன்றாக நடைபெற முடியுமா என்ற ஐயம் தான் எழுகிறது.

ஒரு போஸ்டர் போட்டார்கள். இந்த மொழித் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றியவுடனே இந்தியை ஒழித்துவிட்டோம், அண்ணா ஆட்சியில் இந்தி ஒழிந்தது என்பதாகப் போஸ்டர் போட்டார்கள். அதைப் பார்த்தவுடன் பற்பல எண்ணங்கள் வந்தன. ஆட்சிக்கு வருவது எல்லாவற்றையும் வளர்ப்பதற்காகவே தவிர ஒழிப்பதற்காக அல்ல. இந்தியை வேண்டாம் என்று சொல்வதைப் பற்றி என்னுடைய கருத்து எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இந்தி வேண்டும் என்பவர்களுக்கு இந்தியில் வாய்ப்பு இருக்க வேண்டும். இந்தியை ஒழித்துவிட்டோம் என்றால் ஒழித்துவிட்டீர்கள். பற்பல ஆயிரக் கணக்கான ஊழியர்களுக்கு இருந்த வேலை வாய்ப்புகளை ஒழித்து விட்டீர்கள், ஐந்து கோடி ரூபாயை உணவு மான்யம் என்ற வகையில் ஒழித்து இருக்கிறீர்கள். வருடா வருடம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் காங்கிரஸ் ஆட்சி வளர்த்துக்கொண்டே வந்திருக்கிறது. முந்திய ஆண்டுகூட 267 பள்ளிகளைத் திறந்து இருக்கிறார்கள் என்றால் நீங்கள் 67 பள்ளிகளை மட்டும் திறந்து விட்டு 200 பள்ளிகளை ஒழித்துவிட்டீர்கள். படித்து பட்டம் பெற்ற 3,000 என்ஜினீயர்களுக்கு வேலையில்லாமல் வேலை வாய்ப்பை ஒழித்துவிட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதை எதை ஒழித்துவிட்டோம் என்பதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீண்ட பட்டியலைக் கொடுத்துக்கொண்டு போகிறார்கள். அதில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய ஒன்று, இருபது வருடமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்த காங்கிரஸ் ஆட்சியையும் ஒழித்து இருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இருபது வருட காங்கிரஸ் ஆட்சியை ஒழித்து இருக்கிறார்கள். ஆனால் இருபது வருட காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ்காரர்கள் எதை எதை வளர்த்து



இருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு எந்த எந்த வகையில் நாட்டில் வளத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதை, எதையாவது ஒழித்தார்களா என்பதை சொல்ல வேண்டும். மனச்சாட்சி இருக்குமானால் நீங்கள் சொல்லுங்கள். மக்கள் அதைப் பார்ப்பார்கள். கவர்னருடைய உரையிலே நீங்கள் உங்கள் கட்சியின் கொள்கைகளைத்தான் புகுத்தியிருக்கிறீர்களே தவிர வேறு ஒன்றும் கிடையாது. வருடா வருடம் காங்கிரஸ் ஆட்சியில் தினமும் 3 தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கினோம். நீங்கள் என்ன செய்தீர்கள்? வாதத்திற்காக வேண்டுமானால் அரக்கோணத்தில் திறந்தோம் என்கிறீர்கள். காங்கிரஸ் கட்சி திட்டமிட்டு, கட்டடம் எல்லாம் கட்டி ஆரம்பிக்கும் நிலையில் வைத்துள்ளனவற்றை நீங்கள் திறந்து வைத்திருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. நாங்கள் செய்து வைத்த காரியங்களை நீங்கள் திறந்து வைத்து பெருமை கொள்ளுங்கள். நாங்கள் எதையாவது ஒழித்தோமா? எங்கள் ஆட்சியில் எந்தெந்த வகையில் எல்லாத் துறைகளும் வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த மேசையில் ஓர் அறிக்கையாக வைக்க வேண்டும்.

நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது என்ன என்னவோ சொன்னீர்களே, காங்கிரஸ் அமைச்சர்கள் தங்கள் சொந்த சொத்தின் மதிப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டீர்களே, நீங்கள் உங்களது சொத்தின் மதிப்பு என்ன என்பதை இதுவரை கொடுத்திருக்கிறீர்களா? நாங்கள் சொந்தக் கார்களைத்தான் பயன்படுத்தப்போகிறோம், அனாவசியமாக சர்க்கார் பணத்தை எங்களுக்குக் கார் வாங்குவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளப் போவதில்லை என்று சொன்னீர்களே, 2 லட்சத்திற்கு கார் வாங்கினதாக சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் மாபியக் கோரிக்கை வந்திருக்கிறது. லட்சத்து தொண்ணூறாயிரத்திற்குக் கார் வாங்கினால் ஆடம்பர வாழ்க்கைதானே.

அதே மாதிரி நிதி வசூல் பற்றி உலகத் தமிழ் மகாநாட்டுக்கு நிதி வசூல் நடைபெற்றது. இதுவரை இன்னமும் கணக்குகள் பூராவும் கொடுக்கப்படவில்லை என்றால் அதன்மீது பல பிரச்சினைகள் எழுகின்றன. "நீங்கள் கணக்குக் கொடுத்தீர்களோ?" என்கிறார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. நாங்கள் ஒவ்வொரு முறையும் ஆடிட்டர்கள் போட்டு கணக்கை பரிசீலனை செய்தே வந்திருக்கிறோம். நீங்களே பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்போது இத்தனை வசூலாயிற்று, அத்தனை வசூலாயிற்று என்று சொல்லிக் கொள்கிறீர்கள். இதனால்தானே இத்தனை லட்சம், அத்தனை லட்சம் வசூலாகியிருக்கவேண்டும் என்கிற பிரச்சினையே எழுகிறது. இதுவரை ஏன் கணக்குகள் கொடுக்கப்படவில்லை?

சிலை வைக்கும் விஷயமாகவும் சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. கம்பர் பெருமானுக்கும் சிலை வைக்கவேண்டுமென்று நாங்கள் முதல் அமைச்சரைக் கேட்டுக்கொண்டோம். அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அதற்காகும் செலவு பொது மக்க

ளிடமிருந்து வசூலிக்கப்படும் நன்கொடையாகத்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். சென்னை நகர கார்ப்பரேஷனில் ஒரு தீர்மானம் போடப்பட்டது. பாரதியார், பாரதிதாசன், வ. உ. சி., கம்பர் ஆகியவர்களுக்குச் சிலை வைக்கவேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படி நான்கு சிலைகள் வைப்பதற்குப் பணம் இருக்கிறது, நகரசபையே பணம் கொடுக்கலாம் என்பதாக நகரசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. விநயகமூர்த்தி அவர்கள் சொல்லி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

என்னுடைய கட்சியைச் சேர்ந்தவரும், கோயம்பத்தூர் ஜில்லாவில் நிதி வசூல் கமிட்டி அங்கத்தினருமாக இருக்கும் படியான திரு. கோதண்டராமன், எம்.எல்.சி. அவர்கள் கம்பர் சிலையை பொது மக்களுடைய சார்பாக வைத்துவிடுவோம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று என்னிடம் கேட்டார். அவர்கள் கருத்தை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று நான் சொன்னேன். அவர்களுடைய கூட்டத்திற்கு வரவேண்டும் என்று என்னை அழைத்தார். எங்கோ செலக்ட் கமிட்டிக்குச் சென்றிருந்த நான் போன இடத்தில் அங்கும் சென்றேன். எனக்கும் இந்தக் கமிட்டிக்கும் சம்பந்தம் கிடையாது. திரு. கோதண்டராமன், எம்.எல்.சி. அவர்கள் உறுப்பினர். விவாதம் நடந்தது. 50 ஆயிரம் வேண்டும் என்றதற்கு பொது மக்களிடமிருந்து 50 ஆயிரம் முடியாது, 25 ஆயிரம் வசூல் செய்து கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட திரு. பெருமாள் முதலியார் எழுதிவிடுகிறேன் என்று சொன்னார்கள். நான் இதில் தலையிட்டு, கலெக்டரிடத்தில் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஒன்றையும் செய்தேன் என்கிற நிலை இல்லை. கலெக்டரிடத்தில் பேசும்படியான செல்வாக்கும் கிடையாது. வியட்நாம் வீடு நாடகத்திற்கு வந்திருந்தபோது கலெக்டர், அமைச்சரிடத்தில் பேசியிருக்கலாம். பொது மக்களுடைய வரிப்பணத்தில் இருந்து இல்லை என்றால் பாக்கிச் சிலைகளுக்கு எல்லாம் நகரசபை பொது மக்களுடைய வரிப் பணத்தில் இருந்தே கொடுத்திருக்கிறது. கம்பர் சிலையையும் சேர்த்து நான்கு சிலைகளுக்கு பண உதவி அளிப்பது என்று நகர சபையில் தீர்மானமே போடப்பட்டிருக்கிறது. மற்றபடி நடந்தது Non-Official Committeeசெய்த தீர்மானம். இதைப்பற்றி பேச்சு வந்தது பற்றி வருந்துகிறேன். எனக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.

நிதி வசூல் என்றால் அதிகாரிகளை அனுப்பி வசூல் செய்கிற போது பல தவறுகள்தான் வருகின்றன. பொரிக்கண்டக்காரரிடத்தில்கூட "உனக்கு இவ்வளவு மூட்டை வேண்டுமென்றால், இவ்வளவு நன்கொடை கொடுக்க வேண்டும்" என்பதாக எல்லாம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. ராமசாமி கவுண்டர் அவர்கள் கூறியதுபோல,



"வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்பதுபோல நடுவழியில் கையில் வேலை வைத்துக்கொண்டு ஒருவன் யாசித்துக்கொண்டு நிற்பது போல (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :—இடு என்பதற்கு யாசிப்பது என்று பொருளா?) கொடு, இடு, பிச்சை கேட்பது எல்லாம் ஒன்றுதான். தன்னிடத்தில் வேல் போன்ற அதிகாரங்களை வைத்திருக்கும் அதிகாரிகள் நிதி வசூல், யாசகம் என்று போவது இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதனால்தான் பல தவறுகள் நடக்கின்றன.

அடுத்து காங்கிரஸ் சர்க்கார் கடன் வைத்துவிட்டுப்போய் விட்டார்கள் என்று சொல்கிறீர்களே தவிர எவ்வளவு ஒவ்வொன்றிலும் முதலீடு செய்திருக்கிறார்கள் என்று எங்கே சொல்கிறீர்கள்? நான் சென்ற முறையே குறிப்பிட்டேன். ஒரு கிராம அதிகாரியின் மீது குறிப்பிட்ட தொகையை ஒரு நிதிக்காக ஏன் வசூல் செய்யவில்லை, உங்கள்மீது நடவடிக்கை எடுத்தால் என்ன என்று அதிகாரி பிறப்பித்த நோட்டீசைக் காட்டினேன். இப்படி அதிகாரிகள் மக்களை வற்புறுத்தி கொடுமைக்கு உள்ளாக்குகிறார்களே தவிர அவர்களுக்கு சுபீட்ச நிலை உண்டாக வழிசெய்வதில்லை. கவர்னர் அவர்கள் இறுதியாக தமிழில் பேசினார்கள். நானும் பெருமைப்படுகிறேன். ஆனால் அவர் சொல்லும்படியான நிலையா தமிழகத்தில் இருக்கிறது ? இன்றைக்கு உறு பசி இருக்கிறது, பிணி இருக்கிறது. பகை என்று எடுத்துக்கொண்டால் சாதாரண பகையா ? இல்லை. கூட்டங்கள் கூட்டி தங்களுடைய கருத்தைக்கூட எடுத்துச்சொல்ல முடியாத அரசியல் உட்பகை வளர்ந்திருக்கிறது. இவற்றைப் போக்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் பி. ப.
தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி 12-30
தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் பலரும் தத்தமது கருத்துக்களை மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய மதிப்புமிக்க நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறிதளவு ஆத்திரத்தோடு பேசினார்கள். அவர்களுடைய ஆத்திரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. புரிந்துகொள்ள முடிவது மட்டுமல்ல. அவர்கள் இறுதியிலே எடுத்துக்காட்டிய திருக்குறள் நிலைக்கு நாடு வந்துவிட்டதா என்று கேட்டு, பசி இருக்கிறது, பிணி இருக்கிறது, பகை இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டிலே பசி, பிணி, பகைமை இவை இன்னமும் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதிலே அவர்கள் குறிப்பிட்டபடி பகை இருப்பது மட்டுமல்லாமல் அது இன்னும் கொழுந்து விட்டெரிகின்ற அளவுக்குச் சென்றுகொண்டிருப்பதை நான் உணருகிறேன். இங்கே பேசப்படுகின்ற பேச்சுகளிலும்

பகைமை குறைக்கப்படவேண்டுமென்பதிலே நான் மிகுந்த கவலை கொண்டவனாக இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சு பகையை ஒழிப்பதற்குப் பதிலாக பகையை வளர்ப்பதற்குத்தான் பெரிதும் பயன்படுகிறது என்பதைச் சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன். பத்திரிகைச் செய்திகளிலே இருக்கின்ற தவறுகளாக இருந்தாலும், கூட்டங்களில் நடக்கின்ற கலவரங்களாக இருந்தாலும் அவற்றை நீக்குவதற்கும் போக்குவதற்கும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் இதழ் ஆசிரியர்களும் ஒன்றுகூடி ஒருமித்த கருத்துக்கு வந்து என்ன என்ன முறையிலே செய்திகளை வெளியிடுவது, கூட்டங்களை நடத்துகின்றபொழுது என்ன என்ன ஒழுங்குபடுத்தப்படவேண்டுமென்பதிலே அவர்கள் ஒத்த கருத்துக்கு வருவார்களானால் நான் மெத்தவும் போற்றி வரவேற்பேன். மதுரையில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி சமரச ஏற்பாட்டுக்கு வந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது எந்த அளவுக்கு வெற்றிபெற்றது என்பதைப்பற்றிய முழுத் தகவல் கிடைக்கவில்லை. அந்த முயற்சி வரவேற்கத்தகுந்த முயற்சி என்பதால் பாராட்டுகிறேன்.

அரசியல் கட்சித் தலைவர்களும் இதழாசிரியர்களும் பகையை வளர்ப்பதிலே நாட்டம் கொள்ளாமல் இருக்கக்கூடிய முறையில் அப்படிப்பட்ட முயற்சியிலே எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபடுவாரானால் நான் அவருக்குத் துணை நிற்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய பேச்சுக்களும் நடவடிக்கைகளும் பகையை ஒழிப்பதற்கு ஏதுவாக இல்லாமல் இருப்பதற்கு ஒரு பெரிய காரணம் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அரசை ஏற்றுக்கொண்டதை இன்னமும் காங்கிரஸ்காரர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை; நிமிடத்திற்கு நிமிடம் அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. அதற்கும் காரணம் இருக்கிறது. இந்த இருபது வருடங்களாக இருக்கின்ற அரசியல் தொடர்பில் காங்கிரஸ் கட்சி அல்லது காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களிடையே மதிப்பு வைத்து நாங்கள் பழகுகிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதிப்பு வைத்து முன்னேற்றக் கழகத்தை அணுகிப் பழக்கமே இல்லை. துவக்கத்திலிருந்து இது ஒரு கட்சியா என்று விவாதித்துக்கொண்டிருந்தார்கள். இது மழையிலே தோன்றிய காளானைப் போல் அழிந்துவிடும் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள். அதற்குப் பொது மக்கள் ஆதரவு வராது என்று நம்பினார்கள், அந்த நம்பிக்கையைப் பொதுமக்கள் முறியடித்த பிறகுகூட இப்பொழுதும்கூட அவர்கள், ஏமாற்று வித்தையினாலே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்றுதான் நினைக்கிறார்களே தவிர, அவர்கள், ஆளுவதற்கு லாயக்கு உள்ளவர்கள் என்று நினைக்கவில்லை. 'இன்னும் எத்தனை நாளைக்கு ?' என்ற பேச்சை நாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து அவர்கள் தங்களுடைய பேச்சின் முன்னுரையாகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். மார்ச் மாதம் 5-ஆம் தேதி அல்லது 6-ம் தேதி நாங்கள் பதவியேற்றோம் என்றால்





அன்று முதல் அவர்கள் 'இன்னும் எத்தனை நாளைக்கு ?' 'இன்னும் எத்தனை நாளைக்கு' என்றுதான் பேச்சை ஆரம்பிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதை அவர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை. மேற்கு வங்காளத்திலே காங்கிரஸ் அல்லாத அரசையும், பாஞ்சாலத்திலே காங்கிரஸ் அல்லாத அரசையும், வேறு சில இடங்களிலே காங்கிரஸ் அல்லாத அரசையும் வரைமுறையில்லாத வழிகளில் எல்லாம் சென்று கவிழ்க்க முயற்சிசெய்ததற்குப் பிறகு ஒரு புலி ஒரு முறை ரத்தத்தைக் குடித்துவிட்டால், அதைப் புலி என்று சொல்லாமல் மனிதனைக் கொல்லுகின்ற பிராணி அல்லது 'மேன் ஈட்டர்' என்ற நிலைக்கு வந்துவிட்டதாகச் சொல்லுகிறோம். காங்கிரஸ் இல்லாத ஆட்சிகளையெல்லாம் கவிழ்த்துவிட்ட பிறகு தமிழக அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்களே காங்கிரஸ் மாநாட்டிலே வெளிப்படையாகப் பேசினார்கள் (திரு. கே. விநாயகம் : அப்படியில்லை) திரு. விநாயகம் அவர்கள் சொல்கிறார்கள் எனக்கு, 'அப்படியில்லை' என்று. அவர்கள் சொல்வதை நான் உணர்கிறேன். அவருக்கு இருக்கிற பாதுகாப்பு இந்த அரசு இருப்பதால்; இந்த அரசு இல்லாவிட்டால் காங்கிரசிலே அவருடைய இடம் என்ன என்பது எனக்குத் தெரியாது.

THIRU K. VINAYAKAM : That serves no purpose. அதுமாதிரி யாராவது ஒருவர் சொன்னால் அவர் அப்படிச் சொன்னார், இப்படிச் சொன்னார் என்றெல்லாம் ரசனைக்காகச் சொல்லலாம். ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கவிழ்ப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்று ஆதாரப் பூர்வமாகச் சொல்லுவார்களா ? அங்கே இருப்பவர்கள் எல்லாம் அப்படிச் சொல்கிறார்கள் என்று காட்டுவதெல்லாம் பயனற்றது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்ட எங்களுக்கு நண்பர் விநாயகம் அவர்கள் அகில இந்தியக் காங்கிரசிலே இருந்து விலகிக்கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது. நான் அந்த மனப்பான்மையைத்தான் விளக்கினேன். அந்த மனப்பான்மைதான் பகையை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறதே தவிர, பகையை மூட்டிவிடுவதற்கான எந்த நடவடிக்கையையும் நாங்கள் எடுக்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாததால்தான் எடுத்ததற்கெல்லாம் இந்த ஆட்சியைப்பற்றியும் ஆட்சியினிடத்திலேயும் பகையுணர்ச்சி உங்களுக்கு இருக்கிறது. இந்த ஆட்சியை நாங்கள் கவிழ்ப்பதற்குச் சதி செய்தோமா என்று பேசினார்கள். நாங்கள் 138 பேர்களாக இல்லாமல் ஐந்தாறு வோட்டு வித்தியாசத்தில் இருந்தால் என்ன என்ன செய்திருப்பீர்கள் என்பதை ஊகித்துக்கொள்ள முடியும். என்ன என்ன நடைபெற்றிருக்கிறது என்பது தெரியும். திருத்தத்தில்கூட கூட்டுச் சேரமாட்டோம் என்று சொன்ன அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி 17 பேர்கள்

மறைப்பதற்காகத்தான். இதைப் பற்றி உரையிலே சொன்னதைப் பற்றிக் கூட, நாங்கள் சொல்லி, கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்ற அரசியல் பிரச்சினையைக் கிளப்பினார்கள். அப்படியே வைத்துக் கொண்டாலும் கூட, முன்னாலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த திரு. சஞ்சீவையா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிக் கொடுத்திருக்கிற விமரிசனங்களைப் படித்துப் பார்க்க வேண்டும். ரொம்பத் தொலைவில் உள்ளவர் கூறியதைப் படித்துப் பார்க்க மாட்டோம் என்று கூறினால், அவருக்கும் எனக்கும் மிக நெருங்கிய நண்பரான திரு. சுப்பிரமணியம் அவர்கள் ‘ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்ட பலன்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற கோபத்திலேதான் காங்கிரசைத் தோற்கடித்து விட்டிருக்கிறார்கள்’ என்று சில திங்களுக்கு முன்னால் கோவையில் பேசியதன் பொருளை மறந்து விட மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, ஐந்தாண்டுத் திட்டங்களினால் வேளாண்மைத் துறை சரியான அளவு முன்னேறவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாகி விட்டது. அதை நாங்கள் எடுத்துச் சொல்வதால் நண்பருக்கு ஆத்திரம் வருகிறது. சில மனைவிமார்கள்பற்றிக் கதை சொல்வார்கள். ‘அவர் அடித்தது அவ்வளவாக வலிக்கவில்லை; அண்டை வீட்டுக்காரன் சிரித்தானே அதுதான் தாங்க முடியவில்லை’ என்பதைப் போல, ஐந்தாண்டுத் திட்டங்களால் வேளாண்மைத் துறை வெற்றி பெற முடியவில்லை என்பது. ஆனால் இதை அண்ணாதுரை சொல்கின்றபோது ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது என்ற கதைப் போக்கில் பேசுகிறார்களே தவிர, அவர்களுக்கே அது தெரியும்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் ஆற்றிய ஆளுநர் உரையிலே இவ்வாறு கூறவில்லை. ஓரளவு விவசாயத்துறை வெற்றிகரமாக இருக்கிறது; முந்திய சர்க்கார் நல்ல முறையில் பணியாற்றியது என்று கூறிவிட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. வ. ஜார்ஜ் :** நான் ஒரு கிளாரிபிகேஷன் என்ற முறையிலேதான் கேட்கிறேன். முன்னாலே நிகழ்த்திய கவர்னர் உரையிலே இதைப்பற்றிக் குறிப்பிடாமல் இப்போது குறிப்பிடுவதற்கு என்ன காரணம் என்று முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எடுத்த எடுப்பிலேயே கோபப்படுத்த வேண்டாமென்று போன தடவை சொல்லாமல் இருந்திருக்கலாம். கட்சிகளை மறந்து இந்த விஷயத்தைச் சற்று ஆராய வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் போதுமான அளவு வெற்றி பெறவில்லை என்பது இந்தியா முழுவதும், வெளிநாடுகளிலும் நிபுணர்களின் கருத்தாகும். அதைத்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.





‘ஏ.டி.டி. 27 ஏது தெரியுமா? நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்தது’ என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய நண்பர் என்று சொல்லக்கூடிய உரிமை கூட எனக்கு இருக்கிறது. அது அவர்கள் கண்டு பிடித்தது என்று பெருமையோடு சொல்வார்களானால் நானும் கூட வரவேற்பேன். 1950-ம் ஆண்டு எஃப்.ஏ.ஓ.-வில்—உலக நாடுகள் சபையில் விவசாயப் பிரிவுக்காக ஏற்படுத்திய இடத்தில், போகூர் என்ற இடத்தில் முதன்முதலாக மீண்டும் கூடி புதிய ரக நெல் விதைகளைத் தயாரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாவதாக ஜகார்தாவில் கூடிப் பேசப்பட்டு, அதற்கு அடுத்த வருஷத்தில் பாங்காக்கில் கூடி அங்கும் பேசப்பட்டு, அதை நிறைவேற்றிக் கொடுக்கிற பொறுப்பு ஆடுதுறைக்கு அளிக்கப்பட்டது. இதற்குப் பாத்தியதை கொண்டாட வேண்டுமென்று சொன்னால் நண்பர் கருத்திருமன் அவர்கள் ரொம்ப தொலைவு போக வேண்டும். நண்பர் சுப்பிரமணியம்தான் கண்டு பிடித்ததாகச் சொன்னாலும்—நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்குப் பெருமை அதிகம் கிடைக்கும்; பெற்றுப் போட்டுவிடலாம்; வளர்ப்பதிலேதான் பெருமை இருக்கிறது; நன்மை கிடைக்க முடியும்—நாங்கள் அதை நல்லமுறையில் வளர்த்திருக்கிறோம் என்ற முறையில் நண்பர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

மற்றும் ஒன்றைச் சொல்லுகின்றபோது அவர் தான் கொள்முதலுக்கு விரோதி அல்ல என்று குறிப்பிட்டார்கள். அதை நான் மிகவும் பாராட்டுவதோடு, வரவேற்கிறேன். கொள்முதலுக்கு விரோதி அல்ல என்பது மட்டுமல்லாமல், கொள்முதலை எப்படி இலகுவாகச் செய்யலாம் என்பதுபற்றியும் பல முறை யோசனை சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த யோசனைகளைப்பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசுகின்றபோது அதை அவர்கள் சரியானது என்று ஒத்துக்கொள்ளாததால் ‘விவாத’ நிலையில் இருக்கிறதே தவிர, அவர் சொல்கின்ற யோசனைகள் புறக்கணிக்கப் பட்டுவிட்டன என்று மனத்தாங்கல் கொள்ளத் தேவையில்லை; இன்னும் ஆராய்ந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

இன்னொன்று அவர்கள் சொன்னார்கள். நீங்கள் நெல் விலையை அதிகப்படுத்துங்கள், நான் மத்திய அரசை ஒரு கை பார்க்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு கை பார்க்கிறேன், ஒரு கை பார்க்கிறேன் என்பது தமிழகத்தில் தவறாக வந்துவிட்ட ஒரு பழமொழி. இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு பார்க்கலாமே. ஒரு கை ஒரு காரியத்திற்கும் இன்னொரு கை இன்னொரு காரியத்திற்கும் என்று இருக்கத் தேவையில்லை. ஆனால் மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து பார்த்து அவர்கள் கொடுத்திருக்கிற காரணத்தை நாங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர அதையொட்டித்தான் நாங்கள் நடந்து கொள்கிறோம் என்று நான் சொல்லவில்லை. புதுரக நெல் வந்திருப்பதை எதிர்க்கட்சித்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 பிப்ரவரி 20

தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்ட பிறகு, அந்தப் புதுரக நெல்லால் விளைச்சல் அதிகமாகிறது என்பதை ஒத்துக்கொண்ட பிறகு, ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் அதிக நெல் கிடைக்கும் போது, ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கக்கூடிய வருவாய் இயற்கையாகவே அதிகரித்திருக்கும்போது, அதிக விலை கூடக் கொடுக்காமல் அவர்களுக்கு ஆதாயம் அதிகமாகிறது என்பது சாதாரணக் கணக்கு. அப்படியிருப்பதில் போனஸ் மூன்று ரூபாய்கூட விலையோடு கூட்டி 48 ரூபாய் அளவிற்கு இன்றையதினம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே கொள்முதல் விலையை அதிகப்படுத்தத் தேவையில்லை என்பதற்கு எங்களுக்குத் தெரிந்த நியாயமும் இருக்கிறது, அந்த நியாயத்தை ஆதரிக்கும் முறையில் மத்திய அரசிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு சொன்னது மட்டுமல்ல. திட்டக் கமிஷன் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கொள்முதல் விலையை அதிகப்படுத்தவில்லை, அதிகப்படுத்தவில்லை என்ற பேச்சை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்ளுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது என்று கருதுகிறேன். இன்னொரு வகையில் பார்த்தால் இவர்கள் நெல்லுக்கு அதிகவிலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுகூடப் பேசுவதாகத் தெரியவில்லை. எப்படியாவது இந்தச் சர்க்காருக்கு ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டாக்கலாமா என்பதுதான். அதனால்தான் அவர்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி இங்கு மட்டும் போடுகிறீர்களே, மற்றயிடங்களுக்கு ஏன் போடவில்லை, எல்லாயிடங்களுக்கும் போடுங்கள் என்றுகூறி, நெல்லுக்கு அதிகவிலை கொடுத்து வாங்குங்கள், அதிகவிலை கொடுத்து வாங்கி எல்லாயிடங்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாமல் நீங்கள் திண்டாடுங்கள், அதைப் பார்த்து நாங்கள் வேடிக்கை பார்க்கிறோம், வேடிக்கை பார்த்து மத்திய அரசிடம் சொல்கிறோம் இவர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியவில்லை ஆகவே, திண்டாடுகிறார்கள் என்று எடுத்துச்சொல்லி அதற்கு ஏதாவது இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு வழியிருக்குமானால் அவர்களை நீக்க முயற்சிக்கிறோம் என்ற அந்த பழைய இடத்திற்குத்தான் போகிறார்கள். நான் கூட வேடிக்கையாகச் செய்வதானால் இப்போது எல்லாயிடங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று உத்தரவு இட்டுவிட்டு இருக்கிற அரிசியை எல்லாயிடங்களுக்கும் அளந்து போடச்சொல்லி ஒரு மூன்று மாத காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது என்பதைச் சொல்லிவிட்டு நாங்கள் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறோம் என்று நான் சொல்லிவிடுவேனானால் அடுத்த ஆறு மாதங்களுக்கு வேண்டுமானால் உங்களுக்கு சற்று நிம்மதியிருக்கலாம், ப்ரசிடென்ட் ரூல் இருக்கிறபோது. ஆனால், மறுபடியும் பொதுமக்களிடம் போகிறபோது இதைத்தான் உங்களிடம் கேட்பார்கள். அண்ணாதுரை விலகுவதற்கு முன்னால் ரூபாய்க்கு படி அரிசி என்று எல்லாயிடத்திற்கும் போட்டானே நீங்கள் போடுவீர்களா, போடமாட்டீர்கள், ஆகவே அப்படிப்



1968 பிப்ரவரி 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

போடாத உங்களுக்கு நாங்கள் ஏன் வோட்டு போடவேண்டும் என்ற கேள்வியைத்தான் கேட்பார்கள். ஒன்று உங்களிடம் திட்டவட்டமாகச் சொல்கிறேன். மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்று திட்டவட்டமாக எனக்குத் தெரிந்தால் தெரிந்த மறுகணமே நான் ஆட்சிப்பொறுப்பில் இருக்கமாட்டேன். அப்படி ஆட்சிப் பொறுப்பில் நான் இல்லாத நேரத்தில் மறுபடியும் நீங்கள் வெகு சுலபத்தில் உள்ளே வருகிறபடி வழியை வைத்து விடுவேன் என்று நீங்கள் கருதவேண்டாம். நான் விலகி விட்டால் நீங்கள் உடனே வந்துவிடலாம் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபடவேண்டாம். மேற்கு வங்காளத்தில் என்ன பாடுபடுகிறது என்பது பத்திரிகையைப் பார்த்தால் தெரிகிறது. எங்களை நீக்கவேண்டும், இந்த ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும் என்று நாங்கள் சதி செய்கிறோமா என்று விநாயகம் அவர்கள் கேட்டார்கள். சதி என்றால் வெளியே தெரியாது. இதில் சதியே தேவையில்லை. அங்கத்தினர்கள் பேசுவதிலிருந்தே அது உங்களது எண்ணமாகயிருக்கிறது, திட்டமாகயிருக்கிறது என்பது தெரிகிறது. அதில் நஷ்டம் அடையக் கூடியவர்கள் நிச்சயமாக நாங்கள் அல்ல. நஷ்டம் அடையக் கூடியவர்கள் இந்த நாட்டு மக்களாக இருப்பார்கள் அல்லது ஜனநாயகமாக இருக்குமேதவிர நாங்களாக இருக்கமாட்டோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமன்றத்தில் நான் பேசுகிறபோது ஒவ்வொரு நாளும் இதுதான் கடைசிப் பேச்சாக இருக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் நான் பேசிக்கொண்டு வருகிறேனேதவிர அப்படியே குச்சி அடித்து இங்கேயே உட்கார்ந்து இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதை எங்களைக் கவிழ்க்கலாமா, இந்த அரசை நீக்கலாமா என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் இவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, நாங்கள் எவ்வளவோ தொழிற்சாலைகள் ஆரம்பித்து வைத்தோம், இவர்கள் வந்து தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிட்டார்கள் என்று சொன்னார்கள். இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்றுக்கொண்டு வருகிற காங்கிரஸ் ஆட்சியில் என்னென்ன புதுத் தொழில்கள் எந்தெந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்மோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சி அடையக் காரணம் இருக்கிறதா அல்லது வெட்கப்பட காரணம் இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்வதற்காக சில புள்ளிவிவரங்களைக் கேட்டேன். ஆந்திராவில் காங்கிரஸ் அரசாளுகிறது. அங்கு மார்ச் 1967-ல் இருந்து செப்டம்பர் 67 வரை புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்ஸ் தரப்பட்டு இருக்கிற தொழில்கள் 6. ஆரம்பிக்கப்படுவதற்காக வந்திருக்கிற கடிதங்கள் 2. கேரளாவில் புதிதாக ஆரம்பிக்கப் படுவதற்காக லைசென்ஸ் கொடுத்திருக்கிற தொழில்கள் 5. கடிதம் வந்திருப்பது 2. சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக

கடி.

லைசென்ஸ் கொடுக்கப்பட்ட தொழில்கள் 10. புதிதாக தேவை என்று கடிதங்கள் வந்திருப்பது 6. ஆகவே நாங்கள் வந்தபிறகு தொழில்கள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன என்று சொல்வது உண்மைக்கு மாறானது என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் அரசாளும் இடங்களைவிட ஒரு படி அதிகமாக இங்கு தொழில்கள் வளர்ந்திருக்கின்றனவே தவிர இங்கு குறையவில்லை. பலயிடங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டதாக அவர்கள் சொல்கிறார்கள். அது பெப்ரவரி-மார்ச்சை கணக்கில் வைத்து பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். கடைசியாக திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது கோயம்புத்தூரில் பல ஆலைகள் மூடப்பட்டு, பல ஆலைகள் மூடப்பட்ட நிலையில் அவர்களை அணுகி ஆலைத் தொழிலாளர்கள் இதைத் திறக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில் ஆலை முதலாளிகள் மூடிவிட்டதற்கு நான் எப்படிப் பொறுப்பாவேன், நான் அதைத் திறப்பதற்கில்லை என்று சுருக்கமான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகு ஆலை முதலாளிகள், ஆலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்கள், தொழிலாளர்கள் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் இவர்களைக்கொண்ட ஒரு முக்கூட்டு மாநாடு கூட்டி அந்த முக்கூட்டு மாநாட்டில் ஏன் இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறியும்படி பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டதற்கிணங்க, ஆலைகளுக்கு சர்க்கார் உத்தரவாதம் கொடுத்து பாங்கில் கடன் கொடுப்பார்களானால் அந்த ஆலைகள் மறுபடியும் திறக்கப்படலாம் என்று அவர்கள் பரிந்துரை தந்ததையொட்டி இதுவரையில் பல ஆலைகள் இன்றையதினம் திறக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நண்பர் கருத்திருமன் அவர்கள், நீங்கள் கோயம்புத்தூருக்குப் போய் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வந்தீர்களே என்று சொன்னார்கள். வார்த்தைக்கு வார்த்தை நிஜமாக இருக்க வேண்டுமென்பதற்காக அதைத் திருத்துகிறேன். அந்த ஒப்பந்தம் கோயம்புத்தூரில் போய் செய்ததல்ல. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட இடம் சென்னை. இன்னும் சொல்லவேண்டுமென்றால் திருச்சி. திருச்சியில்கூட ஒப்பந்தம் செய்யப்பட்டதென்றால் ஆலை முதலாளிகள் ஒரு பக்கத்திலும், ஆலைத் தொழிலாளர்கள் ஒரு பக்கத்திலும், நான் ஒருபக்கத்திலும் என்றல்ல. ஒரு பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. அப்போது நான் குற்றாலத்தில் இருந்தேன். அங்கிருந்து திரும்பி நான் சென்னைக்கு வருகிற வழியில் திருச்சியில் தங்கியிருந்து தொழிலாளர்கள் தலைவர்கள் எல்லாம் திருச்சிக்கு வரவேண்டுமென்று அன்போடு அழைத்திருந்தேன். அவர்களும் பெருந்தன்மையோடு திருச்சிக்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் கலந்து பேசியபோது ஒரு ஆலை மூடப்பட்டுப்போய்விட்டால் அதை எடுத்துக் கொள்வதற்கு





சட்டத்தில் இடமிருக்கிறதா என்று அவர்களிடத்தில் விவாதித்தேன். நமக்கு சட்டத்தில் அதற்கு இடமில்லை. ஒரு ஆலை மூடப்பட்டுப் போகிறது என்றால் ஒன்று அதை லிக்விடேஷனுக்குக் கொண்டு வரலாம். அதை ஏலத்திற்குக் கொண்டு வரலாம். சர்க்காரே ஏற்றுக் கொள்வதாகயிருந்தால் முதலில் மத்திய சர்க்காரிடம் தெரிவித்து மத்திய சர்க்கார் ஒரு கமிஷன் போட்டு அந்தக் கமிஷன் விசாரணைசெய்து அந்த விசாரணைக்குப்பிறகு தான் அந்த ஆலையை எடுத்துக்கொள்ளலாமா, வேண்டாமா என்று முடிவு கட்டமுடியும். இதை நம் எதிர்க்கட்சித் தலைவர் உணர்ந்து கொள்ளாமல் நான் ஏதோ ஒப்பந்தம் செய்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்கத்திற்கு இதில் குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது, அவர்களுக்குத்தான் வலிமை இருக்கிறது, அவர்களுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது. ஆனால் இடையில் தொழிலாளர்கள் ஆலைகள் மூடப்படுவதால் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதினால் அவர்களுக்கு ஏதாவது உதவி தரவேண்டாமா, ஏதாவது காப்பாற்றல் வேண்டாமா என்று பேசிப் பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக சட்டத்தில் அதற்கு இடமில்லை என்றாலும் அன்எம்ப்ளாய்மென்ட் இன்ஷூரன்ஸ் என்ற சட்டமோ அல்லது வேலை இழந்தோருக்கு டோல்ஸ், பணம் தருவது என்ற சட்டமோ நம்மிடம் இல்லாத காரணத்தால் வேறு ஏதாவது வகையில் இதற்கு வழிசெய்யமுடியுமா என்று நான் ஆராய்ந்து பார்க்கிறேன் என்று அவர்களிடம் சொல்லி அதுவும் தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்துபேசி ஒரு முடிவிற்கு வரலாம் என்று நான் குறிப்பிட்டு தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் இங்குகூடி அதுபற்றி பேசிய நேரத்தில் மூன்று வகையாக நாங்கள் அதில் பேசினோம்.

ஒன்று, மூடப்பட்டிருக்கின்ற ஆலைகள் மறுபடியும் திறக்கப்படுவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்ளுவது; இரண்டாவது, சில ஆலைகள் திறக்கப்படமுடியாமற்போனால், வேலையிழந்தவர்களுக்கு திறந்திருக்கிற ஆலைகளில் மாற்றுவேலை கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவது; திறந்திருக்கிற ஆலைகளில் வேலை கொடுக்க மு.ப. 1-00
முடியாமற்போனால், வேறு ஏதாகிலும் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துவது; வேறு எதிலும் ஈடுபடுத்த முடியவில்லை என்றால், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளிகள், பொதுமக்கள், அரசு ஆகியோர் எல்லாம் சேர்ந்து நிதி திரட்டுவது—இந்த முறையில்தான் அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2 லட்சம் நிதி தரப்பட்டது. நாங்கள் ரூ. 2 லட்சம் தருவதற்கு முன்னாலே, கோவையில் உள்ள வேலையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமை வேலை செய்து ரூ. 2 லட்சத்திற்கு மேல் நிதி திரட்டி, இரண்டையும் சேர்த்து தரப்பட்டது. இதுதான் எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம். 'கோயம்புத்தூருக்குப் போய் ஒப்பந்தம் செய்துவிட்டு

வந்துவிட்டாய், ஆனால், ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இதிலே ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்ற அளவுக்கு தொழிலாளர் விஷயத்தில் எங்களுக்கு நல்லெண்ணம் இருப்பதை அவர்கள் பாராட்ட வேண்டுமென்று கருதுகிறேன். அவர்களது அரசு இருந்த காலத்தில், 'ஆலை முதலாளிகள் மூடிவிட்டால் நாங்கள் பொறுப்பாளி அல்ல' என்று அவர்கள் கை கழுவிவிட்டது போல நாங்கள் கை கழுவவில்லை என்பதால் அதைப் பெருந்தன்மையோடு அவர்கள் பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அப்படிப்பட்ட நிவாரண வேலைகளில் ஒரு கட்சிக்கோ அல்லது ஒரு கட்சியினால் நடத்தப்படுகிற அரசுக்கோ அல்லாமல் எல்லோருக்கும் பங்கு இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகையினால், அவர்கள் சொன்னபடி தொழில்களெல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்று சொல்லுவது பொருத்தமானதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில்கள் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னதற்கும் நான் இந்தப் புள்ளிவிவரத்தை அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன்.

வேளாண்மைத் துறையும், தொழில் துறையும் இந்த முறையில் தீர்க்கப்பட்டான பிறகு, மீதம் இருக்கிற மிக முக்கிய பிரச்னை மொழிப் பிரச்னையாகும். நம்முடைய நண்பர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 'இந்தியை ஒழித்து விட்டோம், இந்தியை ஒழித்து விட்டோம் என்று பேசிக் கொள்கிறீர்களே, எங்கே ஒழித்து விட்டீர்கள்?' என்று கேட்டார்கள். எங்களால் ஒழிக்கக் கூடிய இடத்தில் ஒழித்தோம். எங்கள் அரசு நடக்கிற இடத்தில், இந்தி பாட மொழியாக இருப்பதை ஒழித்தோம். மத்திய அரசு, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற தொடர்க் கூட்டத்தில்கூட இப்படிச் செய்தது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்றோ, நடைமுறைக்குத் தவறு என்றோ யாரும் சொல்லவில்லை. ஏனென்றால், கல்வி என்பது மாநில அரசுக்குச் சொந்தமானது. அதிலே எந்தவிதமான மாறுதலும் செய்ய இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் செய்கிற நேரத்தில் மத்திய அரசு குறுக்கிடக் கூடாது என்பது மட்டுமல்ல; இந்தத் துறையிலே கூட அடிக்கடி அவர்கள் ஆல் இண்டியா சர்வீஸ், ஆல் இண்டியா சர்வீஸ் என்று ஆல் இண்டியா எஜுகேஷனல் சர்வீஸ், ஆல் இண்டியா என்ஜினியரிங் சர்வீஸ், ஆல் இண்டியா மெடிக்கல் சர்வீஸ், ஆல் இண்டியா ஃபாரஸ்ட் சர்வீஸ் என்று வந்த நேரத்திலெல்லாம், முன்பு இருந்த காங்கிரஸ் அரசு அவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாங்கள் வந்த பிறகு அப்படிப்பட்ட ஆல் இண்டியா சர்வீஸ்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கிறோம். ஆகையால் இந்த மாநில அரசின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் நாங்கள் மிகத் தீவிரமாக இருக்கிறோம் என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள எந்தவிதத் தயக்கமும் இல்லை. குற்றச்சாட்டு என்று எண்ணிக்கொண்டு நண்பர்



கருத்திருமன் அவர்கள் சொன்னதைப் பாராட்டுதல் என்று எடுத்துக்கொள்ளுகிறேன். குற்றச்சாட்டு என்று எதைச் சொன்னார் என்றால், இந்த கவர்னர் உரையில் முழுக்க முழுக்க முன்னேற்றக் கழகத்தின் கொள்கைதான் இருக்கிறது என்று குற்றச்சாட்டாகச் சொன்னார்; அதை நான் பாராட்டுதலாக எடுத்துக்கொள்கிறேன். அரசை நடத்துகிற கட்சிக்காரர்கள் எந்தக் கொள்கை நிறைவேற்றப்படவேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களுக்கு அதை நிறைவேற்றுவதில் நாட்டம் இருக்கிறது. இருக்கவேண்டுமென்றுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவது. ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டு வேறு கட்சியின் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று எதிர்பார்த்தால், அவர்கள் கணக்குப் போட்டிருப்பதை விட மிகப் பெரிய ஏமாளிகள் என்றுதான் பொருள்படும்.

கவர்னர் அவர்களுடைய உரையில் மத்திய அரசு மாநில அரசு தொடர்பு நிலை திருத்தி அமைக்கப்படவேண்டுமென்ற கருத்தைத் திட்டவட்டமாக வைத்திருக்கிறார். கவர்னர் உரையில் நல்ல முறையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதால் இந்த உரைக்கு எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டது முறையாகும். அதை எடுத்துக் கொண்டு பேசுவது, அதனால் ஒருமைப்பாடு கெட்டுவிடும் என்று வாதாடினால், நான் வெளிப்படையாகச் சொல்லுகிறேன், ஒருமைப்பாடு மூடி மறைத்தால்தான் கெடுமே தவிர, இப்படி இப்படி கூடி வாழலாம், இப்படி இப்படி அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்பதில் வெளிப்படையான கருத்து ஏற்பட்டாலொழிய, மூடி மறைப்பதன் மூலம், திருக்குறளில் வருகிறபடி ஒரு குடத்திற்குள் பாம்பை விட்டு குடியிருப்பது எவ்வளவு கடினமோ, நமக்குள் இருக்கிற அதிகாரத் தொடர்புகளைப் பற்றி விவாதித்துத் திருத்திக் கொள்ளாமல் ஒருமைப்பாட்டைப் பற்றி பேசுவது நல்லது அல்ல, பலனும் தராது. அதை அடிப்படையாகக் கொண்டு மொழிப் பிரச்னைபற்றி தீர்மானம் வந்கபோது திரு. ம. பொ. சி. அவர்கள், மத்திய அரசில் குவிந்திருக்கிற அத்தனை அதிகாரங்களும் பரவலாக்கப்படும் அளவுக்கு நிலைமை இருந்தால் இந்தப் பிரச்னை தீரும் என்று விளக்கினார்கள். கவர்னர் அவர்களுடைய உரையிலே மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இருக்கிற தொடர்புகள் திருத்தி அமைக்கப்படவேண்டும், அதற்காக அரசியல் சட்டத்தைக்கூட ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது முழுக்க முழுக்க இந்த அரசின் கொள்கை ஆகும். இந்த அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஏற்றுக் கொண்டு செய்திருக்கிறது. இதில் ஒளிவு மறைவு இல்லை; வெட்கப்பட, தயக்கப்பட ஒன்றும் இல்லை. ஆனால் இது எங்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பில் இல்லாத பல இடங்களிலும் இந்தக் கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. திரு. நம்பூதிரிபாத் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் கேரள மாநிலத்தில் இந்தக் கோரிக்கை வெகு வேகமாக

வளர்ந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சர்கள் மாநாடு இரண்டு திங்களுக்கு முன் நடைபெற்றபோது, பொருளாதாரத்தில் இப்படி இப்படி அதிகாரங்களைப் பரவலாக்கலாம் என்ற ஒரு புத்தகத்தை திரு. நம்பூதிரிபாத் அவர்கள் வெளியிட்டு, அதை முதலமைச்சர்கள் மாநாட்டின் பரிசீலனைக்கு வைத்தார்கள். அதைப் போலவே வேறு பல இடங்களிலும், வேறு பல மாநிலங்களிலும் அந்த எண்ணம் பரவிக்கொண்டு வருகிறது. எனக்குத் தெரிந்த வரையிலும், அடுத்த 10 வருஷத்தில் மிக முக்கிய பிரச்னையாக, எல்லா மக்கள் மனத்திலும் மேலோங்கி நிற்க இருப்பது இந்தப் பிரச்னை தான் என்று நிச்சயமாக உணருகிறேன். அப்படி நான் உணருகிற காரணத்தினால், உணர்ச்சியை முன் வைப்பவன் என்று மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப் பரவலாக்கவேண்டும் என்று கவர்னர் உரையில் இருப்பதை வலிவாக்க, இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிற கருத்தை இந்த அரசு மறுத்திருக்கிறது. அதுவும் கவர்னர் பேருரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு தவறான கருத்து, ஆனால் வலிவோடு பலரால் பின்பற்றப்படுகிறது. ஆங்கிலத்தில் சொல்லுவதானால் 'தி இனெவிட்டபிலிட்டி ஆஃப் இந்தி'—இந்தி எப்படியும் வந்தே தீரும், இந்தி தவிர்க்க முடியாதது என்ற எண்ணத்தை தாமாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம். 'இனெவிட்டபிலிட்டி ஆஃப் இந்தி'—இந்தி எப்படியும் வந்தே தீரும் என்ற பீதியை திராவிட முன்னேற்றக் கழகமும், அதனால் நடத்தப்படுகிற அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொது மொழி தேவை என்று வாதாடப்படுமானால், அது யாருக்குப் பொது மொழி ? எதற்காகப் பொது மொழி ? என்பதும் விளக்கப்பட வேண்டும். எனக்குத் தமிழ் தாய் மொழி, என் நண்பர் ஹாண்டே அவர்களுக்குக் கன்னடம் தாய் மொழி, என் நண்பர் விநயகம் அவர்களுக்குத் தெலுங்கு தாய் மொழி என்று இருக்குமானால், மூன்று பேர்களுக்கும் சேர்ந்த ஒரு மொழி கன்னடமாகவோ, தமிழாகவோ, தெலுங்காகவோ இருக்க முடியாது.

**திரு. கே. விநயகம் :** என்னுடைய தாய்மொழி தமிழ் தெலுங்கும் தெரியும், அதுதான் அங்கேயிருக்கிற கோளாறு.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சரி, இந்த இடத்தில் திரு. கருத்திருமன் என்று வைத்துக்கொண்டு கன்னடத்தை வைத்துக்கொள்ளுங்கள். இந்த மூன்று மொழிப்பிரிவினருக்கும் பொதுவான மொழி இந்த மூன்று மொழிகளிலேயிருந்து கிடைக்காது. இந்த மூன்று மொழிகளுக்கும் அப்பாற்பட்ட மொழிதான் பொது மொழியாக இருக்கும். அப்பாற்பட்ட மொழி என்று சொல்லும் பொழுது ஆங்கிலம் அந்த இடத்திற்கு வருகிறது என்று தமிழக அரசு கருதுகிறது. இணைப்பு மொழியாக ஒன்று இருக்க வேண்டாமா ? என்கிறார்கள். ஸ்விட்ஜர்லாந்திலே 5 மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. இந்த ஐந்து மொழிகளில் எந்த மொழியையும் இணைப்பு மொழி என்று அவர்கள் வைத்திருக்கவில்லை. சின்ன நாடாகிய அங்கேயே அப்படி வைத்திருக்கிறார்கள் என்றால் இங்கு முடியாதா என்பதுதான் தவிர வேறொன்றுமில்லை. தென்னாப்பிரிக்காவில் 3 மொழிகள் ஆட்சிமொழிகள், ஆனால் இணைப்பு மொழி என்று அவர்கள் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இணைப்பு மொழி என்று நாமாக கருவித்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைய தினம் ஏகாதசி என்று நினைத்துக்கொண்டு பட்டினி கிடக்கிறேன், ஏகாதசி தினத்தன்று பட்டினி கிடப்பதற்குச் சமம் என்று சொல்லிக்கொண்டு ஏகாதசி அல்லாத நாளில் விரதம் இருந்தால் அதில் பொருள் இருக்காது. அவ்வாறு ஏகாதசி அல்லாத நாளில் இன்று ஏகாதசி நாள் என்று நினைத்துக் கொண்டு நான் சாப்பிட மாட்டேன் என்று சொல்கிற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதுபோல் நமக்கு இணைப்பு மொழி தேவை என்று ஏற்றுக்கொண்டு அந்த இணைப்புமொழி இந்தியாகத்தான் இருக்க முடியும் என்று வாதிடுவது சரியான வாதம் அல்ல. ஆகையால், இணைப்பு மொழி, பொது மொழி என்ற காரணத்தைக் காட்டி இந்தியப் பிரதேச மொழிகளில் ஏதாவது ஒரு மொழியை அந்த இடத்திற்குக் கொண்டு வந்தால் மற்ற மொழிப்பிரிவினர் சந்தேகிப்பார்கள், சஞ்சலப்படுவார்கள், சங்கடப்படுவார்கள், வேறு வகையான தொல்லைகள் ஏற்படும் என்று கவர்னர் அவர்கள் தம் பேருரையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நம்மையும் அறியாமல் ஒரு விஷயத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒருமித்த கருத்துக்கு வந்திருக்கிறோம். அதாவது டெல்லியில் நிறைவேற்றப்பட்ட மொழித்திருத்தச் சட்டத்தோடு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எல்லா அரசியல் கட்சிகளும், அவ்வாறு நிறைவேற்றப்பட்டதன் விளைவாக நம் நாட்டு மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள், நம் நாட்டிலிருந்து வேலைக்குச் செல்கிறவர்களுக்குப் புதிய பளு ஏற்படுகிறது என்று எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். நமக்குள் ஒரு சமரசம் ஏற்பட்டு நாம் ஒரு முனையிலிருந்து வேலை செய்ய முடியுமா என்றால் இந்த முனையிலேயிருந்துதான் வேலை செய்ய முடியும். இந்தத் தீர்மானத்தை ரத்து செய்வது, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாமல் விட்டு வைப்பது, அல்லது இந்தத் தீர்மானத்தை அடியோடு எடுத்து விடுவது என்ற இந்த ஒரு இடத்திலே எல்லா அரசியல் கட்சிகளும் பணியாற்றலாம். ஆனால் அதோடு நின்று விடுமா என்றால் நிற்கவில்லை. அது உடனடியாக வரக்கூடிய ஆபத்தை நீக்குகிறது. அதற்கடுத்து எந்த மொழி ஆட்சிமொழியாக ஆகவேண்டும், எந்த மொழி இணைப்பு மொழியாக ஆகவேண்டும் என்ற பிரச்சினை வருகிறது. இதை கவர்னர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மேல் பேசும் பொழுது நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதைப்போல முதலில் நாம் இருக்கிற இடம் ஒரு நாடுதானா என்பதைக் கொஞ்சம் மனதை தைரியப்படுத்திக் கொண்டு பார்க்க வேண்டும். அதில் தவறு ஒன்றுமில்லை. ஏனென்றால் எத்தனையோ இடத்தில் பல்வேறு நாடுகளை ஒன்றாக இணைத்து ஒரு நாடாக ஆக்கியிருக்கிறார்கள். அமெரிக்காவில் பல்வேறு ராஜ்யங்களாக

இருந்தன, அதற்குப்பிறகு அவைகளை இணைத்து ‘யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா’ என்று ஒன்றுபடுத்தியிருக்கிறார்கள். ஆகையால், நாம் இருக்கிற இடம் ஒரு நாடுதான் என்று நான் கேட்டவுடன் ஏதோ இவன் நாட்டுப்பிரிவினையைப் பற்றிச் சொல்கிறான் என்று யாரும் அருவருக்கத் தேவையில்லை, அச்சப்படத் தேவையில்லை. நாம் ஒருநாட்டு உணர்ச்சிக்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் ஒருநாட்டு உணர்ச்சியை நாம் இன்னமும் பெற்றுவிடவில்லை. இந்த இரண்டு உண்மைகளையும் மறுப்பது ஒருமைப்பாட்டுக்கு நல்லது அல்ல. இரயிலிலே சென்ற இரண்டு நண்பர்கள் விளக்கு அணைந்ததும் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக்கொண்டார்கள் என்று சிறு கதைகளிலே வரும். இரயிலோ ஓடிக்கொண்டிருக்கிறது, விளக்கோ அணைந்து விட்டது, ஆகையால் என்ன நேருமோ என்ற எண்ணத்தில் ஒருவர் கரத்தை மற்றொருவர் பற்றிக்கொண்டு தெலுங்கில் கூறிக் கொள்வதாக அந்தக் கதையில் வரும். அதுபோல் இப்பொழுதிருக்கிற ஒருமைப்பாடு ஏறக்குறைய நாமெல்லாம் ஒன்று அல்லவா என்ற அளவிலே இருக்கிறதே தவிர, நாம் அனைவரும் ஒன்று என்று உணரத்தக்க அளவுக்கு இன்னமும் பக்குவம் பெறவில்லை. ஒருமைப்பாடு பெறலாமா என்று கேட்டால் பெறலாம் என்கிறேன். பெற முடியுமா என்று கேட்டால் நம் மனம் பக்குவப்பட்டு விட்டால் பெறலாம் என்று சொல்கிறேன். பெற்று விட்டோமா என்று கேட்டால் பெறவில்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். வருஷத்திலே இரண்டு நாட்கள் பெறுகிறோம், ஆகஸ்டு 15-இலேயும், ஜனவரி 26-இலேயும் பெறுகிறோம். நாமெல்லாம் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை தேசியக் கவி பாரதியார் இதற்கு முன்னாலே முப்பது கோடி முகமுடையாள் என்றும், ஒரே ஒரு மனமுடையாள் என்றும் சொன்னார். இன்னும் சொன்னார், “ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி” என்று. இவைகளெல்லாம் உள்ளத்துக்கு ஊட்டும் உணர்ச்சியே தவிர நடைமுறைக்கு அது சரியாக இருந்ததா என்றால் இல்லை. இப்பொழுது கூட வடக்கேயுள்ள பெருந்தலைவர்களின் பெயரால் தமிழகத்திலே மட்டும் அல்ல, தென்னாட்டு மாநிலங்களிலே பூங்காக்களைப் பார்க்கிறோம், சதுக்கங்களைப் பார்க்கிறோம், அங்காடிகளைப் பார்க்கிறோம் படிப்பகங்களைப் பார்க்கிறோம். ஆனால் தென்னாட்டு பெரியவர்களின் பெயராலே வடக்கே ஒரு சதுக்கத்துக்குப் பெயர், ஒரு அங்காடிக்குப் பெயர், அல்லது வேறு பல்வகையான சின்னத்திற்குப் பெயர் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய கருத்திருமன் அவர்கள் சொல்வார்கள், எங்களுக்கு இதிலே நம்பிக்கை இல்லை என்று. அது நல்ல வாதம். ஆனால், யாரோ உங்கள் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுவிட்டு, அதெல்லாம் வேண்டாமென்று சொல்லியிருந்தால் அது பெருந்தன்மையாகச் சொல்லி விட்டோம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும். ஆனால் கல்யாண வீட்டில் கல்யாணச் சாப்பாட்டிற்கு அழைக்கப்படாத ஒருவன் நான் கல்யாணச் சாப்பாடு என்றாலே சாப்பிடுவதில்லை என்று பக்கத்துத் தெருவிலே நின்று பேசிக்கொண்டால் எப்படி





யிருக்கும்? ஆதலால்தான் சொன்னேன், ஒருமைப்பாடு என்பது “It can only be a two-way traffic” என்று. இரண்டு பக்கத்திலேயும் நடக்க வேண்டும் It cannot be an one-way traffic” ஒருபக்கத்திலே எல்லா தியாகங்களும் இருக்கும், ஒரு பக்கத்திலே தியாகமே இருக்காது என்ற நிலை நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்காது. இப்பொழுது ஒருமைப்பாடு அல்லது இணைப்பு மொழி என்ற இந்தப் பிரச்சினையை யோசிப்பதற்குக் கூட, முதலிலே இந்தத் தீர்மானத்தை ரத்து செய்வதன் மூலம் அதற்கேற்ற சூழ்நிலை ஏற்படும். இதை நான் சொல்கிற நேரத்தில் மாணவர்களின் பிரச்சினை முந்தி வருகிறது. சில பத்திரிகைகளில் மாணவர்களைத் தூண்டிவிடுவது போல் எழுதுகிறார்கள் என்று நம்முடைய நண்பர் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். தூண்டிவிடும்படி எந்தப் பத்திரிகையில் எழுதினாலும் நான் வரவேற்கவில்லை. அவர்கள் சில பத்திரிகைகளைக் குறிப்பிட்டுக் காட்டினால், நான் சில பத்திரிகைகளைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும் அவரே கூட பேசும்பொழுது சொன்னார்கள், இது மாணவர்களின் கிளர்ச்சி அல்ல, வேறு யாரோ தூண்டிவிடுகிற கிளர்ச்சி என்று. நேற்று கோவையிலே இந்திய அரசியல்சட்டப் பிரிவைக் கொளுத்தினார்கள். அதைக்கூடவா நாங்களே தூண்டிவிட்டோம்? நாங்கள்தான் தூண்டிவிடுகிறோம், தூண்டிவிடுகிறோம் என்று அவர்கள் எங்கள் பேரில் குற்றம் சொல்வதும், காங்கிரஸ்தான் மாணவர்களைத் தூண்டிவிடுகிறது என்று நாங்கள் சொல்வதும் ஆகிய இரண்டுமே முழு உண்மை அல்ல. காங்கிரசை ஆதரிக்கும் மாணவர்களும் இருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கும் மாணவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு மாணவர்களின் எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கை உள்ள மாணவர்கள் இந்தி விஷயத்தில் மிகத் தீவிரமான கருத்தோடு இருக்கிறார்கள். அந்தக் கருத்து ஏற்படுவதற்கு நியாயம் இருக்கிறது. ஏனென்றால் நண்பர் கருத்திருமன் அவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன், நானும் நண்பர் விநாயகம் அவர்களும், நானும் நண்பர் கருத்திருமன் அவர்களும் இந்தப் பூலோகத்தில் எவ்வளவு காலம் இருக்கப் போகிறோமோ அதை விடச் சற்று அதிக காலம் இருக்கப் போகிறவர்கள் மாணவர்கள். ஆகையால்தான் இந்த விஷயத்தில் அவர்களுக்குத் தீவிர எண்ணம் இருக்கிறது. அவர்கள் நம்மைவிட நீண்ட காலத்திற்கு இருக்கப் போகிற காரணத்தால் அவர்கள் இந்த விஷயங்களில் மிகத் தீவிரமாகக் கருத்தைச் செலுத்துகிறார்கள். அப்படிச் செலுத்தும் நேரத்தில் நடந்துகொள்ளும் சில முறைகள் தவறாகப் போகிற பொழுது கண்டிக்க வேண்டாமா என்று நண்பர் கருத்திருமன் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் கண்டிக்கத் தவறினோமா என்பதை அவர்கள்தான் சொல்ல வேண்டும். நானே சொன்னேன், கோயம்புத்தூரிலே கிளர்ச்சியிலும், தீ எரிப்பிலும், மற்றவைகளிலேயும் ஈடுபட்டதன் காரணமாக இப்படிப்பட்ட அமளிகள் ஏற்பட்டபோது நான் வெளியிட்டுள்ள அறிக்கையில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்ததோடு மட்டுமல்ல, நான் அனைத்தையும்

கூட இந்தி எழுத்து இல்லாமல் அழிக்கப்பட்டிருக்கிறது என்றால் அது முன்னேற்றக் கழகம் திட்டமிட்டுச் செய்திருக்கிறது என்று நீங்கள் சொல்வீர்களானால் எங்களாலே தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு நீங்கள் பெருமையைத் தருகிறீர்கள் என்று தான் நாங்கள் சொல்லிக்கொள்ள முடியும். உள்ளபடியே அந்த அளவுக்கு எங்களுக்குத் திறமை இல்லை. எங்களுக்கு இல்லை என்பது மட்டும் அல்ல; நான் குண்டூருக்குப் போன உடனே பத்திரிகையிலே சொன்னேன்.

"Etiquette demands that the Chief Minister of a particular State should not create controversy in a neighbouring State. Therefore I am not going to enter into a controversy with the Chief Minister of Andhra Pradesh as regards the language issue." என்று சொல்லி விட்டுத் தான் நான் மற்றவைகளைப் பேசினேன். என்னை நம்முடைய நண்பர் கருத்திருமன் போன்றவர்கள் நன்றாக அறிவார்கள். ஏறக்குறைய இந்த அரசியலில் கொஞ்சம் மெதுவாகச் செல்லக் கூடிய எண்ணத்தில் கொஞ்சம் அதிகமாகப் பற்றுதல் கொண்டவன் நான். ஆங்கிலத்திலே 'மாடரேட்' என்று சொல்லுவார்கள். அந்த மாடரேட் என்ற கொள்கை 'ஸ்டெபிலிட்டி'-க்கு உதவும்—நிலைத்திருக்க உதவும் என்பதில் நான் சற்றுப் பற்றுக் கொண்டவன். வீணாக விவரங்களை நான் தெரிந்து கொள்வதும் இல்லை; வீணாக விவாதங்களில் நான் ஈடுபடுவதும் இல்லை; அப்படி ஈடுபடுவதில் நஷ்டமே இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எத்தனையோ விஷயங்களில் நான் ஈடுபட முடியுமென்று பட்டியல் விடுத்தார். நான் அவைகளிலெல்லாம் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் 3, 4 மணி ஆகும். அத்தனை விஷயங்களும் நான் ஈடுபடக்கூடிய விஷயங்கள் தான். நம்முடைய உணவு அமைச்சர் அவரைக் கேட்டார், "உங்களுக்கு விளைந்த விளைச்சல் எவ்வளவு? கொள்முதலுக்கு நீங்கள் கொடுத்தது எவ்வளவு? அதில் வந்த வருவாய் எவ்வளவு? குடும்பத்திற்கு மட்டும் தேவையானது எவ்வளவு?" என்று. கடைசி வரையில் ஒன்றுக்குக் கூட அவர் பதில் சொல்லவில்லை. நான் விரும்பி இருந்தால், திருப்பித் திருப்பி, ஜார்ஜைக் கேட்டதைப் போல் கருத்திருமன் இதற்குப் பதில் சொல்லுங்கள் என்று கேட்கலாம். ஆனால் ஏன் கேட்கவில்லை என்றால் அப்படிக் கேட்டு ஒரு திருப்தி கொள்ளுவதில் நமக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. ஆகவே, அவர்கள் இப்பொழுது மொழிப் பிரச்சினையிலே மற்ற மாணவர்களை நீங்கள் தூண்டிவிடுகிறீர்கள் அல்லது கறுப்புக்கொடி காட்டுவதற்கு நீங்கள் துணையாக இருக்கிறீர்கள் என்று சொல்வாரானால் அவரை நான் ஒன்று கேட்கிறேன். தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் நான் உடுமலைப்பேட்டைக்கு பிரசாரத்திற்காகச் சென்றேன். உடுமலைப்பேட்டையில் போட்டியிலே தேர்தலுக்கு அப்பொழுது நின்ற சாதிக் பாட்சா அவர்கள் வெற்றி பெறப் போகிறார்கள், அமைச்சராகப் போகிறார்கள் என்று ஜோதிடர் கூடச் சொன்னதில்லை. அப்படிப்பட்ட நேரம், நான் உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே ஒரு சிற்றூருக்குச் செல்கிற





பொழுது நான் போனதற்கு முன்னாலே சென்ற ஒரு கார் அடித்து நொறுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஒரு வார்த்தை. ஒரு ஆறுதல் சொல் சொல்லிற்றா? ஒரு நீதி விசாரணை அப்பொழுதிருந்த காங்கிரஸ் அரசு நடத்திற்றா? எனக்குச் சொல்ல வேண்டாம். நான் மிகச் சாமானியமானவன். அவருடைய உள்ளத்திற்கே அவர் சொல்லிக் கொள்ளட்டும். அது மட்டும் அல்ல; நான் சாதிக் பாட்சா வீட்டிலேயிருந்து உள்ளூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆள் அனுப்பி, நான் இந்தக் கிராமத்திற்குப் போக வேண்டும், உயர்தர போலீஸ் அதிகாரியைக் கேட்டுவிட்டு வாருங்கள் போகலாமா என்று கேட்டனுப்பியதற்கு, அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி கூட இல்லை என்று திரும்பி வந்து சொன்னார். ஆனால் எங்களுடைய அரசில் நடந்தது எல்லாம் சரி என்று நான் சொல்லவில்லை. நம்முடைய நண்பர் சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு புறத்திலே டி. எஸ். பி. யும் இன்னொரு புறத்திலே கலெக்டரும் அவர் செல்லுகின்ற ஒவ்வொரு இடத்திற்கும் செல்ல வேண்டுமென்று இப்பொழுது கட்டளை போடப்பட்ட பொழுது, அவர்கள் செல்லுகின்ற ஒவ்வொரு இடத்திலேயும் உயர்தர அதிகாரிகள் இருக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபொழுது எனக்குத் துணைக்கு ஒரு ஹெட் கான்ஸ்டபிளையாவது அனுப்பியிருப்பார்களா என்று நான் கேட்கவில்லை. மறுபடியும் நாங்கள் பதவியை இழந்து எதிர்க்கட்சியாக மாறுகிற நேரத்திலே கூட நான் ஹெட் கான்ஸ்டபிளையாவது கொடுங்கள் என்று கேட்டுத் திருப்தி அடைய மாட்டேன். எனக்குத் தனிப்பட்ட முறையில் சுப்பிரமணியம் அவர்களுடன் உள்ள நட்பை விளக்குவதற்காக மட்டும் அல்ல நான் இதைக் குறிப்பிடுவது. இந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு சூழ்நிலை என்னென்ன, நடவடிக்கை எதற்கு வேண்டுமோ அவைகளுக்கு எல்லாம் எடுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தான் குறிப்பிட்டேன்.

சரி, திராவிட முன்னேற்றக் கழகம் தான் திட்டமிட்டு மாணவர்களைத் தூண்டிவிட்டு, கறுப்புக் கொடி காட்டிற்று, கல் எறிந்தது என்று நண்பர்கள் சொல்கிறார்களே, அது உண்மை என்றே வாதத்திற்கு வைத்துக்கொள்ளலாம். பகை குறைக்கப்படவேண்டுமென்றால், மறு நாள் காங்கிரஸ் ஊர்வலம் திராவிட முன்னேற்றக் கழகப் பகுதிகளுக்குச் சென்று, கொடிகளை இறக்குவதினால் பகை குறையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கருதுகிறார்களா? அங்குள்ள படிப்பகங்களைத் தாக்குவதனால் பகை குறைந்துவிடும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா? சினிமா கொட்டகைகளில் வைக்கப்பட்டிருக்கும் எம். ஜி. ஆர். படங்களை நொறுக்குவதன் மூலம் அந்தப் பகை நீங்கிவிடும் என்று கருதுகிறார்களா? இல்லையே, பகை வளர்வதற்குத் தானே வழி செய்யும்? காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நண்பர் கருத்திருமன் அவர்கள். அப்படியெல்லாம் காங்கிரஸ் செய்யத் தேவையில்லை என்று ஏதாகிலும் அறிக்கை விட்டாரா? யோசனை சொன்னாரா? அல்லது அவருடைய தலைவர்கள் அந்த இடத்தைப் பற்றி சிந்தித்தார்களா என்றால், இல்லை.

கண்டித்தேன். "I feel sick when I read such things" என்று சொன்னேன். அது வெறும் எழுத்து மட்டும் அல்ல; உண்மையிலேயே நான் நோய்வாய்ப் பட்டேன். ஏனென்றால் இது போன்ற கிளர்ச்சிகளை ஒரு துளியும் நான் விரும்பவில்லை. விரும்பாதது மட்டுமல்ல; அவைகளைத் தூண்டி விடுகின்ற அளவுக்கு இழிவான அரசியல் முறையும் எனக்கு வராது. ஆனால் ஒன்றை நாம் உணர வேண்டும். நாம் சொல்லுவதைக் கேட்கக் கூடிய மாணவர்கள் காங்கிரசிலே இருக்கலாம், நாம் சொல்லுவதை கேட்கக் கூடிய மாணவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கலாம். ஆனால் இந்த இரண்டு மாணவர்களின் எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கை உள்ள மாணவர்கள், உண்மையிலேயே தாங்கள் பாதிக்கப்படுகிறோம், பெரியவர்கள் தங்களை சரியாகக் காப்பாற்றவில்லை என்று கருதுகிறார்கள். கருதுகிற காரணத்தாலேதான் இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் நடைபெறுகின்றன. அதை ஒரு பொழுதுபோக்காகவோ, விளையாட்டாகவோ அவர்கள் செய்வதாக நான் கருதவில்லை. இதே மாணவர்கள்தான் அணிவகுத்து நின்றார்கள் சீனப் படையெடுப்பின்போது; இதே மாணவர்கள்தான் நிதி திரட்டிக் கொடுத்தார்கள் பாகிஸ்தான் படையெடுப்பின்போது; இதே மாணவர்கள் தான் ஹோம் கார்டிலே இருக்கிறார்கள்; இதே மாணவர்கள்தான் என்.சி.சி.யிலே இருக்கிறார்கள்; இதே மாணவர்கள்தான் நாடு ஒன்றாக இருக்க வேண்டுமென்று நாட்டு ஒற்றுமைப் பத்திரத்தைப் படிக்கிறார்கள். அந்த மாணவர்கள் கெட்டுப் போய் விட்டார்கள்; அல்லது இன்னாரால் கெடுக்கப்பட்டார்கள் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுவதைவிட, அவர்களுடைய உணர்வுகளை, அடிவாரத்தில் ஏற்பட்டிருக்கிற அச்சத்தை நீக்குவதற்கு நம்மாலே முடிகிறதா? என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதை நாங்கள் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பது மட்டுமல்லாமல், நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்திலே நமது பிரதமர் அவர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும், ஒரு உயர்ந்த ரக மாநாடு நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டோம். அதை கவர்னர் உரையிலே வெளியிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் தம்முடைய பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். அதற்காகவாவது பாராட்டுவார்கள் என்று பார்த்தேன். ஏனென்றால் தீர்மானத்திலே இணைக்கப்பட்டிருப்பது முழுக்க முழுக்கக் காங்கிரசினுடைய கருத்து. அதற்காகவாவது பாராட்டலாம் என்று அவர்கள் எண்ணுவார்களா என்று பார்த்தேன். அதைக் கூட அவர்கள் பாராட்டவில்லை என்றாலும் அப்படி ஒரு கலந்து உரையாடல் நடைபெற வேண்டுமென்றாலும் அந்தக் கலந்து உரையாடல் நடைபெறுவதற்கு முன்னாலே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இந்த தீர்மான விஷயத்தில் ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்திருப்பதாலே முதலில் இந்தியப் பேரரசு, அவர்கள் தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டும். அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டால்தான் ஒன்றுகூடிப் பேசுவதற்குக் கூட ஒரு நல்ல



சுமுகமான நிலைமை ஏற்படும். இலையிலே எல்லாவற்றையும் வைத்துவிட்டு, கையிலே கட்டுப் போட்டுவிட்டு உனக்கு இஷ்டமானதை சாப்பிட்டுக்கொள் என்று சொன்னால் எப்படி நடக்காதோ அது போல் தான் இருக்கிறது இது. கைக் கட்டை அவிழ்த்து விட்டு இலையிலே உள்ளவற்றை எடுத்துக் கொள் என்றால் எடுத்துக்கொள்ள முடியும். அதை விட்டுவிட்டு கையைக் கட்டிவிட்டு இலையிலே எல்லாவற்றையும் போட்டுவிட்டு எடுத்துக் கொள் என்றால் எப்படி முடியாதோ அதைப் போல இந்த ரெசலூஷன் நம்முடைய கரங்களைக் கட்டுப்படுத்தி விடுகிறது. அந்தக் கட்டுக்களை அவிழ்த்து விட்டுவிட்டு இலையிலே வைத்திருப்பதில் உங்களுக்கு எது வேண்டும், உங்களுக்கு எது வேண்டுமென்று கேட்டால்தான்—கையிலே உள்ள கட்டு நீங்கினால்தான்—கருத்தை இதிலே சொல்ல முடியும். ஆகையினால் இந்த சமத்துவத்தில் இந்தியப் பேரரசு ஈடுபட வேண்டுமென்று நான் இந்த அவையின் சார்பிலும் அரசின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் சார்பிலே என்று சொல்லவில்லை. காங்கிரஸ் சார்பிலே என்று சொல்ல எனக்கு மெத்த ஆவல் தான்; ஆனால் எனக்கு அவர்கள் அந்த உரிமையை அளிக்காததாலே அதை நான் சொல்லவில்லை. அவர்கள் தனியாகக் கூட அதைச் சொல்லிக் கொள்ளலாம்.

மாணவர் கிளர்ச்சிகள் நடக்கிற நேரத்தில் நடவடிக்கைகள் எடுத்தீர்களா என்று நம்முடைய நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். என்னுடைய சுபாவத்தையும் நான் நடத்துகின்ற அரசினுடைய இயல்பையும் கொஞ்சம் விளக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். நான் எண்ணிக் கொண்டிருப்பது எல்லாம், பொருள் நட்டத்தை விட, உயிர் நட்டத்தைக் கூடுமானவரையில் தவிர்க்க வேண்டுமென்பதுதான். அதைத் தான் என்னுடைய சுபாவமாக வைத்திருக்கிறேன். இந்த அரசினுடைய கொள்கையாக வைத்திருக்கிறேன். இப்பொழுது பெங்களூரிலே மாணவர்கள் எல்லாம் கிளர்ச்சி நடத்தினார்கள். சாதாரணக் கிளர்ச்சி அல்ல; சாதாரண நட்டமும் ஏற்படவில்லை. ஒரே நாளில் பல லட்சம் ரூபாய்கள் நட்டம் ஆயிற்று என்று சொன்னார்கள். பொருள் நட்டம் அடைந்தது மாத்திரம் அல்ல, பெரிய அமளியே நடந்ததாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அமளி நடந்தது மாத்திரம் அல்ல; பல இன்னுயிர்கள் பாதிக்கப்பட்டன; சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றும் பார்த்தேன். ஆந்திராவிலே அதைப்போல் பெருத்த கலவரம் நடக்கப்பெற்றதையும் நடைபெற்றுக்கொண்டிருப்பதையும் நான் பார்த்தேன். சமீபத்திலே நான் குண்டூருக்கும் தெனாலிக்கும் சென்றபோது நானே கூட ஆச்சரியப் பட்டேன். அந்தக் குண்டூரிலும் தெனாலியிலும் மருந்துக்குக் கூட ஒரு இந்தி எழுத்து இல்லை. அது ரயில்வே நிலையமானாலும் சரி, தபால் தந்தி நிலையமானாலும் சரி, அல்லது வேறு எந்த நிலையமானாலும் சரி, எந்த இடத்திலேயும் ஒரு இந்தி எழுத்தும் இல்லை. அதுவும் எப்படிப்பட்ட இடத்தில்? இந்தியைக் கட்டாயப்பாடமாகப் பள்ளிகளில் படிக்கிற ஆந்திராவில். அங்கே, கட்டாயப்பாடமாகப் படிக்கிற ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் ஒரு எழுத்துக்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 பிப்ரவரி 20

ஆக, பகை வளரவேண்டும் என்பதிலே பலருக்கு நாட்டம் இருக்கிறது. பகை வளரவேண்டும் என்பதிலே பலருக்கு நாட்டம் இருப்பதினால், சிறு சிறு கலவரங்களெல்லாம் கூட பயங்கரமான அளவுக்குச் செல்லக்கூடும். அது இந்த நாட்டிற்கு மட்டும், இந்த மாநிலத்திற்கு மட்டுமே உரித்தானது என்று கருதத் தேவையில்லை. இந்தியா முழுவதிலும் இன்றையதினம் அந்த மனப்பான்மை இருக்கிறது. கௌஹாத்தியில் ஃபான்சி பெசார் என்ற கடை வீதியே இன்றையதினம் இருக்கும் இடமே தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டது. அங்கு பிரிவினைவாதிகளாகிய நாங்களா இருக்கிறோம்? அங்கு பிளவு வாதிகளாகிய நாங்களா இருக்கிறோம்? அங்கு விவரம் தெரியாதவர்களாகிய நாங்களா இருக்கிறோம்? அங்கு அரசாளுவது காங்கிரஸ் கட்சி. இவ்வளவெல்லாம் நடந்ததே, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நண்பர் கருத்திருமன் அவர்கள் கேட்டார்கள். ஒரு ஃபான்சி பெசார் கொளுத்தப்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய் கௌஹாத்தியில் நஷ்டம் ஏற்பட்டு, அங்கே இருந்த ராஜஸ்தான் மக்கள் ஊருக்கு திரும்பவேண்டிய அளவுக்கு வந்ததே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? நான், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று, வீம்புக்காகக் கேட்கவில்லை. உடனுக்குடன் இப்படிப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுக்க இயலாது. ஒரு கூட்டத்தில் ஒரு கலவரம் நடைபெறுகின்ற பொழுது, இன்னார்தான் இதைச் செய்தார்கள் என்று கண்டறிவது என்பது எளிதான காரியம் அல்ல. ஆகையால், கௌஹாத்தியில் நடந்ததற்கு இன்னமும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படாமல், ராஜஸ்தான் முதல் அமைச்சரும், அஸ்ஸாம் நாட்டு முதல் அமைச்சரும் பேசிக்கொண்டிருப்பதிலே தான் இருக்கிறது. ஒரு கடைவீதி முழுவதும் கொளுத்தப்பட்டது. அதைத் தள்ளி விடுங்கள். ராஞ்சியில் நடைபெற்றதே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? பிலாயில் நடைப்பெற்றதே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கலவரங்கள் நடைபெற்ற ஒவ்வொரு நேரத்திலும் காங்கிரஸ் அரசு என்ன திட்டவட்டமான நடவடிக்கை எடுத்தது? நம்முடைய நண்பர் யாரோ மூன்று நர்ஸுகள் கத்தியால் குத்தப்பட்டதாகச் சொன்னார்கள். உள்ளபடியே ரொம்பப் பரிதாபப்படுகிறேன். அவை, டெல்லி மாநகரத்தில் ஒரு அன்னிய நாட்டின் அம்பாசிடர் மனைவி வீதியிலே நடந்து செல்லுகின்ற நேரத்தில் ஆடையையே பறித்தார்களாம். பாரதக் கதையை படித்துப் பழக்கம் என்று கருதுகிறேன். ஆடையைப் பறித்தார்கள் என்றும், இன்னொரு நாளில் டெல்லியில் ஒரு இளமங்கை தாறுமாறாக நடத்தப்பட்டு, ஆடைகளெல்லாம் களையப்பட்டு, பாதை ஓரத்தில் கிடத்தப்பட்டதாகவும் பத்திரிகையில் பார்த்தேன். என்ன நடவடிக்கை எடுக்க முடிந்தது சர்வ வல்லமை பொருந்திய டெல்லி அரசினால்? (திரு. கே. விநாயகம்: நம்முடைய கோட்டையிலே நடந்தது) நம்முடைய கோட்டையிலே நடந்தது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். இந்த இரண்டு பேர்களில் யாரோ ஒருவர் அவ



1968 பிப்ரவரி 20] [திரு. சி. என் அண்ணாதுரை]

ருக்கு நண்பராக இருக்கக்கூடும் என்பது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எனக்கு அது திட்டவட்டமாகத் தெரியவில்லை. (ஆரவாரம்)

கலகம் செய்கின்றவர்களைப் பற்றிக் கூட விட்டுவிடுங்கள். சவான் உள்துறை அமைச்சராக இருக்கும் டெல்லியில் போலீஸ்காரர்கள் கிளர்ச்சி நடந்ததே, என்ன செய்ய முடிந்தது? சவான் வீட்டிற்கு எதிரில் மறியல் நடந்ததே, என்ன செய்ய முடிந்தது? போலீஸ்காரர்கள் கைது செய்யப்பட்டார்களே, என்ன நடவடிக்கை மேற்கொண்டு எடுக்க முடிந்தது? ஒரு சமரசத்துக்குத் தான் கொண்டு வர முடிந்ததே தவிர, என்ன செய்ய முடிந்தது? நானும், என்னுடைய நண்பர் கருத்திருமன் அவர்களும் டெல்லி நாடாளுமன்றத்தில் இருந்தபொழுது தான் ஜன சங்கத்தைச் சேர்ந்த ஒரு சாமியார் 'நாடாளுமன்றத்தில் பாவம் மலிந்து விட்டது, நான் யாகம் நடத்தப்போகிறேன்' என்று சொல்லி சமித்தை எடுத்துக்கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் போட்டு கொளுத்த ஆரம்பித்தபொழுது அங்கே இருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்பட அவர்களை நீக்குவதற்குப் பயப்பட்டார்கள். கருத்திருமனும் நானும் என்று நினைக்கிறேன். 'நாங்கள் சேர்ந்து கொண்டு 'உங்களால் நீக்கமுடியாவிட்டால் நாங்கள் நீக்குகிறோம்' என்று நாங்கள் தான் சொன்னோம்.

ஆக, கலவரங்கள் நடைபெறுகிறபொழுது உடனுக்குடன் ஏதோ நடவடிக்கை அவர்கள் எடுத்துவிட்டதைப் போலவும், நாங்கள் கலவரங்கள் நடக்கட்டும் என்று விட்டுவிட்டதைப் போலவும் தயவு செய்து தப்பு எண்ணத்தைக் கொள்ளவேண்டாம். ஒரு பெரிய கூட்டம் கூடி, ஒரு கலவரம் நடைபெறுகிறபொழுது, வெகு சுலபத்தில் அதைக் கண்டுபிடிப்பது என்பது, நடவடிக்கை எடுப்பது என்பது முடிகின்ற காரியம் அல்ல. என்னுடைய வார்த்தைகளை அவர்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்கிறேன். எந்தத் திராவிடக் கழக உறுப்பினராகிலும் இந்தக் கலவரத்தில் பங்கு கொண்டார் என்று எனக்கு நிரூபிக்கப்பட்டவுடன் முதல் நடவடிக்கையாக அவரையே திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கி வைக்கின்ற அதிகாரமும், நீக்கி வைக்கின்ற பக்குவமும் எனக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், கவர்னர் உரையில் இறுதியில் குறிப்பிட்டப்படி பகை நீங்கினாலொழிய பிணியும் நீங்காது. பசியும் நீங்காது. அந்தப் பகை நீக்கப்பட்டு விட வேண்டுமானால், நமக்குள்ளே இருக்கக்கூடிய சந்தேக உணர்ச்சிகள் நீக்கப்பட்டாலொழிய, பகை நீங்குவதற்கு வழியில்லை.

நம்முடைய நண்பர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மருத்துவ மனையில் என்னைப் பார்த்தார்கள். வேடிக்கையாக சிரித்துக் கொண்டு கேட்டார்கள், என்ன உடம்புக்கென்று. நான் அவர்களுக்குச் சொன்னேன் 'பாதி உடம்பால், பாதி உன்னால் வந்த வினை தான்' என்று சொன்னேன். 'எனக்கு அப்பொழுதே தெரியும்'

என்று அவர்கள் சொன்னார்கள். இவைகளெல்லாம் நடைபெற வேண்டும் என்று விரும்பக்கூடியவன் அல்ல நான். நடைபெறுவது நாட்டிற்கு நல்லது என்ற எண்ணம் கொண்டவன் அல்ல நான். இவைகளை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் உள்ளதல்ல நான் சார்ந்திருக்கக் கூடிய கழகம். காங்கிரசிலே அந்த அளவுக்கு இருக்கிறார்களா என்பதை அவர்கள் ஒவ்வொரு நடவடிக்கையையும் ஆராய்ந்து பார்த்துத் தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஆகவே, பசி நீங்க உணவை அதிகப்படுத்தியிருக்கிறோம், பிணி நீங்க முன்னாலே செய்யப்பட்டிருப்பதைவிட ஓரளவுக்கு அதிக அளவுக்கு மருத்துவத் துறையில் கவனம் செலுத்துகிறோம். பகை நீங்கப்படுவதற்கு, பகையை உண்டாக்குகின்ற இந்தி மொழியையே அடியோடு நீக்கியிருக்கிறோம். இந்தியை நீக்கியிருக்கிறோம் என்றபொழுது நண்பர் கருத்திருமன் அவர்களுக்கு ரொம்பக்கோபம். 'இதை மட்டுமா ஒழித்தீர்கள், அதை ஒழித்தீர்கள், இதை ஒழித்தீர்கள்' என்று சொன்னார்கள். அவர் கோபத்தை அதிகப்படுத்த வேடிக்கையாகச் சொன்னேன். இருபது வருஷங்களாக இருந்த காங்கிரஸ் ஆட்சியையும் ஒழித்தோம். அதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன் ழுது என்ன ஆத்திரம் வந்தது? அப்பொழுது தான் பார்த்தேன், னேன். அவர்களுக்கு அப்பொழுது என்ன ஆத்திரம் வந்தது? அப்பொழுது தான் பார்த்தேன், ஆகா, ஒழித்து விட்டார்களே என்று எண்ணுகின்ற நேரத்தில் எப்பொழுதோ வந்த சிரங்கின் பேரில் ஏதாவது ஒரு பொருள் பட்டுவிட்டால் 6 மாதங்களுக்குப் பிறகு கூட சுரீர் என்று ஒரு எரிச்சல் வரும் வருகிறது. ஆகா, ஒழித்துவிட்டார்களே என்று ரொம்ப ஆத்திரமாகப் பேசினார்கள். உள்ளபடியே அவ்வளவு ஆத்திரப்படுவார்கள் என்று தெரிந்திருந்தால், ஒழிக்கிற காரியத்தில் நான் உள்ளபடியே ஈடுபட்டிருக்க மாட்டேன். உள்ளபடியே குறைந்தது 20 வருஷம் நாட்டிற்கு இருந்தார்கள். அவர்களுக்குக் கூட சலித்துக் கூட போயிருக்கும். ஐந்து வருஷங்களுக்கு வேறு யாராவது பார்க்கட்டும் என்று கூட இருப்பார்கள் என்று நான் நினைத்தேன். அவர்கள் ராமாயணம் படித்தவர்கள், ஜனகருடைய துறவு மனப்பான்மை அவர்களுக்கு இருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் ராமாயணத்தில் வருகிற விசுவாமித்திரர் சுபாவம்தான் அவர்களுக்கு இருக்கிறதாகத் தெரிகிறதே தவிர வேறு கதா பாத்திரங்களை அவர் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. ஆகையால் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் இருப்பது பிடிக்கவில்லை என்று சொன்னால், நீங்கள் 49 பேர்கள் இருக்கிறீர்கள். தனியாக என்னிடம் வந்து சொல்லுங்கள் 'நீங்கள் இருப்பது பிடிக்கவில்லை, விலகிவிடு' என்று சொல்லுங்கள். விலகத் தயாராக இருக்கிறேன். எனக்கு இன்றைக்கு இருந்துதான் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைமையில் இல்லை. நான் இங்கே இருப்பதிலே எவ்வளவு கட்டுதிட்டங்களுக்கு அடங்கி இருக்க வேண்டியிருக்கிறது என்பதையும் நான் உணர்கிறேன். மார்ச்சு 5-ம் தேதி எனக்கு இருந்த வலிவு மார்ச்சு





6-ம் தேதி குறைந்திருப்பது எனக்கு மிக நன்றாகத் தெரிகிறது. நாங்கள் இருப்பதே உங்களுக்கு பிடிக்கவில்லை என்றிருந்தால், நீங்கள் சொல்வதானாலும் சரி, அல்லது எங்களுக்கு வாக்களித்த மக்கள் எங்களுக்குத் தெரிவிப்பதானாலும் சரி, அல்லது இதற்காக ஒரு ரெஃபெரண்டம் வைத்து, இந்த ஆட்சி நீடிப்பதா, வேண்டாமா என்று நடத்துவதாக இருந்தாலும் சரி, நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஏனென்றால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதன் மூலம் பெரிய போக போக்கியத்தை அனுபவிக்க வேண்டும் என்று எங்களில் யாரும் இல்லை. பலபேர் போக போக்கியத்தை அனுபவிக்க முடியா வயதிற்கு வந்தவர்கள். சிலர் இந்தப் பதவிகள் இல்லாமலேயே, போக போக்கியத்தை அனுபவிக்கக் கூடிய திறமையும், இடமும் பெற்றிருக்கிறார்கள். இங்கே இருந்து கொண்டுதான் போக போக்கியத்தை அனுபவிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நாங்கள் ஐந்து வருஷம் இருப்பதன் மூலம் நாட்டிற்கு நன்மை செய்யமுடியும் என்று நம்புகிறோம். அதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்தால் இருக்கிறோம். நாங்கள் இருப்பதை உங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால், நண்பர்கள் அதைச் சொல்வதானாலும், கேட்டுக் கொள்ளத்தயாராக இருக்கிறோம்.

எதை எடுத்தாலும் நீங்கள் என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள் என்பது சரியாகாது. ஒரு போகத்தை இரு போகமாக்கினோம் என்றால், நீங்கள் செய்யவில்லை என்கிறார்கள். நீங்கள் அப்பொழுது சொல்லவில்லையா? மணிமுத்தார் அணையைக் கட்டினோம், சாத்தனூர் அணையைக் கட்டினோம் என்று சொல்லவில்லையா? அன்றைக்கு திரு. பக்தவத்சலம் இந்த மன்றத்திலே எழுந்து சொல்லவில்லையா, சாத்தனூர் அணையைக் கட்டினோம் என்று. பக்தவத்சலம் அணையைக் கட்டினோம் என்று சொன்னால் அவரே சாந்து அரைத்துக் கொடுத்தாரா, செங்கல் எடுத்துக் கொடுத்தாரா, அல்லது அளந்து பார்த்தார்களா? அப்படியா அர்த்தம்? உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம் என்றால், நாங்களே ஏர் உழுதோம் என்று சொல்கிறோம் என்று பொருள்? நான் ஒரு விவசாயி, நான் விவசாயி என்று நண்பர் கருத்திருமன் சொல்லுகிறார்களே அவர்களுக்கே தெரியாதா, தான் ஒரு விவசாயி அல்லவென்று? நகத்தில், சொரிந்ததால் அழுக்கு இருக்குமே ஒழிய, நகத்தில் ஏர் உழுத அழுக்கு இருக்கிறதா? விவசாயி என்றால் நகத்தில் அழுக்கு இருக்க வேண்டுமே. (குறுக்கீடு) சரி, நான் சொல்கிறேன் என்பதற்காக வேண்டுமானால் அவர்கள் ஒரு நாள் ஏர் பிடிக்கலாம். அதனால் நிலத்திற்குத்தான் நஷ்டம். நாட்டிற்கு லாபமே வராது. (பலத்த ஆரவாரம்). நானும், அவரும் ஏர் உழுதால் மாடு போகும் பக்கத்தில்தான் நாங்கள் போகவேண்டும், நாங்கள் போகும் பக்கத்தில், போக வேண்டிய பக்கத்திற்கு மாடுகள் வராது. வார்த்தைக்குச் சொல்கிறோம், நானும் ஒரு விவசாயி என்று நம்முடைய கம்யூனிஸ்ட் நண்பர்கள் வருத்தத்தோடு கேட்டுக் கொள்கிறார்கள் என்றாலும்,

ஏற்பட்டுவிட்ட பாவனை என்ற முறையில் எல்லோரும் விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறோம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று பாரதியார் சொல்லவில்லையா? அதே போலத் தான் நாமும் விவசாயி என்று சொல்லிக் கொள்கிறோம். அந்த முறையை ஏற்றுக்கொள்வார்களானால், எங்களுக்கும் உணவு உற்பத்தியில் ஒரு பங்கு உண்டு.

ஏ. டி. டி. 27 நாங்கள் கண்டு பிடிக்கவில்லை, வேறு யாரோ கண்டுபிடித்தார்கள் என்றாலும், அதை விரிவான முறையில் நாங்கள் அதிகப்படுத்தியிருக்கிறோம். அதிகப்படுத்தியிருக்கிறோம் என்பது மட்டுமல்லாமல், (குறுக்கீடு) மற்றதையெல்லாம் விட்டு விட விரும்புகிறேன், ஒன்றை மட்டும் சொல்லவிரும்புகிறேன். முன்னால் ஒரு முறை சொல்லியிருக்கிறேன். மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சென்ற அரசு நடைபெற்றதை விட இந்த அரசு நல்ல முறையில் நடைபெறுகிறது; அவர்கள் உழவிற்குக்கொண்டு வந்த நிலப்பரப்பை விட எங்களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது அதிகம்; ஒரு போகமாக இருந்த நிலம் இரு போகமாக ஆக்கப்பட்டிருப்பது அதிகம்; விளைச்சலும் முந்தி இருந்ததை விட இப்பொழுது அதிகம். இந்த மூன்றும் உணவு உற்பத்தித் துறையில் பெருக்கத்தை ஏற்படுத்தத் துணை செய்திருக்கிறது. இப்படி நடக்கின்ற இடத்தில் நாங்கள் இருந்தோம் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி. நண்பர் கருத்திருமன் சொல்லுவார், நாங்கள் செய்ததற்கெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கிறீர்கள் என்று. நாங்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறோம் என்று சொல்லவில்லை. பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டுமென்றால், பசி நீங்கி விட்டது, பிணி நீங்கிவிட்டது, பகை நீங்கிவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அதை நான் பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடிய நிலைமை என்று கருதுவேனே தவிர, நான்கு லட்சம் என்று இருந்த இடத்தில் எட்டு லட்சம் என்று பயிர் செய்யும் பரப்பை அதிகப்படுத்தியிருக்கிறோம் என்பதனால் பெரிய பெருமை வந்து விட்டதாகக் கருதமாட்டேன். தவறு செய்து விட்டு, அதைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருப்பேன் என்பதை அவர்களே சொன்னார்கள். ஆனால் அவர்கள் பெருந்தன்மையோடு பாராட்டினார்களா என்றால், தவறைத் திருத்திக் கொண்டதற்காக, பாராட்டுவதற்காக எழுந்திருக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்னாலும், சங்ககிரியில் பாராட்டுதலாகப் பேசவில்லை. அங்கே பாராட்டுதலாகப் பேசியிருக்க முடியாது. தேர்தல் கூட்டத்திலே என்னைப் பாராட்டிப் பேசிவிட்டு, எனக்கு ஓட்டுப் போடாதே என்று எப்படிச் சொல்லியிருக்க முடியும்? "தெரியாதா, அண்ணாதுரை என்னிடம் மன்னிப்புக்கேட்டவன் தானே" என்றுதான் சொல்லத் தோன்றும். வேறு வார்த்தை வர இடமில்லை. குடை ராட்டினத்தில் தான் அங்கேயே இருந்தும், ராட்டினம் சுற்றினால், தானும் சுற்றுவதாகத் தோன்றுமே, அது போல, தேர்தல் நேரத்தில் அப்படித்தான் இருக்கும். அவர்கள் சொன்னது மட்டுமல்ல, நான் மன்னிப்புக் கேட்டேன் என்றால், கழகத் தோழர்கள், மன்னிப்புக் கேட்பதில் என்ன





கேவலம் இருக்கிறது, உணவு அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் பாராளுமன்றத்திலே மன்னிப்புக் கேட்டார்களே தெரியுமா என்கிறார்கள். இப்படி ஒருவருக்கொருவர் பெருமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆரம்பித்துவிட்டு, ஒருவரை ஒருவர் சிறுமைப்படுத்திக் கொள்ளத்தான் இதெல்லாம் உதவியாக இருக்கிறது. "அமீர் சந்த் பியரிலால் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுத்தீர்களா" என்று சுப்பிரமணியத்தைக் கேட்டதற்கு, "என்னுடைய மந்திரிசபை கொடுக்கவில்லை" என்று முதல் நாள் சொல்லிவிட்டு, மறுநாள் மதுலிமாயி, ஆதாரத்தைக் கொண்டு வந்து, "நீங்கள் பதவி ஏற்றதற்குப் பிறகுதான் உத்தரவு போடப் பட்டிருக்கிறது" என்று எடுத்துக் காட்டியதும், சுப்பிரமணியம் "வருந்துகிறேன், என்னுடைய மந்திரி சபைதான் பொறுப்பு" என்று பாராளு மன்றத்திலே சொன்னார்கள். அதனால் அவர்கள் இழிவானார்கள் என்று அர்த்தம் இல்லை, பெருமைதான் அதிகம். அந்தப் பெருமையில் எனக்கும் பாதியளவு கிடைக்கும் என்று கருதினேன். ஒரு பழமொழி சொல்வார்கள், 'மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி' என்பார்கள். அதுபோல கருதிக்கொண்டு இருக்கிறார்கள் போலும். அவர்களுடைய இதயத்தில், முழு இடத்தையும் சுப்பிரமணியத்திற்கே கொடுத்துவிடாமல், எனக்கும் கொஞ்சம் இடம் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (ஆரவாரம்).

கவர்னர் பேருரையில் குறிப்பிட்ட மூன்று, நான்கு பிரச்சினைகளும் தேவையான பிரச்சினைகள் என்ற முறையிலும், அவற்றைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதாலும், இந்த அவை மகிழ்ச்சியுடன், பெருமையுடன் நன்றி கூறிக்கொள்கிறது என்ற திரு. ஆசைத்தம்பி கொண்டுவந்த தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி, விடைபெறுகிறேன்.

திரு. கே. விநாயகம்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஃபர்தர் க்ளாரிபிகேஷன். பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட அபிஷல் லாங்வேஜ் அமெண்ட்மெண்ட் ஆக்ட் முதல் பகுதி அனைவருக்கும் பிடித்ததாக இருக்கிறது, பின்னால் நிறைவேற்றிய தீர்மானம் அனைவருக்கும் பாதகமாக இருக்கிறது என்று, தென்னகத்தைப் பொறுத்த வரையில் அதை எதிர்க்கிறது என்று சொல்லிவிட்டார் அண்ணா. அதே நேரத்திலே, எப்படியாகிலும், அந்த நிலையைச் சரிசெய்ய வழிவகை இருக்கிறதா? ஏனென்றால், மெஜாரிடியில் தீர்மானம் நிறைவேறிய பாராளுமன்றத்திலேயே அதை ரத்து செய்யவேண்டுமே தவிர, அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டர் மூலமாக, ஏதாவது கொண்டுவரலாம் என்று அரசாங்கம் நினைத்தால் யாராவது என்னைப் போன்ற குறும்புக்காரன் ஒருவன், வெறியன், இந்தி வெறியன் ஒருவன் கோர்ட்டுக்குப் போய், ரிட் போட்டால், ஏன் தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை, என்று போட்டால், பாதகம் ஏற்படுமே? ஆகவே, அதற்கு தென்னக அமைச்சர்கள், சிந்திப்பவர்கள், ஏதாவது உங்களிடம் யோசனை இருக்கிறதா என்று தெளிவாக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** மொழிப் பிரச்சினை சம்பந்தமாக மிக விளக்கமாகப் பேசுவது கூடத் தேவையில்லை. நண்பர் விஞயகம் 'என்னைப் போன்ற குறும்புக்காரன், ஹிந்தி வெறியன்' என்று குறிப்பிட்டார்கள். அந்த வெறி நாம் பெற்றுக் கொள்ள முடியாதது ; அந்த வெறி உணர்ச்சி நம்மால் யாராலும் பெற்றுக் கொள்ள முடியாது. நமக்கு ஆர்வம் மட்டும் இருக்க முடியும், ஆனல் அந்த வெறி உணர்ச்சி வராது. அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்களே என்று சொன்ஞர்கள். வழக்கறிஞர் அல்லாத எனக்கு அந்த சந்தேகம் வரலாம், ஆனல் அவருக்கு வரக் கூடாது. ஆசைத்தம்பி அவர்கள் பேசும்போது சொன்ஞர்கள், அந்தத் தீர்மானத்தை ரத்து செய்தாக வேண்டும். அதற்காக, தமிழ் நாடு காங்கிரஸ் ஒரு தீர்மானமாகிலும் போடுமா என்று கேட்டார்கள். இன்னும் போடவில்லை. அடுத்துக் கூடும் கூட்டத்திலாவது அப்படிப்பட்ட தீர்மானத்தைப் போடுவார்களேயானல், மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவி செய்தவர்கள் ஆவார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கொடுத்திருக்கும் திருத்தத் தீர்மானத்தைப் பிரேரேபிப்பதற்குத் தாங்கள் அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது, ஆளுநர் அவர்களின் பேருரைக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் கொடுத்திருக்கிற நன்றியுரைத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** வழக்கமாகச் சொல்ல வேண்டியதைச் சொல்ல மறந்துவிட்டதற்காக வருந்துகிறேன். நான் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இதற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கும் நண்பர்கள் அந்தத் திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நன்றியுரைத் தீர்மானம் வாக்களிப்புக்கு விடப்படுவதற்கு முன், நான் ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பதினன்கு திருத்தத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிருர்கள். திருத்தத் தீர்மானம் கொடுத்திருந்தாலும், அதை வற்புறுத்தாமல் விடுவதை இந்த மன்றத்தில் ஒரு மரபாகக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில், திருத்தத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறவர்கள், அவற்றை வற்புறுத்தாமல் விடுமாறு நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கவே இன்னும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதை இந்த அவையில் பிரேரேபிக்க அனு





மதிக்க வேண்டும் என்று கோருகிறேன். பிரேரேபித்த பிறகு அதை வலியுறுத்துவது அல்லது வலியுறுத்தாமல் இருப்பது பற்றி முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருத்தத் தீர்மானங்களெல்லாம் முன்பே அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் வரும். எப்பொழுது அவை அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டனவோ, அப்பொழுதே அவை முன்மொழிந்து வழிமொழியப்பட்டுவிட்டன என்று எடுத்துக்கொள்ளலாம். அவையெல்லாம் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறும். ஆகவே, இப்பொழுது மீண்டும் அவற்றை முன்மொழிந்து வழிமொழியத் தேவையில்லை. திருத்தத் தீர்மானத்தை வற்புறுத்துகிருரா இல்லையா என்பதை மட்டும்தான் உறுப்பினர் கூறவேண்டும். உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் விட்டுவிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் மட்டும் கோருகிறேன். திருத்தத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில், சிலர்தான் சபையிலே பிரேரேபிக்கின்ற ஒரு நிலை இருந்தது. ஆனல், இந்தத் திருத்தங்களை இன்ன தேதியில்தான் பிரேரேபிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. அந்த நேரத்தில் நாங்கள் இங்கே இல்லை. குறிப்பிட்ட தேதிக்கு ஒரு நாள் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவேகூடச் சிலர் பிரேரேபித்திருக்கிருர்கள். ஆகையால், சபைக் குறிப்பிலே திருத்தத் தீர்மானங்களெல்லாம் இடம்பெறும் என்ற உத்தரவாதம் இருக்குமானல், என்னுடைய திருத்தத்தை நான் பிரேரேபிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறியதைப் போல, கொடுத்திருக்கின்ற, உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் திருத்தத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் விடுகிருர்கள்' என்பதை நான் ஏற்றுக் கொண்டு, இந்த அவையின் அனுமதியோடு அவை திரும்பப் பெறப்படுகின்றன என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் கொண்டுவந்திருக்கிற நன்றியுரைத் தீர்மானத்தின் மீது வாக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி—

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்படவேண்டும் :—

'10—2—1968-ம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.' ".

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை 28-2-1968 புதன்கிழமை, காலை 10-30 மணி அளவில், மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

பி. ப. 1-53.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

* 49. Audit Report on the Accounts of the Madras State Housing Board for the year 1963-64. [Laid on the Table of the House under section 125 of the Madras State Housing Board Act, 1961 (Madras Act 17 of 1961).]

50. Notification issued with G.O. Ms. No. 2023, L.A., dated the 2nd November 1967, regarding the re-division of wards and reservation of seats in Padmanabhapuram Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

51. Notification issued with G.O. Ms. No. 2049, L.A., dated the 6th November 1967, regarding the re-division of wards and reservation of seats in Arkonam Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act 1920 (Madras Act V of 1920).]

52. Notification issued with G.O. Ms. No. 2057, L.A., dated the 8th November 1967, regarding the re-division of wards and reservation of seats in Erode Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920.]

53. Notification issued with G.O. Ms. No. 2075, L.A., dated the 14th November 1967, regarding the re-division of wards and reservation of seats in Dharapuram Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act 1920 (Madras Act V of 1920).]

54. Notification issued with G.O. Ms. No. 2093, L.A., dated the 16th November 1967, regarding the re-division of wards and reservation of seats in Tindivanam Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

55. Notification issued with G.O. Ms. No. 2128, L.A., dated the 21st November 1967, regarding the re-division of wards and reservation of seats in Panruti Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

56. Notification issued with G.O. Ms. No. 725, Agriculture, dated the 28th February 1967, regarding Notification of certain areas in Madurai District under Madras Land Improvement Scheme



Act, 1959, and the date on which the Act shall come into force. [Laid on the Table of the House under section 44 (3) of the Madras Land improvement Schemes Act, 1959 ,(Madras Act 31 of 1959).]

57. Notification issued with G.O. Ms. No. 1935, Agriculture, dated the 27th June 1967, making certain amendments to the Food and Agriculture Department Notifications, regarding the declaration of certain areas in certain districts and preparation and execution of Land Improvement Schemes. [Laid on the Table of the House under section 44 (3) of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959).]

58. Notification issued with G.O. No. 2105, Revenue, dated the 1st December 1967, making an amendment to the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published at pages 1-25 of part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965, as subsequently amended. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 20 of 1963).]

### B. Reports, Notifications and other papers.

11. The Second Report of the Estimates Committe on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories (Tamil).

† 12. The Madras Appropriation Bill, 1968 (L.A. Bill No. 3 of 1968).

---

*** Laid on the Table of the House on 19th February 1968.**

**† Despatched to all Members on 19th February 1968.**

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*12th to 17th, 19th and 20th February* 1968.

---

**Volume VIII (Nos. 1 to 8)**

PAGES.

*A*


ACCIDENT(S)—

Near Munroe bridge ... ... ... ... ... 13-14

ACT(S)—

Compulsory Notification of Vacancies Act, Prosecution ... ... ... ... ... ... 102-105

Public Buildings (Licensing) Act, licences ... 780-782

AGRICULTURE—

Agricultural Labour, Thanjavur district ... ... 767-774

Cotton Package programme, extension to Pollachi and Erode divisions ... ... ... ... 652-656

Erayanoor Agricultural Farm, payment of cost of land ... ... ... ... ... ... ... 229

Fertilisers, supply ... ... ... ... 323-328

ALAGIRISAMY, THIRU S.—

Agricultural Income-Tax (Amendment) Bill, 1967 ... 711

D.S.G. (First), 1967-68, Voting, Agriculture ... 693

D.S.G. (First) 1967-68, Voting Capital Outlay on Agriculture ... ... ... ... ... 705-706

D.S.G. (First) 1967-68, Voting, Capital Outlay on Schemes of Government Trading ... ... 708

D.S.G. (First) 1967-1968 Voting, Industry ... 700

D.S.G. (First) 1967-68, Voting, Loans and Advances by State Government ... ... ... ... 708

D.S.G. (First), 1967-68, voting, Medical ... 697

PAGES

A—cont.

ALAGIRISAMY, THIRU S.—cont.
D.S.G. (First), 1967/68, Voting, Police ... ... 695
Governor's Address (M) ... ... ... 481–482
Loan recoveries from Agriculturists, Kovilpatti Taluk (A. M.) ... ... ... ... ... 464

ALLOTMENT OF TIME—
Governor's Address, discussion ... ... ... 237–241

ANIMAL HUSBANDRY—
Assistant Veterinary Surgeons, special allowance ... 201–202
Live-stock fodder manufacturing Unit, Tiruppur ... 765–767
Poultry and Live-stock Farms, working ... 546–551
Poultry Development Committee's Report ... 436–441

ANNADURAI, THIRU C. N.—
Appropriation Bill, 1968 ... ... ... ... 895
Chief Minister's Speech at Guntur (Privilege Matter) ... ... ... ... ... 685–686
Governor's Address (M) ... ... ... 44, 45, 56, 57, 58, 59, 61, 62, 65, 816, 817, 820, 825, 822, 823, 829–856
Thiru C. Subramaniam's speech on the Resolution on Language policy and its publication in the 'Hindu' (P.M.) ... ... ... ... 679, 680, 681

ARCHAEOLOGY—
Sangam age coins ... ... ... ... ... 647–648

ARUNA, THIRU ALADI, V.—
Governor's Address (M) ... ... ... ... 509–513

ASAITHAMBI, THIRU A. V. P.—
Governor's Address (M) ... ... ... ... 27–48



PAGES

A—cont.

AUTHIMOOLAM, THIRU D. S.—
Governor's Address (M) ... ... ... 254–263

AUTO—RICKSHAWS—
City, increase ... ... ... ... ... ... 10–12

B

BALAKRISHNAN, THIRU A. G.—
Erayanoor Agricultural Farm, Cost of Land, Payment ... ... ... ... ... 229
Governor's Address (M) ... ... ... ... 336–342
Multi-purpose Co-operative Societies, Tindivanam, misappropriation cases ... ... ... ... ... 229–231
Nallambakkam, new tank for ... ... ... ... 322–323
Panchayat Unions, Last Grade Employees, transferred from Departments ... ... ... ... 119–120
Silappadhikaram play in Hindi text book ... ... 8

BALAN, THIRU M. C.—
Governor's Address (M) ... ... .. ... 294–300

BALARAMAN, THIRU L.—
Governor's Address (M) ... ... ... ... 269–274

BALASUBRAMANIAN, THIRU S.—
Governor's Address (M) ... ... ... .. 269, 482, 483, 744–749

BELLIE GOWDER, THIRU J.—
Polytechnic at Kotagiri, opening ... ... ... 16

BHARATHI MOHAN, THIRU G.—
Governor's Address (M) ... ... ... .. 144–149, 480

BHAVANAGAR FUND—
Utilisation ... ... ... ... ... ... 779–780

BHOODAN YAGNA—
Board, expenditure ... ... ... ... 660–663

BHUPATHY, THIRU M.—
Change in management and protection of rights of workers of Coimbatore Spinning and Weaving Mills (A.M.) ... ... .. ... ... ... ... 787
Governor's Address (M) ... ... ... ... 480

PAGES

B—*cont.*

BILLS—

Agricultural Income-Tax (Amendment) Bill, 1967 :
- Consid. ... ... ... ... ... ... 241
- Consid. Cl. ... ... ... ... ... 709–721
- Motion to pass ... ... ... ... ... 721–726
- Passed ... ... ... ... ... 726

Appropriation Bill, 1968 :
- Message from Governor, Int. ... ... ... 709
- Consid ... ... ... ... ... 795
- Consid. Cl. ... ... ... ... ... ... 795
- Motion to Pass, Passed ... ... ... ... 795

General Sales Tax (Second Amendment) Bill, 1968 :
- Message from Governor ... ... ... ... 687
- Int. ... ... ... ... ... ... ... 687–688
- Consid. ... ... ... ... ... ... ... 726–735
- Consid. Cl., Motion to pass, Passed ... ... 735

BOJAN, THIRU, K.—
- Governor's Address (M) ... ... ... ... 618–622

BRIDGES—
- Over bridge near Kumbakonam railway station ... 322
- Tirumangalam, widening ... ... ... ... 757–759

C

CALLING ATTENTION—
- Essential Food articles, Control of prices ... ... 789–794

CHAIR—

Announcements :
- Adjournment motions given notice of by Thiru P. G. Karuthiruman and Thiru V. K. Kothandaraman ... ... ... ... ... ... 26
- International Trade and Industries Fair, invitation to members ... ... ... ... ... ... 335–336
- Panel of Chairmen ... ... ... ... ... 27
- Privilege matter against Thiru C. Subramaniam and 'The Hindu' and adjournment motion re: ... 25–26
- Coimbatore incident—Postponement ... ... 287
- Programmes of Business ... ... ... ... 128



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—

Adjournment Motions—

*Admissibility.*—Motions which were against rule 68 would be disallowed in the Speaker's Chamber itself and those which satisfied Rule 68 would be allowed to be brought before the House to afford the member concerned an opportunity to explain how it was within the purview of Rule 50 ... ... ... ... 561

*Attack on the offices of Madurai Urban and Rural District Congress Committees and damage to shops and residences.*—Consent withheld on the grounds that the Police would have taken action in the discharge of their duties and the matter came within the day-to-day administration of the Government ... ... 788

*Change in management of the Coimbatore Spinning and Weaving Mills and protection of the workers' rights.*—Consent withheld on the grounds that the matter was not of recent occurrence and came within the ordinary day-to-day administration ... ... ... ... 787–788

*Declaration of West Ramanathapuram as famine area.*—Consent withheld under Rule 50 (viii). 462

*Dispute between land owners and agricultural coolies of Chidambaram taluk.*—Consent withheld as the matter involved only the ordinary administration of the Government ... ... 462–463

*Drought in Hosur and Krishnagiri taluks and relief measures.*—Consent withheld on the ground that failure of monsoon and the consequent decrease in production were matters that came within the ordinary day-to-day administration and it was therefore not a matter of urgent public importance to warrant the adjournment of the business of the House to discuss it ... ... ... ... 785

*Failure of crops in certain taluks in Ramanathapuram district and collection of land revenue and loan instalment.*—Consent withheld on the ground that it was not a matter of urgent

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Adjournment Motions—*cont.*

public importance. The Chair added that on such matters the Members could call the Minister's attention under Rule 41 ... ... 785

*Failure of monsoon and collection of land revenue and loan instalment in Radhapuram sub-taluk.*—Consent withheld on the ground that damage to crops on account of failure of monsoon and the consequent inability to pay tax were occurrences in day-to-day administration and there was no need to adjourn the business of the House to discuss that matter. 784

*Fire accident at the Kodayar Hydro-Electric Project area.*—Consent withheld as the matter involved only ordinary administration of the Government ... ... ... ... 121

*Lathi-charge on students in Dindigul.*—Following previous rulings that the House should not be adjourned to discuss Police lathi-charge, the Chair withheld consent to the motion ... ... ... ... ... ... 559–560

*Mao Tse Tung's posters in Coimbatore near Avinasi Road level crossing.*—Consent withheld on the ground that the Government had power to rectify wrongs wherever committed and it was a day-to-day occurrence ... ... 788-798

*Postponement of collection of kist and loan in Palladam taluk.*—Consent withheld as there was no need to adjourn the House to discuss the matter raised in the motion ... ... 558–559

*Protection to workers of Simpson Group of Companies against attacks.*—Consent withheld on the ground that incidents like attack on processionists, admission of injured into the hospitals during such attack, etc., came within the ordinary day-to-day administration of the Government and the incident referred to was not of such special importance as to warrant the adjournment of the business of the House to discuss that matter ... 783–784



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Adjournment Motions—*cont.*

*Recovery of arrears of loan in a lump-sum from the agriculturists in Kovilpatti taluk*—Consent withheld as the matter involved only the ordinary administration of the Government ... ... ... ... ... ... 464–465

*Scope of discussion.*—When a Member who had given notice of an adjournment motion was explaining how it was admissible under the rules another member rising on a point of order stated that the member instead of explaining how the motion was admissible was expatiating on the merits of the subject-matter contained in the motion. He pointed out that if he was allowed to continue even before the Chair allowed the motion, the purpose of the motion would have been served.

Upholding the point of order the Chair observed that the member had explained enough and called the Minister to explain the views of the Government ... ... 563–564

While withholding consent to an adjournment motion, the Chair appealed to the Members to observe the rules governing the consideration of adjournment motions and refrain from making allegations, imputations, defamatory statements, etc. ... ... 127

*Seth Govind Das's reported speech suggesting the overthrow of the Government in Tamil Nadu.*—Consent withheld as the motion was against Rule 50 (x) which stipulated that the motion must refer to a matter in which the responsibility of the Government was clearly involved ... ... ... ... ... 562–564

*State of emergency in Lower Bhavani ayacut area.*—Consent withheld, under rule 50 (viii) as the matter did not involve more than the ordinary administration of law and the Member had an opportunity to speak on the subject during the discussion on the Governor's Address ... ... ... ... 127–128

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Adjournment Motions—*cont.*

*Stationing of Central Reserve Police at Coimbatore.*—The Chair observed that though it could not be questioned that the matter was important and necessary, he withheld consent as, according to Rule 50 (x) the motion must refer to a matter in which the responsibility of the Government was *clearly* involved and not *merely involved* and as " Central Reserve Police " could not be considered to be a matter in which the responsibility of the Madras Government was clearly involved ... 122-123

*Stone throwing and lathi-charge at Coimbatore.*—Notice of the motion was read on 13th February 1968 and consideration was held over till next day for clarification by the member and again consideration was postponed to 16th February 1968, when following previous rulings that adjournment motions could not be allowed to discuss stone-throwing and lathi-charges, the Chair withheld consent to the motion ... ... ... ... ... 120-121, 466-472

Amendments—

*Language.*—A member raised a point of order saying that he gave an amendment in Tamil, as the Tamil copy of a Bill under consideration had been circulated to members, but that was not entertained and an amendment in English was insisted by the Assembly Department. The Chair ruled that it was not a point of order and observed that though Tamil had been accepted as the official language in principle, the implementation of the same in the Legislative Assembly Department had not yet been ordered. Till then amendments in English would be insisted upon .... ... 721-723

Calling Attention—

Only the Member who had given the calling attention notice could put one or two questions to the Minister after his statement ... 791



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Debate—

*Allegations.*—Allegations should be specific and clear and not of a general or sweeping nature. They should have some basis and should not be made as in a public platform ... ... ... ... ... 167, 168, 169, 170

*Allotment of time.*—While a decision had been taken in the Business Advisory Committee about the allotment of time to various parties, any revision of time could be considered at the next meeting of the Business Advisory Committee which if need be, would be convened for the purpose. The Members would do well to co-operate in carrying through the business on the Agenda ... ... ... 241

*Interruptions by Ministers during Members' speeches.*—A Member rising on a point of order stated that it would be better if there were not frequent interruptions by the Ministers during the Members' speeches as such interruptions deprived the Members of their opportunity to speak. The Chair held that it was not a point of order, but simply an explanation ... ... ... ... ... 378-379

*Right of a Member or Leader of Opposition to speak.*—In the course of the discussion on a privilege matter, a member raised a point of order questioning the competence of the Leader of the Opposition to defend a person against whom a privilege matter had been given notice of. The Chair ruled that the Leader of the Opposition had a right to speak and under the rules the Speaker could call anybody to speak and anybody could speak after he had been called by the Speaker ... ... ... ... ... ... 456-457

*Supplementary Demands.*—Discussion should be confined to the details of which the demand is composed of as per Rule 160. Detailed speech can be made during general discussion on Budget Estimates or on Governor's Address ... ... ... ... ... 689, 690

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Debate—cont.

Unless a Member who held the floor resumed his seat, another member could not rise and ask for a clarification ... ... ... ... 567

*Use of the pronoun 'you'.*—The word 'you' would refer only to the Speaker ... ... 389–390

Decorum—

*Exhibition of articles in the House.*—When a Member sought to hand over a packet alleged to contain inferior rice supplied in a depot to the Minister through the House, a Minister rose on a point of order and enquired whether the Member was in order in presenting such articles in the House without the previous permission of the Chair as it was not in conformity with the Rules and the previous ruling of the Chair. The Chair did not permit the presentation of the rice packet before the House ... ... ... ... 52

*Mode of speaking.*—It is not proper for a Member to speak seated in whatever manner ... ... ... ... ... ... 187

*Reference to Chair.*—Reference to Chair either in appreciative or derogatory terms should be avoided ... ... ... ... ... ... 342

*Reference to Union Ministers.*—While a Member must not use offensive expressions about the Members of the House, about the conduct of proceedings of the Parliament or any State Legislature and should not speak about the President and Governor in a derogatory manner, reference to Union Ministers, who were not members of the House, could be made in the House ... ... 593–594

Expressions used in the House—

'*Adi Atkal*' (அடி ஆட்கள்) (Persons hired for intimidation).—In the sentence 'Adi Atkal' from Ramanathapuram and other districts were brought under the guise of agricultural coolies to frighten the agricultural coolies'



CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Decorrum—cont.

was ordered to be withdrawn, when objected to by another Member from Ramanathapuram district ... ... ... ... 773

(Insinuating) கிண்டலான In the sentence 'I am bound to answer even this insinuating (கிண்டலான question'—Held not an improper word ... ... ... ... ... ... 225–226

'Lie'—Use of the word deprecated ... 165

(Publicity) விளம்பரம் In the sentence "The Swatantra Party might ask for more time simply for the sake of publicity and not on principle"—Held not an improper word. ... ... ... ... ... 239

Members' places—

During question hour, when a member raised a point of order whether a Minister could reply from a seat other than the one allotted to him, the Chair observed that Members should speak only from their allotted seats according to Rule 64 ... ... ... ... ... 111

Parliamentary Procedure—

According to May's Parliamentary Practice, questions dealing with matters within the jurisdiction of the Speaker should be addressed to the Speaker by private notice, since no written or public notice of questions addressed to the Speaker is permissible. Hence, such questions should not be raised in the House, but should be addressed to the Speaker privately in his Chamber ... ... ... 684

Personal Explanation—

A Member may, with the permission of the Speaker make a personal explanation, if another Member has mentioned anything about him directly or indirectly. Personal explanation should be confined to the Member himself who makes it and no debatable matter may be brought forward, and no debate shall arise ... .. ... ... ... 581–582

PAGES

C—cont.

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Point of Elucidation—

While a Member has a right to ask a question of another Member who is speaking for the purpose of elucidating a point during discussion, the member need not necessarily reply; he may reply if he so desires ... ... ... 348, 427

Point of Information—

It was not in order for Members to seek information in the House about motions given notice of by them and such information was to be sought in the Speaker's Chamber ... 562

There was no provision for raising a point of information ... ... ... ... ... 210

Point or Order—

A Member should be allowed to finish his sentence and then the Chair will hear the point of order ... ... ... ... ... ... 682

*Priority.*—When two Members rose on a point of order, the Chair observed that the Member who had risen on a point of order earlier had priority and called him ... ... ... ... 239

Should not be raised on the following occasions :—

(1) During Poll, (2) When the Chair is on its legs and (3) During Governor's Address 667, 672 684

Privilege Matters—

*Attribution of impartiality to the Speaker.*—The allegation made by a Member that the Speaker's not allowing another Member to put a supplementary question amounted to wilful neglect of that Member, was referred to the Committee of Privileges by the Speaker *suo motu* ... ... ... ... 210-211

*Chief Minister's speech at Guntur casting reflection on members of Legislature and its publication in 'The Mail'.*—A Member raised a matter of privilege against the remarks of the Chief Minister made at Guntur Bar Association, viz., "Unfortunately today laws are made in Assemblies and Parliament by people who are not fully equipped to make



PAGES

C—cont.

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Privilege Matters—cont.

laws". He contended that these remarks disclosed a reflection on the Assembly Members that they were not fully competent to function as such and thus the passage brought the Assembly into contempt in the minds of the general public. Hence, a breach of privilege had been committed by the Chief Minister, and by publication of the same by the said daily.

The Chief Minister replied that it was not a reflection on the House for any act done by the House. It was only an analysis of the business of law-making and the equipment that the law-makers possessed. He never intended and he could never intend any contempt of the House of which he formed a part.

The Chair withheld consent on the ground that it was not a matter of recent occurrence and that it was not raised at the earliest opportunity ... ... ... ... ... ... 683-687

*Must be raised at earliest opportunity.*—As the honour of the House was more important than even the budget which was by itself important, any breach of privilege must be brought before the House at the earliest opportunity and must be given precedence in the House over all other matters ... ... ... 687

*Precedence.*—Privilege matter takes precedence even over the budget. Even if there is a budget, privilege matter must be taken up first ... ... ... ... ... 681

*Publication in the daily 'Malai Mani'.*—The Deputy Speaker read the notice given by a Member which stated that his request to the Chief Minister to convene the meeting of the Legislative Assembly to discuss the serious situation that had arisen on account of anti-Hindi agitation had been commented upon in the daily "Malai Mani" in a sarcastic and intimidating manner and hence the Editor and Publisher had committed breach of privilege of the member. Ruling was however postponed ... ... ... ... ... 782

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Privilege Matters—cont.

*Regulation of visitors to the Secretariat Buildings and the precincts of the House.*—Consideration postponed ... ... ... ... 732

*Thiru C. Subramaniam's remarks characterising the Language Resolution adopted by the State Assembly as political fraud and its publication in 'The Hindu'.*—On 12th February 1968 a Member raised a matter of privilege against Thiru C. Subramaniam and the publisher of the Hindu in respect of a report published in "The Hindu", namely, "Mr. C. Subramaniam described the recent language bill adopted by the State Assembly as the biggest Political fraud".

The matter was held over till 13th February 1968 and again till 16th February 1968. On 16th February 1968 the Member explained how a *prima facie* case of breach of privilege existed. Quoting extracts from May's Parliamentary Practice, Section 194 of the Constitution and the remarks of Thiru C. Subramaniam when a privilege issue was raised in the House against the Corporation of Madras in 1960, the Member contended that words spoken or writings published reflecting on the character or proceedings of the House had been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts tended to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them. By characterising the language resolution adopted by the State Assembly as the biggest political fraud, especially when there was no fraud in any part of the resolution and when it was not voted against by anybody, Thiru C. Subramaniam and the newspaper had committed breach of privilege.

The Leader of the Opposition said that they could not come to any conclusion on the basis of press reports. Thiru C. Subramaniam did



CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Privilege Matters—cont.

not mention anything about the House. When once the resolution had been adopted, any member of the public had a right to express his own views on it and that the qualifying word 'political' minimised the mischief of the word 'fraud'.

The Leader of the House suggested that they might call for an explanation from Thiru C. Subramaniam. He observed that in Parliamentary Democracy a person had a right to express his own views on policy matters like language policy of a particular party or person. But Thiru C. Subramaniam had characterised the resolution adopted by the House as the biggest political fraud which affected and lowered the dignity and respect of the Members and the House as a whole. He also pointed out that subsequently Thiru C. Subramaniam had not chosen to deny the statement attributed to him in the Press.

The Chair observed that the immediate question for consideration was whether there was a *prima facie* case of breach of privilege and not whether Thiru C. Subramaniam's statement was true or whether it was wrong. He held over his ruling till 19th February 1968, as he had to thoroughly examine the various aspects with reference to the rules.

On 19th February 1968, the Chair held that there was a *prima facie* case for considering whether the remarks made by Thiru C. Subramaniam tended to lower the dignity of the House and observed as follows :—

"Freedom of speech guaranteed under Article 19 of the Constitution is subject to reasonable restrictions under law. Characterisation of a resolution adopted by the House as 'political fraud' by implication meant that the House was prone to approve such fraudulent resolutions.

120, 237



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege Matters—*cont.*

There was no previous ruling of the Chair that privilege matters should not be raised on the basis of Press Reports.

The word 'political' qualifying the word 'fraud' did not have any special significance, as generally the business of the House involved politics and hence, the adjective could not be said to have taken away the mischief of the word 'fraud'. If the Press Report in 'The Hindu' were true, Thiru C. Subramaniam had used the superlative degree and characterised the resolution as 'the greatest political fraud'."

Then the Member moved "That the matter of privilege against Thiru C. Subramaniam and the Publisher of 'The Hindu' be dealt with by this House itself under Rule 189". The House, by a majority, adopted the motion, rejecting the amendment moved by the Leader of the Opposition "That the *prima facie* case of breach of privilege be referred to the Committee of Privileges".

Finally a motion moved by the Member—"That the Speaker be authorised to give show cause notice to Thiru C. Subramaniam and the Publisher of 'The Hindu' why they should not be held to have committed contempt of the House" was adopted ... ... ... 25-26, 120,237, 444-462, 663-683

Procedure—

*Cut Motions and Amendments to Motion of Thanks to Governor's Address.*—When notices of Cut Motions and Amendments are given, they will be deemed to have been moved and seconded in the House, without actually doing so in the House and will find a place in the proceedings of the House .... 692-693, 856-857







CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Questions and Answers—

Allegations, Inferences and Imputations should not be made during question hour. The Chair while disallowing a question containing allegations, imputations, etc., declined to comply with the request of a member to expunge the question ... ... ... ... 314, 421

*Recommendation during question hour.*—When the Leader of the Opposition recommended to the Minister that the Member who put the supplementary question be taken in as a Member of the Khadi and Village Industries Board, the Chair ruled that nobody could make a recommendation during question hour ... ... ... ... ... ... 234

*Supplementary questions.*—Members can only ask for information and not for assurances during question hour ... ... ... ... 9

Members should not interrupt a Minister while he was answering a supplementary question. 543

Should be relevant to the answer given to the main question and should be to elucidate any matter regarding which an answer has been given to the starred main question ... 538-539

Should not contain insinuations ... ... ... 777

Supplementaries should be in the form of questions .... .... ... ... ... ... 328

Supplementary question should relate to the main question ... ... ... ... ... 315, 319, 328, 422, 423, 427, 766

When a Member, rising on a point of order, complained that he had not been called even though he had been raising his hand for 20 minutes, the Chair referred him to Rule 38 (2) and held that a sufficient number of supplementary questions had been put and also that a sufficient number of supplementary questions had been allowed to the Member's Party.

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Questions and Answers—cont.

Upon this another Member pointed out that inasmuch as the Member had been holding his hand right from the beginning, the ruling that sufficient opportunity had been given was not proper and stated that the rule quoted by the Chair did not give the Speaker absolute power to deprive a member of his right to put supplementary questions and that it only amounted to wilful neglect of a particular Member.

The Speaker then observed that so far as the House was concerned, when he presided, all Members were equal. As the allegation had been made in the House that the Chair had wilfully, that is, with partiality neglected a particular Member, he *suo motu* referred the allegation made by the Member to the Committee of Privileges for examination, investigation and report, under Rule 192 ... ... 210–211

Quotations—

*Newspapers.*—Members may quote from newspapers if it formed the basis for their speeches ... ... ... ... ... 508

Speeches—

*Reading of written speech or from notes.*—When a Member was speaking, another Member rose on a point of order and enquired whether it was in order for the Member to read a " written speech ".

A Minister observed that while it was usual for a Member who made his maiden speech to read his ' written speech ' if those who were good speakers were also allowed to do likewise, such practice might introduce a new convention.

The Leader of the House pointed out that while there was nothing wrong in Members reading their speeches, it was desirable that they refrained from this practice and followed the convention of making *ex tempore* speeches.

The Chair observed that there was nothing wrong in a Member reading his speech, if he wanted to regulate his speech to the time



CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Speeches—cont.

allotted and if he was otherwise not able to express himself fluently and cogently ... 155, 156, 157

A Member could not ' read his speech ', but he could refer to notes for the purpose of making the speech ... ... ... ... ... 343

Voting—

When a motion was put by the Chair to vote, if no Member said ' No ', the motion would be declared carried ... ... ... ... 704

CHEEMAICHAMY, THIRU K.—

Agricultural Income-tax (Amendment) Bill, 1967 ... 713–714

Failure of crops and compulsory collection of loans, etc., in Ramanathapuram district (A.M.) ... 785–786

CHIDAMBARANATHAN NADAR, THIRU A.—

Governor's Address (M) ... ... ... ... 164–171

CHINNASAMY, THIRU M.—

Governor's Address (M) ... ... ... ... 263–268

CHITHAN, THIRU N. S. V.—

Attack on Madurai Urban District Congress Committee and the Rural District Congress Committee offices and damages caused to shops and residences and arrests (A.M.) ... ... ... ... ... 788

Bridge lying south of Tirumangalam, widening ... 757–759

Governor's Address (M) ... ... ... ... 280–285

Madras Cements Factory, Tulukapatti, strike ... 774–779

Madurai District Co-operative Supply and Marketing Society, dissolution of board ... ... ... 656–659

New Industries, starting ... ... ... ... 638–646

CINCHONA—

Departmental staff, Coimbatore ... ... ... 435

COINS—

Sangam age ... ... ... ... ... ... 647–648

PAGES

C—cont.

COLLEGES—
Law Course ... ... ... ... ... ... 105-112
Medical College, Thanjavur, Post-Graduate course. 332
Queen Mary's College, shift system ... ... ... 1-4
Tamil Lecturers, appointment as Principals ... 310-314
Training College in Coimbatore, opening ... ... 752-757
Training College, Madurai University, opening ... 751-752
Veterinary College, Coimbatore ... ... ... 536-540

COMMITTEE(S) —
Estimates:
Report on Labour including Factories, second report on action taken by Government, presentation ... ... ... ... ... 705

CO-OPERATIVE SOCIETIES—
Madurai District Co-operative Supply and Marketing Society, dissolution of board ... ... ... 656-659
Multi-purpose Co-operative Societies, Tindivanam, mis-appropriation cases ... ... ... ... 229-231
North Arcot District Supply and Marketing Society, dues ... ... ... ... ... ... ... 551-553
Palm Gur Co-operative Federation, auditing ... 333-335
Tiruppur Co-operative Milk Supply Society, grazing lands ... ... ... ... ... ... ... 556-558
Tiruppur Co-operative Milk Supply Society, loans for purchasing cows ... ... ... ... ... 555

COURTS—
Civil Court for Pollachi ... ... ... ... 441

D

DHANUSHKODI, THIRU P. S.—
D.S.G. (First), 1967-68:
G.D. ... ... ... ... ... ... ... 587-590
Governor's Address (M) ... ... ... ... 481



PAGES

D—cont.

DHARMALINGAM, THIRU N.—
Drainage facilities in Tirutturaipundi Constituency ... 431-433
Governor's Address (M) ... ... ... ... 175-178

DIVISION(S)—
Privilege Motion re:
Thiru C. Subramaniam's remarks on the resolution on language policy and its publication in the "Hindu" ... ... ... ... ... ... 667-672

DRAINAGE—
Thiruthuraipundi Constituency ... ... ... 431-433

DURAISAMY, THIRU S.—
Boring machines, supply of fuel and oil ... ... 762-765
Co-operative Milk Supply Society, Tiruppur, loans for purchasing cows ... ... ... ... ... 555
Livestock fodder manufacturing unit, Tiruppur ... 765-767
Soil Erosion, Prevention Scheme, Mangalam village ... ... ... ... ... ... 435-436
Tiruppur Co-operative Milk Supply Society, grazing lands ... ... ... ... ... ... ... 556-558
Training College, Coimbatore, opening ... ... 752-757
Veterinary College, Coimbatore ... ... ... 536-540
Water-supply Scheme, Kurichi Panchayat ... ... 554
Water-supply Scheme, Siruvani, extension ... ... 555

E

ELAMVAZHUTHI, THIRU ERE.—
Thiru C. Subramaniam's remarks on the resolution on Language Policy and its publication in the 'Hindu' (Privilege Matter) ... ... ... 26, 445-450, 451, 452-453; 666, 672-679

ELECTRICITY—
Mylapore area, failure ... ... ... ... ... 99-102
Periyar and Mettur Power Houses, shut down ... 635-638
West Mambalam, lighting facilities ... ... 443-444

PAGES

E—*cont.*

ELECTRICITY BOARD—
Director of Technical Education, appointment as—Member ... ... ... ... ... ... 211-213

ENGINEERING—
Engineering courses, etc., admission ... ... 203-211

EXHIBITIONS—
Manuscripts of great freedom fighters and Poet Subramania Bharathi, special exhibition ... ... 648-649

F

FACTORIES—
Co-operative Sugar Factories ... ... ... 213-216
Madras Cements Factory, Tulukapatti, strike ... 774-779
Tyre re-treading factory, starting ... ... ... 112

FAMILY PLANNING—
District Family Planning Officers, appointment ... 22-25

FERTILISERS—
Chemical fertilisers, distribution ... ... ... 328-331

FINANCIAL BUSINESS—
D.S.G. (First), 1967-68:
Presentation ... ... ... ... ... 472-476
G.D. ... ... ... ... ... ... ... 565-607
Voting:
Administration of Justice ... ... ... 694
Agriculture ... ... ... ... ... 697-698
Animal Husbandry ... ... ... ... 699
Capital Outlay on Agriculture ... ... ... 705-706
Capital Outlay on Forests ... ... ... 707
Capital Outlay on Industrial Development ... 706
Capital Outlay on Irrigation ... ... ... 706
Capital Outlay on Public Works ... ... 706
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 707-708
Community Development Projects, etc. ... 700
Compensation to Zamindars ... ... ... 705
Co-operation ... ... ... ... ... 699



PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*
D.S.G. (First), 1967-68—*cont.*
Voting—*cont.*
District Administration and Miscellaneous ... 694
Education ... ... ... ... ... ... 695-696
Elections ... ... ... ... ... ... 692-693
Fisheries ... ... ... ... ... ... 698-699
Forest Department ... ... ... ... ... 704-705
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... ... 691
Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ... ... 693-694
Industries ... ... ... ... ... ... 699-700
Jails ... ... ... ... ... ... ... 694
Labour including Factories ... ... ... ... 700
Land Revenue Department ... ... ... 688
Loans and Advances by the State Government ... 708-709
Medical ... ... ... ... ... ... 696-697
Miscellaneous ... ... ... ... ... 703-704
Motor Vehicles Acts—Administration ... ... 688-691
Police ... ... ... ... ... ... ... 695
Public Health ... ... ... ... ... 697
Public Works—Establishment and Tools and Plants ... ... ... ... ... ... 701-702
Public Works—Grants-in-aid ... ... ... 702
Public Works—Works ... ... ... ... 701
Registration Department ... ... ... ... 691
Road Transport Schemes ... ... ... ... 702-703
Stamps Administration ... ... ... ... 691
State Legislature ... ... ... ... ... 691-692
Stationery and Printing ... ... ... ... 704
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 701

FIRE—
Vedaranyam taluk, damages ... ... ... ... 433-434

FISHERIES—
Frigidaire vans for marketing fish ... ... ... 541-545

FOOD—

Invalid food, unauthorised sales ... ... ... 14–16

Sugarcane, jaggery, groundnut oil and pulses, control of prices (C.A.) ... ... ... ... 789–794

FUEL AND OIL—

Boring machines, supply of oil and fuel ... ... 762–765

G

GANESAN, THIRU L.—

Governor's Address (M) ... ... ... ... 348–353

GANESAN, THIRU S.—

Sarswathi Elementary School, Poompuhar, payment of salary t oteachers ... ... ... ... 420–423

GEORGE, THIRU V.—

D.S.G. (First), 1967–68, Voting :

Administration of Justice ... ... ... ... 694

Capital Outlay on Public Works ... ... ... 707

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... ... 708

Education ... ... ... ... ... ... 696

Fisheries ... ... ... ... ... ... 698

Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ... ... ... 693

Miscellaneous ... ... ... ... ... 703

Road Transport Schemes ... ... ... ... 702, 703

Governor's Address (M) ... ... ... ... 48–65, 479–480

GNANASAMBANDAN, THIRU K. R.—

Agricultural Labour, Thanjavur district ... ... 767–774

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—

Accident near Munroe Bridge ... ... ... 13–14

Auto-rickshaws in city, increase ... ... ... 10–12

Compulsory Notification of Vacancies Act, prosecutions ... ... ... ... ... ... ... 102–105

Electricity, failure in Mylapore area ... ... 99–102

Family Planning Officers, appointment ... ... 22–25









GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—cont.

Highways Department, posting of Assistant Engineers ... ... ... ... ... ... 13

Invalid food, unauthorised sales ... ... ... 14–16

Juvenile smoking ... ... ... ... ... 16–22

Law Course ... ... ... ... ... ... 105–112

Peeriar and Mettur Power Houses, shut down ... 635–638

Queen Mary's College, shift system ... ... ... 144

Schools in Hozur taluk, prayer songs in Telugu ... 447

State Transport Buses, emblem ... ... 307–310

GOVINDARAJAN, THIRU C.— ...

Governor's Address (M) ... ... ... 178–186

Landlords—Agricultural Laboures wages, dispute, Chidambaram taluk (A.M.) ... ... ... 462–463

GOVINDASAMY, THIRU A.—

Governor's Address (M) ... ... ... ... 244–245, 256

GROUNDNUT OIL.

See 'FOOD'.

H

HABIBULLAH BAIG, DR.—

Governor's Address (M) ... ... ... ... 513–516

HANDE, DR. H. V.—

Appearance of Mao-Tse-Tung's posters near Avinsi road level crossing, Coimbatore (A.M.) ... ... 788–789

Discussion on Governor's Address—Allotment of time ... ... ... ... ... ... ... 238–240

D.S.G. (First), 1967–68. G.D. ... ... ... 582–587

General Sales Tax (Amendment) Bill, 1968 ... 728–729, 784

Governor's Address (M) ... ... ... ... 53, 54, 55, 153, 477–478, 493–494, 495–496

PAGES

H—*cont.*

HANDE, DR. H.V.—*cont.*
Industries Department, Officers from Electricity Department ... ... ... ... ... ... 8-10
Thiru C. Subramaniam's remarks on the resolution on language policy and its publication in the Hindu (P.M.) ... ... ... ... ... 680-682

HINDU RELIGIOUS ENDOWMENTS—
Employees of Meenakshi Amman Temple Devasthanam—revision of pay and allowance ... ... 646-647

I.

INDUSTRIES—
Fruit Canning Unit, North Arcot district ... ... 553-534
Industrial Estate, Natham, establishment ... 314-315
New Industries, starting ... ... ... ... 638-646

IRRIGATION—
Pattanamkal Project, branch Channels ... ... 759-762

J

JAGGERY
See 'FOOD'

JAMES, THIRU J.—
Governor's Address (M) ... ... ... ... 395, 398, 478
Kodayar Hydro-Electric Project area, fire accident (A.M.) ... ... ... ... ... ... ... 121

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
Governor's Address (M) ... ... ... ... 288-290, 481

JAYARAMAN, THIRU P.—
Governor's Address (M) ... ... ... ... 622-624

K

KANAKASABAI, THIRU R.—
Agricultural Income-tax (Amendment) Bill, 1967 ... 712

KANDASWAMY, THIRU M.—
Governor's Address (M) ... ... ... ... 525-527



PAGES

K—*cont.*

KARIAMANICKAM AMBALAM, THIRU KR. RM.—
Governor's Address (M) ... ... ... 372-376 377.

KARUNANIDHI, THIRU M.—
Discussion on Governor's Address—Allotment of time ... ... ... ... ... ... ... 240
D.S.G. (First), 1967-68, G.D. ... ... ... 597-607
D.S.G. (First), 1967-68, Voting—Motor Vehicles Acts—Administration ... ... ... ... 690
Governor's Address (M) ... ... ... ... 246-247 273, 293, 819
Lathi charge on students, Dindigul (A.M.) ... ... 560-561
Lower Bhavani Ayacut area, serious situation in (A.M.) ... ... ... ... ... ... 124, 126-127
Speech of Seth Govinda Dass suggesting the over throw the of Tamilnad Government (A.M.) ... 564

KARUPPIAH, THIRU R.—
Governor's Address (M) ... ... ... ... 134-139

KARUTHIRUMAN, THIRU P. G.—
Agricultural Income-tax (Amendment) Bill, 1967 ... ... ... ... ... ... ... 718-719
Combatore incident on 8th February 1968 (A.M.) 120-121, 466-468
Discussion on Governor's Address—Allotment of time ... ... ... ... ... ... 237-238, 239
D.S.G. (First), 1967-68, G.D. ... ... ... 590-597
General Sales Tax (Amendment) Bill, 1968 ... 730-731
Governor's Address (M) ... ... ... 805-829
Thiru C. Subramaniam's remarks on the Resolution on Language Policy and its publication in the 'Hindu' (P.M.) ... ... ... ... 453-456, 461; 683

KASIRAMAN, THIRU N.—
D.S.G. (First), 1967-68, Voting—
Motor Vehicles Acts—Administration ... 688-690

PAGES

R—cont.

RAJA, THIRU A. M.—cont.
Transport in private sector, particulars ... ... 218–226
Tyre re-treading plant, starting ... ... ... 112
Wet lands, taxes ... ... ... ... 112–119

RAJAGOPAL, THIRU K. M.—
Governor's Address (M) ... ... ... ... 389–392

RAMACHANDRA DORAI, THIRU R.—
Governor's Address (M) ... ... ... 737–741

RAMACHANDRAN, THIRU S.—
D.S.G. (First), 1967–68, G.D. ... ... ... 565–571, 577, 607
Estimates Committee, Report on Labour including Factories, second report on action taken by Government, presentation ... ... ... 795
Essential Food articles, control of prices (C.A.) ... 789,794

RAMALINGAM, THIRU S.—
Governor's Address (M) ... ... ... ... 624–627

RAMAMOORTHY, THIRU K.—
Agricultural Income-Tax (Amendment) Bill, 1967. 716, 721–724, 726
D. S. G. (First), 1967–68, Voting—
Head of State, Ministers and Headquarters Staff 693
Medical ... ... ... ... ... ... 696
Governor's Address (M) ... ... ... ... 383–389, 478–479

RAMASAMI, THIRU E.—
Cinchona Department Staff, Coimbatore ... ... 453
Civil Court for Pollachi ... ... ... 441

RAMASAMI THIRU E.—
Paper Mill, Valparai, establishment ... ... 423-427

RAMASWAMI GOUNDER, THIRU K. M.—
Governor's Address (M) ... ... ... 802–805

RAMASWAMY, THIRU S. J.—
Chemical fertilisers, sugar, etc., distribution ... 328–331
Fertilisers, supply ... ... ... ... ... 323–328





PAGES

R—cont.

RAMASWAMY, THIRU S. J.—cont.
Fish, Frigidaire Vans for marketing ... 541-545
Fruit Canning Unit, North Arcot district ... 553–554
North Arcot District Suyply and Marketing Society, dues ... ... ... ... ... 551–553
Small Pox, Russian Vaccine ... ... ... 442

RAMASWAMY NAIDU THIRU S.—
Governor's Address (M) ... ... ... 500–505

RATHINASABAPATHY, THIRU M.—
Governor's Address (M) ... ... ... ... 631–634

ROADS—
Lake bund Road, old Mambalam, widening ... 332–333

S

SAHADEVA KANDER, THIRU K.—
Governor's Address, (M) ... ... ... ... 187–192

SANKARIAH, THIRU N.—
Agricultural Income-Tax (Amendment Bill 1967 714–710
Discussion on Governor's Address, allotment of time 238, 240–241
Employees of Meenakshi Amman Temple Devasthanam, revision of pay and allowance ... ... 646–647
Forest porambokes, Kottai Vengaipatti, assignment 651–652
Governor's Address (M) ... ... ... 610-618

SANTHANAM, THIRU P. S.—
Governor's Address (M) ... ... ... ... 576–578

SCHOOL(S):—
Hosur taluk, prayer songs in Telugu ... ... 4–7
Non-viable Private—, takeover ... ... 413–420
Saraswathi Elementary—, Poompuhar, payment of salary to teachers ... ... ... ... 420–423

PAGES

M—*cont.*

MANI, THIRU V. S. S.—
Governor's Address (M) ... ... ... ... 406–409

MANIAN, THIRU P. S.—
Governor's Address (M) ... ... ... ... 627–631

MARTIN, THIRU T.—
Chief Minister's speech at Guntur (P.M.) ... 685–686
D. S. G. (First), 1967–68, Voting:
Education ... ... ... ... 696
Fisheries ... ... ... ... 698
Governor's Address (M) ... ... ... ... 505–509
Taxis in City, nationalisation ... ... ... 531–533

MATHIALAGAN, THIRU K. A.—
Agricultural Income-Tax (Amendment) Bill, 1967. 241, 769–711, 712–712, 720, 724, 725, 726
Drought in Hosur Taluk and the western part of Krishnagiri taluk (A.M.) ... ... ... 785
D. S. G. (First), 1967–68, G.D. ... ... ...578–579, 584–585, 595
Failure of crops and compulsory collection of loans, etc., Ramanathapuram district (A.M.) ... ... 786–787
Essential Food articles, control of prices (C.A. St.) 789–794
General Sales Tax (Amendment) Bill, 1968 ... 726–727, 731–733, 734,735
General Sales Tax (Second Amendment) Bill, 1968. 687–688
Governor's Address (M) ... ... ... ... 53, 54–55, 370–371, 811
Kist and loan collection (Palladam taluk), postponement (A.M.) ... ... ... ... ... 558–559
Landlords—Agricultural Labourers dispute, Chidambaram taluk (A.M.) ... ... ... 463
Loan recoveries from Agriculturists, Kovilpatti taluk (A.M.) ... ... ... ... 464–465
Lower Bhavani Ayacut area, serious situation in (A.M.) ... ... ... ... ... ... 125–126



PAGES

M—*cont.*

MEIYAPPAN, THIRU S.—
Governor's Address (M) ... ... ... ... 192–196

MILK PROJECT—
Madhavaram, High Power Committee's report ... 226–229

MILLS—
Paper, Valparai, establishment ... ... ... 423–427

MOTION(S).
Adjournment Motions—
Attack on Madurai Urban District Congress Committee and the Rural District Congress Committee Offices and damages caused to shops and residence and arrests ... ... ... ... 788
Attack on workers of Simpson Group of Companies. 783–784
Central Reserve Police at Coimbatore, stationing 122–123
Change in management and protection of rights of workers of Coimbatore Spinning and Weaving Mills ... ... ... ... ... ... 787–788
Coimbatore incident on 8th February 1968 ... 120–121, 466–472
Drought in Hosur taluk and the western part of Krishnagiri taluk ... ... ... ... 785
Failure of crops and compulsory collection of loans, etc., Ramanathapuram District ... ... 785–787
Failure of monsoon and compulsory collection of loans, etc., Radhapuram sub-taluk ... ... 784
Governor's Address, Motion of Thanks ... ... 27–66, 128–198, 237–241, 241–306, 336–411, 477–527, 607–634, 735–749, 795–857
Kist and loan collection, Palladam taluk, postponement ... ... ... ... ... 558–559
Kodayar Hydro Electric Project area, fire accident 121

MOTION(S)—*cont.*
ADJOURNMENT MOTIONS—*cont.*

Landlords—Agricultural Labourers dispute, Chidambaram taluk ... ... ... ... ... 462-463
Lathi charge on students, Dindigul ... ... 559-562
Loan recoveries from Agriculturists, Kovilpatti taluk 464-465
Lower Bhavani ayacut area, serious situation in ... 123-128
Mao-Tse-Tung's posters, appearance near Avinasi Road level crossing, Coimbatore ... ... ... 788-789
Ramanathapuram (West), declaration as famine area ... ... ... ... ... ... 462
Speech of Seth Govindadoss suggesting the overthrow of Tamil Nadu Government ... ... 562-564

Privilege :
Thiru C. Subramaniam's remarks on the Resolution on Language Policy and its publication in the 'Hindu' ... ... ... ... ... 666-683

MUNUSWAMI, THIRU V.—
Gingee—Madras, State Transport Bus Service ... 427-431
Governor's Address (M) ... ... ... ... 285-288

MURUGESAN, THIRU K.—
Governor's Address (M) ... ... ... ... 409-411

N

NAGASUNDARAM, THIRU R.—
Governor's Address (M) ... ... ... ... 367-372

NALLASIVAM, THIRU K. R.—
Governor's Address (M) ... ... ... ... 128-130
Lower Bhavani Ayacut area, serious situation in (A.M.) ... ... ... ... ... ... 123-124
125

NARASIMHAN, THIRU A. C.—
Governor's Address (M) ... ... ... ... 149-152

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Appearance of Mao-Tse-Tung's posters near Avinashi Road level crossing, Coimbatore (A.M.) 789
Appropriation Bill, 1968 ... ... ... 709



NEDUNCHEZHIYAN, THIRU V. R.—*cont.*
Central Reserve Police, stationing at Coimbatore (A.M.) ... ... ... ... ... ... 123
Coimbatore incident on 8—2—1968 (A.M.) ... 468-472
Discusion on Governor's Address, Allotment of time ... ... ... ... ... 238-240
D. S. G. (First), 1967-68, Presentation ... ... 472-476
D. S. G. (First), 1967-68, Voting :
Administration of Justice ... ... ... ... 694
Agriculture ... ... ... ... ... 697
Animal Husbandry ... ... ... ... 699
Capital Outlay on Agriculture ... ... ... 706
Capital Outlay on Forests ... ... ... ... 707
Capital Outlay on Industrial Development ... ... 706
Capital Outlay on Irrigation ... ... ... 706
Capital Outlay on Public Works ... ... ... 706
Capital Outlay on Schemes of Government Trading. 707
Community Development Projects, etc. ... ... 700
Compensation to Zamindars ... ... ... ... 705
Co-operation ... ... ... ... ... ... 699
District Administration and Miscellaneous ... 694
Education ... ... ... ... ... ... 695
Elections ... ... ... ... ... ... 692
Fisheries ... ... ... ... ... ... 698
Forest Department ... ... ... ... ... 704
General Salex-tax and other Taxes and Duties—Administration ... ... ... ... ... 691
Head of State, Ministers and Headquarters staff. 693
Industries ...... ... ... ... ... ... 699
Jails ... ... ... ... ... ... ... 694
Labour including Factories ... ... ... ... 700
Land Revenue Department ... ... ... 688
Loans and Advances by State Government ... 708
Medical ... ... ... ... ... ... ... 696
Miscellaneous ... ... ... ... ... 703
Motor Vehicles Acts—Administration ... ... 688
Police ... ... ... ... ... ... ... 695

PAGES

S—*cont.*

SWAMINATHAN THIRU V.—*cont.*

Medical College, Tanjore, Post-Graduate Course ... 332

Poultry Development Committe, report ... 436–441

Tamil Lecturers, appointment as Principals ... 310–314

Taxis in city, nationalisation ... ... ... 531–533

Taxes, meter system ... ... ... ... ... 533–536

Tourist buses, concessional faces ... ... ... 529–531

T.

TANKS—

Nallambakkam ... ... ... ... ... 322–323

TAXIS—

See " Transport and Communications ",

TEXT BOOKS—

Silappadhikaram Play in Hindi ... ... ... 8

THEERTHAGIRI GOUNDER, THIRU T.—

Governor's Address (M) ... ... ... ... 196–198, 241–249

TRANSPORT AND COMMUNICATIONS :—

Gingee Madras, State Transport bus service ... 427–431

Palani—Devakottai, express bus service ... 321–322

State Transport Buses, cost of body buildings ... 316–321

State Transport Buses, emblem ... ... ... 307–310

State Transport Department, re-treading charges for tyres ... ... ... ... ... ... ... 112

Taxis in city, nationalisation ... ... ... 531–533

Taxis, meter system ... ... ... ... 533–536

Tourist buses, concessional fares ... ... ... 529–531

Transport in private sector, particulars ... ... 218–226

V

VARADARAJAN, THIRU N.—

Governor's Address (M) ... ... ... ... 518–522

Lathi charge on students, Dindigul (A.M.) ... 559–560



PAGES

V—*cont.*

VEERAMANI, THIRU C.—

Governor's Address (M) ... ... ... ... 607–610

VEERASWAMY, THIRU, N.—

Governor's Address (M) ... ... ... ... 379–383

VEZHAVENDAN, THIRU K.—

Governor's Address (M) ... ... ... ... 496–499

VIJAYA RAGHUNATHA THONDAIMAN, THIRU R.—

Governor's Address (M) ... ... ... ... 522–524

VINAYAKAM THIRU K.—

Cotton package programme, extension to Pollachi and Erode divisions ... ... ... ... 652–656

Governor's Address (M) ... ... ... ... 479, 855, 556

Madras Cements Factory, Tulukapatti, strike ... 774–779

Manuscripts of Great Freedom Fighters and Poet Subramania Bharathi, special exhibition ... 648–649

Public Buildings (Licensing) Act, licences ... 780–782

Thiru C. Subramaniam's remarks on the resolution on Language Policy and its publication in the 'Hindu' (P.M.) ... ... ... ... 680–681, 682

W

WATER SUPPLY—

Kurichi Panchayat, Scheme for ... ... ... 554

Siruvani, extension ... ... ... ... ... 555

WILLIAM, THIRU M.—

Pattanamkal Project, branch channels ... 759–762

61429

PAGES

N—*cont.*

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—*cont.*

D.S.G. (First), 1967-68, Voting—*cont.*

Public Health ... ... ... ... ... 697

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 701–702

Public Works—Grants-in-aid ... ... ... 702

Public Works—Works ... ... ... ... 701

Registration Department ... ... ... ... 691

Road Transport Schemes ... ... ... ... 702

Stamps Administration ... ... ... ... 691

State Legislature ... ... ... ... ... 691

Stationery and Printing ... ... ... ... 704

Welfare of Scheduled Tirbes, Castes and other Backward Classes ... ... ... ... ... 701

Governor's Address (M) ... ... ... ... 340–341

Kodayar Hydro-Electric Projects, area, fire accident (A.M.) ... ... ... ... ... ... 121

Thiru C. Subramaniam's remarks on the Resolution on Language Policy and its publication in the "Hindu" (P.M.) ... ... ... ... 457–460

O

OBITUARY REFERENCE—

Doraiswamy Reddiar, Thiru B., Jengal Reddiar, THIRU M. ... ... ... ... ... 1

Natesan Chettiar, Thiru M. G. ... ... ... 201

OFFICES—

Highways Department, posting of Assistant Engineers 13

Industries Department, officers from Electricity Department ... ... ... ... ... ... 8–10

P

PALANIAMMAL, THIRUMATHI V. P.—

Governor's Address (M) ... ... ... ... 741–744

Palappalayam Pallam seepage water, utilisation ... 217–218

PANCHAYAT UNION (S)—

Last Grade Employees transferred from Government Departments ... ... ... ... ... ... 119–120



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Income-tax (Amendment) Bill, 1967, Report and Proceedings of Select Committee ... 306

Appropriation Bill, 1968 ... ... ... ... 859

Buildings (Lease and Rent Control) Act, 1960—Notification ... ... ... ... ... ... 68

Central Sales Tax (Madras) Rules, 1957, Notification. 72

Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for 1967–68 (English and Tamil) ... ... ... 634

Demands for Grants for Further Expenditure in 1967–68, notice (English and Tamil) ... ... 634

District Municipalities Act, 1920, Notifications ... 67,69 70, 71, 199,858

Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, Notifications ... ... ... ... 67,68

Estimates Committee, Second Report of the Committee on the action taken by Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories (Tamil) ... ... ... ... ... ... 859

First Supplementary Estimates for 1967–68, speech of Chief Minister (English and Tamil) ... ... 634

General Sales Tax (Amendment) Bill, 1968, with annexure ... ... ... ... ... ... ... 72

Governor's Address to Members of the Legislature on 10th February 1968 (English and Tamil) ... 72

Hindu Religious and Charitable Endowments Act, 1959, Notification ... ... ... ... ... 198

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Notifications ... ... ... 66,67 198, 199

Khadi and Village Industries Board, Annual Report for 1965–66 ... ... ... ... ... ... 411

Land Improvement Schemes Act, 1959, Notifications. 858–859

Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Notification ... ... ... ... 66

Legislative Council, Resume of work from 24th to 30th November 1967 ... ... ... ... 411

Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Notifications ... ... ... 67, 68 859

P—*cont.*


| | PAGES |
|---|---|
| PAPERS LAID ON THE TABLE—*cont.* | |
| Money Lenders' Act, 1957, Notification ... ... | 71 |
| Motor Accident Claims Tribunals Rules, 1961, Notification ... ... ... ... ... ... | 67 |
| Motor Vehicles Act, 1939, Notification ... ... | 411 |
| Municipal Authorities (Term of Office and Election of Councillors) Act, 1963, Notification ... ... | 67 |
| Panchayats Act, 1958, Notification ... ... ... | 66 |
| Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, Notifications ... ... | 66, 67, 71 |
| Pawn-brokers' Act, 1943, Notification ... ... | 71 |
| Prohibition Act, 1937, Notification ... ... ... | 68 |
| Public Buildings (Licensing) Act, 1965, Notifications. | 68 |
| Public Service Commission Regulations, 1954, Notification ... ... ... ... ... ... | 198 |
| Revenue Department Notification II-1 No. 2686 of 1967, Notification ... ... ... ... ... | 71 |
| State Housing Board Act, 1961, Audit Report for 1963–64 ... ... ... ... ... ... | 858 |
| State Small Industries Corporation, Review ... | 199 |
| PEER MOHAMMED, HAJI M. M.— | |
| Governor's Address (M) ... ... ... ... | 342–348 |
| PERUMAL, THIRU A. R.— | |
| Governor's Address (M) ... ... ... ... | 399–403 |
| PIG BREEDING OFFICE— | |
| Office building and staff quarters, construction ... | 203 |
| POLYTECHNICS— | |
| Kotgairi, opening ... ... ... ... ... | 316 |
| PONNAPPA NADAR, THIRU R.— | |
| D.S.G. (First), 1967–68 : | |
| G.D. ... ... ... ... ... ... | 695 |
| Voting : | |
| Capital Outlay on Schemes of Government Trading. | 707 |
| Education ... ... ... ... ... ... | 695 |
| General Sales Tax (Amendment) Bill, 1968 ... ... | 727–728 |
| Governor's Address (M) ... ... ... ... | 477 |




P—*cont.*


| | PAGES |
|---|---|
| PONNUMALAI, THIRU T.— | |
| Governor's Address (M) ... ... ... ... | 277–280 |
| PRIVILEGE— | |
| Allegation made by Thiru V. George against the Speaker ... ... ... ... ... ... | 210–211 |
| Chief Minister's speech at Guntur ... ... ... | 683–681 |
| 'Malai Mani' publication, dated 31st December 1967. | 782 |
| Secretariat buildings and precincts of the House, Regulation of visitors ... ... ... ... | 782 |
| Thiru C. Subramaniam's remarks on the Resolution on Language Policy and its publication in the 'Hindu' ... ... ... ... ... | 25–26 444–462; 663–665 |
| PULSES— | |
| See "Food" | |
| **R** | |
| RAJA, THIRU A. M.— | |
| Assistant Veterinary Surgeons, special allowance ... | 201–202 |
| Co-operative Sugar Factories ... ... ... ... | 213–216 |
| Electricity Board, appointment of Director of Technical Education as Member ... ... ... ... | 211–213 |
| Engineering courses, etc., admission ... ... ... | 203–211 |
| Governor's Address (M) ... ... ... | 130–134 |
| Khadi and Village Industries Board, Finance Committee Members ... ... ... ... ... | 231 |
| Khadi Board, loan amount due from Tamil Nad Congress Constructive Programme Committee | 231–236 |
| Milk Project, Madhavaram, High Power Committee's report ... ... ... ... | 226–229 |
| Palappalayam Pallam, utilisation of seepage water ... ... ... ... ... | 217–218 |
| Palm Gur Co-operative Federation, auditing ... | 333–335 |
| Pig breeding office and staff quarters, construction | 203 |
| Poultry and Livestock Farms, working ... | 546–551 |
| Seepage schemes, Lower Bhavani Project ... | 216–217 |
| Transport Buses, cost of body building ... | 316–321 |
| Transport Department, re-treading charges for tyres ... ... ... ... ... ... | 112 |

PAGES

S—cont.

SEENIVASAN, THIRU P.—
D.S.G. (First), 1967–68, G.D. ... ... ... 581-582
Governor's Address (M) ... ... ... ... 139–141

SIVAGNANAM, THIRU M.P.—
Discussion on Governor's Address, allotment of time 239–240
Governor's Address (M) ... ... ... ... 483-493, 494, 495

SMALL POX—
Russian vaccine ... ... ... ... ... 442

SMOKING—
Juvenile smoking ... ... ... ... 16–22

SOIL EROSION PREVENSION SCHEME—
Mangalam Village ... ... ... ... 435-436

SOUNDARAPANDIAN, THIRU N.—
Failure of monsoon and compulsory collection of loans, etc., Radhapuram sub-taluk (A.M.) ... 784
Governor's Address (M) ... ... ... 290–294

SPEAKER, MR.—
Discussion on Governor's Address, allotment of time 237, 241
Thiru C. Subramaniam's remarks on the resolution on Language Policy and its publication in the 'Hindu' (P.M.) ... ... ... ... ... 444–445, 451, 460, 461–462, 663–665, 666, 683

SUARES, THIRUMATHI, A.—
Governor's Address (M) ... ... ... ... 735–737

SUBBARAJA, THIRU A. A.—
Declaration of West Ramanathapuram as famine area (A.M.) ... ... ... ... ... 462
D S.G. (First), 1967–68, Voting:
Agriculture ... ... ... ... ... ... 698
Co-operation ... ... ... ... ... 699



PAGES

S—cont.

SUBBARAJA, THIRU A. A.—cont.
SUBRAMANI GOUNDER, THIRU M.—
Education ... ... ... ... ... ... 696
Industries ... ... ... ... ... 700
Loans and Advance by the State Government ... 708
Medical ... ... ... ... ... ... 696
Miscellaneous ... ... ... ... ... 703, 704
Public Works—Grants-in-aid ... ... ... 702
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 701
Governor's Address (M) ... ... ... ... 171–174, 479

SUBBIAH, THIRU A. K.—
Governor's Address (M) ... ... ... 795-800

SUBBIAH, THIRU, K. V.—
Governor's Address (M.) ... ... ... ... 161-164

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Agricultural Income-Tax (Amendment) Bill, 1967 717–718
Governor's Address (M) ... ... ... ... 274-277

SUBRAMANI GOUNDER, THIRU M.—
Governor's Address (M) ... ... ... ... 358–360

SUGAR—
Distribution ... ... ... ... ... 328-331

SUGAR CANE—
See "Food"

SURENDRAN, THIRU M.—
Governor's Address (M) ... ... ... ... 360–367, 482

SWAMINATHAN, THIRU V.—
Electricity facilities, West Mambalam ... ... 443–444
Governor's Address (M) ... ... ... ... 353-358
Lake Bund Road, Old Mambalam, widening ... 332–333